
D
V211, 31. N70
N74. 32;2
61493

வெளியீடு—29—5—1971]
Issued—29-5—1971]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1970 ஆகஸ்ட் 24

Monday, 24th August 1970

தொகுதி XXXII எண் 1

Volume XXXII—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

50 காசுகள்]
50 Paise]

D
V.211,31 N70
N71.32;2
61493

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினக்கள்—விடைகள் .. .. .. .. .. | 257–290 |
| 2. | அறிவிப்புகள்.— | |
| | (அ) பேரவையின் மரபிற்கு மாறுன ஒரு சொல்லை நீக்குவது குறித்து .. .. .. .. | 285 |
| | (ஆ) சில உறுப்பினர்களை கோயம்புத்தூர் மத்திய சிறையில் காவலில் வைக்கப்படும் கால நீடிப்புப் பற்றிய தகவல் .. .. .. | 290 |
| | (இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) .. .. | 291 |
| 3. | அரசினர் தீர்மானம்.— | |
| | தனி உறுப்பினர் அலுவலுக்கு பதிலாக அரசினர் அலுவலுக்கு எடுத்துக் கொள்வது குறித்து .. | 290 |
| 4. | அரசினர் மசோதாக்கள்.— | |
| | (அ) தமிழ்நாடு 1970–ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா .. .. .. .. .. | 291 |
| | (ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) .. | 291–299 |
| 5. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970–71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி. .. | 299–336 |
| 6. | உணவு அமைச்சரின் விளக்க உரை .. .. .. | 337–340 |
| | உணவகங்களில் காப்பிவிலை குறைப்பு குறித்து .. | 336–337 |
| 7. | நடைமுறைக் கேள்வி— | |
| | (அ) ஓர் உறுப்பினரின் தெலுங்கு உரையை மொழி பெயர்ப்பது குறித்து .. .. .. .. | 340–342 |
| | (ஆ) ஓர் உறுப்பினரின் தெலுங்கு உரை பதிவு செய்யப் படாமல் இருக்கும்போது அவரை தெலுங்கில் உரையாற்ற அனுமதிப்பது குறித்து .. .. | 343 |
| 8. | பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 352–353 |

## உள்ளடக்கம்.


பக்கங்கள்

தொகுதி—

1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. 451–47

2 ஒற்றிவைப்புத் தீர்மானம்—

அரிசன மாணவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து 480–48:

3 தன்னிலை விளக்கம்—

துணைக் கேள்விக்கு விடையளிக்கையில் தன்னைப்பற்றி முதலமைச்சர் கூறியது குறித்து திரு க. கோமதி சங்கர தீட்சிதரின் விளக்கம் .. .. .. 483–484

4 நடைமுறைக் கேள்விகள்.—

(அ) கவனஈர்ப்புத் தீர்மானத்திற்கு விடையளிப் பதிலுள்ள காலதாமதம் குறித்து .. .. 485

(ஆ) தனி உறுப்பினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப் படும் நாளில் மசோதாக்களை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து .. .. .. 527–528

5 கவன ஈர்ப்பு—

(அ) அரசு பாடப் புத்தகங்கள் கிடைப்பதிலுள்ள காலதாமதத்தினாலும் அவற்றிலுள்ள பிழைகளினாலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் .. .. .. .. .. .. 485–49

(ஆ) சிறுகளத்தூர் இந்து தேசியக் கல்லூரி மூடப்பட்டது குறித்து .. .. .. .. 493–495

6 தனி உறுப்பினர் அலுவல்—

(அ) தீர்மானம்—

மொகஞ்சதாரோ—ஹரப்பா நாகரீகத்தை ஆராய ஒரு சிறப்புக் குழு அமைத்தல் .. .. 495–497

(ஆ) மசோதா—

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 23/1968) .. .. .. .. .. 528–544

7 அறிவிப்புகள்—

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 23/1968). 527

பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள் .. .. 544–546

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (தெ.வ.) |
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம். (செ. வ.). |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.) |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | வனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ர்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க்டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை. |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை—கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம்(செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. வ.). |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின்பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநாதன், சோ. | கூனூர். |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 74 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 75 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 76 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 77 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 78 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 79 | கதிரவன் க. மு. | தென்காசி. |
| 80 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி |
| 81 | இட்டப்பா, என். | மாயூரம். |
| 82 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 83 | கோதண்டராமன், வி. கெ. | குடியாத்தம். |
| 84 | கோதண்டராமைய்யா, கே. எஸ். | ஊத்தனப்பள்ளி. |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ. வ.). |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 88 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.). |
| 89 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 90 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 91 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே. பி. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 100 | மணியன், பி. எஸ். | சோழவந்தான். |
| 101 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 102 | மாரிமுத்து, ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 103 | மாரிமுத்து, மு. | தலைவாசல். (செ. வ.) |
| 104 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 105 | மருதாசலம், என். | பேரூர். (செ.வ.) |
| 106 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) | ஆயிரம் விளக்கு (சென்னை மாநகரம்). |
| 107 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 108 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 109 | மூக்கையா தேவர், பி. கே. | உசிலம்பபடி. |
| 110 | முனுசாமி கௌண்டர், பி. எம். | கிருஷ்ணகிரி. |
| 111 | முனுசாமி, ரா. ரா. | மேலமலையனூர். |
| 112 | முனியாண்டி, ஏ. | நிலக்கோட்டை. (செ.வ.). |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 113 | முனு, ஆதி. | திருப்போரூர். |
| 114 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |
| 115 | முருகையன், எஸ். | கலசபாக்கம் |
| 116 | முருகேசன், க. | பாலக்கோடு |
| 117 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி |
| 118 | முத்தையா, கே. கே. | கடலூர் |
| 119 | முத்தையா, மு. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 120 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ. வ.) |
| 121 | முத்துசாமி, பா. க. சி. | பெண்ணகரம் |
| 122 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல் |
| 123 | முத்துச்செல்வன், பு. செ. | முசிறி |
| 124 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம் |
| 125 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ. வ.) |
| 126 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 127 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி |
| 128 | நல்லசாமி, தோ. மு. | கரூர் |
| 129 | நஞ்சன், சி. | கூடலூர் (செ. வ.) |
| 130 | நரசிம்மன், ஏ. சி. | ஆரணி |
| 131 | நாராயணன், இரா. | வரகூர் |
| 132 | நடராசன், மு. க. து. | லால்குடி |
| 133 | நடராஜன், ஜி. | காட்பாடி |
| 134 | நடராசன், ஈ. எம். | அந்தியூர் |
| 135 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 136 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம் |
| 137 | பத்மாவதி, திருமதி, கோ. | முசையூர் |
| 138 | பழனி, சி. | ஓமலூர் (செ. வ.) |
| 139 | பாலையா, ஏ. | கொளச்சல். |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ. வ.) |
| 141 | பழனிவேல் ராஜன் | தேனி |
| 142 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ வ.) |
| 143 | பரமசிவம், பி. என். | பொங்களூர் |
| 144 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி |
| 145 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். | தஞ்சாவூர் |
| 146 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம் |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி, ம. மு. | மேலப்பாளையம் |
| 148 | பெரியசாமி, பெ. | ராசிபுரம் |
| 149 | பெருமாள், ஏ. ஆர். | கரியாப்பட்டி |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம் |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு |
| 152 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி |
| 153 | இராஜா, ஏ. எம். | பவானி |
| 154 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர் |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 155 | ராஜமன்னூர், எஸ். எ. .. .. .. | வாணியம்பாடி |
| 156 | இராசாங்கம், மா. .. .. .. | கம்பம் |
| 157 | ராஜாங்கம், என். .. .. .. | குறிஞ்சிப்பாடி (செ. வ.) |
| 158 | ராஜவேலு, டி. எ, .. .. .. | திருச்செங்கோடு |
| 159 | ராமச்சந்திர துரை, ரா. .. .. | கந்தர்வக்கோட்டை |
| 160 | இராமச்சந்திரன், க. ந. .. .. | ஆண்டிமடம் |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. .. .. | பரங்கிமலை |
| 162 | இராமச்சந்திரன், எஸ். .. .. | பண்ருட்டி |
| 163 | ராமலிங்கம், எஸ். .. .. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. .. .. .. | திண்டிவனம் |
| 165 | இராமன், மு. .. .. .. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 166 | ராமன், ஓ. பி. (அமைச்சர்) .. .. | மேலூர்-தெற்கு (செ. வ. |
| 167 | இராமராசன், வ. க. .. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 168 | இராமசாமி, இ. .. .. .. | வால்பாறை (செ. வ.) |
| 169 | ராமசாமி, எஸ். ஜே. .. .. | அரக்கோணம் |
| 170 | இராசு, ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 171 | இரத்தினசபாபதி, மு. .. .. | விளாத்திகுளம் |
| 172 | ரெத்தின தேவர், ரா. .. .. .. | முதுகுளத்தூர் |
| 173 | சாதிக்பாட்சா. எஸ். ஜே. (அமைச்சர்) .. | உடுமலைப்பேட்டை |
| 174 | சகாதேவக் கண்டர், கே. .. .. | தண்டராம்பட்டு |
| 175 | சாமிநாதன், கே. என். .. .. | வெள்ளக்கோயில் |
| 176 | சங்கரய்யா, என். .. .. .. | மதுரை—மேற்கு |
| 177 | சந்தானம், பி. எஸ். .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 178 | சாரதி, மா. பா. .. .. .. | வேலூர் |
| 179 | சத்தியவாணிமுத்து, டாக்டர், (திருமதி) (அமைச்சர்) .. | பெரம்பூர் (செ. வ.) (சென்னை மாநகரம்) |
| 180 | சீனிவாசக நாயக்கர், ஆர். .. .. | சாத்தூர் |
| 181 | சீனிவாசன், பெ. .. .. .. | விருதுநகர் |
| 182 | செல்ல கவுண்டர், அ. .. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 183 | சேனுபதி, அ. .. .. .. .. | காங்கேயம் |
| 184 | சேதுராமன், சி. .. .. .. | சிவகங்கை |
| 185 | சண்முகம், எம். .. .. .. | விழுப்புரம் |
| 186 | சண்முகசுந்தரம், அ. ப. .. .. | பொள்ளாச்சி |
| 187 | சிறைமீட்டான் தொ. க. .. .. | பரமக்குடி (செ.வ.) |
| 188 | சிவஞானம, ம. பொ. .. .. .. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்) |
| 189 | சிவபெருமான், க. ந. .. .. .. | ஆத்தூர் |
| 190 | சிவசாமி, மு. ச. .. .. .. | தூத்துக்குடி |
| 191 | சிவசுப்பிரமணியன், எஸ். .. .. | காட்டுமன்னூர் கோயில் (செ. வ.) |
| 192 | சோமசுந்தரம், ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 193 | சௌந்தரபாண்டியன், நா. .. .. | ராதாபுரம் |
| 194 | சௌந்தரபாண்டியன், பெ. .. .. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 195 | சௌந்தராஜ மூப்பனர், இரா. .. | பாபநாசம் |
| 196 | சுந்தரபாரதி, சௌடி எஸ். .. .. | அருப்புக்கோட்டை |
| 197 | சீனிவாசன், சு. .. .. .. | போடிநாயக்கனூர் |
| 198 | சுவாரெஸ், திருமதி எ. .. .. | நியமன உறுப்பினர் |
| 209 | சுப்பராஜா, எ. அ. .. .. .. | இராஜபாளையம் |
| 210 | சுப்பையா, ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 201 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) .. .. .. | ஆலங்குடி |
| 202 | சுப்பையா முதலியார், எ. ஆர். .. | கடையநல்லூர் |
| 203 | சுப்பிரமணியம், அ. லெ. .. .. | திருநெல்வேலி |
| 204 | சுப்பிரமணிய கவுண்டர், எம். .. | தர்மபுரி |
| 205 | சுப்பிரமணியம், இ. எம். .. .. | திருக்கோவிலூர் |
| 206 | சுரேந்திரன், எம். .. .. .. | மேட்டூர் |
| 207 | சுவாமிநாத உடையார். த. சி. .. | மன்னூர்குடி |
| 208 | சுவாமிநாதன், வை. .. .. .. | திருவெறும்பூர் |
| 209 | தம்பி நாயக்கர், பா. .. .. .. | வடமதுரை |
| 210 | தங்கப்பன், டி. .. .. .. | இராமநாதபுரம் |
| 211 | தவமணிதேவர், வி. .. .. .. | சேடப்பட்டி |
| 212 | தீர்த்தகிரி, ந. .. .. .. | ஹரூர் (செ. வ.) |
| 213 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. .. | ஊத்தங்கரை |
| 214 | திம்மராய கவுண்டர், தி. சி. .. | நாட்ராம்பள்ளி |
| 215 | திப்பையா, டி. டி. எஸ். .. .. | மேட்டுப்பாளை |
| 216 | வடிவேலு, எஸ். கே. .. .. .. | தொட்டியா |
| 217 | வரதராஜன், என். .. .. .. | வேடசந் |
| 218 | வேதாசலம், மு. .. .. .. | வண்ண ப்பட்டை (செ ன மாநகரம்) |
| 219 | வீரமணி, சி. .. .. .. | சங்கரி (செ. வ.) |
| 220 | வீராசாமி, நா. .. .. .. | ஆர்க்காடு |
| 221 | வேலப்பன், சி. வே. .. .. .. | கபிலமலை |
| 222 | வெள்ளத்துரை, எ. .. .. .. | வாசுதேவநல்லூர் |
| 223 | வேணுசாமி, பி. .. .. .. | சிங்கநல்லூர் |
| 224 | வெங்கடாசல தேவர், பெ. .. .. | வேதாரண்யம் |
| 225 | வெங்கடசாமி, பி. .. .. .. | ஹோசூர் |
| 226 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) .. | கும்மிடிபூண்டி |
| 227 | விஜயரகுநாத தொண்டமான், ஆர். .. | புதுக்கோட்டை |
| 228 | விஜயராஜ், தா. .. .. .. | திருவண்ணாமலை |
| 229 | வினயகம், கே. .. .. .. | திருத்தணி |
| 230 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு |
| 231 | வில்லியம், எம். .. .. .. | கிள்ளியூர் |
| 232 | வெற்றிடம் .. .. .. .. | அவனசி. |
| 233 | வெற்றிடம் .. .. .. .. | ஆத்தூர். |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 234 | வெற்றிடம் .. .. .. .. | சேரன்மகாதேவி. |
| 235 | வெற்றிடம் .. .. .. .. | கோபிச்செட்டிப்பாளையம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்**

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | |
|---|---|---|
| (1) | (2) | |
| 1 | திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர் |
| 2 | திரு. ப. உ. சண்முகம் .. | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர் |

## [தமிழ்] நாடு சட்டப் பேரவை.

---

### திங்கட்கிழமை, 1970 ஆகஸ்ட் 24.

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1967-லிருந்து மத்திய அரசின் சட்ட அமைச்சராக இருந்த திரு. பா. கோவிந்த மேனன் அவர்கள் 23—5—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;*

*1952-லிருந்து 1956-ம் ஆண்டு வரை ஒட்டப்பாளம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. நாராயண குருப் அவர்கள் 19—5—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;*

*1936-லிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், 1946-லிருந்து 1952-ம் ஆண்டு வரையிலும், பந்தர் பொ.நா கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், 1946-லிருந்து 1949-ம் ஆண்டு வரை அமைச்சராக இருந்தவருமான திரு. வி. கூர்மையா அவர்கள் 5—6—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;*

*1950-லிருந்து 1952-ம் ஆண்டு வரை மலப்புரம் முஸ்லீம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். சி. எ. அசன்குட்டி குருக்கள் அவர்கள் 25—6—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;*

*1952-லிருந்து 1956-ம் ஆண்டு வரை கோழிக்கோடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், 1952-லிருந்து 1954-ம் ஆண்டு வரை சட்ட அமைச்சராக இருந்தவருமான திரு. கே. பி. குட்டிகிருஷ்ணன் நாயர் அவர்கள் 5—8—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கும், நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.*

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[பேரவைத் தலைவர்] [1970 ஆகஸ்ட்

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

## 2. இரங்கல் தீர்மானம்.

### உறுப்பினர்கள் திரு. வ. சொ. சு. மணி, திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் ஆகியோர் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு மீண்டும் ஓர் அறிவிப்பு. 1967-ம் ஆண்டு ஆத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. வ. சொ. சு. மணி அவர்கள் 2—5—1970-ம் நாளன்றும், 1967-ம் ஆண்டு கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் 12—5—1970-ம் நாளன்றும் மறைந்துவிட்ட துயரமான செய்தியைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை, இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் உறுப்பினர் திரு. வ. சொ. சு. மணி அவர்கள் 2—5—1970-ம் நாளன்றும், கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் உறுப்பினர் திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் 12—5—1970-ம் நாளன்றும் எதிர்பாராத வகையில் மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அவர்களது மறைவால் வருந்தும் குடும்பத்தினர்க்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. சொ. சு. மணி அவர்களையும் சுதந்திராக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்களையும் இந்தப் பேரவை இழந்திருப்பது நமக்கெல்லாம் பெருந்துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கின்ற ஒரு செய்தியாகும்.



1970 ஆகஸ்ட் 24] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சென்ற மூன்றாண்டுக் காலத்திற்கு மேலாக இந்தப் பேரவையில் நம்முடன் உறுப்பினர்களாக இருந்து அரும்பணியாற்றிவந்த அவர்கள், இப்பொழுது நம்மிடையே இல்லை என்பதை எண்ணுகின்றபோது நமக்கெல்லாம் துயரம் ஏற்படுகிறது. அவர்கள் இருவரும் எதிர்பாராத வகையில் இயற்கை எய்தியிருக்கிறார்கள்.

திரு. வ. சொ. சு. மணி அவர்கள் இந்த மன்றத்தினுடைய உறுப்பினராக 1962-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரையில் இருந்து, மீண்டும் ஆத்தூர்த் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து உறுப்பினராக இருந்து வந்தவராவார்கள். அவர்கள் தொடக்கக் காலத்திலிருந்தே பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்து, தன்மதிப்பு இயக்கத்திலும், நீதிக் கட்சியிலும், பிறகு திராவிடக் கழகத்திலும், பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலும் ஈடுபாடுகொண்டு, அரசியல் பணிகளையும், சமுதாயப் பணிகளையும் மிக நல்ல ஊக்கத்தோடும், நல்ல ஆக்கத் தன்மையோடும் ஆற்றிவந்திருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், சித்தயன் கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் சில காலம் பணியாற்றியிருக்கிறார்கள். அப்பொழுது 'டிஸ்ட்ரிக்ட் போர்டு' என்று சொல்லப்பட்டுவந்த மதுரை மாவட்டக் கழகத்தில் உறுப்பினராக இருந்து, பொதுமக்களுக்கு நல்ல பல பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், கூட்டுறவு இயக்கத்திலும் நீங்காத தொடர்புகொண்டு அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு வந்திருக்கிறார்கள்.

அவை எல்லாவற்றையும்விட, கைத்தறித் துறையிலும் நீங்காத் தொடர்புகொண்டு, கைத்தறி நெசவாளர்களுடைய நிலைகள் வளரவும், கைத்தறி இயக்கம் சிறப்பாக பலம்பெற்று ஓங்கி நிலைக்கவும், அவற்றிற்கான பணிகள் பலவற்றையும் அவ்வப்போது ஆற்றி வந்திருக்கிறார்கள். கைத்தறியோடு தொடர்பு உடைய பல்வேறு இயக்கங்களிலும் பல்வேறு நிறுவனங்களிலும் தொடர்புகொண்டு, அவற்றினுடைய ஆக்கத்திற்கும் பல்வேறு வகைகளில் செயலாற்றி வந்திருக்கிறார்கள்.

இவை எல்லாவற்றோடும், பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் போதும் நல்ல பண்போடும் பரிவோடும் நெருங்கிப் பழகுவதற்கேற்ற நல்ல தன்மையிலும் இருந்து, நல்ல உறவுகளை நிலைநாட்டி வந்தவர்களாவார்கள். அவர்கள் இன்முகத்தோடு பலருடன் பழகுகின்ற தன்மையில், பொறுமையோடு பணியாற்றி வருவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆவார்கள்.

இப்படிப் பல்வேறு அரும்பெரும் பண்புகள் ஒருங்கே அமையப் பெற்றிருந்த அவர்கள், இந்த மன்றத்திலே இருந்து பணியாற்றி வந்தவர்கள். எதிர்பாராத வகையில் இயற்கை எய்தியது நமக்கெல்லாம் துக்கத்தை அளிக்கும் ஒன்றாகும். அவர்கள் மருத்துவமனையில் இருக்கையில் இரண்டு மூன்று முறை சென்று பார்த்தபோது அவர்கள் உடல் நலமுற்று மீளுவார் என்ற நம்பிக்கை

ஏற்பட்ட நிலையிலே, எதிர்பாராமல் திடீரென்று அவர் உயிர்விடும்படியான நிலை ஏற்பட்டது. அவருடைய மறைவு நமக்கும் இந்த மன்றத்திற்கும் பேரிழப்பாகும் என்ற கருத்தை உணர்த்த, அவரைப் பிரிந்து இருக்கின்ற குடும்பத்தினருக்கு இந்தப் பேரவையின் சார்பாக அனைவரும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று, சுதந்திராக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் இயற்கை எய்தியதும் எதிர்பாராத வகையில் நடைபெற்றதாகும். அவர்கள் பி. ஏ., எல். டி. பட்டம் பெற்று ஆசிரியராகப் பணியாற்றி, தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்கள். அதோடு மட்டுமல்லாமல், பல்வேறு சமூகத்துறைப் பணிகளிலும் அரசியல் துறைப் பணிகளிலும் நீங்காப் பற்றும் தனி ஆர்வமும் கொண்டு நிரம்பிய பணிகளைச் செம்மையாக ஆற்றி வந்தவரும் ஆவார்கள். கூட்டுறவுத் துறையிலும் நீங்காப் பற்றுக்கொண்டு, பல்வேறு கூட்டுறவு இயக்கங்களோடும் தொடர்புகொண்டு அவற்றின் மூலமாகக் கோவை மாவட்டப் பகுதிகளில் பல பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள்.

திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் கோபிசெட்டிப் பாளையத்தில் ஒரு கல்லூரி உருவாவதற்குப் பெருமுயற்சிகளை மேற்கொண்டு, அதிலே வெற்றிகண்டு, அந்தக் கல்லூரி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்டு, இப்பொழுது செம்மையாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தக் கல்லூரிக்கு வேண்டிய நிதிகளைச் சேர்ப்பதில் அவர்கள் பெரும் உழைப்பை எடுத்துக்கொண்டு அந்த நிதியைச் சேர்த்து, அந்தக் கல்லூரி சிறப்புற அமைய எல்லா வகையிலும் உதவி செய்தவர்களாவார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், கல்வித் துறையிலும் நீங்காத் தொடர்பு கொண்டு, பல்வேறு வகையான நிறுவனங்களிலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தார்கள். பல்வேறு குழுக்களிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். போர்டு ஆஃப் செகண்டரி எஜுகேஷனிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். அத்துடன், பல்வேறு பாடப் புத்தகங்களையும் எழுதியுள்ளார்கள். பாடப் புத்தகங்கள் எழுதுவதிலும் வல்லவர் என்று பெயர்பெற்று அந்த முறையிலும் அவர் எழுதிய பல நூல்கள் பல பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களாக வைக்கப்படும் அளவுக்குச் சிறந்தவையாக அமைந்திருக்கின்றன. அந்தகைய அறிவாற்றலை அவர் பெற்றிருந்தார்.

1958-ம் ஆண்டிலிருந்து 1962-ம் ஆண்டு வரையிலும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடைசி வரையிலும் பேரவையின் உறுப்பினராக இருந்து, மீண்டும் 1967-ம் ஆண்டில் மிக்க தன்மையோடும், எந்தப் பணியினை அணுகுவதிலும் நேர்மையான முறையில் இருந்து பணியாற்றி நல்ல அன்போடும் பண்





போடும் பழகிவந்தவர்கள் ஆவார்கள். அத்தகையவரை இந்தப் பேரவை இழந்திருப்பது மிக மிக வருந்தத்தக்கவொன்றாகும். இந்தப் பேரவையின் ஆழ்ந்த அனுதாபத்தை, அவரைப் பிரிந்து வருந்துகின்ற நண்பர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் நாம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த இருவருடைய இழப்பைக்குறித்து முன்மொழியப்பட்டிருக்கும் இந்த இரங்கல் தீர்மானத்தை இந்த மன்றம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பேரவையில் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தொடர்ந்து நானும் இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

முதன்முதலாக இந்தச் சட்டமன்றத்தில், நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவுடன் ஒருவர் என்னுடைய முதுகைத் தட்டி அழைத்து, என்னுடைய தாய்மொழியாகிய கன்னடத்தில் பேசி என்னை வியப்படையச் செய்தார். நான் ஒருவன்தான் கன்னடத்தில் பேசக்கூடியவன் என்று நினைத்திருந்தேன். கன்னடத்தில் பேசக்கூடியவன் நானும் இருக்கிறேன் என்று சொல்வதைப்போல திரு. வி. எஸ். எஸ். மணி செட்டியார் அவர்கள் இருந்தார்கள். திராவிட மொழிகளைக் கற்று, கன்னடத்தில் பேசக்கூடியவராக அவர் இருப்பதைக் கண்டு அப்போது நானும் பெருமகிழ்ச்சியடைந்தேன். அப்படிப்பட்ட திரு. மணி செட்டியார் அவர்கள் இன்று நம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள். அவர் ஆஸ்பத்திரியில் இருந்தபோது நான் முதல் தடவையாகப் போய்ப் பார்த்தேன். அவருக்கு இருதயக் கோளாறு என்று சொன்னார்கள். அவர் நிறைய ஓய்வு எடுக்க வேண்டும் என்று நான் சொல்லிவிட்டு வந்தேன். அவருக்கு ஏன் அந்த நோய் வந்தது என்றால், தன்னுடைய சக்திக்கு மீறி உழைத்ததுதான் காரணம். பொதுவாக பொதுத் தொண்டில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் தங்களுடைய தேகநலனைப் பார்க்காமல், தேக சுகத்தைப் பார்க்காமல் தங்களுடைய சக்திக்கு மீறி உழைக்க வேண்டியிருக்கிறது. பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் எல்லாம் தங்களுடைய தேக சுகத்தைப் பாதுகாப்பதிலும், உடல்நிலையைப் பாதுகாப்பதிலும் தகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பைபிளில் "what shall it profit a man even if he gains the whole world but loses his own health. என்று ஒரு பழமொழி இருக்கிறது. ஒருவர் உலகத்திலுள்ள எல்லா நலன்களையும் அடைந்திருந்தாலும் தேக சுகத்தை இழந்துவிட்டால் பயன் இல்லை. உடல்நிலை நன்றாக இருக்க வேண்டும். அப்போதுதான் மனநிலையும் நன்றாக இருக்கும். நம்முடன் இருந்து பணியாற்றிய திரு. மணி செட்டியார் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார்கள். அவரைப் பிரிந்து நிற்கும் அவரு

டைய குடும்பத்தாருக்கும் அவருடைய சுற்றத்தாருக்கும் அவருடைய கட்சியினருக்கும் இந்தப் பேரவை மூலமாக என்னுடைய கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் என்னுடைய குடும்ப நண்பர். என்னுடைய குடும்பத்துடன் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருந்தவர், மிகவும் நல்லவர். வைரவிழாக் கொண்டாடிய கோபிச்செட்டிப்பாளையம் உயர்நிலைப் பள்ளியில் நீண்டகாலமாகத் தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் ஆசிரியராக வந்தபோது 1930-ம் ஆண்டில் முதலில் நான்தான் அவருடைய மாணவனாக இருந்தேன். அவர் முதலில் தீவிரமாகக் காங்கிரஸிலே உழைத்தவர். இப்போது சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் ஒரு சிறந்த நண்பர், சிறந்த பண்பாளர், பொதுக்காரியங்களிலே ஈடுபாடாக இருந்தவர், நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர்போனவர். அவர் நன்றாகத்தான் இருந்தார். திடீரென்று நோய்வாய்ப்பட்டு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். பத்து நாட்கள் கழித்து எதிர்பாராமல் அவருக்கு மரணம் ஏற்பட்டுவிட்டது. அவரைப் பிரிந்து நிற்கும் அவருடைய குழந்தைகளுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் இந்தப் பேரவையின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய குடும்பமும் என்னுடைய குடும்பமும் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தது. அவர் மிகவும் நல்லவர், நல்ல அனுபவம் பெற்றவர், பொதுவாழ்க்கையில் அயராது உழைத்தவர். அப்படிப்பட்ட ஒரு நல்ல சகாவை இழந்து நிற்கிறேன். அவருடைய மறைவால் வாடும் அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய கட்சியின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, on behalf of the Swatantra Party I associate myself with the sentiments expressed in the condolence motion moved by the Hon. the Leader of the House. Sir, it has been our unfortunate position in this House that in the past three or four years we have lost some distinguished Members of this House, persons who have distinguished themselves both in their academic career and in their public life and also in the legislative work. One such distinguished person whom we have lost now is Thiru V. S. S. Mani. He always spoke without any fear or favour. Whenever he got up to speak, he never bothered what impression he would create on others and he only spoke what he wanted to speak. Even in his public life he had acquitted himself creditably well in his district of Madurai and he had held a number of positions there. In the district of Madurai, wherever we go we hear excellent words of praise spoken about him not only by the Members of the Dravida Munnetra Kazhagam but also by members of other parties irrespective of their party affiliations. Even his political adversaries had always something good to say





about him. So, on behalf of our party, I wish to express how deeply we feel over the loss of such a distinguished person and we also express our grief not only to Thiru Mani's near and dear ones but also to the members of the party who have lost a great man.

Sir, the other casualty and the great loss substained by our own party is the death of Thiru K. M. Ramaswamy Gounder. Though he was old he was energetic. In fact when we had our party meeting, our revered Rajaji saw him calmly and briskly walking about and said that he was walking like a young man of 30 though he was nearly 60 years old. That was the impression he had created even among the leaders of our party and also even outside. In the district of Coimbatore he had commanded like Thiru Mani great respect from all parties irrespective of party affiliations. Everybody had a good word to say about him. He was a Member of the Legislative Council and he was also a Member of the Senate. It was really tragic that we have lost such a great man. When I got a telephone call that Thiru Ramaswamy Gounder had passed away in the hospital I was shocked to hear it. When I saw him in the hospital he looked as if he was alive and that picture is still green in my memory. A number of members belonging to the Treasury Benches were very helpful in disposing and carrying his great body. It is really a great pity that we have lost one of our distinguished Members. So, on behalf of our party I request the Hon. Speaker to convey our condolences to the Members of the bereaved families of Thiru Mani and Thiru Ramaswamy Gounder.

* திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் சம்பந்தமாக அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய உணர்ச்சிகளின் கருத்துக்களை நானும், எனது கட்சியும் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மணி செட்டியாரைப் பொறுத்தமட்டில், அவர் அரசியலுக்கும் அப்பால் நீண்டகாலமாகப் பழக்கமுள்ளவர். அவர் குடும்பம் எனக்குப் பழக்கமுள்ள குடும்பம். என்னுடைய தந்தை திண்டுக்கல்லில் வழக்கறிஞராக இருந்த காலத்தில் அவரிடம் ஒரு கட்சிக்காரராக முதன்முதலில் அறிமுகமானார். எனக்கும் அவருக்கும் இயக்கத்திலே, அரசியலிலே வெவ்வேறு கண்ணோட்டம் இருந்தபோதிலும், எங்களுடைய நட்பு சிறிதும் குறையாமல் எங்களுடைய குடும்ப நண்பராக இருந்தார். அப்படிப்பட்ட நண்பர் திடீரென நம்மைவிட்டுப் பிரிந்து சென்று விட்டார். அவர் மிகவும் சீரிய பண்பாளர். அவருடைய குடும்பமும், அவர் பொதுவாழ்க்கையில் ஈடுபட உதவியாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு சிறந்த நண்பரின் மறைவினால், அவரைப் பிரிந்து நிற்கும் அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய கட்சிக்கும் என்னுடைய கட்சியின் சார்பாக எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்மைவிட்டு மறைந்த பெரியார் திரு. இராமசாமி கவுண்டர் அவர்கள் விவசாய இயக்கத்தில் மிகவும் பற்றுக்கொண்டவராக இருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த அவையிலேயே முதிர்ந்த வயதானவராக இருந்தார். கம்பீரமான தோற்றத்துடனும், அடக்கத்துடனும் இருந்து, சிறப்பாக முயற்சி செய்து வந்தார். அவை நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். அந்தப் பெரியவரும் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டது பற்றி அவரது குடும்பத்தார்க்கும், தொகுதி மக்களுக்கும் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவை முதல்வர் கொணர்ந்த இரங்கல் தீர்மானத்தை ஏற்று, அந்த அந்தக் குடும்பத்தார்க்கு எனது சார்பாகவும், எனது கட்சியின் சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கோ. பூவராகன்: அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்ற உறுப்பினர்களாக இருந்த திரு. மணி அவர்களையும், திரு. இராமசாமி கவுண்டர் அவர்களையும் நாம் இழந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்த இரு உறுப்பினர்களும் இரு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் முதிர்ந்த சட்டசபை அனுபவம் வாய்ந்தவர்கள். தங்கள் தங்கள் தொகுதி மக்கள்மீது மிகுந்த பற்றுக்கொண்டவர்களாக இருந்தார்கள். இருவரும் இருவேறு துறைகளில் அவைபற்றிய விவாதம் சட்டமன்றத்தில் வரும்போது எல்லாம் நல்ல ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவித்து வந்தார்கள். தெள்ளத் தெளிய சொல்லி வந்தார்கள். கைத்தறியாளர்கள் பிரச்சினை வருகிறபோது எப்படி திரு. மணி அவர்கள் தம்முடைய கருத்தைத தெளிவாக எடுத்துச் சொல்லிவந்தார்களோ, அது போலவே விவசாயப் பிரச்சனை, கல்விப் பிரச்சனை வருகிறபோதெல்லாம் திரு. இராமசாமி கவுண்டர் அவர்கள் தம்முடைய ஆழ்ந்த கருத்துக்களை எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய மறைவு இந்தச் சட்டமன்றத்திற்கு இழப்பாகும். தொகுதி மக்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தார்களுக்கும், என்னுடைய கட்சியின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மறைந்த திரு. இராமசாமி கவுண்டர் அவர்கள் என்னுடைய அறைக்குப் பக்கத்தில் 2 ½ ஆண்டுக் காலம் இருந்தார்கள். அவர்களது மகனைப்போலவே அவர்களுடன் இருந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதையும், பொது மக்களுக்கு எந்த வகையில் தொண்டாற்றவேண்டும்





என்கிற உணர்ச்சியையும் நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன். அவர் மிகுந்த அறிவு ஆற்றல் மிக்கவர். அடக்கம் உள்ளவர். அன்புள்ளம் கொண்டவர். அத்தகைய ஒருவரை இழந்திருப்பது இந்த மன்றத்திற்கும், தமிழகத்திற்கும் பெருத்த நஷ்டமாகும். ஆறாத் துயரில் வீழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தார்க்கும், தொகுதி மக்களுக்கும் என்னுடைய கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய திரு. மணி செட்டியாரை இழந்ததனால் வருந்துவது அவரது தேவாங்க சமுதாயம். நாற்பதாயிரத்திற்கும் மேல் வாழ்கின்ற அவர்களது ஊரான அருப்புக்கோட்டை எனது ஊருக்கு அருகில் உள்ள காரணத்தினால் திரு. மணி அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பும் வசதியும் இருந்தது. சட்ட மன்ற ஹாஸ்டலிலும் என் அறைக்குப் பக்கத்தில் அவர் இருந்தார். சட்டமன்றத்தில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதை அவர்கள் பலமுறை எனக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தந்தையை இழந்த மகன் போல அவரது பிரிவு குறித்து நான் வருந்துவதோடு, அவர்களது குடும்பத்தார்க்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு இரங்கல் தீர்மானத்தையும் ஆதரித்து விடைபெறுகிறேன்.

* ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றப் பேரவையில் நம்மோடு சேர்ந்து சிறப்பாகத் தொண்டாற்றிக் கொண்டிருந்த இரு உறுப்பினர்கள் காலமாகிவிட்டார்கள் என்பதை அறிந்து மாண்புமிகு அமைச்சர், மன்ற முதல்வர், நாவலர் முன்மொழிந்த அனுதாபத் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தோடும் வேதனையுடனும் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்.

நம்முடைய அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி அவர்கள் நீதிக் கட்சியில் சேர்ந்து சமுதாயத்திற்குத் தொண்டாற்றியதுடன் திராவிடப் பொது மக்களுக்கு நீதி கிடைக்கப் பாடுபட்டிருக்கிறார்கள். அதேபோன்று தமிழ் மக்களுடைய தன்மானத்தைத் தட்டி எழுப்பும் வகையில் தன்மான இயக்கத்தில் பங்குபெற்றிருக்கிறார்கள். சமுதாய சீர்திருத்தத்தை, எழுச்சியை உண்டுபண்ண திராவிடக் கழகத்தில் ஈடுபட்டு சமுதாயச் சீர்திருத்தத் துறைக்கு தன்னை அர்ப்பணித்திருக்கிறார்கள். அதேபோன்று அரசியலை அடிப்படையாக வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் பாடுபட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நமது சட்டமன்றத்திலே கைத்தறிப் பிரச்சினை வருகின்ற நேரத்திலெல்லாம் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்களுடைய அவலத்தை நீக்குகின்றவகையில் சிறப்பாகக் குரல் கொடுப்பார்கள் அதை இப்பொழுது நினைவு கொள்கிறேன்.

திரு. இராமசாமி கவுண்டர் அவர்கள் தேசியப் பாராட்டுகளில் ஈடுபாடு கொண்டவர்கள். ஆசிரியப் பணி புரிந்தவர்கள். மாணவர்களுக்குப் பாடநூல்களை எழுதித் தரும் ஆற்றல் பெற்றவர்

கள். கோவை, நீலகிரி மாவட்ட ஆசிரியர் சங்கத் தலைவராகப் பணி புரிந்திருக்கிறார்கள். அனுபவம், அறிவும் நிறைந்த அவர்கள் அருமையாக சட்டமன்றத்தில் பேசுகின்றபோது அவரது தூய நோக்கத்தைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் இருவரது மறைவு குறித்து வருந்துகிற அவர்களது குடும்பத்தார்க்கும், தொகுதி மக்களுக்கும், கட்சிக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். "இறைவனிடத்தில் இருந்து வந்த நாம் இறைவ னிடத்திலேயே சேர்கிறோம்".

திரு. க. ர. நல்லசிவன் : பெருமதிப்பிற்குரிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நம்மைவிட்டு மறைந்த திரு. மணி அவர் களுடனும், திரு. இராமசாமி கவுண்டர் அவர்களுடனும் பழகும் போதும், பல்வேறு பிரச்னைகளைப் பற்றிப் பேசும்போதும் அவர்கள் தங்களுடைய கட்சியைக் காட்டிக்கொண்டதைவிட தங்களை மிகப் பெரியவர்களாகக் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும். அவர்களோடு அண்டிப் பழகினவர் கள் தெரிந்து கொண்ட உண்மை இது தான். அது மட்டுமல்ல; எனக்குத் தெரிந்த வரையில் அவர்கள் இரண்டு பேர்களுமே ஒரே மாதிரியான கருத்து உடையவர்கள் என்பதை அவர்களுடைய நடவடிக்கைகளில் இருந்து புரிந்து கொள்ள முடியும். கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகவே அவர்களை எனக்குத் தெரியும். தெரிந்த வரையில் அவர்கள் முன் உதாரணமாக விளங்குகின்ற தகுதி உடையவர்களாகவே விளங்கி வந்திருப்பதைப் பார்த்திருக் கிறேன்.

திரு. இரமசாமி கவுண்டர் அவர்களைக் கொஞ்சம் அதிகமாகத் தெரியும். ஆசிரியத் தகுதி வாய்ந்தவர்களாக இருந்தாலும் போராட்டங்கள் என்கிறபோது நம்மை யெல்லாம் விட மிக உற்சாகமாகப் பங்கெடுத்துக்கொள்வார்கள். நடுநடுவே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் நினைவுபடுத்தி உணர்ச்சியை ஒழுங்குக்குக் கொண்டு வருவார்கள். இவர் களுடைய மறைவு குறித்து சோஷியலிஸ்டுக் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, இரங்கல் தீர்மானத் தையும் ஆதரித்து வருத்தத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முதல்வர் முன்மொழிந்த தீர்மானத்தை மிகுந்த வருத்தத் தோடு தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆதரிக்கின்றேன்.

நம்மைவிட்டு மறைந்த திரு. மணி அவர்கள், பலகாலமாக எனக்கு அறிமுகமானவர்கள். தமது வீட்டுமொழி கன்னடமாக இருந்தாலும், வாழும் நிலத்தால்—இனத்தால் தமிழ் உணர்வு கொண்டு, தமிழ்நாட்டுக்கே சிறப்பாகப் பணிபுரிந்தவர்கள். தமிழ்ப் பற்றுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் இரண்டறக் கலந்து நின்று தமிழ் நாட்டு மொழிக்காக, தமிழ் நாட்டு மக்களுக் காகப் பாடுபட்டவர்களில் ஒருவராகச் சிறந்து நின்ற பெரியவர்





மறைந்துவிட்டது நம்முடைய பேரிழப்பாகும். அவரைப் பிரிந்து வருந்துகின்ற அவரது குடும்பத்தார்க்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. கே. எம். இராமசாமி கவுண்டரோடு அதிகமாக நெருங்கிப் பழகாவிட்டாலும், ஆசிரியராக இருந்து அரசியல்வாதியாக வளர்ந்து, சட்டமன்ற உறுப்பினராக வந்து, நம முடைய கௌரவத்திற்கு உரியவராக வாழ்ந்து மறைந்தார்கள். ஆசிரியர் நிலையில் இருந்து இந்த நிலைக்கு உயர்ந்து வருவது அவ வளவு சுலபமானது அல்ல என்பதை எல்லோரும் உணர்வார்கள். அத்தகைய அரும் தொண்டில் பங்கெடுத்துக் கொண்ட அவரது மறைவு குறித்தும் வருந்துவதோடு, அவரது குடும்பத் தாருக்கும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்களுக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய திரு. மணி செட்டியார் அவர்களைப் பற்றி எனக்கு 2, 3 ஆண்டுகளாக நன்றாகத்தெரியும். என்னுடைய அறைக்குப் பக்கத்திலே அவர்கள் இருந்தார்கள். அவர் சிறந்த பண்பாடு உள்ளவர். ஒவ்வொரு தடவை சந்திக்கும்போதும் அந்தக் காலத்திலேயே மக்களுடைய நலனைப் பற்றியும் குறிப்பாக நெசவாளர்களுடைய கஷ்டங்களைப் பற்றியும் கேட்பார்கள். அதோடு அவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவரைப்போல எல்லோருடனும் அன்பாகப் பழகக் கூடியவர்கள். அவரது மறைவு பொதுவாக இந்த நெசவுத் தொழில் மக்களுக்கு—தொகுதி மக்களுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஆகும். அவருடைய மறைவினால் கஷ்டப்படும் இந்த மன்றத்தினருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் என் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது திரு. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் வயதான காலத்திலே கூட எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தார்கள் என்பதை, சென்ற ஜனாதிபதி தேர்தலில் ஓடி ஆடி இரவு பூராவும் வேலை செய்ததைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். அவர்களைப் பார்த்து நாம் படித்துக் கொள்ளவேண்டுமென்ற முறையில் தன்னுடைய கடமைகளைச் சிறப்பாக ஆற்றினார்கள். தான் கொண்ட கொள்கைகளை வலியுறுத்துவதில் மிகச் சிறப்பாக இருந்து பணி ஆற்றினார்கள். அவருடைய குடும்பத்தாருக்கும் என் கட்சியின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்து அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

* திரு. கே. பி. எஸ். மணி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை என் கட்சியின் சார்பாக மனமார அனுதாபத்துடன் வரவேற்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மணி அவர்களைத் தூத்துக்குடி மாநாடு காலத்திலிருந்து நான் நன்கு அறிவேன். அவர் இரு முறை சட்டசபைக்கு வந்த பிறகும், அன்றைய காலத்தில் என்னிடம் எப்படிப் பழகி வந்தார்களோ அதற்கு ஒரு சிறிதும் குறையாதபடி பழகி வந்தார்கள். அவையிலும் சரி, வெளியிலும் சரி தன்னுடைய கருத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளுவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்தார்கள். தன்னுடைய கருத்துக்களை மற்றவர்கள் செவியில் ஏற்றுகின்ற அளவுக்கு வலியுறுத்தி வந்தார்கள். அதோடு சபையிலும் கூட நல்ல முறையில் சபையின் நடவடிக்கைகளைப் படித்து அதற்குத் தக்க முறையில், காலத்திலே எதைச் செய்ய வேண்டுமோ அத்தகைய காரியங்களைச் செய்து வந்தார்கள். அத்தகைய ஒரு நல்ல மனிதர், நல்ல சகோதரர், ஒரு நல்ல சட்டசபை அங்கத்தினர் நம்மை விட்டுப் பிரிந்தது உண்மையிலேயே சபைக்கும் கட்சிக்கும் பெருத்த இழப்பாகும். அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, திரு. இராமசாமி கவுண்டர் அவர்கள். ஆசிரியராக இருந்து அரசியல் வாதியாக இந்த சட்டமன்றத்திற்கு வருவது சற்று கடினமான காரியம். அப்படிப்பட்ட நிலையிலே வந்த திரு. இராமசாமி கவுண்டர் தன்னுடைய கருத்தை விவாதிக்கும் போதும், வலியுறுத்தும்போதும் அழுத்தம் திருத்தமாக இருக்கும், அதற்குக் காரணம் அவர் ஆசிரியராக இருந்து, மாணவர்களுக்குக் கருத்துக்களைப் போதித்து தன்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்ததுதான். அத்தகைய ஒரு நல்ல பெரியவரின் மறைவுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் என் கட்சியின் சார்பாக அவருடைய குடும்பத்திற்கு அனுதாபத்தைத் தெரிவித்து, இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரங்கல் தீர்மானத்தை பி. எஸ். பி. கட்சியின் சார்பில் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொருவரும் மறைகின்ற போதும் நண்பர்கள், தெரிந்தவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் வேதனைப்படுவது இயல்பு. இதிலே சமுதாயத்தில் பயனுள்ளவர்கள் யாராவது மறையும்போது இன்னும் அதிகமான வேதனை ஏற்படுகிறது. அம்மாதிரி இந்த இருவரும், திரு. இராமசாமி கவுண்டர் அவர்களும் சரி, திரு. மணியானாலும் சரி, சமுதாயத்திற்குப் பயன் உள்ள பல வேலைகளைச் செய்து வந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே ஹாஸ்டலில் தங்கி இருக்கின்றபோது கிச்சன் பிளாக்கில் திரு. இராமசாமிக் கவுண்டரும் நானும் ஒருவரை ஒருவர் அறியும் வாய்ப்புக் கிட்டியது. அவர் பழைய காலத்திலே தேசத்திற்காக எவ்வளவு தியாகம் செய்து இருக்கிறார்





என்பதையும், எப்படி செய்து வந்தார்கள் என்பதையும் புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அப்படி தேசத்திற்குப் பணி புரியக்கூடியவர்களில் முதல்வராக, சிறந்தவராக, இருக்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மறைந்தார்கள் என்று சொல்கிறபோது நிச்சயமாக வேதனை உண்டாகத்தான் செய்யும். இதேபோன்று திரு. மணி அவர்களும் மகத்தான சேவை செய்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக நெசவாளர்கள் அவரது சேவையைப் புரிந்து கொண்டிருக்கலாம். அந்தக் காலத்திலே சீர்திருத்தம் என்றால் போற்றுதலுக்கும், தூற்றுதலுக்கும் ஈடு கொடுக்கக் கூடியவர்கள் தான் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அப்படி அந்தத் துறையில் இவர்கள் சிறப்பான சேவை புரிந்தவர்கள். அவர் மறைந்துவிட்டார் என்று சொல்கிறபோது சபைக்கு மட்டும் அல்லாமல் ராஜ்யத்துக்கே ஒரு நஷ்டம் ஆகும். இந்த நஷ்டத்துக்கு ஈடுகட்ட இந்தச் சபையில் நம்முடைய தீர்மானத்தின் மூலம் வெளிப்படுத்திக்கொள்வது ஒரு சாதாரண நிலையே தவிர வேறொன்றும் இல்லை. இன்னும் சிறப்பான முறையில் ஏதாவது செய்ய முடிந்தால் நல்லதாக இருக்கும். வருங்காலத்தில் சபையிலுள்ள உறுப்பினர்கள் யாராவது மறைந்தால் அவர்கள் பொறுப்பான பணியில் ஈடுபட்டவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வுடன் பார்த்து, அவர்கள் மறைகின்ற போது, தீர்மானம் போடுவதோடு மட்டுமல்லாமல் இன்னும் சிறப்பாக ஏதாவது செய்யமுடியுமா என்பதை இது போன்ற நேரங்களில் யோசிக்க வேண்டுமென்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மறைந்த, இந்த மன்றத்தின் இரு பெரியவர்களைப்பற்றி நாவலர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தையொட்டி அவையிலேயுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துக் கூறிய இரங்கல் உரையோடு என்னுடைய இரங்கலையும் இணைத்துக்கொள்வதில் நான் மிகுந்த வேதனையடைகின்றேன். மறைந்த இரு பெரியவர்களும் இந்த மன்றத்தில் கட்டிக் காக்க வேண்டிய மாண்பினை ஒழுங்குறக் காத்து நமக்கெல்லாம் வழிகாட்டிகளாகத் திகழ்ந்தவர்களென்று சொன்னால் அது மிகையாகாது. ஆத்தூர் திரு. வி. எஸ். எஸ். மணி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் இந்த மன்றத்தில் தன்னுடைய கடமையை ஆற்றவேண்டுமென்று துடியாய்த் துடித்தார்கள். பொதுப்பணித் துறை மானியத்தின்மீது விவாதம் இங்கே நடைபெற்ற நேரத்திலே 23—3—1970-ஆம் நாளில் தான் பேச வேண்டுமென்று அவர் பிடிவாதம் பிடித்தார். ஏற்கனவே அவருக்கு இதய வலியிருந்த காரணத்தாலும், மருத்துவர்கள் அவர் பேசுவது கூடாதென்று தடுத்துரைத்திருக்கிற காரணத்தாலும், அவர் பேசுதலாகாது என்று அரசாங்கத்தினுடைய கொறடா அவர்கள் எடுத்துச் சொல்லியும், பிறகு அவர்கள் என்னிடத்திலே பிடிவாதம் செய்து, நான் இந்தக் கூட்டத் தொடரில் கடைசியாகப் பேசுகிற பேச்சு இதுதான், ஆகவே அனுமதி

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 24

அளியுங்கள் என்று கேட்டுப் பேசிமுடித்த சற்று நேரத்திற்கெல்லாம் இதய வலியேற்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சில நாட்களிலே உயிரிழந்தார்கள். மன்றத்திற்கு வந்திருக்கிற கடமையையுணர்ந்து மக்களுக்காகவும், தன் தொகுதிக்காகவும் கடமையாற்றுகின்ற நேரத்திலே தன்னுடைய உயிரின் முடிவிற்குத் தானே காரணமாக இருந்த ஒரு தியாக சீலரை நாம் பாராட்டுவதுடன் அவருடைய இழப்பால் இந்த மன்றம் ஒரு கடமைவீரரை இழந்திருக்கிறது என்பதை உணர்தலும் பொருத்தமாக இருக்கிறது. அவர் நெசவாளர்களுக்காகப் பேசினார், நெசவாளர்களுக்காகப் பாடுபட்டார், நெசவாளர்களுக்காகப் பல நற்செயல்களிலே ஈடுபட்டார், அவர்களுக்காக வாதாடினார், போராடினார்.

அதைப்போலவே சுதந்திராக்கட்சிக் கொறடாவாக இருந்த கோபி திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்கள், நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டதாகச் சொன்னார்களே அதற்கேற்ப, வயதில் முதியவராக இருந்தாலும் இளமை முறுக்கோடு பணிகளை ஆற்றி வந்தார். இந்த மாமன்றத்திலே அவர்கள் விவசாயிகளுடைய பிரச்சினைகளை எடுத்துவைக்கின்ற நேரத்திலே அவர்களுடைய பேச்சு ஒரு தனித்தன்மை பெற்றதாக இருக்கும். அதனை கவனித்துக் கேட்கவேண்டுமென்ற நிலை நம் அனைவருக்கும் இருக்கும். விவசாயிகளின் பிரச்சினைகள், தேவைகள் இவற்றைப் பற்றி இந்த மன்றத்தில் ஒழுங்குற எடுத்து வைத்தார்கள். ஆக, நெசவாளர்களுக்காக உழைத்த ஒரு நேர்மையாளரையும், விவசாயிகளுக்காக உழைத்த ஒரு நல்லவரையும் இந்த மன்றம் இன்றையதினம் இழந்து தவிக்கிறது. எவ்வளவுதான் இரங்கல் உரைகள் நாம் ஆற்றினாலும், தீர்மானத்தை நிறைவேற்றினாலும் ஈடுசெய்ய முடியாத இழப்பு இந்த இரண்டு பெரியவர்களின் மறைவு என்பதை மனத்திலேயிறுத்தி எதிர்க்கட்சித் தலைவர், அருமை நண்பர் திரு. கருத்திருமன் எடுத்துக் காட்டியதைப்போல், பொதுவாழ்விலே தொண்டாற்றிடும்பொழுது உடல் பேணவேண்டும், ஓய்வினையும் கொண்டிடவேண்டும் என்பது சரியானதுதான் என்றாலும் நாம் அதனைக் கடைப்பிடிக்கக்கூடிய அளவிற்கு, பரிந்துரைக்காக வருகின்றவர்கள், தேர்ந்தெடுத்து அனுப்பியவர்கள் கடைப்பிடிப்பார்களானால் நம்மையெல்லாம் பாதுகாக்கிற முயற்சியில் அவர்களுக்கு அக்கறை இருப்பதாக அர்த்தம். நாமாக எடுத்துக்கொள்ளக்கூடிய ஓய்வு திரு. இராமசாமிக் கவுண்டர் அவர்களும், திரு. மணி அவர்களும் எடுத்துக்கொண்ட ஓய்வுதான். எனவே போதுமான அளவுக்கு ஓய்வினைத் தந்து, உழைப்பதற்கு ஏற்ற வலிவினைத் தருவது அவர்களது கடமையாகும். மறைந்த இரண்டு பெரியவர்களுக்கும் நீங்கள் அனைவரும் செலுத்திய இறுதி அஞ்சலியில் நானும் பங்கு கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த திரு. வி. எஸ். எல். மணி அவர்கள் என்னைப்போல் நெசவாளர் குடும்பத்திலிருந்து வந்து நெசவாளர்களுக்காகப் பணியாற்றியவர். அதுபோல்



1970 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

மறைந்த திரு. இராமசாமிக் கவுண்டர் அவர்களும் என்னைப்போல் ஆசிரியராக இருந்து அரசியலுக்கு வந்து பணிபுரிந்தவர். இந்த இரண்டு பெரியவர்களும் எனக்கு ஒற்றுமையுடைய நிலையில் பணியாற்றியிருக்கிறவர்கள், பண்பட்ட அரசியல்வாதிகள், பக்குவப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள். முதுமையிலும் இளமையோடு பணிபுரியும் எண்ணம் இருந்தாலும் அந்த ஆர்வத்திலும் சட்ட மன்ற மரபிற்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டுப் பணியாற்ற வேண்டுமென்பதிலே மிகவும் அழுத்தமாக இருந்தவர்கள். அவர்களுடைய மறைவு, இழப்பு ஈடுசெய்ய முடியாதது. மறைந்தவர்களுக்கு மரியாதையையும் அவர்களைப் பிரிந்துவிட்ட அவர்களுடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த இரண்டு பெரியவர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த இரண்டு பெரியவர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின்
இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன். மு.ப. 11-45
பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

*1. Notification issued with Roc. No. 183816/69-P2, dated the 14th November 1969, in regard to exclusion of certain areas from the limits of South Kallidaikurichi Panchayat in Ambasamudram taluk of Tirunelveli district and constitution of separate Panchayats by name " Moolachi ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*2. Notification issued with G.O. Ms. No. 3104, Agriculture, dated the 9th October 1969, in regard to amendment to rule 167 (c) of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

*3. Notification issued with G.O. No. 1799, Public (Services-A dated the 29th September 1969, in regard to amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for

inclusion of the post of Assistant Lecturer in Bio-Chemistry, in Madras Veterinary College within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

* 4. Notification issued with G.O. Ms. No. 2405, Rural Development and Local Administration, dated the 4th December 1969, in regard to certain amendments to the Tamil Nadu Local Authorities (Duty on Transfer of Property) Rules, 1948. [Laid on the Table of the House under section 348 (*d*) and 304 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919) and Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920 respectively).]

* 5. Notification issued with G.O. R. No. 2985, Revenue, dated the 16th December 1969, in regard to exemption from liability to Entertainments tax, to the film shows conducted at Children's Theatre, Vellore, North Arcot district, for the benefit of children. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 6. Notification issued with G.O. P. No. 2156, Revenue, dated the 29th September 1969, in regard to an amendment to the Revenue Department Notification II 1 No. 2437 of 1962, dated 22nd May 1962, published at page 282 of Part II of *Fort St. George Gazette*, dated the 30th May 1962, as subsequently amended. [Laid on he Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 7. Notification issued with G.O. Ms. No. 716, Social Welfare, dated the 8th October 1969, in regard to an amendment to Regulation 12 in Appendix III to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957, as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

* 8. Notification issued with G.O. Ms. No. 867, Social Welfare, dated the 22nd November 1969, in regard to an amendment to rule 45 of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957, as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

* 9. Notification issued with G.O.P. No. 2617, Revenue, dated the 7th November 1969, in regard to amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, relating to the failure to surrender the unused Form XX at the time of closure of business, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]



*10. Notification issued with G.O. Ps. No. 2967, Revenue, dated the 12th December 1969, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended, consequent on the Tamil Nadu Act 12 of 1968. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 11. Notification issued with G.O. Ms. No. 2383, Revenue, dated the 17th October 1969, in regard to amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) relating to the levy of single-point tax on Jaggery and Gur. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 12. Notification issued with G.O. Ms. No. 2600 Revenue, dated the 4th November 1969, in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) relating to the levy of single-point tax on cocoanuts. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 13. Notification issued with G.O. Ms. No. 95, Agriculture, dated the 19th January 1970, in regard to preliminary Notification for regulation of trade in arecanut in Coimbatore district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 14. Notification issued with G.O. Ms. No. 3249, Agriculture, dated the 23rd October 1969, in regard to amendment to rule 194 (A) of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 15. Notification issued with G.O. Ms. No. 2251, Rural Development and Local Administration, dated the 14th November 1969, in regard to preliminary notification for exclusion of certain areas from the Tirunelveli Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 16. Notification issued with G.O. Ms. No. 54, Rural Development and Local Administration, dated the 12th January 1970, in regard to constitution of a Municipality with the name "Namakkal" with sixteen councillors with effect on and from the 17th January 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 17. Notification issued with G.O. Ms. No. 55, Rural Development and Local Administration, dated the 12th January 1970, in regard to constitution of a Municipality with the name "Pallavapuram" with twenty councillors with effect on and from the 17th January 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 18. Notification issued with G.O. Ms. No. 56, Rural Development and Local Administration, dated the 12th January 1970 in regard to constitution of a Municipality with the name "Sattur" with sixteen councillors with effect on and from the 17th January 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 19. Notification issued with G.O. Ms. No. 57, Rural Development and Local Administration, dated the 12th January 1970, in regard to constitution of a Municipality with the name "Thuraiyur" with sixteen councillors with effect on and from the 17th January 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 20. Notification issued with G.O. Ms. No. 58, Rural Development and Local Administration, dated the 12th January 1970, in regard to constitution of a Municipality with the name "Satyamangalam" with sixteen councillors with effect on and from the 17th January 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920.]

21. Notification issued with G.O. Ms. No. 59, Rural Development and Local Administration, dated the 12th January 1970, in regard to constitution of a Municipality with the name "Vridhachalam" with twenty councillors with effect from the 17th January 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 22. Notification issued with G. O. Ms. No. 60, Rural Development and Local Administration, dated the 12th January 1970, in regard to inclusion of certain Municipalities in schedule IX to the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil



Nadu Act V of 1920). [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 23. Notification issued with G. O. Ms. No. 3199, Home, dated the 29th December 1969, in regard to exemption from payment of motor vehicles tax in respect of stage carriages registered in the State of Kerala and used as spare buses in case of breakdown of regular route buses plying on the inter-State routes between Tamil Nadu and Kerala. [Laid on the Table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 24. Notification issued with R. Dis. No. 202304/68-P2, dated the 29th August 1969, in regard to exclusion of certain areas from the existing three panchayats namely, A. Singampuneri, Kirugokottai and Amaikarapatti and constitution of a separate panchayat and alteration of the name of A. Singampuneri Panchayats as "Veguthueluvanpatti" Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 25. Notification issued with R. Dis. No. 29155/69-P2, dated the 25th September 1969, in regard to bifurcation of Karaichutupudur Panchayat in Nanguneri taluk of Tirunelveli district and constitution into a separate panchayat with the name of "Karaichutunavaladi". [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 26. Notification issued with Rc. No. 140890/69/P2, dated the 29th October 1969, in regard to exclusion of Vasudevapuram Revenue village from the limits of Vijapuram Panchayat in Pattukkottai taluk of Thanjavur district and its inclusion within the limits of Melamangalam Panchayat in Arantangi taluk of Thanjavur district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 27. Notification issued with G.O. Ms. No. 2849, Home, dated the 12th November 1969, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number MDF 5838 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, South Arcot at Cuddalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicels Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 28. Notification issued with G.O. Ms. No. 2850, Home, dated the 12th November 1969, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MDK 8311 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical

Officer, Kanyakumari district. [Laid on the Table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 29. Notification issued with G.O. Ms. No. 62, Home, dated the 12th January 1970, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle MSQ 5584 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Director of Health Services and Family-Planning, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 30. Notification issued with G.O. Ms. No. 2197, Rural Development and Local Administration, dated the 19th December 1969, in regard to amendment to rule 14 of the Tamil Nadu Bhoodan Yagna Rules, 1959. [Laid on the Table of the House under section 28(3) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958).]

† 31. Notification issued with G.O. Ms. No. 4714, Rural Development and Local Administration, dated the 18th March 1970, in regard to extension of time-limit for submission of application for licence prescribed under the Tamil Nadu Public Buildings (Licensing) Act, 1965 up to 31st March 1970. [Laid on the Table of the House under section 25 (4) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act, 1965 (Tamil Nadu Act 13 of 1965).]

† 32. Notification issued with G.O. Ms. No. 3022, Revenue, dated the 17th December 1967, making the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Rules, 1969. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act X of 1969).]

† 33. Notification issued with Roc. No. 99557/69-E-3, dated the 27th August 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to building regulations in the entire area of Muthur Town Panchayat, Coimbatore district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

† 34. Notification issued with Roc. No. 11030/69 E-3, dated 25th April 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to building regulations in the entire area of Vikramasingapuram Town Panchayat, Tirunelveli District. [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



† 35. Notification issued with G.O. No. 533, Revenue, dated the 21st February 1970, in regard to exemption from liability to sales tax on the sales of goods manufactured by the inmates of St. Thomas Convent, Mylapore, Madras. [Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 36. Notification issued with G.O. Ms. No. 539, Agriculture, dated the 28th February 1970, in regard to an amendment to rule 12 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act, 23 of 1959).]

† 37. Notification issued with G.O. No. 791, Revenue, dated the 14th March 1970, in regard to exemption from liability to General Sales Tax on all sales of products of millets with effect on and from the 1st April 1970. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 Tamil Nadu Act I of 1959).]

† 38. Notification issued with G.O. Ms. No. 1960, Home, dated the 4th August 1969, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 relating to Uniformity in standards of inspection of motor vehicles, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

† 39. Notification issued with G.O. Ms. No. 1264, Home, dated the 26th May 1969, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* (Extraordinary), dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

† 40. Notification issued with G.O. Ms. No. 2532, Revenue, dated the 29th October 1969, in regard to setting up of a check post at Tiruttani. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 41. Notification issued with G.O. Ms. No. 2984, Home, dated the 26th November 1969, in regard to an amendment to the Home Department notification II-1 No. 3381 of 1961, dated the 11th July 1961, published at page 1155 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th August 1961. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

† 42. Notification issued with G.O. Ms. No. 227, Public (Elections-IV), dated the 6th February 1970, in regard to certain amendments to the Tamil Nadu Legislators' Hostel (Accommodation) Rules, 1969 relating to stay of family of Legislators in hostel, published at pages 105–106 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 12th March 1969. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

† 43. Notification issued with G.O. Ms. No 392, Public (Election-VI), dated the 25th February 1970, in regard to certain amendments to the Tamil Nadu Ministers' Travelling Allowance Rules, 1951 reproduced in G.O. Ms. No. 259, Public (Elections), dated the 9th February 1970. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

† 44. Notification issued with G.O. No. 718, Revenue, dated the 7th March 1970, in regard to exemption from liability to General Sales Tax on the sales of coir fibre and coir products by any dealers. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 45. Notification issued with G.O. No. 758, Revenue, dated the 11th March 1970, in regard to exemption from liability to general sales tax on the sales of Stone Jelly made by co-operative societies. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I 1959).]

† 46. Notification issued with G.O.P. No. 165, Revenue, dated the 30th January 1969, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232 to 280 of the Rules Supplement to Part I of the Tamil Nadu Government *Gazette*, dated the 1st April 1959 as subsequently amended relating to the procedure for legal representative of the deceased being made a party. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nau General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 47. Notification issued with G.O. Ms. No. 2835, Revenue, dated the 26th November 1969, in regard to amendment to Tamil Nadu General Sales Tax Act, 1959, relating to the levy of tax on consumption of liquors. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 48. Notification issued with G.O. No. 2455, Revenue, dated the 24th October 1969, in regard to amendments to rule 5 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplempent to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended.



[Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 49. Notification issued with G.O.P. No. 609, Revenue, dated the 14th March 1969, in regard to an amendment to rule 57 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

† 50. Notification issued with G.O. Ms. No. 1652, Rural Development and Local Administration, dated the 2nd September 1969, in regard to amendment to rule 29 of the Tamil Nadu Panchayat Union Councils Establishment Rules, 1964. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

† 51. Notification issued with G.O. Ms. No. 536, Agriculture, dated the 28th February 1970, in regard to establishment of a market at Annamalai to provide facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco and turmeric. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

† 52. Notification issued with G.O. Ms. No. 83, Rural Development and Local Administration, dated the 19th January 1970, on regard to amedment to rule 3-A of the rules relating to appointment and punishment of officers and servants of Municipal Councils, published at pages 453–454 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st September 1936 as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 53. Noification issued with G.O. Ms. No. 1699, Rural Development and Local Administration, dated the 6th September 1969, in regard to amendment to rule 1 of the rules relating to appointment and punishment of officers and servants of Municipal Councils, published at pages 453–454 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st September 1936 as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 54. Notification issued with G.O. Ms. No. 2120, Local Administration, dated the 1st November 1969, in regard to constitution of a Municipality with the name of Sathur, the Local area now within the jurisdiction of the Sathur Town Panchayat in the Ramanathapuram district. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 55. Notification issued with G.O. Ms. No. 26, Rural Development and Local Administration, dated the 7th January 1970, in regard to an amendment to the rules for regulating the grant of gratuities by Municipal Councils to their officers and servants, published at pages 587–589 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th November 1937 as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 56. Notification issued with G.O. Ms. No. 42, Rural Development and Local Administration, dated the 8th January 1970, in regard to an amendment to rule 6 of the rules relating to the appointment and punishment of the officers and servants of Municipal Councils, published at pages 453–454 of part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st September 1936 as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 57. Notification issued with G.O. Ms. No. 27, Rural Development and Local Administration, dated the 7th January 1970, in regard to an amendment to rule 2 of the rules relating to the qualification and recruitment of inferior servants under Municipal Councils, published at pages 152 to 165 of the Rules Supplement to Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 7th November 1950 as subsequently amended. [Laid on the Table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 58. Notification issued with G.O. Ms. No. 87, Local Administration, dated the 20th January 1920, in regard to inclusion of certain local areas specified in the schedule within the limits of the Dharmapuram Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 59. Notification issued with G.O. Ms. No. 148, Local Administration, dated the 3rd February 1970, in regard to inclusion of certain local areas specified in the schedule within the limits of the Theni-Allinagaram Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 60. Notification issued with G.O. Ms. No. 182, Local Administration, dated the 6th February 1970, in regard to inclusion of certain areas specified in the schedule within the limits of Madurai Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



† 61. Notification issued with G.O. Ms. No. 210, Local Administration dated the 11th February 1970, in regard to inclusion of certain local areas now in the jurisdiction of Vaidapakkam, within the limits of Nellikuppam Municipality. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

† 62. Notification issued with Memo. No. 30694/D-1/69-8, Revenue, dated the 22nd September 1969, in regard to exemption for Sri Dattatriya Math alias Sri Siddheswari Peetam from the provisions of section 34 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, published at page 775 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 4th June 1969. [Laid on the Table of the House under section 116(3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

† 63. Notification issued with G.O. Ms. No. 762, Social Welfare, dated the 18th October 1969, in regard to an amendment to form C, to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at page 79to 104 of the rules supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th January 1957 as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act 91 of 1955).]

† 64. Notification issued with G.O. Ms. No. 165, Social Welfare, dated the 4th March 1970, in regard to insertion of a new rule 79-A to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th January 1957 as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulations) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

† 65. Notification issued with G.O. No. 22, Revenue, dated the 3rd January 1970, in regard to exemption from liability to general sales tax on the sale of raw materials for the manufacture of matches by Small Sales Match Producers Service Industrial Co-operative Societies to their members. [Laid on the Table of the House under section 53(5) of Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

† 66. Notification issued with G.O.Ms. No. 273, Revenue, dated the 29th January 1970, in regard to amendment to item 69 of the Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

† 67. Notification issued with G.O. Ms. No. 396, Agriculture, dated the 16th February 1970, in regard to deletion of rule 231 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid

on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

† 68. Notification issued with G.O. Ms. No. 502, Rural Development and Local Administration, dated the 24th March 1970, in regard to amendment to the Tamil Nadu Panchayats Act, 1958 relating to constitution of West Madurai Development District published at page 24 of Part II—Section 2 of *Tamil Nadu Government Gazette* (Extraordinary), dated the 13th April 1961. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

† 69. Notification issued with G.O. Ms. No. 1415, Local Administration, dated the 7th August 1959 in regard to issue of the Tamil Nadu Panchayats (Resignation of Presidents, Vice-Presidents and Members of Panchayats Rules, 1969). [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

† 70. Notification issued with G.O. Ms. No. 1153, Rural Development and Local Administration, dated the 27th June 1969 in regard to certain amendments to the rules relating to qualifications for Officers, servants of Town Panchayats, published at pages 34-36 of Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 14th February 1962. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

† 71. Notification issued with G.O.P. No. 1559, Revenue, dated the 4th August 1969, in regard to an amendment to rule 18 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232 to 280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

% 72. Notification issued with G.O. Ms. No. 3103, Agriculture, dated the 9th October 1969, in regard to an amendment to Rule 21 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

% 73. Notification issued with G.O. Rt. No. 206, Agriculture, dated the 5th February 1970, in regard to the regulation of trade in Sugarcane Jaggery in all forms in the entire district of Coimbatore. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



% 74. Notification issued with G.O. Ms. No. 131, Rural Development and Local Administration, dated the 29th January 1970, in regard to reconstitution of the Nannilam Town Panchayat in Thanjavur district with effect from 1st September 1969. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 75. Notification issued with G.O. Ms. No. 314, Public (T.D. I), dated the 14th February 1970, in regard to introduction of Tamil in respect of all official communications from the offices of the Agricultural Engineers (Soil Conservation Scheme) in the Agriculture Department and the offices of the Boat Building Yards under the Department of Fisheries. [Laid on the Table of the House under section 6 of the Tamil Nadu Official Language Act, 1956 (Tamil Nadu Act XXXIX of 1956).]

% 76. Notification issued with G.O.Ms. No. 3163, Home, dated the 25th October 1968, in regard to exemption from payment of tax leviable, in respect of the Jeep bearing registration number USV 5069 and the trailer USV 5089 belonging to the Structural Engineering Research (Regional) Centre, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 77. Notification issued with G.O. Ms. No. 3164, Home, dated the 25th October 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicles MSQ 6450 and MSQ 6896 belonging to the Co-operative for American Relief Everywhere, Incorporated, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 78. Notification issued with G.O. Ms. No. 1382, Rural Development and Local Administration, dated the 2nd August 1969, in regard to appointment of members of the Mettur Township Committee for a period of three years. [Laid on the Table of the House under section 4 (1) of the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940).]

% 79. Notification issued with G.O. Ms. No. 3747, Agriculture, dated the 29th December 1969, in regard to an amendment to Rule 161 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

% 80. Notification issued with G.O. Rt. No. 591, Revenue, dated the 13th April 1970, in regard to exemption from liability to entertainments tax the benefit cinematograph film shows at National Talkies, Arni, to raise funds for the purchase of typewriter and Roneo machine for Subramania Sastriar High School,

Arni, North Arcot district. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

% 81. Notification issued with G.O. Ms. No. 386, Home, dated the 23rd February 1970, in regard to payment of tax at reduced rate in respect of the jeep stage carriages introduced on village roads in rural areas. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 82. Notification issued with G.O. Ms. No. 277, Home, dated the 11th February 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MDJ 6501 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Vellore, Noth Arcot district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).].

% 83. Notification issued with G.O. Ms. No. 245, Home, dated the 9th February 1970, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number 5422, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Central Leprosy Teaching and Research Institute, Chingleput district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 84. Notification issued with G.O. Ms. No. 61, Home, dated the 12th January 1970, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number MDH 5527, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Medical Officer in charge of Leprosy Training Centre, Polembakkam, Chingleput district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 85. Notification issued with G.O. Ms. No. 761, Social Welfare, dated the 18th October 1969, in regard to an amendment to Rule 6 of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the Tamil Nadu Government Gazette, dated the 30th January 1957, as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

% 86. Notification issued with G.O. Ms. No. 43, Labour, dated the 16th January 1970, in regard to exemption from certain provisions of the Tamil Nadu Industrial Establishments (National and Festival) Holidays Act, 1958, to the Seshasayee



Paper and Boards Limited, Cauvery R.S., Erode, Coimbatore district. [Laid on the Table of the House under section 12 (3) of the Tamil Nadu Industrial Establishments (National and Festival) Holidays Act, 1958 (Tamil Nadu Act XXXIII of 1958).]

% 87. Notification issued with G.O. Ms. No. 592, Home, dated the 18th March 1970, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number 8756 belonging to the Co-operative for American Relief Everywhere, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 88. Notification issued with G.O. Ms. No. 577, Rural Development and Local Administration, dated the 31st March 1970, in regard to modification of the Rural Development and Local Administration Department Notification II-2 No. 310 of 1960, dated the 2nd October 1960, published at pages 68-77 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 2nd October 1960, so far as it relates to the area forming the Sethubavachatram Panchayat Union in the West Thanjavur Development District. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 89. Notification issued with Memorandum No. 121710 J2/69-2, Revenue, dated the 31st December 1969, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1613 of 1965, published at pages 669-672 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 14th April 1965, as subsequently amended. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

% 90. Notification issued with Roc. No. 179122/69-P2, dated the 27th November 1969, in regard to exclusion of certain areas from the existng Alagapuri Panchayat and constitution of a separate panchayat by name "Angiam" in Musiri taluk of Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 91. Notification issued with G.O. Ms. No. 293, Home dated the 12th February 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicles bearing registration numbers MDA 6497 and MDA 6506 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Dean, Madurai Medical College, Madurai. [Laid on the

Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 92. Notification issued with G.O. Ms. No. 433, Home, dated the 27th February 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MSM 3826 belonging to the Co-operative for American Relief Everywhere, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 93. Notification issued with G.O. Ms. No. 294, Home, dated the 12th February 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicles bearing registration numbers MDJ 6642 and MDJ 6643 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Vellore, North Arcot district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 94. Notification issued with G.O. Ms. No. 947, Rural Development and Local Administration, dated the 14th May 1968, in regard to certain amendments to the Municipal Councils Provident Fund Rules. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

% 95. Notification issued with Roc. No. K 19/81892/G/68, dated the 29th December 1968, in regard to no-confidence motion against the President of Kolumakondan Panchayat in Palani taluk of Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 96. Notification issued with Roc. No. 106016/69-P, dated the 12th November 1969, in regard to exclusion of certain areas from the existing limits of Padiyur Panchayat in Vedasandur taluk of Madurai district and constitution into a separate panchayat by name " Kosavapatti " panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 97. Notification issued with R. Dis. No. 37852/69, dated the 6th October 1969, in regard to bifurcation of Narasingapuram Town Panchayat in Periakulam taluk of Madurai district and constitution of three panchayats, namely, Myladumparai, Megamalai and Narasingapuram Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Pancha-



% 98. Notification issued with Ref. No. 54837/68-DC4, dated the 27th August 1969, in regard to removal of Thiru T. D. Venkatachalam, President, from the Office of Desipalayam Village Panchayat in Gobichettipalayam taluk of Coimbatore district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 99. Notification issued with G.O. No. 258, Revenue, dated the 28th January 1970, in regard to exemption from payment of sales tax on the sales of products manufactured by the Navajeevan Nilayam and Audio Visual Unit of Christian Medical College and Hospital, Vellore, North Arcot district. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

% 100. Notification issued with G.O. No. 835, Revenue, dated the 18th March 1970, in regard to exemption from payment of sales tax on the sales of palm leaf articles produced by the Palm Leaf Products Training Centres at Pudukottai and Rameswaram. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

% 101. Notification issued with Memorandum No. 125901/J2/69-2, Revenue, dated the 27th January 1970, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1613 of 1965 published at pages 669-672 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated the 14th April 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

% 102. Notification issued with G.O. Ms. No. 373, Home, dated the 21st February 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicles bearing registration numbers MDA 6515 and MDA 6517 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Madurai. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 103. Notification issued with G.O. Ms. No. 63, Home, dated the 12th January 1970, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended and relating to the adoption of safety methods for scooter and motor car driving. [Laid on the Table of the House under Section 133

% 104. Notification issued with G.O. Ms. No. 771, Home, dated the 8th April 1970, in regard to extension of time for the payment of motor vehicles tax in respect of Stage Carriages and Public Carriers for the period ending 30th June 1970. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 105. Notification issued with R. Dis. No. 173820/69-P2, dated the 18th November 1969, in regard to exclusion of certain areas from the existing Pallathuviduthi Panchayat in Alagudy taluk of Tiruchirappalli district and constitution into a separate panchayat by name "Karunpprankottai" panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 106. Notification issued with Rc. No. 144822/69-P2, dated the 27th November 1969, in regard to exclusion of Kammavanpet and Mothakkal areas from the Kammasamudram Panchayat in Vellore taluk of North Arcot district and constitution into separate panchayats with the name of Kammavanpet and Mothakkal Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 107. Notification issued with R. Dis. No. 65078/69, dated the 14th November 1969, in regard to inclusion of certain areas of the Dhanushkodi Panchayat in Ramanathapuram district within the limits of Rameswaram Township. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 108. Notification issued with R. Dis. No. 125203/69, dated the 31st October 1969, in regard to exclusion of certain areas from the limits of the Vallipattu Panchayat in Vaniyambadi sub-taluk of North Arcot district and constitution into a separate panchayat with the name of "Periakurumbatheru" Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 109. Notification issued with G.O. Ms. No. 106, Home, dated the 20th January 1970. in regard to amendment to rule 215-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

% 110. Notification issued with G.O. Ms. No. 1903, Rural Development and Local Administration, dated the 6th October 1969, making the rules called the Personal Assistant to the Commissioner, Corporation of Madras (Qualification and Conditions of Service) Rules, 1968. [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]



% 111. Notification issued with RC. No. 91371/69-E3, dated the 15th September 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Paravai Town Panchayat, Madurai district [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 112. Notification issued with G.O. Ms. No. 73-4, Home, dated the 3rd April 1970, in regard to exemption from payment of tax leviable, in respect of the vehicle MSM 9092 belonging to the United Nations Development Programme and assigned to the Regional Director of Apprenticeship, Guindy, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 113. Notification issued with Roc. No. 67466/68-E3, dated the 15th June 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Marandahalli Town Panchayat, Dharmapuri district [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 114. Notification issued with Roc. No. 150620/67-F1, dated the 7th August 1968, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Naranammalpuram Town Panchayat in Tirunelveli district. [Laid on the Table of the House under section of the Tamil Nadu District Municipalities Act, 1958, in the entire Act XXXV of 1958).]

% 115. Notification issued with G.O. Ms. No. 517, Public (T.D.I.), dated the 9th March 1970, in regard to introduction of Tamil in respect of official communications from the Finance and Law Departments of the Secretariat. [Laid on the Table of the House under section 6 of the Tamil Nadu Official Language Act, 1956 (Tamil Nadu Act XXXIX of 1956).]

% 116. Notification issued with Rc. No. 192643/63-P1, dated the 19th December 1969, in regard to exclusion of areas from the existing Arumana, Vilvancode, Palukal, Edaicode and Pacoole town panchayats of Kanyakumari district and constitution of separate Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 117. Notification issued with G.O. Rt. No. 1657, Revenue, dated the 31st December 1969, in regard to exemption from liability to entertainments tax for the benefit cinematograph film show on 18th January 1970, at the Bhuvaneswari Theatre, Madras, in aid of the Coruscating Stars Cricket Club. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainment Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

% 118. Notification issued with G.O. No. 3107, Public, (Services-A), dated the 18th December 1969, in regard to amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, published at pag es 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, relating to the inclusion of the Directors of upgraded Institution of Madras Medical Service within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

% 119. Notification issued with G.O. Ms. No. 1037, Revenue, dated the 3rd April 1970, in regard to declaration of Orakkarai Venkataraman Chettiar Anicut and Channel in Avanashi taluk of Coimbatore district as an irrigation work for the purposes of the Tamil Nadu Irrigation Works (Construction of Field Bothies Act, 1959 (Tamil Nadu Act 25 of 1959). [Laid on the Table of the House under section 9 (3) of the Tamil Nadu Irrigation Works (Construction of Field Bothies Act, 1959 (Tamil Nadu Act 25 of 1959)].

% 120. Notification issued with G.O. Ms. No. 3094, Public (Services-A), dated the 10th December 1969, in regard to amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion within the Commission's purview the post of gazetted posts in Dairy Development Department under the Tamil Nadu General Subordinate Service. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

% 121. Notification issued with G.O. Ms. No. 3056, Public (Services-A) dated the 10th Deceber 1969, in regard to amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion within the Commission purview the post of Soil Conservation Assistant and Soil Conservation Supervisor under the Tamil Nadu Forest Subordinate Service. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

% 122. Notification issued with G.O. Ms. No. 569, Rural Development and Local Administration, dated the 31st March 1970, in regard to inclusion of certain areas of Pettai rural village of the Tirunelveli district, within the jurisdiction of Manur Panchayat Union. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



% 123. Notification issued with G.O. Ms. No. 2340, Rural Development and Local Administration, dated the 24th November 1969, in regard to modification of the Rural Development and Local Administration Notification S.R.O. No. B-487 of 1960, published at page 2 of Part I-A of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 13th April 1960. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 124. Notification issued with G.O.P. No. 2721, Revenue, dated the 17th November 1969, in regard to certain amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

% 125. Notification issued with G.O. Ms. No. 267. Rural Development and Local Administration, dated the 20th February 1970, inregard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 180 of 1963, published at page 6 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 6th April 1963. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 126. Notification issued with G.O. Ms. No. 1574, Rural Development and Local Administration, dated the 26th August 1969, in regard to division of wards and reservation of one seat for women and one seat for Scheduled Castes in the Dindigul Municipal Council. [Laid on the Table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

% 127. Notification issued with G.O. Ms. No. 25, Legislative Assembly, dated 26th March 1970, in regard to amendment to the Tamil Nadu Legislative Assembly Travelling Allowance (Presidential Election) Rules, 1967, published at pages 1-2 of Part V of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 25th April 1967. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

& 128. Notification issued with G.O. Ms. No. 3098, Home dated the 12th December 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 to certain revenue villages in the Saidapet taluk of Chingleput district. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

& 129. Notification issued with G.O. Ms. No. 11, Home, dated the 2nd January 1970, in regard to certain amendments to the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Rules, 1961 published at pages 1 to 14 of Part V of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 5th June 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

& 130. Notification issued with G.O. Ms. No. 776, Revenue, dated the 13th March 1970, in regard to creation of additional check-posts at Hasanur, Thalavadi and Germalam villages in Gobichettipalayam taluk of Coimbatore district. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 131. Notification issued with G.O. Ms. No. 942, Revenue, dated the 28th March 1970, in regard to creation of additional check-posts at Thallakulam, Avaniapuram, Tirumangalam, Ponmeni and Vilvankudi villages in Madurai district. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 132. Notification issued with G.O. Ms. No. 838, Revenue, dated the 18th March 1970, in regard to exemption from liability to sales tax on the sales of coconuts and agricultural implements other than tractors, bulldozers and tillers and reduction in rate of tax on automobile tyres, batteries (excluding dry cells) and automobile spare parts. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 133. Notification issued with G.O. Ms. No. 761, Local Administration, dated the 30th April 1970, in regard to date of coming into force of the Tamil Nadu Panchayats Act, 1970 (Tamil Nadu Act 11 of 1970) [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 134. Notification issued with G.O. No. 1245, Revenue, dated the 23rd April 1970, in regard to amendment to Revenue Department Notification III No. 75 of 1969, dated 21st February 1969, published at page 273 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 5th March 1969, relating to exemption from sales tax on the sales of raffle tickets issued by the Government of Tamil Nadu or any other State Government [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 135. Notification issued with G.O. No. 1370, Revenue, dated the 6th May 1970, in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act



1 of 1959). [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

& 136. Notification issued with G.O. Ms. No. 499, Home, dated the 6th March 1970, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

& 137. Notification issued with Rc. No. 53345/69-E3, dated the 6th November 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 to the entire area of Peddanaickenpalayam Town Panchayat, Salem district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 138. Notification issued with G.O. Ms. No. 435, Home, dated the 27th February 1970, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 at pages 1 to 40 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

& 139. Notification issued with G.O. Ms. No. 370, Rural Development and Local Administration, dated the 9th March 1970, in regard to an amendment to the Rules relating to the qualification of Market Superintendent under the Municipal Councils, published with the Rural Development and Local Administration Department Notification at page 368 of Part V of the *Tamil Nadu Government* Gazette, dated the 22nd April 1964. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 140. Notification issued with Rc. No. 179521/69-P-1, dated the 10th December 1969, in regard to exclusion of certain areas from the existing Melkumaramangalam Panchayat in Cuddalore Taluk of South Arcot district and constitution into a separate Panchayat by name "Thattampalayam" Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 141. Notification issued with Rc. No. 181425/69-P1, dated November 1969, in regard to exclusion of certain areas from the existing Theppampatti Panchayat in Periakulam taluk of Madurai district and constitution into a separate panchayat by name "Rajakkalpatti" Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 142. Notification issued with G.O. P. No. 1606, Revenue, dated 8th August 1969, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232 to 280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 143. Notification issued with G.O. Ms. No. 279, Revenue, dated the 30th January 1970, in regard to certain amendments to rule 2 of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Rules, 1969, published at pages 1 to 3 of Part V of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 16th August 1969. [Laid on the Table of the House under section 14 (4) of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Act, 1969 (Tamil Nadu Act 19 of 1969).]

& 144. Notification issued with G.O. Ms. No. 771, Revenue, dated the 12th March 1970, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, relating to adoption of a common form for the Southern States, published at pages 232 to 280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 145. Notification issued with G.O. No. 2299, Revenue, dated the 9th October 1969, in regard to an amendment to the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Rules 1939, published at pages 1–7 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 25th March 1939. [Laid on the Table of the House under section 29 (2) of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939)].

& 146. Notification issued with G.O. Ms. No. 3023, Home, dated the 2nd December 1969, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 relating to Ambulance vans carrying emergency patients or doctors to hospital, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 135 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

& 147. Notification issued with G.O. Ms. No. 836, Revenue, dated the 18th March 1970, in regard to an amendment to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]



& 148. Notification issued with G.O. Ms. No. 735, Home, dated the 3rd April 1970, in regard to exemption from payment of tax leviable in respct of the vehicle bearing Registration number MSM 4382 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Director, B.C.G., Vaccine Laboratory, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 149. Notification issued with G.O. Ms. No. 626, Home, dated the 24th March 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the Stage Carriages belonging to Kerala State Road Transport Corporation plying on inter-State routes between Tamil Nadu and Kerala. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 150. Notification issued with G.O. Ms. No. 733, Home, dated the 3rd April 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicles bearing Registration numbers MSM 7829 and 7831 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Dean, Kilpauk Medical College, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 151. Notification issued with G.O. Ms. No. 1306, Revenue, dated the 29th April 1970, in regard to an amendement to rule 25 of the Tamil Nadu Agricultural Income Tax Rules, 1955, published at pages 640–665 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st December 1955. [Laid on the Table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income Tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

& 152. Notification issued with Roc. No. 144047/69-P 2 dated the 15th December 1969, in regard to exclusion of certain areas from the existing Tharuvaikulam Panchayat in Ottapidaram sub-taluk of Tirunelveli district and consitution into a separate Panchayat by name "Pattanamarudur Panchayat". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 153. Notification issued with R. Dis. No. 109400/69-P 2, dated the 27th October 1969, in regard to inclusion of areas covered by the Central Government properties within the jurisdiction of the respective Panchayats in Ramanathapuram district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 154. Notification issued with Roc. No. 188614/69-P-2, dated the 15th December 1969, in regard to exclusion of areas from the existing Vidayapuram Panchayat in Nannilam taluk of Thanjavur district and constitution into a separate Panchayat by name

"Kankoduthavanitham" Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 155. Notification issued with Rc. No. 188617/69-P-2, dated the 15th December 1969, in regard to cancellation of the notification published at page 383 of Part II Section 2 of the *Tamil Nadu Government Gazette* relating to the exclusion of Subramaniapuram area from the existing Vembar Panchayat in Kovilpatti taluk of Tirunelveli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 156. Notification issued with G.O. Ms. No. 532, Rural Development and Local Administration, dated the 26th March 1970, in regard to certain amendments to the rules relating to restrictions and control to regulate the use of porambokes in ryotwari tracts by Panchayats, published at pages 33-36 of Supplement to Part V of the Tamil Nadu Government Gazette, dated the 10th May 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 157. Notification issued with G.O. Ms. No. 66, Public (Services-A) dated the 8th January 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to withholding or withdrawing of pension under Article 351 of Civil Service Regulations, published at pages 759 to 768 of Part I of the Tamil Nadu Government Gazette, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

& 158. Notification issued with G.O. Ms. No. 2967, Public (Services-A), dated the 1st December 1969, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to Gazetted posts of Assistant State Prosecutors in Madras City and Assistant Public Prosecutors, Grade I, in districts, published at pages 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

& 159. Notification issued with G.O. Ms. No. 2966, Public (Services-A), dated the 1st December 1969, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to the posts of Instructors and Operators in Spinning and Weaving in Institute of Textile Technology, Madras, for inclusion within the Commission's purview, published at pages 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]



& 160. Notification issued with G.O. Ms. No. 2518, Rural Development and Local Administration, dated the 23rd December 1969, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 334 of 1965, published at page 2 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 28th September 1965. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 161. Notification issued with G.O. P. No. 2451, Revenue, dated the 23rd October 1969, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232-280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 162. Notification issued with G.O. Ms. No. 538, Agriculture, dated the 28th February 1970, in regard to an amendment to Annexure III of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 163. Notification issued with Roc. No. 29144/69-E 3, dated the 25th April 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Thengamputhur Town Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 164. Notification issued with G.O.P. No. 600, Revenue, dated the 26th February 1970, in regard to certain amendments to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 165. Notification issued with G.O. Ms. No. 860, Rural Development and Local Administration, dated the 13th May 1970, in regard to date of coming into office of member of every Panchayat Union Council. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 166. Notification issued with G.O. Ms. No. 665, Rural Development and Local Administration, dated the 15th April 1970, in regard to amendment to the rules relating to Appointment and Punishment of Officers and Servants of Municipal Councils, published at pages 453-454 of Part I-A of the Tamil Nadu Government Gazette, dated the 1st September 1936, as subsequently

amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 167. Notification issued with Rc. No. 180390/69-P-2, dated the 3rd December 1969, in regard to exclusion of areas from the existing Sillathur Panchayat in Orathanad taluk of Thanjavur district and constitution into a separate Panchayat by name "Vettikadu" Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 168. Notification issued with Ref. No. 183795/69-P 2, dated the 15th December 1969, in regard to re-adjustment of jurisdiction of the Nilavarapatti and Desanaickenpatti Panchayats in Salem district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchyats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 169. Notification issued with G.O. Ms. No. 582, Public (Elections-IV), dated the 14th March 1970, in regard to amendments to rules issued under the Tamil Nadu Payment of Salaries Act, 1951, relating to the use and maintenance of Government cars allotted to Ministers, Speaker and Chairman. [Laid on the Table of the House under sectoin 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

& 170. Notification issued with G.O.P. No. 2282, Revenue dated the 8th October 1969, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 relating to deduction of cost of packing materials from total turnover, published at pages 232-280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu* Government Gazette, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

& 171. Notification issued with G.O. Rt. No. 1352, Home, dated the 13th April 1970, in regard to exemption from payment of tax leviable in respect of Lorry MDF 2570, belonging to the Neyveli Lignite Corporation Limited, Neyveli. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 172. Notification issued with G.O.Ms. No. 555, Rural Development and Local Administration, dated the 30th March 1970, in regard to exclusion of Vellivoyal Shavadi Panchayat from Sholavaram Panchayat Union and its inclusion in Minjur Panchayat Union. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



& 173. Notification issued with Roc. No. 192674/69-P 1, dated the 19th December 1969, in regard to exclusion of local areas from the existing panchayats in Kanyakumari district and constitution into separate panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 174. Notification issued with Roc. No. 192653/69-P-1, dated the 19th December 1969, in regard to exclusion of local areas of existing Valvachagostam, Kothanallur, Thiruvithancode and Eraniel town panchayats of Kanyakumari district and constitution into separate panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 175. Notification issued with Roc. No. 192648/69-P1, dated the 19th December 1969, in regard to exclusion of local areas of existing Azhakiapandipuram, Bhuthapandi, Thazhakudy, Aramboly and Thovla Town Panchayats of Kanyakumari district and constitution into separate, Panchayats (Laid on the Table of the House under section 179 (4) of Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 176. Notification issued with Roc. No. 192638/69 P-1, dated the 11th December 1969, in regard to exclusion of local areas of the existing Keezhkulam, Midalam, Nattalam, Killiyoor and Keezhmidalam town panchayats of Kanyakumari district and constitution into separate panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 177. Notification issued with Rc. No. 764/69-E3, dated April 1969 in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Avadi Township, Chingleput district [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 178. Notification issued with G.O. Ms. No. 869, Revenue dated the 25th March 1970, in regard to an amendment to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965 published at pages 26 to 63 of Part V of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 15th February 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

179. Annual Report of the Tamil Nadu Public Service Commission, 1966-67, issued with G.O. Ms. No. 266, Public (Services-A), dated the 10th February 1968. [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India.]

180. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1967-68. [Laid on the Table of the House under section 69 (5) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

¶ 181. Tamil Nadu Government's Review and the Fourth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Small Industries Corporation Limited for the year ended 31st March 1969. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956, Central Act I of 1956).]

¶ 182. Tamil Nadu Government's Review and the Twentieth Annual Report and Statement of Accounts of the Madras, Industrial Investment Corporation Limited, for the period ended 30th June 1969. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

£ 183. Notification issued with Roc. No. 108841/69/P, dated the 3rd December 1969, in regard to exclusion of certain areas from the existing Panailaipadi Village Panchayat in Chengam taluk of North Arcot district and constitution into a separate panchayat by name "Devamandal". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 184. Notification issued with G.O. Ms. No. 537, Agriculture, dated the 28th February 1970, in regard to establishment of regulated market at Thuvarankurichi, Vaiyampatti and Thathaingarpettai of Tiruchirappalli district to provide facilities for the purchase and sale of groundnut, gingelly, chillies and paddy. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 185. Notification issued with G.O. No. 1137, Revenue, dated the 15th April 1970, in regard to certain amendments to the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Rules, 1939, published at pages 1 to 7 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 25th March 1939, as subsequently amended. [Laid on the Table of the House under section 29 (2) of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939).]

£ 186. Notification issued with G.O. Ps. No. 644, Revenue, dated the 2nd March 1970, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959), relating to specification of names of the article to be purchased and manufactured.]



£ 187. Notification issued with G.O. Ms. No. 392, Revenue, dated the 6th February 1970, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Act, 1959 relating to Institution fees for appeals filed, in the Appellate Tribunal, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 188. Notification issued with G.O. Ms. No. 1053, Home, dated the 11th May 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the Jeep MYO 5041 belonging to the Little Sisters of the Poor Home for the Aged, Coonoor, the Nilgiris district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 189. Notification issued with G.O. Ms. No. 2083, Home, dated the 21st August 1969, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration No. MSM 3005 belonging to the Trade Representation of the German Democratic Republic in India at Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 190. Notification issued with G.O. Ms. No. 896, Home, dated the 24th April 1970, in regard to collection of quarterly tax in respect of tourist luxury coaches for which contract carriage permits are issued by the State Transport Authority, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 191. Notification issued with G.O. Ps. No. 2967, Revenue, dated the 12th December 1969, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 192. Notification issued with G.O. Ms. No. 2689, Home, dated the 25th October 1969, in regard to certain amendments relating to the Additional Conditions in the Special Permit granted under section 63 (6) of the Motor Vehicles Act, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary

dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 193. Notification issued with G.O. Ms. No. 2316, Rural Development and Local Administration, dated the 21st November 1969, in regard to an amendment to the rules relating to invitation and disposal of tender relating to supplies of materials, goods, etc., to Municipal Councils. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 194. Notification issued with G.O. Ms. No. 1748, Agriculture, dated the 5th June 1967, in regard to certain amendments to the rules for the regulation of hunting, shooting and fishing and to prohibit the poisoning of water and setting up of traps or snares within the limits of all reserved forests in Tamil Nadu. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forests Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

£ 195. Notification issued with G.O. Ms. No. 2720, Agriculture, dated the 4th May 1969, in regard to certain amendments to the rules under the Tamil Nadu Forests Act, 1882 (Tamil Nadu Act V of 1882) and the Wild Birds and Animals Protection Act, 1912 (Central Act VIII of 1912) to give protection to pythons. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forests Act 1882 (Tamil Nadu Act V of 1882).]

£ 196. Notification issued with Memorandum No. 101871/CT III-2/69-2, Revenue, dated the 29th January 1970, in regard to an amendment to Revenue Department Notification III No. 35 of 1965 relating to change of Management of Khadi Gramodyog Sangh, published at page 172 of Part II of the *Tamil Nadu Government Gazette*, dated the 3rd February 1965. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 197. Notification issued with G.O. Ms. No. 1450, Revenue, dated the 14th May 1970, in regard to reduction in rate of General Sales Tax by any dealer on the sales of automobile tubes. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 198. Notification issued with G.O. Ms. No. 401, Home, dated the 25th March 1970, in regard to certain amendments to rule 43 and 134-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



£ 199. Notification issued with G.O. Ms. No. 400, Home, dated the 25th February 1970, in regard to an amendment to rule 427-A to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 200. Notification issued with G.O. Ms. No. 568, Home, dated the 16th March 1970, in regard to an amendment to second proviso to rule 368 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 201. Notification issued with Roc. No. 155844/69, P-2, dated 1st December 1969, in regard to exclusion of certain areas from the existing Kannanur Panchayat in Musiri taluk of Tiruchirappalli district and constitution into two separate panchayats by name " K. Palayam " and " Ponnusangampatti ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 202. Notification issued with G.O. Ms. No. 248, Rural Development and Local Administration, dated the 18th February 1970, making the Rules governing the classification, method of recruitment, conditions of services and pay and allowance of Class I-A and Class II Establishment included in the " Madras Corporation Education Service ". [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

£ 203. Notification issued with G.O. Ms. No. 160, Home, dated the 29th January 1970, in regard to modification of Home Department Notification II-1 No. 3381 of 1961, relating to investiture of appellate powers under section 23 (1) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960, published at page 1155 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th July 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

£ 204. Notification issued with G.O. Ms. No. 2644, Home, dated the 22nd October 1969, in regard to an amendment relating to the appointment of authorised officers in Kanyakumari district, published at page 115 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th August 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

£ 205. Notification issued with G.O. Ms. No. 561, Home, dated 14th March 1970, in regard to Levy of Concessional rate of motor vehicles tax in respect of tractors mounted with compressors used for deepening wells. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 206. Notification issued with G.O. Ms. No. 1079, Home, dated the 13th May 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MDO 8106 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Thanjavur. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 207. Notification issued with G.O. Ms. No. 3109, Public Services-A), dated the 19th December 1969, in regard to an amendment for inclusion within the Commission's purview the post of Assistant Professor of Physics under the Tamil Nadu Animal Husbandry Subordinate Service, published at pages 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

£ 208. Notification issued with G.O. No. 418, Public (Services-A), dated the 27th February 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion within the Commission's purview, the appointment by transfer or promotion from one class to another class under the Tamil Nadu General Service, published at pages 759 to 768 of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

£ 209. Notification issued with G.O. No. 382, Public (Services-A), dated the 25th February 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion within the Commission's purview the posts under the Tamil Nadu Industries Subordinate Service published at pages 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, as subsequenly amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

£ 210. Notification issued with G.O. Ms. No. 743, Rural Development and Local Administration, dated the 29th April 1970, in regard to certain amendments to the Conduct of Election of Members of Village Panchayat Rules, 1964. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



£ 211. Notification issued with G.O. No. 425, Revenue, dated the 10th February 1970, in regard to authorisation of officers to assess dealers in motor spirit. [Laid on the Table of the House under section 29 (2) of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939).]

£ 212. Notification issued with G.O. Ms. No. 742, Rural Development and Local Administration, dated the 29th April 1970, in regard to certain amendments to the Conduct of Election of Members of Town Panchayats Rules, 1964. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B. Reports, Notifications and Other Papers

* 1. Notification issued with G.O. Ms. No. 282, Revenue, dated the 7th February 1969, in regard to exemption from stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the instruments to be executed by granting loans to ex-servicemen for starting industries or business.

* 2. Notification issued with G.O. Ms. No. 2466, Revenue, dated the 25th October 1969, in regard to exemption from payment of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of gift deed in favour of Sri Kapalasivan Memorial Social Service Society, Madras.

* 3. Notification issued with G.O. Ms. No. 100, Revenue, dated the 9th January 1970, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899). in respect of the mortgage deed to be executed by the Virudhunagar S. Vellaichamy Nadar Polytechnic Managing Board, Virudhunagar, by obtaining interest free loan from the Government of India for construction of a Students' Hostel.

* 4 Notification issued with Memorandum No. 115313/VI/68-3, Revenue, dated the 29th August 1969, in regard to amendment relating to an exemption from the payment of stamp duty on mortgage deed executed by A.M.M. Charities Trust, published at page 1366 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 14th August 1968.

* 5. Notification issued with G.O. Ms. No. 1289, Revenue, dated the 25th June 1969 in regard to exemption from payment of stamp duty and registration fees in respect of mortgage deed to be executed by legal heirs of (Late) Thiru T. A. Rajagopalan, formerly Confidential Assistant, Public (S.C.) (Department, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) and the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908).

* 6. Notification issued with G.O. Ms. No. 344, Public Works (Electricity), dated the 26th February 1970 in regard to an amendment in the change in name of the Madras State Electricity Consultative Council Rules, 1958.

* 7. Report of the Commission of Inquiry on the Bus accident near Namakkal, Salem district during May 1967.

† 8. Errata issued to Rc. No. 7012/69-E 3, dated the 7th May 1969 relating to Rameswaram Township building regulations.

† 9. Notification issued with G.O. Ms. No. 259, Revenue, dated the 28th January 1970 in regard to exemption from liability to Central Sales Tax on the sales made by the Infant Jesus Orphanage at Mulagumoodu, Kanyakumari district.

† 10. Notification issued with G.O. No. 532, Revenue, dated the 21st February 1970 in regard to certain amendments to the Central Sales Tax Rules, 1957, published at pages 1-10 of Part I of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 28th February 1957.

† 11. Notification issued with G.O. Ms. No. 2133, Rural Development and Local Administration, dated the 3rd November 1969, in regard to amendment to the Tamil Nadu Cottage Industries, Construction and Establishment (Restrictions, Limitations and conditions) Rules, 1960 under the Tamil Nadu Public Health Act, 1939 (Tamil Nadu Act III of 1939).

† 12. Notification issued with G.O. Ms. No. 2134, Rural Development and Local Administration, dated the 3rd November 1969, in regard to amendment to the Rural Development and Local Administration Department Notification No. 143 of 1962, dated the 31st March 1962 published at pages 79–80 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st March 1962 under the Tamil Nadu Public Health Act, 1939 (Tamil Nadu Act III of 1939).

† 13. Notification issued with G.O. Ms. No. 249, Revenue, dated the 27th January 1970 in regard to exemption of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, (Central Act II of 1899) for the purchase of house by the Arya Samaj (Central) Trust Board.

† 14. Notification issued with G.O. Ms. No. 808, Revenue, dated the 11th April 1968 in regard to remission of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) for the purchase of lands in favour of the Burma Repatriates Co-operative House Construction Society.

% 15. Notification issued with G.O. No. 851, Revenue, dated the 20th March 1970, in regard to exemption of tax on goods which have already been subjected to tax under section 7-A of the **Tamil Nadu Central Sales Tax Act, 1959.**



% 16. Notification issued with G.O. No. 72, Health, dated the 16th January 1970, in regard to an amendment to the Public Health Establishment (Local Authorities) Regulations, 1940 published at pages 19-24 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 7th January 1941, as subsequently amended.

% 17. Notification issued with G.O. Ms. No. 1085, Revenue, dated the 8th April 1970, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed executed in favour of the Standard Fire Works Educational and Charitable Trust, Sivakasi in Ramanathapuram district.

% 18. Notification issued with G.O. No. 1148, Revenue, dated the 16th April 1970, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899. (Central Act II of 1899) relating to transfer of debentures in the form of certificates by the Tamil Nadu State Housing Board in connection with the loan raised by the said Board during 1968–69.

% 19. Notification issued with Roc. No. 181284/69-P2, dated the 15th November 1969, in regard to cancellation of the Proceedings R. Dis. No. 115991/69-P 2, dated the 17th October 1969, relating to the exclusion of areas for constitution of separate panchayats (viz.) Swarnapuri and Fairland Panchayats and inclusion of certain other portion in North Alagapuram Panchayat in Salem taluk of Salem district.

& 20. Eratta issued in Roc. No. 191484/69-P2, dated the 1st December, 1969 for the notification published on page 333 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 29th October 1969.

& 21. Notification issued with G.O. Ms. No. 1483, Rural Development and Local Administration, dated the 29th July 1968, in regard to an amendment to the Rural Development and Local Administration Notification II-2, No. 143/62, dated the 13th March 1962, relating to the manufacture of wiring harners, published at pages 79-80 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st March 1962 as subsequently amended under the Tamil Nadu Public Health Act, 1939 (Tamil Nadu Act III of 1939).

& 22. Notification issued with G.O. Ms. No. 1484, Rural Development and Local Administration, dated the 29th July 1968, in regard to certain amendments to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960, published at pages 254–258 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st March 1962, as subsequently amended under the Tamil Nadu Public Health Act, 1939.

& 23. Notification issued with G.O. Ms. No. 702, Public Works, dated the 17th April 1970, in regard to an amendment to the rules for registration of contractors for Civil Engineering Works in Tuticorin Port Trust under the Tuticorin Port Trust Act, 1924.

24. Third Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1968 to 31st March 1969.

£ 25. Notification issued with Rc. No. 85446/69-F2, dated the 27th October 1969, in regard to cancellation of relevant part of the notification issued in Proceedings No. 85446/69-F2, dated the 20th August 1969, so far as it relates to Kolakudy Panchayat classifying and altering it as Town Panchayat.

£ 26. Notification issued with G.O Ms. No. 1291, Revenue, dated the 29th April 1970, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of settlement deed executed by the Institute of Rural Health and Family Planning represented by its Director, in favour of the University of Madurai, represented by its Vice-Chancellor.

£ 27. Notification issued with G.O. Ms. No. 1205, Revenue, dated the 20th April 1970, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed executed by Sri-la-Sri Manickavasaga Gnanadesika Swamigal of Sivaraja Yoga Mutt, Melayur village in favour of the Poompuhar College of Indian Culture represented by its correspondent.

£ 28. Notification issued with G.O. Ms. No. 2548, Rural Development and Local Administration, dated the 30th December 1969, in regard to certain amendments to the Madras Town Planning Rules, 1933 with reference to section 6 of the Madras State (Alteration of Name) Act, 1968 (Central Act 53 of 1968).

£ 29. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 25th February to 9th April 1970.

£ 30. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council during the period from 26th February to 23rd April 1970. (Thirty-fifth Session).

---

1. * Despatched to Members on 30th April 1970.
2. † Despatched to Members on 27th May 1970.
3. % Despatched to Members on 25th June 1970.
4. & Despatched to Members on 30th July 1970.
5. ‖ Copies placed in the Legislature Library on **24th** August 1970.
6. **£ Despatched to Members on 17th August 1970.**

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

*செவ்வாய்க்கிழமை, 1970 ஆகஸ்ட் 25.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. விஞக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட விஞக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 1, 2 பிறகு எடுத்துகொள்ளப்படும்.

### தொழில் நுட்பக் கல்விக்குத் தனி பல்கலைக் கழகம்.

*3 விஞ—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் கல்விக்குத் தனி சர்வகலாசாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இந்தச் செயற்குறிப்பு தொடக்க நிலையிலேயே உள்ளது. இது குறித்த விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இந்தச் செயற்குறிப்புக்குத் தாற்காலிக முறையில் இசைவளிக்கப்பட்ட பின்னரே இப்பணி மேற்கொள்ளப்படும்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தொழிற் கல்விக்குத் தனி சர்வகலாசாலை ஏற்படுத்துவதற்கு இசைவளிக்கப்பட்ட பின்னரே இப்பணி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தவேண்டும் என்று மாநிலத் தொழில் நுட்பப் பயிற்சி வாரியம் 6–10–1969 அன்று நடந்த கூட்டத்தில் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதுபற்றி செயற்குறிப்பு முழுவதும் தயாரிக்கும்படியாகத் தொழிற்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இதற்கிடையில் மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சகத்தினுடைய ஒப்புதலையும் நாம் பெறவேண்டும், அத்துடன், பல்கலைக்கழக

[1970 ஆகஸ்ட் 25

மானியக் குழுவின் ஒப்புதலையும் பெற வேண்டும். மேலும், முழு விவரங்களை நாம் அனுப்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். தொழில்நுட்பப் பயிற்சி வாரியத்தில் அதுபற்றி முடிவு எடுக்கப் படும். அதற்குப் பிறகுதான் அதுபற்றிய முழு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that this Technical University would have Coimbatore as its headquarters and if so, whether any request has come from the technical institutions that are now functioning at Coimbatore?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு ஒன்றும் இப்பொழுது இல்லை. எல்லாப் பொறியியல் கல்லூரிகளும், டிப்ளமா சான்றிதழ்கள் வழங்கும் பயிற்சி நிலையங்கள் அத்தனையும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத் தின்கீழ் வரக்கூடும். அப்படி வந்தால், அதற்கேற்ற இடம் சென்னை யாகத்தான் இருக்கும். பல்வேறு பொறியியற் கூடங்கள், தொழில் நுட்ப நிலையங்கள் அத்தனையும் விரிவான முறையில் சென்னையில் இருப்பதால் அதற்குத் தலைமையிடம் சென்னையாகத்தான் இருக்கக் கூடும். ஆனால், அதுபற்றிய முடிவுகள் இப்பொழுது எடுக்கக்கூடிய நிலையில் இல்லை. முழு விவரங்கள் வந்தபிறகு அதுபற்றிய முடிவு எடுக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கோவையில் பொறியியல் கல்லூரியும் மற்ற பல்வேறு தொழில் துறைகளும். இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நான் குறிப்பிட்டேன். அதுபற்றி முடிவு பின்னால் எடுக்கப்பட வேண்டும். எல்லாப் பொறியியல் கல்லூரிகளும் இணைக்கப்படும் நிலையில் பல்வேறு தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்ப நிலையங்கள் அத்தனையும் கொண்ட தலைமையிடமாகச் சென்னை இருப்பதால், சென்னைதான் அதற் கேற்ற இடமாக இருக்கக்கூடும். ஆனால், அதுபற்றி முடிவு எடுக்க வேண்டும். பின்னால்தான் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மத்திய அரசு ஒப்புதல் வழங்க வேண்டும். அதற்காகக் கடிதப் போக்குவரத்து ஏதாவது நடந் திருக்கிறதா? அது என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும் முழு விவரங்கள் அனுப்ப வேண்டியவர்களாக இருக்கி றோம். தொடராச் செலவு என்ற வகையில் கட்டடங்கள், பர்னிசர். எக்விப்மெண்ட் முதலியவற்றுக்காக அதிகப்படியாக இருபது லட்ச



1970 ஆகஸ்ட் 25]

ரூபாய்தான் செலவழிக்கவேண்டி வரும். தொடரும் செலவு என்ற வகையில் இரண்டு லட்ச ரூபாய்தான் அதிகச் செலவு ஏற்படக் கூடும். ஏனென்றால், ஏற்கெனவே கல்லூரிக்கான கட்டடங்கள் முதலியவை இருக்கும். இந்தக் குறிப்பையும் காட்டி, குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மேலும் முழு விவரங்கள் தயாரித்து அனுப்பவேண்டும். இது இங்கிருக்கும் டெக்னிகல் போர்டிலும் நிறைவேறவேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்கள் குறிப்பிட்ட வேலைகளைத் தவிர வேறு வேலைக்குப் போக முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, தொழில்நுட்பக் கல்லூரி கள், பள்ளிகள் துவக்குவதற்கு முன்பாகவோ அல்லது துவக்கி நடைபெறும்போதோ, அவற்றிலிருந்து பயிற்சி பெற்றுத் தேறி வெளிவருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் பொறுப்பினை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்வி பெற்று வெளிவருபவர்களுக்கு வேலை வாய்ப்பை விரிவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய அரசினர், புதிய இடங்களைத் தோற்றுவிப்பதற்கு முன் இருக்கும் இடங்களில் பயிற்சி பெற்று வெளிவருபவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துச் சமாளிக்கவேண்டும் என்றும், சில பல இடங்களைக் குறைக்கவேண்டும் என்றும் தெரிவித்த நிலைமையில் ஒவ்வொரு மாநிலத்திலும் குறைத்துக்கொண்டது போலவே நாமும் ஓரளவு குறைத்துத் தேவையான அளவு வைத்துக்கொண் டிருக்கிறோம். சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையைவிட சென்ற ஆண்டு நிலைமை ஓரளவு மாறி, அவர் களுக்கு ஓரளவு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படாத நிலையில் இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக அத்தகைய முயற்சி மேற் கொள்ளப்படாமல் இருந்து, இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்பட்ட நிலையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டு விட்டதன் காரணமாக எதிர்காலத்தில் பொறியியல் துறையில் இருப்போரை அதிகமாக ஈர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுதிருக்கும் தன்மையில் இருக்கின்ற இடங்களுக்குமேல் அதிகரிக்காமல், இருக்கும் இடங்களையே சரிக்கட்டலாம் என்ற சூழ்நிலை இருக் கிறது.

[1970 ஆகஸ்ட் 25

## திருமயத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

*** 4 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை உருவாக்கித் தர அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்தை அடுத்த இருதயபுரத்தில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைப்பதற்காக கிறிஸ்து ராஜா நடுநிலைப்பள்ளிக்குழு விண்ணப்பித்துள்ளதா? அதற்கு இசைவு தர அரசு முன்வருமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இருந்து வருகின்ற பயிற்சிப் பள்ளிகளே போதுமானவையாக இருப்பதாலும், தேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் இருப்பதாலும் புதிய பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டாம் என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. மேலும், ஏற்கனவே இருந்த பயிற்சிப் பள்ளிகளிலுள்ள பிரிவுகளைக்கூட குறைத்துக் கொண்டுவரும் சூழ்நிலையில்தான் இப்பொழுது இருக்கிறோம். பயிற்சிபெற்றும் பதவி பெறாமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டு போவதுதான் அதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. 1967-68-ம் ஆண்டில் ஆரம்ப/இளநிலை ஆதாரப் பயிற்சிப் பிரிவுகள் ஒன்பதை நாம் நிறுத்தினோம். பிறகு 1968-69-ம் ஆண்டில் ஆரம்ப/இளநிலை ஆதாரப் பயிற்சிப் பிரிவுகள் பன்னிரண்டை நிறுத்தினோம். 1969-70-ம் ஆண்டில் ஆரம்ப/இளநிலை ஆதாரப் பயிற்சிப் பிரிவுகள் இருபத்தைந்தை நிறுத்திவிட்டு, லோயர் கிரேடு பயிற்சியை நாம் முழுவதும் எடுத்துவிட்டோம். இப்பொழுது செகண்டரி கிரேடு பயிற்சிதான் இருக்கிறது. 1967-68-ம் ஆண்டில் 252 பிரிவுகள் இருந்தன. 1968-69-ம் ஆண்டில் 269 ஆக இருந்தன. பிறகு 1969-70-ம் ஆண்டில் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதன் காரணமாக மாணவர்களுடைய எண்ணிக்கை வளருகிறது என்பதை வைத்து 227 ஆக ஆக்கினோம். இந்த ஆண்டு 200 பிரிவுகள்தான் அனுமதிக்கப்படுகின்றன. இந்த வகையில் பார்த்தால், மூன்றாண்டு காலத்தில் சராசரி ஒவ்வொரு ஆண்டும் செகண்டரி/ஸீனியர் பேசிக் கிரேடு பயிற்சிபெற்று வெளிவந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 7,457 ஆகும். சராசரியாக நாம் வேலை கொடுக்க முடிந்தது 5,333 பேர்களுக்குத்தான். 6,372 பேர்கள் சென்ற ஆண்டு இறுதிக் கணக்குப்படி வேலை இல்லாமலிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் நிலைமை, எதிர்காலத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சித்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால் 1972–73-ல் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கும் நிலைமைகள் ஏற்படும், அதற்கேற்றப்படி புதிய பயிற்சிப் பள்ளிகள், புதிய பிரிவுகள் ஏற்படுத்தலாம். இருப்பினும் அத்தகைய முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.



70 ஆகஸ்ட் 25]

## மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

*** 5 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி, காதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு டையளிப்பாரா—

(அ) மருத்துவ இன்டர்வியூவில் பொது ஞானத்தை ஒட்டி ன்னென்ன கேள்விகள் கேட்க வேண்டுமென்கிற விதி ஏதாவது ண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பொதுவாக, பொது ஞானத் தச் சோதிக்கக்கூடிய வகையில் கேள்விகள் கேட்கப்பட்டு ருகின்றன. அது வரவேற்கத்தக்கது. என்றாலும், பொது னத்திற்கு அப்பாற்பட்ட கேள்விகளும் கேட்கப்பட்டு ருகின்றன என்பதைக் கனம் அமைச்சரவர்கள் அறிவார்களா? றிப்பிட்ட சில அமைச்சர்களுடைய மனைவிகள் பெயரைக்கூடக் கட்கும்படியான அளவு கேள்விகள் போயிருக்கின்றனவே, அது பான்ற போக்குகளைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை டுத்ததுண்டா? இனிமேலாவது எடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ருத்துவத் துறைப்பற்றி நேர்முக விசாரணையில் (இன்டெர்வ்யூ) ந்த நெருக்கடியும் ஏற்படவில்லை. வேளாண்மைத் துறையைப் பாறுத்த வரையில் அத்தகைய கேள்வி ஒருவரால் கேட்கப்பட்ட ாக ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. அதற்குப் பிறகு அப் டிப்பட்ட கேள்விகள் கேட்கப்படவில்லை என்று அக்குழுத் தலைவ ாக இருந்த திரு. இளம்வழுதி அவர்கள் உடனே மறுப்பு அறிக்கை பிட்டார்கள். அப்படிக் கேள்வி ஏதும் கேட்கப்படவில்லை. அப்படிப் தில் எதிர்பார்க்கப்படவும் இல்லை. ஆகவே, பொது அறிவைப் ரிசீலித்துப் பார்க்கும் அளவிலும், எல்லா நிலைகளிலும் கேள்விகள் கேட்கப்படும் அளவிலும் ஒரு அமைச்சருடைய மனைவியின் பெயர் தெரிந்திருக்கவேண்டும் என்று எண்ணுகின்ற நிலைமை எந்தக் குழுவுக்கும் இருக்காது; இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவும் மாட்டார்கள். ஆகவே, அந்த நிலை ஏற்படாது. அப்படிப்பட்ட கேள்வி வேளாண்மைக் குழுவைப் பொறுத்தவரையில் கேட்கப்படவில்லை என்று அக்குழுவின் தலைவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

[1970 ஆகஸ்ட் 25

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு மாணவர்கள் அளித்த பதில்களும் பதிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனெனில், வேண்டியவர்களுக்குச் சுலபமான கேள்விகளையும், வேண்டாதவர்களுக்குக் கடினமான கேள்விகளையும் கேட்பதாகவும், கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் கொடுக்காதவர்களுக்கு அதிகமான மார்க்குகள் போடுகிறார்கள் என்று சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் அவைகள் பதிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் கூறுவதுபோன்று ஒவ்வொருவரும் கேட்கும் கேள்விகளையும், அவற்றிற்கான பதில்களையும், பதிவு செய்வது என்றால் பல நாட்கள், பல மாதங்கள் ஆகக்கூடும். பொதுவாக ஒரு முறையை வைத்து, அவரவர்கள், எதெதில் திறமை படைத்தவர்கள் என்று கூறுகிறார்களோ அந்தத் துறையில் அறிவு இருக்கிறதா என்று குழுக்களிலே இருப்பவர்கள் பார்த்து, பொதுப்படையான முறையில் கேட்கிறார்கள். பதிவு செய்வது என்பது இயலாத காரியம்.

THIRU K. VINAYAKAM : Whereas these interviews are held to judge the general knowledge of the candidates that appear before the Interview Board and whereas we have to draft people with technical knowledge to test the students, will the Government resist the temptation of drafting Assembly Members to these Interview Boards at least in future?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அசெம்பிளியில் இருக்கும் உறுப்பினர்களை அவ்வளவு சாதாரணமாகக் கருத வேண்டாம். இதில் இருப்பவர்கள் எல்லாத் துறைகளுக்கும் மேற்பட்ட நிலையிலிருந்து, எல்லாத் துறைகளிலும் கண்காணிக்கும் அளவில் சீரிய யோசனைகளைச் சொல்வதற்காக இந்த மன்றத்தில் இருக்கிறோம். கேள்விகள் கேட்கும்பொழுது ஒரு நியாயத்தின் அடிப்படையில், இதிதில் திறமையுடையவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த திறமையைப் பெற்றிருக்கிறார்களா என்று பரிசோதிப்பதற்காகக் கேள்விகள் கேட்கின்றார்கள். பொதுவாக, இந்த இண்டர்வியூ செய்பவர்களுக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. தெரியாத கேள்விகளை, அவர்களை மாட்ட வைக்க வேண்டியதற்காக கேள்விகளைக் கேட்கக் கூடாது என்றும், பெற்றிருக்கும் அறிவு உயர்ந்திருக்கிறதா என்று ஆய்ந்து பார்க்கும் நிலையில் இருக்க வேண்டுமென்றும் பொதுவாக அறிவுரைகள் கூறப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களை விலக்கி விட்டுத்தான் வைக்க வேண்டுமென்று இல்லை. அது தொடர்ந்து பல்லாண்டு காலமாக, பல குழுக்களில் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது வேண்டுமானாலும், குழுக்களின் அளவும், எண்ணிக்கையும் குறைந்திருக்கிறதே தவிர, ஏற்கெனவே எல்லாக் குழுக்களிலும் இடம்



1970 ஆகஸ்ட் 25]

பெற்றிருக்கிறார்கள். கல்லூரிகளில் போடப்பட்டிருந்தவர்கள் இப்பொழுது எடுக்கப்பட்டு அங்கு இருப்பவர்களையே போட்டிருக்கிறது. கணக்குப் பார்த்தால் முன்பு இருந்தவர்களைவிட இப்பொழுது இருப்பவர்கள் குறைவு.

*6 வினா—திரு. என். எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் தொகையின் அடிப்படையில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வைத்தியக் கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட வேண்டுமென்று மதுரைப் பல்கலைக் கழகம் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்காவது அம்மாதிரி அதிகமான இடம் கொடுக்க பரிசிலனை செய்யப்படுமா ? தற்போது அந்த மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு எந்த அடிப்படையில் இடம் அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாவட்ட அடிப்படையில் மாணவர்களை, மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு, மாவட்ட அடிப்படையிலேதான், ஆங்காங்குள்ள மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து, அந்தத் தொகையின் அடிப்படையில் மாணவர்கள் மாவட்டவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், வேறு எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும், மருத்துவத் துறையில் படித்துத் தேர்ந்தவர்கள் பரவலாக எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் செல்லும் வாய்ப்பு இந்தத் துறையில் இருப்பதால் மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று அந்த முறையைப் பின்பற்றி வந்தது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பிற்குப் பிறகு, அந்த முறையைப் பின்பற்றாமல், எல்லா இடங்களுக்கும் ஓர் இடத்திலேயே வைத்து, மாநில அளவில் பார்க்கப்பட்டு வந்தது. அதற்காக 4, 5 குழுக்கள் அமைத்து, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். அதிலே என்ன வேறுபாடு வந்தது என்றால், ஒரு குழுவிலே இருப்பவர்கள் தாராளமாக மார்க் போடுவார்களேயானால், அவர்கள் முன் வரிசையிலே வந்து விடுவார்கள். சில குழுக்களிலே இருப்பவர்கள் இதிலேயும் கொஞ்சம் கஞ்சத்தனத்தை வைத்து, மார்க் போடுவதைக் குறைவாகப்

[1970 ஆகஸ்ட் 25

போட்டால் எல்லா மார்க்குகளையும் கொண்டு வந்து பார்க்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட குழுவிலே இருப்பவர்கள் அதிகமாகியும், வேறு ஒரு குழுவிலே இருப்பவர்கள் பின் தங்கிய நிலையிலேயும் இருப்பார்கள் என்பதால் அந்தந்தக் கல்லூரிகளிலேயே குழுக்களை ஏற்படுத்தியது. அந்த மாணவர்கள் எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் விண்ணப்பம் செய்யலாம், ஆனால் 2, 3 கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்தால், அவர்கள் முகவரிக்கு அண்மையில் இருக்கும் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படுகிறது. எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் விண்ணப்பம் அனுப்பலாம். கூடுமான வரையில் அந்த அந்தப் பகுதிகளில் விண்ணப்பம் அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தாமல், வேண்டுகோளாக விடுக்கும் அளவில் இந்த ஆண்டு இம் முறையை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## *Judges for State Lotteries.*

* 7 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the basis on which judges for the drawal of the State Lotteries are being nominated?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாநில அரசின் பரிசுச் சீட்டுக் குலுக்கலுக்கு நடுவர்களை நியமிப்பதற்காக எந்தவிதமான நிபந்தனைகளும் வரையறுக்கப்படவில்லை. மாநில மத்திய அரசுகளைச் சேர்ந்தவர்களும் பொது மக்களிடையே அதிக அளவு நம்பிக்கையூட்டக் கூடியவர்களுமான உயர்நிலை அதிகாரிகள், பாங்கர்கள், தொழில் அதிபர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தனிச் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆகியோரை அரசு தேர்ந்தெடுத்து, நடுவர்களாக நியமிக்கின்றது. இக்குழு 5 பேர்களுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே பொது மக்கள் பிரதிநிதிகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள இனியாவது முயற்சி செய்யப்படுமா? இந்தப் பரிசுச் சீட்டு விற்பனை முன்பைவிட தற்பொழுது வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டிருக்கிறார்கள். இந்தக் குழுவிலே இருப்பவர்களைப்பற்றி எந்தவிதமான புகாரும் இல்லை. இக் குழு மிகவும் நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. பொதுமக்கள் பிரதிநிதிகளும் சேர்க்கப்படுகிறார்கள். மேலும் சேர்க்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படலாம். ஆனால், பொதுவாக பரிசுத் திட்டம் நல்ல வகையிலே நடந்து வருகிறது என்பது தான் அரசாங்கம் கண்டு பிடித்திருக்கும் ஒரு நிலையாகும். இது வரையில் மொத்தம் 16 கோடியே 92 இலட்சத்து, 28 ஆயிரத்து



1970 ஆகஸ்ட் 25]

717 ரூபாய் அளவுக்கு டிக்கெட்டுகள் மொத்தமாக விற்றிருக்கின்றன. நான் சொல்லும் கணக்கு மே மாதம் முடிய இருக்கிற கணக்காகும். இன்றைக்குக் கூட ஒரு குலுக்கல் நடைபெறுகிறது. இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்பது அரசாங்கத்தில் சொல்கிற நிலைமை.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, பரிசுச் சீட்டு முறை நிரந்தரமாகிவிட்டதால், அதற்கான நடுவர்களைத் தேர்ந்தெடுக்க அவ்வப்பொழுது தீர்மானிப்பதைவிட ஒரு நிலையான ஏற்பாடாக, இன்னின்னார்தான் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று விதி வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தேவையற்ற ஒன்றாகும். பாரபட்சமற்ற தன்மையிலே, எதுவும் தவறுகளோ கோளாறுகளோ நடைபெறாமல் இருப்பதற்காக நடுவர்கள் இருக்கிறார்கள். இன்றிருக்கும் முறைதான் பொருத்தமானது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, இப்பொழுது உள்ள பரிசுச் சீட்டு முறையிலே நம்பர் மட்டும்தான் இருக்கிறது. நம்பர் தெரியாதவர்கள், கிராமத்தில் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே இந்த முறையை மாற்றி பரிசுச் சீட்டில் வாங்குபவர்களின் பெயரைக் குறிப்பிட்டால், பரிசு விழுந்தால் பெயரைக்கொண்டு கண்டுபிடித்து விடலாம் என்ற முறையில் அந்தத் திட்டத்தைப் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பெயரைப் பார்க்கவும் தெரியாதவர்களாக இருக்கலாம். பொதுவாக, எந்த விஷயத்திலும் ஏமாளிகளாக இருக்கக் கூடாது என்பது உலக நியதி.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, பரிசுச் சீட்டுக் குலுக்கல் சென்னையில் மட்டும்தான் நடைபெற்று வருகிறது. எனவே, இந்தக் குலுக்கலை ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் நடத்தி, அதற்காக சற்று விளம்பரங்களை அதிகப்படுத்தினால் இன்னும் பரிசுச் சீட்டு விற்பனை அதிகமாகும். இதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குலுக்கல் சென்னையிலே நடைபெறவேண்டியிருக்கிறது. இங்கேதான் தலைமைச் செயலகம் இருக்கிறது. இன்றுகூட, 25-ம் தேதி, 23-வது குலுக்கல் நடைபெறப் போகிறது. பரிசு வாங்குபவர்களுக்கான விழாக்கள் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில், செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்றிருக்கின்றன. அம்மாதிரி நிலைமைகளை மேற்கொள்ளுவதால், குலுக்கலை வேறு இடத்திற்குக் கொண்டு போகவேண்டிய அவசியமில்லை.

**திரு. கே. போஜன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலிலே மே மாதம் வரை பரிசுச் சீட்டு விற்பனையிலே 16 கோடி அளவிற்குக் கிடைத்ததாகச் சொன்னார்கள். பரிசுத் தொகை போக, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவுகள் போக, அரசாங்கத்திற்கு மிகுதியாகக் கிடைத்திருக்கும் வருமானம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அரசாங்கத்திற்கு இதன் மூலமாகக் கிடைத்திருக்கும் வருமானம் 9 கோடியே 75 இலட்சத்து 40 ஆயிரத்து 135 ரூபாய் ஆகும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பரிசுச் சீட்டில் இருந்து மொத்தமாகக் கிடைத்திருக்கும் வருவாயை மாவட்ட அளவில் அபிவிருத்தி வேலைகளுக்காகப் பகிர்ந்து செலவழிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாவட்ட அளவில் என்று செலவு செய்யும் நிலை அல்ல. இதைச் சிறப்பு நிதியாக அரசாங்கக் கணக்குகளில் இருந்து தனிமைப்படுத்தி, குறிப்பிட்டஅபிவிருத்தி வேலைகளுக்கும், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கும், அரிசன மாணவர்களுக்காக உபயோகப்படுத்துவதற்கும் தனிக் கணக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** எல்லா மாநிலங்களிலும் பரிசுச் சீட்டுகள் வெளியிட்டாலும் கூட வேறு மாநில அதிகாரிகள் நம்முடைய ஏற்பாட்டைப் பரிசீலித்து, இது நல்ல விதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறியிருப்பதை அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்தப் பக்கம் என்று தெரியவில்லை. பொதுவாகத் தமிழ் நாடு அரசாங்கம் இப்படிப் பட்ட பாராட்டுக்குரிய பல சாதனைகளைக் கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாகச் செய்து வருகிறது என்பதை எல்லாப் பக்கத்தினரும் நன்றாக உணர்ந்து வருகிறார்கள்.

## SECOND PAY COMMISSION.

* 8. *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Second Pay Commission appointed for the revision of pay scales of the Government servants has submitted its recommendations to the Government?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

DR. H. V. HANDE : Sir, a number of recommendations have been made by the First Pay Commission and many of them have not yet been implemented. In view of the fact that most of the recommendations of the First Pay Commission have been accepted by the previous Government—even the present Government have





accepted them in principle—before the report of the Second Pay Commission is finalised, will the Government come forward to see that the recommendations of the First Pay Commission which have not been implemented are fully implemented?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முதல் சம்பளக் கமிஷனாக இருந்தாலும், இரண்டாவது சம்பளக் கமிஷனாக இருந்தாலும் அரசாங்கம் அந்தப் பரிந்துரைகளில் எது எது அவசியமோ, சாத்தியக்கூறானதோ அவற்றை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளும்.

**திரு. சோ. அழகர்சாமி :** ஊதியக் குழு தன் பரிந்துரைகளை இவ்வளவு காலத்திற்குள்ளாக அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று வரையறுத்து இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இன்ன காலவரையறைக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கூறவில்லை. விரைவாக, சீக்கிரமாக, பணிகளைச் செய்வதற்கு எவ்வளவு காலம் வேண்டுமோ, அந்தக் காலத்திற்கு அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் அனுப்ப வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இரண்டாவது ஊதியக்குழுவினுடைய பரிந்துரைகளின் மேல் கூடுதலாக ஆக இருக்கும் செலவை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தியதா ? நிதி ஆணைக் குழு இதர மாநிலங்களைப் பொருத்தவரை இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பதை எடுத்துக் காட்டி நம்முடைய சர்க்காரும் அந்தத் தொகையைப் பெற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மத்திய அரசாங்கம் நமக்குச் செய்திருக்கிற பாரபட்சமான நிலையை இது குறிப்பதாகும். ஐந்தாவது நிதி ஆணைக் குழு பரிந்துரை வழங்குவதற்கு முன்னால் சில மாநிலங்களில் சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன, சில மாநிலங்களில் சம்பளக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டிருந்தன. ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கையில் வேறு பல மாநிலங்களுக்கு இந்தச் செலவை ஈடுகட்டும் வகையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தும் நம்முடைய மாநிலத்திற்கு அத்தகைய பரிந்துரையைச் செய்யவில்லை. இதைப்பற்றி நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் நடைபெற்றிருக்கிற அமைச்சர்கள் மாநாட்டிலும், திட்டக் கமிஷனிடத்திலும், பிரதம மந்திரி அவர்களிடத்திலும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய முன்தினம்கூட, சம்பளக் கமிஷன் இங்கே நியமித்து பரிந்துரைகள் வரவில்லை என்ற காரணத்திற்காக சேர வேண்டிய மிகப் பெரிய தொகையைக் கொடுக்காமல் இருக்கக்கூடாது என்பதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள்.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** ஊதியக் குழுவின் பரிந்துரை வர காலதாமதம் ஆகிற காரணத்தால், விலைவாசி ஏற்றம் காரணமாக அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இடைக்கால ஏற்பாடு எதையாவது அரசு செய்யுமா? இடைக்கால நிவாரணமாக அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை அரசாங்கம் பாராட்டுகிறது. இடைக்கால நிவாரணம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பளக் கமிஷன் ஒரு பக்கம் நியமிக்கப்பட்டிருந்தாலும், இடையிலே மலைப் பகுதியில் வேலை பார்க்கின்றவர்களுக்கான அலவன்ஸைக் கூட்டிக் கொடுத்திருக்கிறோம். நான்கு கோடி ரூபாய் அளவுக்கு மின்சார வாரிய ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கும் வகையில் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சம்பளக் கமிஷன் வேலை சிக்கலான, பொறுப்பான வேலை எவ்வளவு விரைவாக அவர்களுடைய பரிந்துரையை அளிக்க வேண்டுமோ, அவ்வாறு அளிப்பார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது.

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister has stated that the Commission would submit the report as expeditiously as possible. May I request him to give an assurance that at least the report of the Pay Commission will come before 1972 elections?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பளக் கமிஷன் அறிக்கை வரக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு இந்தச் சர்க்கார் ஊழியர்களிடத்தில் அக்கறை இருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்களுடைய ஆசையை நிராசையாகக் கண்டிப்பாக இந்த அரசாங்கம் செய்யும்.

### *Cash awards for Government Servants.*

*1 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Tamil Nadu Government has instituted a scheme of giving cash awards for suggestions emanating from Government Servants for improvements in office and administrative procedure?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம். அலுவலக நடைமுறையையும், நிர்வாக நடைமுறையையும் சீரமைப்பது குறித்து அரசுப் பணியாளர்கள் அளிக்கும் ஆலோசனைகளுக்கு ரொக்கப் பரிசுகள் அளிப்பதற்கு வகை செய்யும் திட்டம் ஒன்றைத் தொடங்குவது குறித்து பொதுத் (பணிகள்-A) துறையின் 11–11–1968 நாளிட்ட 2773-ம் எண் அரசு ஆணையில் தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டம் இந்த ஆணையின் நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு செயலில் இருக்கும்.





**திரு. கே. விநாயகம் :** இந்த அரசு ஆணையை ஒட்டி என்னென்ன விதமான யோசனைகளை எந்தெந்த அதிகாரிகள் இதுவரையில் நம்முடைய நிர்வாகத்தில் இருக்கிற குறைபாட்டை நீக்க, சொல்லியிருக்கிறார்கள்? அப்படிச் சொல்லியிருக்கிற எந்தெந்த உத்தியோகஸ்தர்களுக்கு இந்த ரொக்கப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுவரையில் இரண்டு அதிகாரிகள் அப்படிப்பட்ட யோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக சீஃப் செகரட்டரி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் பரிசிலனைக்காக அந்த யோசனை அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு வெளியிடும் கெஜட் பற்றிய யோசனை ஒன்று; தலைமைச் செயலக அலுவலகத்தில் சிக்கன முறையைக் கொண்டுவரும் யோசனை மற்றொன்று.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Chef Minister to state whether recently the Secretariat Servants' Association has made any representation to the Hon. Chief Minister for changing the office hours and if so,. the action taken thereon by the Government?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேற்றைய தினம் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய்ந்து தகுந்த கருத்தை அளிக்க வேண்டுமென்று தலைமைச் செயலாளரிடம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** இந்த ஆலோசனைகளைச் சொல்லுவதற்கு ரொக்கப் பரிசு கொடுப்பது என்பது பொதுவாக தமிழர்களுடைய பண்பாட்டுக்கு இணக்கமாக இல்லை. ரொக்கப் பரிசு கொடுப்பது என்று இல்லாமல் சிறந்த ஆலோசனைகளைக் கூறியவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்ற அளவில் அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது பரிசைப் பெறுகிற நேரத்தில் வாங்குபவர்கள் கைக்கொள்ளும் முறையாக இருந்தால் அரசு வரவேற்கும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சீரமைப்பு குறித்து அரசுப் பணியாளர்களின் ஆலோசனைகள் என்று குறிப்பிடுவது, சீரமைப்பு என்பது மிகத் தேவையான ஒன்று என்று இருந்தாலும் கூட அதற்காகப் பரிசுகள் அளிக்கவேண்டுமா? சீரமைப்புச் செய்யும்போது எல்லாம் பரிசு அளிப்பது என்ற முறை எல்லா இலாகாக்களுக்கும் பரப்பப்படுமா? அப்படிப் பரிசு அளிப்பது என்பதில் எந்தெந்த அளவிற்கு என்னென்ன தொகைகள் என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

[1970 ஆகஸ்ட் 25

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* அப்படிப் பரிசு அளிப்பதில் அதன் தொகை ஆயிரம் ரூபாய்க்கு மேற்படக்கூடாது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சீரமைக்கவேண்டும் என்பதற்காக ஒரு குழு இருந்தாலும், அப்படி நியமிக்கப்பட்டாலும் அந்தக் குழுவிற்கு யோசனைகள் பலவற்றைப் பலரும் தரலாம். அது எந்தத் தரப்பு அலுவலர்களாக இருந்தாலும் அவர்கள் யோசனைகள் தரலாம். அந்த யோசனைகள் அந்தக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு இறுதியாக முடிவு எடுக்கப்படும்.

*திரு. கே. விநாயகம் :* அரசு அலுவலகச் சீரமைப்பு பற்றி யோசிக்கும்போது எங்களைப் போல் உள்ளவர்கள் மனுக்கள் கொடுத்தால் இங்கிருந்து போய்விடுகிறது, அதில் சந்தேகமில்லை. சீஃப் செகரட்டேரியேட்டிலிருந்து போய் விடுகிறது. ஆனால் அங்கிருந்து கேட்கப்படுகிற ரிப்போர்ட்டுகள் ஆறு மாதங்கள், ஒரு ஆண்டு ஆனாலும்கூட மாவட்ட அளவிலிருந்து சிபார்சுகள், பரிந்துரைகள், அல்லது விரோதமான குறிப்புகள் எதுவும் சிப் செகரட்டேரியேட்டுக்கு வருவதே இல்லை. இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் என்ன யோசித்தார்கள்? இந்தக் காலதாமதத்தைப் போக்குவதற்கு யாராவது யோசனைகள் சொன்னால் அவருக்கு என்ன பரிசு தருவார்கள் அமைச்சர் அவர்கள்?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* விநாயகம் அவர்களே சொன்னால் ஸ்பெஷல் பரிசு ஏதாவது அளிக்கப்படும்.

*Scheme for supply of drinking water to village.*

* Q. 2—DR. H. V. HANDE : **Will the Hon. the Chief** Minister be pleased to state :

(a) whether the Government has any scheme for supply of drinking water to all the villages in the State;

(b) if so, the details thereof; and

**(c) the total amount allotted for this scheme so far?**

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* (அ) ஆம்,

(இ) கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ், ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் கிராமங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. குடிநீருக்கு அல்லற்படுகிற, பற்றாக்குறையான பகுதிகளில் கிராமக் குடிநீர் சிறப்புப் பணித் திட்டங்களை நிறைவேற்ற சிறப்புத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. வறட்சித் தணிப்புத் திட்டத்தின் கீழும், பஞ்சத்துயர் தணிப்புத் திட்டத்தின் கீழும் குடிநீர் வழங்கு பணித்திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்றும் குடிநீர் வழங்குத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.



1970 ஆகஸ்ட் 25]

| | | | |
|---|---|---|---|
| (உ) 3-வது திட்டக் காலம் | ... | ரூ | 588.01 லட்சம் |
| 1966--67 | ... | ரூ | 95.44 லட்சம் |
| 1967–68 | ... | ரூ. | 99.46 லட்சம் |
| 1968–69 | ... | ரூ. | 94.99 லட்சம் |
| 1969–70 | ... | ரூ. | 120.00 லட்சம் |

DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be able to tell us as to what is the break-up of figures district-war so that we will have an idea of what district is most-backward? Is it not a fact that especially in the district of Ramanathapuram there is a great complaint that there are a number of villages where there is no possibility of drinking water and people had to walk 10 to 15 miles to get a pot of drinking water? Will the Hon. Chief Minister tell us what special steps had been taken towards Ramanathapuram district?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* மாவட்ட வாரியாக விவரங்கள் இல்லாவிட்டாலும் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது அனுதாபத்தோடு கவனிக்கப்படுகிறது. அதுமாத்திரமல்லாமல், இப்போது மத்திய அரசிலிருந்து இந்தியா முழுமைக்கும் பல பின்தங்கிய மாவட்டங்களுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நான் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் (என்.டி.ஸி.) கூட நான்காவது திட்டத்திற்கு சம்மதம் தருவதாகயிருந்தால் சேலம் திட்டம், இந்த நூறு கோடி ரூபாயில் தமிழ்நாட்டுக்குப் பங்குவேண்டும் என்றெல்லாம் நான் குறிப்பிட்டேன். சேலம் திட்டத்தைத் தொடர்ந்து இப்போது இந்த நூறு கோடி ரூபாயில் தமிழ் நாட்டுக்கும் ஒரு பங்கு வரும்படி இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு அனுமதி கிடைத்திருக்கிறது. அதில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒரு மாவட்டமாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

*திரு. தி. பொன்னுமலை :* கிராமப்புறங்களில் ஹரிஜன சேரிப் பகுதிகளுக்குக் குடி தண்ணீர் சப்ளை செய்வதற்காக மற்ற தெருக்களிலிருந்து குழாய்கள் மூலம் இலவசமாகத் தண்ணீர் சப்ளை செய்ய சர்க்கார் தனிக் கவனம் செலுத்துமா? அப்படிக் கவனம் செலுத்தித் தண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* எல்லா இடங்களுக்கும் தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளில் அரசு கவனம் கொண்டிருக்கிறது.

*திரு. பி. எஸ். தனுஷ்கோடி ;* கிராமங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக ஆகும் செலவை ஏற்றுக்கொண்டால், நாங்கள் குடிநீர் திட்டத்தை அமல் படுத்துகிறோம் என்று கிராம ஊராட்சி மன்றங்கள் மூலம் பரிந்துரைகள் வந்திருக்கின்றன. நிதிப் பற்றாக்குறை காரணமாக சில கிராம ஊராட்சி மன்றங்கள் அந்தச் செலவைச் செய்ய முடியவில்லை. ஆகவே அரசாங்கமே அந்தச் செலவை ஏற்று, குடிதண்ணீர் திட்டத்திற்காக ஆகும் செலவை ஏற்று அத்திட்டத்தைச் செய்து கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சாதாரணமான முறையில் ரூ. 40,000 வரையில், அதற்குக் குறைவாக உள்ள திட்டங்களை எடுத்துக்கொள்ளும்போது அதில் 75 சதவிகிதம் அரசு மானியமாக அளிக்கிறது. 25 சத விகிதம் உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது ஒன்றும் பெரிய தொகை அல்ல.

**திரு. சோ. கருணாநாதன்:** நம் மாநிலத்திலுள்ள குடிநீர் பிரச்னையை 1972-ம் ஆண்டு இறுதிக்குள் சமாளித்து விடுவதாக முதல் அமைச்சர் அவர்கள் பேசியிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் பார்த்தோம். அது தீவிரமாக செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நம் தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்படும். 1972-ம் ஆண்டுக்குள் என்று குறிப்பிட்ட நேரத்தில் "பெரும்பான்மையான" கிராமங்கள் குடிநீர் பற்றாக்குறையிலிருந்து மீண்டிடவேண்டுமென்று, மிகுந்த ஜாக்கிரதையோடு குறிப்பிட்டிருக்கிறேன், "பெரும்பான்மையான" கிராமங்கள் என்று. "பெரும்பான்மையான" கிராமங்கள் என்ற அளவில் நாம் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் திட்டங்கள் தீவிரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

*Cultivation of Jasmine in Hosur Taluk.*

* Q. 9—THIRU K. S. KOTHANDARAMAIAH : Will the Hon. Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(a) whether there is any proposal to encourage the cultivation of jasmine flowers in Hosur Taluk; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Unlike the jasmine flowers in the various other parts of our State, the jasmine flowers of Hosur taluk has got a special whiteness and richness of petals and oil content. Its magnificence and fragrance are not only invigorating but also intoxicating to a great extent. I think our Hon'ble Agriculture Minister, our Hon'ble Food Minister and our Hon'ble Chief Minister, when they had been to Hosur, were profusely garlanded and they would have smelt and enjoyed its fragrance. Further, there is the local tradition that the jasmines of Hosur used to be admired by the Vijayanagar Kings and Kings of Mysore and due to their encouragement, the jasmine cultivation increased. Local tradition and folk songs



reveal that these flowers were used to be taken to the Mysore Palace Srirangapuram because the ladies there liked the jasmine flowers of Hosur. Under these circumstances, if modern technique of cultivation is taught and helped, the ryots will take to this cultivation. Will the Government re-examine the whole thing and see that justice is done to Hosur taluk?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மல்லிகையின் நல்ல குணத்தைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அவரது இடமான ஹோசூரில் அதற்கு நல்லவிதமான நிலை இல்லை. பூச்சித் தாக்குதல்களுக்கு அதிகமான அளவில் அந்தப் பக்கத்தில் அந்தச் செடிகள் ஆளாகின்றன. அங்குள்ள விவசாயிகள் இந்த மல்லிகையைப் பயிரிடுவதை விட அதிகமாக விரைவில் விலை போகக் கூடிய சாமந்திப் பூவைத்தான் பயிரிட விரும்புகிறார்கள். அது இல்லை என்றாலும் காய்கறிகள் பயிரிட விரும்புகிறார்கள். இந்த நிலை எல்லாம் மாறினால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் மல்லிகையில் அதிகக் கவனம் செலுத்தி அதை வளர்க்கலாம்.

***Untouchability***

* Q.—10. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

**(a) whether the practice of untouchability has been put as a** penal offence under the Government Servants' Conduct Rules in this State; and

**(b) if so, the details thereof?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**சலவைத் தொழிலாளர் கோரிக்கைகள்**

* வினா 11. திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீண்ட காலக் கடன் உதவி அளிக்கக் கோரி சலவைத் தொழிலாளர்களிடம் இருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இக் கோரிக்கைகளை அமுல் படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) ஆம். கோரிக்கைகள் வந்துள்ளதாகப் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(இ) நீண்ட காலக்கடன் வழங்குவதற்கான திட்டம் தற்போது ஒன்றும் இல்லை. இதுபோன்ற கோரிக்கைகள் பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கை வந்தபிறகு பரிசீலிக்கப்பெறும்.

திரு. வை. சுவாமிநாதன்: என்ன விதமான கோரிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனிக் கேள்வி வேண்டும்.

DR. H. V. HANDE: The Hon. Minister may remember that it is about five or six years or even more since the Washermen's Association of Madras City had applied to Government for sanction of loans to them for buying washing machines and for starting laundry and the Hon. Minister had also promised to consider the request sympathetically. In view of their long pending request and in view of the assurance of the Hon. Minister, will the Hon. Minister give a categorical answer whether any of the particular requests of the Association will be immediately taken into consideration by the Ministry?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கனவே அறிவித்துள்ளது போல் விரைவில் பிற்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரை வர இருக்கிறது. அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை நடைமுறையில் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

## கோழிப் பண்ணைகள்

■ வினா 12. திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது கிராமப்புறங்களில் இயங்கி வரும் கோழிப் பண்ணைகளை நகரங்களுக்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன்: பொதுவாக இன்று கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் வளர்ப்பதற்கு நிதி ஒதுக்குவது கம்மியாக இருக்கிறது. இன்று கேரளாவிலிருந்து தினசரி இரண்டு இலட்சத்திற்கு அதிகமான கோழி முட்டைகள் நம் மாநிலத்திற்கு வருகின்றன. கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் அதிகமாக இருந்தால்தான் இதைத் தடுக்க முடியும். ஆகவே, பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் அதிகப்படியான கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் வளர்ப்பதற்காகவும் இதுமாதிரி எளிய முறையில் கோழிகள் விநியோகிப்பதற்காகவும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. விரைவில் அது அமுலாக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பண்ணைகள் கிராமப்புறங்களுக்கு அருகில் இல்லாமலும், நகர்புறங்களுக்கு அருகில் இல்லாமலும், அனாந்திர வெளியிலே இருப்பதன் காரணமாக, அங்கே செயல்படுகிற அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருப்பதன் காரணமாக, ஓரளவுக்கு குறைந்தபட்சம் கிராமப்புறங்களை ஒட்டியோ அல்லது நகர்ப்புறங்களை ஒட்டியோ அத்தகைய பண்ணைகளை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற கோழிப் பண்ணைகள் எங்கிருந்தாலும் விவசாயிகளுக்கு இந்தக் கோழிகளைக் கொண்டு வந்து மலிவான விலையில் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் புதிய திட்டம் வகுத்திருக்கிறது. விரைவிலே அது அமுலாக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: கோவை மாவட்டத்தில் அரசலூரில் கோழிப் பண்ணைக்காக ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கோழிப் பண்ணையை இப்பொழுது நிரந்தரமாக மூடிவிட்டார்கள். கட்டடம் சும்மா இருக்கிறது. அதில் வேறு ஏதாவது செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது மீண்டும் கோழிப் பண்ணையை அங்கே நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைப்பற்றி விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

## கால்நடைகளுக்குக் கோமாரி நோய்

13 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் கால்நடைகளுக்குக் கோமாரி நோய் என்கிற தொத்து நோய் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(இ) எந்தெந்தப் பகுதிகளில்?

(உ) இதுவரை அதனால் எத்தனை ஆடு-மாடு முதலியவை செத்து விட்டன?

(எ) சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) முதல் (எ) வரை: வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், திருவண்ணாமலைப் பகுதியிலும், செய்யாறு போன்ற பகுதிகளிலும் இது போன்று கோமாரி தொத்து நோய் ஏற்பட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதன் விளைவாகப் பல ஆடு மாடுகள் இறந்திருக்கின்றன. ஆனால், அரசாங்கத்திற்கு ரிபோர்ட்டு வராமல் இருக்கலாம். இதை முன் கூட்டியே உணர்ந்தாவது தடுப்பு ஊசிகள் போட்டுத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, செய்யாறு பகுதிகளில் கோமாரி நோய் வந்ததாக இல்லை. வேறு சில நோய்கள் வந்திருப்பதாகத்தான் இருக்கிறது. தொண்டை அடைப்பான் நோய், குதிரை நோய், அம்மை நோய் போன்ற நோய்கள் வந்து கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. தடுப்பு ஊசிகள் போடப்பட்டு, அவைகள் பாதுகாக்கப்படுகின்றன.

**திரு. இல. பலராமன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுகாவில் தொண்டை அடைப்பான் நோய் வந்து கால்நடைகள் பாதிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்கு வேண்டிய மருந்துகள் இல்லை என்று கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகள் கூறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை நிவர்த்திக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தினிடம் உள்ள தகவல்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கால்நடைகளுக்கு ஊசி குத்தப்பட்டு அந்த வியாதிகள் குறைக்கப்படுகின்றன, தடுக்கப்படுகின்றன என்றுதான் செய்தி இருக்கிறது.

## *Steel Tube Plant*

* 14 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

**(a) whether there are proposals under the consideration of the Government to locate a seamless steel plant in this State; and**

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** (அ) ஆம். இந்திய அரசு நிறுவனமாகிய திருச்சிராப்பள்ளி "பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்" நிறுவனத்துடன் கூட்டு முயற்சியாக, இம் மாநிலத்தில் "வெட்டு வாயில்லாத உருக்குக் குழாய்த் தொழிற்சாலை ஒன்றை (Seamless Steel Tube Plant) நிறுவுவதற்கு இந்திய அரசின் அதிகார பத்திரத்தைப் பெற வேண்டி, தமிழ்நாடு அரசிற்கு முழுவதும் சொந்தமாகிய தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

(இ) திட்டமிடப்பட்ட இந்தக் தொழிற்சாலையின் நிறுவப்பட்ட திறனளவு ஆண்டொன்றுக்கு சுமார் 60,000 டன்னாக இருக்கும். கொதி கலன்களுக்கும் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கும்





சாதாரணமாக குழாய்கள் பொருத்துவதற்கெனத் தேவைப்படும் 20 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை விட்டம் உள்ள 'வெட்டு வாயில்லாத உருக்குக் குழாய்களை' இத் தொழிற்சாலை தயாரிக்கும். இந்த செயல்திட்டத்திற்காக ரூ. 18 கோடி அளவிற்கு மூலதனம் தேவைப்படும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

## தமிழ் நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகள்

* வினா 15. திரு. கொளத்தூர் கோதண்டம்:

**திரு. என். எஸ். வி. சித்தன்:**

**திரு. வை. சுவாமிநாதன்:**

**திரு. ஆர். கருப்பையா**

மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70, 1970-71 ஆண்டுகளில் தமிழகத்தில் புதிதாக எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1969-70-ல் மத்திய அரசு இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கு இரண்டு அதிகாரம் பத்திரங்களை வழங்கியிருக்கிறது. 1970-71 மற்றுமொரு ஆலைக்கு வேண்டிய அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகமாகி, சர்க்கரை அதிகமாகத் தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இன்னும் புதியதாக ஆலைகளை ஏற்படுத்தி அதனால் வருகிற சர்க்கரையை எப்படி விற்பது என்று அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது 'ஷுகர் சர்ப்ளஸ்' இடைக் காலத்தில் ஏற்பட்டது உண்மை. அது நிரந்தரமான சர்ப்ளசாக இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். இன்னும் ஏராளமாக நம்முடைய நாட்டில் உபயோகப்படுத்துவதற்கும், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பு இருப்பதினால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிக சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதில் தவறு இல்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** 1969-70-ல் இரண்டு ஆலைகளும், 1970-71-ல் ஒரு ஆலையும் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவைகளில் உற்பத்தி தொடங்கப்பட்டுவிட்டதா? தொடங்கவில்லை என்றால், எப்பொழுது தொடங்கப்படும்? தற்பொழுது தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கரும்பு சர்க்கரை ஆலைகளுக்குப் போதுமானதாக இருக்கிறதா ? அல்லது அதிகமாக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒவ்வொரு ஆலைக்கும் தேவையான கரும்பு உற்பத்தி அந்தந்தப் பகுதியில் நிர்ணயிக்கப்படுகிறது எத்தனை ஏக்கரா நிலங்கள் என்று. இரண்டு வட ஆற்காடு மாவட்டத்திலும், ஒன்று கோவை மாவட்டத்திலும், ஆக மூன்று ஆலைகளைப் பொறுத்தவரையிலும் அவைகளுக்கான ஏக்கர்கள் எத்தனை, இடம் எது எது என்று நிர்ணயிக்கப்படுகிறது. மூன்று இடங்களில், இரண்டு இடங்களுக்கு அதற்கான தலைவர்களைப் போட்டு, அவர்களும் நிதியைச் சேர்த்து, தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இறுதி முடிவு செய்யப்படும். கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இப்பொழுதுதான் பேரூரில் ஆரம்பிக்கலாம என்று லெட்டர் ஆஃப் இன்டெண்ட் நமக்குகொடுத்திருக்கிறார்கள். இதற்குப் பின்னாலே அங்கும் மக்கள் பிரதிநிதிகளை அமைத்து அவர்கள் கூட்டுறவுத் துறையில் இதை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இதை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் உதவுகிறது, மாநில அரசாங்கம் எவ்வளவு பணம் உதவுகிறது, தனியார் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொடங்குகிறோம். தொடங்கி பணமெல்லாம் சேர்க்கும்பொழுது யார் எவ்வளவு போடுவது என்று முடிவு தெரியும்.

**திரு. ஆர். கருப்பையா:** புதியதாகத் தொடங்கப்படுகிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை எந்தெந்த இடங்களில் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டதா? திருச்சி மாவட்டத்தில் அரியலூர் கோட்டத்தில் பெரம்பலூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களே, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த ஆலையை எப்பொழுது தொடங்குவது என்று அரசாங்கம் எண்ணம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதுதான் அதிகமாக சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படவேண்டுமா என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் பகுதியில் அரசாங்க தலைமைக் கொறடா திரு. அழகமுத்து அவர்கள் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தினிடம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். இப்பொழுது சர்க்கரை மிகுதியாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் ஆரம்பிக்கலாமா என்பது சந்தேகம்தான். இப்பொழுது மூன்று ஆலைகள் ஆரம்பித்த பின்னர் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.





**திரு. தோ. மு. நல்லசாமி :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டினுடைய நிலைமைக்கு மாறாக, இந்த ஆண்டு கரும்பு பயிரிடப்படுவது அடுத்த அறவை ஆண்டுக்கு தமிழகத்தில் உள்ள அத்தனை ஆலைகளுக்கும் தேவையான அளவு பயிரிடப்படவில்லை. அதனால் அடுத்த ஆண்டில் அறவை நிலை பாதிக்கப்படுகின்ற நிலையை ஆலைகளை வைத்திருக்கும் முதலாளிகள் அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்திலுள்ள நிர்வாகஸ்தர்கள் உணருகின்றார்கள். அந்த நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த நிலைமை இருக்கும்பொழுது மீண்டும் சர்க்கரை ஆலைகள் திறப்பது பற்றி 'ரீ-திங்கிங்', புனராலோசனை தேவையில்லையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்னால் விளக்கியபடி ஒவ்வொரு ஆலைக்கும் எந்தெந்தப் பகுதிகளில் எத்தனை எத்தனை ஏக்கர்கள் நிலத்தில் கரும்பு பயிரிடப்படும் என்று பதிவு செய்யப்படுகின்றது. அந்தந்த ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் கட்டாயம் கரும்பு கொடுக்கவேண்டுமென்ற விதிகள் இருக்கின்றன. கரும்பு விலைக் குறைவும், சர்க்கரை ஆலைகளில் சில தகராறுகள் ஏற்படுகிற காரணத்தினாலும் ஆங்காங்கு உள்ள விவசாயிகள் தயக்கம் காட்டுகிறார்கள். கூட்டுறவு ஆலையானாலும் சரி, தனியார் ஆலையானாலும் சரி, அவர்களோடு இணைக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளோடு தொடர்பு கொண்டு, அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான அளவுக்கு விலையைக் கொடுப்பதற்கும், உற்பத்தி செய்த கரும்பை தகராறு காரணமாக தேக்கம் இல்லாமல் அறைத்துக் கொடுப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

## வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை

*15. வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதா?

(இ) ஆமெனில், ஆலை நிறுவும் திட்டம் தற்போது என்ன நிலைமையில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம். தனியார் துறை தொழிலதிபர் ஒருவருக்கு 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்குனேரியில் ஆண்டொன்றுக்கு 52,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று நிறுவ பூர்வாங்க அனுமதி வழங்கப்பட்டது.

(இ) ஆலை நிறுவும் திட்டம் தொழிலதிபரால் கைவிடப்பட்டது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** 1965-ல் தனியாருக்கு இதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது; அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. வள்ளியூர் தொழில் துறையிலே, தொழில் அபிவிருத்தி

யிலே பின்தங்கிய பிரதேசமாக இருப்பதால், இங்கு சிமெண்ட் ஆலையை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது ஆலை அங்கு இல்லை. ஆகவே, அதை ஏற்று நடத்த முடியாது. புதிதாகத் தொடங்கப்படவேண்டும். சர்க்கரையைப் போலவே சிமெண்டு தென்னாட்டில், குறிப்பாக தமிழகத்தில் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு, இதனை விற்பதற்கு வெளிநாடுகளை, வெளி மாநிலங்களை, குறிப்பாக வட பகுதி மாநிலங்களை எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் பூல் பிரைஸ், எங்கு விற்றாலும், ஒரே விலைக்கு விற்கவேண்டும் என்ற கருத்தை ஓரளவுக்கு இடைக்காலத்தில் மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. நமது ஆலைகளில் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்டு விற்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, புதிதாகத் தொடங்கப்படவேண்டுமென்றால், கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்குச் சிறந்த முயற்சி எடுத்து, தொழில் அதிபர் யாரையாவது தயார் செய்து கொண்டு வருவார்களேயானால், அதற்கு ஒத்துழைப்பு கொடுப்பது பற்றி யோசிக்கலாம்.

## *Central Board of Trade*

* 17 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

**(*a*) whether representatives of (i) private sector from this State and (ii) the State Government have been included in the Central Board of Trade; and**

(*b*) if so, the grounds on which they were included ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) (i) "மத்திய வர்த்தக வாரியத்தின்" அரசு சார்பற்ற பிரதிநிதிகளாக நமது மாநிலத்திலிருந்து கீழ்க்கண்டவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(a) திரு. எம். ஏ. சிதம்பரம்.

(b) திரு. டி. சி. கோத்தாரி.

(c) திரு. பி. எல். லோகநாதன்.

(ii) வர்த்தக வாரியத்தில் மாநில அரசின் பிரதிநிதிகள் எவருமில்லை.

(இ) வர்த்தக வாரியத்தின் அமைப்பு, அவற்றை ஏற்படுத்தல் ஆகியவற்றை இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சு கவனித்துக் கொள்கிறது. மாநில அரசுக்கு அவை குறித்து எந்தத் தொடர்புமில்லை. அரசுச் சார்பற்ற பிரதிநிதிகள் எக்காரணங்களால் அதில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை.





## தாளவாடி பகுதியில் முசுக்கொட்டை மரங்கள் பயிரிடுதல்

* 18 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தாளவாடி பகுதியில் முசுக்கொட்டை மரங்களைப் பெரிய அளவில் வளர்க்கும் திட்டம் ஏதாகிலும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) 1967-ம் ஆண்டு, கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி மாவட்டங்களில் ஒவ்வொரு பெரிய அளவு பட்டுப்பண்ணை ஆரம்பிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. அந்த மூன்று பண்ணைகளில் கோவை மாவட்டம் தாளவாடி பகுதியில் உள்ள பண்ணை ஒன்றாகும். அப்பண்ணையை 800 ஏக்கர் நிலத்தில் உண்டாக்குவதாக திட்டம். இது வரை 180 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்றாண்டுக்காலத்தில் இப்பண்ணை முழு வளர்ச்சி அடையும்.

* திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் மூன்று ஆண்டுக் காலத்தில் திட்டம் விரைவுபடுத்தப்படும் என்றார்கள். 800 ஏக்கர் என்பதைவிட அதிகமான அளவிற்கு பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தாளவாடி, ஒஸூர் பகுதிகளில் இந்தச் செடியை வளர்க்க ஆங்காங்கேயுள்ள விவசாயிகளுக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. அரசாங்கமும் பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். தனியார் யார் யார் இந்தச் செடியைப் பயிரிட முயற்சிகள் எடுக்கிறார்களோ, அவர்களுக்கும் உதவிகள் அளிக்கவேண்டும் என்கிற திட்டத்தை டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ், நிறைவேற்றி வருகிறார்கள்.

## சென்னை—நாகப்பட்டினம் அரசுப் பேருந்துகள்

* 19 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் அரசுப் பேருந்துகளின் ஓடும் நேரத்தைக் குறைக்க ஏதேனும், திட்டம்
அரசு பரிசீலனையிலுள்ளதா ? ; சாலை அமைப்பு

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ட்டுப் பணிகளில்
க்காக ரூபாய் 430

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, ஞ்சாலைக்காக ரூபாய்
கரைச் சாலையில் மரக்காணத்திற்குப் போக தியமான மதிப்பீடுகள்
காம் கால்வாயில் பாலம் அமைப்பதால் 15 பப்பட்டுள்ளன.

திற்கு அருகே வெள்ளாற்றில் பாலம் கட்டுவதால் 8 மைல்களும், ஆக 23 மைல்கள் சென்னையிலிருந்து நாகை செல்ல குறையும் என்ற நிலை இருப்பதால் அங்கே பாலங்கள் கட்ட அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கிழக்குக் கடற்கரைச் சாலையை மேம்படுத்துவதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும், மத்திய சர்க்காரை உதவி கேட்டு இருக்கிறோம். முடிவான பதில்கள் எங்களுக்கு வரவில்லை. ஆனாலும், மூல கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

### தலைமைச் செயலகத்திற்கு நேரடி போக்குவரத்து வசதிகள்.

*20 வினா—**திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு போதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்தோ, எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்தோ தலைமைச் செயலகத்திற்கு நேரடி பஸ் வசதி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

### பேருந்து வழித்தடங்கள் உரிமம்

*21 வினா **திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில் தற்போதுள்ள விதிமுறைகளை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேருந்து வழித்தடங்கள் உரிமம் வழங்குவது பற்றிய தற்போது உள்ள விதிமுறைகளில் பயனுள்ள மாற்றங்கள் ஏதேனும் செய்யலாமா என்பது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, 15 மைலுக்கு கீழே வழித்தடங்களை வழங்கும்போது, பெரிய பஸ் முதலாளிகள் வைத்திய வசதிகளை வைத்துக் கொள்ளவேண்டும் என் ... ல்லப்படுகிற விதிமுறைகளை உடனடியாக மாற்று
(இ) வர்த் ... முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.
ஆகியவற்றை இந்த
கவனித்துக் கொள்கி ... திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அடிப்படை வசதி
என்று வற்புறுத்தப்படுகிறார்கள். நான் ஏற்
எந்தத் தொடர்புமில்லை. போல, அரசு இவற்றையெல்லாம் ஆலோ
னைகளால் அதில் சேர்க்கிறது.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில், சாதாரண மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு லிமிடெட் கன்சர்ன் அமைத்துக் கொண்டு, பஸ் ரூட்டுக்களை வழங்கும்போது, இதற்கு பண செக்யூரிடி கொடுப்பதில், இருக்கக்கூடிய ஒருவர், குறிப்பிட்ட ஒரு நபர் கட்டினாலும் போதும் என்று இருந்தது. ஆனால், இப்பொழுது, லிமிடெட் கன்சர்ன் என்ற அந்தப் பெயரில் கட்டினால் தான் கொடுக்க முடியும் என்று ஆறு மாதமாக தடங்கள் வழங்குவது தடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது சம்பந்தமாக இப்பொழுது என்ன சொய்யப்படுகிறது என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோன்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வரவில்லை. மோட்டார் வெஹிகிள்ஸ் சட்டப்படி, 155-ஏ என்ற பிரிவுப்படி, சில விதிமுறைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறுகிறோம். கனம் உறுப்பினருக்கு ஏதாவது தகவல் இருந்து, தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிக்கலாம்.

### *Coimbatore—Bangalore Highway.*

*22 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to remodel the Coimbatore—Bangalore Highway;

(*b*) if so, the details thereof and the estimated cost;

(*c*) whether the Government have sought the help of the World Bank; and

(*d*) if so, the share of the World Bank and the State Government?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) மைசூர் எல்லை — கிருஷ்ணகிரி — சேலம் வழியாகச் செல்லும் 7-ஆம் எண். தேசீய நெடுஞ்சாலையையும், சேலம், கோயம்புத்தூர், கேரள எல்லை வழியாகச் செல்லும் 47 ஆம் எண். தேசீய நெடுஞ்சாலையையும் மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியை நாடுவதற்கு வகை செய்யும் செயற்குறிப்பை இந்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(இ) தற்போதுள்ள சாலை அமைப்பை விரிவுபடுத்துதல், வலுப்படுத்துதல், வலுவற்ற, குறுகிய பாலங்களையும் சிறு பாலங்களையும் புதுப்பித்தல், தற்போதுள்ள சாலை, இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்களைக் கட்டுதல், நெரிசல் மிகுந்த நகரங்களுக்கு பக்கச்சாலைகளை அமைத்தல், சாலை அமைப்பு வடிவலியலை மேம்படுத்துதல் ஆகியவை மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். 7-ஆம் எண். தேசீய நெடுஞ்சாலைக்காக ரூபாய் 430 லட்சம் அளவிலும், 47-ஆம் எண். தேசீய நெடுஞ்சாலைக்காக ரூபாய் 325 லட்சம் அளவிலும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

*(உ) உலக வங்கியின் உதவி பெறுவதற்காக இந்திய அரசின் ஆலோசனையிலே இருந்து வரும் பல திட்டங்களில் இது ஒன்றாகும். இந்திய அரசினால் இது முடிவாகத் தெரிந்தெடுக்கப்படின் உலக வங்கியின் உதவி பெறுவதற்காக அது இந்திய அரசினால் பரிந்துரைக்கப்படும்.*

*(எ) சாலைகள் குறித்த அதிகாரம் இந்திய அரசிடம் நிலை பெற்றுள்ளது. எனவே, இச்செலவை மாநில அரசு பகிர்ந்து கொள்வது குறித்த வினா எழாது.*

DR. H. V. HANDE: From the answer of Hon. Minister for Public Works it looks as though it may take a long time before we are able to realise from three dimension what the Central Government would offer us or promise to offer to us. In view of the possibility of long delay, will the Government see to it that this national highway work is immediately taken up and the present defects rectified and the highway made fit for heavy traffic. There is at present heavy traffic to Coimbatore from Hosur and Krishnagiri. In view of this, will the Government start the work and see to it that it prevails upon the Central Government afterwards and see that the expenditure is debited to Central account later on?

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:*** *மாநில அரசைப் பொறுத்தவரையில், செய்ய வேண்டிய எல்லா வேலைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காருக்கு உலக வங்கியிலிருந்து உதவி வரக் கூடிய குறிப்பு இருக்கிறது. மத்திய சர்க்காரையும் நாம் வற்புறுத்தியிருக்கிறோம். டெல்லிக்குச் சென்ற போது, மத்திய அமைச்சரோடு தொடர்பு கொண்டு கூறப்பட்டிருக்கிறது. இதில், மாநில அரசுக்கு உள்ள அதிகாரம் இல்லை, மத்திய சர்க்காரின் அதிகாரம்தான்.*

### திருமயம் தொகுதியில் அணைக்கட்டு

**23 வினா **புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்சி மாவட்டம், திருமயம் தொகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்குமிடத்தில் பேரணை எழுப்பும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா?*

*(இ) இருப்பின் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன?*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.***

***(இ) இக் கேள்விக்கு இடமில்லை.***



***புலவர் பொ. பொன்னம்பலம்:*** *மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் பகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்கும் இடத்தில் பேரணை கட்ட வேண்டும் என்று ஆங்கிலேயர் காலத்திலேயே ஆய்வு செய்யப்பட்டது. நம்முடைய அரசு அதை ஆய்வு செய்ய முயலுமா என்பதை அறிய விழைகிறேன்.*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:*** *ஆங்கிலேயர் காலத்தைப்பற்றித் தெரியாது. வெள்ளாறு, நெரிஞ்சிக்குடி ஆறு இவற்றிற்கு மேல் ஒரு மைல் தூரத்தில் அணை கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆற்றில் நீரின் அளவு குறைவு. பாசனத்திற்கு பற்றாக்குறை ஏற்படும் என்பதால் அதை மேற்கொள்ள முடியவில்லை.*

### லட்சுமணம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக் கட்டடம்

**24 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளித்தலை வட்டம், லட்சுமணம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தீர்மானிக்கப் பட்டதா?*

*(இ) ஆம் எனில், எப்போது தீர்மானிக்கப்பட்டது?*

*(உ) தற்போது எந்த நிலைமையில் இருந்து வருகிறது?*

*(எ) காலதாமதம் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன?*

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:***

*(அ) ஆம். தீர்மானிக்கப்பட்டது.*

*(இ) 25—11—1967.*

*(உ) தற்போது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.*

*(எ) கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுசெய்த பின்பும் கட்டடம் கட்டும் இடம் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனையினால் கட்டடம் கட்டும் வேலை தாமதிக்கப்பட்டது.*

### *Greater Madurai Scheme*

*25 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Greater Madurai Scheme and the scheme regarding the inclusion of some areas of Madakulam Panchayat in the Madurai Municipality was deferred by the Government of Tamil Nadu; and

(*b*) if so, the reasons for the same?

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:***

***(அ) ஆம்.***

(இ) நடைபெறவிருக்கின்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி மற்றும் பேரவை வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகிய வற்றைக் கருத்தில்கொண்டு, முந்திய அரசு விதித்துள்ள தடை யின் காரணமாக இக்குறித்த செயற்குறிப்புக்கள் ஒத்திப்போடப் பட்டுள்ளன.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to tell us whether this decision was taken by Government after getting the consent of the Municipal Council of Madurai or without getting the consent of the Municipal Council of Madurai?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மதுரை நகராட்சி மன்றம் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. 27—1—70 தேதியில் கூட, தீர்மானத்தின் மூலம், அரசின் முடிவுகளை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

*அரியலூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவு கடன் வழங்கு சங்கம்.*

***26 வினா—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரியலூர் பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கத்தில் நடைபெற்ற பைலா திருத்தம் பதிவாளரால் அனுமதிக்கப்பெற்றும் அதை அமல் நடத்தக்கூடாது என்று தமிழக அரசு தடை விதித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, அரியலூரைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கம் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக செயல்படாமல் இருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? இனிமேலாவது அந்தச் சங்கம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கழகம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதைப்பற்றிய ஒரு வழக்கு ஹைகோர்ட்டில் இருக்கிறது.

*தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை.*

***27 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை அமைப்பதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம், எனில், எப்போது நிறுவப்படும்?





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அ & இ தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை பெடரேஷன் திருவாரூரில் தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றை 8—12—1968-ல் நிறுவியுள்ளது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எடுக்கப்படுகின்ற எண்ணெய்யை எதெதற்குப் பயன்படுத்துகிறார் கள்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் சாதாரணமாக சோப் செய்வதற்குப் பயன் படுத்தப்படுகிறது. ஆனால், அதை மேலும் சுத்தம் செய்வதால், சாப்பிடுவதற்குப் பயன்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** தலைவர் அவர்களே, தவிடு முக்கியமாக கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படு கிறது. தவிட்டிலிருந்து இந்த எண்ணெய் எடுத்துவிடுவதனாலே தவிட்டிலுள்ள சத்து குறைந்துவிடுகிறது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? தவிடு கால்நடைகளுக்கு உணவாக இருப் பதாலே இந்த எண்ணெய் எடுப்பதை இந்த அரசாங்கம் கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகும்கூட, அதிலிருந்து கிடைக்கும் பிண்ணாக்கு கால்நடைகளுக்கு உணவாகவே பயன் படுத்தப்படுகிறது.

*Loan floated by Tamil Nadu Housing Board.*

*28. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowment be pleased to state :

(a) whether the Tamil Nadu Housing Board resolved to float a loan of the nominal value of Rs. 200 lakhs; and

(b) if so, how this loan would be utilised?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம்.

(இ) இந்தப்பணம் கீழ்க்கண்ட திட்டங்களுக்குப் பயன் படுத்தப்படும்.

(1) குறைந்த வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டத் தின்கீழ் 800 வீடுகள் கட்டவும்,

(2) நடுத்தர வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டத் தின்கீழ் 800 வீடுகள் கட்டவும்,

(3) 500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி மேம்படுத்தவும் பயன்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, was this loan fully subscribed and was the work regarding the construction of cheap houses for the poor people taken up and if so, in which part of the City of Madras?

[1970 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, ஜனவரி மாதத்திலே 200 லட்சம் ரூபாய்க்கான கடன் எழுப்பப் பட்டு, 200 லட்சம் ரூபாய் சேர்ந்துவிட்ட காரணத்தாலே, மேற் கொண்டு பணம் வசூல் செய்யப்படாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நிதியைத் தமிழ்நாடு முழுவதிலும் இந்தத் திட்டத்திலே பயன் படுத்தி வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. எங்கெங்கு தேவைப் படுகிறதோ, அங்கெல்லாம் வீடுகள் கட்டப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 29, வினா எண் 30 ஆகியவை ஒற்றிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) நிலப்பறிப் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. க. கோமதி சங்கர தீட்சிதர், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. என். சங்கரய்யா, திரு. கே. வினாயகம், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. என். வரதராஜன், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. சோ. அழகர்சாமி ஆகிய எட்டு உறுப்பினர்கள், அண்மையில் நடந்த நிலப்பறிப் போராட்டத்தைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று 'ஒற்றிவைப்புத் தீர்மானம்' கொடுத்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி, பேரவையை ஒற்றிவைத்து விவாதிக்க எந்த அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குவதற்காக, கட்சிக்கு ஒருவர் என்ற அளவில் விளக்கிவிடுவது நல்லது. முதலில் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடக்கவிருந்த நிலப்பறிப் போராட்டத்தைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் நடவடிக்கைகளை ஏன் ஒற்றிவைக்க வேண்டுமென்பது குறித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து எடுத்துக்கூற விரும்புகிறேன். இன்று இருக்கிற அரசியல் சூழ்நிலையிலே இந்த நிலப்பறி இயக்கம் போராட்டமாகவே இந்திய உபகண்டத்திலே முழுமையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலும் இது வலுப்பெற அரசியல் கட்சிகள் முனைந்து அதற்குத் திட்டமும் தீட்டி, செயல்படுத்துவதற்குமுன்னர் அர சாங்கமும் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றி இப்போது விவாதிப்பதற்கு நான் விரும்பவில்லை. நாட்டிலே இதனால் ஒருவித



1970 ஆகஸ்ட் 25] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மான பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. நாடு பூராவிலும் இந்த நிலப்பறிப் போராட்டம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில், தமிழ் நாட்டில் இந்தமாதிரியான கிளர்ச்சிக்கு வழி ஏற்படாமல் செய்ய அரசாங்கம் கவனித்துக்கொண்டிருக்கிறது. இன்றையதினம் குறிப்பாக சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புகள் அரசாங்கத்தை சார்ந்திருக்கிறது.

இன்றைக்கு இருக்கிற அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாட்டிலே தனி ஒரு மனிதன், சொத்து வைத்துக்கொள்வதற்கு எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறான். ஆனால் இன்றைய தினம் இந்த நிலப்பறிக் கிளர்ச்சி ரத்தப் புரட்சியாக மாறிவிடுமோ என்று அஞ்சக்கூடிய அளவிலேயும், இந்தக் கிளர்ச்சி பல போராட்டங் களுக்கு வழிவகை செய்யக்கூடிய அளவிலேயும் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் போராட்டம் நடந்த காரணத்தால், சுமார் 12 ஆயிரத்திற்கும் மேலான நபர்களை பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்—கைதிகளாக்கி. விசாரணைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். சட்டசபை உறுப்பினர் களும் இதிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தைப் பற்றி அரசாங்கத்தின் பொதுவான கொள்கை என்ன என்பதைக் கூறுவதற்கு இது ஒரு சரியான சந்தர்ப்பமாக இருக்கிற காரணத்தால், இந்த முக்கியமான பிரச்சினை குறித்து விவாதிக்க, இந்த மன்றத்தின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, 1970-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் 12 ஆயிரத்திற்கும் அதிக மான பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பல் வேறு வகைகளிலே பெயர் கொடுத்தாலும்—நிலப்பறி என்று பெயர் கொடுத்தாலும்—அதை நிலக்கிளர்ச்சி, நில மீட்சி என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தை நடத்தக்கூடிய நேரத்திலே, தீர்மானம் போட்டு, போராட்டம் நடைபெறக்கூடிய தேதி அறிவிக்கப்பட்டு அரசாங் கத்திற்கு விளக்கக்கூடிய வகையிலே இருந்தும், இந்தமாதிரியாக கைதுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள தலைவர்கள் எல்லாம், கிரிமினல் குற்ற[illegible]ல் திருத்தச் சட்டத்தின் படி, ஜாமீன் மறுக்கப்படக்கூடிய நிலையிலே கைது செய்யப்பட் டிருக்கிறார்கள். ஒரு மாநிலத்திலே, ஒரு நாட்டிலே கொலைக்குற்றம் செய்தவனுக்குக்கூட கோர்ட்டிலே ஜாமீன் கொடுக்கும் உரிமை இருக்கின்ற நேரத்திலே, இந்தப் போராட்டத்தில் ஈடுபட இருந்தவர் களுக்கெல்லாம் ஜாமீன் கொடுக்கக்கூடிய நிலை இருந்தும், ஜாமீன் மறுக்கப்படக்கூடிய நிலை என்று அரசாங்கம் முடிவு செய்தார்கள் என்றால் அதுவே இந்தப் பிரச்சினைக்கு விசேஷமான நிலை. ஏற்பட்டிருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

கிளர்ச்சி நடைபெறும் என்று குறிப்பிட்ட இடங்களில் இருந்த வர்கள் மட்டுமல்லாமல் பிற இடங்களில் இருந்தவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக ஒரு கட்சியின் [illegible]

தீர்மானம் போட்டு, யார் சட்டத்தை மீறப்போகிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, இன்ன தேதியில் கிளர்ச்சி நடக்கும் என்று அறிவித்த பிறகு, யார் யார் போராட்டத்தில் ஈடுபடுகிறார்களோ, யார் யார் சட்டத்தை மீறுகிறார்களோ அவர்களைச் சட்டத்தின்படி கைது செய்வது பொருத்தமாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக, குறிப்பிட்ட தேதிக்குப் பல நாட்களுக்கு முன்பாகவே யார் யார் போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடும், யார் யார் போராட்டத்தில் ஈடுபடக்கூடும் என்பதைப் போலீஸ் மூலமாக அறிந்து, அல்லது போலீசார் யார் யார் மீது சந்தேகம் கொள்கிறார்களோ, ஐயங்கொள்கிறார்களோ அவர்கள் அனைவரையும் கைது செய்திருக்கிறார்கள். இந்தக் கைது நியாய அடிப்படையில் இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

ஜாமீன் கூட கொடுக்க முடியாத நிலையில் கைது செய்கிறேன் என்று சொல்லி அரசாங்கம் கைது செய்திருக்கிறது. இதிலே 'சதி' அடங்கியிருக்கிறது என்று சட்டத்தின் ஷரத்துக்களையெல்லாம் எடுத்துக்காட்டுவது தமிழ் நாட்டிலே நீண்ட நெடுங்காலமாக இல்லாத ஒன்றாக இருந்து வருகிறது. உதாரணமாக, இந்தியப் பிரதமர் அவர்களுக்குச் சொந்தமான நிலத்தை ஒரு சில அரசியல் கட்சிகள் ஆக்ரமிக்க வந்தபோது, அந்தக் கிளர்ச்சியாளர்களை அந்த இடத்திற்கு வரவிட்டு, அங்கிருந்த அதிகாரிகள், 'இந்த இடத்தில் தடை உத்தரவு போட்டிருக்கிறது, தடை உத்தரவை மீறினால் கைது செய்வோம்' என்று சொன்னார்கள். கிளர்ச்சிக்காரர்கள் தடை உத்திரவை மீறுவோம் என்று சொன்ன பிறகு தான் அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள் ஆனால் தமிழ்நாட்டிலே முதலிலேயே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்திய உபகண்டத்தில் நடந்த நிலமீட்சிப் போராட்டத்திலே, எல்லா மாநிலங்களிலும் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்தால், அந்த நிலைமையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டிலேதான் 100க்கு 75 சதவீதம் பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு கொடிய அடக்கு முறையானது என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி மக்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இந்த மன்றம் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையை விவாதிக்கவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

*திரு சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சமீபத்தில் ஆகஸ்டு மாதத்தில் முதல் வாரம் எங்களுடைய இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பன்னிரண்டாயிரம் பேர்களுக்கு அதிகமான பேர்கள், தலைவர்கள் எல்லாம் இன்று கைது செய்யப்பட்டு, சிறைகளில் இரண்டாயிரம் பேர்களே இருக்கக்கூடிய இடங்களில் ஏழாயிரத்திற்கும் அதிகமானவர்கள் அடைந்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறைகளில் போதுமான வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுத்தப்படுவதாகத் தகவல்கள் வந்துள்ளன. நண்பர் திரு. சங்கரய்யா



அவர்கள் சொன்னது போல இது நிலப்பறிக் கிளர்ச்சி அல்ல நில மீட்சிக் கிளர்ச்சி இயக்கம் ஆகும். கொள்ளை அடித்து சட்டத்திற்கு புறம்பாக அதிகமான நிலம் வைத்திருக்கக் கூடியவர்களது புறம்போக்கு நிலங்கள் முதலியவற்றை நில மீட்சி செய்யவேண்டுமென்றும், அந்த நிலக் கொள்ளையர்களை அம்பலப்படுத்தி அந்த நிலங்களை எடுத்து நிலமற்ற உழவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்தும் அடிப்படையில் இந்தக் கிளர்ச்சி போதிய முன் அறிவிப்புக்கள் செய்யப்பட்ட பின்பே நடக்க இருந்தது. தேசிய இயக்க காலத்தில் நடந்த உப்பு சத்தியாக்கிரகம் போன்ற இந்த சத்தியாக்கிரகத்தில் யார் யார் ஈடுபடப் போகிறார்கள் என்பதாகப் பெயர் அறிவிக்கப்பட்டிருந்தும் ஒரு வாரத்திற்கு முன்பே பேர் அறிவிக்கப்படாதவர்களையும், இன்னும் இவர்களுக்காக வழக்காடுவார்கள் என்று வழக்கறிஞர்கள் பலரையும் இந்த அரசு கைது செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியாக ஒரு நியாயமான கிளர்ச்சியில் ஈடுபட இருந்தவர்கள் மட்டும் அல்ல, இதில் ஈடுபடக்கூடும் என்பதாகவும் நினைந்து பன்னிரண்டாயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்களை இந்த அரசு கைது செய்திருக்கிறது. இதன் காரணமாக ஒரு கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அவசரமான, அவசியமான பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கு தரப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பலர் தங்களுடைய பெயர்களைத் தந்திருந்தாலும் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் அதைப்பற்றி நிறையப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஒத்தி வைக்கவேண்மென்று கேட்டுக்கொண்டு கிட்டத்தட்ட ஒத்தி வைத்து விவாதிக்கின்ற நேரத்தை எடுத்துக்கொள்வது ஒரு தந்திரம். ஆனால் இந்த மன்றத்தில் நாம் அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மரபும் ஆகி வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் நமது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நீண்ட நேரம் பேசுவார்கள் என்று பார்த்தேன். அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்டதோடு முடித்துக்கொண்டு விட்டார்கள்.

அதைப்போலவே நண்பர் திரு சங்கரய்யா அவர்களும் எப்படிக் கைது செய்யலாம் என்ற கேள்வியைக் கேட்டதோடு தங்கள் உரையை முடித்துவிட்டார்கள். கோவில்பட்டி நண்பர் திரு. அழகர்சாமி அவர்களும் இது உப்பு சத்தியாக்கிரகத்தைப் போன்றது என்று குறிப்பிட்டார்கள். நாம் உப்பு சத்தியாக்கிரகம் எதற்காக நடத்தப்பட்டது என்பதையும், இந்த உப்பு சத்தியாக்கிரகம் எதற்காக நடத்தப்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கத் தவறி விடக்கூடாது.

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 25

இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்ட திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் கொள்கை, சட்டப்படி காரியங்கள் நடைபெற வேண்டும் என்பது தான். நிலங்கள் தவறான முறையில் பலரிடத்தில் குவிந்திருக்குமானால் அவற்றைப் பெற்று, நிலம் அவர்களுக்கு வழங்குகிற காரியத்தைச் சட்ட பூர்வமாகச் செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. இது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

இதில் முன்கூட்டி பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நிலப்பறி இயக்கம் எந்த எந்த நாட்களில் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததோ அதற்கும் முந்தியே அந்த இயக்கம் நடைபெறாதவாறு தடுக்கப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக்கொண்டது பற்றி காங்கிரஸ் தரப்பு நண்பர்கள் என்ன கருதுகிறார்கள் என்று பார்த்தேன். நண்பர் திரு. சித்தன் அவர்கள்

the failure of Government to deal with land grate problem in the state—

என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிலப்பறி இயக்கத்தைத் தடுத்து நிறுத்துவதிலே அரசு தவறிவிட்டது, நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்பது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்களுடைய குறிக்கோளாகும். நான் இந்த நிலப்பறி இயக்கம் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலங்களின் உடைமையாளர்—பூண்டி வாண்டையார் அவர்களுக்கும், குன்னியூர் ஐயர் அவர்களுக்கும் மற்றும் எல்லாக் கட்சிகளிலும் உள்ள நிலஉடைமையாளர்கள் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் தந்திருக்கிற கருத்தை அர்ப்பணிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த நிலப்பறி இயக்கத்திற்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள் என்ன என்ன, இது எவ்வாறு நடைபெறுவதாக இருந்தது என்பதை நான் இந்த இடத்தில் இப்போது உங்களிடத்தில் கூறுவது பொறுத்தமுடையதாகும் என்று கருதுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் 1970, மே திங்கள் 21-ம் நாளிலிருந்து 24-ம் நாள் வரையில் கூடிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு, கீழ்க்காணும் செயல் திட்டத்தை மேற்கொள்வதாக முடிவு செய்தது :—

(அ) 1—7—70—ஊர்வலங்கள் நடத்தியும் வருவாய்த்துறை அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் செய்தும் பின்னர் பொதுக் கூட்டங்கள் நடத்தியும், 'நிலப் போராட்ட நாளை'க் கடைப்பிடித்தல்.

(இ) 9—8—70 பொறுக்கியெடுக்கப்பட்ட சில இடங்களிலிருந்து கட்சித் தலைவர்கள் தலைமையில், நிலத்தை வசப்படுத்தும் இடங்கள் நோக்கி கட்சித் தொண்டர்கள் 'பாதயாத்திரை'



1970 ஆகஸ்ட் 25] [திரு. மு. கருணாநிதி]

செல்லல். 9-8-70 முதல் 14-8-70 வரையில் பொதுக் கூட்டங்கள் நடத்துதல், உண்டியல் பணம் வசூல் செய்தல், ஊர்வலம் நடத்துதல்.

(உ) 15—8—70—தொண்டர்கள் தங்கள் தலைவர்களின் தலைமையில் தேர்ந்தெடுத்த நிலங்களில் நுழைந்து சாகுபடி செய்யத் தொடங்குவர் அல்லது அந்த நிலத்தைச் சாகுபடி செய்யத் தக்கதாகச் செய்வர். அவர்கள் கைதுசெய்யப்பட்டால், இப்பணியைத் தொண்டர்கள் தொகுதி தொகுதியாகத் தொடர்ந்து நிறைவேற்றுவர்.

திட்டமிட்ட நிலப்பறிக் கிளர்ச்சிக்கு ஆதரவு தேடுவதற்கு 'நிலப் போராட்ட நாள்' கொண்டாட இந்தியப் பொதுவுடைமைக் கட்சிக் கிளைகள், 1-7-'70-ம் நாள் தமிழ் நாட்டின் சில இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்தின. பல இடங்களில் குறிப்பிடப்பட்ட தலைவர்களின் தலைமையில் 15-8-70-ல் இக்கிளர்ச்சியை நடத்த இக்கட்சி முடிவு செய்தது.

தஞ்சாவூரில் 1970 ஜுலை 3-ம், 4-ம் தேதிகளில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் இக் கிளர்ச்சியில் பங்குகொள்ள 10,000 தொண்டர்களை இம்மாநிலம் முழுவதிலும் சேர்ந்து, கிளர்ச்சியின்போது தடை உத்தரவுகளை மீறவும் இக்கட்சி முடிவெடுத்தது. தமிழ்நாட்டில் சுமார் 10,000 தொண்டர்கள் இக்கிளர்ச்சியில் பங்குகொள்ள முன்வந்துள்ளனர் என்றும், முதல் நாளில் இந்த இயக்கத்தை இக்கட்சியின் முதன்மைத் தலைவர்கள் தலைமைதாங்கி நடத்துவது என்றும், தடுப்பு நடவடிக்கையாகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டால் மற்றவர்கள் தலைமறைவாகி இக்கிளர்ச்சியைச் அமைத்து வெற்றிகரமாக நடத்துவர் என்றும், தெரிய வந்தது. நிலக்கிழார்கள் தடுத்துத் தாக்கும் செயலில் இறங்கினால் கட்சித் தொண்டர்கள் திரும்பித்தாக்கி நிலத்தை வலுவில் கைப்பற்ற முயல்வர் என்றும், மார்க்ஸிஸ்ட் பொதுவுடமையாளரும் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியினரும் இந்த இயக்கத்தில் குறிப்பாக கிராமப்பகுதிகளில் சேர்ந்து ஒத்துழைப்பார் என்றும் பொதுவுடமைக்கட்சி நம்புவதாகவும் அரசுக்குத்தகவல் கிடைத்துள்ளது.

ஆயினும், இந்தக் குறிப்பிட்ட கட்சியினர் இந்த இயக்கத்தை ஒத்துக்கொள்வது இல்லை என்ற முடிவினை அறிவித்திருக்கிறார்கள். ஆயினும் இங்கு நான் குறிப்பிட்டதைப்போல "நிலக்கிழார்கள் தடுத்துத் தாக்கும் செயலில் இறங்கினால் கட்சித் தொண்டர்கள் திருப்பித் தாக்கி நிலத்தை வலுவில் கைப்பற்ற முயல்வர்" என்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இது அவர்களது பத்திரிகையில் எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. "பிரதமர் நிலத்தில் நிலப்பறி இயக்கம் நிகழ்ந்த நேரத்தில் அந்த இடத்தில் கிளர்ச்சி செய்ய வந்த நேரத்தில்தானே கைது செய்யப்பட்டார்கள், இங்கே முன்கூட்டியே கைது செய்துவிட்டார்களே இது என்ன நியாயம்?" என்றார்கள்.

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 25

நான் முன்பே குறிப்பிட்டபடி நிலப்பறி இயக்கத்தை நடக்க விட்டு, நிலக்கிழார்கள் தடுத்துக் காக்கும் செயலில் இறங்கினால் கட்சித் தொண்டர்கள் திருப்பித் தாக்கி நிலத்தைக் கைப்பற்ற முயல்கிறபோது அந்த இடத்தில் ரத்த ஆறு ஓடும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க மறந்துவிடக் கூடாது. சொத்துக்கு உரியவர்கள் தங்களுடைய சொத்து பறிக்கப்படுகிற நிலைமையில் யாராவது அங்கு ஆக்கிரமிப்பார்களானால் அதைத் தடுத்து நிறுத்த பலாத்காரத்தை உபயோகிக்கக்கூட சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதை வழக்கறிஞர் பெருமக்கள் நன்கு உணர்வார்கள். சட்டப்படியான அந்த உரிமையைப் பயன்படுத்தினால் என்ன நடைபெறும்? ஒவ்வொரு கழனியிலும், வயல் வெளியிலும் என்ன நடைபெற்றிருக்கக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஆகவேதான் பொதுவுடைமைக் கட்சியின் முடிவு அரசுக்குத் தெரிந்ததும் இதுகுறித்து இக் கட்சியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணிக்குமாறும், வாராந்தர அறிக்கைகளை அனுப்புமாறும், நடக்கக்கூடுமென ஊகிக்கும் நேர்வுகளை முன்கூட்டியே தெரிவிக்குமாறும், சட்டம், ஒழுங்கு நிலையைக் கண்காணிக்குமாறும் சட்டமும் ஒழுங்கும் சிறப்பாக நிலைநிறுத்தப்படுவதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இக்கிளர்ச்சி நடந்தால் அமைதிக்குலைவு ஏற்படாது காக்குமாறும் தக்க கட்டளைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. காவல்துறை சூப்ரண்டுகளுக்குத் தக்க கட்டளைகளை அனுப்புமாறு சென்னை, காவல்துறை இன்ஸ்பெக்டர் - ஜெனரல் கேட்டுக்கொள்ளப்பட்டார். அச்சுறுத்திய வண்ணம் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்களின் நிலப்பறிக் கிளர்ச்சி நடைபெறுமென்று அடுத்து அரசுக்குத் தெரிய வந்தது.

நிலப்பறிக் கிளர்ச்சியில் கலந்துகொள்ள முயற்சிகள் எடுத்த நபர்கள் இ. பி. கோ. சட்டத்தின் பல பிரிவுகளின் கீழ் பல குற்றங்கள் செய்யக் கூட்டு முயற்சிகள் எடுத்ததை அடிப்படையாக வைத்து மாநில முழுதும் மேற்படி குற்றங்களுக்காகவும், தடையுத்தரவை மீறியதற்காகவும் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

ஆயினும் கைது செய்யப்பட்ட நாளும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் நாளும் ஒருசேர வந்தமையால் தேர்தலில் கலந்துகொள்ள விரும்புவோர் இந்திய பொதுவுடைமைக் கட்சியினர் மேற்கொள்ளும் நிலப்பறிக் கிளர்ச்சியில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற உறுதிமொழி எழுதிக் கொடுத்தால் அவர்கள் விடுவிக்கப்படலாமென அரசு ஆணையிட்டது. அதற்கிணங்க ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலில் வேட்பாளர்களாக இருக்கக் கூடியவர்களும் ஓட்டளிக்க வேண்டிய நிலைமையில் உள்ளவர்களும் அரசாங்கத்தின் ஆணையை ஏற்றுக் கொண்டு எழுதிக்கொடுத்தார்கள். அவர்கள் அத்தனைபேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள் ஆகவே கைது செய்யப்பட்ட காரணத்தினால் வேட்பாளராக நிற்கக்கூடிய தகுதியையோ



1970 ஆகஸ்ட் 25] [திரு. மு. கருணாநிதி]

உரிமையையோ ஜனநாயகத்திற்குப் புறம்பாக இழக்கின்ற நிலைமையோ ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். மேலும் அவர்கள் போட்டியிட்ட இடங்களில் வெற்றி வாய்ப்பு உள்ள இடங்களில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே கைது செய்யப்பட்டு அவர்கள் சிறையில் வைக்கப்பட்ட காரணத்தினால் ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் கலந்துகொள்வது தடைப்படுத்தப்படவில்லை என்பதை நான் தந்திருக்கிற இந்த விளக்கங்களின் மூலமாக நீங்கள் அறிவீர்கள்.

மேலும், கைது செய்யப்பட்டிருப்பவர்களுக்கு சிறைச் சாலைகளில் எவ்வளவு வசதிகள் அளிக்க முடியுமோ அந்த அளவுக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. திருச்சி மாவட்டத்தில் இருக்கிற சிறையில் இடம் போதவில்லை என்ற காரணத்தினால் தனியகா லட்சத்து முப்பத்தேழாயிரம் ரூபாய் அளவுக்குக் கொட்டகைகள் போடப்பட்டுத் தனித்தனிக் கூட்டமாக அந்தக் கொட்டகைகளில் இருக்கிற அளவு வைக்கப் பட்டிருக்கிறார்கள். தண்ணீர் வசதி, மற்ற வசதிகள் இல்லை என்று கூறப்பட்டவுடனேயே சிறைச்சாலை சம்பந்தப்பட்ட தொழில் அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்த்து அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்தார்கள். திருச்சியில் இட நெருக்கடியாக இருப்பதனால் அங்கிருந்து மற்ற சிறைச் சாலைகளுக்கும் பரவலாக மாற்றப்பட்டு வருகிறார்கள்.

சில பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு 3 மாதம், 6 வாரம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 500 பேர்கள் கிளர்ச்சியில் ஈடுபடவில்லை என்று எழுதிக்கொடுத்துவிட்டு விடுதலை பெற்று இருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவர், சென்னை உயர்நீதி மன்றத்தில் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனுவைத் தாக்கல் செய்துள்ளார். தமிழ்நாட்டில் பொதுவுடைமைக் கட்சியின் முதன்மைத் தலைவர்களைக் கைது செய்ததை எதிர்த்து இவர் இம் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இம்மனு, உயர்நீதி மன்றத்தில் முடிவுறு நிலையில் உள்ளது. அவர்களை எல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று டெல்லி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் கேட்ட நேரத்தில், போராட்டத்தைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. கைவிட்டதாக அறிவிப்பு வருமேயானால் அவர்களை விடுதலை செய்வது பற்றிக்கூட இந்த அரசு பரிசிலனை செய்யும் என்று கூறி இருக்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களைக் கைது செய்து நீண்ட நாள் சிறையிலே வைத்திருக்கவேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை. இந்த அரசு நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்குவதற்குச் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து லட்சக்கணக்கான பட்டாக்கள் வழங்கி வருகிறது. காட்டு நிலங்களைக் கூட ஆக்கிரமிப்போம் என்று சொன்னார்கள். உண்மையான காடாக இருந்தால் அவற்றை விட்டுவிட்டு, காடு என்கிற பேரால் உள்ள மேடு பள்ளங்களாக

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 25

இருக்கிற நிலங்களையும் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், சேலம், திருச்சி மாவட்டங்களிலும், வேறு பல மாவட்டங்களிலும் நிலம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, நிலம் இல்லாதவர்களுக்குச் சாகுபடிக்கு நிலம் கொடுப்பதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் அரசு செய்து கொண்டு வருகிறது.

இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சி தேவையில்லை என்று அரசு கருதுகின்றது. அந்தக் கிளர்ச்சியும், அறநிலையில், அமைதியான நிலையில் உருவாகாமல் அந்தக் கிளர்ச்சியின் காரணமாகத் தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு வயல் வெளியும் போர்க்களங்களாக மாறிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால், பாதயாத்திரை என்று இரண்டிரண்டு பேர்களாகக் கிளம்பி ஆயிரம் இரண்டாயிரம் என்று நிலத்தில் பிரவேசிக்கின்ற நிலையில் புரட்சிகள் ஏற்படும் என்ற காரணத்தினால் 9-ம் தேதியே முன் கூட்டியே அவர்களை காவல் துறையினர் கைது செய்து இருக்கின்றார்கள். அந்த விஷயத்தில் அரசாங்கம் மிகவும் முன் எச்சரிக்கையாகவே நடந்திருக்கிறது. தமிழ்நாட்டில் நிலப்பறிக் கிளர்ச்சியால் எந்தவிதமான வன்முறையும் நடைபெறவில்லை. திரு. சித்தன் அவர்கள், இந்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டது என்று தன்னுடைய தீர்மானத்தில் கூறியிருப்பது முறை ஆகாது என்பதை எடுத்துக் கூறி இந்த ஒத்திவைப்பு தீர்மானம் அவசியம் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. ஏ. பாலசுப்பிரமணியன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இப்போது பேச முற்படுவது முறையல்ல.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** ஒரு சிறு அறிக்கை அளிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு விதிகள் இடம் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஏதோ அவர்கள் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். பேசட்டுமே.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** தலைவரவர்களே.

**THIRU K. VINAYAKAM:** Sir, this is going out of the way.

**DR. H. V. HANDE:** On a point of Order, Sir. Under what rule is the Hon. Member allowed to speak?

**THIRU K. VINAYAKAM:** Rules do not permit any Member to make a statement now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அறிக்கை கொடுக்க வேண்டுமென்றால் விதிமுறைகளின் கீழ்தான் கொடுக்கலாம், முன் கூட்டியே பேரவைத் தலைவரிடம் அறிக்கையைக் கொடுத்து



1970 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

அவருடைய அனுமதியைப் பெற்றே அவையில் கொடுக்கவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்களில் நீங்கள் ஒருவர் அல்ல. இந்த நிலையில் அனுமதி கொடுப்பதற்கில்லை. முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின்பு இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** அரசாங்கத்தினுடைய சார்பில் முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முறையல்ல. நான் அனுமதிப்பதற்கில்லை.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஆட்சேபித்துக் கூற எனக்கு அனுமதி மறுக்கப்படுகிற காரணத்தினால் நாங்கள் சபையை விட்டு வெளியேறுகிறோம்.

[கம்யூனிஸ்ட், கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்), பி.எஸ்.பி.; எஸ்.எஸ்.பி.; ஆகிய கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.]

(ஆ) கன்னியாகுமரியில் திறக்க இருக்கும் விவேகானந்தர் மண்டபத்தில் திரு. பாஸ்கர சேதுபதி அவர்களின் உருவச் சிலையை வைக்க மண்டபக் குழுவின் மறுப்பும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பு நிலையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள், "உலக மத மாநாட்டில் சுவாமி விவேகானந்தா பங்குகொண்டு இந்தியாவின் இந்து மதத்தின் அருமை பெருமைகளை உலக மக்களுக்கு உணர்த்த உறு துணையாகவும் அதன் பொருட்டு அவருக்கு எல்லா வசதிகளையும் அளித்த, இராமநாதபுரம் அரசர், மறைந்த பாஸ்கர சேதுபதி அவர்களுடைய உருவச் சிலையை, கன்னியாகுமரியில் திறக்க இருக்கும் விவேகானந்தா மண்டபத்தில் அமைக்க மண்டபக் குழுவினர் மறுத்துள்ளபடியால், தமிழக மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலையைப் பற்றியும் அதற்கென கிளர்ச்சி செய்யவேண்டுமென மக்கள் முடிவு செய்துள்ளனர்" என்பது பற்றிய ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார். இது பற்றி திரு. மூக்கையாத் தேவர் அவர்கள் சுருக்கமாகத் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளுகிறேன்.

**திரு. பி. கே. மூக்கையாத் தேவர்:** மன்றத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய யோகியும், ஞானியும் ஆகிய சுவாமி விவேகானந்தர் அவர்கள் 1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சர்வ மத மாநாட்டில் கலந்து கொண்டு இந்தியாவின் பெருமையையும் இந்து மதத்தின் பெருமையையும் உலகிற்கு எடுத்துக் காட்டி அதன் மூலம் ஒரு பெரும் சிறப்பை மனித குலத்திற்கு எடுத்துக் காட்டினார்கள் இந்தியாவின் சார்பாக

[திரு. பி. கே. மூக்கையாத் தேவர்] [1970 ஆகஸ்ட் 25

அவ்வளவு பெருமை ஏற்பட அவர்களுக்கு உறுதுணையாக இருந்து எத்தனையோ உதவியையும் கொடுத்து வெளி நாடு அனுப்பிய, இலை மறைத்த காய்போல இருந்த தமிழக விவேகானந்தராக இருந்தவர்கள் பாஸ்கர சேதுபதி இராமநாத புர ராஜா அவர்கள். அவர்களைப் பற்றி சாதாரணமாக நாம் பெருமைப் பாராட்டிக் கொள்வதைக் காட்டிலும் சுவாமி விவேகானந்தர் அவர்களுடைய வாசகத்தாலேயே அறிவது சிறப்பானது. முதன்முறையாக வெற்றி பெற்று சுவாமி அவர்கள் பாம்பனுக்கு வந்திறங்கியபோது அவருக்கு வரவேற்பளித்த இராமநாதபுரம் ராஜா அவர்கள் "தங்களுடைய பாதம் தரையில் படக்கூடாது. என் தலையில் படவேண்டும்மென்று சொல்லிய நேரத்தில் அந்த வரவேற்புக்கு பதில் அளித்துப் பேசும்போது சுவாமி அவர்கள் "எனக்களித்த இந்த வரவேற்புக்கு எனது நன்றியை ஏற்பீராக, இராமநாதபுரம் ராஜா என் மீது கொண்டுள்ள அன்புக்கு எவ்வாறு நன்றி தெரிவிக்கவல்லேன். நான் ஏதேனும் நற்பணி செய்திருந்தால் அதற்குக் காரணம் இவரே. இந்தியா இவருக்கே கடமைப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டில் நடைபெறும் சர்வ சமய மகாநாட்டுக்குச் செல்லும் எண்ணத்தை என்னுள் தூண்டியவர் இவரே. என் அருகே நின்று மிகுந்த உற்சாகத்துடன் நான் இன்னும் அதிகம் செய்யவேண்டும் என்று விரும்புகிறார். இவர்போல் இன்னும் ஐந்தறு ராஜாக்கள் நமது அருமை நாடு முன்னேற வேண்டுமென்று ஆன்மீகத் துறையின் வளர்ச்சிக்காக முன் வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று கூறியுள்ளார்கள்.

அதே போல இராமேஸ்வரத்திலே அளித்த வரவேற்புக்குப் பதில் அளித்துப் பேசுகையில் "நமது மதத்தின் பொருட்டு மேற்கு நாடுகளில் ஆற்றப் பெற்ற சிறு பணியாதேனும் ஒன்றுண்டாகில் நம் நாட்டு மக்களை எழுப்பித் தங்கள் நாட்டிலே புதைந்து கிடக்கும் மாணிக்கத்தின் பெருமையை உணருமாறு தூண்டியிருப்பனாகில், நமது நாட்டிலே பெருக்கெடுத்து ஓடிவரும், அரிய சுனை நீரை அருந்துமாறு வேண்டியிருப்பனாகில், தாகத்தால் தவித்து, அறியாமையில் மூழ்கிப் பிறநாட்டு சாக்கடை நீரினை அருந்தாது தடுத்திருப்பனாகில் இந்திய நாட்டின் முதுகெலும்பு மதம் ஒன்றே என்று அறியுமாறு வலியுறுத்தியிருப்பனாகில், இந்திய மக்கள் மீது எவ்வளவு குபேர செல்வத்தைச் சொரிந்த போதிலும், எவ்வளவு சீர்திருத்தங்கள் செய்த போதிலும், எவ்வளவு அரசியல் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் இந்திய நாட்டின் முதுகெலும்பாகிய மதம் வீழ்ச்சியுறுமேல் இந்தியா அழிவுறும் என்பதை வற்புறுத்தி எடுத்தோதியிருப்பனாகில், அதற்காக இந்தியாவும், பிற நாடுகளும் எவருக்காவது பெரிதும் கடமைப்பட்டுள்ளது என்றால் அது இராமநாதபுரம் ராஜாவாகிய தங்களுக்கே. ஏனெனில் இந்த எண்ணத்தை என் உள்ளத்திலே முதன் முதல் விதைத்தவர். தாங்களே. இத்



1970 ஆகஸ்ட் 25] [திரு. பி. கே. மூக்கையாத் தேவர்]

திருப்பணியில் ஈடுபடுமாறு இடைவிடாது தூண்டியவரும் தாங்களே. வருங்கால நிகழ்ச்சிகளை உள்ளுணர்வால் அறிந்த தாங்கள் என் கைபற்றி எனக்குதவி, ஓய்ந்தலன்றி உற்சாக மூட்டினீர்கள். எனவே, எனது வெற்றி கண்டு பெருமகிழ்சியிற்றோரும் தாங்களே முதல்வராயிருக்கிறீர்கள். இந்தியா திரும்பும் நான் முதன் முதலாகத் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் காலடி வைக்கவேண்டுமென்று விரும்பினீர்கள்" என்று அவர்களுடைய நன்றி பாராட்டுதலை அவர்களே தெரிவித்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பெருமையை, தமிழகத்தினுடைய வரலாற்றினைப் பாதுகாக்கக்கூடிய நேரமாக இது அமைந்திருக்கிறது. இது பொது மக்களின் பிரச்சினையாக இருந்தாலும் இந்தியாவினுடைய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதிக்கக்கூடியதாக அமைந்து இருக்கிறது. அவர்கள், காசி இராமேஸ்வரம் என்ற இரண்டு இடங்களைச் சொன்னாலே இந்தியாதான் என்று புரிந்துகொள்ளக் கூடிய நிலைமையை ஒரு வரலாற்றைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள். எனவே, அந்தப் பெருமையைப் பாதுகாத்துக் கொள்ளத் தமிழ்நாடு அரசும், குறிப்பாகத் தமிழைப் பாதுகாத்து வரும் இந்த அரசு, குறிப்பாக முதல்வர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட்டு ஒரு வழிகாட்ட வேண்டும்.

காரணம், இந்த விவகாரம் வருகிற இரண்டாம் தேதி அன்று நிறைவேற இருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்களே தலைமை தாங்கி நடத்த இருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, ஜனாதிபதி அவர்களும் இந்தத் திறப்பு விழாவிலே கலந்துகொள்ளவிருக்கிறார்கள். எந்த இடத்திலே கோயில் எழுப்பினாலும் நாம் அதனை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே கோயிலைத் தமிழகத்திலே வைக்கிற போது அத்தனைக்கும் காரணமாக இருந்த ஒரு பெரியவரை மறப்பது சரித்திரத்தின் சான்றை நம்முடைய பண்பாட்டை மறப்பது ஆகும். எனவே இதிலே உடனடியாகத் தலையிட்டுக் கவனிக்கவேண்டும். மக்கள் மிகக் கோபமடைந்திருக்கின்ற நிலைமையும், படித்த பெருமக்கள், பழம்பெரு மக்கள் வருத்தத்தோடு எதிர்ப்பையும் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

ஆகவே தாங்களும் ஜனாதிபதி அவர்களும் வருகிறபோது இப்படிப்பட்ட ஒரு * ஏற்படக்கூடாது. எனவே இது ஒரு அவசரமான பிரச்சினையாக இருக்கிறது. தாங்கள் சொல்லலாம், காலதாமதமாகிவிட்டது என்று. உண்மைதான். தமிழ்வேள் திரு பி. டி. ராஜன் அவர்கள் எவ்வளவோ போராடி கடைசி நிமிடம் வரையிலும் இதனை நிலை நாட்டி விடலாம் என்று கருதினார்கள். ஆனால் அவர்கள் இதனை வடநாட்டுப் பிரச்சினையாக சொந்தப் பிரச்சினை

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.

யாக நினைத்து ஐக்கியத்தைப் பாதிக்கின்ற வகையிலே தமிழகத்தை பிரிக்கிற வகையிலே நடந்து வருகிறார்கள். இரண்டாம் தேதி அந்த விழா ஆரம்பித்து அடுத்த மாதம் பூராவும் நடக்கிறது. எனவே, இடையிலே எப்பொழுது வேண்டுமானாலும் சேதுபதி அவர்களுடைய சிலையை வைப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ள லாம். அரசே செய்யலாம், அல்லது அந்தக் கமிட்டியினரே செய்யலாம், மக்களும் அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கி றார்கள். சரித்திரத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நம்முடைய முதல்வர் அவர்களைச் சார்ந்திருக்கிறது. எனவே, இதை வலியுறுத்திக்கூற வேண்டிய நிலை இருக்கிறது. இது உடனடியாக கவனிக்கவேண்டிய பிரச்சனை. கிளர்ச்சி நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாத நிலைமையை உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. மூக்கையாத் தேவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியுள்ள கருத் துக்கள் இரண்டாம் தேதியன்று குமரி முனையில் திறக்கப்பட விருக்கிற விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் சேதுபதி அவர் களுடைய சிலையையும் எழுப்பப்படவேண்டுமென்ற அடிப்படையில் அமைந்ததாகும். இப்படியொரு விவகாரம் இருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது மூன்று நான்கு நாட்களுக்கு முன்னதாகத் தான். முன்னரேயே இது பற்றிய பிரச்சினை எனக்குத் தெரிவிக்கப் பட்டிருக்குமானால் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு விவேகா னந்தர் நினைவு மண்டபக் குழுவினிடத்திலே கூறுவதற்கு வாய்ப் பினை பெற்றிருக்கமுடியும். அந்த வாய்ப்பினை எனக்குத் திரு. மூக்கையாத் தேவர் அவர்களோ அல்லது அந்தக் குழுவிலிருந்து விலகி விட்ட திரு. பி. டி. ராஜன் அவர்களோ அளிக்கவில்லை; திரு. பி. டி. ராஜன் அவர்கள் அந்தக் குழுவிலிருந்து விலகிவிட்டா ரென்ற செய்தியைப் பத்திரிக்கைகளின் வாயிலாகத்தான் அறிய முடிந்தது. என்ன காரணத்திற்காக விலகினார் என்பதெல்லாம் பற்றிய தகவல் முன்னமேயே அரசுக்கோ எனக்கோ கிடைக்க வில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சேதுபதி அவர்களுடைய சிலையை அந்த நினைவு மண்டபத்தில் அமைக்கவேண்டும் என்பதில் எனக்கு எந்த விதமான மாறுபாடும் இல்லையென்பதை இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த தேவர் அவர்களே உணர்வார்கள் என்று நம்புகிறேன். ஆனால் இரண்டாம் தேதிக்குள் சிலையை வைப்பதென்பது இயலாத காரியம் என்பதை அவர்களும் நிச்சயமாக உணர்வார்கள். மண்டபம் திறக்கப்பட்ட தற்குப் பிறகு அந்தக் குழுவோடு கலந்தாலோசித்து எந்த இடத் திலே அந்தச் சிலையைத் திறக்கலாம் என்பதை ஆராய்ந்து நானும் திறப்பு விழாவிற்குச் செல்கிற நேரத்திலே நேரிலே பார்த்து வந்த





பிறகு அந்தச் சிலையை அங்கே வைப்பதற்கு முயற்சிகளை முனைந்து மேற்கொள்ளவேன் என்பதை திரு. மூக்கையாத் தேவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர், முதலமைச்சர் ஆகியவர்கள் அங்கு போகிற நேரத்திலே கிளர்ச்சி நடைபெறுவது அப்படிப்பட்ட ஒரு * நடைபெறுவது நல்லதல்ல என்று அவர்கள் சொன்னார்கள். அவர்க ளுடைய பேச்சிலேயே * என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் நடைபெறுகின்றபொழுது இப்படிபட்ட நிலைமை கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்தச் சபையில் நான், தலைவர் அவர்களே, தாங்கள் மூலமாகக் கேட்டுக்கொள் கிறேன். இப்படிப்பட்ட சரித்திரச் சான்றுகள் படைக்கப்படு கின்ற நேரத்திலே அந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்வார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் பயன்படுத் திய அந்த * என்ற வார்த்தையையும், நான் பயன்படுத்திய அந்த வார்த்தையையும் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கேட்டு கொள்கிறேன். தமிழ் நாட்டுச் சரித்திரம் நல்ல முறையிலே விளங்க கூடாது என்று கருதுபவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த வார்த்தைகளை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு தேவர் அவர்களும் செல்வாக்கு உள்ளவர்கள் என்ற காரணத் தினாலே கிளர்ச்சி தேவையில்லை என்ற நிலைமையை மேற்கொள்ளு மாறு கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தின்படி அவையை ஒற்றி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்திலே திரு. மூக்கையா தேவர் அவர்கள் கூறிய * என்ற வார்த்தையையும் முதலமைச்சர் அவர்கள் கூறிய * என்ற வார்த்தையையும் நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து நீக்கி விட ஆணையிடுகிறேன். பத்திரிக்கையாளர்களும் அதைப்போடவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றுமுள்ள ஒற்றி வைப்புத் தீர்மானங்களையெல்லாம் பின்னால் எடுத்துக்கொள்ளலாம்.

## 3. அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இப்பொழுது அவைக்கோர் அறிவிப்பு. 1970 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 24-ஆம் நாள் அன்று நடந்த அலுவல் ஆயுக் குழுவில் முடிவு செய்யப்பட்ட சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சிநிரல் பின்வரு மாறு:—

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையின்படி நீக்கப்பட்டது.

| தேதி. (1) | கிழமை. (2) | நிரல். (3) |
| --- | --- | --- |
| 25—8—1970 | செவ்வாய் | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 26—8—1970 | புதன் | |
| 27—8—1970 | வியாழன் | |
| 28—8—1970 | வெள்ளி | (அ) 1966-67-ம் ஆண்டில் கூடுதலாக ஏற்பட்ட செலவுக்கான மானியக் கோரிக்கைகளை அளித்தல்.<br>(2) 1970-71-ம் ஆண்டுக்கான முதல் துணை நிதி அறிக்கையை அளித்தல்.<br>(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 29—8—1970 | சனி | தனியார் அலுவல். |
| 30—8—1970 | ஞாயிறு | விடுமுறை. |
| 31—8—1970 | திங்கள் | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும் 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம் (கடைசி நாள்). |
| 1—9—1970 | செவ்வாய் | (அ) (1) 1966-67-ம் ஆண்டில் கூடுதலாக ஏற்பட்ட செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>(2) 1970-71-ம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>(ஆ) நிதி ஒதுக்க மசோதாக்களை அறிமுகப் படுத்துதல். |
| 2—9—1970 | புதன் | (1) நிதி ஒதுக்க மசோதாக்களை ஆய்வுக் கெடுத்தலும் நிறைவேற்றலும்.<br>(2) இதர அரசினர் மசோதாக்கள். |
| 3—9—1970 | வியாழன் | தனியார் அலுவல். |
| 4—9—1970 | வெள்ளி | விடுமுறை (விநாயகர் சதுர்த்தி). |
| 5—9—1970 | சனி | அரசினர் மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்தல். |
| 6—9—1970 | ஞாயிறு | விடுமுறை. |
| 7—9—1970 | திங்கள் | தேவையிருப்பின்—அரசினர் மசோதாக்களை ஆய்வுக்கெடுத்தல். |

வழக்கம்போல், பேரவை காலை 9-மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை கூடும்.



## 4. தகவல் கோரல்

*அமைச்சரவை பற்றிய பத்திரிகை செய்திகள் குறித்து*

* THIRU K. VINAYAKAM : I rise on a point of information which is of paramount importance to our State. You please listen to me, it affects the very future of our State. The very future of our State is at stake and it affects the Government and the party that is in power now. I understand from newspapers that the Working Committee of the D.M.K. met on Saturday and Sunday and discussed many matters and some Members expressed want of confidence or levelled charges against some Ministers, that the Chief Minister also reciprocated the same idea and had taken resignations of some of the Ministers and also issued a statement that he was going to reconstitute the entire Ministry. May I know whether it is a fact, because the entire State is expecting some statement from the Chief Minister. But he does not say anything in the House nor do we get anything from anyone in their party. They are so tight-lipped. They do not talk to us even. The State is expecting and Tamilians are expecting eagerly to see what is going to happen to this Ministry as to who are going out and who are going to come in. My wording is perfectly in order and I have never said anything out of the way. Let me know whether our Hon. Chief Minister is going to introduce another 'K. Plan. Karunanidhi Plan'. The previous one was 'Kamaraj Plan' of the Congress. Is the Chief Minister going to introduce another 'K. Plan'. How many of our unfortunate Ministers are going out and how many lucky ones are going to come in, Sir? How many lucky persons are coming in?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி வருபவர்களில் ஒருவராக திரு. விநாயகம் இருக்க முடியாது.

THIRU K. VINAYAKAM: Sir, he has not answered my point I wanted some information. Does he want the country to be in darkness and let him at least tell that? So far as this matter is concerned, your papers are referring to it and our papers also are referring to it. Everbody is talking about it. With regard to the jocular remark of the Hon. Chief Minister, does he mean to say that I will join his party? How on earth can I join his party?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: செயற்குழுவில் நடந்த விஷயங்கள் அந்தச் செயற்குழுவிற்கு உரிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஏடுகளில் தெளிவாகச் செய்திகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. கழகம் இருக்கிறதே, கழக ஆட்சி இருக்கிறதே என்று எரிச்சல் கொண்ட ஏடுகள், செய்திப் பத்திரிக்கைகள் வெளியிட்ட அந்தச் செய்திகளுக்கு நாங்கள் பதிலளிக்க வேண்டியதில்லை. இது முழுக்க முழுக்க செயற்குழுவைப் பொறுத்த விஷயம்.

### 5. அவையுரிமைக் கேள்வி.

*திரு. டி. மார்டின் மாண்புமிகு உணவு அமைச்சர் மீது எழுப்பிய உரிமைப் பிரச்சினையை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது குறித்து.*

**திரு பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்பொழுது சட்டசபை கூடுகிறது. இதிலே, பிரிவிலிஜ் மோஷனை எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. மார்டின் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் மீது, உணவு அமைச்சர் மீது. இது முக்கியமான பிரச்சினை. இது உடனடியாக வரவேண்டுமென்ற பிரச்சினை. நாளைக்கு என்று சொல்லுவார்களேயானால், என்ன நிலை எப்படி ஏற்படும் என்று தெரியாது. பிரிவிலிஜ் சம்பந்தப்பட்ட சில பைல்களைப் பார்த்தாக வேண்டும். அந்த பைல்களைச் சட்டசபையில் வைப்பது பொருத்தமானதாக இருக்கும். என் மீது பிரிவிலெஜ் என்றால் உடனடியாக சுறுசுறுப்பாக, சூடாக நடைபெறுகிறது. இது ரொம்பவும் முக்கியமானதொரு பிரச்சினை, சாதாரண பிரச்சினை அல்ல.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** நீங்கள் பல தடவை தவணை கேட்டிருக்கிறீர்கள்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** இதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறோம், இது முக்கியமான பிரச்சினை என்பதால்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றத்தில் வரக் கூடிய எந்த உரிமைப் பிரச்சினையையும், அது எந்த அளவிற்கு உரிமை மீறியதாகும் என்று பேரவைத் தலைவர் முதலில் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்து. அதை இந்த அவைக்குக் கொண்டுவரும் நிலை இருந்தால் இந்த அவைக்கு கொண்டுவரப்படும். எனவே, கொடுத்திருக்கும் தேதி, அமைச்சர் பேசிய தேதி, வந்திருக்கும் தகவல் எல்லாம் இலாக்காவிடம் கேட்டிருக்கிறோம். அதையெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தால் தான் சொல்லுகிறேனே தவிர, இது முக்கியத்துவம் உடையது அல்ல என்பதாக அல்ல. எந்த உறுப்பினர் யார் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தாலும், பாரபட்சம் இல்லாமல் பார்க்க வேண்டியதற்காகத்தான் இருக்கிறோம். எனவே, எந்தவிதமான பாரபட்சமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு பி.ஜி. கருத்திருமன் :** இந்தப் பிரச்னை எங்கள் கவனத்தில் இருக்க வேண்டியிருக்கிறது. முன்பு சம்பந்தப்பட்ட ஒரு அமைச்சர் மத்திய அரசாங்கத்தில் இருந்தார்கள். இந்தத் தேதி என்பவைகள் எல்லாம் மாறாமல் அப்படியே வைப்பார்களா? ஏனென்றால் இந்தத் தேதி என்பதிலே சந்தேகம் இருக்கும்படியான நிலை இருப்பதால் நேற்றே கொடுத்திருக்கிறோம். இது மிகவும் முக்கியமான பிரச்சனை. உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். பிரிவிலெஜ் மோஷனை வாசித்து விட்டு, நாளைக்கு தீர்ப்பு கொடுப்பதைப்பற்றிக் கூட ஆட்சேபணை இல்லை.



V211,31 N70
31N71-8232
61493

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 24-ஆம் தேதிதான் திரு. மார்டின் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். 24-ஆம் தேதியன்றே இலாக்காவிடம் விளக்கங்கள் தேவை என்று கேட்டிருக்கிறோம். அவைகள் வந்தவுடன் அவையிலே எடுத்துக் கொள்ளப்படும். இதில் எந்த விதமான ஐயுறவும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தேவையில்லை. தேதி புரட்டு, மற்றவைகள் நடைபெறும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், பேரவைத் தலைவரின் மீது நம்பிக்கையில்லாமல் பேச மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எந்தவிதமான ஐயுறவிற்கும் இடமில்லை. இந்த அவையிலே கொண்டு வருவது பற்றி பேரவைத் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டும். அதைப் பரிசீலனை செய்வதற்காக நாள் வேண்டுமென்று கேட்கப்படுகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவரவர்கள் மீது நம்பிக்கை இருக்கிறதா என்பது வேறு விஷயம். அது தனியாக வருகிறது. சர்க்காரிலே அமைச்சர் என்ன செய்கிறார்? பேரவைத் தலைவராகிய நீங்கள் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது. தீர்ப்பு கொடுக்க முடியும், அந்தத் தீர்ப்பிற்குக் கட்டுப்பட வேண்டுமென்ற மரபு இருக்கிறது. நீங்கள் பார்த்து தீர்ப்பு பிரச்சினை எழுப்பக்கூடாது என்றிருக்கிறது. ஆனால், இது என்னவென்றால், 24-ஆம் தேதி கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், 24-ஆம் தேதிக்குத்தானே சம்மன் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதற்கு முன்பு கொடுக்கவில்லை என்றால் எப்படிக் கொடுப்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 24-ஆம் தேதி கொடுத்தீர்கள் என்று, குற்றமாகச் சொல்லவில்லை. 24-ஆம் தேதியன்று திரு. மார்டின் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள், 24-ஆம் தேதியன்றே இலாக்காவிற்கு எழுதியிருக்கிறோம். எனவே, 24-ஆம் தேதிதான் கொடுத்தார், முன்கூட்டியே கொடுக்கவில்லை என்று குறை கூறவில்லை. 24-ஆம் தேதி கொடுத்தார்கள், விளக்கங்கள் தேவை என்று இலாக்காவிற்கு எழுதியிருக்கிறோம். விளக்கங்கள் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, இலாக்காவிற்குச் சென்று தகவல்கள் பெற்று பிரிவிலேஜ் இருக்கிறதா, இல்லையா? என்று சொல்வதைவிட, பிரிவிலேஜ் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளை சம்மன் செய்யுங்கள், அதற்குத் தீர்ப்பு கொடுங்கள். நீங்கள் எழுதி, அவர்கள் இரண்டு மூன்று நாட்கள் கேட்டு, இப்படியே போய்க்கொண்டிருந்தால் அதிலுள்ள விறுவிறுப்பு போய்விடும். We want to take you by surprise. அதுதான் எங்கள் வேலை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதைவிட விறுவிறுப்பான ஒரு பெரிய ஊழலைப்பற்றிக் கொண்டு வந்த திரு. கருத்திருமன் அவர்கள் குற்றச்சாட்டு எடுத்துச் சொன்ன நோக்தில் 4 மாத கால

அவகாசம் கேட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு முறையும் தவணைகேட்டுக் கேட்டு, கடைசியில் கொடுத்த அறிக்கையும் குற்றச் சாட்டு அல்ல என்ற முறையில் இருந்ததும் நமக்குத் தெரியும். இரண்டு மூன்று நாள் தவணையினால் எந்தக் காரியமும் மிஞ்சி விடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது எப்படிப்பட்ட ஊழல் என்று காட்டுகிறேன். நாங்கள் இதை விட மாட்டோம். ஆதாரம் இருக்கிறது. இது முடிந்தது அல்ல. உலகத்திலேயே அதை விட ஊழல் இல்லை என்று நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது முடிந்து, அப்பொழுதே கொடுத்த அறிக்கை நடவடிக்கைக் குறிப்பிலே பதிவாகி இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதே அறிக்கையிலே டாகுமெண்ட்டரி எவிடென்ஸ் கேட்டார்கள். நாங்கள் அதில் பின் வாங்கவில்லை. நாங்கள் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறோம். எதற்கும் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை கொடுக்கும் நேரத்தில், அந்த உரிமைப்பிரச்சினையை இந்த அவையிலே படித்து விட வேண்டுமென்பது முறையல்ல. அவையிலே அதைக் கொண்டு வந்து விவாதிக்கத் தக்க அளவிற்கு இருக்கிறதா, இல்லையா என்று பேரவைத் தலைவர் முடிவு செய்யவேண்டும். அப்படி முடிவு செய்த பிறகு, அனுமதி கொடுத்த பிறகு, உறுப்பினர் அவையிலே உரிமைப் பிரச்சினையை எழுப்ப வேண்டும். கன்செண்ட் கொடுப்பதா இல்லையா என்பதுபற்றி முடிவு செய்யப் பேரவைத் தலைவருக்கு அவகாசம் தேவைப்படுகிறது. அதைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறேனே தவிர, இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. வ. ஜார்ஜ் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், பிரிவிலேஜ் மோஷன்களுக்கு கன்செண்ட் கொடுப்பது ஸ்பீக்கரின் கடமையென்றால், பிரிவிலெஜ் மோஷன் கொடுத்த அன்றுதானே ஸ்பீக்கர் அலுவலகத்திலே வைத்து, மோஷன் கொடுக்கப்பட்ட உறுப்பினரிடமே விளக்கம் பெற்றுச் செய்யவேண்டும். இல்லாமல், இலாக்காவிடம் விளக்கம் பெற்ற பிறகு கொடுக்க வேண்டும் என்பது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதி என்று சொல்லுங்கள். நீங்கள் சொல்வது எங்கே இருக்கிறது?

திரு. வ. ஜார்ஜ்: 184 முதல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் படியுங்கள். அதில்



'A member wishing to raise a matter of privilege shall, before the commencement of the sitting of the day on which he proposes to raise the point'. என்று இருக்கிறது.

THIRU V. GEORGE : I have referred to the expression ' of the sitting of the day ' and that is very important. Here the hon. Member, Thiru Martin has given notice. . .'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படியுங்கள், படித்து விட்டுச் சொல்லுங்கள்.

THIRU V. GEORGE : It is stated in the rule ' the day on which he proposes to raise the point. . .'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கொடுத்தார். அன்றைக்கே அனுமதி தர வேண்டுமென்று எங்கே இருக்கிறது ?

திரு. வ. ஜார்ஜ் : அதைத்தான் சொல்லுகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விரும்பலாம். ஆனால் பேரவைத் தலைவர் அன்றைக்கே கன்செண்ட் கொடுக்க வேண்டுமென்று விதியிருக்கிறதா ?

THIRU V. GEORGE : It is stated in the rule 'before the commencement of the sitting of the day on which he proposes to raise the point.' . . .

MR. SPEAKER : 'A member may, with the consent of the Speaker raise a question involving a breach of privilege. . . அந்த "கன்செண்ட் ஆன் தி சேம் டே" கொடுக்கவேண்டுமென்று எங்கே இருக்கிறது ?

THIRU V. GEORGE : Consent must be given on the same day. The rule has to be interpreted like that. The privilege matter is an important matter.

MR. SPEAKER : There is no point of order.

THIRU K. RAMAMOORTHI : On a point of order, Sir. As regards the notice of privilege, it should be taken up on the very same day. Consent can be given on any other day. What the hon. Member wishes to raise is a matter of privilege. . .'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்செண்ட் கொடுக்காமல் உறுப்பினர் எப்படி எழுப்ப முடியும் ?

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதற்காகத்தான் கன்செண்ட் கேட்கிறோம். உடனடியாக எடுத்துக் கொள்ளுங்கள், நிரூபிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று சொல்லுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்செண்ட் கொடுங்கள் என்று கேட்பது வேறு. பேரவைத் தலைவர் அதுபற்றிய தகவல்களைப் பெற அவகாசம் தேவை. அந்தத் தகவல்கள் அலுவலகத்தில் இருந்து வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும் உரிய காலத்தைத் தவிர அதிகமாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த உரிய காலம் எது என்று தான் கேட்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்த விவாதத்தை வைத்துக் கொண்டு வெளியிலே பயங்கரமான பிரிவிலேஜ் வந்திருப்பதாகக் கருதக் கூடும். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து நாளைய தினமே அந்த உரிமைப் பிரச்சினையை இந்தச் சபையில் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு உரிய அமைச்சர் அவர்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள், தயாராக இருக்கிறார்கள். இது ஏதோ பயங்கரமாக அரசுக்கு எதிரான பிரிவிலெஜ் என்று வெளியிலே தீ எனப் பரவக் கூடும். ஆகவே, நாளைய தினமே இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளையதினம் நான் வெளியூர் போக இருப்பதால் நாளைமறுநாள் இதை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்காகத்தான் சொல்லுகிறோம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இல்லை என்றாலும் பேரவைத் துணைத் தலைவர் இதை நாளையதினம் எடுத்துக் கொள்ளுவார்கள்.

THIRU K. RAMAMOORTHI : There is 'notice' and 'consent'-Notice can be given on the same day and that should be taken on the same day.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுவல்ல. 'ஆஃப்டர் தி கன்சென்ட் ஆப் தி ஸ்பீக்கர்' என்றுதான் இருக்கிறது.

THIRU K. RAMAMOORTHI : Under Rule 184, a Member gives 'notice' of privilege matter. Then it should be made known to the House on the same day. Then only the Hon. Speaker decides about consent.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். எடுத்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உரிமைப் பிரச்சினை வந்திருப்பது அவைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கன்சென்ட் கொடுப்பது பேரவைத் தலைவர் நிலையைப் பொறுத்தது. கன்செண்ட் கொடுப்பதற்கு முன்பாக பரிசீலிக்க அவகாசம் தேவை. அதற்குரிய தகவல்களை அனுப்பும்படி அலுவலகத்திற்கு எழுதியிருக்கிறோம். வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.



**திரு. வ. ஜார்ஜ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுக்கப்பட்டால் ஒப்புக்கொண்ட பிறகு அதைப் பற்றி விசாரணை செய்ய தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஒப்புக்கொள்ளுவதற்கு முன்பாகவே இலாகாவில் விசாரணை செய்ய உரிமை இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் எழுதிக் கொப்பதை எல்லாம் பேரவையிலே கொண்டுவந்து தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அறையிலே தள்ள வேண்டியவற்றை அறையிலே தள்ளி விடலாம். உரிமைப் பிரச்சினை கொடுப்பது அவ்வளவையும் அவையிலே கொண்டுவந்து தான் தீரவேண்டுமென்பது முறையல்ல. அதே போன்று கொடுத்த அன்றே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற விதி முறைகளும் இல்லை. பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்த பிறகு தான் எழுப்பலாம். பேரவைத் தலைவருக்கு அவகாசம் தேவை.

**திரு. டி. மார்ட்டின் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த விதி மீறப்பட்டிருக்கிறது?

THIRU T. MARTIN : Rule 184. Please allow me to explain. Yesterday I have given notice of privilege against Hon'ble Food Minister. I want to know from the Hon. Speaker whether a number of privilege motions had been received by the Hon. Speaker and whether the Chair had in any one of the cases conducted any inquiry, being ex-parte, before admitting the privilege motion?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இந்த மன்றத்தில் நடக்கக் கூடாதது நடந்து விட்டால் அதைச் சுட்டிக் காட்டுவதற்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். விதிமுறைகளை மீறினால் பாயின்ட் ஆப் ஆர்டர் மூலம் சுட்டிக் காட்டலாம். கொடுத்திருப்பதற்கு நியாயமான முறையில் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்களா 'எக்ஸ் பார்ட்டி' ஆக விசாரித்திருக்கிறார்களா என்று கூறுவது முறையல்ல. பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்றால் அதற்கு வேறு வழிமுறைகள் இருக்கின்றன.

THIRU T. MARTIN : Why do you presume **'நம்பிக்கை இல்லை' என்று.**

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப் பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க இக்கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக ஆகியோரை நான்

1. திரு. நா. வீராசாமி.
2. திரு. கே. ஆர். கோவிந்தன்.
3. திரு. எஸ். இராமலிங்கம்.
4. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்.
5. திரு. எஸ். முத்துலிங்கம்.
6. திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி.

நியமித்துள்ளேன்.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு—கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இம் மசோதாவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.



(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** இம் மசோதாவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதும், 1969-79-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் ஆன பேச்சு குறிப்பு* அச்சடித்து கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை நான் பேசியதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்திய நாட்டிலேயே தமிழ நாட்டைப் பொறுத்த அளவில் மின்சாரத் துறை மிக உன்னதமான முறையில் பணியாற்றி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், தொழிற் துறையினருக்கும் அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்தப் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழ் நாடு மின்சார வாரியத் துறைக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தலைவரும், பணியாற்றி வருகின்ற வாரிய அலுவலாளரும் தமிழ் நாட்டு மக்களுக்கு ஆற்றி வருகின்ற பணிகளுக்காக நான் இந்த மன்றத்தின் மூலம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை அனல் மின்சாரத்தை அதிகமாக நம்ப வேண்டிய சூழ்நிலையும், நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரை குறைவான அளவுக்குத்தான் கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் இருப்பது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

அனல் மின்சாரத்தை அதிகமாகப் பெருக்கினால்தான் நம் தொழில் தேவைகளுக்கும் வேறு பல தேவைகளுக்கும் தொடர்ந்து மின்சக்தி கிடைக்ககூடிய ஒரு சூழ்நிலை நம்நாட்டின் நிலையாக

* 149–156-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அமைந்திருக்கிறது. பக்கத்து மாநிலங்களான கேரளா, மைசூர் மாநிலங்களிலிருந்து நீர் மின்சாரத்தை, 'ஹைடல் பவரை' மின் சக்தியை ஏராளமாகப் பெற்று நம் மாநிலத் தேவைகளுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பை பெற்றிருக்கிறோம். அவ்விரு மாநிலங்களும் நம் மாநிலத்திற்குத் தேவையான மின்சக்தியை அளித்து உதவியிருப்பதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்ற சிறந்த திட்டத்தை நாம் சிறப்பாக நிறைவேற்றி வருகிறோம். அதேபோல் விவசாயிகளுக்கும், கிராமங்களில் அவர்களுடைய நீர்பாசன வசதிகளுக்காக மின்சக்தி வேண்டுமென்று கேட்கிற காலத்தில் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதில் நம் மின்சார வாரியம் சிறந்த முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் தமிழ் நாடு முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும், உள் கிராமங்கள் உட்பட, ஹாம்லெட்ஸ் உட்பட எல்லாக் கிராமங்களுக்கும் மின் விளக்குகள் கொடுக்க வேண்டுமென்ற சிறந்த திட்டத்தை கொண்டு வந்தார்கள். பல கோடி ரூபாய் செலவில் அத்திட்டத்தை நம் மின்சார வாரியம் சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் மாநிலத்தில் உள்ள மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த அளவிற்குக் கருத்து வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. தொழில்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் அவர்கள் ஒரு வாதத்தை வைக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் தொழில்கள் செய்யச் சென்றால் எங்களுக்கு குறைந்த கட்டணத்தில் கிடைக்கிறது, ஆகவே இந்த மாநிலத்தில் தொழில் செய்ய வருவதற்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று தொழில்கள் செய்ய முன்வருகிறவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். ஆனால் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு அதிகமாக ஆவதால் அவர்கள் வேண்டுகோள் முழுமையையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை இல்லாத ஒரு நிலை நம் மாநிலத்தில் நிலவி வருகிறது. இருந்தாலும் ஏராளமான தொழில்கள் நம் மாநிலத்தில் தொடங்கப்பட்டால்தான் நம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும், தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்ற அடிப்படையில் நாம் கூடிய அளவிற்குக் குறைந்த கட்டணத்தில் மின்சக்தியை தொழில் துறைக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

அதேபோல் விவசாயத்தை நம்பி அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் கிணற்று நீர்பாசன வசதிகளைப் பெருக்கி கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள். அவர்களுக்கும் மின்சக்தியைக் குறைந்த கட்டணத்தில் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறார்கள்.



அதுவும் நியாயமான கோரிக்கை என்பதில் இந்த அரசுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. கூடுமான அளவிற்கு அரசுக்கு அல்லது மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிற நஷ்டத்தை ஏற்றுக் கொண்டு விவசாயிகளுக்கும் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுப்பதற்கு சிறந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காகவும் நாம் நம் மின்சார வாரியத்தைப் பாராட்ட வேண்டும்.

தொழில்களுக்கு அல்லது விவசாயத்திற்குக் குறைந்த கட்டணத்தில் தரப்படுகிற மின்சாரத்தினால் ஏற்படக்கூடிய இழப்பை மொத்த இழப்பில் ஒரு பங்காகக் கருதி வாரியத்தின் மொத்த இழப்பு ஏதாவது இருக்குமானால் அந்த நஷ்டத்தை நம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் மின்சார வாரியம் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. விவசாயத்திற்கு 9 காசுகள் ஆனால் அதே சமயத்தில் சில தொழிற்சாலைகளுக்கு குறைந்த அளவு கட்டணம் இருப்பதை சுட்டிக்காண்பித்துக் கருத்து வேறுபாடுகள் நிறைந்த பிரசாரங்கள் நம் மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன.

நான் தெளிவாக சில கருத்துகளை இந்த மன்றம் நல்ல பல ஆலோசனைகளைத் தர வேண்டுமென்ற அடிப்படையில், எடுத்துக் கூறவிரும்புகிறேன். நாம் மின்சக்தி தொழிலுக்குக் கொடுத்தாலும் சரி அல்லது விவசாயத்திற்குக் கொடுத்தாலும்சரி கொடுக்கிற நமக்கு அதற்காகும் செலவைக் கணக்கிட்டுப் பார்த்து அதற்கேற்ற வாறு கட்டணத்தை வசூல் செய்கிறோம். ஒரு தொழிற்சாலைக்குக் கொடுக்கக்கூடிய மின்சக்திக்கு ஆகும் செலவைக் கணக்கிட்டுப் பார்த்தால் 110 கிலோ வாட்ஸ் மின்சக்தி கொடுக்கக் கூடிய ஒரு தொழிற்சாலைக்கு நமக்கு ஆகிற செலவு 5.8 காசுகள். அதற்கு இன்னும் கொஞ்சம் அதிகமான கிலோ வாட்ஸ் பவர் உள்ள மின்சக்தி கொடுக்கவேண்டுமென்றால் அதற்கு ஆகும் செலவு 6.56 காசுகள். ஆக தொழிற்சாலையைப் பொறுத்து நமக்கு ஆகும் செலவு 5.8 காசுகள். எந்த அளவிற்கு எந்தத் தொழிலுக்கு என்னென்ன வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்கலாம் என்று கணக்கிட்டு அத்தொழிலுக்கு ஆகும் மின்சக்தியின் விலையை நிர்ணயிக்கிறோம். அது எச்.டி. எல்.டி. சப்ளை சொல்கிற விவசாயிகளுக்குத் தருகிற மின்சக்தி கொடுக்கிற இடத்தில், அதாவது பாயின்ட் ஆப் சப்ளையில் நமக்கு ஆகும் செலவு 16.14 காசாகும். விவசாயிகளுக்கு மின்சக்தி கொடுக்கும்போது தவிர்க்கமுடியாத பலவிதமான செலவினங்கள் இருப்பதால் விவசாயிகளுக்கு மின்சக்தி கொடுக்கிற இடத்தில் ஆகும் செலவு 16.44 காசுகள். அந்தச் செலவை நாம் ஏற்றுக்கொண்டாலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மின்சக்தியின் கட்டணம் புதிதாக நாம் நிர்ணயித்திருப்பது 9 காசுகள்தான். அங்கும் நாம் நஷ்டத்தை ஏற்றுக் கொண்டுதான் விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம்.

ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுப்பதிலும், தொழில்களுக்குக் கொடுப்பதிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நாம் புரிந்து கொண்டால் இந்தச் சிக்கல் பெரும் அளவிற்கு ஏற்படாது. தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவிற்கு மற்ற மாநிலங்களோடு போட்டி போட்டுக் கொண்டு பிற நாட்டுத் தொழில் அதிபர்களும் நம் மாநிலத்திற்கு வரக்கூடிய அளவிற்கு நாம் முயற்சிகள் செய்யவேண்டும். இந்த மாநிலத்தில் உள்ள ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பொருள் மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யக்கூடிய அதே பொருளோடு போட்டி போட வேண்டும். அதற்கு ஒரு சந்தையை நாம் நாடிச் செல்ல வேண்டும்.

உதாரணத்திற்காக ரசாயனத்தை எடுத்துக் கொண்டால் வெளி மாநிலச் சந்தைக்கு நாம் செல்ல வேண்டும். அப்படி போட்டி போட வேண்டியிருப்பதால் வேறு மாநிலங்களில் அந்தப் பொருளை உற்பத்தி செய்வதற்கு அந்தத் தொழிற்சாலைக்கு கொடுக்கக் கூடிய மின் கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்த்து இங்கும் மின்சாரக் கட்டணத்தை நிர்ணயிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஏற்றத் தாழ்வு வேண்டுமென்றே மின்சார வாரியம் செய்கிறது அல்லது ஒருவரைக் கொடுமைப்படுத்த வேண்டும் என்று செய்கிறது என்ற கருத்தை மாற்றிக் கொள்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்: இதை வேறு முறையில் மாற்றியமைத்து எல்லோருக்கும் குறைந்த கட்டணத்தில் மின்சக்தி கொடுக்கக்கூடிய ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வார்களேயானால் அதையும் அரசு பரிசீலிப்பதற்குத் தயாராகயிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்திய நாடு முழுவதிலும் தொழில் துறையானாலும் சரி அல்லது விவசாயத் துறையானாலும் சரி வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு கட்டணங்கள் இருப்பது நல்லதல்ல என்ற கருத்தைத் திட்டக் குழுவினிடம் நம் அரசு எடுத்துச் சொல்லியுள்ளது. மற்ற மாநிலங்களும் இந்தக் கருத்தைச் சொன்னார்கள். எல்லா மாநிலங்களிலும் ஒரே விதமான கட்டணம் இருக்கக் கூடிய ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ள நாம் தயாராயிருக்கிறோம். அதை மத்திய அரசு, திட்டக்குழு காமன் க்ரிட் என்ற முறையில் ஏற்படுத்தி எல்லா மாநிலங்களிலும் சீரான முறையில் ஒரே விலையை நிர்ணயிக்க முன்வருமானால் நம் மாநில அரசு அதற்கு ஒத்துழைப்புத் தரும் என்று கருத்தைத் திட்டக்குழுவில் நாம் வற்புறுத்தியிருக்கிறோம். தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலும் வற்புறுத்தியிருக்கிறோம். தென் மண்டல மாநிலங்கள் சேர்ந்து பேசக்கூடிய கவுன்சிலிலும் பெங்களூரில் நடந்த கூட்டத்தில் இதே கருத்தைக் கூறியிருக்கிறோம்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், தொழில் துறையானாலும்சரி அல்லது விவசாயத் துறையானாலும் சரி, மின்சாரம் தேவைப்படுகிறவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் தேவையான மின்சாரம் கொடுக்கவேண்டும், சிறந்த முறையில் பணியாற்றவேண்டும் என்ற





கருத்தை ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. மின்சாரம் சில காலங்களில் குறைத்து கொடுக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக எலெக்ட்ரிஸிட்டி கட் இல்லாத ஒரு சூழ்நிலையை நம் வாரியம் ஏற்படுத்தி இந்திய நாட்டிற்கே நிரூபித்துக் காட்டியிருக்கிறது: அதற்காக வாரியத்தின் பணியாளர்களை நான் பாராட்டுகிறேன். இந்த மின்சார வாரியம் மேலும் நல்ல முறையில் செயல் படத்தக்க விதத்தில் உறுப்பினர்கள் ஆலோசனைகள் தருவார்களேயானால் அவை செயல்படுத்தப்படும் என்ற உறுதியைத் தந்து அப்படிப்பட்ட நல்ல பல ஆலோசனைகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எங்கள் கட்சி சார்பில் விவாதத்தைத் துவக்கி வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

இந்த விவாதத்தைத் துவக்குவதற்கு முன்பாக சமீபத்தில் கோவை மாவட்டத்தில் மின்சார வாரியம் செய்த அல்லது எடுத்த நடவடிக்கைகள் காரணமாக அந்த நடவடிக்கைகள் தவறானவை என்பதைச் சுட்டிக் காட்டி, அதற்காக ஒரு போராட்டத்தை நடத்த வேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்பட்டு அதன் விளைவாக உயிர்நீத்த விவசாய தியாகிகளுக்கு முதலில் என் கட்சி சார்பில் நான் அஞ்சலி செலுத்திக்கொள்கிறேன். அந்தப் போராட்டத்தின் விளைவாக விவசாயிகளுக்கான மின் கட்டணத்தை உயர்த்தியது தவறு அல்லது இரும்பத்தக்கதல்ல என்பதை இந்த ஆட்சி உணர்ந்து அதன் விளைவாக எடுத்த நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்த இந்த அரசு போராடிய அந்த விவசாயிகளுக்காக, உயிர்நீத்த அந்த விவசாயிகளுக்காக இரண்டொரு வரிகளில் இந்த அறிக்கையில் தனது அஞ்சலியை செலுத்தி யிருக்கலாம். பல இடங்களில் துப்பாக்கி சூடுகள் நடைபெறுகின்ற பொழுதெல்லாம் இங்கே அவர்களுக்காக அஞ்சலி செலுத்துகிற நிலைமையைக் காண்கிறோம். அதோடு மட்டுமல்ல. கோவை மாவட்டத்தில் அரசு உடனடியாகத் தலையிட்டு உயிர் நீத்த விவசாயிகளின் குடும்பத்தினர்களுக்குப் பொருள் உதவி தருவதற்கு முன்வந்திருக்கிறது. உண்மையிலேயே பாதிக்கப்பட்டு உயிர் நீத்த விவசாயிகளின் குடும்பத்தினருடைய நல்லெண்ணத்தை இழக்காமல் இருப்பதற்கு அல்லது செய்த தவறுகளுக்குப் பரிகாரம் காண்பதற்கு இந்த அரசு முதலிலேயே செய்திருக்கவேண்டிய ஒரே ஒரு காரியம், உயிர் நீத்த விவசாயிகளுக்குத் தன்னுடைய அஞ்சலியைச் செலுத்தியிருக்கவேண்டும். இனியாவது இந்த நிதிநிலை அறிக்கையைத் திருத்திக்கொள்ளும் இந்த அரசு என்று எதிர்பார்க்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். விவசாயத்தற்கும். தொழில் துறைக்கும் பாரபட்சம் காட்டவில்லை, கட்டணத்தைப் பொறுத்தவரையிலும் நாங்கள் நஷ்டப்பட்டுக்

கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு உதவி செய்திருக்கிறோம். தொழில் துறையில் அவர்கள் முன்னேறுவதற்கு மட்டுமல்ல, தொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களைப் பல மாநிலங்களோடு போட்டி போட்டுக்கொண்டு, அவற்றை விற்பனை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தனால். தொழில் கூடங்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்கவேண்டிய கட்டாயமும், அவசியமும் இந்த அரசுக்கு இருக்கிறது, என்று தெளிவுபடுத்தினார்கள். உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதுதான் ஒரு வழி என்று நிச்சயம் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். விற்பனை வரியைக் குறைக்கலாம், மற்ற வரி விகிதங்களைக் குறைக்கலாம் ஆனால், குறிப்பாக மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்பது எனக்குப் புரியவில்லை. விவசாயிகளுக்கு அவர்களுடைய கோரிக்கைகளின்படி சலுகை தரமுடியாது என்ற வாதத்தைக் கொண்டுவருவதற்கு வேண்டுமானால், இந்த அரசு திரும்பத் திரும்ப இந்தக் கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். 'மின்சாரக் கட்டணத்தை இவர்களுக்கும் குறைக்கிறோம். தொழில் கூடங்களுக்கும் குறைக்கவேண்டிய அவசியத்திற்கு நாங்கள் ஆளாகிறோம், மற்ற மாநிலங்களோடு நாங்கள் போட்டி போடவேண்டிய நிலைமை' என்றெல்லாம் சொல்வது இந்தப் பிரச்னையைத் தட்டிக் கழிப்பதாக ஆகுமே தவிர, அது நியாயப்பூர்வமான வாதமாக இருக்காது. அதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை எனது கட்சி சார்பிலே என்று சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலும், விவசாயப் பெருங்குடி மக்கள் உபயோகப்படுத்துகிற மின்சார விசைக்கான கட்டணத்தைக் குறைப்பதன் காரணமாக இந்த அரசுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் ஏறத்தாழ ரூ. 2 கோடி, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1¾ கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு படி அரிசித் திட்டத்திற்காகச் செலவு செய்தது ரூபாய் 20 கோடி. வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்காக அந்த அளவுக்கு நஷ்டப்படுகிற இந்த அரசு அதிகமாக உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு செலவு செய்திருப்பது ரூ. 1¾ கோடி நஷ்டப்பட்டது என்றுகூடச் சொல்லமாட்டேன். விவசாயத்தைப் பெருக்குவதற்கு இந்த அளவுக்குக்கூடச் செலவழிப்பதற்கு இந்த அரசு முன் வராததை ஒரு நிலைமையை இந்த அரசு உணரவேண்டும். இந்தப் போக்கு நல்லதொரு போக்கு அல்ல. விவசாயிகளை அலட்சியப்படுத்துகிற போக்கு. இது ஒரு நல்லாட்சியின் போக்காக அமையாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



அது மட்டுமல்ல. தாங்கள் சோஷலிஸ்டு என்று பேசுகிறவர்கள், உண்மை சோஷலிஸ்டு என்ற வார்த்தையைச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள், சோஷலிஸம் என்ற வார்த்தையைச் சொல்கிற அல்லது அந்தக் கொள்கையை வைத்திருக்கிற மற்ற கட்சிகளை எக்காளமிட்டு, கிண்டல் செய்து கொண்டிருக்கிற இன்றைய ஆட்சியில் இருப்பவர்கள் எந்த சோஷலிஸத்தை இதன் மூலம் கடைப்பிடிக்கிறார்கள்? (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஜனசங்க சோஷலிஸம்!) ஜனசங்க சோஷலிசம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தொழில் அதிபர்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுப்பது பற்றி மகிழ்ச்சி. காங்கிரஸ் சோஷலிஸம் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க மாட்டோம் என்று சொல்வதை ஒப்புக் கொள்ளாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) முதல் அமைச்சர் அவர்கள் மைசூர். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் விவசாயிகளுடைய நிலைமை என்ன, மைசூர் விவசாயிகளுடைய மற்ற சூழ்நிலை என்ன, அவர்களுக்கு மற்ற வாய்ப்புகள் என்ன, இங்கிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு மற்ற வாய்ப்புகள் என்ன என்பதையெல்லாம் சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டும். அங்கே இருக்கிறது. இங்கே இருக்கிறது என்று சொல்லி நியாயம் காண்கிற வழி நம்முடைய பிரச்சினை. தள்ளிப் போடுவதற்கே வழியாகும். அப்படிச் சொல்லிக்கொண்டு இந்தப் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது நியாயமாக இருக்காது. வேண்டுமானால் திசை திருப்புகிற வாதமாக இருக்கலாமே தவிர, பிரச்சினைக்கு பரிகாரம் காண்கிற வாதமாக இருக்காது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் மின்சார இணைப்புக் கொடுக்கிறோம் என்று மிகுந்த பெருமையோடு இந்த அரசு விவசாயிகளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. நேற்று வரை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறது. 1970-க்குள் எல்லாக் கிராமங்களும் மின்விசை பெற்றுவிடும் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) 1972-க்குள் என்று சொல்கிறார்கள். மிகுந்த பெருமை. ஆனால், மின்சார விசையை எதற்குத் தருகிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அங்கே விளக்குகள் எரிவதற்கு என்ற நிலைமைதான். மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் என்ன செய்து கொண்டிருக்கிறது என்றால், இருக்கிற விவசாயிகளுக்கு அல்லது பிற தொழில்களை வளர்ப்பதற்கு மின்சாரத்தைக் கொடுப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கையையும் மின்சார வாரியம் இன்று வரையில் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் சொல்வதெல்லாம், 'நாங்கள் 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சார இணைப்புக் கொடுத்து விடுவோம், அங்கெல்லாம் விளக்குகள் எரிந்துவிடும்' என்றுதான் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுத்து உதவு

வது அல்லது சிறு தொழில்களுக்கு மின்சாரம் கொடுத்து உதவுவது என்பது இல்லாமல், விளக்கை வேண்டுமானால் எரியும்படிச் செய்து விடுகிறோம் என்று சொல்வது இந்த அரசாங்கத்திற்கு விளம்பரமாகச் சொல்லிக் கொள்ளலாமே தவிர, விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக இந்த நிகழ்ச்சி அமையாது. 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் தந்து விடுகிறோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. விளக்கு எரிந்தால் சோறு போடுமா? சோறு போட வேண்டியவர்களுக்கு உதவி செய்வது உண்மையாகத் தர வேண்டியவர்களுக்கு, விவசாயிகளுக்கு மின்சாரம் தரவேண்டும். தரவேண்டிய தொழிலுக்கு மின்சாரம் தரவேண்டும். இல்லையென்றால் முழுமையாக இதற்குப் பொறுப்பேற்ற அரசாக இந்த அரசு இருக்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமலல், மின்சாரத் துறையைப்பொறுத்த வரையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. 1,500 கிளார்க்குகள், டைபிஸ்டுகள் வேண்டும் என்று ஜனவரி—பிப்ரவரி மாதத்தில் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தேர்வுகள் நடைபெற்றன. இப்பொழுது 8-வது மாதம் நடந்து கொண்டிருக்கிறது. மின்சாரத் துறை என்ன தான் செய்துகொண்டிருக்கிறதோ தெரியவில்லை. தேர்வுகள் நடைபெற்று 6 மாத காலம் வரை யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், யார் யார் தேர்ந்தெடுக்கப் படவில்லை என்றுகூட சொல்வதற்கு முடியாத பொறுப்பற்ற ஒரு இலாகா வேறு எங்கும் இருக்க முடியாது. மின்சார வாரியம் என்ன செய்து கொண்டிருக்கிறது? ஏன் இந்த அச்சம் அல்லது யாருடைய தலையீட்டுக்காக அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள்? எதைக் கண்டு பயப்படுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். 1,500 இடங்களுக்கு ஏறத்தாழ லட்சம் பேர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஒவ்வொருவரும் செலவு செய்திருக்கிற தொகைக்கு மேலாக, ஒவ்வொருவரும் தன்னைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் சிபார்சு கிடைப்பதற்காக செய்து கொண்டிருக்கும் செலவு இன்றைய தினம் வரையில் குறையவில்லை. மின்சார வாரியம் இன்னும் எத்தனை மாதங்களுக்கு தேர்வு நடத்திக் கொண்டிருக்கப் போகிறது? தேர்வுக்கான முடிவுகளை எப்பொழுது சொல்லப் போகிறது. ஏன் இந்த அளவுக்கு திறமைக் குறைவாக நடந்து கொண்டிருக்கிறது மின்சார வாரியம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு புதிய வலுவைத் தந்திருக்கிறது இந்த மின்சாரத் துறை. அது தான் இரும்புக் கரம்; மின்சாரத்துறைதான் அவரை வலிய இழுத்து இரும்புக் கரத்தைப் பற்றிச் சொல்ல வைத்தது. மின்சாரத் துறை பொறியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று அறிவித்த பொழுது 'நான் அடக்கியே தீருவேன். இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன்' என்று சொன்னார்கள்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் என்ன சொன்னேன் என்பதை உண்மையாகச் சொல்ல வேண்டும். திரித்துக் கூறக் கூடாது. நிருபர்கள் கேட்டார்கள், மின்சார ஊழியர்கள் சதி வேலைகளில் ஈடுபட்டால் என்ன செய்வீர்கள் என்று: சதித் திட்டங்களை இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும் என்று சொன்னேன். அப்படியானால் சதித் திட்டத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்கக் கூடாது, மலர்க்கரம் கொண்டு அணைக்க வேண்டும் என்று விரும்புகிறார்களா?

**திரு. க. இராமமூர்த்தி:** மிகுந்த மகிழ்ச்சி. இரும்பு கரத்தைப் பற்றி, அந்த வார்த்தை பற்றிச் சொன்னேன். மின்சாரப் பொறியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை வேலைக்கு வராமல் தடுத்தார்கள்...

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மறுபடியும் திரித்து சொல்கிறீர்கள். அப்படிச் சொல்வதே வழக்கமாக இருக்கிறது உங்களுக்கு. நான் எப்படிச் சொன்னேன்? 'மின்சார ஊழியர்கள், பொறியாளர்கள், நான்கு கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வு தரப்பட்ட பிறகு, அதை ஒத்துக்கொண்டு போய், அதற்கு மறுநாள் 200, 300 பேர்கள், நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம். இரவு 12 மணிக்கு மேல் ஈடுபடுவோம் என்று அறிவித்துவிட்டு, ஆனால் மாலை 4 அல்லது 5 மணிக்கே ஈடுபட்டு, எல்லா ஊர்களிலும், மின்சாரம் நின்றுபோய், தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களிலும் விளக்குகள் இல்லாமல், இயந்திரங்களை இயக்க முடியாமல் செய்துவிட்டுப் போய் விட்டார்கள். எங்கும் மின்சாரமே இல்லாமல் இருள் சூழ்ந்திருக்கும் பயங்கரமான நிலை நாட்டில் உருவாயிற்று. அந்த நிலையில் அரசு எடுத்துக் கொண்ட அவசர நடவடிக்கைகளின் பயனாக உடனடியாக, விளக்குகளை நாடு எங்கும் எரியச் செய்ய முடிந்தது. அப்படியும் திருநெல்வேலியில் 3, 4 மணிக்குப் பிறகே விளக்குகள் வந்தன.

அப்பொழுது நிருபர்கள், இந்தப் போராட்டம் பற்றி என்னைக் கேட்டார்கள். அதெல்லாம், பத்திரிகைகளில் வந்திருக்கிறது. சதி வேலைகளில் ஈடுபடுபவர்களை, அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும் என்று சொன்னேன். அதை வைத்துக் கொண்டு "இவர் விவசாயிகளை இரும்புக்கரம் கொண்டு அடக்குவார். தொழிலாளர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குவார்" என்று, கீழ் மேலாகப் பேசி வருகிறார்கள். அது உண்மைக்கு மாறானது. அது முறையற்றது. இது இரும்புக்கரமா? தொட்டுப் பாருங்கள்; இது சாதாரண எலும்புக்கரம் தான் (சிரிப்பு).

**திரு. க. இராமமூர்த்தி:** இது இரும்புகரமா, மலர் கரமா, தோல் கரந்தான், தொட்டுப்பாருங்கள், என்று சொல்கிற அளவிற்குத் தேவைப்படுகிறது எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் அளவு. சதி வேலை செய்கிறவர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கியே தீருவேன் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சதி வேலை செய்பவர்களை அடக்குவேன் என்று சொன்னது தவறு?

**திரு. க. இராமமூர்த்தி:** தவறில்லை, மிக மிகத் தேவை. ஆனால் சதி என்ற பெயரால், பொறியாளர்கள் பழி வாங்கப்படுவது, அவர்களைப் பழி வாங்க நினைப்பது, அவர்கள் ஆளும் கட்சி யூனியன் வைத்துக் கொள்ளவில்லை என்பதை மனதில் கொண்டு, அவர்களை அழிந்து விடுவது என்று நினைப்பது--இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்பது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எத்தனை பேர்கள் பழி வாங்கப் பட்டார்கள்?

**திரு. க. இராமமூர்த்தி:** கன்யாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பொறியாளர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்கள் எப்படி கைது செய்யப்பட்டு, கொண்டு சென்றார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கைது செய்யப்பட்டவர்கள், என் கைது செய்யப்பட்டார்கள் என்று தெரியுமா?

**திரு. க. இராமமூர்த்தி:** சதி வேலையில் ஈடுபட்டார்கள் என்று; இன்று வரையில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன? சதிகாரர்கள் எப்படி நடத்தப்பட வேண்டும்? பொறியாளர்களைப் பொறுத்த வரை, இது வரை எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? என்ன செய்தார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எடுத்துக் கொண்ட நடவடிக்கை போதாது, இன்னும் அதிகமாக எடுக்க வேண்டும் என்கிறீர்களா? அப்படியானால் யோசிக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** சதிகாரர்கள் என்றால் நிச்சயம் செய்ய வேண்டியதுதான். ஆனால் சதிகாரர்கள் என்ற பெயரை வைத்துக் கொண்டு, யார் மேலும் நடவடிக்கை எடுப்பது என்பதில், அரசுக்கு நிச்சயம் தயக்கம் இருக்கும். இந்தப் பொறியாளர்கள், வேலைக்கு வருகிறோம் என்று சொன்னபோது, வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்பட்ட பிறகு, வேலைக்கு திரும்ப வருகிறோம் என்று சொன்னபோது, மின்சாரத் துறை 'வேலைக்கு வராதே', மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் வர வேண்டும் என்று சொன்னது. வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்று, தடை விதித்த பிறகு, அது தவறு என்று அறிவித்த பிறகு வேலைக்குத் திரும்புகிறவர்களை, 'வராதே' என்று சொன்னவர்களை 'வேலைக்கு வராதே' என்று சொன்னவரை, என்ன செய்தார்கள்? அப்படிச் சொன்னவர் அந்த வாரியத்தின் தலைவராக இருக்கிறார். ஆகவே, சதித் திட்டத்தில் ஈடுபட்டவர் அந்தத் தலைவர்தான்; வேறு இல்லை. வேலை நிறுத்தம் தவறு என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த நாட்டுக்கு அது கேடு, நாடு இருள் அடையும் என்று



சொல்லி இருக்கிறது அரசு. அதன் விளைவாக, வேலை நிறுத்தம் செய்த பொறியாளர்கள் வேலைக்கு வருகிறோம் என்றபொழுது, 'வராதே' என்றவரை தலைமையாளராக வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது நியாயமாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு, மு. கருணாநிதி:** 'வராதே' என்று சொல்லவில்லை. செய்த தவறுக்கு வருத்தம் தெரிவித்து விட்டு, மன்னிப்பு தெரிவித்துவிட்டு, வர வேண்டும் என்று சொல்லப்பட்டது. வராதே என்று சொல்லவில்லை. ஏதோ கட்சியின் மீது செய்யப் பட்டது என்று சொல்கிறார்கள். பல கட்சிகளில், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். இப்பொழுது காங்கிரசுக்கும், இடதுசாரி கம்யூனிஸ்டுக்கும் (குறுக்கீடு) ஆம், உங்கள் காங்கிரசுக்கும் ஒரு இடது சாரி கம்யூனிஸ்டுக்கும் மேலே ஏற்பட்டிருக்கும் உறவு காரணமாக இப்படி வலிய வலிய பேசுகிறார்களோ?

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு முதல் அமைச்சர் சதிவேலை பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்றவுடனேயே பொறியாளர்கள், ஓடோடி வருகிறார்கள் வேலைக்கு ஆனால் 'வராதே', போகக் கூடாது மன்னிப்புக் கடிதம் கொடு என்றெல்லாம் சொல்லி . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒரு நிபந்தனையின் பேரில் வேலைக்கு வா என்றால், அதற்கு வராதே என்பதா பொருள்?

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படியானால், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்கள் . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது வேறு; வேலைக்கு வராமல் இருப்பது வேறு: இயந்திரங்களை விட்டு விட்டு, பழுதாக்கி விட்டு, இயக்க முடியாமல் செய்துவிட்டுப் போனால், உறுப்பினருடைய யோசனைப்படி அது புனிதமான வேலை நிறுத்தமா?

**திரு. க. இராமமூர்த்தி:** என்னுடைய கேள்வியெல்லாம், வேலைக்கு வருபவர்களைப் பற்றியது. சதி வேலையில் ஈடுபட்டவர்களைப் பற்றி, நடவடிக்கைகளைப் பற்றி, நியாயம் என்றே ஒத்துக் கொள்கிறேன். ஆகவே, அவர்களுக்காகப் பரிந்து வருகிறீர்களே என்று கேட்கும் அளவில் என்னை வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் கோரிக்கைகள் கேட்டு, வேலை நிறுத்தம் என்று சொல்ல முடியாத அளவிற்குத் தடை செய்யும் அளவிற்கு அரசு போகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வேலை நிறுத்தத்தின் தன்மையைப் பொருத்தது. என்னவோ தொழிற்சாலைகளில், அரசுத்துறை அலுவலர்களை மன்னிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு சேரவேண்டும் என்பதுபோலச் சொல்கிறார்கள். இது ஓர் அத்யாவசியமான பணி; நாட்டுக்கு மிக மிக அத்யாவசியமான

இன்றியமையாத பணி. நாட்டை, இருட்டடித்துவிட்டு, வேலை நிறுத்தம் செய்வோம் என்றால், அதற்கு நடவடிக்கை வேறாகத்தான் இருக்க வேண்டும். பொதுவாக, முன்னேற்ற கழக அரசு, அத்தனையிலும் ஒரே சாரியாக எடுக்கும் நடவடிக்கையில்லை.

திரு. க. இராமமூர்த்தி: அதைத்தான் கேட்கிறேன். வேலை நிறுத்தத்தால் பாதகம் ஏற்படும், ஆகவே. வேலை நிறுத்தம் தவறு என்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால், தெளிவாக வேலைக்குத் திரும்புகிறோம் என்பவர்களைத் தடுப்பது . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தடுக்கப்படவில்லை, தடுக்கப்படவில்லை, தடுக்கப்படவில்லை என்று மூன்று முறையும் சொல்லுகிறேன். நிபந்தனைக்குட்பட்டு, வரவேண்டும் என்றார்கள். நீங்களே, "இது அத்யாவசியமான இலாகா என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன், வேலை நிறுத்தம் தவறு" என்று சொல்லுகிறீர்கள். ஆனால் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறீர்கள். ஒரு நிபந்தனையை ஒட்டி வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி: தடை செய்த சட்டம் நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் திரும்ப வேண்டும் என்று சொல்லியிருந்தால், இவ்வளவு தூரம் நீட்டியிருக்க மாட்டேன். ஆனால், சட்டம் வேலை நிறுத்தத்தைத்தான் தடை செய்கிறது. நிபந்தனை என்பது வேலைக்கு வராதே என்பதன் மாற்றுப் பெயர் என்று விளக்கம் சொல்வதானால் . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்டத்தை வன்மையாகச் செயல்படுத்தினால், யாரையும் வேலைக்குச் சேர்க்க முடியாது. ஆகவே, தொழிலாளர் பேரில் அனுதாப உணர்ச்சியோடு, தவறுக்கு வருந்துகிறார்கள், ஆகவே பழி வாங்கக் கூடாது, மன்னிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு வேலைக்கு வா என்று சொன்னோம்.

திரு. க. இராமமூர்த்தி: சட்டங்களைக் கட்டுப்பாடாக நடத்தாததால் தொழிலாளர்களுக்குத் தீங்கு ஏற்படுகிறது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இது.

அடுத்தபடியாக, இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகளுக்காக கடன் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கடன் கொடுக்கப்படுகிற நேரத்தில் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டு மின்சாரத் துறையில் மின் விசைக்கான அனுமதியைப் பெறுவதில் கஷ்டம் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இரண்டு ஆண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் வரையில் மின்விசை கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை அரசாங்கம் மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடன் கொடுக்கிற துறைக்கும், மின்விசை வழங்கும் துறைக்கும் ஒருவித தொடர்பும் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. இந்த இரண்டு துறைகளுக்கும் தொடர்பு இருந்தால் விரைவாக மின்சாரம் கொடுக்க முடியும். ஆகவே,





ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக மின்சாரத் துறை ஒரு ஆலோசனைக் குழுவை நியமிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு பில் தயாரிக்கப்படுகிற முறை இன்றையதினம் தவறான முறையாக இருந்து வருகிறது. மின்சார மோட்டார் இருக்கும் இடங்களுக்குச் சென்று அதனுடைய ஓட்ட நிலைமையைக் குறித்துக் கொண்டு வந்து பில் தயாரிப்பதில்லை, குத்துமதிப்பாக மதிப்பிடுகின்ற நிலைமைதான் தற்போது இருந்து வருகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் முதலில் ஊழியர்களுக்காகவே பரிந்து பேசியவர் இப்போது ஊழியர்களைக் கேவலமாகப் பேசுகிறார்கள். எந்த இடத்திலும் ஊழியர்கள் தவறு செய்வதில்லை. ஊழியர்கள்மீது அபாண்டமான பழி சுமத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்தில் விழுப்புரத்தில் தவறு நடந்திருக்கிறது. நடவடிக்கைகள் குறிப்புகளை எடுத்துப் பார்க்க வேண்டும். பில்கள் தயாரிப்பதில் என்ன முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பது தெரியவரும். அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விழுப்புரம் வட்டத்தில் அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். (திரு. க. இராமமூர்த்தி: அதிகாரிகள் அல்ல, ஊழியர்கள்.) ஊழியர்களும் அதிகாரிகள்தான். அவர்கள் மீது வைத்தது மலர்க்கரமா இரும்புக்கரமா என்பதை கனம் உறுப்பினர் அவர்களே சொல்ல வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: நான் இதற்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. இதை வாதமாக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, இந்த பில்கள் தயாரிக்கும் முறையை மாற்றியமைக்க வேண்டும். மேலும் துறையினர் தயாரிக்கும் தவறான பில்களுக்கு அதற்குண்டான கட்டணத்தைக் கட்டிவிட்டுத்தான் அதன் மீது அப்பீல் செய்துகொள்ளலாம் என்ற விதி இருக்கிறது. சாதாரணமாக 30 ரூபாய் அளவில் பில் ஆகும் ஒருவருக்கு 70 ரூபாய், 75 ரூபாய் என்று பில் போட்டுவிட்டால் அந்த 70, 75 ரூபாயைக் கட்டிவிட்டுத்தான் அவர் அப்பீல் செய்து கொள்ள முடியும். துறையினர் செய்யும் தவறுகளுக்காக அதிகமான பணத்தைக் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒருவர் அப்பீல் செய்துகொள்ளும் நிலை ஏற்படுகிறபோது, பணம் கட்டாமல் அப்பீல் செய்து கொள்ளலாம் என்ற முறையை இங்கு அரசு

வருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மின்சார வாரியத்தின் பணியாளர்களுக்கு, ஊழியர்களுக்கு ஊதிய நிர்ணயத்தைப் பொறுத்தவரையில், பொறியாளர்களுக்கு ஒரு விதமாகவும், அக்கவுன்ட் ஸ்டாஃப் பணியாளர்களுக்கு ஒருவிதமாகவும் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த வேறுபாடு இருக்கக் கூடாது என்பதை மிகுந்த கவனத்தோடு, அந்தரங்க சுத்தியோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் நமக்கு வேண்டியவர்கள், யார் நமக்கு வேண்டாதவர்கள், யாருக்கு வேலை அதிகமாக இருக்கிறது, யார் வேலை இல்லாதவர்கள் என்ற அடிப்படையில் இல்லாமல் அவரவர்களுக்குத் தகுதியான ஊதியத்தைத் தர இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது. 100 வாட் பல்புகள் எரியும்பொழுதுகூட 40 வாட் பல்பு போல வெளிச்சம் குறைந்து காணப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் 110 கே. வி. ஸ்டேஷன்கள் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்தக் கோரிக்கை இந்தத் தரப்பிலேயிருந்து வருகின்ற காரணத்தாலே இதுவும் தடையாக இருந்துவிடக் கூடாது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, அதைப் பாராட்டி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம் மின்சார வாரியத்தின் பெருமையைப் பற்றியும், அதனுடைய சேவையைப் பற்றியும் இந்திய துணைக் கண்டத்திலுள்ள எல்லா மாநிலங்களிலும் பாராட்டு தெரிவித்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. சற்று முன்னாலே இந்த வாதத்தைத் தொடங்கி வைத்த கனம் உறுப்பினர் அவர்கள், கோவை மாவட்ட சம்பவத்தைப் பற்றி அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்தில் சொற்பொழிவைத் தொடங்கினார்கள். அண்மையில் மின்சார வாரியத்தில் ஏற்பட்ட தொழில்துறை வேலை நிறுத்தத்தை கண் நோய் காரணமாக மருத்துவ மனையில் இருந்தபோது தன்னுடைய உடல்நலம் பாராட்டாமல் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு சமரசம் செய்து வைத்து, மின்சார வாரிய ஊழியர்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி உரையை நிகழ்த்துவார் என்று நான் கருதினேன். ஆனால் எனக்கு மிகுந்த ஏமாற்றம் தான் ஏற்பட்டது.





எதிர்க்கட்சியிலிருந்து அனுதாபம் தெரிவிக்கப்பட்ட கோயம்புத்தூர் நிகழ்ச்சி இந்த மன்றத்திலுள்ள எவருக்கும் மகிழ்ச்சியை அளிக்காது. ஒரு உயிர் போய்விடுவது இந்த மன்றத்திலுள்ள எவருக்கும் மகிழ்ச்சியை அளிக்காது. ஆனால் கடந்த காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி யாராவது எண்ணியது உண்டா? அண்மையில் ஏற்பட்ட சம்பவம் இனியும் நடைபெறாமல் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது நம் அனைவருடைய நீங்காத கடமையாகும். நம்முடைய நிதிநிலை அறிக்கையை ஆரம்பித்து வைத்த அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த வாரியம் செம்மையாக நடைபெற, வேண்டிய நல்ல ஆலோசனைகளைக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இது நம் அனைவருடைய கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மின்சார வாரியத்தைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மின்சார வாரியத்தில் முக்கால் லட்சத்திற்கும் குறையாத எண்ணிக்கையுள்ள ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய நிறுவனமாகும் இது. மின்சார ஊழியர்களுடைய குறைகள் எல்லாம் நியாயமானவை. ஊழியர்கள் தங்களுடைய குறைகளை காலப்போக்கில் முறைப்படி எடுத்துச் சொல்லி, மனம் திறந்து பேசி நல்ல முடிவை மேற்கொள்ள வேண்டும். இதனுடைய சேவையை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அண்மையில் ஏற்பட்ட முடிவின் காரணமாக, மத்திய ஊதியக் குழுவின் பரிவுரையின் காரணமாக ஊழியர்களின் ஊதியம் திருத்தி அமைக்கப்பட்டது. வேறு துறையில் இருப்பவர்கள் மின்சார வாரியத்தில் தங்களுக்கு ஏதாவது ஒரு வேலை கிடைக்காதா என்று எண்ணும் அளவில் இருந்து வருகிறது. இந்த முயற்சிகள் எல்லாம் மின்சார வாரியத்தின் பெருமையை கௌரவிப்பதாகும் என்று கருதுகிறேன்.

மின்சாரத் திட்டத்தை விரிவுபடுத்துவதைக் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் பேசினார். குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் இலக்கை ஏற்படுத்தி, எல்லாக் குக்கிராமங்களுக்கும் மின்சாரத்தை அளிப்பது என்ற திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வாரியத்தை நல்ல முறையில் இயங்க வைக்க நல்ல பல ஆலோசனைகளையும் உறுப்பினர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருள் சூழ்ந்தவண்ணம் இருந்தன. அண்மையில் நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் காரணமாக எல்லாக் கிராமங்களிலும் மின்விளக்கு எரிய ஆரம்பித்திருக்கின்றன. மேலும் உழவர்களுக்கும் மின்சாரம் வழங்கி, விவசாயத்தை வளர்த்திருக்கிறோம். விவசாயிகளுக்கு நல்ல சலுகைகளை அளித்து வந்திருக்கிறோம். தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சாரத்தை வழங்கி தொழிலைப் பெருக்கியிருக்கிறோம்.

[திரு. ந. தருமலிங்கம்] [1970 ஆகஸ்ட் 25

இதெல்லாம் இந்த வாரியத்தின் வளர்ச்சியை நேர்மையாகக் காட்டுகிறது. நம்முடைய ஒத்துழைப்பைப் பொறுத்துதான் இந்த நிர்வாகம் திறம்பட நடைபெற முடியும். நமக்குள்ள பொறுப்புக்கள் அதிகம். நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும், நமக்குள்ள பற்றுக்குறையை பிற இடங்களிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும், முறைப்படி விநியோகம் செய்ய வேண்டும். அதற்கான கட்டணத்தை விதிக்க வேண்டும். முக்கால் லட்சத்துக்கும் அதிகமான பேர்கள் வேலை செய்வதனால் பல சிக்கல்கள் இருக்கக்கூடும். குறைகளை அப்படியே வளரவிட்டு—பின்னால் அதைப்பற்றி எடுத்துக் கூறி குறை சொல்லலாம் என்கிற அளவில் அரசியல் கட்சிகள் மட்டும் அல்ல—யாரும் செய்து விடாது அவ்வப்போது குறைகளை எடுத்துக் காட்டி களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதிகாரிகளும் அவ்வப்போது அந்தக் குறைகளை நிவர்த்தி செய்துவிட வேண்டும். அப்படிச் செய்து வருகின்றதைக் காணலாம். அதற்காக வாரியத் தலைமையையும், இந்த அரசாங்கத்தையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கிராமங்களில் மின்சார விளக்குகள் சரியாக எரியவில்லை என்ற குறைபாட்டை மூடி மறைக்க முடியாது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மேலும் மீட்டர்களைப் பொறுத்துத்தான் பல சிக்கல்கள். நாங்கள்கூட கீழ் தஞ்சை மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இது பற்றி எடுத்துப் பேசுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அந்த மீட்டர்களைப் பொறுத்த பொறுப்பை அங்கங்கே ஊராட்சி மன்றத்தின் பொறுப்பில் விட்டுவிடலாம். மீட்டர்களுக்கு ஏற்ற கட்டணத்தை முறைப்படி அவர்கள் தருவார்கள். மீட்டர்கள் சம்பந்தப்பட்ட குறைபாட்டை நீக்கினாலேயே பல குறைபாடுகள் அகலும்.

உறுப்பினர்கள் சொல்கிற நல்ல யோசனைகளை அதிகாரிகளும் பரிசீலனை செய்து அதன் மீது எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளையும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து பாராட்டி மிகுந்த அளவுக்கு தமிழ் மக்களுக்கு பயன் அளிக்கத் தக்க வகையில் எண்ணற்ற கிராமங்களுக்கு மின்வசதியை அளிக்கிற வாரியத்தைப் பாராட்டி அமர்கிறேன்.

* **Dr. H. V. HANDE** : Hon. Deputy Speaker, Sir, while participating in this debate, I would like to pinpoint certain important things which I am afraid the Government of Tamil Nadu had missed putting into practice. For instance take the agriculture problem. There was a power tariff for agriculturists. The agriculturists had been agitating for quite a long time that the power tariff should be reduced. They originally asked for reduction of 2P. and then they came down to 1P. and said that if it was 1P



1970 ஆகஸ்ட் 25] [Dr. H. V. Hande]

reduction they would be agreeable to that. Then the Government of Tamil Nadu came to a compromise that for those wells which have a depth of 75′, this concession should be given. Above that, it should not be given. Then the representatives of the Agriculturists' Association came to Madras. They met our Chief Minister and had some discussion but the negotiations unfortunately failed. Subsequently there was an agitation.

Our party of course is totally against agitational approach. My submission is that this situation could have been avoided. We appreciate that the Chief Minister reduced the tariff to 9P. for all wells after the agitation. I am afraid that the Hon. Chief Minister, who is usually tactful (I have great regard for his tactfulness), if only he had been properly advised, could have avoided the catastrophe that followed the agitation and which had been so graphically described by my friend Mr. Ramamoorthi; though I do not share the sentiments expressed by him, that situation, unhappy situation, which led to the resignation of a member of our party, Thiru Krishnaswamy Gounder (though I do not approve the method he adopted) —that situation could have been avoided. That the situation had developed to the extent of making a Member of the House, resign his party membership and also his membership of the Assembly, goes to show the feeling of agriculturists in respect of this power tariff question.W

Many agriculturists felt that the rates were high and tehat it should be reduced. Their feeling was so much. They went on a strike, a 'morcha' and there was police firing, where unfortunately some lives were lost. I am sure the Hon. Chief Minister will agree with me in expressing his grief at the loss of life of a few citizens of our country. If only he had taken greater care (I do not blame him) if only he had been better advised (even in my small capacity as M.L.A. I have to take the advice of many friends experts on some questions), this situation could have been avoided. I know the Chief Minister's time is precious. I do not blame the Chief Minister. He ought to have been properly advised. If only he had been advised.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நான் இந்த விஷயம் முடிந்து விட்டது என்று எண்ணியிருந்தேன். அது பற்றிய விளக்கத்தை டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். 75 அடி ஆழத்திற்கு மேற்பட்ட கிணறுகளுக்கு 9 பைசா என்றும் மற்ற கிணறுகளுக்கு 10 பைசா என்றும் இந்த சபையில் நிர்ணயிக்கப்பட்ட போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட 'நான் இதை வரவேற்கிறேன். ஆனால் பாதி அளவுதான் வரவேற்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள். கோவை விவசாய சங்கத் தலைவர் அவர்கள் என்னிடம் நேரிலும் கடிதம் மூலமாகவும் தொடர்பு கொண்டபோது கூட நான் 75 அடி ஆழத்திற்கு மேற்பட்ட கிணறுகளுக்கு 9 பைசா என்றும் மற்ற கிணறுகளுக்கு 10

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 25

பைசா என்றும் கூறியபோது அவர் 9 பைசா வசூலிக்கும் கிணறுகள் கோவை மாவட்டத்தில் 35 சதவிகிதம் இருப்பதாகவும் 10 பைசா வசூலிக்கும் கிணறுகள் 15 சதவிகிதம் தான் இருப்பதாகவும் கூறினார். ஆகையால் 15 சதவிகிதத்திற்காக இன்றைய தினம் அரசாங்கம் நஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. மேலும் திரு. மன்றாடியார் தலைமையில் வந்த குழுவினரிடத்தில் கூட நான் விவாதித்தேன். அவர்களும் மறுப்பு ஒன்றும் கூறவில்லை. கிளர்ச்சி நடத்தப் போவதாகவும் கூறவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதலமைச்சர் பேசும்போது எதிர் கட்சித் தலைவர் ஒத்துக்கொண்டார்கள் என்று பேசினார். நான் அப்போது முழுவதையும் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் அதையும்தான் குறிப்பிட்டேன். நீங்கள் உங்கள் கட்சிக்கு மிகவும் பயப்படுகிறீர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் ஒன்றும் கட்சிக்கு பயப்படவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சரை மன்றாடியார் வந்து பார்த்ததுதான் தவறாகிவிட்டது. கொஞ்சம் அவரைக் கேட்டுக் கொண்டிருந்தால் விட்டுக் கொடுத்திருப்பார் என்று சொல்லுகிறேன். அநேகமாக 8-1/2 பைசாவுக்கே ஒத்துக் கொண்டிருப்பார்கள் என்றும் நினைக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I would like to be spared from the interruption of the hon. the Leader of the Opposition because the time at my disposal is very short. The Hon. Chief Minister has done a good thing and he has given the rate of 9 paise for all the wells. Now for argument's sake I have to say that if the Department had probably advised the Hon. Chief Minister in time and sufficiently earlier before 'kilarchi' and not after that, it would have been a good thing. I do not accuse the Hon. Chief Minister and I do not want to attribute any motive to him and this I want to make clear on this occasion. A proper assessment by top officers in the Secretariat should have been given to the Hon. Chief Minister and if they had forestalled the agitation and acted beforehand, I would have been happier. Anyhow, we have been thankful to the Hon. Chief Minister for what he has done. If he had done it earlier, it would have been a good thing. What we did to-day we should have done yesterday. A few lives would have been saved.

Another argument advanced is with regard to the power tariff for agricultural operations prevailing outside Tamil Nadu. In this connection I have to point out one thing. What is the total number of acres having irrigation facilities in Tamil Nadu? At least two-third or three-fourth of the agricultural operations are done by lift irrigation through pumpsets. Such being the case, it is very important for increased food output that special attention should be given to the agricultural power tariff.



1970 ஆகஸ்ட் 25] [Dr. H. V. Hande]

Now with regard to the point mentioned by the distinguished Hon. Minister in his statement, viz., that there would be no power cut in future, we are very happy about it. But one of the most important points which we have to take into consideration is that industrial buoyancy has not shown much upward trend for the past two or three years. So I would like the Hon. Chief Minister to consult even some of the industrial and economic experts on the subject. If there is a steady rise in industrialisation, there would always be power hunger and marginal power hunger is good as it only indicates the maximum utilisation of power. Therefore, to say that there is power surplus is not important and there is nothing new in it. If we have surplus power it only means that we are short of production and it also indicates that the industrial output can be bettered.

Now, I come to the third point. What are the reasons for the increased power tariff in the agricultural sector, industrial sector and the domestic sector? Firstly, there is administrative inefficiency and so far as administration is concerned, there is inefficiency at the top level. Also, there is no proper co-ordination between different sections of the Department. Therefore, there should be proper toning-up of the administration and proper coordination between the various sections so that each section would know what the other section does. So, I suggest that the State should be divided into three or four zones and each zone should be put in charge of a Chief Electrical Engineer so that there is no top heavy administration at the top. If this is done, red-papism could be avoided and the administrative effciency could be improved.

The second reason is that there is heavy percentage of loss of electricity through transmission. My information is that so far as transmission loss is concerned, our State is the highest in this respect and we are having the maximum transmission loss. Therefore, transmission methods have to be modernised. The third reason is that there is theft of electricity. A large quantity of electricity is being stolen and as a result of it the electricity is not made available to the rightful users at cheaper rates. We are not able to reduce the tariff because there is theft in electricity. This aspect of the matter has to be properly looked into. I am sure the Board would take note of what I have stated and see that remedial measures are instituted immediately.

Then I come to the most important point with which I am obsessed and that is management-labour relationship. For the past six years ever since I became a Member of the Legislative Council and Assembly I have pointed out that there is no proper relationship between management and labour. I cannot pin-point the responsibility. But there is no proper relationship between the management and labour. This is a chronic malady and I would request the Hon. Chief Minister to address himself

[Thiru Dr. H. V. Hande] [1970 ஆகஸ்ட் 25

to this task and let him not be guided purely by what the officers would say. They would say—

அதிகாரிகள் சொல்லுவார்கள், "எல்லாம் பிரமாதமாக இருக்கிறது; ஒன்றும் தொந்தரவு கிடையாது, ஒன்றும் தகராறு கிடையாது" என்று

But we should keep our eyes wide open and I would request our Hon. Minister who has got an experience in this field and who has referred to a number of salient points in this speach, to find out the reasons for this malady. Now, we are actually going to spend an extra amount of Rs. 4 crores but have you satisefid the Labour? Has there been proper co-ordination between the management and labour with regard to the implementation of the Wage Board? As there is no proper dialogue between them, it has finally ended in a ghastly strike. I personally feel that so far as industrial dispute is concerned strike should be the last weapon and it should be used only if all other methods have failed. But unfortunately there has been a strike afterwards. How did the management cope up with the strike? That has been a problem.

In this connection, I want to suggest that newspaper advertisement asking new graduate engineers to join the Board should not have been given. The powerful oratory of the Hon. Chief Minister would have been used against the Government if he had been on this side of the House. If he had been in the Opposition and the Congress Government was in power he would have given a jolt to the Government on that issue. When he was Deputy Leader of the Opposition four years ago he had done so on many occasions. He has got the gift of the gab and I do not know how many on this side of the House has got it (Interruption from Thiru K. Vinayakam) I do mean it seriously and I hope Thiru Vinayakam would appreciate it. Now my point is that if the management had advertised in the newspapers in a Central Government undertaking, namely that if the striking Engineers did not return to work within 24 hours their services would be terminated, how would the State Government have felt? As there are a large number of qualified persons unemployed, there would arise no problem with regard to filling up the vacancies. That is why our party has been constantly saying that the greater the unemployment the greater is the risk to those who indulge in strike.

The unemployment problem has got a direct bearing on a strike. When the advertisement came, there was great temptation for the unemployment to get in, in the place of people who were on strike. If this had been done in a Central Organisation or private company what would have been the attitude of the Trade Union Leaders? I mean even the trade union leaders of the ruling party. Supposing there was a strike in a Central Government organization and a similar advertisement was put



1970 ஆகஸ்ட் 25] [Thiru Dr. H. V. Hande]

up, how would a trade union headed by a ruling party have felt? The Chief Minister would have hastily intervened. The advertisement had hurt the feellings of a vast section of the Electricity Board employees. They felt like shedding tears. That infortunate situation could have been avoided if only better advice had been given to the Chief Minister.

Another obnoxious thing is the inter-union rivalry. This is bogging us down. The electricity board employees are the unfortunate victims. Everyone in this House is indulging in some trade union activity or other. He has a share in this chaos. Let us be frank about it. Let us not exploit party feeling. This inter-union rivalry is a very serious matter. I wish the Hon. Chief Minister cals all the rival leaders and also the workers' and representatives and see whether it cannot be cleansed of political affiliations. I have tried to analyse the reasons for this inter-union rivalry. The main cause is this. The management is soft to a Union headed by a powerful M.L.A. If he belongs to the ruling party, he invariably gets good respect and what he says acceded to. So, the tendency of the workers is to joint the Union headed by that M.L.A. Managements only respect that Union. That should not be. To-day an M.L.A. may be the leader of a Union. But even a worker could be a leader of a union But unfortunately, the management will not be conducive to such a union. A Union headed by Mr. Ramamoorthi may not be powerful as a union led by a M.L.A. of the ruling party. That tendency should go. The Management should respect every union, even a union led by an ordinary worker. The object of the trade union movement in all democratic countries is to do justice to workers and to get them their legitimate needs. May be in China and Russia wherein there is no trade union, if any one says he is a trade union leader, he will be immediately destroyed and turned into phosphate. But we are in a democratic country wherein we give respect to trade-union movement. The role of labour is recognised and the Hon. Chief Minister knows the role of labour. What I say is, the inter-union rivalry should be stopped. The tendency is now to have a politician as leader of the union, since the management listens to the words of a powerful M.L.A. Even an ordinary worker with grease and dirt over his clothes who does not belong to any party, can be a leader of union and management should respect his words. Sometimes he does not even get a chance of interview with the Chairman. This worker is a representative of labour and his words should be given weight, never mind if he is only an ordinary worker. That is the object of trade union movement, to secure legitimate rights of workers. Let the present rivalry be neutralised.

I have some two or three points more. The State Electricity Board advertised for 750 jobs. Mr. Ramamoorthi refered to it. 1,25,000 people applied. I do not have the prospectus with me. I have it in my file. They fixed some qualification originally. Afterwards they enhanced the qualification and about 30,000 to

35,000 were disqualified because of this enhanced qualifications. Each one would have spent Rs. 5 to Rs. 7 in paying application fee, getting certificates, cannot certificate, this and that. The application fee was Rs. 5 and I suppose the Board would have realised about Rs 6 lakhs to 7 lakhs from application fees. Ultimately I think only about 500 were able to secure jobs. What I say is, what about over a lakh of people who had applied thinking there were 750 jobs. Hereafter you specify the qualification correctly even in the first instance. That might prevent large number of people from wasting money initially. You promised 750 jobs initially and ultimately only 500 or so are to get the job. Majority of those who applied initially had got frustrated. That could have been avoided if the qualifications we re-fixed correctly in the first instance without changing them later.

The Mayuram-Mannargudi Electricity undertaking had been taken over some time ago. Previously a statement was made that all private electrical undertakings would be completely stopped and taken over by the Board. This undertaking was taken over and there were 500 to 600 employees working there. On 15th May 1968 Government acquired this. 577 employees of the undertaking were told by G.O. Ms. No. 34 of 11th January 1968 that wage board scales would be given to them. The Hon. Chief Minister announced on 14th May 1970 the Government's decision on Wage Board's recommendation. But it has been specifically stated that the basic pay content alone would be increased. What is the result? Some had been drawing higher scales before the Government's taking over the undertaking. Instead of giving them the pay protection, their basic pay structure had been reduced. Some stand to lose by Rs. 45 to Rs. 60. This should be attended to. Let the Chairman of the Board review these cases and do justice.

I have come to the Basin Bridge Power House. Three categories of workers are there, viz., Operation and maintenance, distribution and construction. What happens is this. The employees in construction are not regularised. They are sent out after construction is over or sent to other places in some cases. What I say is, let Government see to it that their services also are regularised and given same facilities as those in operation and maintenance and distribution. Let a common seniority role be maintained. Most of them in the 'construction' had learnt the work. It should be possible to transfer them later to other areas, wherein construction work may remain.

I have only one more point to say about Ennore Thermal Scheme. I want the attention of the Hon. the Chief Minister to what I am saying. The Hon. Chief Minister may pay a visit there. There are four unions and four rooms were given for the four unions one room for each union. They were constructed, when Mr. Kumaraswamy was Construction Engineer. Adjacent to this, there is a temple. Suddenly a brain wave came to the present Superintending Engineer that a compound wall should be





constructed on all four sides of E.T.S. for purposes of security. I do not blame it. It is necessary for security reasons. In front of our union a black-board is kept. Each worker can come and write what he wants on the board. But now the compound wall had been constructed just in front of our union offices and there is no entrance. We cannot go to the Union Office straightaway, whereas the entrance to the temple is not blocked probably because religious sentiments are involved in it. Of course. I am not against it. What we wanted was that the same facility should be given to our Union Offices also.

So, for the four Union Offices no entrance has been provided. The employees there represented the matter to the concerned Engineer but it has been completely rejected by him. I am just pointing out the psychological effect it would have on the employees. It is not the rupee or paise which matters but it is the ill-feeling of the workers which matters. Therefore, I would request the Hon. Chief Minister to spare some time and visit that place or at least depute somebody to find out what exactly is the state of affairs there. This is not the way to deal with the workers and it hurts their feelings. The representation made by them has been rejected and so there exists an ill-feeilng among them. All these things should be avoided. This is not the way you should deal with them.

தட்டிக்கொடுத்து வேலே வாங்க வேண்டும்.

Now my only request is that let us not try to destroy the good relationship existing between management and labour whether a union is manned by persons belonging to the D.M.K. or the the Congress. Let us collectively take up their cause and create good relationship so that the 75,000 workers will not suffer. My last request to all the Trade Union Leaders is that they should keep national interest above their own party interest.

Thank you, Sir.

*திரு. எஸ். அக்னிராஜு: மதிப்பிற்குரிய தலேவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதிநிலே அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே, மின்சார உற்பத்தி செய்யும் பல மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவதாக இருக்கிறது. முதலாவதாக மராட்டியமும், இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடும். அதற்குப் பின்னலேதான் மற்ற மாநிலங்கள் அமைந்திருக்கின்றன என்பதைப் படிக்கும்பொழுது தமிழகத்தைப் பொறுத்த அளவில் மின்சார வாரியம் எந்த அளவிற்கு வேகமாகத் தன் வேலேகளைச் செய்துகொண்டிருக்கிறது என்று நாம் பெருமைப்படுகிறோம்.

நம்முடைய தமிழக மாநிலத்திலே இந்த ஆண்டிற்குள்ளாக கிட்டத்தட்ட 2,185 மெகவாட்டாக உற்பத்தி செய்ய முடியுமென்ற கணக்குப்படி இங்கே மின்சார வாரியம் பணியாற்றிக்

[திரு. எஸ். அக்னிராஜு] [1970 ஆகஸ்ட் 25

கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் மூலதனத்தோடு, இந்த வரவு—செலவுக் கணக்குப்படி பணியாற்றும் இந்த வாரியம் தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை கிராமங்களுக்கும் 72-ம் ஆண்டிற்குள்ளாக மின்சாரத் தொடர்பினைச் செய்து விடுவோம் என்று முதலமைச்சரின் சீரிய திட்டத்தோடு பணியாற்றிக்கொண்டு வருகிறது. அப்படிப் பணியாற்றுகின்ற நேரத்தில், முன்பு நாம் பார்த்திருக்கிறோம். மின்சார வெட்டு வருகிறது என்று சொல்லி முன்கூட்டியே தொழில் ஸ்தம்பித்துப் போகிற நிலையிருந்தது. இன்று அந்த நிலை மாறி, கேரளாவுடனும், மைசூருடனும் தொடர்பு கொண்டு, மூன்று மாநிலங்களும் ஒன்றாக இருந்து, ப்ரேக் டவுன் செய்யாத அளவில் மின்சார வாரியம் பணியாற்றுகிறது என்று சொன்னால், 20 ஆண்டுக் காலத்தில் செய்ய முடியாத ஒரு சாதனையைத் தமிழக சர்க்கார் செய்திருக்கிறது என்று பாராட்டுகின்ற ஒரு நல்ல நிலைமையைப் பெறுகிறது.

சிறப்பு கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டம் என்ற அடிப்படையில் மின்சார வாரியத்தின் வரவு—செலவுத் திட்டத்திற்கு உட்படாமலேயே கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் மூலதனத்தோடு, 72-ஆம் ஆண்டிற்குள் அத்தனை கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு செய்து தருகிறோம் என்று பணியாற்றுவதை அறிந்து, தமிழகத்திலுள்ள அத்தனை கிராம மக்களும் பாராட்டுவார்கள்.

அப்படிப் பாராட்டுகின்ற நேரத்திலே, இந்த மின்சார வாரியத்தில் இருக்கும் ஊழியர்களிடையே பல ஆண்டுகளாக, தங்களுக்கு இருக்கும் மனத்தாங்கலைப் போக்க முடியவில்லை, ஊதிய உயர்வு பற்றி பரிசீலனை செய்ய முடியவில்லை என்று இருந்த எண்ணத்தை மாற்றும் வகையில், மின்சார வாரியத்தில் பணியாற்றும் பல்வேறு ஊழியர்களின் குறைகளை உன்னிப்பாகக் கவனித்து, அவர்களுக்கு 32 ரூபாய்க்குக் குறையாத அளவில் சம்பள உயர்வு கொடுத்தது. அதனால் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் கூடுதலாக ஆகும். இதனால் தமிழக சர்க்காரை, தமிழ் நாட்டிலே உள்ள மின்சார வாரிய ஊழியர்கள் பாராட்டு கின்றார்கள்.

ஒவ்வொரு பிரிவிலேயும், மின்சார வாரியத்தில் பல குறைபாடுகள் இருப்பதை இன்று கண்டுபிடித்ததன் மூலம் எந்த அளவிற்குச் சீர்கேட்டை நிவர்த்தி செய்ய முடியுமென்ற திட்டத்தை இப்பொழுது மின்சார வாரியம் செய்துகொண்டிருக்கிறது. ஆகவே, பொருள் பட்டியல் கட்டுப்பாடு, நவீன வழியில் பொறியியல் துறையுடன் கூடிய நிர்வாகம், நிர்ணயத் திட்டங்கள் என்ற நவீன முறைகளைச் செயலாற்ற திட்டமிட்டுள்ளது. இன்று மின்சார வாரியத்தின் தலைவர்களும், மின்சார வாரியத்தின் அதிகாரிகளும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு புதிய திட்டத்தை இப்பொழுது மேற்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அரசாங்கம் "செயற்குழு" ஒன்றை ஏற்படுத்தியிருக்



1970 ஆகஸ்ட 25] [திரு. எஸ். அக்னிராஜு]

கிறார்கள். புதிய தொழிற்சாலைகளை யார் யார் துவக்குகிறார்களோ அவர்களுக்கு நன்மை செய்வதற்காகவும், இரவு நேரங்களில் யார் யார் அதிகப்படியான மின்சாரத்தை உபயோகித்து தொழில் நிறுவனங்களை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு சலுகை அளிக்கும்படியான வகையிலே செயற்குழு அமைக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், பொருளாதார வல்லுனர்களும், மின்சார வாரியத்தின் திறன்மிக்க அதிகாரிகளும் கொண்ட ஒரு துணைக் குழுவினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் துணைக் குழு மின்சாரக் கட்டணம் அமைப்புகளை ஆய்ந்து வருகின்றன.

அப்படியெல்லாம் இருந்தாலும்கூட, இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, 1 நயா பைசா என்ற கணக்கைக் காட்டி, அரசியல் செல்வாக்கை காண வேண்டுமென்று பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தி, அதன்மூலம் தமிழகத்தில் பரவலாக கொண்டு வர வேண்டுமென்று கணக்குப் போட்டார்கள். அந்தக் கணக்கு கோயம்பத்தூர் மாவட்டத்திலேயே பறிக்கப்பட்டது என்பது தெரியும். ஒரு புதுக்காசு என்று சொல்லி, தமிழகத்தில் எத்தனை பிணங்கள் விழும், அதை வைத்துக் கொண்டு கட்சியை வளர்க்கலாம், எத்தனை துப்பாக்கிச் சூடுகள் நடக்கும் என்று பலபேர்கள் கணக்குப்போட்டார்கள். ஆனால் மின்சார வாரியத்தில் உள்ளவர்கள் தலையிட்டு, முதலமைச்சரவர்கள் தலையிட்டு, ஒரு பெரிய பொறுப்பான காரியத்தைச் செய்தார்கள் என்பதை இங்கேயிருக்கும் அத்தனை பேரும் உணர்வார்கள். கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில் அப்படியிருக்கிறதே தவிர, வேறு மாவட்டங்களில், கட்டண உயர்வு பற்றியோ, இது எங்களைப் பாதிக்கிறது என்றோ எந்தச் சொல்லுமே வேறு எந்த ஒரு மாவட்டத்திலும் கிடையாது. அப்படியிருக்க, தமிழகம் முழுவதும் சொல்லுகிறார்கள், ஆகவே வெற்றி வைப்புத் தீர்மானம் என்று கொண்டு வந்து, அரசைக் கவிழ்க்க வேண்டுமென்று பிரசாரம் செய்யப்பட்டது. அது ஓய்ந்து இருக்கிறது.

ஆனால், மின்சாரத் துறை அதிகாரிகளே, மின்சார வாரியத்தில் உள்ள ஊழியர்களை இன்றும் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். நமது மின்சார வாரியத் தலைவரவர்கள் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மாவட்டந்தோறும் இருக்கும் மின்சார பொறியாளர்கள் "ஒர்க் டு ரூல்" "கோ ஸ்லோ" பாலிசியைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்வாறு பல மாவட்டங்களில் நடக்கிறது. எனவே, மாவட்ட அளவில் இருக்கும் அந்த மின்சாரப் பொறியாளர்களைக் கூப்பிட்டு, ஒரு கூட்டம் போட்டு, அங்கிருக்கும் சூப்பிரண்டெண்ட்டிங் என்ஜினியர்களிடம் உங்கள் கோரிக்கைகள் என்ன, நாங்கள் ஏற்கெனவே உங்கள் குறைகளைக் களைந்திருக்கிறோம், மீண்டும் குறைகள் இருந்தால் தீர்த்து விடுகிறோம் என்று சூப்பிரண்டெண்ட்டிங் என்ஜினியர்களுக்குச் சுற்றறிக்கை விட வேண்டும். அதற்கு இணங்காமல் பொறியாளர்கள் மீண்டும் தவறு செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. எஸ். அக்னிராஜு] [1970 ஆகஸ்டு 25

உதாரணத்திற்காக ஒன்று சொல்லுகிறேன். திருமங்கலத்திலே, மின்சார வாரியத்திற்குத் தேவையான போஸ்டுகள் இருக்கின்றன. முன்பெல்லாம் அந்த மின்சார வாரியம் போஸ்டுகளை உற்பத்தி செய்த உடனேயே எடுத்துக் கொள்ளப்படும். இன்று திருமங்கலத்தில், கிடங்கில் 400 போஸ்டுகள் இருக்கின்றன. இதைப் பொறியாளர்கள் எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். நாளைக்கு வருகிறோம்; நாளைக்கு வருகிறோம் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளுக்குத் தேவையான மெட்டீரியல்ஸ் கிடையாது. விவசாயிகளைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள். அதற்கு அரசியல் பின்னணி இருக்கிறதா என்று மின்சார வாரியத் தலைவர் அவர்களும், பொறியாளர் அவர்களும் கவனித்து நேரடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1972-ம் ஆண்டுக்குள்ளாக தமிழ் நாட்டில் உள்ள கிராமங்கள் பூராவுக்கும் மின்சாரம் தருவதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதிலே, தலைமை அலுவலகத்தில் இருந்து எலக்ட்ரிக் போல்சுக்காக தலைமை அலுவலகத்தில் இருந்து டெண்டர் விடுகிறார்கள். 24 அடி கம்பம் 88 ரூபாய் என்று அவர்கள் நிர்ணயிக்கிறார்கள். மாவட்டத்திலே இருக்கக்கூடிய எஸ். இ. 104 ரூபாய், 105 ரூபாய் என்று டெண்டர் விடுகிறார். 88 ரூபாய்க்கு மேல் போனால் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தலைமை அலுவலகத்திலே கூறுகிறார்கள். ஒன்று தலைமை அலுவலகத்திலிருந்தே முழுப் பொறுப்பையும் ஏற்று அவற்றை சப்ளை செய்யவேண்டும் அல்லது மாவட்ட அதிகாரிகளுக்கு முழுப்பொறுப்பையும் தர வேண்டும். காண்டிராக்டர்கள் வேகமாக வேலை செய்ய ஆவலாக இருந்தாலும் வேண்டிய பொருள்களை வாங்க முடியாத நிலை இருக்கிறது. மின்சாரக் கம்பங்கள் செய்யக்கூடிய இரும்புக் கம்பிகள் ஆலையில் என்ன விலை இருக்கிறதோ அந்த விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால் அதை பகிரங்க மார்க்கட் விலைக்கு வாங்க வேண்டுமென்றால் நானூறு, ஐனூறு ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டியதாகிறது. ஆகவே, அதை ஒன்று நீங்களே வாங்கித் தர வேண்டும், இல்லாவிட்டால் டெண்டரைக் கான்சல் செய்து விட்டு நீங்களே செய்ய வேண்டும்.

எனக்கு முன்பு பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மின்சார எஞ்சினியர்கள் வேலை நிறுத்தம் என்று சொன்னதைத் தொடர்ந்து வேலைக்குப் புதிய ஆட்கள் தேவை என்று விளம்பரம் வந்ததாகச் சொன்னார்கள். தமிழ் நாடு மின்சார வாரிய எஞ்சினியர்கள் இரவு 12 மணியில் இருந்து மாஸ் காஷுவல் லீவ் எடுக்கிறோம் என்று எழுதிக் கொடுத்து விட்டு மாலை நான்கு மணிக்கே வேலைக்குப் போகாமல் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். எஞ்சினியர்கள் வேலைக்கு வராமல் போனதற்குப் பிறகுதான் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. இரண்டையும் ஒன்றாகச் சொல்ல வில்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.



1970 ஆகஸ்டு 25] [திரு. எஸ். அக்னிராஜு]

மின்சார வாரியத்தில் இருக்கும் அத்தனை பேரும் ஒருங்கிணைந்து செயலாற்ற திட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மாவட்ட அளவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டியை அமைத்து அதற்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து, விவசாயிகளுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன, எந்தெந்தக் கிணற்றுக்கு மோட்டார் வைத்த பிறகும் மின்சாரம் கிடைக்காமல் இருக்கிறது, எவ்வளவு நாள் காத்து இருக்க வேண்டியிருக்கிறது, அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் கண்டு நிவர்த்திக்க எஸ். இ. தலைமையில் ஒரு கமிட்டி அமைக்க வேண்டும். எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் போய் 'செக்' பண்ணி தவறு இருக்கிறதா என்பதைக் கண்காணிக்க அதிகாரம் இருக்க வேண்டும்.

மாநில அளவில் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் மின்சார வாரிய ஊழியர்களுடைய இதயத்தில் சில குறைகள் இருக்கின்றன. அதை நீக்குவதற்கு முதல் அமைச்சர் தலைமையில் குழு அமைத்து மாநாடு வேண்டுமானாலும் கூட்டி என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, அதை எப்படித் தீர்ப்பது என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 43 கோடி ரூபாய் வரவு செலவு செய்யக்கூடிய மின்சார வாரியம், அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கக்கூடிய நிலையில் 71,000க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட அந்த வாரியம் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு ஆக்க வேலைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. வை. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் ஆண்டு அறிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக, 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்ப்போமானால் குறிப்பாக தமிழ்நாட்டில் விவசாயத் துறையிலே முன்னேறுவதற்கு மின்சார வாரியம் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய திட்டங்கள் வெற்றிகரமாக ஏற்படாது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. எல்லாக் கிராமங்களிலும் மின்சாரத்தைக் கொண்டுவந்து விடப் போகிறோம் என்று பறைசாற்றிய போதிலும் உண்மையை ஆராய்ந்து பார்த்தால் கிராமப்புறங்களில் இன்று கிடைக்கக்கூடிய மின்சாரம் அவர்களுடைய தேவைக்குப் போதுமானதாக இல்லை. கிராமங்களில் எல்லாம் மின்சாரம் என்று அரசாங்கத்திற்கு விளம்பரம் கொடுப்பது மாதிரிதான் இருக்கிறதே தவிர கிராமப்புறங்களில் கொடுக்கப்படும் மின்சாரம் விவசாயத் துறைக்குப் போதுமானதாக இல்லை.

சில கிராமங்களில் அவசர அவசரமாக போஸ்ட்டுகள் நடப்படுகின்றன. சில கிராமங்களில் குழிகள் பறிக்கப்படுகின்றன. சில கிராமங்களில் ஒயர்கள் இழுக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கிராமத்திற்கும் பூரணமான அளவு மின்சாரம் கொடுக்கப்படவில்லை.

[திரு. வை. சுவாமிநாதன்] [1970 ஆகஸ்ட் 25

ஒரு கிராமத்தில் போடப்பட்ட போஸ்ட்டுகள் அடுத்த கிராமத்தில் வேலை தொடங்குவதற்கு முன்னதாகவே கீழே விழுந்துவிடுகின்றன. கொடுக்கப்படுகின்ற மின்சாரமும் 'அவ்தி, அவதி' என்று வேலையைச் செய்து ஏதோ கொடுக்கப்படுகிறதே தவிர போதுமான அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டைப் பகிரங்கமாகக் கூற விரும்புகிறேன். சில இடங்களில் ஒயர்கள் எல்லாம் இழுக்கப்பட்ட பிறகு பஞ்சாயத்தில் பணம் கொடுக்கவில்லை என்று கனெக்‌ஷன் கொடுக்காமல் இருக்கிறார்கள். போடப்படுகின்ற பல்புகள் நான்கு நாட்களுக்குள் ஃப்யூஸ் ஆகி விடுகின்றன. சில இடங்களில் விளக்குகள் அணைக்கப்படாமல் நாலைந்து நாட்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் நிலையும் இருக்கிறது. சென்னையில் மவுண்ட் ரோடிலே வேண்டுமானால் நல்ல முறையில் விளக்குகள் போட்டிருக்கலாம். ஆனால் சென்னை யிலேயே மற்றப் பகுதிகளில் இன்னும் சோழர் காலத்து விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம்.

திருச்சி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் மின்சாரம் கொடுப்பது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தென் மதராஸ் எலக்ட்ரிசிடி சப்ளை கார்ப்பரேஷன் என்றும், மின்சார வாரியம் என்றும் செயல்படுகின்றன. தென் மதராஸ் எலக்ட்ரிசிடி சப்ளை கார்ப்பரேஷன் திருச்சி ஜில்லாவில் பெரும்பகுதியில் சப்ளை செய்கிறது. நண்பர் சொன்னார்கள்—கோவை தவிர மற்ற மாவட்டங்களில் கிளர்ச்சி இல்லை என்று. கோவை மின்சார வாரியத்தின் மூலம் கொடுக்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் தனிப்பட்ட கம்பெனிகள் மூலம் கொடுக்கப்படுகிறது. அங்கெல்லாம் 9 பைசாவுக்கே கிளர்ச்சி செய்கிறார்கள், ஆனால் திருச்சி மாவட்டத்தில் 12 பைசா விவசாயிகளிடமிருந்து வசூலிக்கிறார்கள். இதைக் குறித்து பல தீர்மானங்கள் அனுப்பியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மின்சார வாரியம் இருக்கும் பகுதிகளில் 9 பைசா என்று இருக்கும்போது எங்கள் பகுதி விவசாயிகள் 12 பைசா செலுத்த வேண்டுமென்று இருப்பது எவ்வளவு தூரம் எங்களைப் பாதிக்கும் என்பதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும். சில சமயங்களில் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்காவிட்டாலும் மினிமம் தொகையைக் கட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். கட்டணத்தை மாதா மாதம் வசூலிக்காமல் மொத்தமாக திடீரென்று ஆயிரம் ரூபாய் கட்டு என்றால் விவசாயி அந்தத் தொகைக்கு எங்கே போவான்? அவன் எப்படிக் கட்ட முடியும்?

இம்மாதிரியான ஒரு சூழ்நிலை அங்கிருக்கிறது. இதுகுறித்து மின்சார போர்ட் சேர்மன் அவர்கள் பரிசீலித்து உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கிராமத்தில் ஒரு பம்ப் செட்டுக்கு கனெக்‌ஷன் கொடுக்கவேண்டுமென்றால் அதற்கு ஐயாயிரம் ரூபாய் ஆகிறது. அந்தப் பணம் பூராவையும் கட்டினால்தான் உங்கள் கிணற்று பம்ப்



1970 ஆகஸ்ட் 25] [திரு. வை. சுவாமிநாதன்]

செட்டுக்கு கனெக்‌ஷன் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஒரு விவசாயி ரூபாய் ஐயாயிரத்தையும் மொத்தமாக கட்டவேண்டுமென்றால் அவன் எப்படி விவசாயம் செய்ய முடியும்? அவர்களைக் கேட்டால், அரசாங்கம் எங்களுக்கு உதவி செய்கிறதா, கடன் கொடுக்கிறதா என்று கேட்கிறார்கள். எங்களிடத்தில் பணம் கிடையாது. அரசாங்கம் கடன் கொடுத்தால் நாங்கள் செய்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே நான் சொல்வது, இந்த சவுத் மதராஸ் எலக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷனை ஒன்று அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும் அலலது அவர்களுக்கு கடனாவது கொடுக்கவேண்டும். இல்லாவிடில் ஒரு கிராமத்திற்கும் நாம் மின்சார விஸ்தரிப்பு செய்ய முடியாது. அவர்களைக் கேட்டால் நாங்கள் மின்சார வாரிய சேர்மனை சந்தித்தோம் என்று சொல்கிறார்கள். ஐந்தாறு தடவை அவர்கள் வந்து சந்தித்து விட்டுப்போனார்களே தவிர ஒரு முடிவிற்கும் வரவில்லை. அவர்கள் வருகிறார்கள், சந்திக்கிறார்கள், போகிறார்கள். ஆனால் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஆகவே இனிமேலாவது மின்சாரம் போடப்படாத கிராமங்களை யாவது மின்சார வாரியம் எடுத்துக்கொள்ளவேண்டும். கார்ப்ப ரேஷனை எடுத்துக் கொள்ள அரசாங்கத்திற்கு நிதி வசதி இல்லாமல் இருக்கலாம். ஆனால் மின்சாரம் போடப்படாத கிராமங்களில் மின்சார வாரியம் ஏற்று மின்சார வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியம் கொடுக்கும் மின்சாரம் தெரு விளக்குகளுக்கு கொடுக்கப்படுகிறதே தவிர விவசாயக் காரியங்களுக்கு கொடுக்கப் படுவதே கிடையாது. எதற்காக கிராமங்களில் மின்சாரம் கேட்கிறார்கள்? இரவில் வெளிச்சம் போடுவதற்காகவா கேட்கிறார்கள்? கிராமங்களில் பம்ப் செட்ஸ் வைக்கவேண்டும், கிணற்றுப் பாசனம் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மின்சாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஊரில் வெளிச்சம் போட்டு பார்க்கவேண்டுமென்று எந்த விவசாயியும் கிராமங்களுக்கு மின்சாரம் கேட்பதில்லை. தெரு விளக்குகள் மட்டும் போடுவதால் பிரயோஜனம் இல்லை. பஞ்சாயத்து ஓவர் ஹெட் டாங்குக்குக் கூட மின்சாரம் கொடுப்பதில்லை, ஆகவே மின்சாரம் பம்ப் செட்களுக்காக கொடுக்க வேண்டும், தொழில் துறைகளுக்கு கொடுக்கவேண்டும், பஞ்சாயத் துக்களுக்கும் கொடுக்கவேண்டும். ஏதோ தெரு விளக்குகள் இரண்டிற்கு கொடுக்கிறார்கள். பஞ்சாயத்து தலைவர்கள் சந்திக் கிறார்கள், எங்கே விளக்குகள் போடவேண்டுமென்று காண்பிக்கிறார்கள். அங்கு போடுகிறார்கள். பஞ்சாயத்து தலைவர் களுக்கு வேண்டியவர்கள் இடமாகப் பார்த்து போடுகிறார்கள். ஆகவே எந்தெந்த இடங்களில் போடவேண்டுமென்று கிராம மக்களை வைத்துக்கொண்டு நிர்ணயித்தால்தான் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும்.

ஹரிஜனத் தெருக்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து தலைவருக்கு பிடிக்காத இடங்களை ஒதுக்கி விடுகிறார்கள். அவர்களுக்குப்பிடித்த இடத்தில்தான் போடுகிறார்கள். ஆகவே கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கும்போது அதுபற்றி வாரியம் பரிசீலித்து கிராமங்களின் தேவைகள் என்ன, எவ்வளவு பம்ப் செட்களுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டும், எந்தெந்த இடங்களில் விளக்குகள் போடவேண்டும் என்பதையெல்லாம் நன்கு பரிசீலித்துப்பார்த்து ஆவன செய்யவேண்டும்.

போடப்பட்ட விளக்குகள் சரியாக எரிகிறதா என்று அடிக்கடி பரிசிலனை செய்யவேண்டும். சிலயிடங்களில் அவசர அவசரமாக திறப்பு விழா செய்துவிட்டு அடுத்த கிராமத்திற்குப் போய்விடுகிறார்கள். விளக்கு எரியவில்லை என்றால் ஓ அன்ட் எம் யிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டால் எங்களிடம் சார்ஜ் ஒப்படைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார வாரிய ஊழியர்களின் குறைகள் போக்கப்படவேண்டும். பே கமிஷன் அங்கீகரித்த சம்பள விகிதம் 1—12—1969 முதல்தான் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. மத்திய அரசு ஊதிய போர்ட் சிபார்சு பிரகாரம் 1—4—1969 முதல் அது கொடுக்கப்படவேண்டும், ஆகவே அதையும் பரிசிலித்து எந்தத் தேதியில் அது அமுலுக்கு வந்ததோ அந்தத் தேதியில் இருந்து கிடைக்கும்படி செய்ய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இந்தப் புது சம்பள விகிதம் பல பேர்களுக்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே எல்லோருக்கும் சமமாகக் கொடுக்கப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டும். பழைய சம்பள விகிதமே இன்னும் பலயிடங்களில் கொடுக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ஊழியர்களின் குறைகள் போக்கப்படவேண்டும்.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல ஏ.ஈ.-க்கள் ஸ்ட்ரைக் காரணமாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். தினசரி ஒரு ஏ.ஈ. வந்து கொண்டேயிருக்கிறார்கள். இந்நிலை நீடித்தால் கிராமங்களில் மின்சார வசதி கிடைப்பது தாமதமாகும். ஆகவே பழி வாங்கும் நிலையை ஏற்படுத்தாது அவர்கள் தங்கள் வேலைகளை நல்ல முறையில் செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். 1972-க்குள் கொடுக்காவிட்டாலும் 1974-ல் ஆவது பாதிக் கிராமங்களுக்காவது மின்சார வசதி கிடைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. டி. அண்ணாமலை: வணக்கத்திற்குரிய தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையையும், 1969-70-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை





யையும் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மின்சார வாரியமும் தமிழ்நாட்டில் சிறந்த முறையில் தொண்டாற்றி வந்திருக்கின்றன. பேச்சளவில் சொல்லவில்லை, கொடுக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால் அது நன்கு புலப்படும். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். கிராமத்திலிருந்து வருகிற ஒருவன் என்ற முறையில் கிராமங்களுக்கும் இந்த அரசும் அதற்கு உறுதுணையாக மின்சார வாரியமும் தங்களது கடமைகளை ஆற்றியிருப்பது கண்டு நான் உண்மையில் பூரிப்படைகிறேன்.

அது மட்டுமல்ல, அதைக் கண்டு கிராமத்திலுள்ள விவசாயி என்ற முறையில் இன்னும் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த அறிக்கையின் 13-வது பக்கத்தைப் பாருங்கள். பதினைந்து ஆண்டு காலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது மின்சார வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 22, 137. ஆனால் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு வாரியத்தின் உறுதுணை கொண்டு சென்ற நான்கு ஆண்டுகளில் 35,677 கிராமங்களுக்கு விளக்கேற்றி வைத்திருக்கிறது. ஆக ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் கிராமங்கள் விதம் நாம் தொண்டு செய்திருக்கிறோம். அவர்கள் தொண்டு செய்தது ஆண்டொன்றுக்கு 1,500 விதம். அவர்களை விட நாம் 200 சதவீதம் அதிகமாக தொண்டு செய்திருக்கிறோம். அதை ஒப்புக்கொள்ள தவறிவிட்டார்கள். மன்னித்து விடலாம். பதினைந்து ஆண்டுகளில் அவர்கள் காலத்தில் மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை 2,56,594. நாம் இந்த நான்காண்டுகளில் கொடுத்திருப்பது 2,14,309. அவர்கள் பதினைந்து ஆண்டுகளில் செய்ததை நாம் நான்கு ஆண்டுகளில் செய்திருக்கிறோம். இதையும் பாராட்ட தவறிவிட்டார்கள். அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தான் என்பதுபோல் இருக்கிறது அவர்கள் நிலை.

எனது மதிப்பிற்குரிய நண்பர் ராமமூர்த்தி அவர்கள் கதை கதையாகப் பேசினார்கள். எவ்வளவோ பேசினார்கள். அவை வாதத்திற்கு ஒவ்வாதவை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். விளக்கு எரிவது சோறு போடுமா என்றார்கள். 1972-ம் ஆண்டுக்குள் கிராமங்களில் எல்லாம் விளக்கு ஏற்றுவோம் என்று கூறினீர்களே, அது சோறு போடுமா என்று கேட்கிறார்கள். கிராமங்கள் இருள் அடைந்து மூதேவி பிடித்திருந்தது, இன்று விளக்கு ஏற்றப்பட்டு பால்வார்த்தாற்போல் நிலவொளியாகி கிராமங்கள் இன்று லட்சுமீகரமாக இருக்கின்றன. நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு வருகிறவர்கள் சொல்கிறார்கள், ஆஹா, இதல்லவா கிராமம்; இப்படியல்லவா இருந்திருக்கவேண்டும், அப்படிச் செய்யத் தவறி விட்டார்கள். ஆகவேதான் விட்டு விட்டு போக வேண்டியவர்களாகி விட்டார்கள் என்று கூறுகிறார்கள் நகரத்தில் இருந்து வருகிறவர்கள்.

அதுமட்டுமல்ல. கிராமங்களில் 5 மணி, 5½ மணிக்கு வீடுகளில் படுத்து தூங்குகின்ற பாட்டிமார்கள் விளக்கு வெளிச்சத்தில் தாங்கள் வாழ்ந்த விதத்தையும், வரலாற்றுக் கதைகளையும், பேரன்மார்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சிறுவர்கள் வெளிச்சத்தில் பந்தாட்டம் ஆடுவது எல்லா கிராமங்களிலும் வழக்கத்தில் இல்லாததினால், பலின்சப்ளாங் குடுகுடு போன்ற வேறு வித விளையாட்டுகளில் கிராமங்களில் சிறுவர்கள் ஈடுபடுகிறார்கள். இளைஞர்கள் இந்த விதமான விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். சிறுமிகள் தங்களுடைய பாவாடை பட்டாக்களை ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு, கிராமங்களில் கும்மி கோலாட்டங்களைப் போட்டுக் கொண்டு கிராமங்கள் லட்சுமிகரமாக விளங்குகின்றன. கிராமங்களில் மாலை 6 மணிக்கே இருட்டடைந்து மூதேவி அடைகிற நிலைமை மாறி, எல்லா கிராமங்களிலும் தூங்குகின்ற நேரத்தை 9 மணிக்கு மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நண்பர்களே, . . . தலைவர் அவர்களே, கிராமங்களில் இப்படிப்பட்ட நிலைமையை தோற்றுவைத்திருக்கிறது நம்முடைய மின்சார வாரியம்.

**திரு. இல. பலராமன்**. மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது நண்பர்களே என்று பேசினாரே. அப்படி அவையில் **பேசலாமா?**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அதைத் தான் அவர்களே திருத்திக்கொண்டு விட்டார்களே?

**திரு. வி. டி. அண்ணாமலை**: நகர்புறங்களில் அனுபவிக்கப்பட்டதை இப்பொழுது கிராமப்புறங்களிலும் அனுபவிக்கப்படுகிறது. கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்ட காரணத்தினால் ஒவ்வொரு வீட்டிலும் வானொலிப் பெட்டி இருக்கிறது. ஏழைகள் இருக்கிற கிராமங்களில் கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் வானொலிப் பெட்டியை அமைத்திருக்கிறார்கள். சங்கீதத்தையும் உலக ஞானத்தையும் விவசாயிகள் வானொலிப் பெட்டிகளின் மூலம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல நகரங்களிலும், மற்றும் நாட்டிலும், உலகத்திலும் என்ன நடக்கிறது என்பதைப் படிக்காதவர்கள், பத்திரிகைகளைப் படிக்காமலேயே வானொலிப் பெட்டிகள் மூலம் கேட்டுப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, காலஞ்சென்ற சர். டி. முத்துசாமி அய்யர் போன்ற ஏழை மக்கள், பாட்டாளி மக்கள் தங்கள் வீடுகளில் விளக்கு ஏற்ற வாய்ப்பு இல்லாமல், தெருக்களிலுள்ள மின் விளக்கு கம்பங்களின் அடியில் நின்று, கல்லூரி வரை படித்துத் தேர்ந்திருக்கிறார்கள். விளக்கு எரிந்தால் சோறு போடுமா என்று நல்லவர் இராமமூர்த்தி அவர்கள் கேட்கிறார்கள்.

அடுத்தபடியாக அவர்கள் என்னென்னவோ கூறினார்கள், பொறியாளர்கள், அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு ஊதியம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற பேச்சை அவர்களிடத்தில் காணோம். 75,000 தொழிலாளர்களுக்கு கர்ண பரம்பரை போல் வாரி வழங்கினார்கள், ஒரு பிடி சோறு கேட்டவர்களுக்கு ஒரு பெரிய விருந்தே வைத்தார்கள், இந்த அரசினர். கேட்டது குறைவு. கொடுத்தது அதிகம். நமது முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இருந்தபொழுது, தொழிலாளர்கள் கேட்டபொழுது சில நயா பைசா தான் கொடுத்தார்கள், 8 அணா, ஒரு ரூபாய் இப்படித்தான் ஊதிய உயர்வு கொடுத்தார்கள். ஆனால் இந்தத் தி.மு.க. அரசு உண்மையிலேயே 75,000 தொழிலாளிகளுக்கு, பாட்டாளி மக்களுக்கு வாரி வழங்க வேண்டுமென்று, அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு வாரி வழங்கவேண்டுமென்று, அவர்களுக்கு ஊதிய உயர்வை வாரி வழங்கியிருக்கிறார்கள். அதைப்பற்றி தொழிலாளர்களின் நண்பரான திரு. ராமமூர்த்தி அவர்கள் ஒரு பாராட்டு கூட தெரிவிக்கவில்லை.





எதையும் படிப்படியாகத் தான் செய்ய முடியும். நம்முடைய அரசும், மின்சார வாரியமும் தொழிலாளர்களுக்கு இப்பொழுது வாரி வழங்கியிருக்கிறார்கள். அடுத்த படியாக பொறியாளர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் சம்பள விகிதங்களில் மாற்றி கொடுக்க இருக்கிறார்கள். ஆனால், அதற்குள் அவர்கள் ஏதோ அவசரப்பட்டு விட்டார்கள். அவசரத்தின் காரணமாக சில சில்லறை சம்பவங்கள் நடந்துவிட்டன. நான் ஒரு அசிஸ்டெண்ட் இன்ஜினியரைக் கேட்டேன், என்ன இப்படி செய்து விட்டீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர், 'நாங்கள் என்ன செய்வது, நாங்களெல்லாம் படித்தவர்கள், சங்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள், எங்களுக்கு ஒன்றும் தெரியாது, இந்தத் தேதியில் இப்படி ஒரு நிகழ்ச்சி, நாடகம் நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஒரு நாள் 12 மணிக்கு, நாளைக்கு வேலைக்கு போகக்கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்கள்' என்று சொன்னார். கொஞ்சம் நிதானமாக இருந்திருக்கலாம். அவசரப்பட்டுவிட்டார்கள். அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படத்தான் போகிறது. அவைகள் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. எந்த முறையில், எப்படி தீர்க்கப்படவேண்டும் என்று அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. அவர்கள் கொஞ்சம் அவசரப்பட்டு பல காரியங்களைச் செய்துவிட்டார்கள். ஆனால் நம்முடைய அரசு அதையெல்லாம் மன்னித்து, அவர்களுக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இரும்புக் கரமா, கரும்புக் கரமா, மலர் கரமா, முத்தமா என்றெல்லாம் கேட்டார்கள். மேலே இருக்கிற அதிகாரிகள் கீழே இருக்கிற சிப்பந்திகளுக்கு அவர்கள் எப்படிச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் சொல்லித் தான் ஆகவேண்டும். அப்படியில்லாமல் கீழே இருப்பவர்கள் செய்வதெல்லாம் சரி என்று சொல்ல முடியுமா? அவர்களுக்கு இந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று

சொல்லி, 'நீங்கள் மன்னிப்பு கோருங்கள், உங்களை விடுதலை செய்கிறோம், நீங்கள் செய்த குற்றத்தை நாங்கள் மன்னிக்கிறோம்' என்று தான் சொன்னார்கள். பொறியாளர்களெல்லாம் படித்தவர்கள். அவர்கள் தாங்கள் நடக்கவேண்டிய முறைப்படி நடக்காமல், செய்யவேண்டிய முறைப்படி காரியங்களைச் செய்யாமல், தீய முறையில் நடந்துகொண்டால் என்ன ஆகும்? தமிழ் நாடே இருண்டு கிடக்கும். அது மட்டுமா? ஆலைகள் ஓடாது. அது மட்டுமா? ஆலைத் தொழிலாளர்கள் பட்டினிக்கு ஆளாவார்கள். அது மாத்திரமல்ல. எவ்வளவோ பொருள்கள் கிடைக்காமல் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு, நாட்டு மக்கள் அவதிக்குள்ளாவார்கள் அல்லவா? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு அவர்களுக்கு நல்லதைச் செய்வார்கள், செய்வதற்குத் தான் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசு செய்திருக்கிற காரியங்களில் தற்பொழுது ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்வசதி செய்து கொடுக்கும் திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்காக நிர்வாகத் துறையை மேலும் திறமை உள்ளதாக ஆக்குகிறோம் என்ற ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. மூன்று செயல் துறை பிரிவுகள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகப் பாராட்டுகிறேன். மின்சார வாரியம் செய்திருக்கிற காரியங்களைப் பாராட்டி, ராக்கெட் வேகத்தில் செய்யப்படுகின்ற மின்சார விநியோகத்திற்கான ஏற்பாடுகளைப் பாராட்டி ஆங்காங்கு இருக்கிறவர்களெல்லாம் பணம் கொடுக்கிறார்கள், சிறிது கட்டணம் ஒரு நயா பைசா, இரண்டு நயா பைசா கூடுதலாக இருந்தாலும், மனமுவந்து கொடுக்கிறார்கள். ஆனால் கோவை மாவட்டத்தில் இருக்கிற நண்பர்கள், பெருநிலக் கிழார்கள் இந்த உச்ச வரம்பு மசோதாவை, ஏழைகளுக்கு உதவுவதற்காக, ஏழைகளிடையே நிலத்தைப் பங்கிடுவதற்காக கொண்டு வருவதைப் பார்த்த உடனே, ஒரு சில பணக்காரர்கள் லட்சக் கணக்கான முதல் போட்டு இதைப் போன்ற ஒரு தீவிர திட்டத்தை உருவாக்குகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நிலை எல்லா மாவட்டங்களிலும் இருந்திருக்குமானால், விவசாயிகள் தான் பாதிக்கப்படுவார்கள். ஆனால், நிலைமை அப்படியில்லை. நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் மன்றாடியார் அவர்கள், அவர்களைச் சேர்ந்த ஒரு சில பணக்காரர்கள், நெருங்கிய உறவினர்கள், இந்த உச்ச வரம்பு சட்டத்தினால் தங்களுடைய சொத்துகள் பாதிக்கப்படும், ஆகவே, இப்படி ஏதாவது ஒரு கஷ்டத்தைக் கொடுக்கவேண்டும் என்ற முறையில் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதனால் ஒரு நன்மையும் ஏற்பட்டுவிடாது. It is a mere fuss-Much acts about nothing. அவர்கள் வீணாக ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்றால், 'நான் ஆற்றோடு வெள்ளத்தில் போனாலும் போவேன். ஓடக்காரனுக்கு காசு கொடுக்கமாட்டேன்' என்பது போலத்தான்



இருக்கிறது. வேளாண்மைத் துறையில் நெல் உற்பத்தியைக் குறைத்து, கரும்பு போன்ற பயிர்களை வைத்து பணத்தைப் பெறுவதற்குத் தான் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். அவர்கள் சில்லரைக் காசு கூடுதலாகக் கொடுப்பதற்கு மறுத்து, அது பெரிய போராட்டமாகி, அதனால் மூன்று பேர்களுடைய உயிரையே போக்குவதற்கான காரணமாக அமைந்தது. இதைப் போன்ற கெட்டவைகளைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்லது செய்யவேண்டுமென்று விரும்பினால், ஒரு சில காசுகளைத் கொடுத்தால் தான் தொண்டாற்ற முடியும், இலாகா முன்னேற முடியும், லாபகரமாக காரியங்களைச் செய்ய முடியும் என்பதையெல்லாம் அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை.

அடுத்தபடியாக, மின்சார வாரியம் பல கிராமங்களுக்கு இன்றைக்கு மின் இணைப்புக் கொடுத்துக்கொண்டு வருகிறது. இதனால் முக்கியமாக சிற்றூர்களிலெல்லாம் மின் விளக்கு எரிகிறது. இப்படிச் செய்கிறபொழுது சிஸ்டம் பெரிதாகிறது. வேலூரில் எஸ். ஈ.சிஸ்டம் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. அப்பொழுது மிகக் குறைவாக இருந்தன திட்டங்கள்; வேலை மிகக் குறைவாக இருந்தது. இப்பொழுது மிக அதிகமாக ஆகிவிட்டது. அவர்களுக்கு யார்டு ஸ்டிக் ஒன்று இருக்கிறது. எந்த முறையில் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. வந்தவாசியில் ஒரு அசிஸ்டெண்டு என்ஜினியர் இருந்தால், அவர் எட்டு எஸ். ஓ-க்களை கண்காணிக்க முடியுமா? ஒரு ஏ.ஈ. 4 எஸ். ஓ-க்களை கண்காணிக்க வேண்டும் என்றால், அது 4, 5 எஸ். ஓ-க்களாக ஆகலாம். வேலைச் சுமை ஏறலாம். வேலைப் பளு அதிகமாக ஏறும் என்பதற்காக மட்டும் சொல்லவில்லை. 5, 6 என்று எஸ். ஓக்கள் ஆகலாம். ஆனால் 7 எஸ். ஓ-க்கள் என்ற நிலைமைக்குப் போன பிறகு, மற்றொரு ஏ.ஈ. போடவேண்டாமா? அவர்களுக்கு வேலைப் பளு இருப்பதாக குறை சொல்லவில்லை. ஆனால், அவர்கள் தங்களுடைய காரியங்களை திறமையாக ஆற்றவேண்டுமென்று சொன்னால், எஸ். ஓக்களை சரியான முறையில் மேற்பார்வை விட வேண்டாமா? ஏ.ஈ. எஸ். ஓ-க்களை மேற்பார்வைவிடாவிட்டால், கிராமங்களில் பணிகள் திறமையாகவும், விரைவாகவும் நடக்குமா? ஆங்காங்கு பணிகள் சீராக நடைபெறுமா? புகார்கள் வந்தால் அது கடைசியில் யாரைப் போய்ச் சாரும்? அரசாங்கத்தைத்தான் சாரும் அல்லவா? நம்முடைய தொண்டர்கள், தொழிலாளிகள் சீராக வேலை செய்ய, அவர்களைக் கண்காணிக்க உடனடியாக தேவையான அளவுக்கு அதிகமாக ஏ.ஈ., டி. ஈ., எஸ். ஓ-க்களை அமர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காகத்தான் சொல்லுகிறேன், வடாற்காடு மாவட்டத்தில், வெல்லூர் ஸிஸ்டம், வேலூர் சவுத் ஸிஸ்டம் என்றோ அல்லது திருவண்ணாமலை ஸிஸ்டம் என்றோ ஏற்படுத்த வேண்டும். அதேபோல வந்தவாசியில், ஒரு டி. இ. வேண்டும். ஒரு டி.இ. மூன்று ஏ.இ.-க்களுக்கு மேல் பார்க்க முடியாது. இப்பொழுது 7, 8 ஏ. இ.-க்கள் இருக்கிறார்கள். வேலைப் பளுவு அதிகமாக இருக்கிறது.

வந்தவாசியில் ஏ. இ. அலுவலகத்தில் டெலிபோன் வசதி இல்லை. அவர்களுடைய தொண்டு பரவி விட்டது, பெருத்து விட்டது. ஆகவே, அதற்கு ஆதாரவாக இருக்கும் வகையில், அவருடைய அலுவலகத்தில் ஒரு டெலிபோன் இருந்தால், காலத்தை சிக்கனமாக்கலாம். எஸ்.இ., டி.இ. இவர்களோடும், இன்னும் தலைமை அலுவலகத்தோடும் தொடர்பு கொள்ள வசதியாக இருக்கும். வந்தவாசியில் இப்பொழுது இருக்கும் நிலையை மாற்றி 110 வாட்டாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது மிகவும் அவசியமானது.

எல்லாவற்றையும் விட லட்சக்கணக்காகச் செலவழித்து, எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கும்போது, எங்கோ பத்து பல்புகள் எரியவில்லை என்று புகார் சொல்லுகிறார்கள். பல்புகள் வாங்கவேண்டும் என்றால் அதற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வேண்டியிருக்கிறது. அப்படி வாங்குவதை ஏ.இ. பொறுப்பில் விட்டு விடவேண்டும். அல்லது பஞ்சாயத்து யூனியனில் பல்புகளை வாங்க வேண்டும். அப்படிச் செய்து ரெட் டேபிசத்தை அறுக்க வேண்டும்.

1972-க்குள்ளாக எல்லா கிராமங்களிலும் மின் விளக்குப் போடுவோம் என்றால், இவர்கள் வாய்ப் பேச்சுப் பேசுகிறார்கள், இது வாய் வேதாந்தம் என்கிறார்கள். மத்திய சர்க்கார் நான்கு திட்டங்களைப் போட்டார்கள். முடிவு என்ன? முதல் திட்டத்தில் என்ன, இரண்டாவது திட்டத்தில் என்ன, மூன்றாவது திட்டத்தில் என்ன முடிவுகளைக் கண்டோம்? ஏதாவது உறுப்படியாக நடந்ததா? ஆனால் இப்பொழுது நம்முடைய அரசு, அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்கிறது. அது நம்முடைய அம்பிஷன், ஆசை. கிராமங்கள்தோறும் 72-க்குள் விளக்குகள் ஏற்றவேண்டும்.

இந்த 1970-71-க்கான வரவு செலவு திட்டத்தை ஆதிரித்து, இந்த வாரியம் இன்னும் சீறும், சிறப்பும் பெற்று கிராம மக்களுக்கு நம்முடைய தொண்டு மகிழ்ச்சிகரமாக நடக்க உதவியாக இருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். இத்தனை நாளாக இருட்டிலே கிடந்த மக்கள், இன்றைக்கு நல்ல வெளிச்சத்தில் வேலைசெய்ய வாய்ப்பு இருக்கிறது. நண்பர் இராமமூர்த்தி அதைக் கூடப் பாராட்டவில்லை. ஏழை எளியவர்கள், வெயிலிலே கஷ்டப் படாமல், இரவில் நல்ல வெளிச்சத்தில் கட்டுகளை அடிக்கிறார்கள், வைக்கோல் போர் போடுகிறார்கள். புணையல் அடிக்கிறார்கள், முன்பு இருந்த கஷ்டம் இப்பொழுது இல்லை என்று அவர்கள் சவுகரியமாக இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசையும், மின்சார வாரியத்தையும் பாராட்டுகிறார்கள். அதோடு அந்தத் தொழிலாளர்களுக்கும் நம்முடைய அரசு வாரிக் கொடுத்திருக்கிறார்கள். முன்பு. மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் சில்லரை பைசாக்களைத்தான் கொடுத்தார்கள். நம்முடைய அரசு ஒவ்வொருவருக்கும் 32 ரூபாய் அளவில் கிடைக்கும்படி கொடுத்திருக்கிறார்கள், இன்னும் சிலருக்கு





90 ரூபாய் வரையில் வருகிறது. பசி, போறு என்பவர்களுக்கு, மாதம் பூராவுக்கும் போட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். அம்தாடு, தங்களுடைய மனைவிக்கு, சேலை வாங்கவும், தாய்க்கு சேலை வாங்கவும், பையன்களுக்கு வாரி வழங்கவும் கொடுத்திருக்கிறார் என்று பாராட்டுகிறார்கள். திரு. ராமமூர்த்தி அவர்கள் அதையாவது பாராட்டியிருந்தால், சிறப்பாக இருந்திருக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி:** விவசாயத் தொழிலாளிகள், இரவெல்லாம் வேலை செய்கிறார்கள் என்றார்கள். வெளிச்சம் தந்ததால், இரவிலும் அவர்கள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார்களா?

**திரு. வி. டி. அண்ணாமலை:** நான் சொன்னேன் அறுவடை செய்து களத்து மேட்டில் கட்டுகளை அடிக்கிறார்கள், மாடுகளை வைத்துக்கொண்டு புணையல் அடிக்கிறார்கள். வெயிலில் கஷ்டப் பட்டவர்கள், இப்பொழுது குளு குளு இரவில் செய்ய முடிகிறது என்று சொன்னேன். நெல்லைத் தூத்துகிறார்கள், வைக்கோல் அடிக்கிறார்கள். ஆகவே, பெரும்பகுதி வேலையை இரவில் செய்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு இன்றைக்கு வாய்ப்பாக இருக்கிறது. அதற்காகப் பாராட்டுகிறார்கள். அதைப் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இல்லை என்றால், என் பகுதிக்கு வந்தால், நான் காட்டுகிறேன். அதையெல்லாம் அவர்கள் பார்த்தால் தன் கட்சியை விட்டு எங்கள் கட்சியிலே சேர்ந்து விடுவார்கள். (சிரிப்பு) அப்படி ஏற்பட்டால் நான் வருந்துவேன்.

பேச வாய்ப்பளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

***திரு. கே. சகாதேவக் கண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1970-71-க்கான மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டம் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே, தமிழ் நாடுதான் மின்சார விஸ்தரிப்பில் சிறந்து விளங்குகிறது. அதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு கூறிக் கொள்ள வேண்டும். பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருந்தும் 7, 8 மாதங்களாகியும், இன்னும் ஊழியர்களுக்கு பணம் கிடைக்கவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அந்தப் பணத்தை வருகிற செப்டம்பரிலாவது கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின் விளக்குகள் போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது விவசாயிகளுக்கு கொடுப்பது டிலே செய்யப்படுகிறது. அநேக இடங்களில், விவசாயிகளுடைய பம்பு செட்டுகளுக்கு மின் விசை கொடுப்பதில், அவர்கள் பம்பு செட்டு வாங்கி வைத்து இரண்டு

தவணைகள் பணமும் கட்டியிருக்கிறார்கள் என்றாலும், அவர்களுக்கு இணைப்புக் கொடுக்கப்படுவதில்லை. கேட்டால், எங்களுக்கு மின் விளக்குகளை விஸ்தரிக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது, என்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக சர்க்கார் யோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயி செலுத்தும் மின் கட்டணத்திற்கு விதிக்கும் வரியை 20 சதவிகிதத்திலிருந்து, 10 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக எப்பொழுது கேட்டாலும் கம்பம் இல்லை, வையர் இல்லை என்கிறார்கள். ஆகவே, இப்படிப் பட்ட குறைபாட்டை நீக்க, வாரியத்திலே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி, வேண்டிய சாதனங்களை எல்லாம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக மக்களுக்கும் வேலை வாய்ப்பு இருக்கும். அதோடு கூட சர்க்காருக்கும் லாபம் கிடைக்கும். செலவு குறைந்து, சிக்கனமாகவும் வேலைகளைச் செய்ய வாய்ப்பாக இருக்கும்.

குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய திருவண்ணாமலைப் பகுதியில் பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கட்சிக்காரர் சொன்னால்தான் கொடுப்போம் என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக மங்கலம் கிராமத்தில் 30—4—1970-ல் மின்சாரம் சர்வீஸுக்காக பணம் கட்டப்பட்டது. ஆனால் இன்றைய தேதி வரையில் மின்சார இணைப்பு கொடுக்கப் படவில்லை. அங்குள்ள கழகச் செயலாளர் ஒருவர், "என்னிடத்தில் வந்திருந்தால் கனெக்‌ஷன் வாங்கிக் கொடுத்திருப்பேனே" என்று சொல்கிறாராம். இப்படி பல புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. மின்சார சர்வீஸுக்கு பணம் கட்டிய ஒரு வாரத்திற்குள் கனெக்‌ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலைப் பகுதியில் ஐந்தாறு பம்பு செட்டுகளுக்குப் பணம் கட்டியும், இன்னும் இரண்டு மூன்று பம்பு செட்டுகளுக்கு கனெக்‌ஷன் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இது பற்றிய புகார்களை உடனுக்குடன் பரிசீலித்து பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஐந்தாறு ஆண்டுகள் வரை பணி புரிந்த ஊழியர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படவேண்டும். இதை ஒரு குழு பரிசீலித்து வந்தது. பதவி உயர்வை தக்க முறையில் கொடுக்கவேண்டும். மின்சார வாரியத்தில் பணியாற்ற ஆறுமாதத்திற்கு முன்பாக ஒரு தேர்வு நடந்தது. ஏதோ வேடிக்கைகள் காண்பிப்பதுபோல் தேர்வுகளை நடத்தியிருக்கிறார்கள். தேர்வு நடத்தி ஆறு மாதகாலமாகியும், தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை



கொடுக்கப்படவில்லை. யார் யார் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களுக்கு மின்விளக்குகள் விஸ்தரிப்பதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால் விவசாயிகளின் குறைகளையும் நாம் காணவேண்டும். விவசாய பம்புசெட்டுகளுக்கான மின்சார இணைப்பு தரவேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பு. செ. முத்துச்செல்வன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையைக் குறித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழக மின்சார வாரியம் இந்திய துணைக்கண்டத்திலே பெருமைப்படத்தக்க வகையில் சிறப்பான முறையில் பணியாற்றி வந்திருக்கிறது என்பதை மாற்றாரும் உணருவர். இன்றையதினம் தமிழக மின்சார வாரியம் மற்ற மாநிலங்களைவிட பெரும்பாலான, அதிகப்படியான கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்கியும், பம்ப் செட் மோட்டார்களுக்கு அதிகப்படியான மின்சாரத்தை வழங்கியும் பணியாற்றி வருகிறது. இந்தச் சிறப்பான பணியை பாராட்ட மாற்றுத்தரப்பு நண்பர்களுக்கு மனம் இல்லாவிட்டாலும், ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக, இல்லாதது—பொல்லாததுகளையெல்லாம் சொல்லிவருவது அவர்கள் வழக்கமாகக் கடைப்பிடித்து வருகிற கொள்கையாகும். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் செய்திருக்கும் பணிகளையும், 1967-ம் ஆண்டுக்கு முன்னால் இருந்த நிலைமைகளையும் எடுத்துப் பார்த்தால், கழக அரசைப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணத்திற்கே எல்லோரும் வருவர். 1972-ம் ஆண்டுக்குள் எல்லா கிராமங்களுக்கும், அமைச்சர்கள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எல்லா குக்கிராமங்களுக்கும் மின்விளக்கு வழங்க வேண்டுமென்ற சிறப்பான பணியை தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். மின்சார வாரியத்திலுள்ள 71 ஆயிரம் பணியாளரும் சிறப்பான முறையில், விரைவாக பணியாற்றி, தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக அந்தப் பணியாளர்களுக்கும், வாரியத்தின் தலைவராக பொறுப்பு ஏற்று பணியாற்றிக்கொண்டிருக்கிற தலைவருக்கும் என்னுடைய கட்சியின் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார வாரியத்தில் தலைவர் அவர்கள் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த நாளிலிருந்து அல்லும்பகலும் ஓயாது பாடுபட்டு மின்சார வாரியத்தின் வளர்ச்சிக்காக நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். அந்த வகையில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பு.செ. முத்துச்செல்வன்] [1970 ஆகஸ்ட் 25

அடுத்தபடியாக, தமிழக மின்சார வாரியம், கிராமப் பகுதிகளில் விளக்குகளுக்குத்தான் மின்சாரம் வழங்குகிறது, விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் வழங்கப்படவில்லையென்ற குறைபாடு சொல்லப்படுகிறது. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கலாம். விளக்குகளுக்கு மின்சாரம் வழங்குவது எவ்வளவு முக்கியம் என்று கருதுகிறோமோ, அந்த அளவிற்கு விவசாயத்திற்கும் மின்சாரம் முக்கியம் என்று கருதி தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்காக, தக்க அதிகாரிகளை அதிகமாக நியமித்தும், தேவையான பொருட்களை உடனடியாக தருவித்தும் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மின்சார வசதிகளைப் பெறுவதற்காக நிரம்ப கடன் உதவி செய்து வருகிறது. அந்தமாதிரியான கடன் உதவி பெறுகிற பகுதிகளுக்கு மின்சார வாரியம், விவசாய பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் தருகிறோம் என்று சொல்லி ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

(8) நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பேரவைக்கு ஒரு வருந்தத்தக்க செய்தியை அறிவிக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். இந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் இன்று இயற்கை எய்தினார்கள் என்ற செய்தியை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இந்தப் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவில் நிறுத்தி, பேரவையை ஒத்திவைக்கிறேன்.

பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

@213. Notification issued with G.O. Ms. No. 624, Home, dated the 24th March 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MYQ 266, belonging to the Co-operative for American Relief everywhere, incorporated, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



1970 ஆகஸ்டு 25]

@ 214. Notification issued with G.O. Ms. No. 1156, Agriculture, dated the 16th April 1970, in regard to appointment of certain persons as nominated members of the Kanyakumari Market Committee. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 215. Notification issued with G.O. Ms. No. 962, Home, dated the 30th April, 1970 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the Tamil Nadu Government Gazette, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under Section 133 (3) of the Motor Vehicles Act, 1939, (Central Act IV of 1939).]

@ 216. Notification issued with G.O. Ms. No. 1117, Agriculture, dated the 10th April 1970, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act, 23 of 1959).]

@ 217. Notification issued with G.O. Ms. No. 1186, Local Administration, dated the 22nd June 1970 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 23 of 1966, dated the 7th February, 1966 published at page 2 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 10th February 1966, as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)]

@ 218. Notification issued with Roc. No. 168324/69/P1, dated the 10th December 1969 in regard to exclusion and inclusion of certain areas of Sithayankottai Town Panchayat. Athoor Bodikamanvadi and Palayamkottai Panchayats and modification of the said Panchayats. [Laid on the Table of the House under Section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 219. Notification issued with Roc. No. 168392/69-P1, dated the 3rd December 1969 in regard to exclusion of certain areas from the limits of Veppankurichi Panchayat of Vridhachalam Taluk in South Arcot district and modification of the said Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 220. Notification issudd with Roc. No. 165842/69-P1, dated the 3rd December 1969 in regard to exclusion of areas from the existing Sekkodi Panchayat in Palacode sub-taluk of Dharmapuri district and constitution into a separate Panchayat

by name "Padi" Panchayat. (Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 221. Notification issued with Roc. No. 134935/69-P1, dated the 6th December 1969 in regard to exclusion of areas from the existing Veeraperumanallur Panchayat in Cuddalore taluk of South Arcot district and constitution into a separate Panchayat by name. "Kudimayankuppam". [Laid on the Table of the House under section 170 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 222. Notification issued with Roc. No. 182515/69-P1, dated the 7th February 1970, in regard to exclusion of areas from the existing Thenpair Panchayat in Villupuram taluk of South Arcot district and constitution into a separate Panchayat by name "T. Pudupalayam". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. Reports, Notifications and other papers

£ 31. The Tamil Nadu Requisitioning of Movable Property ordinance, 1970 (Tamil Nadu Ordinance No. 1 of 1970).

£ 32. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and validation of cess) Ordinance 1970 (Tamil Nadu Ordinance No. 2 of 1970).

£ 33. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Ordinance, 1970 (Tamil Nadu ordinance No. 3 of 1970).

& 34. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1969-70 (English and Tamil).

---

@ Laid on the Table of the House on 24th August 1970

£ Despatched to Members on 22nd August 1970.

& Despatched to Members on 23rd August 1970.



## இணைப்புகள்

[107-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையும், 1969-70-ஆம் ஆண்டின் துணை நிதி நிலை அறிக்கையும் இப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இப் பேரவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென நான் வேண்டுகிறேன்.

1948-ம் ஆண்டு, மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ் நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டபின் தமிழ் நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதி நிலை அறிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும் சட்டப் பேரவையினால் விவாதிக்கப் படலாம் என்றாலும் இவை வாக்கெடுப்பிற்கு உட்பட்டவை அல்ல. எனினும் இவ்வறிக்கைகள் குறித்து சட்டப் பேரவையில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும் என்பதில் ஐயமேதுமில்லை. மேலும் சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கைகளின் விவாதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையொட்டி மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கையொன்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

நவீன காலத்திற்குத் தேவையான சமூகம், பொருளாதார மாகிய முன்னேற்றங்களுக்கு மின்சாரமே பெரிதும் துணை நிற்கிறது என்பது உலகமறிந்த உண்மையாகும். மின்சாரத்தின் அவசியத்தை உணர்ந்தே அரசாங்கமும் தங்களது மாநில திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தில் மூன்றில் ஒரு பகுதியை மின்சார உற்பத்திக்காகவும், மின்சாரம் வழங்குவதற்காகவும் முறைப்படி ஒதுக்கி செயலாற்றி வருகிறது. இதுவரை 13 நீர் மின்சார நிலையங்களும், 3 அனல் மின்சார நிலையங்களும் நிறுவப்பட்டு இயங்குகின்றன. இதனால் மின்சார வளர்ச்சியும், வழங்கலும் தமிழகமெங்கும் தொடர்ந்து செவ்வனே நடைபெறுகின்றன.

1969-70-ம் ஆண்டில் மின் இணைப்பின் நிறுவப்பட்ட திறனில் 150 மெகவாட் அதிகரித்ததினால் மொத்தத் திறன் 1820 மெக வாட்டாகத் தற்போது உயர்ந்துள்ளது. தற்போது சோலையார், கோதையார், எண்ணூர் மின் சக்தி நிலையங்களில் நிறுவப்பட்டு வரும் அதிகப்படியான மின் சக்தி உற்பத்திப் பிரிவுகளால் நடப்பு ஆண்டு 1970-71, முடிவுக்குள் நிறுவப்பட்ட திறன் 2,185 மெகவாட்டாக (நெய்வேலி மின் சக்தி நிலையத்தின் 600 மெக வாட்டையும் சேர்த்துக்கொண்டு) உயருமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

[1970 ஆகஸ்டு 25

தமிழகத்தில் தற்போதுள்ள மொத்த மின் சக்தியில் 42 சத வீதம் அனல் மின்சாரமாகும். அனல் மின்சாரத்தின் பெருக்கத்தாலும், கேரளம், மைசூர் மாநிலங்களுடன் செயற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்களாலும் கோடைக்காலங்களில் வழக்கமாக நிகழும் மின்வெட்டு தவிர்க்கப்பட்டுவிட்டது என்றே கூறலாம். இத்தகைய மின்சக்தி வெட்டுகளுக்குத் தேவை நேரிடா வண்ணம் தமிழ் மாநிலத்தின் மின் தொடர் இணைப்பு கேரளம், மைசூர் மற்றும் ஆந்திர மாநிலத்தின் மின் தொடர் இணைப்புகளுடன் 230 கிலோ வோல்ட் அழுத்தத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இதனால் தென் மாநிலங்களில் ஏற்படும் மின்சாரத் தட்டுப்பாடு பெருமளவில் தவிர்க்கப்படுகிறது. குறைவழுத்த கம்பித் தொடர்களின் நீளம் 1,19,000 கிலோமீட்டர். சுமார் 25,000 மின் அழுத்த மாற்றிகள் இணைக்கப்பட்டு ஏறக்குறைய 19 லட்சம் மக்கள் மின்சாரத்தை உபயோகிக்கின்றனர். 1969-70-ம் ஆண்டில் 3,950 கிராமங்களும், சிற்றூர்களும்; மின்வசதி பெற்றுள்ளன. ஆகவே 1969-70-ஆம் ஆண்டில் இறுதியில் மின் வசதி பெற்ற மொத்த கிராமங்களும் சிற்றூர்களும், 35,677 ஆகும். தனியார் துறை மின்சார நிறுவனங்கள் மின் இணைப்பு வழங்கிய 1679 வேளாண்மை விசையேற்றங்கள் உள்பட 1969-70 ஆண்டில் மாநிலத்தில் மின் இணைப்புப் பெற்ற வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை 60,784 ஆகும். இதுவரை மாநிலத்தில் மொத்தம் 4.71 லட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 1176 அரிசன குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து தரப்பட்டு, தற்போது அதன் எண்ணிக்கை 1970 ஏப்ரல் 1-ம் தேதி வரை 4466 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நான்காவது திட்டத்தின்கீழ் மின்சார திட்டங்களுக்காக ரூ 171.30 கோடி நிதி தேவைப்படுகிறது.

1969-70-ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் மின் சக்திக்காக ரூபாய் 36.88 கோடி செலவிட வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் குறிக்கோளைவிட அதிகம் செலவிடப்பட்டதால் 1969–70-ம் ஆண்டிற்கான செலவினம் ரூபாய் 40.94 கோடியாக உயர்ந்தது. இத் திட்டத்துடன் கிராம மின் வசதிக்காக சிறப்பு திட்டத்தின் கீழ் செலவான தொகை ரூபாய் 1.12 கோடி இத் தொகை மேற்கண்ட திட்டத்தில் சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1970–71-ல், அதாவது நான்காவது திட்டத்தில் மின்சக்தி உற்பத்தி திட்டங்களுக்காக (கிராம மின் வசதி திட்டங்களுக்கு தேவையான 9 கோடி ரூபாய் நீங்கலாக), ஒதுக்கப்பட்ட ரூபாய் 34.53 கோடியாகும். வாரியத்திற்குத் தேவைப்படும் நிதி வாயில்களின் ஒரு பகுதியை நிறைவு செய்யும்பொருட்டு, தமிழ் நாடு அரசு, வாரியத்திற்குக் கடனாக ரூபாய் 3 கோடி வழங்க ஒதுக்கியுள்ளது. கூடுதலாகத் தேவைப்படும் நிதியினைத் திரட்ட



1970 ஆகஸ்டு 25]

அரசும், வாரியமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. கிராம மின் வசதி கார்ப்பரேஷன், கிராமத்திற்கு மின் வசதி செய்யும் வகையில் நல்ல ஊக்கம் காட்டி வருகின்றது. இது வரை 237.39 லட்சம் ரூபாய் கடன் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளது. நடைமுறை ஆண்டிற்காக இதுவரையிலும் ரூ. 118 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சார வாரியம் விவசாயிகளுக்கு உதவி புரியும் கார்ப்பரேஷனையும் மற்றும் பல்வேறு வங்கிகளையும் அணுகியுள்ளது. வாரியம் நிறைவேற்றும் கிராம மின் வசதி திட்டத்தில் முன்னேற்ற நோக்குள்ள கீழ்க்கண்ட வங்கிகள் 1969–70-ல் கடன் வழங்கி உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.—

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. அலகாபாத் வங்கி | — | 1 |
| 2. பரோடா வங்கி | — | 1 |
| 3. இந்திய வங்கி | — | 1 |
| 4. ஐக்கிய வணிக வங்கி | — | ரூ. 50 லட்சம் |

மேலும் இந்த வங்கிகளும் மற்றும் பல்வேறு துறையினரும் நடைமுறை ஆண்டு 1970–71-ல் கிராம மின் வசதி திட்டத்திற்கான எல்லா உதவிகளையும் தொடர்ந்து செய்வார்கள் என்றே நம்புகின்றேன்.

ஆண்டு நிதி நிலை அறிக்கையில் கீழ்க்கண்டவற்றை முக்கியமாகக் குறிப்பிட நான் விழைகிறேன் :—

AI மூலதன வரவினங்கள்.—வாரியத்தின் இவ்வாண்டின் முதலீடு வரவினம் ரூ. 44.42 கோடியாக பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுள் அரசாங்கக் கடனாக ரூபாய் 3 கோடி கிடைக்கும். மேலும் ரூ. 25.86 கோடி பிற வகைகளில் கடனாக பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சியுள்ள ரூ. 12.10 கோடி வாரியத்தின் தேய்மானக் காப்பிலிருந்தும் பிறகாப்பிலிருந்தும் சரி செய்துகொள்ளப்படும். முன் பணம் வாங்கலில் ரூ. 3 கோடி எதிர்பார்க்கப்படுகிறது.

AII மூலதனச் செலவினங்கள்.—1970-71-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு ரூ 43.41 கோடி முதலீட்டுச் செலவினங்களுக்கு வகை செய்துள்ளது. இத் தொகையில் வழக்கமாகச் செய்யப்படும் கிராம மின்சார வசதிக்கான ரூ 12.5 கோடியும் சிறப்பு வகையில் கிராம மின்சார வசதிக்கான ரூ 9 கோடியும் அடங்கும்.

பரம்பிக்குளம், ஆளியாறு நீர் மின்சார திட்டத்தின் வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன. நான்கு மின் நிலையங்களில் மொத்த மின் சக்தி அளவான 185 மெகவாட்டில், இரு மின் நிலையங்கள் மொத்தம் 90 மெகவாட் சக்தியுடன் செயல்படத் தொடங்கி விட்டன. மற்றும் சோலையார் 1 (70 மெகவாட்) சோலையார் 2 (25 மெகவாட்) சக்தி கொண்ட இரண்டு நிலையங்களும், நடைமுறையாண்டு 1970-71-ல் இயங்கவேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

[1970 ஆகஸ்டு 25

நம்முடைய பெரும் திட்டமான எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம் வேகமாக முன்னேறியுள்ளது. முதல் 60 மெகவாட் உற்பத்தி பிரிவு ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது. இரண்டாவது 60 மெகவாட் மின் உற்பத்தி பிரிவும், மூன்றாவதாக 110 மெகவாட் மின் உற்பத்தி பிரிவும் நடைமுறையாண்டில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் நான்காவதாக 110 மெகவாட் பிரிவு 1971-72-ம் ஆண்டில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையத்தில் மேலும் ஐந்தாவதாக 110 மெகவாட் மின்சார உற்பத்தி பிரிவிற்கான ஆரம்பக்கட்ட வேலைகளும் ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளன.

கோதையாறு நீர் மின்சார திட்டத்தின் வேலைகளும் செவ்வனே நடந்து வருகின்றன. மொத்தம் 100 மெகவாட் திறன் கொண்ட இரு மின்சார நிலையங்கள் நடைமுறை ஆண்டு 1970-71-ல் செயல் படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

100 மெகவாட் மின் திறன் கொண்ட பாண்டியாறு-புன்னைப்புழா நீர் மின்சார திட்டத்தை செயல்படுத்த திட்டக் கமிஷன் ஒப்புதல் அளித்துள்ளது. இது சீக்கிரம் செயலாக்க எடுத்துக் கொள்ளப் படும். மின்சக்தி தயாரிக்க உபயோகித்த தண்ணீரை ( (Tail Race water) கேரள மாநிலத்தின் ஒப்புதலுடன் தமிழ் நாட்டில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகிக்கும் சாத்தியக்கூறு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நடுவட்டம் நீர் திருப்பு திட்டத்தையும் மேற்கொண்டுள்ளோம். இதனால் நடுவட்டம் நதியின் நீர் திருப்பப்பட்டு நீலகிரி வழியாக பைகாரா தேக்கத்திற்கு கொண்டுவரப்பட்டு, பைகாரா, மோயார் மின்சார நிலையங்களில் ஏறக்குறைய ஆண்டுதோறும் 6.9 கோடி யூனிட்டுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

குந்தா நீர் மின்சார திட்டம் நான்காவது நிலையை மேற் கொள்வதற்கு திட்ட ஆணைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போதுள்ள நீர்த்தேக்கங்களை பயன்படுத்தும் இவ்வேலைத் திட்டத்தினால் இப்போது நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறனுக்கு மேல் 110 மெகவாட் கூடுதலாகும். அதாவது குந்தா மின்சக்தி நிலையம் மூன்றில், 60 மெகவாட் கூடுதலாகும், குந்தா மின்சக்தி உற்பத்தி நிலையம் நான்கில் 50 மெகவாட் கூடுதலாகும். பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் கம்பெனியாரின் மூலமாக கனடாவிலிருந்து மின்சார உற்பத்தி சாதனங்களை பெறும் நடவடிக்கை தற்போது நடந்து வருகின்றன.

மேற்கூறியவாறு மின் சக்தியை பெருக்கியபோதிலும், பாசன மில்லாப் பருவ காலத்தில் மின் இணைப்பின் உற்பத்தித்திறன். (பழுதுபடும் பொறிகளை நீக்கிய பிறகு) 1973-74-ம் ஆண்டில் (நெய்வேலி உட்பட) 1670 மெகவாட் ஆகவே இருக்கும். இந்த ஆண்டில் மின்சாரத் தேவை சுமார் 2,220 மெகாவாட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நான்காவது திட்ட



1970 ஆகஸ்டு 25]

இறுதியில் இம் மாநிலத்தில் 530 மெகவாட் அளவு பற்றுக்குறை யாகவே இருக்கும். 200 மெகவாட் உற்பத்தித் திறனுடைய கல்பாக்கம் அணு மின் சக்தி நிலையம் ஐந்தாவது திட்டக் காலத்தில்தான் செயல்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2-வது 200 மெகவாட் திறனுடைய நிலையம் நிறுவ இந்திய அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

மேலும் மின்சாரத்தின் பற்றுக்குறையைப் போக்கவும், நமது மாநிலத்திற்குத் தேவையான அதிகப்படி மின்சாரத்தைப் பெறவும், நமது மாநிலத்தில் விவசாயம், தொழில் முதலியவை மேலும் முன்னேற்றங்கள் அடையவும் மீண்டும் 600 மெகவாட் திறன் கொண்ட மின்சார நிலையம் ஒன்றை நெய்வேலியில் துவக்க வேண்டுமெனவும் இந்திய அரசை வற்புறுத்தி வருகின்றோம்.

கீழ்க்கண்ட நீர் மின்சாரத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே துவக்கப்பட இருக்கின்றன :—

(1) நீலகிரி மாவட்டத்தில், சோழாட்டிப்புழா நீர் மின்சாரத் திட்டம் (60 மெகவாட்).

(2) மதுரை மாவட்டத்தில், சுருளியாறு நீர் மின்சாரத் திட்டம் (35 மெகவாட்).

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் மேல் தாம்பிரபரணி நீர் மின்சாரத் திட்டத்தில் சேர்ந்துள்ள சேரவலாறு மின் நிலையம் (35 மெகவாட்).

(4) கோவை மாவட்டத்தில் நெல்லித்துறை நீர் மின்சாரத் திட்டம் (50 மெகவாட்).

(5) கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலையாறு நீர் மின்சாரத் திட்டம் (35 மெகவாட்).

(6) கோவை மாவட்டத்தில், காடம்பாரை நீர் மின்சாரத் திட்டம் (100 மெகவாட்).

சோழாட்டிப் புழா, சுருளியாறு, நெல்லித்துறை ஆகிய நீர் மின்சாரத் திட்டங்களுக்குத் திட்ட அறிக்கைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனையத் திட்டங் களுக்கும் அறிக்கைகள் தயாராகி வருகின்றன.

மற்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வகுத்த "சிறப்பு கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டப்படி" இம் மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்கள், குக்கிராமங்களுக்கும் மின் இணைப்பு 1971-72-ம் ஆண்டுக்குள் தருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் "சிறப்பு கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டம்" மிகக் குறுகிய கால அளவில் சுமார் 45 கோடி ரூபாய் செலவில் அமலாக்கப்பட விருக்கிறது. இத் திட்டத்திற்கு வேண்டிய பொருள்களை சேகரிப்பதிலுள்ள தட்டுப்பாடுகளை சமாளிக்கவும் அதற்கான மூலதனத்தை சேகரிக்கவும் மின்சார வாரியம் இடையாறுது

உழைக்கின்றது. நடைமுறையாண்டு 1970-71-இல் 11,000 கிராமங்கள், குக்கிராமங்களுக்கு மின் வசதி தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் 1971-72-ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள எல்லா கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1971-72-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின் வசதி பெருக்க வகை செய்யும் "விரைவுத்" திட்டம் மின் பொறியாளர்களின் திறனுக்கு ஒரு வாலாக அமைந்துள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்கிறது. இத்தகைய வாய்ப்புக்கு வகை செய்த மாண்புமிகு தமிழக முதல்வரின் செயல் திறன் வியத்தற்குரியது.

மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான வரவு செலவு விவரங்களை விவர அறிக்கைகளில் காணலாம். 1970-71-இல் ரூ. 59.43 கோடி வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையில் மின்சக்தி உற்பத்திக்காக (எரிபொருள் செலவு உள்பட) மின்சார வாரியத்திற்கு ரூ. 6.65 கோடி செலவாகிறது. மைசூர், கேரள மாநிலங்களிலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் மின் சக்தி வாங்குவதற்காக ரூ 16.38 கோடி வகை செய்யப் பட்டுள்ளது. மேலும் தேய்மான மற்றும் இதர நிதிக்கும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், பொதுமக்கள் பிற நிறுவனங்களிடமிருந்து மின்சார வாரியம் வாங்கிய கடனுக்காக வட்டிக்கும் ஒதுக்கிவிட்டு எஞ்சியுள்ள தொகையான ரூ 6.99 கோடி அரசிடமிருந்து வாங்கிய கடனுக்கான வட்டிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஏராளமான அளவில் பணியாளர்களை வேலையில் அமர்த்திக்கொண்டுள்ள நிறுவனங்களில் மின்சார வாரியமும் ஒன்றாகும். இந் நிறுவனத்தில் சுமார் 71,000 பணியாளர்கள் தொழில் புரிகிறார்கள்.

இந்த ஆண்டு வாரியம் தனது பணியாளர்களுடன் மின்சார நிறுவனங்களுக்கான மத்திய ஊதியக் குழுவினரின் பரிவுரைகளை செயலாக்குவதைக் குறித்த இருதரப்புப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. மாண்புமிகு முதல்வருடைய ஆலோசனைக்கிணங்க வாரியம் தனது பணியாளர்களுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்தது. இவ்வுடன்படிக்கையின்படி திருத்தப்பட்ட ஊதிய வீதங்கள் 1969-ம் வருடம் டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் அமலாக்கப்பட்டன. இவ்வுடன்படிக்கையின்படி ரூ. 200-ம் அதற்குக் குறைந்த மாத ஊதியம் பெறும் எல்லா பணியாளர்களும் 32 ரூபாய்க்குக் குறையாத அளவில் அதிகப்படியான மாதாந்திர ஊதியம் (சம்பளமும், பஞ்சப்படியும் சேர்ந்து) பெறுவர். தினக் கூலி அடிப்படையில் உள்ள ஊழியர்களை மாத சம்பள அடிப்படையில் உள்ளவர்களாக மாற்றவும் வகை செய்யப்பட்டுள்ளது. மின் வாரியத்திலுள்ள அதிகாரிகளுடைய சம்பள விகிதமும் 1969-ம் வருடம்





டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்குச் சுமார் 4 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும்.

இதிலிருந்து வாரியமும், அரசும் வாரியத்தின் பணியாளர்களுக்குப் பல்வேறு நன்மைகளைச் சீரிய முறையில் செய்து வருகின்றன என்பது விளங்கும். அதைப் போலவே பணியாளர்களும் வாரியம் மேற்கொண்டுள்ள முன்னேற்றத் திட்டங்கள் அனைத்திற்கும் தங்களது உழைப்பினை மேலும் நல்ல முறையில் நல்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரம் சீரிய முறையில் வழங்கிடச் செய்யவும் செயல் துறையையும், நிர்வாகத் துறையையும், மேலும் திறமையுள்ளதாக்குவதற்கும், கிராம மின் வசதி திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், தஞ்சாவூர், தர்மபுரி, ஈரோடு ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட மூன்று செயல் துறை பிரிவுகள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மின்சார உற்பத்திச் செலவும், மின்சார விநியோகத்திற்கான செலவுகளும் பெருகியிருப்பதாலும் வாரியத்தின் ஊழியர்களுக்கு திருத்தப்பட்ட சம்பள விகிதங்களை அமல் நடத்துவதாலும் வாரியம், செலவினங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலும் நிர்வாகம், செயல் துறை கண்காணிப்பு போன்ற வகையில் திறமையுடன் இயங்குவதற்கும் நவீன வழிகளில் சில திட்டங்களைத் தீட்ட வேண்டிய நிலையில் உள்ளது. ஆகவே வாரியம் திறமையுள்ளவரை ஆலோசகராக ஏற்படுத்தி கீழ்க்கண்ட நவீன முறைகளைச் செயலாற்றத் திட்டமிட்டுள்ளது :—

(1) பொருள் பட்டியல் கட்டுப்பாடு.

(2) நவீன வழியில் பொறியியல் துறையுடன் கூடிய நிர்வாகம்.

(3) நிர்ணயத்திட்டங்கள்.

தொழில் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தற்போது நடைமுறையில் இருந்துவரும் மின்சாரக் கட்டணங்களை மேலும் சீரிய முறையில் பரிசீலிக்க அரசாங்கம் "செயற் குழு" ஒன்றை ஏற்படுத்தினர். அவர்கள் செய்த தற்காலிக பரிந்துரைகளின்படி, கீழ்க்கண்ட துறைகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் சில சலுகைகள் தரப்பட்டுள்ளன :—

(அ) புதிய தொழில் நிறுவனங்கள்.

(ஆ) இரவு நேரங்களில் மின்சாரம் உபயோகிக்கும் தொழில் நிறுவனங்கள்.

(இ) சென்னை அனல் மின் பகுதியிலுள்ள மின் சக்திப் பயன் படுத்துவோர்.

செயற்குழுவினரின் பொருளாதார வல்லுனர்களும், வாரியத்தின் திறன்மிக்க அதிகாரிகளும்' கொண்ட ஒரு துணைக் குழுவினை ஏற்படுத்தியுள்ளனர். இத் துணைக் குழு மின்சாரக் கட்டண அமைப்புக்களை ஆய்ந்து வருகின்றது. செயற் குழுவின் இறுதியான பரிந்துரைகள் துணைக் குழுவின் கருத்துக்களைப் பெற்ற பிறகு உருவாக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்படும்.

என்னுடைய உரையை முடிக்குமுன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## இணைப்பு I

கடந்த திட்டக் காலங்களில் தமிழ்நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண், விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | 1970 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| A. உற்பத்தி— | | | | | |
| 1 நிறுவப்பட்ட திறனளவு மெகா வாட்டில். | 156 | 256 | 571 | 1,070+ 300 (நெய்வேலி) | 1,220+ 600 (நெய்வேலி) |
| 2 மின்சக்தி பெறும் தேவை மெகா வாட்டில். | 110 | 172 | 381 | 717 | 1,116 |
| 3 உற்பத்தி செய்த மின்சாரமும், வாங்கப்பட்ட மின்சாரமும் (பத்து லட்சம் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,596 |
| B. அனுப்புதலும், வழங்குதலும்— | | | | | |
| 1 உயர் அழுத்த கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில். | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 50,930 |
| 2 குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில். | 5,728 | 13,005 | 35,352 | 73,198 | 118,840 |
| 3 கூடுதல் உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 129 |
| 4 உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 | 103 | 115 |

| எண், விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | 1970 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 5 பங்கிட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 24,822 |
| 6 மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (லட்சக் கணக்கில்). | 2·5 | 4·3 | 7·7 | 13·6 | 19 |
| 7 நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 94 | 120 |
| C. கிராமங்களுக்கு மின்சார வசதி— | | | | | |
| 1 மின்சார வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 35,677 |
| 2 மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 117,697 | 256,594 | 470,903 |
| D. செலவும், வருவாயும்— | | | | | |
| 1 மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்) | 23·82 | 54·01 | 133·21 | 253·28 | 399·79 |
| 2 மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்). | 3·18 | 5·94 | 15·34 | 34·67 | (மத்திய அரசு ஈடு செய்யும் தொகை நீங்கலாக.) |



## இணைப்பு II

1968–69, 1969–70, 1970–71 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு.

| எண், திட்டத்தின் பெயர். | 1968–69-ல் ஏற்பட்ட செலவு. | 1969–70-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1969–70-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு. | 1969–70-ல் ஏற்பட்ட செலவு. | 1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | 2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| I உறபத்தித் திட்டங்கள்— | | | | | |
| A. தொடர்ந்து வரும் திட்டங்கள்— | | | | | |
| 1 பெரியாறு புனல் மின்சாரத் திட்டம் II-ம் நிலை. | — 0·41 | .. | .. | .. | .. |
| 2 மேட்டூர் சுரங்கப்பாதைத் திட்டம். | — 0·51 | .. | .. | .. | .. |
| 3 குந்தா புனல் மின்சாரத் திட்டம் III-ம் நிலை. | 17·38 | 10·00 | — 26.87 | — 35·23 | 17·28 |
| 4 பரம்பிக்குளம்-ஆழியாறு புனல் மின்சாரத் திட்டம். | 2,21·99 | 2,20·00 | 2,04·03 | 1,41·29 | 37·67 |
| 5 கோதையாறு புனல் மின்சாரத் திட்டம். | 3,03·01 | 2,68·00 | 3,06·54 | 2,73·98 | 1,85·81 |
| 6 சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்துதல் IV-ம் நிலை. | 1,07·36 | 1,23·18 | 1,24·45 | 80·77 | 88·26 |
| 7 எண்ணூர் அனல்மின் நிலையம் | 14,31·51 | 17,00·00 | 15,32·90 | 17,41·99 | 7,04·00 |
| 8 பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின் திட்டம். | 10.24 | 15·00 | 51·28 | 44·29 | 150·00 |
| 9 குந்தா புனல் மின் திட்டம் IV-ம் நிலை. | .. | 5·00 | 5·00 | .. | 50·00 |
| 10 எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்துதல். | .. | 5·00 | 1·00 | .. | 50·00 |

இணைப்பு II—தொடர்ச்சி.

| எண், திட்டத்தின் பெயர். (1) | 1968-69-ல் ஏற்பட்ட செலவு. (2) | 1969-70-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1969-70-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு. (4) | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. (5) | 1970-71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| I. புதிய திட்டங்கள்— | | | | | |
| 1 நடு வட்டம் மாற்றுத் திட்டம் .. | .. | 20·00 | 1·00 | 5·12 | 50·00 |
| 2 சோழத்திப்புழா புனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | 5·00 |
| 3 மேல் தாமிரவருணி புனல் மின் திட்டத்தின்கீழ் செரவலாறு மின் நிலையம். | .. | .. | .. | .. | 5·0C |
| 4 நெல்லித்துறை புனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | 5·00 |
| 5 சுருளியாறு புனல் திட்டம் .. | .. | .. | .. | .. | 5·00 |
| II. மின்சக்தி அனுப்புதல், பங்கீட்டு வழங்குதல் திட்டம். | 7,94·10 | 4,15·00 | 8,30·14 | 5,79·07 | 7,37·75 |
| III. கிராமப் புறங்களுக்கு மின் வசதி அளித்தல். | 13,47·00 | * 8,75·00 | 12,50·00 | 12,58·33 | 12,50·00 |
| IV மின்சார நிறுவனங்களை கையகப் படுத்துதல். | .. | 25·00 | 35·00 | — 0·10 | 1,00·00 |
| V. புதுத் திட்டங்கள் குறித்த ஆய்வு .. | 4·64 | 5·00 | 5·00 | 4·47 | 10·00 |
| VI. மின் சக்தி நிறுவனம்—ஆராய்ச்சிகள். | .. | 2·00 | 0·25 | .. | 2·00 |
| மொத்தம் .. | 42,36·31 | 36,88·18 | 43,19·72 | 40,93 98 | 34,52·77 |
| கிராமப் புறங்களுக்கு மின் சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டததில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | .. | .. | 3,00·00 | 1,12·17 | 900·00 |
| ஆக மொத்தம் .. | 42,36·31 | 36,88·18 | 46,19·72 | 42,06·15 | 43,52·77 |

* நிறுவன நிதியிலிருந்து செலவிடப்படவிருக்கும் ரூ. 3·75 இலட்சம் இதில் அடங்கவில்லை.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1970 ஆகஸ்ட் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. இரங்கல் தீர்மானம்.

### சென்னை மாநில முன்னாள் பிரதமர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம்மாநிலத்தின் முன்னாள் பிரதமர், திரு. ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் நேற்றைய தினம் இறந்துவிட்ட செய்தி நேற்றே இப்பேரவைக்கு அறிவிக்கப்பட்டது. இதுகுறித்து இரங்கல் தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் இப்பொழுது முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, "1947-லிருந்து 1949-ம் ஆண்டு வரை அன்றைய சென்னை மாநிலத்தின் பிரதமராக இருந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் எதிர்பாராத வகையில் 25—8—1970-ம் நாளன்று மறைந்ததையொட்டி இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் இறந்தது அரசியல் உலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்பதை எல்லோரும் நன்கு உணர்வார்கள். அவர்கள் சுதந்திர இயக்கத்திலே பாடுபட்டு, பன்முறை சிறை வாழ்வு ஏற்று, தன்னையே பொது வாழ்க்கைக்கு அர்பணித்துக்கொண்ட ஒரு பண்பாட்டை எல்லோரும் நன்கு அறிவார்கள். மிக அமைதிக்கும் அடக்கத்திற்கும் பேர் போனவராக இருந்து, அரசியலில் அழுத்தந்திருத்தமான கொள்கைகளைக் கொண்டு, அவற்றை ஆரவாரம் இல்லாமல், மிகச் செம்மையாக நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்தார்கள் என்பதை அவர்களுடைய வாழ்க்கை வாலாற்றினைப் பார்க்கும்போது மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

1920-1921-ம் ஆண்டிலிருந்தே அரசியலில் நீங்காத் தொடர்பு கொண்டு, சுதந்திரப் போராட்ட காலத்தில் அழைத்தபோதெல்லாம் தன்னை அத்துடன் ஈடுபடுத்தி அதன்காரணமாகக் கொடுக்கப்பட்ட கடும் தண்டனையை ஏற்று அதையெல்லாம் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். 1947-லிருந்து 1949-ம் ஆண்டு வரை இந்த மாநிலத்தின் முதல்வராக இருந்தார். அப்பொழுது, மாநிலத்

தின் 'முதல்வர்' என்று இல்லாமல் 'பிரதமர்' என்ற தன்மைதான் இருந்து வந்தது. அந்தப் பிரதமர் நிலையில் இருந்து அவர் ஆட்சி புரிந்தார் என்பதை நாம் அனைவரும் நன்கு உணருவோம். அரசியலில் மிகப் பிடிவாதமான தன்மையைக்கொண்டு, நேர்மையோடும் நாணயத்தோடும் மிக உறுதியோடும் பணியாற்றுவதிலே மிகச் சிறந்த ஒருவராக அவர் விளங்கினார் என்பதையும் நாம் அனைவரும் நன்கு உணருவோம். அவருடைய புகழும் பெருமையும் எல்லோரும் நன்கு அறிந்த ஒன்றாகும். அவரிடத்தில் நல்ல பற்றும் பாசமும் பலரும் வைத்திருந்தார்கள். அது மாத்திரமல்லாமல், சிறந்த பண்புகளுக்கு உறைவிடமாகவே விளங்கினார்கள்.

அவர் பதவியைவிட்டு விலகும் சூழ்நிலை ஏற்பட்டு, ஓய்வு பெற்றதற்குப் பிறகு, அரசியலில் அதிகத் தொடர்பு கொள்ளாமல் சமூகத்திற்குப் பணியாற்றும் முறையிலே அவர்கள் ஈடுபட்டார்கள். வடலூர் இராமலிங்க அடிகளாரிடத்தில் நெருங்கிய தொடர்பும் பற்றும் கொண்டு, அந்த சன்மார்க்க நெறியைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டு, வள்ளலார் இல்லம் ஒன்றையும் வடலூரில் அமைத்து, அங்கே இருந்து நீண்ட பெருங்காலமாகப் பணியாற்றிக் கொண்டு வந்தார்கள். அங்கே ஒரு அனாதை இல்லத்தையும் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். அங்கே உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் நடத்தி வந்தார்கள். அவருடைய சொத்து முழுவதையும் அப்படிப்பட்ட இல்லங்களுக்குப் பயன்படுகிற வகையில் எழுதி வைத்து அதன்மூலமாகச் சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும் என்று கருதிப் பல பணிகளை ஆற்றிவந்தார்கள். அங்குள்ள அனாதை இல்லத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவைத் தானும் அவர்களுடன் இருந்து உண்டுவந்தார்கள் என்றும், அந்த அளவுக்கு எளிமையையும், அடக்கத்தையும் கையாண்டு வந்தார்கள் என்றும் அங்கிருப்பவர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

இப்படிப் பல்வேறு பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கியதோடு, இந்த நாடு விடுதலை பெற்ற நேரத்தில் இந்த மாநிலத்தின் பிரதமராக இருந்த பெருமையும். புகழும் அவருக்கு உண்டு. ஆகவே, நாடு விடுதலை பெற்ற நேரத்தில் பிரதமராக இருந்து, விடுதலை விழாக் கொண்டாட்டத்தைக் கொண்டாடும் ஒரு பேறு பெறுவது என்பது எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கும் ஒன்றல்ல. அந்த அரும்பெரும் பேறு கூட அவர்களுக்குக் கிடைத்தது.

இப்படிப் பல்வேறு வகையில் சிறப்பைப் பெற்றிருந்த அவர்கள் மறைந்தது தமிழகத்திற்கே பேரிழப்பாகும்; குறிப்பாக, அரசியல் உலகத்திற்குப் பேரிழப்பாகும். மன்றத்தில் பல்லாண்டுக் காலம் உறுப்பினராக இருந்து, பிரதமராக இருந்த அவர்கள் மறைந்தது பேரிழப்பாகும். 1947-லிருந்து 1969-ம் ஆண்டு வரையில் தொடர்ந்து அவர் சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்து வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டுதான் அவர்கள் ராஜினாமா



செய்து, பதவியை விட்டு விலகி விட்டார்கள். அதற்குப் பிறகு இடைத் தேர்தல் நடைபெறும் சூழ்நிலை ஏற்பட்டது. இப்படிப் பல்வேறு சிறப்புகளுக்கு உறைவிடமாக விளங்கிய அவர்களுடைய மறைவு நமக்கெல்லாம் ஆழ்ந்த துக்கத்தையும், துயரத்தையும் அளிப்பதாகும் என்று எடுத்துச் சொல்லி, அவரை இழந்து வருந்தும் அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மன்றம் ஆதரித்து ஒருமனதாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அவைமுன் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள அனுதாபத் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பிலும் என் சார்பிலும் ஆதரிக்கிறேன்.

"ஓ.பி.ஆர்." என்றால் தமிழ்நாடு பூராவும் தெரிந்த ஒரு பெயர். மிகவும் கஷ்டமான காலத்தில் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, தன்னலம் கருதாமல். பொது வாழ்க்கைக்காகவே வாழ்ந்துவந்த ஒரு பெரியார். காந்திய நெறிகளில் பற்றுக் கொண்டவர். மகாத்மா காந்தியடிகளினுடைய உத்தம சீடர்களில் அவரும் ஒருவர் என்று சொன்னால் மிகையாகாது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்ததோடு, பல்வேறு முறைகளில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரியதொரு தூணாக விளங்கினார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு முதன் முதல் இந்த மாநிலத்தின் பிரதமராக அவர் இருந்தார். சென்னை மாநிலத்தில் சுதந்திரக் கொடியை ஏற்றிவைத்த பெருமை அன்னாருக்கு உண்டு. அவர் மிகவும் நேர்மையாகவும் இருந்ததோடு, அவர் பிரதமராக இருந்த சமயத்தில் கண்டிப்பாகவும் கடினமாகவும் இருந்தார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில்—ஞாபகம் இருக்கிறது—ஒரு சில உத்தரவுகளைப் போடும்போது அவர் ஒரு இலாக்கா காரியதரிசியைக் கூப்பிட்டார்கள். விஷயத்தைச் சொன்னபோது காரியதரிசி சட்ட நுணுக்கங்களைச் சொல்லி, அந்த உத்தரவு போட முடியாது என்பதாகச் சொன்னார். 'சர்க்கார் உத்தரவு போடலாம் இல்லையா, நான்தான் சர்க்கார், உத்தரவு போடுகிறேன்' என்பதாகச் சொன்னார். அப்படி அது முடியாது, இது முடியாது என்பதாக சிவப்பு நாடா முறையில் தட்டிக் கழிப்பதை அவர் விரும்பாது, சிவப்பு நாடா முறையை ஒழித்தார்.

ஒரு சிலர் பதவியைத் துறந்தவுடன் மிகுந்த மனக்கசப்புடன் இருப்பதைத்தான் பார்க்கலாம். ஆனால் இவரோ அது மிகப் பெரிய பொறுப்பு, அதில் இருந்து விடுதலை கிடைத்ததே என்பதாக மிகவும் சந்தோஷத்துடன் சமூகப் பணியில் முழு உற்சாகத்துடன் ஈடுபட்டு வந்தார்கள். பதவியைவிட்டு விலகினாலும் நல்ல பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியும் என்பதற்கு அவர்கள் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். கல்வி அமைச்சர் அவர்கள்

சொன்னமாதிரி பொதுப்பணியில் ஈடுபட்டு வள்ளலார் இல்லம், வடலூர் ஆதார உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றை நிறுவினார்கள். விவசாயத்திலே அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. பிரதமர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றவுடன் அவர்கள் என்னுடைய பண்ணையை வந்து பார்த்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் என்னுடன் தங்கியிருந்தார்கள். என்னுடைய பண்ணை மிகவும் சிறப்பானது என்று அவர்கள் பாராட்டியது எனக்கு விவசாயத்தில் மிகுந்த உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது என்று சொன்னால் மிகையாகாது. அவர் மறைந்தாலும் கூட அவர் ஆற்றியிருக்கும்படியான தியாகப் பணிகள் மறையா. கம்பன் ஒரு அமைச்சருக்கு வகுத்துக் காட்டிய இலக்கணப்படி

> தம்முயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
> வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
> செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
> மும்மையு முணர வல்லா ரொருமையே மொழியு நீரார்.

என்பதாக வாழ்ந்து காட்டினவர்கள். அவருடைய மறைவுக்கு என் சார்பாகவும், கட்சியின் சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவை முதல்வர் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தையும் நான் ஆதரிக்கின்றேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முதல்வர் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தோடு என்னையும், என் கட்சியையும் இணைத்துக்கொள்கிறேன். காலஞ் சென்ற திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஆவேசத்துடன் ஈடுபட்டவர்களில் ஒருவர். அவரது மறைவு தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பு என்று கூறிக்கொண்டு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் இரங்கல் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

***திரு. கோ. பூவராகன்:** உதவி சபநாயகர் அவர்களே, மறைந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் நம்முடைய மாநிலத்தின் முன்னாள் பிரதமராக இருந்து ஆற்றியிருக்கும்படியான தொண்டு, ஈடு இணையற்றது. உண்மையான தியாகத்திற்கு எடுத்துக்காட்டாக நற்பணி ஆற்றிவந்தார்கள். பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னரும், அரசியலில் இருந்து விலகிய பின்னரும் சமூகப் பணியில் ஈடுபட்டு பற்றற்ற நிலையில் இருந்து அவ்வப்போது ஆலோசனை சொல்லி வந்தார்கள். அவர்களது ஆலோசனை இனிமேல் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மிகவும் வருத்தத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாட்டுக்குப் பெரிய ஞானியைப்போல இருந்து அரசியலிலும், கட்சியிலும் பெரிய பொறுப்புக்களை வகித்திருந்தும் பேராசையினை ஒழித்து சமுதாயத்திற்குச் சிறப்பான பணியாற்றியவர் இன்று மறைந்துவிட்டார்கள்.





அவர்கள் காட்டிய நெறியில் நின்று தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய சமூகத்திற்கும் பணியாற்றுவதே இன்றையதினம் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதியாக இருக்கிறது. அவர்களுடைய ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்தித்து, அவர்களது குடும்பத்தார்க்கு எங்கள் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. பி. கே. மூக்கையாத் தேவர் :** உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக மறைந்த முன்னாள் முதல்வர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களது குடும்பத்தார்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்பழுக்கற்ற உத்தமோத்தமர்கள் என்று நம் நாட்டில் போற்றப்படுகிற மிகப் பெரியவர்களில் ஒருவராக அவர் இருந்தார். அதுமட்டும் அல்ல. மேல் பதவியில் உள்ளவர்களுக்கு நீதி, நேர்மை, நாணயம் மிகவும் முக்கியம் என்பதை வாழ்ந்து எடுத்துக் காட்டியவர். நமக்கு எல்லாம் அது வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

அதுமட்டும் அல்ல, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் உள்ளவர்கள் மிகப் பெரிய பதவியை வகித்து விலகியவுடன் கிராமங்களுக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபடுவது வழக்கம். அதைப்போலவே திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களும் பதவியைவிட்டு விலகியவுடனே விவசாயத்துறையில் ஈடுபட்டு, விவசாய ஆராய்ச்சித்துறையில் பிறருக்கு வழிகாட்டியாக, எடுத்துக்காட்டாகப் பணியாற்றியிருக்கிறார்கள். மாட்டுப் பண்ணை, மற்றப் பண்ணைகளை அமைத்திருக்கிறார்கள்.

அவர் தமிழகத்தின் முதல்வராக இருந்தபோது "தமிழகத்தின் நீர் நிலைகள்" என்று ஒரு சிறிய புத்தகத்தை எழுதியுள்ளார்கள். இந்த நாட்டில் ஆறுகளை நம்பி மட்டும் இருக்கக் கூடாது. பூமிக்கடியில் இருக்கிற தண்ணீரைக் கொண்டும், பெய்கிற மழையின் தண்ணீர் ஒரு துளி கூட வீணடிக்காது பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யவேண்டும் என்பதாக—ஆறு, ஏரி, குளம், குட்டை, கண்மாய், கேணி என்பதாக வகுத்து எப்படி எல்லாம் மழைத்தண்ணீரின் ஊற்றைக் கொண்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வழிகாட்டியிருக்கிறார்கள். அவர்களது மறைவுக்கு வருந்தி என் கட்சியின்சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

***ஹாஜி ம. மு. பீர். முஹம்மது:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டு முதல் அமைச்சராக இருந்து தமிழ் நாட்டுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் சிறந்த முறையில் தொண்டாற்றி இறைவனுடைய திருவடியைச் சேர்ந்துவிட்ட திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் மறைவுக்குச் சட்டமன்றத்தில்

வந்திருக்கிற அனுதாபத் தீர்மானத்தின் மீது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் நானும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கிலக் கல்வி நன்றாகத் தெரிந்திருந்தால்தான் முதல்வராக வரமுடியும் என்கிற நிலையை மாற்றி தாய்மொழித் திறமை இருந்தாலும் போதும், சிறப்பாகத் தொண்டாற்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டிய பெருமை உயர்திரு ஓ. பி. ஆர். அவர்களைச் சார்ந்தது. இன்று அவர் காட்டிய வழியிலே நின்று நம்முடைய முதல்வர் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் ஒழுக்கத்தோடு, சீலத்தோடு, நாணயத்தோடு இந்த நாட்டின் முதல்வராக இருந்து, தர்மத்தையும், சத்தியத்தையும் நிலைநாட்டி, பதவியைவிட்டு விலகிய பின்னரும் பொதுப் பணியில் இறை பணியில் ஈடுபட்டு சிறந்து நின்றிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கொள்கிறேன்.

அவர் பதவியைவிட்டு விலகிய பின்னர் நான் ஒரு முறை வடலூர் வள்ளலார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சொற்பொழிவு ஆற்றச் சென்றிருந்த நேரத்தில் அவர்களுடைய இல்லத்திற்கு அவர்களுடைய ஆசியைப் பெறவேண்டும் என்பதாகச் சென்றேன். அப்போது அவர்கள் என்னை ஆசீர்வதித்ததோடு நின்றுவிடவில்லை. பள்ளியினர் அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கவில்லை என்றாலும், "உங்களது அழகிய தமிழ்ப் பேச்சை நானும் வந்து கேட்கப்போகிறேன்" என்பதாகச் சொல்லி என்னுடன் அவர்களும் அங்கே வந்திருந்தார்கள். முதல் அமைச்சராக இருந்தவர் தமக்கு அழைப்புக் கொடுக்கவில்லை என்பதை நினையாது, வள்ளலார் வகுத்த நெறியில் ஊறிய உயர் மனத்துடன் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். சாதி பேதமின்றி சமரச சன்மார்க்க நெறியில் நின்று உயர்ந்த அந்தத் தூயவர் மறைவுக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இறைவனுக்காக உள்ளோம். நாம் இறைவனிடமே மீள்வோம்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் திரு. ஓ. பி. ஆர். அவர்களுக்கு என் கட்சியின் சார்பில் அஞ்சலி செய்வதில் பெருமை அடைகிறேன். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே ஓரளவு நாங்கள் எல்லாம் அரசியலுக்குப் புதியதாக வந்தவர்கள். அப்போது அவர் எவ்வளவு நேர்மையாகவும் தன்னலம் இல்லாமலும் நடந்து கொண்டார்கள் என்பதை சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது. அது மாத்திரம் அல்ல, முதலமைச்சராக இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது என்று எண்ணுகிறேன். நாங்கள் எல்லாம் அன்றைய தினம் காங்கிரஸ்காரர்கள். நாங்கள் விவசாயிகளுடைய இயக்கத்தை ஏற்படுத்தி அதில்



ஈடுபட்டதற்காக, அந்த இயக்கம் அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு புறம்பாக இருந்த காரணத்தினால் அதை அடக்க வேண்டுமென்று எண்ணி, காங்கிரஸ்காரராக இருந்தாலும் எங்களையெல்லாம் பிடித்து சிறையில் அடைத்தார்கள். ஆனால் முதலமைச்சராக இருந்ததற்குப் பின்னால் அரசியலைத் துறந்து, ஆத்மார்த்தத்திலே ஈடுபட்டுக்கொண்டு வாழ்ந்திருந்தார்கள். அவர்களுடைய ஆத்மாவுக்கு அஞ்சலி செலுத்தி இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, மறைந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களைப் பற்றி இந்த அவையின் முன்னவர் பிரேரேபித்த தீர்மானத்தை, தமிழரசுக்கட்சியின் சார்பில் மிகுந்த வருத்தத்துடனும், கடமை உணர்ச்சியுடனும் ஆதரிக்கின்றேன். மறைந்த பெரியார் அவர்களோடு பல ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டவர்களுள் நானும் ஒருவன் என்பது நான் பெருமைப்படக்கூடிய ஒன்று ஆகும். அவர்களோடு மிக நீண்ட காலம் வேலூர் சிறையிலும், தஞ்சை சிறையிலும் இருந்த போது, அவருடைய உயர் குணங்களை அறிந்து கொள்ளக்கூடிய நல்ல வாய்ப்பைப் பெற்றேன். ஆண்டுதோறும் வடலூர் வள்ளலார் விழாவுக்குச் செல்லுகின்ற போதெல்லாம், நடமாடும் ராமலிங்கராகவே அவர்கள் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவருடன் வள்ளலார் கொள்கைகளைப் பற்றி உரையாடும் வாய்ப்பையும் பெற்றிருக்கிறேன். இத்தகைய சிறப்புப் பெற்ற, மதிப்பிற்குரிய பெரியவரை, வழிபாட்டுக்குரிய சான்றோரை சத்தியசீலரை இழந்துவிட்ட வருத்தம் ஈடு இணையில்லாதது. இது அவர்பால் அக்கறை கொண்ட அனைவருக்கும் உண்டு. அவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில், அவர் சாதித்த இரண்டு சாதனைகளை இந்த நேரத்திலே நினைவு கூறுவது மிகப் பொருத்தமாகும்.

கலைஞர் தி. க. சண்முகம் அவர்கள் ஒரு கிளர்ச்சியை நடத்தி பாரதியாருடைய தேசியக் கவிதைகளை நாட்டுடைமை ஆக்கவேண்டுமென்பதற்காகப் போராடினார். அக் கவிதைகளின் உரிமைகள் தனியார் கையில் இருந்த காரணத்தினால் ஆராய்ச்சியாளர்கள்—கலைத்துறையினர் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை இருந்தது. புது உலகப்பாட்டாக விடுதலை இயக்கப் பாட்டாக, சமுதாயப் பெண்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கும் பாட்டாக, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்று கோருகின்ற பாட்டாகவுள்ள அந்தக் கவியின் அற்புத இலக்கியக் களஞ்சியத்தை நாட்டுடைமை ஆக்கவேண்டுமென்று கிளர்ச்சியைத் துவக்கினார்கள். அரசங்கத்தின் சார்பில் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்கள், நஷ்ட ஈடு கொடுத்து அந்தக் கவிதைகளைப் பெற்றார்கள். இன்று நாடு முழுவதும் பாரதியின் இலக்கியத்தைப் படித்து அனுபவிக்கின்றோம். தமிழ் மொழி வளர்ச்சிக்கு, சமுதாய சீர்திருத்தத்துக்கு அவர் செய்த பெரும் தொண்டாக இதைக் கருத வேண்டும்.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 ஆகஸ்ட் 26

மற்றொரு பெரும் தொண்டு, மடாலயங்களைப் பற்றிய சட்டத்தைத் திருத்தியது. அவர் மடாலயங்களைப்பற்றியும். மடாதிபதிகளைப் பற்றியும் உயர்ந்த மதிப்பு வைத்திருப்பவர் ஆனால் முன்பெல்லாம் மடாலயங்களில் நடைபெறும் ஊழல்கள், சீர்கேடுகள் இவைகளை எல்லாம் அடக்க போலீஸாருக்கு அதிகாரம் கிடையாது திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள், மடாலயங்களில் நடைபெறும் ஊழல்களையும், சீர்கேடுகளையும் போலீஸாரின் கவனத்திற்கு வந்தால், உடனடியாக அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்று அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திக் கொடுத்தார்கள். அவர் மடாலயங்களையும், மடாதிபதிகளையும் மதித்துப் போற்றுவாராயினும் இச் சட்டத்தை அவர் திருத்தியமைத்தது அவரது நேர்மையைக் காட்டுகிறது. ஆனால், இன்றைய அரசாங்கம் அம்மாதிரி இச்சட்டத்தைத் திருத்துமேயானால், நாத்திகப் பட்டம் கட்டி விடுவார்கள்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல, தவறு யாரிடம் கண்டாலும் அதைக் கண்டிக்கும் விசேஷ மனப்பான்மை உடையவர். அவர் தீய சக்திகளோடு சமரசம் செய்துகொள்ளாதவர். அத்தகையவர் இன்றைய தினம் மறைந்து விட்டார். ஆனால், இன்று நம் வழக்கம், ஒருவர் ஆட்சியில் இருக்கும்போது அவருடைய நல்ல பணிகளைப் பாராட்டாமல், அவர் இறந்த பிறகு அவருடைய சமாதியினருகே நின்று அவருடைய நற்பண்புகளை எல்லாம் புகழ்கிறோம். இது ஒரு நல்ல அனுபவமாக இருந்து வருகிறது. எஞ்சி இருக்கும் சான்றோர்கள், அறிவாளிகள், உத்தமர்கள் ஆகியோரை நமக்கு வழிகாட்டிகளாகக் கொள்வோமாக!

* திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அவை முன்னவர் கொண்டு வந்திருக்கும் இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மறைந்த நமது ஓ.பி.ஆர். அவர்கள் ஒரு சிறந்த தேச பக்தர். தேச விடுதலைக்காகப் பாடுபட்ட ஒரு பெரியார். அவர் முதலமைச்சர் ஆக இருந்த காலத்தில் நான் காங்கிரஸ்காரனாக இருந்தேன். அவர்கள் அப்போது இந்த தேசத்திற்குப் பயன்படும்படியான ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். "சமநிலை பொருளாதாரம்" என்ற அந்தப் புத்தகத்தில் நான்கு துறைகளைப் பற்றி —உத்தியோகத்துறை, வணிகத்துறை, தொழில்துறை, விவசாயத்துறை—எழுதியுள்ளார். அதில் விவசாயத்துறையைப் பற்றி மற்றத் துறையில் ஈடுபட்டவர்களைப் போல் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளோரின் முன்னேற்றத்திற்குச் செய்யவேண்டியதை மிக விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியுள்ளார்கள். அப்பேர்ப்பட்டவர்களுடைய மறைவு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மாபெரும் நஷ்டமாகும். அத்தகைய ஒரு பெரியவர் மறைவினால் வருந்துகின்ற அவருடைய குடும்பத்தாருக்கு என் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



1970 ஆகஸ்ட் 26]

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை என் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன்.

மறைந்த செட்டியார் அவர்கள் இரண்டு வருட காலம் முதல் அமைச்சராக இருந்து நல்ல பல பணிகளை ஆற்றியுள்ளார். அவர் இந்த நாட்டில் நேர்மையின் சிகரமாக விளங்கினார். அது மட்டுமல்ல. அவர் ஆஸ்திகத்தில் மிகவும் நம்பிக்கைக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் மறைந்தது இந்த நாட்டுக்குப் பெரும நஷ்டம். என் கட்சியின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆழ்நத அனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்கும் இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. எஸ். மணி : தலைவா அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தை குடியரசுக் கட்சியின் சார்பாக ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காலம்சென்ற திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய மறைவு வருந்தத் தக்கது. அவர்களோடு இருந்தபோது அப்பொழுது நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபொழுது என்மீது அன்றைய அரசாங்கம் வாரண்ட் இஷ்யூ பண்ணியது. எங்கு பார்த்தாலும் என்னைக் கைது செய்யவேண்டுமென்று உத்தரவிடப்பட்டு இருந்தது. காரணம் அன்றைய தினத்திலே நான் சாதாரண கிஸான் லீடராக இருந்தேன். முதலமைச்சராக இருந்த அவர்கள் அப்பொழுது தஞ்சைக்கு வந்து என்னைச் சந்தித்துப் பேசும் பொழுது, கிஸான் இயக்கத்திலே உன்னுடைய இலட்சியம் என்ன, கொள்கை என்ன, எப்படி நடத்தவேண்டுமென்று நினைக்கிறாய் என்று முதல் மந்திரியாக ஆட்சியைக் கையில் கொண்டு இருந்தவர்கள் சாதாரண ஊழியராக இருந்த என்னைச் சந்தித்து, வாரன்ட் கொடுக்கப்பட்டிருந்த ஒரு கைதியை அழைத்து ஒரு மணி நேரம் பேசி கருத்துக்களைக் கேட்டார்கள். அந்த கிஸான் இயக்கத்தில் நான் பங்கு கொண்ட நேரத்தில், தந்தை பெரியாரே அதை ஆதரிக்காத நேரத்தில், அவரே அதை ஆதரிக்கவில்லை, நீ ஏன் ஆதரிக்கிறாய் என்று என்னிடத்திலே விளக்கம் கேட்டார்கள். அந்த நிகழ்ச்சி இன்றைக்கும் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. என்னுடைய இலட்சியம் எஜுகேட், ஆர்கனைஸ் அன்ட் அஜிட்டேட் என்கிற மூன்று தத்துவங்களைக் கொண்டதாச் சொன்னேன். என்ன அடிப்படையில் இதைச் செய்கிறாய் என்று என்னை கேட்டார்கள். தாழ்ந்த நிலையில் உள்ள மக்களைக் கல்வி நிலையிலே முன்னேற்றுவதற்கு மக்கள் நன்கொடைகளை வைத்து மிகப் பெரிய விடுதியை அவர்களுக்காக நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதற்கு மூன்று வருஷமாக அரசாங்க உதவி கிடைக்கவில்லை என்று சொன்னபொழுது அவர்கள் அந்த உதவியைக் கொடுத்து வாரண்டையும் ரத்து செய்தார்கள். உண்மையிலேயே ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்கிறவர்களை அடக்குவதற்குத்தான் முயற்சி

செய்வார்கள். ஆனால் அவர்கள் கிளர்ச்சியை எந்த நோக்கத்திற்காக நடத்துகிறார்கள் என்று சாதாரண மனிதர்களிடம் கேட்டு அறிந்து கொண்டு அதற்குரியதைச் செய்யவேண்டுமென்று எத்தனையோ காரியங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள்.

அவர்கள் மிகப் பெரிய தியாகசீலர், அறிவாளி, முதலமைச்சர்களுக்கு எடுத்துக்காட்டு என்று சொல்லலாம். சாதாரணமாக ஊழியர்களிடத்திலே மட்டுமல்ல, அதிகாரிகளிடத்திலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும் மிகச் சிறந்த அன்புடனும் பண்புடனும் நடந்து கொண்டார். மறைந்த எஸ்.பி. சதானந்தம் அவர்கள் டெபுடி சூப்ரன்டெண்டெண்ட் ஆகப் பணிபுரிந்து வந்தார்கள். அவர் தன்னுடைய பணியில் தயவுதாட்சண்யமின்றி நேர்மையாக இருந்தார் என்ற காரணத்திற்காக உடனடியாக அவரை எஸ். பி. யாகப் ப்ரமோட் செய்து அதே தஞ்சாவூர் ஜில்லாவிலே பணியாற்றச் செய்தார்கள். அதைக்கூட எதிர்த்த பெரியவர்கள் அப்பொழுது எப்படி டிஒய். எஸ். பி. யாக இருந்தவரை எஸ். பி. யாக உடனடியாக ப்ரமோட் செய்து அதுவும் அதே ஜில்லாவிலே வைப்பது என்று கேட்டார்கள். எனக்குத் தெரியும் என்று தன்னுடைய கருத்தை நிலைநாட்டினார்கள்.

தேச விடுதலைக்காகத் தியாகம் செய்தார்கள். ஏழைஎளியவர்களாக இருந்தாலும் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து அவற்றை நிறைவேற்றித் தருவதற்கு முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள். பண்புள்ள மிகப் பெரிய பெரியவரை நாடு இழந்திருக்கிறது, நாம் இழந்துவிட்டோம். அதற்காக இந்தச் சபையில் உள்ள அனுதாபத் தீர்மானத்தை அதரித்து என்னுடைய அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன் :** இந்தச் சபைமுன் வைக்கப்பட்டிருக்கின்ற இரங்கல் தீர்மானத்துடன் எனது கட்சியின் உணர்வுகளையும் இணைத்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

உயர்திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியாரை மிக நெருக்கமாகத் தெரிந்து பழகுவதற்கு ஆன வாய்ப்பு வாழ்க்கையிலே எனக்குக் கிடைத்தது. காங்கிரஸ் கட்சியானது சட்ட விரோதமாக்கப்பட்டது. காங்கிரஸ் கூட்டங்கள் கூட்ட முடியாத நேரத்திலே அரியலூர் என்ற ஊரிலே காங்கிரஸ் சங்கங்களின் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலே மிகவும் சிரத்தையுடன் பணியாற்றியவர் அவர். அதற்குப் பின்னால் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே உறுப்பினராக இருந்தார், நானும் அதிலே உறுப்பினராக இருந்தேன். அம்மாதிரியாகவும் நெருங்கி அவருடன் பழகுவதற்கு ஆன வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் மிகவும் ஒழுக்கமானவர் என்பதிலோ உண்மையானவர் என்பதிலோ சந்தேகமில்லை. இருந்தாலும்கூட பிரகாசம் மந்திரிசபை போனதற்குப் பின்னால் ஒரு மந்திரியை எடுத்துக் கொள்கின்ற நேரத்திலே திரு. ஓ. பி. இராமசாமி



ரெட்டியாரை எடுத்ததற்குக் காரணம் அவர் ஒழுக்கமாக இருக்கிறார், நீதியாக இருக்கிறார், உண்மையாக இருக்கிறார் என்ற காரணத்தைத்தவிர வேறு காரணம் அப்பொழுது இல்லை. முதல் மந்திரியானதற்குப் பின்னால் கமிட்டியிலே உறுப்பினராக இருக்கிறேன் என்பதால் என்னையோ மற்றவர்களையோ அவர் விட்டு வைக்கவில்லை. 107 பிரிவின்கீழ் வழக்குப் போடப்பட்டு, இடைக்கால ஜாமீன் போலீசாரால் கோரப்பட்டு நான் தர மறுத்ததால் என்னை மூன்று மாதங்கள் ஓமலூர் சப்ஜெயிலில் வைத்திருந்தார்கள். அங்கிருந்து நேராக வேலூர் ஜெயிலுக்குப் பாதுகாப்புக் கைதியாக மாற்றிவிட்டார்கள்.

ஒரு வருடம் நான் ஜெயிலில் இருந்தபொழுது திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். காங்கிரஸ் கமிட்டியின் உப தலைவராக இருந்த திரு. உபயதுல்லா அவர்களை வேலூர் சிறைக்கு அனுப்பி, தியாகிகளுக்கு நிலங்கள் கொடுக்கிறார்கள், நீங்களும் நிலம் கோரி ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடுங்கள் என்று என்னிடம் கேட்குமாறு செய்தார்கள் அவர்களும் வந்து என்னிடம் கேட்டார்கள். நான் கூறினேன், தியாகம் விலைக்கு விற்பதல்ல என்று. ஆகவே நான் நிலம் கேட்டு எழுதிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு ஹேபியஸ் கார்ப்பஸ் மனுப்போட்டு நான் வெளியே வந்தேன். அதற்குப் பிறகு அவர்களைச் சந்தித்த பொழுது அம்மாதிரிக் காரியங்களில் எது சரியானது, தவறானது என்பதைவிட நான் வகிக்கும் பொறுப்புதான் முக்கியமானது என்று கூறினார்கள். அப்படிப்பட்ட சிறந்த தன்மையுள்ள மனிதர் போய்விட்டார்.

நாடு சுதந்திரமடைந்ததற்காப் போராடி உலகாயத தேவைகளுக்காக மக்களுக்கு அவற்றைக் கொடுப்பதற்காக முதலமைச்சராக இருந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அதை விட்டுச் சென்றதற்குப் பின்னால் உலகாயத தேவைகள் மட்டுமல்ல, மக்களுக்கு ஆன்மீகத் தேவைகளும் வேண்டுமென்று கருதி இராமலிங்க சுவாமிகளின் சிஷ்யராக சில நாட்கள் இருந்தார்கள். அப்படி உலகாயத தேவைகளுக்காக மட்டுமல்லாமல், ஆன்மீகத் தேவைகளுக்காகவும் பாடுபட்டு அவற்றை மக்களுக்காக நிறைவேற்றித் தரவேண்டுமென்ற ஒரு உள்ளம் கொண்ட நல்ல மனிதரை இழந்துவிட்டோம் என்பதில் சந்தேகமில்லை. நம்முடைய அன்புப் பூர்வமான வேதனையைத் தீர்மானத்தின் மூலம் வெளிப்படுத்தும் வகையில் நானும் என்னுடைய கட்சியும் ஈடுபடுகிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, புகழுக்குரிய பெரியவர்கள் புதையுண்டு போகிறார்கள் அல்லது எரியுண்டு மறைகிறார்கள். ஆனால் அவர்கள் ஈட்டிய புகழும் கீர்த்தியும் உருவாக்கிய பெருமையும் கண்ட சீலமும் நாட்டில் என்றென்றும் அழியாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அப்படி

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 26

எடுத்துக்காட்டுகளாக விளங்குபவர்களில், மறைந்த பெரியவர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களும் ஒருவராவார். அவருடைய மறைவால் தமிழகத்து மக்கள் எந்தளவிற்குச் சோகம் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல வியலாது. ஏற்கனவே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல் விடுதலைக்குப் போராடி நான்கு முறைகள் சிறைக்கோட்டமேகி, இந்திய விடுதலை உதயமான நேரத்திலே, இணைந்த சென்னை மாநிலத்தின் பிரதமராக வீற்றிருந்து 1947 தொடங்கி 1949 முடிய இரண்டாண்டுக் காலம் இணைந்த சென்னை மாநிலத்தின் பிரதமராகச் செங்கோலோச்சி, அவர்களுடைய காலத்தில் நேர்மை, நீதி, நிர்வாகத் திறன் இவற்றிற்கெல்லாம் பெயர்பெற்றவர் என்கின்ற பெருமைமிக்க பணியினையாற்றி, அந்தப் பதவியிலிருந்து விலகிய பிறகும், 1949-ஆம் ஆண்டிலிருந்து 1969-ஆம் ஆண்டுவரையில் மேலவையின் உறுப்பினராக வீற்றிருந்து மேலவையில் பணியாற்றிய நேரத்திலும் நாட்டு மக்களுடைய குரலை, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுடைய குரலை மேலவையில் எதிரொலித்து மிகவும் நல்ல முறையில் பணியாற்றினார்கள். அவர்கள் மூன்று சகோதரர்களோடு வாழ்ந்தார்கள் என்றாலும் முதலிலே ஒரு சகோதரரை இழந்துவிட்டு இப்பொழுது ஒரு சகோதரரை விட்டு மறைந்துவிட்டார்கள். நேற்று நானும் மற்றைய அமைச்சர் பெருமக்களும் அவர்களுடைய சடலத்தைக் காண்பதற்காக அவர்களுடைய சகோதரரின் இல்லத்திற்குச் சென்ற நேரத்திலே நாம் அன்று கண்ட எளிய தோற்றத்தைக் காணமுடியாத அளவில் 76-வது வயதில் நோயுற்ற நேரத்திலே எந்த அளவிற்கு இளைத்துப் போயிருந்தார் என்பதில் மனம் வருந்தி நொந்தோம். அவர்களுக்கு வாரிசு இல்லை. வாரிசு இல்லையென்றாலும் தன்னுடைய சொத்துக்கள் முழுவதையும் சகோதரருக்கு எழுதிவைக்கவேண்டுமென்ற தன்னல நோக்கமில்லாமல் சகோதரர் வாழவேண்டுமென்று சிறிதளவு ஒதுக்கிவிட்டு ஏறத்தாழ பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை, தான் உருவாக்கிய வடலூர் இல்லத்திற்கு அறக்கட்டளையை எழுதிவிட்டு மறைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அருங்குண சீலர்—எளிய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தவர்கள்—நேர்மைக்கு குறிப்பிடத்தக்க பெரியாராக வாழ்ந்த அவருடைய மறைவால் தமிழகம் வருந்திக் கொண்டிருக்கிறது. இம் மாமன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அவையின் முன்னவர் நாவலர் அவர்கள் கொண்டுவந்த இரங்கல் தீர்மானத்தோடு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இணைத்து இந்த அளவில் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற வகையிலும் மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் ஒரு நிமிடம் மவுனமாக அவையினர் எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1970 ஆகஸ்ட் 26]

[உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை இப்போது ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் இன்று காலை 10 மணி அளவில் கூடும்.

[பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. ஆர் எட்மண்ட்) அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் காலை 10 மணிக்குக் கூடியது.

## (2) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Illicit liquor trafficking in Mylapore area*

31 * *Q.*—Thiru T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether women of other States are engaged in trafficking in illicit liquor in areas like Raja Annamalaipuram, Abiramapuram and Mylapore;

(*b*) whether any case under Madras Prohibition Act was registered against a woman belonging to other State in C. I. T. Nagar, Mylapore in the last week of January 1970 by Tamil Nadu Police ; and

(*c*) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) கார்த்திகாயினி அம்மாள் என்பவரின் மகளும், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவருமான 28 வயதான சரசா என்பவள், மயிலை, சி.ஐ.டி. நகரில் உள்ள பிஷப் வாலர் அவென்யூவில் 7/ஏ எண் வீட்டில் ரூ. 240 மதிப்புள்ள நான்கு பிளாக் நைட் விஸ்கி புட்டிகளுடன் தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் 4 (1) (அ) பிரிவின் கீழ் 31—1—1970 அன்று குற்றப்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த மதுவிலக்குப் புலனாய்வுக் கழகத்தின் காவல் துறை இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டார். சைதாப்பேட்டை மாநகர 6-வது மாஜிஸ்ட்ரேட்டினால் 5—2—1970 அன்று சி.சி. 2851/70-ம் எண் வழக்கில் அவளுக்கு ரூ. 150 அபராதமும் அல்லது அந்த அபராதத்தைச் செலுத்தத் தவறினால் ஆறு வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தப்பட்டது.

[1970 ஆகஸ்ட் 26

Thiru T. Martin : Mr. Deputy Speaker, Sir, every day we find in the newspapers that the Customs Department belonging to Central Government are unearthing heavy smuggling cases involving goods and contrabands of high value. But at the same time our Police are not showing so much interest in deteching cases like this. May I request the Hon. Chief Minister to state whether the Government are aware of the fact that cars belonging to other States especially Kerala and Mysore are paying periodical visits to the Mylapore area within the jurisdiction of Mylapore Police and whether this has been brought to the notice of the Police Commissioner and if so, whether any action has been taken in this regard?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் மற்ற மாநிலங்களிலிருந்து அப்படி ஏராளமானவர்கள் அந்தப் பகுதியில் குடியேறி இந்தக் காரியங்களைச் செய்வதாக எந்தத் தகவலும் வரவில்லை. இந்தக் கேள்வி-பதில், அதன் விளைவுகளையொட்டி போலீசார் அக்கறையோடும், தீவிரமாகவும் இதிலே கவனம் செலுத்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, தமிழகத்தில் மதுவிலக்கை தீவிரப்படுத்த, மத்திய அரசிடம் இந்த அரசு உதவித் தொகை ஏதாவது கேட்டதா? ஆமெனில், அதற்கு மத்திய அரசு என்ன பதில் தந்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைக் கேட்டதும் உறுப்பினருக்குத் தெரியும், அவர்கள் இல்லையென்று மறுத்ததும் உறுப்பினருக்குத் தெரியும்.

Thiru T. Martin : Sir, with regard to investigation and also conduct of cases booked under the Prohibition Act, the City Police is not as efficient as it was accustomed to be in the previous days. Therefore, may I request the Hon. Chief Minister to state whether any proposal is pending before this Government to appoint a Special Officer with criminal intelligence experience to advise the City Police regarding detection, investigation and conduct of cases booked under the Prohibition Act?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று அல்லாமல் மொத்தத்தில் போலீசார் திறமையுடன்தான் இப்படிப்பட்ட வழக்குகளில் நடந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் சொன்னதைப்போல், அவர்களுக்கு மேலும் கவனத்தை ஊட்டத் தக்க அளவிற்கு அறிவுரை கூறுவதற்கு இப்படிப்பட்ட அதிகாரிகள் தேவைதானா, இப்படிப்பட்ட குழுக்கள் தேவைதானா என்பதை அரசு இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.



1970 ஆகஸ்ட் 26]

## ரஷ்யாவுக்குத் தமிழ்ப் படங்கள்

*32 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரஷ்யாவுக்கு நல்ல தமிழ்ப் படங்களை அனுப்ப அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## மதுரை செந்தமிழ் கல்லூரி

*33 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள செந்தமிழ்க் கல்லூரி, தற்பொழுது கலைக் கல்லூரியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணமென்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இல்லை. ஆனால், 1969-70-ல் தமிழில் ஒரு மூன்று வருடப் பட்டப்படிப்பு துவக்க செந்தமிழ்க் கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் அனுமதி அளித்துள்ளது. இவ்விஷயம் முற்றிலும் பல்கலைக் கழகத்தினால் முடிவு எடுக்கப்படுவதாகும்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவரவர்களே. மதுரைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் அமைந்துள்ள மதுரையிலுள்ள செந்தமிழ்க் கல்லூரியில், தமிழக வரலாறு சம்பந்தமான பாடங்கள், கல்வெட்டுக்கள் சம்பந்தமான பாடங்கள் எடுக்கப்பட்டு, வேறு வகையில் பாடங்கள் இணைக்கப்பட்டிருப்பது உண்மையா? ஆமெனில், அதன் காரணம் என்ன என்பதை அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக்குழு முடிவு செய்ததற்கிணங்க செந்தமிழ்க் கல்லூரியிலும், மற்றொரு கல்லூரியிலும் தமிழை ஒரு பாடமாக வைத்து, அதற்குப் பட்டம் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. பி.யூ.சி. ஸ்பெஷல் தமிழ் பி.ஏ., ஸ்பெஷல் தமிழ், பார்ட் 2, பார்ட் 3 என்று இரண்டு பிரிவுகள் அமைத்து, 6 தாள்கள் எழுதும் அளவுக்குத் தமிழில் கொடுக்கப்பட்டு, அதற்கு டிகிரி கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு செய்து, மதுரை செந்தமிழ்க் கல்லூரியிலும், மற்றொரு கல்லூரியிலும் பி.யூ.சி. ஸ்பெஷல் டமில், புகுத்தப்பட்டது, 68-69-இல் புகுத்தப்பட்டது. 69-70-ல் பி.ஏ., ஸ்பெஷல் டமில் வைக்கப்படும் அளவிற்கு அனுமதி கிடைத்து, செந்தமிழ்க்

கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கலைக் கல்லூரிகளிலுள்ள எல்லாக் கலைப் பாடங்களும் வரும் முறை இல்லை. தமிழிலே மட்டும் பி.ஏ. முறை பல்கலைக் கழகத்தின் அனுமதியின் பேரில் நிறுவப்பட்டிருக்கிறது.

*Strike by students of Government Arts College, Madras*

* 34 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government Arts College, Madras was closed for many days due to the students strike during the month of December, 1969; and

(b) if so, what the grievances of the students are?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) பின்வரும் கோரிக்கைகளுக்காக, வேலைநிறுத்தம் நடந்தது.

(1) ஆசிரியப் பயிற்சி (பி.டி.) வகுப்பில் பொருளியல் பட்டதாரிகளையும் சேர்த்துக்கொள்ள வகை செய்தல்.

(2) மிகுதியான வேலை வாய்ப்பு ஏற்படுத்தல்.

(3) எல்லா வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகை அளித்தல்.

(4) உயர்நிலைப் பள்ளிகளில் பொருளியலை விருப்பப்பாடமாக ஏற்படுத்தல்.

*Chairman of Sangeetha Nataka Sangam*

* 35 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether a retired Principal of the Presidency College, Madras City has been appointed as the Chairman of the Sangeetha Nataka Sangam; and

(b) the grounds on which the selection has been made?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் 1970, பிப்ரவரி 13-ம் நாள் முதல் மூன்றாண்டுக் கால அளவிற்குத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(இ) அந்தப் பதவிக்கு எவ்வித குறிப்பிட்ட தகுதியும் வரையறுக்கப்படவில்லை. நிர்வாக அனுபவமிக்க டாக்டர் திரு. மணவாள இராமனுஜம் இந்தப் பதவியை வகிக்க சாலச் சிறந்தவர் என அரசு கருதியது.





**மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் கொட்டகை கட்டுதல்**

■ 36 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனை சவக்கிடங்கு அருகில் பொதுமக்கள் தங்குவதற்கு ஒரு 'செட்' (shed) அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவரவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள், ஏதாவது தங்களுக்கு வேண்டியவர்கள் இறந்துவிட்டால் அந்தச் சவத்தை வாங்கப்போகக்கூடியவர்கள் வெய்யிலும், மழையிலும் காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, அங்கே ஏதாவது தகரத்தினாலேயோ அல்லது ஆஸ்பெஸ்டாஸ் உலோகத்தினாலோ கூடிய ஒரு டின் ஷீட் போட்டு கொட்டகை மாதிரி அமைத்துக் கொடுக்க இனியாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை சவக்கிடங்கு அருகில் இது கட்டப்பட வில்லை. சவக் கிடங்கிற்குப் பக்கத்தில் மகப்பேறு பிளாக் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே வருபவர்கள் தங்குவதற்குக் கூடம் கட்ட முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. பொறியியல் துறையினர் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அது கட்டுகின்றபொழுது கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று வருகிற பார்வையாளர்கள் அங்கு தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். சவக் கிடங்கிற்குப் பக்கத்தில் உள்ள மகப்பேறு மருத்துவ மனையையொட்டிக் கட்டப்படுகிறது, அது பயன்படும்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** தலைவர் அவர்களே, மதுரை மருத்துவ மனையில் என்ன நிலைமை இருக்கிறதோ அதே நிலைதான் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மனைக்குப் பக்கத்திலுள்ள சவக் கிடங்கிற்குப் பக்கத்தில், வருபவர்களுக்கு இருக்க வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அங்கேயும் இதுபோல் 'செட்' கட்ட அரசு முயற்சியெடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பாளையங்கோட்டை மருத்துவமனை பற்றித் தனிக் கேள்வி போடவும். அது பற்றிய விபரம் இங்கு இல்லை.

DR. H. V. HANDE : In view of the fact that there is not enough space inside the compound of Madurai Erskine hospital, this waiting shed had been put up very near the mortuary. In view of all these things and in view of the fact that there had already been a programme drawn up to expand the hospital and another building was to be acquired but due to some red tape and

not proper understanding the expansion could not be gone through and new building had not been acquired. Will the Hon. Minister tell us what steps he has taken to see that the Government is able to cope up with increasing number of patients that are coming to Madurai Erskine hospital?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வருகின்ற பொது மக்கள் தங்குவதற்குக் கூடம் கட்டுவது பற்றிய விவரம் மட்டுந் தான் இருக்கிறது. விரிவுபடுத்தும் முயற்சிகள் பற்றிய விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகள்

* 37 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 1969 அக்டோபரில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** வீடு இழந்தோருக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 2,990-ம் வெள்ளத்தால் சேத மடைந்த சாலைகள், குளங்கள் செப்பனிட வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 1,50,000-ம் செலவழிக்கப்பட்டது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** எந்தெந்த இடங்களில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதைப் பற்றிய விவரங்கள் இல்லை.

### நீலகிரி மாவட்டம் பண்ணை நிலங்கள் பேரில் அடிப்படைத் தீர்வை

* 38 வினா—**திரு. கே. போஜன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காப்பி முதலியன சாகுபடி செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை நிலவரி வசூலித்து வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் நிலவரி வசூலிப்பதின் காரணம் என்ன?

(உ) இந்த அடிப்படை நிலவரியை ரத்து செய்ய, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம்.

(இ) மலைப் பகுதிகளிலுள்ள பண்ணை நிலங்கள் புன்செய் நிலங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவை சம வெளிகளிலுள்ள புன்செய் நிலங்களுக்கு இணையாகக் கருதப்படக் கூடாது என்று அரசு கருதுகிறது. எனவே, வருவாய்த்துறையின் 22-6-67ஆம் நாளிட்ட 1122ஆம் எண் அரசு ஆணையில் ஆணையிடப்



பட்ட அடிப்படைத் தீர்வைத் தள்ளுபடி, நீலகிரி மாவட்டம் உட்பட மலைப்பகுதிகளில் மலைத்தோட்டப் பயிர்கள் பயிர் செய்யப்படும் புன்செய் நிலங்கள் குறித்து அனுமதிக்கப்படுவதில்லை. அது போன்ற நிலங்கள் மீது தீர்வை வசூலிக்கப்பட்டு வருகிறது.

(உ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. போஜன்:** தமிழக அரசு புஞ்சை நில வரியை ரத்து செய்து விட்டதாகச் சட்டம் இயற்றியதால் நீலகிரி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் செஸ் வரியை இரட்டிப்பாக உயர்த்தி விட்டன. இதனால் சிறிய விவசாயிகள் கூட அதிகமாகக் கந்தாயம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, தேயிலை, காப்பி பயிரிடும் சிறு விவசாயிகளுக்காவது இந்த அடிப்படை நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தமிழ்நாட்டில் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை வரி எடுக்கப்பட்டிருக்கிறது. ரெவின்யூ அமைப்பு முறைகளில் மலைப் பகுதி நிலங்களும் புஞ்சை நிலங்கள் என்று வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் மலைத் தோட்டம் சாதாரண புஞ்சை நிலங்களோடு சேர்க்கப்படக்கூடியதல்ல. அதைப் பற்றி நல்ல வகையில் ஆராய்ந்துதான் அது புஞ்சை நிலங்கள் என்ற பெயரில் இருந்தாலும் அதற்கு நிலவரி ரத்து தேவையில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. சோ. கருணைநாதன்:** அன்றாட வாழ்க்கைச் செலவு அளவுக்கு வருவாய் வந்து கொண்டிருக்கின்ற அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருக்கும் சிறு தோட்டக்காரர்களுக்காவது வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அடிப்படைக் கொள்கையைச் சொன்னேன். மலைத் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையே கூட பரவி வருகின்ற இந்த நாளில், அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சட்ட மன்றக் குழுக்களில் உறுப்பினர்கள் கூறுகின்ற இந்த நாளில், அதற்கு அடிப்படைத் தீர்வையை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களே சொல்வது சரியானது அல்ல.

**திரு. எம். சுரேந்திரன்:** புஞ்சை நிலங்களுக்கெல்லாம் அடிப்படைத் தீர்வையை ரத்து செய்வது என்று முடிவு செய்துவிட்டு அதற்குப் பிறகு இம்மாதிரி நிலங்கள் புஞ்சை நிலங்கள் அல்ல என்று கருதப்படுகின்ற நிலை சிக்கலான நிலைமையை ஏற்படுத்தும். ஆகவே, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வையை ரத்துசெய்ய அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதிலே சிக்கல் எதுவும் இல்லை. அந்தக் காலத்தில் இருந்தே ரெவின்யூ துறையில் இந்த நிலங்களையும் புஞ்சை நிலங்கள் என்று எழுதிய காரணத்தால் அதைப் புஞ்சை நிலங்கள் என்று அரசாங்கம் ஏற்றுக் கொள்ள

வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே அவை நல்ல வருவாய் தரக்கூடிய மலைத் தோட்டங்களாக இருப்பதால் வரியை ரத்து செய்ய முடியாத நிலை இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** காப்பி, தேயிலை பயிரிடப்படுகின்ற நீலகிரி மாவட்டத்தில் மட்டும்தான் இந்த வரி வசூல் செய்யப்படுகின்றதா? அல்லது இது போன்று காப்பி, தேயிலை சாகுபடி செய்யப்படுகின்ற மற்றப் பகுதிகளில் இந்த வரி வசூலிக்கப்படுகின்றதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எல்லா இடங்களிலுந்தான் வசூலிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தின் மீது எந்தக் கோபமும் அரசாங்கத்திற்குக் கிடையாது.

### *Elliots Beach at Madras*

* 39 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to make the Elliots Beach at Maras City a bathing resort; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. குளிக்கும் வசதிகள் அமைத்தல் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அந்தப் பகுதியில் பெரும்பாலும் வெளிநாட்டினர்தான் அதிகமாக நீராடுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடத்தை மேலும் நல்ல முறையில் அழகுபடுத்த அரசாங்கத்திடம் விரிவான திட்டம் இருக்கிறதா? எவ்வளவு செலவாகும்? எப்போது அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்போது அந்த இடத்தில் வெளிநாட்டினர் மட்டுமல்லாமல் நம்முடைய நகர மக்களில் பெரும்பாலானவர்களும் குளிக்கிறார்கள். அதை விரிவுபடுத்தும் திட்டம் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசு எழுதியிருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நீச்சல் குளம், நீர்ச் சருக்கு விளையாட்டு இவை எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. மத்திய அரசு இன்னும் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. அந்த ஒப்புதல் பெற்ற பிறகே எந்த அளவுக்குப் பணம் செலவாகும் என்று திட்டமாகச் சொல்ல முடியும்.

**திரு. கே. விநாயகம் :** இந்த எலியட் பீச்சில் குளிக்கப் போகின்றவர்களுக்கு சுறா மீன்களால் அடிக்கடி ஆபத்து ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி வருகின்ற சுறா மீன்களை வராமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த இடத்தில் ஆளை விழுங்கும் சுறா மீன்கள் வருவதாகக் குறிப்பில் இல்லை. சாப்பிடக் கூடிய சுறா மீன்கள்தான் வருவதாகத் தெரிகிறது.

### *திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பழத்தோட்டம்*

*40 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழமரத் தோட்டம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசினரின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பழத் தோட்டம் செடிப்பண்ணை ஒன்றை அமைப்பதற்கான தகுந்த இடம் ஒன்று கிடைக்கப்பெறவில்லை. ஆயினும், இப்பழத் தோட்டத்தை அமைக்க, குடுமியாமலையில் உள்ள மாநில விதைப் பண்ணையில் ஒரு பகுதி நிலத்தை ஒதுக்குவது குறித்து வேளாண்மை இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** குடுமியாமலை தவிர வேறு புஞ்சைப் பகுதிகளில் இந்தப் பழத் தோட்டத்தை அமைக்க ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** திருச்சியில் மாகாளிப்பட்டி என்ற இடத்தில் இதை அமைக்க முதலில் திட்டமிடப்பட்டது. பின்னர் திருச்சியில் மத்தியப் பகுதியில் காட்டு நிலங்களில் அமைப்பது என்று திட்டமிடப்பட்டது. ஆனால் விவசாய ஆராய்ச்சி வல்லுநர்கள் அந்த இடங்கள் தகுதியானவை அல்ல என்று முடிவு செய்த காரணத்தால் அங்கே வைப்பது கைவிடப்பட்டு குடுமியாமலையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** திருச்சி மாவட்டத்தில் குடுமியாமலைப் பகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் போலவே அரியலூர் பகுதியிலும் மிகுதியான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் பழத் தோட்டம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சி நிறுவனத்தால் மண் வளத்தைப் பார்த்து அந்த இடங்களை எல்லாம் அங்கீகாரம் செய்யவில்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Agriculture the areas which are having suitable climatic conditions to start orchards in our State and areas

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** எந்த மாதிரியான இடம் எடுக்கப்பட வேண்டுமென்ற குறிப்பு இல்லை என்றாலும் தருமபுரி மாவட்டத்தில் திம்மாபுரம் என்ற இடத்தில் பண்ணை இருக்கிறது. எந்த வகையான நிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

## ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் வாங்கல்

*41 வினா.—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசு புதிதாக 'ஆழ்கடல் மீன் பிடிக் கப்பல்' (Traw'ers) வாங்க உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை வாங்க உத்தேசம்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) நான்கு மட்டும்.

**திரு. ஏ. எம். இராஜா:** அமைச்சர் அவர்களின் பதிலில் நான்கு கப்பல்கள் வாங்கப் போவதாகக் கூறினார்கள். இந்த நான்கு கப்பல்களை எப்போது வாங்க இருக்கிறார்கள்? அவற்றிற்கு எவ்வளவு விலையாகும்? அவற்றின் மூலம் நமக்கு எவ்வளவு அன்னியச் செலாவணி கிடைக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** 36 லட்சம் ரூபாய் செலவில் நான்கு படகுகள், ஒன்பது லட்சம் ரூபாய் வீதத்தில் இப்போது நாம் வாங்குகிறோம். அவற்றில் இரண்டு படகுகள் செப்டம்பர் மாதத்திற்குள் நம் கைக்கு வந்து சேர்ந்துவிடும். கல்கத்தாவில் உள்ள "ஆன்ட்ரூ யூல்" கம்பெனி இந்த இரண்டு படகுகளைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அவற்றை செப்டம்பர் மாதத்திற்குள் சேர்த்து விடுவார்கள். மற்ற இரண்டு படகுகள் "ஈஸ்ட் பங்கால் ரிவர் ஸ்டீல் சர்வீஸ்" லிமிடெட் என்ற நிறுவனத்தினரால் கட்டப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு படகுகளை அக்டோபர் மாதத்திற்குள் தருவதாக அவர்கள் உறுதியளித்துள்ளார்கள். ஆக, நான்கு படகுகளும் நம் கைக்கு விரைவில் வந்து சேர்ந்துவிடும்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** தலைவர் அவர்களே, ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கக் கொடுக்கப்படுகிற படகுகளைக் கொண்டு கடற்கரையோரங்களில் கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்கச் செல்கிறவர்களுக்கு இடையூறு விளைவிக்கிற விதத்தில் மீன் பிடிப்பதால் புன்னக்காயல், குளச்சல் போன்ற இடங்களில் மீனவர்கள் மத்தியில் மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற பிரச்சனைகளில் அரசு கவனம் செலுத்தி ஆழ்கடலில் மீன் பிடிக்கக் கொடுக்கப்படுகிற படகுகளில் செல்கிறவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கும் விதத்தில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மூன்று மைல்களுக்கு அப்பால்தான் ஆழ்கடலில் சென்று படகுகள் மூலம் மீன் பிடிக்கவேண்டுமென்றும் மூன்று மைல்களுக்குள்ளாக கட்டுமரத்தில் சென்று பிடிக்க வேண்டுமென்றும் ஏற்கெனவே ஒரு விதியிருக்கிறது. ஆனால் கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்கிறவர்களுக்கும், படகுகளில் சென்று மீன் பிடிக்கிறவர்களுக்கும் இடையே பலயிடங்களில் மோதல்கள் ஏற்பட்டு அவை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குள்ளே உள்ள தகராறுகளை, சிக்கல்களைத் தீர்த்து வைக்க ஆங்காங்கு சிறு சிறு குழுக்கள்—மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் இவர்களை எல்லாம் கொண்ட குழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டு அவர்கள் அங்காங்கே அவர்களுக்குள் ஏற்படுகிற கலவரங்களை அவ்வப்போது தீர்த்துவைக்கிறார்கள். மூன்று மைல்கள் என்றால் எவ்வளவுதூரம் சென்ற பின் அவர்கள் மீன் பிடிக்கிறார்கள் என்பதை கண்காணிக்கவோ அல்லது வரையறுக்கவோ சில சிக்கல்கள், சங்கடங்கள் இருப்பதால் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இவர்கள் மூன்று மைல்களுக்குள் பிடித்தார்கள் என்று சொல்கிறார்கள், அவர்கள் அப்படி இல்லை என்று சொல்கிறார்கள். ஆக நடைமுறைச் சிக்கல்கள் பல இருப்பதால் அரசு நேரடியாக இதில் ஈடுபடவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த ஆழ்கடல் மீன் பிடிப்பதில் பல கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன. மூன்று மைல்களுக்குள்ளாக கட்டுமரங்களும், அதற்கு அப்பால் படகுகளும் சென்று மீன் பிடிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருந்தபோதிலும், பல பகுதிகளில் மீனவர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக, குளச்சல் போன்ற பகுதிகளில் அப்படி ஏற்படுகின்றன. ஆகவே, இந்த மூன்று மைல் தூரத்தில் 'பாய்ஸ்' போட்டு வரையரை செய்யக்கூடிய விதத்தில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகின்றது. இருந்தாலும் மீனவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதையும் மீறிச் சென்று விடுகிறார்கள். பிறகு இல்லை என்று மறுக்கிறார்கள். உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் சில சங்கடங்கள் இருப்பதால் ஆங்காங்கு இருக்கிற ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர்கள் மீனவர்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி அவர்களாகவே முன்வந்து சில கட்டுப்பாடுகளுடன் மீன் பிடிக்கவேண்டுமென்ற முறையைக் கையாள வேண்டுமென்று அரசு கருதுகிறது.

**திரு. டி. மார்டின்:** அரசாங்கம் மீனவர்களுக்கு விநியோகம் செய்கிற விசைப் படகுகள் கடந்த காலத்தில் அவர்கள் மனு செய்துள்ளதன் அடிப்படையில் ஸீனியாரிட்டி பிரகாரம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்ததாகவும் ஆனால் இப்போது அந்த மனுக்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து அவற்றை சீட்டுப் போட்டு குலுக்கி எடுத்து அதில் வருகிறவர்களுக்கு கொடுக்கக் கூடிய ஒரு முறையை

ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் உள்ள "ஃபிஷர்மென் ஃபெடரேஷன்" போன்ற மீனவர்கள் சங்கங்களிலிருந்து அதை ஆட்சேபித்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ள ஆட்சேபணைகள் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்துள்ளதா ? இல்லையெனில் இனிமேலாவது அதன்மீது நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** • அந்தக் காலத்தில் அவர்கள் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதில் ஒரு சிறிய மாற்றத்தை இப்போது செய்திருக்கிறோம். ஏற்கெனவே ட்ரெயினிங் ஆனவர்கள், டிரெயினிங் ஆகாதவர்கள், எந்தெந்தப் பகுதிகளில் கேட்டிருக்கிறார்கள், 'கவேர்ட் ஏரியாவா' 'அன் கவேர்ட் ஏரியாவா', யார் எவ்வளவு காலத்திற்கு முன்னதாக விண்ணப்பித்திருக்கிறார்கள் போன்ற இவைகளை எல்லாம் அடிப்படையாக வைத்து இந்த அடிப்படையில் அரசு சில மீனவர்களைத் தேர்ந்தெடுத்து படகுகள் கொடுக்க தகுதி படைத்தவர்கள் யார் என்று பார்த்து கொடுத்து வந்தது. அதுகுறித்து குறைகள் சொல்லிவந்ததால் விண்ணப்பங்களை பொறுக்கியெடுத்து 'கவேர்ட், அன்கவேர்ட், ட்ரெயின்ட், அன்ட்ரெயின்ட்' என்று விண்ணப்பங்களை பொறுக்கி சீட்டு குலுக்கிப் போட்டு யார் யார் என் வருகிறதோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கிறது. இதனால் விருப்பு வெறுப்பு இருக்கிறது, கொடுத்தார்கள் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வருவதைத் தவிர்க்கலாம். இப்படி குலுக்கி எடுப்பதன் மூலம் இப்போது கொடுக்கப்படுகிறது. அதில் எந்தவிதமான ஆட்சேபணையோ, தகராறோ, குழப்பமோ இல்லை. அது மிக அமைதியாக நடைபெறுகிறது.

### சென்னை மாநகருக்கு பால் விநியோகம்

*42 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-68-ம் ஆண்டில் திருச்சி, ஸ்ரீரங்கம் பால் வழங்கு நிர்வாகத்தினர் மூலம் சென்னைக்கு எத்தனை லிட்டர் பால் அனுப்பப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 6,71,672 லிட்டர்கள்.

**திரு. வை. சுவாமிநாதன் :** திருச்சி மாவட்டத்தில் இப்போது அங்குள்ளவர்களுக்கே பால் கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக அங்கு பாய்லர் தொழிற்சாலை, சிறு ரக ஆயுதத் தொழிற்சாலை போன்றவைகள் வந்திருப்பதன் காரணமாக அங்குள்ளவர்களுக்கே பால் கிடைக்காத நிலை இருப்பதன் காரணமாக திருச்சியிலிருந்து சென்னைக்கு பால் சப்ளை செய்வதை அரசாங்கம் உடனடியாக நிறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திருச்சிக்கு போதுமானது செலவழித்தது போக மிஞ்சியதைத்தான், மிச்சத்தைத்தான் சென்னைக்கு அனுப்புகிறார்கள்.



**திரு. ஆர். நாகசுந்தரம் :** திருச்சி, ஸ்ரீரங்கம் பால் வழங்கு சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு மாடுகள் வாங்குவதற்காக பண உதவி செய்கிறார்கள். ஆனால் அந்த மாடுகள்மூலம் வரும் பாலை உள்ளூரிலேயே அதிக விலைக்கு அவர்கள் விற்று விடுகிறார்கள். ஆகவே பால் வழங்கு கழகத்திற்கு போதுமான பால் வருவதில்லை. ஆகவே அந்த சொசைட்டி மூலம் உதவி பெறும் உறுப்பினர்கள் சொசைட்டிக்கே அந்தப் பாலைத் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** புகார் இது. இதுபற்றி அரசாங்கத்தினிடம் தெரிவித்தால் விசாரிக்கப்படும்.

**திரு. கே. வினாயகம்:** திருச்சியிலும், ஸ்ரீரங்கத்திலும், ஏன் கோயம்புத்தூரிலிருந்தும் கூட இவ்வளவு இடங்களிலிருந்தும் சென்னைக்கு பால் வந்து கூட இங்கே கொடுக்கக் கூடிய பாலின் விலையை அதிகமாக ஏற்றி அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பால் விலை ஏறியது என்று—ஏற்றியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஏற்றியிருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' என்ற புதுவிதமான பால் இப்போதுதான் இந்தியா முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' க்கு பம்பாயில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை ஒரு லிட்டருக்கு ரூ 1.40 ஆகும். ஆனால் அதற்கு சென்னையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை ரூ. 1.30 ஆகும். 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' என்று ஏற்கனவே கொடுத்திருந்து அதன் விலையை இப்போது உயர்த்தியிருக்கிறோம் என்று யாரும் கருத வேண்டியதில்லை. அந்த 'ஸ்டான்டேர்டைஸ்ட் மில்க்' என்பதை இப்போதுதான் நாம் கொடுக்கிறோம். அதன் விலையை இப்போதுதான் நாம் நிர்ணயித்திருக்கிறோம். "ஆப்பரேஷன் ஃப்ளட்" என்ற ஸ்தாபனத்தின் 11 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ் இது புதிதாகப் புகுத்தப்பட்டிருக்கிறது. பம்பாயில் அதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை ரூ. 1.40 இங்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை ரூ. 1.30.

**திரு. கே. பி. எஸ். மணி :** திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு பால் வருவது குறைந்திருக்கிறது. காரணம் அங்குள்ள சொசைட்டிகளுக்கு கொடுக்கக்கூடிய விலை மிகக் குறைவு. அங்கிருந்து 75 காசுக்கு வாங்கி இங்கு 1.50-க்கு கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவைகளை கவரக் கூடிய விதத்தில் அந்த சொசைட்டிகளிலிருந்து வாங்கும் பாலுக்கு 90 பைசாவாவது கொடுக்க உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி வேண்டும்.

[1970 ஆகஸ்ட் 26

### குருவாயூரப்பன் கோவிலுக்கு அரிசி விநியோகம்

* 43 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு, கேரள மாநிலத்தில் உள்ள குருவாயூரப்பன் கோவிலுக்கு அரிசி வழங்க உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இவ்வரசு கேரளத்திலுள்ள குருவாயூரப்பன் கோவிலுக்கு 1969-ம் ஆண்டில் மொத்தம் 300 டன் நெல் வழங்கியுள்ளது.

திரு. வை. சுவாமிநாதன்: இதுமாதிரி இன்னும் தொடர்ந்து குருவாயூரப்பன் கோவிலுக்கு அனுப்பப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆண்டு மனு வந்தது. அதன் மீது முதல் அமைச்சர் அவர்கள் போட்ட உத்தரவுக்கிணங்க அனுப்பப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு மனு ஒன்றும் வரவில்லை.

### நீதிபதிகளாகப் பணிபுரியும் பெண்கள்

* 44 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எப்பகுதியிலாவது பெண்கள் ஜட்ஜ்களாகவும், மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும் பணி புரிகிறார்களா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தமிழ் நாட்டில் இதுவரை மாவட்ட நீதிபதியாகவும், துணை நீதிபதியாகவும், முன்சீப்பாகவும், பெண்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. திருமதியர் ஏ. சுப்புலட்சுமியும், சி. ஆர் ராமாயியும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடியிலும், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலும் குற்ற விசாரணை உதவி நீதிபதிகளாகப் பணி புரிகின்றனர்.

திரு. என். கிட்டப்பா: இப்பொழுது பெண்கள் பெருமளவிற்கு தமிழ் நாட்டில் பயின்று வழக்கறிஞர்களாக பணி புரிந்து வருவதால் தாய்க்குலம் பெருமை கொள்ளும்வகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் நீதிபதி பதவிகளையாவது பெண்களுக்கு வழங்கும் முறையைக் கைக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள்: அரசாங்க அலுவலகங்களில் பணி புரியும் ஆண்களை விட பெண்கள் தான் மிகச் சிறப்பாக பணி புரிவதாகத் தெரியவருகிறது. ஆகவே, நீதித் துறையிலும் பெண்களுக்கு அதிகப்படியான இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெண்கள் முன்வந்தால் ஆட்சேபணை இல்லை.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether in the proposed recruitment of District Judges, women would be given their due share?

THE HON. THIRU S. MADHAVAN: No name has been recommended by the High Court?

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் தமிழ் நாட்டில் நெல்லை மாவட்டத்தில் முதன்முதலாக ஒரு பெண்மணி பப்ளிக் பிராஸிகியூட்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அளவுக்கு பெண்களை முதன்முதலாக ஜட்ஜுகளாக நியமிக்கின்ற பெயரையும் இந்த அரசு தட்டிக்கொண்டு போகுமா என்று அறிய விரும்புகிறேன். டிஸ்டிரிக்ட் ஜட்ஜு போஸ்டுகளுக்கு பெண்களை நியமிப்பதற்கு இப்படிப்பட்ட சலுகைகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் தாய் குலத்திற்கு பெருமைதரத்தக்க அளவில் ஒரு பெண்மணியை இந்தப் பதவிக்கு நியமித்து நல்ல பெயரைப் பெற்றுக் கொண்டிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது மாவட்ட பப்ளிக் பிராஸிகியூட்டராக நாம் நியமித்திருக்கிறோம் பெண் குலத்தைச் சேர்ந்தவரை. மாவட்ட நீதிபதியைப் பொறுத்த அளவில் அரசியல் அமைப்புச் சட்டப்படி உயர் நீதிமன்றம் சிபாரிசு செய்ய வேண்டும். இதற்கு மனுப் போடுவதிலிருந்து பெண்களைப் பொறுத்த வரையில் எந்த விதமான டிஸ்குவாலிபிகேஷனும் நாம் செய்யவில்லை.

THIRU T. MARTIN: The Hon. Minister has stated in his reply that no woman lawyer's name has been included in the list recently sent by the High Court for selection of District Judges. May I request the Hon. Minister to state the number of women lawyers who were interviewed by the Selection Committee for the selection of District Judges?

THE HON. THIRU S. MADHAVAN: The hon. Member may put a separate question.

### Representation of Bar Association, Karur.

* 45 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Bar Association, Karur in Tiruchirappalli District has represented to the Government about 8th March, 1970 for shifting the Sub-courts from Tiruchirappalli; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*Board for Medium Industries.*

* 46 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Board for Medium Industries in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இது போன்ற நடுத்தரத் தொழில்களுக்கென்று ஒரு வாரியம் அமைப்பதால் அதனைக் கொண்டு நடுத்தரத் தொழில்களுக்கு இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாக இருக்கும். அரசாங்கம் அதற்கான திட்டத்தைப் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழில் வளர்ச்சிக்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு ஒரு குழு இருக்கிறது. மாநிலம் முழுவதிற்கும் பெரிய தொழில்கள் வளர்ச்சிக்கு ஸ்டேட் அட்வைசரி போர்டு இருக்கிறது. மீடியம் ஸ்கேல் என்று கேள்வியில் இருந்த காரணத்தினால், இல்லை என்று சொன்னேன்.

*தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன உரத்தொழிற்சாலை*

* 47 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன உரத்தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கு ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தஞ்சை விவசாய மாவட்டமாக இருப்பதால் அங்கு ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு இனியாகிலும் அரசு ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உரம் எங்கு உற்பத்தி செய்தாலும் தஞ்சைக்குத் தான் அனுப்பப்படுகிறது.

**திரு. ஆர். கருப்பையா:** குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக ரசாயன உரத்தின் விலை மேலும் ஏறிக்கொண்டு போகிறது. நாம் கேரளாவிலிருந்து வருகிற பேக்ட் என்ற உரத்தைத் தான் அதிகமாக வாங்குகிறோம். ஆகவே, தமிழ் நாட்டிலேயே ஒரு உரத் தொழிற்சாலையை ஏற்படுத்தி, எளிய முறையில் உரம் கிடைக்கச் செய்ய அரசாங்கம் முன்வருமா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த அரசாங்கம் பொறுப் பேற்ற பிறகு, ஆட்சிக்கு வந்த பிறகு உரம் வாங்குவதற்கு ஆள் இல்லை, தேங்கிக் கிடக்கிறது என்ற குற்றச்சாட்டைத்தான் கேள்விப் பட்டிருக்கிறோம். இப்பொழுது அங்கத்தினர் சொல்வது புதியதாக இருக்கிறது. நம்முடைய அரசு இதில் தயக்கம் காட்டவில்லை. மெட்ரூஸ் பெர்டிலைஸர்சில் அடுத்த ஆண்டு உற்பத்தி தொடங்கப்பட்டுவிடும். தூத்துக்குடித் தொழிற்சாலையைப் பொறுத்த அளவில் நாப்தா என்ற மூலப் பொருள் கிடைக்கிற பிரச்சனை மத்திய அரசாங்கத்தோடு விவாதத்தில் இருக்கிறது. இன்று இரவு அதைப்பற்றியும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சரோடு பேச இருக்கிறார்கள். தூத்துக்குடித் தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரூ. 52 கோடிக்கு திட்டம் போட்டு, ஏராளமான உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்பொழுதே இருக்கிறது.

*திருப்பத்தூர் அருகே மைகாத் தகடு சுரங்கம்*

* 48 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத் திருப்பத்தூர் அருகில் மைக்காத் தகடு எடுக்கும் சுரங்க வேலைக்காக எத்தனை ஏக்கரா நிலம் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது?

(இ) அவ்வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள செவத்தூர், எலவம்பட்டி எனும் இரு கிராமங்களிலிருந்து 52.76 ஏக்கரா பட்டா நிலங்களை ரூ. 1,16,131.08 (ரூபாய் ஒரு லட்சத்துப் பதினாறாயிரத்து நூற்று முப்பொத்தொன்றும் பைசா எட்டும்) க்கு சுரங்க வேலைக்காக வாங்கப்பட்டது.

(இ) அடுத்த மூன்று மாத காலத்திற்குள் சுரங்க வேலை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான துவக்க ஏற்பாடுகள் யாவும் முன்னரே மேற்கொள்ளப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இதற்காக வேண்டி ஒதுக்கப்பட்டுள்ள மூலதனம் எவ்வளவு? இன்னும் எவ்வளவு தினங்களில் அடிப்படையான வேலைகள் முடிந்து, இந்த சுரங்கவேலை ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சுரங்க வேலை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வெர்மிகுலேட் என்ற பொருள் திருப்பத்தூருக்குப் பக்கத்து கிராமங்களில்

[1970 ஆகஸ்ட் 26

கிடைக்கிறது. நம்முடைய சென்னைக்குப் பக்கத்தில் எக்ஸ்ஃபோலியேஷன் பிளாண்டு, அதாவது உஷ்ணத்தை வழங்கினால் விரிவடையக்கூடிய பொருளை உற்பத்தி செய்வதற்கு ரூ. 3¾ லட்சம் செலவில் நாம் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்திருக்கிறோம். அந்தத் தொழிலுக்குத் தேவையான வெர்மிகுலேட் என்ற பொருள் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்குப் பக்கத்தில் உள்ள இரண்டு கிராமங்களிலிருந்து சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

**தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறைவலவர்கள், பயணித் துணைவர்களின் சம்பளவிதம்.**

■ 49 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழக அரசு போக்குவரத்தில் பணியாற்றும் வலவர்கள் (Drivers), கண்டக்டர்களின் சம்பளத்தை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசினால் நியமிக்கப்பட்ட இரண்டாவது சம்பள ஆணைக்குழு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையில் பணிபுரியும் பயணித் துணைவர்கள் (Conductors), வலவர்கள் (Drivers) ஆகியோரது சம்பள விதங்களையும் மறு ஆய்வு செய்து, எல்லா சம்பள விதங்களின் அமைப்பையும் சீரமைப்பது குறித்து அரசிற்குப் பரிவுரை வழங்கும்.

DR. H. V. HANDE: In view of the fact that there is lot of misunderstanding between conductors and passengers because on the one hand, the conductors feel that they cannot look after more than 25 passengers and on the other hand, the passengers have got to enter the bus somehow or other to go to their offices in time, will the Government, without waiting for the report of the Second Pay Commission, come forward to grant something extra for conductors if more passengers were taken, if they could give them some sort of bonus to conductors to act as an incentive to them and so that incidentally more passengers may also travel in the buses?

THE HON THIRU S. J. SADIQ BASHA: As a matter of fact, the High Power Committee has suggested in its recommendation relating to revision of scales of pay of employees of State Transport Department that it should be implemented only after the overall financial position of the undertaking has improved. Government without waiting for the Department to convert itself from a losing concern into a profitable one have decided that the scales of pay of the Transport Department's employees should be referred to the Pay Commission. அரசாங்க ஹைபவர் கமிட்டி போக்குவரத்துத் துறை நிதிநிலைமையைச் சரிக்கட்டிய பிறகுதான் சம்பள உயர்வு பற்றிய பிரச்சனை கவனிக்கப்படும் என்று சொல்லி



1970 ஆகஸ்ட் 26]

யிருந்தும்கூட, நமது அரசு இப்பொழுது இந்தப் பிரச்சனையை இரண்டாவது சம்பள ஆணைக்குழுவிற்கு அனுப்பியிருக்கிறது. Everything will be considered by the Pay Commission.

**திரு. கே. விநாயகம்:** அன்றாடம் உபயோகிக்கின்ற பொருள்களின் விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டு போகிறது (குறுக்கீடு) நீங்கள் கடைக்குப் போனால்தானே தெரியும்? உங்களுடைய சர்வெண்ட்கள்தான் பொருள்களை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். (குறுக்கீடு) நான் கடைக்குப் போகிறேன். அது இருக்கட்டும், இதற்குப் பதில் சொல்லுங்கள். இப்படி ஏறிக்கொண்டிருக்கிற நேரத்தில், இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு டெய்லி பேட்டா, தினப்படி கொடுக்கிறார்களே கண்டக்டர்கள், டிரைவர்களுக்கு, அதை உயர்த்தவேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கிளர்ச்சி செய்திருந்த போதிலும் ** 10 காசுதான் உயர்வு கொடுத்திருப்பது உங்களுக்குத் தெரியுமா? இதை உயர்த்துவதற்கு ஏதாவது முயற்சி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று குறிப்பிடவேண்டாம். நமது அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பேட்டா உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற பிரச்சனைகளெல்லாம் செகண்டு பே கமிஷனின் பரிசீலனையில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் கூறிய ** என்ற வார்த்தையைப் பேரவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளிலும் அந்த வார்த்தை வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(THIRU K. VINAYAKAM: I have quoted only what the drivers were saying.)

**திரு. வி. கே. கோதண்டராமன்:** போக்குவரத்துத் துறை இலாகாவை இப்பொழுது நிர்வகிக்கக்கூடிய அமைச்சர் மூன்றாவது அமைச்சராகும். ஆகவே, அந்தத் துறையில் நிதிநிலை சரியானதற்குப் பிறகுதான் தொழிலாளர்களுடைய சம்பளத்தையோ, பஞ்சப்படியையோ உயர்த்தவேண்டும் என்கின்ற அளவுக்கு ஹைபவர் கமிட்டி கூறியுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நிதி நிலைமை சரியாகும் என்ற நம்பிக்கை இருக்கிறதா? எப்பொழுது சரியாகும்? விலைவாசிகள் உயர்ந்துகொண்டு போகக்கூடிய நிலைமையில் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும், பஞ்சப்படி உயர்வும் கொடுப்பது எப்பொழுது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஹைபவர் கமிட்டி நிதி நிலைமையைச் சரிக்கட்டிய பிறகு தான் இதைக் கூட கவனிக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருந்தும்கூட, நம்முடைய அரசு தொழிலாளர்களின் பேரில் வைத்திருக்கின்ற அக்கறையின் காரணமாக இந்தப் பிரச்னையை சம்பள ஆணைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறது. நமது அரசு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

ஏற்கனவே ரூ. 1.35 என்றிருந்த பேட்டாவை இரண்டு ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. 1969-ம் ஆண்டில் இதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற பிரச்னைகள் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன.

*State Transport Bus accident near Oorapakkam.*

* 50 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there was any accident involving a State Transport Bus near Oorappakkam in Chingleput District about 3rd June 1970 resulting in the loss of life?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 2-6-70-ல் செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கத்திற்கு அருகில் வழித்தடம் 81பி-ல் ஓடும் அரசுப் போக்குவரத்து பேருந்தும் ஒரு லாரியும் விபத்துக்குள்ளாயின. விபத்தில் 4 பிரயாணிகள் உயிரிழந்தனர்.

**திரு. டி. மார்டின் :** தற்சமயம் அரசு போக்குவரத்து விபத்துக்குள்ளாகி சென்னையில்கூட சென்டிரல் ஸ்டேஷன் முன்பு மூன்று பேரும் இறந்து, 5 பேர் பெரிய காயங்கள் அடைந்தும், இன்னும் பல பேர் காயங்கள் அடைந்து மருத்துவ மனையில் இருப்பதாகவும் சமீபத்தில் செய்தி வெளியாகி இருக்கிறது. டிரைவர்களை விசாரிக்கும்போது வண்டியில் பிரேக் சரியில்லை என்றும், வண்டி சரியான முறையில் பழுது பார்க்கப்படவில்லை யென்றும், அதன் காரணமாக இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்கின்றன என்றும் கூறுகிறார்கள். எல்லா வண்டிகளையும் மற்ற தனியார் பேருந்துகளைப் பரிசோதிக்கிற மாதிரி, எல்லா 'மெகானிசமும்' சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எல்லா வண்டிகளையும் நல்ல முறையில் 'roadwo thiness' என்று சொல்வார்களே, அந்த அளவுக்குக் கொண்டு வருவதற்கு 'அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் நீண்ட கேள்வியைக் கேட்டார்கள். நம்முடைய அரசாங்க பஸ்ஸிலே மாத்திரம்தான் இது போன்ற விபத்துக்கள் வருகின்றன என்பதல்ல. தனியார் பஸ்ஸிலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அரசாங்க பஸ் என்ற உடனே இதைப்பற்றி மிகைப்படுத்திப் பேசுகிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இந்த விபத்து பற்றிய விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன்.

A private lorry belonging to Sri Sadananda Lorry Service came in the opposite direction and it is stated to have skidded and dashed against the State Transport Bus which was standing at that time.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இந்த ஆக்ஸிடென்ட் ஆவதற்குக் காரணம் டிரைவர்கள் சரியான 'எக்ஸ்பெர்ட்'—சரியான பழக்கம்—இல்லாதவர்கள் என்று கொள்ள வேண்டும். இப்போது டிரான்ஸ்போர்ட்டில் ஏற்படக்கூடிய ஆக்ஸிடென்ட்



எல்லாம் பஸ்களுடைய கண்காணிப்பு சரியாக இல்லை என்பது தான் பொருள். டிரைவர்களாக அவர்கள் வருவதற்கு டெஸ்ட்கள் வைத்து அவர்கள் வேலைக்கு எடுக்கப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** டிரைவர்கள் தகுதி, பயிற்சி எல்லாவற்றின் அடிப்படையில்தான் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

**ஜேடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டுதல்.**

* 51 *வினா.*—**திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜேடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், ஜெயங்கொண்டம், அரியலூர் வட்டங்களுக்கு பாசன வசதிச் செய்துக் கொடுக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம் பரிசீலிக்கப்பட்டு அதிக செலவு ஆவதாலும் பயன் மிகவும் குறைவாக இருப்பதாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, இந்த ஜேடர்பாளையத் தருகில் வாய்க்கால் வெட்டினால் பெரம்பலூர், ஜயம்கொண்டம், அரியலூர் பகுதிகளுக்குப் பயன்படும். ஆகையால் அந்தப் பகுதியில் அரசாங்கச் செலவில் சமுதாயக் கிணறுகள் வெட்டி பாசனம் செய்து தருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தக் கேள்வியை விவசாயத்துறை அமைச்சரைக் கேட்கவும்.

**பொறியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் வீட்டு வசதி.**

* 52 *வினா*—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையிலே பணியாற்றும் பொறியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும், வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**புலவர். பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவரவர்களே, வட்ட அளவில் பணியாற்றும் பொறியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும், கிராமப்புறங்களில் வீட்டு வசதி கிடைக்காத

காரணத்தால், நகர்ப்புறத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வட்ட அளவிலேனும் அவர்களுக்கு காவல் துறை, வருவாய் துறை அதிகாரிகளுக்கு இருப்பதைப்போல் வீடு கட்டிக் கொடுக்க அரசு திட்டம் வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது. 1968-ம் ஆண்டில் 8 சூப்பரின்டென்டிங் இன்ஜினீயருக்கும், 25 எக்ஸிகியுடிவ் என்ஜினீயருக்கும் ரூ. 16.44 லட்சம் செலவில் வீடுகள் கட்டித் தருவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறது. நிதி நிலைமை காரணமாக உடனடியாக இதை செயல்படுத்த முடியவில்லை. இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

*Underground passage at Railway Level crossing near Pachakuppam.*

* 53 *Q.*—THIRU K. S. KOTHANDARAMAIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal before Government to construct an underground passage for vehicular traffic at the Railway level crossing near Pachakuppam Railway Station (near Ambur); and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை எண் 46 மைல் 113/18 அருகில் ராணிபேட்டை கிருஷ்ணகிரி சாலையில் பச்சகுப்பம் ரயில் நிலையத்துக்கு அருகில் இருப்புப்பாதை சாலைக்கடவுக்கு பதிலாக மேம்பாலம் சுரங்கப்பாதை கட்டுவதற்காக நான்காம் ஐந்தாண்டு திட்டத்தில் தேசீய நெடுஞ்சாலையின் கீழ் ரூ. 12 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதைவிட பல முக்கிய இருப்புப்பாதை சாலை கடவுகள் இருப்பதால் இத்திட்டத்தில் இவ்வேலைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Railway level crossing near Pachakuppam Railway Station is in a very strategic position and has become a conspiciously dangerous bottleneck on account of the heavy vehicular traffic there. I think almost all the Hon. Members of this House and all the Hon. Ministers have visited this place and realised the importance of an underground passage for the vehicular traffic. The sooner the Government take up this work the better it is.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: There is a proposal to put up an overbridge at M.113/8 in National Highway 46 near Pachakuppam station at a cost of Rs. 12 lakhs but it was given the lowest priority.



*Municipal Superior Employees Association, Tiruvannamalai.*

* 54 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government has received a copy of resolution dated 12-9-1969 from the நகரமன்ற உயர்தர ஊழியர் சங்கம் Tiruvannamalai passed at a conference held on 8th September 1969 at Tiruvannamalai; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், நகராட்சி மன்றத்தில் போதுமான நிதி வசதி இருந்தால்தான் கொடுக்கலாம் என்ற அளவுக்கு ஒரு உத்தரவு போய் இருப்பதாக தெரிகிறது. நிதி நிலைமை இல்லை என்று சொல்கிற நேரத்தில் சிலருக்குக் கிடைக்கும் சிலருக்குக் கிடைக்காது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இருந்தாலும் இல்லை என்று சொன்னாலும் கொடுக்கப்படக் கூடிய அளவுக்கு உத்தரவு அனுப்பப்படுமா? அதே நேரத்தில் சுகாதாரத் தொழிலாளர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று பொது மக்களின் நலனைக் கருதி வேலை செய்யக்கூடிய அந்த சுகாதாரத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்படி உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நிதி நிலைமை சரியாக இருந்தால் தரப்படவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி நிதி நிலைமைத் தட்டுப்பாடு இருக்கிற நேரத்தில் சம்பந்தப் பட்ட நகராட்சி மன்றம் அரசாங்கத்திற்கு எழுதும் போது கடனாக அரசாங்கம் நிதி தருகிறது. சுகாதாரத் தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கும் இதற்கும் தொடர்பில்லை.

**கொத்தவால் சந்தை இடமாற்றம்**

* 55 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள கொத்தவால்சாவடியைக் கோடம்பாக்கம்புதூர் Part II-ல் உள்ள அசோக் நகருக்கு மாற்ற அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE: Sir, Kothwal Bazaar Market is now in a very bad shape and there is no proper hygiene and sanitation there on account of the heavy traffic on the busy roads surround-

* 93-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

ing that market. Is it not a fact that some years ago there was a proposal to transfer this market to a more spacious area with all modern methods of hygiene and convenience? Even if this Government do not have such a proposal now, will this Government at least take stock of the situation and see that something is done immediately to solve this vexatious problem?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* கொத்தவால் சாவடிப் பகுதியில் நெருக்கடி இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருகிறது. என்றாலும் அது எந்தெந்த வகையில் தீர்க்கப் படும் என்பதற்கு, அங்கே சுகாதார வசதிகள் மற்றவைகள் செய்வதற்கு மாநகராட்சி முடிந்த அளவு செய்து வருகிறது. மற்ற விவரங்கள் தற்போது குறிப்புகளில் எதுவும் இல்லை. ஆகவே, தனியாக இதுபற்றிக் கேள்வி போடவும்.

*திரு. எஸ். ஜே. ராமசாமி :* கொத்தவால்சாவடி இப்போது இருக்கும் இடத்தில் இருப்பது நல்லது. பல இடங்களிலிருந்தும் வருவதற்கு அருகில் பஸ் ஸ்டாண்டு வசதி இருக்கிறது. சுகாதாரத்தை மட்டும்தான் கவனிக்க வேண்டும். இடத்தை மாற்றக்கூடாது.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* ஏற்கெனவே குறிப்பிட்டது போல் பதில் இல்லை.

*திரு. கே. விநாயகம் :* முன்பு ஒரு முறை இந்த மார்க்கெட்டுகள் சீரமைப்புக் கமிட்டி என்று சொல்லி திரு. வி. வி. ராமசாமி, எம்.பி. இந்த மார்க்கெட்டுகளைப் பார்த்த பிறகு கொத்தவால் சாவடி மார்க் கெட்டை பேசின் பிரிட்ஜ் அருகாமையில் இருக்கும் இடத்திற்கு மாற்ற சிபார்சு செய்தது. அதை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இதை அமுல் படுத்துவதற்கு இப்போது ஏன் தாமதம்? இதனால் என்ன செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:* ஏற்கெனவே, திரு. ஹாண்டே அவர்களுக்குக் கூறியது போல், இது பற்றிய விவரங்கள் எதுவும் இல்லாததால் விளக்கம் சொல்ல முடியவில்லை.

### வங்கிகள் மூலம் வீடுகள் கட்டுதல்

**56 வினா—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வங்கிகள் மூலம் வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடம் இல்லை.



*திரு. சு. துரைசாமி :* பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் வீடில்லாத பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருக்கிறது. உணவு பிரச்சினையில், நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருப்பதைப்போல இந்த வீட்டுப் பிரச் சனைக்கும், ஒரு சிறப்புத் திட்டத்தை அமுல் படுத்த அரசு முன் வருமா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* தலைவர் அவர்களே, வீட்டு அடைமான வங்கிகள் வீடு கட்டக் கடன்கள் கொடுக் கிறார்கள். வீடு கட்டுவது, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இவை என்னுடைய சகா, அறநிலைய அமைச்சர் நிர்வாகத்தில் இருக்கின்றன.

*திரு. எம். பூபதி :* தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் ஒவ் வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்களை வீடு கட்டுவதற்கு என்று ஒதுக்கி வைக்கிறார்கள். அந்தப் பணத்தை நம்முடைய அரசு உபயோகிக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* தலைவர் அவர்களே, மதிப் பிற்குரிய உறுப்பினர் அந்தச் சுழல்நிதி பற்றிச் சொல்கிறார்கள். அதில் 200 கோடி ரூபாய் இருக்கிறது என்று நினைக்கிறேன். அது பற்றி தனியாகக் கேட்டால், அறநிலைய அமைச்சர் பதில் கூறு வார்கள்.

*திரு. ஆர். கருப்பையா :* தலைவர் அவர்களே, பொதுவாகக் கிராமப் பகுதிகளில், வீடுகள் இல்லாமல் அவதிப்படுவதால், அதற்கும் நிலவள வங்கியிலிருந்து கடன் கொடுக்க அரசு முன் வருமா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* தலைவர் அவர்களே, நில வள வங்கி நிலத்தைத்தான் வளமாக்க உதவும். வீடு கட்டுவது, வீட்டு வளவங்கிகள்தான் செய்ய முடியும். (சிரிப்பு)

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* இந்த வங்கிகள் சில கட்சிகளையும் வளமாக்குகின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(பதில் இல்லை.)

### தூத்துக்குடியிலுள்ள அரசினர் நிலங்கள்

**57. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :* மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் சர்க்காருக்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கரா பூமி, தனிப்பட்ட ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கு ஏக்கரா ஒன்றுக்கு 75 பைசா வீதம் குத்தகைக்கு விடப்பட் டுள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகளுக்கு?

(உ) குத்தகைக் காலம் முடிந்து விட்டதா?

(எ) ஆம் என்றால், மேலும் நீடிக்கும் உத்தேசமுண்டா?

[1970 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : (அ) & (இ) தூத்துக்குடித் துறைமுகத்துக்குச் சொந்தமான இந்த நிலங்கள் தூத்துக்குடி உப்புத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலைக்கு 20 ஆண்டுக்கால குத்தகைக்கு ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு எழுபத்தைந்து பைசா வீதம் விடப்பட்டன.

(உ) இந்தக் குத்தகை 7—7—1968-ல் முடிந்து விட்டது.

(எ) அந்தக் குத்தகை நீடிக்கப்படவும் இல்லை, நீடிக்கும் உத்தேசமும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், துறைமுகம் கட்டும் இந்த நேரத்தில், அதற்கு முட்டுக்கட்டையாக 300 ஏக்கராவை காலி செய்து, சர்க்கார் இடத்தில் வைக்கவில்லை. அப்படி இருப்பதன் காரணம் என்ன? குத்தகையை நீடிக்கவில்லை என்றாலும், உடனடியாகக் காலி செய்து சர்க்காரிடம் கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : தலைவர் அவர்களே. மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒரு விஷயத்தை மனதில் வைக்க வேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய பழைய துறைமுகம் வேறு. அது மாநில அரசின் நிர்வாகத்தில் இருக்கிறது. புதிதாகப் பெரிய துறைமுகம் கட்டப்படுவது வேறு. அதன் விஸ்தரிப்புக்காக இந்த நிலம் தேவையில்லை என்று மத்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறது. ஏற்கனவே உள்ள பழைய துறைமுகத்திற்கு இது தேவைப்படுவதால் குத்தகை நீடிக்கப்படவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : சார், நீடிக்கப்படவில்லை என்று சொன்னாலும், இந்த 300 ஏக்கரா அந்தக் குறிப்பிட்ட நபரிடத்தில் இருக்கிறது. அதைக் காலி செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அதில் ஏற்கனவே 37 ஏக்கர் கைப்பற்றியாகிவிட்டது. இப்பொழுது தொழிற்சாலை வசம் இருப்பது 263 ஏக்கர்தான். இதைக் காலி செய்ய உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி** : தூத்துக்குடி துறைமுகத்திற்காக உப்பளங்களிலிருந்து எல்லோரையும் வெளியேற்றும் போது, இந்த நபருக்கு மட்டும் வெளியேற்றாமல் தாட்சண்யம் காட்டப் படுவதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : தலைவர் அவர்களே, இந்த அரசு தாட்சண்யம் யாருக்கும் காட்டுவது கிடையாது. ஒருவருக்கொருவர் பாரபட்சம் காட்டுவதும் கிடையாது. ஏறத்தாழ 263 ஏக்கர் இந்த நபர்வசம் இன்னும் இருக்கிறது. எல்லோரையும் போல் இவருக்கும், ஏற்கனவே இருந்த அரசு ஒரு ஏக்கருக்கு 75 பைசா வீதம், குத்தகையை மீண்டும் 25



1970 ஆகஸ்ட் 26]

ஆண்டுகளுக்கு தேவையானால் நீடிக்கலாம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறது. ஆனால் அரசு துறைமுகத்திற்கு இந்த நிலம் தேவை என்று, வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

*Sri Kappaleeswarar Temple Tank*

* 58 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a scheme of silt removing was carried out in the Tank of Sri Kapaleeswarar Temple in Mylapore, Madras; and

(*b*) if so, what was the expenditure involved?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா** : (அ) ஆம்.

(இ) சென்னை, மயிலையில் உள்ள ஸ்ரீகபாலீஸ்வரர் கோவில் குளத்தில் தூர் எடுக்கும் பணி தொடர்பாக ரூ. 500 செலவிடப்பட்டது.

**திரு. கே. விநாயகம்** : சார், இந்த கபாலீஸ்வரர் கோவில் குளத்தை ஆழம் செய்தபோது, மாண்புமிகு முதல் அமைச்சரும் சேர்ந்து கொண்டு கையில் மம்மட்டியும், கடப்பாரையும் பிடித்து, மண் எடுக்கும் போது, ஒரு பொருள் கிடைத்ததாமே, ஒரு புதை பொருள். அது யாரைச் சேர்ந்தது? யார் எடுத்துக் கொண்டார்கள்? கோவிலில் கொடுத்தார்களா? என்ன பொருள் இருந்தது, அது என்னவாயிற்று? அதை விளக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ஒரு சிறிய உண்டியல், புதுக் காசுகளோடு இருந்தது, யாரிடமும் கொடுக்கப்படவில்லை. விநாயகர் கோவிலுக்குத் தருவதாக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்வி எண் 59 ஒத்தி வைக்கப்படுகிறது.

**பழங்காநத்தம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை**

*60 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தத்திலுள்ள E. S. I. மருத்துவமனை எந்தத் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது?

(இ) அந்த மருத்துவமனைக்குத் திறப்பு விழா எப்போது நடைபெற்றது?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்** : (அ) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் பழங்காநத்தத்தில் தனிப்பட்டவர்க்குச் சொந்தமான ஒரு வாடகைக் கட்டிடத்தில் 23-10-1956 முதல் செயல்படத் தொடங்கியது. அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் 12-2-1966 முதல் செயல்படத் தொடங்கியது.

(இ) இப் புதிய மருந்தகத்தைத் திறப்பதற்கென விழா ஏதும் நடத்தப்படவில்லை. பழங்காநத்தம், பொன்னகரம், திருநகர், முனிச்சாலைரோடு, பாவை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல

ஈட்டுறுதி மருந்தகங்களுக்கெனக் கட்டப்பட்ட கட்டிடங்களைத் திறப்பதற்கான விழா 3-6-1969 தேதியன்று மதுரை, அதைச் சார்ந்த புறநகர்களிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்டோர் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் நல ஈட்டுறுதி செய்து கொண்டோர் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பணி திட்டத்தை நீட்டிக்கும் ஆரம்ப விழாவோடு இணைக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளுக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## (3) அறிவிப்புகள்.

### (அ) அரசின் போலீஸ் அடக்கு முறைக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப் பினர் திரு. எம். சுரேந்திரன், திரு. என். சங்கரய்யா, திரு. க. ர. நல்லசிவன். திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் சேர்ந்து, சட்டப் பேரவையின் விதி 55-ன் கீழ்க்கண்டவாறு ஒரு கண்டனத் தீர் மானம் கொடுத்திருக்கிறார்கள்—

"குறிப்பாக அரசின் போலீஸ் அடக்குமுறைக் கொள்கையை சட்டப் பேரவை கண்டிக்கிறது. அரசின் கொள்கையை ஏற்க மறுக்கிறது."

இதே போன்று மாண்புமிகு உறுப்பினர்கள், திருவாளர்கள் என். சங்கரய்யா, எம். சுரேந்திரன், க. ர. நல்லசிவன், சோ. அழகர் சாமி ஆகியோர் தனித் தனியாகவும் கண்டனத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானம் பற்றிய நமது தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 55-ஐப் பேரவைக்குப் படித்துக் காட்ட விரும்பு கிறேன்.

விதி 55 (1) கூறுவதாவது :

(1) A motion expressing want of confidence in the Ministry or a motion disapproving the policy of the Ministry in a particular respect may be made with the consent of the Speaker and subject to the following restrictions, namely :—

(a) leave to make the motion must be asked for after questions and before the further business set down in the list of business for the day is entered upon;

(b) the member asking for leave must before the commencement of the sitting of the day, leave with the Secretary a written notice of the motion which he proposes to make.



இந்த விதிக்கிணங்க, தீர்மானத்தின் அறிக்கை முன்னரே செயலாளரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. இப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர இப் பேரவையின் அனுமதியைப் பெறும் கட்டத்தில் உள்ளோம்.

பேரவை விதி 55-ன் படி, இந்தத் தீர்மானத்திற்கு குறைந்த பட்சம் 24 உறுப்பினர்கள் ஆதரிக்கிறவர்கள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரிப் பவர்கள், தயவுசெய்து எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்க்கண்ட கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்:

வலதுசாரி கம்யூனிஸ்ட்,
இடதுசாரி கம்யூனிஸ்ட்,
சம்யுக்த சோஷலிஸ்ட்,
பிரஜா சோஷலிஸ்ட்,
காங்கிரஸ் (அமைப்பு),
குடியரசுக் கட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேவையான 24 உறுப் பினர்களுக்கு அதிகமாக நிற்பதால், இந்தத் தீர்மானத்திற்குப் பேரவையின் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை விவாதிக்க நாள் பின்னர் குறிப்பிடப் படும்.

## 4. அவையுரிமைக் கேள்விகள்

### (அ) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பேரவை உறுப் பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட் டிருப்பது குறித்து

MR. DEPUTY SPEAKER : The Hon. Member, Thiru S. Alagarswamy has given notice of a matter of privielege which is as follows :—

"இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழுவின் தலைவரான திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும், உறுப்பினர் திரு. என். மருதாசலம் அவர்களும், கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். சட்டமன்றம் கூடப் போகும் அறிக்கை வெளியிட்ட பிறகுதான் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்மீது குற்றப் பத்திரிகை கூட தாக்கல் செய்யாமல் போலீஸ் காலம் கடத்தி வருகிறது.

இந்த இரு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டிருப்பதும், தொடர்ந்து சிறைப்படுத்தப்பட்டிருப்பதும் அவர்கள் சபையில் தங்கள் கடமைகளைச் செய்வதற்குத் தடையாக உள்ளது. உறுப் பினர்கள் சுதந்திரமாக செயல்படுவதில் நிர்வாகம் குறுக்கிடுவது இந்த மன்றத்தையே அவமதிப்பதற்கு ஒப்பாகும்."

(Mr. Deputy Speaker) *[1970 ஆகஸ்ட் 26*

The privilege of freedom from arrest is limited to civil causes and has not been allowed to interfere with the administration of criminal justice or emergency legislation (page 78 of May's Parliamentary Practice).

In early times the distinction between "civil" and "criminal" was not clearly expressed. It was only to cases of "treason, felony and breach (or surety) of the peace" that privilege was explicitly held not to apply. But subsequently the privilege has been confined to cases of civil character. Every kind of criminal case has been excluded.

In 1815, Lord Cochrane, a Member, having been indicted and convicted of a conspiracy, was committed by the Court of King's Bench to the King's Bench Prison. Lord Cochrane escaped, and was arrested by the marshal, whilst he was sitting on the privy councillors' bench in the House of Commons, on the right hand of the Chair, at which time there was no Member present, prayers not having been read. The case was referred to the Committee of Privileges, who reported that it was entirely of a novel nature, and that the privileges of Parliament did not appear to have been violated, so as to call for the interposition of the House, by any proceedings against the marshal of the King's Bench.

During the II World War Captian Ramsay, a member of the House of Commons was detained under Regulation 18-B of the Defence (General) Regulations 1939. The question whether the detention of Captain Ramsay constituted a breach of privilege of the House was raised in the House and was referred to the Committee of Privileges. The Committee held that preventive arrest under statutory authority by executive order is not within the principle of the cases to which the privilege from arrest has been decided to extend. To claim that the privilege extends to such cases would be either the assertion of a new Parliamentary privilege or an unjustified extension of existing one. . consequently the detention does not constitute a breach of privilege of the House.

In a recent case two members of the Tamil Nadu Assembly were arrested within the precincts of the Legislators Hostel on their way to attend the Assembly under Section 120-B, Indian Penal Code read with Section 188, Indian Penal Code and Section 30(2) of the Police Act and Section 5 of the Prevention of Insults to the National Honour Act and Sections 109 and 147, Indian Penal Code. The matter was raised as a breach of privilege and the Speaker of the Tamil Nadu Assembly held that there was no *prima facie* case of breach of privilege and observed as follows:

> "A Member of the Legislature has to respect the law of the land, and if he violates, then, like any other citizen he has to take the consequences. Members cannot violate the law and claim privilege."



*1970 ஆகஸ்ட் 26]* [Mr. Deputy Speaker]

Rule 245 of the Assembly Rules lays down that when a Member is arrested on a criminal charge or for a criminal offence or is sentenced to imprisonment by a Court anywhere in India or is detained under an executive order of any State or Central Government, the Committing Judges, Magistrate or executive authority, as the case may be, shall immediately intimate such fact to the Speaker indicating the reasons for the arrest, detention or conviction, as the case may be, as also the place of detention or imprisonment of the member. The intimation of arrest of Thiru N. Marudhachalam and Thiru A. K. Subbiah has been duly received by the Hon. Speaker and the same has been communicated to all the Members through an information sheet. It may be seen that the above Members have been arrested under Section 120-B read with Section 399 Indian Penal Code in connection with the Land Grab Movement and they have been remanded for custody in the Central Jail.

The privilege of freedom from arrest is not allowed to interfere with the course of criminal justice. In the present case, the Members cannot claim a higher right than ordinary citizens when they commit a criminal offence. Privilege of Legislature does not help the Members who offend the laws of the land. Further, the acts said to have been committed by the Members have no relation to the work they do in the House. As the Members have been arrested under penal law, the privilege of the Legislature cannot help them.

Hence no case of breach of privilege is involved as stated by the Memmber and the motion for the breach of privilege is therefore rejected.

*திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது நீங்கள் அளித்த தீர்ப்பின்பேரில் கேள்வி கேட்பதாகக் கொள்ள வேண்டாம். மெம்பராக இருந்தாலும், அல்லது யாராக இருந்தாலும் சட்டத்தை மீறக் கூடாது என்பது எல்லோருக்கும் பொருந்தும். மாண்புமிகு திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் சட்டத்தை மீறவில்லை.* A member of the House is not expected to violate the law.

THIRU A. V. P. ASAITHAMBI: He has got intention.

THIRU A. BALASUBRAMANYAN: Intention must be followed by an act.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். தலைவர் அவர்கள் ஒரு பிரச்சனைமீது தீர்ப்புக் கொடுத்துவிட்ட பிறகு அந்தத் தீர்ப்பைக் குறைகூறிப் பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை. நீங்கள் சொல்வது.* It is a criticism of the ruling given by the Chair.

*(ஆ) வடாற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மைலோ அம் மாவட்டத்தில் விநியோகிக்கப்படாதது குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவைக்குத் தவறான தகவலை அளித்ததாகக் கொண்டுவரப்பட்ட வழக்கு.*

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Thiru T. Martin, has given notice of a matter of privilege which is as follows :—

"On 3-4-1970, when I spoke on Police Demand I spoke as follows :

*திரு. டி. மார்டின் :* தலைவர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை நானே கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நீங்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தை அப்படியே நானே வாசித்து விடுகிறேன்—"ஆன்டி ஸ்மக்லிங் விஜிலன்ஸ் இலாக்காவில் சுமார் 4,000 கேஸ் பிடித்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த நான்காயிரத்தில் வடார்க்காடு மாவட்டத்திற்கு மைலோ ஒரு வியாபாரிக்கு பங்கீட்டிற்காக ஒதுக்கப்பட்டு, அந்த மைலோவை அவர் சென்னையிலே ஒரு வியாபாரியிடம் விற்று இருக்கிறார். அந்த மாவட்டத்திலே வினியோகம் செய்யாமல் போயிருக்கிறது. அதைப்பற்றி மத்திய போலீசார் புலன் விசாரணை செய்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால் நம்முடைய திறமை மிகுந்த போலீஸ் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

அப்படிப் பேசிய நேரத்தில் மாண்புமிகு உணவு—வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு பதிலளித்திருக்கிறார்கள் :

The Hon. Thiru P. U. Shanmugam, Minister for Food and Commercial Taxes intervened and made a statement as follows :—

"*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவர் அவர்களே, ஏதோ வடார்க்காடு மாவட்டத்திலே, மைலோ ஒதுக்கி, சென்னையில் வியாபாரம் நடந்து, அதை மத்திய போலீசார் விசாரணை செய்து மத்திய சர்க்காருக்கு அறிக்கை அனுப்பியிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தகவல் எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது என்ற உண்மையைச் சொல்கிறேன். அங்கத்தினர் அவர்கள் கேலியாக எடுத்துக் கொள்வதைப்பற்றிக் கவலையில்லை. அப்படி மத்திய அரசுக்கு ஏதாவது அறிக்கை அனுப்பியதுபற்றி இந்த அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அப்படித் தகவல் கொடுத்தால் எந்த வியாபாரி என்று பார்க்காமல் நிச்சயமாகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

(திரு. டி. மார்டின் அவர்கள் சிரித்தார்)



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* கனம் உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் சிரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Even without hearing the hon. Member, you are going to conclude.

MR. DEPUTY SPEAKER : I am explaining the legal position. The Hon. Speaker has got a right to decide. There is no provision in the Legislative Assembly Rules that the Member should be given a chance to explain.

THIRU K. VINAYAKAM : You are coming to a conclusion without allowing the hon. Member to make out his case.

MR. DEPUTY SPEAKER : The privilege matter given notice of by the hon. Member Thiru Martin is purely on facts and not on any legal principles.

THIRU K. VINAYAKAM : I agree. But what harm is there if an opportunity is given to the Member?

MR. DEPUTY SPEAKER : There is no necessity.

THIRU K. VINAYAKAM : Even without hearing the Member, you are coming to conclusions.

MR. DEPUTY SPEAKER : I have to protect the interests of Ministers as well as the interests of Members.

THIRU K. VINAYAKAM : That is not your job. You are not to protect the Ministers but to protect the rules. According to rules, you should function. I mean the rules laid down by the House. You should not protect Ministers or Members

MR. DEPUTY SPEAKER : Please listen to what I say. This privilege matter given notice of by Thiru Martin is purely on facts. On facts I have to decide. There is no necessity to give the Member an opportunity to explain. We have to follow the rules and we cannot adopt any new procedure in the House.

THIRU T. MARTIN : On a point of Order, Sir. The Hon Speaker has chosen to read out my motion of privilege against the Hon. Minister for Food. After having read the motion, naturally the Hon. Speaker should read out the entire motion, all the matter which has been placed before the Hon. Speaker. Now the Hon. Speaker has confined himself only to my speech and also the speech made by the Hon. Minister for Food. My case is—

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நான் பதில் சொல்கிறேன். அதற்குப் பிறகு . .

THIRU T. MARTIN : I have to complete, Sir. . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையில் தாங்கள் கூறுவதுபோல பூர்வாங்கமாகவே ப்ரைம பாசி கேஸ் இல்லை. எந்த வழக்கும் இல்லை என்று தாங்கள் தெரிவித்தாலும் கூட ஏதோ மர்மம் இருப்பதாகப் பிரச்சாரம் செய்வதற்குப் பழிச்சொல் வராமல் இருக்க இந்த உரிமைப் பிரச்சினையில் திரு. மார்டின் அவர்களைப் பேசவிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : On a point of order. There is rule 189. It says as follows :—

"If the Speaker holds that the *prima facie* case exists, he may allow a motion to be made by any member, etc.".

The process by which the Hon. Speaker decides whether a *prima facie* case has been made out, is important. On that subject, our rules are not specific. My submission is under Rule 189, if the Speaker holds that a *prima facie* case exists, he may allow a motion to be made by any Member. First process is to read out the notice given by the Member. That is process No. 1. Then trying to get the information of Members is another process. Then on the basis of all these, he decides whether a *prima facie* case has been made out. The question of deciding whether a case had been made out, comes subsequently. Whether there is breach of privilege or not is decided ultimately by the Privileges Committee. Instead of giving an impression that there has been something of a serious nature and that the Hon. Deputy Speaker was trying to give a decision without giving an opportunity for Members to speak, let there be a proper interpretation of Rule 189. As the Hon. Chief Minister has said, let the Member be allowed to have his say. We know not only justice should be done but justice should appear to be done.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் திரு. மார்டின் அவர்களுக்குத் தற்போது பேச சந்தர்ப்பம் அளிக்கிறேன், ஆனால் விதிமுறைகளின்படி

it is not allowed. Whenever a privilege motion refers only to facts and not any legal principles, when it is only purely on facts, I can consider the facts and give my ruling. I read the notice of the hon. Member Thiru Martin and the reply given by the Hon. Minister. It is purely on facts and not on any legal principle.

அப்படி இருக்கும்போது ப்ரைம பேசி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்குப் பேரவைத் தலைவருக்கும் போதுமான ஆதாரங்கள் இல்லாமல் இருந்தால், அல்லது உறுப்பினர் புதியதாக ஏதாவது ஆதாரங்களைக் கொடுக்கலாம் என்றால் பேச



அனுமதிப்பதும் சரியாக இருக்கலாம். ஆனால் இப்போது இருக்கிற ஆதாரங்களே போதும், இதில் எவ்வித ப்ரைமா பேசி கேஸும் இல்லை என்பதற்கு; இதற்கு மேலே ஆதாரங்கள் தேவையில்லை. அதற்கு மேலே ஆதாரங்களும் இருக்க முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை எப்படிச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. மார்டின் அவர்கள், ஒதுக்கப்பட்ட மைலோவை ஒருவர் கள்ளத்தனமாக விற்றிருக்கிறார். மத்திய போலீஸ் அதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதாகச் சொன்னார். அமைச்சர், அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை என்பதாகச் சொல்லியிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட தேதியில், அதுபற்றிய விவரங்கள் அமைச்சருக்கு அந்தத் தேதிக்குப் பின்னால் தான் மத்திய அரசிடம் இருந்தும் வந்திருக்கின்றன, ஆகவே, வேண்டுமென்றே அமைச்சர் தவறான செய்தியைச் சொன்னார் என்பதற்கு இடமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் முடியாது என்று சொன்னால் நாங்கள் ஏன் வேறுவிதமாக நடந்திருக்கிறது என்று கூற முடியாது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உரிமைப் பிரச்சினையில் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள், அதில் வேறு ஆதாரங்கள் எதுவும் இருக்க முடியாது என்பதை சம்பந்தப்பட்ட பைல்களைப் பார்த்து பின்னர் நான் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

THIRU T. MARTIN : Armed with the leave granted by the Chair I wish to state that I have given notice of the following motion : I beg to move a matter of privilege against the hon. Minister for Food, Thiru P. U. Shanmugam, as follows :—

On 3rd April 1970 when I spoke on Police Demand I spoke as follows :—

'ஆன்டி ஸ்மக்லிங் விஜிலன்ஸ்' இலாக்காவில் சுமார் 4,000 கேஸ் பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த நான்காயிரத்தில் வடார்க்காடு மாவட்டத்திற்கு மைலோ ஒரு வியாபாரிக்கு பங்கீட்டிற்காக ஒதுக்கப்பட்டு அந்த மைலோவை அவர் சென்னையிலே ஒரு வியாபாரியிடம் விற்றிருக்கிறார். அந்த மாவட்டத்திலே விநியோகம் செய்யாமல் போயிருக்கிறது. அதைப்பற்றி மத்திய போலீசார் புலன் விசாரணை செய்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால் நம்முடைய திறமை மிகுந்த போலீஸ் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

On this the Hon. Minister for Food and Commercial Taxes Thiru P. U. Shanmugam intervened and made a statement as follows :—

" *மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏதோ வடார்க்காடு மாவட்டத்தில், மைலோ ஒதுக்கி, சென்னையில் வியாபாரம் நடந்து, அதை மத்திய போலிசார் விசாரணை செய்து மத்திய சர்க்காருக்கு அறிக்கை அனுப்பியிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட தகவல் எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது என்ற உண்மையைச் சொல்லுகிறேன். அங்கத்தினர் அவர்கள் கேலியாக எடுத்துக் கொள்வதைப் பற்றிக் கவலையில்லை. அப்படி மத்திய அரசுக்கு ஏதாவது அறிக்கை அனுப்பியது பற்றி இந்த அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அப்படித் தகவல் கொடுத்தால் எந்த வியாபாரி என்று பார்க்காமல் நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்*".

From the statement it would appear that neither the Hon. Minister for Food nor this Government was aware of any report sent by the police to the Central Government.

The Leader of Opposition in Parliament the Hon. Shri Dr. Ramsubhag Singhji has been furnished with a reply dated 14th August 1970 in D.O. No. 113/1/70-BP III, dated 14th August 1970 as follows :-

" From the Hon. Minister for Food and Agriculture, Government of India, New Delhi. Para 1 : Please refer to Shri Jagjivan Ram's D.O. letter of even number, dated the 25th May, 1970, regarding disposal of milo in North Arcot district of Tamil Nadu State by private dealers. Para 2 : We have since received a detailed report from the Government of Tamil Nadu in this connection. It is seen that the case has been investigated by Special Police Establishment, Madras (Central Bureau of Investigation, Madras Branch). The Special Police Establishment has suggested that the firms might be dealt with departmentally. The Government of Tamil Nadu have asked the Collector, North Arcot District, to take departmental action against the foodgrain dealers and also against Taluk Supply Officer, Vellore ".

From the above circumstances, it would transpire that the report sent by the Police to the Central Government might have also been brought to the knowledge of the Tamil Nadu Government and the Minister for Food at least on or before 21st March 1970. I understand that the statement made by the Hon. Minister for Food on 3-4-1970 is incorrect and misleading the House.



I submit that a *prima facie* case of breach of privilege has been committed by the Hon. Minister for Food, Thiru P. U. Shanmugam and the Hon. Speaker may be pleased to call for all the records in the above matter and may be pleased to take note of the above matter and render justice.

Mr. Deputy Speaker, Sir, to substantiate this motion of privilege, in brief I have to place before this Hon'ble House certain facts. Sir, on 3-4-1970 during the discussion on the Police Demand I made a pertinent reference to the booking of cases by the Anti-Smuggling Vigilance Wing of our Police Department and said that about 4,000 cases concering Civil Supplies irregularties and violation of civil supplies rules have been booked by our Anti-Smuggling Vigilance Wing. That being so, the case regarding the disposal of Government milo alloted to a dealer for distribution in North Arcot District as per the Government order was not distributed in the North Arcot district but on the countrary it was disposed of in Madras itself. But the case was detected by the Police of the Central Government and they had sent a report to the Central Government. Then I further remarked that the Police of the Central Government were able to detect the milo scandal in Tamil Nadu and asked what were our efficient Police doing then. I naturally expected an answer from the Hon. Chief Minister who was holding the Home Portfolio but he did not reply. The Hon. Minister for Food who is holding the Food portfolio intervened and made a statement to the effect that this Government and also the Hon. Minister had no knowledge about this North Arcot milo scandal and also the consequent report sent by the Police of the Central Government from Madras to Delhi. Mr. Deputy Speaker, Sir, this statement made by the Hon. Minister for Food was a definiet statement; a voluntary statement and also a deliberate statement with regard to my earlier query addressed to the Hon. Chief Minister. Sir, immediately, Dr. Ramsubagh Singhji who is the Leader of the Opposition in Parliament brought this to the notice of the then Food Minister of the Government of India. The Hon. Thiru Jagjivan Ram who in his reply D.O.No. 113/1/70-BP III dated 25th May 1970, had informed him that he had addressed the Government of Tamil Nadu for further particulars and that action would be taken after the receipt of those particulars. Sir, from the reply given by the then Food Minister, Shri Jagjivan Ram, I believe that this matter regarding milo scandal has been pending before the Government of Tamil Nadu and that is why Dr. Ramsubagh Singhji was given the reply by the then Food Minister that particulars were called for from the Government of Tamil Nadu. In other words, if such a matter was not pending before this Government, straightaway the then Food Minister, Shri Jagjivan Ram might have given the reply that nothing was pending before his Government or before the Government of Tamil Nadu. He

did not give a negative reply at that time. That is why again Dr. Ramsubagh Singhji reminded the present Food Minister, Government of India, Shri Fakhruddin Ali Ahmed who in his reply D.O No. 113/1/70-BP III dated 14-8-1970 had stated as follows :—

"Dear Ramsubagh Singhji,

Please refer to Shri Jagjivan Ram's D.O. letter of even number dated the 25th May 1970, regarding disposal of milo in North Arcot District of Tamil Nadu State by private dealers. We have since received a detailed report from the Government of Tamil Nadu in this connection. It is seen that the case has been investigated by Special Police Establishment, Madras (Central Bureau of Investigation, Madras Branch). The Special Police Establishment has suggested that the firms might be dealt with departmentally. The Government of Tamil Nadu have asked the Collector, North Arcot District, to take departemental action against the foodgrain dealers and also against Taluk Supply Officer, Vellore."

Sir, after the recipt of this reply, I have tabled this motion of privilege against the Hon. Minister for Food here. Now, I will have to say one thing. This milo scandal was specifically brought to the notice of the District Development Council North Arcot, by one o fthe hon. Members of this House long, long ago. The hon. Member is also present inside the House. It appeared that the Hon. Member Thiru Kothandaraman has brought this matter to the notice of the Development Council and the Collector of North Arcot district Thiru Belliappa who has also promised to take action on the report given by the hon. Member at the meeting of the Development Council.

He has assured the Member that he would take action also. Now, Sir, when a matter has been brought to the Development Council Meeting and also when the Collector has also taken notice of that, my submission is that certainly it has come to the knowledge of Government because the District Collector is a limb of this Government and a suit can be filed and a suit can be defended by a District Collector on behalf of this Government. Therefore, now, the District Collector Thiru Belliappa has knowledge of this. I do not want to further expatiate on this point. I have made it clear that this has been brought to the notice of Government in the Development Council Meeting and also to the Collector. Further, criminal investigation, as you know will take some time. The State will have to examine the case. Number of persons will have to be examined as witnesses by the Police and further Government has to consider whether a case has been made out or not. Therefore ordinarily a criminal investigation pre-supposes some time lag for completion. My submission here is that towards the end of April or early May,



Mr.Jagjivan Ram, Food Minister at the Centre had stated that he had called for paticulars from this Government. That implies that towards end of April something was pending with this Government. My submission to the Hon'ble House is that if the relevant records are called for and if the concerned officers who might have noted their findings on the file are examined, we could have a full picture. My submission is that the report sent by Central Government,the report of C.B.I., Madras Branch was here within the knowledge of the Minister before March. If the relevant notings on the file by the officers were called for this would become clear. The relevant records should be called for and relevant notings of officers should be scrutinised. If we examine them, we may know that this report was received by the Government and the Minister on or before February or at least in March.

This is not a case, as imagined by the Chair, concerning only with interpretation of facts. Here is a case where the Minister had said that he had no knowledge of the case. But from what I had stated, it is evident that it has been brought to the notice of Government and Minister on or before February or March 1970. I have made out my case. I had proved that it had been brought to the notice of District Collector. He is only a limb of Government. When it is known to him, it means it is known to Government and the Hon. Minister is also liable. But he has made a statement, a deliberate and also incorrect statement, before the House. Therefore my request is that the relevant records should be called for and the officers who had noted on the file should be called for. This is an important communication which has come from Central Government. Naturally no officer would have kept it pending in the file. In the ordinary course of business rules, he ought to have circulated it to the Hon. Minister. Therefore these officers also should be examined. Any reference, any notings in the file should be placed before the House. Then only we will have a full picture. With that request, I submit that I have made out a *prima facie* case of breach of privilege against the Hon. Minister for Food.

Thank you.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தந்துள்ள உரிமைப் பிரச்னைமீது நீண்ட உரையொன்றினை அவர்களே ஆற்றியிருக்கிறார்கள். இது உணவு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள், திரு. மார்டின் அவர்கள் 3-4-70 அன்று எழுப்பிய பிரச்னையைப்பற்றி அளித்த பதில் சம்பந்தப்பட்ட விவகாரம் ஆகும். அந்தப் பதிலில், திரு மார்டின் அவர்கள் குறிப்பிட்ட வழக்கு உண்மையல்ல என்றோ அல்லது திரு. மார்டின் அவர்கள் தவறாகக் கூறுகிறார் என்றோ உணவு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்குத் தவறான தகவல் எதையும் தரவில்லை. அப்படி, திரு மார்டின் அவர்கள்

கூறுவது உண்மைக்குப் புறம்பானது, அதுபோன்ற வழக்கு எதுவும் நடைபெறவில்லை என்று கூறியிருந்தால் அது இந்தச் சபையை வேறு திசைக்கு திருப்புவதற்காக திரு. ப. உ. சண்முகம் அவர்கள் முயற்சியெடுத்துக் கொண்டார்கள் என்று ஆகும். 3-4-70 அன்று திரு. மார்டின் அவர்கள் பேசிய நேரத்திலே உணவு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு இது பற்றித் தனக்கு எந்தத் தகவலும் வரவில்லை, அப்படித் தகவல் வருமேயானால் உண்மையாக இருக்குமானால் யாராக இருந்தாலும் அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை யெடுக்கத் தயங்கமாட்டோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். 3-4-1970 அன்று அந்தப் பதில் அளிக்கப்பட்டு இருக்கிறது. 18-4-1970 அன்று அந்த வழக்கு சம்பந்தப்பட்ட கோப்பு, பைல், துறைச் செயலாளரால் திரு ப. உ. சண்முகம் அவர்களுக்குக் காட்டப்பட்டு 18-4-1970 அன்று அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அந்த பைலை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடத்திலே இதற்கு முன்பு நான் காட்டினேன். 3-4-1970 அன்று தனக்குத் தெரியாது, தகவல் வரவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் 15 நாட்களுக்குப் பிறகு 18-4-1970 அன்று பைல் அவர்களிடத்திலே வந்திருக்கிறது. எந்த வழக்கையும் மறைக்க வேண்டுமென்றோ யாரையும் காப்பாற்ற வேண்டுமென்றோ இந்த அரசோ, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களோ நினைக்கவில்லை. திரு மார்டின் அவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில் வழக்கே கிடையாது என்று உளவு அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. தனக்குத் தகவல் வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் தகவல் வந்த தேதி 18-4-1970 அன்று ஆகும். ஆகவே, அது இந்தச் சபையினுடைய உரிமையை மீறிய செயலாகாது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சில விஷயங்களைச் சொன்னார்கள். 3-4-1970, 18-4-1970 என்று தேதி யெல்லாம் சொன்னார்கள். பெரிய அரசாங்கத்தை நடத்துகிறபோது ஊழல் நடந்திருக்கிறது இரண்டு வருஷத்திற்கு முன்னாலேயே டி.டி.சி.யில், சொல்லியிருக்கிறார்கள், கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கலெக்டருக்குத் தெரிந்தவுடன் என் நடவடிக்கை எடுக்கவில்லை? 18—4—1970 அன்று வருகிறது என்றால் அதற்கு முன்னாலே பூர்வாங்க வேலைகள் நடந்திருக்க வேண்டும். சர்க்கார் பைல்கள் 6 வருடம், 4 வருடம், 3 வருடங்கள் எல்லாம் தேங்கிக் கொண்டிருக்கின்றன. அதை மறுக்கவில்லை என்று அவர்கள் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். 18—4—1970 தேதி கையெழுத்துப் போட்டிருப்பதை என்னிடத்திலே காண்பித்தார்கள். அந்த



சம்பத்தப்பட்ட பைல்கள் பூராவையும் பார்த்து, இரண்டு வருஷங்களுக்கு முன்னால் டி.டி.சி.யில், புகார் செய்தது முதல் உள்ள ரிக்கார்டுகளை யெல்லாம் வாங்கிப் பரிபூரணமாக விசாரிக்க வேண்டும். மக்கள் என்ன சொல்கிறார்கள் மைலோ விற்றார்கள் ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். உடனே டாக்குமெண்டரி எவிடன்ஸ் கேட்கிறார்கள். ஜகஜீவன் ராம் அவர்கள் கொடுத்ததைவிட என்ன டாக்குமெண்டரி ரிக்கார்ட்ஸ் இருக்க முடியும்? ஆகவே, மத்திய சர்க்காரிலேயிருந்து வந்திருக்கின்றன, ஆதாரவுகள் எல்லாம் வந்திருக்கின்றன. இந்தச் சபையிலே மறைப்பதற்காகத்தான், இந்த விஷயத்தை மறைத்துத்தான் சொல்லியிருக்கிறார்கள். டி.டி.சி. கவுன்சிலில் சம்பந்தப்பட்ட அந்த ரிக்கார்டுகளை பூராவும் வாங்கி பரிசிலனை செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மேலே நீதி விசாரணை நடத்த வேண்டும். நீதி விசாரணை நடத்தி, எந்தத் தீர்ப்புக் கொடுத்தாலும் நாங்கள் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்,

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வழக்கு விசாரணையில் இல்லை என்று உணவு அமைச்சர் இங்கே கூறவில்லை, அப்படி ஒரு வழக்கே இல்லை என்று கூறவில்லை. அது அவருடைய கவனத்திற்கு வந்த பிறகு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று தடுக்கவில்லை. இந்த அரசாங்கமும் அப்படி யார் மீதும் நடவடிக்கை எடுக்கத் தயங்கியது இல்லை. காங்கிரஸ் தரப்பிலே உள்ள எம். எல். ஏ., மீதுள்ள ஊழல் வழக்கிலே, கருத்திருமன் சிபாரிசு செய்ததற்காக விட்டுக் கொடுத்திருக்கிறோமே தவிர, மற்றபடி நாங்கள் விட்டுக் கொடுப்பதில்லை. 3—4—1970 இல் தகவல் இல்லை என்று சொன்னார், 18—4—1970 இல் கிடைத்திருக்கிறது. எனவே, இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் கிடையாது.

**திரு. பி, ஜி. கருத்திருமன்:** குற்றச்சாட்டு சாட்டப்பட்ட எம். எல். ஏ, க்காக சிபாரிசு செய்ததற்காக செய்தோம் என்றால் சிபாரிசுக்காக எத்தனையோ காரியங்களைச் செய்திருப்பீர்கள் அல்லவா? யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுங்கள் என்றுதானே சொல்லுகிறோம். இதில் உரிமைப் பிரச்னை இருக்கிறது. சாட்சியங்கள் இருக்கிறன, நீங்கள் தயவு தாட்சண்யம் இல்லாமல் இருக்க வேண்டும். கருத்திருமன் சொன்னதற்காக விட்டு விட்டோம் என்றால், இன்னொரு நண்பர் சிபாரிசு செய்தார் என்பதற்காக வியாபாரிகளுக்குச் செய்திருக்கிறீர்கள் என்று ஏன் சொல்லக் கூடாது? சட்ட அமைச்சரும், முதல் அமைச்சரும் எம். எல். ஏ. விடம் பேசிச் செய்திருக்கிறார்கள். அதற்கு மேலே தான் இந்தக் கேஸைப் போட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த எம். எல். ஏ. திப்பையா அவர்கள், தான் செய்தது தவறு என்று ஒப்புக் கொண்டு, அறிஞர் அண்ணாவிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி ஒரு வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது முறை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர் எழுதியது வேறு விஷயம். அதற்கு நான் பொறுப்பு இல்லை, சிபாரிசு இடையாது. சிபாரிசு பண்ண வேண்டிய அவசியமில்லை. சிபாரிசு செய்ததற்காகக் கருத்திருமனுக்குச் செய்யக் கூடியவர்கள் இன்னொரு கருப்பண்ணனுக்காக ஏன் செய்ய மாட்டார்கள்? யாராக இருந்தாலும் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? கருத்திருமன் சொன்னதற்காகச் செய்தோம் என்பதைப்போல், இன்னொருவர் சொன்னார் என்பதற்காக வியாபாரிகளுக்காகவும் செய்திருப்பீர்கள் அல்லவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வியாபாரிகளுக்குச் செய்திருக்கிறோம் என்றால், அவர்கள் மேலுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்றிருக்கிறோமா, அல்லது சம்பந்தப்பட்டவர்கள் விடப்பட்டிருக்கிறார்களா என்பதை எதிர்க் கட்சித் தலைவர்கள் நிரூபிக்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதற்காகத்தான் நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று சொல்லுகிறேன். யார் யார் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீதி விசாரணை என்பதற்கு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதா? அல்லது அந்தக் குற்றவாளிகள் மீது வழக்குப் போடாமல் இருந்ததா? அல்லது குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்களா? அல்லது வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட குற்றம் இல்லாமலிருக்கும் பொழுது ஏன் நீதி விசாரணை? வழக்கு நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது ஏன் நீதி விசாரணை?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இதில் அதிகாரிகள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறோம். அதிகாரிகள் சொல்லியும்கூட அமைச்சர் மறுத்திருக்கிறார்கள் என்று சொல்லு கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்களைத் தப்புவிக்க வேண்டுமென்றோ, இந்தக் குற்றத்தை மறைக்க வேண்டுமென்றோ சொல்லியிருக்க மாட்டார்கள். எந்தக் குறிப்பிட்ட அமைச்சரும் அப்படிச் செய்யவில்லை, இந்த அமைச்சரவையும் செய்யவில்லை. 3-ஆம் தேதி தகவல் இல்லை என்று சொன்னார்கள். 18-ஆம் தேதி கிடைத்திருக்கிறது. குற்றவாளிகள் மீது வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.



**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தகவல் இல்லை என்று சொல்வது தான் தவறு. இரண்டு வருஷங்களுக்கு முன்னாலேயிருந்து பிரச்சினைகள் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில், கலெக்டர் ஏன் சொல்லவில்லை? இரண்டு வருஷங்களாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கூட சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தகவல் தெரிந்திருக்கிறது. இது மறைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சபையிலே மறுக்கப் பட்டிருக்கிறது. எனவே, இதில் நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Mr. DEPUTY SPEAKER: Thiru T. Martin states that it had since been ascertained from a reply furnished to the Leader of the Opposition in Parliament that a detailed report from the Government of Tamil Nadu had been received by the Government of India, and that they had asked the Collector of North Arcot District to take departmental action against the foodgrain dealers and also against the Taluk Supply Officer, Vellore. He therefore contends that the statement of the Hon. Minister for Food made on 3rd April 1970 that he had no knowledge or information was a misleading statement. He therefore maintains that there is a breach of privilege.

The matter of privilege raised by the Hon. Member, Thiru T. Martin, involves a mixed question of fact and law.

As regards the Law of Parliamentary Privileges, it must be stated that before the well-known Profuma's case, in India the then Speaker, Mavlankar held in 1951 and the then Speaker Ananthasayanam Ayyangar held in 1958 that wrong statement, even if intentionally made, did not constitute a breach of privilege. But in England, in the Profuma's case, in the year 1963, it has been held that ' the House may treat the making of a deliberately misleading statement as a contempt '. So, the present position of the Law of Parliamentary Privilege is that a wrong statement made deliberately with a view to mislead the House is a contempt of the House. But in order to constitute a contempt of the House, the statement must be wrong, it must be made with the knowledge that it is wrong and further, it must also be made deliberately with a view to mislead the House. These are the ingredients for the offence of contempt of the House.

In the present case, the first requisite therefore is a question of fact whether the statement made by the Hon. Food Minister is a wrong statement.

In the instant case, Thiru T. Martin stated in the Assembly on 3rd April 1970 that a report on the sale to a merchant in Madras of milo allotted for distribution in North Arcot was sent by the Central Bureau of Intelligence and asked what the State Police had done. The Hon. Minister for Food intervened and said that he had no knowledge or information of the same; he

[Mr. Deputy Speaker] *[1970 ஆகஸ்ட் 26*

also said that the State Government had no information about any such report by the Central Bureau of Intelligence, to the Government of India.

It has since been ascertained from the Department of the Government of Tamil Nadu that in point of fact, though the report of the C.B.I. was forwarded to the Government of Tamil Nadu on 30th January 1970, it was processed in the different Departments and it was brought to the notice of the Hon. Minister for Food only on 18th April 1970 and that thereupon the Minister had passed orders for initiation of action. Indeed the Minister stated on 3rd April 1970 that he did not know anything about the report and went on to reiterate that in truth he did not know about the report. The Minister said :

*"அப்படிப்பட்ட தகவல் எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது என்ற உண்மையைச் சொல்லுகிறேன்.*

These expressions not only underline his sincerity, but his truthfulness, that in truth he did not know about the report then. So, it is clear that this matter came to the notice of the Hon. Minister only on 18th April 1970 and therefore the statement made on 3rd April 1970 was not wrong to his knowledge, much less deliberately made with intent to mislead the House. So, both in point of fact and in law of Parliamentary Privileges, there is no *prima facie* case of breach of privilege. Consent to raise the matter is therefore withheld.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, having said so many things to see that the matter is pursued, I want that a Committee should enquire into the matter.

MR. DEPUTY SPEAKER : I have already given my ruling.

*திரு. பி. ஜி. கருத்திருமன்: அடுத்தடுத்து. . .*

MR. DEPUTY SPEAKER : I have already given my ruling.

*திரு. பி. ஜி. கருத்திருமன்: ரூலிங்கை நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை. ரூலிங்கை மதிக்கிறோம். சர்க்கார் செய்த முறை தவறு என்பதைக் கூறி வெளிநடப்பு செய்கிறோம்.*

*[காங்கிரஸ் (அமைப்பு) கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.]*

### *(5) ஒற்றிவைப்புத் தீர்மானம்.*

*மாநிலத்திற்கு தனிக்கொடி வைத்துக்கொள்வது குறித்து*

MR. DEPUTY SPEAKER : The following Members have given notice under Rule 42 of the Assembly Rules to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance, viz., the move of the Hon. Chief Minister to secure a separate flag for our State—

1. Thiru Gomathi Sankara Dikshidar.



*1970 ஆகஸ்ட் 26]*

2. Thiru N. S. V. Chithan.
3. Thiru M. P. Sivagnanam.
4. Thiru K. Ramamoorthy.
5. Dr. H. V. Hande.

DR. H. V. HANDE : Sir, I have given notice of the following motion, "I move that the business of this House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the decision of this Government to have an extra flag for this State. I move that the House be adjourned for the following reason".

I appreciate the fact that the Hon. the Chief Minister is a little worried about the similarity of flags between the National Flag and Congress Flag. The Congress Flag has got the 'Charka' and the National Flag has got the 'Chakra'. Only that small difference, is there between the two flags. Whenever Ministers have the flag before the car and go to any function, there is a strong possibility for their being mistaken for Congress Members because the National Flag is almost similar to the Congress Flag. That is why our revered leader Rajaji has said that while the National Flag cannot be changed, the Congress Flag should be changed. If that advice had been taken, the similarity could have been avoided.

I want the business of the House be adjourned for six reasons.

(1) I do not want any change and a separate flag for the State especially in the present context wherein fissiparous tendencies are raising their ugly heads all over the country, in several parts, there should be one flag uniformly throughout the country which might be the embodiment of the Nation.

(2) If revered Anna had been alive, I am quite sure he would not encourage this tendency to have a separate flag. Some years ago there was a move by the D.M.K. to have Tamil Nadu as a separate State. But suddenly revered Anna, with out minding what his party would think, taking into consideration the unity of the country, said that they would not agitate for a separate State and that they would drop such a demand. He took that final decision and dropped the demand. Even Gandhiji once changed his decision, when he found that his decision was wrong. So, there is nothing wrong in changing a decision once taken wrongly. I am sure, our present Chief Minister also would come forward and take a reasonable decision dropping his proposal to have a separate flag for the State.

(3) The off-quoted argument of the Chief Minister that in Germany there are separate flags cannot also hold water. We must remember that Germany had passed through two hostile world wars and millions of its soldiers had lost their lives in the wars and even now we find that the country had been divided into two, East Germany and West Germany. But our nationalism is quite different. We believe in non-violence. So the reference to Germany has no significane to India.

[Dr. H. V. Hande] [1970 ஆகஸ்ட் 26

(4) It is said that Madras Corporation is having a separate flag. It can be flown in Corporation building only. But in several big conferences where they have the national anthem there is the national flag. So the analogy of Corporation flag does not hold good.

(5) The expenditure incurred by this Government in publicising this idea is not very little. Daily we see advertisements in the dailies. I think Rs. 15,000 to Rs 20,000 would have been spent in publicising its idea of separate flag. Public money had been spent.

(6) I am sure the Hon. Chief Minister will appreciate that the present need of the land is not to have separate flag for each State but to have a national flag applicable to all parts of the country. The present picture in some parts of the country is not to obey the Central Government but to look for some other country as boss. So at the present juncture, to preserve the unity of the country, we must have only one national flag. I hope the Hon. Chief Minister will listen to the sentiments of all Members and try to drop his demand for a separate flag. I appreciate his sentiments. I hope he will have the large-heartedness to come forward and say, in view of the sentiments expressed by all of us in the House, that he would straightaway drop the demand for a separate flag.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்த திரு. கோமதி சங்கர தீட்சிதர், திரு. என். எஸ்.வி.சித்தன், திரு. க. இராமமூர்த்தி ஆகியவர்கள் இருக்கையில் இல்லை. இப்போது திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுவார்கள்.

*** திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, அவசரப் போது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன். ராஜ்யக் கொடி ஒன்று வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக முதலில் நாளிதழ்களில் படித்தேன். அவருடைய துணிவான கோரிக்கை காலத்தோடு ஒட்டிய கோரிக்கை. அதை நான் வரவேற்கிறேன். அதற்காக அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்கவில்லை. இரண்டாவது, அந்தக் கொடியினுடைய சின்னம், அமைப்பு எப்படி இருக்கும் என்றும் முதல்வர் சொல்லி இருக்கிறார், அதைப் பற்றித்தான் மக்களிடையே கருத்து வேற்றுமை இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கும் சின்னங்களோடு கூடிய ராஜ்யக் கொடியையே மக்கள் விரும்புகிறார்கள். அதை வற்புறுத்துவதற்காகத்தான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை எழுப்பியிருக்கிறேன்.

மற்றொன்று தனிக் கொடிக் கோரிக்கையிலே பிரிவினை எண்ணம் இணைந்து கொண்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. அமெரிக்காவில் மாநிலங்களுக்குத் தனித் தனிக் கொடி கொடுத்த



1970 ஆகஸ்ட் 26] [திரு. ம. பொ. சிவஞானம்]

பிறகுதான் 18 ராஜ்யங்களுடன் ஆரம்பமான அமெரிக்க சமஷ்டி 51 ராஜ்யங்களாக வளர்ந்தது. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித் தனிக் கொடி கொடுத்த பிறகுதான்—தனித் தனி கான்ஸ்டிடியூஷன் கொடுத்த பிறகுதான்—தனித் தனி ராஜ்ய கீதம் கொடுத்த பிறகுதான் இன்றுள்ள விசால அமெரிக்கா உருவாகியுள்ளது. ஜார் காலத்தில் ரஷ்யா இருந்த அளவை விட, ராஜ்யங்களுக்குச் சுயாட்சி அளித்து—ராஜ்யங்களுக்குப் பிரிந்து போகும் உரிமையை அளித்து—ராஜ்யங்களுக்குத் தனிக் கொடி தந்து—தனித்தனி ராஜ்ய கீதங்கள் கொடுத்துத் தனித் தனி அரசியல் சட்டம் உருவாக்கிக் கொடுத்த பிறகுதான் இன்றைய விரிவான ரஷ்யாவாக அமைந்திருக்கிறது. நீண்ட காலம் அடிமைப்பட்டிருந்து நமக்குப் பின் விடுதலை பெற்ற மலேசிய நாட்டில் 14 ராஜயங்களுக்கும். தனிக் தனி கொடி கொடுத்து, ராஜ்ய கீதம், ராஜ்ய சட்டம், 'ரெசிட்யுவரி பவர்ஸ்' எல்லாம் கொடுத்து சுயாட்சி வழங்கிய பிறகுதான் மலேசியா உறுதியாக இருக்கிறது. தமிழ் மாநிலத்திற்குத் தனிக் கொடி கொடுத்து விட்டால்; அது பிரிந்து போய் விடுமென்று கூறுவது தமிழினத்தின் தேச பக்தியை அவமதிப்பதாகும்.

தமிழ் ராஜ்யத்திற்குத் தனிக் கொடி வேண்டுமென்று கேட்டால் அதனை நான் பாராட்டுகிறேன். அமைச்சர்கள் வீட்டில் பறக்க விடத் தனிக் கொடி வேண்டுமென்று கேட்பதில் தேசியத் தன்மை கிடையாது. ராஜ்யத்திற்குத் தனிக் கொடி வந்தால், அந்தக் கொடியையே அமைச்சர்கள் காரிலும் வீட்டிலும் பறக்க விட முடியும். தமிழ் நாட்டுக்குத் தனிக் கொடி வேண்டுமென்று கேட்கிற போது, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றி, வாழ்ந்து, வளர்ந்த தமிழர் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு கொடியைக் கேட்க நமது முதல்வர் தவறி இருக்கிறார். அது பற்றி விவாதிப்பதற்காகத் தான் இன்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன்.

'சென்னை மாநகராட்சிக்குத் தனிக் கொடி இருக்கிறது, மாநில அரசுக்கு ஏன் இருக்ககூடாது?' என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். வில், புலி, மீன் சின்னம் கொண்ட கொடியை மாநகராட்சிக்குச் சேர்ந்து வைத்தவனாகிய நான் இங்கே அங்கம் வகிக்கிறேன். மாநில ஆட்சிக்கு வில், புலி, மீன் கொண்ட கொடியைக் கேட்க ஏன் முதலமைச்சர் தவறி விட்டார் என்பதைப் பற்றி விவாதிப்பதற்காகத்தான் நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இவ்வாறு கேட்பதிலே முதல்வர் தவறி விட்டார் என்பதைச் சுட்டிக் காட்ட என் மனம் சலனம் அடையவில்லை.

தமிழரசுக் கழகம் மொழிவழி ராஜ்யம் கேட்டபோது காட்டு மிராண்டிக் கொள்கை என்று சொன்னவர்கள் தான் இன்று தனிக் கொடி கேட்பதையும் எதிர்க்கிறார்கள். இது பிரிவினைக்கு வித்து என்று சொல்கிறார்கள். 'தமிழ் நாடு

என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டபோது, தமிழரசுக் கழகத்தார் 1,700 பேரை சிறையில் அடைத்து, அது பிரிவினைக் கோரிக்கையின் அடிப்படை என்று சொன்னார்களே, அவர்கள் தான் இன்று தனிக் கொடி கோரிக்கையையும் எதிர்க்கிறார்கள் அவர்களுடைய மனப்பான்மையில் நான் இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்கவில்லை. மூன்றரைக் கோடி தமிழ் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய தமிழ் மக்களின் வரலாற்றுப் பின்னணியில் தமிழ் மூவேந்தர்களின் வில், புலி, மீன் சின்னம் அமைந்த கொடி தமிழ் நாட்டுக் கொடியாக இருக்க வேண்டும். இது பற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்கு ஒரு தனிக் கொடி வேண்டுமென்கிற கோரிக்கையின் அடிப்படையில் இன்று தமிழ் நாட்டு சட்ட மன்றத்திலும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு டெல்லி நாடாளுமன்றத்திலும் நேற்றையதினம் டெல்லி மாநிலங்கள் அவையிலும் பெரும் விவாதங்கள் நடைபெறுகிற நிலை உருவாகியிருக்கிறது. நம் தமிழ் நாடுக்கு என்று, நம்முடைய மாநிலத்திற்கு என்று கேட்கிற இந்தத் தனிக் கொடி பிரிவினை எண்ணத்தோடோ அல்லது தமிழ் நாடு தனியாக இந்தியாவிலிருந்து துண்டித்துக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தோடோ கேட்கப்படுவதல்ல என்பதை நான் மிகுந்த உறுதியோடு பல முறையும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

மாநிலங்கள் அவையில் இந்தக் கொடி பற்றிய பிரச்னை வந்த போது பதில் உரை ஆற்றிய இந்திய பிரதமர் அவர்கள் நாட்டை பலவீனப்படுத்துவதான எந்த முயற்சியும் எதிர்க்கப்படும் என்றும் தேசியக்கொடி அல்லது தேசிய கீதத்தின் முக்கியத்துவத்தை குறைக்கக் கூடிய எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் ராஜ்ய சபையில் கூறிய இந்த வாசகத்தை எழுத்துக்கு எழுத்து இந்த அரசு அப்படியே ஒப்புக்கொள்கிறது என்பதை நான் இங்கு மிகுந்த மரியாதையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் இதைக் கூறிய பிரதமர் அவர்கள் மற்றொன்றையும் கூறியிருக்கிறார்கள். கவனர்களுக்கும், மாநிலங்களுக்கும் தனிக் கொடி வைத்துக் கொள்ளும் பழக்கம் புதியதல்ல. அமெரிக்கா உட்பட பல நாடுகளில் இது இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அது மாத்திரமல்லாமல் இது ஏதோ பிரிவினை முழக்கத்தின் அடிப்படையோ என்றெல்லாம் சந்தேகப்பட்டவர்களுக்கு பதில் அளிக்கத் தக்க விதத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழ் நாடு அரசாங்கத்திற்கு பிரிவினை நோக்கம் எதுவும் இருப்பதாக





நான் நினைக்கவே இல்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இந்தக் கொடிப் பிரச்னையை பிரிந்து போக வேண்டும் என்கிற எந்த ஒரு எண்ணத்தையும் அடிப்படையாக வைத்து இதனை நாம் எண்ணிடவில்லை என்பதற்கு ஏற்பத்தான் நாம் கொடியின் அமைப்பையும் உருவாக்கினோம். கொடியின் அமைப்பு இந்த விதமாகத்தான் இருக்கும். (கொடியின் படத்தைக் காண்பித்தார்கள்). இதுதான் நம் மாநிலத்திற்கு என்று நாம் கேட்டிருக்கிற தனிக் கொடியாகும். இதில் ஒரு பகுதியில் இந்திய தேசியக் கொடியும் இன்னொரு பகுதியில் நம்முடைய தமிழ் நாடு அரசின் சின்னமும் இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இது ஒன்றும் புதிதல்ல என்று பிரதமர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப பிரிட்டிஷ் காமன் வெல்த்திலும் இதைப் போலவே பல கொடிகள், பல மாநிலங்களுடை அடையாளங்களும் அமையத்தக்க அளவிற்கு யூனியன் ஜாக் ஒரு புறத்திலும் மறு புறத்தில் அந்தந்தப் பகுதிகளுடைய சின்னங்கள் அமைகிற வகையிலும் கொடிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் யு. எஸ். ஏ. யில் இருக்கிற கொடிகளின் அமைப்புகள் நிறைய அளவில் இருக்கின்றன. ஸ்விட்ஸர்லந்த் நாட்டில் அதன் மொத்த மக்கள் தொகை 62 லட்சம் பேர்கள்தான். அப்படி 62 லட்சம் பேர்கள் இருக்கிற அந்த சின்னஞ்சிறிய நாட்டில் 25 மாநிலக் கொடிகள் இருக்கின்றன. 25 மாநிலக் கொடிகளும் இவ்வளவையும் சேர்த்து 'அலா ஸ்விட்ஸர்லந்த்'—சிகப்பு வடிவத்தில் ஒரு கொடி அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் ஸ்விட்ஸர்லாந்த் முழுமைக்கும் ஆன தேசியக் கொடியாகும். ஸ்விட்சர்லந்த் நாட்டிலுள்ள மாநிலங்களில் ஒரு மாநிலத்திலுள்ள மக்கள் தொகை 33,000. அவர்களுக்கும் தனியாக ஒரு கொடி இருக்கிறது. இன்னொரு மாநிலத்திலுள்ள மக்கள் தொகை 25,000. அது நித்துவால்டன். அதற்கும் ஒரு கொடி இருக்கிறது. இப்படி ஒரு லட்சம், இரண்டு லட்சம் 12,000 பேர்கள், 25,000 பேர்கள் என்று மக்கள் தொகை கொண்டுள்ள மாநிலங்களுக்கு ஸ்விட்சர்லந்தில் தனித்தனி சின்னங்கள் அமைந்த கொடிகள் இருக்கின்றன. இந்தக் கொடிகளோடு ஸ்விட்சர்லந்தில் தேசியக் கொடியும் விழாக் காலங்களில் பறக்க விடப்படுகிறது. ஆனால் தேசியக் கொடி பறக்க விடப்படுகிற கம்பங்கள் சற்று உயர்ந்ததாகவும் அந்தந்த மாநிலங்களின் கொடிகள் பறக்க விடப்படுகிற கம்பங்கள் அதைவிட சற்றுத் தாழ்ந்ததாகவும் இருக்கின்ற வேறுபாட்டைத் தவிர வேறு எந்த வேறுபாடும் அங்கு கிடையாது. அங்கெல்லாம் தனித்தனியாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரசியல் சட்டம் இருக்கிறது. ஆகவே தனித்தனியாக கொடிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறக் கூடும்.

நம் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று நீண்ட நெடுங் காலமாக நாம் வலியுறுத்தி வருகிறோம். டாக்டர்

ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள், அண்ணா அவர்கள் இருந்தால் இந்தக் கொடிப் பிரச்சனையை அப்படியே விட்டு விடுவார்கள், ஏனென்றால் முன்பு அவர்கள் நாட்டுப் பிரிவினை விஷயத்தை விட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் மறைகிற நேரத்தில் எழுதிவைத்து விட்டுப் போன உயில் தான் மாகாண சுயாட்சி என்பதாகும். நாங்கள் அந்த உயிலை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி நான் இங்கு விரிவாக பேச விரும்பவில்லை.

ஆனால் இந்தக் கொடியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பிரிவினை நோக்கத்தின் அடிப்படையிலும் இந்தக் கொடியை நாங்கள் கேட்கவில்லை. ஒரு பெரியவர் கூட எழுதியிருப்பதாக அல்லது கூறியிருப்பதாக இன்று காலையில் நான் பத்திரிகையில் பார்த்தேன். ஏதோ சில நாட்கள் இருந்து விட்டுப்போகிறவர்கள் கிடைத்த சிம்மாசனத்தில் சிங்காரமாக அமர்ந்துவிட்டு போகலாமேதவிர ஏன் இந்த வம்புக்களுக்கு எல்லாம் வருகிறார்கள் என்று கூறியிருப்பதாக ஒரு பத்திரிகையில் நான் பார்த்தேன். ஏதோ எல்லோரும் சேர்ந்து ஒரு இடத்தில் எங்களை உட்கார வைத்துவிட்டு சில நாட்களுக்குத்தான் இருக்கப் போகிறீர்கள் என்று கூறி வாழ்த்துவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை: ஏனென்றால் பெரியவர்கள் சபித்தால் அது திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்த வரையில் அது வாழ்த்தாக மாறி கழகத்தை வாழ வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. எங்களுடைய ஜாதகமே எப்படியாவது ஒரு பெரியவர் எங்களை சபிக்கவேண்டும், அப்படி சபிக்கிற நேரத்தில் நாங்கள் வாழ்வது என்பது ஒரு முறையாக இருந்து வருகிறது. அந்தப் பெரியவர் வாழ்த்தினால் இன்னொரு பெரியவர் சபிப்பார். ஒரு பெரியவர் சபித்தால் இன்னொரு பெரியவர் வாழ்த்துவார். ஆகவே வாழ்த்துவதும் சபிப்பதும் மாறி மாறி ஒருவர் சபிக்க இன்னொருவர் வாழ்த்த என்று எங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே இது எங்களது ஜாதகமாகிவிட்டது. அந்த ஜாதக அடிப்படையில் நாங்கள் சில நாட்கள் அல்ல பல நாட்கள் இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைச்சரவை நடத்தக் கூடிய வாய்ப்பினை தமிழ் நாட்டு மக்கள் தருவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன் (ஆரவாரம்.)

இந்தக் கொடிகள் மூலம் உள்நாட்டில் பெரிய போராட்டங்கள் எல்லாம் ஏற்படும் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்களது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அந்தப் பெரியவரின் கருத்தை நான் நெஞ்சார மதித்து அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தனித்தனி கொடிகள் வைத்துக் கொண்டால் எப்படி உள்நாட்டுக் குழப்பம் வரும் என்பது தெரிய



வில்லை. கொடிகள் இல்லாத மாநிலங்களில் உள் மாநிலப் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட மாநிலங்கள் இருக்கும்போது நாம் நம் மாநில அளவில் ஒரு தனிக் கொடி அமைத்துக்கொள்ளவேண்டும். தேசியக் கொடியை நாம் புறக்கணிக்கக்கூடாது. நம் தேசியக் கொடியும் அதில் இருக்கவேண்டும் என்ற ஆசையின் அடிப்படையில்தான் நாம் இந்திய அரசுக்கு அதைப் பற்றி எழுதினோம். ஆகவே, அந்த நிலைமை குறித்து இந்த அவையில் ஒரு அறிக்கையை முன் வைப்பதன் மூலம் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு தேவை இல்லை என்ற கருத்தினை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தனிக் கொடி கேட்பதால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எவ்வித மாறுபட்ட கருத்தும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை உறுதியாகக் கூறுகிறேன். தேசியக் கொடி இப்போது போலவே எப்போதும் பயன்படுத்தப்படும். அதன் மதிப்பை குறைத்திட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்குத் துளியும் இல்லை.

இந்த அரசு, கடந்த ஜூன் மாதத்தில் நமது தேசியக் கொடியை நாம் உத்தேசித்துள்ள மாநில அரசின் கொடியில் சேர்க்க எண்ணியதால், நாம் அனுப்பிவைத்த 'மாதிரி' கொடிக்கு அனுமதி வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தது. அதற்கு, நமது பிரதமர் அவர்கள் மற்ற மாநில முதலமைச்சர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப் போவதாக இந்த அரசுக்குப் பதில் அளித்துள்ளார்கள்.

நாம் உத்தேசித்துள்ள மாநில அரசின் கொடியில் நமது தேசியக் கொடி ஒரு பகுதியிலும், நமது மாநில அரசின் சின்னம் மற்றொரு பகுதியிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாகவும், இந்திய அரசியல் சட்டப்படியும் தனிக் கொடி வைத்துக் கொள்வதை மறுப்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் எவ்வித இடமுமில்லை என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாம் உத்தேசித்துள்ள மாநிலக் கொடியில் தேசியக் கொடி இடம் பெறுதல் கூடாது என்று மத்திய அரசு தீர்மானிக்குமேயானால் நமது மாநிலத்திற்கு எத்தகைய கொடியை அமைப்பது என்பது பற்றி பிறகு நாம் யோசிக்கலாம்.

சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, போன்ற பெடரல் ரிப்பப்ளிக் முறையுடைய நாடுகளிலெல்லாம் அந்த பெடரேஷனைச் சேர்ந்த அங்கங்கள் தனிக் கொடி வைத்துக் கொண்டுள்ளன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாம், இந்தப் பிரச்சினையில் மத்திய அரசின் முடிவை எதிர் நோக்கியிருக்கிற இந்தச் சூழ்நிலையில் இம்மாமன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதைப் பற்றி விவாதிக்க

வேண்டிய அவசரமும், அவசியமும் இருப்பதாக அரசு கருதவில்லை யாதலால், அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. The Hon. Chief Minister has referred to the expression 'ஒரு பெரியவர்'. It would have been better if he had refrained from referring to a person who is not in this House. I am not saying that he has purposefully tried to be little him. It is always customary in this House not to refer to a person who will not be able to answer the point raised in the House. That is one aspect of the matter.

Another point is that I do not say that the Hon. Chief Minister's intention is to encourage divisive forces. But at the present juncture if Tamil Nadu and other States start doing such things, it would lead to a dangerous situation and that is why our revered leader Rajaji has mentioned about it.

MR. DEPUTY SPEAKER : This is not a personal explanation.

DR. H. V. HANDE : A reference has been made to my Leader who cannot answer the point raised in this House. That is why I want to explain the position. My point is that at the present juncture if we ask for such a thing, it would only encourage divisive forces in the country.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் அவர்களை பெரியவர் என்று குறிப்பிட்டுச் சொன்னேன். திரு. ஹாண்டே அவர்கள் கூட அண்ணா இருந்திருந்தால் இந்த கொடிப்பிரச்னையை விட்டு விடுவார் என்று சொன்னார்கள். பெரியவரை உறுப்பினர் ஹாண்டே மதிப்பது போல் நாங்கள் எல்லாம் மதிப்பதால், அவர் இந்த மன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெரியவர் என்றே குறிப்பிட்டேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: முதலமைச்சர் அவர்கள் நான் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு பதில் தரவில்லை. அதன்மீது அவர் கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான், அந்த அறிக்கையைப் படிக்கிற போது தங்கள் பக்கம் திரும்பிப்பார்த்தேன். தேசியக் கொடியை அதில் பொருத்தக்கூடாது என்று சொன்னால், நம்முடைய மாநிலத்திற்கு எத்தகைய கொடி அமைக்கலாம் என்பதைப்பற்றி பிறகு சிந்திக்கலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையின் காரணமாக, இந்தப் பிரச்னையை விவாதிப்பதற்கு அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்கக் கோரும் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.



(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதாவை இப்பேரவை முன் கொண்டு வரவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேன்மைமிகு கவர்னர் அவர்கள் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

(6) அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இம்மசோதாவை இம் மன்றத்தின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

7: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71 ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது விவாதம்: தொடர்ச்சி

திரு. பு. செ. முத்துசெல்வன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் நம்முடைய மின்சார வாரிய நிதி நிலை அறிக்கை மீது பேசிக்கொண்டு இருந்தபோது, மாநில நில வள வங்கியின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற கூட்டுறவு பாசன கழகத்திற்கு மின் வசதி அளிப்பதற்கும் இந்த மின்சார வாரியம் வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதைத் தொடர்ந்து. மற்ற இடங்களில் இருக்கிற மின்சார கம்பெனிகள் எல்லாம், முன்பு தமிழகத்தில் 8 மின்சார தனியார் நிறுவனங்கள் இருந்தன. அதில் நாம் 3 மின்சார தனியார் நிறுவனங்களை ஏற்று நடத்திக்கொண்டு இருக்கிறோம். இன்றும் 4 தனியார் நிறுவனங்கள் அப்படியே இருந்து கொண்டு இருப்பதால், அந்த தனியார் நிறுவனங்களிலிருந்து மின்சார பெறுவது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. அவர்களிடத்தில் சென்று முறையிடுகிறபோது, சொன்னால் அதற்காக ஒரு ஊருக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது என்று சொன்னால் அந்த ஒரு லட்ச ரூபாய்க்கு கடன் வழங்க வேண்டுமென்று அச்சுறுத்துகிறார்கள். அதற்குக் காரணம் கேட்டால், எங்களுடைய மின்

சார நிறுவனத்தை அரசாங்க மின்சார வாரியமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. அதை எப்போது ஏற்றுக் கொள்வார்களோ என்று அச்சம் இருப்பதால் எங்களுக்கு பாங்குகள், வங்கிகள் அல்லது மற்ற தனியார் துறையைச் சார்ந்தவர்கள் கடன் கொடுக்க முன் வருவதில்லை. அரசாங்கம் கடன் கொடுக்க முன்வரவேண்டும் அல்லது அரசாங்கம் உத்தரவாதம் அளித்தால் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். இந்த நிலைமையைப் போக்குவதற்கு தனியார் நிறுவனங்களை விரைவாக ஏற்று நடத்த முன் வரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய திருச்சி மாவட்டம், தென்சென்னை மின் வழங்கும் நிறுவனம் என்று தனியார் நிறுவனம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அக்கறையோடு பணியாற்றவேண்டுமென்ற எண்ணத்தையும் கைவிட்டுவிட்டது. முன்பு அரசாங்கத்திலிருந்து அவர்கள் கடன் பெற்ற காலத்தில் அக்கறையோடு பணியாற்றி வந்தவர்கள், இப்போது அவ்விதம் பணியாற்றாமல் இருக்கிறார்கள். ஏதாவது ஒரு ஊராட்சி மன்றம் தெருவிளக்குக் கட்டணம் கட்டத் தவறினால் 'பியூஸ் கேரீர்' எடுத்துக்கொண்டுபோய விடுகிறார்கள் என்றதொரு அச்சமான நிலைமை இருக்கிறது. எனவே, இது போன்ற குறைபாடுகளுக்கு இடம் தராமல் அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களை நாம் எடுத்துக் கொள்கிற வகையில் செயல்பட வேண்டுமென்று மின் ஆட்சி துறைத் தலைவரையும் அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சியில் பணம் கட்ட முடியாத நிலைமை இருக்குமானால், ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பணத்தை கட்டுவதற்கு உத்தரவு அனுப்பி இருப்பதுபோல் பேரூராட்சிக்கு அவர்களது பில் பணத்தை கட்ட முடியாத நிலைமை இருக்குமானால் அதற்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு பணம் கட்டுவதற்குரிய உத்தரவை அனுப்பி அப்படி 'பியூஸ் கேரீர்' எடுத்து விடக் கூடிய நிலைமை இல்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, நம்முடைய மின்சார தனியார் நிறுவனங்களை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டு விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் விலை உயர்ந்த செம்புக் கம்பிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்குப் பதிலாக விலை குறைவாக உள்ள அலுமினியம் கண்டக்டர்களை போட்டு வருகிறார்கள். எனவே இதை எல்லாம் மனதில் வைத்து நாம் விரைவாக நடவடிக்கை எடுத்தால்தான் தரமான பொருள்களை தனியார் நிறுவனங்களிலிருந்து நாம் எடுத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் இன்னும் பல கிராமங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக இருள் சூழ்ந்து இருக்கிறது. அந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் பெற முடியாத



நிலைமை இருந்து வருகிறது. என்னுடைய தொகுதியில் இருக்கிற முசிறி வட்டத்தைச் சார்ந்த கிராமத்தில், சிறுகுடி, சிறுபத்தூர், வங்காரம், தூதமங்கலம் என்ற லால்குடி வட்டத்தில் இருக்கிற கிராமங்களில் இது வரை இருண்ட நிலைமை இருந்து வருகிறது. இந்த கிராமங்களுக்கு எல்லாம் மின்வசதி கிடைக்க விரைவாக நடவடிக்கை எடுத்து, மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்குடி வட்டம் வெந்தலையில் மோட்டார் பம்புகளை நிறுவி இருக்கும் விவசாயப்பெருங்குடி மக்கள் பல காலம் மின்சாரம் பெற முடியாமல் அவதிப்பட்டு வருகிறார்கள். அந்த கிராம மக்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்க வேண்டும் என்று மின்சாரத்துறை தலைவரை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற நிலைமை இல்லாத அளவுக்கு விரைவாக பணிகளை மேற்கொண்டு நம்முடைய வாரியம் சிறப்பாக பணியாற்றக்கூடிய நிலையை உருவாக்கவேண்டுமென்று நம்முடைய மின்சார வாரியத்தலைவரையும், அமைச்சரையும் கேட்டுக் கொண்டு, இந்த அளவில் முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, மின்திட்டங்கள் செவ்வனே செயல்படுவதற்கும் மின்சார வாரியம் திறம்பட நடைபெறுவதற்கும் அத்தியாவசியமானது. அதில் பணியாற்றுபவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் முறையில் நல்லதொரு உறவு தொழிலாளர்களுக்கும் அந்த வாரியத்திற்கும் இருக்க வேண்டும். ஆனால், துரதிருஷ்டவசமாக அப்படிப்பட்ட நல்ல உறவு இருப்பதாக தெரியவில்லை. அண்மையில் அவர்கள் சம்பள உயர்வுக்கு ஒரு கோரிக்கை வைத்தார்கள். அங்கே உள்ள நிலைமை என்ன? 14 யூனியன்கள் பதிவுசெய்யப்பட்ட சங்கம் என்ற பெயரில் இருக்கின்றன. இரண்டு சங்கங்கள் அங்கீரிக்கப்பட்ட ஸ்தாபனம். இந்த 14 சங்கங்களும் சேர்ந்து தான் சம்பள உயர்வு பிரச்னைப் பற்றி கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சிகள் நடத்தின. அதன் விளைவாக லேபர் கமிஷனர் கன்சிலியேஷன் நடவடிக்கையை ஆரம்பித்தார். 'கன்சிலியேஷன்' நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது பேச்சுவார்த்தையை 'பைலேடரல்' பேச்சுக்கு அதாவது வாரியமும் சங்கங்களும் சேர்ந்து பேசும்படி கன்சிலியேஷன் ஆபீசர் சொன்னார்கள். அதில் சமரசம் ஏற்படாவிட்டால் மீண்டும் கன்சிலியேஷன் நடைபெறும் என்று லேபர் கமிஷனர் உத்தரவாதம் கொடுத்தார்கள். ஆனால் அதற்கிடையில் முதலமைச்சர் அவர்கள் சம்பளப் பட்டியலை வெளியிட்டார்கள். வெளியிட்டபொழுது எந்த யூனியன்கள் இது சம்பந்தமான பிரச்னைகளை எழுப்பியதோ அந்த சங்கங்களை ஆலோசித்து இந்த சம்பளப் பட்டியலை வெளியிட்டார் முதலமைச்சர். சம்பளப் பட்டியல் வெளியிடுவது பற்றி ஆட்சேபணையில்லை. ஆனால் சட்டப்படி கன்சிலியேசன் நடந்து கொண்டு இருக்கிறபோது, அந்த சட்டப்பிரகாரம் எல்லாம் நடக்க வேண்டும். எந்த சங்கங்கள் இந்த பிரச்சினை பற்றி தகராறு எழுப்பியதோ அந்த

சங்கங்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். இந்த முறைகேடு சம்பந்தமாக நான் முதலமைச்சர் அவர்களிடம் நேரிடையாகப் பேசியிருக்கிறேன். கடிதத்திலும் எழுதியிருக்கிறேன். அதற்குப் பிறகும் கூட நிலைமை என்ன? அவசர அவசரமாக இந்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்பதன் விளைவாக ஏற்பட்டது என்ன? எலக்டிரிசிடி வேஜ் போர்டு சிபாரிசு செய்த அதே சம்பளத்தில் எந்த விதமான வித்யாசமும் இல்லாமல் ஏன் ஓரளவுக்கு அந்த சம்பளவிகிதங்களையே கொடுத்திருக்கிறார்களா? தொழிலாளர்களுக்கு அதனால் எந்த அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், எலக்ட்ரிசிடி வேஜ் போர்டு 1—4—1959 லிருந்து அமலுக்கு வரவேண்டும் என்று சிபாரிசு செய்திருந்த போதிலும் 1—12—1969 லிருந்து தான் இதை அமுல் படுத்தியிருக்கிறார்கள். ஆனால், கிட்டத்தட்ட ஒரு கோடி 80 லட்சம் ரூபாய் தொழிலாளர்களுக்கும், அங்கு இருக்கக்கூடிய பொறியாளர்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவசர அவசரமாக இந்த சம்பள விகிதங்களைத் திணித்ததன் காரணமாகத்தான் இந்த நட்டம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

(திரு. எஸ். முத்துலிங்கம் தலைமை)

அது மட்டுமல்ல; அநேகவிதமான ஒழுங்கீனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு அன்ஸ்கில்ட் லேபர் பாக்கர் அல்லது கூர்க்கா வாட்ச்மேனுக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 120 ஆனால், எஸ்.எஸ்.எல்.சி. படித்து பாஸ் செய்து டெக்னிகலாக குவாலிபைடு டிரேசருக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 118, 110. அன்ஸ்கில்ட் லேபரை விட ஸ்கில்ட் லேபருக்கு சம்பளம் குறைவாக ஆரம்பிக்கிறது. அப்படி விஞ்ஞான அடிப்படையில் இல்லாமல் சம்பள விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன.

இன்னொரு அநுமலியையும் பார்க்கலாம். முன்பு ஸ்டோர் கீப்பர் முதல் கிரேடுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 135. சீனியர் ஸ்டோர்ஸ் அஸிஸ்டெண்டுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 115. இப்பொழுது இரண்டு பேர்களுக்கும் ரூ. 160 சம்பளம். அதே மாதிரித்தான் முதல் கிரேடு டிராப்ட்ஸ்மேனுக்கு ரூ. 352 வரையில் வந்த பிறகுதான் ரூ. 25 சம்பள உயர்வு கிடைக்கும். ஆனால் செகண்ட் கிரேடு டிராப்ட்ஸ்மேனுக்கு ரூ. 300 வந்தவுடனேயே சம்பள உயர்வு ரூ. 25 கிடைக்கும். இம்மாதிரி ஒழுங்கீனங்கள் தாராளமாக ஏற்பட்டிருக்கின்றன.

அவசரக் காலமாக நிலைமைகளைச் சரிவர சீர்தூக்கிப் பார்க்காமல் செய்ததன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் தொழிலாளர்களிடையே நிச்சயம் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலான தொழிலாளர்களின் பேரில் வேண்டுமென்றே இச்சம்பளத் திட்டத்தை திணிக்கவேண்டுமென்று திணிக்கப்பட்டிருப்பதன் காரணமாக தொழிலில் அமைதி திருப்தி இல்லாத சூழ்நிலையான சூழ்நிலையின்மை உருவாகி இருக்கிறது. அதன் விளைவாகத்தான் மாஸ் கேஷுவல் லீவ் எடுத்தார்கள். மாஸ் காஷுவல் லீவ் எடுப்பது





சட்டப்பூர்வமாக அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை. ஆனால் மாஸ் காஷுவல் லீவ் எடுத்தவர்களின் பேரில் மின்சார வாரியம் எடுத்த நடவடிக்கை மிகவும் மோசமான நடவடிக்கை என்றுதான் கூற வேண்டும். தனிப்பட்ட முதலாளிகள் கூட கேட்கத் துணியாத செய்கையை, அதாவது மன்னிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு வரவேண்டும் என்று மின்சார வாரியம் வற்புறுத்தியது. பொறியாளர்கள் தன்னுடைய தன்மானத்தை விடக்கூடிய முறையில் மன்னிப்பு எழுதிக் கொடுக்கும்படி கோரப்பட்டிருக்கிறார்கள். மேலும் பெரும்பாலானவர்கள், பற்பல இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். தொழிற் சங்கத்தைச் சேர்ந்த முக்கிய ஊழியர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, திரு. பி. சி. வேலாயுதம் என்பவர், சங்கத்தின் பொதுச் செயலாளர், கழுகுமலையிலிருந்து வடக்கன்குளத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். அதேபோல் பொருளாளர் திரு. ராஜாமணி என்பவர் கோயில்பட்டியிலிருந்து திருச்செந்தூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் திரு. பி.ஆர்.எஸ். மணி என்கிற பேஸின் பிரிட்ஜிலுள்ள சங்க நிர்வாகியை பொன்னேரிக்கு மாற்றியிருக்கிறார்கள். இப்படி இந்த இயக்கத்தில் இருக்கக்கூடிய முக்கியமான சங்கங்களின் ஆபிஸ் பேரர்களை கண்ட இடங்களுக்கு மாற்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தொந்தரவுகளை மின்சார வாரியமும், அதிகாரிகளும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல என்ஜினியர்களைப் பொறுத்தவரையிலும் நிலைமை சரியான முறையில் இல்லை 10—3—1970 லிருந்து அவர்களின் வேலைப் பளுவை குறைப்பதற்கு போர்டு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால், இன்றைய வரையில் அந்த முடிவு அமல் செய்யப்படவில்லை. நிச்சயம் இந்த வேலைத் திட்டப்படி வேலை பளு அமைக்கப்பட்டு, என்ஜினியர்கள் வேலை செய்தால் நிர்வாகம் திறம்பட நடக்கவும் பல இடங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கும் சௌகரியமாகவும் இருக்கும் மேலும் கிட்டத்தட்ட 300 என்ஜினியர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வேண்டிய வாய்ப்பும் இருக்கிறது. இவர்களுடைய சம்பள விகிதம் இதர மாநிலங்களிலுள்ள பொறியாளர்களுடைய சம்பள விகிதத்தைவிட குறைவாக இருக்கிறது. அதனால் அவர்களிடையேயும் அதிருப்தி நிலவுகிறது. மின்சார வாரியம் அவர்களுக்கு சம்பள உயர்வும், சட்டபூர்வமாக அவர்களுக்குச் சேரவேண்டிய எந்தவிதமான உரிமைகளையும் கொடுக்காத சூழ்நிலைதான் இருந்து வருகிறது இரண்டு மூன்று ஆண்டுகளாக இதே மன்றத்தில் மின்சார வாரியத்திலுள்ள தொழிலாளர்களின் நலக் கொள்கையைப்பற்றி பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட இதைப்பற்றிப் பேசியிருக்கிறார். இருந்தும், எந்தவிதமான முன்னேற்றமும் இருக்கவில்லை.

எண்ணூரில் அனல் மின்சார நிலையத்தில் இரண்டு 60 மெகவாட் யூனிட்டுக்காகவும், இரண்டு 110 மெகவாட் யூனிட்டுக்காகவும் 26 கோடி ரூபாய் என்று முதலில் மதிப்பீடு போடப்பட்டிருந்தும்,

[திரு. சி. கோவிந்தராஜன்] [1970 ஆகஸ்ட் 26

அந்த மதிப்பீடு இப்பொழுது ரூ. 74 கோடிக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. இதன் அடிப்படைக் காரணம் என்னவென்று பார்த்தால். அங்கு பல வேலைகள் மோசமான காண்டிராக்ட் கம்பெனிகளுக்கு விடப்பட்டிருக்கின்றன. கருப்புப் பட்டியலிலுள்ள சில கம்பெனிகளுக்கு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிலாய் கன்ஸ்ட்ரக்‌ஷன் கம்பெனிக்கு சில காண்டிராக்ட் வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேலைகள் மோசமாக நடைபெறுகின்றன. தொடர்ந்து 10 நாட்களுக்குக் கூட மின்நிலையம் இயங்க முடியவில்லை. அடிக்கடி ரிபேர் ஏற்பட்டுவிடுகிறது. ரிபேர் வேலைகளைச் செய்வது காண்டிராக்டருடைய வொர்கர்ஸ் அல்ல, மின்சார வாரியத்தின் நிரந்தர ஊழியர்கள், அந்த வேலைகளைச் செய்கிறார்கள். 155 மூட்டை சிமெண்டு லாரியில் சென்றிருக்கிறது. இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. டர்பைன் அண்டு பாயிலர் வேலைகள் காண்டிராக்டர்களிடம் விடப்பட்டிருக்கின்றன.

இதுவல்லாமல் ஏராளமான பைப்புகள் சமுத்திரக்கரை ஓரத்தில் வைக்கப்பட்டிருப்பதால் துருப்பிடித்துப் போகின்றன. துருவை சுரண்டி சுத்தம் செய்தபிறகு பைப்புகளின் திக்னஸ் குறைந்து விடுகிறது. அதனால் பிரெஷர் தாங்காமல் பைப்புகள் வெடிக்கின்றன. இந்த ஒழுங்கீனங்களுக்கெல்லாம் காரணம் இங்கே இருக்கக்கூடிய ரஷீத் அகம்மது என்ற எஸ்.ஈ. அவர் பொறுப்பற்ற முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறார். இவர் காண்டிராக்ட் கம்பெனியோடு உறவு வைத்துக்கொண்டு இப்படி பல்வேறு காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார். தி.மு.க. உறுப்பினராக வேஷம் போடுகிறார். அவர் தி.மு.க. உறுப்பினர் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், இவருடைய செய்கைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்று கோருகிறேன். அரசாங்க ஆதரவைப் பெறுவதற்காக வாரியத்தின் அதிகாரிகள் இன்றைக்கு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அந்த எஸ். ஈ. ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு ஆதரவு காட்டி ஊக்குவித்துவருகிறார். அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்காக. அந்த சமயத்தில் வேறு சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்களை பழி வாங்கக்கூடிய முறையில் நடந்து கொண்டு வருகிறார். இப்படி மோசமான நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. பாபுசாமி என்ற தொழிலாளிக்கு வொர்க் ஸ்பாட்டில் அல்லாமல் வெளியில் நடந்த ஒரு சம்பவத்திற்காக அவர் பேரில் கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு, அவர் அதிலிருந்து நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டும் கூட, இன்று வரை அவருக்கு வேலை கிடைக்கவில்லை. தற்பொழுது சேர்மனிடம் அது சம்பந்தமாக அப்பீல் பெண்டிங்காக இருக்கிறது. ஆனால், ஐ.என்.டி.யு.சியைச் சேர்ந்த மஜீத் என்ற தொழிலாளியை ஒரு டி.எம்.கே. தொழிலாளி வொர்க் ஸ்பாட்டிலேயே அடித்துவிட்ட



1970 ஆகஸ்ட் 26] [திரு. சி. கோவிந்தராஜன்]

போதிலும், இன்று வரைக்கும் அந்தத் தொழிலாளியின் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. .(மணி அடிக்கப்பட்டது).

* திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற நான் முன்வந்திருக்கிறேன்.

இந்த அறிக்கையில் கோவை ஜில்லாவில் பெருமாநல்லூரில் மின்சாரக் கட்டணம் பற்றிய கிளர்ச்சியைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகளாவது இருந்திருக்கலாம். ஆனால், இல்லை. அந்தக் கிளர்ச்சியில், அதற்காகப் போராடி உயிர் நீத்தவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். போராடிய வீரர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்திலுள்ளவர்கள் முதலில் 1970-க்குள் இந்த நாட்டில் மின்சாரம் இல்லாத ஊரே இருக்காது என்று சொன்னார்கள். இப்பொழுது 1972-க்குப் போயிருக்கிறார்கள். இது இப்படி நீடித்துக்கொண்டு போகக்கூடாது. சீக்கிரமாக எங்கு பார்த்தாலும் மின்சார விளக்குகள் போட்டுக்கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆயிரம் பேர்கள் மின்சார வாரியத்தில் வேலைக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். 6 மாத காலம் ஆகியும் இன்னும் இது பற்றி முடிவு தெரியவில்லை. பல ஆயிரம் பேர்கள் விண்ணப்பத்தின் மூலம் எத்தனை ரூபாய் வருமானம் நம்முடைய அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது, அதிலே எத்தனை விண்ணப்பங்கள் தள்ளப்பட்டன, எத்தனை விண்ணப்பதார்கள் இண்டர்வியூவிற்கு அழைக்கப்பட்டார்கள், அதில் அரிசனங்கள் எத்தனை பேர்கள், அதில் எவ்வளவு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அதில் எவ்வளவு பேர்கள் அரிசனங்கள் என்ற விவரங்களையெல்லாம் நம்முடைய அரசாங்கம் பரிசீலித்து ஒரு நல்ல முடிவு எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆயிரக்கணக்கான பேர்வழிகள் இந்த வேலை வரும், வேலை வரும் என்று எண்ணிக்கொண்டு, நம்பிக்கொண்டே இருக்கிறார்கள். வேறு வேலைக்கும் போகாமல் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் உடனடியாக இதைப்பரிசீலித்து விரைவில் அவர்களுக்கு உத்தியோகம் கொடுத்து ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த உத்தியோகம் கொடுப்பதில் அரிசனங்களுக்கு விகிதாசார முறையில் கொடுக்கப்படுகிறதா என்பதையும் இந்த அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் தாலுகாவில் மின்சார விளக்கு தெரியாத பல கிராமங்கள் இருக்கின்றன. ஒரு சில கிராமங்கள் என்று சொல்லவில்லை, பல கிராமங்கள் இருக்கின்றன: பல கிராமங்களில்

மின்சாரம் போனாலும், அது ஜாதி இந்துக்களின் தெருக்களோடு தான் நின்றுவிடுகிறது. அரிசனத் தெருமக்களுக்கு வருவதில்லை, இப்படி பல கிராமங்கள் இருக்கின்றன. நம்முடைய அரசு ஒரு சி.ஐ.டி.-யைப் போட்டாவது பரிசிலனை செய்து ஜாதி இந்துக்களின் தெருக்கள் வழியாக போகின்ற மின்சாரத்தை அரிசன தெருக்கள் வரையில் போகும்படியான நிலைமையை நிச்சயம் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார விளக்குகள் போட்டிருக்கிறார்கள். ஆனால், முதல் நாள் போட்ட விளக்கு அடுத்த நாள் எரிவதில்லை, அதற்குக் காரணம் அவசர அவசரமாகப் போடுவதுதான் என்று நினைக்கிறேன். பல்புகள் இல்லாமல் வெறுமனே கம்பங்கள் மட்டும் நிற்கின்றன. அவற்றை அதிகாரிகள் உடனடியாகக் கவனித்து, போட்ட விளக்குகள் எரியாமல் இருப்பது ஏன், என்ன காரணம் என்று ஆராய்ந்து, அதற்கான பரிகாரம் தேடவேண்டும். நான் ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவர் என்றால், நான் எங்கு வேண்டும் என்று சொல்லுகிறேனோ, அங்குதான் கம்பங்கள் நடப்படுகின்றன. எனக்கு வேண்டாத இடத்தில் கம்பங்கள் நடப்படுவது இல்லை. அதுபோன்று நடக்கும் தவறுகளை, குற்றச் சாட்டுக்களை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், மின்சார வாரியமே கம்பங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நடத்தினால், அதனால் நல்ல பலன் கிடைக்கும். காரணம், பல நேரங்களில், கம்பங்கள் இல்லை, இன்னும் வர வில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே. அப்படி ஒரு தொழிற் சாலை ஆரம்பிப்பதால், ஏழை எளியவர்களுக்கும் நலமாக இருக்கும். தொழில் வளர்ச்சியும் ஏற்படும்.

மேலும், கட்டணங்களைப் பரிசீலிக்க செயற் குழுக்கள் அமைக்கும்போது, கட்சி சார்பற்ற முறையில் உறுப்பினர்களைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1972-க்குள் மின்சாரம் கொண்டு வருவோம் என்பதை இன்னும் நீட்டக் கூடாது. குறிப்பாக எங்கள் தாலுகாவைப் பொருத்தவரையில், விவசாயிகளுக்கு மின்சாரம் வேண்டாம். ஸ்ட்ரீட் லைட்டுகளைப் போட்டுக் கொடுத்தாலுமே, எங்கள் தாலுகா மக்கள் இந்த அரசை போற்றுவார்கள் என்று கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர், (திரு. எஸ். முத்துலிங்கம்):** அடுத்து திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இடத்தில் இல்லை. திருமதி பழனியம்மாள் பேசுவார்கள்.

*** திருமதி வி. ப. பழனியம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் வரவுசெலவு திட்டத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன், நமது இந்தியாவிலுள்ள மற்ற





மாநிலங்களைவிட, தமிழ்நாட்டில்தான் மின்சார வாரியம் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. என்று மிகவும் பெருமைப்படுகிறேன். சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் 3,950 கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதாகத் திட்டமிடப் பட்டுள்ளது. சென்ற ஆண்டு அக்டோபர் முதல் மார்ச் முடிய ஆறு மாத காலத்தில் 4,650 கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றிற்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது என்றால் தமிழ்நாடு மின்சார வாரியம் எவ்வளவு விரைவாகப் பணியாற்று கிறது என்பதைக் கூற வேண்டிய அவசியமே இல்லை. இந்த வாரியம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றுகிறது. 71,000 பணியாளர்களைச் கொண்டு சிறந்த முறையில் பணியாற்றும் ஒரு பெருமைக்குரிய வாரியம் மின்சார வாரியமே. சென்ற ஆண்டு 500 பொறியியல் வல்லுநர் களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாக உள்ளது. இது தவிர, 1,500 இளம் எழுத்தர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதாக உள்ளது. மற்ற மாநிலங்களில் சம்பள உயர்வுக்காகப் போராடி இன்னும் வெற்றி பெறாத நிலையில் உள்ளனர். நமது மாநிலத்தில் Wage Board சிபாரிசு செய்வதற்கு மேலேயே, அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்து, அத்துறையில் பணிபுரியும் அனைவரையும் திருப்திப் படுத்திய பெருமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரிய தாகும். தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தியை அதிக அளவில் பெருக்கி விவசாயத்திற்கும் தொழிற்துறைக்கும் அதிக அளவில் பயன் அளிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தை இவ்வாரியம் கொண்டுள்ளது. அதற்கேற்ப மூன்று உற்பத்திச் சாதனைகளைச் செய்துள்ளது. எண்ணூர் அனல் மின்சக்தி நிலையம், ஆளியாறு திட்டம், பேசின் பிரிட்ஜ் ஆகிய மூன்று உற்பத்தித் திட்டங்களையும் நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறது. சமீபகாலத்தில் இவ் வாரியத்தில் உள்ளவர்கள் திடீரென்று வேலை நிறுத்தம் செய்த பொழுது அதை மிகத்திறமையாக சமாளித்த பெருமை எங்கள் முதல்வருக்கும், இவ்வாரியத்தில் பணிபுரியும் தலைவருக்குமே சேரும். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடி, தமிழ்நாட்டில் தான் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 25 சத விகிதம் விவசாயத்திற்காக உபயோகப்படுகிறது. இந்த ஆண்டு 11,000 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத் திலும் அம்மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் களையும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களையும் கொண்ட ஒரு அட்வைசரி கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்கமிட்டி மாதம் ஒரு முறை கூட்டப்படுகிறது. அதில் மின்சார வாரியம் சம்பந்தப் பட்ட எல்லா விவரங்களும் விவாதிக்கப்படுகிறது. இதனால் எங்களுக்கு எங்கள் தொகுதியில் உள்ள மின்சார இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு விரைவில் மின்சார இணைப்புப் பெற முடிகிறது. அக் குழுவில் குறிப்பிட்ட குறைகளை உடனடியாக விரைவில் நிவர்த்தி செய்யப்படுவது பாராட்டுக்குரியதாகும். தாழ்த்தப்பட்ட

இனங்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கப்படுகிறது. இந்த மாதம் கோவையில் நடந்த அட்வைசரி கமிட்டியில் எங்கள் தாராபுரம் வட்டத்தில் இன்னும் ஆறே ஹரிஜனக் காலனிகள் மின் இணைப்புப் பெறுமல் இருக்கின்றன. மற்றவையெல்லாம் மின் இணைப்புப் பெற்றுள்ளன. இவைகளுக்கு விரைவில் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்ற புள்ளி விவரங்கள் கிடைத்தன. உள்ளபடியே இவ்வாரியம் இவ்வளவு விரைவாகப பணியாற்றுவதைக் குறித்துப் பாராட்டினேன். இவ்வளவு சிறப்பாகப் பணியாற்றும் இவ்வாரியத்தைப் பாராட்டி உரையை முடிக்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் வரவு செலவு திட்டத்தின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சிறப்பு கிராம மின்சாரத் திட்டத்தின் கீழ், 1972 க்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுப்பது என்பது வரவேற்கத்தக்க ஒன்றுதான். ஆனாலும், வேளாண்மை சம்மந்தப்பட்ட வரையில், திட்ட சீராகச் செயல் படுத்தப் படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். நான்கே முக்கால் லட்சம் பம்பு செட்டுகள் மின்விசை அடைந்திருக்கின்றன. மேற் கொண்டும் பல்லாயிரக்கணக்கான இணைப்புக்கள் எடுக்கத் தயாராக இருக்கின்றன. அதற்குக் காரணமும் இங்கே இருக்கிறது. இந்த ஸ்டேட்மெண்டில், அதாவது கருத்துரைகளின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கையைக் காட்டுகிற விவர அறிக்கையில் 1968-69-ல் ஒன்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

There has been delay in giving supply to the agricultural pumpsets on the plea that the transformer capacity is not adequate, materials are not available, etc.

Every effort is being made by the Board to procure transformers, etc.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1968-69-லிருந்து குறிப்பிட்டிருந்தும், இன்று வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான பம்புசெட்டுக்கள் இணைப்புக்குத் தயாராக இருக்கின்றன. அதற்குக் காரணம் அதிகாரிகள் சொல்லுகிறார்கள், சர்க்காருடைய திட்டம், கிராமத்திற்கு மின் விசை கொடுப்பது தான், பம்புசெட்டுக்கள் இரண்டாவது கட்டம்தான் என்று அழுத்தமாக சொல்லுகிறார்கள். வேளாண்மை அபிவிருத்தி அடைய, உணவு பற்றாக்குறை போக விவசாயம் முக்கியமானது. இருந்தும், என்ன காரணமோ தெரியவில்லை. அரசின் கொள்கை கிராமங்களுக்கு மின் விசை கொடுப்பது என்றாலும், விவசாயத்தை புறக்கணிப்பது அல்ல. 1968-69-ல் இருக்கும் குறைபாட்டை, உடனடியாக, மெடீரியல்ஸ் கிடைப்பதில் தாமதம் என்று புகார் சொல்லுவது சரியாகத் தெரியவில்லை.





அது போக, பில்ஸ் சம்பந்தமாக, முன் எல்லா விவரங்களும் கொடுக்கப்படும். இப்பொழுது மொத்தமாகக் கொடுக்கிறார்கள். விரிவாக 7, 8 காலங்கள் பூர்த்தி செய்வதை நிறுத்தி விட்டார்கள். ஒட்டுமொத்தமாகக் கொடுத்தால் போதும் என்று மேலிடத்திலிருந்து சொல்லியிருப்பதாக சொல்லுகிறார்கள், இதனால் பல தவறுகளும் வரும். சாதாரண குடியானவனுக்கு இவ்வளவு மீட்டர் சார்ஜ், அதற்கு இவ்வளவு கட்டணம் என்பதெல்லாம் தெரியாது. தனித்தனியாக மீட்டர் சார்ஜ் இவ்வளவு, ப்யூஸ் சார்ஜ், இவ்வளவு என்றெல்லாம் விவரங்கள் கொடுத்தால்தான் தெரியும். ஒட்டு மொத்தமாகக் கொடுக்கும் முறையில் தவறுகள் ஏற்படுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அது போக, பின் தங்கிய பகுதி, பாக்வர்ட் ஏரியாவிற்கு, க்ராஷ்ப்ரோகிராம் வேண்டும் என்று சென்ற ஆண்டே சொன்னேன். தஞ்சாவூரில் போல 5 சதவிகிதம் ரிடர்ன் கணக்கு வைத்துக் கொண்டு செய்ய வேண்டும். பதில் கொடுக்கப்பட்டதைக் கவனித்துப் பார்த்தால், 32-வது பதில் என்று நினைக்கிறேன். அதில்

In the case of schemes for power suppiy to Thanjavur district under the 'Crash Programme' the schemes are taken up if the estimated return is 5 per cent. This procedure may be adopted in the case of schemes in backward and drought affected areas

அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை

against a return of 25 per cent normally required to make a scheme self-supporting the Board is adopting only 10 per cent as standard. The suggestion to further it to 5 per cent is not feasible of compliance in view of the difficult ways and means position of the Tamil Nadu Electricity Board and the Government.

என்றுதான் இருக்கிறது. பாக்வர்ட் ஏரியாவிற்கு, ட்ராட் அபெக்டட் ஏரியாவிற்கு சலுகை கொடுக்க வேண்டும் என்றதற்குப் பதில் கொடுக்கப்படவில்லை. அதற்குமேலே சொன்ன சலுகை இருந்தால் நலமாக இருக்கும். பின்தங்கிய பகுதியாக இருப்பதால், உணவு உற்பத்திக்கு வசதி ஏற்படும். தற்போது மின்விசை கேட்போர்கள் மெட்டீரியல்ஸ் எல்லாம் வாங்கிக்கொண்டு தான் சர்வீஸ் கனெக்ஷனை கொடுக்கிறார்கள். மெட்டீரியல்ஸை நாங்கள் கொடுக்கிறோம். ஆனால் அது உங்கள் கணக்கில் கொடுக்கப்படுகிறதா? விவரம் இருக்கும். இதனால் பல ஒழுங்கீனங்கள் ஏற்படுகின்றன. சாமான்கள் வாங்கி கொடுத்தால் விசை கொடுக்கப்படும் என்ற புது வழியை செய்து கொடுத்தால் பல தவறுதல்கள் குறையும். Labour charges பெற்றுக் கொண்டு மின் விசை இணைப்புக் கொடுக்கலாம். அடுத்தபடியாக மின்விசை கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் 30-வது கேள்விக்குப் பதில் கொடுக்கும் போது, அதாவது 1969-70 நடவடிக்கையில்

In cases where the distribution lines are already laid, power supplies are generally arranged within about a month from the date of furnishing the deposit. In cases where extensions of lines have to be made the connecting up of power supply depends upon feasibility of evolving remunerative schemes, readiness of parties to avail of supply and completion of dependent schemes sanctioned earlier. In view of the above, while every effort is taken to expedite power supply it may not be possible to specify any time limit for effecting service connections.

என்று பதில் சொல்கிறீர்கள். அப்படிக் கொடுப்பதற்கே ஒரு வருஷம் ஆகிறது. பல காரணங்களைச் சொல்லி மனுக்களை நிராகரிக்கிறார்கள். சாதாரணமாக ரெவின்யூ இலாகாவில் பட்டா டிரான்ஸ்பர் முப்பது நாட்களுக்குள் முடிகிறது. 'பர்னிஷிங் தி டெபாசிட்' என்று சொல்லி அது வருஷக் கணக்காக ஆகி விடுகிறது. இந்த நிலைமையை உடனடியாக கவனிக்கவேண்டும். மனு கொடுத்த தேதியிலிருந்து இத்தனை நாட்களில் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு இருக்க வேண்டும்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மின்சார வாரியத்தில் 1970-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீதும், 1969-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியதை வரவேற்று, எனது கருத்துக்களைச் சுருக்கமாக இப்பேரவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

நான் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னால், இதற்கு முன்னைய அரசு இந்த மாநில ஆட்சியை நடத்திய காலத்தில் என்னுடைய கழகத் தலைவர்களால் இதே சட்டமன்றத்தில் மின்சாரத் துறை வாரியத்தைப்பற்றி என்னென்ன குற்றம் கூறினார்களோ அதே குறைகளைத்தான், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் எதிர்த்தரப்பிலிருக்கிற காங்கிரஸ் உறுப்பினர்களும், மற்றைய மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துக்கூறுவதாக நான் உணருகிறேன். பொதுவாக, நான் இரண்டு முறை மின்சார வாரியத் துறைப் பற்றிப் பேசும்போது, அதிலே உள்ள பலவிதமான குறைபாடுகளையும், நீக்கப்பட வேண்டிய குறைபாடுகளையும் எடுத்துக் கூறியிருக்கிறேன். இந்தக் குறைபாடுகளை நன்கு தெரிந்துவைத்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின்சார வாரியம் எத்தகைய முறையில் செயல்பட வேண்டுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, நல்ல முறையில் இயங்க பாடுபட்டு வருகிறார்கள். இதையெல்லாம் எதிர்க்கட்சி நண்பர்கள் நெஞ்சிலே கைவைத்துப் பார்த்தால் அவர்களுக்கு தெற்றென விளங்கும் என்பதை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். 71 ஆயிரம் ஊழியர்களைக் கொண்டிருக்கிற இந்த ஸ்தாபனம் தமிழகத்திலே ஜீவாதாரமான ஸ்தாபனமாக விளங்குகிறது என்பது மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே மின்சாரத் துறை வாரியமானது



இரண்டாவது இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து சிறப்புற்று விளங்குகிறது என்பதைப் போற்றிப் புகழவேண்டிய உறுப்பினர்கள் இங்கே பகையுணர்ச்சியைக் காட்டுகிறார்கள். 'சிறந்ததை சிறந்தது' என்று கூறுவதுதான் தமிழகத்தின் பண்பாடாகும். அந்த நிலைக்கு மாறாக, வேற்றுமையான கருத்துக்களை வலியுறுத்தி வருவதைக் காணும்போது வருத்தம் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, பின்னடைந்த பகுதிகளில் தேவையான விரைவு காட்டப்படவில்லை என்றுதான் இங்கு எடுத்துச் சொன்னார்கள். நான் இங்கே எனது கருத்தாக சொல்ல இசைவதெல்லாம், நான்கைந்து ஆண்டுக் காலமாக முடங்கிக் கிடந்த கோரிக்கை மனுக்கள் எல்லாம் கடந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றிய பெருமை தமிழக அரசுக்கும், தமிழக மின்சார வாரியத்திற்கும் உண்டு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திட்டமிட்ட நிலையில் சென்னையிலும், சென்னையை அடுத்துள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலும் மின்சாரம் இல்லாத கிராமங்களே இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு, மின்சாரம் இல்லையென்ற புகார் இல்லாத அளவிற்கு, மனித வாழ்விற்கு ஜீவாதாரமாக இருக்கின்ற வேளாண்மைத் துறைக்கு வேண்டிய மின்சாரத்தையும் கொடுத்து, பொலிவுபெற்று விளங்குகிறது என்றால் அதில் தவறு இல்லை. இன்றைய தினம் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற தலைவர் அவர்களும், மற்றவர்களும் எவ்வளவு சிறப்பான காரியத்தை ஆற்றி இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). நான் விரிவுபடுத்திப் பேச முற்பட்டவன் தலைவருடைய ஆணையினால் என்னுடைய பேச்சை சுருக்கிக்கொள்கிற நிலையில் இருக்கிறேன். மின்சார வாரியம், வேளாண்மைத் துறை சிறந்து விளங்க பெரும் உதவி செய்திருக்கிறது. வேளாண்மைத் துறைக்கு கொடுப்பதில் மின்சாரம் 6 புதிய காசுகள் குறைவு. வேளாண்மைத் துறையில் யூனிட் ஒன்றுக்கு 9 பைசா வீதம் தருவதன் மூலம் இந்த வாரியம் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறது. ஒரு பைசாவாக இருந்தாலும் ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வேளாண்மைத் துறைக்கு 6 பைசா குறைத்துக் கொள்வதன் மூலம் இந்தத் துறை 6 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்றுக்கொள்கின்ற நிலைமை இருக்கிறது. அப்படி மக்களுக்கு பலவகைகளிலும் உதவி செய்து வருகின்ற இந்த மின்சார வாரியத் துறையைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை நான் முழுமையாக வரவேற்று, ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின்மீது பல பேர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். பெரும்பாலானவர்கள் பேசும்போது,

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [1970 ஆகஸ்ட் 26

மின்சாரம் விரைவாக அளிக்கப்படவேண்டும், மின்சாரம் எல்லா இடங்களிலும் பரவவில்லையென்று சொன்னார்கள். நானும் இதைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத் துறையில் இவ்வளவு வேகமாக வேலைகள் செய்தும் கூட, முழுமையாக பூர்த்தியடையவில்லை. அதற்குச் சில தடைகள் இருக்கின்றன அந்தத் தடைகளை மின்சார வாரியம் கவனித்து அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக தந்திக் கம்பங்கள் குறுக்கிடுகிற இடங்களில் இரண்டு மூன்று ஆண்டுகளானாலும் கூட, தேவையான அனுமதி கிடைப்பதில்லை. மின்சார வாரியம் இதுசம்பந்தமான தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இந்த அனுமதியைப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனது வட்டத்திலே மாரிமங்கலம், ராவணாபுரம், ஜான்கான்பேட்டை, கொந்தமூர், அனுமந்தை, நாராயணபுரம் ஆகிய பகுதிகளில் எல்லாம் இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகியும் கம்பங்களுக்கு கனெக்ஷன் தரப்படவில்லை. காரணம், டெலிபோன் இலாகாவிலிருந்து பர்மிஷன் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். மேல்மட்டத்தில் உள்ளவர்கள் இந்தக் குறைபாட்டை விசாரணை செய்து, தக்க நடவடிக்கையை சீக்கிரத்தில் எடுத்துக்கொண்டு முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காட்டு இலாகா குறுக்கிடுகிற இடங்களிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. காட்டு இலாகா இதற்கு உடனடியாக பர்மிஷன் கொடுப்பதில்லை என்று அதிகாரிகள் புகார் சொல்கிறார்கள். மின்சார வாரியத்தின் தலைவர் அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் உடனடியாகப் பரிசீலனை செய்து குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எட்டாம் நெம்பர் கம்பிகள் பரவலாகக் கிடைக்கவில்லையென்ற புகார் இருந்து கொண்டிருக்கிறது. எட்டாம் நெம்பர் கம்பிகளை நம் நாட்டில் உற்பத்தி செய்வதில்லை. இதை வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டும். இந்தக் கம்பிகள் தேவைப்படுகின்ற இடங்களுக்கு, அதனுடைய தேவையைப் பொறுத்து, விரைவாக சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிராமத்தில் சிலருக்கு மின் விஸ்தரிப்புக் கொடுத்துவிட்ட பிறகு, அதே கிராமத்தில் மீண்டும் சிலருக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்டால் அவ்வளவு விரைவில் கிடைப்பதில்லை. அந்த கிராமத்திற்கு முதலிலேயே மின்சார இணைப்புக் கொடுத்தாகிவிட்டது என்ற கணக்கில் அந்தக் கிராமத்தை எடுத்துக் கொள்கிறார்கள். இக்குறையை உடனடியாகத் தவிர்க்க வேண்டுமென இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன். மின்சாரம் வேண்டுமென்று கேட்கின்ற இடங்களுக்கு மின்இணைப்பு செய்துதர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 ஆகஸ்ட் 26] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

அடுத்து, தெரு விளக்குகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படும், விவசாயத்திற்கு அல்ல என்று வெளியில் உள்ள அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள். இங்கே வந்து மேலிடத்தில் கேட்டால் நாங்கள் அனைத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதில் எங்கே குறைபாடு இருக்கிறது என்று காணவேண்டும். நம்முடைய நாடு விவசாய நாடு. ஆகவே விவசாயத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தால் தான் விவசாயம் பெருகும். உணவு உற்பத்தி பெருகும். மேல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற நிலைகூட உண்டாகும். ஆகவே விவசாயத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் பேசும்போது சில குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்கள். நகரத்திற்குப் படி அரிசி போட்டதனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு, மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதனால் வாரியத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஏழைகளுக்கு இருக்கிற இடுக்கண்களைத் தீர்க்கவேண்டுமென்று எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பட்டணத்தையும், கோயம்புத்தூரையும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் படி அரிசி என்றால் அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதனையும் ஏழை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இங்கே காங்கிரஸ்காரர்கள் பேசுவது ஒன்று, அங்கே பேசுவது ஒன்று. இரண்டு கோடி ரூபாயை, 20 கோடி ரூபாயோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இந்த 2 கோடியைக் கூட எடுத்து விட்டால் நல்லது என்றே நான் கருதுகிறேன். 72-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தைக் கொடுத்து, அதுவும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தத் துறை நல்ல முறையில் செயல்படவேண்டும் என்று சொல்லி நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தைப் பாராட்டி, நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். நேற்றும் முன்தினமும் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சமீபத்தில் மின்சாரவாரியத்தில் நடந்த வேலை நிறுத்தம் பற்றியும், அரசாங்கம் அதை அடக்கிய முறைபற்றியும் அதிகமாக விமர்ச்சித்தார்கள். என்னுடைய ஒரு சில கருத்துக்களையும் கூறவேண்டுமென்று விரும்புகிறேன்.

நேற்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. இராமமூர்த்தி பேசும்போது இது தொழிலாளர்களுக்கு எதிரான அரசாங்கம் என்றும், வேலை நிறுத்தத்தை இரும்புக் கரத்தினால் முதல் அமைச்சர் அவர்கள் அடக்கியிருக்கிறார் என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் வைத்தார்கள்.

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1970 ஆகஸ்ட் 26

இன்று இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி கோவிந்தராசன் பேசும்போது கூட இன்று தமிழ்நாட்டில் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு விரோதமாக நடக்கிறது என்பதாகப் படம் பிடித்துக் காட்டவேண்டுமென்பதற்காக ஒரு சில குற்றச்சாட்டை வைத்திருக்கிறார்கள்.

நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்த ஊதிய உணர்வுப் பிரச்சினை, அதன் காரணமான வேலைநிறுத்தம் ஆகியவற்றை இந்த அரசு திறமையாகச் சமாளித்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மத்திய அரசாங்கம் சம்பளக் குழு அமைத்து அந்தக் குழு 3 ஆண்டுகளுக்குப் பின்னால் ஊதிய உயர்வு அளிக்கிற சிபாரிசை அரசிடம் கொடுத்த நேரத்தில் ஊதியக் குழு அறிக்கை கொடுத்திருந்தும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாதிருந்த நேரத்தில், இந்த அரசாங்கம் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க ஆலோசனை நடத்தினார்கள். முடிவில் குறைந்த பட்ச ஊதிய உயர்வு ரூ. 32 அளவுக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சி நடத்திய கேரளாவில் குறைந்த பட்ச உயர்வு ரூ. 16 என்ற அளவிற்குத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அடுத்து தினக் கூலியாக இருந்தவர்களுக்கு ரூ. 2-50 ஆக இருந்த ஊதியத்தை கம்யூனிஸ்டு யூனியனைச் சேர்ந்தவர்கள் ரூ. 3 ஆக உயர்த்த வேண்டுமென்று கோரி வந்தார்கள். அதற்காக ஒரு போராட்டத்தையே கிட்டத்தட்ட 8 மாதங்களுக்கு முன்பு நடத்தினார்கள். ஊதியக் குழு ரூ. 3-50 அளவுக்கு உயர்வு கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. ஆயினும் நமது அரசாங்கம் அவர்களுக்குத் தந்திருப்பது ரூ. 4.25 ஆகும் என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்படி இருக்க ஒரு மரியாதைக்காகவாவது அன்பின் காரணமாகவாவது இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியினர் இந்த அரசாங்கத்திற்கு ஊதிய உயர்வு கொடுத்ததுபற்றி ஒரு பாராட்டு தெரிவித்தார்களா என்றால் இல்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கேரளாவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தான் ஊதிய உயர்வு Increment கொடுக்கப்படுகிறது. தமிழக அரசு தான் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறது.

ஆகவேதான் அரசாங்கம், ஊதிய உயர்வு தந்த பிறகு போராட்டம் தேவையில்லை. ஒருசில குறைபாடுகள் இருந்தால் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்று



1970 ஆகஸ்ட் 26] [திரு. அ. லெ. சுப்பிரமணியம்]

சொல்லிற்று. வேலைநிறுத்தம் என்று ஏற்படுகிற போது மற்ற மாநிலங்களில் எவ்வாறு அதனை அடக்கியிருக்கிறார்கள் என்றும் பார்க்க வேண்டும். அஸ்ஸாம் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் இராணுவத்தை வரவழைத்து வேலை நிறுத்தத்தை அடக்கியிருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில் வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று தடை செய்தார்கள். ஊதிய உயர்வும் அந்த மாநிலங்களில் தரப்படவில்லை. ஆந்திர மாநிலத்தில் ஒரு மாத காலம் வேலை நிறுத்தம் நடந்தது. அரசு மின் வாரிய ஊழியர்களோடு பேச்சு வார்த்தை நடத்தியது. வேலைப் பளுவை எப்படிக் குறைப்பது என்பது குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. இன்றும் அந்த மாநிலத்தில் மின்சார ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தரப்படவில்லை. இப்படி மற்ற மாநிலங்களில் எல்லாம் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்கப்படாத நேரத்தில், தமிழ் நாடு ஒன்றுதான் ஊதியக் குழுவின் சிபார்சுக்கு முன்னரே ஊதிய உயர்வு அளித்தது. அவர்களுடைய வேலைச் சங்கடங்களை நீக்க முன் வந்தது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் நக்சலைட்டுகள் என்பவர்கள் மிக அதிகமாக ஊடுருவி இருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திலே நடந்த கூட்டங்களில் "நாங்கள் நினைத்தால் இந்த ஊரையே இருள் மூழ்கச் செய்து விடுவோம். நாங்கள் தான் இந்த ஊருக்கு ஒளி தருகிறோம்" என்றெல்லாம் பேசி இருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொருத்த வரையில் இதை 'எஸன்ஷியல் சர்வீஸ்' என்று டிக்ளேர் செய்ததற்குப் பிறகும் மிரட்டுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நானும் இன்னும் மற்றவர்களும் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகிற நேரத்தில் கூட மின்சார வாரியத்தைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் 'நாங்கள் தான் இந்த ஊருக்கும் உலகத்திற்கும் ஒளி கொடுக்கிறோம். நினைத்தால் இந்த உலகத்தையே கூட இருள் சூழச் செய்து விடுவோம்' என்று பேசினார். நான் பேசுகிற நேரத்தில் 'எஸன்ஷியல் சர்வீஸ்' என்று டிக்ளேர் செய்த பிறகு இப்படிப் பேசுவது நியாயம் இல்லை. தமிழகத்திலே, நெல்லை மின்சார வாரிய ஊழியர்கள் வீடுகட்டும் சங்கத்திற்குத்தான், அவர்கள் வாங்கிய நிலத்திற்குப் பத்திரப் பதிவுக்கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளித்தார்கள். இதனால் அவர்களுக்கு ரூ. 10,000-க்கு மேல் இலாபம் கிடைத்திருக்கிறது. இப்படிபட்ட சாதனைகள் எல்லாம், விளக்கை அணைத்து விடுவேன் என்பவர்களுக்குத் தெரியாது. அவர்கள் இருளை விட்டு வெளிச்சத்திற்கு வந்தால் தான் இப்படிப்பட்ட சாதனைகள் எல்லாம் தெரியும் என்று கூறினேன். இன்றைக்கு மின்சாரத்தைப் பொருத்த வரையில் **'எஸன்ஷியல் சர்வீஸ்'** ஆக இருக்கிற காரணத்தாலேயே மக்களுடைய அன்றாட வாழ்க்கையை ஓட்டி இருக்கிற காரணத்தாலும் பயங்கர வாதிகள் ஊடுருவதற்கு அரசாங்கம் அனுமதிக்க கூடாது என்று வேண்டுகிறேன். இன்றைக்கு இந்த ஊதிய உயர்வு

தருகின்ற காரணத்தால் 4 கோடி ரூபாய் அதிகமாக மின்சார வாரியம் செலவு செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நான்கு கோடி ரூபாயை எப்படி சரிக்கட்டப் போகிறார்கள் என்று சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இதற்கு ஒரு சில யோசனைகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ்நாடு அரசாங்கம் கிராமப் புறங்களுக்கு அதிக மின்சாரம் வழங்கவேண்டுமென்று அக்கரைகாட்டியுள்ளது. கிராமப் புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதால் வாரியத்திற்கு வருமானம் அதிகமில்லாவிட்டாலும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் அதற்கு இருக்கிறது. என்னைப் பொருத்த வரையில் நகர்ப் புறங்களில் உள்ள எலெக்டிரிக் கம்பெனிகளை தேசிய மயம் ஆக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றேன். இதுவரையில் கும்பகோணம் எலெக்டிரிக் கம்பெனி மட்டும் தேசிய மயம் ஆக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி எலெக்டிரிசிடி கம்பெனி என்று ஒன்று இருக்கிறது. இதை இன்றைக்கு தனியார் துறையினர் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அங்கேயிருக்கிற ஊழியர்கள் சமீபத்திலே ஒரு போராட்டத்தை துவங்கி இருக்கிறார்கள். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை மூலம் இது சற்றுத் தள்ளிப் போடப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட கம்பெனிகளை தேசியமயமாக்குவதன் மூலம் வருவாய் அதிகமாக கிடைக்கும் தொழில் துறைக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று அடிக்கடி சட்ட மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறேன். அதையும் அரசாங்கம் கவனித்து விரைவில் முடிவெடுக்கவேண்டும்.

மின்வாரியம் தனது நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன். இந்தத் துறையைப் பொருத்த வரையில் லாரிகளும் ஜீப்களும் மிக மிக அதிகமாக இருக்கின்றன. அவை நல்ல முறையில் பயன்படுத்தப் படுகின்றனவா என்று நன்கு கண்காணிக்க வேண்டும். 'சதர்ன் எலெக்ட்ரிசிடி கிரிட்' சிஸ்டத்தை ஏற்படுத்த வேண்டும். நெல்லை மாவட்டத்திலே அப்பர் மணிமுத்தாறு, அப்பர் தரம்பிரபரணி சிஸ்டம் இன்னும் துவக்கப் படாமல் இருக்கிறது. அதைத் துவக்குவதற்காக அரசாங்கம் உடனடியாக உத்தரவு போட வேண்டும். தூத்துக்குடி அனல் மின்சார திட்டத்தை பொருத்த வரையில் அரசாங்கம் நல்ல முடிவு எடுத்து அதற்கான வேலையில் ஈடுபடவேண்டுமென்று வேண்டுகிறேன்.

இன்றைக்கு மின்சாரப் பொறியாளர்களைப் பொருத்த வரையில் 'ஓர்க் லோடு' கமிட்டி எப்படி வேலைகளை செய்வது என்று குறிப்பிட்டு, 10—3—1970 என்று கருதுகிறேன், அக்ரிமென்ட் ஒன்றை மின்சார வாரியத்தில் செய்து முடித்திருக்கிறார்கள். அப்படிச் செய்தும்கூட 7, 8 மாதம் ஆகியும் இன்னும் அமுல் நடத்தப்படவில்லை என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஓர்க் லோடு அக்ரிமென்ட் அமுல்



நடத்தப்படுமானால் 300 ஊழியர்களுக்கு வேலை கிடைக்கும் மின்சாரத் துறையைப் பொருத்த வரையில் தானே இயங்குகின்ற இன்டிபென்டன்ட் ஆடிட் சிஸ்டம் வேண்டுமென்று சென்ற முறை சட்ட மன்றத்திலே சொன்னேன். அதைப் பற்றிச் இந்தக் குறிப்புகளிலே சரியான பதில் தரப்படவில்லை. அதைப் பற்றியும் சரியான முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு மின்சார வாரியம் நல்ல முறையிலே நடப்பதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: உதவி சபாநாயகர் அவர்களே, 1970-71 ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

மின்சார வாரியத்தின் மூலமாக அதிகமாக விவசாயத்திற்கும் கிராம மக்களுக்கும் மின்சார வசதி கிடைக்கவேண்டுமென்பதிலே அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியிலே இன்றைக்கு எலெக்ட்ரிசிடி போர்டானது ஓரளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாதுதான். இருந்தாலும்கூட மின்சார சப்ளை எந்த அளவுக்கு குறைவாக உபயோகப்படுத்துகிறார்களோ அவர்களுக்குக் குறைத்தும், அதிக வருமானம் உள்ளவர்களுக்கு அதிகப்படியாகவும் கட்டணம் பெற்றிருந்தால் இது நல்ல முறையில் பயன் படுத்தப் பட்டிருக்க முடியும். தொழில்கள் தாங்கக்கூடிய அளவுக்குக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அத்தகைய ஒரு மாறுதலை செய்ய வேண்டுமென்று நான் எதிர்பார்த்தேன். எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. காரணம் மின்சார வாரியத்தின் மூலம் நாட்டிலே தொழில் அபிவிருத்தி ஏற்படும் என்பதிலே சந்தேகம் இல்லை. விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய அளவுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கோரியும் அரசாங்கம் அதற்கான சம்மதத்தை கொடுக்க முடியாத காரணத்தால், விவசாயிகள் ஒரு பெரிய கிளர்ச்சி நடத்துகிற அளவுக்குப் போய்விட்டது.

நாங்கள் முன்னமேயே சொன்னோம். தொழில் துறையில் இருக்கின்றவர்கள் குறைந்த மின்சாரக்கட்டணமும், லாபம் அதிகமாக வருகின்ற ஃபாக்டரிகளுக்கு குறைந்த கட்டணத்தையும் அனுமதிக்கிறீர்கள். விவசாயிகளுக்கு குறைந்த கட்டணம் ஏன் கொடுக்கக் கூடாது என்பதை சொல்லியும் கூட அதை அரசாங்கம் கேட்க மறுத்துவிட்டது. நடந்ததை பார்க்கிறபோது சமீப காலமாக கோவையில் விவசாயிகளுடைய கிளர்ச்சியைப் பார்க்கிறபோது நாட்டிலே அரசாங்கம் எப்படி இருக்கிறது என்பதைப்புரிந்து கொள்ள முடியும்.

அரசாங்கம் 10 பைசாவாக உயர்த்தியபோது மின்சாரக் கட்டணம் அதிகமாக இருப்பதால் எங்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகிறது ஆகவே மின்சாரக் கட்டணத்தைக் குறையுங்கள்

என்று நேரடியாக போர்டு இடத்திலும், அமைச்சர்களிடத்திலும் கேட்டபோது அவர்கள் மறுத்து விட்டார்கள். அதன் காரணமாக ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்படுகிற சூழ்நிலை கோவையில் ஏற்பட்டது. அப்படி ஒன்றும் மின்சார இலாகாவானது கடனிலே அல்லது பணம் பற்றாக்குறை ஏற்பட்டு ஸ்தம்பித்து விடுகிற காலகட்டத்திலே இல்லை. அப்படி இருந்தால் அதைப்பற்றி யோசித்து இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லாத நேரத்திலே, விவசாயிகள் உற்பத்திச் செலவு அதிகம் ஆகிற நேரத்திலே ஒரு பைசா குறைக்க வேண்டுமென்று கேட்டதற்கு கூட அரசாங்கம் மறுத்துவிட்டது. அதனால் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்த பெரும் கிளர்ச்சி காரணமாக விவசாயிகள் அரசாங்கத்தினுடைய மனதை மாற்றுவதற்காக ஒரு அமைதியான சத்தியாகிரகம் நடத்தப் போகிறோம் என்று விளம்பரப் படுத்தியிருந்தும் கூட அதை அனுமதிக்க அரசாங்கம் மறுத்துவிட்டது. அதன்படி கடந்த ஜூன் 15-ம் தேதி அமைதியான முறையிலே மறியலில் ஈடுபட்ட விவசாயிகளை போலீசார் பலவந்தமாக கைது செய்து, அமைதியான முறையில், மறியல் நடத்த விடப்போவது இல்லை என்று பலாத்காரம் மூலமாக தடை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். நிராயுதபாணிகளாக இருந்த விவசாயிகளை பலாத்காரமாக போலீசார் தடி கொண்டு தாக்கினார்கள். அந்த அளவுக்கு விவசாயிகளை புண்படுத்தலாமா என்பதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். கிளர்ச்சியிலே ஈடுபட்டவர்கள் ஓரிடத்தில் மட்டும் 15 17 பேர்கள்தான். மற்ற இடத்தில் பெருவாரியானவர்களையும் போலீசார் பயங்கரமாகத் தடி கொண்டு தாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக ரோடுகளில் ரத்தம் பீரிட்டு ஓடியது. கை கால்கள் முறிக்கப்பட்டன. அமைதியான முறையில் மறியல் செய்யவேண்டுமென்ற நிலையில் வந்தவர்கள் மீது போலீஸ் பலாத்காரமாக நடவடிக்கை எடுத்திருக்கிற நிலையில் இந்த அரசைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

மின் கட்டணத்தை ஒரு பைசா குறைக்கவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விட்டார்கள். அவர்கள் அரசாங்கத்தின் மனம் மாறவேண்டுமென்று எதிர்பார்த்ததற்கு மாறாக அரசாங்கம் அவர்கள் மீது பலாத்காரத்தை ஏவிவிட்டது. அப்படிப்பட்ட நிலைமைக்குப் பிறகும்கூட அரசாங்கம் அவர்களுடைய உண்மையான கோரிக்கையை உணர்ந்து கொள்ளாமல் மீண்டும் விவசாயிகளைத் துன்புறுத்தியும் கைது செய்தும் துப்பாக்கிச் சூடு செய்கின்ற அளவுக்கு மாறிவிட்டது. அதற்குப் பிறகு தான் அரசாங்கத்தின் மனம் மாறிய நிலைமையைக் காணமுடிந்தது. அவர்கள் கோரிக்கை கொடுத்தவுடனேயே அரசாங்கம் அதை உணர்ந்திருக்குமானால் இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலைமைகள் எல்லாம் நடந்திருக்க வேண்டியதில்லை. ஒரு பைசா குறைத்ததன் மூலம் விவசாயிகளுக்குச் சலுகைகள் அளித்துவிட்டதாகக் கருதமுடியாது. அவர்கள் என்ன கோரிக்கைகள் கொடுத்தார்கள் என்றால், மின்சாரக் கட்டணம் மற்ற மாநிலங்களைவிட இங்கே அதிகமாக இருக்கிறது. அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட் என்றும், மினிமம் கியாரண்டி





என்றும், டாக்ஸஸ் 20 சதவிகிதம் என்றும் பல்வேறு விதமாக வரிகளைப் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இதையெல்லாம் குறைப்பதன் மூலம்தான் விவசாயிகளுடைய பளு உண்மையான முறையில் குறையும் என்று கேட்டார்கள். மற்ற மாநிலங்களைவிட இங்கே குறைவாக இருக்கிறது என்று அமைச்சர்கள் எல்லாம் பதில் சொன்னார்கள். இங்கே மற்ற மாநிலங்களைவிட எப்படி அதிகம் ஆக இருக்கிறது என்பதை அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட், மினிமம் கியாரண்டி இவையெல்லாம் வசூலிக்கப்படுகின்ற நிலைமையிலிருந்து தெரிந்துகொள்ளமுடியும். எனவே இதற்கு எல்லாம் இந்த பட்ஜெட்டிலே சலுகைகள் அளித்திருப்பார்கள் என்று எதிர் பார்த்தோம். ஆனால் எதுவும் வரவில்லை.

இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைமை தமிழகத்திலே நடந்திருக்கிறதென்றால் இதை இந்த மன்றத்திலே உள்ளவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நாட்டிற்கு உணவுபோடுகின்ற உண்மையான விவசாயிகளில் மூன்று பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதை வேதனையோடு சொல்லவேண்டியிருக்கிறது. மொய்யாறு எலக்டிரிசிடி சிஸ்டம், பாண்டியாறு புன்னம்புழா எலக்ட்ரிசிடி சிஸ்டம் இவற்றை அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. ஏற்கனவே கோவையிலே உள்ள விவசாயிகள் பாசன வசதிக்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அந்தப் பிரதேசத்தில் மழை குறைவு, கிணறு ஆழப்படுத்தப்படுவதற்கு வசதிகள் இல்லை என்ற நிலைமையில் அரசாங்கம் இந்தத் திட்டத்தினால் எலக்ட்ரிசிடி மட்டும் போதாது, விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக பயன்படுத்தக்கூடிய வகையில் பாசன வசதிகளைச் செய்துகொடுக்ககூடிய திட்டமாகவும் மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு எஸ்டிமேட் கமிட்டியிலே கூட இதைப்பற்றி அறிக்கை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள்கூட இந்தத் திட்டத்தை பாசன வசதிக்குப் பயன்படுத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது' என்று கூறியிருப்பதைப் பத்திரிகைகளில் பார்த்தோம். ஆனால் இந்த அறிக்கையிலே அதைப் பற்றிக் காணோம். அந்தப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் பாசன வசதிக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அரசாங்கம் இந்தத் திட்டத்தை அமல் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தான் அங்குள்ள விவசாயிகளின் பளுவைத் தீர்க்கமுடியும். மின்சார இலாகா சரியான முறையிலே இயங்க வேண்டும். பெரிய பாக்டரிகளில் எல்லாம் கரண்ட் திருடப்படுகிறது. ஜாக்கிரதையாக அதைப் பார்த்து டிபார்ட்மெண்ட்க்கு நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும், ஏற்படுகின்ற நஷ்டத்தை அதன்மூலம் சரிக்கட்டவும் முயற்சி செய்ய வேண்டும். மின்சாரத்தை விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் கொடுப்பதற்கு அப்பொழுது

வாய்ப்பு ஏற்படும். எனவே அதைச் சரியான முறையில் கண்காணிக்கவேண்டும். உணவு உற்பத்தி செய்கிறவர்களுக்கு கரண்ட் குறைந்த விலையிலே கிடைக்கச் செய்வதற்கு எந்தவிதமான தயக்கமும் வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, பேசச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. செஞ்சி வெ. முனுசாமி: மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1970-71 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக் களைச் சமர்ப்பிக்க விழைகிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் இன்றைய தினம் இன்றியமையாத முறையிலே மின்சாரம் இருக்கிறது. உண்மையிலேயே இப்படிப்பட்ட விவாதம் நடைபெறுகின்ற பொழுது பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி சூடேற்றி இனிய கருத்துக்களை வழங்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இன்றைய தினம் முழுவதும் வெளியே இருந்துகொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் குற்றச்சாட்டுச் சொல்லுகிறார்கள். வெளிச்சம் போட்டுக் காட்டுகிற பணியைக் கழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்வேன், இந்த வகையிலே இந்த அரசைப் பாராட்டவேண்டும். கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மின் விளக்குகளை ஏற்றவேண்டுமென்ற பொறுப்பிலே அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமென்று கூறியதற்கு இணங்க மின்சார வாரியம் இதிலே தீவிரமாக நாட்டம் செலுத்தி வருகிறது. வெளிச்சம் போடுவது மட்டுமல்ல. கிராமங்களையெல்லாம் மின் இணைப்பால் இணைக்கவேண்டுமென்ற உயரிய கருத்தை கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு இந்த வகையில் எந்த அளவிற்கு கிராமங்கள் மின் இணைப்பால் இணைக்கப்படுகின்றன என்பதை இணைப்பு I-இல் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்களைப் பார்த்தால் நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். மின்சார வாரியம் தனக்கு வருகிற சாமான்கள் குறைவாக இருந்தாலும் இதிலே மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது, பல கிராமங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த இக்கட்டான நேரத்திலே ஊழியர்களும், பொறியாளர்களும் ஊதிய உயர்வு கேட்டு கோரிக்கை சமர்ப்பித்து போராட்டம் நடத்திய காலத்தில் மேல்மட்டத்தில் உள்ள அலுவலர்களும் மின்சார அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் கலைஞர் அவர்களும் ஏற்ற முடிவினை எடுத்தார்கள். அந்த முடிவுகளை ஒன்றன்பின் ஒன்றாக அமலுக்குக் கொண்டுவருகின்ற நேரத்தில்தான், கேரளாவைப் பார், கேரளாவிலே கொடுப்பதைப் போன்று ஊதிய உயர்வு





வேண்டுமென்று கேட்டார்கள். ஊதிய உயர்வும் வேண்டும், வேலைப் பளுவையும் குறைக்கவேண்டுமென்று வாதங்கள் இருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டமும் இருக்கிறது. வேலையும் கொடுக்க வேண்டும், வேலைப் பளுவினைக் குறைக்கவேண்டும், ஊதியத்தையும் பெருக்கவேண்டுமென்ற நிலை இருக்கிறது. 71 ஆயிரம் ஊழியர்கள் பலனை பெறுகிற நிலையிலே 200 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறுகின்றவர்கள் 32 ரூபாய் அளவுக்கு அதிகமாகப் பெறுகின்ற வகையிலே வாய்ப்பினை அரசு கொடுத்தது. இளநிலைப் பொறியாளர்களின் அடிப்படை ஊதியத்தை நிர்ணயித்து இருக்கிறார்கள். அடிப்படை ஊதியத்தை ஒவ்வொரு பதவியிலே உள்ளவர்களுக்கும் நிர்ணயிக்கவேண்டுமென்ற வகையிலே ஜே. இ. க்களுக்கு அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும், ஏ. இ. க்களுக்கு அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும், டி.இ.-க்களுக்கு அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும், எஸ்.இ.-க்களுக்கு அடிப்படை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும் என்ற முறையிலே படிப்படியாக நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகளைத் தீர்க்க யோசித்து, இது நல்லது என்று முடிவு எடுத்து வாரியமும், அரசும் நல்லமுறையில் பணியாற்றி வருகிறது. இப்படிப்பட்ட நேரத்தில் அங்கிருக்கும் பொறியாளர்கள், மற்றுமுள்ளவர்கள் தொடர்ந்து அவர்களது ஒத்துழைப்பைத் தர வேண்டும். கோரிக்கைகள் வந்தால் வாரியமும், அரசாங்கமும் பரிவோடு பரிசீலிக்கிறது. ஆனால் தொழிலாளர்களை ஒடுக்கி அடக்குவதற்காக இரும்புக்கரம் நீட்டுகிறது அரசு என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். இந்த நேரத்தில் நாம் ஒன்றை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன். அந்த ஊழியர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் குறைகளை எந்த அளவிற்கு அகற்ற வேண்டும் என்று பார்க்கிறோம். ஆனால் கோரிக்கைகளை முன் வைக்கும் நேரத்திலேயே போராட்டம் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட போராட்டத்தினால் மற்றவர்கள் பாதிக்கப்படவில்லை என்று சொன்னால் எப்படியாவது நடக்கட்டும் என்று விட்டு விடலாம். ஆனால் இன்று மின்சாரத் துறையைச் சேர்ந்த பொறியாளர்களோ மற்றவர்களோ போராட்டம் நடத்தினால் என்ன நிலைமை ஏற்படும்? அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கோரிக்கைகளை நாம் கனிவாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட நேரத்தில் அடையாள மறியல் என்று ஒரு நாள் செய்து மின்சாரம் வழங்கப்படாவிட்டால், இருளாக்கினால், அதனால் எந்த அளவிற்குக் கொள்ளைகள் நடக்கும், எந்த அளவிற்கு உற்பத்தி பாதிக்கப்படும், இன்னும் எந்த அளவிற்கு மற்ற மற்ற இடையூறுகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டத்தை ஏற்றிருக்கும் அரசு சட்டத்தைக் காக்க வேண்டும், அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதானே தவிர, மற்றவர்கள் சொல்வதைப் போன்று இரும்புக் கரம் கொண்டு அவர்களை அடக்க வேண்டு

மென்று அல்ல. வேண்டுமானுல் தங்களுடைய தொழிற் சங்கங்களுக்காக வேண்டி இப்படிப்பட்ட வாதங்களை இந்த மன்றத்திலோ அல்லது வெளியிலோ சொல்லக்கூடும். அது எப்படியிருந்தாலும் சட்டம், அமைதியைக் காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஆனுல் அதே நேரத்தில் அத்தனை ஊழியர்களுக்கும் நல்லதொரு பாதுகாப்பு, நல்லதொரு ஊக்கத்தை அளிக்கவேண்டிய முறையிலே அரசு இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்ததற்காக உண்மையாக, மனதாரப் பாராட்டுகின்றேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே வாரியத்தையும், அரசையும் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு இங்கே நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு நான் சொன்னேன், எங்களுக்கு என்று ஒரு ஏ. ஈ. இல்லை. செஞ்சி சம்பந்தமாக ஏ.ஈ. யைப்பார்க்க வேண்டுமென்றுல் திண்டிவனத்திற்குச் செல்ல வேண்டும். அல்லது உதவிப் பொறியாளரைப் பார்க்க வேண்டுமென்றுல் விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றித் தாருங்கள் என்று அரசையும், வாரியத்தையும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதற்குப் பிறகு செஞ்சியிலே, பராமரிக்கக் கூடிய ஒரு உதவிப் பொறியாளரை கொடுக்கிறும் என்று ஒரு உதவி பொறியாளரை நியமித்தார்கள். அதற்கு என்னுடைய தொகுதியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் மின் சாரத்தை நம்பியிருக்கும் கிராமப்புற மக்கள் பெரிதும் பாராட்டுவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அடிமட்டத்தில் உள்ள ஊழல்களைப்பற்றி எடுத்துச் சொல்லாமலிருந்தால் நன்றுக இருக்காது என்று கருதுகிறேன். குறிப்பாக அடிமட்டத்திலேயிருந்து வரும் புகார்கள் பெரும்பாலும், ஓவர்லுக்கிங், அடுத்தபடியாக டிரான்ஸ்பார்மரிலே லோடு இல்லை, அடுத்தபடியாக அட்வான்ஸ் சப்ளை ஆகியவைகளைப் பற்றியிருக்கும். இதை வைத்துக் கொண்டு பல புகார்கள் வருகின்றன. ஒரு முறை இருக்கிறது, அதாவது விதி இருக்கிறது. அந்த விதிகளை முறையாக அனுசரித்தால் எந்தவிதமான சங்கடமும் இருக்காது. ப்ரையாரிட்டி லிஸ்ட் என்று வைத்திருக்கிறும். எத்தனை பேர் இருக்கிறுர்களோ அதில் மேலே இருக்கும் ஒருவருக்கு இணைப்பு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனுல் அவர் மின்விசை ஏற்றத்தோடு தயாராக இல்லை என்று சொல்லி அடுத்தவருக்குக் கொடுக்கப்படுகிறது. அடுத்தவர்களுக்கு அனுப்பும் பொழுது. அறிவிப்பு அனுப்பி விட்டு, அதாவது நோட்டீஸ் கொடுத்துவிட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்கள் மோட்டா





ருடன் தயாராக இல்லை என்றுல் அடுத்தவருக்குக் கொடுக்கப்படும் என்று நோட்டீஸ் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். எனவே, நோட்டீஸ் கொடுப்பது மிகவும் முக்கியம். ஆனுல, வாரியத்தின் கீழேயுள்ள மின் ஊழியர்கள், செக்ஷன் ஆபிசர்கள் அதாவது பகுதி அலுவலர்கள் அதைக் கடைப்பிடிப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. எனவே, அப்படி நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, விண்ணப்பங்கள் வரும் நேரத்தில் அவை முறைப்படுத்தப்படுவதில்லை என்ற புகார் இருக்கிறது. கிராமத்திலேயுள்ள விவசாயிகளினுல் செக்ஷன் சூப்பர்வைசரிடம் விண்ணப்பங்கள் தரப்படுகின்றன. அவர்கள் அதை வாங்குகிறுர்கள். ஆனுல் வாங்குவதற்குரிய அக்னுலெட்ஜ்மெண்ட் தரப்படுவதில்லை. விதியிலே தர வேண்டுமென்றிருக்கிறது. எனவே, அவைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்து, அப்ளிகேஷன்களை டூப்ளிகேட் முறையில் அடைய முயலுவது நல்லது. எஸ். ஓ. விடம் மனுவைக் கொடுக்கும் அதே நேரத்தில், அதே மனுவை ஏ.ஈ. யிடமும் கொடுத்தால் வரிசை எண் கொடுக்கப்பட்டு, அக்னுலெட்ஜ்மெண்ட் கிடைக்க வழி செய்ய வேண்டும். இந்த முறை வர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, டிரான்ஸ்பார்மரிலே லோடு இல்லை என்ற புகார். 50 கே.வி. ஆக உள்ளதை 100 கே.வி. ஆக மாற்ற வேண்டும், 100 ஆக இருக்கும் இடங்களில் 150 ஆக ஆக்க வேண்டும். ஆனுல் அந்த இடங்களில் அப்படி மாற்றுமலிருப்பதால், லோ வோல்டேஜினுல மோட்டார் தீய்ந்து விடுகிறது என்ற புகார் இருக்கிறது. ஆகவே, இதை நிச்சயமாகப் போக்க வேண்டும். கிட்டத்தட்ட 1,000, 1,200 என்று மோட்டார்களை வாங்கி வைத்துவிட்டு, லோட் இல்லை என்றுல் இதற்கு யார் காரணம்? லோ வோல்டேஜினுல் காயில் தீர்ந்துவிடுகிறது. டிரான்ஸ்பார்மரிலே லோடு எவ்வளவு இருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். டிரான்ஸ்பார்மர் அருகே அறிவிப்புப் பலகை ஒன்றைப் போட்டு, மொத்த லோட் இவ்வளவு, பயன்படுத்தப்படும் லோட் இவ்வளவு, பயன்படுத்த இருக்கும் லோடு இவ்வளவு என்று ஒரு பலகை இருந்தால் அந்த டிரான்ஸ்பார்மரிலே லோடு இருக்கிறதா, இல்லையா என்று விவசாயிகளும், விவரம் புரிந்தவர்களும் தெரிந்து கொள்ளுவார்கள். ஏனென்றுல் வேண்டியவர்கள் போகும்பொழுது டிரான்ஸ்பார்மரிலே லோடு இருக்கிறது, வேண்டாதவர்கள் போகும்பொழுது லோடு இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அட்வான்ஸ் சப்ளை கொடுக்கும்பொழுது எது முன்னுல் வந்தது என்பதைப் பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. செஞ்சி. வெ. முனுசாமி] [1970 ஆகஸ்ட் 26

கடைசியாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆலோசனைக் குழுக்களை ஒவ்வொரு சிஸ்டத்திலேயும் அமுலுக்குக் கொண்டு வந்திருப்பது நல்ல முறை. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் மாவட்டம் முழுவதிலுமிருந்து அங்கே கூடுவதால் எந்தக் கருத்துக்களை, யார் கூறுவது என்பதில் சங்கடமிருக்கிறது. ஆகவே, என்னுடைய ஆலோசனையாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது வருவாய்த் துறையிலே வைத்திருக்கும் ரெவின்யு டிவிஷன்களைப் போல், கோட்டங்களாக்கி, ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களையும், ஒன்றியப் பெருந்தலைவர்களையும், மற்றும் அரசியல் பற்றற்றவர்களையும் கலந்து கொண்டு, கருத்துக்களைச் சொல்ல வைத்து, கோட்டவாரியாக அங்கத்தினர்கள் குறிப்பிடக்கூடிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் செய்தால் நல்ல கருத்துக்கள் கிடைக்கும்.

இன்னொரு பிரச்னை. நான் அட்வைசரி கமிட்டியிலே உறுப்பினராக இருக்கிறேன் என்பதற்காகச் சொல்லவில்லை. தென்னார்க்காடு மாவட்டத்தில் டீ.ஏ. பிரச்னை இருக்கிறது. அங்கே வரும் உறுப்பினர்களுக்கு டீ.ஏ. யார் தருவது என்ற பிரச்னை இப்பொழுது மின்சார வாரியத்தின் தலைமை அலுவலகத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் முடிவெடுப்பது எப்படியிருந்தாலும் நல்லது என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன். மாவட்டம் முழுவதும் வைத்து ஆலோசனை கேட்க வேண்டுமென்று சொல்வது அவ்வளவு நன்றாக இருக்காது. ஆகவே, கோட்ட வாரியாகப் பிரித்து அந்த ஆலோசனைகளைக் கேட்கவேண்டும்.

கீழ் மட்டத்திலிருக்கும் சிற்சில குறைபாடுகளை நீக்க வேண்டும். அடிமட்டத்திலிருக்கும் ஊழியர்கள் தவறு செய்தாலும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தவறு செய்தால், மற்றவர்களின் பேச்சுக்களுக்குப் பயந்து கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் நிர்வாகம் கெட்டு விடும். எனவே, அந்த முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுறுகின்றன. மீண்டும் நாளை காலை 9 மணிக்கு பேரவை கூடும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.



8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

@ 223. Notification issued with Roc. No. 160194/69-P1, dated the 11th December 1969, in regard to exclusion of certain areas from the existing Avanashi Town Panchayat and inclusion within the limits of Palangarai Village Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 224. Notification issued with Roc. No. 143151/69-P1, dated the 9th December 1970, in regard to exclusion of areas from the Vellakarai Panchayat in Cuddalore Taluk of South Arcot District and constitution of a separate Panchayat by name " Kodukkanpalayam ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 225. Notification issued with Roc. No. 168393/69, dated the 3rd December 1969 in regard to exclusion of certain areas from Melpathi Panchayat in South Arcot District. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 226. Notification issued with Roc. No. 187446/69-P1, dated the 10th December 1969 in regard to exclusion of Sorathur Village from the Kappai Panchayat in Gingee taluk of South Arcot District for the constitution of separate Panchayat by name " Sorathur ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 227. Notification issued with G.O. Ms. No. 841, Rural Development and Local Administration, dated the 11th May 1970, in regard to certain amendments to the Tamil Nadu Panchayats (Election of Presidents and Vice-Presidents) Rules, 1961. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

@ 228. Notification issued with G.O. Ms. No. 277, Public (Services-A), dated the 12th February 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the posts of Junior Refrigeration Engineer in the Ice Plants or Ice-*cum*-Cold Storage Plants and Marine Foreman under the Tamil Nadu Fisheries Subordinate Service, within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

B. *Reports, Notifications and other papers.*

@ 35. Speech of Hon. Thiru O. P. Raman, Minister for Electricity, initiating the discussions on the Annual Financial Statement for 1970–71 and the Supplementary Financial Statement for 1969–70 of the Tamil Nadu Electricity Board (English and Tamil).

@ Laid on the Table of the House on 28—8—1970.



## இணைப்பு

*35ஆம் பக்கத்தில் 54ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.*

*திருவண்ணாமலை, நகராட்சி உயர்தர ஊழியர் சங்கத்திடமிருந்து 12—9—1969-ஆம் நாளிட்ட பின்வரும் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன :—*

*நீண்ட காலமாக நகரமன்ற ஊழியர்கள் சங்கங்கள் மூலமாகவும் மாநாடுகள் மூலமாகவும் கோரி வந்துள்ளபடியும், தமிழ் நாடு நகரமன்றங்கள் அனைத்தும் சிபாரிசு செய்து அரசினருக்கு அனுப்பியும், நகர மன்ற ஊழியர்களுக்கு அரசினர் ஊழியர்களைப்போல், பென்ஷன், சம்பள விகிதங்கள் முதலிய சலுகைகள் வழங்கப்படவில்லை. சென்ற ஆண்டு காஞ்சீபுரத்தில் நடந்த நகரமன்றங்களின் ஊழியர்கள் மாநாட்டில் காலஞ்சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் பென்ஷன் திட்டம் அவசியம் அமுலாக்குவதாக வாக்குறுதி அளித்தார். ஆகவே தமிழக அரசு நகரமன்றங்களிலுள்ள ஊழியர்களின் மீது கருணை கொண்டு அரசினர் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் பென்ஷன் முதலிய சலுகைகளை சமமாக அளிக்கும்படி இச்சங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.*

*2. அரசினர் ஊழியர்களுக்கு கொடுப்பதைப்போல் திருமணச் செலவிற்கு முன்பணம்கொடுக்கக் கேட்டுக் கொள்கிறது.*

*3. இரண்டாவது சம்பள ஆணைக்கழகம்* (Second Pay Commission) *அரசினர் ஊழியர்களுக்கு சிபாரிசு செய்யும் சம்பள விகிதம், பென்ஷன், இதர சலுகைகளை நகராட்சி ஊழியர்களுக்கும் சமமாக ஊழிய நிலைக்கு ஏற்றாற்போல் எவ்வித வித்தியாசமுமின்றி நிர்ணயம் செய்ய சிபாரிசு செய்யும்படி கேட்டுக் கொள்கிறது.*

*(1) நகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியத்திட்டத்தை நீட்டித்தல்.*

*தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77-ஏ பிரிவின்கீழ் நகராட்சி மன்றங்கள் அனைத்திலுமுள்ள அதிகாரிகள், உயர்நிலைப்பணி ஊழியர்கள் அனைவர் குறித்தும், மேட்டூர், குற்றாலம், பவானிசாகர், கோடைக்கானல் ஆகிய நகரியக் குழுக்களின் அதிகாரிகள், உயர்நிலைப்பணி ஊழியர்கள் அனைவர் குறித்தும் 14—1—1970 முதற்கொண்டு கீழ்க்காணும் நகராட்சிப் பணிகளை (ஓய்வூதியம் பெறத்தக்கவை) அமைத்து கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை 5—1—1970 அன்று வெளியிட்ட 12-ம் எண் அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள உயர்நிலைப் பணியாளர்களது குறைந்தளவு ஊதிய விகிதம்*

90 ரூபாயாக (ரூபாய் தொண்ணூறு மட்டும்) அல்லது அதற்கு அதிகமாக இருக்கவேண்டும். அதாவது கீழ்நிலை எழுத்தரது குறைந்தளவு சம்பளத்தை உடையதாக இருக்க வேண்டும் :—

(அ) தமிழ்நாடு நகராட்சிப் பொதுப்பணி (பிற எந்த தொழில் நுட்பப் பணிகளின்கீழ் வராத, நகராட்சி மன்றங்களின் பொதுப் பணியாளர் தொகுதி, வருவாய்ப் பணியாளர் தொகுதி, பிற பல்வகைப் பணியாளர் தொகுதிகள் அடங்கியது).

(இ) தமிழ்நாடு நகராட்சிப் பொறியல் நீர்ப் பணி.

(உ) தமிழ்நாடு நகராட்சி நகரமைப்புப் பணி.

(எ) தமிழ்நாடு நகராட்சி பொதுச் சுகாதார-மருத்துவப் பணி.

(ஐ) தமிழ்நாடு நகராட்சிக் கல்விப் பணி.

இந்தப் பணிகளின் ஊழியர்களைப் பொறுத்தவரையில், 14—1—1970 முதற்கொண்டு ஓய்வூதியத்திட்டம் செயலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

(2) நகராட்சிப் பணியாளர்களுக்கு திருமண முன்பணம் வழங்கல்.

நகராட்சி மன்றத்தில் போதுமான நிதிவசதி இருந்தால், அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் திருமண முன் பணம் வழங்கும் திட்டத்தை நகராட்சி மன்றப் பணியாளர்களுக்கும் பொருந்தும் என்று கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 14—11—1969-ஆம் நாளிட்ட 2255-ம் எண்ணுள்ள அரசு ஆணையில், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(3) அரசுப்பணியாளர்களுக்கு, இணையாக நகராட்சிப் பணியாளர்களுக்கும் சம்பள வீதம், ஓய்வு ஊதியம் முதலியவைகளைப் பொறுத்த வரையில் இரண்டவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகள் பொருந்துமாறு செய்தல்.

நகராட்சி மன்றப் பணியாளர்களின் சம்பள வீதம், ஓய்வூதியம் முதலியவைகள் குறித்தும் பரிவுரைகள் செய்வது இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் ஆய்வு வரம்பில் அடங்கும். அதன் பரிவுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

The following resolutions, dated 12th September 1969 have been received from the Municipal Superior Employees' Association, Tiruvannamalai :—

1. நீண்ட காலமாக நகரமன்ற ஊழியர்கள் சங்கங்கள் மூலமாகவும், மாநாடுகள் மூலமாகவும் கோரி வந்துள்ளபடியும், தமிழ் நாடு நகர மன்றங்கள் அனைத்தும் சிபாரிசு செய்து அரசினருக்கு அனுப்பியும், நகரமன்ற ஊழியர்களுக்கு அரசினர் ஊழியர்களைப்போல், பென்ஷன் சம்பள விகிதங்கள் முதலிய சலுகைகள் வழங்கப்படவில்லை. சென்ற ஆண்டு காஞ்சீபுரத்தில் நடந்த நகர மன்றங்களின்



ஊழியர்கள் மாநாட்டில் காலஞ்சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் பென்சன் திட்டம் அவசியம் அமுலாக்குவதாக வாக்குறுதி அளித்தார். ஆகவே தமிழக அரசு நகரமன்றங்களிலுள்ள ஊழியர்களின் மீது கருணை கொண்டு அரசினர் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல் பென்ஷன் முதலிய சலுகைகளை சமமாக அளிக்கும்படி இச்சங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

2. அரசினர் ஊழியர்களுக்கு கொடுப்பதைப்போல் திருமணச் செலவிற்கு முன் பணம் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறது.

3. இரண்டாவது சம்பள ஆணைக் கழகம் (Second Pay Commission) அரசினர் ஊழியர்களுக்கு சிபாரிசு செய்யும் சம்பள விகிதம் பென்ஷன் இதர சலுகைகளை நகராட்சி ஊழியர்களுக்கும் சமமாக ஊழிய நிலைக்கு ஏற்றாற்போல் எவ்வித வித்தியாசமுமின்றி நிர்ணயம் செய்து சிபாரிசு செய்யும்படி கேட்டுக் கொள்கிறது.

(1) *Pension Scheme—Extension to Municipal Employees*—

In G.O. Ms. No. 12, Rural Development and Local Administration, dated 5th January 1970, orders have been issued constituting under section 77-A of the Tamil Nadu District Municipalities Act, 1920, the following Municipal Services (Pensionable) with effect on and from 14th January 1970 in respect of all officers and servants in the superior services of all Municipal Councils and the Township Committees of Mettur, Courtallam, Bhavanisagar and Kodaikkanal whose minimum scale of pay is Rs. 90 (Rupees ninty only) or above, i.e., whose minimum pay is of that a Lower Division Clerk—

(a) Tamil Nadu Municipal General Service (comprising General Establishment, Revenue Establishment, Garden Establishment and other Miscellaneous Establishments of the Municipal Councils not coming under any of the other technical services);

(b) Tamil Nadu Municipal Engineering and water works Service;

(c) Tamil Nadu Municipal Town Planning Service;

(d) Tamil Nadu Municipal Public Health and Medical Service

(e) Tamil Nadu Municipal Education Service.

In respect of these employees, pension scheme has been introduced with effect from 14th January 1970.

(2) *Grant of Marriage Advance to the Municipal Employees*—

In G.O. Ms. No. 2255, Rural Development and Land Acquisition, dated 14th November 1969, the Government have ordered that the scheme of Marriage Advance applicable to Government servants shall be applicable to Municipal employees subject to the finances of the Municipal Council concerned being sound.

(3) *To apply the recommendations of the Second Pay Commission in respect of pay scales, pension etc., to the Municipal employees also on par with the Government servants—*

The terms of reference of the Second Pay Commission envisage recommendations in respect of pay scales, pension, etc., in respect of the staff under the Municipal Councils also. Its recommendations are awaited.

# *தமிழ் நாடு சட்டப் பேரவை*

---

*வியாழக்கிழமை, 1970 ஆகஸ்ட் 27.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## *1. வினாக்கள்—விடைகள்.*

*வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.*

*Pool system for admission to Arts Colleges*

* 61 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether this Government has any programme to introduce ' Pool System ' for admission into P.U.C. and Degree courses in the Arts Colleges in this State;

(*b*) whether the programme covers also Colleges under private management; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *(அ) இல்லை.*

*(இ) & (உ) இக் கேள்விக்கு இடமில்லை.*

**திரு. கே. விநாயகம் :** *சார், ஆங்காங்கு கல்லூரிகளில் இட நெருக்கடி அதிகமாக ஏற்பட்டு, அதுவும் குறிப்பாக, சென்னையில் இந்தத் தொல்லை அதிகமாக இருப்பதைக் கருதி, நம் மாநிலத்தில் எல்லாக் கல்லூரிகளுக்கும் வருகிற மனுக்களையெல்லாம் பரிசீலித்து, மாணவர்கள் எந்தெந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களோ அந்தந்தப் பிராந்தியத்தில் உள்ள கல்லூரிகளில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் ' பூல் ஸிஸ்டம் ' அமலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொன்னோம். அந்த முறை இப்பொழுது ஏன் கையாளப்படவில்லை. அதில் இருக்கும் தொல்லைகள் என்ன ? மாணவர்கள் மனுப் போடுவதற்கு மறுக்கிறார்களா ? இதில் அரசாங்கத்திற்கு இருக்கும் கஷ்டம் என்ன என்பதை அறிந்துகொள்ளலாமா ?*

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** *தலைவர் அவர்களே, கல்லூரிகளில் சேருவதற்கு விண்ணப்பித்துக் கொள்ளுகிறவர்களுடைய மனுக்களைத் தொகுத்து எல்லாக் கல்லூரிகளுக்கும் பகிர்ந்தளிக்கும் முறையைக் கொண்டு வருவது பற்றிப் பல்கலைக் கழகம் முடிவு செய்யவேண்டும். பல்கலைக்கழகத்தினுடைய செனட் உறுப்பினர் ஒருவர் இதுபற்றி முடிவு செய்யவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்து, செனட் அதுபற்றிக் குழு ஒன்றை அமைத்து ஆராயவும் செய்தார்கள். 1968-ல் அந்தக்*

குழுவினர் ஆராய்ந்து சிலபல சிபார்சுகளைச் செய்தார்கள். ஆனால் அதை அமலாக்குவதில் பல இடர்பாடுகள் இருக்கின்றன. சிபார்சு செய்யாமல் அந்தக் குழு விட்டுவிட்டது. தனியார் கல்லூரிகளில் இந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்றால் பல்கலைக்கழகத்தினுடைய அனுமதியின்பேரிலும், பல்கலைக்கழகத்தின் உத்தரவின் பேரிலும்தான் கொண்டுவர வேண்டும். அரசாங்கக் கலைக் கல்லூரிகளைப் பொறுத்து வேண்டுமானால் நாம் செய்யலாம். அதையும்கூட மாவட்ட அளவில் செய்யலாமா என்ற யோசனை இருக்கிறது. அதுபற்றிச் செயற்குறிப்பு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். அந்த அளவில் ஓரிரு மாவட்டங்களில், குறிப்பாகத் தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில், அங்கு நான்கைந்து அரசாங்கக் கல்லூரிகள் இருப்பதால் அங்கு வரும் விண்ணப்பங்களை ஓரிடத்தில் வாங்கி அந்த நான்கைந்து கல்லூரிகளுக்குப் பகிர்ந்தளிக்கலாமா என்ற முறையை அமலுக்குக் கொண்டுவருவதன்மூலம் இடர்பாடுகளைத் தவிர்க்க முடியுமா என்று பரீட்சார்த்தமாகப் பார்த்து வெற்றிகரமாக இருக்குமானால், மற்றைய மாவட்டங்களுக்கும் அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்து அரசாங்கம் முடிவு எடுப்பதில் தடை இருக்காது. இதுபற்றி ஆராய்ந்து செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு காலத்தாழ்வு ஏற்பட்டுவிட்டது. 1971-72-ம் ஆண்டில் இந்த முறையைப் பயன்படுத்தலாமா என்ற யோசனை இருந்து கொண்டிருக்கிறது. தனியார்க் கல்லூரிகளைப் பொறுத்து இந்த முறையைக் கொண்டுவர வேண்டியது பல்கலைக்கழகமாக இருக்கிறது. சிண்டிகேட் அவையில் இது ஒத்துக்கொள்ளப்பட வேண்டும். தனியார்க் கல்லூரிகள் இதற்கு ஒத்துவராத நிலையில் இருப்பதால் இதுபற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று குழு தெரிவித்திருக்கிறது.

*திரு. கே. போஜன்* : மாணவர்கள் கல்லூரிகளில் இடம் தேடுவதற்குப் பல கல்லூரிகளுக்கு விண்ணப்பம் போடுகிறார்கள். பல கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும்போது அதிகச் செலவாகிறது. இந்த அதிகச் செலவைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் 'பூல் ஸிஸ்டம்' கொண்டுவரவேண்டுமென்ற கருத்திருந்தது. இதைப் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துரைத்து, 'பூல் சிஸ்டம்' கொண்டுவருவதுபற்றி அரசு மீண்டும் சிபார்சு செய்யுமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று இடர்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஓரிடத்தில் எல்லா விண்ணப்பங்களையும் வாங்கி, பிறகு எல்லாக் கல்லூரிகளுக்கும் பகிர்ந்து அளிக்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இல்லையென்றால், ஒரு மாணவர் பத்துப் பதினைந்து கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து, எல்லாவற்றிக்கும் கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலையெல்லாம் ஏற்படுகிறது. மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகிய



வைகளைப் பொறுத்து, ஓரிடத்தில் விண்ணப்பங்கள் வாங்கி, பிறகு பகிர்ந்தளிக்கும் முறையை மேற்கொண்டிருக்கிறோம். அதே முறையில் கலைக் கல்லூரிகளைப் பொறுத்தும் மேற்கொள்ளலாம் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாகப் பல்கலைக் கழகத்திற்கு அவ்வப்போது எடுத்துத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால், பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட குழுவினர் விண்ணப்பங்களை ஓரிடத்தில் வாங்கி எல்லாக் கல்லூரிகளுக்கும் பகிர்ந்தளிக்கும் முறையை மேற்கொள்ளலாம் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். விண்ணப்பத்திற்கு ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தினால் போதும். பிறகு பதிவு செய்யும்போது ஒரு ரூபாய் செலுத்தினால் போதும், பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இரண்டு ரூபாய் செலுத்தினால் போதும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது பல்கலைக்கழகத்தின் பொறுப்பாக இருக்கிறது. இந்தக் கருத்தை அரசாங்கம் மீண்டும் பல்கலைக் கழகத்திற்கு வற்புறுத்தி வருகிறது.

*திரு. சி. கோவிந்தராஜன்* : கல்லூரிப் புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்வதற்குத் தகுதி 'எஸ். எஸ். எல். சி. எலிஜிபிள்' என்று கூறப்படுகிறது. ஆனால், இரண்டொரு பாடங்களில் தவறி, பிறகு கம்ப்ளீட் செய்த மாணவர்களைக் கூட புகுமுக வகுப்பில் சேர்த்துக்கொள்ள சட்டம் இருக்கிறதா ? அப்படிச் சட்டம் இல்லையென்றால், அந்தச் சட்டத்தை மீறி சென்னைக் கலைக் கல்லூரியில் கம்ப்ளீட் பண்ணிய மாணவர்கள் இரண்டு பேர்களைச் சேர்த்த அந்த முதல்வர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை. தனி கேள்வி போடுங்கள்.

*திரு. சி. கோவிந்தராஜன்* : 'அட்மிஷன்' பற்றித்தானே கேட்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : 'அட்மிஷன்' என்றால் எல்லா 'அட்மிஷன்'களும் வந்துவிடக் கூடும். ஆகவே, தனிக் கேள்வி போடுங்கள்.

*திரு. க. துரைசாமி* : தலைவர் அவர்களே, எம்.ஏ. அல்லது எம். எஸ்ஸி.-க்குக் பட்ட மேல் படிப்புகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது சர்வகலாசாலைக்குக் குறிப்பிட்ட சில இடங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல் தனியார்க் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் நேரத்தில் குறைந்தது ஐம்பது சதவிகித இடங்களாவது சர்வகலாசாலைக்கு ஒதுக்க அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : தலைவர் அவர்களே, நான் முதலில் தெரிவித்தபடி, முடிவினைப் பல்கலைக்கழகம்தான் எடுக்க வேண்டியிருக்கிறது. ஒரே இடத்தில் விண்ணப்பங்களைப்

பெற்று, மாணவர்களுக்கு இடர்பாடு இல்லாமல், விரும்பும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளும் அடிப்படையில் திட்டம் வகுத்து பகிர்ந்தளிக்கும் முறையை மேற்கொள்ளவேண்டும் என்ற சிபார்சைத்தான் அரசாங்கம் செய்து வருகிறது. பல்கலைக்கழகத்தின் சின்டிகேட் அவை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறது. மேலும் வற்புறுத்தும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்பொழுதுள்ள கல்லூரிகளிலே தனியார்த் துறையில் இயங்கக்கூடிய கல்லூரிதான் பெரும்பான்மையாக இருக்கின்றன. இந்த நிலைமையில் சாதாரண மக்கள் கல்லூரிகளில் சேரவேண்டுமானால், நிதி என்ற பெயரால் லஞ்சம் கொடுத்தால்தான் சேர முடியும் என்ற நிலைமை இருக்கிறது என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? 1968-ம் ஆண்டில் இருந்த வைஸ்சான்சலர் வேறு. அவருடைய கருத்தின் அடிப்படையில் அந்த ரிப்போர்ட் வந்திருக்கலாம். இன்றைக்கிருக்கும் வைஸ்-சான்சலர் வேறு ; அவருடைய கருத்து என்ன என்பதையும் தெரிந்து, இன்றைக்குள்ள சூழ்நிலையில் எம்.ஏ., எம். எஸ்ஸி. வகுப்புகளுக்கு எப்படி 'பூல் சிஸ்டம்' அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அந்த அடிப்படையில் எல்லாவற்றுக்கும் 'பூல் சிஸ்டம்' அடிப்படையைக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, குன்றத்தூரில் இருக்கும் கல்லூரியில் சில மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது இம்மாதிரி நன்கொடை கேட்டு வாங்கியிருக்கிறார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அதைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கவேண்டியது பல்கலைக்கழகமாக இருக்கிறது. ஆக, பல கல்லூரிகளில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் போன்று, நன்கொடை என்கிற அளவுக்கு வாங்கியிருக்கிறார்கள். நன்கொடை என்பது விரும்பித் தரப்படும் ஒன்று ; விரும்பித் தருவதை வாங்கிக்கொள்ளுகிற ஒன்று என்று பெயர் பெற்றிருக்கிறதே தவிர, வற்புறுத்தி வாங்கப்படுவது சட்டப்படி அதில் அடங்காது என்ற நிலை இருக்கிறது. நன்கொடை என்கிறார்கள் ; ரசீது நன்கொடை என்றுதான் தந்திருக்கிறார்கள். நன்கொடை என்பது விரும்பித் தருவது, கொடுப்பது கொடை, வாங்குவதோ வரி என்ற அளவுக்கும் வரியாக வாங்கவில்லை, கொடையாகத்தான் கொடுக்கிறார்கள் என்ற அளவுக்குக் கூறப்படுகிறது. என்றாலும், அது பற்றிய குற்றச்சாட்டு கூறப்பட்ட விண்ணப்பங்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: If PUC classes are opened in high schools themselves, this question of admission in the colleges can be easily solved. I hear in some schools in Mysore State, they have introduced this system. Will the Hon. Minister for Education examine this aspect also?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி மாற்றுவதிலே பல்வேறு இடர்பாடுகள் இருக்கும் காரணத்தால், சிந்தித்துப் பார்த்து பிரீயூனிவர்சிடி கோர்ஸ் யுனிவர்சிடியோடு இருக்க வேண்டுமென்று வைக்கப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகள் நிலைத்து நிற்கக் காரணமாக இருப்பதே புகுமுக வகுப்பு அங்கே இருப்பதுதான். இப்போது பள்ளி இறுதி வகுப்பில் இரண்டு லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். புகுமுக வகுப்பில் தற்போது 75,000 மாணவர்கள் அளவுக்குத்தான் பயிலுகிறார்கள். இதைப் பள்ளிக்கு மாற்றிவிட்டால், இரண்டு லட்சம் பேர் பி.யு.சி. தேர்வு எழுதும் நிலை ஏற்படும். இப்போது இருக்கும் முறையில் ஸ்கூல் ஃபைனல் என்பதற்குப் பிறகு கல்லூரியில் பிரியுனிவர்சிடி கோர்ஸ், யுனிவர்சிடி படிப்புக்கு ஒரு பாலமாக அமைய வேண்டுமென்ற முறையில் அமைந்திருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கும் முறையை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை மாற்றுவதாக இல்லை.

*Post of Principal of Ponneri Government College*

* 62 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the post of Principal of Ponneri Government College, Chingleput District is vacant now; and

(b) if so, when the post will be filled up?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** சமீப காலத்தில் சில மாதங்களுக்கு முன்பு அந்தக் கல்லூரியில் பிரின்சிபால் இல்லாத நிலை ஏற்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அதைப் பற்றிக் கேள்வி கேட்ட பிறகு பிரின்சிபாலை நியமித்தார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்ட நேரத்தில் அங்கு காலி இடம் இல்லை. கடந்த நவம்பர் முதல் பிப்ரவரி மாதத்திற்கு இடையில் முதல்வர் இடம் காலியாக இருந்தது. திருச்சிராப்பள்ளி அரசினர் கல்லூரி முதல்வர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு பொன்னேரி கல்லூரி பிரின்சிபால் மாற்றப்பட்டார். அப்படி இரண்டொரு முதல்வர்களை மாற்றுகிறபோது ஆண்டு இடையில் வரமாட்டேன் என்று அவர்கள் மறுத்ததன் காரணமாக மூன்று மாத காலம் கழித்து 3—3—1970-ல் திரு. சீனிவாசன் அவர்கள் முதல்வராக நியமிக்கப்பட்டார்கள். அதுவரையில் முதன்மைப் பேராசிரியர் அவர்கள் முதல்வர் பொறுப்பையும் ஏற்று நடத்தி வந்தார்கள்.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state who was looking into the affairs of the College during that period of vacancy? Was it like a ship without a captain?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இடைக்காலத்தில் சீனியர் ப்ரொபசர் கூடுதல் பொறுப்பாக முதல்வர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாடு தேசிய மாணுக்கர் படை

* 63 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழகத் தேசிய மாணுக்கர் படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அப்படைக்கும், முன்பிருந்த தேசிய மாணுக்கர் படைக்கும் பயிற்சி முறையில் உள்ள வேறுபாடுகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) கல்வி நிறுவனத் தலைவர்களிடமிருந்து கல்வி இயக்குநரின் சிபாரிசுடன் கோரிக்கை பெறப்பட்ட கல்லூரிகளில் தேசிய மாணவர் படை அமைக்கப் படுகின்றன.

(இ) தேசிய மாணவர்கபடை பழைய திட்டத்திற்கும், புதிய திட்டத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு :—

1. பழைய திட்டத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி மூன்றாண்டுகட்குக் கட்டாயமாக இருந்தது. ஆனல் தற்போதுள்ள திட்டத்தில் ஈராண்டுகட்கு அவரவர் விருப்பப்படி—கட்டாயம் ஏதுமின்றி—அப்பயிற்சி உள்ளது, முதல் இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்புப்பயிலும் மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2. புதிய திட்டத்தின் கீழ் புகுமுக வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை, முன்பெல்லாம் அவர்கள் பழைய திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

3. இறுதியாண்டு பட்டப்படிப்பு மாணவர்கள் தேசிய மாணவர் படையில் தொடர்ந்து இருக்க விருப்பப்பட்டால் அவர்கள் அவ்வாறே இருக்க அனுமதிக்கப்படுகின்றனர், மேலும் அவர்களுக்கெனத் தனிப் பாடத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** தமிழக தேசிய மாணுக்கர் படை அரசினர் கல்லூரிகளிலும், தனியார் துறை கல்லூரிகளிலும் ஒரே நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா ? வேறுபாடு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசினர் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் எல்லாவற்றிலும் என்.சி.சி-க்கு ஒரே முறைதான் கையாளப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** இந்த தேசிய மாணவர் படையில் கல்லூரி மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனரா? இல்லையென்றால் இனியாவது சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரி மாணவியரும் ஒருசில கல்லூரிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** தமிழக தேசிய மாணவர் படையில் கட்டளைச் சொற்கள் எந்த மொழியில் இருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விளக்கங்கள் முன்பே அளிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளாகவும், இப்போதும் கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில் தான் இருந்து வருகின்றன.

**திரு. தி. பொன்னுமலை :** தேசிய மாணுக்கர் படை பயிற்சி மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒருநாள்தான் தரப்படுகிறது. வாரத்தில் ஆறு நாட்கள் கட்டாயமாகப் பயிற்சி தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தப் பயிற்சி எவ்வளவு நாட்களுக்குத் தரவேண்டுமென்பதற்கான முறையை ராணுவத்தினரே வகுத்துத் தருகிறார்கள். ஓராண்டுக்கு இவ்வளவு நாட்கள் பயிற்சி தரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பயிற்சி தரப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த தேசிய மாணுக்கர் படை கட்டுப்பாட்டையும், உடல் உறுதியையும் வளர்ப்பதாக இருப்பதால் விரும்புகிற கல்லூரிகள் என்று இல்லாமல் எல்லாக் கல்லூரிகளிலும் இதைக் கொண்டுவர உத்தேசம் உண்டா ? முன்பு பயிற்சிக் காலம் மூன்றாண்டுகளாக இருந்தது ஏன் இப்போது இரண்டு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சீனப் போருக்குப் பிறகு நாட்டில் எழுச்சி ஏற்பட்டு எல்லோருக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற திட்டத்தில் கல்லூரிகளில் கட்டாயமாக பயிற்சி கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப் பட்டது. இப்போது என்.சி.சி., என்.சி.ஓ. போன்ற பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு சில சமூகப் பணிகள் செய்யக்கூடியதாகவும், சில கேம்ஸ், ஸ்போர்ட்ஸ் சம்பந்தப்பட்டதாகவும் ஏற்படுத்தப் பட்டு என்.சி.சி. படையில் விரும்புகிறவர்கள் சேரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்திய அரசுதான் இந்த முடிவை எடுத்தது. பயிற்சிக் காலம் மூன்றாண்டுகாலம் என்று இருந்ததை இரண்டு ஆண்டுக்காலம் என்று மாற்றியதும் இந்திய அரசின் முடிவுப்படிதான். பி.யு.சி.-ல் இந்தப் பயிற்சியை ஆரம்பித்தால் அவர்கள் மேற்கொண்டு தொடருவார்களா என்ற ஐயப்பாடு இருப்பதன் காரணமாக, ஓராண்டுப் பயிற்சி அவர்களுக்கு எந்த விதத்திலும் பயன்தராது என்ற நிலையில், பட்டப் படிப்பு மூன்று ஆண்டு படிக்கும்போது முதல் இரண்டு ஆண்டுகள் என்.சி.சி. பயிற்சி கொடுக்க வேண்டுமென்று இந்திய அரசு முடிவு செய்ததற்கு ஏற்ப நடைபெற்று வருகிறது.

[1970 ஆகஸ்ட் 27

*Malaria Eradication Programme*

* 64 *Q*.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether World Health Organisation has been doing the " Malaria Eradication Programme " in Madras City?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மலேரியா ஒழிப்புத் திட்டம் பயனுள்ள திட்டம். இதிலே பணிபுரிகிறவர்கள் பல ஆண்டுகளாக வேலை நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இந்த இலாகா வைச் சீரமைப்பு செய்வதுபற்றி திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த இலாகாவைச் சீரமைப்புச் செய்யும் திட்டத்தை அரசு இப்போது மேற்கொண் டிருக்கிறது. ஐந்தாண்டு, ஆறாண்டு காலம் என்று வேலை பார்த்து வருகின்றவர்களை எல்லாம் நிரந்தரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இயக்குநரிடம் கூறப்பட்டு அதற்கான நடைமுறைகளை ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. போஜன் :** உலக சுகாதார நிலையம் சென்னை நகரில் மலேரியா ஒழிப்பு நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னாலும் சென்னை மாநகரத்தில் கொசுக்கள் அதிகமாக இருப்ப தால் மாநில சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்து கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மலேரியா கொசு ஒழிப்பைப் பொறுத்தவரை தமிழக மாநிலம் முன்னணியில் இருக் கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். மலேரியா ஒழிப்பைப் பொறுத்தவரை உலக சுகாதார அமைப்பினரால் பாராட்டத்தக்க அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு மலேரியாவி னால் ஏற்படும் இறப்புகள் கூட ஒரு சதவிகிதத்திற்கும் கீழே போகும் நிலை இருக்கிறது. வேறுபல கொசுக்களைப் பற்றி மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கொசுக்கள் மருந்துக்கு ஏற்றவகையில் தங்களை மாற்றிக் கொண்டு விடுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே இருந்த மருந்தை மாற்றி வலிமை வாய்ந்த மருந்தைப் பயன்படுத்தி அந்தக் கொசுக்களையும் ஒழிப்பதற்கான முயற்சிகளை எடுப்பதில் இப்போது சுகாதாரத் துறையினர் ஈடுபட்டு வருகிறார்கள்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வேலை செய்யும் ஊழியர்கள் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து அவர்கள் வேலை நிலைகளை ஒழுங்குபடுத்த ஆராய்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நாலைந்து ஆண்டுகள் பணிபுரிந்த பிறகும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கும் நிலையில் மேலும் தாமதம் கூடாது என்பதால் அவர் களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் நிரந்தரமான வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விரைவில் அதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குறிப்பிட்டேன். அத் துறையில் பெரும்பாலான இடங்கள் ஒழிக்கப்பட்டு வந்திருக்கிறது. இருந்தாலும் அந்த இலாகா முழுவதையும் எடுத்து விடுவதற்கும் இல்லை. மேலும் மலேரியா படை எடுக்காமல் பாதுகாக்கவும் வேண்டும். ஆகவே அதற்கு எவ்வளவு ஊழியர்கள் தேவைப்படும் என்று கணக்கெடுத்து அதில் இருப்பவர்களைச் சுகாதாரத் துறை யோடு இணைந்த வேறு பல துறைகளில் பயன்படுத்தலாமா என்று கணக்கு எடுக்க சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஐந்தாறு ஆண்டு கள் பணி புரிந்தவர்களை நிரந்தரமாக்கும் முயற்சிகளை மேற் கொள்ளவேண்டும் என்றும் முயற்சி எடுக்கப்படுகிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் அல்லது வேறு எந்தச் சிறப்புத்திட்டத்தின்கீழாவது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் உள்ள கொசுக்களை ஒழிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாகச் சுகாதார சீர்நிலை குறித்து சென்னை நகரைப் பொறுத்து அதைக் கார்ப்பரேஷன் மேற்கொண்டிருக்கிறது. ஏதாவது தனிப்பட்ட முறையில் கொசுக்கள் அதிகமாகி வருகிறது என்றால் பக்கத்தி லுள்ள கூவம் நதியை சீரமைப்புப்படுத்துகிற காரணத்தால் அதிலுள்ள தண்ணீரைக் கிளப்புவதனால் சில பல சூழ்நிலைகள் ஏற் படக்கூடும். அது விரைவில் சீரமைக்கப்பட்ட பிறகு இந்தக் கெடுதல் அறவே இல்லாமல் போகும். தக்க நடவடிக்கைகளை சுகாதார இலாகாவினரும், மாநகராட்சி சுகாதாரத் துறையினரும் எடுத்து வருகிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த இலாகாவைச் சீரமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். இந்த இலாகாவில் நாலைந்து ஆண்டுகளாகத் தற்காலிகமாக பணி புரிந்து வருகின்றவர்களுக்கு வேலை உறுதி அளிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றித்தான் முதலில் குறிப்பிட்டேன். சில பல வேலைகளுக்கு ஆட்களை எடுத்துக் கொள்ளும்போது அவர்களுக்கெல்லாம் நிரந்தர வேலை கொடுக்கப்படுமென்று உறுதி அளிக்க முடியாது. சில பல வேலை கள் பரவலாக மேற்கொள்ளப்படும்போது தாற்காலிகமாகத்தான் நியமிக்கப்படுவார்கள். ஆனால் சில பேர்கள் தாற்காலிகமாக ஆறு ஏழு ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிகிறபோது நிலையாகத் தேவைப்படுகிற சூழ்நிலை ஏற்படும்போது அவர்களை நிரந்தர மாக்கிவிட்டால் என்ன என்ற கருத்து இருந்து வருகிறது. வேறு

பல துறைகளில் இவர்களை எந்த அளவிற்கு ஈர்த்துக் கொள்ளலாம் என்ற கணக்கின் அடிப்படையில்தான் அவர்களை நிரந்தரமாக்க முடியும். வேலை தரும்போது நிரந்தரமாக எடுத்துக் கொள்வோம் என்ற உறுதி தருவதற்கில்லை. முதலில் தற்காலிகமாகத்தான் எடுக்க வேண்டியிருக்கிறது.

## *Prevention of Food Adulteration Act*

* 65 *Q.*—THIRU C. GOVINDARAJAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government propose to extend the Prevention of Food Adulteration Act to Neyveli Township?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. சி. கோவிந்தராஜன் :** நெய்வேலி டவுன்ஷிப்பில் ஒரு லட்சத்திற்கும் மேல் ஜனத்தொகை பெருகியிருக்கிறது மட்டுமல்ல, ஏற்கெனவே இந்த உணவுப்பண்டங்கள் எல்லாம் கூட்டுறவு ஸ்டோர்ஸ் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. இப்போது அது தனியார் துறைக்கு விடப்பட்டிருப்பதால் பால், எண்ணெய் எல்லாவற்றிலும் கலப்படம் அதிகமாகியிருப்பதால் இந்தச் சட்டத்தை அங்கு விஸ்தரிக்க அரசு விரைவில் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நெய்வேலி ஒன்றியப் பகுதியைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் சட்டமாக நடைமுறையில் கொண்டுவரப்படவில்லை. ஆனால் நெய்வேலி கார்ப்பரேஷன் பகுதியைப் பொறுத்தவரையில் இது அமலில் இருந்து வருகிறது. பக்கத்திலுள்ள கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியன் ஹெல்த் இன்ஸ்பெக்டர் திங்கள்தோறும் நான்கு சாம்பிள்கள் அனுப்ப வேண்டுமென்ற அடிப்படையில் அனுப்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். நெய்வேலி ஒன்றியப் பகுதி முழுவதிலும் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டுமென்றால் ஒன்றியப் பகுதியினர் இந்தச் சட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தீர்மானத்தை அவர்கள் அனுப்பி வைத்தால் அரசு அதைப்பற்றிக் கவனிக்கும். மேலும் பல ஒன்றியப் பகுதிகளில் எல்லாம் இச்சட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் வருகின்றன; விரைவில் கோவையில் இந்தப் பொருள்களை ஆராய ஆராய்ச்சிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. விரைவில் அது முடிந்த பிறகு இக்கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ள எல்லா இடங்களையும் அங்கீகரிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த உணவுக் கலப்படத்திற்கு முக்கிய காரணமாக உள்ள பெரிய மொத்த வியாபாரிகள் இதற்கான தண்டனையிலிருந்து கப்பித்துக் கொள்ளவும் அதை வாங்கி விற்கிற சில்லறை வியாபாரிகள் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய ஒரு அபாயமும் இப்போது இருக்கிறது. ஆகவே கலப்படத்திற்கு முக்கிய காரணமாக உள்ள மொத்த வியாபாரிகள் தண்டனை





அடையக்கூடிய முறையிலும் சில்லறை வியாபாரிகள், சின்ன வியாபாரிகள், தண்டனை அடையாமலும் இருக்கக்கூடிய விதத்தில் அரசு தக்க முயற்சிகள் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுமாதிரி சில்லறை வியாபாரிகள் சிலர் அந்தக் கோரிக்கையைக் கொண்டுவந்துள்ளார்கள். அது சம்பந்தமாக ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். யார் கலப்படம் செய்கிறார்களோ அவர்கள்தான் தண்டிக்கப்படுவது நியாயம். மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கும் சில்லறை வியாபாரிகள் கலப்படம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து எடுத்து தெரிவிப்பதற்கு இல்லை. ஆகவே, அவர்களுக்கு தண்டனை கொடுப்பது என்பது நியாயமாக இருக்காது என்று சொல்லி எந்த இடங்களிலிருந்து அவை விநியோகிக்கப்படுகின்றன என்ற முழு உண்மையை அவர்களிடமிருந்தும் பெற்று அதன் அடிப்படையில் கலப்படத்திற்குக் காரணமாக இருப்பவர்கள், அது எங்கிருந்து உற்பத்தியாகிறது அல்லது எங்கிருந்து விநியோகிக்கப்படுகிறது அல்லது எங்கிருந்து பாக்கெட்ஸ் போடுகிறார்கள் என்றெல்லாம் பார்த்து கலப்படம் செய்கிறவர்களுக்குத் தண்டனை அளிப்பது என்ற முறையில் சில்லறை வியாபாரிகளிடமிருந்து அவை எங்கிருந்து வந்தன என்பதைத் தெரிந்துகொள்கிற அளவிற்குத் தெரிந்துகொண்டு சில்லறை வியாபாரிகள் தண்டனைக்கு உள்ளாவது நீதிக்கு இடம் தருவதாக இருக்காது என்று சொல்லி அது பற்றி தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி துறையினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

## அரசுக் கடன்கள்

* 66 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த காலத்தில் (1968-69-ல்) விளைவில்லாத திருமயம், ஆலங்குடி, குளத்தூர் வட்டப் பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள உரக் கடனை, மழையின்றி விளையாத காரணத்தால் தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இயலா நிலையிலுள்ளவர்களிடமிருந்து அரசு கடன்களை வசூலிப்பதில் மெல்ல மெல்ல வசூலிக்கும் கொள்கையைக் கையாளும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளார்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** உரத்திற்காகக் கடன் வாங்கி பிறகு உரத்தையும் வாங்கி நிலத்தில் போட்டு தண்ணீர் இல்லாத காரணத்தினால் விளையாமல் போனால் விவசாயிகள் எதிலிருந்து அந்த உரக்கடனைக் கட்ட முடியும் என்ற சூழல் இருக்கிற காரணத்தினால் உரக்கடனைத் தள்ளுபடி செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : உரக்கடன்களைத் தள்ளுபடி செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்கிறமாதிரி திருமயம், கொளத்தூர், ஆலங்குடி, போன்ற புதுக்கோட்டையைச் சேர்ந்த இடங்களில் வரட்சி உச்சகட்டத்தில் இருந்தது உண்மை. அந்த நிலையிலும் இந்த மாதிரிக் கடன்களைத் தள்ளுபடி செய்யமுடியாது. ஆனால் வரட்சி ஏற்பட்ட காரணத்தினால் விளைச்சல் இல்லை என்ற காரணத்தினால் கூடுமானவரையில் எந்தெந்த இடங்களில் அவசியமோ அந்தந்த இடங்களில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கும். ஆனால் சமீபத்தில் ஒரு ஆறு மாத காலமாக இந்த உரக் கடன்களை ஒத்திவைப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

### விராச்சிலை பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்பு

* 67 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள விராச்சிலையில் பேருந்துகள் நிற்குமிடத்தில், பொதுமக்களுக்கும், பேருந்துப் போக்குவரத்திற்கும் இடையூறு செய்யும் வகையில் 1968-69-ல் ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்திருப்பதை அகற்ற திருமயம் வட்டத் தாசில்தாரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : குறிப்பிட்ட ஆக்கிரமிப்பை அகற்ற திருமயம் வட்டத் தாசில்தார் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 68 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### வேட்டாங்குளம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 69 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுக்கா வேட்டாங்குளம் கிராமத்திலுள்ள அரிசன மக்கள் வீட்டுமனைக் கோரி ஏதேனும் விண்ணப்பம் எழுதியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், எந்த தேதியில்? எத்தனை பேர்கள் ?

(உ) அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : (அ) ஆம்.

(இ) 11—8—1969 ; 53 பேர்கள்.

(உ) வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்புக்கு, சமூக நலத்துறையின் 24—1—1970 நாளிட்ட 190-ம் எண் அரசு ஆணையில், அரசு ஏற்பளித்தது. நிலக் கையகப்படுத்துதல் திட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு, 18—2—1970 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 5-ஏ பிரிவின்படிக்கான விசாரணையை நடத்திய பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அரசின் ஒப்புதலுக்காக வரைவு அறிவிப்புச் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். 21—7—1970 நாளிட்ட 1907-ம் எண் அரசு ஆணையில், அவற்றிற்கு அரசு ஏற்பு அளித்துள்ளது. விரைவில் அவை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.





**திரு. வி. கே. கோதண்டராமன்** : ஹரிஜன மக்கள் வீட்டு மனைகள் வேண்டி மனுக்கள் போட்டாலும் வருடக் கணக்கில் அவர்கள் காத்துக்கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை உள்ளது. இதைத் தவிர்ப்பதற்காக வேண்டி யார் யாருக்கெல்லாம் வீட்டு மனைகள் தேவைப்படுகின்றனவோ, யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அதுபற்றி அறிந்துகொள்ள ஒவ்வொரு ஹரிஜனக் காலனிக்கும் நேரடியாகச் சென்று அதைப் பரிசோதனைசெய்து அந்த அடிப்படையில் வீட்டு மனைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுத்து அந்த வகைப்படி செயலாற்றிக்கொண்டு வருகிறது. ஏறத்தாழ 1½ லட்சம் பேர்களுக்கு இதுவரையில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் மூன்றில் ஒரு பங்கு ஹரிஜன மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சில ஹரிஜன மக்கள் அவர்கள் வாழ்கிற பகுதியிலேயே இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள், அந்த இடங்கள் தனியார்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களாக இருக்கின்றன. பட்டா நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்றால் அதற்குப் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. எனவே காலதாமதமாகிறது.

### அரிசனங்களுக்கு வீடு கட்ட மான்யம்.

* 70 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மக்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : ஆதி திராவிட மக்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நடைமுறையிலேயே உள்ளது. 9.30 a.m.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : ஹரிஜனங்களுக்கு என்று தனிப்பட்டு ஒதுக்கப்பட்ட பகுதியில் மனை கொடுக்காமல் மற்ற சமூக மக்களோடு அவர்கள் சேர்ந்து வாழ்வதன்மூலம், இருக்கிற கீழான நிலைமை மாறுவதற்குரிய வகையில் புதிய காலனிகள்

அமைக்கும்போது ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்குவது இல்லாமல், மற்றவர்களுக்கு மத்தியில் வீடு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? மனை கொடுக்காமல் அரசு வீடு கட்டிக் கொடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கருத்து மிகச் சுவையாக இருக்கிறது. செயலில் கசப்புகள் ஏராளம் ஏற்படுகின்றன. அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால் செயல்படுத்தும்போது கஷ்டமாக இருக்கிறது. ஹரிஜன மக்களும் தனியாக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசு மனை வாங்கி ஒதுக்கி இருந்தாலும் கூட வீடு கட்டுவதற்கு அவர்களுக்குப் பணம் இல்லாத காரணத்தால் பல இடங்களில் இடம் சும்மா கிடக்கிறது. அப்படி வீடு கட்டுவதற்கு அவர்களுக்கு ஏதாவது அரசு கடனோ மானியமோ கொடுத்து உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அடுத்த கேள்வி அதைப் பொறுத்து இருக்கிறது. அப்போது பதில் சொல்கிறேன்.

**திரு. மு. முத்தையா :** ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு புறம்போக்கு நிலத்தைப் பட்டா கேட்டால் சீக்கிரம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அதே நேரத்தில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறையிலுள்ள புள்ளி விவர ஆபீசர் திரு. நஞ்சையன் என்ற கெஜடட் ஆபீசருடைய மனைவிக்கு 5 ஏக்கர் புறம்போக்கு நிலமும், புள்ளிவிவர இலாக்காவில் உள்ள அஸிஸ்டெண்ட் டைரக்டர் மாசிலாமணி என்ற கெஜடட் ஆபீசருக்கு 5 ஏக்கர் பட்டா பொன்னேரி தாலுகா மாதர்பாக்கம் என்ற இடத்தில் கொடுத்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கேள்வி நேரத்தில் பல புகார்கள் கிளப்புவது பொருத்தமாகாது. அதை எழுதிக் கொடுத்தால் அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சோ. கருணாநாதன் :** வீடு கட்டுவதற்குத் தருகிற கடன் வட்டி இல்லாத கடனா? அதைத் திரும்ப எப்படி அரசு வசூலிக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வீடு கட்டத் தரப்படுகிற கடன் 100 மாதத் தவணையில் வசூலிக்கப்படுகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, மத்திய அரசு ஹரிஜன மக்களுக்கு இலவசமாக உதவி நிதியும், அதே சமயத்தில் சிறிய கடன் தொகை கொடுக்கிற திட்டம் இருக்கிறதே, இந்தத் திட்டத்தை நம்முடைய மாநில அரசு பயன்படுத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** மத்திய அரசு ஒட்டுமொத்தமாக எல்லாத் திட்டங்களுக்கும் என்று இவ்வளவு காலம் கொடுக்கவில்லை. கடந்த ஆண்டிலேதான் அப்படிக் கொடுக்கிறார்கள். நிலம் வீடு கட்டுவதற்கு என்று தனியாக மத்திய அரசாங்கம் இப்போது நிதி எதுவும் ஒதுக்கவில்லை. மத்திய அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு வீடுகளை இன்ன வகையில் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம் தந்து இருக்கிறது. ரூ. 5,000 செலவில் ஒரு தனி வீடாகக் கட்டுவதற்குத் திட்டம் போட்டு வீடு கட்டுகிறது. அதற்கு ஒப்புதல் State Housing Board, Chief Engineer (Buildings) இருவரும் ஒப்புதல் கொடுக்கிற அளவுக்கு ஒரு புதிய டிசைன் வேண்டும். அதை ஒப்புக்கொண்ட பிறகு ரூ. 5,000 அவர்களுக்கு கொடுக்கப்படும். அதற்காக ஒப்புதல் பெற்று அனுப்பவேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த வகையில் State Housing Board, Chief Engineer (Buildings) 220 சதுர அடி ரூ. 3,400-ல் ஒரு வீடும், 320 சதுர அடி ரூ. 4,500-ல் ஒரு வீடுமாக இரண்டு திட்டங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவைகள் இன்று நலத்துறை இயக்குநரின் பரிசீலனையில் இருக்கிறது. பிறகுதான் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டால் இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கம் மான்யத்தோடு வீடு கட்டலாம்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** ஹரிஜனங்களுக்கு ஒரு வீடு கட்டக் கடன் எவ்வளவு, மான்யம் எவ்வளவு? அதைக் கட்டிக் கொடுக்க அரசு ஏதேனும் கடன் தருகிறதா? அப்படிக் கொடுக்கிற பணத்திற்கு வட்டி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் பணம் இருந்தால் கொடுக்கலாம். அரசு அதை வரவேற்கும். ஆனால் ரூ. 940 என்ற மதிப்பீட்டில் ஒரு வீடு. அதில் ரூ. 250 அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்படும். மிஞ்சிய பணம் மான்யமாகத் தரப்படும். அந்த ரூ. 250 ஐ 100 சமத் தவணைகளில் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். வட்டி கிடையாது.

## கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதுவகை நெல்.

***71வினா—திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீபத்தில் கோவை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் (Agriculture Farm) கண்டு பிடிக்கப்பட்ட புதுவகை நெல் யாது?

(இ) அதற்கு என்ன பெயரிடப்பட்டுள்ளது?

[1970 ஆகஸ்ட் 27

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஐ.ஆர். 8, ஆடுதுறை 27 ஆகிய இவ்விரண்டு இனங்களின் புதிய கலப்பினம் ஒன்று கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, 1970 பிப்ரவரியில் வெளியிடப் பட்டது.

(இ) இந்தப் புதிய வகை நெல்லுக்கு "கருணா" என்று பெயரிடப்பட்டுள்ளது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த நெல் எந்த பருவத்தில் சாகுபடி செய்வதற்கு லாயக்காக உள்ளது? அது இப்போது எந்த மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது. இப்போது கருணா என்று இதற்கு பெயர் வைத்து இருப்பதால், இனி கண்டு பிடிக்கப்படும் நெல்லுக்கு மற்ற அமைச்சர்களின் பெயர் வைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** குறுவை காலத்தில் இந்தப் பயிர் இடலாம் என்று கூறப்படுகிறது. இன்னும் இந்தப் பயிர் அதிகப்படியான விதைகளை உண்டாக்கவேண்டு மென்று, பல விதைப் பண்ணைகளில் பயிரிடப்பட்டு வருகிறது. தேவையான விதைகள் வந்த பிறகுதான் அது மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும். 'கருணா' என்று பெயர் வைத்திருப்பது மாண்புமிகு முதலமைச்சர் பெயர்தான். இன்னும் அதிக அமைச் சர்களின் பெயர் மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் வைப்போம். ஆட்சேபணையில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கூடிய விரைவில் 13 ரக விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு, அமைச்சர்கள் பெயர் வைக்கப்படுமா? அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டால், மறுபடியும் அதற்கு தகுந்தமாதிரி கண்டுபிடிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது எங்களைப் பொறுத்த விஷயம். எதிர்க்கட்சித் தலைவர் அதைப்பற்றி ஆயாசப்படத் தேவையில்லை.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இதுவும் ஐ.ஆர். 8, ஆடுதுறை 27 ஆகியவற்றின் கலப்படமா? இந்த 'கருணா' எந்தக் காலத்தில் பயிரிடலாம். இதன் சிறப்புத் தன்மைகள் என்ன? இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இது ஐ.ஆர். 8 கலவைதான். சி.ஓ. 35 என்று இதற்குப் பெயர். அதற்கு கருணா என்று பெயர் சூட்டியிருக்கிறோம். இதன் சிறப்பு மிகவும் அதிகம். அமோக விளைச்சல் தரும். ரசாயனக் கலப்பு உரங் களுக்கு ஈடு கொடுக்கும். கதிர் சாயாது. உருண்டையான தானி யங்களைக் கொடுத்து சிறந்த தரம் உடையது. தஞ்சாவூர் மாவட் டத்தில் இந்த நெல் விளைச்சலுக்கு ஏற்றது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the maximum yield that is produced by 'Karuna' per acre?



1970 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆடு துறை 27 என்ற நெல் 1 ஏக்கருக்கு 1,726 கிலோ விளைந்தால், இந்த 'கருணா' என்கிற நெல் ஒரு ஏக்கருக்கு 1998 கிலோ குறைந்த அளவு, 2,228 கிலோ வரிஏய்ப்பு அதிகப்படி அளவு விளையும்.

## வரி ஏய்ப்பு.

* 68 **வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்ய வர்த்தக வரி இலாகா அதிகாரிகள் 1969 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மொத்த வியாபாரக் கடை களையும், எண்ணெய் ஆலைகளின் விற்பனை இடங்களையும் சென்னை யில் சோதனை போட்டார்களா?

(இ) அதனால் சர்க்காருக்கு எவ்வளவு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) வரி ரூ. 1,91,735.83.

(இ) அபராதம் ரூ. 31,944.45.

## கால்நடை மருந்தகங்கள்

* 72 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) கிருஷ்ணராயபுரத் திற்கென கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்த 1968-ம் ஆண்டி லேயே அரசு அனுமதித்துள்ளது. 1-2-1969 முதல் அது நிரந்தர மான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, லாலாப் பேட்டை, பழைய ஜெயங்கொண்டம், கொசூர் போன்ற இடங்களில் கிளை மருந்தகம் இதுவரை துவக்கப்படவில்லை. இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

* 73 **வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியில் எத்தனை புதிய கால்நடை மருந்தகங் கள் அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதுவுமில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** திருமயம் தொகுதியில் ஏதாவது கிளை மருந்தகம் அமைக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறதா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை சிறு மருந்தகம் மட்டுமே தலைமையிடத்தில் செயல்பட்டு வந்தது. பின்னர் அத்துறை சீரமைக்கப்பட்ட பின் முறையான கால்நடை மருந்தகமாக 1970-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் தேதியன்று அது மாற்றப்பட்டது. மேற்கொண்டு தகவல் எதுவுமில்லை.

*Construction of dam on Varattar river*

* 74 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public works be pleased to state—

(a) whether the construction of anicut across varattar river in Ellapudiampatty in Harur Taluk has been taken up; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) இத் திட்டத்திற்கு ரூபாய் 3 இலட்ச செலவில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அணைக்கட்டு வேலையைத் தொடங்க ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்தப் புதிய அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கர் புதியதாக நிலங்கள் பாசனத்திற்குக் கொண்டு வரப்படும் என்று சொல்ல முடியுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: By the execution of the scheme an extent of 69.44 acres of average cultivation in the above four tanks will get assured supply, besides bridging the gap to an extent of 14.13 acres. An extent of 118.18 acres of new ayacut in the above four tanks will also be brought under irrigation. The scheme will also benefit 86.96 acres under pond effect and 64;82 acres under direct ayacut.

*திருச்சிராப்பள்ளி-மதுரை இருப்புப்பாதை*

* 75 வினா—**திரு. என். நிட்டப்பா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியிலிருந்து மதுரை வரை உள்ள ரயில் பாதையை அகலப்பாதையாக ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கரூர் வழியாக சேலத்திலிருந்து திண்டுக்கல் வரை அகலப்பாதை அமைத்தல், திண்டுக்கல்–தூத்துக்குடி (மதுரை வழி) இருப்புப்பாதையை அகலப்பாதையாக்குதல் (மணியாச்சியிலிருந்து திருநெல்வேலி



வரையுள்ள குறுகிய இணைப்பு உட்பட) திட்டங்களை நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இதில் திண்டுக்கல்-மதுரை பிரிவு அடங்கும். திருச்சிராப்பள்ளி–திண்டுக்கல் பிரிவு இதில் அடங்காது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** திருநெல்வேலி–மணியாச்சி அகலப்பாதை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருநெல்வேலி—கன்னியாகுமரி இரயில்பாதை அகலப்பாதையா அல்லது குறுகிய பாதையா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற அகலப் பாதை ஒரு வழிப் பாதையா? ஒரு வழிப் பாதையாக பரிந்துரை செய்யப்பட்டிருக்குமானால், அதைப் பரிசிலனை செய்து இரு வழிப் பாதையாக அமைப்பதன் மூலம் போக்குவரத்து நேரத்தைக் குறைக்க முடியும். ஆகவே அதைச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஒரு வழிப் பாதையைப் பற்றியே இன்னும் முடிவு ஏற்படவில்லை. ஆகவே, இரண்டு வழிப் பாதையைப் பற்றி பின்னால் யோசிக்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தின் பரிந்துரைகளை மத்திய அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து வெளியிடுவாரா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பதில் வரவில்லை. மாநில அரசின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதாக தகவல் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: With regard to Bangalore-Salem railway line, at the time of inauguration of the line at Bangalore, the Manager, Southern Railway stated that the railway line was so constructed keeping in view the necessity to convert it into broad gauge later on. It is now more than two years. May I know from the Hon. Minister when it will be converted into broad gauge line?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Two years' time is a very short time.

**திரு. ப. மகாதேவன்:** தலைவர் அவர்களே, இதுவரையில் ரயிலையே பார்த்திராத கன்யாகுமரி மாவட்டத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் இடம் கொடுத்து மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதற்கு செயற்குறிப்பு இருந்து வருகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, பொது மக்கள் தேவையை முன்னிட்டு எக்மோரையும், சென்டிரல் ஸ்டேஷனையும் இணைத்து ஒரு ரயில் பாதை அமைக்க, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கான திட்டத்தைச் சேர்த்துக்கொள்ள நம்முடைய அரசு சிபார்சு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே செய்துள்ள சிபார்சுகளைப்பற்றி முடிவு தெரிந்துகொண்ட பிறகு, மேற்கொண்டு சிபார்சு செய்யலாம்.

*New State Transport Buses in Madras City*

* 76 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Transport Department has introduced "Go-as-you-please" bus tickets in the city of Madras?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.

**திரு. கே. விநாயகம் :** சென்னையில் புதியதாக புகுத்தப்பட்டிருக்கிற இந்த முறை, 'கோ ஆஸ் யு ப்ளீஸ்' டிக்கெட்களைப் பொறுத்தவரையில் ஒரு டிக்கெட்டிற்கு எத்தனை கட்டணம் தர வேண்டும்? அதுமாதிரி எத்தனை டிக்கெட்டுகள் வாரம்தோறும் விற்பனையாகின்றன? அது தினந்தோறும் தரப்படுகிறதா அல்லது விடுமுறை நாட்களில் மட்டும் தரப்படுகிறதா? அப்படி பிரயாணிகள் அந்த டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு, வண்டியில் ஏறிக்கொண்டு நாள் முழுதும் பிரயாணம் செய்து கொண்டிருந்தால், அதனால் மற்றவர்களுக்கு தொல்லையாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியவில்லையா? இப்பொழுதே சீர்கேடான முறை இருக்கும்பொழுது இதனால் இன்னும் தொல்லை அதிகமாகும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு எத்தனை காலம் வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு துணைக் கேள்வியில் எத்தனை கேள்விகள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒரு டிக்கெட்டிற்குக் கட்டணம் ரூ. 1½. இது விடுமுறை நாட்களில்தான் விற்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 299 க்கு டிக்கெட் விற்பனையாகிறது. விடுமுறை நாட்களில் இதுபோன்ற பிரயாணம் செய்வதனால் மற்றப் பிரயாணிகளுக்கு எந்தவிதமான கஷ்டமோ, தொல்லையோ ஏற்படவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** விருப்பம்போல் பிரயாணம் செய்வதற்கான இந்தத் திட்டம் நல்ல திட்டம்தான். இதேபோல் தமிழகம் எங்கிலும் பல தனிப்பட்டவர்கள் ஆம்னி பஸ்கள் என்று வைத்துக்





கொண்டு நல்ல வருமானம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அதைப்போல் அரசாங்கமும் ஆம்னி பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். சென்னை நகரத்தில் ஓடுகின்ற பஸ்களின் மூலம் ஏற்படுகின்ற நஷ்டத்தை இப்படி ஆம்னி பஸ்கள் விடுவதன் மூலம் சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம்னி பஸ்களைப் பற்றிய கேள்விக்கும், இந்த மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. எனவே, இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், சென்னையில் தற்சமயம் லேடீஸ் ஸ்பெஷல் என்ற முறையில் பெண்களுக்காக தனி பஸ்களை விடுகிறார்கள். அதே போன்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வி இதைப் பற்றியது. அப்பொழுது இந்தக் கேள்வியைப் போடுங்கள்.

**திரு. டி. மார்டின் :** இந்தக் கேள்வியோடு தொடர்பாகத்தான் போடுகிறேன். சென்னையில் லேடீஸ் ஸ்பெஷல் என்று பஸ்கள் விடப்படுகின்றன. அதேபோன்று, இந்த 'கோ ஆஸ் யு ப்ளீஸ் பஸ்களையும் லேடீஸ் ஸ்பெஷல் என்ற முறையில் பெண்கள் அப்படி சுற்றிவரக்கூடிய அளவில் விடுவதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

(பதில் இல்லை).

*77 Q.—THIRU K. CHEEMAICHAMY;
THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether Government is now contemplating to run special buses in the Madras City for Women only; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை குறிப்பிட்ட சில வழித்தடங்களில், சோதனை அடிப்படையில் மகளிருக்கும், சிறுவர்களுக்குமென்றே, தனிப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவை காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரையிலும், மாலை 3-00 மணி முதல் 7-00 மணி வரையிலும், சிறப்பு அறிவிப்புப் பலகைகளுடன் ஓடுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் பேருந்து முயற்சி நல்ல முயற்சி. இதே முறையில் ஜனநெருக்கமுள்ள மதுரை, கோவை, திருச்சி போன்ற இடங்களிலும் இந்த மகளிர் பேருந்துகளை விட அரசாங்கம் முன்வருமா? அந்த மகளிர் பேருந்துகளில் மகளிரையே கண்டக்டர்களாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மகளிருக்காக தனியாக விடப்படுகிற பஸ்களைப்பற்றி பாராட்டியதற்கு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் ஸ்பெஷல் பஸ்களுக்கு இப்பொழுது சென்னை நகரத்தில் பிரயாணிகளிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துக்கொண்டு வருகிறது. பெண் கண்டக்டர்களைப் போடுகிற விஷயத்தைப்பற்றித் தனியாக ஆலோசிக்கலாம். தற்பொழுது இருக்கிற சூழ்நிலையில் பெண் கண்டக்டர்களை நியமிப்பது அவ்வளவு சாத்தியமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

*Altercation between passengers and driver of State Transport Bus.*

* 78 Q.—Thiru K. VINAYAKAM :
Dr. H. V. HANDE :

Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there was a dispute and heated exchanges between the passengers and transport workers in Theagarayanagar, Madras, in route No. 11-B on 9th December 1969;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) how the dispute was settled?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 9–12–1969 அன்று மாலை 5 மணியளவில் பாரிமுனையிலிருந்து 11-பி எண் வழித்தடத்தில் செல்லும் ஏ. 742-ம் எண்ணுள்ள பேருந்தை அதன் வலவர், இராகவய்யா சாலையிலுள்ள பேருந்து நிறுத்துமிடத்தில் நிறுத்தவில்லை. எனவே, பயணிகள் கலக்கமுற்றனர். அதைத் தொடர்ந்து அவர்களுக்கும் வலவருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது.

(உ) விசாரணை நடத்தப்பட்டதில் வலவர் தவறு செய்ததாக முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, இரண்டாண்டுக் கால அளவுக்கு அவருடைய சம்பள உயர்வு தொடர்ந்து தள்ளிப்போடுமாறு தள்ளிப் போடப்பட்டது.

Dr. H. V. HANDE : Is it not a fact that there is constant friction between conductors and the passengers and especially in recent times is it not a fact that because of the restriction of 25 standing passengers there has been lot of misunderstanding and the whole transport machinery is in a chaotic condition. What is the position of Government? What efforts are they going to make to see that at least hereafter there is proper relationship between passengers and conductors? How are the Government going to see that more number of passengers travel by the State Transport comfortably?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : போக்குவரத்துத் துறையில் பொது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல. இந்தப் பிரச்னை சென்னை மாநகரத்தைப் பொறுத்திருக்கிற பிரச்னை.





போக்குவரத்துத் துறையில் பீக் ஹவர் பிராப்ளம், நெரிசல் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னையை சமாளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. மேற்கொண்டு பஸ்களை விடவும், மேற்கொண்டு சில சீர்திருத்தங்களை செய்வதற்குமான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : சட்டப்படி, இந்த ட்ரான்ஸ்போர்ட் ரூல்ஸ் இருக்கின்றன. அதன் விளைவாக 25 பேர்களுக்கு மேல் ஏற்றக்கூடாது என்று விதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் அதிகமாக ஏற்றிக்கொள்ளுங்கள் என்று நேரடியாக, ப்ரைவேட் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்பது, அதிகார பூர்வமாகச் செல்லாது என்று சில கண்டக்டர்கள், ட்ரைவர்கள் மறுத்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வியோடு இது தொடர்பு கொண்டது இல்லை. அது ஒரு குறிப்பிட்ட நாளில் ஏற்பட்ட தகராறு பற்றியது. சில மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அந்த ஊழியர்களை அந்த இடத்திலேயே சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்றார்கள். அதிகாரி விசாரணை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். விசாரணைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, arising out of the main question is it not a fact that there is constantly trouble between the conductor and the passengers and if so, whether the Government will come forward to see that the trouble is put an end to? This trouble has been there for the last 3-1/2 years and three Ministers have held the Transport portfolio but nothing has happened. Still the same state of affairs continues without rectification. So, will the Hon. Minister at least see that a couple of routes are thrown open to the private operators so that there could be competition in this field. Already the Government have released a large number of buses for the long distance routes with the result that we do not have enough buses for the City. So, will the Government come forward to solve this vexatious problem which is eluding solution for the past several years?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : All attempts are being made seriously to rectify the defects. **கனம் உறுப்பினர்** தனியார்களை இதற்காக ஊக்குவிக்க வேண்டும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

**பனை நுங்கு ஏற்றுமதி**

* **79 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை நுங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு பனைவெல்ல சம்மேளனம் முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம் 1968-69-ல் பனை நுங்கைப் பாதுகாப்பதற்கான ஒரு சோதனையை நடத்தியது. இச் சோதனையில் வெற்றிகிட்டியது. இது சிற அளவில் தயாரிக்கப்பட்டு உள்ளூர் சந்தையில் விற்கப்பட்டது. அதன் மூலம் பொதுமக்கள் கருத்து அறியப்பட்டது. நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பனை நுங்கு கொண்ட மாதிரி டப்பிகள் (Sample tins) மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி பனை நுங்குகளை வெளிநாட்டுக்கு முன்னால் அனுப்பினார்களா ? தென் மாவட்டங்களில் அதிகமாக இவை கிடைப்பதால் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பினால், அந்நியச் செலாவணி கிடைக்குமே. ஆகவே, அந்த முயற்சியில் அரசினர் செயல்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதற்கு முன்னால் இந்த வாரியத்தின் மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பியதாகத் தகவல் இல்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வெற்றியின் காரணமாக, அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பதால், ஏற்றுமதி செய்ய, இந்த சம்மேளனம் பம்பாயில் உள்ள டீன் எண்டர்ப்ரைஸஸ் என்ற நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு இருக்கிறது. இது படிப்படியாக வளரும் முறையில் முயற்சிகள் எடுக்கப்படும்.

*Loan from Life Insurance Corporation of India*

* 80 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the City Corporation authorities propose to raise a debenture loan of Rupees three crores from the Life Insurance Corporation of India; and

(*b*) if so, for what purposes?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1970 பிப்ரவரியில் பம்பாயிலுள்ள இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து, ஈட்டு ஆவணத்தின் மேல் சென்னை மாநகராட்சி ரூ. 3 கோடி கடன் பெற்று உள்ளது.

தன்னுடைய நிதிவாயில்களைப் பெருக்கி முக்கியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வகை செய்யும் பொருட்டு இவ்வாறு கடன் பெற்றுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** சார், மாநகராட்சி நிதி நிலை சரிவர இல்லை என்றும், அவர்கள் மாதந்தோறும் ஊழியர்களுடைய சம்பளத்தையே சரிவர குறிப்பிட்ட தேதியில் கொடுக்க முடியவில்லை என்று இருக்கும் நிலையில், இந்த மாதிரி புதிய திட்டம் போட்டு, இதை அதைச் செய்யப் போகிறோம் என்று சொல்லி பலரிடமும் கடன் வாங்குவதற்கு நம் அரசின் மூலமாக வாங்கி, வாங்கிய





கடன்களை அந்த வேலைகளுக்கு உபயோகப்படுத்தாமல், மாதாந்திர சம்பளம் பட்டுவாடா செய்யவே பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநகராட்சி ஊழியர்களுக்கு சில நேரங்களில் சம்பளம் கொடுக்க நிதித் தட்டுப்பாடு ஏற்படுவது உண்மை. காரணம், மாநகராட்சியின் வரிகள் குறிப்பிட்ட மாதங்களில் அதிகமாகவும், சில மாதங்களில் மிகக் குறைவாகவும் வசூல் செய்யப்படுவதுதான். அப்படி இருக்கும் நேரங்களில், அரசாங்கம் முன் பணம் கொடுத்து, வகை செய்யப்படுகிறது. மாநகராட்சியின் நிதி வருவாயைப் பெருக்க, இன்னமும் வருமானமுள்ள, ரெம்யூனரேடிவ் என்டர்ப்ரைஸ்களை வகுக்க, வருமானத்தைப் பெருக்க, டிபஞ்சர் லோன் என்ற வகையில் தேடி, பயன்படும் காரியங்களுக்கு உபயோகிக்கிறார்கள். கடன்களை பெறாமலே இருந்தால், ஆக்க வேலைகள் தடைப்படும். கடன்களை பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister under what head the sum of Rs. 3 crores was taken and for what specific purpose? Also whether it is a fact that the money allotted for a specific purpose has not been spent? This is one of the several instances where the money allotted for a specific purpose has not been spent for that purpose. Even the Government of Tamil Nadu have granted loans to the Corporation. So, will the Hon. Minister tell us under what head the amount has been spent and the amount that has been spent under that head so far?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** விடையிலேயே சொன்னேன். சென்னை மாநகராட்சி தன்னுடைய நிதிவாயில்களைப் பெருக்கி முக்கியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வகை செய்யும் பொருட்டு, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து, ஈட்டு ஆவணத்தின்மேல் ரூபாய் 3 கோடி கடன் பெற்றுள்ளது என்று. இந்தத் தொகை என்னென்ன காரியங்களுக்கு உபயோகப்படுத்தப் படவேண்டும் என்பதை, மாநகராட்சி தீர்மானங்கள் மூலம் நிறைவேற்றும். முக்கிய திட்டங்களுக்கு பயன் படுத்திக் கொள்ளப் படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசின் இசைவோடு செய்யப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விவரங்கள் இல்லை.

DR. H. V. HANDE : Sir, on a point of order. The main question relates to the loan of Rs. 3 crores taken from the Life Insurance Corporation. So. is this House not entitled to know under what head the loan amount has been spent and for what specific purpose it has been spent. The Hon. Speaker must help us in trying to pull up the Hon. Minister and make him answer my question namely, for what specific purpose it has been spent.

நிதி நிலை, நிதிவாயில்கள் என்றால் எப்படி ? எந்த அடிப்படையில் வாங்கப்பட்டது ? அந்தத் தொகை எப்படி எப்படிப் பயன் படுத்தப்பட்டது ? என்னென்ன விவரங்கள் ?

We are entitled to know all these details. Now the main question itself has been unanswered. Even the answer to the main question has been prepared by the Department. So the Hon. Speaker must pull up the Hon. Minister or the Department concerned. The Hon. Minister also must pull up his Departmental officer. The Chair must protect the rights of the hon. Members.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலும் இரண்டு கேள்விகள் போடுங்கள். அமைச்சர் பதில் கொடுப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது, இலாக்காக்களில் தயாரித்து, அமைச்சர் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அமைச்சர்களுடைய அங்கீகாரம் பெற்றதற்குப் பிறகு பதில்கள் தரப்படுகின்றன. அப்படித் தரப்படும் பதில்கள் அமைச்சர்கள் சட்டப்படி பதில்களைத் தரலாம் தராமலும் இருக்கலாம், அதற்கான விதிகள் இருக்கின்றன. என்று சொல்வது, அமைச்சர்களை அவமதித்ததாகும். ஆகவே, அந்த வார்த்தை சட்ட மன்றக் குறிப்பில் இருப்பது சரியில்லை, என்று கருதுகிறேன். ஆகவே, அதை எடுத்துவிடுவது நல்லது.

DR. H. V. HANDE : Sir, the word * is not an unparliamentary word. My point is that an irrelevant answer cannot be given. Suppose we ask the price of an article. If the answer is given that it is three feet long we cannot accept it. Even in the Lok Sabha the Hon. Speaker has pulled up the Hon. Ministers several times . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள் சொல்கிறேன். இந்தக் கேள்விக்கு, திரு. ஹாண்டே அவர்களும், திரு. விநாயகம் அவர்களும், இரண்டே துணைக் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். இன்னும் கேள்விகள் போடுங்கள். அதற்கும் ஆன்சர் வரவில்லை என்றால் அப்பொழுது பார்ப்போம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, கேள்வி கேட்ட பிறகு, பொறுப்பான பதில்களைச் சொல்லவேண்டும். இதற்கு முன்னால் இருந்த ஒரு சபாநாயகர் ஒரு ரூலிங் கொடுத்தார்கள், அமைச்சர் பதில் சொல்லலாம், சொல்லாமல் இருக்கலாம், மறுக்கலாம் அல்லது மழுப்பலாம் என்று. அதைத் தாங்கள் கடைப் பிடிக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்பொழுது இருந்த சபாநாயகர் சொன்னது இருக்கட்டும் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த நிலையைத் தாங்களும் கடைப்பிடிக்கிறீர்களோ ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, முன்னாலிருந்த அவைத் தலைவர்களும் 'அமைச்சர் சொல்லலாம், சொல்லாமல் இருக்கலாம்' என்றுதான் சொன்னார்களே தவிர 'மழுப்பலாம்' என்று சொன்னதாக இல்லை . . . .

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போதுள்ள பேரவைத் தலைவர் அதுபோலச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார்களா? நான்தான் சொன்னேன். மூலக் கேள்வி போடப்பட்டிருக்கிறது. பதிலும் அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டு மூன்று துணைக் கேள்விகள் போடுங்கள். விளக்கம் வரும் என்று சொல்லியிருக்கிறேன். முன்கூட்டியே சபாநாயகர் என்ன தீர்ப்புக் கொடுப்பார் என்று சொல்வது—அது அவர்கள் மனதில் இருக்கிற தீர்ப்பாகத்தான் இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுதான் மரபாகிவிட்டதே, வழக்கமாக இருக்கிறதே. அந்த ஆசனத்தில் இருந்து சொல்லப்படுவது எல்லாம் பொன்மொழிகளாக ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லையே. கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லவேண்டும். இல்லை என்றால் நோட்டீஸ் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விக்கு விடை தர வேண்டியது அமைச்சர். அதில் சபாநாயகரை இழுக்க வேண்டியது இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** லோக சபையில் சபாநாயகர் மந்திரியாக இருக்கத் தகுதியில்லை என்றே கூட சில சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார். மந்திரிகளை இழுக்கவேண்டியது சபாநாயகர்தான். நான் அவருக்கு அத்தகைய வாய்ப்பைக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருக்கக் கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள சபாநாயகருக்குத் தெரியும். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் துணை நிற்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Let us be serious. எதற்கு வேஸ்ட் ஆப் டைம்? (பல குரல்கள் :—இது வேஸ்ட் ஆப் டைம் இல்லையா?) நான் கேள்வி போட நிற்கிறேன்.

தலைவர் அவர்களே, 3 கோடி என்பது சிறியது அல்ல. 3 கோடி கடன் எழுப்ப அனுமதி கேட்கிறபோதே இன்ன இன்ன திட்டங்களுக்காக 3 கோடி எழுப்ப இருக்கிறோம் என்று முன் கூட்டியே தெரிவித்தார்களா ? இல்லையென்றால் அரசாங்க அதிகாரிகளாவது அதைப்பற்றி விளக்கம் கோரிப் பெற்றிருக்கிறார்களா ? இதை எல்லாம் மூலக்கேள்வி போட்ட உடனேயே இலாக்கா தயார் செய்து தந்திருக்கவேண்டும் ? இல்லை என்றால் இது இலாக்காவின் திறமைக் குறைவா ? அல்லது அமைச்சருடைய திறமைக் குறைவா ? for what works does the corporation seek this loan?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்விகள் தகவல் தெரிந்துகொள்ளக் கேட்கப்படுகின்றனவே தவிர இலாக்கா மீது, அமைச்சர் மீது குற்றஞ்சாட்ட அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. அதற்கு நேரம் வேறு, இடம் வேறு, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது. ஆகவே கேள்வியை மட்டும் கேளுங்கள்.

[1970 ஆகஸ்ட் 27

*திரு. கே. விநாயகம்:* எதற்காக 3 கோடி மாநகராட்சி கடன் தொகை எழுப்பினார்கள்? எதற்காக எழுப்பினார்களோ அதற்காகச் செலவு செய்தார்களா? ஏதாவது மிச்சம் இருக்கிறதா?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:* தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நகராட்சிகளும், மாநகராட்சியும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து கடன் உதவியை வற்புறுத்திப் பெறுமல் கடந்த காலத்தில் விடப்பட்டு வந்திருக்கிறது. ஆயினும் தொடர்ந்து வேறுபல மாநிலங்களில் இவ்வுதவி கோரிப்பெறப் பட்டே வந்திருக்கின்றன. நீர்வழங்கும் திட்டங்கள், வடிகால் திட்டங்கள் ஆகியவற்றுக்கு நம்முடைய மாநகராட்சியும், நகராட்சிகளும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து கடன் உதவி பெறுவது தேவை என்று நாங்கள் வந்தபின் கருதினோம். அவர்களும் நிறைய உதவி தருவதாக ஒப்புக்கொண்டார்கள். சென்ற ஆண்டில் கேட்கவேண்டிய தொகை கேட்காமல் போகக் கூடாது என்பதற்காக அவசரம் அவசரமாகப் பல்வேறு தலைப்புகளில் உதவி பெற மாநகராட்சி விதிகளின் படி—1919-ஆம் ஆண்டு மாநகராட்சி சட்டத்தின் 142-வது பிரிவு 11 உட்பிரிவின்படி அரசாங்கத்திற்கு மனுச் செய்து, அரசும் 27—1—1970-ஆம் தேதியிட்ட உள்ளாட்சித் துறை ஆணை 116-வது பிரிவின்படி ஒப்புக் கொள்ளவும்பட்டது. அந்தத் தொகையும் 1970 பிப்ரவரியில் அளிக்கப்பட்டிருந்தது. இதற்கு 7 சதவீதம் வட்டியும் இருக்கிறது. மாநகராட்சி முக்கிய திட்டங்களை வகுத்து அவற்றுக்கு இந்தத் தொகையைச் செலவிட பரிசீலனையும் செய்துகொண்டிருக்கிறது. தொகை பத்திரமாகவே இருக்கிறது. திட்டங்கள் தயாரித்து அளிக்கப்படும்.

*திரு. மு. ச. சிவசாமி:* தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றம் ஆகியவை குறிப்பிட்ட விதிகளின்படித் தான் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து அரசின் முன் அனுமதியுடன் கடன்தொகை பெறுகின்றன. அப்படிப் பெறுகிற தொகையை விதிகளின்படி குறிப்பிட்ட காரியங்களுக்காகத் தான் செலவிடவேண்டும். இது நடைமுறையிலும் இருக்கிறது. ஆனல் எதிர்க் கட்சிக் கொறடா—மாண்புமிகு உறுப்பினர் . . . .

THIRU K. VINAYAKAM: How is this relevant? It is my privilege to ask any kind of question. You should not allow this, Sir.

THIRU P. G. KARUTHIRUMAN: Let him put his question.

*திரு. மு. ச. சிவசாமி:* கேட்கிற கேள்விக்கு முன்னுரை விளக்கம் தருகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* உங்களுக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தால்? நான் எழுந்து போய்விடவா? சிவசாமி அவர்கள் கேள்வியாகப் போடட்டும்.



1970 ஆகஸ்ட் 27]

*திரு. மு. ச. சிவசாமி:* குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து பெற்ற கடன் தொகையை அந்த ஒரு காரியத்திற்குத்தான் செலவிடவேண்டும் என்கிற விதிமுறைகள் இருப்பது உண்மைதானா? அல்லது சம்பளம் கொடுக்க முடியுமா? அதற்கு விதி இருக்கிறதா என்று கேட்கவிரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:* ஏற்கனவே அதுபற்றிய விளக்கங்களைக் கூறியிருக்கிறேன். விதிகள் பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் பதில் சொல்ல முடியும்.

## 2. அறிவிப்புகள்.

### (அ) பேரவையின் மரபிற்கு மாறான ஒரு சொல்லை நீக்குவது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இந்த அவையில் சொல்லப் படுகிற எந்த வார்த்தை பார்லிமெண்டரி, எது அன்பார்லி மெண்டரி என்பதைத் தீர்மானிப்பது அவைத் தலைவர். திரு. ஹாண்டே அவர்கள் * என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரியில் அந்த வார்த்தைக்கு * என்பதாகப் பொருள் இருக்கிறது. ஆகவே அந்த வார்த்தை அன்பார்லிமெண்டரியானது என்று தீர்மானித்து அதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

## 1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

### *Co-operative Marketing Societies*

*81 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether a few permanent employees of the Sriperumpudur Taluk Co-operative Marketing Society Limited, Nazarethpet were suspended on 31st March 1967; and

(b) if so, whether any subsistence allowance was being paid to them?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* (அ) இச்சங்கத்தின் ஊழியர்களில் 4 பேர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(ஆ) வேலை இரண்டு பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இரண்டுபேர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE: Is it not a fact that because there was mismanagement in the affairs of this organisation, the marketing society, to cover up the mistakes committed by the management, they have taken up 4 per cent of the scapegoats and orders were passed suspending these four persons. Out of the four persons, on representation, two persons have been taken back. Will the

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

Government institute a high-level enquiry and see that these four innocent persons are not unnecessarily victimised because of mismanagement of the management?

THE HON. THIRU SI. PA. ADITANAR: I will have a suitable enquiry made into the affairs of this society.

* 82 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Joint Registrar of Co-operative Societies Madras Region had made a surprise inspection of Arni Branch of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, Vellore in the year 1969; and

(*b*) if so, the result of this inspection ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்தின் ஆரணிக் கிளையை துணைப் பதிவாளர் 11—10—1968 அன்று சோதனை செய்தார்கள்.

(இ) சோதனை செய்கிற நேரத்தில் ரொக்க இருப்பில் குறைவு காணப்பட்டது. கிளையின் மேலாளர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார். மாவட்ட சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

**திரு. கே. விநாயகம் :** இதிலே எவ்வளவு பணம் கையாண்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது ? அதற்குக் கொடுத்த தண்டனை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தோராயமாகச் சொல்கிறேன். கையிருப்பு ரூ. 4,500 இருக்க வேண்டிய இடத்தில் ரூ. 500 மட்டும்தான் காணப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தோராயமாக என்ன ? சரியான கணக்கு இல்லையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கையிருப்பு ரூ. 4,538 84 காசு இருக்க வேண்டிய இடத்தில் ரூ. 581.28 காசுதான் இருந்தது. தற்காலிகமாக மேலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இப்படித் தொடர்ந்து வருஷக்கணக்காக வந்து கொண்டிருக்கிறது. அதன்பேரில் நடவடிக்கை எடுக்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக, துரிதமாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால் பலர் தப்பித்துக்கொள்ள வழி ஏற்பட்டு விடுகிறது, என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா ? இல்லாவிடில் இனிமேல் ஏற்பாடு செய்யப்படும் உத்தேசம் உண்டா ?



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை தாமதமாக செயல்பட்டு வருகிறது என்பது உண்மைதான். கையாடல் என்று யாரோ ஒருவர், சிப்பந்தியோ அல்லது கணக்காயரோ, சொன்னால் சட்டென்று உடனே நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. முதலில் விசாரணை செய்த பிறகு சார்ஜ் செய்ய வேண்டும், பிறகு டிபார்ட்மெண்டிலிருந்து போலீசுக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும். பிறகு போலீசில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப் பல கட்டங்களைத் தாண்ட வேண்டியதால், பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. இந்த டிபார்ட்மெண்டிலேயே நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு தனி போலீஸ் அமைப்பது பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்ட கோவாப்ரேடிவ் சப்ளை மார்க்கெட்டிங் நிறுவனத்தின் ஆரணிக் கிளை மாத்திரமே கையாடல் செய்து இருக்கிறதா ? மற்ற பிராஞ்சுகளை அந்த அதிகாரிகள் தணிக்கை செய்தார்களா ? அப்படியென்றால் அதனுடைய விளக்கம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மற்றக் கிளைகளைப் பற்றிய தவறுகள், நேர்மை நடந்தை பற்றிய குறிப்புகளோ தகவல்களோ என்னிடம் இல்லை. அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் தகுந்த தகவல் அளிக்கத் தயாராயிருக்கிறேன்.

### முன் இணைவு வீடுகள் கட்டுவதற்கான சாதனங்கள்.

* 83 வினா.—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ரெடிமேடு வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய சாதனங்களை கொடுத்து உதவ ரஷியா நாடு தற்சமயம் முன்வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு கே. வி. சுப்பையா :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அதிகாரிகள் பங்களாக்களைச் சொந்தம் ஆக வைத்திருந்தாலும் கூட, அந்த பங்களாக்களில் குடியிருக்க முடியாமல் குறைந்த வாடகைக்கு அக்கமொடேஷன் கன்ட்ரோலில் குடியிருந்து கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரஷ்யா பணம் கொடுத்ததற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

**திரு. டி. மார்டின் :** Therefore . . . .

[1970 ஆகஸ்ட் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ' Therefore வேண்டியதில்லை. முன்னுரை வேண்டியதில்லை. முன்னுரைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? கேள்வி நேரத்திலே குற்றம் சாட்டக் கூடாது.

**திரு. டி. மார்டின் :** குற்றம் சாட்டவில்லை. Sir, I will put the question in English.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆங்கிலத்தில் பேசினால் மட்டும் என்ன?

THIRU T. MARTIN : Sir, on account of want of accommodation in the City of Madras, even though our Government servants own bungalows in Madras, they are now unfortunatelyliving in the bungalows coming under the jurisdiction of the Accommodation Controller. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப்பகுதியை நான் அனுமதிக்கவில்லை மூலக் கேள்வியை யொட்டி துணைக் கேள்வி ஏதாவது போட வேண்டுமென்றால், போடுங்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, taking into consideration the scarcity of houses in the City of Madras will the Government construct houses for allotment. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதோடு நிறுத்துங்கள். அந்தப் பகுதிவரைக்கும் ஆன்சர் பண்ணுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பிரி ஃபேப்ரிகேடட் வீடுகளைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள். இது மூலக் கேள்வியை விட்டு எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். பிரி ஃபேபிரி கேடட் வீடுகள் கட்டுவது சம்பந்தமாக ரஷ்ய அரசாங்கத்தின் துணைகொண்டு பரிந்துரை செய்யப்பட்டு ஹவுசிங் போர்டு சேர்மன் அவர்கள் கூட கையெழுத்திட்டுவிட்டார்கள். ஆனால் அதைக் கட்டினால் லாபம் கிடைக்காது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

It was found that the capital cost of the plant including import duty and handling charges, site, building, etc. woul. come to Rs. 400 lakhs, an annual expenditure including concrete, steel, salaries, transport etc. costing Rs. 125 lakhs, besides the cost of doors, windows etc. which would come to about Rs. 2½ crores more and an amount to the tune of about Rs. 4 crores for the maintenance of the plant. Therefore, it has been deferred for the present.

### புலியூர் சிமெண்ட் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள்.

* 30 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புலியூர் சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக நிரந்தர மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளதா?



1970 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே புலியூர் சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக நிரந்தர மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்திர பாண்டியன் :** தலைவர் அவர்களே, கடந்த மாதம்கூட அந்தத் தொழிலாளத் தோழர்கள் என்னை அணுகி அவர்களுக்கு நிரந்தரமான மருத்துவ வசதி இல்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நிரந்தர மருத்துவ வசதி அளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அந்த நிரந்தர மருத்துவ மனையை ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் ஒருவர் பரிபாலித்து வருகிறார் என்று அந்த அதிகாரிகளே தெரிவித்து வருகிறார்கள். ஒருவேளை அவர்கள் இ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்திரிக்க வேண்டுமென்று விரும்பினால் அரசாங்கம் முயற்சி செய்யும். தற்போது 1,000 பேர்கள் உள்ள இடங்களில் ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவ நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அதை 750 பேர்களாக மாற்றுவதற்காக நாங்கள் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். ஆகவே, படிப்படியாக இந்தத் திட்டத்தை புலியூருக்கும் விஸ்தரிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### விசைத்தறி தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி.

* 84 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கு "குறைந்தபட்ச கூலி" நிர்ணயம் செய்ய குழு ஏதேனும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அக்குழு செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், சோமனூர், பள்ளிப்பாளையம், ஈரோடு, சௌரிபாளையம் இந்த இடங்களிலே ஏராளமான விசைத் தறிகள் இருக்கின்றன. அங்கே வேலை செய்கின்ற தொழிலாளிகள் ரூபாய் 3,3¼ கூலி பெறுகிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சம் கூலி கொடுப்பதற்கு ஒரு குழு அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** குறைந்த பட்சம் கூலி நிர்ணயம் 1948 ஆண்டு சட்டப்படி ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று தீவிரமாக முயற்சி எடுக்கப்பட்டது. எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒத்துழைக்கவில்லை. விசைத்தறித் தொழில் 90 வகையாக நாடு முழுவதிலும் இருக்கிறது. ஆலோசனை குழு பல்வேறு பகுதிகளுக்கும் போய் ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டால் நல்ல முறையிலே, குறைந்த பட்சம் கூலி நிர்ணயம் செய்யலாம் என்று கருதப்படுகிறது. உதாரணமாக திரு. துரை சாமி அவர்கள் சார்ந்திருக்கின்ற தொழிற்சங்கத்திற்கு அங்கு பணிபுரியும் பணியாளர்கள் எவ்வளவு பேர்கள் என்று 3 முறை கடிதம் எழுதியும் இதுவரையில் பதில் இல்லை. இப்படிப்பட்ட இடர் பாடுகள் இருக்கின்றன. எனவே, இந்த விஷயத்தில் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) சில உறுப்பினர்களை கோயம்புத்தூர் மத்திய சிறையில் காவலில் வைக்கப்படும் காலநீடிப்புப் பற்றிய தகவல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 8—8—1970 அன்று கைது செய்யப்பட்டு கோயம்புத்தூர், மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள திரு. என். மருதாசலம் 22—8—1970 முதல் மேற்கொண்டும் 15 நாள் கால அளவுக்குக் காவலில் வைத்திருக்கும் படி ஆணையிடப்பட்டுள்ளதாக கோயம்புத்தூர் கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து தகவல் வந்துள்ளது என்பதை இப் பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்.

### (3) அரசினர் தீர்மானம்

**தனி உறுப்பினர் அலுவலுக்கு பதிலாக அரசினர் அலுவலை எடுத்துக்கொள்வது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே கீழ்க்கண்ட தீமானத்தை நான் முன்மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 23 (1) வது விதியைத் தள்ளிவைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக்கொள்ளவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற் றப்பட்டது.





### 4. அரசினர் மசோதாக்கள்.

**(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா.**

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—**வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை** மசோதா எண் 18/70).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கி றார்கள்.

### 4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—**கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 18/70)**

***மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை * (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மசோதாவைப் பரிசீலனை செய்வதற்காக முன்மொழிகையில் இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை குறுகிய கால அளவுக்கு நீட்டிக்க விழையும் ஒரு சாதாரண மசோதா இதுவெனக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) சட்டம் (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது.) 30—9—1970 அன்று செல்திறனற்றுப் போகும். 1960-ஆம்

---

* 25—8—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

ஆண்டு இயற்றப்பட்ட இச்சட்டத்தின் விதித் துறைகளை ஆய்வு செய்யவும் அதில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் குறித்து ஆலோசனை நல்கவும் அரசு 1969 நவம்பர் திங்களில் பல அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை அமைத்தது. இக்குழுவில், உள்துறை, அரசுச் செயலாளர் தலைவராகவும் மற்றும் சட்டத் துறை, அரசுச் செயலாளர், சென்னை இடவசதி கட்டுப்பாட்டு அதிகாரி, சென்னை, தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) சென்னை அரசு வழக்குரைஞர், 'இடவசதிக் கட்டுப்பாடு' குறித்துப் பொறுப்பு வகிக்கும் உள்துறை, அரசுத் துணைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். கட்டடங்களுக்கு நியாயமான வாடகையை வரையறுக்கும் கொள்கைகளைத் திருத்தியமைப்பது குறித்து ஆய்வுசெய்யவும் 3-வது பிரிவில் உள்ள இடவசதிக் கட்டுப்பாடு குறித்த விதித்துறைகள் உட்பட சட்டம் முழுவதும் செயல்படுவதையும் 1970 செப்டம்பர் திங்களுக்குப் பிறகும் சட்டம் தொடர்ந்து செயலில் இருப்பதற்கான அவசியத்தையும் ஆராய்ந்து தனது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு இக்குழு சிறப்பாகக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இச்சட்டத்திற்குரிய திருத்தங்கள் குறித்து அரசிடம் முன்னரே இருந்து வரும் செயற்குறிப்புகளைப் பரிசீலனை செய்யும்படியும் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. குழு ஏறக்குறைய தனது பணியை முடிக்கும் தறுவாயில் உள்ளது. குழு தனது அறிக்கையை 15—9—1970-ம் நாள் அளவில் அரசுக்குப் பணிந்தனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குழு தனது அறிக்கையைப் பணிந்தனுப்பிய பிறகு, அரசு, அவ்வறிக்கையைப் பரிசீலனை செய்வதோடு, பொருத்தமான சட்டம் ஒன்றை இயற்ற முன்வரும். இதற்குச் சிறிது காலம் ஆகும். ஆனால் 30—9—1970-ஆம் நாளுக்கு முன்பு 1960-ம் ஆண்டுச் சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவுக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதன்மூலம் மேற்படி சட்டத்தின் செல்திறன் கால அளவு நீட்டிக்கப்பட்டாலன்றி மேற்படிச் சட்டம் மேற்குறிப்பிட்ட நாளன்று செல்திறனற்றுப் போகும். குழுவின் அறிக்கை வரப்பெற்று அதை அரசு ஆய்வு செய்யும் வரை இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை ஒரு குறுகிய கால அளவுக்கு நீட்டிப்பது அவசியமெனக் கருதப்பட்டது. இச்சட்டத்தின் செல்திறன், கால அளவை மேலும் 6 திங்களுக்கு மட்டுமே நீட்டிக்க அரசு முடிவுசெய்துள்ளது.

இம்மசோதாவை பேரவை ஏற்றுக்கொள்ளும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "இரண்டாவது பிரிவு மசோதாவுக்குரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

Thiru K. RAMAMOORTHI : Sir, I move the following amendment :

In Clause 2, for the word and figure ' March 1971 ' substitute the word and figure ' October 1970 '.

The amendment was duly seconded.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் நகரங்கள் மிகச் துரிதமாக வேகமாக வளர்ந்துவருகின்ற நிலைமையிலே இது முக்கியத்துவம் வாய்ந்த மசோதா ஆகும். இது 1960-ஆம் ஆண்டிலே இயற்றப்பட்டது என்றாலும் இந்தச் சட்டத்திற்குக் கால வரம்பு 1970-ஆம் ஆண்டுவரை என்று 10 ஆண்டுகளுக்கு வைத்து இருக்கிறார்கள். இந்தப் பத்து ஆண்டுகளாக நகரத்தில் ஏற்பட்டு இருக்கிற மாறுதல்கள், நியாய வாடகை, இட வசதி அன்றைய தினம் இருந்த நிலைமைகளுக்கும் புதிய நிலைமைகளுக்கும் இடையே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை இதைப் பரிசீலனை செய்வதற்காக என்று அரசே ஒரு குழுவினை அமைத்திருப்பதிலிருந்தே நன்றாக அறிந்துகொள்ளலாம். என்னைப் பொறுத்தவரையில்—6 மாதத்திற்கு நீடிப்பு என்பதைக் குறுகிய கால அளவு என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—இந்தக் குறுகிய கால நீட்டிப்புக்காக அரசு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது. ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டம் 1970-ஆம் ஆண்டிலே காலாவதியாகிறது என்று முன்கூட்டியே தெரிந்திருக்க வேண்டும். இதை நீடிக்காமல் உடனடியாக அந்தச் சட்டத்தையே திருத்தி, திருத்தச் சட்டத்தையும் கொண்டுவந்திருக்கமுடியும். 1969-ஆம் ஆண்டு நவம்பரில்தான் எப்படியெல்லாம் மாற்ற வேண்டும், திருத்தவேண்டும் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவினை அமைத்திருக்கிறார்கள். 1967-ஆம் ஆண்டிலே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த மசோதா 1970-ஆம் ஆண்டு காலாவதியாகப் போகிறது என்பது இந்த அரசுக்கு முன்கூட்டியே தெரியும். இன்றைய தினம் பொறுப்பிலுள்ள அமைச்சர் அவர்களுக்கு அது தெரியாமலிருந்தாலும்கூட சம்பந்தப்பட்ட துறையினர் இதுபற்றி அமைச்சரின் கவனத்திற்கு உரிய காலத்தில் கொண்டுவந்திருக்கவேண்டும். அப்படிச் செய்து சட்டத்திலே மாற்றங்களைக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் ரெட் டேப்பிஸம் என்று சொல்கிறோமே அந்த முறையிலே பல நேரங்களில் ஊர்களுக்குச் சுற்றுப்பயணம் செய்கின்ற காரணத்தினாலோ என்னவோ இந்த மசோதாவினை நீட்டிப்

பதற்காக ஒரு குறுகிய கால அளவிற்கு நீட்டிப்புக் கேட்டு இந்த சட்டமன்றத்தின் அனுமதியை அதற்காகக் கேட்கவேண்டிய அவசியத்திற்கு உட்பட்டிருக்கிறது.

முன்கூட்டியே இந்தக் குழுவை அமைத்திருக்கவேண்டும். 1970-ல் காலாவதியாகப் போகிறது இந்தச் சட்டம் என்று தெரிந்து முன்கூட்டியே குழுவினை அமைத்து நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தால் இப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டிருக்காது. எந்தத் துறையிலும் நேரமில்லை, பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட கட்டத்தில் கெஞ்சிக் கெஞ்சி அவகாசம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உரிய காலத்திலே இதனைக் கவனித்திருக்க வேண்டும். அதைவிட்டு நேரமில்லை கவனம் செலுத்துவதற்கு என்று சொல்வதன் காரணமாக நகர மக்களின் வசதிகளைப் பொறுத்தவரையில் நியாய வாடகை, இட வசதி போன்றவற்றை திராவிட முன்னேற்றக் கழக அரசு கவனிக்கவில்லை போதுமான அளவுக்கு அதிலே முக்கியத்துவம் தரவில்லை, கவனம் செலுத்தத் தவறியிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு ஆக இது அமைந்திருக்கிறது.

முக்கியமான மசோதாவிற்கு அவகாசம் கேட்பதற்கு அவசியமே இல்லை. இந்த மசோதாவை அக்டோபருக்குள் முடிப்பதற்கு முயற்சியெடுத்துக் கொண்டால்தான் நகரத்தில் வாழக்கூடிய மக்களுக்கு இந்தச் சட்டத்தின் பலனைப் பெறக் கூடிய மக்களுக்கு தி.மு.க. அரசு நன்மை செய்ததாக இருக்கும். எனவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவினால் அனுகூலம் பெறக்கூடியவர்கள் உடனடியாக பலனைப் பெறக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டத்திற்குக் கால வரம்பை நீட்டித்துக்கொண்டே போகாமல் ஒரு மாதத்திற்குள் முடித்துவிடும்படி கேட்டுக்கொண்டு அதற்கான என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. வினாயகம்: சார், மெட்ராஸ் பில்டிங்ஸ் (லீஸ் அன்ட் ரெண்ட் கன்ட்ரோல்) ஆக்ட் வந்ததற்குக் காரணம் ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பே கட்டடம் போதுமான அளவிற்கு வசதியாக வாழ்வதற்குச் சென்னையிலே இல்லாததுதான். அப்பொழுது கட்டடக்காரர்களுக்கு குடக்கூலி விஷயத்திலே தொல்லைகள் ஏற்பட்டன, சரியாகக் கொடுப்பதில்லை என்றால் அவர்களை வெளியேற்றக்கூடிய நிலைமை இருந்தது. குடக்கூலி கொடுப்பவர்களின் நலனைப் பாதுகாக்க புரட்டக்ஷன் ஆப் டெனன்ட்ஸ் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவந்தார்கள். பத்தாண்டுகளுக்கு முன்னால் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. இப்பொழுது அப்படிப்பட்ட நெருக்கடி சென்னையில் இல்லை. பலவிதமான முயற்சிகள் கையாளப்பட்டு கட்டிடங்கள் புதிதாக எல்லாத் துறைகளிலும் வளர்ந்து வருகின்றன. ஒருவேளை



ஜனங்கள் வெளியூர்களிலேயிருந்து இங்கே வாழவேண்டுமென்று வருபவர்களுக்குக் கட்டடங்களை ஏற்படுத்த முடியவில்லை என்றாலும் கூட, முன்பிருந்த நிலைமை மாறியிருக்கிறது. ஒரு வேளை நாம் ஏதோ குடக்கூலிக்காரர்களுக்குச் சாதகமாக இருக்கிற சர்க்கார் என்று அவர்களும் நினைத்தார்கள், இப்பொழுது இருக்கிறவர்களும் நினைக்கிறார்கள். இந்தச் சொந்தக்காரர்கள் எவ்வளவு தொல்லைகள் படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். சொந்த அனுபவம் இருக்கிறது. சென்னையிலேயுள்ள ஹவுஸ் ஓனர்ஸ் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள், கட்டட சொந்தக்காரர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் சொத்து வைத்திருப்பவர்களைக் கேட்டால் தெரியும். வேண்டுமென்று உள்ளே வந்துவிடுவது, ஒரு குடக்கூலியையும் ஏற்றுக் கொள்வது. பிறகு அதிகமாக தருகிறேன் என்று பொய் புகார் எழுதுவது' என்னிடம் 10 ரூபாய்க்குதான் ரசீது தருகிறார்கள், ஆனால் நான் 50 ரூபாய் தருகிறேன் என்று சொல்வது. இதனால் தகராறு உண்டாகிறது. 6 மாதங்கள் வரையிலே கொடுக்கவில்லை என்றால் வீட்டுச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கேஸ் தாக்கல் செய்தபிறகு இரண்டாண்டுகள் வரை ஆகிறது அதை எடுத்து விசாரிப்பதற்கு. அந்தச் சமயத்தில் இரண்டு மாதக் குடக்கூலி தருகிறேன் என்று சொல்வார்கள். அப்பொழுது இரண்டாண்டு குடக்கூலி பாக்கியிருக்கும். கட்ட முடியவில்லை என்றால், ஜட்ஜ்கள் கொஞ்சம் தள்ளிவிடலாம் என்று தள்ளிப் போடுவது. நாம் குடக்கூலிக்காரர்களுக்குத்தான் பாதுகாப்புத் தர இருக்கிறோம் என்று நினைத்துக் கொள்வதால், வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இப்பொழுது இல்லை. அந்த நிலைமை அப்பொழுதும் இருந்தது. ஆனால் இப்பொழுது இருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். இதையெல்லாம் யோசித்தால் நாம் எல்லோருடைய நலன்களையும் பாதுகாக்க முடியும்.

அரசாங்கம் செய்வது என்றால் ஏதோ குடக்கூலிக்காரர்களுக்குதான் அரசாங்கம் நடத்துவது போலவும், வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கம் இல்லை போலவும் இருக்கக்கூடாது. எத்தனை விதமான வீடுகட்டும் புதிய முறைகள் வந்திருக்கின்றன? கார்ப்பரேஷன் ஒருபுறம் கட்டுகிறது, பிரைவேட் இன்டஸ்ட்ரீஸ் அதாவது தனியாக இருப்பவர்கள் எத்தனையோ வீடுகளை தினந்தோறும் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அதைவிட, இந்த ஹவுஸிங் போர்டு மூலம் எங்கு பார்த்தாலும் இப்பொழுது வீடுகள். எனவே, முன்பிருந்த நிலைமை மாறியிருக்கிறது. அன்றிருந்த நிலைமையே நீடித்திருந்தால் இந்தச் சட்டம், இப்பொழுது இல்லை. இன்றும் 100 ஆண்டுகளுக்குக்கூட இருக்க வேண்டும், வேறு வழியில்லை. ஆனால் இப்பொழுது அப்படி இல்லை, இப்பொழுது வீடுகள் தாராளமாகக் கிடைக்கின்றன. குடக்கூலிக்கு முன்பு வந்துவிட்டார்கள், அவர்கள் உள்ளே வந்து

[திரு. கே. விநாயகம்] [1970 ஆகஸ்ட் 27

"ஃபேர் ரெண்ட் ஃபிக்சேஷன் ஆக்ட்", அதற்கு அவர்களும் மனுப் போடுகிறார்கள். 50 ரூபாய் என்றாலும் சரி என்று வந்துவிட்டு, பிறகு அக்காமடேஷன் கண்ட்ரோலருக்கு மனுப்போட்டு, எங்களிடம் அதிகமாகக் குடக் கூலி வாங்குகிறார்கள் என்று போடுவது. அவ்வாறு மனுப்போட்டால் அதைக் கொடுக்காமலே யிருந்து, அதற்கு இரண்டு ஆண்டுகள் பிடித்து, பிறகு அதைப் பரிசீலித்து "ஃபேர் ரெண்ட் ஃபிக்சேஷன்" செய்கிறார்கள்.

நாம் இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஏழைகளுக்குப் பாடுபடுகிறோம் என்று சொல்கிறோம். ஆனால் அதன் விளைவாக பாதிக்கப்படுகிறவர்களைப்பற்றி நாம் கவலையேபடுவதில்லை. இதையேதான் முன்பிருந்த அரசாங்கத்திடமும் எடுத்துச் சொன்னோம். அவர்களும் இதை ஆராய்ந்து கொஞ்சம் யோசனை செய்ய வேண்டும், எனவே இன்னும் ஒரு ஆண்டு தள்ளி வைக்கலாம் என்றிருந்தார்கள். எனவே, அதற்காக அமைச்சரவைக்கு என்னுடைய யோசனை ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது இந்தச் சட்டம் நீடிப்பதற்கு ஆறுமாத காலம் கூட கொடுக்கலாம், இதில் கஞ்சத்தனம் இல்லை. ஆனால் இதை அப்பொழுதும் திரும்பக் கொண்டு வரக்கூடாது. அமெண்மெண்ட் கொண்டுவருவது என்ன பிரமாதம். அரசாங்கத்தில் இருக்கும் செக்கரட்டரிகள், நீடிக்க வேண்டுமென்பதற்கு ஆர்குமென்ட் தயாரிக்க முடியும்.

In spite of the growth in house construction, the housing problem has not been solved. என்று எழுதிக் கொடுத்தால் போயிற்று. நாம் என்ன செய்யப் போகிறோம்? வீட்டுச் சொந்தக்காரர்களுடைய கஷ்டங்கள் எல்லாம் ரெண்ட் கண்ட்ரோல் கோர்ட்டுக்குப் போனவர்களுக்குத் தெரியும். நம்முடைய பக்கத்திலிருக்கின்ற அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும். வக்கீலாக இருப்பதனால்.

I am only explaining the problem. I am on'y enlightening you, you are in darkness. That is my trouble நான் எடுத்துச் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது? போய்ப் பாருங்கள் ரெண்ட் கண்ட்ரோல் முதலில் 2 கோர்ட் இருந்தது. இப்பொழுது 8 கோர்ட்டுகள் வைத்திருக்கிறோம். அதற்குக் கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் வைத்திருந்து இப்பொழுது சிட்டி சிவில் கோர்ட்டிற்கு மாற்றி இருக்கிறது. ஜட்ஜ்மெண்ட் வருவதற்கு எவ்வளவு நாட்களாகின்றன? கேஸ் நடத்துவது அரை மணி நேரத்திலே நடத்தி விடலாம். ஆனாலும் ஃபைல் வந்து, சாட்சிகளை விசாரிப்பது எல்லாம் ஆகி ஜட்ஜ்மெண்ட் கொடுப்பதற்கு 2 ஆண்டுகள் ஆகின்றன. அந்த அளவிற்குச் சொந்தக்காரர்கள் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு குடிக்கூலிக்காரர்கள் ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்த அரசாங்கம் வாடகைக்காரர்களுக்குத்தான் இருக்கிறதா? சொந்தக்காரர்களுக்கு இல்லையா? பிறகு அதிலே ரெண்ட் கண்ட்ரோல் கோர்ட்டில்-

That is the first court. You must exhaust the procedure. Then the Second Court, City Civil Court. Afterwards there is the revision and third court, the High Court.



1970 ஆகஸ்ட் 27] [திரு. கே. விநாயகம்]

என்று அங்கேயும், மூன்றாவது ஹைகோர்ட்டில் ரிவிஷன் போடுவது. எந்த விளைவும் திட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் வரை ஏற்படுவதில்லை. இந்த ஆறு ஆண்டுகளில் முதலாளியும் ரிப்பேர் செய்யவில்லை. சுண்ணாம்பு விழுகிறது. உள்ளேயிருப்பவர்களும் சொந்தக்காரர்கள் இல்லை.

(He lets the building to dilapidate.)

அதனால் வீடு எவ்வளவு கீழே விழுந்தாலும் போகமாட்டேன் என்றால், கார்ப்பொரேஷனைப் பிடித்து (unfit for human habitation) என்று சர்டிபிகேட் வாங்கி வெளியே தள்ள வேண்டியிருக்கும்.

I know these things personally myself, people having some knowledge of the law and who have gone to these Court know the difficulties.)

ஆகவே, இவைகளையெல்லாம் நாம் பார்க்க வேண்டும், முறையான கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) வக்கீலுக்குப் பிழைப்பு நடக்கிறது. அதுதான் வேண்டாமென்று சொல்லுகிறேன். இப்பொழுது இதை வைத்திருப்பதால் எங்களைப் போன்றிருப்பவர்களுக்கு வருவாய் வருகிறது. அதுவல்ல நம் நோக்கம். இன்று இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் அல்லது இதை எப்படித் தீர்ப்பது? (Russian help for pre-fabri-(cated houses.) அவர்களே முன்வந்து சொன்னாலும் இவ்வளவு செலவாகிறது அவ்வளவு செலவாகிறது என்று, ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம், என்று கேள்விநேரத்திலே பேசினோம் அல்லவா? ஆகவே, வீடு கட்டாமலே இருக்கிறது. நீங்களும் கட்ட மாட்டீர்கள். ஹவுசிங் போர்ட் கட்டினாலும் அது அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது எங்களைமாதிரி சிபாரிசு எடுத்துக்கொண்டு போகின்றவர்களுக்குத்தான் இடம் என்றால் மற்றவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்? எனவே, இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இதற்கு ஒரு கமிட்டி அல்லது expert Committee என்று போடவேண்டும். பெரும்பாலும் நான் பார்த்திருக்கிறேன், கமிட்டியில் அசெம்பிளி மெம்பர்களைப் போட்டுக் கொள்ளுவதை. அப்படிப்போட்டு அவர்களுடைய கண்ணோட்டத்துடன் முடிவுக்கு வருவது கூடாது. (practising lawyers, people having knowledge of law in these courts) அப்பேர்பட்டவர்கள், (industrialists, economises and commercial organisations என்று இந்தத் துறையிலே அனுபவப்பட்டவர்களைக் கமிட்டியில் போட்டு திரும்பவும் இது இருக்க வேண்டுமா, அல்லது எடுத்துவிடலாமா என்ற முடிவிற்கு வர வேண்டும். அதை விட்டுவிட்டு, தள்ளிப் போட்டுக் கொண்டு வருவதை எந்த அரசாங்கமும் செய்ய முடியும். (I don't mind if life is extended by one more year) 10 ஆண்டுகளுக்கு முன்பே போட்டோம் இந்தச் சட்டத்தை. அதுவல்லாமல் (You must come to a decision) இதோடு

விட்டால் போயிற்று. (It is easy to pass any amending law with 'ayes' in majority land 'noes' in minority. Of course I agree with the present extension for six months.) இதிலே மனிதாபமான உணர்ச்சியோடு இதை அணுக வேண்டும். (You must come to a finality.) இதைச் செய்தால் இதற்குத் தெளிவு ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவரவர்களே, இந்தச் சட்டம் தேவையா இல்லையா என்பது அல்ல இப்பொழுதுள்ள பிரச்னை. இந்தச் சட்டம் தேவையா இல்லையா என்பதைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு மாண்புமிகு காங்கிரஸ் கட்சி கொறடா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று அதில் பெரிய எக்ஸ்பர்ட்ஸ் எல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் பரிந்துரை 1970 செப்டம்பர் 15 வாக்கிலே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1970 செப்டம்பர் 15-இலே கிடைக்கும் காரணத்தால் அசெம்பளி அன்றையதினம் கூடாமல் போகக் கூடும். ஆகவே அதற்குள் அசெம்பிளிக்குத் கொண்டுவரமுடியுமோ முடியாதோ என்பதால், இந்தச் சட்டத்தினுடைய ஆயுளை நீட்டித்தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1970 செப்டம்பர் 15-க்குப் பிறகு அக்டோபரில் கிடைத்தால், அக்டோபரில் அசெம்பிளி இருக்காது. ஆகவே, அடுத்த முறை அசெம்பிளி கூடும்போது இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் பேசுவதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இந்த மசோதா தேவையா இல்லையா என்பதைப் பற்றி நீண்ட நேரம் பரிசீலனை செய்ய அப்பொழுது வாய்ப்பு இருக்கும் காரணத்தாலும், 1970 செப்டம்பர் 30-ல் முடிகிற இந்தச் சட்டத்தை ஆறு மாத காலத்திற்கு நீட்டித் தரவேண்டுமென்றுதான் கேட்கிறோமே தவிர, சட்டத்தில் உள்ள குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட வேண்டாமென்று கூறவில்லை. இந்தச் சட்டம் பத்தாண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. இதைப் பற்றிக் குழு பரிசீலித்து திருத்திய சட்டம் வரும்போது விரிவாக குறைபாடுகள் மற்றவற்றைப் போக்குவது பற்றிப் பேச வாய்ப்பு இருப்பதால் இந்தச் சட்டத்தை ஆறு மாத காலத்திற்கு நீட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 18/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. தோ. மு. நல்லசாமி:** மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதும், 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீதும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேச முற்படும்போது சென்ற 1970-71-ம் ஆண்டு மாநில நிதிநிலை அறிக்கையைப் பற்றி இந்த மன்றம் விவாதித்தபோது குறிப்பாக விவசாயத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் குறிப்பிட்ட போது சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவித்தேன். நம்முடைய மாநிலத்தின் விவசாயம் பெரும்பாலும் நேரடியாகப் பாசனம் பெறுவதோடு கூட, அதற்கு அதிக அளவுக்கு அல்லது குறையாத அளவுக்கு விசையேற்றங்கள் மூலமாகவும் பாசனம் பெற்றுவருகிறது. அப்படி விசையேற்றங்கள் மூலமாகப் பாசனம் பெறுவதில் மின்சாரம் பெரிய அளவுக்குப் பயன்படுத்துவதோடு, டீசல் ஆயில், க்ரூட் ஆயில் போன்ற எண்ணெய்களும் 'ஃப்யூவல்' ஆகப் பயன்படுத்தப்படுகின்றன. அந்த எண்ணெய்கள் தொழிற்சாலைகளுக்கும், பேருந்துகளுக்குப் பயன்படுத்துவதற்கு என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறதோ அதே விலைக்குத்தான் விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கும் கொடுக்கப்படுகிறது. அதிலே கன்செஷன் இருக்க வேண்டும். குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அந்த எண்ணெய் விநியோகிக்கப்படவேண்டும். அதே சமயத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்பதைப் பற்றியும் என்னுடைய உரையிலே குறிப்பிட்டேன். அரசு அதை ஏற்றுக் கொள்ளாததோடு கூட மின்சாரக் கட்டணத்தை 9 பைசாவிலிருந்து உயர்த்த முன் வந்தது. அப்படி உயர்த்தியதன் கஷ்டத்தை விவசாயிகள் உணர்ந்த காரணத்தாலே தமிழகத்தில் குறிப்பாக கோவை மாவட்டத்தில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில் விவசாயிகளுடைய நிலையை உணர்ந்துதான் சட்ட மன்றத்தில் நான் குறிப்பிட்டேன். என்னுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாததோடு கூட, மின்சாரக் கட்டணத்தை 9 பைசாவிலிருந்து அதிகமாக உயர்த்த முன் வந்ததன் காரணமாக கோவை மாவட்டத்திலே பெரிய கிளர்ச்சி ஏற்பட்டு அதனால் மூவர் மடிய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

[திரு. தோ. மு. நல்லசாமி] [1970 ஆகஸ்ட் 27

மின்சார வாரியத்தினுடைய கணக்கு வழக்குகளைப் பார்க்கும் போது இம்மாதிரி குறைந்த விலையில் மின்சாரம் கொடுப்பதன் காரணமாக ஆண்டுதோறும் 9 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதைச் சரிக்கட்ட வேறு மார்க்கங்களைத் தேட வேண்டிய நிர்பந்தமான சூழ்நிலையில் இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஏற்பட்டுக்கொண்டிருக்கிற நஷ்டத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய சலுகையை நிறுத்தித்தான் ஈடுகட்ட வேண்டுமா அல்லது வேறு வழிவகைகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி மின்சார வாரியமும், அதை ஏற்று நடத்தக்கூடிய அரசாங்கமும் யோசிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்று இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையைப் பற்றி பேசிய நண்பர் சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். அட்மினிஸ்ட்ரேட்டிங் இன்-எபிஷியன்சி, டிரான்ஸ்மிஷன் லாஸஸ், தெப்ட் ( Theft ) ஆஃப் பவர் என்ற மூன்று முக்கியமான அம்சத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அட்மினிஸ்ட்ரேடிவ் இன்-எபிஷியன்சியைச் சரிக்கட்ட அதைச் சீரமைப்பதன் மூலமாகவும், நெடுந்தூரத்திற்கு மின்விசையை எடுத்துச் செல்வதினால் ஏற்படும் மின்சார நஷ்டத்தைத் தவிர்ப்பதன் மூலமும், மின்சாரம் திருடு போவதைத் தடுப்பதன் மூலமும் நஷ்டத்தை ஈடுகட்ட முடியும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதை நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை அறிமுகப்படுத்திய தொழிலமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நாடு பூராவிலும் யூனிஃபார்ம் டாரிஃப் இருக்க வேண்டுமென்று பிளானிங் கமிஷனிலும், தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலும் வற்புறுத்தி வருவதாகக் கூறினார்கள். இது எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கும்? விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கும்போது இம்மாதிரி நாடு பூராவிலும் ஒரே டாரிஃப் ஆகப் பண்ணுவதால் கட்டணத்தை குறைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து இந்தக் கொள்கையை இந்த அரசு வற்புறுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1971-ம் ஆண்டு டிசம்பருக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்ற பேராவல் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லும்போது கடந்த காலத்தில் இந்த அரசு அமைவதற்கு முன்னால் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும், கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் பார்க்கும்போது கடந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 1961-ம் ஆண்டில் இருந்து 1966-ம் ஆண்டு வரை அடைந்திருக்கக்கூடிய



1970 ஆகஸ்ட் 27] [திரு. தோ. மு. நல்லசாமி]

உற்பத்தித் திறன் சுமார் 550 மெகாவாட்டில் இருந்து 1,475 மெகா வாட் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 950 மெகா வாட் அளவுக்கு விரிவு அடைந்திருக்கிறது. ஆனால் இந்த மூன்றரை ஆண்டுகளில் 1,475 மெகா வாட்டில் இருந்து 1,770 மெகா வாட் அளவுக்குத்தான் உற்பத்தித் திறன் உயர்ந்திருக்கிறது. அதாவது சுமார் 250 மெகா வாட் அளவுக்குத்தான் அதிகரித்திருக்கிறது. இந்த வளர்ச்சி போதிய அளவு இல்லையென்று அறுதியிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த அளவு உற்பத்தி செய்வதற்கே தேசிய மயமாக்கப்பட்ட வங்கி[illegible]ந்தும் மற்றும் பல வகைகளிலும் ஏராளமான [illegible] செல[illegible]ப்பட்டிருக்கிறது. அனல் மின்சாரம், பு[illegible] மின்சாரம், [illegible]வேலியில் உற்பத்தியாகக் கூடிய மின்சா[illegible] ஆகியவற்றைக் க[illegible]டுத்துப் பார்க்கும்போது அடைந்த [illegible]ன்னேற்றம் பாராட்டக்[illegible]ய நிலையில் இல்லை என்பதைத் தெரி[illegible]கச் சொல்ல விரும்புகி[illegible]ன்.

அடுத்தபடியாக, நம் மாநி[illegible]த்திலுள்ள வாரியத்தின் [illegible]ர்வாகத்திற்கு உட்படாத தனியார் து[illegible]யின் வழங்கும் நி[illegible]னங்களைப் பற்றி சில கருத்துக்களை நான் வ[illegible]த்துடன் தெ[illegible]க் கொள்ள விரும்புகிறேன். வெள்ளைக்காரன் கா[illegible]த்தில் ந[illegible]ட்டு விவசாயிகள் என்ன என்ன அவதிகள் பட்டார்களோ அவைகளை தனியார் நிறுவனங்களின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள மின்சாரம் பயன்படுத்துபவர்கள் இன்றையதினம் அனுபவிக்கிறார்கள். 72-ம் ஆண்டுக்குள்ளாக எல்லாயிடங்களுக்கும் மின்சாரம் அளிக்கப்படும் என்று சொல்கிறார்கள். குறிப்பாக விவசாயிகளுக்கு விசையேற்றங்களுக்கு அதிகப்படியாக மின்சார வசதி செய்து கொடுக்கிற திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொல்கிறார்கள். இன்று பம்ப் செட்டுக்கு மின்சார கணக்ஷன் வேண்டுமென்றால் மினிமம் காரண்டி ஒரு ஹார்ஸ் பவருக்கு நூறு ரூபாய் கட்டவேண்டும் என்று கேட்கிறார்கள். அதோடு கடன்கள் கொடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறார்கள். 12 சதவிகிதம் வட்டிக்குபணம் பெற்று 6 சதவிகிதம் வட்டிக்கு தனியார் நிறுவனத்திற்கு கொடுத்து மின்சாரம் பெறவேண்டிய நிலை தமிழ்நாட்டிலுள்ள சில பிரேதசங்களில் இருப்பது வருந்தத்தக்கது. கோவையில் சமீபத்தில் ஒரு பெரிய போராட்டம் நடந்தது. ஒன்பது பைசா என்றிருந்ததைக் கூட்டியதற்காக போராட்டம் நடைபெற்றது. ஆனால் இன்று தனியார் நிறுவனத்தின் கீழ் உள்ள இடங்களில் விவசாயிகளுக்குப் பயன்படும் மின்சாரத்தின் விலை 12 பைசா. ஒன்பது பைசா என்றிருந்ததை அதிகப்படுத்தியதற்காக ஒரு பெரிய போராட்டம் அல்லது மூவர் இறந்தது என்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் இன்று தனியார் நிறுவனங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு 12 பைசாக்கள் வசூல் செய்கின்றார்கள். ஆக இந்தத் தனியார் நிறுவனங்களை மின்சார வாரியத்தின் கீழ் கொண்டு வருவதில் என்ன சிரமம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். அதைப் பற்றி அரசு பரிபூர்ணமாகக் கணித்ததா என்று கேட்க விரும்பு

கிறேன். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். "டாக் இன் தி மேஞ்சர் பாலிஸி என்று. அதுவும் உண்ணாது, மாட்டையும் தின்ன விடாது என்று. அப்படிப்பட்டதொரு கொள்கையைத்தான் இந்த தனியார் மின்சார நிறுவனங்கள் கடைப்பிடித்து வருகின்றனர். ஆகவே இதை வாரியத்தின்கீழ் கொண்டு வர அரசாங்கம் பரிபூர்ண முயற்சிகள் எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தின் ஆவேசத்திட்டம். 71-க்குள் எல்லாப் பகுதிகளுக்கும் மின்சாரம் கொடுத்தாகவேண்டும் என்பது. இன்று அரசுப் பொறுப்பேற்றிருக்கும் கட்சி 72 தேர்தலில் மக்களை அணுகவேண்டும். ஆகவே அதற்குள் முடித்திட வேண்டுமென்ற ஆவேசம். இன்று மின்சார டிஸ்ட்ரிப்யூஷன் டிரான்ஸ்பார்மர் கப்பாஸிட்டியை கூட பார்க்காமல் பல கனெக்ஷன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக டெயில் என்டில் மோட்டார்கள் ஓட முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. அல்லது காயில்கள் வெந்து போகக் கூடிய நிலை ஏற்படுகிறது. அல்லது இறுதியில் இருக்கும் வீடுகளில் விளக்குகள் எரியமுடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இதை நிரூபிக்கவேண்டுமென்றால், என் வீட்டிலேயே சில தினங்களுக்கு பல விளக்குகள் எரியாத நிலை இருந்து இருக்கிறது. தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. 99ம் வேண்டாம், 101ம் வேண்டாம், 100தான் இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். ஆகவே கனெக்ஷன்ஸ் இருக்கிற கப்பாஸிட்டியை அனுசரித்து கொடுக்கவேண்டும். இதை நான் சொல்லும்போது காங்கிரஸ் ஆர்கனைசேஷனை சேர்ந்த ஒரு உறுப்பினர் மின்சாரத்தை வேகமாக பரப்ப வேண்டாம் என்று சொல்கிறார் என்று அரசாங்கமோ அல்லது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களோ கருதுவார்களானால் அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வேகமாகச் செய்யவேண்டும், ஆனால் எந்த அளவிற்கு செய்யவேண்டும் என்பதை நிர்ணயிக்கவேண்டும். நேற்றைய தினம் முதல் அமைச்சர் அவர்கள் ஆப்பரேஷன் நடக்கும்பொழுது மின்சாரம் நின்று விட்டது என்றால் அந்த நோயாளியின் கதி என்னாவது என்று கேட்டார்கள். அதேபோல் வோல்டேஜ் ட்ராப்பினால் மோட்டார் ஓடவில்லை என்றால் அதனால் ஏற்படக்கூடிய நஷ்டம் பற்றி வாரியம் அல்லது அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டும். அடுத்தபடியாக, ஸெக்யூரிட்டி டெப்பாஸிட் வசூல் செய்கிறார்கள். வாரியம் நிறைய வேலைகள் செய்ய வேண்டும். அதற்கு நிதி வேண்டும், —அதை மறுக்கவில்லை— ஆனால் செக்யூரிட்டி டெப்பாஸிட் என்று சராசரி மூன்று மாதங்களுக்கு ஆகும் மின்சாரக் கட்டணத்தை செலுத்த வேண்டுமென்றும் என்ற நிலை இருக்கிறது. தமிழ்நாட்டில் இயற்கை பொய்த்து விட்டது. காலா காலத்தில் மழை பெய்வதில்லை. அதனால் நீர்நிலைகள் எல்லாம் பெரும்பாலும் வரண்டுவிட்டன. ஆயிரக்கணக்கான மோட்டார்கள் இன்று தண்ணீர் இல்லாத காரணத்தினால் சும்மா கிடக்கின்றன. கேணிகளில் ஃபிட் அப் செய்தும் அப்படியே கிடக்கின்றன. நல்ல மழை காலத்தில்





பெய்து அதிகப்படியான தண்ணீர் வரக்கூடிய காலத்தில், அதிகப்படியாகத் தண்ணீர் இறைக்கக்கூடிய காலத்தில். அதிகப்படியாக மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய மூன்று மாத காலத்தில் என்ன கட்டணம் ஆகின்றதோ அந்த மூன்று மாதக் கட்டணத்தை செக்யூரிட்டி டெப்பாஸிட்டாக வசூல் செய்கிறார்கள். அப்படிச் செய்யும் அதே நேரத்தில் வறண்டு கிடக்கும், ஆண்டுக்கு ஒன்பது மாதக் காலங்களில் ஏற்படும் நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி? ஆகவே வறட்சியாக இருக்கக் கூடிய காலத்தில் உள்ள மூன்று மாதக் கட்டணத்தைச் சராசரியாக எடுத்து அந்தக் கட்டணத்தை செக்யூரிட்டி டெப்பாஸிட்டாக வசூல் செய்யவேண்டும். செழிப்பாக இருக்கும் மூன்று மாத கால மின்சாரக் கட்டணத்தைச் சராசரிப்படுத்தி செக்யூரிட்டி டெப்பாஸிட்டாக வசூல் செய்வது வருந்தத்தக்கது.

அடுத்தபடியாக, செக்யூரிட்டி டெப்பாஸிட் வசூலிக்கும் முறையில் விவசாயிகளுக்குத் திடீரென்று ஒரு நாள் நோட்டீஸ் போகும். ஒரு செக்ஷனைக் குறிப்பிட்டு இந்த செக்ஷன் அடிப்படையில் இந்தத் தொகையைச் செலுத்தாவிட்டால் உடனே சர்வீஸ் டிஸ்கனெக்ட் செய்யப்படும் என்று. அதை வாங்கி வைத்துக் கொண்டு விவசாயி என்ன செய்ய முடியும்? அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் சென்று கணக்கை எடுத்துப்பார்க்க முடியுமா? முடியாது. எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையே சொல்கிறேன். நீங்கள் உங்கள் கணக்கில் இவ்வளவு தொகை செலுத்த வேண்டியிருக்கிறது என்று நோட்டீஸ் வந்தது. நான் பழைய பேப்பர்களை எல்லாம் எடுத்துப் பார்க்கும்போது நான் செக்யூரிட்டி டெப்பாஸிட் கட்டியிருந்தும்கூட மேற்கொண்டு இவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்று அறிக்கை வந்தது. உடனே நான் அலுவலகத்திற்குச் சென்று ஸ்டாம்ப் ரெஸீதைக் காண்பித்த போது ஏதோ தவறுதலாக நிகழ்ந்துவிட்டது என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார்கள். ஆனால் விஷயம் புரியாத விவசாயி, அதிகாரிகளைச் சென்று பார்க்க முடியாத விவசாயி இப்படி ஒரு நோட்டீஸ் சென்றால் அது அவருக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்கும். ஆகவே மின்சார வாரியத்தினர் மேலெழுந்தவாரியாகக் காரியங்களைச் செய்யாமல் விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தினால் நமக்கு ஏற்படக் கூடிய லாபங்களையும், அதேசமயத்தில் இருக்கக்கூடிய ஒரு பேரபாயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்பு கவலையேற்றங்கள்மூலம், பறிமூலம் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தோம். இப்போது தண்ணீர் இறைப்பதற்காக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறோம். இப்போது டீப் வெல்ஸ், போர் வெல்ஸ் அல்லது வெட்டுக் கிணறுகள் இருக்கின்றன. இன்று மின்சாரத்தின் உதவியால் தண்ணீர் இறைக்கக் கூடிய முறையில் கோவை, திருச்சி, மதுரை, சேலம் போன்ற மாவட்டங்களில் வாட்டர் டேபிள் மிகவும் கீழே போய்விட்டது.

40 அல்லது 50 அடி என்ற நிலை மாறி இப்போது 75, 100 அடிக்குக் கீழே தண்ணீர் போய்விட்டது. அதன் காரணமாகக் கிராமங்களில் இன்றையதினம் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுக் கேணிகளில் எல்லாம் தண்ணீர் அறவே வறண்டுபோய் விட்டது, எங்கள் கரூர் பகுதியில் ஒரு பக்கத்தில் காவேரி ஆறு ஓடுகிறது, பத்து மைல்களுக்கு அப்பால் அமராவதி நதி ஓடுகிறது. அப்படிப்பட்ட பிரதேசத்தில்கூட இன்றையதினம் குடி நீர்க் கேணிகளை துடைப்பம் போட்டுக் கூட்டுகிற அளவிற்கு அவை வறண்டு போய் விட்டன. ஆகவே மின்சாரத்தை விஸ்தரிக்கத் திட்டமிடும்போது கிராமங்களில் உள்ள மக்களுக்குக் குடி நீர் கொடுக்கக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இலாகாவுடன் சேர்ந்து வேலை செய்யவேண்டும். இல்லாவிடில் ஒரு பக்கத்தில் மின்சாரத்தை அதிகப்படுத்தி அதன் காரணமாக வாட்டர் டேபிள் கீழே போய்க் குடி நீர் இல்லாத ஒரு குறை ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற பட்ஜட் கூட்டத்தில் சொன்னேன். மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமென்று. விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறைக்கவேண்டும் அல்லது கன்செஷன் கொடுக்கவேண்டுமென்று சொன்னதைக் கேட்க மறுத்துவிட்டார்கள். அதேபோல் இன்றைக்குச் சொல்கிறேன், தமிழ்நாட்டில் குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று. ஆகவே இந்தக் குடிநீர் வறட்சி நிலையைத் தவிர்க்க வேண்டும். இது மின்சாரத்தோடு சம்பந்தப்பட்ட சப்ஜெக்ட் என்பதால் சொல்கிறேன்.

இன்று பல மாவட்டங்களில் உள்ள பல கிராமங்களில் குடிநீர்க் கேணிகள் வறண்டு போய்க் கிடக்கின்றன. அதை உங்களுக்கு எப்படி உணர்த்துவது என்பது புரியவில்லை. சென்ற ஆண்டு சென்னை நகரில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டபோது பல இடங்களில் போரிங் செட்ஸ் போட்டுத் தீவிரமாகத் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது. சென்ற ஆறு ஏழு மாதங்களாக கூவம் சீரமைப்புத் திட்டமும் நடந்து கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் சட்டமன்றத்தில் உரையாற்றுகிறபோது இன்று நிதியமைச்சராக இருக்கக்கூடிய திரு. மதியழகன் அவர்கள் தமிழ்நாட்டில் நிலவி வருகிற ஒரு பழமொழியைச் சொன்னார்கள். தாராபுரத்தில் தாய் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறபோது கும்பகோணத்தில் மகன் கோதானம் செய்கிறானாம் என்று. அது இப்போது என் நினைவிற்கு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கிராமங்களில் மக்கள் குடிதண்ணீருக்காகத் தாளம் போட்டுக்கொண்டிருக்கும்போது இங்கு கூவம் சீரமைப்புத் திட்டம் எதற்காக என்று கேட்கத் தோன்றுகிறது. ஆகவே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குடி தண்ணீர்ப் பிரச்னை மின்சாரத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்னை என்பதால் சொல்லுகிறேன். இந்தக் குடி நீர்ப் பிரச்னையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு குடி நீர் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று இந்தச்



சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு இந்த மின்சார வாரியம் கடந்த காலத்தில் 61-ல் இருந்து 66 வரையில் நடந்த வேகத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்போதுள்ள வேகம் போதியதாக இல்லை, அதோடு சமத்துவம் பெற்றதாகக்கூட இல்லை, அதைவிட விரைவாகச் செல்லவில்லை என்று சொல்லி இந்த மின்சார வாரிய மு.ப. 11-00
நிதிநிலை அறிக்கையை என்னால் பாராட்ட முடியவில்லை என்று பணிவோடு தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பெ சௌந்தரபாண்டியன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள் தமிழக அரசு பொறுப்பு ஏற்ற உடன் மின்சார வாரியத்தில் சிறந்த முன்னேற்றம் இல்லை என்று மெத்த வருத்தப்பட்டார்கள். அவர் காட்டிய புள்ளி விவரத்தில் உற்பத்தித் திறன் குறைந்து இருக்கிறதா அல்லது பம்பு செட் கொடுத்த வகையில் குறைவு இருக்கிறதா அல்லது மின்சார வாரியத்தின் பணி குறைந்திருக்கிறதா என்று எல்லாம் சுட்டிக் காட்டுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் அப்படி எதுவும் சுட்டிக்காட்டவில்லை. அடுத்துப் பேசுபவர்களாவது சுட்டிக்காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பு ஏற்றவுடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான வுடன், அவர்களுடைய மறைவுக்குப்பிறகு கலைஞர் அவர்கள் முதலமைச்சரானவுடன், மின்சார வாரியத்தில் ஏற்பட்டு இருக்கும் முன்னேற்றத்தை, அதனுடைய சாதனையை எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் இந்த மாமன்றத்திற்கும், நாட்டு மக்களுக்கும் எடுத்துக்காட்டுவதிலே நான் பெருமைப்படுகிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு மட்டும் ஏறத்தாழ 3,950 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் இந்த அரசாங்கம் மின் வசதி அளித்து இருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த 20 ஆண்டுக்காலம் ஆண்டவர்கள் ஏதாவது ஒரு ஆண்டில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையுள்ள ஊர்களுக்கு மின் வசதி தந்து இருக்கிறார்களா என்று நான் அவர்கள் அளித்த நிதி நிலை அறிக்கையைப் புரட்டிப் பார்த்தேன். எந்த ஆண்டிலும் இவ்வளவு பெரிய சாதனையை அவர்கள் சாதித்தது இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டுமட்டும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விவசாயத்திற்கு பம்பு செட் கொடுத்த எண்ணிக்கையின் அளவு 59,105 ஆகும். அந்த அளவிற்கு 20 ஆண்டுக்காலம் ஆண்ட காங்கிரஸ்காரர்கள், ஆட்சித் திறமையில் மிஞ்சியவர்கள் என்று சொல்பவர்கள், ஏதாவது ஒரு ஆண்டில் இவ்வளவு பெரிய

[திரு. பெ. சௌந்தர பாண்டியன்] [1970 ஆகஸ்ட் 27

எண்ணிக்கை மின் இணைப்புக் கொடுத்து இருக்கிறார்களா என்றால் எந்த ஆண்டிலும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது இல்லாமல் தனியார் துறையிலும், சென்ற ஆண்டுமட்டும் 1,675 பம்பு செட்டுகளுக்கு மின் வசதி கொடுத்து இருப்பதைப் பாராட்டிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆக மொத்தம் எல்லாவற்றையும் கூட்டி இந்த ஆண்டுவரையில் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 4,71,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைப்பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வேறு எந்த ஆண்டிலும் இவ்வளவு பெரிய சாதனை இல்லை என்பதை இங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களும், நாட்டு மக்களும் ஒரு முறை எண்ணிப்பார்த்து, மின்சார வாரியத்தின் திறனையும், இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சித்திறனையும் எண்ணிப் பூரிப்படைய வேண்டும் பேராதரவுதர வேண்டுமென்று நான் இந்த மன்றத்தின்மூலம் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இவைதவிர 4,650 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் தெரு விளக்கு அமைப்பதற்கு சென்ற ஆண்டுமட்டும், சுருங்கச் சொன்னால் அக்டோபர் முதல் மார்ச் வரையில் 6 மாத காலத்தில் இவ்வளவு பெரிய சாதனையைப் புரிந்து இருக்கிறது மின்சார வாரியம் என்பதை எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினரும், எதிர்க் கட்சித் தலைவர்களும் உணர வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். 6 மாதத்தில் முன்னேற்றக் கழக அரசு 4,650 கிராமங்களுக்கு மின்வசதி அளித்து இருக்கிறது. 20 ஆண்டுக் காலத்தில் ஏதாவது ஒரு சாதனையை எடுத்துக் காட்டி இதோ நாங்கள் 6 மாத காலத்தில் இன்ன சாதனைகளைச் செய்து இருக்கிறோம் என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சுட்டிக் காட்ட வில்லை. இனி மற்றவர்கள் பேசும்போது ஒரு ஆதாரம் சுட்டிக்காட்டினால் நான் நீங்கள் சொல்வதற்கு எதற்கும் தயாராகப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்பதை மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இது அல்லாமல், மின்சார வாரியம் திறமையோடு சிறந்த முறையில் நிர்வாகம் நடத்துவதற்கு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு சென்ற ஆண்டு ஒரு ஆலோசனைக் குழுவை ஒவ்வொரு 'சிஸ்டத்திலும்' புகுத்தி மாதம் ஒரு முறை இந்தக் குழுவைக் கூட்டி நிர்வாகத் துறைக்கும் ஊழியர்களுக்கும் எந்தெந்த வகையில் ஆலோசனை சொல்லலாம் என்று சொல்லி நிர்வாகத்தைத் திருத்தி அமைத்து நல்ல முறையில் நடத்துவதற்கும் இந்த அரசாங்கமும் இந்த மின்சாரத் துறை அமைச்சரும், தமிழக முதல்வரும், மின்சார வாரியத்தின் தலைவரும் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்வதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். கிராம மின் வசதி பெரிதும் விரிவாக்கப்பட தஞ்சாவூர், தருமபுரி, ஈரோடு போன்ற 3 இடங்களில் தலைமை இடமாகக் கொண்டு 3 செயல் துறையை இந்த அரசாங்கம் புதிதாகத் துவக்கி



1970 ஆகஸ்ட் 27] [திரு. பெ. சௌந்தர பாண்டியன்]

இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் நான் தெளிவாக்க விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின்சார வாரியத்தில் ஏறத்தாழ 71,000 பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய எண்ணிக்கையுள்ள பணியாளர்கள் எந்தத் துறையிலும் இல்லை என்பதை நான் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் சொல்லிக் கொள்கிறேன். மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற சம்பள ஆணைக்குழுவின் சிபார்சை ஏற்றுக் கொண்டு, தமிழக அரசு மின்சார வாரியம் அதை அமல்படுத்தி இருக்கிறது. ஊழியர்களின் குடும்பமக்கள் மேலும் மேலும் சிறப்புப் பெறவும் பொருளாதாரத் துறையில் ஏற்றம் பெறவும், சென்ற ஆண்டுமட்டும் தமிழக அரசு மின்சார ஊழியர்களுக்கு ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் அதிகப் பணம் கொடுத்து ஊதியத்தை உயர்த்தி இருக்கிறது என்பதைப் பூரிப்போடு நான் சொல்வதில் பெருமைப்படுகிறேன். இப்படிப்பட்ட ஊதிய உயர்வு அகில இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் தரப்படவில்லை என்பதை எனக்கு முன்னாலே பேசிய சட்ட மன்ற உறுப்பினரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் உணர்ந்து இந்த நாட்டு மக்களுக்கு மின்சார வாரியத்தின் சாதனையைப் பரப்ப வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அகில இந்தியாவைப் பொறுத்தவரையில் மின்சாரப் பொறியாளர்கள் எங்கே சென்றாலும் வேலையில்லாத நிலைமை இந்த நாட்டில் நிலவி வந்து இருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் நன்றாக அறிவோம். ஆனால் தமிழ் நாடு அரசு, முன்னேற்றக் கழக அரசு நல்ல வேலை வாய்ப்பு அளிப்பதற்குப் பெரு முயற்சி எடுத்து அமைச்சரும், நம்முடைய முதலமைச்சரும், மின்சார வாரியத்தின் தலைவரும் எந்தெந்த வகையில் வேலை வாய்ப்புத் தர வேண்டுமென்று ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணியாற்றிய காரணத்தால் சென்ற ஆண்டு 500 மின்சாரப் பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்து இருக்கிறது. இந்த ஆண்டு ஏறத்தாழ 200 பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் சூழ்நிலை இருந்து வருகிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. டி. எம். நல்லசாமி அவர்கள் தமிழ்நாடு அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பு ஏற்றவுடன் மின் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் காட்ட வில்லை என்று வருத்தப்பட்டார்கள். சுருங்கச் சொன்னால் சென்ற ஆண்டு தமிழகத்தில் எண்ணூர் அனல் மின்சார நிலையத்தின் முதல் உற்பத்திச் சாதனமும், ஆழியாறு மின் நிலையமும், பேசின்பிரிட்ஜ் 4-வது கட்ட மின்நிலையம், ஆகியவை 300 மெகா வாட் அதிக உற்பத்தி செய்யத் துவக்கப்பட்டது. இதனால் ஏறத்தாழ 1,220 மெகாவாட் உற்பத்தித் திறன் கூடி இருக்கிறது. தமிழக மின் வாரியம் என்பதைப் பூரிப்போடு சொல்லிக் கொள்கிற நேரத்தில் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்

களுடைய ஆட்சியில் மின் உற்பத்தி சாதனைக்கு ஏதாவது ஒரு சாதனையைச் சுட்டிக் காட்டி இருந்தால் நாம் எல்லாம் தெளிவாக அறிந்து இருக்க முடியும். ஆனால் அவர் கோடிட்டுக் காட்டினாரே தவிர ஒரு குறிப்பிட்ட சாதனையைக் கூறவில்லை.

மின்சாரப் பொறியாளர்கள் மின்னல் வேகத்தில் வேலை நிறுத்தம் செய்த காட்சியை இந்த மன்றமும் இந்த நாடும் நன்றாக அறியும். வேலை நிறுத்தம் செய்த காலத்தில் தமிழக முதலமைச்சரும், மின்சார வாரியத்தின் அமைச்சரும், மின்சார வாரியத்தின் தலைவரும் எந்த அளவுக்கு வேலை நிறுத்தத்தால் உருவாக்கப்பட்ட சூழ்நிலையிலும், சென்னையிலும், தமிழகத்திலும் மின்சாரம் நிறுத்தப்படாமல் இருப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி, உள்ளபடியே சொல்கிறேன், இந்த நாடும், நாட்டு மக்களும் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதை நான் மிகுந்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உற்பத்தித் திறனில் விவசாயத்திற்கு இந்தத் தமிழ் நாடு அரசு மின் வாரியம் 25 சத விகிதத்தைப் பயன்படுத்துகிறது. வேறு எந்த மாநிலத்திலும் மின்சார வாரியத்தில் விவசாயத்திற்கு 25 சத விகிதம் பயன்படுத்தப்படவில்லை. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர், மின் கட்டணம் மிக மிக அதிகமாக இருக்கிறது என்று மெத்த வருத்தப்பட்டார்கள். நான் அவர்களுக்கும் இந்த மன்றத்திற்கும் நாட்டு மக்களுக்கும் சொல்லிக்கொள்வது, தமிழகத்தில் மின்சாரத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதில் ஒரு யூனிட்டிற்கு வாங்கும் கட்டணம் 9 பைசா, ஆந்திராவில் 10.45 பைசா, மைசூரில் 10 பைசா, மேற்கு வங்கத்தில் 12 பைசா, உத்திரப் பிரதேசத்தில் 15 பைசா. இதை எல்லாம் எண்ணிப் பார்க்கிற நேரத்தில் நம்முடைய தமிழகத்தில் வாங்குகிற கட்டணம்தான் மிக மிகக் குறைவு என்பதை இந்த மன்றமும், நாடும், விவசாய மக்களும் அறிய வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. கே. ஆர். கோவிந்தன் தலைமை.)

மேலும், 1972-க்குள் இந்த நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கவேண்டும் என்பதில் தமிழக அரசு மிகுந்த அக்கறையோடு பணியாற்றி வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ தேர்தலுக்காகத்தான் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துகிறார்கள் என்று மெத்த வருத்தப்படுகிறார். தேர்தலுக்காக இதைச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எள் அளவுமில்லை என்பதை நான் எடுத்துக் காட்டியிருக்கிற சாதனையிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

அதேபோன்றுதான் நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 11,000 கிராமங்களுக்கு மின்வசதி செய்துகொடுப்பதற்கு மின்சார வாரியம் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. ஆகவே, மின்சார வாரியம் திறமையற்ற தன்மையில் செயல்படவில்லை. திறமையோடு தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு நான் எடுத்துக் காட்டிய புள்ளிவிவரங்கள் நல்ல ஆதாரமாக அமையும் என்பதை எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்களும், மாற்றுக் கட்சி உறுப்பினர்களும், இந்த நாடும் உணர வேண்டும். நான் கழக அரசின் ஓராண்டுச் சாதனையைத் தான் குறிப்பிட்டேன். உங்கள் 20 ஆண்டு கால ஆட்சியிலே புள்ளி விவரத்தோடு உங்கள் கட்சி சாதனையைச் சுட்டி காட்ட வேண்டும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும்பொழுது, நான் சென்ற தடவை இதே வாரியத்தின் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய நேரத்தில், இருக்கக்கூடிய பெரிய காண்டிராக்ட் கம்பெனிகளுக்கும், உதாரணமாக எஸ்கார்ட்டு கம்பெனிக்கும் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சில என்ஜினியர்களுக்கும் இருக்கக் கூடிய தகாத தொடர்புகுறித்து ஆதாரபூர்வமான தகவல்களோடு, 8, 10 போட்டோ ஸ்டேட் காபிகளை, அவர்களிடையே நடந்த கடிதப் போக்குவரத்துக்கான காப்பிகளைச் சுட்டிக்காட்டி இதை அம்பலத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்று, இந்த அவையிலே விளக்கிக் கூறியிருக்கிறேன். அதை சட்டமன்ற ரிகார்டுகளில் புகுத்தவேண்டும் என்று கூறி அமைச்சர் அவர்களிடத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். அது பற்றி என்ன விசாரணை நடந்தது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது இந்த நிமிஷம் வரை எனக்குத் தெரியாது, இந்த அவைக்கும் தெரியாது. இப்படிச் செய்வது அவையை மதிப்பது ஆகாது என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது, இவைகளை அம்பலத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்ட பிறகு, இன்று வரைக்கும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பொதுத் துறைக்குப் பாதுகாப்பாக ஆகாது, இந்த மன்றத்தை மதிப்பது ஆகாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** சென்ற ஆண்டு பேசிய குற்றச் சாட்டுகளுக்கு நான் கடைசியில் பேசுகிறபொழுது பதில் சொல்லலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும் என்று விரும்புகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அம்மட்டும் நன்றி. நேற்று பேசிய என் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனுக்காக ரூ. 26 கோடிக்கு முதலில் மதிப்பீடு போடப்பட்டு, இறுதியில் அது ரூ. 76

கோடிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. மும்மடங்காக உயர்த்தப் பட்டிருக்கிறது, அங்கு இருக்கக்கூடிய பெரிய என்ஜினியர்கள் சிலரின் தகாத நடவடிக்கைகள் காரணமாக, முக்கியமாக ' பிளாக் லிஸ்டெட் ' கம்பெனிகளுக்கு ஆர்டர்ஸ் கொடுப்பதன் மூலம் இந்த முறைகேடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். அதைப்பற்றி பகிரங்க விசாரணை நடத்த வேண்டியது மிக அவசியம் என்று நான் வற்புறுத்துகிறேன். கோடி கோடியாக கொள்ளை போகிறது நாட்டு மக்களின் செல்வம் என்பதை நாம் உணர்ந்து கொண்டு, இதைத் தடுப்பதற்கு தீவிர மான நடவடிக்கைகளை இந்த ஆட்சி எடுக்காவிட்டால், இதற்கு தடையே இருக்காது. இது எங்கு போய் முடியும் என்பதைச் சொல்ல முடியாது. பொதுத் துறை அதிகாரிகளில் சிலர் இம் மாதிரி தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்தி, எண்ணூர் தெர்மல் ஸ்டேஷன் சம்பந்த மாக நேற்று எடுத்துக் காட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றியும் பகிரங்க விசாரணை நடத்த வேண்டும் என்பதை மீண்டும் வலி புறுத்துகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, ஆடிட் ரிபோர்ட்டில் சில குறிப்புகள் வேடிக்கையாக இருக்கிறது. 10-ம் பக்கத்தில் Loans from L.I.C. secured by mortgage of certain assets of the Board அதாவது, நமது சொத்துக்களை, ஆஸ்திகளை அடகு வைத்துத் தான் எல். ஐ. சி.யில் கடன் வாங்குகிற நிலைமை எனக்கு வேடிக் கையாக இருக்கிறது. இந்த வாரியம் பெரிய தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் பெரிய பொதுத் துறைத் தொழில் இது. பப்ளிக் லோன்ஸ் ஃப்ளோட் செய்து, போது மான கடன் தொகையை எழுப்ப உரிமை பெற்ற தொழில்மாகாண சர்க்கார் என்று ஒன்று இருக்கிறது. நான்கு கோடி மக்கள் அரசு ஒன்று இருக்கிறது. இந்த வாரியமும், அரசும் கொடுக்கக் கூடிய உத்தரவாதம் போதாமல், இவ்வளவு பெரிய வாரியத்திற்கு அந்தஸ்தும், மதிப்பும் இல்லாமல், எல்.ஐ.சியில் சொத்துக்களை அடகு வைத்துத் தான் கடன் தொகை பெற வேண்டுமென்ற நிலை மிகவும் கேவலமான நிலை. தனிக் கொடி வேண்டும் என்று கேட் கிறோம். நான் அதை ஆதரிப்பவன். கொடி என்பது ஒரு சின்னம் தான். அதற்கு உத்திரவாதமாக ஸப்ஸ்டான்ஷியலாக பின்னால் இருப்பது அதற்கு வேண்டிய வசதி, அதற்கு வேண்டிய அதிகாரம், அதற்கு வேண்டிய அந்தஸ்து. அத்தனையையும் புறக்கணித்து நம்மை கேவலப்படுத்தக் கூடிய விதத்தில் சொத்துக் களை, ஆஸ்திகளை அடகு வைத்து, வட்டிக்கடைபோல, கடன் வாங்குகிற நிலை இருக்கிறது. இதை எதிர்த்துப் போராடத் தயாரா என்ற கேள்விக்கு இந்த ஆட்சி பதில் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

அடுத்து, இந்த ஆடிட் ரிபோர்ட்டு 9, 10 பக்கங்கள் இருக் கின்றன. இதில் என்னவென்றால் இந்தக் கணக்கு வைக்கக் கூடிய முறை, ஒழுங்கீனங்கள் பற்றி 9, 10 பக்கங்கள் திரும்பத்





திரும்ப வருஷா வருஷம் அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், இவைகள் திருத்திக்கொள்ளப் பட்டிருக்கின்றனவா, ஏற்கனவே செய்யப்பட்ட இது போன்ற குறைபாடுகள், புகார்கள் சுட்டிக்காக்கப்பட்டவைகளைத் திருத்திக்கொள்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றுமே கிடையாது. அதற்குப் பல உதாரணங்களை நான் எடுத்துக் காட்ட முடியும். இதைப் போல பல விஷயங்கள் இருக்கின்றன.
இந்த ஆடிட் ரிப்போர்ட்டில் 8-ம் பக்கத்தில்

The sum of Rs. 2,77,275 shown against ' Amount due from Animal Husbandry Department ' represents the original book value of certain quarters sold to that department in February 1964.

இந்தத் துறையிலிருந்து வர வேண்டிய தொகை நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. இதன் பேரில் ஆக்ஷன் எடுக்கப்பட்டு, இது இன்னும் முடிக்கப்படவில்லை. இது அப்படியே இருக்கிறது.
அடுத்துப் பார்த்தால், 9-ம் பக்கத்தில்
A sum of Rs. 7,19,477 representing gratuities and pension என்ற வகையில் கொடுக்கப்பட்ட தொகை, சர்க்காரிடமிருந்து நமக்கு வரவேண்டிய பணம், இன்னும் வரவில்லை. இப்படிக் கொடுத்துக் கொண்டே போனால் என்ன ஆவது ? இப்படி கொடுக்கப்பட்ட தொகை இன்னும் வாரியத்திற்குப் போய்ச் சேர வில்லை. சர்க்காரிடம் தான் இருக்கிறது.

இன்னும் பார்த்தால், 9-ம் பக்கத்தில்

Capital expenditure does not include compensation payable for the land taken from the Forest Department in 1954 for the Periyar Project. In its report on the Audit Report on the Annual Acounts of the Board for the year 1964–65 the Public Accounts Committee has recommended that the cost of land should be assessed and capitalised without further delay. The Board has stated that the matter is under consideration.

எத்தனை வருஷமாக கன்சிடரேஷன் என்பது எனக்குப் புரிய வில்லை. வர வேண்டிய பணங்களை வரவழைப்பதற்கு, நமக்குள்ள ஆஸ்திகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வருஷா வருஷம் குறிப்புகள் இருந்து கொண்டே இருக்கின்றன. நாமும் கன்ஸிடரேஷன் என்று தள்ளிக் கொண்டே போகிறோம். எத்தனை ஆண்டுகளுக்கு இப்படி தள்ளிப் போட்டுக் கொண்டே போவது ?

இது போக, இன்னும் முதல் பக்கத்தில் பார்த்தீர்களானால்

An expenditure of Rs. 120.61 lakhs incurred to the end of 1967–68 on the installation of 150,000lbs. boiler at ' C ' Station in the Basin Bridge of power House (in replacement of two boilers of small sapacity has been met from the Depreciation Reserve Fund Account.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூலதனச் செலவிலிருந்து எடுக்க வேண்டியதற்குப் பதிலாக, தேய்மான ரிசர்வ் நிதியிலிருந்து எடுக்கப்படுகிறது. இப்படி எடுக்கக் கூடாது என்று 1962—63, 1963–64, 1964–65-ம் வருடங்களில் திரும்பத் திரும்ப சொல்லப்

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1970 ஆகஸ்ட் 27

பட்டிருக்கிறது இந்த ஆடிட் ரிபோர்ட்டில். ஆனால் அதை கவனிப்பதே இல்லை. 1962-63-லிருந்து அதையே செய்து கொண்டிருந்தால் என்ன ஆவது? இப்பொழுது தேய்மான நிதியிலிருந்து எடுத்திருக்கக்கூடிய தொகை சாதாரண தொகை அல்ல. ஒரு கோடிக்கு மேற்பட்ட தொகைதான் அதிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முறைகேடுகளை வரிசையாக சொல்லிக் கொண்டே போகலாம், அடுக்கிக் கொண்டே போகலாம். ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டி நிறுத்திக்கொள் கிறேன். முதல் பக்கத்தில் கடைசியில் இருக்கிறது.

A sum of Rs. 30.55 lakhs representing payment to Messrs. Techno Export, Praha, for preparation of project report for Ennore Thermal Power Station. மூலதனச் செலவில் இதைக் காட்டாமல், Sundry debtors, advance paid to suppliers என்ற கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. இது கூடாது, கூடாது என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இது மூலதனச் செலவு.

வேஜ் போர்ட் கொடுத்தால், அதை வற்புறுத்திக் கேட்கக் கூடாது என்று நிபந்தனை இருக்கிறது. அதன் விளைவாக, அதிலே கிராசுடி ஸ்கீம் இருக்கிறது. அது தமிழ் நாட்டு ஒப்பந்தத்தால் போச்சு கிராசுடி 1969 எப்ரலிலிருந்து என்று இருக்கும்போது டிசம்பர் என்று போட்டதால் ரூ. 1,84,00,000 போச்சு. வேஜ் போர்டுக்கு முன்னால் ஒப்பந்தம் செய்து ஏதோ அனுகூலம் செய்து விட்டதாகச் சொல்வது முறையாகாது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட போக்கை வற்புறுத்திச் சொல்லும்போது, அதற்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட மின்சார வாரியத்தின் போக்கை, அதில் இருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது, சில சங்கங் களுக்கு ஒரு கண்ணோட்டம், அனுசரணையாக இன்னொரு கண்ணோட்டம் இன்னும் சில சங்கங்களுக்கு. இப்படி ஓர வஞ்சனையான போக்கு இருக்கிறது. உதாரணத்திற்கு, 12—3—1970-ல் ஒரு சில சங்கத்தார்கள் மாஸ் காஷுவல் லீவ் போட்டார்கள், அவர்கள் அகவுண்ட்ஸ் சபார்டினேட்ஸ். அவர் களுக்கு தண்டனையில்லை—ஏன் இல்லை என்று கேட்கவில்லை, தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் சொல்லவில்லை. ஆனால், அவர்களுக்கு பே கட் இல்லை. அவர்களுடைய கோரிக்கை என்ன? சட்டத்திற்கு விரோதமானது. இட் இஸ் அன் இல்லீகல் டிமான்ட். பதிவான சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது, அவர்கள் கன்சிலியேஷன் ப்ரோசீடிங்சில் பங்கு எடுக்கக் கூடாது என்பது டிமாண்ட். அந்தக் கோரிக்கைக்காக மாஸ் காஷுவல் லீவ். இப்படிப்பட்ட சட்ட விரோதமான டிமாண் டுக்கு, தண்டனை இல்லை, பே கட் இல்லை. இல்லாதது நல்லது தான். ஆனால் இது பெரும் முறைகேடு. என்ஜினியர்கள் மற்றவர்கள் என்றால், தீர்ப்புக் திணிக்கப் பட்டு, பாதிக்கப்



1970 ஆகஸ்ட் 27] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

பட்டவர்கள் மாஸ் காஷுவல் லீவ் போட்டதற்காக, 10,000 பேர்களுக்கு பே—கட், சார்ஜ் ஷீட், மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும், எக்கச்சக்கமான ட்ரான்ஸ்பர்கள், இதெல்லாம் ஓரவஞ்சனை அல்லவா?

என்னிடம் ஒரு போட்டோ இருக்கிறது. வழக்கம் போல் அதைச் சபையில் சமர்ப்பிக்கிறேன். முன்னேற்றக் கழக சங்கத்தினர் வால் போஸ்டர் மின்சார வாரிய ஆபீசிலேயே ஒட்டி இருக்கிறார்கள். இது சரிதானா? ஒழுங்குதானா? கேட்க விரும்புகிறேன். அது அங்கீகரிக்கப் படாத ஒரு சங்கம். எங்கே ஒட்டியிருக்கிறது? மின்சார வாரிய ஆபீசிலேயே ஒட்டப் பட்டிருக்கிறது.

அடுத்து, இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கீகரிக்கப்படாதவர்கள் நோட்டீஸ் போடுகிறார்கள். அங்கீகரிக் கப்பட்ட சங்கங்கள் நோட்டீஸ் போடலாம். அதற்கு விதிகள் இருக்கின்றன, எங்கே கூட்டம் போடலாம், எங்கே மைக் வைக்கலாம், எப்படி வெளிப் பெரியார்கள், தலைவர்கள் வரலாம் என்று. ஆனால், இங்கே அங்கீகரிக்கப்படாத சங்கம், மாண்புமிகு திரு. முத்து, எம்.எல்.சி. தலைமையில், எங்கே கூட்டம், சப்-ஸ்டேஷனின் உள்ளேயே, அனுப்பானடி துணை மின் நிலையத்தில், அப்படி நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். இதை எங்கே போய்ச் சொல்லுவது?

இன்னொன்று, கூட்டம் போடுவதற்கு சூப்ரெண்டிங் எஞ்சினியர் அனுமதி கொடுத்திருக்கிறார். டிவிஷனல் எஞ்சினியர், சூப்ரெண்டிங் எஞ்சினியர் அனுமதி இங்கே இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் நோட்டீஸ் போர்டில், போடலாம் என்று அனுமதி இருக்கிறது. ஆனால், இங்கே விஷயம் வேறு. இஷ்டத்திற்கு இப்படிப் போனால், அங்கீகாரம் என்றெல்லாம் இல்லாமல், ஆளும் கட்சி ஆதரவு பெற்றது, ஆதரவு பெறாத சங்கம் என்று சொல்லி விடலாமே?

ஒன்றை மட்டும் கூறி முடிக்கிறேன், சபாநாயகருடைய அனுமதியுடன், மிக முக்கியமான விஷயம். இல்லையென்றால் அனாவசியமாக நேரத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன். சங்கத்தின் லெட்டர் இங்கே இருக்கிறது. இதை எல்லாம் கடைசியில் அமைச்சரிடம் கொடுத்துவிடுகிறேன். இந்த லெட்டர் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சென்னை-2, வட்டச் செயலாளருக்கு எழுதியிருப்பது. அதில் கூறியிருப்பது. '1969-ம் ஆண்டின் வரவுசெலவு கணக்குகளை தணிக்கை செய்து உடனடியாக தொழிலாளர் நலத்துறை ஆணையர் அவர்களுக்கு அனுப்பிட வேண்டியுள்ளது. தற்போது தணிக்கை செய்து அனுப்பப்பட இருக்கின்ற இந்த அறிக்கையில் குறிப் பிட்டுள்ள உறுப்பினர் பட்டியலை ஒட்டித்தான் நமது சங்க அங்கீகாரம் வழங்க முடியும் என்பதை தாங்கள் உணர்ந்திட

வேண்டும். எனவே நமது உறுப்பினர்களது பட்டியலும், அந்தப் பகுதியில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய பட்டியலும் தாங்கள் அனுப்பிவைத்திட வேண்டும் . . . இன்றைய தேதியில் உறுப்பினர்களாக இருக்கும் அனைவரது பெயரும், 69-ல் சந்தா கட்டியிருந்தாலும், கட்டாமல் இருந்தாலும், பட்டியல் எழுதி அனுப்பிட வேண்டுகிறேன்."

ஆக, சந்தா கட்டியிருந்தாலும், இல்லாவிட்டாலும், பட்டியலைக் காட்டி அங்கீகாரம் பெற வேண்டும். இதுதான் நிலைமை. இது 70, மே மாதமே கொடுத்திருக்க வேண்டும். ஜூலை மாதத்தில் கொடுக்கிறார்கள். இப்படி நடக்கிறது. ரெகார்டில் நடக்கிறது. ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. நிர்வாகம் நம் கையில் இருக்கிறது என்று நினைத்துச் செய்வது சரியான போக்கா? கண்டிக்கத் தக்க போக்கு. புகார்களை ஏற்றுக் கொண்டு, ஒரு சமமாக முடிவு செய்ய வேண்டும். அதைவிட்டு, இப்படி யெல்லாம் நடந்தால், எங்கே கொண்டு விடும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும், இதை அவை கவனிக்க வேண்டும். இது ஆபத்தான போக்கு. வளர்ந்து போகிறது. ஆட்சேபகரமான போக்கு, கண்டிக்கத் தக்க போக்கு என்று கூறி, பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். சென்னியப்பன்:** தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்தில் மின்சார வாரியத்தின் 1970-71-ஆம் ஆண்டு அறிக்கையை ஆதரிக்கின்ற வகையில் நான் பேசக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியம் செய்திருக்கிற காரியங்களையும், செய்ய இருக்கிற திட்டங்களையும் இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த நானும் எங்களுடைய பகுதி மக்களுடைய சார்பிலும் இந்த மின்சார வாரியத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இன்றைக்கு ஈரோடிலே ஒரு அலுவலகத்தை மேட்டூர் சிஸ்டத்தில் இருந்து அமைக்க அறிக்கையில் வகை செய்திருக்கிறார்கள். அதைக் கண்டு தொகுதி மக்களின் சார்பில் பாராட்டுதலைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் சரியான முறையில் இயங்குகிறதா? மக்களுடைய தேவையைச் சரியான முறையில் பூர்த்தி செய்து வருகிறதா என்பது ஒரு பிரச்சினை. வளர்ந்து வரும் சமுதாயத்தில் இன்றைக்கு மின்சாரத்தின் தேவையை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். வளர்ந்து வருகிற தேவைக்கு ஏற்ப உற்பத்தி பெருகி, சீரான முறையில் விநியோகம் செய்யப்படுகிறதா என்று பார்த்தால் அதில் பலவிதமான குறைபாடுகள் பெருகி இருப்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.





அதிலும் விவசாயிகள் எந்த அளவுக்குப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புப் பெறுவதில் சங்கடங்களைப் பெறுகிறார்கள் என்பதை தமிழ்நாடு கிராமவாசிகள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதிலும் 9 பைசாவில் இருந்து மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதற்கு தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்ட பலி மூன்று உயிர்கள். அவர்களது குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இந்த மின்சார வாரிய அறிக்கையில் ஏதாவது தெரிவித்திருப்பார்கள் என்று நினைத்தேன். அப்படி ஒன்றும் இல்லை. அவ்வளவு மலிவானதாக இந்த விவசாயிகளின் உயிர்கள் அவர்களுக்கு ஆகிவிட்டது; தமிழ்நாடு விவசாயிகளின் உயிர்களை அவ்வளவு கேவலமானதாக நினைத்த காரணத்தினால்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதன் பின்னர்தான் மின்சாரக் கட்டணத்தை குறைத்துக் கொள்ள இந்த அரசு முன்வந்தது என்றால் அவ்வளவு பின்தங்கிய நோக்கமுடையதாக இது ஆகிவிட்டது.

அதிலும் குறிப்பாக மின்சார வாரியத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்தபோது— நியாயமான முறையில் வேலைநிறுத்தம் செய்திருந்தாலும் அவர்களைத் தண்டிக்கும் வகையில் என்ன என்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் வருந்தாமல் இருக்க முடியாது. அதுவும் கட்சி அடிப்படையில் பாரபட்சம் காட்டப் படுவது—இன்னும் சம்பள உயர்வுகூட அளிக்கப்படுவது ஆகியவை மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

உதாரணமாக முன்பு சீப் அக்கவுண்ட்ஸ் ஆபீசருக்கு ஊதியம் ஆயிரம் ரூபாய் இருந்தால் ஆயிரத்து முந்நூறாக உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆனால் எஸ்.ஈ. அவர்களுக்கு அடிப்படையில் இருந்து 1,300 ஆக ஆக்கப்பட்டு 60, 50 விகிதத்தில் சம்பள உயர்வு கொடுக்கப்படுகிறது. இதைப் போலவே டிவிஷனல் என்ஜினியர்களுக்கும் மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி பாரபட்சமாக ஒரு முறையின்றி கட்சி அடிப்படையில் ஆட்களின் அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது வருந்தத்தக்கதாகும். தன் கட்சியைச் சேர்ந்தவர்கள், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதாக நிர்வாகத் துறையில் பாரபட்சம் காட்டப்படுவதை கண்கூடாகப் பார்க்கிறோம். இதனால் கட்சி வளராது—மின்சார வாரிய நிர்வாகம் மிகக் கேவலமான முறையில் சீர்கேடு அடைந்துவிடும்.

எங்கள் மாவட்டத்தில் வேலூர் எலெக்ட்ரிக் சிஸ்டம் இருக்கிறது. பம்பு செட்டு இணைப்புக் கோரி 22 ஆயிரம் மனுக்கள் வந்திருக்கின்றன. வருடத்திற்கு பத்தாயிரம் அளவுக்குத்தான் தரப்படுகிறது. மேலும் பன்னிரண்டாயிரம் அளவுக்கு எப்போது தரப்படும், எந்த அளவு தரப்படும் என்கிற நிலையே புரியவில்லை. மூன்று பிரிவுகளாக மனுக்கள் வாங்கப்படுகின்றன. ஒன்று கன்ஸ்ட்ரக்ஷன், இரண்டாவது ஓ. அண்டு எம்., மூன்றாவது

[திரு. இல. பலராமன்] [1970 ஆகஸ்ட் 27

கமர்ஷியல். இந்த மூன்றும் எந்த எந்த அளவு செயல்படுகிறது என்று புரியவில்லை. மனுக்களை மொத்தமான ஒரு இனத்தில் வாங்கி மின்சாரம் வழங்குகிற நிலை சீனியாரிடி லிஸ்ட்படி நடைபெற்றால் சிறப்பாக இருக்கும். அதிலும் வடார்க்காடு மாவட்டத்தில் தரக்குறைவான முறையில், கேவலமான முறையில் ஒரு சூப்பர்வைசர் 26 மின் இணைப்புகளை அங்கீகாரம் இன்றி தந்திருக்கிறார்கள். மனுக்கள் வந்தால் முறையாக ரிஜிஸ்தர் செய்து, ப்ரயாரிடி லிஸ்டு வைத்து காரியங்கள் நடைபெறுவதில்லை. பணம் கொடுக்கிறவர்களுக்கு ஒரு மாதிரியாக நடக்கிறது. ஒவ்வொரு விவசாயியும் மின் இணைப்புப்பெற கம்பம் வேண்டுமா, கம்பி வேண்டுமா, அவனே வாங்கித் தரவேண்டிய நிலை இருக்கிறது. லஞ்சம்தான் பெருகியிருக்கின்றன. பைப் கொடுப்பது இல்லை, ப்யூஸ்காரியர் இல்லை. நானே மின் இணைப்புப்பெற இவற்றை என் செலவில் வாங்கிக் கொடுத்திருக்கிற பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்குத்தான் மிக மோசமான நிலையில் வேலூர் எலெக்ட்ரிக் சிஸ்டம் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

வடார்க்காடு மாவட்டத்தில் இறவைக் கிணறுகள்தான் அதிகம். மின் இணைப்புமூலம்தான் விவசாயம் நடைபெறவேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பேர்கள் மின்வாரியத்திற்குச் சென்று வருவது விழாக்கோலமாகவே நிகழ்ந்து வருகிறது.

அதிலும் ஒரு கிராமத்தில் 50 குதிரை ஓட்ட அளவுக்கு டிரான்ஸ்பார்மர் இருக்கும். அங்கே நூறு அளவுக்குக் கொடுத்து விடுவது. இதன் காரணமாக மோட்டார் தீய்ந்துபோய் விவசாயிகள் நஷ்டம் அடைவது. இந்த நிலைதான் இருக்கிறது. இதற்காக இரவு கனெக்ஷனாவது கொடுங்கள் என்று கேட்டால் அதற்கு உத்தரவு இல்லை என்று மறுக்கிறார்கள்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் பல்புகள் போன்ற விவகாரம் கூட்டங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இன்றையதினம் கிராமங்கள் பெரும்பாலும் இருள் அடைந்து கிடக்கிறதே தவிர விளக்குகள் எரிகிறதா என்று பார்த்தால் இல்லை என்று சொல்லவேண்டும்.

மேலும் வேலைக்காக விளம்பரம் செய்து 1½ லட்சம் மனுக்கள் அந்தப் பகுதி மாணவர்களிடம் இருந்து படித்ததற்காக 6 ரூபாய் தண்டம் கட்டி அனுப்பியும் இதுவரை முடிவு தெரிவிக்காத பரிதாபகரமான நிலைதான் இருக்கிறது. தனியாக பில் கலெக்டர் முதலியவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தமாதிரியாக இல்லாது ஜனநாயக அடிப்படையில் சீரான முறையில் மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் இந்த மின்சார வாரியம் இயங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.



1970 ஆகஸ்ட் 27]

* **திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கும் மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இப்போது விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கிடைப்பது தடைப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் விவசாயிகள் கேணி வெட்டி பம்ப் செட்டுகளை அமைத்து வைத்திருந்தால் அதற்கு மின்சாரக் கனெக்ஷன் கிடைப்பதிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகளைப் பார்த்துக் காரணம் என்ன என்று கேட்டால், 1972-க்குள் எல்லா இடங்களிலும் மின்சாரம் வந்து விடவேண்டுமென்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். ஆகையால், எல்லா ஊர்களுக்கும் தெருவிளக்குகளாவது போட்டு விடுவதற்கு நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம். ஆகையினால் இந்த விவசாய பம்ப் செட்டுகளுக்கு இப்போது முக்கியத்துவம் அளிக்க வேண்டியநிலை என்று கூறுகிறார்கள். அதைப் பார்க்கும்போது 1972 வரையில் விவசாய அபிவிருத்தி நிச்சயமாகத் தடைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நாம் 1972-ஐ மனதிலே வைத்துக்கொண்டு விவசாய பம்ப் செட்டுகளுக்கு இந்த மின்சாரம் கொடுப்பதிலே தாமதம் ஏற்படுத்தினால் உணவு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும். ஆகவே, இந்த விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே கூறிக்கொள்ளுகிறேன்.

தெருவிளக்குகளைப் பொறுத்தவரைக்கும் எங்குமே சரியாக எரிவது இல்லை. இது பற்றிப் புகார் செய்தால் நடவடிக்கை எடுப்பது இல்லை. என்னைப்போன்ற சட்ட மன்ற உறுப்பினர் 'போன்' செய்து லைட் எரியவில்லை என்று சொன்னால்கூட 10 நாட்கள் கழித்துத்தான் வருகிறார்கள், அதுவும் 4, 5 முறை போன் செய்த பிறகு என்றால் சாதாரண ஒரு பொதுமகனின் நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் தெரு விளக்குகளில் உள்ள பவர் இல்லாத பல்புகளை உடனடியாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ளுகிறேன். ஒரு நாளைக்கு இரண்டு தடவை லைட்டுகள் எரியாமல் நின்று விடுகின்றன. தமிழ் நாட்டு மக்கள் சகுனம் பார்ப்பவர்கள் என்று உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் சாப்பிடும் போதும், நல்ல காரியத்தைப்பற்றி நினைக்கும்போதும் இப்படி விளக்குகள் அணைந்தால் அவர்கள் நிலையைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அத்தகைய நிலையைப் போக்குவதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த லைட் நிற்பதாலேயே இருள் சூழ்ந்து இருக்கிறது. அதை உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை டிபார்ட்மெண்ட்டில் சொன்னால் இங்கே ஆளே இல்லை, வெளியே போயிருக்கிறார்கள் என்று சொல்லு

கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்குத் தனியாக இதற்கு ஒரு டிபார்ட்மெண்டோ அல்லது செக்ஷனோ ஏற்படுத்தவேண்டுமென்று குறிப்பிடுகிறேன்.

கிராமங்களில் போடப்பட்டுள்ள விளக்குகள் பழையகால விளக்கெண்ணெய் விளக்குகள் எப்படி எரிந்ததோ அப்படியே எரிவதை நாம் பார்க்கிறோம். இங்கேயுள்ள லைட்டுகள் மிகவும் பிரகாசமாக இருக்கின்றன. அங்கே பவர் மிகவும் கம்மியாக இருக்கிறது. லைட் வெளிச்சத்தில் நடப்பதற்குக்கூட கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இனிமேல் போடுகின்ற விளக்குகளாவது மிகவும் பிரகாசமாக இருக்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் அங்குத் தப்புப் பிரசாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற ஆட்சியிலே எரிகின்ற விளக்குகளுக்கு ஒளி இல்லை என்று தப்புப் பிரசாரம் செய்கிறார்கள். இத்தகைய ஒரு நிலை உருவானால் மிகவும் பாதகமான ஒரு நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்போது இருக்கின்ற பல்புகள் வாங்கி இரண்டு நாளிலேயே ஃபியூஸ் ஆகிவிடுகிறது. முன்பெல்லாம் அந்த விளக்குகள் வருஷக் கணக்கில் எரிந்து கொண்டிருக்கும். இப்போது இருக்கும் பல்புகள் தரம் குறைந்து இருக்கிறது. அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும், தரம் குறைந்த பல்புகளை சப்ளை செய்கின்ற கம்பெனிகளிடமிருந்து வாங்காமல் அரசாங்கமே அத்தகைய பல்புகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் இப்போது எலக்ட்டிரிக் லயன் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் தனித்தனியாக மீட்டர் வைக்கவேண்டும். அப்படி வைத்தால்தான் ஒவ்வொரு பஞ்சாயத்தும் எவ்வளவு மின்சாரம் உபயோகித்தது என்று பார்த்து அதற்கான பணத்தை வசூல்செய்ய முடியும்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் லைட்டுகளைப் போடுவதற்கும் நிறுத்துவதற்கும் தனித்தனியாக ஆட்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும். அப்படி அரசாங்கம் போடுவதற்கில்லையானால் பஞ்சாயத்துகளுக்கே அந்த அதிகாரத்தைக் கொடுத்து அந்த ஆட்களை நியமித்து அரசாங்கம் சம்பளம் கொடுக்கச் செய்ய வேண்டும். இந்த ஏற்பாட்டினால் பஞ்சாயத்தில் தினமும் விளக்குகளை ஏற்றவும் நிறுத்தவும் உதவியாக இருக்கும்.

சில இடங்களில் கம்பம் நட்டு 3, 4 மாதங்கள் ஆகியும் வேலை ஒன்றும் நடைபெறாமல் உள்ளது. என்னுடைய பஞ்சாயத்து யூனியனிலே இருக்கின்ற இடத்திற்கு அருகில் கம்பம் நட்டு 4 மாதம் ஆகிறது. அதிகாரிகள் உத்தரவு போட்டு இருப்பார்கள்.





ஆனால், கீழே உள்ளவர்கள் அதைச் செய்வது கிடையாது. ஏன் என்று கேட்டால் ரகசியமாகச் சொல்லுகிறார்கள், அரசாங்கத்திற்கு வேண்டிய பஞ்சாயத்துத் தலைவர் அவர்களுக்கு வேண்டிய ஒருவருக்குச் சாதனங்களை அனுப்பி விட்டார்கள், அதனால் போட முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் கூட்டுக் கட்சியைச் சார்ந்தவன். என்னுடைய இடத்திற்கே இப்படி என்றால் மற்ற இடங்களைப்பற்றி எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நிலைமை என்னுடைய இராமநாதபுரம் ஜில்லாவில் ஜாஸ்தியாக இருக்கிறது. சில இடங்களைக் குறிப்பாக எடுத்துக் கொண்டு செய்வது மோசமாக இருக்கிறது. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் எங்கள் இராமநாதபுரம் ஜில்லா 20 வருஷங்களாகப் பாதிக்கப்பட்டு இப்போதுதான் தப்பித்து இருக்கிறோம். இப்போதும் அந்த நிலைமை இருக்கிறது என்றால் மக்கள் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பதைக் கண்கூடாக, நேரடியாகப் பார்த்தாலே தெரியும் என்போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் கம்பத்தை நட்டு லைட் பொருத்தப் படாமல் இருந்தால் என்ன பிரசாரம் செய்கிறார்கள் உங்கள் சட்டமன்ற உறுப்பினருக்குத் திறமை போதவில்லை என்றுகூடப் பிரசாரம் செய்கிறார்கள். ஆகவே நானும்தான் பஞ்சாயத்துத் தேர்தலிலே போட்டியிட்டு பிரசிடெண்ட் ஆகியிருக்கிறேன். அதிலேகூட இந்தக் காரணத்திற்காக எனக்குச் சில ஓட்டுகள் குறைந்து இருக்குமோ என்று கூட நான் கருதுகிறேன். இந்த நிலைமையிலே நமது ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலிலே மின்சார அதிகாரிகள் வருகிறார்கள். அந்தக் கூட்டத்தில் அவர்கள் ஒருமாதத்தில் எங்கெங்கு மின்சாரம் கொடுத்தோம்; எங்கெங்கு முடிந்தது என்று அந்தக் கூட்டத்தில் அறிக்கை வைப்பதில்லை. அப்படி வைப்பார்களேயானால் தனக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்திருந்தால் அதுபற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்** : தலைவர் அவர்களே, மின்சார வாரிய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர்கள், குறிப்பாக எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் இந்த வாரியத்தைக் குறைகூறியும், இந்த வாரியம் என்ன சாதித்து இருக்கிறது என்று கேள்விக்கணைகளைத் தொடுத்துவிட்டு அமர்ந்திருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திரு. பலராமன் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே மின் இணைப்புகள் கொடுக்கவில்லை, கொடுத்திருப்பதுகூடக் குறைவு என்ற குற்றச்சாட்டைக் கிளப்பியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுத்து ஓரளவு எனக்குத் தெரிந்தவரையில் பதில்சொல்லக் கடமைப்பட்டிருக்

[திரு. கொளத்தூர் கோதண்டம்] [1970 ஆகஸ்ட் 27

கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் 30—4—70 வரையில் ஏறக்குறைய 88,145 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 30—6—70 வரை எடுத்துக்கொண்டால் 90,146 இணைப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். மின் இணைப்புப் பெறுவதிலே முதலாவதாக ஸ்தானத்தை கோயம்புத்தூர் மாவட்டமும், இரண்டாவதாக ஸ்தானத்தை வட ஆற்காடு மாவட்டமும் பெற்றிருக்கிறது. ஆனால் சொல்கின்ற குற்றச்சாட்டு எங்களுக்குக் கொடுக்கவில்லையென்பது. நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருந்தால் அவற்றைப் பாராட்டுவதற்கு அந்த நல்லவர்களுக்கு மனம் இல்லையே என்று நினைத்துப்பார்க்கிற சூழ்நிலைதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. செய்யப்பட்டிருக்கின்ற காரியங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே செய்யப்படவில்லை எந்தக் காரியமும் நடைபெறவில்லை என்பதுபோல் பேச்சு வருகிறது.

அவர்களுக்குச் சில புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்வதில் தவறில்லை என்று நினைக்கிறேன். 1951-முதல் 1966 வரையில் நடைபெற்ற வேலைகளையும் 1967 முதல் 1970 வரையில் நடைபெற்ற வேலைகளையும் பற்றிய விவரங்களை அவர்கள் புரட்டிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1951-66 வரை 22,137 கிராமங்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே 1967-முதல் 1970 வரையில் ஏறக்குறைய நான்கு ஆண்டுகளிலே 35,667 கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.' அவர்கள் 15 ஆண்டுகாலத்திலே செய்ததை நிச்சயமாக 4 ஆண்டுகாலத்தில் அதிகமாக நாங்கள் செய்திருக்கிறோம். 1951 முதல் 1966 வரையில் ஏறக்குறைய 3,56,594 மின் இணைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் 1969 வரை 4,70,000 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் 15 ஆண்டுகாலத்தில் செய்ததை வரவேற்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் உங்களுடைய வேகத்திற்கும் எங்களுடைய வேகத்திற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நான்கு ஆண்டுக்காலத்தில் நீங்கள் 15 ஆண்டுகாலத்தில் செய்ததை நாங்கள் செய்திருக்கிறோம், அதற்காக நான்கு நல்ல வார்த்தைகள் நீங்கள் சொல்வீர்கள் என்றுதான் எதிர்பார்த்தோமே தவிர நீண்ட நேரம் புகழவேண்டுமென்று சொல்லவில்லை. பாராட்டுகிறபோது நல்லகாரியத்தைச் செய்தவர் தொழிலாளியாக இருந்தாலும், தலைவராக இருந்தாலும், பொறுப்பேற்று இருக்கிற அமைச்சராக இருந்தாலும், அரசாக இருந்தாலும் நாட்டு மக்களுக்கு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்ற காரணத்தினால் நான்கு நல்ல வார்த்தைகள் சொன்னால் நல்லபடியாக இருக்கும். எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறபோதுதான் இதையெல்லாம் நாங்கள் சொல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சாதனைகளை நீங்கள் இல்லையென்று சொல்கிறபோதுதான் நாங்கள் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.



1970 ஆகஸ்டு 27] [திரு. கொளத்தூர் கோதண்டம்]

கிராமங்களைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு வேலைகள் நடந்திருக்கின்றன என்பதைப் பார்ப்போம். 1969-ஆம் ஆண்டு வரையிலும் 60,784 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1970-71-ஆம் ஆண்டிலே இந்த நான்கு மாத காலத்திலே ஏறக்குறைய 15 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்கு மாதத்திலே 15 ஆயிரம் கொடுத்திருக்கிறோம், மீதம் மாதங்கள் இருக்கின்றன என்பதை நண்பர்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். காரியங்களை எந்த அளவிற்கு விரைவாகச் செய்யமுடியுமோ அந்த அளவுக்குச் செய்துவருகிறோம். கிராமங்களுக்கு மின்சார இணைப்பு உடனடியாகத் தரப்படவேண்டும். படிப்படியாக எல்லாக் கிராமங்களுக்கும் தரப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மற்றக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நேரத்திலே அதற்காக உழைத்த மின்வாரிய ஊழியர்களையும், பொறியாளர்களையும், தலைவர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் பொது மக்களின் சார்பாக.

விவசாயங்களுக்கும் மற்றக் காரியங்களுக்கும் செய்வதைப் போல் இந்த மின்வாரியம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இந்த வகையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கின்ற நேரத்திலே நம்முடைய மாநிலம் இந்த வகையிலே மேல் நிற்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் மறந்துவிட்டாலும் ஏடுகள் மறக்காது. மற்ற மாநிலங்களைப் பார்க்கிற நோக்கிலே எந்த எந்த அளவுக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஆந்திராவிலே 42 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. கேரளாவிலே 18 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது, மைசூர்மாநிலத்திலே 26,700 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்திலே ஏறக்குறைய 71,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பைத் தந்திருக்கிறோம். எனவே அதிலேயும் செய்யவேண்டிய காரியத்தைச் செவ்வனே. சிறப்பாகச் செய்திருக்கிறோம். அப்படிச் செய்திருக்கின்ற வாரியத்திற்கு உள்ள பிரச்னைகளைப்பற்றியும் நாம் கவனிக்க வேண்டும். அந்த அளவிற்கு வேலைவாய்ப்பைக் கொடுத்த மின்சார வாரியத்திற்கு நாம் உளமார, நன்றியுணர்வோடு, இதய சுத்தியோடு பாராட்டுதல் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் செய்ததைச் சீரோடும் சிறப்போடும் செய்திருந்தாலும் அவர்களுக்குள்ள பிரச்னைகளையும் நாம் ஆராயவேண்டும். மேலும் அவர்கள் சிறப்பாகச்செய்வதற்கு மேலும்பல ஆதரவுகளை நாம் தரவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல் மாநிலத்திற்கு மாநிலம், அரசுக்கு அரசு விதிக்கின்ற மின்சாரக் கட்டணம் வேறுபட்டு இருக்கிறது. சில மாநிலங்களிலே விருப்பத்திற்கேற்ப உற்பத்தியைப் பொறுத்து குறைவாகவும் அதிகமாகவும் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற நிலைமை இருப்பதால் அதிகமான விலைகொடுத்து சில மாநிலங்கள் வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மின்சாரக் கட்டணம் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே தொழிலதிபர்கள் தொழில்களைத் துவங்கத் தயங்குகிறார்கள். மின்சார கட்டணம் குறைவாக இருக்கிற இடத்திலே வேறு சூழ்நிலை இருக்கிறது. இதனாலே ஒரு 'அன்ஹெல்தி காம்பெடிஷன்' உருவாகிறது. எல்லா மாநிலங்களிலும் ஒரே அடிப்படையில் மின்சாரக் கட்டணம் இருக்கவேண்டும் என்று மத்திய அரசு இதிலே ஓர் ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அந்த வகையில் 'பவர் பூல்' செய்து மாநிலங்களுக்கு ஒரே விலைக்குக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்யும் வகையில் நம்முடைய அரசு குறிப்புகளை அனுப்பவேண்டும். இந்தியத் துணைக் கண்ட ரீதியிலே அப்படிச் செய்யாவிட்டாலும்கூட தெற்கேயுள்ள நான்கு மாநிலங்களைப் பொறுத்தவரையிலாவது அப்படியொரு திட்டத்தை உருவாக்கி ஒரே சீராகக் கட்டணத்தை ஆக்கினால் அன்ஹெல்தி காம்பெடிஷன் நிச்சயமாகக் குறையும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியக் துணைக்கண்ட ரீதியில் இல்லாவிட்டாலும், தென் மண்டல ரீதியில் இதை உடனடியாக ஏற்பாடு செய்து இந்த 4 மாநிலங்களிலும் ஒரேவகையான கட்டணத்தை உருவாக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, மாவட்ட ரீதியிலே ஆலோசனைகுழு ஏற்படுத்தி, அந்த ஆலோசனைக் குழுவின் மூலம், இருக்கின்ற காரியங்களை நாம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு ஏ.ஈ., அலுவலகத்திலேயும் தொலைபேசி அமைக்க வேண்டும். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு திரு. அம்பலம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் மீட்டர் அமைக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களை உடனடியாகச் செய்து தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் மின்சார வாரியத்தைப் பாராட்டி மாநிலத்திலே மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்டத்திலும் நல்லபெயர் பெற்று, நல்ல காரியத்தை ஆற்றிவரும் தமிழக மின்வாரியத்தைப் பாராட்டி அவர்கள் செய்திருக்கும் எல்லாக் காரியங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. பி. வேலுசாமி :** தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின்பேரில் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ற பட்ஜெட்டிலே மின்சாரத்தை, விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையிலே, ஒரு யூனிட்டிற்கு எட்டேகால் பைசா என்று இருப்பதை 10 காசு என்று மாற்றப்பட்டு, 75 அடிக்குக்





கீழே இருப்பவைகளுக்கு 9 காசு என்றும் அதற்கு மேலே இருப்பவைகளுக்கு 10 காசு என்றும் நிர்ணயித்தார்கள். சாதாரண விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்களிலே இந்த மாநிலத்திலே மொத்தமாக 67 இலட்சம் ஏக்கராவுக்குப் பாசனத்தில் இருப்பவர்கள். 15 லட்சம் ஏக்கரா நிலப்பரப்பிலே உள்ளவர்கள் தண்ணீரை பம்பு செட்டு வைத்து இறைக்கிறார்கள். இந்த 15 லட்சம் ஏக்கராவில் விவசாயம் செய்யும் விவசாயிகள், ஒரு ஏக்கரில் விவசாயம் செய்ய வேண்டுமென்றால் ஒரு வருஷத்திற்கு 300 ரூபாயிலிருந்து 1000 ரூபாய்வரை ஆகிறது, கோவை ஜில்லாவிலே. அதுமட்டுமல்லாமல், 55 இலட்சம் ஏக்கராவில் விவசாயம் செய்பவர்களுக்கு, குளத்து நீரைப் பாய்ச்சி ஆற்று நீரைப் பாய்ச்சி விவசாயம் செய்பவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு வருஷம் ஒன்றுக்கு 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை ஆகிறது. அம்மாதிரியாக விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு 55 லட்சம் ஏக்கராவில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு 20 ரூபாயிலிருந்து 30 ரூபாயும், 15 இலட்சம் ஏக்கராவில் விவசாயத்தில் ஈடுபட்டு, கிணற்றை வெட்டி மோட்டாரை வைத்து, பம்பு வைத்து, இந்தப் பணத்தையெல்லாம் ஈடுபடுத்தி விவசாயம் செய்யும் அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 300 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை செலவாகிறது என்றால் அப்படிச் செலவழிப்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம் என்று அரசுக்கு விண்ணப்பித்தோம். அன்றையதினம், இன்றிருக்கும் மின்சார அமைச்சர், முதல் அமைச்சர், பொதுப்பணி அமைச்சர், தொழில் அமைச்சர் இவர்கள் முன்பாக இது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக நாங்கள் வந்திருந்தோம். ஒருநாள் அல்ல, மூன்று நாட்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். அப்படிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் ஒரு பைசாவைக் குறைக்க அரசு அன்றைக்கு இணங்கவில்லை. அதற்குப்பிறகு அங்கிருக்கும் விவசாயிகள் எழுந்து நின்று போராடத் தயாரானார்கள். நான் நீண்ட நாட்களாகப் பொதுவாழ்விலே இருப்பவன். நான் வெள்ளைக்காரன் அடிப்பதைப் பார்த்திருக்கிறேன். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அடிப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் மூன்றாவதாக இவர்கள் அடித்த அடி இருக்கிறதே அது சகிக்க முடியாத அடியாக இருந்தது. அம்மாதிரியாக ஏன் நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், அன்றையதினம், அந்தப் போராட்டத்திலே அகிம்சா முறையிலே போராடுகிறோம் என்று அங்கிருக்கும் கலெக்டருக்கும் சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்கும் நேராகச் சொன்னோம். எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காமல், அமைதியாக நாங்கள் போராட்டம் செய்கிறோம் என்று சொன்னோம். அமைதியாக இருந்த நேரத்தில் என்னையும், என்னைச் சார்ந்திருக்கும் நண்பர்களையும் அங்கே போலீஸ் வேனிலே ஏற்றி விட்டார்கள். இதற்கு முன்பெல்லாம் அடிப்பது என்றால் சாதாரண கான்ஸ்டேபிள்ஸ் அடிப்பார்கள். ஆனால் அன்று போலீஸ் டி.எஸ்.பி.-யே லத்தியை வாங்கி கொஞ்சமும் இரக்கம் இல்லாமல், நாய்களையும், பேய்களையும் அடிப்பதைப் போல் மனிதர்களை

அடித்தார்கள், சிறைக்குள்ளே தள்ளப்பட்டார்கள். அப்பொழுது இந்த ஒரு காசு குறைவிற்காகவேண்டி 1,500 பேர்களின் மண்டைகள் உடைந்தன. கால்கள் உடைந்தன, கைகள் உடைந்தன, பலர் சிறைக்குச் சென்றார்கள். அத்துடன்கூட 3 பேர்கள் உயிரிழந்தார்கள். இத்தனை கஷ்டங்களுக்குப்பிறகு, 19-ஆம் தேதி இரவு அமைச்சர்கள், அங்கே 9 காசு என்று அறிவித்தார்கள் என்று சொன்னால் இந்த அரசிடம், போராடித்தான் ஏதாகிலும் சலுகைகள் பெற வேண்டும் என்ற கொள்கை இந்த அரசுக்கு இருக்கிறதா என்பது சந்தேகமாகயிருக்கிறது.

சாதாரணமாக இதுவரையிலும் நடைமுறையிலே, பாரம்பரிய வழியிலே ஒன்று உண்டு. அகிம்சா வழியிலே, நியாயமான வழியிலே போராட்டம் நடத்தும்பொழுது மற்றவர்களும் அகிம்சா முறையிலே நடத்த வேண்டும். ஆனால் இப்பொழுது அகிம்சா முறையிலே வந்ததற்குக் கிடைக்கும் பலன் அடியும் உதையும் மண்டை உடையும் என்றால் பழைய வெள்ளைக்காரர்களுக்கு இருந்த இரக்க உணர்ச்சிகூட இவர்களுக்கு இல்லாமல், இரக்கமின்றி அடித்து நொறுக்கக்கூடிய நிலைமையை அன்றையத்தினம் பார்த்தோம்.

இப்படிப்பட்ட முறையில் செய்யும் அதேநேரத்தில், மின்சார வாரியத்தின் குறிப்பில் இன்னொன்றைப் பார்க்கிறேன். அதில் கூறப்பட்டிருக்கிறது, தொழிற்சாலைகளுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுப்பதால் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாயிலிருந்து 6 கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிறது என்று. இந்த 5 கோடி முதல் 6 கோடி ரூபாய் வரையிலான நஷ்டம் எங்கே ஏற்படுகிறது. சாதாரணமாக, மெட்ராஸ் அலுமினியம் பேக்டரி, விஸ்கோஸ் பேக்டரி, ஜேம் பாக்டரி. தாரங்கதாரா கெமிகல் பேக்டரி இவைகளினால் நஷ்டம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பெரும் தொழிற்சாலைகளினால் நஷ்டம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பெரும் தொழிற்சாலைகளுக்கு 4 காசு, 3 காசு, 8 காசு என்று சாதாரணமாக அவர்களுக்குக் கொடுக்கும்பொழுது, இந்த ஏழை விவசாயிகளுக்கு, அதுவும் ஏற்கெனவே இருக்கின்ற நிலையில் வாழமுடியாத நிலைமையிலே, அவர்கள் உபயோகப்படுத்தும் தன்மையிலே, தண்ணீரை உபயோகப்படுத்தும் தன்மையிலே, விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கும்பொழுது, அவர்கள்மேல் இப்படி பாரபட்சமற்றமுறையிலே விவசாயிகளை நடத்தும்பொழுது, விவசாயிகளின்பேரிலே இந்த அரசுக்குக் கருணை இருக்கிறதா என்பது அச்சத்திற்கும், ஐயத்திற்கும் உரியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, இன்னும்கூட சொல்லப்போனால், சாதாரணமாக மின்சாரம் மூன்று வகைகளில் உபயோகப்படுத்தப்படுகிறது. ஒன்று பம்பு செட்டுகளுக்கு, இரண்டாவது வீடுகளுக்கு, மூன்றாவதாக தொழிற்சாலைகளுக்கு. இதில் தொழிற்சாலைகளுக்கும், பெரிய வீடுகள், மாடி வீடுகள், "ஆல் பர்பஸ் ஹோம்." இம்மாதிரி உள்ள பெரிய வீடு



களுக்கு யூனிட் ஒன்றுக்கு 14 காசுகள். ஆனால் இங்கிருக்கும் சாதாரணக் குடிசையிலே வாழும் மக்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 33 நயாபைசா. ஏன் இந்தத் தன்மை என்று போன சட்டமன்றக் கூட்டத்தில் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது நான் கேட்டேன். ஆனால் இன்றும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், மின்சாரத்தை அதிகமாக உபயோகப்படுத்துபவர்களுக்கு சலுகை அளிக்க வேண்டியது இயற்கை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் மின்சாரத்தை அதிகமாக வேறு ஏதாவது வகையிலே, கல்யாணம் அல்லது வேறு ஏதாவது காரியங்களுக்காகச் செலவு செய்தால், அதிகப்படியான யூனிட்டுகளைச் செலவிட்டால் அங்கேயும் குறைத்துக் கொடுப்பதற்குத் தயார்தானா? அப்படிப்பட்ட கொள்கை இருக்கிறதா? இத்தனை யூனிட்டுகளுக்கு மேலே செலவு செய்பவர்களுக்கெல்லாம் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுப்போம் என்று வரையறுத்து கொள்கையாக வைத்தால் நாம் போற்றுவோம். ஆனால் மாடி வீடுகளில் அதிகமாக மின்சாரம் உபயோகப்படுத்துபவர்களுக்கு 14 காசுகள் என்றும், குடிசைகளில் வாழ்பவர்களுக்கு 33 காசு என்றும் வைத்தால் அது இந்தச் சமூகத்திலே என்ன நியாயம் என்று கேட்கிறேன். வசதியுடையவர்களுக்கு, சௌகரியமுடையவர்களுக்கு 14 காசுகள் என்று சலுகையும், இங்கே சாதாரணமாக இருக்கும் ஏழை எளியவர்களுக்கு 33 காசுகள் என்று கொடுப்பதும் எந்த வகையிலே நியாயம்? ஆகவே, இந்த மின்சாரவாரியத்தைப் பொறுத்தவரையிலேயும், வசதி படைத்தவர்களுக்கு ஒரு முறையும், சாதாரணமாக இருக்கும், குக்கிராமத்திலிருப்பவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு ஒருமுறையும் கடைப்பிடிக்கப்படுகிறது.

எனக்கு முன்பு பேசியவர்கள் சில புள்ளிவிவரங்களையெல்லாம் கொடுத்தார்கள். மற்ற மாநிலங்களிலே எப்படி இருக்கிறது, இந்த மாநிலத்திலே எப்படி இருக்கிறது என்பதற்குப் புள்ளிவிவரம் கொடுத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். கேரளாவிலே 8 காசுக்கு ஒரு யூனிட் என்று கொடுக்கிறார்கள் சாதாரண விவசாயிகளுக்கு. மைசூர் மாநிலத்திலே 10 காசுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் அங்கே சர்சார்ஜ் கிடையாது. இங்கே 9 காசுக்குக் கொடுக்கிறோம். ஆனால் 20 பர்சென்ட் சர்சார்ஜ், ஆக 11 காசாக ஆகிறது. அண்டையிலுள்ள இரண்டு மாநிலங்களிலும் நம்மைவிடக் குறைவான கட்டணத்திற்கு மின்சாரம் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** எந்த மாநிலத்திலே குறைவான கட்டணத்தில் மின்சாரத்தைக் கொடுக்கிறார்கள்?

**திரு. பி. வேலுசாமி:** கேரளாவிலும், மைசூர் மாநிலத்திலும்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நம்மைவிட அதிகமாகக் கொடுக்கிறார்கள். மைசூரிலே கொடுக்கப்படுவது கிட்டத்தட்ட 10 பைசா. 9.9 பைசாவுக்குக் கேரளாவிலே கொடுக்கிறார்கள். இங்கே 9 பைசா. மற்ற மாநிலத்திலே அதிகமாகக் கொடுக்கப்

படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன் @.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சர்சார்ஜையும் சேர்த்து 11 காசு என்று சொல்லுகிறார்கள்.

**திரு. பி. வேலுசாமி :** அண்டையிலுள்ள மாநிலத்திலேயே பார்ப்போமே பக்கத்து மாநிலத்திலே சர்சார்ஜ் கிடையாது. ஆகவே, அண்டை மாநிலத்திலே இதற்கும் குறைவுதான். அது மட்டுமல்ல இந்தியா முழுவதும் எடுத்துக்கொண்டால் சென்னை மாநிலத்திலே இருக்கும் பம்பு செட்டுகள், மோட்டார்கள் வேறு எங்கும் கிடையாது.

பம்ப் செட்ஸ், மோட்டார்களை வைத்துக் கொண்டு விவசாயம் செய்கிறவர்கள் அதிகமாக இருப்பது இந்திய உப கண்டத்திலேயே சென்னை மாநிலத்தில்தான். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பது சம்பந்தப்பட்டவரை மாறான கொள்கை இருக்க வேண்டியது அவசியம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு இந்த மின்சார வாரியத்தில் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்லி முடிக்கிறேன்.

*** திரு. மா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையையும், துணை நிதிநிலை அறிக்கையையும் வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அருமை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கு ஏதோ 'ஷாக்' அடிக்க வைத்து விடுவதுபோல். . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்கள் எலக்ட்ரிசிடியில் கரெண்ட் இல்லை, ஆகவே, ஷாக் அடிக்கவில்லை.

**திரு. மா. இராசாங்கம் :** அவர்கள் ஆட்சியில் நான் அந்த 'ஷாக்'கை அனுபவித்திருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்கள் காலத்தில் 'ஷாக்' அதிகம் என்பதை ஒத்துக் கொள்ளுகிறீர்களா?

**திரு. மா. இராசாங்கம் :** மின்சார வாரியத்தினர் ஆற்றி இருக்கும் பணியைப் பாராட்ட வேண்டும். குற்றமே இல்லையென்று சொல்லுவதற்கு நான் முன்வரமாட்டேன். குற்றம் இருக்கிறது. எப்படிப்பட்ட குற்றம்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சகிக்க முடியாத குற்றம்.

**திரு. மா. இராசாங்கம் :** இலையிலே சோற்றைப் போட்டு உண்ணும்போது சோறு சிந்துவது போன்ற அப்படிப்பட்ட தவறுகள்தான் இருக்கின்றனவே தவிர பெரிய குற்றம் எதுவும் இல்லை. 'லட்டு'ப் போல் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். மாநில நிதிநிலையில் மூன்றில் ஒரு பங்கை இதற்காகவே ஒதுக்கியிருக்கிறோம்.

@ திருத்த அறிக்கை இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



கோடைக் காலத்தில் கூட மின்வெட்டுகளே கிடையாது. நான்கு கோடி ரூபாய்க்கு மேல் சம்பள உயர்வாகக் கொடுத்திருக்கிறோம். எவ்வளவோ பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறோம். உணவு உற்பத்தி பெருகியிருக்கும் கணக்கில் இருந்து இந்த வாரியம் எப்படி வேலை செய்து வந்திருக்கிறது என்பதை விவசாயத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நல்லசாமி அவர்கள் மின்சார உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஐந்தாண்டுத் திட்டங்கள் இல்லாத நேரத்தில் நாங்கள் இந்த அளவுக்கு நடத்திக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். விவரம் தெரிந்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். 1969-70-ல் மட்டும் 35,677 ஊர்களுக்கு விளக்கேற்றி இருக்கிறோம். ஒரு வருஷத்தில் இது குறைந்த எண்ணிக்கையா? விசையேற்றங்கள் நான்கு லட்சத்திற்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் வந்த பிறகு கொடுத்தது நான்கு லட்சம் பம்ப் செட்டுகளா? 1966-67-ம் ஆண்டுக்குப் பிறகு எவ்வளவு?

**திரு. மா. இராசாங்கம் :** கடந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் இரண்டு லட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. புள்ளிவிவரம் கூறுகிறது. உண்மையான காரியம். (திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் அருகில் இருந்து சில குறிப்புக்களைக் கூறிக் கொண்டிருந்தார்).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டசபையில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது பக்கத்தில் இருப்பவர் ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கலாமா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. ஆர். கோவிந்தன்) :** அங்கத்தினரைப் பேசவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மா. இராசாங்கம் :** சட்டசபையில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது ஒலிப்பெருக்கியில்தான் இன்னொருவர் பேசக் கூடாதே தவிர, பக்கத்தில் இருந்து சொல்லக்கூடாது என்று ஒன்றும் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எந்த விதியில் அவ்வாறு இருக்கிறது?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. ஆர். கோவிந்தன்) :** வெளிப்படையாகச் சொல்லித்தரவில்லை. அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம்.

**திரு. மா. இராசாங்கம்:** உங்களுடைய 20 ஆண்டு கணக்கையும், கடந்த மூன்றரை ஆண்டுக் கணக்கையும் நாட்டு மக்கள் புள்ளி விவரத்தோடு அறிவார்கள். சோலையாறு முதற் பகுதி, இரண்டாம் பகுதி இரண்டும் நடைமுறை ஆண்டில் இயங்குகின்றன என்றால் எந்த அளவுக்கு உற்பத்தியைக் கொடுக்கப் போகிறது என்பதை எல்லோரும் நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்தின் முதற் பிரிவு, இரண்டாம் பிரிவில் முறையே 60 மெகா வாட், 110 மெகா வாட் உற்பத்தி; கோதையாறு திட்டத்தில் 100 மெகா வாட் உற்பத்தி; இவை எல்லாம் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் திட்டங்கள். நான்காவது திட்ட காலத்தில் இந்த வாரியத்தின் மூலமாக ஆறு திட்டங்கள் வர இருக்கின்றன. அந்த ஆறு திட்டங்களில் என்னுடைய தொகுதியைப் பொருத்தமட்டில் சுருளியாறு திட்டம் நிறைவேற இருக்கிறது. அதற்காக சர்க்காருக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். விரைவுத் திட்டம் என்று கொண்டுவரப்பட்டு அதை நிறைவேற்ற வாரியத்தின் ஊழியர்கள் வெகுவாகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று முன் தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் மின்சார வாரியத்தில் இருப்பவர்கள் ஸ்ட்ரைக் செய்ய ஏன் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அவர்கள் வேலைநிறுத்தம் செய்வதால் ஏற்படும் விளைவுகள் என்ன? குறிப்பிட்ட நாளில் தமிழ் நாட்டை இருட்டாக்கினார்கள். அப்படிப்பட்ட நிலையை வரவேற்க முடியுமா? அதனால் எவ்வளவு இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன? இந்த நாட்டில் வெளிச்சத்தை ஏற்படுத்தத்தான் வந்திருக்கிறோமே தவிர, இருட்டாக்குவதற்கு வரவில்லை. அப்படி அவர்கள் வேலைநிறுத்தம் செய்த சமயத்தில் அதில் கலந்து கொள்ளாத ஊழியர்கள் நிலைமையை முழுத்திறமையோடு சமாளித்ததற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரம் என்பது ஒரு லக்சுவரி பொருள் அல்ல. அது ஒரு 'எஸென்ஷியல் கமாடிடி' என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறார்கள். அப்படி நிறைவேற்றுகிறபோது பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிணற்றிலே தண்ணீரும், கிணற்று மேட்டிலே மோட்டாரும் வைத்தவுடன் மின்சாரக் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அந்த நிலைமையை ஏற்படுத்தினால்தான் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இருக்கிற குறையைத் தீர்த்தவர்களாவோம். இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கும் நிலையில் இந்த வாரியத்தின் மூலம் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திருக்கும் சர்க்காரைப் பாராட்டுகிறேன்.





மின்சாரக் கட்டணத்தைப் பற்றிச் சொன்னார்கள். 1971-72-ல் எல்லா ஊர்களுக்கும் மின்விளக்கேற்றி வைக்க வேண்டுமென்ற திட்டத்தைப் போட்டிருக்கிறோம். அதற்கு எந்த அளவுக்கு நிதி நிலை இருக்கவேண்டுமென்பதை அனைவரும் அறிவார்கள். ஒரு பைசாதானே, அதைக் குறைத்து விடக் கூடாதா என்று எளிதாகச் சொல்லலாம். ஆனால் அந்த ஒரு பைசா தட்டுப்பாடு 1972-க்குள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையை ஏற்படுத்திவிடக் கூடும். ஆகவே, எல்லாக் கிராமங்களுக்கும் 1972-க்குள் மின்சாரம் கொடுப்பதற்காக திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

***திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை அச்சிட்டு இந்த வாரியம் அவைகளின் மேல் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதையும் இந்த ஆண்டும் வழக்கம்போல் கொடுத்திருக்கிறார்கள். இதே போல் மானியக் கோரிக்கைகளின்மீது உறுப்பினர்கள் கூறும் கருத்துக்களின்மீது அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன என்பதையும் அச்சிட்டுக் கொடுத்தால் நன்றாகயிருக்கும்.

பொதுவாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடந்த மூன்றாண்டுகளாக வெளிச்சம் போட்ட விஷயத்தை ஆரவாரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த அளவிற்கு மின்சாரம் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தது யார், யார் இதற்கு அடிக்கல் நாட்டினார்கள், மற்ற மாநிலங்களைவிடத் தமிழ் நாடு மின்சார அபிவிருத்தியில் முன்னணியில் நிற்கக்கூடிய விதத்தில் பணியாற்றியவர்கள் யார், தமிழ் நாட்டிலுள்ள ஆறுகளில் உள்ள தண்ணீரை ஒரு சொட்டு கூடப் பாழாக்காமல் அணைகள் கட்டியது யார் என்பதையெல்லாம் பற்றி யாராவது ஒருவராவது அந்தப் பக்கத்திலிருந்து பேசினார்களா என்றால் இல்லை. அவற்றைச் செய்த காங்கிரஸ் கட்சியைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன், ஆனால் அப்படிப் பாராட்டவில்லை. பாதகமில்லை. ஆனால், பொது மக்கள் பாராட்டுவார்கள் என்று கூறி என் உரையை ஆரம்பிக்கிறேன்.

மின்சார வாரியத்தின் அமைப்பும் நிர்வாகமும் செக்ஷன் ஆபீஸ் முதல் தலைமைப் பொறியாளர் அலுவலகம் வரையில் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததைப் போலவே இன்னும் இருக்கிறது ஆகவே, இந்த அலுவலகங்களை சீரமைப்புச் செய்யவேண்டுமென்ற கருத்தை எங்கள் தரப்பிலிருந்து சென்ற முறையும் சொன்னோம், இப்போதும் சொல்கிறோம். முன்பெல்லாம் மின்சாரத்தை உபயோகிப்பவர்களின் தொகை குறைவு. ஆனால் இன்று நாகரீகம் வளர வளர மின்சாரத்தை உபயோகிப்போரின் மக்கள் தொகையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆக, இன்று

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஆகஸ்ட் 27

மூலை முடுக்குகளில் எல்லாம் மின்சாரம் பரவிடத்தக்க வகையில் இத்துறை சீரமைப்பு செய்யப்பட வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று மின்சார வாரியத்தில் மின்சாரம் விநியோகித்தல், பேணுதல், தணிக்கை பிரிவு, கட்டுமான பிரிவு, வருமான பிரிவு, பில் போடுதல் பிரிவு என்று பல பிரிவுகள் இருப்பதால் பொதுமக்களுக்கும், குறிப்பாக விவசாயிகளுக்கும் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்த வாரியம் சீரமைப்பு செய்யப்பட வேண்டும். சாதாரண மக்கள் மின்சாரம் பெற வேண்டுமென்றால் ஒரு அலுவலகத்திலிருந்து இன்னொரு அலுவலகத்திற்கு பந்தாடப்படுகிறார்கள். இந்தக் கருத்தை எங்கள் தரப்பிலிருந்து மட்டும் சொல்லவில்லை. அதிகாரிகளும் இதை உணருகிறார்கள் என்று கருதுகிறேன். வாரியத்தின் தலைவர் அண்மையில் மதுரை—இராமநாதபுரம் மின் திட்டத்தைப் பார்வையிட்டபோது இதே கருத்தை வலியுறுத்திக் கூறி இருப்பதாக நான் அறிகிறேன்.

There is much criticism that the various wings of the department viz. operation and maintenance commercial items revenue, buildings and cash section-function without proper co-ordination. Prospective consumers are simply tossed from office to office and they are at a loss to know who is the proper authority to be approached. Such a state of affairs should be stopped forthwith.

என்று அவர் அலுவலகக் குறிப்பு எழுதியிருப்பதாக அறிகிறேன் இதுமாதிரியான அமைப்புகளை வைத்துக்கொண்டு குறிப்புகள் எழுதுவதால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. எய்தவன் இருக்க அம்பை நோவதில் பயன் இல்லை. விரைவில் இந்த வாரியம் சீரமைப்பு செய்யப்படவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

நம் மாநிலத்தில் மொத்தம் 12,000 ஹரிஜன குடியிருப்புகள் இருக்கின்றன. இதில் 5,340 குடியிருப்புகளுக்கு மட்டும்தான் இன்றையதினம் வரை மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார துறையிலும் சமூகத் துறையிலும் பின்தங்கிக் கிடக்கக் கூடிய இந்த ஹரிஜன மக்களின் குடியிருப்புகளுக்கு எல்லாம் விரைவில் மின்சாரம் கொடுக்கக்கூடிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் சென்ற முறை சட்டப் பேரவை கூடிய போதும் சரி, இந்த முறையும் சரி, அதிகமாக வலியுறுத்தப்படுவது விவசாயிகளின் உபயோகத்திற்காக கொடுக்கப்படும் மின்சாரத்தின் கட்டணம் 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தப்பட்டதாகும். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 8¼ பைசாவிற்கு விவசாயிகளுக்கு விவசாய உபயோகத்திற்காக மின்சாரம் கொடுக்கப்பட்டு வந்தது. அது ஏழு பைசாவாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இவர்களைப் பாராட்டலாம் ஆனால் அதை பத்து பைசாவாக உயர்த்திவிட்டு ஏதேதோ காரணங்களைச் சொல்கிறார்கள். மின்சாரத்தைத் தயாரிக்க யூனிட் ஒன்றுக்கு 1



1970 ஆகஸ்ட் 27] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பைசா செலவாகிறது என்று சொல்கிறார்கள். இந்த மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய மொத்த மின்சாரத்தை பயன்படுத்துகிறவர்கள் 25 சதவிகித விவசாயிகள். 49 சதவிகித தொழில்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து அதைத் தொழில்களுக்காக உபயோகப்படுத்தப்படும் கட்டணத்தோடு சற்று அதிகமாக்கியிருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது.

கோவையில் விவசாயத்திற்காகும் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தா கொடுத்தார்கள்? குறைத்துக் கொடுக்கவில்லை. அங்குள்ள விவசாயிகள் மின்சாரம் கட்டணத்தை 8¼ பைசாவுக்கும் கீழே குறைக்கவேண்டுமென்று கேட்டார்கள்? ஒன்றே முக்கால் பைசா உயர்த்தியிருக்கிறீர்களே, அதைக் குறையுங்கள் என்றுதான் கேட்டார்கள். விவசாயிகளின் அரசு என்று தம்பட்டம் செய்யும் இந்த அரசு அவர்களுக்குச் சலுகை செய்வதை விடுத்து கட்டணத்தை அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள். பல்வேறு தடவைகள் கோவை விவசாயிகள் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியதற்கு பின்னும் 10 பைசா என்பதை 9 பைசாக்களாக இந்த அரசு குறைக்கவில்லை. பெருமாநல்லூர் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து மூன்று பேர்கள் உயிர் நீத்த பின்னர்தான் இந்த அரசு ஒரு காசைக் குறைக்க முன்வந்தது. ஒரு காசு குறைக்க மூன்று உயிர்கள் தேவைப்பட்டன. செத்த பின்னர்தான் பிரச்னையைத் தீர்ப்பது என்பதைத் தவிர்த்து வருமுன் காப்பது என்ற முறையில் இனியாவது அரசு விவேகத்துடன் நடந்து கொள்ளவேண்டும். ஆகவே, விவசாயத்திற்காகும் மின்சாரக் கட்டண உயர்வை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நில வள வங்கிகள் மூலம் விசையேற்றங்கள் வாங்க பணம் கொடுக்கப்படுகிறது. அவற்றிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு வருவாய்த் துறை வாய்ப்பு உறுதி சான்றிதழ் Feasibility Certificate கேட்கப்படுகிறது. அப்படிப்பட்ட சர்டிபிகேட் மின் வாரியம் கொடுத்த பிறகு, நில வள வங்கியிலிருந்து கடன் கொடுத்த பிறகும்கூட பல ஆண்டுகளாகியும் அவற்றிற்கு மின் இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. இதைப்பற்றி இங்கும், மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. நில வள வங்கி மூலம் பணம் வாங்கியவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடுகள் செய்கிறோம் என்று பலமுறை வாக்குறுதி கொடுக்கப்பட்டும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நில வள வங்கியிலிருந்து கடன் வாங்கியவர் தவணை முறையில் அதைத் திருப்பிக் கொடுக்கும்போதுகூட மின் இணைப்பு கிடைக்கவில்லை என்றால் அந்த அவல நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த ஆட்சி வந்த பிறகு லஞ்சம் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியிருக்கிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஒரு விவசாயிக்கு மின் இணைப்பு கிடைக்கவேண்டுமென்றால் அதிக

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஆகஸ்ட் 27

அளவில் லஞ்சம் கொடுக்கவேண்டியிருக்கிறது. சாதாரணமாக ஒரு பம்ப் செட்டுக்கு கனெக்ஷன் கொடுக்க 100 ரூபாய் வரையில் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது இதுபற்றி நானே சென்ற முறை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள். அப்படி அதிகாரிகள் வாங்கியிருந்தால் அது சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறவருக்கு தெரிந்திருக்கவேண்டும். அதுகுறித்து விஜிலன்ஸ் கமிஷனுக்கு அவர்களே எழுதியிருக்கலாம். இந்த அதிகாரி லஞ்சம் வாங்குகிறார், அதற்கான ஆதாரங்களைக் கொடுக்கிறேன் என்று அவர்கள் எழுதி விஜிலன்ஸ் கமிஷன் விசாரிக்காமல் விட்டு விட்டார்களா? அப்படி அவர்கள் எழுதத் தவறியது உறுப்பினர் அவர்களின் குற்றந்தானே தவிர அரசாங்கத்தின் மீது எப்படி பழி சுமத்த முடியும்?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** விஜிலன்ஸ் கமிஷன் இம்மாதம் 24-ம் தேதி இம்மாமன்றத்திற்கு அனுப்பிய அறிக்கையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன். அதில் 19-வது பக்கத்தில்—

An allied form of corruption, which is now establishing itself as a new 'mamool' is over the extension of electric power in rural areas, for lift-irrigation. From Appendix V it can be seen that 22 cases have been successfully investigated against officers of the State Electricity Board, during this period, involving seven Assistant Engineers, one Junior Engineer, fourteen Section Officers and a few others of different categories. என்று கூறப்பட்டுள்ளது.

• **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் அவர்கள் படிப்பதிலிருந்து ஒன்று புரிகிறது. வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு லஞ்சம் வாங்கிறார்கள் என்று அரசாங்கத்திற்கு தகவல் வந்தயிடங்களில் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதேபோல் உறுப்பினர் அவர்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கண்டுபிடிக்கப்பட்டது ஓரளவு, கண்டு பிடிக்காதது பெருமளவு. கண்டுபிடித்ததை வைத்துக் கொண்டு கண்டு பிடித்தோம் என்று சொல்கிறார்கள். ஏதாவது சொன்னால் நிரூபிக்கிறீர்களா என்று சொல்கிறார்கள், எப்படி நிரூபிப்பது? விவசாயிகள் பேசிக் கொள்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. கே. ஆர். கோவிந்தன்)** ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கண்டு பிடிப்பது கடுகளவு, கண்டு பிடிக்காதது மலையளவு.



1970 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் கூறியதை சிறிது கவனித்துக் கேட்டிருந்தால் இப்படி பேசியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். எங்கெங்கு தவறுகள் நடக்கின்றனவோ, எந்தெந்த அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்களோ தயவுசெய்து அதை அவ்வப்போது விஜிலன்ஸ் கமிஷனுக்கு எழுதியனுப்பினாலும்சரி அல்லது அரசாங்கத்திற்கு எழுதியனுப்பினாலும்சரி கவனிக்கிறோம் என்ற உத்தரவாதத்தைக் கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுக்க வேண்டாம் என்று எதிர்பார்க்கிறார்களா? 'கண்டு பிடித்தது கடுகளவு கண்டு பிடிக்காதது மலையளவு' என்று சொல்கிறார்கள். அப்படி அது மலையளவாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவதாக இருந்தால் அதைக் கண்டு பிடிக்க அவர்கள் துணை நிற்கவேண்டும். மலையளவிற்கு வளர்க்க துணை நிற்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பழைய காலத்தில் ஊர் ஊராகச் சுற்றுப் பயணம் செய்வார்கள். இப்போது டிரான்ஸ்போர்டில் போகிறார்கள். மாறுவேஷம் போட்டுக்கொண்டு விவசாயிகளிடம் சென்று விசாரித்தால் தெரியும். எவ்வளவு ரூபாய் கொடுத்து கனெக்ஷன் வாங்குகிறார்கள் என்று. என்னுடைய தொகுதியில் எல்லோரும் வந்து சொல்கிறார்கள். நூறு ரூபாய் கொடுத்தால்தான் கனெக்ஷன் வருகிறது. அதைச் சொன்னால் கனெக்ஷன் கொடுக்கமாட்டார்களே என்று பயப்படுகிறார்கள். இது அமைச்சர்களுக்கும் தெரியும். அவர் ஒன்றும் தெரியாதவர் அல்ல. நல்ல விவரம் தெரிந்தவர் அவர். எனது அருமை நண்பர் அவர். நான் முன்பு ஆளும் கட்சியில் இருந்தபோது அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தார்கள். அவர் ரொம்பக் கெட்டிக்காரர். அவருக்கு தெரியாமலா இருக்கிறது? அவருக்கும் நன்றாகத் தெரியும். ஏதாவது சொல்லி தப்பித்துக் கொள்ளப் பார்க்காதீர்கள். அது உங்களுக்கும் நல்லதல்ல, எங்களுக்கும் நல்லதல்ல. தவறு நடந்திருக்கிறது, அதை உரிய இடத்தில் சொல்ல வேண்டுமென்று சொல்கிறோம். நீங்கள் ஒரு விசாரணை நடத்தினால் சொல்வார்கள். ஆயிரக்கணக்கில் சொல்லத் தயார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எல்லா அதிகாரிகளும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று மொத்தமாகச் சொல்ல வேண்டாம். அப்படி வாங்குகிறவர்கள் இருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றுதான் சொல்கிறோம். அது தவிர வேறு ஒன்றும் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்படி எல்லா அதிகாரிகளும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்றால் நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்க முடியாது. எல்லா அதிகாரிகளும் அப்படி வாங்கினால் புரட்சிதான் நடக்கும். எப்படி எப்படி நடக்கவேண்டுமோ அப்படி அப்படி நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஊழல் இருக்கிறது, லஞ்சம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டதற்காக அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஊழல் இருக்கிறது, லஞ்சம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டார்கள என்றெல்லாம் சொல்வது மாலைப் பத்திரிகைகளில் செய்தி வருவதற்காக அப்படி பேசவேண்டாம். ஊழலைக் கண்டுபிடிக்க உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்று சொன்னேன். அப்படி ஒத்துழைக்க வில்லை என்று சொன்னால் ஊழல்களுக்கு அவர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்றுதான் பொருள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகைகளில் வருவதற்காக கூறவில்லை. மக்கள் மனதில் அது நிரம்ப இருக்கிறது. பத்திரிகை களில் வருவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அது இரண்டு மூன்று லட்சம் சர்குலேஷன் இருக்கும். மக்களுக்குத் தெரியும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

Even though there is no subsidy in the programme, the benefits of cheap power have been well appreciated by the agriculturist who does not consider the sum of about Rs. 100 usually demanded over a pumpset as an undue burden to complain about.

என்று அந்த அறிக்கையிலே மேலும் கூறப்பட்டிருக்கிறது. இதைவிட வேறு என்ன ஆதாரம் தேவை? வழக்கமாகவே ஒரு விசை ஏற்றத்திற்கு மாமூலாக ரூ. 100 கொடுக்கப்படுகிறது என்று விஜிலன்ஸ் கமிஷன் கூறியிருக்கிறது. இதைத் தவிர வேறு என்ன வேண்டும்? இதை மாற்ற வேண்டுமென்று விரும்புகிறேன். விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதில் இது மாதிரி சூழ்நிலை இருக்கிறது, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தரப்பிலிருந்து சொல்கிறோம்.

மின் வாரியத்துக்குச் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுத்தர் வேலைக்கு விளம்பரம் செய்யப்பட்டு இன்னும் வேலைக்கு ஆட்கள் எடுக்கப்படவில்லை என்பதைப்பற்றி இங்கு பேசப்பட்டது மேலும் 20—2—1970 அன்று 400 மின் இயல் இளநிலை பொறியாளர் களும், 50 இயந்திரவியல் பொறியாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாகப் பத்திரிகையில் விளம்பரம் போடப்பட்டது. 20—3—1970-க்குள் மனு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 1,000 பேர் மனு செய்து இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்து இருக்கிறது. ரூ. 10 கட்டணம் செலுத்தி அவர்கள் மனு செய்துள்ளார்கள். இதுவரையில் அவர்களை வேலைக்கும் அழைக்க வில்லை. நேர்முகத் தேர்வுக்கும் அழைக்கப்படவில்லை. வேலைக்கான உத்தரவும் அனுப்பப்படவில்லை. கிட்டத்தட்ட 6 மாத காலம் இப்படி போய் இருக்கிறது. உடனடியாக இவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 200-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தினக்கூலி ரூ. 7¼ பெற்றுக்கொண்டு 3 ஆண்டுகளாக பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். உடனடியாக அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரியத்தில் ஒரு எழுத்தருடைய சம்பளத்தை எடுத்துக் கொண்டால் ரூ. 126 தான் இருக்கிறது. அந்த எழுத்தர் வேலைக்கு (yard stick படி போதுமானவர்கள் நியமிக்கப்படுவதில்லை. அதே வேளையில் கமர்சியல் அசிஸ்டெண்ட், வர்த்தக மேற்பார்வைப் பொறியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அந்தப் பதவியைக் கொடுத்து வருகிறார்கள்.

அண்மையில் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்ட பொறி யாளர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். இந்த பழி வாங்குதலை நம்முடைய அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். யார் வேலை நிறுத்தம் செய்தாலும் அவர்களுடைய கோரிக்கைகளை கவனிக்கவேண்டுமே அல்லாது அரசாங்கம் பழி வாங்கும் உணர்ச்சி கொள்ளக்கூடாது.

என்.ஜி.ஓ.வினருக்கு அளிக்கும் எல்லா சலுகைகளும் வீட்டு அலவன்ஸ், திருமணக்கடன்கள் போன்றவற்றை மின்சார வாரி யத்தில் இருக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் தரவேண்டும். பெருவாரியாக, இந்த பக்கம் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு தெருவிளக்குகள் சரியாக எரிவதில்லை. எல்லா விளக்குகளும் நன்றாக எரிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுரை, கோவை போன்ற நகரங்களில் உள்ள ஆலைகளிடமிருந்து மின் கட்டணம் பாக்கியாகப் பல லட்சக்கணக்கில் வசூல் செய்யாமல் இருப்பதன் மர்மம் என்ன? இதை உடனடியாக வசூல் செய்வார்களா?

ஓட்டன்சத்திரத்தில் உள்ள மின்வாரியத்தின் அலுவலகம் (sub-station, விபத்துக்கு உள்ளாகி 30 லட்சம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அங்கே இருக்கும் அதிகாரிகள் மேற்பார்வை சரியான முறையில் இல்லாததாலும், மேலதிகாரி களின் உத்தரவை சரியான முறையில் நிறைவேற்றாததாலும் இந்த விபத்து நடந்தது என்று தெரிகிறது. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மதுரை மாவட்டம் சமயநல்லூரில் உள்ள அனல் மின் நிலையத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பணிபுரியவில்லை. அங்கே உள்ள 210 நிரந்தர ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் வேறு வேலை ஏதாவும் செய்யாமல் சம்பளம் வாங்கி வருகிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை உடனடியாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஆகஸ்ட் 27

1965-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது நமது முதல்வர் அவர்கள் அப்போது சட்டமன்றத்தில் புகார் கூறினார்கள். மின்சார வாரியத்திற்கு எருக்கஞ்சேரியில் வாங்கப்பட்ட மனை சம்பந்தமாக விவகாரம் பொதுக்கணக்கு ஆய்வுக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. நெடுஞ்செழியன் அவர்கள் விசாரித்ததற்கு பின்னாலே பொது கணக்குக் குழுவின் தலைவராக இருந்து இந்த விவகாரம் விசாரிக்கப்பட்டு குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. அது சம்பந்தப்பட்ட விஷயம் சென்ற முறை 1969-ல் சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டது. இப்போது வாரியம் அதற்குப் பதில் கொடுத்து இருக்கிறது. வாரியத்தின் பதில் தெளிவாக இல்லை. "மின் வாரியம் ஆராய்கிறது, அதன் மீது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. போடப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது" என்று அந்தக் குறிப்பில் உள்ளது. இப்போதே 5 ஆண்டு காலம் ஆகிவிட்டது. 1972 ஆண்டுக்குள்ளாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்களா அல்லது அதற்கு மேலும் போகுமா? இனியும் காலம் தாழ்த்தாது குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

என்னுடைய தொகுதியில் மின் இணைப்புக் கிடைக்காத காடிக்கல், பொன்னமங்கலம், புங்கங்குளம், சொரிக்காம்பட்டி, மைக்குடி, கரிச்சக்கம்பட்டி, சுவாமிமல்லம்பட்டி, மேல்நேசநேரி ஆகிய பஞ்சாயத்துகளுக்கு இந்த ஆண்டிலேயே மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்தோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

### 6. உணவு அமைச்சரின் விளக்க உரை

உணவகங்களில் காப்பி விலை குறைப்பு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சில நாட்களாக சென்னையில் காப்பி, டீ விலையை உயர்த்தி இருக்கிறார்கள், என்ற செய்தி பத்திரிக்கையில் வெளியாகி இருந்தது. சற்று நேரத்திற்கு முன்பு ஓட்டல் அதிபர்களை கூப்பிட்டு உட்கார வைத்துப் பேசினேன். அவர்களுடன் பேசி ஒரு முடிவிற்கு வந்தேன். நாளை காலை முதல் மீண்டும் காப்பி, டீ விலை 25 பைசாவாக குறைப்பார்கள். குறைக்கிறேன் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கமும் சம்மதித்து இருக்கிறது.



1970 ஆகஸ்ட் 27]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பலகாரம் விலை குறையுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பலகாரம் தரம் அந்தந்த ஓட்டல்களுக்கு தகுந்த மாதிரி இருக்கும். பலகாரம் விலையைக் குறைப்பது பற்றி நான் அவர்களிடம் பேசினேன். அவர்கள் எங்களிடத்தில் சில கஷ்டங்களைச் சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் அவர்களுக்கு எல்லா உதவியையும் தரும் என்று உத்தரவாதம் செய்து இருக்கிறோம். நாளை காலையிலிருந்து காப்பி விலை குறையும். "காப்பி, டீ இனி ஏழைக்கு ஏதம்மா" என்று சுவரொட்டி ஒட்டியவர்கள், "காப்பி, டீ விலை குறைந்ததம்மா, தி.மு.க.-வின் திறமை புரிந்ததம்மா" என்று சுவரொட்டி ஒட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இட்லி சைஸ் பெருத்து இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இட்லி சைஸ் பெருத்து இருக்கிறதா என்று கேட்டார்கள். இதுபற்றி அவர்களைக் கேட்டபோது, அவர்கள் சில சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். சிரமத்திற்கு பரிகாரம் என்ன என்று கேட்டு, அதற்கான சிலவற்றிற்கு ஒப்புதல் தந்து இருக்கிறோம். நாளை முதலமைச்சர் வந்தவுடன் அவற்றைப்பற்றி பேசி முடிவு எடுப்போம். காப்பி விலை உடனடியாகக் குறையும்.

### 5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. அ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்தும், 1969-ம் ஆண்டு துணை நிதி அறிக்கை குறித்தும் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே 2 நாட்களாக மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது தங்களுடைய கருத்துக்களை சில உறுப்பினர்கள் கூறினார்கள். அப்படிக் குறிப்பிடுகிற நேரத்தில் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மின்சாரத் துறையிலே போதுமான கவனம் செலுத்தவில்லை என்று பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். இருபது ஆண்டுக்காலமாக இந்த நாட்டை ஆண்டு கொண்டு இருந்த காங்கிரஸ் கட்சி சாதிக்க முடியாத பல சாதனைகளை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்து இருக்கிறது. இதை நாட்டிலே இருக்கிற நல்ல உள்ளம் படைத்தவர்கள் எல்லாம் உணர்ந்து இருக்கிறார்கள். குறிப்பாக பல கிராமங்களில் எல்லாம் 100-க்கணக்கான விவசாயக் கிணறுகளுக்கு மின்சார வசதி தந்து இருக்கிறோம். அது மட்டுமல்ல. பல சிற்றூர்களில் 20 ஆண்டுகளாக இருட்டறையில் கிடந்தவர்கள் இப்போது பகலில் வாழ்வதைப் போல் இரவில் மிகவும்

[திரு. அ. ஆறுமுகம்] [1970 ஆகஸ்ட் 27

சந்தோஷமாக வாழ்கிறார்கள். இதை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து இருக்கிறது என்பதை இந்த நாட்டில் இருக்கும் நல்லவர்கள் உணருகிறார்கள். அதே நேரத்தில் இங்கே பேசுகிறபொழுது விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்க வில்லை, சேரிவாழ் மக்களுக்கு விளக்குகள் சரிவர அமைத்துத் தரவில்லை என்று கூறுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு திட்டத்தை மேற்கொண்டு 1972-ம் ஆண்டிற்குள் தமிழகம் பூராவிற்கும் மின்சாரத்தைத் தந்து விடமுடியும் என்று ஒரு அறிக்கையையும், ஒரு திட்டத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி வெளியிட்டிருக்கிற நேரத்தில் தான் இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் இங்கே மின்சாரம் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டு, வெளியே சென்று விவசாயிகளை தூண்டிவிட்டு, எப்படியாவது இவர்கள் 1972-ம் ஆண்டுக்குள் மின்சாரத்தை வழங்கி விடுவார்கள், மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்று விடுவார்கள், விவசாயிகளுடைய ஆதரவைத் தேடிவிடுவார்கள் என்பதைக் கண்டுகொண்டு வெளியே சென்று விவசாயிகளைத் தூண்டிவிட்டு கிளர்ச்சியில் ஈடுபடச் செய்தார்கள். அப்படி கிளர்ச்சியில் ஈடுபட்டால், இவர்களுக்குப் போதுமான அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும், அப்படி நஷ்டம் ஏற்படுகிற காரணத்தினால், இந்தத் திட்டத்தை கைவிட்டுவிடுவார்கள். ஆகவே, 1972-ம் வருடத் தேர்தலில் அதைக் காரணமாக வைத்துக்கொண்டு மக்களுடைய ஆதரவைப் பெற்றுவிடலாம் என்று தப்பான கணக்கைப் போட்டு, அவர்கள் ஏமாந்து போய் விட்டார்கள். ஒரு பக்கத்தில் தொட்டிலையும் ஆட்டிவிட்டு மறுபக்கத்தில் குழந்தையையும் கிள்ளிவிடுவது என்ற நிலையில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் எண்ணிப் பார்க்கிறபொழுது, உண்மையிலே இந்த மூன்று ஆண்டு காலத்தில் தி.மு.க. அரசு நம்முடைய தமிழகத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்த அளவுக்கு மின்சாரத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் புள்ளிவிவரங்களோடு எனக்கு முன்பு பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய திட்டத்தில் மூன்றில் ஒரு பகுதி மின்சாரத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம். இந்த நாடு வளமான நாடாக அமைய வேண்டுமென்றால், இந்த நாட்டின் முதுகெலும்பு போல் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை உயர வேண்டும், விவசாய உற்பத்தி பெருக வேண்டும், விவசாய உற்பத்தியைப் பெருக்கினால்தான் இந்த நாட்டிலே விலைவாசியைக் குறைக்க முடியும் என்பதை இன்றைக்கு பொறுப்பேற்றிருக்கிற தி.மு.க. அரசு உணர்ந்திருப்பதன் காரணமாக கிராமங்களில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விரைவிலே மின்சாரம் கொடுக்க வேண்டும், மின்சார இணைப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக நில வள வங்கிகளின் மூலமாக கடன்



1970 ஆகஸ்ட். 27] [திரு. அ. ஆறுமுகம்]

வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு விவசாயிகள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் நண்பர் பலராமன் அவர்கள் விவசாயிகள் கண்ணீர் வடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். எந்த ஒரு விவசாயியும் தி.மு.க. ஆட்சியில் கண்ணீர் வடிக்கிற நிலை இல்லை. அவர்கள்தான் கண்ணீர் வடிக்கின்ற நிலையில் இருக்கிறார்கள். காரணம், சாதாரணமாக இருந்தவர்கள் அமைச்சர்களாக ஆகிவிட்டார்கள், சாதாரணமாக இருந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகிவிட்டார்கள், 20 ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்துவிட்டு வெளியே தள்ளப் பட்டுவிட்டதால் வேதனை தாங்கமுடியாமல் இவர்கள்தான் கண்ணீர் வடிக்கிறார்களே தவிர, தி.மு.க. ஆட்சியைப் பார்த்து யாரும் கண்ணீர் வடிக்கவில்லை.

அதற்கு மாறாக, நகரத்தில் ஒரு படி அரிசி போட்டார்களா என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். நகர மக்களுக்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றி, அவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்திவிட்டது தி.மு.க. அரசு. அதைப் பார்த்துவிட்டு, இங்கே விட்டுவிட்டு, கிராம விவசாயிகளிடம் உரத்தின் விலை ஏறிவிட்டது, மின்சாரம் கிடைக்கவில்லை, மின்சார கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற பிரச்சினையை கிளப்பினார்கள். விவசாயிகளுடைய கோரிக்கையை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஏற்று, 'உங்கள் கோரிக்கையை நாம் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டிருக்கிறோம்' என்று சொல்லிய பிறகும், அதை விட்டுவிட்டு எப்படியாவது ஒரு குற்றச்சாட்டை சுமத்தி, தி.மு.க.-விற்கு ஒரு கெட்ட பெயரை உண்டுபண்ண வேண்டும் என்று தூண்டிவிடுகிறார்கள் விவசாயிகளை. இப்படிப் பட்ட நிலைகளையெல்லாம் பார்க்கிறபொழுது, உண்மையிலேயே நல்லெண்ணம் படைத்தவர்கள், இந்த ஆட்சி இன்னும் 20 ஆண்டுகள் அல்ல, 100 ஆண்டுகளுக்கு இருக்க வேண்டும் என்று நடுத்தர விவசாயப் பெருங்குடி மக்கள், பாட்டாளி நெசவுத் தொழிலாளிகள் விரும்புகிறார்கள். அதைப் பார்த்தபொழுது, எப்படியாவது இவர்களை 1972-ல் இறக்கிவிட வேண்டும் என்பதற்காக தப்பான பிரச்சாரத்தில் ஈடுபட்டு. விவசாயிகளைக் கிளப்பிவிட்டு, மக்களை திசைதிருப்ப நினைக்கிறார்கள். இருந்தாலும் கூட, நமது அரசு ஏழை எளியவர்களின் அரசு, பாட்டாளி மக்களின் அரசு என்பதை நாட்டில் இருக்கிற நல்லவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் நெய்வேலியிலிருந்து நாம் பெறுகின்ற மின்சாரத்திற்கு முன்பு 5.2 பைசா கொடுத்து வந்தோம். இப்பொழுது 5.9 பைசா கொடுத்து வருகிறோம் என்பதும் பத்திரிகை செய்தியிலிருந்து தெரியவருகிறது. இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படும். அப்படி ஏற்படும்பொழுது

[திரு. அ. ஆறுமுகம்] [1970 ஆகஸ்ட் 27

அதனால் ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்டுவதற்கு டெல்லி சர்க்கார் முன்வர வேண்டும். நாம் எவ்வளவுதான் திட்டத்தை நிறைவேற்றினாலும் கூட, டெல்லி சர்க்கார் ஒத்துழைக்க வேண்டியது மிகமிகத் தேவை. அந்த அளவுக்கு டெல்லியிலிருக்கிற மத்திய சர்க்காரை நாம் வலியுறுத்தி, அங்கேயிருந்து மின்சாரத்திற்குத் தேவைப்படுகிற கனிப் பொருள்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற சர்க்கார் சில கிராமங்களுக்கு மின்சாரத்தை விரைவிலே வழங்க வேண்டும்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் தாதாபுரம், வேம்பனேரி, கல்விளங்கம், அரசராமணி, காவேரிப்பட்டி முதலிய கிராமங்கள் ஓரளவுக்கு முன்னேறியிருக்கின்றன. பூர்த்தியாக அந்த கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. வெங்கடசாமி: தெலுங்கில் உரையாற்றத் தொடங்கினார்.

## 7. நடைமுறைக் கேள்வி.

### (அ) ஓர் உறுப்பினரின் தெலுங்கு உரையை மொழிபெயர்ப்பது குறித்து.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்தப் பேச்சை டிரான்ஸ்லேட் செய்தால், என்ன பேசுகிறார் என்பது தெரியும். தலைவர் அவர்கள் இதை டிரான்ஸ்லேட் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி ஏற்கனவே பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நண்பர் வெங்கடசாமி அவர்களுக்கு ஆங்கிலமும் தெரியும், தமிழும் தெரியும். அவர்கள் இந்த இரண்டு மொழிகளில் ஏதாவது ஒன்றில் பேசினால், அவருடைய தொகுதியைப் பற்றி சொல்கிற விஷயங்களுக்கு பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும், அதிகாரிகளுக்கும் புரியும். தனக்கு இருக்கிற தெலுங்கு ஆர்வத்தைக் காட்டிக் கொள்வதில் தவறு இல்லை. அவருக்கு தெலுங்கில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. தன்னுடைய கருத்துக்களை அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு பதில் சொல்ல வேண்டுமென்று எதிர் பார்த்தால், அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால், தமிழிலேயோ, ஆங்கிலத்திலேயோ பேசினால் நல்லது. வீண் பிடிவாதமாக எங்கேயோ ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்தியிலே பேசுவது போல் வேண்டுமானால் பேசலாம். இங்கு வெறி உணர்ச்சி யாருக்கும் இடையாது.



1970 ஆகஸ்ட் 27] [திரு. ப. உ. சண்முகம்]

எல்லோருக்கும் புரிந்த மொழியில் பேசுவது நல்லது. பிடிவாதமாக தெலுங்கில் தான் பேசவேண்டும் என்றால், அதை நான் தடுக்கவில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, the Hon. Minister has stated that I am speaking only to show my fanaticism. But I am sorry to say . . . .

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I shall correct myself. I have not called it fanaticism.

கனம் உறுப்பினர் அவர்கள் தெலுங்கில் பேசும் உரிமையை யாரும் ஆட்சேபிக்கவில்லை. தெலுங்கில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் பேசும்பொழுது தொகுதியைப் பற்றிய விவரங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், பதில் சொல்ல வேண்டும் என்றால், தயவுசெய்து புரியும் மொழியில் பேசினால் நல்லது என்று சொன்னேன். யோசனையாகத்தான் சொன்னேன். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. என்னுடைய யோசனையை ஏற்கவில்லையென்றால், கவலையில்லை. தாராளமாக எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசலாம்.

THIRU T. MARTIN: Now we have recognised this language as one of the official languages for the purpose . . . .

THE HON. THIRU P. U. SHANMUGHAM: I have not objected to it.

THIRU T. MARTIN: Now the point is that the hon. Member speaks in Telugu and he wants some arrangements to be made for translation of his speech and then only the Hon. Minister will be in a position to reply to the points raised in his speech.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டரா?

THIRU T. MARTIN: Sir, I am asking whether there is any machinery for translation here.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. தயவுசெய்து உட்காருங்கள்.

THIRU T. MARTIN: Under the Rules you have recognised it.

MR. SPEAKER: It is not a point of order.
இப்படி தெலுங்கில் பேசுவதை மறுத்தால்தான் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும். யாரும் மறுக்கவில்லை. அமைச்சர் அவர்கள் யோசனையாகத்தான் சொன்னார். கனம் உறுப்பினர் அவர்களும் ஒரு யோசனையைத்தான் சொல்கிறார்கள்.
Let the hon. Member please resume his seat.

THIRU T. MARTIN: His speech will have no effect unless it is translated.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவருக்காக டிரான்ஸ்லேஷன் வேண்டும் என்கிறீர்களா ?

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir according to the Assembly Rules, an hon. Member can speak also in Telugu. The Hon. Minister is indirectly discourging the hon. Member from talking in Telugu.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I am sorry. Let the hon. Member speak in Telugu.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் குறை கூறவில்லை. தங்களுக்குப் புரியும் முறையில், உறுப்பினருக்கு பதில் சொல்வதற்கு, தெரிந்த மொழியில் பேச வேண்டும் என்று ஒரு யோசனைதான் சொன்னார்கள். தெலுங்கில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது அங்கத்தினருக்கு. யாரும் அதை மறுக்கவில்லை. உரிமை கொடுத்ததால்தான் அவர்கள் தெலுங்கில் பேசுகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, I have already expressed the difficulty that I cannot speak well in English.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்ப்ளநேஷன் வேண்டாம் ; பேசுங்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, I request you to have a Translator to enlighten the Members of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள். மந்திரிகளுக்கு உங்கள் கருத்துக்களைக் கிடைக்கச் செய்வார்கள்.

THIRU B. VENKATASWAMY : Otherwise, I will be deprived .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள் ; பேசும் கருத்துக்களை அமைச்சருக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, my request to the Chair is that my speeches are not recorded in the official proceedings also. So, I request the Chair to arrange for the translation of my speech into English or Tamil. There is no harm in it. Because I cannot express my ideas well either in English or Tamil, I am speaking in Telugu. I take the privilege of speaking in Telugu by getting permission from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தான் பேசுங்கள் என்கிறேனே.

திரு. டி. மார்டின் : Sir, on a point of order. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் ?



**(ஆ) ஓர் உறுப்பினரின் தெலுங்கு உரை பதிவு செய்யப் படாமல் இருக்கும்போது அவரை தெலுங்கில் உரையாற்ற அனுமதிப்பது குறித்து.**

THIRU T. MARTIN : Sir, my point of order is whether an hon. Member could be allowed to speak in Telugu when his speech is not going into the records. I want a ruling from the Chair on this point.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரெகார்ட் பண்ணவில்லை என்று எப்படித் தெரியும் ?.

THIRU T. MARTIN : The hon. member says that his speech is not recorded.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ. என்ன செய்கிறார்கள் என்று தெரியுமா ?

THIRU T. MARTIN : Sir, the point of order is very short. The hon. Member says that his speeches are not being recorded when he speaks in this House. Now my short question is, whether any hon. member could be permitted to speak inside the House when his speech is not allowed to be recorded inside the House. I want a ruling from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன வழி என்று கேளுங்கள். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. வெங்கடசாமி அவர்கள் பேசுகின்ற கருத்துக்களை, அவர்களுக்கு ஆங்கிலம் தெரியும், இருந்தாலும், தெலுங்கில் பேசுகிறார்கள், அவர்கள் ஒரு 'ஜிஸ்ட்' இங்கிலீஷில் கொடுப்பார்கள், அதை நிகழ்ச்சிக் குறிப்பில் சேர்த்துக்கொள்வோம். அந்த முறையில் செய்வோம்.

## 5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. பி. வெங்கடசாமி : தெலுங்கில் உரையாற்றினார்.

* திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக் கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு பேசுகிறேன். பி.ப. 1-00

சென்ற ஆண்டு இதே மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் பேசியபோது ஒரு சில குறைகளை அவைமுன் வைத்திருந்தேன். அவற்றிற்கு நல்ல முறையில் பரிசீலனை செய்து, பதில்கள் சொல்லப்பட்டிருப்பதற்காக, இந்த அரசை முதலாவதாக பாராட்டவும், நன்றி செலுத்தவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியத்தில் செய்யப்பட வேண்டிய சில காரியங்களைப் பற்றி நான் அடிக்கடி கூறிவந்தேன். அவைகள் நல்ல முறையில் செயலாக்கப்பட்டிருப்பது குறித்து நான் இந்த மின்சார வாரியத்தையும், அமைச்சரையும் பாராட்டுகிறேன்.

[திரு. மு. மாரிமுத்து] [1970 ஆகஸ்ட் 27

மின்சார வாரியத்தில் பணிபுரிகிற பல்லாயிரக்கணக்கான தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்றும், வாழ்க்கை வசதிக்குத் தகுந்தவாறு ஊதிய உயர்வு அளிக்கப்படவேண்டும் என்றும் நான் கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தேன். அவற்றை நல்லமுறையில் பரிசீலித்து அவர்களுடைய வாழ்க்கை வசதிக்குத் தகுந்தவாறு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். மின்சார வாரியத்தில் பணிபுரிகிற பொறியாளர்கள், பெரிய அதிகாரிகள் ஆகியவர்களுடைய சம்பளத்தையும் கூட்டியிருக்கிறார்கள். ஆகவே, மின்சார வாரிய ஊழியர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டவனும் ஆவேன்.

அடுத்தபடியாக, பொதுமக்களுக்கும், மின்சார வாரியத்திற்கும் தொடர்பு இருக்க ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஆலோசனைக் குழு சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் கொண்டு அமைக்கவேண்டும் என்று சொன்னேன். அதை ஏற்று நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

என்னுடைய தொகுதி சம்பந்தமாக நான் அளித்த திட்டத்தை ஏற்று ஏழு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. பத்து கிராமங்களுக்குத் திட்டங்கள் வகுத்து அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற நல்ல காரியங்களில் ஈடுபடுகிற மின்சார வாரியத் தலைவருக்கும், அரசுக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில், 1967 ஆம் வருடத்தில் இருந்து பார்த்தால் பதினைந்து கிராமங்களுக்கும், 4,192 சர்விஸ்களும் கொடுத்து ஆறு லட்சத்து முப்பதையாயிரம் ரூபாய் வருவாய் வரக்கூடிய நிலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த நல்ல செய்கையைப் பாராட்டி வரவேற்கிறேன்.

அதோடு என்னுடைய பகுதியில் வருவாய்த்துறை நிலையத்திற்கு அனுமதி கொடுத்து அது நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

மேலும், என் பகுதியில் விவசாயிகளுக்கு வேண்டிய நல்ல திட்டங்கள் செயல்பட்டு வருகிற காரணத்தினால் ஆத்தூரில் டிவிஷனல் என்ஜினியரையும் சாத்தர்பாடியிலும் வீராணூரிலும் பிரிவு அதிகாரிகளையும், கெங்கவல்லியில் உதவிப் பொறியாளரையும் நியமனம் செய்ய ஏற்பாடு செய்தால் திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறும். இதுபற்றிய குறிப்பு மேலே மின்சாரவாரியத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதற்கு அனுமதி கொடுத்து ஏற்கனவே சாங்ஷன் செய்யப்பட்ட திட்டங்களை அமுல்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 ஆகஸ்ட் 27] [திரு. மு. மாரிமுத்து]

மேலும், கடந்த ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்ட புத்தூர், வீரகூர், வள்ளியூர் போன்ற பகுதி கிராமங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுக்க கம்பங்களையும், மற்ற உபகரணங்களையும் வழங்கி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எனது தொகுதியில் 3 மலைவாசப் பகுதிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் மின்வசதி இன்றி ஒரே இருட்டாக இருக்கிறது. அந்த மலைப்பகுதி மக்களுடைய வாழ்க்கையைக் கருதி அந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. நா. செளந்தரபாண்டியன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்த மின்சார வாரிய 1970-71 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் நாளது வரையில் 35,677 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

1967 ஆம் ஆண்டு இறுதியில் பார்க்கும்போது கிட்டத்தட்ட காங்கிரஸ் ஆட்சியில் 25 ஆயிரம் கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் 14,124 கிராமங்களே இருக்கின்றன. ஆக காங்கிரஸ் ஆட்சியில் இந்த 14,124 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உறுதியாகத் தெரிகிறது. புதிய ஆட்சியில் சிற்றூர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் எப்படி விஸ்தரிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது புதியதாக எங்கும் டிரான்ஸ்பார்மர் போட்டதாகத் தெரியவில்லை. ஏற்கனவே இருக்கிற டிரான்ஸ்பார்மர்களுடன் சேர்த்து இணைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக ஏற்கனவே கொஞ்சம் பிரகாசமாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்த இடங்களில் எல்லாம் கூட இன்றைக்கு மின் மினிப் பூச்சிபோலத்தான் விளக்குகள் எரிகிறது. டிரான்ஸ்பார்மர் புதிதாகப் போடாத காரணத்தினால் ஏற்பட்டுள்ள குறை இது.

புதியதாக மின் இணைப்புக் கொடுக்கிறபோது இருக்கக்கூடிய டிரான்ஸ்பார்மரின் கப்பாசிடி என்ன என்று பார்த்து அதற்குத் தகுந்தாற்போல கனெக்ஷன் கொடுக்கவேண்டும்.

மேலும் கிராமங்களுக்கு மின் இணைப்புக்கொடுக்கிறபோது 10 சதவிகித ஆதாயமாவது இருக்குமா என்று கண்டிப்பாகப் பார்த்துக் கொடுக்கிறார்கள் ஏற்கனவே கனெக்ஷன் கொடுத்த கிராமங்களில் 10 சதவிகிதத்திற்கும் அதிகமாக இலாபம் வருகிறது. ஆகவே 7 சதவிகிதம் லாபம் இன்றைக்குக் கிடைக்கும் என்ற நிலை இருந்தாலும் லாபத்தைக் கருதாது அவற்றுக்கு விஸ்தரிப்புக்

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1970 ஆகஸ்ட் 27

கொடுத்தால் நான்கைந்து ஆண்டுகளில் இந்த இடங்களிலும் லாபம் அதிகமாகவே வரும். ஆகவே இந்த அடிப்படையில் வாரியம் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் தொகுதி பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதிக்கு முதலிடம் கொடுத்து வாரியம் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் திசயன்விளை எஸ். எஸ். 2 பகுதியில் நடேசன், ரூசைமாணிக்கம். அருணாசலம், பால்பாண்டி ஆகியவர்களும், குட்டம் எஸ்.எஸ். 1 பகுதியில் சிதம்பரநாதன், ரத்தினசாமி, ஆனந்தலிங்கம், ராஜா தவசிக்கண்ணு, நவாப் மார்த்தாண்டன் ஆகிய பலபேர்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நிலவள வங்கியில் இருந்து பணம் கடன் வாங்கி மோட்டார் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் மின் இணைப்புக் கிடைக்கவில்லை. அப்படி மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்றால் வாங்கிய கடனை எப்படித் திருப்பிக்கட்ட முடியும் என்பதை அரசு தீர்மானிக்கவேண்டும்.

இன்னும் வைராகியலு, புல்லமங்கலம், நக்கனேரி போன்ற இடங்களில் திட்டங்கள் சாங்ஷன் செய்யப்பட்டு பல ஆண்டுகளாகியும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வேளாண்மைக்கு மின்சாரம் வழங்குவதில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. பல இடங்களிலும் பெரிய சிபார்சுகளின் பேரில்தான் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் டிரான்ஸ்பார்மர் மாற்றாமல் இருக்கக் கூடியதோடு இப்படி இணைப்பதனால் ஏற்கெனவே உள்ள மோட்டார்களில் கம்பிச் சுருள் தீய்ந்து போகிறது. இதனால் பழைய விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றமும் நஷ்டமும் ஏற்படுகிறது. முன்பு 8¼ பைசாவாக இருந்த மின்சாரக் கட்டணத்தை இன்று 9 ஆக்கியிருக்கிறார்கள். உன்னிப்பாகக் கவனிக்கிறபோது இதனால் கிட்டத்தட்ட 8 கோடி தான் ஆண்டுக்கு நஷ்டம் ஏற்படும். கோடிக் கணக்கில் படி அரிசித் திட்டத்தினால் நஷ்டம் ஏற்படுகிறபோது இதை ஒரு பெரிய நஷ்டமாகக் கருதாது 8¼ பைசாவாகவே வைக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 20 சதவிகிதம் சர்சார்ஜ் மிகவும் அதிகமாக இருக்கிறது. இதனால் 20 சதவிகிதத்தைப் பத்து சதவிகிதமாகக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மீட்டர் வாடகை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவைகளையும் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிசையில் வாழ்கின்றவர்களுக்கு 32 பைசாவும் பெரிய வீடுகளில் வசிப்பவர்களுக்குக் குறைந்த கட்டணமும் வசூலிக்கப்படுவது இந்த அரசாங்கத்தின் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் கட்டுவதற்கு வசதி உள்ளவர்கள்.



1970 ஆகஸ்ட் 27] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

ஆனால் ஏழை விவசாயிகளிடத்தில் கட்டணத்தை அதிகப்படுத்தி இருப்பது வருந்தத் தக்கது. மேலும் விவசாயப் பெருமக்களிடமிருந்து மூன்று மாத பிணைப்புத் தொகை (செக்யூரிடி டெப்பாஸிட்) வசூலிக்கப்படுகிறது. ஆனால் முந்தின மாதத் தொகை அடுத்த மாதம் 20 தேதிக்குள் கட்ட வேண்டும். கட்டாவிட்டால் அபராதம் கட்டவேண்டும். இல்லையென்றால் ஃப்யூஸ் பிடுங்கிவிடுவார்கள். ஆனால் 3 மாத முன் பணம் இருக்கின்ற போது அதைக் கூடுமானவரை இன்னும் ஒரு 15 நாட்கள் நீட்டித்து கொடுத்தால் என்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்த்தால் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். மின் இணைப்பைத் துண்டித்து விட்டால் மீண்டும் மின் இணைப்பைப் போடுவதற்கு ரூ. 5 அபராதம் கட்டவேண்டும். ஒரு நாள் கடந்துவிட்டால் கூட விவசாயி ஐந்து ரூபாய் அபராதம் கட்டவேண்டும். அதை ஒரு ரூபாயாகக் குறைத்தால் நலமாக இருக்கும். இதனால் இந்த மின்சார வாரியத்திற்கு அதிக நஷ்டம் ஒன்றும் வராது.

அதே போல இந்த அடிஷனல் செக்யூரிடி—கூடுதல் பிணைப்புத் தொகை—அவர்கள் வசூல் செய்கிறார்கள். அதாவது ஒரு விவசாயி ஒருமாதத்தில் அதிகமாகத் தண்ணீர் இறைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதைக் கணக்காக வைத்துக் கொண்டு 3 பங்கு வசூல் செய்கிறார்கள். 11 மாதம் அது இல்லாதபடி இந்த ஒரு மாதத்தை மட்டும் கணக்கு வைத்து வசூல் செய்வது தவறானது. ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு என்று பார்த்து அதன் மேல் தான் வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்தத் தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் பல கிராமங்களில், ஊராட்சி மன்றங்களில் தெருவிளக்குகள் போடப்பட்டிருக்கின்றனவே ஒழிய, ஒழுங்காக எரிவது இல்லை. என்னுடைய கிராமத்திலே மொத்தம் உள்ள 75 மின் விளக்குகளிலே 38 தெரு விளக்குகள் எரியவில்லை. அப்படி 75 விளக்குகள் இருக்கிற இடத்தில் 38 விளக்குகள் எரியவில்லை என்றால் வாரியத்தினுடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நல்ல பல்புகள் கொடுக்கவில்லை என்று எல்லாம் புகார்கள் வருகின்றன. ஊராட்சி மன்றங்கள் பல்புகள் வாங்குவதற்கு வழிவகை செய்யவேண்டும். அதைப் பற்றி உள்ளாட்சித் துறைக்குப் பரிந்துரை செய்து ஆண்டு ஒன்றுக்கு 4 பல்புகள் வீதம் வாங்கிக் கொள்ள அனுமதி அளித்தால் நலமாக இருக்கும். 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் என்னுடைய செட்டிகுளம் ஊராட்சி மன்றத்திற்கு 20 தெரு விளக்குகள் கூடுதலாகப் போடவேண்டுமென்று மனுச் செய்து அதற்கு 'அக்ரிமெண்டு' எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நாள் வரையில் போடப்படவில்லை. இதே போல காவல் கிணறு ஊராட்சி மன்றத்திலும் இதேபோல் தெரு விளக்குகள் போடுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதைப் பற்றிக் கடந்த மார்ச்சு சட்டமன்றக் கூட்டத்தில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மின்சார வாரியத் தலைவர் அவர்களின் கவனத்திற்கும், மின்சார தலைமைப் பொறி

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1970 ஆகஸ்ட் 27

யாளர் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் என்னவோ உடனடியாக உத்தரவைப் போட்டு விடுகிறார்கள். ஆனால் கீழே உள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வாரியத்திலிருந்து 20 பம்பு செட்டுகளுக்கு அனுமதி வழங்கி இருந்தால் கீழே உள்ள அதிகாரிகள் யாராவது சிபாரிசின் மூலம் வருபவர்களுக்கும் குறிப்பிட்ட 1, 2 பேர்களுக்கு மட்டும் அவசரமாக மின் இணைப்புக் கொடுக்கிறார்கள்; மற்றவர்கள் கேட்டால் சாமான் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே வாரியத்திலிருந்து அனுமதி வழங்குகிற எல்லா பம்பு செட்டுகளுக்கும் ஒட்டுமொத்தமாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி இல்லாமல் 1, 2 கிணறுகளுக்கு மட்டும் மின் இணைப்பு கொடுப்பதால் லஞ்சம் ஊடுருவுவதற்கு ஏதுவாக இருக்கிறது என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திருநெல்வேலி மாவட்டத்தில் மேல் தாம்பரபரணி ஆறு, மேல் மணிமுத்தாறு திட்டத்தை உடனடியாக அமுல் நடத்த வேண்டும். தூத்துக்குடியில் 60 மெகாவாட் மின்சாரம் ஏற்படுத்துவதற்கு திட்டம் இருந்து வந்தது. ஆனால் அதைப் பற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் காணோம். அது கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அது நிறைவேற்றப்பட்டால் தான் தூத்துக்குடி துறைமுகம் ஏற்படுத்தப்படும்போது நல்ல முறையில் தொழில்கள் வசதியாக முன்னேறுவதற்கு ஏதுவாக இருக்கும். மேல் கோதையாறு மின்சார திட்ட வேலைகள் மந்தமாக நடக்கிறது. அதையும் விரைவாக்கவேண்டும்.

மின்சார மேனேஜ்மெண்டாருக்கும் வேபார்ஸ்க்கும் ஒற்றுமை இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை ஏற்படச் செய்யவேண்டும். திருநெல்வேலி-தூத்துக்குடி மின் திட்டம் தற்போது தனியாரிடம் இருக்கிறது. அதை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமென்று 1967-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டார்கள். இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை.

மாவட்ட அளவில் ஒரு மாவட்டக் குழு அமைத்து சூப்பிரண்டெண்ட் இன்ஜினியர் அவர்களையோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரையோ தலைவராகக் கொண்டு, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், குறிப்பிட்ட விவசாயிகள், பெரிய வியாபாரிகள் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, எப்படி மின்சாரத்தை அதிகமாகப் பெருக்க முடியும் என்பதைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு இந்தக் குழு மாதத்திற்கு இரண்டொரு முறை கூடிப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தக்கலையில் ரெவின்யூ யூனிட் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் லவிஞ்சிபுரம், கருங்குளம் முதலிய இடங்களிலெல்லாம்



1970 ஆகஸ்ட் 27] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

தக்கலை ரெவின்யூ யூனிட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது அக்கிராம மக்களுக்கு மிகவும் கஷ்டம். ஆகையால் கன்னியாகுமரியில் உள்ள செக்ஷன் ஆபீஸ், நாகர்கோயிலில் உள்ள ரெவின்யூ யூனிட் கீழ் பணி ஆற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்; திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செட்டி குளத்தில் ஓர் செக்ஷன் ஆபீஸ் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. வீரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றி கூறி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

எதிர்க் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் அரசாங்கம் செய்த சாதனைகளைப் பற்றி விளக்கி விளக்கிப் பேசினார்கள். எதிர்க் கட்சித் தரப்பிலே பேசியவர்கள் இந்த வாரியத்தைப் பற்றிக் கூறுவதற்கு ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் பாணியிலே அவர்கள் ஒன்றுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். எங்கள் பாணியிலே நான் கூறிக் கொள்வேன் இதிலே குறை கூறுவதற்கு ஒன்றுமே இல்லை என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். இங்கே ஆளும் கட்சி சார்பில் பேசியவர்கள் சாதனைகளை விவரமாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் கூறி இருக்கிறார்கள். அப்படிப் பேசியபோது சாதனைகளைப் பற்றிய குறிப்புகளை வைத்துக் கொண்டு கூறி இருக்கிறார்கள். அந்தச் சாதனைக் குறிப்புகளெல்லாம் அவர்கள் செவியில் வேதனைக் குறிப்புகளாக ஏறி இருக்கிறது. ஆகையால் தான் அவர்கள் ஒன்றும் இல்லை ஒன்றும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் என்ன என்ன சாதனைகளைச் செய்து இருக்கிறீர்கள். அதை மட்டும் கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். இதுகுறித்து ஒரு குறிப்பைத் தர விரும்புகின்றேன். 1966-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி முடிய பங்கிட்டு அளிக்கும் நிலையங்கள் 17,360 ஆக இருந்தன. 1970-ஆம் ஆண்டு மார்ச் நிலவரப்படி 24,822 ஆக ஆகியிருக்கின்றன. மின்சக்தி உபயோகிப்போர் எண்ணிக்கை 13 லட்சமாக இருந்தது 1970-இல் 19 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இதைத்தவிர ஒவ்வொருவரும் பயன்படுத்தும் அளவு 94 யூனிட்டுகளிலிருந்து 120 யூனிட்டுகளாக உயர்ந்திருக்கிறது. மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் 1966 மார்ச் முடிய 22,137 ஆகும். ஆனால், 1970-இல் 35,677 மின் இணைப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்கள் 1966 மார்ச் முடிய 2,56,594 ஆகும். 1970-இல் 4,70,903 (அதாவது 2 லட்சம் அதிகமாக ஆகியிருக்கிறது மூன்று வருடங்களில்) ஆக ஆகியிருக்கிறது. 1969-70-இல் கிராமங்களுக்கு மட்டும் அந்த ஒரு ஆண்டிலே மின் இணைப்புகள் அளிக்கப்பட்ட கிராமங்கள் 3,950 ஆகும். 1969-70 அந்த ஆண்டிலே மட்டும்

வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி அளிக்கப்பட்டிருக்கிறது; அவற்றின் எண்ணிக்கை 60,784 ஆகும். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சி நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன், விவசாயத்திற்கு மின் இணைப்புத் தராமல் விளக்குப் போடுவதிலே கவனம் செலுத்துகிறோம் என்று கூறுகிறீர்களே, இந்தக் குறிப்பு நல்ல முறையிலே உங்களுக்குப் பயன்படும் என்று நம்புகிறேன்.

அதைப்போலவே அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி 1968-69-ஆம் ஆண்டில் 1,176 ஆக இருந்தது 1969-70-ஆம் ஆண்டில் 4,460 ஆக உயர்ந்திருக்கிறது. கிராம மின்சார விஸ்தரிப்பு சிறப்புத் திட்டங்கள் 45 கோடி ரூபாய் அளவுக்குப் போடப்பட்டு 70 முதல் 72 வரை உள்ள காலத்திற்கு ஒதுக்கப்பட்டு நடைமுறை ஆண்டுக்கு என 1970-71-ஆம் ஆண்டில் 11 ஆயிரம் கிராமங்களுக்கு மின் இணைப்புத் தரவேண்டுமென்ற திட்டம் இயற்றப்பட்டுள்ளது. 1971-72-இல் எஞ்சியிருக்கின்ற எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் துரிதமாகக் கொடுப்பதற்கும் திட்டமிருக்கிறது. ஒன்றுமே மக்களுக்குச் செய்யவில்லை என்று நீங்கள் கூறினால் மக்கள் நம்புவார்கள் என்று நீங்கள் நினைத்தாலும் மக்கள் நினைக்க மாட்டார்கள். மொத்தம் இந்த வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்கள் 71 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 20-க்கும் குறைந்த மாதச் சம்பளம் பெறுகின்ற பணியாளர்களுக்குக்கூட மாதம் ரூ. 32 என்ற அளவுக்குக்கூடச் சம்பளமும் பஞ்சப்படியும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 4 கோடி ரூபாய் இந்த அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் பணியாளர்கள் உற்சாகத்தோடு பணியாற்றவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கிராம மக்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அமல்படுத்தியிருக்கிறார்கள்.

கிளர்ச்சி செய்வதற்கு முன்னாலேயே அவர்களுடைய கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். கோரிக்கைகளை ஏற்ற பின்னாலே அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள். கிளர்ச்சிகளில் ஈடுபட்டபொழுது திட்டமிட்டு ஒரு தேதி, திட்டமிடாத ஒரு தேதியில் ஈடுபட்டார்கள். திட்டமிடாத காரணத்தினாலே மக்களுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல் ஆஸ்பத்திரியிலே இருப்பவர்கள் அறுவைச் சிகிச்சை செய்யும் பொழுது தீமைகள் வரும் என்பதற்காக அதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன என்ன முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்பது மக்களுக்குத் தெரியும். கிளர்ச்சியில் ஈடுபட்ட நேரத்தில் முதல்வர் அவர்கள் ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டார்கள், அந்த வார்த்தையை வைத்துக்கொண்டு ஜால பத்தங்கள் செய்கிறார்கள். இரும்புக் கரம் என்று சொன்னதும் போதும். இரும்புக் கரம் என்று கூறிவிட்டார், அரசுப் பணியாளர்களைப் பார்த்து, பார்த்தீர்களா பார்த்தீர்களா முதலமைச்சர் இரும்புக் கரம் கொண்டு அடக்கு





வேன் என்கிறார் என்றும், தொழிலாளர்களைப் பார்த்து பார்த்தீர்களா முதலமைச்சர் இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் ஒடுக்குவேன் என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது அதை முதலமைச்சர் அவர்கள் ஏன் குறிப்பிட்டார்கள் என்பதைப் புரியாதவர்கள் அல்ல. எதிர்க் கட்சிக்காரர்கள், புரிந்தும் குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலே . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இரும்புக் கரம், கரும்புக் கரம் என்று சொல்லவில்லையா?

**திரு. சி. வீரமணி:** காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

*    *    *    *

**திரு. சி. வீரமணி:** பணியாளர்கள் ஸ்ட்ரைக் திடீரென்று செய்தார்கள், நிருபர்கள் முதலமைச்சரைச் சந்தித்து இது திட்டமிட்ட சதிபோல் தோன்றுகிறதே எப்படி அடக்கப் போகிறீர்கள் என்று நிருபர்கள் கேட்டார்கள். அப்பொழுதுதான் முதல்வர் அவர்கள் துணிந்து சொல்கிறார்கள், ஆமாம் திட்டமிட்ட சதிதான் இதுபோன்ற நாசவேலைகளை அரசாங்கம் இரும்புக் கரம் கொண்டு அடக்கும் என்று சொன்னார்கள், அதிலே என்ன தவறு இருக்கிறது எதிர்க்கட்சிக்காரர்கள் குழப்பவாதிகள், இரும்பு நெஞ்சம் கொண்டவர்களை இரும்புக் கரத்தால் அடக்கவேண்டுமென்று சொல்வதிலே ஆச்சரியமொன்றுமில்லை.

அடுத்தது கோவை நிகழ்ச்சி. கிளர்ச்சியிலே ஈடுபடுவதற்கு முன்னால் அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபொழுது முதலமைச்சர் அவர்கள் முடியாது என்று சொல்லவில்லை, முயற்சிக்கிறேன் என்று சொன்னார்கள். அந்த முயற்சியிலே ஈடுபடுகின்றபொழுது கிளர்ச்சியிலே ஈடுபட்டார்கள். மூன்று பேர்களின் உயிர் போனதற்குப் பரிதாபப்படுகின்ற எதிர்க்கட்சி நண்பர்களைப் பார்த்துக் கேட்கிறேன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே எத்தனை உயிர்கள் போயின, தேக்குமரத் தேகங்கள் எத்தனை தீக்கிரையாயின, எத்தனை தமிழ் மக்கள் மாண்டிருக்கிறார்கள்? அப்பொழுது எல்லாம் இவர்கள் அனுதாபம் கூட தெரிவிக்கவில்லையே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு மதிப்பு அளிக்கக்கூட இல்லையே. கோவை நிகழ்ச்சியிலே வன்முறையினை நோக்கி செல்கிறார்கள் என்ற காரணத்தினாலே கௌரவப் பிரச்சினையாகபாராது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, கிளர்ச்சி என்ன காரணத்திற்காகச் செய்தார்களோ, அந்தக் கோரிக்கைகளை ஒப்புக்கொண்டிருக்கிறது அரசு. அது மட்டுமல்ல மூன்று உயிர்கள் போனதற்காக நீதி விசாரணை வைத்தார்கள். நீங்கள் எத்தனை நீதி விசாரணை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வைத்தீர்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு வைத்தீர்களா, முதுகுளத்தூர் கலகத்திற்கு வைத்தீர்களா? நீங்கள் செய்யாததை நாங்கள் செய்திருக்கிறோம். எதிர்க்கட்சிக்காரர்கள் குழப்பம் உண்டாக்க வேண்டுமென்று எங்களுடைய திட்டங்களைச் சாதனைகளை மறைத்துவிடலாம் என்று பார்க்கிறார்கள். மக்கள் மறந்துவிடமாட்டார்கள் . . .

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதைத்தான் பஞ்சாயத்துத் தேர்தலிலே சொல்லிவிட்டார்கள்,

பி. ப. 1-30 திரு. பி. வீரமணி: எங்களுக்கு பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்திருக்கிறது. உங்கள் ஏடுகளிலே வருகிற புள்ளிவிவரங்களைக்கண்டு மக்கள் ஏமாறமாட்டார்கள்.

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று, நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பி.ப. 1-33 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and orders*

@ 229. Notification issued with Roc. No. 192679—P1, dated the 20th December 1969 in regard to exclusion of areas from certain Panchayats in Agastheeswaran taluk of Kanyakumari district for constitution of seperate Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 230. Notification issued with G.O. Ms. No. 576, Rural Development and Local Administration, dated the 31st March 1970 in regard to certain amendments to the Rural Development and Local Administration Department notifications for the re-arrangement of areas in East Coimbatore Development District, Bhavanisagar, Sathyamangalam, Thookanaickenpalayam, Nambiyur and Gobichettipalayam Panchayat Unions. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 231. Notification issued with Roc. No. 192669/69-P1, dated the 19th December 1969, in regard to exclusion of certain areas from the Tiruvattar, Thirupparappu, Ponmana Aruvikara, Mecode and Attoor Panchayats in Kanayakumari district for constitution of seperate Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



@ 232. Notification issued with Roc. No. 65083/69-P1, dated the 3rd December 1969, in regard to exclusion of Arunapuram village from the Oddampattu Panchayat in Tirukoilur taluk of South Arcot district for the constitution of a seperate Panchayat by name " Arunapuram ". [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 233. Notification issued with G.O. No. 499, Public (Services-A), dated the 7th March 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the constitution of India.]

@ 234. Notification issued with G.O. No. 67, Public (Services-A) dated the 8th January 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to the redesignation of the post of Joint Director of Translation as Director of Translations. [Laid on the Table of the House under Article 320 (5) of the constitution of India.]

### B. *Reports, Notifications and other papers*

£ 36. The Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 17 of 1970).

£ 37. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970).

@ Laid on the Table of the House on 26th August 1970.

£ Despatched to Members on 25th August 1970.

இணைப்பு

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் உரைக்கு திருத்த அறிக்கை.

[326-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

The correct position is that all inclusive rate in Kerala was 9.9 paise (9 + 0.9 tax) and all inclusive rate in Tamil Nadu was 10.8 paise (9 + 1.8 tax). No surcharge was levied in Tamil Nadu on consumption of power for agricultural purposes.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வெள்ளிக்கிழமை, 1970 ஆகஸ்ட் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்கள் திருத்திய ஆசிரியர்களுக்குப் பயணப்படி.

* 85 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த சென்னை வந்த ஆசிரியர் பயணப்படி (Travelling Allowances) சிலருக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆசிரியர்களுக்கு?

(உ) இவர்களுக்குப் பயணப்படி எப்போது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1968-ம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த ஏப்ரல் மாதம் சென்னை வந்த ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதத்தில் பயணப் படி கொடுக்கப்பட்டது. ஆனால், 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாத எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த சென்னை வந்த சில ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதம் வரையில் அவர்களுக் குரிய பிரயாணப்படி கொடுக்கப்படவில்லை. அத்தகைய தாமதத் திற்கு என்ன காரணம் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு விடைத்தாள்களைத் திருத்துவதற்கு ஆசிரியர்கள் பத்து நாட்களுக்கு சென்னைக்கு வரவழைக்கப்படு கிறார்கள். போட்டிருக்கின்ற விதியின்படி அந்தப் பத்து நாட்களுக்கு அவர்களுக்குப் படியும் மற்றவைகளும் தரப்படுகின்றன. சில நேரங்களில் அதைக் கண்காணிப்பதற்காக இரண்டு நாட்கள் முன்னதாக வரச்சொல்லியும், சில பேர்களை இரண்டு மூன்று நாட்கள் பின்னால் இருந்து சரிபார்க்க வேண்டிய நிலை ஏற்படும் போது அவர்களுக்கு அதற்காகத் தனிப்படி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால், போட்டிருக்கும் விதி அதற்கு இடம்

[1970 ஆகஸ்ட் 28

தராத காரணத்தால் கொஞ்சம் காலத் தாழ்வு ஏற்பட்டது. பிறகு எம். டி. ஏ. ரூல்ஸின் 44 (1) விதியைத் தளர்த்தித்தான் கொடுக்க வேண்டி வந்தது. எனவே, காலத்தாழ்வு ஏற்பட்டு, பிறகு விதியைத் தளர்த்தி ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய படிகள் எல்லாம் கொடுக்கப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களுக்குப் பயணப்படி எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, படிகள் பற்றிய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், ஆசிரியர்களுக்குப் பயணப்படியும் நாள் படியும் எந்த விகிதங்களில் தரப்படவேண்டுமென்று விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த விகிதங்களில் தரப்படுகின்றன.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இனிமேலாவது இம்மாதிரியான காலதாமதம் ஏற்படாமல், உடனடியாக ஆசிரியர்களுக்குப் பயணப்படி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்பட்ட நிலைமையைக் கருத்திற்கொண்டு அடுத்த ஆண்டு முன்கூட்டியே அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது, எத்தனை நாள் அவர்கள் சென்னையில் தங்குகிறார்கள் என்பதைப் பொருத்திருக்கிறது. சில பேர்களை இரண்டு மூன்று நாட்கள் அதிகமாகவே சென்னையில் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. மற்றவர்கள் செய்த வேலைகளைச் சரிபார்ப்பதற்கு அவர்கள் சில நாட்கள் அதிகமாகத் தங்கினால் அதற்குரிய படிகள் அவர்களுக்கு அளிக்கப்படுவதற்குரிய அளவில் விதிகளைத் தளர்த்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு இந்தக் கஷ்டம் இருக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு விடைத்தாள்களைத் திருத்துவதற்காகச் சென்னைக்கு வரும் ஆசிரியர்களுக்கு நாள் படி மிகக் குறைவாகக் கிடைப்பதால், ஒரு நாள் படி ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. ஆகவே, அடுத்த ஆண்டிலாவது நாள் படியை அவர்களுக்கு உயர்த்திக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கொடுக்கப்படும் படி அவர்களுக்குப் போதவில்லை என்று அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு சென்ற ஆண்டு அவர்கள் திருப்தி கொள்ளும் அளவுக்கு அவர்களுடைய படி ஓரளவுக்கு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், முன்கூட்டியே கூட அவர்களுடைய செலவுக்குப் பணம் கொடுக்கும் அளவுக்கும் இந்த ஆண்டு திருத்தும்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

1970 ஆகஸ்ட் 28]

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது கொடுக்கப்படும் டி.ஏ. (T.A.) டி.ஏ.(D.A.) எந்த ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது? அப்பொழுது இருந்த விலைவாசி என்ன? இப்பொழுதிருக்கும் விலைவாசி என்ன? இப்பொதைய விலை வாசிக்கேற்ற அளவில் டி.ஏ., (T.A.) டி.ஏ. (D.A.)க்களை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விலைவாசியையொட்டி, அவர்கள் திருப்திப்படும் அளவுக்கு இந்த ஆண்டு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்த்திக்கொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல், வந்ததற்குப் பிறகு எழுதிப் பெறவேண்டிய நிலை இல்லாமல், முன்கூட்டியே கல்வித்துறை இயக்குநர் அவர்கள் தொகையை வாங்கி வைத்துக்கொண்டு அவர்களுக்கு முன்கூட்டியே தரலாம் என்று ஏற்பாடு செய்து, அவர்களுக்கு அந்தக் கஷ்டம் இல்லாத அளவு இந்த ஆண்டு பார்த்துக் கொள்ளப்பட்டதால் இந்த ஆண்டு அப்படிப்பட்ட குறை ஏதும் வரவில்லை.

## நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கக் கோரிக்கை

* 86 வினா.—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து 2—4—1969 தேதியிட்ட கோரிக்கை விண்ணப்பம் ஒன்று வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) முறையீட்டில் அடங்கியிருந்த வேண்டுகோள்கள் பொதுத் தன்மை வாய்ந்தவையாக இருந்ததாலும், அவை அரசினால் ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டிருந்தபடியாலும் அவை குறித்து தனித்தனியாகத் திட்டவட்டமான நடவடிக்கை ஏதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கத்தில், ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வு ஊதியத்தை இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள். சர்க்கார் ஊழியர்களுக்கு முப்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டதேயொழிய ஆசிரியர்களுக்கு அந்த உயர்வு அளிக்கப்படவில்லை. இருபது ரூபாய்தான் ஓய்வு ஊதியமாகக் கிடைக்கிறது என்கிற குறை அவர்களுக்கு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும், ஏனைய சர்க்கார் ஊழியர்களுக்கு அளிக்கப்படும் இந்தச் சலுகையைக் கொடுக்க அரசு முன் வருமா?

[1970 ஆகஸ்ட் 28

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு, மற்றவர்களுக்குக் கொடுப்பதைப் போல் பென்ஷனை முப்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை இப்பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது. இது நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்து மட்டுமல்லாமல், மாநிலம் முழுவதிலும் இருக்கும் பிரச்னையாக இருப்பதால் அது பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம் கொடுத்த விண்ணப்பத்தில் உள்ள கோரிக்கைகள் என்னென்ன என்பதை அமைச்சரவர்கள் விவரிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கம் பல கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். பிராவிடென்ட் பண்டு முறையை விரைவில் அகற்றவேண்டுமென்றும், பென்ஷன் தொகையை இருபது ரூபாயிலிருந்து நாற்பது ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டுமென்றும், பென்ஷனை எல்லா ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் பத்து சதவீதம் உயர்த்தவேண்டுமென்றும், அவர்களுக்கு ஹில் அலவன்ஸ் பத்து ரூபாய் தரவேண்டும் என்றும், மருத்துவ வசதி பிற மாவட்டத்தினருக்குக் கொடுப்பது போன்று தங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், எஜுகேஷனல் கன்ஸெஷன்ஸ் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போல் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கும் தரவேண்டும் என்றும், 1964-ம் ஆண்டுக்குப் பிறகு ரிடையர் ஆனவர்களுக்குத் தரப்படும் சலுகைகள் அதற்கு முன்பு ரிடையர் ஆன ஆசிரியர்களுக்கும் தரவேண்டும் என்றும் அந்த முறையீட்டில் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். குடும்பப் பென்ஷன் திட்டம் அவர்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று இப்படிப் பொதுவான கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இவை எல்லா ஆசிரியர்களைப் பொறுத்தும் பரிசீலிக்கப்படவேண்டியிருப்பதால், பல்வேறு பிரச்சினைகள் வரும்போது இவையும் கவனிக்கப்படும்.

திரு. நா. கிருட்டிணன் : தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியத்தை இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாயாக உயர்த்தித் தருவதன் மூலம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்று தெரிகிறது. இந்த ஒரு கோடி ரூபாய் குறைந்த கூடுதல் செலவாக இருப்பதால், கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக்கொண்டு, விரைவிலே அதை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் என்னும்போது அதைக் குறைந்த தொகை என்று கொள்ள முடியாது. ஆனாலுங்கூட, பிரச்சினை நியாயமானது என்ற அடிப்படையில் நாம் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றி அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது எந்த



1970 ஆகஸ்ட் 28]

ஆண்டில் ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுக்கப்படலாம், எல்லாருக்குமே கொடுக்கப்படலாமா என்பதையெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## தொடக்க, உயர்தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதியம்

* 87 விஞ.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியம், தனியார் சார்பில் அமைந்த தொடக்கப் பள்ளி, உயர்தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்குக் கூடுதல் சிறப்பு ஊதியம் (Special Pay) வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களின் சம்பளம், படிகள் இவையாவும் குறித்து சம்பள ஆணைக்குழு ஆய்வு செய்யும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : சம்பள ஆணைக்குழு நிர்ணயித்திருக்கின்ற சம்பள விகிதம் எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இரண்டு நாட்களுக்கு முன்பே குறிப்பிடப்பட்டது. விரைவில் தரவேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்ன தேதி என்று கூற முடியாவிட்டாலும் விரைவில் அது பற்றிய முடிவு அறிவிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : அநேக ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகிற ஆசிரியர்கள் சம்பளம் கிடைக்காத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அடிக்கடி டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்குத் தந்தி அனுப்பியும் கவனிக்கப்படவில்லை; குறிப்பாக, திருச்செந்தூர் உடன்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு 1970–71-ல் சாங்ஷன் செய்யப்பட்ட ஸ்பெஷல் டி. ஏ. இன்னும் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஓட்டைப்பிடாரம் பஞ்சாயத்து யூனியனில் சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். உடன்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இது போன்று மற்றுமுள்ள பள்ளி ஆசிரியர்களுக்கும் உடனடியாகச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்கு தாக்கீது அனுப்ப அரசு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விக்கு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல முடியும். கல்வியமைச்சர் எப்படிப் பதில் கூற முடியும்?

திரு. சி. கோவிந்தராஜன் : தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சிறப்பூதியம் தருவது சம்பந்தமாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா? அது சம்பந்தமாக அரசாங்கம் சம்பளக் கமிஷனுக்கு சிபாரிசு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துவக்கப் பள்ளி, உயர் துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தனி டியூட்டி அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது சம்பளக் கமிஷனின் பரிசீலனையில் இருந்து வருகிறது. சம்பளக் கமிஷன் முடிவு எடுத்ததற்குப் பிறகு அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

THIRU K. VINAYAKAM: Whenever any question relating to pay or allowance or T.A. or D.A. is asked, on the floor of the House, for any category of Government servants, the usual stereo-typed answer is that is has been referred to the pay commission and that Government are awaiting the recommendation by the Pay Commission. May I know what are the terms of reference of that Commission? Have these instances been brought under their purview? If not, will the Government forward these to the Pay Commission so that they may cover these points also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவர்களுடைய சம்பளம், படி ஆகிய அத்தனையையும் சேர்த்து முறையாக முடிவு எடுப்பதற்குத்தான் பே கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு துறையினரும் தங்களுடைய கோரிக்கைகளைப் பே கமிஷனிடம் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று பல்வேறு அலுவலகத் தலைமையினரும் (ஹெட்ஸ் ஆப் டிப்பார்ட்மெண்ட்ஸ்) தங்களுடைய துறை ஊழியர்களுடைய சம்பளம், படி ஆகியவற்றை நிர்ணயிப்பதைப் பற்றி எழுதி அனுப்பியிருக்கிறார்கள். பே கமிஷன் அவற்றை எல்லாம் பரிசீலித்து முடிவு எடுப்பார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: In the district board administration, the headmasters of higher elementary schools where there were more than five teachers were getting duty allowance. But after abolition of district boards, that system has been abolished. Will the Hon. Minister try to revive that system?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று ஏற்கனவே, நான்கு ஆசிரியர்கள், 300 மாணவர்களுக்கு உள்ளாக இருந்தால் இரண்டு ரூபாயும், நான்கு ஆசிரியர்கள், 300 மாணவர்களுக்கு மேல் இருந்தால் ஐந்து ரூபாயும் கொடுக்கும் ஏற்பாடு இருந்தது. அதேபோன்று தனியார் பள்ளிகளுக்கும் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்தது. அந்தக் கோரிக்கைகளை எல்லாம் சேர்த்து சம்பளக் கமிஷனில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அத்தகைய உதவி தரப்பட வேண்டுமென்பதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனித்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதெல்லாம் பே கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு அமல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கனவே கோத்தாரி கமிஷன் ரிப்போர்ட் ஒன்று வந்தது. அதை அமல்படுத்த வேண்டுமென்று ஆசிரியர்கள் போராடி ஒன்றும் பெற முடியாதநிலை ஏற்பட்டது. அதே போன்ற நிலைதான் இந்த பே கமிஷன் ரிப்போர்ட் வந்த





மாண்புமிகு பேரவைத் தலைவர்: "ஹைபதடிகல்" கேள்வி கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கோத்தாரி கமிஷன் சிபாரிசை மற்றைய மாநிலங்களை விட நாம் அதிகமாக நிறைவேற்றி இருக்கிறோம். உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகள் நிலையில் முழுவதும் நிறைவேற்றியுள்ளோம். துவக்கப் பள்ளிகளைப் பொருத்தவரை நிறைவேற்ற வேண்டுமென்றால், பெரும் தொகை தேவைப்படுகிறது. இந்திய அரசாங்கம் அதற்கு ஒரு பங்கை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று எல்லா மாநிலங்களும் ஏகோபித்த முறையில் கல்வியமைச்சர்கள் மாநாட்டில் வற்புறுத்தியிருக்கிறோம். சம்பளக் கமிஷன் கோத்தாரி கமிஷன் மாதிரி அல்ல. இது நாமாக நியமித்தது. சம்பளக் கமிஷன் செய்கிற முடிவுகளை அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்தும். அதிலே ஐயப்பாடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை.

ஹாஜி ம. மு. பீர்முகம்மது: ஊதியக் குழுவினுடைய பரிந்துரை காலதாமதமாகிற காரணத்தால் பிற துறையினருக்கு இடைக்கால ஏற்பாடு செய்திருப்பது போன்று, இந்தத் துறையிலும் இடைக்கால ஏற்பாடாக ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்படிப்பட்ட ஊதிய உயர்வு நாமாகச் செய்கிறபோது கோடிக் கணக்கில் போகிற காரணத்தால், சம்பளக் கமிஷன் முடிவை எதிர்ப்பார்க்கிற நிலைமையில் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி தலைமை ஆசிரியர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுப்பது பற்றிய கேள்வி. திரு. டி. மார்டின்......

திரு. டி. மார்டின்: தலைமையாசிரியர்களாக இருந்தாலும், சாதாரண ஆசிரியர்களாக இருந்தாலும், மாதா மாதம் அவர்களுக்குச் சம்பளம் காலதாமதமின்றிக் கொடுக்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாகச் சம்பளம் கொடுப்பதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாநிலத்தில் இருக்கிற அவ்வளவு துவக்க, உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் அரசாங்கத்தின் பணம் ஒழுங்காகப் போய்க் கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையை வேறு வகையில் செலவழித்து விட்டால் இந்த மாதிரி நிலைமை ஏற்படுகிறது. உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தின் நிலை என்ன என்று தெரியவில்லை. குறைபாடு அரசாங்கத்தில் இருந்தால் உடனடியாக நிவர்த்திக்கலாம். குறைபாடு ஊராட்சி ஒன்றியத்தின் நிலையில் இருந்தால் அங்கே நிவர்த்திக்க வேண்டும். இதுபற்றி உடனடியாகக் கவனித்து ஏற்பாடு செய்யப்படும்.

[1970 ஆகஸ்ட் 28

## ஆரம்பப் பள்ளிகளுக்கு முழுநேரத் தொழிலாசிரியர்கள்.

* 88 வின.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியம், தனியார் சார்பில் அமைந்திருக்கும் தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளிகளில் முழு நேரத் தொழிலாசிரியர்களை அமர்த்த அரசு முன்வருமா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 6 முதல் 8-வது வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தது 5 பிரிவுகளாவது உள்ள பள்ளிகளில், தொழிலாசிரியர்களுக்கு வாரம் ஒன்றுக்கு தொழில் புகுமுகப் பயிற்சியில் 18 பாட நேரங்களுக்குக் குறைவில்லாமல் வகுப்புகள் அமையுமாளுல், அத்தகைய பள்ளிகளில், முழு நேரத் தொழிலாசிரியர்களை அமர்த்த 1963-64 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த பார்ட் டைம் க்ராப்ட் இன்ஸ்ட்ரக்டர்களுக்கு தற்சமயம் 30 ரூபாய்தான் ஊதியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் குறைவாக இருப்பதால் இந்த 30 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக வைத்துக்கொண்டு டி. ஏ. போன்ற அலவன்சுகளைக் கொடுக்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை. இவர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்குவதற்கு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. பக்கத்தில் உள்ள இரண்டு மூன்று பள்ளிகளை ஒன்ருக எடுத்துக் கொண்டு இவர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்கி. முழு நேர ஆசிரியர்களுக்கான ஊதியத்தைக் கொடுத்தால் இந்தப் பிரச்சினை ஓரளவு தீரும்.

திரு. வி. டி. அண்ணுமலை : தற்போது க்ராஃப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ் தச்சுத் தொழில், கைத்தறித் தொழில் இவைகள் மட்டும் கற்றுக் கொடுக்கிருர்கள். இத்துடன் வானெலிப் பெட்டிகள் தயாரித்தல், கடிகாரம் தயாரித்தல், மின்சார இணைப்புகளைக் கற்றுக் கொடுத்தல் ஆகியவற்றையும் கற்றுக் கொடுத்து, தொழில் வளர்ச்சிக்கு ஆக்கம் தரத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது கைத்தறித் தொழில், தச்சுத் தொழில் இவைதான் ஆங்காங்கு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்றவைகள் எல்லாம் வேறு டெக்னிக்கல் ஸ்கூல். டெக்னிக்கல் ட்ரெயினிங் என்ற அளவில் அப்பாடப் பிரிவுகள் எல்லாம் சொல்லிக் கொடுக்கப்படுவதால், கைத்தொழில் பிரிவின்கீழ் அவை வராததன் காரணமாக இங்கு கைத்தறித் தொழில் தச்சுத் தொழில் இவை மட்டும்தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

1970 ஆகஸ்ட் 28]

திரு. வ. ஜார்ஜ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசாங்கப் பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் க்ராப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ் பார்ட் டைமாகத்தான் இருக்கிருர்கள். அவர்களுக்கு வாரத்திற்கு இருபது பீரியடுகளுக்கு மேல் இருக்கின்றன. அப்படி இருந்தபோதிலும் முழு நேர வேலையாக அவற்றை ஆக்குவதற்கு வருடந்தோறும் கன்வர்ஷனுக்கு எழுதுவதும், அவை பாக்கட் வீட்டோ என்ற முறையில் அவை எந்தவிதமான உத்தரவும் இடாமல் இருக்கின்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 18 வகுப்புகளுக்கு மேல் இருந்தால் அவர்களை முழு நேர ஆசிரியர்களாக கருதப்படும் என்ற உறுதியின் பேரில் அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 18 வகுப்புகள் எடுக்கிற சூழ்நிலை இருந்தால் அவர்கள் முழு நேர ஊழியர்களாக கருதப்படுகிருர்கள். எல்லா வகைகளிலும் தகுதி பெற்று படிப்புத் தகுதி, தொழில் தகுதி இவை இரண்டும் பெற்றிருப்பார்களேயாளுல் அவர்களுக்கு முழு நேரச் சம்பளமும் தரப்படுகிறது. தொழில் தகுதி பெற்று படிப்புத் தகுதி பெருமல் இருந்தால் ரூ. 55—1—70 என்ற அளவில் தரப்படுகிறது. தொழில் தகுதி பெருமல் ப்ரீவொக்கேஷனல் அளவு பயிற்சிபெற்ற கல்வித் தகுதி மட்டும் பெற்றிருந்தால் 55 என்று இருக்கிறது. எல்லாத் தகுதிகளும் பெற்று 18 வகுப்புகளுக்கு மேல் இருந்தால் அவர்கள் முழு நேர ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிருர்கள். 18 வகுப்புகளுக்கு மேல் வேலை செய்து முழுத் தகுதியும் பெற்றும், அவர்களுக்கு முழு நேரச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்தால் அது என் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமாளுல், அந்த ஆசிரியர்களின் குறைபாடுகளை நீக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

* 89 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Municipal Health Officer at Tiruchirappalli has found out chemical adulterated in the rose coloured sago " Vadam " used in marriages; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருளை விற்றதற்காக திருச்சிராப்பள்ளியில் சின்னக் கடைத் தெருவைச் சேர்ந்த திரு. வெங்கட்ட சுப்பிரமணியம் என்பவரின் மகன் திரு. சிவகுமார் என்பவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவருக்கு திருச்சி குற்ற விசாரணை இணை நீதிபதி அவர்களால் 18—10—1969-ஆம் நாளன்று ரூ. 50 தண்டம் விதிக்கப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மக்களுடைய உடல்நலனையும் சுகாதாரத்தையும் கருதி இம்மாதிரி கலப்படம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆங்காங்கு இவற்றைக் கண்டு பிடிப்பதற்கு அதிகாரிகள் மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திருச்சியைப் பொறுத்தவரையில் இந்தப் பொருளைச் சேர்ப்பதன் மூலம், வடாம் போன்றவற்றில் சேர்ப்பதன் மூலம் அது உடலுக்கு தீங்கு பயக்கிறது என்பதை ஒலிப்பெருக்கி மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்தி, வண்ணம் பெறவேண்டுமென்று இந்தப் பொருளைச் சேர்க்கிறார்கள், அதனால் தீங்கு ஏற்படுகிறது, ஆகவே அதைச் சேர்க்கக்கூடாது என்று பிரசாரம் செய்யப்பட்டு திருச்சி மாவட்டத்தில் ஓரளவு அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் அந்த முறையைக் கையாண்டு மற்றவர்களுக்குத் தெளிவு பயக்கும்படி சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 90, 91, 92 இவை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### *Seminar on mechanised fishing boats*

* 93 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Government participated at the Seminar on the mechan'sed fish'ng boats which was held at Madras in October 1969 under the auspices of the Planning Commission?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த திட்ட மதிப்பீட்டு நிறுவனம் 11—10—1969 அன்று நடத்திய மீன்பிடி படகுகள் கட்டும் திட்ட மதிப்பீட்டாய்வு தொடர்பான கருத்தரங்கின் தொடக்கக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சென்னை மீனளத்துறை இயக்குநரை திட்ட ஆணைக்குழுவின் வட்டார மதிப்பீட்டு அதிகாரி அழைத்தார். (தலைமையிட) மீனளத் துறைத் துணை இயக்குநர், சென்னை, மீனளத் துறைத் துணை இயக்குநர், மெரினா, ராயபுரம் ஆகிய இடங்களிலுள்ள படகு கட்டும் தளங்களின் பணி மேலாளர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கின் தொடக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தக் கருத்தரங்கில் என்னென்ன பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டன? எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன? அவற்றின் மீது மாநில அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அது குறித்த விவரம் எதுவும் இல்லை. அந்தக் கருத்தரங்கில் யார் யார் கலந்து கொண்டார்கள், அரசாங்கம் கலந்து கொண்டதா என்ற கேள்விக்குத்தான் அரசாங்கச் சார்பில் பல அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் என்ற விவரம்தான் தற்போது என்னிடம் இருக்கிறது.

திரு. டி. மார்டின்: விசைப் படகுகளை உபயோகிப்பவர்கள் மூன்று மைல்களுக்கு அப்பால் சென்றுதான் உபயோகிக்க வேண்டும் என்று இருந்தும் கூட அந்த மூன்று மைல்களுக்குள்ளேயே விசைப்



படகுகளை பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்கள் என்று கூறி நெல்லை போன்ற மாவட்டங்களில், புன்னக்காயல் போன்ற இடங்களில் மீனவர்களுக்கிடையே அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட தகராறுகளைத் தீர்ப்பதற்காக ஸ்பெஷல் போலீஸ் அரேஞ்ச்மென்ட்ஸ்க்கு ஏற்பாடு செய்து மூன்று மைல்களுக்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்கிறார்களா, மற்ற மீனவர்கள் அவர்களுக்கு வேண்டுமென்று தொந்தரவுக்ள் கொடுக்கிறார்களா என்று கண்டறிந்து மீன் பிடிப்புத் தொழிலில் அமைதி ஏற்படுத்த, இந்த ஆலோசனைக் குழு மூலம் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்தக் கேள்விக்கு இது சம்பந்தப்பட்டதில்லை என்றாலும் சில நாட்களுக்கு முன்னர் இதுகுறித்து பதில் சொல்லியிருக்கிறேன். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்படுகிற சச்சரவுகளை தீர்க்கவும், யார் மீது குற்றம் என்று பார்த்து திருத்துவதற்காகவும்தான் அந்தக் குழு பயன்படுமே தவிர, போலீஸ் அதிகாரிகளை வைத்து ஒரு தனிப் படை அமைப்பது என்பது சாத்தியக்கூறாக இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: அந்தக் கருத்தரங்கில் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். அங்கு பேசப்பட்ட கருத்துக்களை எல்லாம் ஒன்று திரட்டி அங்கு கூறப்பட்ட நல்ல திட்டங்களை செயலில் கொண்டுவருவதற்காகத்தான் இப்படிப்பட்ட கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஆனால் அந்தக் கருத்தரங்கில் சொல்லப்பட்ட விஷயங்களுக்கும் சர்க்காருக்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல் அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். ஆகவே, கருத்தரங்குகள் வீணான முறையில்தான் நடைபெறுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து. ப்ளானிங் கமிஷன் ரீஜனல் எவால்யுவேஷன் ஆபீஸர் தான் அழைத்திருக்கிறார்கள். அழைத்து அவர்கள் சில கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். நம் மாநில அதிகாரிகள் அவற்றிற்கு பதில் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். பின்னர் அந்த மதிப்பீட்டு நிறுவனம் வேறு பிரச்சினைகளை பரிசீலித்திருக்கிறார்கள். அப்போது நம் அதிகாரிகள் அங்கு இருக்கவில்லை. தொடக்க விழாவிற்கு மட்டும் அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். சில கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு அவர்கள் வெளியே வந்திருக்கிறார்கள். அவ்வளவுதான் விவரம்.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த அமைச்சர் மாண்புமிகு கோவிந்தசாமி ஐயா அவர்கள் இருக்கிற காலத்தில் மாவட்டங்களில் மீனள கருத்தரங்குகளும், விவசாயக் கருத்தரங்குகளும் நடைபெற்றதன் மூலம் பல நல்ல பலன்கள் ஏற்பட்டுள்ளன. அதே முறையை இப்போதும் கையாண்டு ஆங்காங்கு விவசாயக் கருத்தரங்குகளும், மீனள கருத்தரங்குகளும் நடைபெற ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விவசாயக் கருத்தரங்குகள் இப்போதும் நடந்து வருகின்றன. சில மாவட்டங்களில் முடிவுற்றிருக்கின்றன. சில மாவட்டங்களில் நடைபெற இருக்கின்றன. மீனளத் துறையைப் பொறுத்து, இன்னும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால் ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் இப்போதும் பல மாவட்டங்களில் கூடி அவர்கள் தங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை அரசுக்கு அனுப்புகிறார்கள், அரசு அவற்றினை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: "யான்மர்" விசைப்படகுகளைத்தான் அதிகமாக மீனவர்கள் விரும்புகிறார்கள். அதைத்தான் அவர்களுக்கு அதிகமாக விநியோகம் செய்ய வேண்டுமென்று ஏதாவது முடிவு அந்த செமினாரில் எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தக் கருத்தரங்கில் என்ன பேசினார்கள் என்ற தகவல் இல்லை என்று சொன்னேன். ரீஜனல் எவால்யுவேஷன் ஆபீஸர் அழைப்பின்பேரில் நம் அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். தொடக்கத்தில் மட்டும் நம் அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள் நம் அதிகாரிகள், யான்மர் என்ஜின் பொறுத்தவரையில் அதைத்தான் மீனவர்கள் விரும்புகிறார்கள். இனி அந்த என்ஜின்கள் நமக்கு வராது என்று கருதுகிறேன். கையிருப்பு என்ஜின்களை எல்லாம் சில பேர்களுக்கு கொடுத்தாகி விட்டது. அந்த என்ஜின்களை தயார் செய்ய அரசு முயற்சி எடுத்திருக்கிறது. அதற்கான ஒரு தளம் அமைக்க வேண்டுமென்று ஜப்பான் அரசோடு தொடர்பு கொண்டு அவர்களின் உதவி கொண்டு யான்மர் என்ஜின்களை தயார் செய்ய ஒரு நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அதற்குரிய ஒப்புதலுக்கான பதிலைத் தரவில்லை. மாநில அரசு அதை வற்புறுத்திக்கொண்டுதான் வருகிறது.

*Visit of 'Wheat associates'*

* 95 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether any 'Wheat associates' team from America visited Madras State in December 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) அமெரிக்க கோதுமை பயிரிடுவோர் சங்கத்தின் இயக்குநர் திரு. ஆர். ஏ. ஹண்ட் தலைமையில் ஐவர் கொண்ட குழு ஒன்று 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அமெரிக்காவிலிருந்து இம்மாநிலத்திற்கு வருகை புரிந்தது, இக்குழு சேவா சமாஜம் பெண்கள் பயிற்சிப் பள்ளி, அடையாறு, "கில்டு ஆப் சர்வீஸஸ்"; சென்னை, வலம்வரும் சத்துணவு வளர்ச்சித் திட்டப் பிரிவு ஆகிய இடங்களுக்கு வருகை புரிந்தது. மேலும், 4—12—1969-ல் தென்னிந்திய உருளை மாவு ஆலைகள் சங்க உறுப்பினர்களையும் இக்குழு சந்தித்தது.



திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த மாநிலத்தில் கோதுமை உற்பத்தி அதிகரிப்பு சம்பந்தமாக ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? அல்லது மாநில அரசு சார்பில் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? ஆமெனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது அரசாங்க சார்பற்ற குழு. அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் வந்து சென்றார்கள். வேறு தகவல்கள் இல்லை.

*மதுரை, ஆட்டிறைச்சி சில்லரை விற்பனையாளர் சங்கத்தின் முறையீடு*

* 96 வினா.—திரு. டி. மார்டின்: மாண்புமிகு உணவு, வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள ஆட்டிறைச்சி சில்லரை விற்பனையாளர்கள் வெளியிடங்களிலிருந்து வாங்கி வரும் ஆடுகளுக்கு விற்பனை வரி வசூல் செய்யப்படுகிறதென்று மதுரை நகர் ஆட்டிறைச்சி சில்லரை விற்பனையாளர் மதுரை சங்கம் 20—3—1970 தேதியிட்ட மனுவை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு சமீபத்தில் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) அந்த மனு வருவாய்த் துறை வாரியம், வணிக வரி பிரிவின் முடிவுக்கு அனுப்பப்பட்டது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். 93-க்கு அப்புறம் 95-ஆவது கேள்வி எடுக்கப்பட்டிருக்கிறது. 94-வது கேள்வி என்னவாயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேளாண்மை அமைச்சர் என்று தப்பாக போடப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அதற்கு பதில் சொல்லவேண்டும்.

திரு. டி. மார்டின்: சில்லறையாக இந்தவிதமான ஆடுகள் வாங்கிக் கொண்டு வருகிறவர்களிடம் வரி வசூல் செய்கிறார்கள் என்ற விண்ணப்பத்தை மார்ச் 1970-ல் அரசுக்கு அனுப்பியும்—அது குறித்த விண்ணப்பத்தை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அந்தவிதமாக வரி வசூல் செய்யாமல் இருக்கும் உத்தரவை மதுரையில் உள்ள வரி வசூல் அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபோன்ற உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகளை இறைச்சிக்காக அனுப்புவது என்பதற்கு வரி போடக்கூடாது என்று திட்டவட்டமாக அரசாங்கம் உத்தரவு அனுப்பித்து இருக்

[1970 ஆகஸ்ட் 28

கிறது. வியாபாரத்திற்காக என்று சொன்னால் வரி விதிக்கப்படும். அது சம்பந்தமான உத்தரவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், சில்லரை இறைச்சிக்கு வரி போடக்கூடாது என்ற கோரிக்கையை மிக்க கவனத்தோடு பரிசீலித்து ரத்து செய்து இருப்பதை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில்லரை வியாபாரிகள் சிலர் சேர்ந்து சந்தைகளில் 40–50 மைல் தூரம் கால்நடையாகக் கொண்டுவர முடியாமல் ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு வருகிறபோது மொத்த வியாபாரத்திற்குக் கொண்டு செல்கிறார்கள் என்று சொல்லி வரி போடப்படுகிறது. இந்த நிலையில் உள்ளவர்களுக்கும் அரசு உத்தரவு மூலம் வரி விலக்குத் தரவேண்டும். சில்லரை வியாபாரிகளுக்கு வரி இல்லாது செய்து இருப்பதற்கு நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்தமாக சந்தைகளிலிருந்து இறைச்சியை சில்லரை வியாபாரிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டால் வரி போடக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, அரசு போட்ட இந்த உத்தரவின் காரணமாக சில்லரை வியாபாரிகளிடமிருந்து வரி வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருப்பிக் கொடுத்து விட்டதாக எனக்குக் கவனம். இல்லை என்றால், கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : இது போன்ற இறைச்சிகள் அடுத்த மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால் எந்த விகிதத்தில் வரி போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சன்முகம் : வேறு மாநிலத்திற்கு எடுத்துச் சென்றால் வரி உண்டு. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

### ஆயுள் தண்டனைக் காலம்

*97 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கால கைதிகளின் கால வரம்பை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, முதிய வயதில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளின் தண்டனை காலத்தைக் குறைக்க அரசு ஏதாவது வகை செய்யுமா?



1970 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் முழுவதும் தண்டனை இருக்க வேண்டுமென்று சட்டம். 20 ஆண்டுக் காலம் தண்டனை விதிக்கப்படுகிறது. 3-ல் 2 பங்கு வயதிலே அவர்கள் தண்டனை கழித்து விட்டால் "அட்வைசரி போர்டு" க்கு அனுப்பி பரிசீலித்து, அதற்குப் பிறகு அவர்களை விடலாம் என்று திட்டம் இருக்கிறது. இன்னொரு விதியின் அடிப்படையில் முதிய வயதானவர்களாக இருந்தால் அவர்களையும் முதிய வயது என்ற காரணத்திற்காக "அட்வைசரி போர்டு"க்கு அனுப்பி அவர்களை சிபார்சு செய்தால் விடுதலை செய்யலாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஆயுள் தண்டனை என்பதற்கும், ஜீவாந்திர சிட்சை என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன, கால வரம்பு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனை என்பதற்கும், ஜீவாந்திர சிட்சை என்பதற்கும் மொழி வேறு என்பதைத் தவிர வேறு வித்தியாசம் இல்லை.

திரு. என். வரதராஜன் : ஒரு நீண்ட தண்டனை பெறும் ஆயுள் கைதிகளுக்கு 7–8 ஆண்டுகளுக்கு பின்னாலே சலுகை தருவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கும் விதி முறையில் அவர்கள் பொறுப்பில் "கான்விக்ட் வார்டு" என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏராளமான சலுகைகள் இருப்பதாகத்தான் என்னுடைய சிறை அனுபவம் சொல்கிறது.

### திருச்சி பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் மகாநாடு

*98 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்குகளை துரிதமாக பைசல் செய்வதற்கு குற்ற சட்டங்களில் உள்ள சில குறைபாடுகளை அகற்ற வேண்டுமென்று 1969 அக்டோபரில் திருச்சியில் நடந்த தமிழக பப்ளிக் பிராசிக்யூட்டர்களின் மகாநாட்டில் யோசனை சொல்லி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(இ) ஆம் என்றால், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) இம்மாநில அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், அரசு குற்றவியல் கூட்டு வழக்குரைஞர்கள் மாநாடு 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது. சட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்யவும் குற்றவியல் சட்டம் விதிக் கோவை ஆகியவற்றில் செய்யத்தக்க திருத்தங்கள் குறித்து பரிவுரைகள் செய்யவும் குழு ஒன்றை அமைத்து அம்மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அரசு குற்றவியல் வழக்குரைஞர்களின் அடுத்த மாநாட்டில் இப்பரிவுரைகள் கிடைக்கும். இப்பரிவுரைகள் கிடைத்தபின்னரே அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க இயலும்.

*Functional Estates for Electronic Computors*

*99 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open Functional Estates for Electronic Computors in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மின் அணு 'electronic computor' சம்பந்தமாக இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன? வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற நேரத்தில் குறைந்த அளவில் இது உபயோகிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : Electronic computors ஆரம்பிப்பதற்கு போதுமான சக்தி இல்லை என்று சொன்னார்கள். பொதுவாக functional estate for elecronic computors, functional industrial estate for electronic industry என்ற அடிப்படையில் சுமார் ரூ. 39,60,000 செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றுவதற்கு இப்போது இடம் தேர்ந்து எடுக்கிற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் resistors, capacitors, condensors, connectors entertainment electronic industrial computors, auxiliary and ancillary for electronic industries முயற்சி இப்போது நாம் எடுத்து இருக்கிறோம். எலக்டிரானிக்ஸ் பொறுத்த வரையில் நம்முடைய மாகாணத்தில் போதிய அளவுக்கு முன்னேற்றம் காணவில்லை என்பது உண்மையாகும். ஜப்பான், ஜெர்மனி போன்ற தொழில் துறையில் முன்னேறி இருக்கும் நாடுகளோடு நாம் தொடர்பு கொண்டு இதைச் சிறந்த முறையில் இந்த electronic complex இங்கே உருவாக்கலாம் என்று முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுத்துக் கொண்டு இருக்கிறது. கம்ப்யூடர் வேண்டுமா, வேண்டாடமா என்பதை தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைக்கும் பொறுத்த விஷயமாகும். தொழிலாளர் அமைச்சரைக் கேட்டால் பதில் சொல்வார்.

தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை

*100 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள கூட்டுறவுத் தொழிற்பேட்டை எப்போது தொடங்கப்பட்டது?

(இ) 1968 நவம்பர் முடிய எத்தனை யூனிட்டுகள் செயல் படுகின்றன?

(உ) வேறு புதிய யூனிட்டுகள் செயல்படாமைக்கு காரணம் என்ன?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இத் தொழிற்பேட்டை 1968-ம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து செயல்படத் தொடங்கியது.

(இ) ஒரு பிரிவு 1968-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முடிவில் உற்பத்தியைத் தொடங்கியது.

(உ) சில பிரிவு உரிமையாளர்களுக்கு நிதி பற்ருக்குறை உள்ளது. உற்பத்திப் பொருள்களின் வாய்ப்பு, விற்பனை ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் தொழில் மந்த நிலை, மாறுபட்ட சூழ்நிலை காரணமாக பிரிவு உரிமையாளர்களிடையே எந்தவகையான தொழிலை அமைக்க வேண்டுமென்று முடிவெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு தொழிற்பேட்டையில் மொத்தம் எத்தனை யூனிட்டுகள் கட்டப்பட்டன. தற்போது எத்தனை செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. செயல்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் ஏதாவது விசேஷ ஊக்கம் அளித்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது அரசாங்கம் ஏற்பாடு செய்து யார், யார் தொழில் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் கட்ட முயற்சி எடுத்து, இந்த முயற்சி 1961-ம் ஆண்டு எடுக்கப்பட்டது. அரசாங்கம் 10 லட்ச ரூபாய் திட்டத்திற்கு 8 லட்சம் ரூபாய் கடனாக கொடுத்து இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு செலவு போதவில்லை என்ற காரணத்தால் மேலும் சில லட்சங்கள் கொடுக்கப்பட்டு 69-ல் முடிவு செய்யப்பட்டது. இந்தத் தொழிற்சாலை தொடங்குவதற்கு முன் என்னென்ன தொழிலைச் செய்யலாம் என்ற பட்டியலை அரசாங்க அதிகாரிகள் தந்து இருக்கிறார்கள். அதிலே 11 தொழில்களை ஆரம்பிப்பதற்கான பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. தொழில் அதிபர்களைப் பொறுத்து முயற்சி இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் "infra-structure என்ற முறையில் மின்சாரம், தண்ணீர் வசதி, மூலப் பொருள் சேகரித்துத்தருதல், சந்தைத் தேடித்தருதல் ஆகியவற்றை அரசாங்கம் செய்து வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி : அவர்கள் அரசாங்கத்திடமிருந்து வாங்கிய கடனைத் தவருது கட்டி வருகிருர்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்தை கனம் அங்கத்தினர் வரவேற்று பாராட்டிச் சொன்னால் நன்றி உடையவனாக இருப்பேன்.

திரு. கே. என். குமாரசாமி : தொழில்பேட்டையில் உற்பத்தியாகின்ற பொருள்கள் வெளி மார்கெட்டில் விற்பனையாகாமல் கிடக்கின்றன, அவைகளுக்கு மார்க்கெட் கிடைக்காமல் தேங்கிக் கொண்டிருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் தொழில்பேட்டையில் உற்பத்தியாகின்ற பொருள்களை அரசாங்கத்தின் தேவை முழுவதற்கும் அரசாங்கமே வாங்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில்பேட்டையில் மட்டுமல்ல, இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் எந்தப் பொருளையும் அரசாங்கம் அவைகளுக்கு தனிச் சலுகை கொடுத்து வாங்க

வேண்டும் என்று ஒரு தனி ஆணையே இருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அந்த ஆணை சரிவர செயல்படுத்தப் படுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு, இந்த மாநிலத்தில் அரசு அலுவலகங்களும், அடானமஸ் கார்ப்பரேஷன்களும், அதாவது மின்சார வாரியம் போன்ற கார்ப்பரேஷன்களும், லோகல் போர்டு நிர்வாகங்களும் ஆகிய இவைகளெல்லாம் நம் மாநிலத்தில் உற்பத்தி யாகும் இந்தப் பொருள்களையெல்லாம் வாங்குகிறார்களா என்பதைக் கவனிக்க அரசாங்க மட்டத்தில் உயர்தர செயலாளர்களைக் கொண்ட ஒரு குழுவே அமைக்கப்பட்டிருக்கிறது அண்மையில். அந்தக் குழு யார், யார் எந்தப் பொருள்களை எந்த மாநிலத்தி லிருந்து வாங்குகிறார்கள் என்று கவனித்து நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு முதல் இடம் கொடுத்து வாங்கு வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறது. இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் மட்டுமல்ல, சிறு தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு வெளி மாநிலங்களில், வெளிநாடுகளில் சந்தை தேடித்தருவதற்கு அண்மையில் ஒரு சிறு தொழில் வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister what kind of industries that we can start in the industrial estates in our State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேட்டிருக்கிற கேள்வி தூத்துக்குடி இண்டஸ்டிரியல் எஸ்டேட் பற்றியது. அதில் 11 தொழில்களைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் அதற்கான முயற்சி எடுக்கிறார்கள். எங்கே என்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன, எங்கே எந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்து பிறகுதான், அந்தப் பகுதியில் அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

*Water Management Board*

*101 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether a Water Management Board has been constituted under the Parambikulam-Aliyar Pact between Tamil Nadu and Kerala;

(b) whether this Government would construct a seven mile high level canal from Sarkarpathy Power House in Coimbatore to Chitturpuzha System in Kerala;

(c) if so, whether the cost of construction of canal would be borne by Kerala Government; and

(d) when is the work likely to be taken up?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) A "Joint Water Regulation Board" has been constituted.

(b) Yes.

(c) Yes.



(d) The work will be taken up as soon as the specifications and design of the canal which will be forwarded by the Government of Kerala are approved by this Government.

DR. H. V. HANDE: Sir, is it a fact that joint gaugings in all the rivers to convince the authorities of the two States has also been provided for in the pact. If Kerala would release 1,300 MCB feet of water from Siruvani to meet the drinking water needs of Coimbatore town, Madras would guarantee 7,250 MCB water to cater to the irrigation needs of the Chitturpuzha area as a result of which some 20,000 acres would benefit. Will the Hon. Minister be pleased to give full details about it?

THE HON THIRU S. J. SADIQ PASHA: My hon. friend has clubbed several questions and I find it very difficult to answer them. However, I will give some particulars.

*Benefits accruing to Tamil Nadu from the P.A.P. agreement signed on 29th May 1970.*

Tamil Nadu can now proceed with the construction of Nirar Weir and Tunnel without any objection from the Government of Kerala. The construction of Nirar Weir and Tunnel was not taken up till October 1969 because of objections from the Government of Kerala. Now the Government of Tamil Nadu is at liberty to proceed with the work. The work has already been taken up. The ayacut localised under P.A.P. is 2.40 lakh acres. Only half the ayacut is now getting water every year. As soon as Nirar Weir and Tunnel works are completed, it will be possible to give water to another 72,000 acres of ayacut lands.

Tamil Nadu can now construct the lower Nirar reservoir after the design is approved by the Government of Kerala. This reservoir will enable this Government to get additional quantity of 2,500 M.cft. This water will benefit 20,000 acres of ayacut lands for irrigation and will enable generation of additional electricity valued at about Rs. 40 lakhs per year.

It has been provided in the agreement that Tamil Nadu can divert 2,500 Mcft. of water from the Anamalayar after the construction of the Idamalayar Project is completed by the Government of Kerala.

The Kerala Government have undertaken to commence work on Siruvani Dam as early as possible. The city of Coimbatore will receive water-supply at the rate of 1,300 M.cft. per year as soon as this work is completed.

This Government has now been authorised to resume construction of Peruvaripallam Dam which was half-way through when the Government of Kerala requested this Government not to proceed further. The works have been resumed.

DR. H. V. HANDE : Sir, is it a fact that under this pact, Tamil Nadu has given up her claim to the Thekkadi river which will hereafter be exclusively used by Kerala?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Tamil Nadu agreed to give up the construction of a reservoir on Tekkadi since Kerala desires to construct a reservoir lower down on the Tekkadi which when constructed will submerge our originally proposed Takkadiar Dam. However, the loss of yield from Takkadiar will be compensated from the Nirar.

THIRU K. VINAYAKAM : Sir, will the Hon. Minister be pleased to explain to this House how much quantity of water which was already being used by our State before this pact was entered into, would now be lost to our State as a result of this pact or do we stand to gain out of this pact. What is the net result?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The question-time is not the proper time to explain details. So, if the hon. Member puts a separate question, I shall collect all the details and place them before this House.

*Bridges*

* 102. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether the Government of Tamil Nadu has asked the Centre to widen the existing under-bridge at Ooty–Mettupalayam road;

(*b*) whether it is a fact that the Centre after approving it has requested the State Government to share the cost of reconstruction of some railway structures consequent to widening the under-bridge; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஊட்டி மேட்டுப்பாளையம் சாலையின் மைல் 12/7-ல் பாதையின் ஒழுங்கை மாற்றி சுரங்கப் பாதை ஒன்று மறுபடியும் கட்டுவதற்காக அரசு நான்கு லட்சம் ரூபாய் மதிப்பில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ்வேலை ரயில்வே நிர்வாகத்தினரின் ஆலோசனையுடன் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(இ) ரயில்வே நிர்வாகத்தினருடன் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையினரால் முடிவெடுக்கப்பட்ட பின்பு இச்சீரமைப்பு ரயில்வேயின் சில அமைப்புகளை பாதிக்கின்றன. அதற்காகும் செலவுத் தொகையை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை ஏற்றுக் கொள்ளும்.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that after the Government agreed to widen this under-bridge the Central Government had asked the State Government to put up the bridge



which would cost about Rs. 4 lakhs? Because the Central Government and the State Government have not seen eye to eye in regard to this matter, the whole project has been held up?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The project has not been held up. Further particulars have been called for and it has been furnished. It may be mentioned that in January 1969, the General Manager, Southern Railway was requested to make provision in the level crossings fund for 1969–70 *inter alia* for realigning the road and construction of under-bridge at Mile 12/7 of Ooty–Mettupalayam Road. He has now stated that this is not in replacement of level crossing into road over/under bridge/that the work is only realigning the road and reconstruction of existing under-bridge and that this being done as a deposit work.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் உள்ள பகுதியானது மிகவும் இடைஞ்சலாக உள்ள பகுதியாக இருப்பதனால், அங்கே அநேக விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆதலால், இந்த வேலையை மிக துரிதமாக செய்து முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துரிதமாக நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த இடத்தில் சற்று தெருக்கடிதான், அதன்காரணமாக இதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு நிதி நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்? அப்படி ஒதுக்கவில்லையென்றால், எவ்வளவு ஒதுக்குவதற்கு கோரியிருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விதி முறைகளின் படி இது நம்முடைய மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டிய செலவாகும். மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கொடுக்க வேண்டும். அது எவ்வளவு என்பதைப் பற்றி என்னிடம் இப்பொழுது விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

* 103 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூரிலிருந்து அவனாசி செல்லும் பாதையில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுது பட்டிருப்பதால் அதைப் புதுப்பிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருப்பூர்–மேட்டுப்பாளையம் சாலையில் (பெரிய மாவட்டச்சாலை) 4/6–வது கல் தொலைவில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலத்தின் பக்கங்கள் கைப்பிடிச்சுவர்கள் ஆகியவற்றில் சில சிறிய வெடிப்புகளைத் தவிர

பாலத்தின் தற்போதைய நிலை மன நிறைவளிக்கும் வகையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேணுதல் மானியத்திலிருந்து இச்சிறு செப்பனிடு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

திரு. சு. துரைசாமி : திருப்பூரிலிருந்து அவனுசி செல்லும் பாதையில் இருக்கும் பாலம் இருக்கிற இடத்தில் 22 அடி அகலத் திற்கு தார் ரோடு போடப்பட்டிருக்கிறது. பாலம் 16 அடி அகலம் தான் இருக்கிறது. அதனால் இந்தப் பாலத்தில் போக்குவரத்து விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆகவே, அரசாங்கம் இதை நடப்பு ஆண்டில் புதுப்பிப்பதற்கு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்பொழுது இருக்கிற நிலையிலே இந்தப் பாலத்தை புதுப்பிக்கவேண்டிய அவசிய மில்லை என்று கருதப்படுகிறது. ஆனால், சில அத்தியாவசியமான வேலைகளை, சில செப்பனிடுகளை பேணுதல் மானியத்திலிருந்து செய்ய வேண்டியிருக்கிறது. அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்தப் பாலத்தை புதுப்பிக்கவேண்டுமானால், சுமார் ரூபாய் இரண்டு லட்சம் செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தச் செலவினம் தற்பொழுது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

## துரித ரயில் வண்டிகள்

* 104 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரத்திலிருந்து திருவாரூர், திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, காரைக்குடி வழியாக எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிகள் விடக்கோரி மாநில அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இல்லை, ஐயா.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது மாயூரத்திலிருந்து திருவாரூர் வழியாக காரைக்குடிக்குச் செல்லும் ரெயில் பாதையில் சாதாரணமாகப் போக அதிக நேரமாகிறது. துரித ரெயில் விட்டால், இரண்டு மணி நேரம் குறைவாக இருக்கும். ஆகவே, இனிமேலாவது அப்படி துரித ரெயில் விட நம் அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருத்துறைப் பூண்டி அறந்தாங்கி வழியாக காரைக்குடிக்கு கடுவிசை வண்டி விட செயற்குறிப்பு இல்லை என்றாலும், அந்தப் பகுதியில் ரெயில் போக்கு வரத்தை துரிதப்படுத்த, 1—4—1970 முதல், காரைக்குடிக்கு கூடுத லாகப் பயணிகள் வண்டிகள் இரண்டு திருத்துறைப்பூண்டியிலிருந்து விடுவதாக ஜெனரல் மானேஜர் தெரிவித்திருக்கிறார்கள்.



* 105 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government is aware of the Plan of the Union Ministry of Railways to run a Rajdhani Express;

(b) whether the views of this Government were sought for this scheme; and

(c) if not, what action the Government propose to take thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தென் இந்திய ரெயில்வேயில் ராஜதானி கடுவிசை ரயில் வண்டியைப் போன்ற வண்டி ஒன்றை விடுவதற்கான செயற்குறிப்புகள் எவையும் தற்போது இல்லை என்று தென் இந்திய ரெயில்வேயின் பொது நிர்வாகி தெரிவித்துள்ளார்.

(இ) & (உ) :—இவ் வினாக்களுக்கு இடமில்லை.

## மீன் வளர்ப்புப் பண்ணைகள்

* 94 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பு திட்டம் இணைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், காந்தி கிராமம் மூலம் ஏற்படுத்தப்பட்ட பண்ணைகள் எத்தனை?

(உ) அதற்கு கொடுக்கப்பட்ட வாகனங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) காந்தி கிராமத்திலுள்ள நிறுவனத்தின் மூலம் இத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனினும் காந்தி கிராமம் அமைந்துள்ள ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் செய்முறை ஊட்டச்சத்து திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பு பண்ணைகள் ஏழு தொடங்கப்பட்டன.

(உ) மீன் பண்ணைத் திட்டங்களுக்கென தனியாக மோட்டார் வண்டி எதுவும் ஒதுக்கப்படவில்லை. எனினும் இந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு செய்முறை ஊட்டச் சத்து திட்டத்தின்கீழ் "யுனி செப்" நிறுவனத்தின் மோட்டார் வண்டி ஒன்று ஒதுக்கப்பட்டது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, இந்த ஊட்ட சத்து திட்டத்தின் கீழ், மீன் வளர்ப்பு பல இடங்களில் நடைபெறுகிறது. ஆனால், இந்த இடத்தில் இதனால் அதிக மீன் வளர்ச்சி ஏற்படுவதில்லை. பணமும் விரயம் ஆகிறது. ஆகவே, மீன் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடத்தில் இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த அந்த இடங்களில் இருக்கும் தன்மைகளை ஆய்ந்து வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்படு கின்றன. ஆனால் அந்த இடத்தில் வறட்சி ஏற்பட்டதால், மீன்

வளர்ப்புத் திட்டம் கணிசமான அளவில் நடைபெறவில்லை என்பது உண்மை. மீன் வளர்ப்போடு, இந்த சத்து உணவுத் திட்டத்தின் கீழ், மற்றும் பல காரியங்கள் நடைபெறுகின்றன. இது யூனிஸெப் திட்டம். அந்தப் பகுதியில் வறட்சியின் காரணமாக சரியாக நடைபெறவில்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், மீன் வளர்ப்புத் திட்டம் ஒரு லாபகரமான திட்டம். பஞ்சாயத்து நிதி நிலைகளைச் சரி செய்ய ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மீன் வளர்ப்புக் குளங்களை ஏற்படுத்தி பராமரிக்கும் பொறுப்பை பஞ்சாயத்துக்களிடம் கொடுத்து, அந்தக் குளங்களை வெட்ட ஆகும் செலவை அரசாங்கமே கொடுத்தால் லாபமாக இருக்குமே. அதைச் செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மீனளத் துறை மூலமாகவும், நிதி ஒதுக்கீடு செய்து, ஊராட்சிகள் செயல்படுத்தி வருவதும் ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குத் தெரியும். இந்தத் திட்டம் யூனிஸெப் திட்டம். நிதி பெருகப் பெருக அப்படிப்பட்ட நிலைகள் ஏற்படும்.

*Dry dock in Madras Port*

*106 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu was consulted by the Central Government on the matter of starting of a dry dock in Madras Port; and

(*b*) if so, whether this Government has made any specific suggestions regarding the same and the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ் வினு எழவில்லை:

DR. H V. HANDE: Is it not a fact that a dry dock for Madras Port at an estimated cost of Rs. 8 crores was decided and it was suggested by the Council of Applied Economic Research? May I know whether this information that they are going to put this dry dock to extend the facilities that are now available and which are considered insufficient, been passed on to the State Government and if so may I know what is the responsibility of the State Government in this matter?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The information is available with the State Government. The National Council of Economic Research has recommended a dry dock project at a cost of Rs. 8 crores. It is fully realised that the present facilities in Madras Port are inadequate. We have got only a slip-way which can take ships of 11 feet draft. But this is a matter concerning the Centre and we fully realise the need for a dry dock as recommended by the National Council.



DR. H. V. HANDE: In view of the fact that we are likely to have the Salem Steel Plant also and large quantity of ores will come including those from Mysore and Andhra Pradesh for which this port is hinterland, and in view of the extraordinary congestion at present, will the Government take a strong attitude on this matter just as they had taken in the matter of Sethusamudram Project and press on the Central Government for the early execution of this dry dock and see that at least this extra traffic that is envisaged is partially covered by this?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Dr. Hande has given a very good suggestion and I feel thankful for the suggestion given by him.

THIRU K. VINAYAKAM: The management of docks comes under the purview of the Central Government. Under the pretext of constitutional properity, this is put under the charge of the Central Government. But they have almost occupied the entire Marine up to the Cooum river. The Corporation authorities as well as Government of Madras have been protesting that the Port authorities should not encroach on this open space. Would the Government take up measures and action and tell the Central Government that if and when there is expansion, it should be on the northern side, on Royapuram side and they should not encroach still further in the South?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: This question will be duly considered if and when the dry dock project is taken up.

*Certain cadres of Co-operative Banks.*

* 107 *Q*.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to provincialise certain cadres of Co-operative Banks, and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் முழு விவரங்களை அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, முழு விவரங்கள் என்ன? இது எப்பொழுது செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே. அரசு இந்தத் திட்டத்தை ஆய்ந்து வருகிறது. அதோடு, இந்தத் திட்டத்தின் அடிப்படை என்னவென்றல், மாநில கூட்டுறவு பாங்கிலுள்ள அசிஸ்டெண்ட் செக்ரெடரி, சீஃப் அகவுண்டண்ட் ஆகியோரும், சென்ட்ரல் பாங்கிலுள்ள சீஃப் அகவுண்டண்ட் செக்ரெடரி, எக்ஸிக்யூடிவ் ஆபீசர், இவர்களைத் தனி கேடராக அமைப்பது

[1970 ஆகஸ்ட் 28

நல்லது என்று கருதுகிறோம். அதனால் அவர்கள் நிலைமை நன்றாகி, ஊழியர்களுக்கு வேலை உயர்வு கிடைக்க நல்ல வழி வகுக்கும் என்பதால், இதை ஆய்ந்து முடிவு எடுப்பதாக இருக்கிறோம்.

*Triplicane Urban Co-operative Society.*

* 108 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the order of supersession of Triplicane Urban Co-operative Society in Madras has been rescinded; and

(b) how it is governed or managed after this lifting of supersession?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) டி.யு.சி.எஸ். நிறுவனத்தைப் பொறுத்து, கலைப்பு ஆணை 21—12—1969 பிற்பகலி லிருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது.

(இ) அதன் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட 14 இயக்குநர்களும், நியமனம் செய்யப்பட்ட நான்கு இயக்குநர்களும் கொண்ட குழு விடம் இந்தச் சங்கத்தின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: May I know what are the reasons for superseding the Board of Directors of TUCS? What was the offence committed by that management? After the supersession is the TUCS working satisfactorily? Is it showing profit? Is it not a fact that the super-market which is run by the TUCS is working at a heavy loss and proving to be a white elephant? What is the position now after the supersession has been cancelled?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The TUCS was superseded under Section 72 of the T.C.S. Act, 1961, as the Registrar was of the opinion that the Committee was not functioning properly. On that ground it was superseded. After supersession, I have no actual report about the functioning of the society. But it is considered that after the cancellation of supersession, the society is functioning properly.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, regarding the supersession of the T.U.C.S. a writ petition was pending in the High Court. May I know from the Hon. Minister, what is the result of that writ petition?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I have nothing on record in my hand at the moment: about the writ petition. I may say that the previous order has been rescinded from 21st December 1969 and a newly elected committee is in control of the society.

THIRU K. VINAYAKAM: Sir, may I know from the Hon. Minister, whether it is a fact that as a result of the writ petition, the Government were forced to rescind the order of supersession;



1970 ஆகஸ்ட் 28]

Now what is the position regarding the Supermarket in the City? Is it still being managed by T.U.C.S. and if so, what is its profit and loss account?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, as I have already stated I have nothing on record at the moment to say anything about the writ petition. Regarding the Supsermarket and the functioning of the society, it is understood that their functioning is proper and in fact many of the Supermarkets are now running at a profit.

பழனியாண்டவர் கோயில் அறக்காவலர் குழு

* 109 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பழனியாண்டவர் கோவிலுக்கு அறங்காவலர் குழுவில் Trustee Board சட்டமன்ற உறுப்பினர் யாரேனும் இடம் பெற்றுள்ளனரா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இல்லை, ஆனால், பாராளு மன்ற உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி அவர்கள் கோவில் அறங்காவலர் குழுவில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, பழனியாண்டவர் கோவில் தமிழ்நாட்டிலேயே மிகவும் பிரபலமான கோவில்— திருப்பதிக்கு அடுத்தபடியாக இருக்கிறது. ஆகவே, இந்த மாநிலத் தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொருவரை அந்தக் கோவில் நிர்வாகக் குழுவில் நியமித்தால் மாநிலம் முழு வதற்கும் பிரநிதித்துவம் இருக்கும். அப்படிச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கோவில்கள் தமிழ்நாட்டில் 300 இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த ஒவ்வொருவரைப் போடுவதால் சிரமம் ஏற்படும் என்றே அந்த அந்தப் பகுதி மக்களைக் கொண்டே போடப் படுகிறது.

விலைகள் ஏற்றம்

* 90 வின.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சர்க்காரின் 1969–70-வது ஆண்டின் வரி உயர்வு அதிகரிப்பின் காரணமாக நமது ராஜ்யத்தில் எந்த அளவுக்கு விலை வாசி உயர்ந்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மத்திய வரி விதிப்பிற்கும், நமது மாநிலத்தில் விலைவாசிகளில் ஏற்பட்டுள்ள உயர்வுக்கும் உள்ள தொடர்பு எந்த அளவில் உள்ளது என்பதைச் சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல இயலவில்லை.

[1970 ஆகஸ்ட் 28

திரு. வி. கே. கோதண்டராமன் : சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல இயலவில்லை என்றாலும் மூன்று நான்கு மாதத்திலே 60, 70 புள்ளி விலைவாசி உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்தபோது இட்லியை கொண்டுவந்து இட்டிலி இளைத்திருக்கிறது. தோசை சிறுத்திருக்கிறது என்றெல்லாம் புகார் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒவ்வொரு ஹோட்டலிலும் இட்லி இளைத்துவிட்டது. தோசை சுருங்கி விட்டது. விலையானால் ஏறிவிட்டது. இதுபற்றி பேசி இருக்கிறேன், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு நிற்காது உடனடியாக இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இட்லி இளைத்திருப்பது தோசை சுருங்கியிருப்பது ஆகியவற்றுக்கும் மத்திய அரசு வரி விதிப்பினால் விலைவாசி உயர்ந்திருக்கிறதா என்பதற்கும் சம்பந்தம் இல்லை. ஹோட்டல் வர்த்தகர்கள் கொள்ளை லாபம் அடிப்பதற்கு இடம் கொடுக்காது பொதுமக்கள் கவனமாக இருப்பார்களானால் இத்தகைய குறைபாட்டை நீக்கிவிடலாம். தற்போது கண்டிரோல்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அரிசி விலையை எடுத்துக் கொண்டால் சீராக இருக்கிறது, விலை ஏறியிருக்கிறது என்பதை முழுக்க முழுக்க வன்மையாக எதிர்க்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மத்திய சர்க்கார் வரி விதிப்பினால் எந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று காட்ட புள்ளி விவரம் இல்லை என்கிறார்கள். அதேசமயம் எந்த ஆதாரத்தைக் கொண்டு மத்திய சர்க்கார் வரிவிதிப்பினால் விலைவாசிகள் உயர்ந்து விட்டன என்பதாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விலைவாசி உயர்வுக்கு அதுவும் ஒரு அம்சம்தான், பொதுவாக பல காரணங்களினால் விலைவாசி உயர்வு ஏற்படுகிறது. நோட்டு அடித்தல், முறைகேடான திட்டங்களைச் செயல்படுத்துவது, பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய கட்டுப்பாடுகளை வைப்பது ஆகியவை போன்ற பல காரணங்கள் விலைவாசி உயர்வுக்குக் காரணமாகின்றன என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். விலைவாசி உயர்ந்துவிட்டது என்று சொல்வது எல்லோரும் சொல்கிற பல்லவி. போடுகிற சில வரி இனங்களினால் விலை உயர்வு ஏற்படுகிறது என்பது உண்மையே தவிர எல்லா வரி இனங்களினாலும் உயர்ந்துவிடுவதில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கேட்ட கேள்விக்கு சரியான பதிலைச் சொல்ல வேண்டும். எல்லோரும் சொல்கிற பல்லவியைக் கேட்கவில்லை. விலைவாசி உயர்வுக்கு மத்திய சர்க்கார் போட்டிருக்கிற வரிகளே காரணம் என்பதாகக் குற்றஞ்சாட்டியிருக்கின்றீர்கள். அப்படியானால், அதற்கு ஆதாரங்கள் அவர்களிடம் இருந்திருக்கும். அவை என்ன என்று சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆனாலும் எல்லாம் ஒன்றுதான். திரு. கோதண்டராமன் அவர்கள் விலைவாசி உயர்வுக்கு மத்திய சர்க்காரின் வரி இனங்கள் காரணமா என்று கேட்டதற்கு அதுபற்றிய புள்ளிவிவரங்களை



1970 ஆகஸ்ட் 28]

ஆராயவில்லை என்று சொன்னேன். ஆயினும் வரி உயர்வு ஓரளவு விலைவாசியை பாதிக்கத்தான் செய்யும் என்பதை யாரும் மறுக்கவில்லை.

திரு. என். வரதராஜன் : எந்தப் பல்லவி எப்படி இருப்பினும் விலைவாசி உயர்வு நம்மை பாதிக்கிறது. தமிழ்நாடு அரசு போட்ட திட்டத்தை இது பாதிக்கத்தான் செய்யும். ஆகவே, இனிமேலாவது விலைவாசி உயர்வுக்கு வழி செய்கிற வரிகளைப் போடக் கூடாது என்று தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? மத்திய அரசுக்கு இது சம்பந்தமாகத் திட்டவட்டமான ஆலோசனையை மாநில அரசு அனுப்பி வைக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அடிக்கடி ஒன்றை எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்த நேரத்திலும் மன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் ஒன்று சொல்கிறேன். சில அரசியல் கட்சிகள் வேண்டுமென்றே விலைவாசி உயர்ந்துவிட்டதாகத் தவறான பிரச்சாரம் செய்கிறார்கள். போஸ்டர் கூட போட்டிருக்கிறார்கள். அவை உண்மையான புள்ளிவிவரங்களுக்கு முரணானவை. குறிப்பாக "பால் விலை உயர்ந்துவிட்டது" என்பதாக ஒரு போஸ்டர் போட்டிருக்கிறார்கள். உண்மை நிலை என்ன ? மாதவரம் பால் பண்ணையில் லிட்டர் ரூ. 1.30 ஆக விற்பனை செய்கிறோம். இதே நேரத்தில் வெளியில் ரூ. 2-60-க்கு ஒரு லிட்டர் விற்கப்படுகிறது என்பதை திரு. விநயகம் போன்றவர்கள் உணர்வார்கள். ஆண்டுக்கு ஒரு கோடி லிட்டருக்கு மேல் நாம் சப்ளை செய்வதை நிறுத்திக் கொண்டால் வெளி மார்க்கெட்டில் என்ன நிலை ஏற்படும் ? இந்தத் திட்டம் இல்லாது இருந்தால் நிச்சயமாக ரூ. $3\frac{1}{2}$, ரூ. 4-க்குக் குறைந்து வெளியில் பால் கிடைக்காது போகும். அப்படியிருக்க, பால் விலையை உயர்த்திவிட்டதாக வெளியில் பிரச்சாரம் செய்வது சரியல்ல. கண்டிரோலையும் எடுத்த பின்னர் உணவுப்பொருள் விலை சீராகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his answer was saying that he did not have the facts and figures about the extent to which prices have risen on account of Central taxation. Is it not a fact that even the State Government is also imposing taxes. For instance, take petrol. The Centre has levied a tax of 10 Paise and State Government another 2 paise. In view of this, both the Centre and the State are responsible for increase in prices of essential commodities. Instead of shifting the responsibility to the Centre, I think the State Goernment might set up an organisation or some sort of a committee to find out the tax structure and extent to which prices have arisen, it would be better. Otherwise, we will be in trouble. As regards 'milk' when we have a public sector project and when we subsidise, we incur loss and to make good the loss, the price is increased.

(Mr. Speaker sounded the gong.) This is an important question viz., the increase in prices. We should have an half-hour debate.

I am now winding up.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நேரம் வேறு இருக்கிறது. இப்போது கூடாது.

Dr. H. V. HANDE : I shall complete the question. In view of the subsidisation, we have recourse to increased taxation and that in turn indirectly increases the price of essential commodities. Will the Hon. Minister therefore tell us what are exact concrete measures, not fact remedies, but objective scientific measures which this Government, in conjunction with the Central Government, are going to take to arrest the increase in prices and bring down the price of essential commodities?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் அதையே திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது: இந்த மாநில அரசாங்கத்தினுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. பொதுவாக, விலைவாசி உயர்வு என்னுடைய கணக்குப்படி மூன்று முக்கியமான அம்சங்களைப் பொருத்து இருக்கிறது. ஒன்று, நோட்டு அடித்தல்—இன்பிளேஷன் அதனால் வரும் என்று சொல்லுகிறார்களே—அந்த நோட்டு அடிக்கின்ற அதிகாரம் அங்கே இருப்பது. இரண்டு, பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய சில வரிகள்—பாதிக்காத சமன் செய்யும் சில வரிகளும் உண்டு—கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் மீது போடப்படுகின்ற வரிகளினாலும் மக்கள் தாக்கப்பட்டு, விலைவாசிகள் உயருகின்றன. மூன்றாவதாக, "அன் எக்கனமிக் அவுட்லேஸ்" என்ற முறையில் 100 கோடி, 500 கோடி ரூபாய் அளவுக்குப் பெரிய திட்டங்களைப் போடுவது, பெரிய பெரிய ஆலைகளை அமைப்பது போன்ற பெரிய திட்டங்களில் பணம் முடங்கி விடுவதனால் விலைவாசி ஏறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள், அவர்களுடைய தலைவர் திரு. ராஜாஜி அவர்கள் கூட போதனை செய்து வருகிறார்கள். விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் நம்மிடம் இல்லை. அதற்காகத்தான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மாநிலத்தில் சுய ஆட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று சொல்கிறார். கடந்த மூன்று ஆண்டுகளில் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு நான் வாதாடுவதற்குத் தயாராக இருக்கிறேன். அரிசி விலையைப் பொறுத்த வரையிலும், மற்ற உணவுப் பொருள்கள் விலையைப் பொறுத்த வரையிலும்—நான் உணவு அமைச்சராக இருந்தவன்—எனக்குத் தெரியும். அரிசி விலை ஏறிவிட்டது என்று சொல்வார்கள், பருப்பு விலை ஏறி விட்டது என்று சொல்லுவார்கள், சர்க்கரை விலை ஏறிவிட்டது, தீபாவளிக்குக் கிடைக்கவில்லை என்று சொல்பவர்கள் ஒருபுறம், விவசாயப் பொருள்கள் விலை ஏறிவிட்டது என்று கூறுபவர்கள் ஒரு புறம். ஆனால் அந்தப் பிரச்னை இப்போது இல்லை. சர்க்கரைப் பிரச்னை இல்லை; பருப்பைப் பற்றிய பிரச்னை இல்லை. ரேஷன் கடைகளை சென்னை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் வைத்த பிறகு ஏழை மக்களுக்கு எந்தவிதமான தொல்லையும் இல்லை, தமிழ்நாட்டுக்கு ஒரு மண்டலம் இருக்கிறது. இந்த ஆகஸ்டு மாதம் உணவு அமைச்சருக்கு மிகவும் தொல்லை கொடுக்கக்கூடிய ஒரு மாதம். ஆகவே உணவு பற்றிய விலை உயருகிறது என்று சொல்வது சரியானதும் இல்லை. முறையானதும் இல்லை,



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண். 91.

Thiru K. VINAYAKAM : Sir, my name has been dragged. Please allow me to put a supplementary.
வினாயகத்திற்கு தெரியும் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. கே. மதியழகன் : பால் விலை திரு. வினாயகத்திற்குத் தெரியும் என்று சொன்னேன்.

Thiru K. VINAYAKAM : He has mentioned my name. I must have my say. Apart from a discussion like this, does the Hon Minister admit. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் கொடுக்க வேண்டி இருக்கிறது. திரு. வினாயகத்திற்கு மட்டும் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. வினா எண். 91ஐ எடுத்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. வினாயகம் : என்னுடைய பெயரைச் சொன்னார்.

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I pay tribute to Thiru Vinayakam. He is well versed.

திரு. கே. பி. எஸ். மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், நாங்கள் கேள்வி கேட்கும்போது, "கேள்வியை மட்டும் போடுங்கள்" என்று சொல்லுகிறீர்கள். அதே நேரத்திலே அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திரு. வினாயகம் அவர்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் எல்லாம் நீண்ட சொற்பொழிவு செய்வதைப் பார்க்கும்போது, இது கேள்வி நேரம் தானா அல்லது..................

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் எப்பொழுது சொற்பொழிவு ஆற்றினேன் என்று தெரிய வேண்டும். கேள்வி கேட்கிறபோது, கேள்விகள் மட்டும் போடுங்கள் என்று சொல்லுகிறார்கள், அமைச்சர்கள் பதில் சொல்லும்போது, பதிலை மட்டும் சொல்லுங்கள் என்று நீங்கள் கேட்கவில்லை என்று கேட்பதற்குப் பதிலாக எங்களைப் பற்றிக் கூறுகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், விலைவாசி உயர்வு சம்பந்தமாக நேற்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதை அறையிலேயே தள்ளிவிட்டீர்கள். அதை வேறு ரூபமாகக் கொடுத்தேன். அதையும் தள்ளிவிட்டீர்கள். இப்போது கேள்வியாகக் கேட்டிருக்கிறேன். ஒரு உபகேள்வியை மட்டும் எனக்குக் கொடுத்துவிட்டு இரண்டாவது முறை அனுமதி கொடுக்காமல் இருப்பது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : கேள்வி கேட்பதற்கு இரண்டு முறைகள் அனுமதிக்க வேண்டும். ஒரு முறை மாத்திரம் தான் அனுமதித்து இரண்டாம் முறை அனுமதிக்க முடியாது என்று சொல்வது நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை நிதி நிலை அறிக்கை வரவிருக்கிறது. அதிலே நீங்கள் பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியைப் போட்டவர்களே அவர்கள்தான், என்ற அடிப்படையில் அவ்வளவு கேட்டதற்கு, மறுபடியும் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே சொன்னார்கள் விலைவாசி ஏறியதற்குக் காரணம் வியாபாரிகள், அந்த வியாபாரிகள் விஷயத்திலே சர்க்கார் மாத்திரம் கவனம் செலுத்தினால் போதாது, பொது மக்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இது வரவேற்கக் கூடியது. விலைவாசி ஏறுகிறபோது பொது மக்கள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால் அடக்கு முறை வருகிறது. அப்படி அடக்குமுறையை ஏவி விடாத அளவுக்கு விட்டால் பொது மக்களே விலை ஏறாமல் பார்த்துக் கொள்ளட்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது நிலப்பறி கிளர்ச்சி போல "ஹோட்டல் பறி கிளர்ச்சி" ஆகிவிடும், நிதி அமைச்சர் அவர்கள், பொது மக்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம், எங்கெங்கே வியாபாரிகள் விலையை ஏற்றுகிறார்களோ, அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகள் மூலம் சட்டமன்றத்திலோ அல்லது மற்ற நேரங்களிலோ அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பற்றி அரசு பொது மக்களோடு இணைந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதுதான். அதை விட்டு விட்டுப் பொதுமக்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

*Resources for plan projects.*

*91 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Planning Commission has invited the suggestions from the State Government on the question of mobilisation of resources for plan projects; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : திட்டப்பணிகளுக்கான நிதி வாயில்களைத் திரட்டுவது பற்றி, தமது கருத்துக்களை நல்குமாறு மாநில அரசைத் திட்டக் குழு திட்டவட்டமாகக் கேட்கவில்லை.





ஆனால், புதிய வரி விதித்தல், நடைமுறையில் உள்ள வரி வீதங்கள் அண்டை மாநிலங்களின் வரி வீதங்களை ஒத்திருக்கும் வகையில் அமைத்தல், பாசன வீதங்களையும், மின்சக்திக் கட்டணங்களையும், தீர்வைகளையும் மாற்றியமைத்தல் ஆகியவை உட்பட பல்வேறு வகைகள் மூலம் கூடுதல் நிதி வாயில்களைத் திரட்டுவது குறித்த சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்யுமாறு மாநில அரசுக்கு அது ஆலோசனை வழங்கியுள்ளது. மேலும், (மாநில அரசுப் பரிசுச் சீட்டுகள்) பணித்திட்டங்களுடன் இணைக்கப்பட்ட கையடைத் தொகைகள், கடன்கள் (கடனீட்டு ஆவணங்கள் உள்பட) போன்ற கிராமப்புறச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கான சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வருவது குறித்து வாய்ப்புகளைப் பரிசீலனை செய்யுமாறும் மாநில அரசுக்குத் திட்டக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்த யோசனையின்மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக நிதி வாயில்களைத் திரட்டுவதற்கான யோசனைகள்தான் இவை. அடிக்கடி நிதி வாயில்களைத் திரட்டுவதற்காக மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. இவை பொதுவான யோசனைகள். அதிகமான வரி போடுவது, மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பொது நிறுவனங்களிலே லாபம் பெருகச் செய்வது இப்படி யெல்லாம் இருக்கின்றன. நிஜலிங்கப்பா கமிட்டி, வெங்கட்டராமன் கமிட்டி யெல்லாம் யோசனை சொல்லி இருக்கிறார்கள். நான் எடுத்துக் கொண்ட முயற்சி கடந்த பட்ஜெட்டிலே சிறிய வரி விதிப்புகளின் மூலமாக ஏறக்குறைய ஐந்தரைக் கோடி ரூபாய் பெறக்கூடிய அளவிலே செய்ததாகும்.

## தமிழ் நாடு முதல் அமைச்சர் நிதி

* 92 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ல் தமிழக முதல் அமைச்சர் நிதி எவ்வளவு சேர்ந்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலமைச்சரின் மாநிலத் துயர்தணிப்பு நிதியில் 1969-70 ஆண்டில் 1,19,821.63 சேர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த முதல் அமைச்சர் நிதி 1969–70-ம் ஆண்டில் எந்த எந்த வகையிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1969–70-ம் ஆண்டிலே ரொம்ப முக்கியமாக ஒரு காரியத்திற்கு மட்டும்—எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார் கான் அவர்களுக்கு—இந்த முதலமைச்சர் நிதியிலிருந்து 1 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சர் நிதி என்பதே பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருப்பதுதான். இது 1967-ம் ஆண்டிலே மாண்புமிகு அண்ணா அவர்களால் துவங்கப்

பட்டது. இந்த ஆண்டிலே எல்லைப்புற காந்தி அவர்களிடம் 1 லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிக்காக பொதுமக்கள் கொடுத்தது ரூ. 1 லட்சத்து 28,600 ரூபாய் ஆகும். அதிலே 1 லட்சம் ரூபாய் கொடுத்தது போக மீதி உள்ளதை கணக்கில் வரவு வைத்து

Cheque issued in favour of Chief Minister, Andhra Predesh for Cyclone Relief—Rs. 10,000,00.

Donation to the widow of Thiruvengatam, who died in Madras City in the Police firing at Rajaji Hall on 3rd February 1969—Rs. 5,006.25.

Donation to Thiru K. Selvaraj, Thadikombu village, Dindigul on compassionate grounds as he has lost his eyes in small-pox—Rs. 100.25.

Cheque issued in favour of the Mayor of Madras for providing relief to the hut-dwellers in the low-lying areas in Madras City due to the heavy rains—Rs. 5,000.00.

Donation to the "Pilot Demonstration Rehabilitation Centre for Blind and Optical aid evaluation Unit, Madurai Medical College"—Rs. 5,000.00.

Donation to Khan Abdul Ghaffar Khan—Rs. 1,00,000.00.

Donation to Thirumathi Lakshmi Ammal, wife of late Thiru Sankaranarayanan, Havildar Special Armed police, who expired during the Republic Dey parade. Rs.—3,000.00.

Donation to Thiru A. Ramaswamy Chettiar, Bodinayakkanur, consequent on the death of his son in Police Firing at Cumbum on 12th February 1965 during the Anti-Hindi agitation—Rs. 500.00.

ஆக மொத்தம் ரூ. 1,28,606.50. அந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

திரு. கே. பி. எஸ். மணி: திரு. கான் அப்துல் கபார் கான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணத்தை அவர்கள் போவதற்கு முன்னால் தமிழ்நாட்டிலே கொடுத்துவிட்டுப் போனதாகவும் ஏதோ ஒரு ஸ்தாபனத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டதே உண்மையா? இல்லையென்றால் அவர்கள் தன்னோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதற்கும் நிதியமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. நல்ல காரியங்களுக்காக அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அவர்களுக்குப் பணம் கொடுத்தோமே தவிர, எப்படிச் செலவழித்தார் என்ற விவரங்கள் தெரியாது. நமக்கு அது சம்பந்தமில்லை.

திரு. எம். சுரேந்திரன்: இந்த முதலமைச்சர் நிதி என்பது முதலமைச்சரின் விருப்பத்தைப்போல் செலவுசெய்வதற்கான நிதியா? அல்லது செலவு செய்வதற்கு வழிமுறைகள் உண்டா?





மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கேள்வியே தவறாகக் கேட்கிறார்கள். முதலமைச்சர் என்று சொன்னாலே முதலமைச்சர் அவர்களின் தனிவிஷயமல்ல. நாம் பொதுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் பொதுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களே தவிர முதல் அமைச்சர் என்று சொன்னால் ஏதோ அவருடைய வீட்டுக்கணக்கு அல்லது தோட்டக்கணக்கு அல்ல. முதலமைச்சர் நிதி என்பதை பல நல்ல காரியங்களுக்காக நாம் பயன் படுத்திக்கொண்டு வருகிறோம். இராஜஸ்தான் முதலமைச்சர் திரு. சுகாடியா அவர்கள் இங்கு வந்திருந்தபொழுது நல்லெண்ணத்தின் அடிப்படையிலே அங்கு ஏற்பட்ட வறட்சிக்காக 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தோம். அண்ணா அவர்கள் காலத்திலே இது துவங்கப்பட்டது. பொதுமக்கள் இதற்குப் பணம் கொடுக்கிறார்கள். இந்த நிதிக்காக பொதுமக்கள், சினிமா அதிபர்கள் ஆகியவர்களிடமிருந்து முதலமைச்சர் பெற்றிருக்கிறார்கள்; இந்த நிதியில் 1 லட்சத்து 28,600 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதில் கான் அப்துல் கபார் கான் அவர்களுக்கு 1 லட்சம் ரூபாயும் மீதியுள்ளதை அந்தக் கணக்கிலேயும் போடப்பட்டது. இந்த நிதியைப் பொறுத்தவரையில் லோக்கல் பண்ட் ஆடிட்டர் அவர்கள் தணிக்கை செய்கிறார்கள். இந்த வகையிலே காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) தஞ்சாவூர் மேற்கு போலீஸ் நிலையத்தில் காவலிலிருந்த ஒரு பெண் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கொ. இர. ஞானசம்பந்தன் அவர்கள், தஞ்சாவூர் மேற்கு போலீஸ் நிலையத்திலே ஜமீலா என்ற ஏழைப்பெண் காவலிலிருந்ததுபற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

* திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தைச் சேர்ந்த ஜமீலா என்ற பெண் தஞ்சைக்குச் சென்றபொழுது கைதுசெய்யப்பட்டு தஞ்சாவூர் மேற்கு போலீஸ் நிலையத்திற்கு அவள் கொண்டுசெல்லப்பட்டு அவளிடம் காவலர்கள் தகாத முறையிலே முரட்டுத்தனமாக நடந்துகொண்டதன் காரணமாக உயிர் ஊசலாடிய நிலையில் கட்டாயப்படுத்தி விஷம் கொடுத்துவிட்டு, அவளே விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டதாக ரிகார்ட் செய்யப்பட்டுள்ளது. இதையறிந்த தஞ்சை மக்கள் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், இது

கொடுமையான செயல் என்று கூறி, போலீஸின் மோசமான நடத்தையைக் கண்டிக்கவேண்டுமென்பதற்காகக் கூடியபொழுது, காவல் துறையினர் அந்தக் கூட்டத்தை நடத்தவொட்டாமல், ஏற்பாடு செய்தவர்களை மிருகத்தனமாக நடத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பெண்ணின் பிரேதத்தை எங்கோ இழுத்துக் கொண்டு வைத்திருக்கிறார்கள், இப்பொழுதும் அந்தப் பிரேதம் எங்கே இருக்கிறது என்று தெரியாது. இதற்கிடையில் நாளுக்கு நாள் பொது மக்களுடைய கிளர்ச்சி சூடேறவே அந்த ஜமீலா என்ற பெண்ணின் தந்தையை அழைத்துச்சென்று தவறான ரிக்கார்ட்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த மாதம் 22-ஆம் தேதி பொதுமக்கள் கூடி இது விசாரிக்கப்படவேண்டிய குற்றம், மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத மோசமான நிலைமையை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டதற்குப் பிறகு அங்கேயுள்ள ஆர்.டி.ஓ. அவர்கள் ஓர் ஆணை பிறப்பித்துள்ளார். அதாவது—

"ந.எ. 13019/70. ஏ. 7 தேதி 25—8—1970

பொருள் : விசாரணை—பிரேத விசாரணை—இறந்துபோன திருமதி ஜமீலா பீவி திரு. முகமது இப்ருகிம் மகள் —காவல் துறையினர் பாதுகாப்பில் இருந்தபொழுது இறப்பு—விசாரணை செய்வது சம்பந்தமாக.

பார்வை : மேற்குப் பிரிவு காவல் துறை அலுவலகக் குற்ற எண் 979/70 நாள் 3—8—1970.

இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது யாதெனில் கடந்த 3—8—1970 நாள் அன்று திரு. முகமது இப்ருகிம் மகள் திருமதி ஜமீலா பீவி என்பவர் காவல் துறையினர் பொறுப்பில் இருந்த பொழுது இறந்துவிட்டார். அது சம்பந்தமாக 30—8—1970 காலை 10 மணிக்கு தஞ்சை முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட்டும் கோட்டாட்சியர் அவர்களுமான கோட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்திலேயே விசாரணை நடத்துவார். இது சம்பந்தமாக நேரிடையான தகவல் தெரிந்தவர்கள் சாட்சியம் சொல்ல அழைக்கப் படுகிறார்கள். மேலே குறிப்பிட்ட தேதியில் ஆஜராகி சாட்சியம் சொல்லக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்." என்று தஞ்சை மக்கள் கிளர்ச்சிக்குப் பிறகு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்று சொன்னால், இதே மாஜிஸ்டிரேட், இதே ஆர்.டி.ஓ., விஷம் அருந்தியது என்று கூறியவர்கள் தஞ்சை மாவட்ட மக்களின் கிளர்ச்சிக்குப் பிறகு, அவரே விசாரணை நடததுவது என்பது பொருத்தமற்றதாகும். எனவே, தஞ்சை மாவட்ட மக்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டால்தான் அங்கிருப்பவர்கள் ஒழுங்கு தவறி அத்து மீறிப் போக மாட்டார்கள். அப்படியில்லை என்றால் தங்களுக்கு ஆதரவாக எல்லாவற்றையும் செய்து கொள்ள முடியும் என்னும்படியான அவல நிலை இருக்கிறது. எனவே, அது சம்பந்தமாக அங்குள்ள மக்களுக்கு உத்தரவாதம் கொடுத்து, அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் பெண்கள் தனியாக வர பயப்படும் அளவிற்கு தஞ்சை மாவட்டத்தில் பரபரப்பும், சூடான நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எனக்கு இன்னும் தந்திகள்





வந்து கொண்டிருக்கின்றன. தஞ்சையிலிருந்து இங்கு வந்து என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களை இந்தச் சபையின் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், போலீஸ்காரர்கள் கொடுத்திருக்கும் அந்த ரிக்கார்டுகளை மட்டும் நம்பியிருக்காமல், நீதியை நிலைநிறுத்துவதற்காகவும், மக்களுக்கு ஏற்படும் கொடுந்துன்பங்களைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் பாரபட்சமற்ற முறையில் ஒரு நீதி விசாரணையை நடத்தினால் நாம் அந்த மக்களுக்குள்ள பயத்தைப் போக்க முடியும். எனவே, இது அவசரமும், பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த விஷயம் என்பதால் இந்த விஷயத்தை விவாதிப்பதற்காக சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒற்றிவைத்து, இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

* <u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, இந்த ஒற்றி வைப்புப் பிரேரணையைப் பொறுத்து எனக்கு வந்துள்ள தகவல்களை இந்த மன்றத்தின் முன்னே வைக்க விரும்புகிறேன். இந்தத் தகவல்களை நான் வைக்கின்ற காரணத்தினால் இவைகள் அனைத்தையும் உண்மை என்று ஒப்புக் கொண்டாக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை: ஏனென்றால் இது மீண்டும் விசாரணையில் இருக்கிறது. விசாரணை செய்து அதுபற்றி விவரங்களை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கிடையே எனக்கு வந்துள்ள தகவல்களை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

2—8—1970 அன்று இரவு 7-30 மணி அளவில் தஞ்சை நகர் வல்லம் சாலையில் Industrial training institute ற்கு அருகாமையில், திண்டிவனத்தைச் சேர்ந்த இப்ராகிம் என்பவரின் மகளான 30 வயது ஜமீலா என்பவர் 300 மில்லிமீட்டர் சாராயம் கொண்ட புட்டி ஒன்றினை ஒரு பையில் வைத்திருந்ததாக, மதுவிலக்கு சோதனைக்காக அனுப்பப்பட்ட தலைமைக் காவலர் 425, காவலர்கள் 399, 705, 2405 ஆகிய நால்வரும் கைது செய்து தஞ்சை மேற்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வரும் வழியில் அருளானந்தம் நகரில் ஆரோக்கியசாமி என்பவர் சாரர்யம் வைத்திருந்ததாக அவரையும் கைது செய்து இரவு 8-30 மணி அளவில் காவல் நிலையத்தை அடைந்தனர் என்றும், காவல் நிலையத்தைச் சேர்ந்த தனபாக்கியம் என்கின்ற கூட்டுபவரின் உதவி கொண்டு ஜமீலா பரிசோதிக்கப்பட்டு, காவல் நிலைய கூடத்தில் சென்ட்ரி—காவலர் 2163-இன் பாதுகாப்பில் வைக்கப்பட்டார் என்றும், மற்ற கைதியான ஆரோக்கியசாமி காவல் நிலையப் பாதுகாப்பு அறையில் பூட்டப்பட்டார் என்றும், அன்று இரவு 10-30 மணி அளவில் ஜமீலாவின் வாயிலும் மூக்கிலும் நுரை தள்ளியது என்றும், நிலையத்தில் இருந்த தலைமைக் காவலர் 1249 மேல் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துவிட்டு ஜமீலாவை ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு காவலர் பாதுகாப்போடு அரசாங்க மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தார் என்றும், மருத்துவ மனையில் அன்று இரவு 12-10 மணி அளவில் இறந்தார் என்றும் இந்தத் தகவல் அறிந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இறந்தவரைப் பார்த்துவிட்டு ஒரு வழக்குப் (எண் 979/70 Cr, ) பதிவு செய்தார் என்றும் தகவல் வந்துள்ளது.

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 28

தஞ்சை கோட்டாட்சித் தலைவர் 3—8—1970 காலை 10 மணி அளவில் பிரேத விசாரணை நடத்தினார். நஞ்சை உண்டு தற்கொலை செய்து கொண்டதாகப் பஞ்சாயத்தாரர்கள் ஏகமனதாக முடிவு செய்தார்கள். இது சம்பந்தமாக 15 சாட்சியங்களை விசாரித்த கோட்டாட்சித் தலைவர் இந்த இறப்பு, போலீசாரின் கொடுமையினால் ஏற்படவில்லையென்றும், அதற்குப் போலீசார் எவ்விதத்திலும் பொறுப்பாளிகள் அல்லவென்றும் தெரிவித்தார். 4—8—1970 அன்று பிரேதம் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. பிரேதத்தின் உள்ளுறுப்பு சென்னை Chemical Examinar -இன் சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவரின் அறிக்கை கிடைக்கும்வரை மருத்துவ அதிகாரி தன் முடிவை நிறுத்தி வைத்துள்ளார்.

இதுபற்றி மீண்டும் ஒரு விசாரணை கோட்டாட்சித் தலைவர் நடத்தி அதன் முடிவை அரசாங்கத்திற்கு 31—8—1970-க்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்ப வேண்டுமென்று 10—8—1970 அன்று அரசு உத்திரவிட்டுள்ளது. விசாரணை இப்பொழுது நடைபெற்று வருகிறது.

இதிலிருந்து அரசும், இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பது நன்கு தெளிவாகும். அமைதிக்கு எவ்வித குந்தகமும் விளையவில்லை.

பிரேத அடக்கத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். மருத்துவப் பரிசோதனைக்குப்பின் ஜமீலாவின் பிரேதத்தை உரியவரிடம் சேர்ப்பிக்கும் எண்ணத்தோடு திண்டிவனத்திலுள்ள அவரது தந்தையாரைப் போலீஸ் அதிகாரிகள் அணுகியதில், என்னை விட்டு ஒரு இந்து மதத்தைச் சேர்ந்தவரோடு ஓடிவிட்டதால் எனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு வெகுகாலத்திற்குமுன் அற்றுவிட்டதென்றும், தான் பிரேதத்தை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையென்றும் தெரிவித்தார். பிறகு தஞ்சையிலுள்ள முஸ்லீம் சங்கத்தாரை அணுகியதில், அவர்களும் இறந்தவர் யார் என்பது சரிவரத் தெரியாததால் ஏற்க மறுத்தனர். இவ்வித சூழ்நிலையில் கையாள வேண்டிய முறைக்கேற்ப, பிரேதம் தஞ்சை நகராட்சியிடம் அன்றே 4—8—1970 அன்றே ஒப்படைக்கப்பட்டு, அவர்களால் அடக்கம் செய்யப்பட்டது என்றும் தெரிய வருகிறது. அரசு ஏற்ற நடவடிக்கைகளை அடுத்து, மீண்டும் விசாரணை நடத்தி உண்மை நிலையை அறிய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்திருக்கிறது. இந்த நிலையில், சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அதில், எனக்கு உள்ள சந்தேகம் என்னவென்றால், காவல் நிலையத்தில் இருக்கும் பொழுது விஷம் அருந்துவதற்கு எப்படி அனுமதிக்கப்பட்டது? அதெல்லாம் இல்லாமல் தனியாகத்தானே வைத்திருப்பார்கள்? விஷம் அருந்தக்கூடிய சூழ்நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



1970 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கைது செய்யப்படுவதற்கு முன்னால் விஷம் அருந்தியிருக்கக்கூடுமென்று தகவல் வந்திருக்கிறது. வேறு தகவல்களைப் பற்றி, அது விசாரணையில் இருக்கும்பொழுது கூறுவது நல்லது அல்ல. அந்த அம்மையார் சேலையிலே ஒரு கடிதத்தை முடிந்து வைத்திருந்ததாகவும், அதில் ஏதோ தான் நம்பியிருந்தவர், தன்னைக் கைவிட்டு விட்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறது. இது விசாரணையில் இருப்பதால், இதை உண்மை என்ற அளவிற்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளாமல், நான் எனக்கு வந்த தகவல்களைத்தான் எடுத்துக் கூறியிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் முன்பு கூறியிருக்கிறார்கள், பெண்கள் கைது செய்யப்பட்டால் அவர்களை இரவு நேரத்தில் போலீஸ் லாக்கப்பில் வைக்காமல், சப்-ஜெயிலுக்கு அனுப்பிவிடுவதற்கு உத்தரவு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இப்பொழுது சம்பந்தப்பட்டிருக்கும் அந்த வழக்கிலே, போலீஸ் லாக்கப்பிலே இரவு நேரத்திலே வைக்கப்பட்டது. அப்படியென்றால் அரசின் ஆணை மீறப்பட்டிருக்கிறதா? மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போல், பாதுகாப்பிலே இருக்கும்பொழுது விஷம் குடித்ததாகத் தெரிகிறது. செக் செய்த பிறகுதானே லாக்கப்பிற்கு அனுப்புவார்கள்? எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், அதைப்பற்றி நியாய விசாரணை நடத்தி, தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே தெளிவுபடுத்த முயற்சி செய்வார்களா? அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகளைப்பற்றிய விவரங்களை அறிவிக்குமாறு போலீஸ் மாநில தலைமை அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நிலவரங்களை மீண்டும் ஆராய்ந்து விசாரித்துத் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாயவரத்திலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றபொழுது, உடனடியாக அதிகாரிகள் இதிலே முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக நான் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, நிலைமை ஆராயப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனில் உள்ள சிலர் வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, தப்பாக நடந்துகொண்டவர்கள், அவர்கள் அரசாங்கத்தின் காவலர்கள் என்பதற்காக, யாரும் மன்னித்து விடப்பட மாட்டார்கள். உள்ளபடியே இப்படிப்பட்ட தவறுகளுக்குப் போலீசார் காரணமாக இருந்தால், அவர்கள் யாராக இருந்தாலும், தயவு தாட்சண்யம் பாராமல், அரசு நடவடிக்கை எடுக்கும். அதைப்போலவே, பெண் கைதிகளைப் போலீஸ் ஸ்டேஷனில் இரவு நேரங்களில் வைத்திருக்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருப்பது உண்மை. என்ன நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்குப் போலீஸ் ஐ.ஜி.-யிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. மெய்யப்பன் : சார், சோதனை செய்யப்பட்டார்கள் என்றால், அப்படி சோதனை செய்யப்பட்டபொழுது விஷம் வைத்திருந்தார்களா? மேலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றிவைப்புத் பிரேரணை பற்றி எல்லோரும் ஒவ்வொரு கேள்வி கேட்பது என்பது முடியாது. மேலும், அது விசாரணையில் இருக்கிறது. ஒற்றிவைப்புப் பிரேரணை கொண்டுவந்த உறுப்பினர், அதற்கு விடையளிக்கும் அமைச்சர் இவர்களுடைய கருத்துக்களை அறிவதோடு நிற்க வேண்டும். இடையிலே எல்லோரும் எழுந்து பேசினால் அது விவாதம் ஆகிவிடும். ஒற்றிவைப்புப் பிரேரணைக்கு அனுமதி கொடுப்பதா, இல்லையா என்ற நிலைமையே போய்விடும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எல்லோரும் என்பதில் என்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டாம். எனக்கு உரிமையிருக்கிறது. அதை ஊர்ஜிதப்படுத்த விரும்புகிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையிலே, ஒரு பெண் சோதனை செய்யப்பட்டு, அதற்குப்பிறகு லாக்கப்பில் இடப்பட்டார் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். சோதனை செய்தபொழுது விஷம் இருந்ததாக ஜி.டி.-யில் எழுதியாகத் தெரியவில்லை. சோதனை செய்யப்பட்டபின் விஷம் அருந்தியிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் விசாரணையில் இருக்கிறது. இது விசாரணையில் இருக்கும்பொழுது இது பற்றி விரிவாகப் பேசுவது முறையல்ல.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : 30-ம் தேதியன்று கோட்டாட்சியாளர் விசாரணை என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். முதலமைச்சர் அறிக்கையில் இந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டதாக பஞ்சாயத்தார் கூறியதாகக் கூறியிருக்கிறார். கோட்டாட்சியாளரும் அந்தப் பஞ்சாயத்தார் குழுவில் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே, 30-ம் தேதி விசாரணையைக் கோட்டாட்சியாளர் விசாரிக்காமல் வேறு ஒருவரைக் கொண்டு விசாரிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விசாரிப்பதாகக் கூறிய உறுதிமொழிக்குப் பிறகும், அவருடைய விளக்கத்திற்குப் பிறகும் இந்த ஒற்றிவைப்புப் பிரேரணைக்கு அவசியமில்லையாதலால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) சேலம் உருக்காலைத் திட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். வரதராஜன் அவர்கள் மத்திய அரசு, சேலம் இரும்பாலையின் உற்பத்தித் திறன் அளவைக் குறைப்பதற்கும், தஸ்தூர் அறிக்கைக்குப் பின்னரும்,





மீண்டும் தொழில் நுணுக்க ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதும் மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்துகிறது; சேலம் இரும்பாலைத் திட்டம் ஆரம்பிக்கக் காலம் தள்ளப்படுவது பற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார். திரு. வரதராஜன்......

* திரு. என். வரதராஜன் : நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் டில்லி போய்ப் பிரதமரைச் சந்தித்து வந்த பிறகும், அடுத்த மாதம் சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்று சொல்லிய பிறகும் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டு மக்களுடைய முக்கியமான கோரிக்கை சேலம் இரும்பாலைத் திட்டம். சமீப காலத்தில் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தோம். அந்தச் சூழ்நிலையில் பத்திரிகையில் வருகின்ற செய்தியைப் பார்த்தால் அச்சம் ஏற்படுகிறது. தொழில் நுணுக்க ஆய்வு என்ற அடிப்படையில் ஏற்கனவே எவ்வளவோ விதமான பரிசீலனைகள் நடந்து முடிந்திருக்கின்றன. மத்திய ஆட்சி, மாநில ஆட்சியின் கையில் விவர அறிக்கைகள் குவிந்து கிடக்கின்றன. இந்த நிலையில் மீண்டும் ஆய்வு செய்வது என்பது 1972-க்குள் கூட இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முடியாதபடி வெறும் அஸ்திவாரக் கல்லோடு நின்றுவிடுமோ என்று மக்கள் அச்சப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் திட்டம் இந்த ஆட்சியினுடைய நேரத்தில் அஸ்திவாரக் கல்லோடு நின்றுவிட வேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். அவர்களில் ஒருவராக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்க மாட்டார்கள்.

சேலம் உருக்காலையின் உற்பத்தித் திறன் குறைக்கப்படுமென்று இந்திய அரசு ஏதும் கூறவில்லை. ஆனால், சேலம் உருக்காலை பற்றிய உரையாடல்களின் பொழுது சேலத்தில் சிறப்பு உருக்கு இரும்பு மட்டும் உற்பத்தி செய்யப்படும் என்று கூறப்பட்டது. சேலத்தில் ஏற்படுத்தப்படும் உருக்காலையின் உற்பத்தித் திறன் அதில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பொறுத்தே இருக்கிறது. டில்லியில் 1970 ஆகஸ்ட் 22-ம் தேதி நடந்த இடைத்தேர்வுக் குழுக் கூட்டத்தில் உருக்குத் துறைச் செயலாளர் அவர்கள், தற்சமயம் 5 லட்சம் டன் சிறப்பு உருக்கு உற்பத்தி செய்யத் தேவையான தண்ணீர், மின்சாரம், கச்சாப் பொருள்கள் முதலியவை கணக்கிடப் படுவதாகக் கூறினார். இந்த 5 லட்சம் டன்னை ஒரே தடவையில் உற்பத்தி செய்வதா, அல்லது முதலில் 2½ லட்சம் டன் உற்பத்தி ஏற்படுத்தி, பிறகு 5 லட்சம் டன்னாக உற்பத்தியை உயர்த்துவதா என்பதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. இந்த முடிவு தேசியப் பொருளாதாரத் திறன் ஆய்வுக் குழுவின் அறிக்கையில் சிறப்பு உருக்குத் தேவைபற்றி அறிக்கையை பொறுத்து இருக்கிறது. இந்த அறிக்கை 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரும் என்று எதிர்

பார்க்கப்படுகிறது. சேலம் உருக்காலையில் உற்பத்தித் திறனை, பேச்சு வார்த்தைகளின் மூலம் முடிவு எடுக்கலாம். இதற்காக ஓர் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தால் அது இந்திய அரசுக்குச் சங்கடத்தைத்தான் உண்டு பண்ணும். மேலும், சேலம் உருக்காலையைப்பற்றி ஏழு சட்டப் பேரவைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கேள்விகளுக்கு விடைகள் தனியே கொடுக்கப்படும். கனம் அங்கத்தினர் அவர்கள் அவருக்குத் தேவையான விஷயங்களை இந்தக் கேள்விகளுக்கு விடை அளிக்கப்படும்பொழுது உப கேள்விகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம். இதற்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் அவசியமில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## 3. அமைச்சரின் விளக்க உரை.

### பதப்படுத்தப்பட்ட பால் விநியோகத்தைப்பற்றிய உணவு-வணிகத் துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு-வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

* THE HON. THIRU P. U. SHANMUGHAM: Along with standardised milk, toned milk will be supplied in the morning with effect from 16th September 1970. Those whoare willing to take toneu milk, they may do so. Those who want standardised milk, they may purchase it.

Contingent staff will be converted into time-scale in a phased programme, shortly.

Rent from contingent staff occupying higher types will be waived for the period prior to 1st January 1969. For subsequent period, they will pay rent as per existing Government orders. Time rated staff will pay 10 per cent of the basic pay. Staff paid from contingency occupying quarters to which they are entitled 'F' type, will also pay 10 per cent. Contingent staff occupying higher quarters to which they are not entitled will pay Rs. 5 p.m.

## 4. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.



## 5. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

## 4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 5. அரசினர் மசோதாக்கள்—(தொடர்ச்சி)

### (ஆ) 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இம் மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

## 6. 1966-67-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்காக மானியக் கோரிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1966–67-ம் ஆண்டில் சில மானியங்களின் கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டதாகத் தெரியவந்ததால், அம் மிகைச் செலவினங்களை ஈடு செய்வதற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மன்றத்தின்முன் வைக்கவேண்டி முன் வந்துள்ளேன்.

இந்த மிகைச் செலவினங்களை ஆய்வு செய்த 1969-70-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர், 1966–67-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுக் கணக்குகள் பற்றிய தங்கள் அறிக்கையின் 19-வது பத்தியில் அவ்வறிக்கையின் 1-ம் இணைப்பில் கண்டுள்ளபடி, மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அளிக்கும்படி பரிந்துரைத்தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிவுரைக்கிணங்க, 1966–67-ம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடு செய்யும் வகையில் மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 4,05 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்டமன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

இவற்றைக் கூறி, 1966-67-ம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

## 7. 1970-71-ம் ஆண்டிற்கான முதல் துணை நிதி அறிக்கை—அளித்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1970–71-ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் எழுந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்குகின்ற விரிவான விவர அறிக்கையொன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாயாகும். இதில் ஒரு கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற்படும். இத் துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள திட்டங்கள் பெரும்பாலும் புதுப் பணித் திட்டங்களேயாகும். இவைகளுக்கு நடப்பாண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டம் சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்துடன், வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட சில திட்டங்களுக்காக சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற விழைகின்றேன்.



இம்மாநிலத்தில் ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள் நடத்தியதற்கான செலவினங்களுக்காக தற்போதைய துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் பெருமளவில் வேண்டப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கலாம். இத்தேர்தல்களுக்கான ஏற்பாடுகளைச் செய்ய தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அமைதியான முறையில் தேர்தல்களை நடத்துவதற்குத் துணை புரிந்த பல்வேறு நிலைகளிலுள்ள நிர்வாகப் பணியாளர்களின் சாதனைகளைப் பாராட்டுவதில் மாண்புமிகு உறுப்பினர்களும் என்னுடன் இணைங்கிப் பங்கு கொள்வார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

இம் மாநிலம் முழுவதிலும் பற்பல வேளாண்மைத் திட்டங்களையும், சிறு பாசனத் திட்டங்களையும் செயல்படுத்துவதற்காக நாம் தயாரித்துள்ள 72 கோடி ரூபாய் அளவில் மாபெரும் முதலீடு தேவைப்படும் திட்ட அறிக்கையைப் பற்றி இப்போது மாண்புமிகு உறுப்பினர்களின் நினைவிற்குக் கொண்டுவர விழைகிறேன். இத் திட்டத்தை உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது. உலக வங்கி இந்த அறிக்கையைப் பற்றி விரிவாக ஆராய்வதற்கென வல்லுநர் குழு ஒன்றை விரைவில் அனுப்பி வைக்கும். இந்தத் திட்டத்திற்கு வங்கி விரைவில் தனது ஒப்புதலை அளிக்குமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கிடையில், இவ்வறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்கள் சிலவற்றிற்கு வேளாண்மை மறு நிதிக் கழகம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள நிர்வாக அமைப்பை மேம்படுத்த நாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இத்தகைய நடவடிக்கைகளுக்காக, 19-வது மானியத்தின் கீழ் சட்டமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. புதுக் கிணறுகள் வெட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்தல், விசையேற்றங்கள் நிறுவுதல், குழாய்க் கிணறுகளையும், வடிமுனைக் குழாய்க் கிணறுகளையும் அமைத்தல், டிராக்டர்கள் உள்பட பிற இயந்திரங்களை வாங்குதல் போன்ற இனங்களை இத் திட்ட அறிக்கை குறித்திருக்க, அரசு அதே நேரத்தில் ஏரிப்பாசனப் பகுதிகளின் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் தொடங்கி வருகிறது. 41-வது மானியத்தின்கீழ்க் குறிப்பிட்டுள்ள அத்தகைய பல சிறு பாசனத் திட்டங்களுக்கு நாம் அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் காண்பர். இருபத்து இரண்டு லட்சம் ரூபாய்ச் செலவில் கிராலர் வகை டிராக்டர்களை (Crawler Tractors) வாங்கும் திட்டம் வேளாண்மைத் துறையில் நாம் மேற்கொள்ளப் போகும் மற்றொரு திட்டமாகும். பற்பல நில மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இவ்வகை டிராக்டர்கள் பயன்படுத்தப்படும். இவற்றை வாங்குவதற்கு 40-வது மானியத்தின்கீழ் சட்டமன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

சட்டமன்றத்தின் கடந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் கிராம அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சில நலன்களை நாம் அறிவித்திருந்தோம். ஊராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் அதே வீதங்களில், இம் மாநிலத்திலுள்ள மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி அளிக்க நாம் முடிவு செய்திருந்தோம்

என்பதையும் இம்மன்றத்தினர்க்கு நினைவூட்ட விரும்புகிறேன். மற்றும், அறிக்கையிடப்பட்ட கிராமங்களிலுள்ள மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு நான்கு திங்கள்களுக்கு கார்காலப் படி வழங்கப்படும் என்றும் நாம் தெரிவித்திருந்தோம். கிராம அலுவலர்களை பொறுத்த மட்டில் இரண்டாம் சம்பள ஆணைக் குழுவின் அறிக்கை பெறப்படுகிற வரையில் அவர்களுக்கு இடைக்கால உதவித் தொகை வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்திருக்கிறது. இந் நடவடிக்கைகளுக்காக சட்டமன்றத்தின் மரபியல் ஒப்புதலைப் பெறுவதற்கு இத்துணை மதிப்பீடுகளின் வாயிலாக வாய்ப்புப் பெறப்பட்டுள்ளது. மாநில நகராட்சிப் பணிகளிலுள்ள பணியாளர்களுக்கு ஓய்வூதிய நலன்களை விரிவுபடுத்துவது பற்றி அரசு எடுத்துள்ள மற்றொரு முடிவினை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. 8-வது மானியத்தின்கீழ் இதுபற்றிய குறிப்பைக் காணலாம்.

நமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு திறமைபடைத்த, புதுமுறைப்பாங்கு பெற்ற நிர்வாக இயந்திரம் இன்றியமையாதது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வர். அத்தகைய சீரிய நிர்வாக முறையை வளர்க்க வேண்டுமென்றால், புதுமுறை மேற்பார்வைத் துறையில் (Modern Management) ஏற்பட்டு வரும் நுண்ணிய உத்திகளைப் பயன்படுத்தி நமது நிர்வாக நடைமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும். மக்களுக்குத் தொண்டாற்றும் நிர்வாகத் துறைகள் பலவற்றில் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் இடர்மிகுந்த அரசு நடைமுறைகள் பலவற்றால் நீண்ட கால தாமதமும், தடைகளும் ஏற்படுகின்றன. அரசிற்கும் பொதுமக்களுக்கும் தொடர்பு ஏற்படும் அத்தகைய இடங்களில் நிலவும் தடைகளை நீக்கும் பொருட்டு, தலைமைச் செயலகத்தில் நிர்வாக அமைப்பு—முறைகள் சீரமைப்புக் குழு (Organisation and Methods Cell) ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு அரசு நடைமுறைகளை அறிவியல் முறையில் ஆயும். இந்தச் சீர்திருத்தத்திற்காக சட்டமன்றத்தின் இசைவு 8-வது மானியத்தின்கீழ் வேண்டப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் குறித்து சிறப்பாகக் கூறுவதற்கு ஏதுமில்லையெனக் கூறி 1970-71-ஆம் ஆண்டிற்குரிய இந்த முதல் துணை மதிப்பீடுகளை ஏற்கும்படி இம் மன்றத்தை வேண்டிக் கொள்கிறேன்.

## 8. தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் 1970-71-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, generally speaking on the Electricity Budget presented to this House, I am in complete agreement that there is progress in our State, but I do not want the party that is in power to run away with the impression that what we achieved during the past 17 years was very little when compared to what they have achieved during the last three years. But they should realise that we have planned





and produced electricity and gave them plenty of it. So, do not stagger us with statistics that during this year, during the last year and during the year before, you have given so many rural electrification connections. Would it have been possible if we had not planned and executed the scheme? We have stabilised the Board. (Interruption) Yes, they are your officers now and they are going to be my officers to-morrow.

Sir, that is the impression that I want to give to you and so do not go to the villagers and say that you have given them so much of electricity. Of course, my compliments are there for the staff and the Members of the Board. Now you tell us that you have got your own ambitious programme of electrification of all villages before 1972 and I wish you success but I am sure I have my own doubts about it. In the financial statement you have stated that it will be done under a special programme. You are dangling this carrot before the hungry donkey and you should not run away with the impression that you can achieve this task and if you have that impression, God only can save you. It is not such an easy affair to accomplish it before 1972. What is the Budget provision you have made? I tell you that this is only political propaganda to satisfy the villagers. How are you going to manage to get extra finance to implement this scheme? Let us see how you do it.

Now, I am coming to the faults committed by the Electricity Board. There are instances where there are frequent failures of electricity in the City of Madras. For instance, there is such a failure of electricity in the Vadapalani area from where our Hon. Chief Minister has been elected—very seldom he visits this area. But I live there and I know every second day and that too during the peak hours in the business locality—between 7 and 10 p.m. there is failure of electricity. Unfortunately the peculiar thing is that when one line goes off another line gets electricity and also for one house electricity comes and in the case of another house it goes off.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதல் அமைச்சர் தொகுதியில் எல்லா விளக்குகளும் எரிந்தால் முதல் அமைச்சர் தொகுதியில் மட்டும் எல்லா விளக்குகளும் எரிகின்றன என்று நீங்களும் 'ரிட்'-டுக்குப் போய் விடுவீர்களோ என்று பயந்துதான் அப்படி எரிகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஆகவே, இப்படிச் செய்வதற்காக அதிகாரிகளைத் தூண்டிச் செய்கிறீர்களா?.

திரு. கே. விநயகம்: இவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டு தங்கள் பொறுப்பைத் தட்டிவிட முடியாது. மக்கள் எதிர் பார்க்கிறார்கள் என்று சொல்கிறோம். அமைச்சர் அவர்கள் வருவதே இல்லை; வந்தாலும் நேரடியாக ஸ்டுடியோவிற்குப்

போகிறார்களே தவிர பக்கத்தில் விளக்குகள் எரிகின்றனவா என்பதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது தவறான விஷமப் பிரசாரம். நான் என் தொகுதிக்கு அடிக்கடி போய்க் கொண்டிருக்கிறேன். திருத்தணியில் திரு. விநாயகத்தைக் கண்டு ரொம்ப நாள் ஆகிறதே என்று அங்குள்ள மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, coming to the subject, I have no quarrel with the staff at the higher level. They are very conscious. They take our instructions. When we make our request they pass some orders but they are not properly carried out by the officials at the lower level. The orders passed by them do not percolate quickly to the lower level. So far as the rural electrification is concerned, the rural people find it difficult to get electric connections for their pumpsets and this defect must be rectified.

Regarding the recommendations of the Wage Board, I also feel that they should be implemented completely because their demand is so much and reasonable but the *modus operandi* adopted by the Board and the Government is not correct. After all they are all our workers and you must call them for discussion and effect reapproachment between them and the Board. If it had been done, a lot of misunderstanding would have been avoided.

These are general remarks but I have got instances to show where the Government have not functioned properly. Now I want to refer to one instance relating to the Silamani village which is very near to Madurai town. That is a matter of public importance and everybody has got to know about it. There is an applicant by name Rahamalla Beevi. She is a Muslim lady and she has applied for electric connection for her well. There has been another person, Sathuli. That person wanted electric current for his new well. He did not like to get electric energy from another. He went to Munsiff Court. He got a stay order. On the production of stay order granted by Munsif Court, the department went on appeal to vacate the stay order, to get orders empowering the Board to give connection. What did the Board do? The Board took proper action. They called for application. The applicant executed a bond also and was prepared to pay the charges, whatever is fixed by the Board. In the meanwhile the concerned Minister for Electricity paid a visit to Madurai. Some people have influenced him and he seems to have phoned to Superintending authority and told him not to give connection. You are all talking of digging wells and giving connection for all people. But in an individual case, why should the Hon. Minister take an unusual interest? I cannot understand.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் மின்சாரம் கொடுப்பதில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். நான் முதலிலேயே பதில் சொல்லி விடலாம் என்று கருதுகிறேன்.





THIRU K. VINAYAKAM : Now you are walking into the trap. I have enough evidence.

* மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்த மின்சாரம் கேட்டு இருக்கும் உறுப்பினர் அவர்கள், அவருக்குச் சொந்தம் இல்லாத நிலத்தில் கிணறை வெட்டித் தவறுதலாக மின்சாரம் கேட்டு இருக்கிறார்கள் என்று பல பேர் புகார் என்னிடத்தில் நேரடியாகச் சொன்னார்கள். தகுந்த அதிகாரிகளை அனுப்பி அதைப்பற்றி விசாரிக்கும்படி சொன்னேன். விசாரித்துப் பார்த்தார்கள். அதில் சில சந்தேகங்கள் வந்தன. அதற்குப் பின்னாலே, கொடுக்கலாம் என்று சொன்னார்கள். கொடுத்து இருக்கிறோம். ஏதாவது தகராறு இருக்கிறது என்று தெரிந்தால் அதை விசாரிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. சிக்கல் வரவேண்டாம் என்பதற்காகச் சட்ட இலாகாவிற்கு அனுப்பி அபிப்பிராயம் பெற்ற பிறகு கொடுக்கப்பட்டது. குற்றச்சாட்டு என்று தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் பேசக் கூடாது.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் தமிழில் சொன்னதால், நானும் எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத் தமிழிலேயே சொல்கிறேன். அமைச்சரவர்கள் அதில் ஏதேனும் தவறு இருக்கிறதா என்று கேட்டார்கள். அந்த ஊர் எம்.எல்.ஏ. அவர்களும்—நான் இதை எல்லாம் சொல்லக் கூடாது என்று நினைத்தேன், இப்போது சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது—அந்தத் தொகுதியின் எம்.பி. அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்து இருப்பதால் இப்படிப் புகார் வருகிறது. மனுப் போட்டவர் சையது என்பவர். அவரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பதால்தான். இந்த மின்சாரக் கரண்ட் வேண்டுமென்று கேட்டு இருப்பவர் காங்கிரஸ்காரராக இருப்பதால் அந்தக் காரணத்திற்காக unusual interest என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே அது மாதிரி இருக்கிறது. மேல் நிலையில் இருப்பவர்கள், கொடுக்கலாம் என்று சொல்வதுதான் நல்லது. கொடுக்கக்கூடாது என்று சொல்வதற்கான காரணங்கள் என்ன? இந்தப் பகுதியில் இருக்கும் எம்.எல்.ஏ., எம்.பி. இருவரும் போய் . . .

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : விளக்கிச் சொல்கிறேன். இணைப்பு தரக்கூடாது என்பது, காங்கிரஸ்காரர் என்பதற்காக அல்ல. பெருமதிப்பிற்குரிய உறுப்பினர், கழகத்தைச் சார்ந்தவர் என்பதால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்வது தவறான வாதமாகும். எதிர்த்தரப்புக்காரரும், மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டவர்களும் என்னை வந்து பார்த்தார்கள். இரண்டு தரப்பாரின் வாதத்தை வைத்துத்தான் சட்ட இலாகாவிற்கு அனுப்பினோம். மற்றதெல்லாம் தவறான கருத்து என்பதை உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் அங்கே கேம்ப் போட்டு இருக்கும்போது ராஜபாளையம் சென்று இருந்த சூப்பிரண்டெண்டிங் இன்ஜினீயரை போனில் அழைத்துப் பேசிச் சொன்னதற்கு

என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. அமைச்சர் புகார் வந்ததால் விசாரிக்கச் சொன்னேன் என்று சொல்கிறார்கள். அப்படியானால் அதிகாரிகள் பரிசீலனை செய்யாமல் லஞ்சம் வாங்கிக்கொண்டா செய்கிறார்கள்? நிலம் அவர்களுக்குத்தான் சொந்தம் என்பதற்கு கர்ணம் சர்டிபிகேட் இருக்கிறது. கோர்ட் ஜட்ஜ்மெண்ட் வாங்கித் தந்து இருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகு அவர்களுக்கு என்ன சந்தேகம்? நம்முடைய அதிகாரிகள் பரிசீலிக்கவில்லையா? இப்படி சாக்கு சொல்வதால் லாபம் இல்லை. வாதத்திற்கு வாதம் எழுப்பி அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியாத அளவுக்குச் சூழ்நிலை உண்டாக்க முடியும். அவர்களே இதில் தலையிட்டு, கொடுக்க வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். கொடுக்கலாம் என்று லீகல் ஆபிசர் சொல்லி இருக்கிறார். நான் இங்கே இருக்கும் வாசகத்தைப் படிக்கிறேன். On the telephone instruction from the Hon. Minister for Electricity not to connect the service as the party was not in possession of land என்று இருக்கிறது: நிலம் அவர்களுக்குச் சொந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். சொந்தம் என்பதற்கு அத்தாட்சி இருக்கிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அவர்கள் 10 எச்.பி. கேட்டிருந்தார்கள், விவசாயிகளுக்குத் தெரியும், உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியவில்லை.

திரு. கே. விநாயகம்: 10 எச்.பி. இல்லை, 15 எச்.பி.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் 15 எச்.பி. என்றே வைத்துக் கொள்வோம். 15 எச்.பி. என்றவுடன் சந்தேகம் வந்துவிட்டது. ஆகவே, அவர்கள் நிலம் இல்லை என்று சொல்கிறார்கள். நிலம் இல்லாதவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் கிணற்றை வெட்டிப் பலருக்குப் பாசனம் செய்து வருகிறார்கள். ஆகவேதான், உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி விசாரிக்கச் சொன்னேன். அவர்களுடைய பதிலுக்குப் பின்னாலே, சட்ட ஆலோசனைக்கு அனுப்பினோம். முறைப்படி நடந்து வந்திருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை: மேலும், மேலும் திருப்பித் திருப்பிப் பேசுவதிலே அர்த்தம் ஒன்றும் இல்லை.

திரு. கே. விநாயகம்: அமைச்சரவர்கள் புதிய புதிய கருத்தைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அவர்களுடைய சொந்தமான நிலத்தில் பம்பு செட் போடக் கேட்கிறார்கள். அரசாங்கத்தின் நிலமா இல்லையா என்பது அதிகாரிகளுக்குத் தெரிகிற முறையில் டாகுமெண்ட் இருக்கிறது. 15 எச்.பி. எப்படி வைத்துக் கொள்ளக் கேட்கிறார்கள் என்பதற்காக டாகுமெண்ட் இருக்கிறது. 4 ஏக்கர் எனக்குச் சொந்தம். 15 ஏக்கர் மற்றொருவருக்குச் சொந்தம். (Joint cultivation) என்பது அனுமதிக்கப்பட்டது.



'Joint cultivation is allowed under the indemnity board'

இதை எல்லாம் பார்த்தபிறகுதான் அதிகாரிகள், இது நியாயம் என்று ஒப்புக்கொண்டு மின்சாரம் தர இசைந்தார்கள். அவர்கள் தரப்போகிற நேரத்தில், அமைச்சர் அவர்களிடமிருந்து, தரவேண்டாம் என்று டெலிபோன் வருகிறது. அந்த அதிகாரிகள் என்ன எழுதி இருக்கிறார்கள் தெரியுமா?

'It is so inconvenient for us but what to do because. . . .'
போன் மெசெஜ் கொடுக்கிறார்கள். அங்கே இருக்கும் சூப்பிரண்டெண்டிங் இன்ஜினீர், சீஃப் இன்ஜினீருக்கு எழுதுகிறார்.

'In the meanwhile the Hon. Minister for Electricity gave instructions over trunk call on 11th February 1970 (whereas I was on camp at Rajapalayam) not to give service connections as the party was not in possession of the land'.

அது இவருடைய லாண்டு என்று கோர்ட்டில் நிர்ணயமாகியிருக்கிறது. அப்படி எல்லாம் வந்த பிறகு, கொடுக்கிற நேரத்தில், இப்படி இல்லை என்று . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காங்கிரஸ் கட்சிக் கொறடா அவர்கள் என்ன குற்றம் சாட்டுகிறார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. விளக்கமாகச் சொன்னால் புரியும். அவர்கள் பேச்சிலேயே ஆரம்பித்தார்கள். தொடக்கத்திலேயே குறிப்பிட்டார்கள். எனக்குப் புரிந்தவரையில், இரண்டு பேர்களிடையே தகராறு, பக்கத்துப் பக்கத்து இடம். தகராறைப்பற்றி ஆரம்ப உரையிலும் சொன்னார்கள். முடிவுவரையிலும் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விசாரித்தார்கள். அமைச்சர் அவர்கள் விசாரிக்கக்கூடாது என்பது உறுப்பினர் அவர்களுடைய வாதமா? அல்லது போர்டு ஒரு முடிவுக்கு வந்தால், அது தவறு என்று அமைச்சருக்குப் புகார் வந்தால் அந்தப் புகாரை விசாரிக்கவே கூடாது, போர்டு இஷ்டப்படியே செய்யவேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்களா? விசாரித்து; சட்ட இலாகாவிற்கு அனுப்பி, சட்டப்படி எது நியாயம் என்று கருதப்பட்டதோ அதை நிலைநாட்டிய அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஒரு வழக்கறிஞர் அதைப்பற்றி இழிவாகச் சொல்வது சரியல்ல.

இரண்டு பேர்களுக்கிடையே தகராறு. இது புதியது அல்ல. பல இடங்களில் எலக்ட்ரிஸிடி கனெக்‌ஷன் கொடுக்கப்படும்பொழுது இம்மாதிரித் தகராறு வரக்கூடியதுதான். எனக்குக்கூட ஒரு மனு வந்தது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு நகல் போட்டு எனக்கு ஒரு மனு வந்தது. சொந்தக்காரருக்குத் தெரியாமல் சட்ட விரோதமாகக் கொடுக்கிறார்கள் என்று மனு வந்தது. அதை விசாரித்து ரிப்போர்ட்டு கொடுக்கும்படி கேட்கிறோம். விசாரித்து நியாயம் வழங்குகிறோம். அமைச்சருக்கு மனு வந்தால், அந்த மனுவை விசாரித்து, யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்று பார்க்கிறோம். இது குற்றமா? ஒரு தகராறு ஏற்பட்டால், அதைப் பற்றி அமைச்சருக்குப் புகார் வந்தால், அதை விசாரிக்க உத்தரவிட்டு, நியாயம் வழங்குவது எப்படித் தவறாகும்?

திரு. கே. விநயகம்: இப்பொழுது நான் ஒரு விஷயத்திற்கு வருகிறேன். இந்த முழு ஃபைலையும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அவர் அதை வரி வரியாகப் படிக்கவேண்டும். எங்கே குற்றம் இருக்கிறது என்று கண்டுபிடித்து இந்த சபைக்குச் சொல்லவேண்டும். ஏனென்றால், எல்லா ஸ்டேஜஸ் என்று சொல்கிறார்களே, அது மாதிரி எல்லோரும், லீகல் அட்வைஸர்ஸ் பார்த்த பிறகு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது போர்டு. திடீர் என்று போர்டு இதில் ஒரு முடிவுக்கு வரவில்லை. கோர்ட்டுக்கு போயிருக்கிறது விஷயம். கவர்ன்மெண்ட் ப்ளீடர் அட் மதுரை பார்த்திருக்கிறார். சென்னையில் ஒரு கவர்ன்மெண்டு ப்ளீடர் இருக்கிறார்...........

மாண்புமிகு திரு. செ. மாதவன்: போர்டு செய்வதையெல்லாம் சரியென்று சொல்ல முடியாது. போர்டு சில சமயங்களில் சரியான முடிவு எடுக்காமல் இருக்கலாம். ரூ. 1,000 பெறுமான நிலத்தை லட்ச ரூபாய் பெறும் என்று முன்பு போர்டு முடிவுக்கு வந்ததே, அது மாதிரி நடக்கலாம், அதை நாங்கள் முன்பு எதிர்க்கட்சியில் இருக்கும் பொழுது சுட்டிக்காட்டினேம். அம்மாதிரிப் புகார்கள் வரும்பொழுது அரசாங்கம் அதைப்பற்றி விசாரணை செய்யவேண்டாமா? போர்டு செய்வதெல்லாம் சரி என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் கட்சிக் கொறடா அவர்கள் சொல்வது நல்லது அல்ல. சில சமயங்களில் தவறுகள் நடைபெறலாம். அதைப்பற்றி விசாரிக்கத்தான் வேண்டும். விசாரித்த பின்னர் போர்டு முடிவு செய்தது நியாயம் என்று முடிவுக்கு வருவதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது. ஆனல், அமைச்சர் விசாரிக்கவே கூடாது என்று தடை உத்தரவு போடுவது எதிர்கட்சிக்கே கூட ஆபத்தாக வந்து முடியும்.

திரு. கே. விநயகம்: இதில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மனுக் கொடுத்த தேதி என்ன? ஓர் ஆண்டுக்கு முன்பு கொடுத்தது. கரெண்ட் ஓராண்டு 6 மாதங்களுக்குப் பிறகுதான் தருவது என்பதுதான இந்தக் காருண்ய சர்க்கார் செய்வது? இவர்கள் சொல்வதைப்போல் வக்கீலுக்கு அனுப்புவது, வக்கீல் அபிப்பிராயம் கொடுத்தபிறகு, போர்டு செய்தது சரி, அல்லது சரியில்லை என்று சொல்வது என்பது அல்ல. இதிலே உண்மை என்னவென்றால், மின்சார மந்திரியும், நம்முடைய இண்டஸ்டிரீஸ் மினிஸ்டரும் மற்றும் எம்.பி., எம்.எல்.ஏ. இவர்கள் ஒன்று சேர்ந்துதான் இதைக் கொடுக்கக்கூடாது என்று சொல்லவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்......... (அமைப்பு காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் ஆரவாரம்)

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு நண்பர் திரு. கே. விநயகத்திற்கு ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு தகராறு ஏற்பட்டது. ஒரு நிலத்திற்கு மின்சார இணைப்புத் தருவது பற்றி ஒரு தகராறு ஏற்பட்டது. தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, முதலிலேயே இரண்டு பேர்கள் தகராறு செய்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத் தான் சொல்கிறேன். போர்டு செய்ததெல்லாம் சரியாக இருக்கும்



என்கின்ற வாதத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்களும் ஒத்துக்கொள்ள முடியாது, நானும் ஒத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால், தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபொழுது, எருக்கஞ் சேரி நிலத்தைப்பற்றிய விவகாரத்தை எழுப்பியது எல்லோருக்கும் தெரியும். ரூ. 1,000, 2,000 பெறுமான நிலத்தை லட்ச ரூபாய்க்கு வாங்கியதுபற்றிய தகராறு எழுப்பப்பட்டது: அப்பொழுது அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்களிடம் நாங்கள் எடுத்துச்சொன்னபொழுது, அதை அவர்கள் விசாரித்து, அதன் பேரில் முடிவுக்கு வந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும். போர்டு சில நேரங்களில் தவறுகள் செய்யக்கூடும். ஆகவே, அமைச்சரிடம் விவகாரம் வந்து, அமைச்சர் அதை விசாரிக்கச் சொல்லி, மறுபடியும் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்காமல் போய்விட்டால் அது தவறு என்று சால்லலாம். அப்படிக் கொடுக்காமல் இல்லை. சட்ட ரீதியாக ஏதாவது தவறு இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தபிறகு கொடுத்திருக்கிறார். இதில் என்ன விவகாரம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

நான் இன்னென்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கோடம்பாக்கத்தில் சரஸ்வதி வித்தியாலயம் பள்ளிக்கூடம் இருக்கும் இடத்தில் மத்திய சர்க்கார் போஸ்ட் ஆபீஸ் வைக்கவேண்டும் என்று வந்தது. வந்தவுடனே நாங்கள் சரஸ்வதி வித்யாலயத்தை விநயகம் அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே போஸ்ட் ஆபீஸ் வைத்துவிடலாம் என்று முடிவு செய்துவிடவில்லை. விநயகம் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்தானே, ஆகவே, அந்த இடத்தில் போஸ்ட் ஆபீஸ் தான் வைக்கவேண்டும், பள்ளிக்கூடத்தை காலி செய்ய வேண்டும் என்று நாங்கள் யாரும் கூறிவிடவில்லை என்பது விநயகம் அவர்களுக்குத் தெரியும். அதில் எதிர்க்கட்சி, சொந்தக் கட்சி என்று யாரும் பார்ப்பதில்லை. நியாயத்திற்கு யாராவது வாதாடினல் கொஞ்சம் தாமதமாகலாம். அதைப்பற்றி முடிவு செய்கின்ற நேரத்தில் ஏதாவது தவறு ஏற்பட்டுவிடக்கூடாது, நன்ருக ஆராய்ந்த பிறகு செய்யவேண்டும் என்பதுதான் நோக்கம். திரு. விநயகம் அவர்கள் பள்ளிக்கூடம் வைத்திருக்கும் இடத்தில் போஸ்ட் ஆபீஸ் வைக்கலாமா என்பதைப் பல முறை ஆராய்ந்த பிறகுதான், பொதுப்பணித் துறை அமைச்சர் நேரில் போய் பார்த்து ஆராய்ந்துவிட்டுத்தான், அதைப்பற்றி முடிவு செய்தோம். அந்த இடத்தில் பள்ளிக்கூடத்திற்கு அவசியம் இருக்கிறது, அங்கே போஸ்ட் ஆபீஸ் வைக்கக்கூடாது, பள்ளிக்கூடம்தான் செயல்பட வேண்டும் என்று உடனே உத்தரவு போட்டு விடலாம். ஆனல், டாக்டர் ஹாண்டே அவர்கள் —உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன்— கேட்பாரோ என்னவோ தெரியாது—"மத்திய சர்க்கார் அந்த இடத்தில் போஸ்ட் ஆபீஸ் வைப்பதற்கு உத்தரவு போட்டிருக்கிறது. நீங்கள் அந்த இடத்தை நண்பர் விநயகம் அவர்கள் பள்ளிக்கூடம் வைப்பதற்கு எப்படித் தந்தீர்கள்? அங்கு ஏன் போஸ்ட் ஆபீஸ் வைக்கக்கூடாது" என்று கேட்கக்கூடும். அல்லது, கோடம் பாக்கத்திலுள்ள தொகுதி மக்களேக்கூட அப்படி என்னைக் கேட்கக் கூடும்? அப்படிக் கேட்கக்கூடிய நேரத்தில் அவர்களுக்குப் பதில்

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 28

சொல்லுகிற வகையில், நியாயம் இருக்கிறதா என்பதைப் பார்த்து, கொஞ்சம் காலதாமதம் ஆனாலும், செய்வதைச் சரியாகச் செய்ய வேண்டும். அப்படி நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகுத்தான் அந்த இடத்தைப் பள்ளிக்கூடத்திற்கு தங்களுக்குத் தந்தோம். அதைப் போலவேதான் நம்முடைய மின்சார அமைச்சர் திரு. ராமன் அவர்கள் நன்றாக ஆராய்ந்தபிறகு அந்த உரிமையை அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது என்று தெரிய வில்லை. அப்படி ஆராய்வதற்கு ஏற்படுகிற காலதாமதத்தைப்பற்றி வேண்டுமானால் தாங்கள் குறை சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காங்கிரஸ் கட்சி கொறடா அவர்கள் மின்சார அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ. இவர்களோடு என்னையும் சேர்த்துவிட்டார்கள். எனக்கு அந்த ஊரும் தெரியாது, ஆளும் தெரியாது. இந்தப் பிரச்னையைக் காங்கிரஸ் கட்சி கொறடா அவர்களுடைய பேச்சிலிருந்துதான் நான் புரிந்து கொண்டேன். வேறு ஒன்றும் தெரியாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு விளக்கியிருக்கிறார். என்னுடைய கட்சி அங்கத்தினர் சொல்வ தெல்லாம், இதில் அமைச்சர் தலையீடு இருக்கிறது, கட்சி சார்பில் இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். இதில் அமைச்சர் அவர்கள் ஏன் இவ்வளவு சிரத்தை காட்டவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நான் இன்னொன்றும் சொல்கிறேன். கரண்ட் கொடுத்த பிறகு கூட, அது தவறு என்று தெரிந்தால், போர்டு கரெண்டை துண்டித்துவிடலாம், வேண்டாம் என்று சொல்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இவ்வளவு தூரம் முடிவான பிறகு ஏன் அதை நிறுத்தி வைக்கவேண்டும்? ஏமாற்றியிருக்கிறார்கள். தவறு செய்திருக்கிறார்கள் என்று பின்னால் தெரிந்தால், அபராதம் போடுவதற்கும், கரெண்டை துண்டிப்பதற்கும் போர்டிற்கு அதிகாரம் இருக்கிறது. எதற்கும் டாகுமெண்டரி எவிடென்ஸ் வேண்டும் என்று கேட்பீர்கள், இல்லாவிட்டால் பயனில்லை என்று தப்பித்துக் கொள்வீர்கள். இப்பொழுது டாகுமெண்டரி எவிடென்ஸ் காட்டி யிருக்கிறோம் (மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை மறுக்கவில்லை). எங்களுக்கு இந்த ஒரு விஷயத்தில் டாகுமெண்டு கிடைத்திருக்கிறது. ஒரு அமைச்சராக இருக்கக்கூடியவர் போனில் கூப்பிட்டுச் சொல்லி அதை ஏன் நிறுத்தவேண்டும் ? அவ்வளவு பெரிய நஷ்டம் என்ன சர்க்காருக்கு இதனால் ஏற்பட்டுவிடப்போகிறது? ஏற்கனவே நான் சொன்னேன். கொடுத்ததற்கு அப்புறம்கூட, தவறு இருக்கிறது. தகராறு இருக்கிறது என்றால், கரெண்டை துண்டித்துவிடலாம். இது அரசியல் நோக்கத்துடன், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஹிம்சை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் செய்த காரியம் என்றுதான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மின்சார வாரியம் எடுக்கிற முடிவுகளில் அமைச்சர் தலையிடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வாதத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. எந்தத் துறையிலும் அவர்கள் ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, அந்த



1970 ஆகஸ்ட் 28] [திரு. மு. கருணாநிதி]

முடிவைப்பற்றி ஏதாவது புகார் வந்தால், அமைச்சர் அதில் தலையிட்டு நியாயம் வழங்குவதுதான் முறையாகும். இதில் அமைச்சர் அவர்கள் அப்படி தான் தலையிட்டு, ஆராய்ந்ததற்குப் பிற்பாடு நியாயம் வழங்கியிருக்கிறார்கள். நியாயம் மறுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியே தவறு என்று தெரிந்தால், பின்னால் துண்டித்துவிடலாம் என்று சொல்கிறார்கள். துண்டித்து விட்டால், கட் செய்துவிட்டால், "கட்டையை உடைத்தால் நாங்கள் மண்டையைப் பிளப்போம்" என்று கோஷமிட்டுக்கொண்டு கோவையில் ஊர்வலம் வந்ததுபோல், ஊர்வலம் வரக்கூடும். எதையும் பார்த்து ஆராய்ந்து செய்யவேண்டும். திரு. விநாயகம் அவர்கள் பள்ளிக்கூடம் வைத்திருக்கிற இடத்தில் போஸ்டாபீஸ் வைக்கவேண்டுமென்று உத்தரவிடவேண்டுமென்று சொன்னால், உடனே பள்ளிக்கூடத்தைக் கலைத்துவிட்டு அங்கே போஸ்ட் ஆபீஸ் வைத்துவிடும்படி சொல்லிவிடலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் போகிறது. நீங்கள் பேசுங்கள்.

திரு. கே. விநாயகம் : என் நேரம் இன்னமும் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25 நிமிஷம் ஆகிறது.

திரு. கே. விநாயகம் : நான் பத்து நிமிஷம்தான் பேசியிருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. 11-30-க்கு முடித்து விடுங்கள்.

திரு. கே. விநாயகம் : முதல் அமைச்சரவர்கள் எனக்கு இடம் தந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னால், இவன் சொல்லாமல் விட்டு விட்டுப் போய்விடுவான் என்பதற்காக என்று நினைக்கிறேன். இதிலே இருக்கிற புகார் உங்களுக்குச் சாதகமாகத் தான் சொல்லுகிறேன். உங்களுடைய கட்சிப் பெயர் கெடக் கூடாதே என்றுதான் சொல்லுகிறேன் (சிரிப்பு). வேண்டும் என்றால் பின்னால் உள்ளே போய், காபினெட்டில் .........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம்.

திரு. கே. விநாயகம் : சரி, அதை விடுங்கள். இவர்கள் செய்த காரியத்தினால் என்ன நஷ்டம்? 7—4—1969-ல் மனுப்போட்டது. பின்னால் 11—2—1970-ல் தான் கரண்ட் கொடுக்கப்பட்டது. கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். என்ன நடந்தது? கிணறு வெட்டப் பணம் ரூ. 20,000 செலவாகியிருக்கிறது. பம்பு செட்டு வாங்கி 15 எச்.பி.-யில் வைத்திருக்கிறது. அதற்கு ரூ. 10,000 செலவு. அதற்குப் பிறகு, all crops withered, எல்லாம் போய் விட்டது. கரும்பு, நெல் பயிர் நஷ்டம். யாரால்? மந்திரி தலையிட்டு கரண்ட் கொடுக்கக் கூடாது என்று சொன்னதால், இப்படி 35, 36 ஆயிரம் ரூபாய் நஷ்டம். பாதிக்கப்பட்ட பார்ட்டி, நேரிடையாக லீகல் நோட்டீஸ் கொடுத்த பிறகு, வாரியத்தில் இருக்கிறவர்கள் ஒன்றும் சொல்ல முடியாத நிலையில், மதுரையிலிருந்து பைல்

வருகிறது இங்கே அவசர அவசரமாக. அதன் பிறகு லீகல் அட்வைசரைக் கேட்கிறார்கள். அவர் உடனடியாக 'We have no right to refuse current' என்று அபிப்பிராயம் கொடுத்த பிறகு, கரண்ட் தருகிறார்கள். சபாநாயகர் அவர்களே, முதலிலே ஒரு இண்டெம்நிடி பாண்ட், கொடுக்கலாம் என்று முடிவு செய்ததன் பேரில் கொடுக்கப்படுகிறது. மறுபடியும், இன்னொரு இண்டெம் "நிடி பாண்ட் 'for contractual period' என்று பத்து வருஷத்திற்கு எவ்வளவு செலுத்தவேண்டுமோ,' highest annual rate என்று கணக்குப் பண்ணி, ரூ. 2,900 வசூல் செய்திருக்கிறார்கள்.

ஒரு ஏழை விவசாயிடமிருந்து, இவ்வளவு தயவுசெய்து உங்கள் சர்க்கார் ரூ. 2,900-ஐ, அவன் ஒரு காங்கிரஸ் விவசாயி என்று அவன் மீது வெறுப்புக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ., எம்.பி. இவர்கள் சேர்ந்து அமைச்சரும் சொல்லி இப்படிச் செய்திருக்கிறார்கள். உங்கள் கட்சி சீரமைப்பு அடையவேண்டும் என்றால் நான் சொல்வதைக் கவனித்துக் கேட்கவேண்டும். (குறுக்கீடு), அதைச் சொல்வானேன். அமைச்சருக்குப் பிடிக்க வில்லை. (குறுக்கீடு) This is a gross in justice done to a poor ryot You have taken the entrie contractual period of 10 years, How on earth can they demand it ?

சொல்லுங்கள். மாநிலத்தில் எவ்வளவு பேர்களிடம் அப்படி வாங்கியிருக்கிறீர்கள்? எத்தனை பேர்களிடம் 10 வருஷத்திற்கு ஒட்டுமொத்தமாக வாங்கியிருக்கிறீர்கள்? இவ்வளவு பணத்தை ஒருவரிடம் வாங்கியதாக ஒரு இன்ஸ்டன்ஸ் சொல்லுங்கள். போர்டில் இருக்கிறதா? இப்படிச் செய்தது நியாயமா? மந்திரி தலையிட்டிருக்கிறார்கள். லீகல் அட்வைசர் வேண்டுமானால் பத்து வருஷத்திற்கு பணத்தை வாங்கிவிடலாம் என்று சொல்லுகிறார். இண்டெம்நிடி பாண்ட் வாங்க வழி சொன்னபிறகு அதிலும், to-day or never என்ற அளவில் ஆர்டர் போன பிறகு, 25-ம் தேதி ஆர்டர் போகிறது, 27-ம் தேதிக்குள் பணம் கட்டிவிட்டால் கரண்ட் கொடு என்கிறார்கள். ப்ரொசீடிங்ஸ் இருக்கிறது. பைலை வாங்கிப்பாருங்கள். பத்து வருஷத்திற்குச் சேர்த்து ரூ. 2,900 ஒரு விவசாயியிடம் வாங்கியிருக்கிறார்கள். மந்திரி தலையிட்டார், அவர் லீகல் அட்வைசரைக் கேட்டார். அவன் கோர்ட்டுக்குப் போனால், சந்தியில் சிரிக்கும் அரசாங்கத்தின் வேலை. அவன் ஹை கோர்ட்டில் ரிட் போட்டிருந்தால், கேஸிப் பிழைப்பாகப் போயிருக்கும். (குறுக்கீடு) அது முன்சீப் கோர்ட்டில், என்னுடைய நிலம் என்பதற்காக. கரண்ட் கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வேன் என்று லீகல் நோட்டீஸ் கொடுக்கிறான். ஓடுகிறார்கள் லீகல் அட்வைசரிடம். பைல் மதுரையிலிருந்து சென்னைக்கு வருகிறது, சென்னையிலிருந்து மதுரைக்குப் போகிறது. மந்திரி சொன்னாலும் சரி, கரண்டைக் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்கிறார்கள். (குறுக்கீடு) அது பற்றியெல்லாம் Noting by the Board இருக்கிறது. மந்திரி சொன்னாலும், அதை மீறி, இவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இல்லை என்றால், கோர்ட்டுக்குப் போன பிறகு, திரித்திருப்பார்கள். இங்கே சபையில் திரிப்பது போல். என் வாதமெல்லாம் 'My crops went withering they are foodcraps.



கரும்பு, விவசாயம்......நெல், வாழை போன்றவைகள் (குறுக்கீடு) தாங்கள் போட்டிருக்கிற 15 ஏக்கர் லிமிட்டிற்குள்தான். பிரச்சினைக்கு வாருங்கள். செய்தது நியாயமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எத்தனை ஏக்கர்?

திரு. கே. விநாயகம் : பதினொரு ஏக்கர்கள், 3 ஏக்கர் என்னது; ஜாயிண்ட் கல்டிவேஷனில், மாமன், மச்சான் நிலம் 7 ஏக்கர். (குறுக்கீடுகள்) என்ன விளையாடுகிறீர்களா? என்ன சொல்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோபப்படாமல் பேச வேண்டும். 11 ஏக்கர் என்கிறீர்கள். 2 ஏக்கர் என்று முதலிலே சொன்னீர்கள். இந்த 11 ஏக்கரிலா, ரூ. 36,000 நஷ்டம் என்கிறீர்கள். அவ்வளவு விலையுள்ள பயிர் என்ன?

திரு. கே. விநாயகம் : இரண்டு வருஷமாக கரண்ட் கொடுக்க வில்லை. இரண்டாவது வருஷம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வருஷம் எட்டு மாதம் கொடுக்கவில்லை. இது ஒரு சீரியஸ் விஷயம். சபாநாயகர் அவர்களே, இவர்களெல்லாம் குறுக்கே குறுக்கே பேசினால் முதல் அமைச்சர் சந்தோஷப்படுவார்கள் என்று........... (குறுக்கீடுகள்) ஆமாம், அப்படித்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மின்சார வாரியத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir why don't you pull up Ministers when they go out of order. You only preach the Bible to me and ask me to confine to the point. But you are not asking Ministers not to interrupt my speech. . ... .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்ல முடியாது. அவர்களுக்குக் குறுக்கீடு செய்வதற்கு உரிமை இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : கன்ஸர்ன்ட் மினிஸ்டர் குறுக்கிட்டால் பரவாயில்லை. ஃபுட் மினிஸ்டர், நண்பர்களாக இருந்தாலும், இதிலே குறுக்கிட்டால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் குறுக்கிட உரிமை இருக்கிறது. நீங்கள் மின்சார வாரியத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தாற்காலிகமாக ஒரு விளக்கத்தைக் கொடுக்க விரும்புகிறேன். பிற்பாடு பதில் சொல்லும்போது, ஒரு கதையே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் கூறியது போல், அதிகாரிகளும் தவறுகள் செய்யலாம். என்னிடத்தில் இதற்கு காரணம் இருக்கிறது, வெளிப்படையாகச் சொல்லுகிறேன். இங்கேயிருக்கும் முஸ்லிம் நண்பர்கள் தயவுசெய்து மனவருத்தப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கேயிருக்கும் எஸ். இ. ஒரு முஸ்லீம், மனுதார் ஒரு முஸ்லீம்; செய்யும் காரியம் சட்டத்திற்குப் புறம்பானது. அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில்

[திரு. ஓ. பி. இராமன்] [1970 ஆகஸ்ட் 28

செய்யப்பட்டது. தாசில்தார் சர்வே மூலமாக வெரிபிகேஷன் செய்து பாருங்கள். அப்படியிருக்கும் அரசாங்க நிலத்தில் கிணறு வெட்டியிருந்தால் மின்சாரம் கொடுக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அது தெரியுமோ தெரியாதோ. என்னிடத்தில் வந்த புகாருக்குப் பதில் அளிக்க, உடனடியாக நிறுத்திவைத்து, தாசில்தார், ஆர்.டி.ஓ. இவர்களை அழைத்து, அந்த நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமா அல்லது பட்டா நிலமா என்று வெரிபிகேஷன் செய்தோம். பின்னால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு ஒரு கட்சிச்சாயம் தயவுசெய்து பூசவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் என்றெல்லாம் சொல்வது தவறு. பொதுவாக உள்ளவர்கள் எங்களுக்கு சப்போர்ட் கொடுக்கிறார்கள். இன்னமும், கழகத் தோழர்கள் நியாயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பல தவறுகள் நடக்கலாம், பல இடங்களில் விசாரிக்கப்பட்டு, அதன் பிறகு கொடுக்க வேண்டியது என்று சட்ட அமைப்பு இருக்கிறது. ஆகவே, இதையே மீண்டும் மீண்டும் சொல்வது, அவ்வளவு சரியாக இருக்காது.

திரு. கே. விநாயகம் : மனுதார் மாத்திரமல்ல, பிரதிவாதியும் ஒரு முஸ்லிம்தான். அதை மறந்துவிட்டார்கள். அது போகட்டும். பிறகு கொடுக்கப்படவில்லை என்றால் (குறுக்கீடு) அது வேறு கிணற்றுக்காரர். அது எம்.பி.-யின் கிணறு. அது இன்னொரு பகுதி. அங்கே குடக்கூலிக்கு தண்ணீர் கொடுக்கிறார்கள். எப்படி இதெல்லாம் வெளிவந்தது? கவர்னருக்கு பெடிஷன் போட்டு, கேட்கவேண்டிய நிலை வந்தது. வாதி கவர்னருக்கு பெடிஷன் போட்டு, அதன் மேல் எண்டார்ஸ்மெண்ட் வந்தது அரசாங்கத்திற்கும், போர்டுக்கும் போனது. இந்த நிலைக்கு வந்தது கவர்னர் எண்டார்ஸ்மெண்டுக்குப் பிறகு.

இப்போது நான் கடைசியாக வேண்டிக்கொள்வது என்னவென்றால், பத்து வருஷத்திற்கு வேண்டிய பணத்தை ஒட்டு மொத்தமாக வாங்கிக்கொண்டீர்களே அது நியாயமா? அப்படி நீங்கள் யார் யாரிடம் பணத்தை வாங்கினீர்களோ, அந்தப் பணத்தை அவர்களுக்கே வாபஸ் செய்துவிட வேண்டும். இதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு மின்சார வாரியத்தில் பணியாற்றும் 71 ஆயிரம் ஊழியர்கள் பயன் அடையத் தக்க விதத்தில், நேரடியாகப் பேசி கூலி உயர்வுபெற ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்தத் தொழிலாளர்கள் கூலி உயர்வுபெறும் வகையில் ஒப்பந்தம் செய்வதற்கு உதவிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டு



1970 ஆகஸ்ட் 28] [திரு. சு. துரைசாமி]

தலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார வாரியத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10.5 கோடி ரூபாய் ஊதியமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தப் புதிய ஒப்பந்தத்தினால் தொழிலாளர்கள் மேலும் 4 கோடி ரூபாய் ஊதியம் பெற வழி ஏற்பட்டது. ஆக மொத்தமாக, ஆண்டு ஒன்றுக்கு 14.5 கோடி ரூபாய் தொழிலாளர்களுக்காக ஊதியமாகத் தரப்படுகிறது. இந்த அரசு தொழிலாளர்கள்பால் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இதிலிருந்து நன்கறியலாம். அதற்காக இந்த அரசை மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டு மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் மின்சாரத் துறைப் பொறியாளர்களின் வேலைநிறுத்தம் ஏற்படவிருந்த தருணத்தில் அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு சாமர்த்தியமாக சமாளித்தது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். வேலைநிறுத்தம் செய்யத் தூண்டிய நாசகார சக்தியையும் இந்த அரசாங்கம் கருணை வைத்து, தவறு செய்த பொறியாளர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப் பெற்றமைக்கும் இந்த அரசுக்குப் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

பலமுறை இந்த சட்டமன்றத்திலே பேசுகின்றபொழுது லோகல் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த மின்வாரிய அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியமானது கிராமங்களில் பல்வேறு துறைகளில் பணியாற்றிக்கொண்டு வருகிறது. கிராமங்களில் தெருக்களுக்கு மின் விளக்கு அமைத்துக் கொடுத்தல், மேலும் உழவர் பெருங்குடி மக்களுக்கு வேளாண்மைத் துறைக்கு மின்இணைப்புக் கொடுத்தல் போன்ற காரியங்களில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. அதற்காக மின்வாரியத் தலைவர் அவர்கட்கும், முதன்மைப் பொறியாளர் அவர்கட்கும், மின்துறை ஊழியர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் கிராம மக்களுக்கு மின்சாரம் கொடுக்கின்ற வகையிலே பெரும்பணிகளைச் செய்துவருகிறது.

1969–70-ம் ஆண்டுக்கான திட்டத்தில் 36.88 கோடி ரூபாய் செலவிட வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், 1969–70-ம் ஆண்டில் நாம் மின்சாரத் துறைக்காக செலவழித்திருப்பது 40.94 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. நாம் திட்டமிட்டதைவிட அதிகமாக 4.06 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். திட்டமிட்டதற்கு மேலாகவே நாம் மின்சாரம் கொடுத்திருக்கிறோம். நாம் மின்சாரத் துறையில் இவ்வளவு காரியங்களைச் செய்தாலும்கூட, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் மின்சாரம் பற்றாக்குறை இருப்பதைப் பார்க்கிறோம். 1973–74-ம் ஆண்டில் நமக்குக் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு 1,670 மெகவாட் ஆகும். ஆனால் 1973-74-ம் ஆண்டில் நமக்குத் தேவைப்படும் மின்சாரத்தின் அளவு 2,200 மெகவாட் ஆகும்.

ஏறக்குறைய 530 மெகவாட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, பல்வேறு புதிய திட்டங்களையும் தமிழ்நாடு அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டுமென்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1—11—1969-ம் தேதியிட்ட "இன்டர் நேஷனல் அடாமிக் எனர்ஜி கமிஷன்" என்ற செய்தித் தாளில் "அடாமிக் கமிஷனின்" தலைவரான திரு. விக்கிரம் சாராபாய் என்பவர் அணுமின் நிலைய பயன்பற்றி ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, 1973–74-ம் ஆண்டில் 530 மெகவாட் பற்றாக்குறை இருக்கப் போகிறது. இன்றைக்கு அணுமின்சார நிலையத்தை உருவாக்க வேண்டுமெனவும், தமிழ் நாட்டிலே கிழக்கு இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் இந்த அணுமின் நிலையத்தை ஏற்படுத்தலாம் எனவும் நான் கருதுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதனால் இந்த அணுமின் நிலையம் இங்கு ஏற்பட்டால் மின்சாரம் இங்கு பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அடாமிக் கமிஷன் தலைவருடைய ரிப்போர்ட்டின் அடிப்படையில் நாம் பல காரியங்களைச் செய்ய முடியும். அணுமின் நிலையத்தின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். குடிதண்ணீர் உற்பத்தி செய்ய முடியும். அந்தத் தண்ணீரைக் கொண்டு விவசாயம் செய்யலாம். மேலும் உப்பு சம்பந்தப்பட்ட உரத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தலாம். கிழக்கு இராமநாதபுரம் கடற்கரையோரத்தில் இந்த அணுமின் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இது குறித்து மத்திய அரசாங்கத்தோடு கலந்துபேசி, தமிழகத்தில் அணுமின் நிலையம் ஏற்படுத்த வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மின்சார வாரியத்திற்கு பல பொறுப்புகள் இருக்கின்றன. மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள், மின்சாரத்தை வாங்கி வினியோகம் செய்கிறார்கள், வேறு மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை வாங்கி வினியோகம் செய்கிறார்கள். மின்சார வாரியம் இன்னும் விரைவாகச் செயல்பட வேண்டும். மின்சார வாரியத்தின் வேலைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அண்டை மாநிலங்களில் ப்ராஜெக்ட் கார்ப்பொரேஷன் என்று இருப்பதைப்போல நம்முடைய மாநிலத்திலும் ப்ராஜெக்ட் கார்ப்பொரேஷன் நியமிக்க வேண்டும்.

நேற்றைய தினம் பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது, தமிழக அரசாங்கத்தின் மீதும், மின்சார வாரியத்தின்மீதும் சில குற்றச்சாட்டுகளை எடுத்துக்கூறினார்கள். கடந்த 1967-ம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், எந்த எந்தச் சங்கங்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருந்தனவோ, அவைகள் எல்லாம் மின் நிலையங்களில் கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்ட தொழிற்சங்கங்களாக மின்சார வாரியத்திலும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சங்கங்களுக்கு சில நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளுக்கு, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது தான் தொழிற்சங்கம். தொழிற்சங்கக் கூட்டங்கள் நடத்துவது



குறித்து 1967-ம் ஆண்டில் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதை அந்த உறுப்பினர் அவர்களும் அறிந்திருப்பார்கள். கிராசுடி திட்டத்தை வேண்டாம் என்று முன்னேற்ற சங்கமும், கணக்காயம் சங்கமும் சொல்லிவிட்டனர் என்கின்றனர். ஆனால் கிராசுடி திட்டத்தைக் குறித்து தனியாகப் பேசப்படும் என்றுதான் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. 18 (1). அதில் இரண்டு சங்கங்களைச் சேர்ந்தவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்கள் கட்சியைச் சேர்ந்த தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு. எஸ். ஜி. கிருஷ்ணன் அவர்களில் ஒருவர். மற்றொருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. வெள்ளியங்கிரி என்பவராகும். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்போது யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை, மறுப்பு தெரிவிக்கவில்லை. ஒத்துக்கொண்டு ஒப்பந்தம் செய்துவிட்டு, பின்னர் இங்கு வந்து மறுப்பது எப்படி முறையாக இருக்கும் என்பது தெரியவில்லை.

அடுத்தபடியாக, மத்திய சர்க்காரில் மின்சார ஊழியர் ஊதியக் குழுவின் சிபாரிசின்படி அடிப்படைச் சம்பளம் 55 ரூபாய். ஆனால் நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் அடிப்படைச் சம்பளமாக ரூ. 65 வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. கிராஜுடி திட்டம் போய்விட்டது என்று சொன்னார்கள். அந்த ஒப்பந்தத்தில் கிராஜுடி திட்டம் குறித்து தனியாகப் பேசப்படும் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஒப்பந்தம் தொழிலாளர்களுடைய உரிமையை எந்த வகையிலும் தடுத்துவிடவில்லை.

ஊதியக்குழு சிபார்சுகளை அப்படியே அமுல்படுத்தியிருந்தால் செலவு 2 கோடி அளவுக்குத்தான் மின்சார வாரியத்திற்கு வரும். ஆனால் தற்போது கொடுக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வினால் 4 கோடி ரூபாய் கூடுதலாக சம்பளமாகக் கொடுக்கிறோம். இப்படித் தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் பல்வேறு நன்மைகளைத்தான் செய்திருக்கிறதே தவிர அவர்களுடைய உரிமைகளைத் தடுக்கவில்லை.

அடுத்து மின்சார வாரியம் கவனிக்க வேண்டிய சில பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

திருப்பூர் நகரத்தில் பனியன் பாக்டரிகள் ஏராளமாக இருக்கின்றன. புதிய புதிய தொழில்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது அங்கேயுள்ள டிரான்ஸ்பார்மர் போதுமான லோடு கொடுக்கக் கூடியதாக இல்லை. ஆகவே, புதிய டிரான்ஸ்பார்மரை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல திருப்பூர் நகரின் தெருக்களின் இடையில் மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அதன்காரணமாக போக்குவரத்து இடைஞ்சல் ஏற்பட்டு அடிக்கடி விபத்துக்கள் வருகின்றன. அப்படிப்

[திரு. சு. துரைசாமி] [1970 ஆகஸ்ட் 28

பட்ட இடங்களில் மின்சாரக் கம்பங்களை சாலையின் ஓரங்களில் உடனடியாக மாற்றி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, மின்சாரத் திருட்டைப் பற்றி அடிக்கடி சொல்கிறோம். எப்படி ரயில்வே இலாக்காவில் பத்துபேர்களாகச் சேர்ந்துகொண்டு 'ஸ்க்வாட்' என்பதாக திடீர் திடீர் என்று அங்கங்கே சோதனை நடத்துகிறார்களோ அதுபோல மின்சார இலாக்காவில் எஸ். ஈ., டி.ஈ., ஏ.ஈ. லெவலில் நான்கைந்துபேர்கள் சேர்ந்து ஸ்க்வாடாக திடீர் திடீர் என்று அங்கங்கே சென்று சோதனை செய்து திருட்டுக்களைத் தடுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தவறுகள் நடந்திருந்தால் தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கோவை நகரத்தில் இருக்கிற மின்சார ஊழியர்கள் நகரசபையின் நிர்வாகத்தில் வந்தாலும் கூட மின்சார வாரியத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பள விகிதங்களை அவர்களும் பெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிள்ளையாருக்குச் சதுர்த்தி கொண்டாடுகிற இந்த மாதத்திலே அரசு நடத்துகின்ற இலாக்காக்களிலே லாபகரமாக இருக்கின்ற மின்சார வாரியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவில் எந்தக் கட்சியும் மேற்கொண்டு லாபம் எப்படிச் சம்பாதிப்பது, எந்த எந்த வழியில் சம்பாதிப்பது என்றுதான் கவனம் செலுத்துகிறது.

இந்த நிலையில் நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் பொறி இயல் துறையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையைக் கண்டு நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. வேலையில்லாதிருந்த எத்தனையோ பி.இ. பட்டதாரிகளை ஜூனியர் என்ஜினியர்களாக வேலையில் அமர்த்தியிருக்கிறார்கள் என்பதைக் கண்டு பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களின்படி 650 பட்டதாரிகள் மின்சார வாரியத்தில் வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாகும். இது பாராட்டவேண்டிய ஒன்றாக இருக்கிறது. அதேசமயத்தில் இன்னொன்றையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மின்சார வாரியத்தில் பாலிடெக்னிக்கில் படித்துவிட்டு வேலையில் சேர்ந்து பணிபுரிந்து வருகிற நல்ல அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆறு, ஏழு வருட அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க ஜூனியர் என்ஜினியர்களாக பி.இ. பட்டதாரிகளைப் போடுவதுபோலவே பாலிடெக்னிக்கில் படித்து ஆறு; ஏழு வருட அனுபவம் கூட உள்ளவர்களை அந்த நிலைக்கு விகிதாசார அடிப்படையிலாவது உயர்த்தியிருக்க வேண்டும்.

Operation Subordinate Staff expecting promotion to supervisor's post.



1970 ஆகஸ்ட் 28] [திரு. சா. மெய்யப்பன்]

என்று சொல்வதிலே ஐந்தாண்டு முதல் ஏழாண்டு வரை அனுபவம் பெற்றவர்கள் 100 பேர்கள் இருப்பார்கள். நான்காண்டு முதல் ஆறு ஆண்டு வரை அனுபவம் பெற்றவர்கள் 600 பேர்கள் இருப்பார்கள். இரண்டாண்டுக்கு மேல் நான்கு ஆண்டிற்குள்ளாக அனுபவம் பெற்றவர்கள் 800 பேர்கள் இருப்பார்கள். இரண்டாண்டுகளுக்குக் குறைந்த அனுபவம் உள்ளவர்கள்—தினக் கூலியாக இருப்பவர்கள் ஆயிரத்திற்கும் மேல் இருக்கும்.

நம்முடைய மாநிலத்தில் 35 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. எட்டு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஒரு பி.இ.-க்குக் கொடுத்தால்—இந்த விகிதாச்சாரத்தில்—இத்தனை பாலிடெக்னிக்கில் படித்தவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதாக ஒரு வரையறை இருக்கவேண்டும். 20—2—1970 தேதியிட்ட அறிவிப்பில் பி.இ.க்கள் 200 பேர்களுக்கு மட்டும் சூப்ரவைசர்கள் பதவிக்கு விண்ணப்பம் கேட்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஓரளவு குறைந்த ஊதியத்தில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிற அவர்களை மறந்து—மறைத்து என்று சொல்லமாட்டேன்—மறுத்திருக்கவும் முடியாது. பி.இ. பட்டம் படித்து வேலையில்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு உதவவேண்டும் என்ற ஆர்வத்தில் இதைச் செய்தாலும் முன்பே பணிபுரிந்து வருகிறவர்களுடைய நலன் பாதிக்காத வகையில் ஏதாவது ஒரு வீதாசாரத்தில் இதைச் செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 200 பேர்களை இப்போது எடுத்திருக்கிறார்கள். சில விதிகள் அவர்களை ரெகுலரைஸ் செய்வதற்குத் தடையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் அதை மாற்றி அமைக்கவேண்டியது அரசின் தலையாய கடமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிப்ளமோ ஹோல்டர்கள் ப்ரைவேட்டாகவே பி.இ. படித்து பட்டம் பெறுவதற்கு மற்ற மாநிலங்களில் இடம் இருப்பதுபோலவே இந்த மாநிலத்திலும் இடம் அளிக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது அரசு நம் மாநிலத்தில் அமைக்க இருக்கிற பொறியியல் பல்கலைக் கழகத்தை சீக்கிரமாக செயல்முறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின் இணைப்பு வீட்டுக்காக கேட்டாலும், விவசாயத்திற்காகக் கேட்டாலும் போதிய சாமான்கள் இல்லை, குறிப்பாக மீட்டர்கள் இல்லை என்பதாகப் பதில் வருகிறது.

இதுதான் தாமதத்திற்குக் காரணம் என்கிறார்கள். மின் இணைப்புக் கொடுப்பதில் ஏற்படுகிற தாமதத்தைப்பற்றி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது, இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது, இன்ன சாமான் இல்லை என்பதாக அச்சடித்து வைத்திருக்கிற பதிலில் ஒன்றையே மின்சார வாரியம் அனுப்பி வருகிறது. வேறு இன்ன தேதிக்குள், இன்ன மாதத்திற்குள் கொடுப்பதாக திட்டவட்டமாக எதுவும்

[திரு. சா. மெய்யப்பன்] [1970 ஆகஸ்ட் 28

சொல்வதில்லை. ஆகவே, இனியாகிலும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்து 3 மாதத்திற்குள் கனெக்ஷன் கொடுக்கப்பட்டு விடவேண்டும் என்பதாக மின்சார வாரியத்திற்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் கட்டிய வீடுகளுக்கு பிறகு தான் மின் இணைப்புக் கொடுப்பார்கள். இப்போது வீடு கட்ட ஆரம்பிக்கிறபோதே மின் இணைப்புப் பெற்றாக வேண்டிய நிலையிருக்கிறது. ஒவ்வொரு வீடுகளிலும் குளிர்சாதனம், அறவை, சமையல் இயந்திரங்கள், நீர் இறவை ஆகிய எல்லாவற்றுக்கும் மின்சக்தி அத்தியாவசியமான ஒன்றாக ஆகிவிட்டது.

மேலும் விருந்தினர்கள் வந்திருக்கிறபோது—விளக்கு அணைந்துவிட்டால் உடனே டெலிபோன் செய்கிறோம். அநேகமாக வாட்சுமென்தான் எடுக்கிறான். கேட்டால் அவர்கள் போய்விட்டார்கள் என்கிறான். இன்னும் கேட்டால் மாலை 6 மணிக்கு மேல் போஸ்டுகளில் ஏறக்கூடாது என்பதாக சர்குலர் இருக்கிறது என்கிறார்கள். எந்த நேரத்தில் விருந்தாளிகள் வந்திருக்கிறார்களோ, அப்போது விளக்கு அணைந்துவிட்டால் என்ன செய்வது? இரவு நேரத்தில் போஸ்டில் ஏறுவது ஆபத்தானதுதான். இந்தக் காலத்தில் எல்லாமே ஆபத்தாகத்தான் இருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான சுகத்தை அனுபவிக்க முற்படுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு ஆபத்தும் பெருகித்தான் இருக்கிறது. அது மிக மிக ஆபத்தானதுதான். எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 20 அடி உயரத்திலிருந்து விழுந்தால் அடிபடாது. ஆனால், அவன் ' ஏரோப்பிளேனிலிருந்து ' விழுந்தால் அவன் கருமாதிக்குக்கூட எலும்பு கிடைக்காது. ஆகவே அவர்களுக்கு பிளாஷ் லைட் சிஸ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இவ்வேலை தடைப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. இந்த 6 மணிக்குப் பிறகு கம்பத்தில் ஏறக்கூடாது என்ற உத்தரவை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு வீட்டுக்கும் மின் இணைப்பு தனித்தனியாக இருக்கவேண்டும். 8-ம் நெம்பர் வீட்டிலே மின் இணைப்பிற்காக ஒரு ஒயர் குறுக்கே போகும். 9-ம் நெம்பர் வீட்டிலே இருப்பவர்களுக்கு அதன் குறுக்கே சப்ளை போகும். இதை விட்டு 4 அல்லது 5 வீடுகளுக்கு ஒன்றாக மின் இணைப்புக் கொடுத்தால் நலமாக இருக்கும். அப்படிக் கொடுப்பதன் மூலம் சப் மீட்டர் கொடுப்பதன் மூலம் தனித்தனியாக அவர்களிடம் சார்ஜை வசூல் செய்து கொள்ளலாம். நிர்வாகச் சிக்கல்கள் சட்ட சிக்கல்கள் எவ்வளவு என்று பார்ப்பதற்கு அவகாசம் இல்லை. சீக்கிரமாக சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கவேண்டும்—குறைவான பொருளாதார செலவுடன் கொடுக்க வேண்டுமென்று—இது போன்ற திட்டங்களை மின்சார வாரியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1970 ஆகஸ்ட் 28] [திரு. சா. மெய்யப்பன்]

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் வீரசேகரபுரம் கிராமத்திலும் மற்ற கிராமங்களிலும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்று சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே சொன்னேன். நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையில் வந்திருக்கிறது. அந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும். இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் இனிமேலாவது விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

அரியக்குடிக்குப் பக்கத்திலே உள்ள அலவக்குடி கிராமத்திற்கு ஒரு விவசாயிக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு அவர் 3 குதிரைப் பவர் வைத்திருந்ததால் மறுக்கப்பட்டிருக்கிறது. கொத்தமங்கலம் பஞ்சாயத்திலே 5—10—1959-ல் 70 லைட்டுகள் போடுவதற்கு உத்தரவாகியும் இதுவரையில் அவை போடப்படவில்லை: அவற்றை விரைவாகப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தெரு விளக்குகளை, எரியாத விளக்குகளை, எரியும் விளக்காக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வெறும் வார்த்தையில் மட்டும் பேசி வயிரை எரியச் செய்யவேண்டாம் என்றும் கூறி, பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையை ஆதரித்துப் பேசுவதில் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். ஏன் என்றால் மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற 71,000 தொழிலாளர்களுக்கும் நல்ல ஒப்பந்தத்தை, அவர்கள் உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் பணியாற்றுகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நினைக்கிறபோது உண்மையிலேயே மின்சார வாரியத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

நேற்று இங்கு பேசிய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் இதிலே முதலமைச்சர் ஏன் தலையிட்டார் என்று கேட்டார்? உண்மையிலேயே தொழிலாளர்கள் தகராறு என்றால் முதலமைச்சர் ஏன் தலையிடவில்லை என்றுதான் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடுவார்களே தவிர முதலமைச்சர் ஏன் அதில் தலையிட்டார் என்று கேட்பதை நேற்றுத்தான் நான் கேள்விப்பட்டேன். முதலமைச்சர் அவர்கள் தலையிடாமல் வேறு யார் தலையிடுவது என்பதையும் அவரே சொல்லியிருந்தால் மிகவும் நன்றாக இருந்து இருக்கும். முதலமைச்சர் தலையிட்டது மட்டுமல்ல, வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு தொழிற்சங்கத் தலைவர்களை வைத்துப் பேசி இருக்கிறார்கள்.

இந்திய அரசு ஊதியக் குழுவில் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே ஊதிய உயர்வை அறிவித்தது மட்டுமல்ல; ஊதியக் குழுவின் பரிந்துரைகளைக் காட்டிலும் அதிகமான நன்மைகளை தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளார்கள். இதற்கு முன்பெல்லாம் அரசு அதிகச் சம்பளம் வாங்கும் அதிகாரிகளை வைத்துக் கொண்டு ஒப்பந்தம் செய்து பிறகு தொழிலாளர்களை தெருவிலே விட்டுவிடுவது வழக்கம். ஆனால் தொழிற்சங்கத்

தலைவர்களை வைத்துக்கொண்டு ஒப்பந்தத்தை நல்ல முறையில் ஏற்படுத்தி ஊதிய உயர்வை அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்றால், அதற்காக பாராட்ட வேண்டியவர்கள் அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு போராட்டம் நடத்தினார்கள். அதைப் பார்க்கும்போது பொது உடைமைத் தத்துவம் கூட இந்த நாட்டிலே புதை குழிக்குப் போய் விட்டதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்த ஊதியக் குழுவைப் பொறுத்தவரையில் இது நமது இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமுள்ள மின்சாரத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட நமது மாநிலம் எவ்வளவு அதிகமாகக் கொடுத்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அஸ்ஸாமிலே வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. ஆந்திராவிலே 35 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களுக்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. பீகாரிலே வேலை நிறுத்தம் செய்தபோது "ரூபாய் 15 வாங்கிக் கொள்ளுங்கள். பிறகு பேசிக் கொள்வோம்" என்று சொன்னார்கள். ஊதிய உயர்வு இன்னும் போதுமான அளவு கிட்டவில்லை. இராஜஸ்தானிலே தொழிற்பிரிவை நிர்ணயிக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் பரிந்துரை செய்யவில்லை. மேற்கு வங்காளத்தில் 48 மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களுக்கு காலணாக்கூட கிடைக்கவில்லை. உத்தரப்பிரதேசத்திலே வேலை நிறுத்தம் நடந்தது. ஆனால் பிசுபிசுத்தது என்று செய்தித் தாள்களிலே பார்க்கின்றோம். அகில இந்திய தொழிற்சங்கத்தை நடத்துகிறவர்கள் தான் தமிழ் நாட்டிலே உள்ள தொழிற்சங்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஊதிய உயர்வு பெற்றுத் தராதவர்கள் இங்கே ஊதிய உயர்வு பெற்றுத்தருவதற்குப் பதில் குற்ற கூறுவது மிகவும் வேதனையாக இருக்கிறது.

நானே ஆச்சரியப்பட்டேன். நேற்று மாக்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசுகின்றபோது அவர்களுக்கு வேண்டியவர்களை வைத்து இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தினால் மின்சார தொழிலாளர்களுக்கு கிராசுயுடி இல்லாமல் போய்விட்டது என்று குறிப்பிட்டார். ஆனால் அதில் கிராசுயுடி பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம் என்று ஒரு பிரிவு இருக்கிறது. மின்சார தொழிலாளர்களிடத்தில் அவர்களுக்கு கோபம். ஏனென்றால் அவர்கள் சொல்வதை தொழிலாளர்கள் ஆதரிக்கவில்லை. அதனால் கிராசுயுடி இல்லை என்று சொல்லிப் பார்க்கிறார்கள். கிராசுயுடி இல்லை என்று இவரே சொல்லலாமா ? பேசித் தீர்க்கிறோம் என்ற நிலை இருக்கும்பொழுது இல்லை என்று இவர் மறுப்பதா ? தொழிலாளர்களுக்குத் தவறான தகவல்களைத் தருகிறார்கள். தவறான பாதைக்கு திசை திருப்பி விடுகிறார்கள். அதே போல 1—4—1969 ஊதியக் குழுவின் பரிந்துரையை 1—12—1969-ல் அமுலாக்கியதால் 1 கோடியே 84 லட்சம் ரூபாய் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று கணக்குப் போட்டுக் காட்டுகிறார்கள். அது என்ன கணக்கு என்ற விவரங்களை அவர்கள் தெரிவிக்கவில்லை. நான் சுமாராக ஒரு கணக்குப் போட்டுப் பார்த்



தேன். குறைந்த பட்ச உயர்வான ரூபாய் 32 என்ற அடிப்படையில் 71,000 தொழிலாளர்களுக்கு 8 மாதத்திற்கு பார்த்தால் கிட்டத்தட்ட அதே தொகை வருகிறது. ஆனால் ரூ. 32 ஊதிய உயர்வு என்பது ஊதியக் குழுவின் பரிந்துரையில் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நிர்ணயம் செய்தார்கள். இதை வைத்துக் கொண்டு கணக்கு போடுவதா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?

ஊதிய உயர்வு - விஞ்ஞான அடிப்படையில் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் எப்போதுமே ஒரு ஒப்பந்தத்தில் குறைபாடுகள் (anaimolies) இருந்தால் அதை சீர்படுத்துவதற்காக ஒரு பிரிவு வைப்பார்கள். தொழிற்சங்கத்திற்காகவே பிறந்தவர்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருப்பவர்கள் அதை அறியாமல் இருக்க முடியாது. இருந்தாலும் தவறான தகவல்களைத் தருவானேன்? ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமுல் படுத்தப்பட வேண்டுமென்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். ஊதியக் குழு பரிந்துரைக்கு மேலாக நாம் சலுகைகள் கொடுத்திருக்கிறோம். ஊதிய உயர்வை 3 ஆண்டுகளிலே சரிக்கட்டப்பட வேண்டுமென்று இருக்கிறது. உதாரணத்திற்கு ரூ. 60 வாங்குகின்ற தொழிலாளிக்கு ரூ. 90 கொடுக்க வேண்டுமென்றால் இப்பொழுது 70 ரூபாய், அடுத்த ஆண்டு ரூ. 80, அதற்கு அடுத்த ஆண்டு ரூ. 90 என்றுதான் தரவேண்டும். ஆனால் அவர்களுக்கு மொத்தமாகச் சம்பளம் ரூ. 90-ம் இந்த ஆண்டே கொடுத்திருக்கிறோம். அதே போல 5 வருஷம் சர்வீஸ் ஆனவர்களுக்கு ஒரு ஆண்டுயர்வு கொடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரைத்திருக்கிறது. ஆனால் நாம் 3 வருடங்கள் சர்வீஸ் ஆனவர்களுக்கே ஒரு ஆண்டுயர்வு கொடுத்திருக்கிறோம். அதேபோல தினக்கூலித் தொழிலாளர்களுக்கு $3\frac{1}{2}$ ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஊதியக் குழுவில் இருக்கிறது. ஆனால் நாம் ஒரு படி மேலே போய் இருப்பவர்களுக்கு $4\frac{1}{4}$ ரூபாயாக கொடுத்திருக்கிறோம். புதிதாக வருகின்றவர்களுக்கு $3\frac{1}{2}$ ரூபாய் தரவேண்டுமென்று ஒப்பந்தம் செய்து இருக்கிறோம். தினக்கூலிகளாக 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி ஆற்றுகின்றவர்களுக்கு அதே வேலையை செய்யும் மாதாந்திர தொழிலாளர்கள் எவ்வளவு சம்பளம் பெறுகின்றார்களோ அவ்வளவு சம்பளம் கொடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒர்க் சார்ஜ்ட் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகளாக வேலை பார்ப்பவர்களுக்கு இன்கிரிமெண்ட் கிடையாது என்கிற நிலைமை இருந்து வந்தது. ஆனால் முதல் அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தப் படி ஆண்டு உயர்வோடு கூடிய சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது. கண்டின்ஜென்ட் தொழிலாளர்கள் அத்தனை பேரும் $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள் வேலை நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக 15 ரூபாய் சம்பளம் பெற்று வந்து இருப்பவர்கள் தற்போது ரூ. 55 சம்பளம் வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பணியாளர்களின் சம்பள விகிதம் எப்படி மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். உதாரணமாக ஹெல்ப்பர்களை எடுத்துக்கொண்டால் ரூ. 64—2—80 என்று ஏற்கனவே இருந்த சம்பள விகிதத்தை இப்பொழுது 84—3—120—

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1970 ஆகஸ்ட் 28

5—150 என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது அரசு. ஏற்கனவே உயர்ந்த பட்ச சம்பளம் 80 ரூபாய் என்ற அளவிலே பெற்றுக்கொண்டிருந்த அந்தப் பணியாளர்கள் அதைவிட அதிகமான அளவுக்கு அடிப்படைச் சம்பளமே ரூ. 84 என்ற அளவிலே பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல ஒயர்மேன்களை எடுத்துக் கொண்டால் முன்னாலே 85—3—118 என்ற அளவிலேதான் சம்பளம் பெற்றுக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது 118 என்ற உயர்ந்த அளவு சம்பளத்திற்கு மேலாக அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் இருக்கக்கூடிய வகையில் 120—5—135—6—195 என்ற அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. லைன்மேன்களை எடுத்துக் கொண்டாலும் 98—3—128 என்று இருந்த சம்பள விகிதம் இப்பொழுது 140—7—210—8—250 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு முன்பு 128 ரூபாய் அதிகபட்ச சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த நிலையைவிட, அதிகமாக அடிப்படைச் சம்பளம் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதையெல்லாம் பாராட்டுவதற்குப் பதில்—இதன் மூலமாக இந்த நன்மைகள் காரணமாக தொழிலாளர்களுக்கு 2 கோடி ரூபாய்க்கு கூடுதல் லாபம் வரும் என்ற நிலையிருந்தும் 1—4—1963 முதல் எவ்வளவு நஷ்டம் என்று கணக்குப் போடுவதா? இதைப்போல்தான் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு 26 ரூபாய் உண்மையிலேயே கிடைத்திருக்க, ஆறே கால் ரூபாய் தான் வருகிறது என்று சொன்னார்கள். இப்படியெல்லாம் தவறான தகவல்களைத் தொழிலாளர்களுக்குத் தந்து தொழிலாளர்களைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லக்கூடாது. இதிலே எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடந்தது. அங்கே 71 ஆயிரம் பேர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் நடத்திய போராட்டத்திலே 3 ஆயிரம் பேர்கள் கூட தேறவில்லை. தொழிலாளர்களுக்கு கிடைத்திருக்கிற நன்மைகளை உணர்ந்து தொழிலாளர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை. தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் நல்ல சலுகைகளைத் தந்திருக்கிறது என்பதை உணர்ந்திருப்பதால்தான் அவர்களுக்கு 3 ஆயிரம் பேர்கள் கூட தேறவில்லை. இங்கே அவர்கள் பேசுகிறார்கள். ஆளும் கட்சி நடத்துகின்ற சங்கங்களுக்கு சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். நாங்களும் போராட்டம் நடத்தினோம், சென்னையில் அதாவது தலைநகரத்தில் மட்டும் பத்தாயிரம் பேர்களை திரட்டிக் காட்டினோம். மின்சார வாரிய அலுவலகம் முன்பு ஒட்டுமொத்தச் சிறு விடுப்புப் போராட்டம் நடத்தினோம். அமைதியான ஊர்வலம், ஆர்ப்பாட்டம் கிடையாது; சிறப்பான பொதுக் கூட்டம், பத்தாயிரம் பேர்களைக் கொண்டது. ஆனால் அவர்கள் 3 ஆயிரம் பேர்களை வைத்துக்கொண்டு போராட்டத்தை எப்படி நடத்தினார்கள் என்பதைச் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமையில் இந்தப் பேரவை இல்லை என்று நினைக்கிறேன். கோயம்புத்தூரிலே 3 மணி முதல் 6½ மணி வரையில் மின்சார விநியோகம் கிடையாது; மதுரை, இராமநாதபுரம் பகுதியில் 3 மணி முதல் 7½ மணி வரை



1970 ஆகஸ்ட் 28] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

மின்சார விநியோகம் கிடையாது. திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளில் மூன்று நாட்களுக்கு மின்வசதி கிடையாது. மின்சாரம் செல்கிற கம்பித்தொடரில் சைக்கிள் சங்கிலியைப் போட்டு மின் இணைப்பைத் துண்டித்தார்கள். இப்படியா போராட்டம் நடத்துவது, இதுவா சிறுவிடுப்புப் போராட்டம்? சிறுவிடுப்புப் போராட்டம் என்றால் சிறு விடுப்புப் போட்டுவிட்டு வீட்டிலே போய் இரு. அதை விட்டுவிட்டு மின் இணைப்பிலே தடைசெய்ய ஏன் வர வேண்டும்? பசுமலை என்ற இடத்திலே மின்நிலைய வேலையிலேயே மின்சாரத்தைப் பாய்ச்சி வைத்திருந்தார்கள். யாராவது தொட்டால் என்ன ஆவது? கயத்தாறு என்ற இடத்திலே உள்ள இன்சுலேட்டர்கள் உடைக்கப்பட்டன. இதுவா போராட்டம்? மற்றவையெல்லாம் பொதுமக்களுக்குத் தெரியும். மருத்துவமனைகள் பாதிக்கப்பட்டன. இரத்த சேமிப்பு நிலையங்களில் இரத்தம் உறைந்து விட்ட நிலைமையெல்லாம் தெரியும். வீடுகளிலே விளக்குகள் எரியவில்லை. யார் கொள்ளையடித்தாலும் காணமுடியாத நிலைமை. இதிலே அப்பாவி என்ஜினியர்கள் வேறு மாட்டிக்கொண்டார்கள். முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். "பொறியாளர்கள் திறமை மிக்கவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் கேட்கக் கூடிய அளவுக்கு தர முடியாது என்று சொல்ல மாட்டேன். இயலாது என்றுதான் சொல்வேன்" என்று சொன்னார்கள். அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு சென்றவர்கள் யாரிடம் பாடம் கேட்டார்களோ தெரியாது. 21-ம் தேதியன்று ஒட்டுமொத்த சிறு விடுப்பு என்று அறிவித்துவிட்டு 20-ம் தேதி மாலை மூன்று மணிக்கே திடீர் வேலைநிறுத்தம். மின்சாரம் கிடையாது. யாராவது இதை எதிர்பார்க்க முடியுமா?

ஆனால் கட்சியைச் சேர்ந்த சங்கங்களுக்கு ஆதரவு தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அதனால் ஆதரவு தருகிறார்கள். 3 ஆயிரம் பேர்கள் கூட இல்லாதவர்களிடம் பேசி என்ன பயன்? அதுவும் 21-ம் தேதிக்குப் பிறகு 2 ஆயிரம் பேர் எங்கள் பக்கம் வந்துவிட்டார்கள். மீதி 1000 பேரை வைத்துக்கொண்டு நாடு முழுவதும் தொழிற்சங்கம் நடத்துகிறோம் என்கிறீர்கள். தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை வேண்டுமானால் அதிகமாக இருக்கலாம். ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை எங்களிடத்திலேதானே அதிகம். தொழிலாளர்கள் இருக்கின்ற இடத்திலே பேசினால்தானே பிரச்னைகள் தீரும். ஆகவே எங்களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். பிரச்னைகள் தீர்கின்றன.

அனுப்பானடியிலே எப்படிக் கூட்டம் நடத்தலாம் என்று கேட்கிறார்கள்? தொழிற் சங்கங்களுக்குக் கூட்டம் நடத்த உரிமைகள் வேண்டுமென்று கேட்கவேண்டிய அவர்களே அப்படிப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களே, அந்தப் பகுதியிலே கூட்டம் நடத்தலாமா என்று கேட்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிற்சங்க உரிமைகள் வழங்கும் வகையில் (restoration of trade Union-rights) தொழிற் சங்கங்கள் அலுவலக சுற்றடைப்புகளுள் கூட்டங்கள் நடத்திக் கொள்ளலாம்

என்று உரிமையளித்து ஆணையிட்டார்கள். அதுகூட அங்கே கூட்டம் நடந்தது சப் ஸ்டேஷனில் அல்ல. தொழிலாளர் வாழும் பகுதியில்தான் நடந்தது. தொழிற் சங்கங்கள் கூட்டம் நடத்த உரிமை வேண்டுமென்று கேட்கவேண்டியவர்கள் ஏன் இடம் கொடுத்தார்கள்? ஏன் போஸ்டர் ஒட்டப்பட்டது என்று கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் எஸ். இ. டி. இ. ஆபீஸ்க்குள்ளேயே நோட்டீஸ் ஒட்டினார்கள். போட்டோ எடுத்துக் கொண்டுவந்து நான் காட்டியிருக்க முடியாதா ? நீங்கள் கூட்டம் போடுவதில்லை, காரணம் தொழிலாளர்கள் வருவதில்லை. அதற்கு எங்கள்மீது ஏன் கோபம் கொள்கிறீர்கள்? உண்மை என்னவென்றால் மின்சார வாரியத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட. தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டவர்கள் மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்குச் சீர்கேடுகளைச் செய்த பிறகும், சதித் திட்டங்களில் ஈடுபட்டதற்குப் பிறகும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றால், இதைப் பழிவாங்குவது என்று சொல்வதா ?

நேற்றுப் பேசிய மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் மணி என்பவரை பழிவாங்கி விட்டார்கள் என்று சொன்னார்கள். என்ன என்று விசாரித்ததில் அவர் பதவி உயர்வு பெற்றுக் கொண்டு போய்விட்டார் என்று தெரிகிறது. இதுவா பழிவாங்கும் போக்கு? ஆனால் 1960–62-ல் இவர்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு இன்னும் சரியான சீனியாரிட்டிகூட கிடைக்க வில்லை. ஆனால் இப்பொழுது திரும்ப வேலைக்கு எடுத்துக்கொண்டது மட்டுமல்ல, பதவி உயர்வும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சதித் திட்டங்களை அடக்கப் போனால் இரும்புக் கரம் என்று சொன்னார்கள். நாச வேலைகளை அடக்க இரும்புக் கரங்கள்தான் தேவை. எங்களுடைய கரங்கள் வேண்டுமானால் இரும்பாக இருக்கலாம் அதுவும் நாச வேலைகளைக் காண்கின்ற பொழுது. ஆனால் இத்தகைய நாசவேலைகளில் ஈடுபடுகிற உங்கள் இதயமே இருகிப்போன இரும்பு என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் பேசியபொழுது கூறினார்கள். எஸ். இ. கிருஷ்ணன் நோட்டீஸ் ஒட்டியிருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். எஸ். இ. கிருஷ்ணன் வலது கம்யூனிஸ்ட் கட்சி சங்கத்தைச் சேர்ந்தவர், அந்தச் சங்கத்தோடு தி. மு. க. சங்கமும் இணைந்து செய்தார்கள். இதை உணர்ந்த அவர்கள் அவர் ஏதோ மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் சங்கத்தைச் சேர்ந்தவர் போலவும், ஒன்றும் தெரியாதவர் போலவும் பேசுகிறார்கள். எஸ். இ. கிருஷ்ணன் எந்த சங்கத்தின் தலைவர் என்பது தெரியுமா?

திரு. எஸ். இராமச்சந்திரன் : நான் சொன்னது எஸ்.இ.டி.இ. சூப்பிரண்டென்டெண்டிங் என்ஜினியர் (டெக்னிக்கல் அண்ட் எலக்ட்ரிகல்) ஆபீஸிலே ஒட்டப்பட்டது என்றுதான் சொன்னேன்.





எஸ். சி. கிருஷ்ணன் என்று சொல்லவில்லை. ஆனால் எஸ். சி. கிருஷ்ணனுக்கு போட்டியாக இருக்கிற ஜானகிராமன் என்பவர்—உறுப்பினர்களுக்குத் தெரிந்தவர்—நடத்துகின்ற தொழிற்சங்க வாதிதான். அத்தகைய நோட்டீஸ்களை ஒட்டினார்கள் என்பது மட்டுமல்ல; அவரே ஒவ்வொரு அலுவலகமாகச் சென்று, அலுவலக நேரத்தில் சென்று ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது, போராட்டத்திலே ஈடுபட வேண்டுமென்று பிரச்சாரம் செய்தார். அந்த அளவிற்கு இந்த ஆட்சியில் தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970–71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்திலே சமீபத்திலே, விவசாய பம்பு செட்டுகளுக்காக 4 இலட்சத்து 71 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் இங்கு எடுத்துப் பேசப்பட்டது. அதேநேரத்தில், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 2 இலட்சம் வரைதான் கொடுக்கப்பட்டது, நாங்கள் வந்து அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்று கூறப்பட்டது. இருக்கலாம். ஆனால், பம்பு செட்டுகள் அதிகமாகக் கொடுத்திருக்கிற அதே நேரத்தில், விவசாய மக்களுக்கு அந்தப் பம்பு செட்டுகள் கிடைக்க அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதையும், இன்னும் அந்தத் துன்பங்கள் நீங்கவில்லை என்பதையும் நாம் ஓரளவிற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் கனெக்ஷன் கேட்கும் காலத்தில், அதற்குண்டான பம்புகள் இல்லை, போஸ்டுகள் இல்லை, மீட்டர் இல்லை, ஒயர்கள் இல்லை என்றெல்லாம் சொல்லப்பட்டு, பல மாதக்கணக்கில், ஏன் ஆண்டுக்கணக்காக இழுத்தடிக்கப்படுகிறார்கள். இன்னும் அது கிடைப்பதில் பலவிதமான லஞ்சமும், ஊழலும் நிறைந்திருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் தொழிலாளர்களின் நிலைமைகளைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். மின்சார ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப கிட்டத்தட்ட 70,000 தொழிலாளர்களுக்கு, அதிகமான ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது என்று பேசப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் இந்த ஊதிய உயர்வு தமிழகத்தில் இருக்கும் எல்லா நகரசபைகளிலும் வேலை செய்பவர்களுக்கும், பொருந்தும் என்று கூறப்பட்டிருந்தும், மதுரை, கோவை, பொள்ளாச்சி, தஞ்சாவூர், கரூர் ஆகிய ஐந்து நகரங்களில் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்பவர்களுக்கு மட்டும் ஏன் இந்த ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன். இடைக்கால நிவாரணமாக மதுரை நகரத்திலிருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், பொள்ளாச்சி, கரூர், கோவை, தஞ்சாவூர் ஆகிய 4 நகரங்களிலும் வேலை பார்க்கும் கூலித் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1970 ஆகஸ்ட் 28

மேலும் இன்சினியர்களுக்கு இருக்கும் வேலைப்பளுவைப்பற்றியும் கூற விரும்புகிறேன். 1964-ம் ஆண்டில் யுத்த காலத்தில், தேசீய நலனுக்காக ஏற்பட்ட அந்த வேலைப்பளு 1970-ம் ஆண்டு வரை தொடர்ந்து நீடித்துக்கொண்டு வருவதைப் பார்க்க வேண்டும். ஆகவே, 10—3—1970-ம் தேதி இந்த வேலைப்பளு வேண்டாமென்று நிறுத்தப்பட்டு, இனிமேல் சாதாரண வேலையைச் செய்யலாம் என்று ஒப்பந்தம் ஏற்பட்டும்கூட, 5½ மாதகாலமாகியும்கூட இன்னும் வேலைப்பளு நீடிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். எனவே. இந்த வேலைப்பளுவை நீக்கி, ஏற்கனவே பார்த்து வந்த வேலைகளைச் செய்வதற்கு வகை செய்ய வேண்டும். தொழிலாளர்களிடமும், இன்சினியர்களிடமும், மற்றுமுள்ள சிப்பந்திகளிடமும், அவர்களின் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்று கோரும் அதே நேரத்தில், அவர்கள் கோரக்கூடிய நியாயமான உரிமைகளையும் வழங்க வேண்டும். அதில் தவறு இருக்கக்கூடாது என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, பல இடங்களிலே வாரியத்தின் கீழேயிருக்கும் டிவிஷன்களிலேயெல்லாம் பலவிதமான குறைபாடுகளும், இலஞ்ச ஊழலும் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். மதுரையை அடுத்த பசுமலையில், ஒரு ஸ்டோர் சூப்பிரண்டெண்டின் மேலிருக்கும் குற்றச்சாட்டுகள் கணக்கிலடங்காதவை. அதையெல்லாம் பற்றி இப்பொழுது பேசிக் கொண்டிருந்தால் எனக்குக் கிடைத்திருக்கும் நேரம் போதாது. அந்த ரிப்போர்ட்டை அமைச்சரவர்களிடம் கொடுக்கிறேன். அதன் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன். ஆனால், குறிப்பாக சில விஷயங்களைப்பற்றிச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த சூப்பிரண்டெண்டின் பெயர் என். காயாம்பூ என்பது. அவர் ஸ்டோர் சூப்பிரண்டெண்டாக இருந்து கொண்டு, டிஸ்டிரிபூஷன் ஆஃப் வாக்ஸ், சீனிவாசா இண்டஸ்ட்டிரீஸ், தேனி ஆகிய கம்பெனிகளோடும், அக்ரிகல்சரல் பார்ட்ஸ், மதுரை பாண்டியன் இண்டஸ்ட்ரீஸ் ஆகியவற்றோடும் தொடர்புகொண்டு, அதன்மூலம் லஞ்ச ஊழல் நடைபெற்றிருக்கிறது. மேலும் முறையில்லாத முறையில் வாரியத்தினுடைய ஜீப்புகள், லாரிகள் ஆகியவைகளைப் பயன்படுத்தி தவறான முறையிலே, பில் போட்டு, சம்பாதித்தது பற்றியும் பெரிய அளவிலே புகார் கொடுக் கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்றால், பல ஆண்டுகளாக, பிரிட்டிஷ் சர்க்கார் காலத்திலேயிருந்து............

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒரு சிறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறும் குற்றச் சாட்டுகளை நான் மதிக்கிறேன். ஏற்கனவே பேசப்பட்ட குற்றச் சாட்டுகள் அத்தனையும் எனக்கு வந்திருக்கின்றன. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நான் கடைசியிலே பேசும்போது கூறலாம் என்று கருதுகிறேன்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: இவைகள் எல்லாம் வந் திருக்கின்றன. அவற்றின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் கூறிக்கொள்[illegible]றேன்.



1970 ஆகஸ்ட் 28] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

அதேபோல், சமீபத்திலே எண்ணூரிலே புதிய அனல் மின்சார நிலையம் முதல் கட்டமாகத் துவங்கிவிட்டது என்பதைக் கேள்விப் படும்பொழுது நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதே நேரத்தில் அந்த நிலையத்திற்காக எவ்வளவு பேர் உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் மிகவும் துக்ககரமான நிலை ஏற்படும். செக் நாட்டு இன்ஜினியர் உள் பட 15 பேர், அங்கிருக்கும் எஸ்.ஈ.-யின் கவனக்குறைவின் கார[illegible]மாக உயிர் நீத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது மிகவும் துக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த நிலையத்தில் 15 பேர்கள் உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த அளவிற்கு அங்கு பாதுகாப்பும், முன்னேற்பாடும் செய்யாமல் இருந்திருக்கிறது. அதற்குத் தலைமையாக இரண்டு எஸ்.ஈ.-க்கள் இருக்கிறார்கள். அதற்குப் பொறுப்பானவர் ரஷித் அகமத் என்பவர் பாதுகாப்பு முன்னேற்பாடுகளைக் கவனிக்காமல் விட்டதன் காரண மாக, செக் நாட்டு இன்ஜினியர் உட்பட 15 பேர்கள் மரணம் அடையக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இது சம்பந்த மாக பகிரங்கமாக விசாரணை நடத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அவர்மீது இன்னும் பல குற்றச்சாட்டுகளைப் பல உறுப்பினர்கள் கூறியிருக் கிறார்கள். எனவே, அவர்மீது விசாரணை செய்து உடனடியாக அவர் நீக்கப்பட வேண்டுமென்பதையும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னும் உள்ள குறைபாடுகள் சிலவற்றைப்பற்றிக் கூற விரும்புகிறேன். பழி வாங்குதல் என்ற முறை, சமீபத்தில் நடந்த போராட்டங்களுக்குப் பிறகு அதிகரித்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சின்னமனூர் என்ற ஊரில் ஒரு மின்சாரத் தொழிலாளி இருந்தார். அவருடைய மனைவி மதுரை நகரத்திலே வேலை பார்த்து வருகிறார். அவர் மனைவியுடன் வாழ வேண்டு மென்பதற்காக, பல மாதங்களாக, ஏன் பல ஆண்டுகளாகக் கூட மாற்றுதல் கேட்டு, சமீபத்தில்தான் அந்த மாற்றம் கிடைத்தது. ஆனால் அந்த மாற்றம் கிடைத்தும், அதன் பலனை முழுக்க அனுபவிக்க முடியாத நிலையிலே, சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் ஒரு கட்சிக்கு வேலை செய்தார் என்ற குற்றத்தைச் சாட்டி, அவரை மறுபடியும் சின்னமனூருக்கே மாற்றியிருக்கிறார்கள். பல ஆண்டு களாகக் கேட்டு கடைசியில் கிடைத்தும்கூட, அதனை அனுபவிக்க முடியாமல் மறுபடியும் சின்னமனூருக்கே மாற்றப்பட்டிருக்கிறார் என்று சொன்னால் இது பழி வாங்கும் நோக்கத்தினால் செய்யப் பட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, பேசின்பிரிட்ஜில் வேலை பார்ப்பவர்களில் கோபால் என்று ஒருவர் இருக்கிறார். அவர் ஒர்க்ஸ் கமிட்டியில் இருக்கிறார். அங்கிருக்கும் மெடிகல் ஆபீசரிடம் லீவு கோரிச் செல்லும்பொழுது தொழிலாளர்களிடம் மூன்று ரூபாய், ஐந்து ரூபாய் என்று வாங்குகிறார். இது பற்றி அவர் ஒர்க்கிங் கமிட்டியில் இருப்பதால், தொழிலாளிகளின் குறைகளை அந்தக் கமிட்டியில் கூற

வேண்டுமென்பதற்காக, இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்று சொல்லக்கூடிய நேரத்தில், அந்த ஓர்க்ஸ் கமிட்டித் தலைவர் அதை அஜெண்டாவிலும் சேர்க்காமல், விஷயத்தை எடுத்துக் கொள்ளாமலும் நிராகரித்துவிட்டார்கள். அப்படி நிராகரிக்கப் பட்டுவிட்ட விஷயத்தை, 7 மாதங்களுக்குப் பிறகு, தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்ற காலத்திலே இம்மாதிரியாக 7 மாதங்களுக்கு முன்னால், ஓர்க்ஸ் கமிட்டியில் மெடிகல் ஆபீசரைப் பற்றிப் பேசியதற்குக் காரணம் காட்டு, ஏன் உன் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று, 7 மாதங்களுக்கு முன் நடந்த காரியத்திற்காக, ஷோ காஸ் நோட்டிசும், சார்ஜ் ஷீட்டும் வருகின்றன. இப்படி 7 மாதங்களுக்குப் பிறகு வருகிறது என்றால் அது பழி வாங்கும் நடவடிக்கையாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, வேறு என்னவாக இருக்க முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இம் மாதிரியான நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டுமென்பதற்காக நான் இவைகளைக் கூறுகிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு சங்கமும் தனியாக ஒரு போர்டு எழுதி வைத்துக்கொள்ள, கூட்டம் நடத்த உரிமை கிடைத்திருக்கிறது என்று சட்டமன்ற மெம்பர்கள் பேசினார்கள். ஆனால் அதே நேரத்தில் சில தொழிலாளர்கள் உண்மையாக வேலை செய்தாலும் டீபுரோமோஷன்தான் கிடைக்கிறது என்று போர்டு எழுதி வைத்த காரணத்தால் இப்படிப்பட்ட அங்கிருக்கும் அதிகாரியிடமிருந்து போர்டு எழுதி வைத்தது தவறு, உன்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சங்கச் செயலாளருக்கு ஷோ காஸ் நோட்டீஸ் வருகிறது.

ஒரு பக்கம் ஜனநாயகத்தைத் தாராளமாக வழங்குவதாகப் பேசப்படுகிறது. இன்னொரு பக்கத்தில் சங்கம் போர்டு எழுதி வைத்தால் சங்கத்தின் காரியதரிசிக்கு "ஷோ காஸ்" நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. இதற்கு என்ன காரணம்? மாற்றுச் சங்கத்தில் இருக்கக்கூடிய, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று கருதப்படுகின்றவர்களுக்கு ஷோ காஸ் நோட்டீஸ், வேறு இடத்திற்கு மாற்றம் என்ற வகையில் பட்சபாதமாகப் பழிவாங்கும் தன்மையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் ஆங்காங்கு இருக்கும் அதிகாரிகள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்களுக்கு அதிகச் சலுகைகள் செய்வது போல் பாவனை செய்து அவர்கள் தங்களுடைய ஊழல்களை மறைத்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த முறையில் நடவடிக்கை எடுப்பதோடு பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நல்ல முறையில் சேவை செய்யும் வகையில் வாரியம் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம் சண்முகம்: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1969–70-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும் ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.





தமிழ்நாடு அரசு விவசாய உற்பத்தியை தமிழ்நாட்டில் பெருக்க வேண்டுமென்ற குறிக்கோளில் முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த பசுமைப் புரட்சியின் கீழ் அத்தியாவசியமான நீர்ப்பாசனத் திட்டங்களை மின்சார வாரியத்தின் மூலமாக விரிவுபடுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியில் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு மின்சார வாரியத்திற்காகச் செலவழிக்கப்பட்டு வருகிறது. மின்சார உற்பத்திப் பெருக்கத்திற்காக 13 நீர் மின் நிலையங்களும், 3 அனல் மின் நிலையங்களும் இன்று பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதைத் தவிர தனியார் துறையிலும் இரண்டொரு மின் உற்பத்தி நிலையங்கள் இருந்து அவர்கள் மின்சாரத்தை வழங்கி வருகிறார்கள். அவ்வளவு இருந்தும் கூட இன்று தமிழகத்தில் மின் சார உற்பத்தி பற்றாக் குறையாகத்தான் இருந்து வருகிறது. தற்போது தமிழகத்திற்குத் தேவைப்படும் மின்சாரத்தின் அளவு 550 கோடி யூனிட், இதில் நாம் உற்பத்தி செய்வது 300 கோடி யூனிட் தான். மேற்கொண்டு 250 கோடி யூனிட் மின்சாரத்தை கேரளத்திலிருந்தும், மைசூரிலிருந்தும், நெய்வேலி கார்ப்பரேஷனிடமிருந்து வாங்குகிறோம். மைசூர், கேரளாவில் இருந்து யூனிட்டுக்கு 5 பைசா விலை கொடுத்தும், நெய்வேலி கார்ப்பரேஷனிடமிருந்து 5.9 பைசா விலை கொடுத்தும் வாங்கி விவசாயத்திற்கும், தொழிலுக்கும் கொடுக்கிறோம். இந்த அளவு மின்சாரத்தை நாம் பயன்படுத்துகிறபோது சுமார் 90 கோடி யூனிட்டுக்கு மேல் இழப்பு ஏற்படுகிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். பல மைல் தூரத்திற்கு மின்சாரம் வழங்கப்படுகின்ற நிலையில், ஒரு லட்சம் கிலோ மீட்டர் பரப்பளவுக்கு லோ டென்ஷன் லைன் மூலமாக வழங்கப்படுவதில் 90 கோடி யூனிட் இழப்பு ஏற்படுகிறது. மற்ற மாநிலங்களோடு பார்க்கும்போது தமிழ்நாட்டில் 17 சதவிகிதந்தான் இந்த மாதிரி இழப்பு ஏற்படுகிறது என்றாலும் இந்த இழைப்பையும் குறைப்பதற்கான முயற்சிகளில் மின்சார வாரியம் ஈடுபட வேண்டும். நம்முடைய மாநிலத்தில் இழப்பு குறைவாக இருக்க வேண்டுமென்று கண்காணித்து வரும் மின்சார வாரியத்தையும், மின்சார வாரியத் தலைவரையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மின்சார உற்பத்திச் செலவைப் பார்க்கும்போது யூனிட்டுக்கு 16 பைசா அடக்கமாகிறது. யூனிட்டுக்கு 16 பைசா அளவில் செலவிட்டு விவசாய காரியத்திற்குக் கொடுக்கும்போது $8\frac{1}{4}$ பைசாவுக்கு கொடுக்கப்பட்டு வந்தது. அதன்காரணமாக தமிழக அரசு ஆண்டு ஒன்றுக்கு $7\frac{3}{4}$ கோடி ரூபாய் நஷ்டத்தை அடைந்து வந்தது. விவசாயப் பெருக்கத்தை முன்னிட்டு அரசு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் மின்சாரத்தைக் கொடுத்து வந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. செலவாகும் 550 கோடி யூனிட் மின்சாரத்தில் 100 கோடி யூனிட் விவசாய காரியங்களுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, நஷ்டத்தை ஓரளவு ஈடுகட்டும் வகையில் $8\frac{1}{4}$ பைசாவிலிருந்து 10 பைசாவாக 1—1—1970-ல் உயர்த்தப்பட்டது. அது ஏதோ விவசாயிகளுக்கு கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது என்ற முறையில் எதிர்க்கட்சியினர் வதந்தியாகக் கிளப்பினார்கள். கோவையில் விவசாயச் சங்கம் என்று நிறுவி பத்து பைசாவாகக் கூட்டியதைக்

குறைக்க வேண்டுமென்று புரட்சிகரமான இயக்கத்தை நடத்தியதை நாம் அறிவோம். 16 பைசா உற்பத்திச் செலவு ஆகக் கூடிய நிலையில் $8\frac{1}{4}$ பைசா என்று அரசு கொடுத்து பல கோடி ரூபாய்கள் நஷ்டத்தைப் பெற்று வந்திருக்கிறது என்பதை உணராது ஒரு பைசா உயர்வுக்காக ஒரு போராட்ட இயக்கத்தை ஏற்படுத்தியதானது வருந்தக் கூடிய காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் இந்த உண்மை நிலையை உணர்ந்து யூனிட் ஒன்றுக்கு பத்து காசு கொடுப்பது காரணமாக தாங்கள் கஷ்டம் அடைவதாக எந்தவிடத்திலும் சொன்னதாகத் தெரியவில்லை. இன்றையதினம் இருந்துவரும் பல புரட்சிகரமான திட்டங்களில் ஒன்றாக விவசாயிகளையும் பயன்படுத்திக் கொள்ளும் அளவில் இவர்களைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தூண்டுதலின் பேரில்தான் விவசாயிகள் இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்களே தவிர பத்து காசு என்பதை $8\frac{1}{4}$ காசாக பழையபடி குறைக்க வேண்டுமென்று நடந்த கிளர்ச்சியை உண்மையானதொரு கிளர்ச்சியாக நாம் எடுத்துக் கொள்வதற்கில்லை. இருப்பினும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பத்து காசு என்று உயர்த்தப்பட்டதை ஒன்பது காசாக குறைத்துக் கொடுத்திருப்பதற்காக, தமிழ் நாடு அரசு மேலும் நஷ்டத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில், தமிழக அரசைப் பாராட்டாமல் இருப்பதற்கில்லை.

மின்சார வாரியம் மின்சாரத்தை சரளமாக வழங்குவதில்லை என்று சில உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். இன்றைய தினம் மின்சார வாரியம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் ஒரு திட்டத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார பம்ப் செட்கள் அமைப்பதற்காக நில வள வங்கிகள் மூலம் இன்று கடன்கள் கொடுக்கப்பட்டு அப்படி நில வள வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மின்சார பம்ப் செட்ஸ் அமைத்துக் கொள்ள முன்வருகிற விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதில் ஒரு உத்தரவாதம் அளிக்கும் ஒரு திட்டத்தை வாரியம் இன்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்று அவர்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதில் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக ஒவ்வொரு விவசாயியும் மூவாயிரம் ரூபாய் டெப்பாஸிட் கட்ட வேண்டுமென்ற முறையில் அதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் விவசாய பெருங்குடி மக்கள். அந்தத் தொகை விவசாயிகள் தங்கள் சொத்து மதிப்பீட்டின் பேரில் பெறவேண்டியதில்லை. மின்சார வாரியத்தின் உத்தரவாதத்தின் பேரில், வட்டி எல்லாம் சேர்ந்து திருப்பிச் செலுத்தக் கூடிய விதத்தில் கடன் கொடுக்கப்படும் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. மின்சார வாரியத்தின் தலைவர் அவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு பம்ப் செட்ஸ¨க்கு கனெக்ஷன் கொடுப்பதில் தீவிர கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதத்திற்கும் எவ்வளவு இணைப்புகள் கொடுக்க முடியும் என்று பார்த்து காலதாமதம் ஏற்படாமல் அவ்விதம் மின் இணைப்புகள் கொடுப்பதற்கு



நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஆக இப்போது பம்ப் செட்களுக்கு கனெக்ஷன் கிடைப்பதற்காக விவசாயிகள் காத்து நிற்கத் தேவையில்லை. இன்று தமிழக அரசு மின்சார வாரியத்தின் ஒத்துழைப்போடு எதிர்காலத்தில் விவசாயிகள் தங்கள் பம்ப் செட்களுக்குக் கனெக்ஷன் கிடைப்பதற்காகக் காத்து நிற்கத் தேவையில்லை என்ற அளவில் தீவிரமாக செயலாற்றி வருகிறது. அப்படி மின்சார வாரியம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளுக்காக அவர்களைப் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. ஆர். கருப்பையா</u>: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டுக்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கைமீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின் இணைப்புகள் கொடுப்பது பெருகிக்கொண்டு வந்தாலும் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு மின் இணைப்புகள் கொடுப்பதில் மிக மிக மெதுவாகக் காரியங்கள் நடந்து வருகின்றன. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்து, குறிப்பாக அரியலூர் தாலுகாவை எடுத்துக் கொண்டால் மின் இணைப்புக் கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. இன்றைய நிலையில் விவசாயிகளுக்கு விவசாயத்திற்காக மின் இணைப்பு கொடுக்கப் பட்டால்தான் ஆழமாக உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்து விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும். இந்த நிலையில் விவசாயத்திற்காக மின் இணைப்புகள் கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவது என்பது வருந்தத்தக்கது. 1971-ம் ஆண்டுக்குள் தமிழகம் முழுமையும் மின் இணைப்புகள் கொடுக்கப்படும் என்று கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பு விடுத்தார்கள். ஆனால் இன்றைய தினம் அப்படிப்பட்டதொரு அறிவிப்பைக் காணோம். 1972-க்குள்ளாகவாவது எல்லா இடங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படுமா அல்லது கொடுக்கப்படாதா என்ற ஐயப்பாடு இன்று கிராம மக்களிடம் எழுந்துள்ளது. ஆக இம்மாதிரி மலிவான விளம்பரங்களை வெளியிடுவது சரியல்ல. இந்த அறிக்கையைப் பார்த்தால் அது ஏட்டுச் சுரக்காய் போல் இருக்கிறதே தவிர விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மின்சார வசதி விரைவில் கிடைக்கக் கூடிய ஒரு நிலைமை இல்லை. குறிப்பாக, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு மின்சார நிறுவனங்கள் உள்ளன. ஒன்று அரசாங்க நிறுவனம், மற்றொன்று தென் மதராஸ் எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன். இந்த தென் மதராஸ் எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன் மின் இணைப்புகள் கொடுப்பதில் எந்தவிதமான அக்கறையும் காட்டாமல் இருக்கிறார்கள். அதனால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது மின் இணைப்புக் கிடைப்பதற்கு. ஆகவே, அந்தக் கார்ப்பரேஷனை அரசு எடுத்துக்கொண்டால்தான் அந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்பு விரைவில் கொடுக்க முடியும். தமிழக சர்க்கார் வாரியம் ஒரு பக்கம் அந்த கார்ப்பரேஷன் ஒரு பக்கம் என்றிருப்பதால் வேலைகள் நடைபெற மிகுந்த காலதாமதம் ஆகிறது. ஆக அந்தப் பகுதி

[திரு. ஆர். கருப்பையா] [1970 ஆகஸ்ட் 28

மக்கள் திரிசங்குசொர்க்க நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒன்று அந்தக் கார்ப்பரேஷனை உடனடியாக சர்க்கார் ஏற்றெடுத்து நடத்த வேண்டும் அல்லது அவர்களுக்குப் போதிய பணத்தையாவது கொடுத்து அதை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

அதோடு கூட தமிழகத்தின் மையப்பகுதியில் திருச்சி இருப்பதால், தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் திருச்சி இருப்பதால் திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு விரைவில் மின் இணைப்புகள் கொடுக்கத்தக்க விதத்தில் மின்சார வாரியத்தின் தலைமை அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் சென்னையில் உள்ள நெருக்கடியும் ஓரளவிற்குக் குறையும். அதோடு திருச்சியைச் சுற்றியுள்ள மதுரை போன்ற மாவட்டங்களுக்கும் மின் இணைப்புகள் விரைவில் கிடைக்க ஏதுவாகும்.

அடுத்து, அரியலூரைப் பொறுத்தமட்டில் ஒரு விஷயத்தைக் குறிப்பாகக் கூற விரும்புகிறேன். மோட்டார்கள் வாங்கி மூன்று வருடங்கள் ஆனபோதிலும் கூட அவைகளுக்கு இன்னும் மின் இணைப்புத் தரப்படவில்லை. சென்னிவனம், ராயம்பலம், ஆதிகுடிகாடு போன்ற கிராமங்களில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிறைய மோட்டார்கள் வாங்கியும் இன்னும் மின் இணைப்புத் தரப்படவில்லை. அவர்கள் ஆண்டுதோறும் கலெக்டரிடம் சென்று மின் இணைப்பு தரவில்லை, ஆகவே, கடனைத் திருப்பிக் கட்ட வாய்தா தாருங்கள் என்று எம்.எல்.ஏ.-க்கள் மூலம் கேட்க வேண்டிய நிலை இருக்கிறது. தாமரைக் குளம் என்ற ஊரில் மூன்றாண்டுகளுக்கு முன்னர் எஸ்டிமேட் போட்டு அனுப்பிவிட்டார்கள். இன்னும் அங்கு கம்பங்கள் வந்து சேரவில்லை, இன்ஸுலேட்டர்கள் வரவில்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. சாதாரணக் கம்பங்கள் போடுகிற அளவிற்குக் கூட, சாதாரண சிமெண்ட் கம்பங்கள் போடுகிற அளவிற்குக் கூட நம் வாரியத்திற்குத் திறமையில்லையா என்று மக்கள் கேட்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு, மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்கு விளக்குகளுக்கு மின்சாரம் கொடுப்பதோடு விவசாயத்திற்காகவும் மின் இணைப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின் இணைப்புக் கொடுப்பதில் இப்போது பத்து பைசா என்பதை ஒன்பது பைசாவாகக் குறைத்திருப்பதைப் பாராட்டத்தான் வேண்டும். இருந்தாலும், மூன்று நான்கு பேர்கள் பழிவாங்கப்பட்ட பிறகுதான் அப்படிக் குறைப்பதற்கு அரசு முன்வர வேண்டுமா என்று கேட்கத் தோன்றுகிறது. தொழில் நிறுவனங்கள், இரவு நேரங்களில் மின்சாரத்தை உபயோகிக்கும் தொழில் நிறுவனங்களுக்கு, அனல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்குச் சலுகைகள் காட்டுகின்றன இந்த அரசு . விவசாயிகளும் இரவில்தான் தண்ணீர் பாய்ச்ச மின்சாரத்தை பயன்படுத்துகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இந்த ஒன்பது பைசா என்றிருப்பதைக் குறைத்துக்கொடுக்க அரசு முன்வரவேண்டும். ஏனெனில் விவசாயப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு எட்டு பைசா என்று குறைத்துக் கொடுப்பதால் அரசுக்கு ஒன்றும் பெரிய நஷ்டம் வந்துவிடாது. எவ்வளவோ காரியங்களுக்காக அரசாங்கம் ஏராளமாகப் பணத்தைச் செலவு செய்கிறது. ஆனால் விவசாயிகளுக்காக செலவு செய்யப்படும் தொகை குறைவுதான். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மின் இணைப்புக் கொடுப்பதில் தீவிரம் காட்டப்பட்டு வருவதாக அறிக்கைகளில் பார்க்கிறோம். இந்த அறிக்கையைப் பார்த்தால் கிராமங்களுக்கு மின்வசதி செய்யப்பட்டிருக்கிற எண்ணிக்கையைப் பார்த்தால் 1951-ல் 1,813, 1956-ல் 3,543, 1961-ல் 10,760, 1966-ல் 22,137 என்பதைப் பார்க்கும்போது—அந்த ரேஷியோவைப் பார்க்கும்போது சென்ற அரசு கொடுத்து வந்ததைவிட இந்த அரசு மின் இணைப்புக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காணமுடிகிறது. ரேஷியோபடி பார்த்தால் முன்பு 22,000 கொடுத்திருந்தால் இப்போது 44,000 ஆவது கொடுத்திருக்கவேண்டும். ஆக மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது, கொடுக்கப்படுகிற எண்ணிக்கையும் அதன்படி குறைந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறேன்.



1970 ஆகஸ்ட் 28] [திரு. ஆர். கருப்பையா]

அதோடு, மின் இணைப்பு அளிக்கும் விஷயத்தில் கூட 1956-ல் 32,440-ம் 1961-ல் 1,17,697-ம் ஆக இருக்கிறது. இப்படிப் பார்க்கிற போது 1966-லே இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரத்துச் சொச்சம் இருக்கும்போது 1970-ம் ஆண்டிலே இருக்கவேண்டுமானால் 50 லட்சத்தை மிஞ்சி இருக்க வேண்டும். இந்த நிலைமையைப் பார்க்கும் போது மின்சார இணைப்புகளைப் பொறுத்தவரையில் இந்த நிறுவனம் எவ்வளவு சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறது என்று ஆளும் கட்சி உறுப்பினர் சொல்வதும், விளம்பரத்திற்காக இருந்தாலும், உண்மையான புள்ளி விவரங்களோடு பார்த்தால் குறைவாகவே இருக்கிறது. அதோடு, இன்சுலேடர் பொறுத்தவரையில், டபிள்யூ.எஸ். இன்சுலேடர் கம்பெனிக்கு மின்சார நிறுவனத்திலிருந்து இன்சுலேடர் வேண்டுமென்று கேட்டு இருந்தது. அதற்கு வேண்டிய இன்சுலேடர் நம்முடைய சர்க்காருடைய வாரியத்திலிருந்து பல லட்சக்கணக்கான ரூபாய்க்குக் கடனாகப் பெற்று இருக்கிறது. கடனாகக் கொடுப்பதற்கான பணத்தை உடனடியாகத் திருப்பித் தரவில்லை. உண்மையாக அரசாங்கப் பணம் விரயம் ஆகிறது என்ற குற்றச் சாட்டைச் சொல்கிறேன். இந்த மின்சாரத் துறையில் இருக்கும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நாள் கூலி, தினக்கூலி போன்ற நிலைகளில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேலை கொடுக்க வேண்டும்.

இன்னும் பொதுவாக, மின் உற்பத்தி நிலையங்களில் பார்த்தால் மிகவும் கால தாமதமான முறையில் வேலை நடக்கிறது. உதாரணமாக, கோதையாறு–1, கோதையாறு–2 திட்டங்களில் வேலை மிகவும் தாமதமாக இருக்கிறது. காரணம் என்ன என்று கேட்டதற்குச் சொல்கிறார்கள், இந்த வேலை முடிந்தால் வேறு வேலை இல்லை.

காலதாமதம் செய்யும் நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது என்று சொல்கிறார்கள். இது ஏதோ விளையாட்டாகச் சொல்வது இல்லை. இது கேட்ட உண்மையாகும். இது போன்ற நிலைமை நாட்டில் பெருத்து விடக்கூடாது. ஒரு வேலை செய்து முடிந்தால் அடுத்த வேலை எங்கே இருக்கிறது என்று தேடவேண்டும். அந்த முறையில் மின்சார நிறுவனம் சுறுசுறுப்பாகப் பணியாற்ற வேண்டும். கிராமங்களில் மின் இணைப்புத் தருவதற்காக விரைவாகப் பணியாற்ற வேண்டும். விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தருவதில் முதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* <u>திரு. நா. கிருட்டிணன்</u> : பேரவைத் தலைவரவர்களே, 1970–71 ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீதும், 1969–70 துணை நிதி நிலை அறிக்கை மீதும் நான் என் கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றைய மனித வாழ்க்கையில் உண்ண உணவும், உடுக்க உடையும், உறைய இடமும் எந்த அளவிற்கு அவசியமோ அந்த அளவுக்கு மின்சாரம் மனிதனுக்குத் தேவை என்ற அளவுக்கு இப்போது மாற்றம் கண்டு இருக்கிறோம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அது ஆடம்பரத் தேவை என்ற நிலை மாறி இப்போது அத்யாவசியத் தேவை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அத்யாவசியத் தேவையை மக்களுக்கு அளிக்கிற வகையில் தமிழ்நாடு அரசு இந்த நடப்பு ஆண்டில் மாநிலத் திட்ட நிதியில் மூன்றில் ஒரு பங்கை ஒதுக்கி இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்த மின்சார வாரியத்தைக் குறை கூறிக்கொண்டு பேசிக்கொண்டு இருக்கிற நேரத்தில் எனக்கு ஒரு ஐயம் ஏற்பட்டது. கடந்த ஆண்டில் நம்முடைய வாரியம் சென்ற ஆண்டின் நிதி நிலை அறிக்கை மீது கூறப்பட்ட குறைகளின் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இந்த அவையிலும், மேலவையிலும் சேர்ந்து சொல்லப்பட்ட 204 குறைகளில் இந்த அவையிலேயுள்ள அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய 104 குறைகளுக்குத் தற்போது பரிகாரம் காணப்பட்டு இருக்கிறது. இவ்வாறிருந்தும், எதிர்க்கட்சியினர் இவ்வாரியத்தைக் குறைகூறுவது வியப்பைத் தருகிறது.

அவ்வாறு கூறப்படுகிற குறைகளும் எந்த அளவு ஆதாரமற்றவை என்பதற்கு உதாரணமாக ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். கிராமங்களில் மின் இணைப்புத் தருகிற நேரத்தில் ஊராட்சி மன்றத்தில் உள்ளவர்களுக்கு வேண்டியவர்கள் வீட்டின் எதிரில் விளக்குக் கம்பங்கள் போடுவதாகச் சொன்னார்கள். இது முழுக்க முழுக்க ஒப்புக் கொள்ள முடியாத குற்றச்சாட்டு ஆகும். எந்த ஊரிலே பார்த்தாலும் விளக்குக் கம்பங்கள் ஒரே சீரான இடைவெளியில் தான் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி, எந்த அளவுக்கு ஆதாரம் அற்ற குற்றச்சாட்டுகளை எதிர்க் கட்சி நண்பர்கள் சொல்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.





இங்கே காலையில் காங்கிரஸ் கட்சி கொறடா திரு. விநாயகம் அவர்கள் பேசுகிற நேரத்தில் சொன்னார்கள், மேல் மட்ட அதிகாரிகளைப் பொறுத்தவரையில் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள். கீழே இருப்பவர்கள் தான் சரிவர நடந்து கொள்வது இல்லை என்று சொன்னார்கள். பொதுவாழ்வில் குறைந்த அனுபவம் உள்ள நானே எந்த வேலைக்காகச் சென்றாலும், கோட்டப் பொறியாளர்களுக்குக் கீழ் சென்றதில்லை. பழுத்த அனுபவம் உள்ள திரு. விநாயகம் போன்றவர்கள், மேல் அதிகாரிகளிடத்தில் சொல்லி, கீழே உள்ள அதிகாரிகளை நல்ல முறையில் நடக்கச் செய்யலாம். உயர் அதிகாரிகள் சரியாக இருப்பதாக அவரே ஒப்புக்கொண்டு இருக்கிறார் என்ற காரணத்தால் இத்தகைய சிறு குறையைத் திரு. விநாயகம் போன்றவர்கள் பெரிதுபடுத்தி இந்த அவையில் கூறுவது வியப்பாக இருக்கிறது. இப்படிப் பார்க்கிறபோது; இங்கே ஏதோ குறை சொல்லவேண்டுமென்பதற்காகக் குறை சொல்கிறார்களே தவிர, உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், கோடை காலம் தான் மிகவும் கடினமான காலம். விவசாயத்திற்கானாலும் சரி, வீட்டு வசதிக்கானாலும் சரி, மின்சாரம் அதிகம் தேவைப்படும் காலம். இத்தகைய கோடைக்காலங்களில் பல்லாண்டுகளாக மின்சார வெட்டு இருந்து வந்தது. ஆனால் இந்த ஆண்டு மின்சார வெட்டு இல்லாமல் இந்த மின்சார வாரியம் சிறப்பாகப் பணியாற்றி இருப்பதற்காக என் பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்.

இங்கே பேசிய எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தந்து விடுகிறோம் என்று சொன்னார்களே, செய்யமுடியுமா என்று கேட்டார்கள். இந்த அரசாங்கத்தின் கொள்கையைத் தவறாகப் புரிந்து கொண்டு இப்படிப் பேசி இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும் என்ற வகையில் இந்த வாரியம் மிக நன்றாகச் செயலாற்றி வருகிறது. எங்கள் செங்கை மின் திட்டத்தில் கிட்டத்தட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விட்டது. இத் திட்டத்தின் கீழ் எந்த அளவுக்குக் கிராமங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டு இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய காஞ்சீபுரம் தொகுதியைச் சேர்ந்த பரந்தூர் என்ற கிராமத்திலிருந்து ஏறத்தாழ 1 மைல் தூரத்தில் 4 வீடுகளே உள்ள அருந்ததியர்பாளையம் என்ற கிராமம் இருக்கிறது. ஒரு மைல் தொலைவில் உள்ள அப்பகுதிக்கு ஒரே ஒரு விளக்கு போட வேண்டி இருந்தபோதிலும், அதற்குரிய செலவை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அந்தச் சிறிய கிராமத்திற்கும் விளக்கு வசதி செய்து தந்துள்ளது. இதையெல்லாம் பார்க்கிறபோது, இந்த அரசின் கொள்கையை இந்த மின்சார வாரியம் எந்த அளவிற்கு நடைமுறைக்குக் கொண்டுவந்து இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டு பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

[திரு. நா. கிருட்டிணன்] [1970 ஆகஸ்ட் 28

நாங்களெல்லாம் இந்த வாரியத்தில் ஏற்படும் குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பாக மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்திற்கு இவ்வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று கூறினோம், அதற்கிணங்க வாரிய அதிகாரிகள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். எங்கள் செங்கை மின் திட்டத்தைப் பொறுத்தவரை ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டு, மாதந்தோறும் அக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, வழங்கப்படும் ஆலோசனைகள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இன்று பிற்பகல் கூட அக்குழுவின் கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கிற நிலைமை ஏறத்தாழ எல்லா வகையிலும் எல்லாக் கிராமத்திற்கும் மின் இணைப்புகள் கொடுத்தாகிவிட்டது. தாமல் என்ற கிராமப் பகுதியில் 16 பேர்களுக்கு நீரேற்று இயந்திரங்களுக்கு மின் இணைப்பு தரப்படவில்லை என்று என்னிடம் கூறப்பட்டது. அதற்குப் பொறியாளர்களை அணுகிக் கேட்ட போது சொன்னார்கள், டிரான்ஸ்பார்மர் கபாசிடி அதிகம் வேண்டும், அவை பெற்ற பிறகு போடுவோம் என்று சொன்னார்கள், அதன்படி இந்த நிதி நிலை அறிக்கையில் அதற்கென நிதி ஒதுக்கம் செய்து இக்குறையும் நீக்கப்பட்டதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், காஞ்சியில் மேலும் ஒரு 25 எம்.வி.ஏ. டிரான்ஸ்பார்மர் வைக்க இவ்வறிக்கையில் வழிவகை செய்யப்பட்டமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படித் திறமையாக இந்த வாரியம் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியம் மேலும் சிறப்புற செயல்பட நான் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். உயர் மின் அழுத்தக் கம்பிகள், டிரான்ஸ்பார்மர்கள் அமைப்பைச் சீர்படுத்தியாகவேண்டும். எனது தொகுதியில் வேடல் என்ற கிராமத்திற்கு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி நீரேற்று இயந்திரத்திற்கு மின் இணைப்பு வழங்கவேண்டுமென்று மேற்பார்வைப் பொறியாளரை அணுகிக்கேட்டபோது, அதற்குரிய உயர்மின் அழுத்த டிரான்ஸ்பார்மர் செட்டியார்பேட்டையில் இருக்கிறது. அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள வேடல் கிராமத்திற்குக் கம்பிகள் நீட்டிக்கப்படும்போது மின் அழுத்தம் போதிய அளவை விடக் குறைந்துவிடுகிற காரணத்தால் அந்த இணைப்பை தர முடியாமையைத் தெரிவித்தார். இத்தகைய குறையைப் போக்குகிற வகையில், ஒரு மைல் சுற்றளவை மையமாகக் கொண்டு அங்கங்கே நாடு முழுவதும் அத்தகைய உயர்மின் அழுத்த டிரான்ஸ்பார்மர்களை இவ்வாரியத்தினர் அமைத்துத் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் சாதாரணமாக அமைக்கப்படுகின்ற மின்இழை விளக்குகள் சரிவர எரிவதில்லை என்று குறை கூறப்படுகிறது. அந்தக் குறை இருப்பதற்கே காரணம் அங்கே வருகிற மின் அழுத்தம் சீராக இல்லை என்பதுதான். அதற்கு மாறாக மின் அழுத்தத்தையும் சீராக அமைத்து, சாதாரண மின்இழை விளக்குகளுக்குப் பதிலாகக் கிராமங்களில் குழல் விளக்குகளாக அவற்றை



1970 ஆகஸ்ட் 28] [திரு. நா. கிருட்டிணன்]

மாற்றி அமைத்துவிட்டால், இந்தக் குறை எந்தக் காலத்திலும் ஏற்படாது. காரணம், குழல் விளக்குகள் நீண்ட காலம் பழுதடையாமல் பயன் தருகின்றன என்று அதிகாரிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, காஞ்சிபுரம் நகரமானது, நகரில் சிறந்தது காஞ்சி என்று பெயர் பெற்ற நகரமாகும். அந்த நகரத்தில் பார்த்தோமானால், வளர்ந்து வருகிற சமுதாயத்தில், ஒவ்வொரு மின் இணைப்பு கம்பத்திலிருந்தும் ஏறத்தாழ பத்து, பன்னிரண்டு வீடுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. இந்நிலை இச்சிறப்புமிக்க நகரின் எழிலைக் குறைத்து விடுகிறது. இந்த நகரத்தில் நிறைய தேவாலயங்கள், கோவில்கள் இருக்கின்ற காரணத்தினால், ஆண்டு முழுவதும் ஏதேனும் ஒரு கோவிலுக்கு தேர்த் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி தேர்த்திருவிழா நடைபெறுகிற அத்தகைய காலங்களில் அவை வலம் வருகிற வீதிகளில் எல்லாம் நாள் முழுதும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடுகிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்றால், இந்தக் குறையை போக்கவேண்டுமென்றால், மின் இணைப்புக் கம்பிகள் அனைத்தையும் பூமிக்கு அடியில் அமைத்துத்தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் 71,000 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் பல்லாண்டுகள் தற்காலிகமாகவே பணியாற்றி வருகிறார்கள். இந்நிலையில், இந்த வாரியத்திற்கு என்று, ஒவ்வொரு மின் திட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற பணியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், அங்கே வேலை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் மேற்சொன்ன தற்காலிக பணியாளர்களை அமர்த்தி அவர்களுக்கு ஆகின்ற ஊதியச் செலவையும் இவ்வாரியம் ஏற்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆகவே, இக்குறையைப் போக்குகின்ற வகையில், தேவைப்படுகின்ற அளவுக்கு ஏன் மின்சார திட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்ட வேலை ஆட்களினுடைய எண்ணிக்கையை அதிகமாக ஆக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

எழுத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதைப்பற்றி நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஏற்கனவே வாரியத்தில் தாற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டுவருகிற எழுத்தர்கள் இருக்கிறார்கள். தேவைப்படுகின்ற அளவுக்கு எழுத்தர்கள் அமர்த்தப்படுகின்ற நேரத்தில் முதலில் தாற்காலிகமாகப் பணியாற்றுகின்ற அத்தகைய எழுத்தர்களை நிரந்தரமாக அமர்த்திக்கொண்டு, அதற்குப் பின்பு தேவைப்பட்டால் எழுத்தர்களை வெளியிலிருந்து எடுத்துக்கொள்வது என்பது தான் சிறப்புடையதாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியம் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதி ஏற்படுத்தித் தருகிறது. அப்படி ஏற்படுத்தித் தருகிற நேரத்தில், உயர் மட்டத்தில் இருக்கிற மேற்பார்வைப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் ஆகியவர்களுக்கு இன்னமும் குடி

யிருப்பு வசதி ஏற்பாடு செய்யப்படவில்லை. இந்நிலையில் அவர்கள் இப்பொழுது தனியார் வீடுகளில் வாடகைக்கு இருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தக் குறைகளைப் போக்கி அமைக்கின்ற வகையில் இவர்களுக்கும் குடியிருப்பு மனைகள் கட்டித் தரவேண்டும் என்று நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வகைகளிலெல்லாம் சீரிய பணிகளை இந்த வாரியம் நல்ல முறையில் மேற்கொண்டு செயல்படுமேயானால், இதற்கு இணையான வாரியம் இன்று இந்தியாவிலேயே எங்குமில்லை என்ற நிலை மாறி, என்றும் இந்தியாவிலேயே இதற்கு இணையான வாரியம் ஏற்பட முடியாது என்ற நிலையை இந்த வாரியம் அடைந்துவிடும். தமிழக அரசு இத்தகைய சாதனையைச் செய்திருக்கிறது. சொன்னதைச் செய்யும், செய்து முடிக்கும், நாடு முன்னேறும் வகையில் என்பதை கூறிக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

*<u>ஹாஜி ம. மு. பீர் முகம்மது :</u> தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970–71-ம் ஆண்டு மானியக் கோரிக்கை மீது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் பேசுவதற்கு என்னை அனுமதித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டிலும், நாட்டிலும், நகர் கிராமங்களின் வீதிகளிலும் இருக்கிற இருட்டை விரட்டியடிக்கின்ற பணியில் நம்முடைய தமிழ் நாடு மின்சார வாரியம் தனித்ததோர் அக்கறையோடு சிறப்பாக செயல்படுகிறது என்பதை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். வீட்டிலும், நாட்டிலும் இருக்கிற இருட்டை விரட்டுகின்ற பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற இந்த மின்சார வாரியம், இதனுடைய ஊழியர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற இருட்டையும் விரட்டுகின்ற வகையில் நம்முடைய அரசு அவர்களுக்கு ஊதிய உயர்வைக் கொடுத்திருப்பதையும் நான் உளமார பாராட்டுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு இருண்ட நிலை இருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலி–தூத்துக்குடி மின்சாரம் வழங்கும் நிறுவனம் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசு, ஒன்று உடனடியாக இந்த நிறுவனத்தை நாட்டுடைமையாக்கவேண்டும் அல்லது நாட்டுடைமையாக்கப்படுகின்ற கொள்கை கைவிடப்பட்டுவிட்டது என்று அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி கேட்டுக்கொள்வதற்குக் காரணம், நாட்டுடைமையாக்கப்படுகிற நல்ல திட்டத்தை நான் எதிர்க்கிறவன் அல்ல, வரவேற்கிறவன் என்றாலும், நாட்டுடைமையாக்கப்படும் என்று அறிவித்திருக்கிற காரணத்தினால், இந்தக் கம்பெனி வீடுகளுக்கோ விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவுகின்ற வகையில் பம்புசெட்டுகளுக்கோ புதிய மின் இணைப்புகளைக் கொடுப்





பதில் அவ்வளவு ஊக்கம் காட்டுவதில்லை என்கின்ற உண்மையை உங்களிடம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் கிராமங்கள் அனைத்திற்கும் மின் இணைப்பு என்ற அரசின் கொள்கையும், விவசாய அபிவிருத்திக்கு ஊக்குவிப்பு என்று சொல்லப்படும் வாக்குறுதிகளும் தோல்வி கண்டுவிடலாம் என்ற அச்சத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் அரசு விரைவிலே திருநெல்வேலி–தூத்துக்குடி மின் வழங்கும் நிறுவனத்தை நாட்டுடைமையாக்குவதன் மூலம் மின்சார வாரியத்தின் வருவாயையும் பெருக்கிக்கொள்ளலாம், அரசின் அனைத்துக் கிராமங்களிலும் மின்னொளி என்ற திட்டமும் வெற்றி அடையலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும், மின் துறை பொறியாளர்கள் புதியதாகப் போடப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுடைய சேவை சரியாக பயன்படுத்தப்படும் வகையில் மின்சார இணைப்புச் சாதனங்கள் கொடுக்கப்படுகிறதா என்றால், அதுதான் இல்லை. பொறியாளர்கள் போடப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் சேவை செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அந்த சேவையை, மின் இணைப்பிற்குரிய சாதனங்களை தேவைப்படுகிற அளவுக்குக் கொடுப்பதில் ஏற்படுகிற இடையூறினால், முறையாக பயன்படுத்த முடியவில்லை. பயன்படுத்தக்கூடிய வகையில் தேவைப்படுகின்ற மின் இணைப்புப் பொருள்களை அரசு உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தங்கத் தமிழ் நாட்டினுடைய மின்சாரத் தேவையை வங்கத் திருநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அடிப்படையாக வைத்து நிறைவேற்றுகிறோம். அங்கே இருக்கின்ற கம்பெனியில் ஏற்படுகின்ற வேலைநிறுத்தம் நம்முடைய வேலைகள் சரிவர நடைபெறாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்த நிலையைப் போக்குகின்ற வகையில் நம்முடைய தமிழ் நாட்டிலேயே நமக்குத் தேவைப்படுகிற மின்சார பல்புகளையும், மற்றைய சாதனங்களையும் உற்பத்தி செய்கின்ற கம்பெனிகளை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மேல் தாம்பரவருணி மின் திட்டம், மேல் மணிமுத்தாறு மின் திட்டம், தூத்துக்குடி அணு மின்சாரத் திட்டம் ஆகியவற்றை அதிவிரைவில் துவக்கி முடிக்கச் செய்வதன் மூலம் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவது குறையும். குறைந்த விலையில் நம் மாநிலத்திலேயே நமக்குத் தேவையான மின்சாரமும் கிடைக்கும். வேலையற்ற நம்முடைய தொழிலாளர்கள் பலருக்கும், மின் பொறியாளர்களுக்கும் வேலை வாய்ப்பும் கிடைக்கும். இதனால் நமது மின்சார வாரியம் இன்னும் லாபகரமாக இயங்கி நல்ல பாராட்டையும் தேடித்தரும். ஆகவே, இத்துறையில் தமிழ் நாடு அரசு விசேஷ கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1970 ஆகஸ்ட் 28

மின்சார வாரிய ஊழியர்களின் வேலைப் பளு ஆய்வுக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், ஏற்றுக்கொண்டுள்ளதே தவிர, அதை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. அதை விரைவிலே நடைமுறைக்கு அரசு கொண்டுவருமேயானால், ஏறக்குறைய 250 மின் பொறியாளர்களுக்கு புதியதாக வேலை கிடைக்கும், வேலை தேடித் தவிக்கின்ற அவர்களுடைய குறையும் நீங்கிவிடும். அதற்கு அரசு அந்தக் குழுவினுடைய பரிந்துரையை விரைவில் அமல் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செவந்திப்பட்டி ரோடில் திருநெல்வேலி மாவட்ட மின்சார அலுவலகத் தலைமை நிலையம் கட்ட அரசு 14 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து, பணி துவக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆறுமுகநேரி துணை மின் நிலையத்தை காயல்பட்டினத்தில் விரைவில் கட்ட துவங்குவதன் மூலம் புதிய மின் டிரான்ஸ்பார்மர் இயங்கச் செய்வதன் மூலம் வீடுகளுக்கும், விவசாயிகளுக்கும் போதிய அளவு மின்சாரம் கிடைக்கச் செய்ய வேண்டுகிறேன். அதோடு, கடற்கரையோரப் பகுதிகளில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மின் வயர்கள் மாற்றப்படவேண்டுமென்ற நிலை இருந்தாலும், மாற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி மாற்றப்படாத காரணத்தினால் வீடுகளுக்கு ஒழுங்காக மின்சாரம் சப்ளையாவதில் தடை ஏற்படுகிறது. ஆகவே, விரைவில் இத்துறையில் அரசு கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள் இந்திய மத்திய அரசு ஆரம்பிப்பதற்கு துணை செய்வதன் மூலம் தான் மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியும். விலை விகிதத்தையும் குறைக்க முடியும். அதனால், தமிழ்நாடு அரசு இந்திய மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி. புதிய அணு, அனல், புனல் மின் திட்டங்கள் ஆரம்பிக்க நம் நாட்டில் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் நம்முடைய நாட்டுக்கு வடக்கே இருக்கின்ற பிற மாநிலங்களிலும், தெற்கே இருக்கின்ற மாநிலங்களிலும் விவசாயத்திற்குக் கொடுக்கும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டு 12 பைசாவிற்கு மேல் விலை வைத்திருந்தால், அதை மத்திய சர்க்கார் தன்னுடைய மானியமாகக் கொடுத்து ஈடு செய்கிறது. ஆனால், நம் நாட்டிலோ ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு எட்டுக் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதையும் பொருட்படுத்தாமல், ஒரு யூனிட்டு மின்சாரம் எட்டு பைசாவிற்கு நம்முடைய அரசு விவசாயத்திற்கு மின்சாரத்தை வினியோகம் செய்கிறது. இந்த நிலையில் மற்ற மாநிலங்களுக்கு அதிக விலையின் மூலம் மத்திய சர்க்காரிடம் கிடைக்கும் மானியம் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைப்பதில்லை. மற்ற மாநிலங்களைப் போல, நம்முடைய மாநிலத்திற்கும் வேறு ஏதாவது ஒரு வகையில் மத்திய சர்க்காரிடமிருந்து மின்சார மானியம் கிடைக்க அரசு ஏதாவது ஒரு வகையில் புதியதொரு திட்டம் தீட்டி, அதை மத்திய சர்க்காரிடம் எடுத்துக் கூறி, அதன் மூலம் நமக்கு ஏற்படும் நட்டத்தை அவர்களிடமிருந்து மானியத்தின் மூலம் ஈடு செய்ய வேண்டும், அதற்கான முயற்சிகள் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1970 ஆகஸ்ட் 28] [ஹாஜி ம. மு. பீர் முஹம்மது]

புதிய திட்டங்கள் ஆரம்பிக்கின்ற நிலையில், மின்சாரத் துறையில் உயர் அதிகாரிகள் சிறிது கவனக் குறைவாக இருக்கிறார்கள். அதனால் நாட்டுக்கோ அரசுக்கோ நலன் இல்லை. நாட்டுக்கும், அரசுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களுக்கும் நல்ல பெயரையும் புகழையும் தேடித்தரும் வகையில், மின் விசைக்குள்ள வேகத்தை விவேகத்தோடு பயன் படுத்துவதன் மூலம் அதிகப்படியான கிராமங்களுக்கும், விவசாயிகளுக்கும் அதிகமாக மின் இணைப்புகள் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மின்சார வாரியத்திற்குப் புதிதாக நியமனம் செய்கின்ற ஊழியர்கள் தேர்வுக்குப் பிறகும், உத்தரவு போடாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் காலதாமதம் வேண்டாம். அவர்கள் தங்களுக்கு வேலை கிடைக்காதா என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கனவை நனவாக்கும் வகையில் யார் யாரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்கின்ற பட்டியலை விரைவில் வெளியிட்டால், அது அவர்களுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகிய எங்களுக்கும் நன்மையாக இருக்கும் என்று கூறி என் உரையை நிறைவு படுத்துகிறேன். மிக்க நன்றி.

* <u>திரு. க. மு. இராசகோபால் :</u> மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த 1970–71-ம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்த அவல நிலையைப் போக்க, குறிப்பாக உணவு நிலையை பஞ்ச நிலையை போக்க, மின்சார வாரியம் நல்ல முறையில் பயன்பட்டிருக்கிறது. இந்த வாரியம் மக்களின் நன்மைக்காக மிக நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது. கிட்டத்தட்ட 1972-க்குள்ளாக எல்லா ஊர்களுக்கும், அதிலும் குறிப்பாக முன்னால் கொடுமைகளுக்கு ஆளான காலனி மக்கள் வாழும் பகுதியில் மின்சாரம் கிடைக்கும் வகையில் முதன் முதலாக பணியாற்றிருக்கிறார்கள். அப்படிப் பட்ட நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதிலும், என்னுடைய தொகுதி, என்னுடைய மாவட்டம் அதிக வேகமாக, குறிப்பாக இரண்டு மாதத்திற்குள்ளாக முடித்து விட்டிருக்கிறார்கள். வாரியம் அந்த அளவு வேகமாக ஓடுகிறது. இருந்தாலும், எதிர்த் தரப்பிலிருந்து எந்த அளவிக்குப் பேசுகிறார்கள் என்று பார்க்கும்போது அதிலும் தொழிலாளமக்கள் பழி வாங்கப்படுகிறார்கள் என்று சொல்லும்போது வேதனையாக இருக்கிறது. தொழிலாளிகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் என்கிற ஒரே காரணத்திற்காக இதையெல்லாம் பேசுகிறார்கள். ஏழை பாமர மக்கள் நிலை என்ன ஆகிறது? ஒரு மருத்துவ மனையில் நோயாளிகள் படுத்திருக்கிறார்கள் என்றால், அங்கே ஒளிவிளக்குகள் அணைந்துபோய் இருட்டு சூழ்கிறது என்றால் எப்படி இருக்கும். அங்கெல்லாம் என்ன டாடா, பிர்லா, டால்மியாக்களா நோயாளிகளாக இருந்தார்கள்? எல்லாருமே பணக்காரர்களா இருக்கிறார்கள்? ஏழைகளும் நடுத்தர

[திரு. க. மு. இராசகோபால்] [1970 ஆகஸ்ட் 28

மக்களும் இல்லையா? அத்தனை பேர்களுக்கும் சதி செய்தால் எப்படியிருக்கும்? இப்படி இவர்கள் நாச வேலை செய்கிறார்கள் என்றால், இவர்களை அடக்காமல் எப்படி விட்டு விடுவது ஆட்சியில் இருப்பவர்கள்? மக்களுக்கு அரசு நன்மை செய்யக் கூடாதா? சிந்தித்துப்பாருங்கள். கேரளாவில் என்ன நடக்கிறது? மூன்று மாதத்திற்கு ஒரு தேர்தல். ஆட்சி மாறிக் கொண்டே இருக்கிறது. **ஏன்?**

தொழிலாளர்களைப் பற்றி சில உண்மைகளைச் சொல்ல விரும்புகிறேன். கீழ் மட்டத்திலே இருக்கும் தொழிலாளிகள் எந்த அளவிற்கு ஏழை, விவசாயப் பாமர மக்களை வஞ்சிக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். துரோகம் செய்கிறார்கள். இவர்களுக்கு இங்கே வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள் சில கட்சிக்காரர்கள். இது நியாயந்தானா? ஒரு விவசாயி இடத்தில் கேட்டால் தெரியும். அவன் ஒரு மனுப்போட்டால், அது எங்கே போயிற்று என்று தெரியுமா? இதுதான் தொழிலாளிகள் லட்சணமா? அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்கிற பாசம் கூடக் கிடையாது. ஒரு தொழிலாளி கம்யூனிஸ்ட் என்றால், அவனுக்கு எதுவும் கிடையாது. தான் கம்யூனிஸ்ட் என்கிற ஒரே காரணத்திற்காக நாட்டு மக்களை வஞ்சிக்கிறார்கள். அதன் காரணமாக பல ஏழைகள் என்னிடத்தில் சொல்லுகிறார்கள். என்னிடம் நாலு பம்பு செட்டுகள் இருக்கின்றன. கோயம்புத்தூர் போல கற்பாங்கான பகுதி அது. பாலாறும், செய்யாறும், இரு ஆறுகள் பாயும் பிரதேசம். இரண்டு வீடுகளுக்கு மின் விளக்குப் போட்டிருக்கிறது. ஆக, ஆறு சர்வீஸ் இருக்கிறது. இதற்கு வாலாஜாபாத் செக்ஷன் தலைமை. போன மாதத்தில் ஒரு தொழிலாளி ஒரு ஃப்யூஸைக் கொண்டு போய்விட்டான். அது போனமாதம் நடந்த வரலாறு. காஞ்சீபுரத்தில் இருந்த என்னிடத்தில் வந்து என் பையன் சொன்னான். எந்தத் தொழிலாளி மாதா மாதம் சென்று மீட்டரைப் பார்க்கிறான்? மீட்டரைப் பார்க்காமலே பணம் கட்டும் பில் போடப்படுகிறது. திரும்ப நான் ஐந்து ரூபாய் கட்டி கனெக்ஷன் வாங்கினேன். வெறுமனே தொழிலாளி தொழிலாளி என்கிறார்கள். அவன் செய்த தவறுக்கு நான் பணம் செலுத்தினேன். இப்படிக் கேவலமாக நடக்கிறார்கள். ஒரு தொழிலாளி அவன் லைன் மென், ஆனால், மரத்தில் ஏறத்தெரியாது என்கிறான். இந்த அளவிற்கு இருக்கும் தொழிலாளிகளைப் புரிந்து கொள்ளாமல், இவர்கள் பேசுகிறார்கள். நாம் என்ன அமெரிக்காவைப்போல் பணக்காரர்களா என்ன? நாமும், வீட்டில் இருக்கும் பெண்களும் சேர்ந்து வேலை செய்தால் தான் விவசாயம் நடக்கும். காலையிலிருந்து இரவு வரை வேலை செய்கிறோம். இப்படிப் பல இடங்களிலும் நடக்கிறது.

இந்தத் தொழிலாளர்கள் பற்றி நாம் யோசிக்க வேண்டும். ஒரு விவசாயி, தன்னுடைய கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால், அந்த விவசாயிக்குத் தனியாக மின் இணைப்புக் கொடுக்காமல், மற்ற ஊர்களிலுள்ள பத்துப் பதினைந்து பேர்களின் விண்ணப்பங்களையும் ஒன்றாகச் சேர்த்து கமர்ஷல் போர்டுக்கு



1970 ஆகஸ்ட் 28] [திரு. க. மு. இராசகோபால்]

அனுப்பிவிடுகிறார்கள். போர்டுக்கு போனால் அங்கிருந்து வெளிவர குறைந்தது இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. ஒரு விவசாயி தனக்கு மின்இணைப்பு வேண்டுமென்று கேட்டால், உடனடியாகச் செய்து தர வேண்டியதுதானே நியாயம்? மின்இணைப்பு விவகாரத்தில் கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் கொடுக்கும் தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. என்னுடைய உத்திரமேரூர் தொகுதியில் மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டோம். செவிலிமேடு, விப்பேடு, விசார், மேட்டுக்குப்பம், மேட்டுப்பாளையம், கீழ்க்கதிர்ப்புலி, மேல் கதிர்ப்புலி போன்ற எல்லா ஊர்களுக்கும் சேர்த்து திட்டம் போட்டு விட்டார்கள். தொழிலாளர்களைப்பற்றி இவ்வளவு அக்கறையாகப் பேசுகிறார்களே, விவசாயிகளுக்காகப் பேசுவதற்கு அவர்கள் ஏன் முன்வருவதில்லை? நேற்றையதினம் திரு. கே. விநாயகம் அவர்கள் பேசும்போது காங்கிரஸ் ஆட்சியில், ஜனநாயகத்தில் ஏதோ, பூத்துக்குலுங்கி, காயாகி, கனிந்து, பழமாக இருந்ததைப்போன்று சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சியில் இல்லாதது, உங்கள் ஆட்சியிலாவது பூத்துக்குலுங்கி, பழமாக இருக்கட்டும் . . . .

திரு. க. மு. இராசகோபால் : 1960-ல் என்னுடைய ஊருக்கு மின்சார இணைப்புக் கொடுத்தார்கள். 1957-லேயே அந்த வழியாக சர்வே எடுத்தார்கள். என்னுடைய ஊருக்கும் அதற்கும் ஏழெட்டு மைல்கள்தான் இருக்கும். நானும் என்னுடைய ஊரின் சர்வேயை எடுத்துக்கொண்டுபோய் கொடுத்தேன். நான் எதிர்க்கட்சிக்காரன் என்ற காரணத்தினால் என்னுடைய ஊரை மட்டும் ஒதுக்கி வைத்து விட்டார்கள், மறுபடியும் என்னுடைய ஊருக்கு மின் இணைப்பு கிடைக்க மூன்று ஆண்டுகள் ஆயின. என்னுடைய ஊர் அப்போது விடப்பட்டது நான் எதிர்க்கட்சிக்காரன் என்ற காரணம்தான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, முன்னால் செய்த தவறுகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான், இப்போது இந்த அரசாங்கம் தவறு செய்கிறார்களா? ஒரு தவறுக்கு இன்னொரு தவறைச் செய்வதுதான் பரிகாரமா?

திரு. க. மு. இராசகோபால் : அந்தமாதிரியான தவறைச் செய்யும் நிலையில் நாங்களும் இல்லை, எவரும் இருக்க மாட்டார்கள். டெல்லியில் அமைச்சராக இருந்த ஒருவருடைய தலையீட்டின்மீது ஐந்தாறு ஆண்டுக்காலம் மின்சாரம் வரவிடாமல் என் ஊருக்குத் தடுக்கப்பட்டிருந்தது. தற்போது, இந்த மாமன்றத்தின் தலைவராக இருக்கின்ற பேரவைத் தலைவரின் முயற்சியினால்தான் என்னுடைய பகுதிக்கு மின்சாரம் கிடைத்திருக்கிறது. இன்றைக்கு என்னுடைய தொகுதியின் இருபக்கத்திலும் பாலாறும், செய்யாறும் பாய்ந்து ஓடுகிறது. எல்லா இடங்களிலும் மின்சார இணைப்பு கொடுத்தாகி

[திரு. க. மு. இராசகோபால்] [1970 ஆகஸ்ட் 28

விட்டது. ஆனால் என்னுடைய தொகுதியில் பல இடங்களிலும் மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. எந்த ஊராானாலும், விவசாயி ஒருவன் மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் மின்சார இணைப்பு உடனடியாகக் கொடுக்க வேண்டும். அப்போது தான் பொருளாதார வளத்தைப் பெருக்க முடியும். உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். என்னுடைய தொகுதியில் இருக்கிற பாலாறு சான்று மடலை ஒழித்து விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்பினை வழங்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) கிணறுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் உடனடியாகக் கொடுக்க வேண்டும். விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், மற்ற காரியங்களுக்கும் மின்சார இணைப்பு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கும் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கொள்கை அளவிலே பார்த்தோமானால் அதிகமாக மின் சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டங்களைப் போட்டி ருக்கிறார்கள். நாம் பல வருடகாலமாக கேரள மாநிலத்திலிருந்தும், மைசூர் மாநிலத்திலிருந்தும் மின்சாரத்தை வாங்கி, நாம் இன்னும் தன்னிறைவு பெறாத நிலையிலே இருந்து வருகிறோம் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். தன்னிறைவு பெறுவதற்கு வேண்டிய திட்டங்களைப் போட நமது நிதி நிலை இடந்தராவிட்டாலும்கூட, வேஸ்டேஜ் ஆகாமல் தடுப்பதற்காக நாம் நல்ல கம்பிகளை உபயோகிக்க வேண்டும். மீட்டர்களை நல்ல முறையில் உபயோகப்படுத்த வேண்டும். சில இடங்களில் கள்ளத்தனமாக மின்சாரம் எடுப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். பொதுவாக எல்லாவழிகளிலும் வேஸ்டேஜ் ஆகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நமது அரசாங்கம், 1971–72-க்குள்ளாக எல்லாக் கிராமங்களையும் மின்சாரமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டிருக் கிறது. ஆனால், இன்றைக்கு கிராமத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், இப்போது இருக்கக்கூடிய நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் உச்ச நிலையில் இருக்கிறது. கிராமங்களிலே சிறுசிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கும் நிலையில் அங்கு மின்சாரம் தேவைப்படுகிறது. இன்றைக்கு கிராமங்கள் எல்லாம் மிகவும் பிற்பட்ட நிலையில்தான் இருக்கின்றன. கிராமங்களில் இருக்கும் ஒரு விவசாயிக்கு பம்பு செட்டுக்கு கனெக் ஷன் கிடைக்கவில்லையென்றால் அவன் யாரையும் குறை சொல்லிப் பயன் இல்லை. நிர்வாகத்தில் இருக்கும் அமைப்புதான் அதற்குக் காரணமாகும். பஞ்சாயத்துகளிலும், நகரசபைகளிலும் ஒரு ட்யூப் லைட் போட்டால் 4 ரூபாய் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் அந்த நான்கு ரூபாயையும் கொடுக்க முடியாத நிலையில் சில கிராமங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் 1971–72-ம் ஆண்டுக்குள் எல்லாக்



1970 ஆகஸ்ட் 28] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்து விடுவோம் என்று சொல் வது, எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. பஞ்சாயத்துக்களிலும், நகரசபைகளிலும் விளக்குகளுக்கான மீட்டர்களைப் பொருத்தினால் நான்கு ரூபாய்க்கு குறைந்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமத்தில் இருக்கக்கூடிய ஒருவன் தனக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்றால், அவன் முதலில் ஒரு அப்ளிகேஷனை ஏ. இ. அவர் களிடம் கொடுக்க வேண்டும். அந்த மனு ஏ.இ. அலுவலகத்திலுள்ள ஐந்தாறு கிளார்க்குகளைத் தாண்ட வேண்டும். ஒவ்வொரு கிளார்க்கையும் அந்த மனு தாண்டிச் செல்வதற்கு ஒரு மாதம் ஆகும். ஆக, ஐந்து கிளார்க்குகளை அந்த மனு தாண்டிச் செல்ல வேண்டு மென்றால் அதற்கு ஐந்து மாத காலமாகும். பின்னர், அந்த மனு "ஓ அண்டு எம்" அதாவது "ஆபரேஷன் அண்ட் மெயின்ட் னென்ஸ்" க்குப் போக வேண்டும். அதற்குப் பின்பு என்ன செய் கிறார்கள்? ரிப்போர்ட் தயாரித்து கமர்ஷியல் சாங்ஷனுக்கு அனுப்பு கிறார்கள்—இந்த ஆபீஸ்கள் எல்லாம் ஒரேயிடத்தில் கிடையாது. பக்கத்து பக்கத்து இடங்களில் இருக்கின்றன—அங்கிருந்து மறுபடி யும் ஓ அண்டு எம் வருகிறது. மறுபடி ஏ. இ. ஆபீசுக்குத்தான் வருகிறது. எஸ்டிமேட் தயாரித்து, ஏ. இ. அப்ரூவ் செய்து, கமர் ஷியல் டிபார்ட்மெண்டு வந்து அவர்கள் பணம் எல்லாம் கட்டிய பின்பு மறுபடியும் வொர்க் ஆர்டர் போடுவதற்கு ஏ.இ.-க்குப் போகிறது. அப்புறம் கனெக்ஷன் வாங்க வெற்றிலை தாம்பூலம் எல்லாம் வைத்து சூப்ரவைசரை அழைத்துவந்தாகவேண்டும். ஆகவே ஒரு கனெக்ஷன் வாங்குவதற்குள் 2 வருடம் ஆகலாம். கொஞ்சம் விவரம் தெரிந்தவர்கள் என்றால், ஆறு, ஏழு மாதமாவது ஆகும் கனெக்ஷன் வாங்க. இந்தக் குறைபாட்டை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டுமென்றால் மாதம் ஒரு முறையாவது ஓ. அண்டு எம்., கமர்ஷியல் டிபார்ட்மெண்டு ஆகியவற்றின் போன்ற பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உட்கார்ந்து, வந்திருக்கக்கூடிய விண்ணப் பங்களில் பெண்டிங் என்ன—செய்ய முடியாது என்றால் செய்ய முடியாது என்பதையாவது முன்கூட்டியே சொல்லிவிடலாம் அல்லவா—அவற்றுக்கு உடனடியாக எப்படி கனெக்ஷன் கொடுப்பது என்று தீர்மானித்து நிறைவேற்ற வேண்டும். இந்தக் குறைபாட்டை அகற்ற அடிப்படை நிர்வாக அமைப்பே நல்லமுறையில் மாற்றி அமைக்கப் பட்டாகவேண்டும்.

இன்னும் அங்கங்கே பல்புகள் இல்லை என்கிற பிரச்னை, சோக் கிடைக்கவில்லை என்கிற பிரச்னை எல்லாம் இருக்கிறது. நான்பர்னிங் லாம்புக்கு சார்ஜ் பண்ணக்கூடாது என்று சொன்னோம். ஏற்றுக் கொள்வதாகச் சொல்கிறார்கள். நாங்கள் இத்தனை பல்புகள் எரிய வில்லை என்றால் இலாக்காவில் உள்ளவர்கள் எல்லா பல்புகளும் எரிந் திருக்கின்றன என்கிறார்கள். இதைத் தீர்மானிப்பது யார்? இன்னார் தான் இதைப்பற்றி முடிவு செய்யவேண்டும் என்பதாகவாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 ஆகஸ்ட் 28

அடுத்து, டிரான்ஸ்பார்மர் அங்கங்கே லோடு தாங்க முடியாத நிலையில் இருக்கிறது. போதாக்குறைக்கு எங்கே பார்த்தாலும் இந்த அலுமினிய ஒயரை இழுத்துவிடுகிறார்கள். கொஞ்சம் அதிக விலையுள்ள உலோகமாக இருந்தாலும் தரமுள்ள சாமானை உபயோகித்தால் பல ஆண்டுகள் பிரச்சினை இல்லாமல் இருக்கும். இதைப்பற்றியும் கவனிக்கவேண்டும்.

கடைசியாக இன்க்ரீஸ்டு பே எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுத்தாகிவிட்டது. இன்றையதினம் எல்லாவிதமான காரியங்களுக்கும் பொறுப்பாக இருக்கக்கூடியவர் ஏ. இ. போடுகிற எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய பொறுப்புடையவர். அவர்களுக்கு மட்டும் ஏன் பே ரிவைஸ் பண்ணவில்லை என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏ. இ. மட்டும் அல்ல தலைமை என்ஜினியர் வரை உயர்த்தி, சமீபத்தில் அறிவித்து விட்டோம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : போர்டு ப்ரொசீடிங்ஸ் 1970 மார்ச் 10-ம் தேதிக்கே அனுப்பப்பட்டிருந்தும் அதையும் அமல்படுத்தியிருந்தால் சந்தோஷம்.

பொதுவாக கீழேயுள்ள தொழிலாளர்களுடைய சங்கம் கழகத்தைச் சேர்ந்தது. ஏ. இ. போன்றவர்களும் சங்கம் வைத்திருக்கிறார்கள். அரசியல் கலப்பு இல்லாதது. அதன் காரணமாகத்தான் இவர்களுக்குக் கொடுக்காது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாக பேச்சு அடிப்பட்டது. கட்சி என்ற நிலை இல்லாத அளவுக்கு—இருக்கிறது என்று நான் சொல்லவில்லை—இது நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், போன்ற முக்கியமான ஆட்களை வைத்துக்கொண்டு மாவட்டத்தில் உள்ள மின்சாரவாரிய உயர் அதிகாரிகள் அங்கங்கேயுள்ள சிக்கல்கள் என்ன என்பதை பரிசீலித்து அவற்றை நிவர்த்திக்க வழிவகை செய்தால் மிக நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : பேரன்புமிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் எடுத்தவுடன் அபாய சிக்னல்—அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது நான்காவது திட்ட இறுதியில் இம்மாநிலத்தில் 530 மெகவாட் அளவு பற்றாக்குறையாகவே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? கழிந்த 3 ஆண்டுகளாக இந்த அரசு உற்பத்தித் துறையில் கவனம் செலுத்தவில்லை. 1967 வரையில் தான் மின்சார



1970 ஆகஸ்ட் 28] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வாரியம் உற்பத்தித் துறையில் ஈடுபட்டிருக்கிறது. பிறகு போதுமான அளவு உற்பத்தி செய்யவில்லை என்பதே இந்த அறிவிப்புக்கு அர்த்தமாகிறது.

வளர்ந்து வருகிற சமுதாயத்தில், வளர்ந்து வருகிற பொருளாதாரத்தில் உணவு உற்பத்திக்கும் சரி, தொழில் பெருக்கத்திற்கும் சரி மின்சாரம் அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது. அப்படி இருக்க 1967-க்கு முன்னாலே இருந்த சர்க்கார் 6 திட்டங்களுக்கு ஆரம்ப வேலைகளைச் செய்து விட்டுப்போயிருந்தும், இந்த அரசு மின் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அந்தத் திட்டங்களில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்பது தெரியவில்லை.

உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பரளியாறு திட்டத்திற்கு இந்த அரசு ஒரு பைசா கூட ஒதுக்கவில்லை. ஆகவேதான் இந்தத் திட்டத்தை இந்த அரசு கைவிட்டுவிட்டதா என்று ஐயப்படவேண்டியதாக இருக்கிறது. அப்படியின்றி வருகிற ஆண்டிலாவது மின் உற்பத்தித் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க இந்த 6 திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் தமிழக முதல்வர் தொழிலாளர் பிரச்சினையில் அதிக முக்கியத்துவம் கொடுத்து மத்திய அரசாங்கத்தின் வேஜ் போர்டு ரெக்கமென்டேஷன் வருவதற்கு முன்னாலேயே மின்சார வாரிய ஊழியர்களுக்கு அதிக நன்மை அளித்திருப்பதாகச் சொன்னார்கள். நான் உதாரணமாகக் கூறுகிறேன். கழிந்த மே மாதத்தில் மின்சார வாரியம் பல தொழிற்சங்கங்களையும் கலந்துகொண்டு உடன்படிக்கை அடிப்படையில் தொழிலாளர்களுக்கு அநீதி விளைகிற அளவுக்குத்தான் செய்திருக்கிறார்களே தவிர நன்மைகள் நிச்சயமாக இல்லை என்று கூற முடியும்.

இங்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் ஒரு அக்ரிமெண்ட் இருக்கிறது. அதன்படி ரூ. 200-ம் அதற்குக் குறைந்த மாத ஊதியம் பெறும் எல்லா பணியாளர்களும் 32 ரூபாய்க்குக் குறையாத
அளவில் அதிகப்படியான மாதாந்திர ஊதியம் (சம்பளமும் பஞ்சப் பி. ப.
படியும்) பெறுவர். ஆனால் உண்மையில் எல்லாத் தொழிலாளர் 1-30
களும் ரூ. 200-க்கு குறைவாக சம்பளம் பெறுகின்றவர்கள் எல்லாம் ரூ. 32 பெறுகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. உதாரணமாக ஒரு லைன் இன்ஸ்பெக்டரை எடுத்துக்கொண்டால் அவர் 135—5—175 என்ற ஸ்கேலில் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்குப் பஞ்சப்படி எல்லாம் சேர்ந்து ரூ. 277 வருகிறது. தற்போதுள்ள ஊதிய உயர்வுப்படி 160 + 122 = 282தான் கிடைக்கிறது. ஐந்து ரூபாயை 32 ரூபாய் ஆக ஆக்கியிருப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. ஐந்து ரூபாயோடு சேர்த்து 2 இன்கிரிமென்ட் 20 ரூபாயும் அதனுடன் பர்சனல் பே ஏழு ரூபாயும் சேர்த்துக் கொடுத்தால் 32 ஆக உயருகிறது. ஆனால் இப்போது கொடுக்கிற

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1970 ஆகஸ்ட் 28

பர்சனல் பே ஏழு ரூபாயும் அடுத்த ஆண்டு இன்கிருமென்ட்டிலே பிடித்து விடுகிறார்கள். ஆக, இந்த நிலையில் மின்சார ஊழியர்களின் மீது மின்சார வாரியம் செய்து கொண்ட முடிவு அநீதி என்று சொன்னால் அது மிகையாகாது.

அக்ரிமென்ட்டிலே பல ஒழுங்கீனங்கள் இருக்கின்றன. உதாரணமாக லைன் இன்ஸ்பெக்டர் கிரேடு 115 ரூபாய் பெற்றிருந்தவருக்கு இப்போது 160 ரூபாய் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 135 பெற்றுக்கொண்டிருக்கிற பர்ஸ்ட் கிரேடு லைன் இன்ஸ்பெக்டருக்கு ரூ. 160தான் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ரூ. 160 வாங்கி வந்த சர்வேயருக்கு (அன்-குவாலிபைடு) 210 ரூபாயாகவும், ரூ. 160 வாங்கிக்கொண்டிருந்த செகண்டு கிரேடு போர்மனுக்கு ரூ. 230 ஆகவும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடுடன் காணப்படுகிறது.

அடுத்தபடியாக, நண்பர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் பேசும் போது மத்திய அரசாங்கம் ஊதியக்குழுவின் மீது பரிந்துரை செய்வதற்கு முன்னாலேயே மாநில அரசாங்கம் தலையிட்டு மின்சார வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வை அளித்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அக்ரிமென்டில் தாற்காலிகமாக வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான வழி வகைகள் செய்யப்படவில்லை: ஆனால் மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரைகளில் 8-வது பாராவில் கடைசியாகக் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

The Wage Board recommends that such posts should be filled up by regular workers chosen from among existing muster-roll, work charged workers as far as practicable depending upon their suitability.

அதாவது இப்போது தாற்காலிகமாக உள்ள இந்த ஒர்க் சார்ஜ்டு தொழிலாளர்கள், காஷுவல் தொழிலாளர்களை நிரந்தரமாக இப்போது காலியிருக்கின்ற இடங்களுக்கு நியமிக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் சிபாரிசு செய்து இருக்கின்றது. அது பற்றி நமது மின்சார வாரிய தொழிலாளர்கள் அக்ரிமென்டில் ஒரு வார்த்தை கூட இல்லை. ஆனால் அதற்கு மாறாக கோதையாறு திட்டத்தில் 7, 10, 15 ஆண்டுகளாக தாற்காலிகமாக வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கோதையாறு திட்டம் இப்போது முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. அந்தத் திட்டம் முடிவடைந்தவுடன் அங்கே இருக்கும் பணியாளர்களும் படித்த பட்டதாரிகளும் வீட்டுக்கு அனுப்பப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இலாகாவில் நிரந்தரமான தொழிலாளிகளை நியமிக்கும்போது கோதையாற்றில் இருக்கும் தற்காலிகத் தொழிலாளிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அருமனை, களியல், ஆத்தூர் திருவெட்டாறு, திருப்பரப்பு, குலசேகரம், பொன்மனை அருவிக்கரை



1970 ஆகஸ்ட் 28] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆகிய பஞ்சாயத்துக்களில் மின் இணைப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இரவு பத்து மணி வரையில் அந்த விளக்குகள் சரிவர எரிவது இல்லை. படிக்கின்ற மாணவர்களும் பிள்ளைகளும் மண்ணெண்ணெய் விளக்குகளில் படிக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. இதற்கான காரணங்கள் என்னவென்று கேட்டால் டிரான்ஸ்பார்மர்கள் மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவற்றை உடனே மாற்றி அங்கே உள்ள மக்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக தற்போது தக்கலைக்கு அருகாமையிலுள்ள மூலச்சியில் இருக்கின்ற டிபுடி சீப் அக்கவுன்டெண்ட் ஆபீஸை நெல்லை மாவட்டத்திற்கு மாற்றுவதாகக் கூறப்படுகிறது: இப்போது அந்த ஆபீஸ் சர்க்கார் பில்டிங்கிலே இருக்கிறது. ஆனால் புதிதாக மாற்றப்பட்டால் அதை வாடகை கட்டடத்திலே வைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அது அரசாங்கத்திற்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தும். ஆகவே இப்போது இருக்கின்ற மூலச்சி கிராமத்தில் இருந்து அதை மாற்றவேண்டாமென்று கேட்டுக்கொண்டு இந்த வசதி ஏற்படுத்தித் தந்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுறுகின்றன. பேரவை நாளை காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது. பி. ப. 1-35

## 9. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and orders.*

@ 235. Notification issued with Roc. No. 187088/69-P1, dated the 15th December 1969 in regard to exclusion of Peria Kattupakkam village from the Aminjikarai Panchayat of Chingleput District for the constitution of a separate Panchayat by name "Peria Kattupakkam," [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958)].

@ 236. Notification issued with Ref. No. 187445/69-P1, dated the 15th December 1969 in regard to exclusion of certain areas from the Ethakoil Town Panchayat of Madurai district for the constitution into separate Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958)].

@ 237. Notification issued with G.O. No. 1777, Revenue, dated the 9th June 1970, in regard to exemption from liability to sales tax by India Tourism Development Corporation Limited, on the sales of articles sold at the Duty-Free shop at the Meenambakkam Air-Port, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@ 238. Notification issued with Ref. No. 184531/69-P1, dated the 10th December 1969, in regard to exclusion of Ambasamudram from the existing Govindanagaram Panchayat in Periakulam Taluk of Madurai District for the constitution of a separate Panchayat by name " Ambasamudram ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958)].

239. Notification issued with G.O. No. 1920, Revenue, dated the 19th June 1970, in regard to an amendment to the Revenue Department notification III No. 351 of 1965, published at pages 1658 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 5th August 1965. [Laid on the Table of the House under section 58 (6) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

240 @. Notification issued with G.O. No. 1305, Rural Development and Local Administration, dated the 7th July 1970, in regard to an amendment to the Conduct of Election of Members of Town Panchayats Rules, 1964. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958)].

*B. Reports, notifications and other papers.*

£ 38. Annexure to the Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill 1970 (L.A. Bill No. 17 of 1970).

£ 39. Annexure to the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970).

---

@ Laid on the table of the House on 27th August 1970.

* Despatched to Members on 25th August 1970.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### சனிக்கிழமை, 1970 ஆகஸ்ட் 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 110, 111, 112 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### விருதுநகர் குடிநீர்த் திட்டம்.

* 113 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஏதும் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், எப்போது போடப்பட்டது?

(உ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) விருதுநகர்க்கான குடிநீர் வழங்கு மேம்பாட்டுப் பணித் திட்டத்திற்கு 1959 மார்ச்சில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணி 1960 டிசம்பரில் தொடங்கியது.

(உ) தற்போதுள்ள நீர்ப்பங்கீட்டு அமைப்பை மாற்றியமைத்தல், நீர் வழங்கப்பெறுத இடங்களில் குழாய்களைப் போடுதல், கூடுதல் பணி நீர்த்தேக்கங்கள் கட்டுதல், கோடை சேமிப்பு நீர்த் தொட்டி அமைத்தல், தூயநீர் ஏற்றும் பெருங்குழாய் போடுதல், தொடக்க இடத்திலேயே நீர் எடுக்கும் ஏற்பாடுகளை அமைத்தல், வடிகட்டும் மேடையும், தூய்மைப் படுத்தப்படாத நீர் முதன்மைக் குழாயும் அமைத்தல் ஆகியவை இப்பணித் திட்டத்தின் நோக்கமாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், 1959-ம் ஆண்டு மார்ச் மாதம் போடப்பட்ட அந்தத் திட்டம், அர்ஜுன நதியிலிருந்து காளையார்குறிச்சிக் கண்மாய்க்குத் தண்ணீரைக் கொண்டுவந்து அதன் மூலம் சப்ளை செய்யும் திட்டமாகும். அப்பொழுதிருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்ததால் அது கைவிடப்பட்டது. பின்னால் 100 ஏக்கரா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு,

அதற்காக 21 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்ட அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அது எப்பொழுது நிறைவேற்றப்படும்? விருதுநகர்க் குடி தண்ணீர்த் தேவை எப்பொழுது பூர்த்தி செய்யப் படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1933-ம் ஆண்டிலிருந்து குடிநீர்த் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதை விரிவுபடுத்தி, அவர்களுடைய தேவைக்கேற்றபடி திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 1959-ம் ஆண்டில் 31 லட்சம் 44 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டமொன்று தீட்டப் பட்டது. அதற்குப் பிறகு, 1960 டிசம்பரில் வேலை துவங்கப்பட்டது. மறுபடியும் அதில் சில நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாக மறு ஆய்வு செய்யப்பட்டு விரிவுபடுத்தப்படும் நிலைமைகளும், கோடை சேமிப்பு நீர்த்தொட்டி அமைக்க வேண்டிய நிலைமைகள், குளம் ஒன்று அமைக்க வேண்டிய நிலைமைகளெல்லாம் ஏற்பட்டதன் காரணமாக 1962-ம் ஆண்டில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, 53 லட்ச ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டது. 53 லட்ச ரூபாய்த் திட்டம் தான் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகிறது. சீர்திருத்தம் செய்யப்பட்டுப் புதிதாக விரிவுபடுத்தப்பட்ட நீர் வழங்கும் ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன. கோடைகால நீர்த் தேக்கம் நிறைவேறிவிட்டது. தூய நீரேற்றும் பெருங்குழாய் போடுதல் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: 1959-ம் ஆண்டு போட்ட திட்டத்தை மாற்றியதால் எவ்விதமான நன்மையும் இல்லை, அதனுல் விருதுநகர்க் குடிநீர்ப் பிரச்சினை தீரவில்லை என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனுல், 1959-ம் ஆண்டில் 31 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டு, மறுபடியும் 1962-ம் ஆண்டில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு 53 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, அது அங்கீகரிக்கப்பட்டு, அதுதான் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப் படுகிறது. தூய நீரேற்றும் பெருங்குழாய் போடும் வேலை நிறைவேறிக்கொண்டிருக்கிறது. மற்றவைகள் நிறைவேறிவிட்டன. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை முடிவடைந்தவுடன் குடிநீர் வழங்கும் முறையில் முழுமை ஏற்படக்கூடும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, விருதுநகர்க் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செலவழிக்கக்கூடிய அந்த தொகை நகரசபை நிதியிலிருந்து செலவழிக்கப்படுகிறதா? அல்லது அரசாங்கம் மானியமாகவோ கடனுகவோ வழங்கியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே அதுபற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போடவும்.



"கொற்கை" நகர் அகழ்பணி

* 114 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள பாண்டிய மன்னர்களின் மூன்னுள் தலைநகரான "கொற்கை"யைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் புதைபொருள் இலாகாவினரால் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா?

(இ) இதுவரை கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் எவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) விவர அறிக்கை@ ஒன்று சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அகழ் வாராய்ச்சி முடிவடைந்துவிட்டதா? இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? கொற்கை நகரிலிருந்து எடுக்கப்பட்ட பழந்தமிழர் நாகரிகத்தைக் காட்டும் புதைபொருள் களெல்லாம் எங்கே சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழக அரசைச் சார்ந்த தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர், அகழ்பொருட்களை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறுர்கள். தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் அந்தப் பொருட்களெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றி மேற்கொண்டு ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படும் நிதியை வைத்துக்கொண்டு அகழ்வு தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறுர்கள். இப்பொழுது கிடைக்கப்பட்டிருக்கிற கரித் துண்டுகள் முதலியவற்றை வைத்துப் பார்க்கும்போது அவை கிட்டத் தட்ட B.C. முதல் நூற்றுண்டைச் சேர்ந்தவையாக இருக்கக்கூடும் என்ற கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அதுபற்றி ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அகழ்வாராய்ச்சியும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, கொற்கை என்னும் சிற்றூர் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது. இந்தச் சிற்றூர்தான் பழைய காலத்தில் தலைநகரமாக இருந்ததோடு துறைமுகமாகவும் இருந்தது. அதைச் சிறு துறைமுகமாக்கி மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தக் காலத்தில் இருந்த படகுப் போக்குவரத்துக்கேற்ற முறையில் கொற்கை சிறந்த துறைமுகமாக இருந்தது. அதற்குப் பிறகு, துறைமுகம் இருந்த இடம் தூர்ந்து போனதற்குப் பிறகு, காவிரிப் பூம்பட்டினம் போன்று ஆகிவிட்டதா என்பதை ஆராய்ந்து கண்டு பிடித்து அதை ஒரு சிறு துறைமுகமாக ஆக்கவேண்டிய நெருக்கடி

---

@ 97–98-ம் பக்கங்களின் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

ஏற்படாது. ஏனென்றால், இப்பொழுது புழக்கத்தில் இருக்கும் வேறு பெரிய துறைமுகங்களையும் சிறு துறைமுகங்களையும் மேலும் பழுது பார்த்து அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதில் நம்முடைய நேரத்தையும் பொருளையும் உழைப்பையும் பயன்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். கொற்கை ஒரு காலத்தில் சிறந்த துறைமுகமாக இருந்தது என்ற காரணத்தால் அதை ஒரு துறைமுகமாக ஆக்கவேண்டும் என்று பெருமுயற்சி எடுத்தாலும் அதனால் மிகுபயன் ஏற்படாமல் போகக்கூடுமாதலால், இருக்கும் துறைமுகங்களையே மேலும் பயனுடையவையாக ஆக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், கொற்கையில் ஆராய்ச்சிக்கும் பயன்படும் அகழ்பொருள்கள் எடுக்கப்படுகின்றன. தமிழர்களுடைய வரலாற்றுச் சிறப்பை வெளிப்படுத்த இந்த அகழ்பொருள்கள் பயன்படுவன ஆகும்.

திரு. எஸ். ராமலிங்கம்: தலைவர் அவர்களே, கொற்கையைத் துறைமுகப் பட்டிணமாக ஆக்குவதற்கு முயற்சி எடுக்காவிட்டாலும், தொண்டியைத் துறைமுகப் பட்டிணமாக ஆக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கொற்கையைக் குறித்து நான் என்ன சொன்னேனோ அதே கருத்துத்தான் தொண்டிக்கும் பொருந்தும். இப்பொழுதிருக்கும் பெருந் துறைமுகங்களில்கூட, குறிப்பாக நாகைபட்டினம், பாண்டிச்சேரி முதலியவை—பெருங்கப்பல்கள் கடற்கரையோரத்திற்கு வருகின்ற முறையில் இல்லை. ஆனால், தொண்டி, கொற்கை, முசிரி போன்றவை துறைமுகமாக இருந்த காலத்தில், இப்பொழுதுள்ளவை போல் பெருங்கப்பல்களாக இல்லாமல், பெரும் படகுகளாக இருந்தன. இப்பொழுதுள்ள போக்குவரத்துக்குப் பயன்படும் பெருங்கப்பல்கள் வருவதற்கேற்ற முறையில் அந்த இடங்கள் பயன்படுவதற்கில்லை. சென்னையில் உள்ளது பெரிய துறைமுகமாக இருந்தாலும், அது செயற்கைத் துறைமுகமாக இருக்கிறதேயல்லாது இயற்கையாக அமைந்த துறைமுகம் அல்ல. செலவழிக்கப்படுகிற பணத்திற்கு உரிய பலன் கிடைக்கிறதா என்ற அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். தொண்டி, முசிரி, கொற்கை ஆகியவைகளை வரலாற்றுப் புகழையும் பெருமையையும் நமக்கு நினைவுறுத்துவதற்கு அமைந்தவையாகத்தான் நாம் கொள்ள முடியும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, கொற்கையை அகழ்ந்தெடுப்பதன் மூலம் பழந்தமிழ் நாகரீகத்தைத் தெரிந்துகொள்வதைப்போன்று, முன்னால் ஆதிச்சனூர் நல்ல பரம்பு என்று கூறப்படும் பரம்பு அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, கன்னிமாரா லைப்ரரியில்கூட அதுபற்றிச் சான்றுகள் வைத்திருக்கிறார்கள். அந்த அகழ்ந்து கண்டுபிடிக்காத ஆதிச்சனல்லூர் பரம்பின் பகுதியையும் அகழ்ந்து ஆராய்ந்து கண்டுபிடிக்க முயற்சி ஏதாவது மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆதிச்சநல்லூர் நீண்ட காலத்திற்கு முன்பே அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு, அதிலே கிடைக்கப்பட்ட தாழிகள், மற்ற பழம் பொருள்கள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று, பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே அகழ்ந்து காணவேண்டியவற்றைக் கண்டிருக்கிறார்கள். பழங்குடி மக்கள் எவ்வாறு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறிவதற்கு அவை பயன்படக்கூடும். ஆதிச்சநல்லூரும் ஒரு காலத்தில் கொற்கை மாதிரி சிறந்த பட்டணமாக இருந்தது. அங்கே அகழ்ந்து எடுத்த பொருள்களை வைத்துக்கொண்டு பழந்தமிழர் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்த முடியும். இலக்கியத்தில் கண்ட குறிப்புகளும் அகழ்ந் தெடுக்கப்படும் பொருள்களும் வரலாற்றுச் சிறப்பை ஆராய்வதற்கு உதவி செய்வனவாக அமையும்.



திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, பாண்டிய நாட்டு மன்னர்களின் மிகச் சிறந்த துறைமுகமாக இருந்த குலசேகரப் பட்டினம் கொற்கைக்கு அருகாமையில் இருக்கிறது. இப்பொழுது அந்தத் துறைமுகப்பட்டினம் அழிந்து போயிருக்கும் நிலைமையை அரசு அறியுமா? பண்டை நாகரிகத்தைப் புலப்படுத்தும் முறையில் குலசேகரப் பட்டினத்தில் உள்ள புதைப்பொருள்களையும் அகழ்ந் தெடுத்து ஆராய்ச்சி செய்யும் எண்ணம் அமைச்சரவைக்குண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொண்டி, கொற்கைப்பற்றி என்ன விடை கூறியிருக்கிறேனோ அதே விடைதான் குலசேகரப்பட்டினம் குறித்தும் பொருந்தும்.

*Teachers' Training Schools*

*115 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government have decided not to open any more Teachers' Training Schools in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பிற்கால தேவைக்கேற்ற அளவில் ஆசிரியர்களை உருவாக்கவும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடத்தில் உள்ள வேலையில்லா திண்டாட்டத்தை தவிர்ப்பதற்காகவும், புதிய பயிற்சி பள்ளிகளைத் திறப்பதற்கு அவசியமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்தித்தர்: சபாநாயகர் அவர்களே, பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருப்பதன் காரணமாக பயிற்சி சாலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவா? பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் அறவே நிறுத்தப்படவில்லை. ஏற்கனவே 269 பிரிவுகள் இருக்கின்றன. அதிலே ஆரம்ப அதாவது ஜூனியர் பேசிக் டிரெயினிங் 41 பள்ளிகளிலும், செகண்டரி கிரேட் சீனியர் பேசிக் டிரெய்னிங் 228 பிரிவுகளும் இருந்தன. ஜூனியர் பேசிக் டிரெய்னிங் பள்ளிகள் அறவே தேவையில்லையென்ற காரணத்தினால்

நிறுத்தப்பட்டுவிட்டன. சென்ற ஆண்டு 228 செகண்டரி கிரேட் சீனியர் பேசிக் டிரெய்னிங் பள்ளிகளில் 28 நிறுத்தப்பட்டுவிட்டன. 200 பள்ளிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பிரிவுக்கு 40 பேர்கள் வீதம் 200 பிரிவுகள் இருக்கின்றன, இவைகள் எல்லாம் 8,000 ஆசிரியர்களை உருவாக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இதுவே அதிகமாக இருக்கிறது. ஏற்கனவே 8,000 ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இந்த ஆண்டு போடப் படுகின்ற திட்டத்தின் அடிப்படையில் பள்ளிகளில் ஆசிரியர்களை ஈர்க்கின்ற அளவுக்குப் பார்த்தால் இப்பொழுது கொண்டு போகிற நிலைமைகள் 71–72-க்குள்ளாக வேலையில்லாத் திண்டாட்டம் இந்தத் துறையிலே நீக்கப்படுகின்ற அளவிலே இருக்குமென்று தெரிகிறது. அப்பொழுது உருவாகின்ற ஆசிரியர்களை ஏற்றுக் கொள்கின்ற சூழ்நிலை அமையும் என்ற அளவிலே அத்தகைய முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

திரு. கொளத்தூரர் கோதண்டம்: குறிப்பாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே சேருவதற்கு மாணவர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தும்கூட போட்டிப்போட்டுக்கொண்டு வருகின்றார்கள் என்ற காரணத்தினாலே புதிதாக பள்ளிகள் திறக்காவிட்டாலும் ஏற்கனவே இருக்கின்ற பள்ளிகளிலே மாணவர்களை அதிகமாக ஓரளவிற்குச் சேர்ப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலேயே குறிப்பிட்டபடி இந்த ஆண்டிலே பயிற்சி பெறுவதற்கு 40 மாணவர்கள் வீதம் 200 பிரிவுகளின் வாயிலாக 8,000 பேர்கள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பயிற்சி பெற்று வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு வேலை தேடித்தரவேண்டிய நிலைமையும் இருக்கிறது. ஏற்கனவே பயிற்சி முடித்தவர்களுக்கும் வேலைத் தேடித்தரவேண்டிய நிலைமையும் இருக்கிறது. அதனால்தான் 1971–72-க்குள்ளாக அவர்களை ஈர்த்துக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதிலே ஒரு விகிதாசாரம் வைத்துக்கொண்டால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது என்ற முறையிலேதான் இப்படிப்பட்ட வழி முறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM: Whereas students seeking admission in teachers' training schools, mostly rush from North Arcot and Chingleput districts to the City of Madras and whereas there is no extra expenditure, no extra building and no extra staff needed in Government Basic Training School, Egmore if one more section was opened, was a request made by the authorities to Government to sanction the opening of one more section, not a separate school, consisting of 40 pupil teachers there?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிறுத்தப்பட்ட இடத்திலே சென்னையைப் பொறுத்த வரையில் 1, 2 செக்ஷன் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. எது எந்த நிலையிலே எந்த அளவிலே இருக்கிறது என்ற விவரங்கள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. சென்னைக்கு





தரும்படியாகச் சொல்லியிருக்கிறேன். எந்த அளவிற்கு அது நிறை வேற்றப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே 8 ஆயிரம் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அதே நேரத்தில் பள்ளிகளில் இப்பொழுது 45, 50 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமையில் சொல்லிக்கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. குழந்தைகளின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைத்தால் ஆசிரியர் களுக்கு இன்னும் அதிகமாக வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுமே? அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா? பல கிராமங்களிலே இன்னும் பள்ளிகள் இல்லாமல் இருக்கின்றன, அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் ஆரம்பப் பள்ளிகளை நிறுவினால் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமே, அரசாங்கம் இதுபற்றியெல்லாம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 8 ஆயிரம் ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருப்பதால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு வழிகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன. 40 மாணவர்கள், 45 மாணவர்கள் என்று இருப்பதை 25 மாணவர்கள் என்று ஆக்கினால் அதிக வகுப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை வரும், அதன் காரணமாக அதிகமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டியிருக்கும். ஆனால் நிதி வசதியைப் பொறுத்து ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இவ்வளவு தொகை என்று ஒதுக்கப்பட்டு விடுகிறது. அதற்குத் தகுந்தாற்போல்தான் ஆசிரியர்களை நியமிக்கவேண்டியிருக் கிறது. ஆசிரியர்களை நியமித்துவிட்டு அதற்குக்கீழே இவ்வளவு மாணவர்கள் என்ற கணக்கிலேதான் இப்பொழுது போடுகிறோம். நிதி பற்றாக்குறை நிதிச் சங்கடங்கள் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. காலம் செல்லச் செல்ல இந்த நிலைமைகள் சீர்படும் என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: For Telugu linguistic minorities there is a training school at Hosur and only 45 boys are admitted in the boys' section. The number of applicants however ranges from 200 to 300. Most of the boys are not given seats. Therefore will the Hon. Minister think of sanctioning one more section there?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேருவதற்கு ஏராளமானவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். தெலுங்கு ஆசிரியர் பயிற்சி பெற்றதற்குப் பிறகு அவர்களை எடுத்துக்கொள்வதற்கு ஆன வாய்ப்பினை அடிப் படையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பிரிவுகளை வைத்து 80 மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் பயிற்சி பெற்றவர் களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் கவனிக்கப்படும்.

[1970 ஆகஸ்ட் 29

40 மாணவர்களை வைத்துக்கொண்டிருக்கின்றபொழுதே அவர்களுக்கு வேலை கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது. தேவைப்படுமானால் அரசாங்கம் அதைப்பற்றி ஆராயும்.

திரு. கே. என். குமாரசாமி: ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறிப்பிட்ட அளவில் நிறுத்தப்பட்ட காரணத்தினாலே அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களைத் தொழில் கல்வி நிலையங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா? அப்படிச் செய்தால் சமூகத்திற்கு பயனுள்ள காரியமாக அது இருக்குமல்லவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பயிற்சிப் பள்ளிகளிலே சில பிரிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தொழிற் பயிற்சிப் பள்ளிகளாக அவற்றை வைக்கவேண்டுமானால் வேறு பல வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய நிலைமைகள் எல்லாம் ஏற்படும். தொழிற் பயிற்சிப் பள்ளியில் ஏற்கனவே சில இடங்கள் காலியாக இருக்கின்றன. அதற்குக் கவர்ச்சி ஏற்படுகிற நிலைமை படிப்படியாக இப்போதுதான் ஏற்படுகிறது. உதாரணமாக, பல பாலிடெக்னிக்குகளில் இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, அவற்றை தொழிற்பயிற்சிக் கூடங்களாக மாற்றுவதற்கு அவசியம் ஏற்பட்டால் வேறு பல வசதிகளையும் செய்யவேண்டும். எனவே, அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுது இல்லை.

திரு. பி. துரைராஜ்: 1 முதல் 3 வகுப்புகளுக்கு பெண் ஆசிரியர்கள் தான் நியமிக்கவேண்டுமென்ற அளவில் செய்ய அரசாங்கம் முன் வருமா? அப்படிச் செய்தால் பெண் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமான வரையில் ஆசிரியைகள் 1 முதல் 3 அல்லது 4 வகுப்புகளுக்கு நியமிக்கப்பட்டு வருகிறார்கள். எதிர்காலத்தில் ஆண்களுக்கு வேலை வாய்ப்பு நிரம்ப இருக்கிற காலத்தில் பெண்களுக்கும் ஒதுக்கலாம். இப்பொழுது இரு சாரருக்கும் பயிற்சி தரப்படுகிறது. இரு சாரரும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். பெண்கள் துவக்கப் பள்ளிகளிலே பெண்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஆண் பெண்கள் படிக்கக்கூடிய பள்ளிகளிலே கூடுமானவரையில் பெண்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. இன்னமும் துவக்கப்பள்ளிகளிலே ஆசிரியைகளையே எடுக்கவேண்டிய முடிவு எடுக்கப்படவில்லை. அப்படிக் கவனிக்கப்படுகிறபோது வேண்டுமானால் தக்க முடிவு செய்துகொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, தாராளமான அளவில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, வயதின் அடிப்படையிலே, யார் யார் ஓவர் ஏஜ் ஆகிறார்களோ அவர்களுக்கு முதலிடம் அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா? அப்படியிருந்தால்தான் இன்று அதிகமாக இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறேன். எனவே, இதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா?



1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கூடுமான வரையில் இரண்டாண்டு, மூன்றாண்டுகளுக்கு முன்பே பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு முதல் வாய்ப்புத் தந்து, பிறகு வந்தவர்களுக்குப் பின்னால் வாய்ப்பு தர வேண்டுமென்ற முறையில்தான் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குத் திட்டவட்டமான உத்தரவு இடப்படவில்லை. கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பயிற்சி பெற்றவர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

* 116 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாயனூரில் அமைந்த ஆசிரியப்பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான விவசாய நிலம் எவ்வளவு இருக்கிறது?

(இ) அந்நிலங்களில் விவசாய வேலை நடைபெறுகிறதா?

(உ) ஆமெனில், விளைபயன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 22.92 ஏக்கர்.

(இ) 11.50 ஏக்கரில் விவசாயம் நடைபெறுகிறது.

(உ) விளைபொருளை பள்ளியின் ஹாஸ்டலுக்கோ அல்லது வெளியாருக்கோ ஏலத்தின் மூலம் விற்று கிடைக்கும் தொகை கருவூலத்தில் செலுத்தப்படுகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, மாயனூரில் அமைந்த அந்த ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான நிலத்தில் அங்கே பயிலும் மாணவர்களைக் கொண்டே விவசாய வேலை நடைபெறுகிறதா அல்லது குத்தகைக்கு விடப்பட்டு விளைபயன் பெறப்படுகிறதா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கிருக்கும் மாணவர்களைக்கொண்டே அந்த வேளாண்மைத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்கள் வாரத்திற்கு ஒன்றரை மணியிலிருந்து இரண்டு மணி வரை ஈடுபடுத்தப்படுகின்ற முறையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கும் இந்தக்கால கட்டத்திலே, பயிற்சி தருகின்ற அந்தப் பள்ளிகளிலே மாணவர்களாக விளங்குகின்றவர்களுக்கு உற்சாகமூட்டி, தங்களுடைய பள்ளி முடிந்தபிறகு விவசாயத்தில் ஈடுபடுகின்ற அளவிற்கு முயற்சிகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற அதே யோசனை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஆங்காங்கே அறிவுறுத்தப்படுகிறது. அந்தந்தப் பள்ளிகளைச் சுற்றிலும் நிலமிருந்து, அந்த நிலத்தைப்

பயன்படுத்தும் அளவிற்கு இருந்தால், அதற்கு உடலுழைப்பைத் தர வேண்டும், அதற்கு மதிப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் கூறப்பட்டிருக்கிறது. பலன், பணம் தருகின்ற முறையில், அந்தந்த நிலங்களுக்கு ஏற்ப என்னென்ன பயிர் செய்யலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வாய்ப்பு தந்திருக்கிறார்கள். இப்படி ஆங்காங்கிருக்கின்ற தலைமை ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டுமென்ற கருத்து தரப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தண்ணீர் வசதியில்லாததால் அவர்களால் பயிர் செய்ய முடியவில்லையென்றால், அதற்கு உதவி செய்வதற்காக ஆங்காங்கு தண்ணீர் கிடைக்கும் வகையில் கிணறு வெட்டவும், பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் இறைத்து அதன் மூலம் பாசன வசதி செய்து அதன்மூலம் வசதி செய்து கொடுக்கும்படியும் கூறப்பட்டிருக்கிறது. எனவே, மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி: தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்வதற்கு, 250 எஸ்.எஸ்.எல்.சி. மார்க் வாங்கியவர்கள் அருகதை உள்ளவர்கள் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மாயனூரில் அமைந்த ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைப்பற்றிய கேள்வி.

*Assistant Commissioner of Police (Vigilance)*

*110 Q.—Thiru T. MARTIN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the present Assistant Commissioner of Police, Vigilance, City of Madras, functions under the direct control and supervision of the Commissioner of Police, Madras or the Inspector-General of Police, Madras;

(*b*) whether his work is periodically supervised and checked by the Inspector-General of Police, Tamil Nadu from the date of his assuming the present post till 27th November 1969; and

(*c*) if so, the particulars of such supervision and control exercised by the Superior Officer?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) சென்னை மாநகரம், கண்காணிப்புக் காவல் துறை அஸிஸ்டெண்ட் கமிஷனர், சென்னை காவல் துறைக் கமிஷனரின் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணியாற்றுகிறார்.

(இ) & (உ) கண்காணிப்பு, காவல்துறை அஸிஸ்டெண்ட் கமிஷனர், சென்னை (தெற்கு) (சட்டம், ஒழுங்கு), காவல் துறை டெபுடி கமிஷனரின் நேர்முகக் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணியாற்றுகிறார். டெபுடி கமிஷனர், எல்லா வழக்குப் பதிவேடுகளையும் விரிவாக ஆராய்கிறார். காவல் துறை அஸிஸ்டெண்ட் கமிஷனர் டெபுடி கமிஷனரின் கட்டளைப்படியும் கருத்துரைப்படியும் திடீர்ச் சோதனைகளை நடத்துகிறார்.

சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகங்களைப் பார்வையிடும்பொழுது காவல்துறை இன்ஸ்பெக்டர்ஜெனரல் இந்த அஸிஸ்டெண்ட் கமிஷனரின் பணியையும் ஆய்வு செய்கிறார்.





Thiru T. MARTIN: Mr. Speaker, Sir, a good number of house brothels and street brothel cases booked under the Suppression of Immoral Traffic Act have not been prosecuted in a court of law or having been prosecuted, have been withdrawn by the present Assistant Commissioner of Police, Vigilance, and this has been brought to the notice of this Government and also to the Inspector-General of Police and the Commissioner of Police. In spite of it, the very same officer continues in that post. May I know from the Hon. Chief Minister whether he directly works under the Deputy Commissioner of Police or under the Home Department and the Home Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் முதலிலேயே சொன்னேன். அவர்கள் யாரின் கீழ் பணியாற்றுகிறார் என்று முதலிலேயே சொன்னேன். அப்படிச் சொல்லியும் திரு. மார்டின் அவர்கள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. அவர் வேலையே செய்யாமலிருந்து விட்டார் என்று குற்றம் சாட்டுவது முறையல்ல. ஏதோ தனிப்பட்ட முறையில் திரு. மார்டின் அவர்களுக்குச் சந்தேகமிருந்தால் நான் அந்த உதவி ஆணையாளர் பதவியேற்றதற்குப்பிறகு பதிவான வழக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட விரும்புகினே். 17—6—1968-இல் அவர் பதவியேற்றார். 1968 ஆம் ஆண்டு 207 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1969 ஆம் ஆண்டு 244 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1970 ஆம் ஆண்டு 126 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மொத்தம் 577 வழக்குகள் அவரால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, 17—6—1968 முதல் 10—6—1970 வரையில். இதிலே தீர்ப்பு வழங்கப்பட்டவைகள் 508. விசாரணை செய்யப்பட இருப்பவை 69

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகரவர்களே, சென்னை நகருக்குள்ள நல்ல பெயருக்கு, கெட்ட பெயர் உண்டாக்கக்கூடிய விபசார விடுதிகள் அதிகமாகப் பெருகிப் போய்விட்டது என்று பேசப்படுவதால், இதைத் தடுப்பதற்கு இந்த விஜிலன்ஸ் அசிஸ்டெண்ட் கமிஷனர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, சென்னையின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கு முன்வருவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் படித்த விவரங்களெல்லாம் அந்த நடவடிக்கையின்பாற்பட்டவைதான். ஆனால் அந்த விடுதிகள் அதிகமாகி இருக்கின்றன என்று திரு. தீட்சிதர் அவர்கள் சொல்வது சரியல்ல. அவர்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டிய பருவத்தில் இல்லை..

திரு. கே. விநாயகம்: சபாநாயகரவர்களே, இந்தக் குறிப்பிட்ட அதிகாரியைப்பற்றி அடிக்கடி கேள்வி வருவதால் ஏதோ அவர் சரிவர . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர் கேட்டாரே.

திரு. கே. விநாயகம்: அவர் கேட்டாலும்கூட,

We are in possession of the subject and let the Hon. Minister stand corrected. It is not his (Thiru T. Martin) question. It is our question now.

இங்கு வருவது எல்லோருக்கும்தான். முதலமைச்சரவர்கள் இதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்து, அந்த அதிகாரி வேறு இலாக்காவிற்குப் போய்விட்டால் எங்கள் நேரமும் மிச்சமாகும். இதுமாதிரி வருவதால், சென்னையிலே அதிகமாக விபசார விடுதிகள் இருப்பதுபோல் தெரிகிறது. இது நமக்கும் கெட்ட பெயர். எனவே, அவரை வேறு இலாக்காவிற்குப் போட்டுவிட்டால் தொல்லைகள் இருக்காது அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் இந்த வழக்கிலே சம்பந்தப்பட்ட 577 பேர்களுக்காக வாதாடுகிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை. இவ்வளவு பேர்களை அவர் கண்டுபிடித்து, குற்றங்களைப் பதிவு செய்திருக்கிறார் என்று சொல்லும்பொழுது அவரை ஏன் மாற்ற வேண்டுமென்று புரியவில்லை. தனிப்பட்ட முறையில் ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் என்னிடம் தெரிவித்தால் யோசிக்கலாம். அந்த அதிகாரி நல்ல வேலை செய்திருப்பதாக, ஐ.ஜி. அவர்கள் அவரைப்பாராட்டிக் குறிப்பு எழுதியிருக்கிறார்கள்.

THIRU T. MARTIN: Mr. Speaker, the Hon. Chief Minister gave a list of the cases booked by him. Will he inform the House the number of cases wherein he has dropped action or has withdrawn the cases from the courts?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் சொன்னேன். பதிவு செய்யப்பட்டவை 577 வழக்குகள். இதில் தீர்ப்பு வழங்கப்பட்டவை 508 என்று சொன்னேன். சில வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கலாம். ஏனென்றால், சாட்சிகள் சரிவர இல்லாமலிருந்திருக்கலாம் அல்லது முதலிலே சாட்சியாக வந்துவிட்டு பிறகு வராமல் போய்விடலாம். பல்வேறு வகையிலே வராமல் போயிருக்கலாம் என்பது உறுப்பினருக்குத் தெரியும்.

*Chief Minister's medals to police officials*

*111 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Chief Minister's medal is awarded to police officials;

(*b*) if so, on what grounds: and

(*c*) whether the Government has any proposal to give special awards for the police officials for their meritorious service during the slum fire accidents in the City during the last two years?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பதக்கங்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அளிக்கப்படும்:—

(1) உயிரையும் உடைமையையும் காப்பதில் அல்லது குற்றத்தைத் தடுப்பதில் அல்லது குற்றவாளிகளைக் கைது செய்வதில் தொடர்புள்ள அதிகாரியின் பொறுப்புக்களையும் கடமைகளையும் கருதிப் பார்த்து குறிப்பிடத்தக்க வகையில் துணிவுடைமையை வெளிப்படுத்தியதற்காக.



(2) காவலர் பணியில் சிறப்பாகப் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக.

(3) தனிப்பட்ட வகையில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருந்த விடத்தும் காவலர் தீயணைப்பு பணியை வெற்றிகரமாக அமைத்ததற்காக அல்லது அந்த அமைப்பைத் திறம்பட பேணியதற்காக.

(4) மிகக் கடுமையான குற்றங்களை அல்லது பரவலாக நடக்கும் குற்றங்களை ஒடுக்குவதில் அல்லது பொதுமக்களிடையே குழப்பம் உண்டாகும்போது அல்லது தீ விபத்துக்களின்போது ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டுவதில் சிறப்புப் பணியாற்றியமைக்காக.

(5) திறமையுடனும் தகுதியுடனும் நீண்டகாலம் தொடர்ந்து பணியாற்றியமைக்காக.

(உ) இல்லை:

DR. H. V. HANDE: Slum fires are also included, I suppose.

THE HON. THIRU M. KARUNANIDHI: Yes.

DR. H. V. HANDE: Is it not a fact that the Police of Tamil Nadu, especially most of the officers, are second to none in the whole of India? Many of them have done remarkable service for this State. Is it not a fact that these brilliant people are grabbed, just as land-grab by the Centre on deputation or promotion? With the result we are losing the service, excellent service of these officers, for three or four years when they are in the Centre. What steps are this State Government going to take to see that the excellent police personnel of our State are not suddenly taken away by Delhi, but they are given sufficient incentive in our State itself so that we can have their excellent service in this State itself?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசிலிருந்து இங்குள்ள அதிகாரிகளைக் கேட்கிற நேரத்தில் நாம் யாரையாவது ஒரு அதிகாரியை அனுப்பித் தீர வேண்டிய இன்றியமையாத நிலைமையில் இருக்கிறோம். அப்படி அனுப்புகிறபோது நாமே, இவர் திறமையான அதிகாரி, அவரை அனுப்ப முடியாது என்று சொன்னால் மறைமுகமாக திறமையற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களை வேண்டுமென்றால் அனுப்புகிறோம் என்று கூறிய குற்றத்திற்கு ஆளாகி விடுவோம். மத்திய அரசும், மாநில அரசும் கலந்து எப்படிப்பட்ட அதிகாரிகளை அனுப்பினால் அங்குள்ள பணிகளைத் திறமையாக ஆற்ற முடியும், அதே சமயத்தில் இங்குள்ள பணிகளையும் திறமையாக ஆற்ற முடியும் என்று பார்த்து இங்குள்ள அதிகாரிகள் அனுப்பப்படுகிறார்கள். மேலும், டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய கருத்தை மனத்தில் கொண்டு செயல்பட முன் வருகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அண்மையில் ஆந்திராவில் இருந்து இங்கு வந்த நக்சல்பாரிகளில் பத்துப் பேரை தமிழகக் காவல்துறையினர் மிகுந்த பிரயாசைப்பட்டு கைது செய்து அனுப்பியதற்காக ஆந்திர அரசும், ஆந்திர ஐ.ஜி.யும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட பணியைச் செய்த காவல் துறையினருக்கு அரசாங்கம் இந்தப் பதக்கத்தை வழங்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: இரகசியங்களை முன்கூட்டிச் சொல்லக் கூடாது. பரிசளிப்பு விழாவின்போது தெரியும்.

DR. H. V. HANDE : May I know the total number of persons who have received this medal, Chief Minister's Police Medal for the year 1967–68, 1968–69 and 1969–70? Can the Hon. Chief Minister give us the figures?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: மொத்தம் 24 பேர்.

திரு. கே. விஞயகம்: இப்படித் திறமையாகப் பணியாற்றிய நமது காவல் துறை அதிகாரிகளுக்கு வெறும் மெடலை மட்டும் கொடுத்து திருப்திப்படுத்துவதோடு கூட அவர்களுக்கு ஒன்றிரண்டு இன்கிரிமெண்டுகளை அதிகமாகக் கொடுத்தோ அல்லது ப்ரொமோஷன்கள் கொடுத்தோ ஊக்குவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: வெறும் மெடலை மட்டும் கொடுப்பதாக திரு. விஞயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெறும் மெடல் மட்டுமல்ல. தலைசிறந்த பணிக்கு காவலர்கள், தலைமைக் காவலர்கள், தீ அணைப்பவர்கள், முன்னணித் தீ அணைப்பவர்கள், இயந்திர பம்பியர் வலவர், இப்பதவிகளுக்கு இணையான மற்ற பதவிகள்—ஐந்து பதக்கங்கள்; ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 பரிசும் தரப்படுகிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள், காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், கோட்ட தீ அணைப்பு அதிகாரிகள், அப்பதவிக்கு இணையான பதவிகள் —10 பதக்கங்கள், ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2,000 ரொக்கப் பரிசும் தரப்படுகிறது. காவல் துறை கண்காணிப்பாளர்கள் (தரம் 1, 2, 3) கோட்டத் தீயணைப்பு அதிகாரிகள் தரம் (1 & 2)—5 பதக்கங்கள், ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 3,000 ரொக்கப் பரிசு தரப்படுகிறது. வீரச் செயல்களுக்கு—பதவித் தரம் என்னவாக இருப்பினும் ஐந்து பதக்கங்களும் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 3,000 ரொக்கப் பரிசும் தரப்படுகிறது. ஒரு திருத்தம்—முன்பு 24 பேர் என்று சொன்னேன், மொத்தம் 25 பேருக்கு பரிசு அளிக்கப்படுகிறது.

### காவல்துறை அதிகாரிகள் நிகராடையில் மாற்றம்.

* 112 விஞு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகப் போலீசார் அணியும் குல்லாய், உடைகள் முதலியவற்றை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) மாற்றம் குறித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அரசுக்கு எழுதியுள்ளாரா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: (அ) 1967-இலிருந்து மாநிலக் காவல் துறை அலுவலர்களும் சார்நிலைக் காவல் துறை அலுவலர்களும் தலையணியாக "பீக்" தொப்பிகளுக்குப் பதிலாக "பெரட்" தொப்பிகளை அணிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1969 இலிருந்து இந்தியக் காவல் துறை அலுவலர்களும் "பெரட்" தொப்பிகள் அணிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். காவல் துறை அலுவலர்களின் நிகராடையை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் முடிவுறு நிலையில் இல்லை.

(இ) இப்பொழுது இல்லை.



திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, போலீசாரின் உடை 1947க்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சுதந்திர உணர்வைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதைக் கருதி அரசு அந்த உடையை மாற்ற ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: இப்போது உத்தேசம் இல்லை.

### *Agricultural University*

* 117 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether any Central grant is being secured by the State Government for starting an Agricultural University in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏறக்குறைய 2 கோடி ரூபாய் மத்திய உதவி கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான மசோதா தயாரானதும் மத்திய மானியம் பெறுவது பற்றிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்பட இருக்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் எங்கே அமைக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோவையில் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சையில் விவசாயத்திற்காக அதிகப்படியாக அரசு பணம் செலவழிக்கும் நிலையில் தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அளவுக்கு கோவையில் நல்ல வசதிகள் இருக்கின்றன. நல்ல பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. வேளாண்மைக் கல்லூரியே இருக்கிறது. கலைக் கல்லூரி தேவை, அதுவும் இருக்கிறது. டொமஸ்டிக் ஸயன்ஸ் கல்லூரியும் இருக்கிறது. கிட்டத்தட்ட 750 ஏக்கர் பண்ணை இருக்கிறது. காட்டு இலாகாவும் கல்லூரியில் இணைக்கப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் ஆலோசித்து அதிகப்படியான செலவு இல்லாமல் கோவையில் பல்கலைக்கழகத்தை அமைக்கும் சூழ்நிலை இருப்பதால் கோவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

### மதுரை வேளாண்மைக் கல்லூரி

* 118 விஞு—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, ஆகஸ்டு 22-ம் தேதி அளவில் மதுரை விவசாயக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டது உண்மையா?

(இ) இக்கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதமும் மேற்கொண்டனரா?

(உ) இதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இக்கல்லூரி 21—8—1969 முதல் 16—9—1969 வரையிலும் 25—11—1969 முதல் 27—1—1970 வரையிலும் தாற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

(இ) ஆம்.

(உ) மாணவர்களின் கோரிக்கைகளடங்கிய விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். கருப்பையா: அந்த மாணவர்கள் கேட்ட கோரிக்கைகளிலே வேளாண்மைப் பட்டதாரிகள் மட்டுமே ஆசிரியர்கள் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டுமென்பதும், இயக்குநரும் அவர்களிலிருந்தே நியமிக்கப்பட வேண்டுமென்பதும் அடங்கியிருக்கின்றனவா? அவற்றை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் கேட்ட கோரிக்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. வேளாண்மைப் பட்டதாரிகளைத்தான் கல்லூரி ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இதைப்பற்றி ஏற்கனவே 1962-ம் ஆண்டிலேயே முடிவு எடுத்துவிட்டார்கள். நியமிக்கப்படுகிற ஆசிரியர்களில் ஐந்து சதவிகிதத்தினர் தவிர ஏனையோர் வேளாண்மைப் பட்டதாரிகளாக இருக்க வேண்டும், மற்றவர்கள் ஸயன்ஸ் பட்டதாரிகளாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 1—6—1967-க்குப் பிறகு வேளாண்மைப் பட்டதாரிகளே கிடைக்கிறபடியால் எல்லா ஆசிரியர்களுமே வேளாண்மைப் பட்டதாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இயக்குனர் அவர்களையும், டீன் அவர்களையும், இன்ன பிறரையும் மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையைப்பற்றி அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இயக்குனரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஆர். கருப்பையா: வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆகியவர்களுடைய சம்பள விகிதங்களை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சம்பள விகிதத்தைப்பற்றி இப்போது பிரச்சினை இல்லை. பே கமிஷன் முடிவுக்குப் பிறகுதான் அதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

---

@ 98-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



*Conference of State Ministers for Social Welfare*

* 119 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether representatives from this State attended the meeting of State Minister for Social Welfare at Delhi about 29th January 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) அரிசன நலத்துறை அமைச்சரும், பின்னிலை வகுப்பினர் அமைச்சரும் 29—1—1970 நாளன்று, டில்லியில் நடந்த மாநில அமைச்சர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்களுடன் கீழே சொல்லப்பட்ட அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்:—

1. திரு. எம். ஏ. ஷெரீப், ஐ.ஏ.எஸ்., முந்திய செயலாளர், சமூக நலத்துறை.

2. திரு. வி. கருப்பன், எம்.ஏ., கூட்டு நெறியாளர், அரிசன நலத்துறை.

3. திரு. இரா. குழந்தைவேலு, ஐ.ஏ.எஸ்., நெறியாளர், பின்னிலை வகுப்பினர் துறை.

4. டாக்டர் திருமதி ஜெயலஷ்மி, ஏ. ராவ், முந்திய நெறியாளர், மகளிர் நலத்துறை.

5. திரு. பி. என். வேதநாராயணன், ஐ.ஏ.எஸ்., நெறியாளர், வேலை வாய்ப்பு பயிற்சித்துறை.

திரு. கே. சகாதேவக் கண்டர்: நம் தமிழ்நாட்டிலிருந்து சென்ற பிரதிநிதிகள் என்னென்ன திட்டங்களை அங்கு எடுத்துக் கூறினார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பொதுவாக தீண்டாமை நீக்கப்படுவதற்காக வேறு பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று ஏற்கனவே நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்டிருந்ததை எவை எவைகளை அரசு ஏற்றுக்கொள்ள முடியுமோ அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என்று மாநில அரசுச் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதேபோல் மாநிலக் குழு ஒன்று அமைத்து தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட வேண்டும் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து பிறகு முடிவு கூறுகிறோம் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகளுக்கு போதுமான நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது, வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் போன்றவற்றிற்கு. மத்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக மாணவர்களுக்குத் தரப்படுகிற உபகாரச் சம்பளம் அதிகமாகத் தரப்படவேண்டும், விடுதிகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்படவேண்டும் என்பது போன்ற இவைகளுக்கெல்லாம் அதிகத் தொகை தரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு வந்திருக்கிறோம்.

*Central sales tax on jaggery*

*120 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the central sales tax has been taken awar on Jaggery in this State; and

(b) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம். 14—7—1970-லிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) வர்த்தகர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் வரப் பெற்ற முறையீடுகளுக்கிணங்க இவ்வரி விலக்கு அளிக்கப்பட்டிருக் கிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இந்த பனைவெல்லத்தின் மீதான சேல்ஸ் டாக்ஸை இல்லாமல் ஆக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது வெல்லத்தைப்பற்றியது, பனை வெல்லம்பற்றி தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. டி. மார்டின்: கேள்வியில் பனைவெல்லம், கருப்புக்கட்டி என்றுதானே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியில் பனைவெல்லம் என்றுதான் போட்டிருக்கிறது.

THE HON. THIRU P. U. SHANMUGAM: The first part of the main question is as follows:—

(a) wheher the Central sales tax has been taken away on jaggery in this State . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் மொழிபெயர்ப்பில் பனைவெல்லம் என்றுதான் போட்டிருக்கிறார்கள்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தமிழ் கேள்வித்தாள் கரெக்டா அல்லது இங்கிலீஷ் கேள்வித்தாள் கரெக்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பனைவெல்லம் என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தமிழ் கேள்வியில் பனைவெல்லம் என்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கேள்வி கேட்டவர் எதைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள் என்பதுதான் சந்தேகமாகயிருக்கிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: நான் கேட்டிருப்பது பனை வெல்லம் பற்றித்தான். ஜாகரி என்பது பனைவெல்லம்தான்.



MR. SPEAKER: The first part of the question is as follows:—

"(a) whether the Central Sales tax has been taken away on Jaggery in this Sta'e. . .

ஜாகரி என்றுதான் கேட்டிருக்கிறார்கள்.

*செனாய்நகர் பகுதியில் கந்தகப் படிவங்கள்*

*121 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் செனாய் நகர் பகுதியில் பாஸ்பரஸ் படிவங்கள் கிடைப்பதாக அரசுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*Establishment of polyester fibre plant*

*122 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the name of the firm to whom a licence has been issued for the setting up of a polyester fibre plant in Tamil Nadu; and

(b) the exact location of the Plant and when the Factory is likely to start production and the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இண்டியன் ஆர்கானிக் கெமிகல்ஸ் லிமிடெட் என்னும் தனியார் துறை நிறுவனம்.

(இ) மணலிப் பகுதியில் சுமார் ரூ. 10 கோடி செலவில் இவ்வாலை நிறுவப்படவிருக்கிறது. தமிழக அரசு ஆலை நிறுவு வதற்காக சுமார் 205 ஏக்கர் நிலத்தைக் கம்பெனிக்கு ஒதுக்கியிருக் கிறது. நிலம் கம்பெனியிடம் விரைவில் ஒப்படைக்கப்படும். ஆலை உற்பத்தி தொடங்க சுமார் 2 அல்லது 3 வருடங்கள் ஆகலாம்.

DR. H. V. HANDE: Sir, may I know whether the preliminary work like market survey and availability of raw products has been gone through and whether the State Government have been addressed on the subject and also whether the State Government have made any recommendation to the Centre and what are the exact details of the scheme?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றியெல்லாம் மத்திய அரசின் லைசென்ஸிங் கமிட்டிதான் பரிசீலிக்கிறது. நம் இந்திய நாட்டிற்கு எவ்வளவு இதுபோன்ற ஸ்டேபிள் ஃபைபர் தேவை என்பதையும் எங்கெங்கு தொழிற்சாலைகளுக்கு அனுமதிக்கலாம் என்பதையெல்லாம் அவர்கள் முடிவு செய்கிறார்கள். நம் தமிழ் நாட்டுக்கு 1963-ம் ஆண்டில் ஒரு தொழிற்சாலைக்கு அவர்கள்

அனுமதி வழங்கியிருந்தார்கள். ஆனால் அந்தத் தொழில் அதிபர் அதை நடத்தாத காரணத்தினால் இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் என்ற பம்பாய் நிறுவனம் அவர்கள் பெற்ற அனுமதியைப் பெற்று நம் தமிழ் நாட்டில் அதைத் தொடங்கலாம் என்று மத்திய சர்க்கார் அனுமதி தந்திருக்கிறது. அதை அவர்கள் தொடங்க முயற்சி எடுத்து வருகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, apart from the Shenoynagar area, are there any other areas where phosphate deposits are available?

(No reply).

திரு. சு. துரைசாமி: நம்முடைய தமிழ்நாட்டிற்குத் தேவையான ஸ்டேபிள் ஃபைபர் பற்றாக்குறையாக இருக்கிறது. கோவையின் பக்கத்திலுள்ள ஒரு ஆலையில்தான் அது தயாராகிறது. நம் தேவையின் 5 அல்லது 10 சதவிகிதம்தான் உற்பத்தியாகிறது அங்கு. ஆகவே, இந்த ஆலையை விரைவாகத் தொடங்குவதற்கும் மேற்கொண்டு அப்படிப்பட்டதொரு ஆலை தொடங்குவதற்கும் அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம், நீர், மின்சாரம் போன்ற வசதிகளை எல்லாம் அவர்களுக்குத் தந்திருக்கிறோம். அவர்கள் விரைவில் அதை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: Sir, may I know whether this Government have received any other letter of intent for the starting of factories like the Sodium Hydro Sulphate Factory at a cost of Rs. 1.4 crores and if so, what are the other prospective facttories which are going to be started within the course of two or three years?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது போலிஸ்டர் ஃபைபர் ப்ளான்ட் பற்றிய கேள்வி அவர்கள் ஸோடியம் ஹைட்ரோ சல்பேட் பற்றிக் கேட்கிறார்கள். அதற்கான ஒரு ப்ளான்டை ஒரு கோடி ரூபாயில் அனுமதிக்கலாம் என்று எம்.எஸ்.டி.டி.வி., அரசாங்க வாரியம் அனுமதி கொடுத்திருக்கிறது—லெட்டர் ஆஃப் இன்டென்ட். எந்த இடத்தில் அதை ஆரம்பிக்கலாம், எந்த இடத்தில் தண்ணீர் அதிகமாகக் கிடைக்கும் இந்த கெமிக்கல் பாக்டரிக்கு என்று அவை பற்றி ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்த போலிஸ்டர் ஃபைபர் என்பது ரயான் மாதிரியா அல்லது டெரிக்காட்டன் போன்றதா? அத்தொழிலுக்கு என்னென்ன மூலப்பொருள்கள் தேவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது ஒரு ஸின்தெட்டிக் ஃபைபர். இயற்கை நூலைவிட செயற்கையாக நூல் உற்பத்தி செய்வது. இது இரசாயனப் பொருள்களிலிருந்து உற்பத்தி செய்வதாகும். காட்டன், உல், விஸ்கோஸ் ரயான் இதுபோன்ற பொருள்களை எல்லாம் இணைத்து ப்ளென்டட் ஃபைபர் உற்பத்தி



செய்து அருமையான சட்டைத் துணிகளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போடுவதற்கு ஏற்ற சட்டைத் துணிகள், உற்பத்தி செய்வதற்கு இந்த ஸ்டேபிள் ஃபைபர் தேவை என்று இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது. நம் நாட்டுக்குத் தேவையான பருத்தி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் நம் நாட்டில் இன்று செயற்கையான இப்படிப்பட்ட நூல்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையில் இந்த போலிஸ்டர் ஃபைபர் ப்ளான்டுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இன்னும் சில நாட்களில் நைலான் தர இருக்கிறார்கள்.

### செங்கற் சூளைகளுக்கு அரசு கடனுதவி

* 123 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல் சூளை நடத்துவதற்கு அரசாங்கம் கடனுதவி செய்து வந்தது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1965 முதற்கொண்டு இயந்திரச் செங்கற் சூளைகள் மட்டும் ரூ. 1 லட்சம் வரை கடன் உதவி பெறத் தகுதியுடையவையாகும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கடன் உதவி, செங்கல் சூளைகள் போடுவதற்கு கிராமப்பகுதிகளில் அரசாங்கம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா? அதேபோல் பூந்தமல்லிக்கு அருகாமையில் ரெடிமேட் வீடுகள் கட்டுவதற்கு சாதனங்கள் தயாரிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அந்தச் சாதனங்களையெல்லாம் தயாரிப்பதற்கும் அரசாங்கம் கடன் கொடுக்குமளவிற்கு ஒரு திட்டத்தைத் தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மாநிலம் முழுமைக்கும் உள்ள திட்டமாகும். "மெக்கானைஸ்ட் ப்ரிக் ப்ளான்ட்ஸ்" க்கு மட்டும் இந்தக் கடன் உதவி கொடுக்க அனுமதி இருக்கிறது.

திரு. இல. பலராமன்: இதுபோன்ற சூளைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். இவ்வுதவி நம் மாநில அளவில் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? கிராமப்புறங்களில் இது போன்ற சூளைகள் அமைப்பதற்கு—இதுவரையில் இல்லை என்றாலும் இனிமேலாவது அவர்களுக்கும் கடன் உதவி வழங்க அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எவ்வளவு பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடமில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்கு இந்தத் தொகை வேண்டுமென்று கேட்டு சிபார்சு செய்கிறார்களோ அதையும் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராயிருக்கிறது.

[1970 ஆகஸ்ட் 29

துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

*124. வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல்லில் ஒரு புதிய Sub-Employment Office ஏற்படுத்த தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணை வேலை வாய்ப்பு அலுவலகம் (Sub-Employment Office), திண்டுக்கல் 24—11—1969 அன்றிலிருந்து இயங்கத் தொடங்கிவிட்டது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் இருப்பதுபோல் திருச்சி மாவட்டத்தில் அதுமாதிரி "சப்-எம்பிளாய்ண்மெண்ட்" ஆபீஸ் ஏற்படுத்தினால் பல மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். புதுக்கோட்டையில் அதுமாதிரி ஏற்படுத்த அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலைவாய்ப்பு நிறுவனத்தை ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேலை தரும் நிறுவனங்களை தொடங்குவதில் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அடுத்த மாத இறுதியில் கூட மத்திய தொழில் அமைச்சரும், நம்முடைய முதலமைச்சரும் அதுபற்றிய ஒரு கண் காட்சியை திருச்சியிலே நடத்துவதற்கு முயற்சி எடுத்து இருக்கிறார்கள். ஆனால், இந்த வேலை வாய்ப்பு துணை அலுவலகங்களைப் பொறுத்த வரையில் 10 தொடங்கலாம் என்று இருக்கிறோம். அதிலே இரண்டு தொடங்குவதற்கு இப்போது அனுமதி தந்திருக்கிறது. ஒன்று திண்டுக்கல்லிலும் மற்றொன்று ஈரோட்டிலும் தொடங்குவதாக இருக்கிறது.

*Grant for Central Textile Research Institute at Coimbatore.*

*125 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any grant has been made to the Central Textile Research Institute, Coimbatore by the State Government during 1969-70; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

அணைக்கட்டுகள்

*126 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அருகே செங்கப்படை கிராமத்துக்குப் பக்கத்தில் உள்ள காட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதி இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டி இருப்பதாலோ என்னவோ இராமநாதபுரம் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் வரட்சி இந்தப் பகுதியில் ஏற்படுகிறது. இந்தக் காட்டாற்றில் மழை காலங்களில் அதிகமான தண்ணீர் வந்து குண்டாற்றில் கலந்து வங்காளக் கடலில் வீணே விழுகிறது. எனவே, இந்தக் காட்டாற்றின் குறுக்கே இதுவரை அணை கட்டும் திட்டம் இல்லாவிட்டாலும் இனியாவது இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செங்கப்படை கிராமத்தின் தெற்கே 3 மைல் தொலைவில் ஓடும் புளியம்பட்டி ஓடையை கள்ளிக்குடி கிராமம் வெள்ளாகுளத்துடன் முடியும் அரசங்குளம், செங்குளம் முதலான தொடர் இணைப்பு கண்மாய்கள் பயன் அடையும்படி திருப்பிவிடும் ஒரு திட்டம் உள்ளது. அது விரிவான அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: எந்த அளவுக்கு இந்தத் திட்டம் இப்போது செயல்பட்டு வருகிறது? எப்போது முடிவடையும்? திட்டவட்டமான அறிவிப்புத் தேவை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. விரைவில் செய்யப்படும்.

* 127 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் கூற்றத்திலுள்ள வார்ப்பட்டை ஒட்டியுள்ள பிரான் மலையின் அடிவாரத்தில் அணை எழுப்பி நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: வார்ப்பட்டை ஒட்டியுள்ள பிரான்மலையின் நீர்த்தேக்கத்தை உருவாக்குகிற காரணத்தால் நல்ல நீர் பாசன வசதி ஏற்படுகிறது. அதனால் அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திருமயம் வட்டம் திருப்பக்குட்டு, தொரடைக்குட்டு என்ற குன்றுகளின் இடையில் கண்மாய் எழுப்பும் திட்டமாகும். பிடிக்கும் பரப்பளவு அதில் குறைவாக இருப்பதனால் அதிகக் கொள்ளளவை எதிர்பார்க்க முடியாது. மேலும் இதனால் பயன் அடையும் நீர் கண்மாய் 4,000 அடி தொலைவில் இருப்பதால் அதை 700 அடிக்கு அருகாமையில் கொண்டுவர மலையை உடைக்க வேண்டியிருப்பதாலும் செலவு அதிகமாகும் என்கிற காரணத்தால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

[1970 ஆகஸ்ட் 29

* 128 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள சுந்தரப்பட்டியை ஒட்டியிருக்கும் கூடலூர் ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் பழைய அணையைச் சீர்படுத்திக் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: புதுக்கோட்டை பகுதியில் சுந்தரப்பட்டியை ஒட்டியிருக்கும் கூடலூர் ஆற்றின் குறுக்கே இருக்கும் பழைய அணை பயன் இல்லாமல் இருக்கிறது. இரு பக்கத்திலும் மூடு வாயில்கள் அமைத்து சீர்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வெள்ளாற்றின் குறுக்கே சுந்தரம்பட்டி அணைக்கட்டு கட்ட ரூ. 2.05 லட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருக்கிறது. இதைக் கட்டுவதனால் இரண்டு குளங்கள், கும்மக்குடிபட்டியும், சேந்த மங்கலம் குளமும் பயன்படும். இந்த இரண்டு குளங்களையும் எடுத்துக்கொள்ள சுப்ரீம்கோர்ட்டில் ஒரு தள்ளிவைப்பு ஆணை இருக்கிறது. அந்த ஆணை காரணமாக மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அந்த 'ஸ்டே' ஆர்டரை ரத்து செய்யவேண்டும். பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

* 129 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதியில் நல்லாற்றின் குறுக்கே (1) மண்ணரை கிராமத்தில் கஞ்சம்பாளையத்திற்கு அருகிலும், (2) தொட்டியபாளையம் கிராமத்திலும் அணைகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இத்திட்டம் தலைமைப் பாசனப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு பின் கைவிடப்பட்டது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியர் பரிசீலனை செய்து அங்கே அணை கட்ட ஏற்ற இடம் என்று தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். குடி தண்ணீருக்கு மிகுந்த கஷ்டம் இருப்பதால் உடனடியாக அணை கட்ட அரசாங்கம் இனியாவது பரிசீலனை செய்து ஆவன செய்யுமா?



1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நல்லாற்றின் குறுக்கே கஞ்சம்பாளையத்திலும், தொட்டிப்பாளையத்திலும் குட்டைகள் கட்டும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்த ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டப்படுமானால் இவ்வாற்றின் நீர்ப் பாசனத்தின் கீழ் பகுதியில் உள்ள நிலங்கள் பாதிக்கப்படும் என்பதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதல் தராததாலும், தலைமை பாசனப் பொறியாளர் ஒப்புக்கொள்ளாததாலும், இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வாரணசிபாளையத்தில் குட்டை அமைப்பு

* 130 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி காளிபாளையம் கிராமம் வாரணசி பாளையத்தில் ஓர் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்? எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) காளிபாளையம் கிராமம், வாரணசிபாளையத்தில் ரூபாய் 1.67 லட்சத்தில் குட்டை அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்ததும் அரசின் அங்கிகாரத்துடன் வேலை ஆரம்பிக்கப்படும். வேலை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஆறு மாத காலத்தில் முடிவடையும்.

*Nehru's speeches.*

*131 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have authorised the local bodies to incur expenditure for the inscription of Nehru's speeches in stones; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஜவஹர்லால் நேருவின் உரைகளிலிருந்தும், நூல்களிலிருந்தும் 12 மேற்கோள்களை மக்களின் பார்வைக்குக் காட்டி வைப்பதற்கு ஏற்றவையென அரசு தெரிந்தெடுத்து, கற்பாளங்கள், கான்கிரீட் பாளங்கள், உலோகப் பலகைகள் முதலியவற்றில் அந்த மேற்கோள்களைத் தக்கவாறு பொறித்து வைக்க, உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் அனுப்பப்பட்ட மேற்கோள்கள் பட்டியலிலிருந்து இந்த மேற்கோள்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தத்தம் நிதியிலிருந்து முறையே ரூ. 100, ரூ. 500-க்கு மேற்படாத செலவை மேற்கொள்ள ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

[1970 ஆகஸ்ட் 29

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே. உலக சமாதான புருஷர் நமது ஒப்பற்ற மாபெரும் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருஜி அவர்கள் மனித வர்க்கத்திற்கு தந்த பொன்னுன சொற்களை கிராமம் கிராமமாக கல்லிலே எழுதி பலர் காணும் இடங்களில் வைத்து, வரும் சமுதாயம் அவரைப்பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கு கல்லிலே அவர்களுடைய உரைகள் பொறிக்கப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நீர் மேல் எழுத்துப்போல் இல்லாமல் கல்மேல் எழுத்தாக இளம் சமுதாயத்தினருக்கு பயன் படும் வகையில் மேற்கோள்களையும் குறிப்புகளையும் கற்பாளங்கள் மூலமாகவும் கற்பலகைகள் மூலமாகவும் ஊருக்கு ஊர் வைக்க வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சி மன்றங் களுக்கும் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தமிழ்த்தாயின் தவப்புதல்வன் பேரறிஞர் அண்ணு அவர்களுடைய பொன் எழுத்துக்களையும் அதைப்போல் ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் பிற நகரங்களிலும் கல்லிலே எழுதி வைப்பதற்கு எந்த ஊராட்சி மன்றமாவது அனுமதி கேட்டு இருக்கிறதா? அப்படிக் கேட்டால் அனுமதி தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மத்திய அரசிடமிருந்து வந்த குறிப்பின்படி ஜவஹர்லால் நேரு அவர்களின் எழுத்துக்களைப் பொறிக்க அனுமதி வழங்கி இருக்கிரும். நம்முடைய மதிப்பிற்குரிய மறைந்த மாமேதை அறிஞர் அண்ணு அவர்களின் பொன் எழுத்துக் களைப் பொறிக்க வேண்டுமென்ற கோரிக்கை என்னிடத்தில் இல்லை என்ருலும், அதுபற்றி பரிசீலிக்க துறைக்கு தெரிவித்து இருக்கிறேன். அவர்களுடைய பரிசீலனைக்குப் பிறகு ஆலோசனை செய்து முடிவு செய்யப்படும். பல்வேறு இடங்களில் பேரறிஞர் அண்ணு அவர்கள் பொன் எழுத்துக்களை பொறிக்க ஏற்பாடு செய்யப்படும். இந்தச் சிறந்த யோசனையைத் தெரிவித்ததற்காக அங்கத்தினர் அவர்களுக்கு என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Whereas in the stone age, in those archaic days when people wanted a particular message to be transmitted to future generations they inscribed all these things on the stones in those days and whereas in these days such a thing will not serve any purpose, will the Government desist from that temptation and waste of money on inscribing these things on metallic substance ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. கே. விஞயகம்: வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் பதில் சொல்லி விட்டாரே.



1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கடந்த 5000 ஆண்டுகளாக வரலாற்று நூல்களை எடுத்துப் பார்த்தால் கல்லிலே எவ்வளவு மிக அரிய கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்க்கிரும். மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்றவற்றின் பெருமையைத் தெரிந்து கொள்வதற்கு அங்கே இருக்கும் கற்பாளங் களில் செதுக்கப்பட்டு இருப்பவைதான் மிகத் துணையாக இருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி நவீன காலத்தில் அவை ஒன்றும் பயன் அளிக்காது என்று சொல்வது பொருத்த மாகாது. கல்லில், செதுக்கப்பட்டவைகள் என்றும் நிலைத்து இருப்பவை. காண்போர் கண்களில் எல்லாம் நாள்தோறும் தென்படக் கூடியவை. அப்படிப்பட்ட கல் வெட்டுக்கள் நாட்டிற்கு மிகமிகத் தேவை.

### கதர் விற்பனை

* 132 விஞ—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தமிழகத்தில் அதிகமாக கதர் விற்பனை செய்த ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: காஞ்சீபுரம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: எவ்வளவு தொகைக்கு இந்த ஒன்றியத்தின் மூலம் கதர் விற்பனை செய்யப்பட்டது? சம்பந்தப் பட்ட ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த ஊராட்சி ஒன்றி யத்தின் மூலம் ரூ. 2,59,674.40 மதிப்புள்ள கதர் விற்கப்பட்டுள்ளது. இது தீபாவளி காலம், காந்தியார் நூற்ருண்டுக் காலம் ஆகிய காலங்களில் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக விற்கப்பட்ட தாகும். இதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலும் முதல் பரிசு ரூ. 500, இரண்டாவது பரிசு ரூ. 300, மூன்ருவது பரிசு ரூ. 200 ஆகிய நிலைகளிலே பாராட்டும் பொருட்டு கோப்பைகளும், கேடயங்களும் இவர்களுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு, அப்படி வழங்குகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

### கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள்

* 133 விஞ—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்க ஊழலைக் கண்டுபிடிக்க விசேஷ ரகசியத் துப்பறியும் பிரிவை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் என்ருல், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) கூட்டுறவுச் சங்கங்களில் பணம் கையாடல் போன்ற குற்றங்களைக் கண்டு பிடிக்கவும், புலன் விசாரணை செய்யவும் காவல் துறையில் கூடுதலான தனி அலுவலர்கள் நியமிப்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Dr. H. V. HANDE: Sir, there are a number of societies where not only money has been irregularly spent but certain indents with higher rates have been made, probably with some understanding between the person who puts the rate and the person who indents for that. Such cases have been brought to the notice of the Department. Recently, one such case which has been brought to the notice of the authorities is the Tiruvarur Co-operative Society where a sum of a crore of rupees is involved. In such cases, where huge amounts to the tune of lakhs are involved, what steps do the Government propose to take to recover those amounts immediately as it may take a long time before the actual investigation is completed and the persons are booked?

The Hon. Thiru S. Pa. ADITANAR: Sir, the appointment of the special staff is meant exclusively for the investigation of cases relating not only to misappropriation but also to other kinds of commercial crimes committed in the co-operative sector.

Regarding further action taken on the detection of cases, it depends upon each case. We have to hold enquiry and institute surcharge proceedings or prosecution proceedings. We have got Special Prosecutors to deal with cases in the criminal court. Probably, I may say that we have in five districts special staff to detect misappropriation and other commercial crimes. The matter under the consideration of the Government is the appointment of additional staff.

திரு. எம். சுரேந்திரன்: கூட்டுறவுத் துறையிலே ஆடிட் செய்வது டிபார்ட்மெண்டு வாரியாக இல்லாமல், வெளியாட்களை வைத்துச் செய்வது என்று அமைச்சர் அவர்களுக்கு யோசனை இருந்தது. அந்த யோசனை இப்பொழுது எப்படி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கூட்டுறவுச் சங்கங்களில், சிலவற்றில் இப்பொழுதே தனியார்கள் மூலம் தணிக்கை செய்யப் படுகிறது. வேறு பெரும்பாலான சங்கங்களில், டிபார்ட்மெண்டு மூலம் தணிக்கை செய்யப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங் களில் ஏற்படுகின்ற பல தவறுகளை மாவட்டத்திலுள்ள மாவட்ட கலெக்டரோ மற்ற துறையோ விசாரணை செய்வதற்கு முடிவதில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி நிர்வாகத்தின் கீழ், இந்தக் கூட்டுறவு சங்கங்களைக் கொண்டுவருவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? பஞ்சாயத்து நிர்வாகத்திற்காக ஒரு பி.ஏ. போட்டிருப்பதுபோல மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூட்டுறவுத்



துறைக்காக ஒரு பி.ஏ. போடுவதுபற்றி செயற்குறிப்பு அரசாங்கத் திடம் ஏதேனும் இருக்கிறதா? அப்படியானல் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு, கலெக்டருக்கு இப்பொழுது உதவியாளர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறர். ஆனல், விசாரணை செய்வது, குற்றங்களைக் கண்டுபிடிப்பது இவைகளெல்லாம் கலெக்டர் செய்ய முடியாத காரியம். போலீஸ் இலாகாவே இவைகளை இன்னும் திறம்படச் செய்ய முடியும். அதற்காக தனி அலுவலர்கள் நியமிப்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

*Co-operation Department*

*134 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact the Government is contemplating to split the Co-operative Department into three sections to cope up with the increased volume of work ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. கே. விநயகம்: இது மாதிரி அதிகமாக வேலை வந்ததினல் டிபார்ட்மெண்டை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்போகிறேம் என்று தங்களுடைய அமைச்சர் அவையிலேயிருந்து அறிக்கை பத்திரிகையில் வந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இவை தனி இலாகாக் களாக செயல்படுவதாகவும் எண்ணம் இல்லை, பிரிவுகளாகவும் செயல் படுவதாகவும் எண்ணமில்லை. நான் கூறுவது வேறு. அதாவது கிரெடிட் பார்ப்பதற்கு, கடன் கொடுக்கிற சங்கங்கள், வங்கிகள் இவை வளர்ச்சி அடையச் செய்வதற்கு, அவைகளைக் கண்காணிப்ப தற்கு, தனி அலுவலர்களை மேல் மட்டத்திலிருந்து கீழ் வரையில் நியமிப்பது என்பதுதான். தனிப் பிரிவாகவோ, அல்லது தனி இலாக்காவாகவோ இருக்காது. இலாகாவிற்கு ஒரு தலைமை என்ற முறையில் பதிவாளர் இருக்கிறர்கள்.

திரு. கே. விநயகம்: தாங்கள் நிருபர்களுக்குக் கொடுத்த அறிக்கையிலே இருந்துதான் இந்தக் கேள்வியைத் தயார் செய்தேன். அதில் சொல்லப்பட்டிருப்பது இந்த டிபார்ட்மெண்டில் அதிகமாக வேலை வந்ததினல், தனித்தனியாக மூன்று பிரிவுகள், கிரெடிட் சொஸைடி, பங்ஷனல் சொஸைடி, அக்ரிகல்சரல் பாரம் சொஸைடி இப்படி மூன்று பிரிவுகளாக பிரித்து, ஒரே இயக்குனர் இருக்க வேண்டும். ஆனல் கீழே ஜாயிண்டு டைரக்டர்ஸ் என்றெல்லாம் போடுகிறேன் என்று தாங்கள் அறிக்கை விட்டது உண்மைதான?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக துருவிப் பார்த்தார்களானல் அவர்களுக்குத் தெரியும். வேலை அதிகம்.

ஆனால் தனி இலாகாவாக இருக்கவேண்டும். பிரிவினை செய்யவேண்டு மென்ற எண்ணமில்லை, நாங்கள் பிரிவினைக்கு உடந்தையாக இல்லை (சிரிப்பு). தனியாக கிரெடிட் பார்ப்பதற்கென்று மேல்மட்டத் திலிருந்து கீழ்வரையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு தனியாக கவனத்தைச் செலுத்துகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

அரிசன மாணவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், திரு. எம். முத்தையா அவர்களும் நேற்று சென்னையில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த அரிசன மாணவர்கள் தங்களுடைய பல்வேறு குறைகளைத் தெரிவிப்பதற்காக அமைச்சரிடம் வந்தபோது, அவர்கள் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியைப்பற்றி விவாதிப்பதற்காக ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஸார், நேற்றைய தினம் அரிசன மாணவர்கள் அவர்களுடைய பல்வேறு குறைகளைத் தெரிவிப் பதற்காக வேண்டி அமைச்சர் அவர்களை நேரிடையாக அணுகிக் கேட்டு தீர்த்துக் கொள்வதற்காக வேண்டி வந்தார்கள். அவைகளில் பிரதானமானது, இன்றைய தினம் ஹாஸ்டல்களில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 42 கொடுக்கப்படுகிறது, அது ரூ. 60-ஆக உயர்த்தப்பட்டு கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். விலைவாசி இன்றைக்கு எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு. இதுவரைக்கும் சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: விலைவாசி ஏற்றத்திற்குத் தக்க வாறு, இந்தத் தொகையை அவசியம் உயர்த்தித் தரவேண்டும் என்கின்ற அடிப்படையில் தான் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். அப்படி கேட்டு அவர்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக வேண்டி வந்தார்கள். அவர்களை இரும்பு வாராவதிக்கு அப்பால் நிறுத்தி வைத்தது மட்டுமல்ல. அவர்கள் 158 பேர்களை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்பது மட்டுமல்ல. அவர்களுடைய பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி விவாதம் நடத்தவேண்டும் என்பதற்காக வேண்டி இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.



* திரு. மு. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மாணவர்கள் அவர்களுடைய சலுகைகளுக்காக இதற்கு முன்பாக நோட்டீஸ் ஒன்றை பிரசுரம் செய்து, அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் ஏனையோர்களுக்கும் அனுப்பியுள்ளார்கள். அவர்கள் கல்லூரிகளில் படிப்பதற்கு முன்னால் இருந்த சலுகைகள் அப்படியே இருக்கின்றன. இப்பொழுது அகவிலை உயர்ந்திருப் பதனால், அரிசனங்களுக்கு ஸ்காலர்ஷிப் தொகையை கூட்டிக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. அவர்களுக்கு படிப்பு, உத்தியோகங்கள், கல்விச் சலுகைகள் இவைகளில் 16 சதவிகிதம் ஒதுக்கீடு என்ற முறையில் அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கவில்லை. இதுபோன்று பல காரணங்களை முன்னிட்டு பல அரிசனங்கள் சில இடங்களில் மற்றவர்களால் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்று அநேக குறிப்புகளை நோட்டீஸில் பிரசுரம் செய்து அனுப்பி யுள்ளார்கள். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காக, அமைச்சர் களைச் சந்தித்து பேட்டி காண வந்ததை முன்னிட்டு, அதற்குத் தடை உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அந்தத் தடை உத்தரவை மீறி, அமைச்சர்களைப் பார்க்க அவர்கள் வந்ததற்காக, அவர்களை போலீசார் அரெஸ்ட் செய்துள்ளார்கள். இது சம்மந்தமாக விவாதம் நடத்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோருகிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த ஒற்றிவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் இந்த விஷயத்தை எவ்வளவு தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண் டிருக்கிறேன். ஏனென்றால், அரிசன மாணவர்கள் தங்களுக்கு ரூ. 40 போதாது என்று, ரூ. 60 கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்காக வந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கனவேயே கலைக் கல்லூரிகளில் ரூ. 50 என்றும், தொழில் கல்லூரிகளில் ரூ. 60 என்றும் கொடுக்கப்படுவதைத் திரு. கோதண்டராமன் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனாலும், அவர்கள் அதிகம் கேட்பது அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று. அதற்காகக் கிட்டத்தட்ட 150 பேர்களுக்கு மேல், 159 பேர்கள்,—156 மாணவர் களும், 3 பேர்கள் மாணவர்களல்லாதவர்கள்,—மாணவர்களை நடத் தித் சென்றவர்கள், ஆக 159 பேர்கள் கோட்டையை நோக்கி வந்தார்கள்.

அமைச்சரவையில் எடுத்துள்ள முடிவுப்படி, யார் ஊர்வலம் வந்தாலும், முறையீடு தந்தாலும், அமைச்சர்கள் இறங்கி அவர்களைச் சந்தித்துப் பேசுவது இயலாத காரியம் என்பதால், அப்படி வருகிற வர்களுடைய பிரதிநிதிகளை அமைச்சர் தம் அறையில் சந்தித்துப் பேசும் முறையினை ஏற்படுத்தியிருக்கிறோம். சட்டமன்றம் நடை பெறும்போது, நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின்படி கோட்டை அருகாமையில் ஊர்வலங்கள் வருவது கூடாது என்பது விதி. அதன்படி, வந்தவர்கள் பாலத்திற்கு அருகாமையில் நிறுத்தப்

பட்டு, அங்கே நல்ல நிழல் தரும் தருக்கள் இருக்கும் இடம் அது—அவர்கள் தங்களுடைய நான்கு பிரதிநிதிகளை அனுப்பி, நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சரவர்களைச் சந்திக்கட்டும் என்று, சந்தித்துப் பேசுமாறு அனுப்பி வைத்தார்கள். அமைச்சருடைய அறையில் நீண்ட நேரம் அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டார்கள். தாங்கள் கல்லூரிகளில் 16 சதவிகிதம் அனுமதிக்கப்படவில்லை என்பதும், தாங்கள் விரும்புகின்ற பாடங்களை எடுக்க அனுமதிக்கப்படவில்லை என்பதும், விடுதிக் கட்டணங்களை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதும், எம். ஸி. ராஜா விடுதியில் அதிக இடம் தரப்படவேண்டும் என்பதும், அமைச்சர் அம்மையாரிடம் அவர்கள் எடுத்துத் தெரிவித்த முறையீடுகளாகும். அந்த முறையீடுகளைப் பற்றி, அரிசன நலத்துறை அமைச்சர் பதில் அளித்து, அரசாங்கக் கல்லூரிகளில் அவர்கள் கூறிய 16 சதவிகிதம் எல்லாக் கல்லூரிகளிலும் நிறைவு செய்யப்பட்டு வருகிறது, எந்தவிதக் குறைபாடும் இல்லை என்கின்ற விளக்கத்தை அந்த மாணவர்களிடம் எடுத்துக் கூறி உணர்த்தியிருக்கிறார்கள். அவர்களும், முறையீட்டைச் சொன்னவர்களும், அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு, எல்லாக் கல்லூரிகளிலும் இடங்கள் நிறைவு படுத்தப்படுகின்றன என்று கூறியதில், மனநிறைவு பெற்றார்கள்.

விருப்பப் பாடங்கள் எடுக்கும் நிலை பற்றி "போதுமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால் இது கிடைக்கும். எங்காவது ஒன்றிரண்டு தவறுகள் நடந்திருந்தால், சுட்டிக்காட்டுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன்" என்று அவர்களிடம் அமைச்சர் ஒரு உறுதிமொழி கொடுத்ததன் மேல் அவர்கள் மன நிறைவு பெற்றார்கள்.

உணவு விடுதிக் கட்டணத்தை அதிகப்படுத்திக் கொடுப்பதைப் பொறுத்தவரையில், அதை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கலாமா, உணவினை நல்ல முறையில் கட்டணத்திற்குத் தக்க அளவில் வழங்க கல்லூரி அளவில் வேறு முயற்சி எடுக்கலாமா என்று, கல்லூரி முதல்வர்களைக் கூட்டிப் பேச ஏற்கனவே இந்த அரசு முடிவு எடுத்து, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்களுடைய கோரிக்கைக்கு முன்பே, அரசு இது பற்றிப் பரிசீலித்து வருகிறது என்பதை அவர்களிடத்தில் அமைச்சர் எடுத்துக்கூறி, அந்தக் கோரிக்கையும் கவனிக்கப்படுகிறது என்கின்ற விளக்கத்தைத் தந்தார்கள்.

எம். ஸி. ராஜா விடுதியில் அதிகமான இடங்கள் தேவை என்பதைப் பொறுத்து, "நீங்கள் முறையிடுவதற்கு முன்பாகவே ஏற்கனவே 204 என்று இருந்த இடத்தை இப்பொழுது 350 என்று ஆக்கப்பட்டிருக்கிறது என்கிற இந்த விவரம்கூடத் தெரியாமல், இடம் அதிகமாகக் கேட்கிறீர்களே" என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆக, இந்த வகைகளில் மன நிறைவு பெற்றிருக்கிறார்கள். அதோடு, சட்டசபையில் அம்பேத்கார் படம் வைக்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளையும் எழுப்பியிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் பதில் அளித்த பிறகு, மாணவர்களுடைய பிரதிநிதிகள், திரும்பி வந்து கூடியிருந்து மாணவர்களிடம் சொன்னதும்,



அவர்கள் கலைந்து செல்வது முறையானது; நியாயமானது. ஊர்வலம் வந்தவர்கள் முறையீட்டிற்கு விவரங்கள் சொன்ன பிறகு, விளக்கம் அளித்தபிறகு கலைந்து செல்வது என்பது இல்லாமல், அவர்கள் கலைந்து செல்லாமல், அனைவரும் கோட்டைக்கு வந்தே தீருவோம் என்று புறப்பட்டார்கள். போலீசார் தடை உத்தரவை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி நிறுத்தினார்கள். அவர்கள், மாணவர்கள் அணி அணியாக உள்ளே வரத் தலைப்பட்டார்கள். அப்படி அவர்கள் வருவதால் கலகம் விளையும், அமளி எழக்கூடும் என்று போலீசாருக்குத் தென்பட்டது. அவர்களுக்கு எப்படி இடம் கொடுக்க முடியும்? அப்பொழுது, மேல் அவை சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள்கூட, தான் வருவதற்கும் வழி இல்லாது, மவுண்ட்ரோட்டைச் சுற்றிப் போகும் வண்ணம் போலீசார் அவர்களைத் திருப்பி விட்டார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு சங்கடமான சூழ்நிலை ஏற்பட, அணி அணியாக வந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட அனைவரும் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல், கைது செய்யப்பட்டது பிற்பகல் ஒன்று அல்லது இரண்டு மணிக்கு என்றால், மாலை 5-30 மணிக்கெல்லாம் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆகவே, எந்த விதமான ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கும் அவசியம் இல்லை என்பதைக் கூறி, தங்களுக்கு நிலைமையை எடுத்துரைத்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### 3. தன்னிலை விளக்கம்.

துணைக்கேள்விக்கு விடையளிக்கையில் தன்னைப்பற்றி முதலமைச்சர் கூறியது குறித்து திரு. க. கோமதிசங்கர தீட்சிதரின் விளக்கம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, ஒரு பர்ஸனல் எக்ஸ்ப்ளநேஷன். மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள், விபசாரம் பற்றி நான் ஒரு உப கேள்வி போட்டபோது, எனது பருவ நிலை பற்றிக் கூறினார்கள். தனிப்பட்ட முறையில் அவர்களை நான் அன்புடன் பாராட்டுகிறேன். ஆனால், மக்களுக்கு சேவை செய்யக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதைக் கவனிக்க வேண்டும். இந்த சென்னை நகர் நல்லபடியாக பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதல் மந்திரி எடுக்க வேண்டும். விபசார விடுதிகள் விஷயமாக நான் பல கடிதங்கள் எழுதியிருக்கிறேன். பத்திரிகைகளில் பார்க்கிறோம், பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் என்ன என்ன நடக்கின்றன என்று. அதுபோல சென்னை நகரமும், விபசார நகரமாகாமல், ஒரு சிறந்த நகரமாக இருக்க வேண்டும். வர, வர இங்கே விபசாரம் பெருகிக் கொண்டே வருகிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு விட்டன. அதை வன்மையாக எதிர்த்து, நிச்சயமாகக் கண்டித்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சென்னை நகரத்தை நல்லபடி

யாகப் பாதுகாக்க வேண்டும். அதில் என் பருவத்தைக் கருதாமல், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்களுடைய பருவத்தைக் குறைகூறவில்லை. அவரிடத்தில் இருக்கும் அன்பு உரிமை காரணமாக சொன்னேன். அதை அவர்கள் வருத்தமாக எடுத்துக் கொள்ள வில்லை என்பது தெரியும். 70 ஆண்டு (குறுக்கீடு) ஆம், 80 ஆண்டு (திரு. என். எஸ். வி. சித்தன் : பத்து ஆண்டு குறைத்து இளைஞர் ஆக்குகிறீர்களே) 80-ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது நான், அவருக்குப் பொன்னாடை அணிவித்து, "80 வயது இளைஞர்" என்று குறிப்பிட்டேன். 80 ஆண்டுப் பருவத்திலும் நல்ல இளமையோடு சட்டமன்ற பணிகளை ஆற்றிவருகிறார்கள், அவர்கள் கூறிய சென்னை மாநகரம் புனிதமாக இருக்கவேண்டும் என்பதில் இங்கே மன்றத்தில் இருக்கிற வேறு யாருக்கும் இரண்டாவது கருத்து நிச்சயமாக இருக்க முடியாது.

ஆனால் வேறு மாநிலங்கள் கெட்டுப் போயிருக்கின்ற அளவிற்கு இந்த மாநிலம் கெட்டுவிடவில்லை. வேறு பல மாநிலங்களில் விபசாரம் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டு, அவர்களை டாக்டர்கள் அடிக்கடி பரிசோதித்துப் பார்த்து, "நன்றாக இருக்கிறார்கள்" என்று சர்டிபிகேட் கொடுக்கும் நிலைமை இருந்து வருகிறது. பம்பாய் போன்ற இடங்களில் இதற்காக அழகுமிக்க தெருக்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு விபசாரம் பகிரங்கமாக நடைபெற்று வருகிறது. அந்தக் காலத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்னிலையில் அதற்காக மறியலே நடத்தி, அந்த வீர மங்கையர் ஒரு பெரும் போராட்டமே நடத்தி, அதில் வெற்றியும் பெற்று, அந்த உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்குள்ளே, தமிழகத்திற்குள்ளே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதவாறு காப்பதில் இந்த அரசுக்கு எல்லாக் கட்சியில் உள்ளவர்களின் ஒத்துழைப்பும் மிகமிகப் தேவை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். திரு. தீட்சிதர் அவர்களுடைய பருவம் மட்டுமல்ல, அவருடைய ஆழ்ந்த அனுபவம், அறிவாற்றல் தொண்டு எல்லாவற்றையும் நான் மதிப்பவன். இதையே அவர் என்னுடைய விளக்கமாக எடுத்துக்கொள்வார்கள் என்று கூறி, அமர்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, நக்கீரர் அவர்கள் "திருமுருகாற்றுப்படையை" எழுதும்போது "மலைக் கிழவோனே" என்று எழுதி முடித்ததைக் கண்டதும் ஸ்ரீமுருகப் பெருமானுக்குக் கோபம் வந்துவிட்டதாம். அதுபோல் திரு. தீட்சிதர் அவர்களுக்கு அவருடைய பருவநிலையைப் பற்றிக் குறிப்பிட்டதும் கோபம் வந்து, "இவரைப்போய் பருவ நிலை கடந்தவர் என்று கூறியது எவ்வளவு தவறாகப் போய்விட்டது" என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உணரும்படிச் செய்துவிட்டார். திரு. தீட்சிதர் அவர்களுடைய உண்மைநிலையை அறிய உதவிய முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).



4. நடைமுறைக் கேள்விகள்.

(அ) கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விடையளிப்பதிலுள்ள காலதாமதம் குறித்து.

Dr. H. V. HANDE : Before I read my call-attention notice I want to raise a point of order.

This 'call-attention notice' was given on the 8th of this month. The department has taken nearly 21 days to act on this notice ; whereas in the Legislative Council they are able to collect information in ten days, in our Assembly Department they have taken 21 days to send this call-attention notice to the concerned department and collect information. Will the Hon. Leader of the House enlighten us why this call-attention notice took such as long time, when it was such an important matter and the students had to be supplied with text-books in time ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்க வேண்டும். நீங்கள் நோட்டீஸ் கொடுத்த உடனே அதை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, வேண்டிய தகவல்களைப் பெறுகிறோம். எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவாக தகவல்களைப்பெற்று தருகிறோம். மேலவையில் வந்துவிட்டது. இங்கு வரவில்லை என்று ஒப்பிட்டுச் சொல்வதெல்லாம் சரியானதாக ஆகாது. ஒன்றிரண்டு சமயங்களில் சிறிது காலதாமதமாகலாம். எல்லா தகவல்களையும் விரைவில் பெற நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம்.

5. கவன ஈர்ப்பு.

(அ) அரசு பாடப் புத்தகங்கள் கிடைப்பதிலுள்ள காலதாமதத்தினாலும் அவற்றிலுள்ள பிழைகளினாலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்.

Dr. H. V. HANDE : Sir I wish to call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, viz., inconvenience caused to students of 6th to 11th Standards due to non-availability of text-books and also due to defect and mistakes in the text-books and the need to take immediate steps to make available to all students properly printed text-books in time.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"6-ஆம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்காத காரணத்தினாலும், பாடப்புத்தகங்களில் தவறுகள், மற்றும் குறைபாடுகள் இருப்பதன் காரணத்தினாலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடு பற்றியும், பாடப்புத்தகங்கள் முறையாக அச்சடிக்கப்பட்டு

உரிய காலத்தில் எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டிய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க.

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: I now call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the inconvenience caused to the students from 6th to 11th Standards due to the non-availability of text-books and also due to defects and mistakes in the text-books and the need to take immediate steps to make available to all students properly printed text-books in time.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :— .

"6–ஆம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்காத காரணத்தினாலும், பாடப்புத்தகங்களில் தவறுகள், மற்றும் குறைப்பாடுகள் இருப்பதன் காரணத்தினாலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு பற்றியும், பாடப்புத்தகங்கள் முறையாக அச்சடிக்கப்பட்டு, உரியகாலத்தில் எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்யவேண்டி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க"

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1956-ஆம் ஆண்டு கல்வித்துறை வெள்ளை அறிக்கையின் மீதான சட்டமன்றக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிவுரைகளை ஒட்டி, 1957–58-ஆம் ஆண்டிலேயே அரசு பாடப்புத்தகங்களை வெளியிட வேண்டும் என்னும் முடிவு எடுக்கப்பட்டது. இம்முடிவு சட்டமன்றத்தின் இரு அவைகளாலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்கொள்கை படிப்படியான கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. 1960–61-ஆம் ஆண்டில் 5-ஆம் வகுப்புக்கான ஆங்கிலப் பாடப் புத்தகத்தை வெளியிட்டதன் மூலம் இக்கொள்கை நிறைவேற்றப்படத் தொடங்கியது. கீழே காணும் பாடப்புத்தகங்கள் அரசால் வெளியிடப்பட்டு "மவுண்ட் சாலை"யில் உள்ள அரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டன. அவையாவன :—

(1) தமிழ்ப் பாடப்புத்தகங்கள்—1 முதல் 8 முடிய உள்ள வகுப்புகளுக்கு உரியவை.

(2) ஆங்கிலப் பாடப்புத்தகங்கள்—4 முதல் 8 முடியவுள்ள வகுப்புகளுக்கு உரியவை.

[பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்குரிய (பதினோராம் வகுப்பு) ஆங்கிலம், தமிழ் பாடப்புத்தகங்கள் இதற்கு முன்னர் பல ஆண்டுகளாகவே தொடர்புடைய பல்கலைக் கழகங்களால் வெளியிடப்பட்டு வந்துள்ளன.]

பழைய அரசுப் பாடப்புத்தகங்களை அச்சிடுதல் தொடர்ந்து அரசு அச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் அச்சிடப்படவேண்டிய 61.4 லட்சம் புத்தகங்களில், 22—8—1970 அன்று





வரை அரசு அச்சகம் 52.86 லட்சம் பிரதிகளை முடித்துத் தர இயன்றது. இதற்கு முக்கிய காரணம் காகிதப் பற்றுக்குறையேயாகும். பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்குப் போதுமான காகிதத்தை தன்னால் ஒதுக்கித் தர இயலாது என்று மத்திய அரசு தெரிவித்துவிட்டதால், வெளிச்சந்தையில் காகித உற்பத்தியாளர்களிடமிருந்தே வாங்க வேண்டிவந்தது. இருந்தபோதிலும் இந்தப் புத்தகங்களெல்லாம் முந்திய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த புத்தகங்களின் மறு பதிப்புகளாக இருந்தமையால், இந்தப் புத்தகங்களின் பற்றுக்குறை அவ்வளவாக உணரப்படவில்லை.

1970–71-ல் அரசுப் பாடப்புத்தகங்களை அச்சிட்டு வழங்கும் பணியை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு பாடப்புத்தகக் கழகம் ஒன்றை அமைக்க அரசு முடிவு எடுத்தது. இக்கழகம் 21—3—1970 அன்று சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. அரசு கீழ்க்கண்ட பாடப்புத்தகங்களையும் வெளியிட முடிவு செய்தது :—

(1) தமிழ்–ஆங்கிலப் பாடப் புத்தகங்கள்—9, 10-ஆம் வகுப்புகளுக்கு உரியன.

(2) கணிதப்பாடப் புத்தகங்கள் (தமிழில்) 3 முதல் 10 முடிய உள்ள வகுப்புகளுக்குரியன.

பாட நூற்கழகம் பதிவு செய்யப்படுவதற்கு முன்னரேயே அவ்வத்துறைகளில் உள்ள வல்லுநர்களைக் கொண்டு பாடநூல்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலம் தவிர, ஏனைய பாடங்களில் ஒவ்வொரு நூலிலும் இரண்டு வகைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒரு வகைப் பாடநூல் மதுரைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள மாவட்டம்களுக்கும் பிறிதொரு வகைப்பாட நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள மாவட்டங்களுக்கும் உரியவை ஆகும்.

பாட நூற்கழகத்திற்கு அதன் தொடக்க நிலையில் பல்வேறு இன்னல்களும் இடர்ப்பாடுகளும் ஏற்பட்டன. இடையூறுகளில் ஒன்று அச்சகக் காகிதப் பற்றுக்குறையாகும். இது இந்தியாவெங்கிலும் பரவலாக உள்ளது. இப்பிரச்சினை இந்திய அரசின் நாட்டத்தை ஈர்த்துள்ளது. அவர்கள் இதற்கு இன்னும் ஒரு தீர்வைக் கண்டபாடில்லை. பெரும் இடர்ப்பாட்டுடன், ஈரோட்டிலுள்ள சேஷசாயி பேப்பர் மில் நிறுவனம் காகிதம் வழங்கியது. கல்கத்தாவில் உள்ள டிட்டாகர் காகித ஆலையும் காகிதம் வழங்கும்படி கேட்கப்பட்டது. ஆனால் அங்கு ஆலையில் நடந்த வேலை நிறுத்தத்தாலும், போக்குவரத்து இடையூறுகளாலும் அந்நிறுவனம் ஆணையை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியவில்லை. மேலும் பக்கங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்ட முதல் மதிப்பீடு உண்மையில் தேவைப்படுவதைக் காட்டிலும் குறைவே என்பது தெரியவந்தது; ஏனெனில் சில புத்தகங்களில் பக்கங்களின் எண்ணிக்கை அதிகம் என்று தெரியவந்தது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 ஆகஸ்ட் 29

ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைத்த பிறகு புதிய அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிடும்பணி கீழ்க்கண்ட மூன்று தனியார் அச்சகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது :—

1. திருவாளர்கள் மேப்ஸ் அண்டு அட்லாஸஸ், பி. லிட் நிறுவனத்தார், சென்னை.

2. காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

3. ஓரியண்ட் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

மதுரைப் பல்கலைக்கழகப் பகுதிக்கான புத்தகங்களை அச்சிடும் வேலையை கடைசியாகச் சொல்லிய இரு அச்சகங்கள் எடுத்துக் கொண்டன. சென்னைப் பல்கலைக் கழகப் பகுதிக்கு வேண்டிய புத்தகங்களை அச்சிடும் வேலையை முதலில் சொல்லிய அச்சகத்தினர் எடுத்துக் கொண்டனர். அச்சிடவேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை "டெமி ஆக்டேவா" அளவினதான 22 புத்தகங்கள் ஆகும். அச்சிடப்படவேண்டிய படிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 56 லட்சம் ஆகும். அச்சுக் கோப்பிலும், காகிதம் பெறுவதிலும் இடர்ப்பாடு இருந்தபோதிலும் சிவகாசி அச்சகங்கள் உரிய காலத்தில் வேண்டிய பிரதிகளை அச்சிட்டுக் கொடுக்க முடிந்தது. பங்கீட்டு முகவரிகள் மூலமாக மதுரைப் பல்கலைக் கழகப் பகுதி முழுவதும் இப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. மெஸர்ஸ் மோப்ஸ் அண்டு அட்லாஸஸ் லிமிடெட், வேண்டிய அளவு ஆங்கில, தமிழ்ப்பாட புத்தகங்களை அச்சிட்டுக் கொடுக்க முடிந்தது. அதே சமயத்தில் பல்வேறு வகுப்புகளுக்கு வேண்டிய கணிதப் புத்தகங்களை அவர்கள் அச்சிட்டு உரிய காலத்தில் முடித்துக் கொடுக்க முடியவில்லை. இதற்கு அச்சுக்கோப்பு வேலையில் அவர்கள் அடைந்த இடர்ப்பாடும் அவர்களது இயந்திரம் பழுதடைந்ததும் தான் காரணமாகும். தானியங்கிப் புத்தகக் கட்டு இயந்திர வசதியை இவர்கள் பெற்றிராததால், புத்தகங்களுக்கு அட்டை போட்டு "பைண்டு" செய்வதில் மூன்று அச்சகத்தினருக்கும் நிறைய வேலை கொண்டது.

மெஸர்ஸ் மோப்ஸ் அண்டு அட்லாஸஸ் லிமிடெட் அச்சிட முடியாத புத்தகங்களை அச்சிட்டு முடித்துக் கொடுக்கும் பொருட்டு, இக்கழகம் சில உடனடி ஏற்பாடுகளை எடுத்துக் கொண்டது. இப் புத்தகங்களில் சில, சிவகாசியில் கீழ்க்காணும் மூன்று அச்சகங்களில் அச்சிடப்பட்டன :—

1. சகாதேவன் ஆஃப்ஸெட்,' பிரிண்டர்ஸ், சிவகாசி.

2. நேஷனல் லித்தோ பிரஸ், சிவகாசி.

3. காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

6, 7, 8-ஆம் வகுப்புகளுக்கான கணிதப் புத்தகங்கள் சென்னை மலைச்சாலையிலுள்ள நாஷனல் அச்சகத்தில் அச்சிடப்பட்டன. காகிதப் பற்றுக் குறை காரணமாக இங்கும் கணிசமான தொல்லை ஏற்பட்டது. சென்னை, மவுண்ட் சாலையில் உள்ள நாஷனல் அச்சகத்துக்கு "ரீல்களில்" தாள் தேவைப்பட்டது. ரீல்களில் தாள் வழங்குமாறு சேஷசாயி காகித ஆலை கேட்டுக் கொள்ளப்பட்டது.



1970 ஆகஸ்ட் 29] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பள்ளிக்கூடங்கள் மீண்டும் திறக்கப்பட்ட பிறகு சுமார் ஒரு வார காலதாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், ஆங்கிலத்திலும் தமிழிலும் பாடப்புத்தகங்கள் உரிய காலத்தில் ஏறத்தாழ அச்சடிக்கப்பட்டு எல்லாப் பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பது மேற் சொல்லியவற்றிலிருந்து தெரிய வரும். கணிதப் பாடப்புத்தகங்களைப் பொறுத்தவரையில், அச்சடித்துக் கிடைக்கக் கூடிய பிரதிகளை எல்லாம் அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தது அவர்களுக்குத் தேவையான அளவில் ஒரு பகுதியேனும் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பணியின் அளவு மிக மகத்தானது. இக்கழகம் தொடக்க நிலையில் எண்ணற்ற இன்னல்களையெல்லாம் எதிர் நோக்கியது. எடுத்துக்காட்டாக, காகிதப் பற்றுக்குறை, அச்சுக் கோத்தலில் இடர்ப்பாடு, அவசியமான பணியாளர் தேவை போன்ற இடர்ப்பாடுகளை அது தொடங்கப்பட்ட முதலாண்டிலேயே கண்டது. இத்தகைய எல்லா வகையான இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதும் 56 லட்சம் அரசு பாடப்புத்தகப் பிரதிகளில் 44 லட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டு 22—8—1970 அன்றுக்கு முன் வழங்கப்பட்டு விட்டன.

இப்போது பெற்ற அனுபவத்தைக் கொண்டு, எவ்வகையானும் எவ்விதத்தாமதமுமின்றி அடுத்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை இக்கழகம் தயாரிப்பதில் இடர்பாடு எதுவும் இருக்காது.

இந்த அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காகத் தனியார் அச்சகங்களை அரசு நம்பியிருக்காத வகையில் கிழக்கு ஜெர்மனியிலிருந்து அவசியமான அச்சு இயந்திரங்கள் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழு வசதி பெற்ற அச்சு இயந்திரம் நிறுவப்பட்டதும், இத்தகைய பாடப்புத்தகங்களை அச்சிடுவதில் ஏற்படும் பெரும்பாலான இடர்ப்பாடுகள் தவிர்க்கப்படும்.

காகிதத்தின் தரம் நன்றாக இல்லையென்றும், முடிவு செய்யப்பட்ட புத்தக விலைகள் மிகவும் உயர்வாக இருக்கின்றனவென்றும், தவறாக அச்சிடப்பட்டிருத்தல், தலை கீழாக அச்சிடப்பட்டிருத்தல், புத்தகங்களில் வெற்றுப் பக்கங்கள் விடப்பட்டிருத்தல் போன்ற புகார்கள் வந்துள்ளன. புத்தகத்தைப் படிக்கும் மாணவர்கள் கண்கள் தெறிக்காத வகையில் புத்தகத்தை அச்சிடும் காரியத்துக்காக, டிட்டாகர் காகித ஆலை காகிதங்களை தனிப்பட்டவாறு தயாரித்துள்ளது. கடந்த ஆண்டில் தனியார் வெளியீட்டாளர்கள் அச்சிட்டு வெளியிட்ட இதைப்போன்ற புத்தகங்களின் விலையைக் காட்டிலும் இப்பாடப்புத்தகங்களுக்கு முடிவு செய்த விலைகள் கணிசமான அளவிற்குக் குறைவாகவேயுள்ளன. 56 லட்சம் பிரதிகள் அச்சடிக்கையில் அச்சில் ஒரு சில தவறுகள் இருக்கத்தான் செய்யும். அத்தகைய புத்தகங்களைத் திரும்பப் பெற்று அவற்றிற்குப் பதிலாக நல்ல புத்தகங்களைக் கொடுக்குமாறு புத்தகம் வழங்குவோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சில புத்தகங்கள் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டதாக குறை கூறப்பட்டுள்ளது. நாணயமற்ற வணிகர்கள் சிலர்

புத்தகம் சரிவரக் கிடைக்காததைத் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டிருக்கவேண்டும். இது குறித்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பாடப்புத்தகக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்தக் குறையை நீக்க வேண்டுமாயின் உண்மையில் தேவைப்படும் புத்தகங்களைக் காட்டிலும் அதிகப் புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும். இவ்வகையான பிரச்னை அடுத்த ஆண்டில் எழாது.

மாணவர்களுக்குத் தொல்லை ஏற்பட்டதற்காக ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.

* Dr. H. V. HANDE: Sir, it is about 2½ months since the schools have reopened. Even now a number of boys and girls have not got books. Even according to the statement of the Hon. Minister, upto 22nd August 1970 only about 44 lakhs of books have been supplied in a delayed manner. I want to know why this slip-shod arrangement has been made by the Department and why there is no proper co-ordination and there is administrative inefficiency. Why not the administrators who are responsible for these things sit together and find out as to what are the materials required for the printing of these books? Also I want to know why you have completely robbed some of the small printers of the opportunity of publishing these books in a proper manner? Also why only three printers have been given the monopoly rights to publish these books and if this is the case, the very purpose of nationalization is defeated. A large number of printers have to print these books because still I find a number of shops displaying in the boards—

'தமிழ் புத்தகம் 8-வது வகுப்பு இல்லை, கணிதப் புத்தகம் ஒன்பதாம் வகுப்பு இல்லை'......

The newspapers have also published photostat copies of these notice boards. I have also received a number of complaints from the students about the delay in getting books. So, what steps do the Government proposed to take to prevent such a state of affairs and see that the same story is not repeated next year?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவர் அவர்களே, நான் அறிக்கையில் விவரமாகக் கூறியிருக்கிறேன். பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் என்ன, என்ன இடர்ப்பாடுகள் ஏற்பட்டன என்றும் தெரிவித்திருக்கிறேன். முன்பு ஆண்டுக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் என்று எடுத்துக்கொண்டு வந்தோம். இந்த ஆண்டு ஆங்கிலப் புத்தகம் 2, தமிழ்ப் புத்தகம் 2, கணக்குப் புத்தகம் 3-இல் இருந்து 10 வரை எடுத்துக்கொண்டதில் அரசாங்கம் டெண்டர் கோரி மலிவான நிலையில் உள்ளதைத்தான்—அதுவும் பெரிய கம்பெனிகளுக்கு அச்சக இலாக்கா டைரெக்டர், வொர்க்ஸ் மானேஜர் இவர்களுடைய சம்மதத்தின்—உத்தரவின் பேரில் கொடுக்கப்பட்டுள்ளது: நமக்கு வேண்டிய அச்சிடும் தாள்களை, நாம் இந்திய அரசாங்கத்திற்கு எழுதியும், தருகிற மாதிரி இல்லை. நாமே டிட்டாகர் கம்பெனிக்கு எழுதி அந்த நகரில் இருந்து இங்கே தாள்கள் வரவழைப்பதற்குள் காலதாமதம் ஏற்பட்டது. பொதுவாக ஆங்கிலம், தமிழ்ப் பாட



புத்தகங்களைப் பொறுத்தவரையில் பிரச்சினை ஓரளவுக்கு முன்கூட்டியே தீர்ந்துவிட்டது. கணிதப் புத்தகத்தைப் பொறுத்தவரையில் எழுத்தோடு, அங்கங்கே எண்களையும் சேர்த்து அச்சிடுவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. மேலும் மேப்ஸ் அண்டு அட்லாஸஸ் பிரைவேட் நிறுவனத்தாரின் மெஷின் ஒன்று பழுதடைந்த காரணத்தினால் இந்த வேலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஆயினும் இப்போது நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் பிரதிகள் வீதம் அச்சிடப்பட்டு 22—8—1970-க்குள் 44 லட்சம் பிரதிகள் வழங்கப்பட்டுவிட்டன. இப்போது தினமும் ஒரு லட்சம் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு நமக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள், அவற்றைச் சமாளிக்க நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்—இந்த அனுபவங்களை எல்லாம் கொண்டு, அடுத்த ஆண்டு காலாகாலத்தில் முன்கூட்டியே அங்கங்கே தேவையான பாடபுத்தகங்கள் கிடைக்க, இரண்டு நாட்களுக்கு முன்பாக நான் அதுபற்றி அதிகாரிகளுடன் பேசி ஒரு முடிவு எடுத்திருக்கிறேன். வருகிற ஆண்டில் நமக்கு இத்துறையில் எவ்வித சங்கடமும் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஆர். கருப்பையா:</u> தலைவர் அவர்களே, இந்தப் புத்தகங்களை அச்சிட்டு இருப்பதும் தனியார் துறைதான். அவற்றை விநியோகம் செய்து வருவதும் தனியார்கள் தான்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> கொடுத்திருக்கும் அறிக்கையின் மீது ஏதாவது விளக்கம் பெறவேண்டுமென்றால்தான் கேட்கலாம்.

<u>திரு. ஆர். கருப்பையா:</u> திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விநியோகஸ்தராக யாரை நியமித்திருக்கிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:</u> முன்பு மாவட்டத்திற்கு ஒருவர் இருந்தார். டெவலெப்மெண்டு டிஸ்ட்ரிக்ட் என்பதாக இவ்வாண்டு மாவட்டத்திற்கு இரண்டு பேர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். கூடுமானவரையில் பரவலாகவே கொடுக்கப்படவேண்டும் என்று இருக்கிறது. திருச்சி மாவட்டத்திற்கு விநியோகஸ்தர் யார் என்பது பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

<u>திரு. என். எஸ். வி. சித்தன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, 1957-ம் ஆண்டு எடுத்த முடிவின் அடிப்படையில் இந்தப் பாட புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. கடந்த 13 ஆண்டுகளாக இதுமாதிரியான நிலைமை ஏற்பட்டு இருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது ஆகும். அடுத்த ஆண்டுக்கான பாட புத்தகங்கள் எவ்வளவு தேவைப்படும் என்று இந்த ஆண்டே கணக்கெடுத்து ஏற்பாடுகள் செய்து கொண்டால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது. மேலும், தனியார் மூலமாக விநியோகம் செய்வதால் அவர்கள் அதிக விலைக்கு விற்க ஏதுவாகிறது. ஆகவே பாட புத்தகங்களை நேரடியாகப் பள்ளிகளுக்கே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, கிழக்கு ஜெர்மனியிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஆகக்கூடிய இயந்திரம் வந்த பிறகு நாமே இந்தப் பாடப்புத்தகங்களை அடித்துக்கொண்டால் தனியார் கம்பெனி யாரையும் எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே முதலில் டெக்ஸ்ட் புக் சொஸைட்டிக்காக தனியாக ஒரு அச்சகம் ஒரு கோடி ரூபாயில் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எத்தனை பிரதிகள் வேண்டுமானாலும் அத்தனை பிரதிகளையும் அடித்துக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். அதற்கு இன்னும் ஒரு இரண்டு அல்லது மூன்று ஆண்டு காலம் ஆகும்.

நாம் ஆண்டுக்கு 2, 3 புத்தகங்களை மட்டும் எடுத்துக்கொண்டிருப்போமேயானால் சமாளித்திருக்கலாம். இந்த ஆண்டு எல்லாக் கணக்குப் புத்தகங்களையும், 9-வது 10-வது வகுப்புக்களுக்காக இரண்டு ஆங்கிலமும், இரண்டு தமிழ்ப்புத்தகங்கள் எடுத்த காரணத்தினால் நம்மால் முடியாமல் தனியாரிடம் ஒப்படைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. தனியார் துறைகளும், அரசாங்கத்திற்குத் தானே என்று அவர்கள் சுணக்கம் செய்வதற்குக் காரணம் இருக்கிறது. அரசாங்கம் தானே, விரைவில் செய்து கொடுக்கவேண்டாமென்று அவர்கள் நினைக்கிறார்கள். காலதாமதம் செய்வது ஒருவர் இருவராக இருந்தால் கேட்கலாம். பலராக இருக்கிற காரணத்தால் தவிர்க்க முடியாத இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அடுத்த ஆண்டு இதையெல்லாம் தவிர்க்க முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஸார், ஆரம்பத்திலே 50 தனியார்த் துறை அச்சகங்கள் இதை பிரின்ட் செய்வதற்கு கொடுக்க வேண்டுமென்ற அளவுக்கு ஒரு ஏற்பாடு இருந்ததாகவும் அதற்குப் பிறகுதான் இந்த 3, 4 அச்சகங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டது. அதிலே இரண்டு அச்சகங்கள் அச்சுக் கோர்வை இல்லாமல் இருக்கக்கூடிய நிலையில் அச்சடிக்கும் இயந்திரம் மட்டும் இருக்கக்கூடிய நிலையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிவகாசியில் உள்ள அச்சகத்தில் ஒரு சில புத்தகங்களை மட்டும் கொடுத்துவிட்டு மற்ற புத்தகங்கள் பிரின்ட் ஆகவில்லை என்று பிளாக் மார்க்கட்டில் விற்பனை செய்வதன் காரணமாக, நோட்ஸ், கைடு வாங்கினால்தான் இந்தப் புத்தகம் கிடைக்கும் என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்த விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: யாரிடம் அச்சடிக்க வேண்டுமென்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு அதற்காக டெண்டர்கள் கோரப்பட்டு, குறைந்த டெண்டர்கள் கொடுத்தவர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டது. டைரக்டர் ஆப் பிரின்டிங், ஒர்க்ஸ் மானேஜர் ஆகியவர்களைக் கலந்து அவர்கள் ஆலோசனையின் பேரில், இயந்திர சாதன அச்சுக் கருவிகள் இருக்கின்றனவா என்று பார்த்து அதன் பிறகுதான் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு அங்கத்தினர் கூறுவதைப் போன்று சிவகாசியிலே தவறு நடைபெற்று இங்கே





கொண்டுவந்து விற்றார்கள் என்று புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படி வருமானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள், எல்லாப் பள்ளிகளுக்கும் நேரடியாக அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று. முன்னாலே அந்த முறை இருந்தது. புத்தகப் பற்றாக்குறை இருக்கும்போதுதான் அதிக விலைக்கு விற்கக்கூடிய நிலை ஏற்படும். அதிகமாகப் புத்தகங்கள் வந்துவிட்டால் அதிக விலை இராது. அடுத்த ஆண்டு இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாது. இவைகளை எம்.எல்.ஏ., மூலமாக விநியோகம் செய்யலாமா என்றும் யோசனை செய்யப்பட்டது. அப்படி அதன் மூலம் வருகின்ற லாபம் லோக்கல் லைப்ரரி அதாரிடிக்குப் போய்ச் சேருமே என்ற காரணத்தினால் அதனுடைய பிராஞ்சுகள் மூலம் விற்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

## (ஆ) சிறுகளத்தூர் இந்து தேசீயக் கல்லூரி மூடப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த தீர்மானம் டாக்டர் ஹாண்டே அவர்களுடையது.

* Dr. H. V. HANDE: I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the closure of the Hindu National College at Sirugalathur, following the Madras University's announcement that the approval given to the college for running the Pre-University course has lapsed.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு, 1970 பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற தனது கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது:—

"கல்லூரிக்குத் தற்காலிக ஏற்பளிப்பு வழங்கப்படுகையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அந்நிலையத்தின் முக்கிய நிபந்தனை நிர்வாகத்தால் பூர்த்தி செய்யப்படவில்லையாதலாலும், ஆணைக்குழு அறிவித்துள்ளபடி கல்லூரியை நடத்துவதற்கு நிர்வாகம் அளித்துள்ள வசதிகள் மனநிறைவு அளிப்பதாக இல்லாமையைக் கருத்தில் கொண்டும் (எம்) சிறுகளத்தூரில் உள்ள இந்து தேசியக் கல்லூரிக்கு அளிக்கப்பட்ட தற்காலிக ஏற்பளிப்பு 1969-ஆம் ஆண்டுப் பல்கலைக் கழக விவரத் தொகுப்பேட்டில் (University Calendar) தொகுதி I அத்தியாயம் XXVI இல் 29-வது சட்டத்தின் கீழ் தானாகவே ரத்தாகி விட்டதாகக் கருதப்படும்". இத்தீர்மானம், சென்னைப் பல்கலைக் கழகத்தால் சிறுகளத்தூரில் உள்ள இந்து தேசியக் கல்லூரி நிர்வாகத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக் கழகத்துக்கெதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டி, உயர்நீதி மன்றத்தில், சிறுகளத்தூர் இந்து தேசியக் கல்லூரி நிர்வாகம் "ரிட்" மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது என்று தற்போது தெரிய வந்துள்ளது. உயர்நீதிமன்றத்திடமிருந்து தடையுத்தரவைப் பெறுவதன்மேல், வக்காலத்து தாக்கல் செய்

வதற்காக, சென்னைப் பல்கலைக்கழகத்தின் சட்ட ஆலோசகர் தொடர்புடைய எல்லா ஆவணங்களையும் சேகரித்துள்ளார். இப்பொருள் நீதிமன்ற விசாரணையிலிருக்கிறது.

இது உண்மையில் பல்கலைக்கழக அதிகாரிகளால் முடிவு செய்யப் படவேண்டிய பொருளாகும்.

* DR. H. V. HANDE : Is it not a fact that a large number of students are now in 'திரிசங்கு சுவர்க்கம்'.? They cannot go to any other college. They have chosen this college. They have paid the fees, whatever marginal fees were demanded. They have committed themselves to this college. The management have also advertised in the newspapers in the month of June and July calling for applications for P.U.C. Every time they called for application, they had simultaneously informed the University of Madras also that it was proceeding with the admission. When such is the case, it is surprising that the University of Madras had taken such a long time and suddenly came with an announcement that the College is not in the approved list of colleges. The management of this college had invested Rs. 8 lakhs on land and buildings. It has received Rs. 2 lakhs grant from University A number of lecturers have not been paid salaries. The students are at a loss to know what to do. Will the Government break this Gordian-knot, call a conference of the management and the concerned authorities and see that this problem is solved? There may be the autonomy of the University. But the State has got its own responsibility. A number of students are now in 'திரிசங்கு சுவர்க்கம்'. What solution is the Government going to offer to them?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் ஏற்கனவே அறிக்கையில் குறிப்பிட்டபடி இந்தக் கல்லூரியினுடைய நிர்வாகிகள் அந்தக் கல்லூரி நடத்துவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ருத காரணத்தால் பல்கலைக் கழகம் அந்தக் கல்லூரிக்கான அனுமதியை ரத்து செய்து விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று விளம்பரம் செய்து மீண்டும் சேர்த்துக் கொண்டார்கள் என்று தெரிந்தவுடன், பல்கலைக் கழகம் இந்தக் கல்லூரிக்கான அனுமதியை ரத்து செய்து விட்டது. ஆகவே அந்தக் கல்லூரியில் யாரும் சேரவேண்டாம் என்ற அறிவிப்பைத் தர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்கு இடையில் சில பல மாணவர்கள் சேர்ந்துவிட்டார்கள். பல்கலைக் கழகம் இதுபற்றி அக்கறையெடுத்து எங்கெங்கு இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் அவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அனுமதி அளித்திருக்கிறது. நானும் பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம் விவாதித்து இதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன். அவர்களும் அது பற்றி ஏற்பாடு செய்கிறேன் என்று கூறியுள்ளார்கள். அவ்வாறு சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவுதான் 40 அல்லது 50 பேர்கள் அளவுதான். அந்த மாணவர்கள் என்னிடத்தில் ஒரு குறைபாட்டைச் சொன்னுர்கள்.



அவர்களை நந்தனம் மற்றும் உள்ள கல்லூரிகளில், பல்கலைக் கழக விதிமுறைகளின் கீழ் வருமானுல், சேர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறி இருக்கிறேன்.

மற்றும் ஒரு குறை சொன்னுர்கள். 900-த்து சில்லரை, ஆயிரத்துச் சில்லரை, ஆயிரத்து முன்னூற்றுச் சில்லரை என்றெல்லாம் வாங்கி சீட்டிங் செய்து விட்டார்கள் என்று சொன்னுர்கள். அதுபற்றி போலீசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனுல் மாணவர்கள் படிப்பு பாழாகாமல் இருப்பதற்கு என்ன என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அத்தனையும் செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் அவர்களுக்குள்ள குறைகளைப் பற்றிக் கூறுவார்களானுல் அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. தனி உறுப்பினர் அலுவல்

### (அ) தீர்மானம்

மொகஞ்சதாரோ–ஹரப்பா நாகரீகத்தை ஆராய ஒரு சிறப்புக் குழு அமைத்தல்.

* திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின்முன்பு பின்வரும் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன் :

"மொகஞ்சதாரோ–ஹரப்பா நாகரீகம் பழம்பெரும் திராவிட நாகரீகம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், வரலாற்றுப் பேராசிரியர்களும் முடிவாகக் கூறியிருந்தும், முதல் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளில் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தும் ;

பாரீஸ் மாநகரில் 1970-ம் ஆண்டு சூலை திங்களில் நடந்த மூன்ரும் உலகத் தமிழ் மாநாட்டில் இதுபற்றிய மாறுபட்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டிருப்பதாலும் ;

சிந்து நதி தீர நாகரீகம் பழம்பெரும் திராவிட நாகரீகம்தான் என்பதைத் திட்டவட்டமாக, ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை கருதுவதாலும் ;

இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்க ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவை அமைக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது".

ஹாஜி ம. மூ. பீர். முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா ம. பொ. சி. அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிவதால் பாரீஸ் மாநாட்டில் ஏதோ குறை ஏற்பட்டுவிட்டதென்ரே, அந்த மாநாடு சிறப்புற நடைபெறவில்லையென்ரே நான் கருதுவதாக யாரும் எண்ண வேண்டாம் மாநாடு அங்கே சிறப்பாக நடைபெற்றது, பல்வேறு

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 ஆகஸ்ட் 29

நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். பிறப்பால் தமிழர்கள் கலந்துகொண்டார்கள்; பிறப்பால் தமிழரல்லாத வேறு இனத்தார், வேறு நாட்டார் தமிழறிந்த அறிஞர்களாகக் கலந்து கொண்டார்கள்; மொழி ஆராய்ச்சியாளர்களாக ஆங்கிலத்தின் மூலம் தமிழ் பற்றி ஆராய்ந்த வல்லுநர்களும் கலந்து கொண்டார்கள்; ஆகவே, அந்த மாநாட்டிற்கு ஒரு குறை கற்பிக்கக் கூடிய வகையிலே நான் இதைக் கொண்டுவரவில்லை என்பதை நான் முதலிலேயே தெளிவாக்க விரும்புகிறேன்.

"ஹரப்பா–மொகஞ்சதாரோ" என்ற பிரதேசங்கள் சிந்து மாநிலத்திலும் பஞ்சாப் மாநிலத்திலும் இருக்கின்றன. அந்தப் பிரதேசங்களில் 1920–22-ஆம் ஆண்டுகளிலே அகழ்ந்து பரிசோதித்துப் பார்த்தபோது கிடைக்கப்பெற்ற பண்டங்கள், மற்ற மற்றப் பொருட்கள், அப்பொருட்களின்மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்து வடிவங்கள், மனிதர்களின் மண்டையோடுகள் ஆகியவற்றை ஆராய்ச்சி நிபுணர்கள் ஆராய்ந்தார்கள், பண்டங்களை ஆராய்கின்ற நிபுணர்கள் பண்டங்களை ஆராய்தார்கள்; அவற்றின்மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களையும் வடிவங்களையும் மொழியியல் துறை நிபுணர்கள் ஆராய்ந்தார்கள், இதைத் தவிர "லிங்குவிஸ்டிஸ்" என்று சொல்லப்படுகின்ற மொழி ஆராய்ச்சியாளர்களும் தனியாக ஆராய்ந்து, அங்கேயுள்ள நாகரீகம் பல ஆயிரமாண்டு காலத்திற்கு முற்பட்ட திராவிட நாகரீகம் உலகத்திற்கே தலையாய நாகரீகம், அப்படிப்பட்ட நாகரீகத்திற்குரியவர்கள் இந்தியாவின் தென் பகுதியில் வாழ்கிறார்கள் என்று முடிவுசெய்து அறிவித்தார்கள். இன்று தென் பகுதியிலே உள்ள திராவிட நாகரீகம் இந்தியா முழுவதும் ஒரு காலத்திலே பரவியிருந்திருக்கக்கூடும்; இந்தியாவே திராவிட இந்தியாவாக இருந்திருக்கக்கூடும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னவர்கள் முனுசாமியோ, கோவிந்தசாமியோ அல்ல. சர் ஜான் மார்ஷல், என். கே. தத், பாபு கோவிந்த தாஸ் போன்ற ஆராய்ச்சியாளர்களாவர். அவர்கள் இதைப்பற்றி பல வால்யூம்கள் கொண்ட நூற்களை வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த முடிவு நமக்குச் சாதகமாக இருக்கிறது என்பதாலோ அல்லது பெருமையாக இருக்கிறது என்பதாலோ நான் இதிலே ஆர்வங்காட்ட முன்வரவில்லை. ஏற்கனவே ஆராய்ச்சியாளர்கள் செய்துள்ள முடிவுக்கு யாரோ மறுப்புக் கூறியிருக்கிறார்கள். மறுக்கவேண்டிய இடத்திலே மறுத்திருந்தால் அது வேறு விஷயம். மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, கமில் ஸ்வலீபில் என்ற செக்கோஸ்லவாக்யா நாட்டைச் சேர்ந்தவர் அங்கே ஒரு பத்திரிகை வெளியிட்டிருக்கிறார், இரண்டு பக்கங்கள் கொண்ட அந்த ஆராய்ச்சிக் கட்டுரையை—நான் இங்கே படிப்பதானால், நீங்கள் புரிந்து கொள்ளலாம்—படிக்கும்பொழுது அதிலே திராவிட நாகரீகம் என்பது தவறு என்று சொல்லி, ஏற்கனவே ஆராய்ந்தவர்கள் அரை குறையாக ஆராய்ந்திருக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். அது திராவிடர்களுடைய நாகரீகமில்லை என்றால், வேறு யாருடைய நாகரீகம் என்று அவர் கூறவில்லையென்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1970 ஆகஸ்ட் 29] [திரு. ம. பொ. சிவஞானம்]

கமில் ஸ்வலீபில் அவர்கள், தான் மறுப்பதற்கு இது இது காரணம் என்று கூடச் சொல்லவில்லை. அது திராவிட நாகரீகம் என்று அனுமானமாகச் சொல்லிவிட்டார்கள் என்று மட்டுமே சொல்லியிருக்கிறார்கள். கமில் ஸ்வலீபில் கம்யூனிஸ்ட் நாடான செக்கோஸ்லவாக்யா நாட்டைச் சேர்ந்தவர், ஏதோ அபிப்ராய பேதம் ஏற்பட்டு அவர் இப்பொழுது அமெரிக்காவிற்குப் போய்விட்டார். அங்கே அவர் சமஸ்கிருத ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்பு இரண்டாவது தமிழ் மாநாட்டிலே ஹரப்பா–மொகஞ்சதாரோ நாகரீகம் திராவிட நாகரீகம் உடையதுதான் என்று அவரே உறுதிப் படுத்தியிருக்கிறார். அதற்கான சான்றுகளையும் கூட அவர்கள் அப்பொழுது காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது மறுக்கிறார்கள். அப்பொழுது தான் சொன்னது தப்பு என்றும் சொல்கிறார்கள். அவரும் ஒரு ஆராய்ச்சியாளர்–லிங்குவிஸ்ட் தான். தனியாக அவர் மீது நமக்குக் கோபம் இல்லை. அவர்கள் அப்படிச் சொன்னதை வைத்துக்கொண்டு இன்றும் சிலர் வாதிட இறங்கியிருக்கிறார்கள்.

நான் தனிக் குழு அமைக்கவேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் எனக்கு அதிலே சந்தேகம் வந்துவிட்டது என்பதல்ல. அரசாங்கமும் இந்த மன்றமும் ஒரு குழு அமைத்து என்ன முடிவு என்று ஆராயவேண்டுமென்று நான் கேட்கவே இல்லை. அதற்கான அவசியம் இருக்கிறதென்று நான் கருதவும் இல்லை. என்னுடைய தீர்மானத்தில் நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், "சிந்து நதி தீர நாகரீகம் பழம்பெரும் திராவிட நாகரீகம்தான் என்பதைத் திட்டவட்டமாக, ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கப்படவேண்டுமென்று இப்பேரவை கருதுவதாலும்" என்று. ஏற்கனவே ஆராய்ந்தவர்கள் தமிழரல்லாதவர்கள்; தங்களுக்கிருந்த தமிழறிவால், தமிழிலக்கியங்களிலும் உள்ள எழுத்துக்களை, சொற்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்கள். தமிழர்களுடைய பழக்கங்களையும் வழக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து முடிவு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், தமிழறிந்த தமிழர்கள் மூலமே இன்னும் அதிக சான்றுகளைத் திரட்டக் கூடிய வகையிலே ஒரு குழு அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை தனி நபர்கள்தான் இதுபற்றி ஆராய்ந்து தங்கள் முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் தமிழக அரசும் இதுபற்றி ஆராய்ந்து இன்னும் கருத்துக்களைச் சொல்லவில்லை.

இது மொழிவழி தனியரசாக இருப்பதாலும், தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் துணைகொண்டு ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசும் பல்கலைக்கழகங்களும் இதில் முயற்சியெடுக்கவேண்டுமென்று ஏன் நான் கேட்கிறேன் என்றால், லிங்குவிஸ்டிக் ஆராய்ச்சிக்காக இப்பொழுது கம்ப்யூட்டர் என்ற விஞ்ஞான இயந்திரம் பயன்படுத்தப் படுகிறது. அது அதிக விலையுடையது. அதைத் தனிநபர்கள் வாங்கி விடமுடியாது. எனவே, அரசின் முயற்சியோடும் பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்போடும் அந்த கம்ப்யூட்டர் என்ற இயந்திரத்தை

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 ஆகஸ்ட் 29

வாங்கி முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்கின்றேன். சிந்துவெளி நாகரீகம் திராவிட நாகரீகம்தான் என்பதை மேலும் சான்றுகள் காட்டி உறுதிசெய்யவேண்டும்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுன் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. தமிழ்நாட்டு மன்னர்கள் வடக்கே சென்றிருக்கிறார்கள், தமிழ் மக்கள் வடக்கே வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. இதன் காரணமாக, நான் வடக்கே இருக்கிறவர்களுக்கும் தெற்கே இருக்கிறவர்களுக்கும் இனபேதங் கற்பித்து சர்ச்சை செய்யப் போவதில்லை. அத்தகைய சர்ச்சையில் எனக்கு நம்பிக்கை இல்லை. அது வீண் சர்ச்சை. அந்த வீண் சர்ச்சையை விலக்கிவைத்து, தமிழினத்தின் நாகரீகம் பற்றிய சான்றுகளை மட்டும் உறுதிப்படுத்துவதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

நம்முடைய நாட்டிலே மொழியியல் அறிஞர்கள் இருக்கிறார்கள். புலவர்கள் இருக்கிறார்கள். இதுபற்றி என்ன முடிவு எடுப்பது என்பதல்ல பிரச்சினை. ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை நாம் உறுதிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மறைந்த—இந்தியப் பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் சிந்துவெளி நாகரீகம் திராவிடருடையது என்ற கருத்தை ஆதரித்திருக்கிறார்கள். அவர்கள் எழுதிய நூலிலே இந்தக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். "ஹரப்பா—மொகஞ்சதாரோ பகுதிகளுக்குப் போனேன். என்னுடைய கற்பனையிலே, அங்கு காலிலே சிலம்புகளின் ஒலி கலகலவென ஒலிக்க பெண்கள் நடமாடுகிறார்கள். மாடங்களிலே பெண்கள் நடமாடுகிறார்கள்" என்று அவருக்கே உரிய இலக்கிய ரசனையோடு—அவருக்கிருந்த பல தொல்லைகளுக் கிடையிலும் சிறைச்சாலையிலே அவர் அடங்கிக்கிடந்த நேரத்திலே தமது நூலில் எழுதிவைத்து இருக்கின்றார். சிந்துவெளி நாகரீகம், திராவிட நாகரீகம், அந்த நாகரீகத்திற்குரியவர்கள் தென் பகுதியில் வாழ்கிறார்கள். அவர்கள் மொழி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம். அவற்றின் விபிதான் ஹரப்பா—மொகஞ்சதாரோவில் கிடைத்த பொருள்கள் மீது பொறிக்கப்பட்டுக் கிடக்கின்றன என்று நேருஜி எழுதியிருக்கிறார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் நடுநிலைமையோடும் நெஞ்சுறுதியோடும் பேசக்கூடியவர்கள். அவர்களே கூறியிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்லாமல் சர் ஜான் மார்ஷல், என். கே. தத், பாபு கோவிந்தாஸ் போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கி.மு. 3500 முதல் 2750 வரையில் அங்கே திராவிடர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஏற்றுக்கொண்டால், ஹரப்பா—மொகஞ்சதாரோ நாகரீகம் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழம்பெரும் நாகரீகம் என்று புலப்படும். இதை உலகமே ஒப்புக்கொண்டிருக்கிறது. உலகம் ஒப்புக்கொண்ட ஒன்றை இன்று



1970 ஆகஸ்ட் 29] [திரு. ம. பொ. சிவஞானம்]

நாடுவிட்டு நாடு போய்விட்ட காரணத்தால் ஒருவர் மறுக்கிறார். அதுவும் தமிழ் மாநாட்டிலே மறுக்கிறார் என்பதுதான் முக்கியம். அவருடைய தகுதி என்ன என்பது வேறு விஷயம். அவர் இல்லாத இந்த அவையில் நான் அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. அவர்கள் உலகத்தமிழ் மாநாட்டிலே கருத்துச் சொல்ல இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்குப் பிறகும், ரஷ்ய நாட்டிலுள்ள லிங்குவிஸ்டிக் ஆராய்ச்சி நிபுணர்கள் மீண்டும் தாங்கள் சொன்னதுதான் சரி என்று சில வாரங்களுக்கு முன்பு தெரிவித்தார்கள் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். வேங்கடத்திற்குத் தெற்கே இருக்கிற சிந்துவெளித் திராவிட நாகரீகத்தின் வாரிசுகளாக உள்ள—தமிழர்களும், தமிழக அரசும், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களும் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது முறையாக இருக்காது. நாமும் நம்முடைய கடமையைச் செய்வதற்காக, தனிக் குழுவினை அமைத்து, அந்தக் குழு, ஏற்கெனவே கிடைத்த சான்றுகளை வைத்தும், இனியும் கிடைக்கும் சான்றுகளைச் சேகரித்தும், அதன் முடிவை உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் இங்கு இரண்டு குறிப்புகளைக் கூற விரும்புகிறேன். தமிழர்களாக அல்லாத அயல் நாட்டவரான ஜி. யூ. போப், கால்டுவெல், பெஸ்கி போன்றவர்கள் இங்கே வந்து தமிழுக்காகத் தொண்டு செய்திருக்கிறார்கள். இப்பொழுது நடந்த மூன்றாவது மாநாட்டிலே வந்திருந்தவர்களில், எவ்வளவோ பேர் நன்றாகத் தமிழ் பேசும் நல்ல திறனுடையவர்களாக இருந்தார்கள். ஆனால், ஒரு சிலர் அரைகுறை ஞானத்தைக் கொண்டு, லிங்குவிஸ்ட் என்ற முறையில் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். "தேமதுரத் தமிழோசை" என்று பாரதியார் பாடிய வாசகத்தை, தமிழரல்லாத லிங்குவிஸ்ட் ஒருவர், "தேமதுர" என்பதை "தேமதுரை" என்று அதில் "ஐ" காரம் விடுபட்டுவிட்டது என்று நினைத்துக்கொண்டு தேமதுர என்பதை, தேமதுரை என்று எழுதினார். மதுரையிலே தமிழ்ச்சங்கம் இருந்தது, அந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே வளர்ந்த தமிழ் என்று கவிஞர் கூறியிருப்பதாகக் கூறினார். "அல்லிராணி கதை" ஒன்றை புகழேந்திப்புலவர் கற்பனையாகப் பாடியிருக்கிறார். ஆனால், அந்த அல்லிராணி என்பவரை உண்மையில் வாழ்ந்தவராக நம்பி, அவர் மதுரையை ஆண்டதுபோல, அன்னிய ஆராய்ச்சியாளர் ஒருவர் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ஆகவே, சுதந்திரம் பெற்ற நாட்டவராக நாம் மாறிவிட்ட பிறகு, மொழிவழித் தமிழ் மாநிலம் அமைத்துவிட்ட பிறகு, நமக்கு என்று பல்கலைக் கழகங்கள் தோன்றி விட்டபிறகு, இங்கிருப்பவர்கள் அலட்சியமாக இருக்க மாட்டார்கள்—இருக்கக்கூடாது என்று கூறி, நான் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று அவையைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* <u>ஹாஜி ம. மு. பீர் முஹம்மது</u>: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சிலம்புச்செல்வர் ஐயா திரு. ம. பொ. சி. அவர்கள் முன் மொழிந்து பேசிய தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வழிமொழி கின்றேன். மொஹஞ்சதாரோ—ஹரப்பா நாகரீகம் பழம்பெரும்

திராவிட நாகரீகம்தான் என்று தொல்பொருள் ஆய்வாளர்களாலும், வரலாற்றுப் பேராசிரியர்களாலும் முடிந்த முடிவாகக் கடந்த அரை நூற்றாண்டாக ஒப்புக்கொண்ட ஒரு உண்மையை மறுதளிப்பவர்கள் திராவிடத்தின் பழம்பெருமையை உலக மக்கள் மத்தியில் மறைக்க முயல்கின்றனர். நம்முடைய பாரதியின் சாரதி பாரதி கூட "சிந்து நதியின் மிசை நிலவினிலே சேர நன்னாட்டிளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்" என்று பாடியுள்ளார். நம்முடைய புதுமைக் கவி பாரதி ஓடம் ஓட்டி விளையாட கங்கையைத் தேர்ந்தெடுக்கவில்லை, யமுனையைத் தேர்ந்தெடுக்கவில்லை, சிந்துநதியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். சிந்து நதி நாகரீகம், தமிழர்களுடைய நாகரீகம், திராவிடர்களுடைய நாகரீகம்; அந்த நாகரீகத்தை அடிப்படையாக வைத்துத்தான் அவன் சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைக்கச் சொல்கிறான். மதுரமான மலையாள மங்கையரை அந்தப் படகிலே வைத்து ஊர்வலம் வரவேண்டுமென்று சொல்கிறான். அவன் பாடுகின்ற இந்தப் பாட்டுக்குரிய உணர்வே சிந்து நதி தீரத்தில் கண்டுபிடித்த மொஹஞ்சதாரோ–ஹரப்பா, திராவிட நாகரீகம்தான் என்ற கண்டுபிடிப்பை அடிப்படையாக வைத்துத்தான் தோன்றியிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அன்றைய காலத்திலேயிருந்து, இன்றையக் காலம் வரையிலும், நம்முடைய தமிழ்நாட்டினுடைய பழம் பெரும் நாகரீகத்தை, பண்பாட்டை, மொழிச்சிறப்பை, இலக்கண அமைப்பை, இலக்கியத்தில் இருக்கின்ற உன்னத நிலையையெல்லாம், காலத்தால் முற்பட்டிருக்கும் அந்தப் பெருமைகளையெல்லாம் திராவிட நாகரீகத்திற்கு, தமிழர்களின் பண்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் புல்லுருவிகள் பலர் இருக்கிறார்கள் என்ற உண்மையை இந்த நேரத்தில் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்றையக் காலச்சூழலில் தமிழகத்தின் பண்பாட்டை, இலக்கியச் சிறப்புகளை, பொறுப்பற்றவர்கள் காலத்தால் பிற்பட்டது என்று வாதாடுகின்ற முறையிலே தமிழர்களின் பெருமைக்கு, தமிழின் சிறப்புக்கு ஊறுவிளைவிக்கின்ற நோக்கத்துடன் இருப்பதால், நம்முடைய அரசு சிறப்பான முறையில் தனி ஆய்வுக்குழுவினை நியமித்து, மாண்புமிகு ஐயா திரு. ம. பொ. சி. அவர்கள் கூறியதைப்போன்று மொகஞ்சதாரோ–ஹரப்பா நாகரீகம் மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற மிகச்சிறப்பான, தொன்மை வாய்ந்த, உயர்ந்த நாகரீகமே திராவிட நாகரீகம்தான், தமிழ் நாகரீகம்தான் என்கின்ற உண்மையைக் கண்டுபிடித்து, உலகிற்கு உணர்த்தும் வகையில் ஒரு முறையான ஆய்வுக்குழுவினை நியமித்து, அதைச் செயற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அரபு நாட்டிலேகூட, அழகாக இருக்கின்ற பெண்களை "ஹிந்தா" என்று குறிப்பிடுகிறார்கள். இந்தியத் திருநாட்டிலே அராபியர்கள் முதன் முதலாகத் தமிழ்நாட்டிற்கு, தென்பாண்டி மண்டலத்திற்குத்தான் வந்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில்



அழகிய பெண்களை "ஹிந்தா" என்று அழைக்கிறார்கள். அவர்களை இந்தியப் பெண்களைப் போன்ற அழகுடையவர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தியா என்னும் பெயர்கூட அரபுப்பெருமக்கள் "ஹிந்த்" என்று அழைத்ததால்தான் வந்திருக்கிறது என்று மொழி ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு, இங்கு ஆய்வுக்குழு அமைப்பதன்மூலம் மொகஞ்சதாரோ–ஹரப்பா நாகரீகம் மட்டும் அல்ல, உலக ஆய்வாளர்கள் மத்தியில், இந்தியத் திருநாட்டில் மட்டுமல்ல, உலகத்திலேயிருக்கும் பழம் பெரும் நாகரீகத்திற்கெல்லாம், மொழிக்கெல்லாம் நம்முடைய திராவிட நாகரீகம்தான், தமிழ் நாகரீகம்தான், தமிழ்மொழிதான் மூலாதாரமானது என்ற உண்மையை நிரூபிக்கும்வகையில் அரசு குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்களுடைய தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன்.

<u>திரு. கே. விநாயகம்:</u> தலைவரவர்களே, பாரீஸ் நகரத்திலே நடந்த மாநாட்டிலே கலந்துகொண்ட நண்பர்கள், அவர்கள் ஏதோ தவறான முடிவை எடுத்ததைக் கண்டு வருத்தப்பட்டு, அரசியல் சபையிலே வந்து இதைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பது சரியா என்பதை நான் யோசிக்கிறேன். இது ஒரு பழம்பெரும் நாகரீகம், இதிலே சந்தேகம் எவருக்கும் இல்லை.

<u>திரு. ம. பொ. சிவஞானம்:</u> இங்கே வந்திருக்கின்ற விஷயத்திற்கான சான்று–அந்தக் குறிப்பிட்ட பாரீஸ் மாநாட்டுப் பிரதிநிதி படித்த பத்திரிகை என்னுடைய கையிலே இருக்கிறது. அதை எல்லோருக்கும் அச்சடித்துக்கொடுக்க என்னால் முடியவில்லை. அங்கு யாரும் தவறாக நடத்தப்பட்டதாகவும் இல்லை, தவறாக நடந்துகொண்டதாகவும் இல்லை. ஆகவே, அதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதாக நண்பர் மாண்புமிகு திரு. விநாயகம் அவர்கள் நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது தவறு.

<u>திரு. கே. விநாயகம்:</u> நான் பேசி முடித்தால், நான் என்ன கூறினேன் என்பது தெரியும். ஒரு வார்த்தைக்குள்ளேயே அதிலே தவறு கண்டுபிடித்தால், முதலிலே நாம் போயிருக்கவே கூடாது. அங்கு ஆங்கிலத்திலே நடந்தது. தமிழ் மாநாட்டுப் புரொசீடிங்ஸ் மொத்தமும் ஆங்கிலத்தில் நடந்தது. நடந்ததா இல்லையா? எல்லா நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்திலே நடந்தன. அதுபோலவே, அங்கு என்ன பேசினார்கள் என்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலையில் நாம் போக வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:</u> போய் இருக்கக்கூடாது என்ற கருத்தை உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரவர்களிடம் சென்று அறிவித்தார்களா?

<u>திரு. ம. பொ. சிவஞானம்:</u> தலைவரவர்களே, நண்பர் திரு. விநாயகம் அவர்கள், ஆங்கிலத்தில் நடந்தால் புரிந்து கொள்ள முடியாது என்று சொன்னதை வாபஸ் வாங்க வேண்டும். நிச்சயமாக அவர்கள் பேசும் ஆங்கிலத்தை என்னால் புரிந்துகொள்ள

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 ஆகஸ்ட் 29

முடியும். அதுமட்டுமல்ல, அங்கே தமிழிலேயும் நடந்தது. திரும்பவும் கூறுகிறேன், இது தமிழ் சம்பந்தப்பட்ட விஷயம், புரியாதவர்கள் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. கே. விநாயகம்: அரசியல் சபையிலே தலையை எண்ணி 'how many hands' என்று பார்ப்பது போன்றல்ல இது. அப்படியல்ல பேசுவது. என்ன நடந்தது என்பதைப்பற்றி, கடந்த நிகழ்ச்சியைப் பற்றிய புரோசீடிங்க்ஸ்ஸைக் கொடுத்தால் நாங்கள் ஒரு முடிவிற்கு வர முடியும். அங்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. பத்திரிகையிலே ஒன்றிரண்டு செய்திகள் வந்தன. அங்கு நடந்த விவரம் எங்களுக்கும் கிடைத்திருந்து, எங்களிடம் இது பற்றி, "உங்கள் யோசனை என்ன?" என்று கேட்டால் நாங்களும் உங்களோடு சேர்ந்து சொல்ல முடியும்.

மொகஞ்சதாரோ—ஹரப்பா கல்சர் என்பது, திராவிட கல்சர் என்பதிலெல்லாம் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நானும், பேரறிஞர் அண்ணா அவர்களும், நமது சபையிலே வீற்றிருக்கும் செயலாளர் திரு. சி. டி. நடராஜன் அவர்களும்—அவரது பெயரைச் சொல்லியிருக்கக்கூடாது—நாங்களெல்லாம் பச்சையப்பன் கல்லூரியிலே எம்.ஏ. வகுப்பிலே படித்தபொழுது சர் ஜான் மார்ஷல் 1928-ஆம் ஆண்டு அவருடைய புத்தகம் வெளியாயிற்று. மொகஞ்சதாரோ என்பது, ஹரப்பா என்பது இன்றையதினம் வெஸ்ட் பாகிஸ்தானில் இருக்கிறது. இன்னொன்று சிந்திலே இருக்கிறது. இரண்டும் நம்மிடம் இல்லை. நாம் போய்ப் பார்க்கும் பொழுது வேறு ஒரு தேசத்திலே சேர்ந்திருக்கிறது.

அங்கே ஆராய்ச்சி செய்தவர் அவர் மாத்திரமல்ல. மிஸ்டர் வீலர், டைரக்டர் ஜெனரல் ஆப் ஆர்கியலாஜிகல் சர்வே—இப்படிப் பட்டவர்கள் எல்லாம் சிறந்த புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். திராவிட நாகரீகம் என்று அவர்கள் வெறுமனே முடிவுக்கு வந்து விடவில்லை. புதைபொருள் ஆராய்ச்சி செய்து பார்த்து, இறந்து போன உடலை மண் பாண்டத்திற்குள் வைத்திருந்ததைப் பார்த்து, அந்தப் பானைகளிலே "புல்"—மாடு போட்டிருந்ததைப் பார்த்து முடிவுக்கு வந்தார்கள். அப்படிச் செய்ய வேண்டுமென்றுதானே அண்ணா அவர்களைப் புதைத்தீர்கள். குதிரை ஆரியன் கல்சர்; திராவிட கல்சர் மாடுதான். அங்கிருந்த திராவிடர்கள் அதற்குப் பிறகு தெற்கே வந்தார்கள். திராவிடர்கள் வந்த பிறகுதான் ஆரியர்கள் வந்தார்கள். திராவிடன் என்றால் எப்படி இருக்க வேண்டுமென்று அந்தப் புத்தகத்தில் இருக்கிறது. நாலரை அடி உயரந்தான் இருப்பான், கறுப்பாக இருக்க வேண்டும். 'He must be put back உதடு எப்படி இருக்க வேண்டுமென்றால் தடித்து இருக்க வேண்டும். "சப்பிஸ் நோஸ்" இருக்க வேண்டும். "அக்விலன் நோஸ்" ஆக இருந்தால் அவன் ஆரியன். "கர்லி ஹேர்" இருக்க வேண்டும். சர் ஜான் வீலர், சர் ஜான் மார்ஷல் எழுதியிருக்கிறார். இப்படி இருப்பவர்கள் திராவிடர்கள் என்று எழுதியிருக்கிறார். அவர்களிடமிருந்து வந்த நாம் பிறகு மாறி மாறி இன்று தமிழர்களாக இருக்கிறோம். நான் ஐயாவோடு தகராறு வைத்துக்



1970 ஆகஸ்ட் 29] [திரு. கே. விநாயகம்]

கொள்ளப் பேச வரவில்லை. அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரிக்கத்தான் வருகிறேன். இதை ஒரு அரசியல் சபையில் வைத்து, பொலிடிகல் பாடியில் வைத்து விவாதிக்க வேண்டுமா என்றுதான் கேட்கிறேன். அண்ணா அவர்கள் முதல் முதலில் டெல்லிக்குப் போனபோது என்ன கூறினார்? "I come from the Dravidian stock and I am proud to be one' என்று சொன்னார்களே, அதன் பொருள் அனைவருக்கும் தெரியும் அல்லவா? உலகத் தமிழ் மாநாட்டு நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அங்கு என்ன நடந்தது என்பதற்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்துவிட்டு ரெசல்யூஷன் வந்திருந்தால் தெளிவாக இருக்கும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். "Races in South India" போன்ற புத்தகங்களை எல்லாம் அந்தக் காலத்தில் பாஸ் பண்ணுவதற்காகப் படித்தார்கள். இவ்வளவு எல்லாம் படித்தும் 35 மார்க்குக்கு மேல் அந்தக் காலத்து புரபசர்கள் தரமாட்டார்கள். ஹரப்பா, மொகஞ்சதாரோ கல்சர் is definitely, beyond any reasonable doubt, Dravidian culture and here and now I declare it. அந்தத் திராவிடர்களா நாம் என்பதுதான் பேச்சு (கையொலி) காலம் மாறி, பிறகு வந்த ஆரியனோடு தொடர்பு ஏற்பட்ட பிறகு admixture of Tamilian civilization ஆகியிருக்கிறது. ஆறடி இருந்தால் திராவிடன் இல்லை; நாலரை அடி இருந்தால்தான் திராவிடன்; கர்லி ஹேர் இருந்தால்தான் திராவிடன். அப்படி யார் இருக்கிறார்கள்? We are not conscious of our reality (குறுக்கீடு) அது திராவிடியன் கல்சர்தான். சிவனுடைய வாகனம் என்றுகூடக் கருதப்பட்டது. எக்ஸ்கவேஷனில் சிவனுடைய சித்திரங்கள் கிடைத்தன.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு திரு. விநாயகம் அவர்கள் திராவிடர்கள் எப்படி இருந்தார்கள் என்பது பற்றிச் சித்தரிக்கிறார்கள். மனிதர்களே குரங்கில் இருந்துதான் தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். எனவே நண்பர் திரு. விநாயகம் அவர்கள், இன்னும் அந்தக் கட்டத்திலிருந்து மாறுபடவில்லையென்றும் சித்தரிப்பாரா?

திரு. கே. விநாயகம்: ஐயா அவர்கள் குரங்கில் இருந்து வந்திருந்தால் நானும் குரங்கில் இருந்து வந்தவன்தான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு திரு. என். வி. என். அவர்கள் கேட்ட கேள்வி வேடிக்கைக்காகவோ அல்லது விளையாட்டுக்காகவோ கேட்ட கேள்வி அல்ல. திராவிடர்கள் அந்தக் காலத்தில் எப்படி இருந்தார்கள், இப்போது நாம் எல்லாம் திராவிடர்களா, நாம் கலந்து விட்டோம் என்றெல்லாம் திராவிட கலாசாரத்தைப் பற்றிக் குறை சொல்லும் அளவுக்குப் பேசினார்கள். அன்று இருந்த அதே உருவந்தான் இன்றும் இருக்க வேண்டுமென்றால் அது சரியல்ல. எவ்வளவோ ஆண்டுகள் சென்ற நிலையில் உருவங்கள் மாறுகின்றன. டார்வின் சித்தாந்தப்படி மனிதன் குரங்கில் இருந்து வந்தவன். நாமெல்லாம் மனிதர்கள். நாம் இன்று குரங்கு போல் இல்லை. ஆகவே, மனிதர்கள் இல்லையென்று விவாதிக்க முடியாது.

அதே போன்று அப்போது இருந்த அதே உருவத்தில் இல்லை என்ற காரணத்தால் நாமெல்லாம் திராவிடர்கள் அல்ல என்று சொல்ல முடியாது. (திரு. கே. விநயகம்: நான் அப்படிச் சொல்லவில்லை) "நாம் எல்லாம் திராவிடர்களா?" என்று நீங்கள் கேட்ட நிலையில் உங்கள் அருமையான கேள்வியை உங்கள் தரப்பில் இருந்தவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு வரவேற்று, கையொலியும் செய்தார்கள். நீங்கள் அப்படிக் கூறவில்லை என்றால் மகிழ்ச்சியடைகிறேன். குரங்கில் இருந்து மனிதன் வந்தான் என்று சொல்லும்போது இப்போது மனிதன் குரங்கைப் போல் இல்லை. ஆகவே, மனிதர்கள் இல்லை என்று சொன்னால் எப்படியோ அது போன்றுதான் அன்று திராவிடர்கள் இருந்த உருவத்தில் இன்று இல்லாததால் திராவிடர்கள் இல்லை என்று சொல்லுவது இருக்கிறது. உருவம், கலாசாரம் கொஞ்சம் கொஞ்சமாக மாறியிருக்கலாம். அதற்காக திராவிடர்கள் அந்த ஆரிஜினைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று கூற முடியாது.

திரு. கே. விநயகம்: முதலமைச்சர் அவர்கள் நான் ஒரு திசையில் போகும்போது வேறு திசையில் திருப்பி விடுகிறார்கள். It is a result or research. அப்போது இருந்த நிலையைக் கூறி இப்போது அந்த மாதிரி இல்லை என்று கூறினேன். இப்போது நாம் தமிழர்களாக இருக்கிறோம். டார்வின் தியரியிலே தப்பு என்று சொல்லி இப்போது விவாதம் நடக்கிறது. Darvin's theory is now at stake. இப்போதுள்ள ஆராய்ச்சியாளர்கள், டார்வின் தியரி தப்பு, ஏதோ கிறுக்குப் பிடித்தவன் சொன்னது, "பர்வர்டட் மைண்ட்"ல் சொன்னது என்று கூறுகிறார்கள். இதெல்லாம் ஆராய்ச்சிக்குரிய விஷயம். இதிலே கோபித்துக் கொள்ளுவதில் லாபம் இல்லை. We are all proud of saying that we have come from the Dravidian stock. பொருள் என்ன? அப்படிச் சொன்ன பிறகு அதையே வைத்துக்கொண்டு நாம்தான் இவர்கள், அவர்கள் என்று பிரித்துப் பேசுவதில் லாபம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரீகம் திராவிட நாகரீகமா, அல்லவா என்பது பற்றித்தான் தீர்மானம்.

திரு. கே. விநயகம்: அது திராவிட நாகரீகம் இல்லை என்று சொன்னால் அது முழுக்க முழுக்கத் தப்பு.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நண்பர் திரு. விநயகம் அவர்கள் இங்கு எடுத்துள்ள பிரச்சினை இது அரசியல் சபையில் விவாதிக்கப் படலாமா என்பதாகும். சிலம்புச் செல்வர் அவருடைய கருத்தில் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தை அவர் கொண்டு வந்தபோதே நம்முடைய நண்பர் திரு. விநயகம் அவர்கள் இது இங்கே விவாதிக்கப்படக்கூடாது என்ற பிரச்சினையை எழுப்பியிருப்பார்களேயானால் நியாயமாகக் கூட இருந்திருக்கலாம். சிலம்புச்செல்வர் பேசி முடித்து, ஹாஜி பீர் முஹம்மது அவர்கள் வழிமொழிந்து பேசி முடித்த பிறகு திரு.



விநயகம் அவர்கள் எழுந்து இதைப் பற்றி விவாதிக்கலாமா என்று கேட்டதோடு அமையாமல் அது திராவிட நாகரீகந்தான் என்று உறுதியளித்திருப்பதே திரு. ம. பொ. சி. அவர்களுடைய தீர்மானத்தை வழிமொழிந்து பேசியதாகத்தான் இந்த அவை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர வேறு ஒன்றுமல்ல. இதுவே திரு. ம. பொ. சி. அவர்களுக்கு நல்ல வெற்றியாகும்.

திரு. கே. விநயகம்: என்னதான் பேசினாலும் அவர்கள் இந்தப் பக்கம் வரமாட்டார், உங்களை விட்டும் போகமாட்டார். ஒரு பழம்பெரும் நாகரீகத்தை பொலிடிகல் பிரச்சினையாக ஆக்கக் கூடாது என்பதுதான் என் வாதம். ஆக, இப்போது ஒரு குழுவைப் போடுங்கள். அதில் எப்பேர்ப்பட்டவர்களைப் போடவேண்டும்? கொஞ்சம் ஆராய்ச்சி தெரிந்தவர்களை, கொஞ்சம் இதில் அக்கறை கொண்டவர்களைப் போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "...... இது பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவை அமைக்கவேண்டும் ......" என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. பேரவை முடிவு செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

திரு. கே. விநயகம்: சிறப்புக் குழு வேண்டியதுதான். ஆனால் எப்பேர்ப்பட்டவர்களைப் போட வேண்டுமென்றால்

people with authority, with some efficiency of the subject, not you and me, M.L.As. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்கள் என்று இதில் சொல்லவில்லை.

(Thiru V. S. Govindarajan rose.)

THIRU K. VINAYAKAM : Are you going to allow these people to fall upon me just like. . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெறுகிறவர்கள் எம்.எல்.ஏ., போன்றவர்களாக இருக்கக் கூடாது என்று அவர்கள் கூறியது இங்குள்ள எல்லா எம்.எல்.ஏ.-க்களையும் இழிவுபடுத்துவதாகும். ஆகவே அவர்கள் அதைத் திரும்பப் பெறவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் துறையில் வல்ல ஆராய்ச்சியாளர்கள் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால் அவர்களைச் சேர்க்கக் கூடாதா? ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் அக்குழுவில் இருக்கக்கூடாது என்று சொல்வது சட்டமன்ற உறுப்பினர்களை இழிவு செய்வது போலாகும். ஆகவே அதைத் திரும்பப் பெற வேண்டும்.

Thiru K. VINAYAKAM : Do you think you are going to score a point over me. What is all this?

தகுதி பெற்றிருந்தால் அவர்களும் இருக்கலாம். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காகப் போடக் கூடாது என்றுதான் சொன்னேனே தவிர சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த ஆராய்ச்சியில் போதிய அளவு அனுபவமும் திறமையும் இருந்தால் அவர்கள் இதில் இருப்பதைப் பற்றி ஒரு ஆட்சேபனையுமில்லை. ஆகவே, நான் வாபஸ் வாங்குவதற்கு என்ன இருக்கிறது என்று கேட்கிறேன். you are asking me to withdraw. எனக்கு யார் மனமும் புண்படும்படிச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லை, அப்படிப்பட்ட எண்ணம் இல்லாதவன் நான்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> நண்பர் திரு. விநாயகம் அவர்கள் ஆங்கிலத்தில் பேசும்போது Are you going to allow these people to fall upon me just like . . .
என்று நிறுத்தியிருக்கிறார்கள். அதன் முடிவு "டாக்ஸ்" (Dogs) என்றுதான் பொருள். அதை சொல்லாமல் நிறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் ஒன்று முடிவைச் சொல்லவேண்டும், இல்லாவிட்டால் அந்த வார்த்தையை வாபஸ் பெறவேண்டும்.

<u>திரு. கே. விநாயகம்:</u> நான் வாபஸ் வாங்க மாட்டேன். What is all this Sir, I was saying something. I am not going to withdraw. Let him not make this his personal affair. For each and everything he gets up and interrupts. He thinks I will fall a victim to his temptations and make mistake.

(Some members rose.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

<u>திரு. கே. விநாயகம்:</u> பேச ஒன்றுமேயில்லை. I have almost finished. They thought that I would fall a victim to their temptations ஆதலால் இந்தக் கமிட்டி போடுவதில் நாம் கொஞ்சம் யோசனை செலுத்தி நல்ல நிபுணர்களைப் போட்டு நல்லதொரு முடிவிற்கு வர வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, at the very outset I would like to stress the fact that the resolution brought forward by my distinguished friend Mr. Ma. Po. Si. has to be read through with caution. The manner in which discussion has taken place for the last ten minutes gives an indication and convinces everyone who is interested in scientific data and scientific material, how much of heat can be imported into any discussion when it is likely to become political. Therefore while this resolution is perfectly all-right I would like to make one important point.

Let us bear one thing foremost in our mind. Let us try to remove politics from this resolution. Let us try to make it as objective as possible.





With regard to Dravidian culture, so much discussion had taken place right now. There is a misconception. Dravidian culture is common to almost all these areas in Southern India. Those who speak Kannada, Telugu, Malayalam and Tamil—all come from Dravidian stock. Almost all persons from South India are from Dravidian stock. It may be a few centuries ago there were other cultures which had their impact on Dravidian culture. Dravidian culture suffered many damages. For instance, in some parts of 'Old Chera area' and also in Andhra area, there was a lot of impact of Aryan culture on Dravidian culture. Due to this, damage was done to Telugu and large number of words in Telugu which were similar to Tamil were removed and Sanskrit came in its place. Sanskrit words were substituted similarly in Kannada. A number of words, with connotations just as in Tamil, are there in Kannada. You will find them in 'Palaya Kannada' (பழைய கன்னடா) ).You say for going 'போக' 'in Tamil and 'போகு' in Kannada. But for the last two centuries it is 'ஹோகு' What I am saying is there were number of original Tamil words in Kannada. Onslaught of Aryan culture was responsible for loss of those Tamil words in Kannada literature. Such onslaught had taken place in Telugu also. The only place which had not suffered from Aryan onslaught is Tamil Nadu and so you find in Tamil, a number of words had retained their originality. There are cultural connections between what is found in Mohanjadaro and civilisation of South India.

In this context I want everyone not to make the mistake that Dravidian culture means only Tamil culture. My father was an executive member of Dravidian Federation about 50 years ago. That is why I know many things about this subject. We have got a lot of literature on this and there is a big library in our house and I know some thing about this. Dravidian culture, for the past fifty or sixty years, is the common property of all civilisation. It is possible that certain things which existed in Mohanjadaro might have existed in South India also. In this connection I shall quote from the book 'Prehistoric civilisation of Indus valley' written by Sri K. N. Dikshit as part of 'Sir William Meyer Lectures, 1935'. This is what he says :—

'At no great distance from these newly discovered places is the gulf of Cambay. It was at the ports of Cambay and Broach that the carnelian industry of India was concentrated and the extensive use of this material in the Indus cities renders it almost certain that further investigation in the Narbada valley will bring to light other settlements of that period. Considering that the conch shell (*I think this is a good point for Ma.Po.Si.*) which is typical of the Indus valley civilisation and which seems to have been in extensive use in the Indus cities was obtained from the south-east coast of Madras Presidency, it would not be too much to hope that a through investigation of the area in the Tinnevelly District (*I hink Mr. Peer Mohamed will like this*) and the

neighbouring regions such as the ancient seaport of Korkai will one day lead to the discovery of some site which would be contemporary with or even a little later than the Indus civilisation.

Finally he ends like this:

"Let me conclude by expressing the hope that in Madras investigators will be found who will have the honour of unearthing some antiquities proving the extension of this civilisation further to the South which, I need hardly say, will be a very important result to achieve indeed!"

It is here that we have to make a lot of investigation. We have to proceed with caution. This resolution has been brought forward because some controversy had been raised at the Third Tamil Conference held recently at Paris. I hope Mr. Ma.Po.Si. will reply at the end. He attended the Conference. Many of our representatives also attended. When the present controversy was raised, why was it not rebutted straightaway there? That is the point. The resolution says we shall have a Committee to rebut what had been said at that conference. What I say is a Committee like this should not be constituted merely to rebut what took place at a conference, a scientific conference like the one held in Paris. That was a conference, a gathering of scholars, wherein they spoke on scientific data. But here it has now come to the Assembly in the form of a resolution favouring the appointment of a Committee by Government to rebut what had been said at Paris conference. What I say is "don't infuse politics" into this. Let us not have a Committee to rebut what has been said there. We could appoint a Committee for investigation. Investigations might produce results which would rebut what that Czechoslovakian said.

Sir, we should make the terms of reference of this Committee in such a way as to rebut the statement made by the Czechoslovakian delegate. Otherwise, it would become just like a fiat of King Frederick of Spain who had stated that the world was flat. When the fiat was refuted by person that the world was round he was ordered to be sent to the gallows and when he finally accepted the fiat and said that the world was flat, he was released. So, my point is that a scientific investigation should be made in regard to this matter.

Now I would like to stress another point. We have sent a number of delegates to the Tamil Conference. I wonder what our experts were doing when an absurd statement was made. When an absurd statement is made, is it not the duty of the couple of our delegates who are equipped with adequate scientific data to rebut that statement of the Czechoslovakian delegate by saying that for the following reasons we repudiate that statement? With due respect to Thiru Karuthiruman who was also one of the delegates, I must say that we should have had somebody who has the technical know-how and scientific knowledge to rebut that



statement. It is really unfortunate that we have not had such a person as to say that 'I have got statistics to prove that that statement is wrong'.

Finally with regard to Darwin's theory, I must say that the theory has been stated to be true. According to this theory, 'man' originally came from monkey. But Dr. Manavala Ramanujam who was Professor of Zoology in the Presidency College had advocated the theory that 'man' came from pig. Just because he said this, we cannot condemn him and say that he is not a good scientist. Sir, my only plea is that we should not mix up emotion with this matter. Sometimes hot words are exchanged and heat is produced. Now, the hon. Member, Thiru Vinayakam has spoken about Darwin's theory and sometimes what he says is also true (Laughter) (THIRU K. VINAYAKAM : We are now allies). Though we may agree with him or not, let us not try to bring in personalities and make it a political affair.

Here, the proposal is to appoint a committee to go into the whole matter. The Committee must be given a free hand to achieve the noble and laudable objectives aimed at in the Resolution. I commend this Resolution for the acceptance of the House.

* திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்டு இருக்கக்கூடிய இந்த தீர்மானத்தை குறித்து ஒரு சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதல் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால், அந்த உலகத் தமிழ் மாநாடானது ஆராய்ச்சித் தன்மை கொண்டு தமிழ் மொழியின் கடந்த காலத்தைப் பற்றியும், நாகரீகங்கள் கலாசாரங்களையும் விவாதித்து இருக்கிறது. தமிழ் நாட்டு மக்கள், தமிழ் பிரதிநிதிகள் அல்லாமல் தமிழ் பற்றியோ, அல்லது தமிழை தெரிந்து இருக்கக்கூடிய வேறு பல நாடுகள் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் விவாதிக்கும் மன்றமாகவும், அந்த விவாதத்திலிருந்து ஏற்படக்கூடிய கருத்துரைகளை வெளியிடக்கூடிய, அதாவது தமிழினுடைய கடந்த கால வரலாற்றைப்பற்றிய ஆராய்ச்சி, அதனுடைய வளர்ச்சிக்கான யோசனைகள் ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கக்கூடிய ஒரு அரங்கமாகத்தான் நான் கருதுகிறேன். ஆகவே, இன்று பாரீஸ் மாநாட்டிலே என்ன நடந்தது என்பதைப் பற்றி நமக்கு விவரம் கூறுவார்கள் கிடையாது. பல நாட்கள் அந்த மாநாடு நடந்தது. அங்கே பல பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து இருப்பார்கள்.

ஆனால் இங்கே கூறப்பட்ட இந்த தீர்மானமானது எந்தப் பிரச்சினையைப் பற்றி முன் வைக்க விரும்புகிறது என்றால் சிந்து நதி தீர நாகரீகத்தைப்பற்றி, அது பழம் பெரும் திராவிட நாகரீகம் என்பது தான் என்பதைப் பற்றி திட்டவட்டமாக ஐயத்திற்கு இடமின்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை கருதுவதாலும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

[திரு. என். சங்கரய்யா] [1970 ஆகஸ்ட் 29

நான் அறிந்த வகையிலே இன்று நம்முடைய நாட்டிலே பல்கலைக் கழகத்தின் சரித்திர புத்தகங்கள்தான் மாணவர்களுக்கு சரித்திர ஆராய்ச்சிகளைப்பற்றியும் கடந்த கால வரலாற்றைப்பற்றியும் போதிக்கின்றன. இந்த புத்தகத்தின் "டெக்ஸ்ட்" எதுவாக இருக்க வேண்டுமென்று தீர்மானம் பல்கலைக் கழகங்களில் அவர்களால் நியமிக்கப்படும் குழுக்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் போதிப்பதற்காக சரித்திர புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கிறது. அதை அனுசரித்துத்தான் இன்று பல்கலைக் கழகங்களில் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. அப்படி இருக்கிற நேரத்தில் சரித்திர இயல் என்பதும் சமூக விஞ்ஞானத்தின் ஒரு பிரிவு தான் என்று உலகத்திலுள்ள பேரறிஞர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். விஞ்ஞானம் என்ற முறையில் அது தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருகிறது. கருத்துக்களில் மாறுதல் காரணமாக தொடர்ந்து புதிய புதிய ஆதாரம் காட்டும்போது எற்கெனவே எடுக்கப்பட்ட முடிவுகளில் மாற்றங்கள், திருத்தங்கள் செய்து கொண்டு விஞ்ஞானம் வளர்ந்து கொண்டே வருகிறது. ஆதாரம் குறிப்பிடுகிறபோது எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் "ஈன்ஸ்டின் தியரி ஆப் ரிலேடிவிடி" என்ற தத்துவத்தைக் காட்டி அதிலும் மாற்றம் தேவைப்படுகிறது என்று உலகத்திலுள்ள பௌதிக இயல் விஞ்ஞானிகளில் ஒரு சாரார் கூறுகிறார்கள். அதே போல் ரசாயனத்துறையில் பல்வேறு துறைகளில் இன்று மேலும் மேலும் புதிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு மாற்றம் ஏற்படுகிற நேரத்தில் அந்த "தியரிகள்" என்று சொல்லப்படும் தத்துவங்கள் விமர்சிக்கப்படும். அந்த நிலையில் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகமோ, மதுரைப் பல்கலைக்கழகமோ, வரலாற்றுத் துறையில் என்ன போதிக்கிறார்கள் என்பதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் அறிந்த அளவுக்கு உலகத் தமிழ் மாநாடு எடுக்கும் எந்த விதமான கருத்துக்களும் நம்முடைய பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்தும் ஸ்டாச்சூட்டரி முடிவுகள் அல்ல. கட்டுப்படுத்த முடியாது. பல்கலைக்கழகங்களில் அவர்கள் வகுத்து இருக்கும் பாடங்களில் கூட நாம் என்ன கண்டு இருக்கிறோம் என்றால் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைக் கூறும் நேரத்தில் கூட அவர்களே இரு கருத்துக்கள் இருந்தால் முதலிலே விஞ்ஞான முறையில் திசிஸ் என்ற முறையில் இது என்ன என்று கருத்து கூறுவார்கள். அதற்கு மாத்திரம் மேற்கோள் காட்டுவார்கள். அதற்கு அடுத்தபடியாக இதற்குத் தொடர்பாக மற்றொரு சிந்தாந்தம் இருக்கிறது என்று கூறி அதற்கான ஆதாரம் என்ன இருக்கிறது என்று சொல்வார்கள். இவ்வாறு இன்று சரித்திர புத்தகங்களில் இன்று இந்தியாவின் தன்மை, நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே இந்தப் பிரச்சினையில் முடிவாக எதுவாக இருந்தாலும், அரசாங்கம் தமிழகத்தில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் இது பற்றி ஆராய்ச்சி செய்து முடிவு எடுப்பது பொருத்தமானதாகும்.



1970 ஆகஸ்ட் 29] [திரு. என். சங்கரய்யா]

நம்முடைய மதிப்பிற்குரிய ம. பொ. சிவஞானம் அவர்கள் கொடுத்து இருக்கும் தீர்மானத்தில் சிந்து நதி தீர நாகரீகம் பழம் பெரும் திராவிட நாகரீகம்தான் என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி முடிவுக்கு வந்து விட்டால் ஆராய்ச்சிக்கு அவசியமே இல்லையே. ஏனென்றால், ஒரு முடிவுக்கு வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவது சிறப்பாக இருக்காது. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பற்றி ஆராய்வதற்கு நம் தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் அவர்களுடைய சரித்திர இயல் பிரிவுகளைக் கொண்டோ அல்லது தமிழ் ஆராய்ச்சிப் பிரிவுகளைக் கொண்டோ ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் அது விஞ்ஞான ரீதியாக இருக்கக்கூடிய ஆராய்ச்சியாக இருக்கும். அவர்கள் சுதந்திரமாக செயல்படவேண்டும். சொல்லக்கூடிய கருத்துக்களை அந்த ஆராய்ச்சியாளர்கள் சுயேட்சையாக ஆராய வேண்டும். சுதந்திரமாக செயல்படவேண்டும். சட்டமன்ற தீர்ப்பு ஒன்று இருக்கிறது, சட்டமன்றம் முன்கூட்டியே செய்யப்பட்ட முடிவு என்று ஒன்று இருக்கிறது, அதற்குட்பட்டு தங்களுடைய ஆராய்ச்சி இருக்க வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடு ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்பட்டால், அது உண்மையில் விஞ்ஞான ரீதியாக உள்ள ஆராய்ச்சியாக இருக்காது.

ஆகவே, இன்று எந்த கருத்துக்கள் பாரீஸ் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டாலும், அதை மறுத்து உரைக்கக்கூடிய முயற்சி நல்ல அடிப்படையில் அமைய வேண்டும். எவ்வாறு இருக்கவேண்டுமென்றால், அமைக்கக்கூடிய ஆராய்ச்சிக்குழு பல்கலைக்கழகங்களின் மூலம் ஏற்படக்கூடிய ஆராய்ச்சிக் குழு தங்களுடைய சுயேச்சையான அனுபவத்தின் அடிப்படையில், ஆராய்ச்சியின் அடிப்படையில், தங்கள் முன்னால் வைக்கப்பட்டுள்ள பல்வேறு சித்தாந்தங்களையும் ஆராய்ந்து, ஏற்றுக் கொள்ளவேண்டியவைகளை ஏற்றுக்கொண்டு, மறுக்கவேண்டியவைகளை மறுத்து, அதன் அடிப்படையில் உண்மை என்ன என்ற ஒரு முடிவுக்கு வருவதற்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்படாமல், தீர்மானத்தில் கடைசிக்கு முன்னால் இருக்கக்கூடிய "...... திட்டவட்டமாக, ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை கருதுவதாலும்" என்று சட்டமன்றத்தில் ஒரு முடிவை செய்துவிட்டு, ஆராய்ச்சியாளர்களை ஆராய்ந்து சொந்த முடிவுக்கு வாருங்கள் என்று சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது. அது முரணாகப் படுகிறது. ஆகவே, அந்த வாசகத்தை சற்று திருத்தி, இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது, இதைப்பற்றி ஒரு சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. அந்த சர்ச்சையைப்பற்றி தமிழ்நாடு அரசாங்கம் தங்களுடைய பல்கலைக்கழகங்கள் மூலமோ அல்லது அரசாங்கத்தினாலோ ஏற்படுத்தப்படக்கூடிய ஒரு ஆராய்ச்சிக் குழுவின் மூலம் பூரணமாக ஆராய்ந்து; உண்மையை அறிந்து, தக்கதோர் அறிக்கையை வெளியிட வேண்டும் என்று அமைத்தால் நலமாக இருக்கும். அவர்கள் எந்த முடிவுக்கு வந்தாலும் சுயேச்சையாக ஒரு முடிவுக்கு வரவேண்டும், எந்தவிதமான அரசியல் நிர்ப்பந்தமுமின்றி அவர்கள்

[திரு. என். சங்கரய்யா] [1970 ஆகஸ்ட் 29

சுயேச்சையாக அறிக்கையை சமர்ப்பித்தால், இந்தப் பிரச்சினையைப் பற்றி ஒரு சரியான முடிவு ஏற்படுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று கூறி நான் அமர்கிறேன்.

*THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, being a student of South Indian History I wish to a say a few words about this interesting subject. Not only the people of our State, but Historian and Archaeological experts of our country and Scholors living in other countries are also interested in this subject. Therefore I welcome the suggestion made by hon. Member Thiru Ma.Po. Sivagnana Gramaniar that a Committee be constituted to go into the matter and take some decisions, just like in any Scientific field or historical field. In a country like ours, there have been a number of civilisations which appeared and disappeared and on account of excavations by archaeologists we are getting more information about them day by day; we are compelled to change our ideas with regard to so many things. It is very difficult to come to a *decision*. That is what I want to point out. The word 'decide' should be amended. We cannot come to a decision at this stage on this crucial question; many eminent Indian authors and European authors have written on this subject and newspapers like 'Hindu' and 'Indian Express' had been publishing articles on this subject and we have learnt so many new things from all these. It is a controversial subject. So many civilisations appeared and disappeared.

Morever the words 'Dravidian' and 'Aryan' are so vague. Any idea you may have on the subject now may have to be changed according to the historic information you may get subsequently. One thing is certain. Simply because the Tamil Conference held in Paris, which was not represented by many leading Historians and experts of our country and where only a few people gathered because of pecuniary circumstances and where many could not go, decided that it was not 'Dravidian', so, we now want to pass this resolution! What I say is, let us not worry about this. The First and Second Tamil Conferences said that it was Dravidian. Now the third conference has said it was not Dravidian. The fourth Conference that might be held might say that it would be only Dravidian. So let us not unduly worry about it. We can only take tentative decisions on these matters. We cannot finally decide the thing.

We are now having before us a resolution. We may appoint an Expert Committee. We may not have all experts here. Experts in this field from Andhra and other States also might be invited and included in this Expert Committee. They may take up this work and give their opinion. Even then it will be difficult to come to a decision in this matter.

Moreover, there is another point. We are saying 'Dravidian language'. You must remember that in South we have Tamil, Telugu, Malayalam and Kanarese languages. We belong to the same linguistic group; but due to passage of time, some languages



1970 ஆகஸ்ட் 29] [Thiru K. S. Kothandaramiah]

of this group might have disappeared and only these four languages are remaining. We do not know whether we can identify Tamil culture with Dravidian culture; or equate Telugu culture with Dravidian culture or Kanarese or Malayalam culture with Dravidian culture. Languages came and some got modified. English had been here for a number of years, and English words have come into our South Indian languages. If English had continued here for some more centuries, most of our languages would have lost their originality and we many not know what a Dravidian of Aryan language would be.

Therefore I say it is difficult to decide at this stage. I am glad that Mr. Ma.Po.Si. had brought this resolution. The Government can appoint a Committee. Such a question should be referred to the University authorities but now that it has been brought to the Assembly, let our Hon. Minister pay attention to it and appoint eminent scholars (not only from our State but outside also viz. Andhra, Mysore and Kerala who may be well versed in this subject and also from outside the country. The subject is vast and requires deep study. We can only take tentative decisions; that cannot be final.

I agree with the resolution. Let the first three paragraphs remain. In the last paragraph let us say that to consider all these things, let a Committee be appointed. Let us stop with that. Let us not say 'in order to arrive at a decision' let a Committee be appointed. As I have already said, it is difficult to come to a decision. We are changing our ideas according to discoveries made. I appreciate the sentiments of the mover of the resolution and the interest taken by him. We are in agreement with the spirit of the resolution. I welcome the suggestion that Government may appoint a Committee to go into the matter.

With regard to personnel, I do not know what exactly the Hon. Minister is going to say. My idea is we can also invite scholars from other areas and it is necessary that we pay them. They may come from neighbouring States and also from outside the country. For the efforts they are going to take we must pay them. It is all a costly affair. Such a gathering of scholars would definitely help the Committee and prepare a report. That Committee might examine the whole matter and report to Government. With these words, I conclude my speech.

* திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அவையில் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஒட்டி, எனக்கு முன்னால் பேசிய என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார்கள். குறிப்பாக இந்த பாரீஸ் நகரத்தில் நடந்த உலகத் தமிழ் நாடு, நம்முடைய அரசின் தொடர்புள்ள ஒரு மாநாடாக அமையவில்லை. இந்திய அரசின் தொடர்பு கொண்ட மாநாடாகவும் அமையவில்லை. அதோடு பாரீஸ் அரசாங்கம், அதாவது, பிரெஞ்சு அரசாங்கம் இருக்கிறதே, அந்த அரசாங்கத்தின்

[திரு. டி. மார்டின்] [1970 ஆகஸ்ட் 29

ஒரு ஒப்புதல் அல்லது ஆதரவு மீது நடந்த ஒரு மாநாடும் அல்ல. யுனஸ்கோவின் ஒரு பகுதியின் ஆதரவின் மூலம் மாநாடு நடத்தி யிருக்கிறார்கள். அந்த மாநாட்டிற்கு இங்கேயிருந்து தமிழ் நாடு சர்க்காரால், அல்லது இந்திய சர்க்காரால், "கவர்ன்மெண்டு டு கவர்மெண்ட்" என்பார்களே அந்த வகையில்,......

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அவை முன் இருப்பது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்களின் தீர்மானம். அது பற்றிக் கருத்துத் தெரிவிக்க வேண்டும். பாரீஸ் மாநாடு பற்றியல்ல. யுனஸ்கோவின் ஆதரவில், இந்த உலகத்தமிழ் மாநாடு முன்பு கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாடு சென்னையிலும், இப் பொழுது பாரிசிலும் கூடியது. ஆகவே, அந்த மாநாட்டைப் பற்றிப் பேச அந்தப் பிரச்சினை வருகின்ற போது, விளக்கங்கள் கேட்கலாம். ஆனால் இப்பொழுது அவைமுன் இருக்கின்ற பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்களுடைய தீர்மானம்.

திரு. டி. மார்டின்: அது எந்தச் சூழ்நிலையில் நடந்தது என்பதை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநாடு எப்படி நடந்தது. யார் யார் சென்றார்கள், எப்படி எப்படிச் சென்றார்கள் என்றெல்லாம் இங்கே இப்பொழுது விவாதிக்க முடியாது. இந்தத் தீர்மானத் தைப் பொறுத்து, ஒரு கமிட்டி அமைக்க வேண்டும் என்பதைப் பொறுத்துப் பேசவேண்டும்.

திரு. டி. மார்டின்: எனவே, இந்தச் சூழ்நிலையில் நடந்து முடிந்த பாரீஸ் உலக தமிழ் மாநாட்டில் என்ன நடந்தது என்பது இந்த அவைக்கு அதிகாரபூர்வமாகத் தெரியாது. இந்த மாநில அரசின் முதல்வர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள். ஆனால், அந்த மாநாட்டில் இன்னின்ன நடந்தது, தமிழர் நாகரீகத்திற்கு, திராவிட நாகரீகத்திற்கு எதிர்ப்பாக, அல்லது களங்கமாக என்னென்ன கூறப் பட்டது, குறைவாக பேசப்பட்டது, என்பதைப் பற்றியெல்லாம், இந்த அவையில் எதுவும் விவரம் கொடுக்கவும் இல்லை.

மாநாட்டிற்குச் சென்று திரும்பி வந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தைப் பார்க்கும்போது, அங்கே திராவிட நாகரீகத்திற்கு ஊறு வரும் வகையில் ஒரு பிரதிநிதி ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக் கிறார் என்று மட்டும் தெரியவருகிறது.

ஆனால் திட்டவட்டமாக திராவிட நாகரீகத்தைப் பற்றி என்ன சொன்னார்கள், எந்த அளவில் குறைகூறினார்கள், நம்முடைய திராவிடக் கலைக்கு, பண்புக்கு, கலாசாரத்திற்கு குறைவு எப்படி ஏற்பட்டது என்பதையெல்லாம் பற்றி விவரமான அறிக்கை ஒன்றும் இந்த அவையில் இல்லை. அதற்குக் காரணம் நான் ஏற்கனவே சொன்னேன். இந்த மாநாடு அரசாங்கத்தால் ஏற்படுத்தப் படவில்லை என்பதால் அதைப் பற்றிச் சொல்லவில்லை: ஆகவே தான்



1970 ஆகஸ்ட் 29] [திரு. டி. மார்டின்]

அதற்கான அறிக்கை ஒன்றும் இங்கே வைக்காமல் இருந்திருக்கலாம். ஆனாலும், தீர்மானம் வந்த பிறகு முதல் அமைச்சரவர்கள் விரிவான அறிக்கை ஒன்றை இந்த மாமன்றத்திற்குக் கொடுத்திருந்தால், இந்த மன்றம், இந்தத் தீர்மானத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்து, நல்ல பரிந்துரை வழங்க வாய்ப்பாக இருந்திருக்கும். அப்படி யில்லாத சூழ்நிலையில், பாரீஸ் மாநாட்டில் நடந்தது என்ன என்பது தெரியவில்லை.

ஆனாலும், அந்த உலகத் தமிழ் மாநாட்டுக்குச் சென்று வந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தோடு, அந்த மாநாட்டில் அந்த உறுப்பினர் என்ன சொன்னார்கள் என்பதையும் கொடுக்கவில்லை. அப்படிப் பட்ட நிலையில் எந்த முறையில் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவோ, எதிர்க்கவோ முடியும் உறுப்பினர்களால் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைத்தான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது ஆதரிக்கிறதா மறுக்கிறதா என்பதல்ல விவாதம். அங்கு சொல்லப்பட்ட கருத் தைக் குறிப்பிட்டு, ஆராய்ந்து பார்க்க ஒரு கமிட்டி அமைப்பது என்பது தான் அவைமுன் இருக்கும் பிரச்சினை. மன்றம் செய்ய வேண்டியதெல்லாம், ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்பது தான். அதுதான் தீர்மானம்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறியது போல, அந்த மாநாட்டில் எந்தவிதமான குறை நம்முடைய நாகரீகத்திற்குத் தெரிவிக்கப்பட்டது என்பதைத்தான் அறிய நான் விழைகிறேன்......

திரு. ம. பொ. சிவஞானம்: உறுப்பினர் தவறான கருத்தில் திரும்பத், திரும்பச் சொல்லுகிறார்கள். இந்தத் தீர்மானம் அங்கே கூறப்பட்ட கருத்தைப் பற்றி முடிவான பதிலைக் கூற விரும்பவில்லை. அது பற்றி ஆராய ஒரு குழு அமைக்க வேண்டும் என்றுதான் கேட்கப் படுகிறது. இது ஒரு உத்யோகப் பற்றற்ற தீர்மானம். அரசாங்கத் தீர்மானம் போல் தஸ்தாவேஜுகளை அச்சடித்துக் கொடுக்க இயலவில்லை. உத்யோக சார்புள்ள தீர்மானமாக இருந்தால், அரசு அப்படிச் செய்ய முடியும். எனக்கு அந்த வாய்ப்பு இல்லை. அந்தக் கருத்து பற்றி முடிவு செய்ய ஒரு குழுவை அமையுங்கள் என்கிறேன். ஆகவே, அந்த விவரங்களை வைத்துத்தான் தீர்மானத்தை விவாதிக்க வேண்டும் என்று ஒரு வழக்கறிஞர் கூறுவது விந்தையாக இருக்கிறது.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, பாரீஸிலிருந்து தமிழ்நாடு திரும்பிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற நேரத்தில், அவர்கள் பாரீஸில் நடந்தவை என்ன என்பதை விவரமாக இந்த அவையில் கூறியிருக்கவேண்டும்......

[1970 ஆகஸ்ட் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். பாரீஸ் மாநாட்டில் என்ன கருத்துக் கூறப்பட்டது, அதை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்பதல்ல மன்றத்தின் முன் உள்ள பிரச்சினை. கூறப்பட்ட கருத்தை ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க, ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டும் என்பதுதான், அவை முன்னுள்ள பிரச்சினை; என்னென்ன பேசப்பட்டது, சொல்லப் பட்டது என்பதை எல்லாம் கொடுக்க வேண்டிய தேவையில்லை. அது பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க ஒரு கமிட்டி வேண்டும். அதை யொட்டித்தான் பேசவேண்டும்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் குறிப்பிட்டதன் உட்பொருள் என்னவென்றால், நம்முடைய உறுப்பினர் அங்கே இருந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் மாறு பட்ட கருத்து சொல்லப்பட்டதா ? அல்லது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ, நோ, அங்கே சென்றவர் கள் தங்கள் கடமையைச் செய்தார்களா என்று கேட்க இடம் இல்லை. அப்படிப் பேச இடந்தர முடியாது, அனுமதி கொடுக்க முடியாது. இப்பொழுது இருப்பதெல்லாம், சொல்லப்பட்ட கருத்து மாறுபட்டதாக இருக்கலாம் அல்லது வேறாக இருக்கலாம், அப்படிப்பட்ட கருத்தை ஆராய்ந்து பார்க்க ஒரு கமிட்டி வேண்டும் என்பது பற்றித்தான் அவைமுன் இருக்கிற விவாதம்.

திரு. டி. மார்டின்: அதை அப்பொழுது எதிர்த்தார்களா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ. மார்டின் அவர்கள் தொடர்ந்து பேச அனுமதி தராததற்கு வருந்துகிறேன். உட்காருங்கள்.

திரு. ம. பொ. சிவஞானம்: தங்கள் விளக்கத்திற்குத் துணை யாக இருக்கும் என்று ஒரு விளக்கம் தருகிறேன். தீர்மானம் பற்றி விவாதிப்பது என்று ஒன்றும் இல்லை அங்கே. தீர்மானமாக வந்திருந்தால், வெட்டியோ, ஒட்டியோ பேச வாய்ப்பு இருக்கும். பிரதிநிதிகள் அரங்கில் பேப்பர் கொடுக்கிறார்கள். அது ஒரு ஸெமினார் போன்று நடந்தது. அப்படிப் பேப்பர் கொடுக்காத வர்கள் விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லை. அந்த ஸெமினாருக்கு பேப்பர் கொடுக்காத பிரதிநிதி நான். ஆகவே, நேரிடையாக கலந்து கொள்ள வாய்ப்பில்லை. திரு. ஐ. மகாதேவன் பேப்பர் கொடுத்த உறுப்பினர்—ஆட்சேபித்திருக்கிறார். ஸ்விட்ஸர் லந்து பிரதிநிதி ஆட்சேபித்திருக்கிறார். நான் அங்கே பயந்து, பதுங்கி இருந்துவிட்டு, இங்கே பாய வரவில்லை. தீர்மானம் என்று வராததால், ஒட்டு போட்டவன், போடாதவன் என்பதற்கும் இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த உறுப்பினர் திரு. சுரேந்திரன்.



1970 ஆகஸ்ட் 29]

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, உயர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இப்பேரவையின்முன் வைத்திருக்கும் தீர்மானம் குறித்து, இரண்டொரு கருத்துக்களைச் கூற விரும்புகிறேன்.

இந்த பேரவையில் இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் —முழுமையாகக் கூட—அரசியல்வாதிகளாகத்தான் இருக்கிறார்கள். அப்படி அரசியல்வாதிகளாக இருக்கிறவர்கள் ஆராய்ச்சி சம்பந்த மான விஷயம் குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றுவது என்று சொல்வதிலே ஆட்சேபணை இல்லை. தீர்மானத்திலே சொல்லப்பட் டிருப்பது என்னவெனில், "இரண்டு மாநாடுகளும் ஒத்துக்கொண்ட ஒரு விஷயத்திற்கு மூன்றாவது மாநாட்டிலே கருத்து வேற்றுமை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சிந்து நதி தீர நாகரீகம் பழம் பெரும் திராவிட நாகரிகம்தான் என்பதைத் திட்டவட்டமாக, ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை கருதுகிறது. இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்க ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவை அமைக்க வேண்டுமென்று தமிழ் நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது" என்பதாகும். நான் கூற விரும்புவது எல்லாம், நாம் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து, ஆராய்ச்சிலே என்ன முடிவு வருகிறதோ அதைச் செய்ய வேண்டும் என்று இந்தத் தீர்மானத்திலே எடுத்துக் கூறப்படவில்லை. ஆராய்ச்சிகள் எப்பொழுதுமே முழுமையாக முடிந்துவிடுவதில்லை யென்று பெரியவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமை நாளைக்கு இல்லை, நாளைக்கு இருப்பது அடுத்த நாள் இல்லை......... ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஆராய்ந்து அறிவிப் பதற்காகத்தான் ஒரு குழுவை அமைக்க பேரவை பரிந்துரை செய்கிறது என்பதுதான் தீர்மானம். பேரவையின் கருத்து கமிட்டியைக் கட்டுப்படுத்தாது.

திரு. எம். சுரேந்திரன்: பாரீஸ் மாநகரில் 1970-ம் ஆண்டு ஜூலை திங்களில் நடந்த மூன்றும் மாநாட்டில் இதுபற்றிய மாறு பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே மறுப்புக் கருத்து தெரிவிக்கப்பட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கே மறுப்புக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த மன்றத்திலே, திராவிட நாகரிகம்தான் பழம் பெரும் நாகரிகம் என்பதை எடுத்துக்காட்ட ஒரு குழு அமைக் கப்பட வேண்டும் என்று சொல்கிறோம். இரண்டுவித கருத்துக்களை யும் வைத்துத்தான் இதை ஆராய வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, "சிந்து நதி தீர நாகரிகம் பழம்பெரும் திராவிட நாகரிகம்தான் என்பதைத் திட்ட வட்டமாக ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று இப் பேரவை கருதுவதாலும்"........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அங்கே உலகத் தமிழர் மாநாட்டில் மாறுபட்ட கருத்து கூறப்பட்டது. "இப்பேரவை திராவிட நாகரிகம்தான் பழம்பெரும் நாகரிகம் என்று கருதுகிறது. இந்த நிலையில் ஆராய்ந்து முடிவு எடுக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டும்" என்பதுதான் தீர்மானம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, நான் முதலிலேயே இது அரசியல்வாதிகள் சபை என்று சொன்னேன். இது ஆராய்ச்சி சம்பந்தமான தீர்மானம். ஆராய்ச்சி நடத்துவதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று சொல்கிறோம். அரசியல்வாதியின் அந்தஸ்தை நிலைநிறுத்துகின்ற முறையில்தான் ஷரத்து இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் "இது இப்படி இருக்கிறது" என்று சொல்லலாமே தவிர, அதுவே முடிந்த முடிவாகாது. இரண்டு மாநாடுகளிலும் ஒத்துக்கொண்ட கருத்துக்கு மூன்றாவது மாநாட்டில் மாறுபட்ட கருத்து வரக்கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தத் தீர்மானத்தில் ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தமாதிரிதான் கமிட்டி அறிவிக்க வேண்டுமென்று எடுத்துக்காட்டுவதைப்போல இதனுடைய ஷரத்து இருப்பது எனக்குச் சரியானதாக தோன்றவில்லை. ஆராய்ச்சிகள் எல்லாம் நடந்துகொண்டே இருக்க வேண்டும். மீண்டும் மீண்டும் ஆராய்ச்சிகள் செய்யப்படும்போது, புதிய புதிய அம்சங்கள் கண்டுபிடிக்கப்படலாம், புதிய புதிய கருத்துக்கள் தோன்றலாம். நேற்றைய தினம் வரை செய்த ஆராய்ச்சிகள் இன்றைக்குத் தவறானது என்று சொல்லப்படுகிறது. இன்றைக்குச் செய்பவை நாளைக்குத் தவறானது என்று சொல்லப்படலாம். ஆராய்ச்சி ஒரு முடிவான நிலைமைக்கு வந்துவிட்டது என்ற அளவில் எந்த ஆராய்ச்சியும் இல்லையென்று சொல்கிறேன். இந்த ஆராய்ச்சிகளை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டுமென்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. "இப்படித்தான் இந்தச் சபையின் முடிவு இருக்கிறது" என்று கூறுவது சரியாக எனக்குப் படவில்லை யென்று கூறி, அமர்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, நண்பர் அவர்கள், முதலில் மூன்றாவது பாராவை ஒதுக்கிவிட்டுப் படித்துப் பார்க்க விழைகிறேன். இரண்டாவது பாராவில் "பாரீஸ் மாநகரில் 1970-ம் ஆண்டு ஜூலை திங்களில் நடந்த மூன்றாம் உலகத் தமிழ் மாநாட்டில் இதுபற்றிய மாறுபட்ட கருத்து தெரிவிக்கப்பட்டிருப்பதாலும்" என்றிருக்கிறது. இந்த மாறுபட்ட கருத்தைப் போக்க, ஆராய்ந்து நல்ல முடிவை எடுக்க ஒரு சிறப்புக் குழுவை அமைக்க வேண்டுமென்று நான்காவது பாராவில் தமிழ்நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது. மூன்றாவது பாராவில் "சிந்து நதி தீர நாகரிகம் பழம்பெரும் திராவிட நாகரிகம்தான் என்பதைத் திட்டவட்டமாக, ஐயத்திற்கிடமின்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை கருதுவதாலும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சாதாரண அரசியல் விஷயமாக இருந்தால் நாமே தீர்மானம் கொண்டுவந்திருக்கலாம். ஆராய்ச்சி சம்பந்தமான விஷயமாக



இருப்பதால், அதற்காகவேண்டி, ஆராய்ச்சி செய்ய, ஆராய்ந்து முடிவெடுக்க ஒரு சிறப்புக் குழுவை அமைக்கலாம் என்று இப்பேரவை பரிந்துரை செய்கிறது என்ற விதத்தில் வேண்டுகோள் அமைந்திருக்கிறது என்பதைக் கூறி அமர்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை வரவேற்கக் கூடியதாக இருந்தாலுங்கூட, "இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்க ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவை அமைக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது" என்ற தொடர் பற்றி சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

இந்தக் கமிட்டியை அமைப்பதனால் செலவுகள் ஏற்படக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இன்றையதினம் நமது தேசத்தில் பல பிரச்னைகள் இருக்கின்றன. இப்பேரவை இந்தப் பரிந்துரையை நிறைவேற்றி அனுப்பினால் அதனால் ஏற்படுகின்ற செலவை நாம் எப்படி செய்யப் போகிறோம்? செலவை ஏற்கக்கூடிய நிலை என்ன என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். இந்தக் குழுவிலே இருக்கக் கூடிய, இருக்கப் போகிற அங்கத்தினர்கள்—ஆனரரியாக—இலவசமாக பணியாற்ற முன்வந்தால் இந்தக் குழுவை அமைப்பதினால் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. பணம் செலவழிக்கக்கூடிய காரியம் என்றால், அதுவும் செக்யூலர் ஸ்டேட் என்று சொல்லிக்கொண்டிருக்கிற நாம், மஞ்சள் நிறமுடைய சைனாக்காரர்களைச் சார்ந்தவர்களா நாம், அல்லது கருப்பு நிறமுடைய ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்களா அல்லது இரண்டுக்கும் பொதுவான மாநிறமுடைய இந்தியர்களா என்பதை ஆராய்ந்து பார்ப்பதில் நாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்பது அல்ல. இன்றைக்கு நாட்டிலே பசியும் பட்டினியும் இருக்கக் கூடிய நிலையில், பண விரயச் செலவு இல்லாத நிலையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானம், இந்தப் பழம்பெரும் தமிழகத்தோடு தொடர்புடைய வகையில், பெருமையையும் புகழையும் நிலைநாட்டத்தக்க வகையில், வரலாற்றுக் கருத்துக்கள் செறிந்த வகையில் அமைந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் பலரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பிரச்சினைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற பொருளைப் பற்றியும் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மொகஞ்சதாரோ—ஹரப்பா நாகரீகம் பழம்பெரும் திராவிட நாகரீகமே என்பதற்கு விரிவான ஆதாரங்கள் நாளுக்கு நாள் ஏற்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு நாம் உணரலாம்.

1923-ம் ஆண்டிலே மொகஞ்சதாரோ–ஹரப்பாவில் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்களை அடிப்படையாக வைத்து, நண்பர் திரு. வினாயகம் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, சர் ஜான் மார்ஷல் என்பவரைத் தலைவராகக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தப் பட்டு, அங்குள்ள நாகரீகம் திராவிட நாகரீகமே என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளை வெளியிட்டுள்ளார்கள். அங்கு கண்டுபிடிக்கப் பட்ட பொருள்களிலிருந்தும் ஆராய்ச்சியிலிருந்தும் இது தெரிய முடி கின்றது. அதைத் தொடர்ந்து பாதர் ஹிராஸ் என்பவர் தொடர்ந்து பதினெட்டு ஆண்டுக்காலம் அந்தப் பொறுப்பை ஏற்று, ஆராய்ச்சி யில் ஈடுபட்டார். சர் ஜான் மார்ஷல் அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களுக்கு வலுவூட்டும் வகையில் கட்டிட அமைப்புகளும், பல்வேறு உருவங்களும், பல்வேறு பதுமைகளும், பழக்கப்பட்ட சாமான்களும் அமைந்திருந்தன. இவையெல்லாம் திராவிட நாக ரிகத்தின் சின்னமாக அமைந்திருந்தன. அங்குள்ள ஓவியங்கள் எல்லாம் திராவிட நாகரிகத்தை உணர்த்தும் வகையில் அமைந் திருந்தன. பாதர் ஹிராஸ் அவர்கள் பதினெட்டு ஆண்டுக் காலம் மிகவும் சிரமப்பட்டார்கள். அப்படிப் பார்க்கின்றபோது இந்தியா வில் இருக்கிற எல்லா மொழிகளையும் பார்த்து, பல்வேறு மொழி களின் வேர்ச்சொற்களை எல்லாம் எடுத்துவைத்துப் பார்த்து, இவை திராவிட மொழிக்கு ஆதாரமான வேர்ச் சொற்களோடு பொருந்தி வருகின்றன, இவற்றோடு பொருத்திப் பார்க்கிறபோதுதான் வாக் கியங்கள் அமைகின்றன என்றெல்லாம் ஆராய்ந்து அங்குள்ள கல் வெட்டுகள் திராவிட மொழி எழுத்துக்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன என்பதை ஹிராஸ் அவர்கள் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அதுமட்டும் அல்ல. விஞ்ஞானத்துறையில் வானவெளி ஆராய்ச்சி சம்பந்தமாகவும் இருக்கக்கூடிய விவரங்களை எல்லாம் திரட்டி மேலைநாட்டு வான ஆராய்ச்சியாளர்களுடன் கலந்து—இந்த மாதிரியான வானவெளிப்படம் இருந்திருக்கவேண்டுமென்றால் இது பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு வானவெளி அப்படி இருந்திருக்கவேண்டும் என்கிற ஒரு முடிவுக்கு வந்திருக் கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மொழித் தன்மையின் கூறுபாட்டை எல்லாம் ஆராய்ந்து பகுதி, விகுதிகளை நீக்கி, பொருள்தரும் வேர்ச்சொற்களை மட்டும் ஆராய்ந்து, இது இங்கிருந்து போயிருக்கிற திராவிட நாட்டு நாகரீகம் என்பதையும் எடுத்துக்காட்டி—எண்கள் கூட ஏன் பத்தோடு நிற்கவேண்டும், எட்டோடு நின்றிருக்கக்கூடாதா, பதின் மூன்று வரை போயிருக்கக்கூடாதா, பத்து என்ற அளவோடு நின்று திரும்பத் திரும்ப வருவதற்கு திராவிட நாகரீகம் எப்படி வழி வகுத்தது, மேலும் வாரத்திற்கு ஏழு நாட்கள் என்பதாகவும் சந்திரனைக் கொண்டு திங்கள் என்பதையும், சூரியனைக் கொண்டு ஆண்டு என்பதையும் எப்படி நிர்ணயித்தார்கள் என்பதையும் இந்தத் திராவிட நாகரீகம் மேலை நாடுகளிலும் வாரத்திற்கு ஏழு நாட்கள் என்பதாகவும் நாம் ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை, புதன் கிழமை என்பதாகப் பெயர்கொடுத்ததைப் போல அங்கும் சன்டே



என்பதாகவும், மூன் டே—மண்டே என்பதாகவும், சாடன் டே என்பதை சாடர்டே என்பதாகவும் பெயர் கொடுத்திருப்பதையும் எடுத்துகாட்டியிருக்கிறார்கள்.

மேலும் இந்த நாகரீகம் எப்படி லெமூரியாவில் இருந்து தென் னாட்டிற்கு வந்து, இங்கிருந்து ஹரப்பா, மொகஞ்சதாரோ சென்று பிறகு டைக்ரஸ் நாகரீகமாக, கிரேக்க நாகரீகமாக, ரோம நாகரீக மாக வளர்ந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டு இவை ஒவ்வொன் றுக்கும் காலவரையறை செய்து திராவிட நாகரீகம் ஆறாயிரம், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்றும், சுமேரிய நாகரீகம், எகிப்து நாகரீகம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்றும், கிரேக்க நாகரீகம் 2,500 ஆண்டுகளுக்கு முந்தியது என்றும் என்பதாக இப்படிப் பல கோணங்களில் இருந்து விளக்கம் கொடுத்திருக் கிறார்கள். அதுவும் நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித் துக்கொண்டிருந்தபோது சிந்து நதி நாகரீகம் திராவிட நாகரீகம் தான் என்பதை வலியுறுத்திப் பேசி முடிக்கிறபோது

'Father Heros is not speaking to you but a Dravidian from Spain'.

என்பதாக சிறப்பாக முடித்தார்கள். ஸ்பெயின் நாட்டுக்கு அடிப் படையான நாகரீகம் இதுதான். ஸ்பெயின் நாட்டில் இருந்து வந் திருக்கிற திராவிடனாகிய என் கருத்து இது என்று சொன்னார்கள்.

அந்தக் கருத்தே பலவகையாலும் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கிடைத்த பொருட்களைக் கொண்டு ஸர் ஜான் மார்ஷல் இதே கருத்தையே வலியுறுத்தினார்கள்.

அதற்குப் பிறகு சோவியத் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் குழுவும், ஃபின்லந்து நாட்டு ஆராய்ச்சியாளர்கள் குழுவும் இப்போது இருக்கிற அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் கம்ப்யூடர்களைப் பயன்படுத்தி ஆராய்ந்து அது திராவிட நாகரீகம் தான் என்பதான ஒத்த முடிவுக்கு இரண்டு குழுவினரும் வந்திருக்கிறார்கள். அதுவும்

Both the teams are agreed on three fundamental results—

(a) the language is Dravidian;

(b) the signs are mostly logographic and based on the principle of homophony; and

(c) the inscriptions generally are read from right to left.

என்பதாக இந்த 3 கருத்துக்களையும் இந்த இரண்டு குழுவினரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் திரு. ஐ. மகாதேவன், ஐ.ஏ.எஸ். அவர்கள் எழுத்துக்கள் பற்றி எல்லாம் நல்லமுறையில் ஆராய்ந்து, ப்ராமி எழுத்துக்களே தமிழ் எழுத்துக்கள் தான் என்பதை சென்ற மாநாட்டில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர் மிகச் சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளர். இந்த ஆராய்ச்சி யிலேயே தன்னுடைய முழு ஓய்வு நேரத்தையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டிருப்பவர்கள். ப்ராமி என்பது தமிழ்தான் என்பதையும் சிந்துவெளி நாகரீகம் என்பது திராவிட நாகரீகம்தான்

என்பதையும் பற்பல ஆதாரங்களோடு—ரஷ்ய நாட்டு ஆராய்ச்சிக் குழுவினர் கண்ட முடிவை, ஃபின்லாந்து நாட்டு ஆராய்ச்சிக் குழுவினர் கண்ட முடிவை உறுதிப்படுத்தும் வகையில்—3-வது உலகத் தமிழ் மாநாட்டில் கருத்து விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது "பாரிசில் நடந்த உலகத் தமிழ் மகாநாட்டில் இந்தக் கருத்தை எடுத்து ஒருவர்கூடச் சொல்லவில்லையா?" என்றார்கள். இந்த முழுக் கருத்தையும் எடுத்து வாதாடுகிற திறனைத் தன்னுடைய பல்லாண்டு கால ஆராய்ச்சியின் பயனாகப் பெற்றுள்ள சிறந்த ஆராய்ச்சியாளராக விளங்கும் திரு. ஐ. மகாதேவன் ஐ.ஏ.எஸ். அங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அங்கே என்ன நடந்தது என்று கேட்டார்கள். திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் எடுத்துத் தெரிவித்த மாதிரி அங்கே தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஃபின்லாந்து நாட்டுக்கார ஆராய்ச்சியாளர் குழுவும், ரஷ்ய நாட்டு ஆராய்ச்சியாளர் குழுவும் கண்ட முடிவினை—சிந்துவெளி நாகரீகம் திராவிட நாகரீகமே என்கிறமுடிவினை—எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் ஒருவராக இருந்த நல்ல தமிழ் அறிஞர்—இவர் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் அல்ல—டாக்டர் ஜுவலபிள் அவர்கள் இந்தக் கருத்தைக் கூட மறுக்கவில்லை. அவர் சொன்னது எல்லாம் நவீன அறிவியல் சாதனமாகிய கம்ப்யூட்டர்களின் உதவியைக் கொண்டு இதை ஆராய அணுகிய இந்த முறை தமக்குக் கன்வின்ஸிங்காக இல்லை, இன்னும் தெளிவான முறையில் ஆராயப்பட வேண்டும் என்றே சொன்னார்கள். இது திராவிட நாகரீகம் இல்லை என்று மறுத்து உரைக்கவில்லை. பத்திரிகையில் மாறுபட்ட கருத்து வந்த காரணத்தினால் இது ஒரு பிரச்னையாகிவிட்டது: அங்கே நடந்தது எல்லாம்

"At the Paris Tamil Conference both Dr. Parpola (of the Finish Team) and Thiru Mahadevan took the view that the Indus script represented the Dravidian language while Dr. 'Zvelebil—who has conducted no scientific research himself on the subject—criticised the methodology adopted by the Finish and Russian scholars as unconvincing and speculative. . . '

என்பதுதான். இவர் இந்தத் துறையில் ஆராய்ச்சி உடையவர் அல்லர். ஆயினும் தமிழ் அறிஞர். தன் சந்தேகத்தைத் தெரியப்படுத்தினார். ஆனால் பத்திரிகையில் வந்தது இதற்கு மாறுபட்ட கருத்து. அதன்காரணமாகத்தான் இந்த நாட்டு மக்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது, இந்தத் தீர்மானமும் கொண்டு வந்திருக்கிறார்கள். இது அல்ல என்று மறுக்கிற வகையில் யாரும் எந்தக் கருத்தும் அங்கே எடுத்து வைக்கவில்லை. மாறாக, திராவிட நாகரீகம் தான் அது என்பதை கம்ப்யூட்டர்களைக் கொண்டு ஆராய்ந்து ஃபின்லந்து குழுவினரும், ரஷ்யக் குழுவினரும் தெரிவித்திருக்கிறார்கள். நம் நாட்டைச் சேர்ந்த சிறந்த ஆராய்ச்சியாளராகிய திரு. ஐ. மகாதேவன் அவர்களும் ஆதாரங்களோடு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நாம் போய் உட்கார்ந்தால் எப்படி ஏதாவது ஒரு சந்தேகத்தை எழுந்து நின்று கேட்போமோ, அப்படித்தான்



திரு. ஜ்விலபிள் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். திரு. ஐ. மகாதேவன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தையே ஃபின்லாந்து நாட்டுக் குழுவினர், ரஷ்யநாட்டுக் குழுவினர் எடுத்துச்சொன்ன கருத்தையே மறுத்து வாதிடவில்லை.

இப்போதும் கூட திரு. ம. பொ. சி. அவர்கள் என்ன நோக்கத்திற்காகத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்களோ அது ஒருவகையில் நிறைவேறியிருக்கிறது. புதியதாக ஒரு குழுவைப் போட்டு இதை ஆராய்ந்து ஒரு முடிவை அறிவிக்க வேண்டும் என்பது இல்லை. திராவிட நாட்டு நாகரீகம் தான் அது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரு முடிவுதான் இந்த மூன்றாவது உலகத் தமிழ் மகாநாட்டிலும் ஃபின்லாந்து குழுவினராலும், ரஷ்யக் குழுவினராலும், திரு.ஐ. மகாதேவன் அவர்களாலும் நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கிறேன்.

மேலும் திரு. மகாதேவன் அவர்களுக்கு "நேரு ஸ்காலர்ஷிப்" வழங்கப்பட்டிருக்கிறது. அவர் தொடர்ந்து இன்னும் இரு ஆண்டுகள் இதைப்பற்றியேதான் மேலும், மேலும் ஆராயப் போகிறார்கள். அவர் தென்னாட்டைச் சேர்ந்தவர் தான். நமக்குள்ள உணர்ச்சி, பற்று எல்லாம் மிகுதியாக உடையவர். நீண்ட காலமாக இதுவரை அதைப்பற்றியே ஆராய்ந்து வருகின்றவர். அக்டோபர் திங்களில் இருந்து தனியாகவே இந்த ஆராய்ச்சியை எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள்.

திரு. ஐ. மகாதேவன் அவர்கள் ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். இரண்டு ஆண்டு காலம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்த பின்னர் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட இருக்கிறார்கள். நாம் இதற்காக என்று தனியாக ஒரு குழு வைத்து ஆராய்ச்சி செய்வதற்குப் பதிலாக இயற்கையாகவே ஒரு சூழ்நிலை நமக்கு ஆதரவு தருகின்ற வகையிலே ஏற்பாடு இருப்பதால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மேலும் வேண்டுமானால் இதை எடுத்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். இந்திய அரசாங்கத்தார் இதற்காக அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தந்திருக்கிறார்கள். திரு. ஐ. மகாதேவன் என்பவர் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர். தமிழ்ப் பற்றுக் கொண்டவர். இந்த மன்றத்தின் கருத்துக்களுக்கு இணங்கி அதே உணர்வுடன் இருந்து புகழும் பெருமையும் தேடித் தரக்கூடியவர். அதற்கான ஆதாரங்களைத் திரட்டி உருவான முடிவுகளைத் தெரிவிப்பார்கள். முடிவு எடுக்கப்படுகின்ற கருத்துக்களை ஒன்று திரட்டி வெளியிடுகின்ற வகையில் எல்லா மக்களுக்கும் நூல் வடிவிலே கொடுப்பதற்கான பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளலாம். திரு. ஐ. மகாதேவன் அவர்கள் பாரீஸ் நகரத்திலே இதைப்பற்றி விவாதித்திருக்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய ஆதரவு நமக்குக் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே அவர்கள் செய்து வருகின்ற ஆராய்ச்சிகளின் முடிவு தீர்மானத்தினுடைய முழு நோக்கத்தையும் நிறைவேற்றும், என்ற காரணத்தினாலே இந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட வேண்டியது இல்லை.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 ஆகஸ்ட் 29

தமிழ் வளர்ச்சிக் குழுவிலே கூட தமிழ் நாட்டினுடைய முழு வரலாறு எழுதவேண்டுமென்று டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்து இருக்கிறோம். தமிழக மக்களின் ஒழுக்கத்தைப் பற்றி, பண்பைப் பற்றி, நோக்கத்தைப் பற்றி, பழக்க வழக்கங்களைப் பற்றி, அரசு உரிமைகளைப் பற்றி, தகவல்கள் சிதறிச் சிதறிக் கிடக்கின்றன. அப்படித் துண்டு துண்டாக இருக்கின்ற செய்திகளை ஒன்றாகக் கோர்த்து 4 அல்லது 5 வால்யூம்களாக வரலாற்றை எழுதப்போகின்றார்கள். அது கூட தமிழ் மொழியின் புகழையும், பெருமையையும் நிறைவேற்றுகின்ற அளவிலே துணை செய்யும். திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின் நோக்கம் நிறைவேற்றப்படக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே இந்தக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு எடுக்கப்படுகின்ற முடிவுகளை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். ஏனென்றால் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஐயப்பாடுகள் கூட இப்போது குறைந்து இருக்கின்றன. எதிர்ப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்திருக்கிறது. தமிழுக்கும் அந்த நாட்டுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்று சொல்லக் கூடிய பின்லாந்து நாட்டவரும் இதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆராய்ச்சிகளின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் சிறிதும் தொடர்பு இல்லாத ரஷ்யா நாட்டுக்காரர்கள். அவர்கள் காய்தல் உவத்தல் இன்றி இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பேரவையின் கவனத்தை ஈர்ப்பதற்கும், மக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் ஏற்ற முறையில் இங்கே இதைப் பற்றி விவாதித்து இருப்பது திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுடைய நோக்கம் நிறைவேறுகின்ற அளவில் அமைந்து இருக்கிற காரணத்தால் குழு அமைக்காமல் இந்தப் பணியை ஆராய்ச்சித் துறைக்கு விட்டுவிடலாம் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

DR. H.V. HANDE : The speech of Mr. I. Mahadevan at the Paris Conference might be circulated to Members of the Assembly. It might be of educative value to us.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திரு. ஐ. மகாதேவன் அவர்களுடைய ஆராய்ச்சியை சுருக்கமாகத் தரச் சொல்லி, எல்லோருக்கும் தருகின்ற அளவில் ஏற்பாடு செய்யலாம்.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடந்த விவாதம் பயனுடையது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் குறிப்பிட்டதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். ஆயினும் விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்ட இரண்டொரு கருத்துக்களுக்கு என்னைப்பற்றிய தன்னிலை விளக்கமாகப் பதில் கூறுவது நல்லது என்று நினைக்கிறேன்.



1970 ஆகஸ்டு 29] [திரு. ம. பொ. சிவஞானம்]

திரு. விநாயகம் பேசும்போது ஆங்கிலம் தெரியாது, ஆங்கிலத்தில் நடந்ததை ஏன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். ஆங்கிலம் தெரியாது என்பதற்காக நான் வெட்கப்படவில்லை. அதே மாதிரி ஆங்கிலம் தெரியாது என்ற காரணத்திற்காகத் தமிழனாக இருக்கிற எவனும் வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதைக் குறிப்பிடுவதற்கு நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுகிறேன்.

அங்கே நடந்த விவாதம் தமிழைப் பற்றிய ஒன்று. அதனால்தான் நான் இங்கு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். திரு. விநாயகம் அவர்கள் சுட்டிக் காட்டி சொன்னது எனக்கும் அவருக்கும் இருக்கிற தொடர்புக்குக் கூட நல்லது அல்ல, என்று நினைக்கிறேன். அதை ஒரு பிரச்னையாக நான் இங்கே எடுத்துக்கொள்ளவில்லை. அங்கே அவர்கள் பேசியதைப் பற்றிய விவரம் வேண்டுமென்று கேட்டார்கள். அதைத் தங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். கல்வியமைச்சர் சொன்னதைப் போன்று அங்கே அவர்கள் பேசியதை "சம்மரி" ஆகக் கொடுத்திருக்கிறார். எல்லோருக்கும் அதைக் கொடுத்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன். அதிலே அவர்கள் "சோ கால்டு திராவிடியன் சிவிலிசேஷன்" என்ற பொருளிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அங்கே பேசியபோது நானும் இருந்தேன். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முடிவு மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே அதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். சந்தேகம் ஏற்படுமானால் அதை நிவர்த்திப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. அதற்காகத்தான் நான் குழு அமைக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றும் கேட்டார்கள். "நாமெல்லாம் திராவிடர்களா"? என்று கேட்டார்கள். இன்று இருப்பவர்கள் திராவிடர்களா, இல்லையா? என்ற ஆராய்ச்சி இப்போது தேவையில்லை. பண்டைய காலத்தியதான சிந்து வெளி நாகரீகம் திராவிட நாகரீகமா? இல்லையா? என்பதே பிரச்சினை. வேறு பிரச்சினை இல்லை. அப்படிப் பார்த்தால், நானும் திராவிடன் இல்லை. நண்பர் திரு. விநாயகம் ஆரியர் இல்லை. அல்லது நண்பர் விநாயகம் திராவிடர் இல்லை, நானும் ஆரியன் இல்லை. எத்தனையோ கலப்புகள் வந்தாலும் திராவிட இனத்தாருக்கு அவர்களுடைய உள்ளமே சொல்கிறது திராவிடப் பரம்பரையைச் சேர்ந்தவர் என்று. அவர்கள் சொன்னார்கள் வெறுங்கை முழம் போடாது என்று. வெறுங்கை முழம் போடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய உணர்ச்சியில் சிறிதும் குறைவு இல்லை. அவர்கள் அங்கே சொன்ன கருத்தை நாம் மறுக்கிறோம். நாம் நம்புகிறோம் சிந்துவெளியில் இருந்தது திராவிட நாகரிகம் என்று. ஆனால் அது உலகத் தமிழ் மாநாட்டிலே மறுக்கப்படுகிறது. எனக்கு வக்கீல் இல்லை. அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள், அவர் உங்களோடும் வரமாட்டார், எங்களோடும் வரமாட்டார் என்று சொன்னார், நகைச்சுவைபட சொன்னார். நான் எப்பொழுதும் அதே

இடத்திலேதான் இருக்கிறேன். திரு. விநயகம் என்னை விட்டுப் போய்விட்ட பிறகுகூட நான் அதே இடத்திலேதான் இருக்கிறேன். அவர் இந்த எட்டாண்டுக் காலத்திலே.........

திரு. கே. விநயகம் : நான் தமிழரசுக் கழகத்திலே இல்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : எடுத்துக்கொண்டுவந்து காட்டட்டுமா தஸ்தாவேஜுவை.

திரு. கே. விநயகம் : நான் காங்கிரஸில்தான் இருக்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : நான் அவர்களோடு வருவது, உங்களோடு வருவது என்பதில்லை, நான் திராவிட இனத்தவனக இருக்கிறேன் என்பதில் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். நாம் எல்லோரும் திராவிட நாகரீகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வோடு நான் இருக்கிறேன். அங்கே கமில் சுலபிள் அவர்கள் திராவிடர் தன்மானத்தைப் பாதிக்கின்ற நிலைமையில் கூறியிருக்கிறார், அதைக் கேட்டதும் என்னுடைய ரத்தம் கொதித்தது; இங்கே அதைக் கொண்டுவந்திருக்கிறேன்; சிலருக்கு அதைக் கேட்டதும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது, அது அவரவர்கள் வளர்ச்சியைப் பொறுத்தது, வாழ்க்கையைப் பொறுத்தது. நான் அதைப்பற்றிக் கேட்டதுமே மனம் கொதித்தது, இங்கே கொதித்து எழுந்திருக்கிறேன். கோலாலம்பூர் தமிழ் மாநாட்டிலே மாறுபட்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டபொழுது அங்கே எதிர்த்துக் குரல் கொடுத்தவன் நான். அதே போல் சென்னையிலே தமிழ் மாநாடு நடந்தபொழுது திரு. சந்தானம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியபொழுது எழுந்து நின்று எதிர்ப்புக் குரல் கொடுத்தேன். பாரீஸில் கொடுக்காமல் இருந்ததற்கு எனக்கு ஜலதோஷம் பிடிக்கவில்லை. பேப்பர்கள் கொடுத்தவர்கள்தான் அங்கே பேச அனுமதிக்கப் பட்டார்கள், அங்கே பேச உரிமை எனக்கு இல்லை, அதனால் சும்மா இருந்தேன்.

கல்வியமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், என்னுடைய கருத்துக்கள் அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தினால் திரும்பவும் வலியுறுத்த வேண்டாமென்று சொன்னார்கள். அங்கே கமில் சுலபிள் ஆட்சேபணை மட்டும்தான் செய்தார் என்பதல்ல; அதை ஒரு கருத்தாகவே அவர் வலியுறுத்தியிருக்கிறார். எனவே, குழு அமைத்து ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் அதை ஒருவரிடம் ஆராய்வதற்கு விடுகிறீர்களோ, அல்லது தமிழ் வளர்ச்சிக் குழுவிடம் விட்டு விடுகிறீர்களோ என்னவோ?' இங்கே இந்த அவைக்கும் இந்த அரசின் நாட்டத்திற்கும் அதைக்கொண்டுவருவது என்னுடைய கடமை, கொண்டுவந்தேன். இந்த விவாதத்திலே கருத்துக் கூறியவர்கள் பாணியிலே வேறுபட்டவர்களாக இருந்தாலும், அவர்களுடைய உணர்வுகளிலே வேறுபட்டவர்களாக இருந்தாலும், விஷயத்திலே யாரும் மாறுபடவில்லை, என்னுடைய அருமை நண்பர்



திரு. விநயகம் உள்பட, டாக்டர் திரு. ஹ்றாண்டே அவர்கள் கூடத் தெளிவாகச் சொன்னார்கள். இதை மறுக்கிறோம் என்று சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நாம் இதிலே மூன்றாவது பாராவிலே அதைத்தான் சொல்லியிருக்கிறோம். அங்கு சொன்னது தவறு என்று நாம் கண்டிக்கிறோம், முடிவுகாணுங்கள் என்று கூறுகிறோம். மறுக்கிறோம் என்பதும் உறுதிப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என்பதும் பொருள் ஒன்றுதான். நல்லவேளையாக மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டாலும் டாக்டர் ஹாண்டே அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, கல்வியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துவைப்பததின்மூலம் இங்கே நடைபெற்ற விவாதம் மக்களின் செவிக்கு எட்டி, திராவிட நாகரீகத்தைக் காப்பதற்காக இந்த ஆட்சி இருக்கிறது என்ற நிலையிலே, இந்த மன்றத்திலே திராவிட நாகரீகத்தைப்பற்றிப் பேச ஆள் உண்டு என்ற நம்பிக்கை மக்களுக்குக் கிடைத்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் விட்டுவிடுகிறேன்.

பேரவையின் அனுமதியுடன், திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுடைய தனித் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

## 7. அறிவிப்புகள்.

### தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 23/68)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 23/68) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (ஆ) தனி உறுப்பினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் நாளில் மசோதாக்களை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து

THIRU K. VINAYAKAM : On a point of order. Sir. During Private Members' Day, it has been an established practice in this House that all the Bills given notice of by Members, should get precedence over the resolutions given by the Members. May I know why the Hon. Speaker has changed that order ? How did this resolution gain priority by ballot paper and how is it that the Bill got second priority by ballot paper ? It has been an established custom that the Bill must be taken up first and then the resolution. That has been the practice. How did it happen that you changed the procedure ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—விதி 145 என்ன சொல்கிறது என்றால்—

Provided that the Speaker, with the consent of the Minister in-charge of the department concerned may allow a resolution to be entered on the list of business with shorter notice than 15 days and without the procedure of a ballot under rule 25 and also fix its order of precedence in such list. என்று இருக்கிறது. ஆகவே விதிப்படிதான் இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : So the Minister gave consent

MR. SPEAKER : Yes

THIRU K. VINAYAKAM : Because you yourself should not do it *suo motu*.

### 6. தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி

### (ஆ) மசோதா.

### தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 23/68)

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (*) (சட்டப் பேரவை மசோதா எண். 23/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : I second it.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் ஆய்வுக்காக இந்த நாட்டிற்குள் நடக்கிற திருமணங்களையும் தமிழ்நாட்டிற்கு வெளியே நடத்தப்படும் திருமணங்களையும் பதிவு செய்வதற்குரிய மசோதாவைப் பெருமையோடு கொண்டு வருகிறேன்.

இந்த மசோதாவின் நோக்கங்களை நான் மசோதாவிலேயே விளக்கியிருக்கிறேன். இந்த நாட்டில் நடைபெறுகின்ற திருமணங்கள், சமயச் சடங்குகளோடு நடந்தாலும், சமயச் சடங்குகள் அல்லாத பிற சடங்கு முறைகளில் நடந்தாலும், அல்லது அவற்றைப் புறக்கணித்துவிட்டு வேறு முறையில் நடந்தாலும், அவற்றையெல்லாம் பதிவு செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறேன்.

இன்றைய தினம் நாம் வாழ்கின்ற சூழ்நிலைக்கு நம்முடைய சமுதாயத்திலே உள்ள பல்வேறு கால கட்டங்களிலே ஏற்பட்டிருக்கிற மாற்றங்களுக்கும் ஏற்ப ஒரு முழுமையான நிலைமையை ஏற்படுத்துகின்ற அளவிலே என்னுடைய மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். திருமணங்களைச் சமயத்தைச் சார்ந்தவர்களிடையே நடத்திக்கொண்டாலும் சரி, அல்லது சமயத்தைச் சேராமல் அதிலே நம்பிக்கையில்லாமல் செய்துகொண்டவர்களாக இருந்தாலும் சரி, சமயச் சடங்குகளிலோ அல்லது மதச் சடங்

* 4—9—1968-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



குகளோ கவனம் செலுத்தாமல் புறக்கணித்துவிட்டு சீர்திருத்த முறையிலே திருமணங்கள் நடைபெற்றிருந்தாலும் சரி, அரசாங்கத்தினுடைய பதிவேடுகளிலே பதிவு செய்யப்பட வேண்டுமென்ற அளவிலே இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறேன். இந்த மசோதா அந்த வகையிலே நம்முடைய மக்களுக்கு சமுதாயத்திற்குத் தமிழக மக்களுக்கு நன்மை செய்யும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய திருமணங்களைப் பொறுத்தவரையிலும் கடந்த பல நூறுண்டுகளாகச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டதன் விளைவாகத் திருமணங்களைப் பற்றிய சட்டங்கள் அவ்வப்பொழுது மாற்றப்பட்டு சமுதாயத்திலே அதற்கு ஆதரவும் எதிர்ப்பும் இருந்தும்கூட வாழ்கின்ற முறைக்கொவ்வ சட்டங்கள் மாற்றப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கடந்த காலத்திலே தந்தை பெரியார் திருமணங்களைப் பொறுத்தவரையிலும் சீர்திருத்த முறையிலே நடைபெறவேண்டுமென்பதற்காக தம்மால் முடிந்த அளவிற்கு பெருமளவிற்குச் சீர்திருத்தவேண்டுமென்ற நோக்கத்தில் அவர்களுடைய கட்சியை சுயமரியாதை இயக்கமாக வைத்து அதனுடைய முக்கிய நோக்கமும் குறிக்கோளுமாக இருந்த சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வந்தார்கள். அதன் காரணமாகத் தமிழகத்தினுடைய கிராமங்களில் எல்லாம்கூட அவர்களுடைய கால்படாத ஊரே இல்லை என்று கூடச் சொல்லலாம் அந்த அளவிற்குச் சென்று சுயமரியாதைத் திருமணங்களை நடத்திவைத்தார்கள். சமுதாயம் அப்படிப்பட்ட திருமணங்களை மறுத்த காரணத்தாலும் சட்டம் அதிகாரப்பூர்வமான அங்கீகாரத்தை அளிக்காத காரணத்தினாலும் நடைபெற்ற திருமணங்கள் செல்லாது என்ற நிலையிலே மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்குகின்ற மசோதாவைக் கொண்டுவந்து அதற்கு இந்த மாமன்றமும் ஒப்புதல் அளித்தது.

(திரு. எஸ். ராமலிங்கம்—தலைமை)

இன்றையதினம், இத்தனை சட்டங்களுக்கிடையிலே, பல்வேறு வகையான திருமணங்கள் நாட்டிலே நடைபெறுகின்றன. இன்னொன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திருமணத்தைப் பொறுத்தவரையிலே, இந்த சுயமரியாதைத் திருமணம், மற்ற மதச் சார்பான திருமணங்களைப் பொறுத்தவரையில் ஒன்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் இங்கே குழந்தைகள் பிறந்தால் அதற்கான பதிவேடு வைத்திருக்கிறோம். யாராவது இறந்துபோனால் அதற்கான பதிவேடுகள் இருக்கின்றன. நாட்டிலே எத்தனை குடும்பங்கள் என்று மிகச் சுலபமாகத் தெரிந்துக்கொள்ளலாம். ஆனால் இந்த ஆண்டு இத்தனை திருமணங்கள் நடைபெற்றன என்று புள்ளிவிவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பே இல்லை.

அதுமட்டுமல்லாமல், திருமணங்களைப் பற்றி இன்னொன்றை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திருமணச் சடங்குகளை எவ்வளவு எளிமையாக்க முடியுமோ அந்த அளவிற்கு எளிமையாக ஆக்கியிருக்கிறோம்.

அப்படி ஆக்கியிருப்பதிலே நாம் பெருமை கொள்கிறோம். ஆனால் திருமணத்தை அடுத்து வரும் பல சிக்கல்களை இந்த அவை நன்றாக உணர வேண்டும். திருமணத்தைத் தொடர்ந்து வாரிசு உரிமை வருகிறது. திருமணம் நடைபெற்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு பல குடும்பங்களில் இல்லாவிட்டாலும், நூற்றுக்கு 99-க்கு மேலான குடும்பங்களில் மிகுந்த ஒற்றுமையோடு வாழ்கிறார்கள். ஆனால் ஒரு சில குடும்பங்களில், திருமணம் செய்து கொள்ளும் கணவனோ அல்லது மனைவியோ, குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டு விலகிப்போகும் நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்திலே, சில நேரங்களிலே அந்தத் திருமணமே நடைபெறவில்லை என்று அந்த ஆணோ அல்லது அந்தப் பெண்ணோ சொல்லி அதற்காக நீதி மன்றத்திற்குச் செல்லக் கூடிய நிலையைக் காண்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்று, அல்லது திருமணம் நடைபெற்றதாகச் சொல்லப்படும் ஆண்டிலிருந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அந்தத் திருமணம் நடைபெற்றதா இல்லையா என்ற ஐயத்தை எழுப்பி, அதற்கான முடிவை நீதி மன்றத்தில் கோர வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். திருமணம் செய்துகொள்ளும் அந்த இரண்டுபேரைப்பற்றி மட்டும் என்றால் பிரச்னை எதுவுமில்லை. ஆனால் அவர்களை அடுத்து, அவர்களது வாரிசுகள், அவர்களது குழந்தைகள் இருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய நிலைமை பாதிக்கப்படுகிறது. அதற்கும் மேலாக, இந்தச் சமுதாயத்தினுடைய, சமுதாயத்தில் வாழ்பவர்களுடைய நிலையில் அவர்களுக்காக நாம் எந்த முறையில் கடமைப் பட்டிருக்கிறோம், அப்படிப்பட்டவர்களின் குடும்பத்திற்காக என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, இதற்கெல்லாம் ஒரு தெளிவுகாணும் வகையிலே நாட்டிலே நடைபெறும் திருமணங்கள் அத்தனையும் பதிவு செய்ய வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த மசோதாவைப்பற்றி இந்த அவைக்கு இன்னொரு கருத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். கிறிஸ்தவர்களிலே, அவர்களுக்கு நடைபெறும் திருமணம், அவர்களின் ஆலயங்களிலே நடைபெற்றால், அங்கே நடைபெறும் திருமணங்களுக்காக குறிப்புகள் எழுதப்படுகிறது. யார் யாருக்கு எந்தெந்த தேதியிலே நடந்தன என்ற குறிப்புகள் தெரிகிறது. முகம்மதியர்களை எடுத்துக் கொண்டாலும், அவர்கள் ஆலயங்களிலே திருமணம் செய்தாலும் அவர்கள் செய்து கொள்ளும் திருமணம் பதிவுசெய்யப்படுகின்றது. இதற்கான குறிப்புகள் திருமணத்தை நடத்தி வைப்பவர்களிடம் இருக்கிறது. இந்து மதத்திலே, ஆலயங்களிலே செய்யப்படும் திருமணங்களுக்குப் பதிவுகள் இருக்கின்றன. அங்கே வந்து செய்தால் இருக்கிறது. ஆனால், சீர்திருத்தத் திருமணத்தைப் பொறுத்தவரையிலே, நாம் பதிவு செய்துகொள்ளும் உரிமையைக் கொடுத்திருக்கிறோம். வேண்டுமானால், விரும்பினால் பதிவு செய்து கொள்ள முடியும். அதற்குச் சட்டத்தின் அனுமதி இருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்திக்கொள்ளாதவர்கள் சில நேரங்களிலே சங்கடத்திற்குள்ளாகும் நிலை இருக்கிறது.





ஆகவே, இவைகளைச் சொல்லுகின்ற காரணத்தினாலே சுய மரியாதைத் திருமணத்தை செல்லுபடியாக்க சட்டம் வந்ததற்காக இந்த மசோதாவைக் கொண்டுவந்ததாக யாரும் மனத்திலே கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, இவற்றிற்கெல்லாம் பரிகாரம் காணும் வகையிலே, விடிவு காணும் வகையிலே இந்த நாட்டிலே நடைபெறும் எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்ய வேண்டியது அவசியம் என்ற நிலையை உண்டாக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்ற அளவிற்கு செயல்படுத்துகின்ற அளவிற்கு என்னுடைய மசோதாவை இன்று இந்த அவையின் முன்னால் பரிசீலனைக்கு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய மசோதாவைப் பொறுத்த வரையிலே, இந்தப் பதிவு செய்யும் முறைகளைப்பற்றி நான் மிகத் தெளிவாக, மூன்றாவது பிரிவிலே, 4-வது பிரிவிலே, 5-வது பிரிவிலே ஆக இந்த மூன்று பிரிவுகளிலேயும் சொல்லியிருக்கிறேன். இப்படிப் பதிவு செய்வதைப் பொறுத்தவரையிலே, பலருக்கு ஒரு ஐயப்பாடு தோன்றலாம். திருமணத்தை மிகவும் எளிமையாக நடத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு, இந்தத் திருமணத்திற்கான செலவீட்டை அதிகப்படுத்தும் அளவிலே இந்த பதிவு முறை அமைந்துவிடுமோ என்ற அச்சம் அவசியமற்றதாகும். திருமணம் செய்துகொள்பவர்களுக்குச் சங்கடம் விளைவிக்கும் பொருளாதாரச் சூழ்நிலையிலே இது அமைந்துவிடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படலாம். ஆனால் என்னுடைய மசோதாவைப் பொறுத்தவரையிலே, அதை எவ்வளவு எளிதாக்க முடியுமோ அந்த அளவிற்கு எளிமையாக அளித்திருக்கிறேன். இவைகளைப் பதிவு செய்வதற்கான வழிமுறைகளை நான் வகுத்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தப் பதிவு செய்யும் முறை, பதிவாளர் அலுவலகங்களிலும், நகராட்சி அலுவலகங்களிலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் இதற்கான தலைமை அலுவலகங்கள் அமைந்தால் சரியாக இருக்கும். ஒவ்வொரு பஞ்சாயத்தின் மூலமாக அல்லது அதனுடைய கிராம மணியத்தின் மூலமாக இவற்றைப் பதிவு செய்யும் முறை, அங்கீகரிக்கும் முறை இருக்குமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இது முடியுமா என்றால், இந்தக் கிராம முன்சீப்புகள்தான் இந்த நாட்டிலே பிறக்கும் குழந்தைகளைப் பதிவு செய்கிறார்கள். நகரங்களிலே நகராட்சிகள் பதிவு செய்கின்றன, இறப்பவர்களைப் பதிவு செய்கிறது. அதைப்போலவே, இந்தத் திருமணங்களைப் பொறுத்த வரையிலேயும், அந்த முறையிலே பதிவு செய்யும் முறை இருப்பது என்று வைத்தால் மிகவும் சுலபமாக இதை அமுல்படுத்த முடியும்.

அதுமட்டுமல்ல, நம்முடைய தமிழகத்திற்கு வெளியேயிருக்கும் மக்கள், அவர்கள் திருமணம் நடைபெறும் நேரத்தில் அல்லது திருமணத்தை வெளியிலே இருக்கும் நேரத்தில் முடித்துக்கொண்டு, அவர்கள் தமிழகத்திற்குத் திரும்ப வந்ததற்குப்பிறகுதான், திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள இதிலே வாய்ப்பைத் தந்திருக்கிறேன். அதற்கும் மேலாக, இந்த 6-வது பிரிவிலே உள்ள

[திரு. க. இராமமூர்த்தி] [1970 ஆகஸ்ட் 29

அந்தப் பிரிவைப்பற்றி நான் பலரோடு கலந்து பேசினேன். சட்டத் துறையிலே இருப்பவர்களோடு கலந்து பேசினேன். இந்த 6-வது பிரிவைப் பற்றி இந்த அவை மிக முக்கியமாகத் தன் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் மிகவும் வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த 6-வது பிரிவில் இப்படித் திருமணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் அல்லது பதிவு செய்யத் தவறினால் அதன் மீது எப்படி நடவடிக்கைகள் எடுப்பது என்பது தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இந்த மசோதாவிலே கொடுத்திருக்கும் நிலைமையை மாற்ற வேண்டுமா அல்லது இதுவே போதுமா அல்லது இதைவிட இன்னும் சற்று மாற்ற வேண்டுமா என்பதை இந்த அவை அதன் மீது தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அத்துடன்கூட, பதிவு செய்யாதவர் களுக்கு எந்தவிதமான தண்டனை அளிக்கலாம் என்பதுபற்றி, தண்டனைக்குரிய விதிகளை இதில் சேர்த்திருக்கிறேன். இந்த இரண்டின்மீதும், இந்த அவை தன்னுடைய கவனத்தை, தனிப்பட்ட கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

இதற்குமேலாக, நாட்டிலே நடைபெறும், திருமணங்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு, அந்தப் பதி வாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு இன்னொரு நிலைமையை நான் ஏற்படுத்தியிருக்கிறேன். நம்முடைய நாட்டிலே நடைபெறும் திருமணங்களைப் பொறுத்தவரையிலே, பெரும்பாலான திருமணங்கள் பத்திரிகைகள் இல்லாமல் நடைபெறுவதில்லை. அநேகமாக எல்லாத் திருமணங்களுக்கும் திருமணப் பத்திரிகை அச்சடித்து, அதன் அடிப்படையிலேதான் நடைபெறுகிறது. ஆகவே, அரசைப் பொறுத்தவரையிலும் அந்த அச்சகங்களிலிருந்து ஒவ் வொரு அச்சகமும் அந்தந்த மாதத்திலே அச்சடித்த திருமண அழைப் பிதழ் பற்றிய விவரங்களை அரசிற்கு அல்லது பதிவாளர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்பதற்காக ஒரு விதியை நான் செய்திருக்கிறேன்.

இதற்கெல்லாம் மேலாக, இந்த மசோதாவின் மூலம் அரசுக்கு, தனியான பொருளாதார இழப்போ அல்லது பொருள் நஷ்டமோ அல்லது செலவினமோ அதிகரிக்காது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவை அங்கீகரிப்பதன் மூலம், இதை ஏற்றுக்கொள்வதன்மூலம் அரசுக்கு தனியான செல வினம் எதுவும் அதிகமாக ஏற்பட்டுவிடாது என்ற நிலையை இன்று இந்த மசோதாவிலேயிருந்து தெளிவாகத் தெரியவரும். ஆகவே, மாறிவந்த சூழ்நிலைகளுக்கேற்ப, இன்றைய சமுதாயச் சூழ்நிலை களுக்கேற்ப இது முழுக்கமுழுக்க அவசியமான மசோதா என்பதோடு மட்டும் அல்ல, இது சட்டமாக்கப்படுவதால் நாம் செய்துவரும் சமுதாயப்புரட்சிக்கு, இது மேலும் ஊக்கம் தரும் அளவிலே, நம்முடைய புரட்சியை மேலும் முழுமைப்படுத்தும் அளவிலே அமையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1970 ஆகஸ்டு 29] [திரு. க. இராமமூர்த்தி]

அதோடு மட்டும் அல்ல. கடந்த காலத்தில் பல சட்டங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டங்கள் எல்லாம் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், புரட்சி அல்லது சமுதாய மறு மலர்ச்சியின் விளைவாக ஏற்பட்டவை. திருமணத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்ட சட்டங்கள்—1856-ல் விதவைகள் திருமணச் சட்டம் நிறைவேற்றி இருக்கிறோம். அதற்குப் பிறகு ஸ்பெஷல் மேரேஜஸ் ஆக்ட் 1872-ல். அதற்குப் பிறகு ஸ்பெஷல் மேரேஜஸ் ஆக்ட் திருத்தச் சட்டமாக 1923-ல் கொண்டு வந்து நிறைவேற்றப் பட்டது. ஆரிய மேரேஜ் வேலிடேஷன் ஆக்ட் 1933-ல் செய்தோம். மதத்தின் அடிப்படையில் அல்லது செய்கின்ற சட்டங்களின் அடிப் படையில் அந்தத் திருமணங்கள் செல்லுபடியாகாமல் தடுக்கின்ற நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காக சமுதாய மறுமலர்ச்சிச் சட்டங்களாகக் கொண்டு வந்தோம். குழந்தைகள் திருமண தடை மசோதா 1929-ல் செய்தோம். 1954-ல் ஸ்பெஷல் மேரேஜ் ஆக்ட் கொண்டு வந்தோம். அதற்குப் பிறகு இருதாரத் தடையை உள் ளடக்கிய ஹிண்டு மேரேஜ் ஆக்டை 1959-ல் கொண்டு வந்தோம். 1967-ல் ஹிண்டு மேரேஜ் அமெண்மெண்டை ஆக்ட் என்று கொண்டு வந்து அண்ணா அவர்கள் இந்த அவையில் நிறைவேற்றினார்கள்.

இந்தச் சட்டங்கள் எல்லாம் தேவைக்கு உகந்த முறையில், நாகரி கத்திற்கேற்ற முறையில், சமுதாய மாற்றத்திற்கேற்ற முறையில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள். அதைத் தொடர்ந்து வருகின்ற என்னுடைய மசோதாவை ஏற்றுக் கொள்ளுவதன் மூலம் நம்முடைய சமுதாயத்தின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்ப தோடு நம்முடைய அரசின் சமுதாய சீர்திருத்தக் கொள்கையின் அக்கறையையும் தெளிவாக்கும் என்று சொல்லி இதற்கு மேலே ஒரே ஒரு கருத்தை சொல்லி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி மிகுந்த அளவில் அக்கறை கொண்டிருக்கிறோம். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய புள்ளி விவரங்களைப் பொறுத்து தெளிவாக்கும் நிலைமைக்கு இது உதவுகின்ற முறையிலும் இது துணைபுரியும் என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ராமலிங்கம்) : இப்போது திரு. சித்தன் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வரு வார்கள்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I move the following amendment :—

'That the Bill be referred to a Select Committee consisting of Members of this House for consideration and report to this House'.

THIRU J. JAMES : Sir I second the amendment.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியில் இருந்து அருமை நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற திருமணங்கள் பதிவு பற்றிய மசோதா பல சிறப்பு

அம்சங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இது சமுதாயத்திற்கு இன்றியமையாத மசோதா. இதைப்பற்றி ஒரு சில மணி நேரங்களில் முடிவு எடுத்து விடாமல் ஆற, அமர ஆராய்ந்து யோசிக்க வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு. பிரதிநிதிகளிடமிருந்து கருத்துக்களை அறிய வேண்டும். ஆகவே, இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* ஹாஜி மா. மு. பீர் முஹம்மது : தலைவர் அவர்களே, உயர்திரு ராமமூர்த்தி அவர்கள் திருமண பதிவு மசோதா கொண்டு வந்திருப்பதில் எல்லா சமய மக்களையும் இந்த மசோதா கட்டுப்படுத்தும் வகையில் அது இருக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எதிரான என்னுடைய கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இஸ்லாமிய சமயத்தைப் பொறுத்தவரை திருமணம் என்பது ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் ஏற்படுத்தப்படுகிற ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் என்ற அடிப்படையில்தான் இஸ்லாமியச் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. அதுமாத்திரமன்று; இஸ்லாமிய வாழ்க்கை ஒப்பந்தத்தினுடைய அடிப்படையாக இவர்கள் இருவரும் வாழ்க்கைத் துணைவராகவும், துணைவியராகவும் சேர்ந்து வாழப் போகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஆண்களாக இருப்பார்களேயானால் இரண்டு சாட்சியங்கள் அங்கே இருக்க வேண்டும்; ஆண்களே இல்லாத நிலையில் பெண்களாக இருப்பார்களானால் நான்கு பெண்கள் சாட்சியங்களாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் இருவரும் கணவனும் மனைவியுமாக வாழப் போகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்தி வைக்கிற ஒருவர் இடைநடுவராக இருக்க வேண்டும்; இதுதான் இஸ்லாமிய சட்டத்தின் வாழ்க்கை ஒப்பந்த அடிப்படை.

உயர்திரு. ராமமூர்த்தி அவர்கள் இஸ்லாமிய மக்கள் மகுதிகளிலும் பிற இடங்களிலும் நடத்துகின்ற திருமணங்கள் பதிவேட்டில் பதியப்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். ஓரளவு உண்மைதான். பெரிய கிராமங்களிலும், நகரங்களிலும் நடத்தப்படுகின்ற திருமணங்களுக்கு ரிஜிஸ்டர் புத்தகம் என்ற அடிப்படையில் பதிவுப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. அது இஸ்லாமியச் சட்டத்தின் அடிப்படை அல்ல. சம்பிரதாயத்தின் ஒரு அடிப்படையே.

இஸ்லாமியத் திருமணத்தைப் பொறுத்தவரை 1400 ஆண்டுகளுக்கு முன்னால், காலத்தால் மாறாத, காலத்திற்கும் கருத்துக்கும் ஒத்த, ஞாலம் போற்றும் உண்மைகளை, எல்லாம் தன்னகத்தே சிறப்பாகக் கொண்டிருக்கிற திருமறையை அடிப்படையாக வைத்தும் நபிகள் நாயகம் கொடுத்த விளக்கத்தை அடிப்படையாக வைத்தும் இமாம்களின் விளக்கங்களை ஒட்டியும் உலகம் பூராவும் ஒரே சீரான திருமணச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





இந்த நாட்டினுடைய அரசியல் சட்டம் அவரவருடைய சமயத்தை அடிப்படையாக வைத்து ஒழுகுவதற்கு, வாழ்வதற்கு உரிமை தருகிறது. அந்த உரிமை தருகின்ற அடிப்படையில்தான் இரண்டு சாட்சியங்களையும், இடை நடுவரையும் அடிப்படையாக வைத்து நடத்தப்படுகிற வாழ்க்கை ஒப்பந்தம் பதிவு பண்ணுகிற நிலையில் சாட்சியங்கள் என்ற முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவே உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இந்த நாட்டில் இருக்கும் எல்லா சமுதாயத்தினரும் பதிவேட்டின் கீழ்தான் அவர்களது திருமணத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கோருகிற இந்த மசோதா எங்களது சமய அடிப்படைக்கு முரண்பாடாக இருக்கிற காரணத்தாலும், அதே நேரத்தில் அரசியல் சட்டம் எங்களுக்குத் தருகின்ற உரிமைக்கும் மாறுபட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு அறிவித்து அதிலிருந்து எங்களுக்கு விதிவிலக்கு தரப்பட வேண்டுமென்று கூறி, எல்லா மதத்தவரும் பதிவேட்டில் பதிந்தால்தான் திருமணம் செல்லும் என்ற கருத்தை நான் எதிர்க்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

* Dr. H. V. HANDE : Sir, while supporting the Bill brought forward by the Hon. Member, Thiru Ramamoorthy, I only wish to say a few words briefly. It has been the practice in our country for a long, long time to celebrate the marriages through different systems and different methods. We have the Hindu Marriage Act which legalised the purohit-performed marriages done through mantrams. Similarly we have Acts for the Muslim marriages and Christian marriages. As our country is a secular country we are all conscious of the fact that all religionists must have freedom of action and equality and therefore it is necessary to have a common law under which the marriages can be properly registered.

Recently we have enacted the Swayamariyathai Marriage Act and under which we have legalized the exchange of garlands for marriage purposes. Sir, so far as the performance of marriages is concerned, there is always difference of opinion with regard to the correct method of marriage. According to the Hindu Marriage Act, if a particular item is omitted, the marriage will not become legal. Also different methods are followed in different parts of the country. For instance, there is some variation in the Kanyakumari district. So far as the Swayamariyathai Act is concerned, even if the garland is not properly exchanged, it ceases to be a legalized marriage.

So, we must follow the practice obtained in the modern countries of the world. For instance, in countries like Japan, West Germany and the United Kingdom, the marriages are legalized in the Registrar's Office. Just like the Registrar of Births and Registrar of Deaths, there can be a Registrar of Marriages to legalize marriages.

In this connection, I wish to inform the House that one of my immediate brothers got married by registering his marriage and paying a fee of Rs. 15-50. On the whole the total expenditure came to about Rs. 65 including the cost of a small tea party. This sort of modern marriage should be encouraged and it would have a salutary effect if we do so. Now how the Hindu marriages are performed? They are performed according to the status of a person. If a person is a rich person or a high personality, he spends lavishly on marriages. Whether a person is a rich person or a middle class person or a poor man the marriage should be legalised on a basis of complete equality and the registration of marriages is the only modern method.

We have a fashion of conducting marriages on a large scale,
பி.ப. 1-00 grand scale. It is totally unnecessary. Especially in a poor country like ours, we cannot afford to conduct marriages spending large sums of money. But I have seen marriages wherein people are simply wasting money. When poor people are suffering for their next meal, we cannot afford to have costly marriages, wasting lot of money. We should ban all costly and grandiose marriages. At least, legislators like us, should take a decision to boycott such marriages.

One more point. There is a clause here. I mean Clause 6. I would have been happier if sub-clause (2) had been deleted. It says that all children born of unregistered marriages shall not be legalised. I do not accept it. According to me there is no illegitimate child at all. There may be illegitimate matrimonial alliances. What can the poor child do? It is a product of indiscretion of a couple of persons. We cannot victimise the children because of indiscretion of parents. Even in the United States there was a lady (I forget her name) who fought for the improvement of lot of illegitimate children and she saw to it that a statute was enacted in United States which said that there could not be illegitimate children. There is no illegitimate child at all there. All human beings are children of God. So that sub-clause may be deleted.

Beyond this I do not see anything objectionable in this Bill. Clause (5) deals with registration when marriage takes place outside the State. Suppose a couple Marry outside Madras State. They may come to Madras 2 or 3 years later. They may not know the rules correctly, and may not know the correct registration office. That is why I say I agree with the amendment of Thiru N. S. V. Chithan to have the Bill referred to a Select Committee. The Committee can go into all these things calmly and report to the Assembly.

We can validate all marriages. Mr. Peer Mohamed was talking of Muslim marriages. I am very zealous of the way in which they conduct their marriages. They do it in a simple way. We must copy their methods also. Each marriage might be celebrated



according to the tenets of its religion; I mean marriage by Christians and Parsees also. Everything should be legalised, without any distinction of caste. In this country we have high regard for all religions. I am sure the Hon. Chief Minister will consider what all had been said and consider this Bill favourably when it does affect the tenets of any religion. With these words I conclude.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் ராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதா திருமணங்கள் செய்து கொண்ட பிறகு அவர்களுடைய வாழ்க்கையில் பின்னால் பல முறிவுகளுக்குக் காரணமாக இந்தத் திருமணங்கள் நடந்ததா நடக்கவில்லையா என்று சர்ச்சைக்கு இடமாகிறபோது அதை நிரூபிப்பதற்கு அனுசரணையாக இருக்க வேண்டுமென்ற காரணத்தினால் திருமணங்கள் எந்த வகையிலும், எந்த மதத்தின் அடிப்படையில் செய்து கொண்டாலும் அதை ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. முன்னாலேயே திருமணங்கள் பல வகைகளில் செய்யலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. முன்னால் இந்தச் சபையிலேயே கொண்வந்திருக்கிற திருத்தத்தின்படி அந்த அந்த மதச்சடங்குகள் மூலம் செய்யப்படாத திருமணங்களும் செல்லுபடியாக்கப்பட்டிருக்கிறது.

இந்து திருமண சட்டப்படி நாம் பலதார தடைச் சட்டத்தை வைத்திருக்கிறோம். அம்மாதிரி பலதாரத் தடைச் சட்டம் அமுலில் இருக்கிறபோது ஒரு திருமணம் நடந்ததா நடக்கவில்லையா என்ற நிலை ஏற்பட்டு கோர்ட்டில் அது விவாதிக்கப்படுகிறபோது திருமணம் செய்து கொண்டவர்களே நாங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று வாதாடி அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். ஆகவே திருமணம் செய்து கொள்கிறவர்கள் கட்டாயமாக ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும் என்று கேட்பதன் நோக்கமே அவர்கள் திருமணம் செய்து கொண்டதற்குச் சாட்சியாக இது இருக்கவேண்டுமென்ற காரணத்தினால்தான் என்று நினைக்கிறேன். அம்மாதிரி சாட்சியம் இருக்கவேண்டுமென்று கருதுகிறவர்கள் அவர்கள் இச்சைப்படி எப்படி வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் கட்டாயமாக ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும் என்று இந்த மசோதாவை நாம் நிறைவேற்றுவோமானால் இதற்கு முன்னால் சட்டபூர்வமாக ஆக்கப்பட்ட திருமணங்கள் எல்லாவற்றிற்கும் மாறாக இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றுகிறபோது அந்தச் சட்டங்களின் மூலம் கொடுக்கப்பட்ட உரிமைகள் பாதிக்கப்படுகின்றன அல்லது பறிக்கப்படுகின்றன என்றுதான் நான் கருதுகிறேன்.

இம்மசோதாவின்படி இந்துக்கள், கிருஸ்தவர்கள் அல்லது முஸ்லிம்கள் சட்டப்படி திருமணம் செய்துகொள்கிறவர்கள் கட்டாயம் தங்கள் திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

அவ்விதம் திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் அதற்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்று மதிப்பிற்குரிய நண்பர் அவர்கள் இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு அப்படிச் செய்யாவிடில் அதற்குப் பின்னால் வருகிற வாரிசுகளுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லாமல் இருக்கவேண்டும் என்றும் கருதுகிறார்கள். அம்மாதிரி செய்வதன் மூலம் எவ்வளவு சிரமங்கள் ஏற்படும் என்பதை நண்பர் ராமமூர்த்தி அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ரெஜிஸ்டர் செய்து கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. இதனால் ஏதாவது பயன் கிடைக்கும் என்றால், அவர்கள் விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம். ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்றால் இப்போதுள்ள ரெஜிஸ்டேர்ட் மாரியேஜ் மாதிரி இருக்காது என்று கருதுகிறேன். கிராமங்களில் பிறப்பு ரெஜிஸ்டர் இருப்பதைப் போல் திருமண ரெஜிஸ்டர் என்று ஒன்றைப் போட்டு விடலாம். அப்படிச் செய்வதா அது பின்னால் சாட்சிக்கு உபயோககரமாக இருக்கும் என்றால் அவர்கள் போய் ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும், அப்படிப் பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் அதற்கு ஒரு பெனல்டி விதிப்பது என்பது சரியானதாக இருக்காது. ஆகவே விருப்பப்படுகிறவர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என்ற கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளலாம் என்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள். எங்கள் சுயேச்சைக் கட்சி சார்பில்—(ஒரு உறுப்பினர்: சுயேச்சை கட்சியா?) ஜனாதிபதி அவர்கள் கூட சுயேச்சை கட்சி தானே—எங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நண்பர் ராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்துள்ள திருமணங்கள் பதிவு செய்தல் மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விழைகிறேன். இதற்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவில் உள்ள ஒரு சில பிரிவுகளைத் தவிர மற்றப் பிரிவுகளை எல்லாம் ஆதரிக்கிறோம் என்று நன்கு தெளிவாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் உறுப்பினர் ஒருவர் ஒரு மதத்தினரை இது மிகவும் பாதிப்பதாகச் சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு கருத்து இதில் இல்லை என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

அவரவர்கள் மதத்தின் மூலமாக ஒரு வழிமுறையை அவர்கள் வகுத்து வரலாம். அப்படி செய்து கொள்வதைத் தடுப்பது என்பது இந்த மசோதாவில் சொல்லப்படவில்லை. ஹிந்து மதத்தில் பார்த்தால் புரோகிதரை வைத்துக் கொண்டு மந்திரங்களை ஓதி, அவர்களுக்கு வேண்டிய காட்சிகளை வைத்து திருமணம் செய்கிறார்கள். சட்டத்தில் இடம் இருக்கிறது. அதே நேரத்தில் முஸ்லிம் மதத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு வழிமுறை வகுத்து இருக்கிறார்கள். அதற்கும் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டு இருக்கிறது. எந்த மதத்தின் அடிப்படையில் திருமணம் செய்து இருப்பினும், திருமணமானது பின்பு எழுத்து மூலமாக ஒரு





'ரிஜிஸ்டிரேஷன்' இருந்தால் சட்ட ரீதியில் தர்க்கம் ஏற்படும் போது அந்த சாட்சியம் கண்கூடான சாட்சியமாக இருக்கிறது என்பது இதன் முன் இருக்கும் கருத்து. அப்படி ஏன் சொல்கிறேன் என்றால் எங்கள் ஊரில் ஒரு கோவிலில் ஒரு புரோகிதர் முன்னிலையில் திருமணம் நடந்தது. பின்பு என்ன ஆயிற்று என்று சொன்னால் அந்த ஆண் நான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை அந்தப் பெண்ணை என்று சொல்லிவிட்டார். அந்த புரோகிதரை அழைத்துக் கேட்டபோது, அவர் அந்தத் திருமணத்தை நடத்தி வைக்கவில்லை என்று சொல்லிவிட்டார். எல்லாப் புரோகிதரும் இப்படிச் சொல்லப்போவதில்லை. ரொம்பக் கஷ்டமாக கையில் காசு இல்லாத நிலையில் ஏதோ ஒரு சூழ்நிலையில் அவர்களுடைய மனத்தை மாற்றக்கூடிய நிலை ஏற்படும் சூழ்நிலையில் இப்படிச் சொல்லும் அளவுக்கு வந்து விடுகிறது. இந்தப் பதிவு செய்யக் கூடிய நிலை இருக்குமானால் அந்த நேரத்தில் கோர்ட்டுக்கு விசாரணைக்குப் போகும்போது இந்தப் பதிவு செய்யப்பட்ட ரிகார்டுகள் பதில் சொல்லும். பொய்யைச் சொல்லி மாற்ற முடியாது என்ற ஒரே நிலையில் இந்த மசோதாவை ஆதரிக்கிறோம்.

அதே நேரத்தில் நம்முடைய நாட்டிலே நமக்குக் குழந்தைகள் பிறந்தால் உடனடியாக நகராட்சியிலோ அல்லது பஞ்சாயத்திலோ பிறந்ததை 'பர்த் அண்டு டெத்' ரிஜிஸ்டரில் பதிவு செய்கிறார்கள். இதை ஏன் செய்ய வேண்டுமென்று கூடக் கேட்கலாம். பிறந்தது எல்லோருக்கும் தெரியும். பக்கத்தில் உள்ளவர்கள் பார்த்தார்கள். எதற்காக எழுத வேண்டுமென்று கேட்கிறோமா? இல்லை. எல்லோருமே பதிவு செய்கிறோம். சில சமயங்களில் ஒன்றிரண்டு பேர் செய்யும் தவறுகளுக்காக ஒரு பெண்ணின் வாழ்வோ அல்லது ஆணின் வாழ்வோ பாதிக்கப்படுகிறது. மதச் சட்டப்படி அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம். சந்தோஷம்தான். எல்லாவற்றையும் செய்து விட்டு கடைசியாக இன்ன தேதியில் இன்ன இடத்தில் நாங்கள் திருமணம் செய்து கொண்டோம் என்று நகர சபையிலோ பஞ்சாயத்திலோ அவர்கள் பதிவு செய்து கொண்டால், பின்பு அவர்கள் இருவரும் செய்து கொண்ட திருமணமானது எந்த இடத்திலும், எந்தக் கோர்ட்டிலும் போய் நீதிபதியிடம் பொய் சாட்சியம் சொல்லமுடியாத அளவுக்கு இடமளிக்கிறது. எந்த மதத்தையும் புண்படுத்தும் அளவில் இல்லை. அவரவர்கள் மதத்தில் எந்த முறையில் செய்யவேண்டுமோ அந்த முறையில் செய்யலாம்.

சில இடங்களில் பார்த்தால் சமூக ரீதியாக நடக்கிறது. கிராமத்தில் பார்த்தால், அவர்களுடைய சமூகக் கட்டுப்பாடு என்று வைத்துக் கொள்வார்கள். அவர்களிடத்திலே ஒரு நிச்சயதார்த்தம் செய்த மாதிரி செய்து கொண்டு இன்னின்னார்க்குக் கல்யாணம் செய்வதற்கு நிச்சயம் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்வார்கள். இது பழம்காலமாக தொன்றுதொட்டு இருந்து வரும் நிலை. ஏன் அதை வைத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் பிற்காலத்தில் அவர்கள் அந்தத் திருமணத்தை நான் செய்யவில்லை என்று சொல்லி, அவர்களுக்குள் இடர்ப்பாடு ஏற்படுகிற நேரத்தில் எழுத்து மூலம் இருக்கும் ரிகார்டுகளை சமர்ப்பித்து நல்ல விதத்தில் துணை செய்யும்

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 ஆகஸ்ட் 29

இந்த வழி முறை அந்தக் காலத்திலிருந்து வருகிறது. ஆகவே இந்த மசோதா நல்ல அம்சம்தான். எல்லாத் திருமணங்களும் மத சார்போடு, மத சம்பிரதாயத்தோடு செய்த பிறகு, உடனடியாக இன்னாருக்கு இன்ன தேதியில் திருமணம் செய்யப்பட்டது என்று நகராட்சியிலோ அல்லது பஞ்சாயத்திலோ செய்தால் எல்லோருக்குமே சிறந்ததாக இருக்கும். நல்லவிதமாக இருக்கும்.

*Invalid marriages.*—Marriages which are not registered as in this Act shall be deemed to be invalid marriages for all legal purposes, children born of such unregistered marriages shall not be legalised . . . .

என்று வரும்போது அந்த ஷரத்தை ஆதரிப்பது என்பது கொஞ்சமும் சிறந்தது அல்ல. யாரோ பெற்றோர்கள் செய்த தவறுக்காக பிறக்கும் குழந்தைகளுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு இல்லை என்று சொல்வது சரியில்லை. அதை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீக்கப்பட்ட பிறகு நல்ல மசோதாவாக இருக்கும் என்று சொல்லி இதை வரவேற்று நல்ல விதத்தில் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*THIRU M. WILLIAM : Mr. Speaker, Sir, so far as Christians, are concerned, marriages are considered sacraments and that marriages are made in Heaven. So much so, marriages are solemnized by the priests who have been appointed for the purpose and they are celebrated in churches. In the churches separate registers are maintained and in the courts those registers are given legal recognition. So, the Christians of India would not like to come within the scope of this Bill. So, I oppose this Bill.

* திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சபையின் முன் இருக்கிற இந்த மசோதா மீது ஒன்றிரண்டு கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்யவேண்டுமென்ற மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டுமென்ற கருத்தோடு நான் ஒரு சில கருத்துக்களை இங்கே கூறலாம் என்று கருதுகிறேன். மதச் சார்பு அற்ற சமூகமாக நாம் இருந்தபோதிலும் நம்மிடையே பலவிதமான பாகுபாடு இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒரு யூனிபாஃர்ம் சிவில் கோட் வேண்டுமென்று நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் நாம் எல்லோரும் ஒப்புக்கொண்டு இருக்கிறோம். ஆனால், இன்னும் 'யூனிபாஃர்ம் சிவில் கோட்' என்பது ஏற்படவில்லை: அதிலும் குறிப்பாக இந்த மாதிரி திருமணம் செய்வதைக் கட்டாயமாகப் பதிவு செய்வதற்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, ஸ்பெஷல் மேரேஜ் ஆக்ட்-ஐ அனுசரித்து இன்று திருமணங்களை பதிவு செய்வதற்கு ஒரு வழி முறைகள் அதற்கான விதிகள் தனியாகத் தரப்பட்டு இருக்கிறது. ஸ்பெஷல் மேரேஜ்



1970 ஆகஸ்ட் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஆக்ட்படி கணவன்-மனைவியாக வேண்டுமானால் ரிஜிஸ்டிரார் ஆபிசுக்குப் போய் பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அடுத்தபடி, ஹிந்து மேரேஜ் ஆக்ட் அனுசரித்து, இந்தத் திருமணத்திலே பல மேரேஜ் ரிஜிஸ்டிரார்களை நியமித்து இருக்கிறார்கள். விதி முறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த விதிமுறைகளுக்கு ஏற்றவாறு திருமணங்கள் பதிவு செய்யப்படுவதற்கு என்னென்ன வழி வகை செய்ய வேண்டுமென்பதை நல்ல முறையில் ஆராய்ந்தால்தான் இந்த சட்டத்தை உருவாக்க முடியும். அது இல்லாமல் ஏதோ Legislation should not be hustled through என்று சொல்வார்களே அது மாதிரி அவசரப்பட்டு இந்த மாதிரிச் சட்டத்தை உடனடியாக ஏற்றுக்கொள்வதற்கு வழி வகை தேடிக்கொள்ளக் கூடாது. அதாவது, அடியோடு, பிற மத உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடிய அளவில் இருக்கக்கூடாது என்பதையும் நான் கூற விரும்புகிறேன்.

சாதாரணமாக இந்த திருமணமானது ஒவ்வொரு சமூகங்களுக்கும் ஒரு 'Sairement' என்று கிருஸ்டியன் சொல்கிறார்கள். மற்றும் ஹிந்துக்கள் 'சமஸ்காரம்' என்று சொல்கிறார்கள் வைதிக முறையில் ஒப்புக்கொண்டால் அந்தத் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டியது அவசியம்தான். பல சட்டங்கள் இருக்கிறது. சட்டங்களை ஒழுங்கு படுத்தி பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி ஆராய்ந்து கடைசியாக என்ன செய்ய வேண்டுமென்று யோசித்து செய்ய வேண்டும். அதிலும் இதில் இருக்கும் பல குறைபாடுகளை நாம் நல்ல முறையில் ஆராய வேண்டும்.

இந்த மாநிலத்திற்கு வெளியே ஒரு திருமணம் நடந்தால், அதையும் இங்கு பதிவு செய்யவேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை சட்டபூர்வமாக ஆராய வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. இம்மாதிரியான சட்டங்களை அவசரப்பட்டுக் கொண்டு வந்தால் பல சிக்கல்கள் ஏற்படும். பதிவு செய்யப்படாத திருமணங்கள் முறையான திருமணங்கள் அல்ல என்ற இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருப்பது ஒரு ஆபத்தான கருத்தில் கொண்டு வந்துவிடும். பல சமூகத்தினர் இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், இந்துக்கள் இருக்கிறார்கள், முஸ்லீம்கள் இருக்கிறார்கள், இவர்கள் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய அளவில் இந்த மசோதாவை திருத்தி அமைப்பதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமிக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொண்டு, இதில் கூறியிருக்கிற கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன் என்பதையும தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு திருமணத்தைப்பற்றி இன்னொரு காலத்தில் கோர்ட்டு விசாரணைக்கு வந்தால், அதை ருசுப்படுத்துவதற்கு இம்மாதிரி ரிஜிஸ்டர் செய்துகொண்டால் நல்ல ஆதாரமாக இருக்கும், அதனால் எந்தவிதமான கஷ்டமும் இருக்காது, நீதிமன்றங்களில் வழக்குகளைத் தவிர்ப்பதற்கு இது ஒரு நல்ல வழிவகையாக இருக்கும் என்பதை ஒப்புக் கொண்டாலும் கூட, இதை ஆற அமர சிந்தித்து ஒரு முடிவு செய்ய வேண்டும். அதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என்று கூறி நான் அமர்கிறேன்.

*திரு. வ. ஜார்ஜ்: அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நண்பர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதா பொதுவாக வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில், ஒரு சில வார்த்தைகளில் என்னுடைய கருத்துக்களைக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன்.

கிறிஸ்தவர்களின் திருமணங்கள் அனைத்தும் இப்பொழுது ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வருகின்றன. கிறிஸ்தவர்கள் மாரியேஜ் என்பது வெறும் காண்டிராக்ட் அல்ல, அது ஸேக்ரமெண்டு என்று நினைக்கக் கூடியவர்கள். இந்தத் திருமணங்களை ஒழுங்குபடுத்தவதற்கு இண்டியன் கிறிஸ்டியன் மாரியேஜ் ஆக்ட், 1872 என்று ஒரு சென்டிரல் எனாக்ட்மெண்ட் இருக்கிறது. அந்த சட்டத்தின் அடிப்படையில்தான் இந்த மதத்திலுள்ள சாமியார்கள் மாரியேஜ் ரிஜிஸ்டிராராக லைசென்ஸ் பெற்று, அந்த உரிமையோடு ஸ்டாசுடரி statitory ரிஜிஸ்டர் ஒன்று வைத்து, அதன்படி ரிஜிஸ்டரில் என்ட்ரி செய்து, திருமணங்கள் பதிவாகி வருகின்றன. அந்த நிலையிலே இப்பொழுது இந்த மசோதாவை அவர்களுக்கும் சேர்த்துக்கொண்டு வருவது என்றால், அதில் வேறு பல தொல்லைகள் ஏற்படும். ஆகவே, இது ஆராயப்பட வேண்டிய ஒரு விஷயம். ஒரு சென்டிரல் எனாக்ட்மெண்ட் இருக்கும்பொழுது, அதற்கு எதிராக ஒரு ஸ்டேட் எனாக்ட்மெண்ட் கொண்டுவந்து அவர்களை இந்த மசோதாவிற்கு உட்படுத்துவது என்பது முறையாகாது. எனவே, இதைச் சரியானபடி பரிசீலனை செய்வதற்கு ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சென்டிரல் எனாக்ட்மெண்ட் இருக்கும்பொழுது, ஸ்டேட் எனாக்ட்மெண்ட் செல்லத் தகுந்தது அல்ல என்பதையும் கூறிக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. கோ. பூவராகன்: கனம் சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதா ஒரு நல்ல கருத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா. இருந்தாலும் ஏற்கனவே நம்முடைய ராஜ்யத்தில் இது சம்பந்தமாக பல சட்டங்களை இயற்றியிருக்கிறோம். அந்த சட்டங்களுக்கும் இதற்கும் முரண்பாடு இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுதே கலியாணம் செய்துகொள்பவர்கள் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்துகொள்வதில் தடை ஒன்றுமில்லை, பதிவு செய்துக்கொள்ளலாம். ஆனால் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதா கட்டாயமாக எல்லா திருமணங்களையும் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்துகிறது. சமய சார்பற்றவர்கள் இருந்தாலும் முஸ்லீம் சமயத்தைச் சேர்ந்தவர்கள், கிறிஸ்துவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் கலியாண சம்பந்தமாக ஆங்காங்கு அவரவர்களுடைய வழக்கத்தை கடைப்பிடித்துக்கொண்டு வருகிறார்கள் அவர்கள் ஒத்துக்கொண்டு பதிவு செய்துகொள்ளும்படி இந்த மசோதாவில் இடம் இருக்க வேண்டும். அதனால், அரசாங்கமே இதை யோசனை செய்து, எந்த வகையில் இந்த மசோதாவைக் கொண்டுவந்தால் அது நல்ல முறையில் அமையும் என்று யோசனை





செய்து கொண்டு வந்தால், அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் ஒரு கணிசமான வருமானத்தை இதன் மூலம் தேடிக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

எல்லா திருமணங்களையும் சட்டப்படி பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற ஒரு நிலையில் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறபொழுது, இதைக் கொஞ்சம் பரிசீலனை செய்து, இந்து ஆலயங்களில் கலியாணம் செய்துகொண்டாலும், கிறிஸ்துவ ஆலயங்களில் கலியாணம் செய்துகொண்டாலும், அல்லது முஸ்லீம் மசூதிகளில் கலியாணம் செய்துகொண்டாலும் செல்லுபடியாகின்ற அளவிலே, எல்லோருக்கும் பொருத்தமாக இந்த மசோதாவை அரசாங்கமே கொண்டுவரும் என்று சொன்னால், அது வரவேற்கத் தக்க ஒன்றாக இருக்கும்.

திரு. ராமமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவில் வெளியிலே செய்கின்ற கலியாணங்கள் இங்கே செல்லுபடியாகுமா, ஆகாதா என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. அழைப்பிதழ் அடிப்பவர்கள் கூட மாட்டிக்கொள்ளும்படியாக இதிலே ஷரத்துக்களைப் போட்டிருக்கிறார்கள். திருமண அழைப்பிதழ் அச்சு அடிக்கின்ற எல்லா இடங்களிலும் சரியான கணக்குகள் வைத்துக் கொள்வதில்லை. திருமண அழைப்பிதழ்கள் அச்சடிப்பதுபற்றி சரியான கணக்கு விவரங்கள் வைத்துக் கொள்ளவில்லையென்றால், அவர்களுடைய லைசென்ஸ் போய்விடும், அல்லது கலியாணம் செய்து கொள்பவர்களுக்காக அவர்கள் அபராதம் கட்ட வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட சிக்கல்கள் அதில் இருக்கின்றன. இவைகளெல்லாம் இல்லாமல், தாராளமாக மனமுவந்து அவர்கள் பதிவு செய்து கொள்வதற்கு வரும்படியாக ஒரு தூண்டுதல் இருக்க வேண்டும். நம்முடைய ராஜ்ய முத்திரை பதிக்கப்பட்டு பதிவு பெற்றதற்கான சான்றிதழ் ஒன்றினை தம்பதிகளுக்கு வழங்கும்படியான நிலை ஏற்பட வேண்டும். அப்படி வருகிறபொழுது, அதனால் அரசாங்கத்திற்கு கணிசமான வருமானம் வரும். எல்லோரும் அதை எதிர்ப்பு இல்லாமல் ஏற்றுக் கொள்வார்கள். எந்த மதத்தினரும் வெறுக்காத அளவுக்கு, அதை வரவேற்கின்ற அளவுக்கு, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு அது அமையும்படியாக இந்த மசோதாவை அரசாங்கமே கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால், அதை திரு. ராமமூர்த்தி அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இதில் இருக்கிற சங்கடங்களையெல்லாம் போக்கி நல்ல முறையில் ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டும். எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்தே தீர வேண்டும் என்ற நிலைமை வருகிறபொழுது எவ்வளவு குறைந்த கட்டணமாக வைத்தாலும், நம்முடைய அரசாங்கத்திற்கு இதன் மூலம் கணிசமான தொகை வரும். பதிவு செய்கின்றபொழுது எப்படிப்பட்ட இடங்களில் பதிவு செய்ய வேண்டும் என்பதற்கான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும், கலியாணங்கள் நடக்கின்றபொழுது, கோவில்களில் இருக்கும் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்கள், மசூதிகளில் இருக்கும்படியான முக்கியஸ்தர்கள், கிறிஸ்துவ ஆலயங்களில் இருக்கிற பாதிரிமார்கள் இப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்கிற அதிகாரங்களில் எந்தச் சங்கடமும்

[திரு. கோ. பூவராகன்] [1970 ஆகஸ்ட் 29

இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே இதற்கு எதிர்ப்பு இருந்தது, இப்பொழுது எதிர்ப்பு இருக்குமா என்றால். எதிர்ப்பு வராத அளவுக்கு எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் இதை மாற்றி அமைக்க வேண்டும். நாளுக்கு நாள் உலகத்தில் மாற்றங்கள் ஏற்படுவதைப் பார்க்கிறோம். இளைஞர்கள் எதிர்காலத்தில் மாற்றங்களை விரும்புகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆகையால் இதற்கு பெரிய எதிர்ப்பு இருக்கும் என்று நான் கருதவில்லை. ஏற்கனவே உள்ள சட்டதிட்டங்களுக்குக் கட்டுப் பட்ட அளவிலே, எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையிலே ஒரு புதிய மசோதாவை சட்ட அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் அமைச்சரவையைக் கலந்துகொண்டு நல்ல முறையில் இங்கே கொண்டு வருவதாக உறுதி அளிப்பார்கள் என்று சொன்னால், திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த மசோதாவை வற் புறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இதன் மூலம் சங்கடம் இல்லாமல், கஷ்டமில்லாமல் நமது ராஜ்யத்திற்கு நல்ல வருமானத்தை அடைய முடியும் என்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று, திங்கட்கிழமை 31—8—1970 அன்று காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders*

@241. Notification issued with G.O. Rt. No. 1371, Revenue, dated the 5th August 1970, in regard to exemption from liability to entertainments tax to the film show, in aid of the Building Fund of Krishnagiri Magalir Mandram, Krishnagiri on 8th August 1970, at the Raja Theatre, Krishnagiri. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 242. Notification issued with G.O. R. No. 1010, Revenue, dated the 11th June 1970, in regard to exemption from liability to entertainments tax to the benefit Cinematograph film show at "Chithi Talkies", Kunrathur on 14th June 1970 to raise funds for the construction of the proposed library building. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)]

@ 243. Notification issued with Roc. No. 164237/69-61, dated the 3rd December 1969, in regard to exclusion of Thenkarai village from the existing Madampatti Panchayat of Coimbatore district



*1970 ஆகஸ்ட் 29*] [Statutory Rules and Orders]

for the constitution of a separate Panchayat by name "Thenkarai Town Panchayat". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 244. Notification issued with G.O. No. 2213, Revenue, dated the 16th July 1970, in regard to an amendment to the Revenue Department Notification III No. 85 of 1970, published in Part III of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 18th March 1970. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 245. Notification issued with G.O. Ms. No. 525, Social Welfare, dated the 3rd June 1970 in regard to certain amendments to Rule 79-A of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th January 1957 as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

@ 246. Notification issued with G.O. No. 2214, Revenue, dated the 15th July 1970, in regard to exemption from liability to sales tax on the sales of scientific equipment and drugs by any dealer to Public Health Centre, West Mambalam, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959.)]

@ 247. Annual Report of the Tamil Nadu Public Service Commission, 1967–68 issued with G.O. Ms. No. 1268, Public (Services-A), dated the 3rd June 1970. [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India.]

### *B. Repors, Noificaions and oher papers.*

@ 40. Demands for Grants for Excess Expenditure for the year 1966–67 (English and Tamil).

@ 41. Notice of Demands for Grants for Excess Expenditure in the year 1966–67 (English and Tamil).

@ 42. Speech on Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance of Tamil Nadu, presenting to the Legislature on 28th August 1970, the Statement of Demands for Grants to cover excess expenditure relating to the year 1966–67 (English and Tamil).

[1970 ஆகஸ்ட் 29

@ 43. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1970–71 (English and Tamil).

@ 44. Notice of Demands for Grants for Further Expenditure during the year 1970–71 (English and Tamil).

@ 45. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance, presenting the First Supplementary Estimates for the year 1970-71 (English and Tamil).

† 46. The Tamil Nadu Electricity Duty (Validation) Bill, 1970 (L. A. Bill No. 19 of 1970).

---

@ Laid on the Table of the House on 28th August 1970.
£ Despatched to Members on 27th August 1970.



1970 ஆகஸ்ட் 29]

## இணைப்பு 1.

[3-ம் பக்கத்திலுள்ள 114 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

The excavation of Korkai, the ancient port City of the pandyas, was taken up by the Tamil Nadu State Department of Archaeology to assess the Cultural sequence and the Chronological one in the midst of a tank. The excavations of Korkai revealed importance of the site to South Indian History. All together, five cuttings were laid, four in the present village of Korkai and a brick platform provided with a flight of steps at one end. The platform consisted of 9 courses of large bricks measuring 455 x 28 x 7½ cms. size. Immediately beneath the platform, three tabular rings, placed one over the other resembling the seakage Jars, were found. Besides, the excavation revealed a Megalithic urn containing a few pieces of post excarnated bones the remains of a foundation of a medical structure consisting of a course of dressed granite at one end and a masonry of irregular bricks at the other. A Chola coin of Rajaraja was recovered at the upper level. The earliest layer yielded megalithic assemblege dominated by black and red ware, black ware, red and red slipped wares. A pumber of conch pieces thrown after cutting bangles, cooper Objects, iron implements in some cases with wooden handles, perforated terracotta titles, heads made of crystal, Seapstone, terracotta, etc., and a torso of terracotta figurine and bone earlobes and arrowheads are other interesting findings.

தென்னிந்திய வரலாற்றில், பாண்டிய மன்னர்களின் பண்டையத் துறைமுக நகராக விளங்கிய "கொற்கை" நகரின் அகழ்பணி பண்பாட்டு நிரலொழுங்கையும், அதன் கால முறைச் சிறப்பையும் கணிப்பதற்காக தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது. மொத்தத்தில் 5 இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சிக்காக நிலம் அகழ்ந்து எடுக்கப்பட்டது. இவற்றில் 4 அகழ்தல் பணிகள் தற்போதுள்ள கொற்கை கிராமத்திலும், மற்றொன்று ஏரியின் நடுவிலும் நடத்தப்பட்டன. இவ்வாறு அகழ்தெடுக்கப்பட்டதில் ஒரு கோடியில் வரிசையானபடிக் கட்டுடன் அமைந்து செங்கல் மேடை ஒன்று காணப்பட்டது. 45 × 25 × 7½ செ. மீட்டர் அளவுள்ள பெரிய செங்கற்கள் கொண்ட இந்த மேடை 9 அடுக்குகளைக் கொண்டிருந்தது. அந்த மேடையின் கீழே குப்பை கூளங்களைக் கொட்டி வைக்கப் பயன்படுத்தப்படும் பானையையொத்த வளையங்கள் மூன்று ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி வைக்கப்பட்டுக் காணப்பட்டன. இதைத் தவிர எலும்புத் துண்டுகளைக் கொண்ட பெரிய கற்காலத்தைச் சேர்ந்த முது மக்கள் தாழி ஒன்றும், இடைக்காலத்தைச் சேர்ந்த கட்டுமானம் ஒன்றின் அடித்தளத்தின் இடிபாடுகளும் இதன் ஒரு கோடியில் கருங்கல் கட்டிடமும் மற்றொரு கோடியில் தாறுமாறான செங்கற் கட்டிடப் பகுதியும் இருந்தன. மேல் மட்டத்தில் இராஜ ராஜ சோழர் காலத்திய காசு ஒன்றும் காணப்பட்டது. முதன் முதலில் தோண்டியெடுக்கப்பட்ட அடுக்கில் பெரிய கற்காலப் படி

வத்தில் அதோடு ஒட்டிக் காணப்பட்ட கறுப்பு, சிகப்பு ஓடுகளும், கறுப்பு ஓடுகளும், சிவப்பு ஓடுகளும், சிவப்பு வழவழப்பான ஓடுகளும் அடங்கிய கட்டுமானம் ஒன்று காணப்பட்டது. வளையல் செய்த பிறகு எறியப்பட்ட சங்குத் துண்டுகள் பலவும் செப்புப் பொருள்கள், இரும்புக் கருவிகள் இவற்றில் சிலமரப் பிடியை உடையயனவாக இருந்தன. துளையிடப்பட்ட சுடு மண் ஓடுகள், படிகம் சவர்க்காரச் சுடு மண் முதலியவற்றினாலான உருவங்கள், சுடுமண்ணில் செய்யப்பட்ட சிறு உருவச் சிலையின் முண்டம், செவி எலும்புகள், அம்புத் தலைகள் ஆகியவை கவனத்தை ஈர்க்கக் கூடிய பிற கண்டுபிடிப்புகளாகும்.

## இணைப்பு 2.

[16-ம் பக்கத்திலுள்ள 118-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) & (இ) பேரவையில் விடையளிக்கப்பட்டது.

(உ) கீழ்க்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது :—

(1) வேளாண்மை பட்டதாரிகள் மட்டுமே வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஆசிரியர் பதவிகள் அனைத்திலும் நியமிக்கப் பட வேண்டும்.

(2) முற்றிலும் அறிவியல் பட்டதாரிகளையே வேளாண்மைத் துறையில் வேலைக்கு நியமிக்கும் நடைமுறையை முழுவதும் நிறுத்திவிட வேண்டும்.

(3) வேளாண்மைத் துறை இயக்குநர் பதவிக்கு வேளாண்மை பட்டதாரியையே நியமிக்கவேண்டும்.

(4) கோவையிலும், மதுரையிலும் உள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் தலைவர், முதல்வர் பதவிகளில் அறிவியல் பட்டதாரி களாக அல்லாமல் வேளாண்மை பட்டதாரிகளையே நியமிக்க வேண்டும்.

(5) தற்போது ஆசிரியர்களாகப் பணியாற்றும் அறிவியல் பட்டதாரிகள் வேறு பிரிவிற்கு மாற்றப்பட வேண்டும்.

(6) வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட வேளாண்மை அதிகாரிகள், துணை இயக்குநர்கள், இணை இயக்கு நர்கள், பேராசிரியர்கள், முதல்வர், துணைத் தலைவர், தலைவர் ஆகியோரது சம்பள வீதங்கள் உயர்த்தப்பட வேண்டும்.

(7) வேளாண்மைத் துறையில் பணியாற்றிவரும் வேளாண்மைப் பட்டதாரிகள் அனைவருக்கும் அரசிதழ் பதிவுத் தகுதி கொடுக்கப்பட வேண்டும்.

வெளியீடு—5—8—1971]
Issued—5—8—1971]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1970 ஆகஸ்ட் 31

Monday 31st August 1970

தொகுதி XXXII—எண் 7

Volume XXXII—No. 7

தமிழ் நாடு அரசு
1971
GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

## உள்ளடக்கம்


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. 1–29

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்—
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது குறித்து .. .. .. .. 30 31–33

3. நடைமுறைக் கேள்வி—
ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கும்போது அதை எடுத்துக் கொள்வதற்குமுன் அதே பொருள் குறித்து ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டது குறித்து .. .. .. 30–31

4. அமைச்சரின் விளக்க உரைகள்.
(அ) விற்பனை வரி இலாகா குறித்த உணவு—வணிக வரித்துறை அமைச்சரின் விளக்க உரை .. 33
(ஆ) மதுரை மாவட்டம் சிலைமானில் ஒரு நபருக்கு மின் இணைப்பு கொடுப்பதில் மின்சார அமைச்சர் தலையிட்டதாக திரு. கே. விநாயகம் கூறியது பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம். .. .. .. .. 78–81
(இ) நிலப்பறி இயக்கம் காரணமாகக் கைது செய்யப் பட்டவர்களின் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்று விடுதலை செய்ய அரசு செய்துள்ள முடிவு குறித்து முதலமைச்சர் அவர்கள் விளக்கம் .. 95

5. அறிவிப்புகள்—
(அ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்குறித்து. .. 33
(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு மசோதா .. .. .. .. 34

6. அரசினர் மசோதா—
தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா. .. .. .. 34

7. அரசினர் தீர்மானங்கள்—
(அ) திரு. மார்டின் மீதான உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை, 34–54
(ஆ) திரு. எ. பாலசுப்பிரமணியமும், மற்றும் சில உறுப் பினர்களும் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு பற்றிய அவை யுரிமைக் குழுவின் அறிக்கை .. .. 54–78

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970–71-ம் ஆண்டுக் கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம் தொடர்ச்சி—.. 81–95

9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 96

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

### சர்தார் உஜ்ஜல் சிங்

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை-அரிசன நல அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, அரிசனநலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா, வேளாண்மை மறு நிதிக் கழகம்.

5. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின் தங்கிய வகுப்பினர், பத்திரப் பதிவு, எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசாங்க அச்சகம்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வணிக வரி அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

**8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்): பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் (Waqfs) போக்குவரத்து, நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

**9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: **நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான;** கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

**10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கூட்டுறவு, துறைமுகங்கள்.

**11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர் திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

**12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்):** கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல் பற்றி சட்டமியற்றுதல்) சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

**13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப், பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர்கள், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH.

---

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production. Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Health): Minister in-charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine and Legislature.

3. THE HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance): Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU Minister for Agriculture and Harijan Welfare): Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Tourism and Agricultural Refinance.

5. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes): Minister in-charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration): Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramadan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-servicemen and Prosperity Brigade.

10. THE HON. THIRU Si Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, and Ports.

11. THE HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forest and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன். எம். ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட், பி.ஏ., பி.எல்.,

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. நா. வீராசாமி.

திரு. கே. ஆர். கோவிந்தன்.

திரு. எஸ். இராமலிங்கம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்.

திரு. எஸ். முத்துலிங்கம்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ,, பி,எல்,

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல். எல். பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).

திரு. ஜி. இராகவன்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜூ, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து.ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி. (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. | வானூர் (செ.வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 23 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 24 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 25 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 26 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 27 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 28 | சென்னியப்பன், எஸ், ஆர். | பெருந்துறை. |
| 29 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.) |
| 32 | சித்தன், என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ.வ.) |
| 34 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம். (செ. வ.). |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.) |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராஜுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க்டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை. |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை–கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம்(செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. வ.). |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின்பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநிதி, சோ. | சூலூர். |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 74 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 75 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 76 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 77 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 78 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 79 | கதிரவன் க. மு. .. .. .. | தென்காசி. |
| 80 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி |
| 81 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 82 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 83 | கோதண்டராமன், வி. கெ. .. .. | குடியாத்தம். |
| 84 | கோதண்டராமையா, கே. எஸ். .. | ஊத்தனப்பள்ளி. |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ. வ.). |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. | பேராவூரணி. |
| 88 | கிருஷ்ணன், அ. .. .. .. | மங்களூர் (செ. வ.). |
| 89 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. | சேலம்-2. |
| 90 | கிருட்டிணன், நா. .. .. | காஞ்சீபுரம். |
| 91 | குமாரசாமி, கே. என். .. .. | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) .. | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. .. .. .. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே. பி. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 100 | மணியன், பி. எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 101 | மாரிமுத்து, அ. .. .. .. | ஆடுதுறை. |
| 102 | மாரிமுத்து, வ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 103 | மாரிமுத்து, மு. .. .. .. | தலைவாசல். (செ. வ.) |
| 104 | மார்டின், டி. .. .. .. | சாத்தான்குளம். |
| 105 | மருதாசலம், என். .. .. .. | பேரூர். (செ.வ.) |
| 106 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) .. | ஆயிரம் விளக்கு (சென்னை மாநகரம்). |
| 107 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 108 | மேத்தா, எம். .. .. .. | பெரியகுளம். |
| 109 | மூக்கையா தேவர், பி. கே. .. .. | உசிலம்பட்டி. |
| 110 | முனுசாமி கௌண்டர், பி. எம். .. | கிருஷ்ணகிரி. |
| 111 | முனுசாமி, ரா. ரா. .. .. .. | மேல்மலையனூர். |
| 112 | முனியாண்டி, வ. .. .. .. | நிலக்கோட்டை. (செ.வ ) |
| 113 | முனு, ஆதி. .. .. .. | திருப்போரூர். |
| 114 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 115 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம் |
| 116 | முருகேசன், க. .. .. .. | பாலக்கோடு |
| 117 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி |
| 118 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர் |
| 119 | முத்தையா, மு. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 120 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ. வ.) |
| 121 | முத்துசாமி, பா. க. சி. .. .. | பெண்ணாகரம் |
| 122 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. | நாமக்கல் |
| 123 | முத்துச்செல்வன், பு. செ. .. .. | முசிறி |
| 124 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 125 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ. வ.) |
| 126 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 127 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி |
| 128 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர் |
| 129 | நஞ்சன், சி. .. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 130 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி |
| 131 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர் |
| 132 | நடராசன், மு. க. து. .. .. | லால்குடி |
| 133 | நடராஜன், ஜி. .. .. .. | காட்பாடி |
| 134 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர் |
| 135 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) .. | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 136 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம் |
| 137 | பத்மாவதி, திருமதி, கோ. .. .. | முகையூர் |
| 138 | பழனி, சி. .. .. .. | ஓமலூர் (செ. வ.) |
| 139 | பாலையா, ஏ. .. .. .. | கொளச்சல். |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ. வ.) |
| 141 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி |
| 142 | பன்னீர்செல்வம், எம். .. .. | ஆம்பூர் (செ வ.) |
| 143 | பரமசிவம், பி. என். .. .. .. | பொங்களூர் |
| 144 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி |
| 145 | பரிசுத்த நாடார், ஏ. ஓய். எஸ். .. | தஞ்சாவூர் |
| 146 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம் |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி, ம. மு. .. | மேலப்பாளையம் |
| 148 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம் |
| 149 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம் |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு |
| 152 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி |
| 153 | இராஜா, ஏ. எம். .. .. .. | பவானி |
| 154 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர் |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 155 | ராஜமன்னூர், எஸ். ஏ. .. .. .. | வாணியம்பாடி |
| 156 | இராசாங்கம், மா. .. .. .. | கம்பம் |
| 157 | ராஜாங்கம், என். .. .. .. | குறிஞ்சிப்பாடி (செ. வ.) |
| 158 | ராஜவேலு, டி. ஏ, .. .. .. | திருச்செங்கோடு |
| 159 | ராமச்சந்திர துரை, ரா. .. .. | கந்தர்வக்கோட்டை |
| 130 | இராமச்சந்திரன், க. ந. .. .. | ஆண்டிமடம் |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. .. .. | பரங்கிமலை |
| 162 | இராமச்சந்திரன், எஸ். .. .. | பண்ருட்டி |
| 163 | ராமலிங்கம், எஸ். .. .. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. .. .. .. | திண்டிவனம் |
| 165 | இராமன், மு. .. .. .. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 163 | ராமன், ஓ. பி. (அமைச்சர்) .. .. | மேலூர்-தெற்கு (செ. வ.) |
| 167 | இராமராசன், வ. க. .. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 168 | இராமசாமி, இ. .. .. .. | வால்பாறை (செ. வ.) |
| 169 | ராமசாமி, எஸ். ஜே. .. .. | அரக்கோணம் |
| 170 | இராசு, ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 171 | இரத்தினசபாபதி, மு. .. .. | விளாத்திகுளம் |
| 172 | ரெத்தின தேவர், ரா. .. .. .. | முதுகுளத்தூர் |
| 173 | சாதிக்பாட்சா. எஸ். ஜே. (அமைச்சர்) .. | உடுமலைப்பேட்டை |
| 174 | சகாதேவக் கண்டர், கே. .. .. | தண்டராம்பட்டு |
| 175 | சாமிநாதன், கே. என். .. .. | வெள்ளக்கோயில் |
| 176 | சங்கரய்யா, என். .. .. .. | மதுரை—மேற்கு |
| 177 | சந்தானம், பி. எஸ். .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 178 | சாரதி, மா. பா. .. .. .. | வேலூர் |
| 179 | சத்தியவாணிமுத்து, டாக்டர், (திருமதி) (அமைச்சர்) .. | பெரம்பூர் (செ. வ.) (சென்னை மாநகரம்) |
| 180 | சீனிவாசக நாயக்கர், ஆர். .. .. | சாத்தூர் |
| 181 | சீனிவாசன், பெ. .. .. .. | விருதுநகர் |
| 182 | செல்ல கவுண்டர், அ. .. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 183 | சேனுபதி, அ. .. .. .. .. | காங்கேயம் |
| 184 | சேதுராமன், சி. .. .. .. | சிவகங்கை |
| 185 | சண்முகம், எம். .. .. .. | விழுப்புரம் |
| 186 | சண்முகசுந்தரம், அ. ப. .. .. | பொள்ளாச்சி |
| 187 | சிறைமீட்டான் தொ. க. .. .. | பரமக்குடி (செ.வ.) |
| 188 | சிவஞானம, ம. பொ. .. .. .. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்) |
| 189 | சிவபெருமாள், க. ந. .. .. .. | ஆத்தூர் |
| 190 | சிவசாமி, மு. ச. .. .. .. | தூத்துக்குடி |
| 191 | சிவசுப்பிரமணியன், எஸ். .. .. | காட்டுமன்னூர் கோயில் (செ. வ.) |
| 192 | சோமசுந்தரம், ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 193 | சௌந்தரபாண்டியன், நா. .. .. | ராதாபுரம் |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 194 | சௌந்தரபாண்டியன், பெ. .. .. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 195 | சௌந்தரராஜ மூப்பனூர், இரா. .. | பாபநாசம் |
| 196 | சுந்தரபாரதி, சௌடி எஸ். .. .. | அருப்புக்கோட்டை |
| 197 | சீனிவாசன், சு. .. .. .. | போடிநாயக்கனூர் |
| 198 | சுவாரெஸ், திருமதி ஏ. .. .. | நியமன உறுப்பினர் |
| 199 | சுப்பராஜா, ஏ. அ. .. .. .. | இராஜபாளையம் |
| 200 | சுப்பையா, ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 201 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) .. .. .. | ஆலங்குடி |
| 202 | சுப்பையா முதலியார், ஏ. ஆர். .. | கடையநல்லூர் |
| 203 | சுப்பிரமணியம், அ. லெ. .. .. | திருநெல்வேலி |
| 204 | சுப்பிரமணிய கவுண்டர், எம். .. | தர்மபுரி |
| 205 | சுப்பிரமணியம், இ. எம். .. .. | திருக்கோவிலூர் |
| 206 | சுரேந்திரன், எம். .. .. .. | மேட்டூர் |
| 207 | சுவாமிநாத உடையார். த. சி. .. | மன்னூர்குடி |
| 208 | சுவாமிநாதன், வை. .. .. .. | திருவெறும்பூர் |
| 209 | தம்பி நாயக்கர், பா. .. .. .. | வடமதுரை |
| 210 | தங்கப்பன, டி. .. .. .. | இராமநாதபுரம் |
| 211 | தவமணிதேவர், வி. .. .. .. | சேடப்பட்டி |
| 212 | தீர்த்தகிரி, ந. .. .. .. | ஹரூர் (செ. வ.) |
| 213 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. .. | ஊத்தங்கரை |
| 214 | திம்மராய கவுண்டர், தி. சி. .. .. | நாட்ராம்பள்ளி |
| 215 | திப்பையா, டி. டி. எஸ். .. .. | மேட்டுப்பாளையம் |
| 216 | வடிவேலு, எஸ். கே. .. .. .. | தொட்டியம் |
| 217 | வரதராஜன், என். .. .. .. | வேடசந்தூர் |
| 218 | வேதாசலம், மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்) |
| 219 | வீரமணி, சி. .. .. .. .. | சங்கரி (செ. வ.) |
| 220 | வீராசாமி, நா. .. .. .. .. | ஆர்க்காடு |
| 221 | வேலப்பன், சி. வே. .. .. .. | கபிலமலை |
| 222 | வெள்ளத்துரை, ஏ. .. .. .. | வாசுதேவநல்லூர் |
| 223 | வேலுசாமி, பி. .. .. .. | சிங்கநல்லூர் |
| 224 | வெங்கடாசல தேவர், பெ. .. .. | வேதாரண்யம் |
| 225 | வெங்கடசாமி, பி. .. .. .. | ஹோசூர் |
| 226 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) .. | கும்மிடிபூண்டி |
| 227 | விஜயரகுநாத தொண்டமான், ஆர். .. | புதுக்கோட்டை |
| 228 | விஜயராஜ், தா. .. .. .. | திருவண்ணாமலை |
| 229 | விநாயகம், கே. .. .. .. | திருத்தணி |
| 230 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு |
| 231 | வில்லியம், எம். .. .. .. | கிள்ளியூர் |
| 232 | வெற்றிடம் .. .. .. .. | அவனாசி. |
| 233 | வெற்றிடம் .. .. .. .. | ஆததூர். |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 234 | வெற்றிடம் .. .. .. .. | சேரன்மகாதேவி. |
| 235 | வெற்றிடம் .. .. .. .. | கோபிச்செட்டிப்பாளையம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1 | திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர் |
| 2 | திரு. ப. உ. சண்முகம் .. | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த் சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### திங்கட்கிழமை, 1970 ஆகஸ்ட் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 135, 136, 137, 138 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### குடும்ப நலத் துறையின் சில பதவிகள்

* 139 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்டத்திற்கான குடும்பநலத் தகவல் அதிகாரிகளின் பதவிகள் நிரப்பப்பட்டு விட்டனவா?

(இ) மாவட்ட விளம்பர அதிகாரிப் பதவிகள் ரத்தானவுடன் முன்னாள் முதலமைச்சர் அளித்த உறுதிமொழிக்கிணங்க, அப்பதவிகள் நிரப்பப்படுகையில் பழைய மாவட்ட விளம்பர அதிகாரிகளை அப் பதவிகளுக்கு நியமிக்க ஆலோசிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம்.

திரு. கே. விநாயகம்: ஐயா, இந்த மாவட்ட விளம்பர அதிகாரிகளைத் திரும்பவும் வேலைக்கு அமர்த்தும்போது, யாருக்காகிலும், ஏற்கனவே அவர்கள் வாங்கிக்கொண்டிருந்த சம்பளமோ அல்லது வகித்துக்கொண்டிருந்த ஸ்டேட்டஸோ குறைக்கப்பட்டுத் திரும்பவும் வேலையில் வைத்துக்கொண்டபோது, தாழ்வு நிலையில் உத்தியோகம் தரப்பட்டதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாவட்ட விளம்பர அதிகாரிகளிலிருந்து குடும்ப நலத் திட்டத்தின்கீழ் மாஸ் எஜுகேஷன் இன்பர்மேஷன் ஆபிசர்ஸ் பதவிக்குத் தேர்ந்தெடுக்கும்போது இதற்குத் தகுதியும் திறமையும் உள்ளவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஏற்கனவே என்ன சம்பளம், என்ன நிலைமை கொடுக்கப்பட்டு வந்ததோ அது எந்த வகையிலும் குறைக்கப்படவில்லை. அதே தன்மையில் தரப்படும் நிலைமை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: விளம்பர அதிகாரிகள் எல்லோருக்குமே மீண்டும் வேலைகள் அளிக்கப்பட்டனவா ? சம்பளம் குறைக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்

டார்கள். என்றாலும், அப்படிக் குறைக்கப்பட்டிருந்தால், ஏற்கனவே அவர்கள் என்ன சம்பளம் பெற்றிருந்தார்களோ அதே சம்பளம் மீண்டும் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டேன்.

These officers were allowed to draw the pay last drawn by them in the Information Department.

அவர்கள் அந்த வேலையைவிட்டு நீக்கப்படுவதற்கு முன்பு என்ன சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்களோ அதே சம்பளம் தரப் படுகிறது என்ற அளவுக்குத்தான் குறிப்பு இருக்கிறது.

திரு. கே. விநயகம் : மாவட்ட விளம்பர அதிகாரிகள், கவர்ன் மெண்ட் டூரிஸ்ட் ஹோம் ரிசப்ஷன் அதிகாரி ஆகிய இரு பதவிகளின் தரமும் ஒன்று-தானா ? டூரிஸ்ட் ஹோம் ரிசப்ஷன் அதிகாரியின் தரம் குறைவு அல்லவா ? முன்பிருந்த அதிகாரி வாங்கிக்கொண்டிருந்த சம்பளத்தைவிட இப்பொழுது இருக்கும் அதிகாரி குறைவாக வாங்குகிறார் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? குறிப்பாக, மதுரையில் இருக்கும் கவர்ன்மென்ட் ரெஸ்ட்ஹவுஸ் அதிகாரியைக் குறித்து நான் கேள்வி போடுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட விளம்பர அதிகாரிகள் நீக்கப்பட்ட பிறகு அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் பொதுக் கல்வி–செய்தி அதிகாரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட தன்மையைக் குறிப்பிட்டேன். குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அவர்களுடைய சம்பளம் கொடுக்கப் படுகிறது. கவர்ன்மென்ட் டூரிஸ்ட் ஹவுஸ் பற்றியக் கேள்வியை அதற்குரிய அமைச்சரிடத்தில் போட்டால் அவர் பதில் சொல்ல முடியும். குடும்பநலத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மூவரைக் குறித்துத்தான் நான் கூறிய கருத்துக்கள் இங்கே பயன்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மாவட்ட விளம்பர அதிகாரிகளாக இருந்தவர்கள் புதிதாக வேறு பதவியில் நியமிக்கப் பட்டிருக்கிறார்களே அந்தப் பதவி நிரந்தரமானதா, அல்லது டெம்பரரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிற பதவிகள் நிரந்தரமான பதவிகளாகும்.

* 140 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the post of Assistant Editor in Family Planning in the Directorate of Health Services and Family Planning was filled up in 1969; and

(b) how long that post was kept vacant ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலை சுமாராக இரண்டு ஆண்டு காலம் காலியாக இருந்தது.



திரு. கே. விநயகம் : இந்த அஸிஸ்டென்ட் எடிடர் இன் ஃபாமிலி ப்ளானிங் என்கிற பதவி ஏன் இரண்டாண்டுக் காலமாகக் காலியாக இருந்தது ? அதற்கு முன்னே இருந்தவர்கள் தொடர்ந்து இருந் தார்களா ? அவரை ஏன் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, இந்த வேலையைக் காலியாக வைத்திருந்தார்கள், பிறகு யாரை நியமித் தார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 20—9—1967–இல்தான் வேலை, இந்திய அரசால் சாங்ஷன் செய்யப் பட்டது. சாங்ஷன் செய்யப்பட்டதிலிருந்து யாரும் போடப் படவில்லை. அந்தப் பதவியைப் பயன்படுத்து-வதா இல்லையா என்ற அளவில் அந்தப் பதவியை அப்படியே வைத்துக் கொண்டிருந் தார்கள். குடும்ப நலத் திட்டத்தின் பணிகள், மற்றவைகள் விரிவாக் கப்பட்ட நிலையில் அதுபற்றி வெளியீடுகள் வெளியிடவேண்டிய அவசியம் என்ற காரணத்தால் நியமிக்கவேண்டும் என்ற அளவுக்கு 1—8—1969-ல் துணை ஆசிரியர் பதவி அப்பொழுதுதான் ஒருவருக்குத் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டது. அந்த வகையில் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நாமாக நிறுத்தினோமே தவிர, ஏற்கனவே இருந்துவருவதை எடுத்துவிடவில்லை.

## எஸ். எஸ். எல். சி. பாடமுறை

* 141 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்துக் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் தற்போது-உள்ள பாட முறையையே அமல் படுத்தவோ, அல்லது மாற்றி அமைக்கவோ செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, நடப்பாண்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு அனுப்பப்பட்ட மாணவர்களில், சில பள்ளிக்கூடங்களில் ஒரு மாணவன் கூடத் தேர்வுபெறாத நிலைமை தமிழகத்தில் இருந்திருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த வகையில் மாணவர் ஒருவரும் தேர்வுறாமல் இருந் ததற்குக் காரணம் பாட முறையில் உள்ள குற்றமா, கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் குற்றமா, மாணவர்களுடைய குற்றமா என்பதை அலசிப் பார்ப்பதற்கு ஏதாவது ஒரு வழியை அரசு வகுத்திருக்கிறதா என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாட முறையை அமல்படுத் துவது அல்லது மாற்றியமைப்பது பற்றியது மூலக் கேள்வி. இது மூலக்கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

திரு. கே. விநயகம் : கல்விமுறையைத் திருத்தியமைக்கவேண்டும் என்று ஜனாதிபதியிலிருந்து யாராவது கொஞ்சம் கல்வி தெரிந்தவர் வரை சொல்லிக்கொண்டே வருகிறார்களே, இதை எப்பொழுதுதான் திருத்தியமைக்கப் போகிறீர்கள்? அல்லது இருக்கிற ஸிலபஸ்ஸே

[1970 ஆகஸ்ட் 31

போதும், இந்த ஸிலபஸ்படி படித்து வருகிறவர்கள் நாட்டுக்குப் பயன்பட்டால் போதும் என்று அமைச்சு கருதுகிறதா ? 11-வது வகுப்புத் தேர்வு எழுதியவர்களில், அதுவும் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலைப் பொறுத்துத்தானே 'நில் ரிஸல்ட்' வந்திருக்கிறது இது மாதிரி ஏதாவது ப்ரைவேட் ஸ்கூலில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்களுடைய கேள்விகளில் பின் கேள்வி இதில் எப்படி வரும்? பாட முறையைத் திருத்தி அமைப்பதுபற்றியுள்ள கேள்விக்கு மட்டும் அமைச்சரவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளுக்குத் தற்போதுள்ள பாட முறையில் மாற்றம் செய்யவேண்டுமென்றால் அதற்குரிய வல்லுநர்களும் மற்ற வர்களும் ஆராய்ச்சியின் பேரில் செய்யவேண்டும். இதிலே நாம் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. இதில் மாற்றம் வேண்டும் என்று கோரப்பட்டு, அது பரிசீலனைக்கு வரும்போது ஆராயலாம். இந்த ஆண்டு அதற்கான மாற்றம் செய்யப்பட்டிருக் கிறதா இல்லையா என்றால், 'இல்லை' என்று குறிப்பிட்டேன். இந்திய அரசாங்கத்தில் நான்கைந்து குழுக்கள் அதுபற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றன. ஆரம்பப் பள்ளிகளைப்பற்றி, எல்லோருக்கும் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதை எந்த எந்த வகையில் விரிவாக் குவது சாத்தியமாகலாம் என்பதை ஆராய ஒரு குழுவும், தேர்வு முறையை ஆராய்ந்து அதில் ஏதாவது மாற்றங்கள் செய்யலாமா, மாணவர்களை ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்கு உயர்த் துவதற்கு என்ன என்ன வழிகளைக் கடைப்பிடிக்கலாம் என்பதை ஆராய ஒரு குழுவும், பாடத் திட்டங்களை மாற்றியமைக்கவேண்டுமா என்பதை ஆராய ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றினுடைய அறிக்கைகள் வந்தபிறகு, முறையில் மாற்றங்கள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அப்பொழுது வேண்டு மானால் ஸிலபசில் மாற்றங்கள் செய்யலாமே தவிர, இப்பொழுது அது பற்றிய குறிப்புகள் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எட்டாவது வகுப்புக்குரிய துணைப் பாடப் புத்தகத்தில், மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களுடைய கதையைப் பாடமாக வைத்திருக்கிறார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு இருப்பதால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியிலிருந்து எழக்கூடியதல்ல.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கக்கூடிய எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுமுறையைப் பொறுத்தமட்டில் இது மெமரியை டெஸ்ட் செய்யத்தான் பயன்பட்டு வருகிறது. மாணவர் களுடைய 'இன்டர்னல் கப்பாஸிட்டி' யைக் கண்டுபிடிக்கப் பயன் படும் முறை ஏதேனும் அரசுக்கு டைரக்டர் ஆப் ஸ்கூல் ஏஜுகேஷனிடமிருந்தோ அல்லது ஏதாவது கல்வி ஆலோசனைக் கமிட்டியிலிருந்தோ அரசுக்கு அனுப்பப்பட்டு, அது பரிசீலிக்கப் பட்டதா, என்று அறிய விரும்புகிறேன்.



1970 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, மாணவர்களுடைய இன்டர்னல் அஸெஸ் மெண்ட், ஆண்டுத் தொகையும், இறுதித் தொகையும் குறிக்கப் படுவது, இவை நான் முதலிலே குறிப்பிட்டது போல, இந்தக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. இது நடைமுறையில் சாத்தியமா என்பதை அறிந்த பிறகு, அவர்கள் அறிக்கை சமர்ப்பித்த பிறகு, இப்படி இப்படி மேற்கொள்ளலாம் என்று அவர்கள் கூறிய பிறகு, அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

* 142 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை, சென்னை சர்வகலாசாலைப் பகுதிகளுக்குத் தனித் தனியாக எஸ்.எஸ்.எல்.சி. பாட புத்தகங்களைத் தயாரித்து தனித் தனியாகப் பரீட்சைகளை நடத்துவதென்ற யோசனையைப் பரிசீலித்துப் பார்க்கும்படி தமிழ்நாடு அரசாங்கத்திடம் சென்னை சர்வகலாசாலை வலியுறுத்தியுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம், மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பின்னர், பள்ளியிறுதித் தேர்வுக் காக இரு பல்கலைக் கழகங்களிலும் தனித்தனிப் பாட நூல்கள் இருக்க வேண்டுமென்றும், இரு பல்கலைக் கழகப் பகுதிகளுக்கும் பள்ளியிறுதித் தேர்வு தனித்தனியாக நடத்தப்பட வேண்டும் என்றும் சென்னைப் பல்கலைக் கழகம் கருத்துத் தெரிவித்தது.

(இ) இக்கருத்துக்கள் குறித்து இரு பல்கலைக் கழகங்களுடன் விவாதிக்கப்பட்டு இரு பல்கலைக் கழகப் பகுதிகளுக்கும் தற்போது நடைமுறையில் உள்ளது போன்று பொதுவான பள்ளி இறுதித் தேர்வும், பொதுவான பாடநூல்களும் தொடர்ந்து இருந்து வர வேண்டும் என்று இரு பல்கலைக் கழகங்களும் ஒப்புக்கொண்டன. இந்த இரு பல்கலைக் கழகங்களும் தத்தம் பகுதிகளுக்கான ஆங்கில, தமிழ்ப் பாட நூல்களைத் தனித்தனியாக அச்சிட்டு வழங்கும், ஆயினும், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, வடமொழிப் பாட நூல்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தினால் தொடர்ந்து வெளியிடப்படும்.

திரு. கே. விநாயகம் : இரு பல்கலைக்கழகங்களும் தனித் தனியே அவரவர்களுக்கு உகந்தாவாறு புத்தகங்களை, ஸிலபசுகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்று கோரிக்கை தெரிவித்தபோது, பழைய முறையே, அதாவது 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஸிலபஸ் முறையே, அதாவது சபாநாயகர் அவர்கள் படிக்கும் நேரத்தில், நானோ அல்லது அமைச்சரோ படிக்கும் காலத்தில் இருந்துவந்த முறையே இருக்கட்டும் என்று பல்கலைக்கழகம் சொல்லியது. அப் பொழுது "எஸ்ஸே" எழுதுவது அவசியம். பிறகு நடுவே வந்த முறை யில், "ஒன் வேர்ட் ஆன்சர்", "ஒன் ஸெண்டன்ஸ் ஆன்ஸர்" தருவது என்று வந்த காரணத்தால் கல்வித் தரமே குறைந்துவிட்டது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, பரீட்சை முறை பற்றியது. தனித் தனிக் கேள்வி பற்றியது அல்ல.

திரு. கே. விநாயகம் : அதை ஒட்டித்தான் இது வருகிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. ஸிலபஸ் வல்லுநர் குழுவினால்தான் முடிவு செய்யப்படுகிறது. வேறு யாராலும் அல்ல. ஏற்கனவே இருந்த முறையில் சிறந்த மாற்றம் வேண்டும் என்று அவர்கள்தான் கலந்தாலோசித்து செய்திருக்கிறார்கள். குறைபாடுகள் இருந்தால் அவற்றை நீக்கவும், நிறைபாடுகளைச் சேர்க்கவும், அவர்கள்தான் எடுத்துச் சொல்ல வேண்டும். பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில், மதுரைப் பல்கலைக்கழகம் புதிதாக இருப்பதால், இப்பொழுதுதான் பெருகிக் கொண்டு வருகிற காரணத்தால், தனியாக அமைத்துக் கொண்டால் சிரமமாக இருக்கும் என்று, ஒரே மாதிரியான நூல்களைப் பிரசுரம் செய்து, "ராப்பரை" மட்டும், மதுரைப் பல்கலைக்கழகம் என்று போட்டு, அந்த முறையில் செய்யப்படுகிறது. அந்தப் பல்கலைக்கழகம் முழு வளர்ச்சி பெற்று, வசதிகள் பெறும்போது தனியாகப் பாட நூல்களை வைத்துக்கொள்ள முயற்சிகள் செய்யும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to the text-books for elective subjects for Telugu students in the State, there are no text-books available now. There are hundreds of Telugu students without these books and they find it difficult to get them. I represented the matter to the Hon. Minister when he had been to Hosur recently. So, with regard to the preparation of these books, may I know from the Hon. Minister the steps taken to publish the elective subjects in Telugu ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது கல்வித் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும். தனிக் கேள்வி போட்டால், தெளிவான விளக்கம் கொடுக்கலாம்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிறந்த குழந்தை போல் இருக்கிறது. இரண்டு பல்கலைக்கழகங்களும் தமிழகத்தில் இருந்தாலும், மதுரையில் படிக்கக்கூடிய மாணவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளக் கூடிய விதிமுறையை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ, இது வேறு பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : எந்தப் புத்தகமாக இருந்தாலும், தனித்தனியாக வெளியிடுவதன் காரணமாகத் தரமே குறைந்து விடும் அல்லவா ? எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு கல்லூரிக்குப் போகும்போது, அதன் விளைவாகவும் தரம் பாதிக்கப்படும் அல்லவா ? அதைப் பற்றி கனம் அமைச்சருடைய முடிவு என்ன ?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது எஸ்.எஸ்.எல்.சிக்கு இரண்டு பல்கலைக்கழகங்களும் ஒரே விதமான நூல்களை வைத்திருக்கிறார்கள். புகுமுக வகுப்பு போன்றவற்றிலும் அப்படியே. தனிப் பல்கலைக்கழகம் என்ற நிலை காலம் வளர வளர, தனித் தன்மைகள் ஏற்படும்போது, விருப்பமான முறையில் பாடத் திட்டங்கள் அமைப்பது போன்ற முயற்சிகளில் ஈடுபடலாம். ஆனால், இப்பொழுது அது போதுமான வளர்ச்சி பெறுததால், ஏற்கனவே உள்ள முறைகளைப் பின்பற்றுகிறது.

*Poet Bharathi's house at Ettiapuram.*

* 143 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government have decided to acquire the house in Ettiapuram where poet Bharathi lived; and

(b) whether poet Bharathi's father-in-law also lived in that house ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அவரது தாய்மாமனும் அந்த வீட்டின் சொந்தக் காரருமான திரு. சாம்பசிவ ஐயரும் அந்த வீட்டில் வசித்தார்.

திரு. கே. விநாயகம் : அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர், தாய் மாமன் அந்த வீட்டை அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்கு எத்தனை அதிகமான தொகை கேட்டார் ? அந்த வீட்டின் மார்க்கெட் விலை சாதாரணமாக என்ன ? பாரதியார் பெரும் புரட்சிக் கவிஞராக வாழ்ந்ததால், அதற்கு மதிப்புக் கூடி, அதனால் அரசாங்கம் எவ்வளவு கொடுக்க வேண்டியிருந்தது? அது வாங்கப்பட்டு இப்பொழுது நம் பார்வையில் இருக்கிறதா ? வாங்கியிருந்தால், அதை மற்றவர்கள் போய்ப் பார்த்து, புதிய தேசிய உணர்ச்சிகள் பெறக்கூடிய சூழ்நிலையில் அதை மாற்றி அமைத்திருக்கிறார்களா, இல்லை, பழைய மாதிரியே வீடாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாரதியார் பிறந்த வீட்டை ஒரு நினைவுச் சின்னமாக வைக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான், அந்த வீட்டைக் கையகப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. அந்த வீட்டில் பாரதியார் பிறந்தார், அது அவருடைய தாய் மாமன் வீடு. தாய் மாமன் வீட்டில்தான் அவர் பிறந்தார். அந்தத் தாய் மாமன், திரு. சாம்பசிவ அய்யர் 1963-ல் இறந்துவிட்டார்கள். அவருடைய மகன் திருநெல்வேலியில் இருக்கிறார். அந்த வீடு இப்பொழுது அவருக்குத்தான் சொந்தம். அந்த வீட்டை நினைவுச் சின்னமாக வைக்க முயற்சி எடுக்கப்பட்டது. அது 5 செண்ட் நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அந்த வீட்டை ரூ. 20,000-ம் கொடுத்தால் தருகிறேன் என்றார். அதை அரசு கையகப்படுத்த, அதாவது அக்விஸிஷன் செய்ய முயற்சி செய்து வருகிறது. "ஏன்ஷெண்ட் மான்யுமெண்ட் ஆக்ட்" இன் கீழ் எடுக்க 100 ஆண்டுகளுக்குக் குறையாமல் இருந்திருக்க வேண்டும். ஆகவே, லாண்ட் அக்விஸிஷன் ஆக்டின் அடிப்படையில் கையகப்படுத்தி, உரிய தொகையைக் கொடுக்க திருநெல்வேலி டி.ஆர்.ஓ. நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

[1970 ஆகஸ்ட் 31

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே, திருவல்லிக் கேணி, துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலுள்ள ஒரு வீட்டில் பாரதியார் இறந்தார். அதை ஒரு ஞாபகச் சின்னமாக வைக்க, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு முன்வந்திருக்கிறது. அந்த வீட்டை வாங்கித்தர அரசாங்கம் உதவி புரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்ற கோரிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால், கவனம் செலுத்தும். பாரதியார் பிறந்த அந்த வீட்டை நினைவுச் சின்னமாக அமைக்க அந்த வீட்டை எடுப்பது என்று முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஞாபகச் சின்னமாக அமைப்பது என்கிற நிலையில், மாவட்ட நூலக ஆணைக்குழு அதைப் பயன்படுத்திக்கொள்ளும் தன்மைகளை மேற்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பாரதியார் அவர்கள் பிறந்த வீட்டைக் கையகப்படுத்துவதற்காக, அந்த வீட்டிற்கு ரெவின்யூ இலாகாவினர் எவ்வளவு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வீட்டுச் சொந்தக்காரர்கள் அந்த வீட்டிற்கு இருபதினாயிரம் ரூபாய் கேட்கிறார்கள். டி. ஆர். ஓ. அவர்கள் வீட்டைக் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ரெவின்யூ இலாகாவினர் எவ்வளவு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. டி. ஆர். ஓ. அவர்களுடைய முயற்சி முடிந்த பிறகு விவரம் தெரிவிக்கப்படும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பாரதியார் அவர்கள் எட்டையபுரத்திலே தம் வாழ்நாளிலே பெரும்பகுதியைக் கழித்தார். பாரதியார் அங்குத்தான் "காணி நிலம் வேண்டும்" என்ற கவிதையும் எழுதினார். ஆகவே அவர் வாழ்ந்த வீட்டை அரசாங்கம் கையகப்படுத்த முயற்சி எடுத்துள்ளதா ? எட்டைய புரத்திலே ஆண்டுதோறும் பாரதி விழா கொண்டாடுகிறார்களே, அந்த விழாவில் அரசாங்கத்தின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலில், பாரதியார் அவர்கள் பிறந்த இடத்தை வாங்கி, நினைவுச் சின்னமாக்க வேண்டுமென்பதுதான் இப்போதுள்ள திட்டம். பாரதியாருக்கு நினைவுச் சின்னம் இருக்க வேண்டும். பாரதியார் வாழ்ந்த வீட்டை, வசித்த வீட்டை, குடியிருந்த வீட்டை எல்லாம் வாங்கி நினைவுச் சின்னங்களாக்குவது என்றால் அதற்கு ஏராளமான செலவு ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. நாம் ஒவ்வொன்றாகச் செய்யலாம். உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டியது. பாரதியார் பிறந்த வீட்டை விலைக்கு வாங்கி, அதை நினைவுச் சின்னமாக ஆக்க வேண்டுமென்பதுதான்.



1970 ஆகஸ்ட் 31]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வசித்த வீட்டை அரசாங்கம் கையகப்படுத்தி, நினைவுச்சின்னமாக ஏற்படுத்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய விவரம் தனியாக வரும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, பாரதியாரைப் போலவே தேச விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த திருப்பூர் குமரன், மொழிப் போராட்டத்திலே மாண்டவர்கள் போன்றவர்களுக்கும் நினைவுச் சின்னம் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தேச விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட திருப்பூர் குமரன் போன்றவர்களுக்கு வேறு பல வகைகளிலே நினைவுச்சின்னம் அமைக்க முயற்சி எடுத்துவருகிறார்கள். எப்படிப்பட்ட நினைவுச் சின்னம் என்பது பற்றிய விவரம் தெரியவில்லை. வாய்ப்பு ஏற்படுகிறபோது அரசாங்கம் இதைக் கவனிக்கும்.

மாம்பழம் ஏற்றுமதி

* 144 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகின்றதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்தெந்த வகையான மாம்பழங்கள், எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ? ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு ரூபாய்க்கு இந்த மாம்பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அல்பான்ஸோ, பெங்களூரா, நீலம் ஆகிய மாம்பழ வகைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த மாம்பழ வகைகள் மலேயா, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நார்வே, ஏடன், ஜெர்மானியக் கூட்டாட்சி குடியரசு (கிழக்கு ஜெர்மனி) ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1968-69-ம் ஆண்டு வரையிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட மாம்பழ வகைகளின் மொத்த எண்ணிக்கை, 3,41,559 ரூபாய் மதிப்புள்ளது ஆகும். பல தரப்பட்ட மாம்பழ வகைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சர்க்கரை சேர்க்கப்படாத மாம்பழச் சட்னி, சர்க்கரை சேர்க்கப்பட்ட மாம்பழச் சட்னி, உப்பு நீரில் இடப்பட்ட மாங்காய்த்துண்டு, உலர்த்தப்பட்ட மாங்காய்த் துண்டுகள், மாம்பழ மாவு, பழ ஊறல், பழப் பாகு, பழச்சாறு, கறிகாய்ச் சாறு, இன்தேம்பாகுநீரில் பாதுகாக்கப்பட்ட பழங்கள் போன்ற வகைகளில் எல்லாம் அனுப்பப்படுகின்றன.

இந்தியாவிலேகூட ஏனைய மாநிலங்களுக்கும் மாம்பழம் அனுப்பப்படுகிறது. வட ஆற்காடு, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பிற மாநிலங்களுக்கு மாம்பழத்தை ஏற்றுமதி செய்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து நாக்பூர், பம்பாய், கல்கத்தா, டெல்லி, அம்ரோடி, கந்த்வா, அகோலா, ஜால்கான், ரெய்பர், பிலாஸ்பர், உஜ்ஜெயின் முதலிய இடங்களுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மாம்பழத்தில் பெருமளவு மைசூர் மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பம்பாய்க்கும் சிறிதளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து பம்பாய், கேரளம், ஆகிய மாநிலங்களுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆக, இந்த மாவட்டங்களிலிருந்து இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழத்தின் மொத்த அளவு ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட 34 ஆயிரம் டன் என மதிப்பிடப்படுகிறது.

## தமிழ்நாட்டில் தேயிலை உற்பத்தி

* 145 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிதாக இடங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம். நீலகிரி மாவட்டத்தில் தேயிலையை மும்முரமாகப் பயிரிடுவதற்காக உழவர்களுக்கு நிலவள வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. பம்பாய், வேளாண்மை மறுநிதிக்கழகத்தின் நிதி உதவியுடன் இத் திட்டம் செயல்படுகிறது. இந்திய அரசின் நிதி உதவியுடன் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களுக்காக ஒரு திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

(இ) விவர அறிக்கை ; ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தேயிலை வாரியத்திடமிருந்து உரிமம் பெறுவதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளனவா ? இத்திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொண்ட முதல் ஆண்டில் என்ன இடர்பாடுகள்? அரசாங்கமே சொந்தமாகத் தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய இடங்களைத் தேர்ந்தெடுத்து தேயிலை பயிரிடப் போவதாக செய்தி கிடைத்திருக்கிறதே, அது உண்மையா ?

* பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது



மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, முதலிலே 50 லட்சம் ரூபாய் செலவிலே பம்பாய், வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் இத்திட்டம் செயல்படுகிறது. இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்புபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கையாக, பத்து ஆண்டுக் கால அளவில், ரூ. 92,71,000 மொத்தச் செலவில் நீலகிரி மாவட்டத்தில் 750 ஏக்கரில் தேயிலை பயிரிடுவதற்கான பணித்திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் ஏற்பளித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு மாநில அரசாங்கத்தின் நிதியிலிருந்து உதவி ஒன்றும் செய்யவில்லை.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியினை நீலகிரி மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளதுபோல், சுமார் மூவாயிரம் அடிக்கு மேலே இருக்கிற வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் தேயிலை பயிர் செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் நீலகிரி மாவட்டத்திலே சேரம்பாடி, கூனூர், சேரங்கோடு ஆகிய இடங்களில் தவிர மற்ற இடங்களில் இத்திட்டம் இடம்பெறவில்லை. கோயமுத்தூர் மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியில் தேயிலைத் தோட்டம் அமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திய பிறகுதான் இது எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தி செய்வதற்கு கன்னியாகுமரி மாவட்டக் காடுகளிலே போதிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் தற்போது இல்லை. இப்போது நீலகிரிப் பகுதியிலும், கோயமுத்தூர் ஆனைமலைப் பகுதியிலும்தான் இத்திட்டம் இருக்கிறது.

திரு. நா. கிருட்டிணன் : தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் எவ்வளவு பரப்பளவில் தேயிலை பயிர் செய்யப்படுகிறது ? இந்தியாவில் தேயிலை பயிராகும் பரப்பளவில் இது எத்தனை சதவீதம் ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. சோ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தி செய்யும் திட்டம் நீலகிரி மாவட்டத்திலே எந்தெந்த இடங்களில் இருக்கிறது ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நீலகிரியில் கிட்டத்தட்ட 643 ஏக்கர் இடமும், குந்தா, கூனூர், கோத்தகிரி பகுதிகளில் 2 ஆயிரம் ஏக்கர் இடமும் இத்

[1970 ஆகஸ்ட் 31

திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பம்பாய் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் 643 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாழை உற்பத்தி

* 146 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வாழை ( Banana ) உற்பத்தியைப் பெருக்கு வதற்குப் புதிய திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : குட்டை பச்சை வாழை வகைகளை முனைந்து பயிரிட வகை செய்வதற்காக, வாழை பயிரிடுமுனைப்புத் திட்டம் ஒன்று வட ஆற்காடு, திருச்சிராப் பள்ளி, மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தூத்துக்குடியிலும், அதைச் சுற்றிலும் பொதுவாக வாழை பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பொதுவாக வாழை போன்ற பயிர்கள் புயல், காற்று போன்ற சேதங்களினுல் பாதிக்கப்படுகின்றன. குட்டை வாழை இனங்களை அதிகரிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் முயற்சியை வரவேற்கிறேன். அதோடு, குறைந்த தண்ணீரைக்கொண்டு வாழையைப் பயிரிடும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா ? குட்டை இன வாழை யைப் பயிரிட அரசு ஏதாவது மான்யம் அல்லது கடன் வழங்கும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, குறைந்த தண்ணீரைக்கொண்டு வாழையைப் பயிரிடும் திட்டம் குறித்த விவரக் குறிப்பு ஒன்றும் தற்போது இல்லை. வாழை பயிரிடும் குடியானவர்களுக்குப் பண்ணைத் திட்டம் வகுக்கப்பட்டு, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அவசியமான கடன் வசதிகள் செய்துதரப்படுகின்றன. தற்போது தலைக்கு 2 ஆயிரம் ரூபாய் என்ற மேல் வரம்புக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை சொந்தப் பொறுப்பின்மேல் கடன் வழங்கப்படுகிறது. இதில் ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் முதல் 500 வரை ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறது. எஞ்சிய தொகை உரம், எருக்கலவை, பயிர் நோய் மருந்துகள் வடிவில் வழங்கப்படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி குட்டை வாழைகள், பச்சை வாழைகள் நம் நாட்டில் ஏராளமாகப் புதிது புதிதாக உண்டாகின்றன. நெற் பயிர் களுக்குப் பெயர் வைப்பதுபோல் இந்தப் புதிய வாழைகளுக்கும் பெயர் வைக்க இந்த அரசாங்கம் முன்வருமா ? வல்லம்படுகை பக்கத்தில் பச்சை வாழைகள் அதிகம் இருப்பதினுல் அங்கே அதிக உதவி அளிக்க இந்த அரசாங்கம் முன்வருமா ? எத்தனைவிதமான வாழைகள் நம் நாட்டில் இருக்கின்றன ?



1970 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : எத்தனை விதமான வாழைகள் இருக்கின்றன என்பதற்கு அவற்றின் பெயர்ப் பட்டியல் இல்லை. புதியதாக ஒரு பயிர் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றுக்குப் பெயர் வைக்கப்படும். அதைத் தவருக இந்த அரசாங்கம் நினைக்கவில்லை. மேலும் மத்திய அரசாங்கம் தான் இது போல விதைகளுக்குப் பெயர் வைத்து முன்னேடியாக இருந்திருக் கிறது. அதன் காரணத்தினுல் எல்லோராலும் பெருமையாக ஏற்று கொள்ளப்படுகிற பெயர்களே வைக்கப்படுகின்றன. வட ஆற்காடு, செங்கல்பட்டு, கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களில் பச்சை வாழை பயிரிடப்பட்டு வருகிறது. போதிய உதவிகளும் அளிக்கப்படு கின்றன.

மாணவியர் விடுதிகள்.

* 147 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள "அரசு மாணவியர் விடுதிக்குப் புது கட்டடம்" கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தற்போது இருக்கிற மாணவியர் விடுதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் வருடம் சுமார் 5 ஆயிரம் ரூபாய் வாடகை செலவாகிறது. அதற்கு சொந்தமான இடம் அங்கே இருக்கிற காரணத்தினுல் விடு திக்கே சொந்தமான கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விடுதி களுக்கு சொந்தமான கட்டடம் கட்டும் திட்டம் ஃபேஸ்டு ப்ரொக்- கிராமாக நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கான செயற்குறிப்பு களை மாவட்ட நல அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அவ்வப்போது அனுப்பி வருகிருர்கள். திருப்பூர் நகர விடுதி சம்பந்தமாக செயற் குறிப்பு எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அப்படிப்பட்ட செயற்குறிப்பு வந்தால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

* 148 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு ஜில்லா, காட்டுமன்னுர்கோயில் அரசாங்க அரிசன பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அரசாங்கம் ஓரிடத்தை எடுத் துக்கொள்ள உரிமை உண்டு. எடுத்துக்கொண்ட ஒரு இடத்தைத் திரும்பவும் மற்ருெருவருக்கு ஜாரி செய்யவும் உரிமை உண்டு. ஆயினும், ஹரிஜனப் பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடத்தைத்

திரும்ப தனிப்பட்டவருக்குக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன ? அவருக்கு ஏற்கனவே நிறைய நிலங்களும், மனைகளும் இருக்கின்றன. ஆகவே, அதைத் திரும்பவும் சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : என்னிடம் இருக்கும்படியான விவரம், தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான இடம்தான் அது. அந்தக் கட்டடத்திற்காக மாதம் 150 ரூபாய் வாடகையும் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவேதான் அதைத் திரும்பப்பெற எந்த விதமான நடவடிக்கையும் இல்லை.

திரு. என். ராஜாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹரிஜனப் பெண்கள் ஹாஸ்டலுக்காகக் காட்டுமன்னார்கோவிலில் இடம் கொடுத்து உதவ முன்வந்தார்கள். அந்தச் சூழ்நிலையில் தனிப் பட்டவருக்கு அது ஏன் ஜாரி செய்யப்பட்டது ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : என்னிடத்தில் இருக்கிற குறிப்பு எல்லாம் அது தனிப்பட்டவருக்குச் சொந்தமான இடமும், கட்டடமுமாகவே இருந்தது என்பதுதான். ஆயினும் அது அவருக்குச் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களைத் தருவார்களேயானால், அது உண்மையாகவும் இருக்குமானால், திரும்ப அதை எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கம் தயங்காது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருந்தாலும் அதற்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. அந்த வகையில் இதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட திட்டம் எதுவும் இன்றைக்கு இல்லை.

*Rupee-a-measure scheme.*

*149. Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to State—

(*a*) whether Rupee-a-measure Rice Scheme would be applicable to persons drawing a salary or income below 200 rupees a month; and

(*b*) whether Tamil Nadu N.G.O's Union is urging the Government to raise the limit to 500 rupees a month income group ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஏற்கனவே படியரிசித் திட்டம் அமுலாக்கப்பட்ட இடங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 200-ம் அதற்குக் குறைந்தும் ஊதியம் பெறுபவர்களுக்குப் படியரிசித் திட்டத்தின்கீழ், அரிசி தொடர்ந்து 1–2–70க்கு பிறகும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு (1970) ஏப்ரல் மாதம் முதல், சென்னை மாநகர், கோயமுத்தூர், சிங்காநல்லூர் நகர், பேரூர் ஊராட்சி ஒன்றியம் முதலிய இடங்களில் இந்த வருவாய் வரம்பு ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.



(இ) ரூபாய் 500 அளவுக்கு உயர்த்த வேண்டுமென்ற வேண்டுகோள் வரவில்லை. ஆனால் அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் தங்களுக்கும் படி அரசித் திட்டம் இருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தார்கள். இதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு சம்பள அடிப்படையில்தான் கொடுப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கையின் பிரகாரம் சம்பளத்தைப் பற்றிய கட்டுப்பாடு இன்றி இந்த நாட்டில் பிறந்த அத்தனை பேர்களுக்கும்—மாநிலம் முழுவதற்கும் படி அரிசி வழங்கப்படும் என்றே அறிவித்திருந்தும் அதை இந்த அரசாங்கம் அறவே கைவிட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன பழைய கேள்வி.

திரு. கே. விநாயகம் : Sir, that is an insinuation. கேள்வி எப்படிப் புளிக்கும்? அரிசிதான் புளிக்கும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நண்பர் விநாயகம் அவர்கள் தமிழில் இருக்கிற தேர்தல் அறிக்கையைப் படித்துப் புரிந்து கொள்ளாவிட்டாலும் அந்தத் தேர்தல் அறிக்கை ஆங்கிலத்திலும் இருக்கிறது. படித்துப் பார்க்கலாம். அதுபோல தேர்தல் அறிக்கையில் எதுவும் இல்லை.

திரு. கே. விநாயகம் : தேர்தல் காலத்தில் சுவரொட்டிகளில் அச்சிட்டு ஒட்டப்பட்டவை எல்லாம் என்ன ? அது தேர்தல் அறிக்கையாக ஆகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, ரூ. 500 வருமானம் பெறும் தொகுதியினருக்கு உயர்த்தும்படி தமிழ்நாடு அரசிதழ்ப் பதிவிலா அதிகாரிகள் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளதா என்பது. தேர்தல் கால சுவரொட்டிக்கும் அந்தக் கேள்விக்கும் என்ன சம்பந்தம் ?

Thiru K. VINAYAKAM : Sir, arising out of the main question, I have to put the supplementary question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்தல் அறிக்கையில்தான் இல்லை என்று சொல்லிவிட்டார்களே.

திரு. கே. விநாயகம் : சுவரொட்டிகள் எல்லாம் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றிச் சொல்வதை எல்லாம் வேறு மேடைகளில் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி ஒரு காலத்தில் அரிய பொருளாக இருந்த நேரத்தில் ஏழை எளிய மக்களுக்கு மலிவான விலையில் அரிசியைக் கொடுப்பது என்பதைக் கொள்கையாக நம் அரசாங்கம் கொண்டது. தற்போது பசுமைப் புரட்சி காரணமாக உணவு உற்பத்தி பெருகி, படி அரிசி

ஒரு ரூபாய்க்கு ஓபன் மார்க்கெட்டிலேயே கிடைக்கிற தற்காலத்தில் அரசிதழ் பதிவு பெருத ஊழியர்கள் தங்களுக்கும் அரிசி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருர்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே வந்த மனுக்கள் பற்றித்தான் குறிப்பிட்டேன். விலைவாசி குறைந்திருக்கிறது என்று எதிர்க்கட்சி நண்பர்களுக்குப் புரியும்படி சொன்னதற்கு கனம் அங்கத்தினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஆண்டு உணவு உற்பத்தி தன்னிறைவு பெற்றிருக்கிற காரணத்தினுல், ஐ. ஆர். 8 உற்பத்தி பண்ணுகிற இந்நாளில் படி அரிசித் திட்டத்தையே அரசாங்கம் கைவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போது அந்த யோசனை இல்லை.

திரு. எம். எஸ். மணி : முன்பெல்லாம் அரிசி வாங்க மக்கள் நீண்ட க்யூவில் நின்ருர்களே, இப்போது நிற்பது இல்லையே, அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மக்கள் ஆயிரக்கணக்கில் இப்போது நிற்காததற்குக் காரணம் ஆயிரக்கணக்கான மூட்டைகள் விதம் விதமான அரிசி, கடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதுதான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வருமான வரம்பு இல்லாத காலத்தில் சென்னை நகரத்தில் மொத்தம் எத்தனை கார்டுகள் வழங்கப்பட்டன ? ஜனத்தொகை எவ்வளவு ? இப்போது வருமான வரம்பு கட்டிய பிறகு வழங்கப்பட்டுள்ள கார்டுகள் எத்தனை ? ஜனத்தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. வி. டி. அண்ணுமலை : 1967-க்கு முன்பு இருந்ததைப்போல திங்கட்கிழமை, வியாழக்கிழமைகளில் பட்டினி போட இந்த அரசாங்கம் முன்வந்ததா?

(விடை இல்லை)

திரு. கே. விநயகம் : இந்தப் புதிய திட்டம் அமுலுக்கு வந்த பிறகு ரூ. 300-க்குக் குறைவாக இருப்பவர்களுக்குப் படி அரிசித் திட்டம் என்கிற அடிப்படையில் எத்தனைபேர் பதிவு செய்துகொண்டிருக்கிருர்கள்? இந்த எண்ணிக்கை ஏறத்தாழ எல்லா ஜனத்தொகைக்கும் வருவதாகச் சொல்லப்படுகிறதே. 25 லட்சம் ஜனத்தொகை கொண்ட சென்னை நகரில் 20 ஆயிரம் என்கிற அளவுக்கு வந்திருப்பது பற்றி அரசு ஏதாவது பரிசோதனை செய்து கண்டுபிடித்திருக்கிருர்களா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தப் புகார் வந்தபிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெகு சீக்கிரத்தில் கார்டுகள் பரிசோதனை செய்யப்படவேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டுக்கு முன்பெல்லாம் இந்த மாநிலத்தில் அரிசிப் பற்றுக்குறை இருந்தபோது நாம் மத்திய அரசு "பூல்" இலிருந்து பெற்று வந்தோம். இந்த ஆண்டு மத்திய அரசு "பூலுக்கு" நம்முடைய மாநிலத்திலிருந்து எவ்வளவு அரிசி கொடுக்கப்பட்டது? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு டன்கள் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் கேள்வி வராது.

### *Major Panchayats as Municipalities*

* 150. Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the number of Town Panchayats which have been upgraded as Municipalities in 1970 in Tamil Nadu; and

(b) whether special officers have been appointed for the above newly constituted Municipalities ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 6. நாமக்கல், பல்லவபுரம், சாத்தூர், துறையூர், சத்தியமங்கலம், விருத்தாசலம் பேரூராட்சிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் 17-1-70 முதற் கொண்டு நகராட்சிகளாக மாற்றப்பட்டன.

(இ) ஆம்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether Government previously consulted the Director of Rural Development before appointing these Special Officers or Government itself directly selected these officers and appointed them as special officers ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கிராம வளர்ச்சித் துறை இயக்குநரிடம் இருந்து தகவல் பெறப்பட்டுத்தான் இந்த அதிகாரிகள் தற்காலிகமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிருர்கள்.

திரு. ந. தருமலிங்கம் : பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குகின்ற அடிப்படையில் திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கவேண்டுமென்று அங்கே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினர்களே, அதுபற்றி இந்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது பற்றித் தகவல் இல்லை. ஆனுல் தற்போது 30 பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றவேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு வந்திருக்கிறது. இப்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்பை மத்திய அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிற காரணத்தினுல் எந்த வித

மாற்றங்களையும் செய்யக்கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருக்கிற காரணத்தினால் அந்தச் செயற்குறிப்பை அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது.

திரு. என். வரதராஜன் : பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுகின்ற வகையில் தமிழ்நாட்டில் இதுவரையில் எத்தனை மாற்றப்பட்டிருக்கின்றன ? இதிலே தேர்தல் நடத்தப்படாத நகராட்சிகளுக்கும் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கிற நகராட்சிகளுக்கும் எப்போது தேர்தல் நடத்த அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே 84 நகராட்சிகள் இருக்கின்றன. இந்த ஆண்டில் 6 புதிய நகராட்சிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 90 நகராட்சிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர, ஆவடி, அம்பத்தூர், கத்திவாக்கம், மாதவரம் போன்றவை நகராட்சித் திட்டத்தின்கீழ் டவுன்ஷிப்புகளாக அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில நகராட்சிகளில் தேர்தல் முடிந்தும் சிலவற்றில் முடியாமலும் இருக்கின்றன. அவைகளில் சில, வழக்கு மன்றங்களில் இருக்கின்றன. அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister the number of Special Officers whose names were sent by the Director of Rural Development in the list submitted by him to Government?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது பற்றிய விவரம் ஏதும் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தகவல் தரலாம்.

* 151 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூக்கா குத்தாலம் மேஜர் பஞ்சாயத்தினை நகராட்சி மன்றமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முந்தைய கேள்விக்குப் பதிலளிக்கையில் 30 பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குவதற்கு பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். அந்த 30 பேரூராட்சிகளில் குத்தாலம் ஒன்றா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே பதிலளிக்கையில் 30 பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுவதற்கான ஒரு செயற்குறிப்பு வந்ததாகவும், ஆனால் அது மத்திய அரசு தடைசெய்த காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னேன். அந்த 30 பேரூராட்சிகளில் குத்தாலமும் இருக்கிறதா என்ற விவரம் இல்லை.



* 152 வினா—திரு. மு. க. து. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) லால்குடி பேரூராட்சி, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின்கீழ் ஓர் நகராட்சியாக அமைப்பதற்குண்டான மக்கட்தொகை அடிப்படைக் கோட்பாட்டை நிறைவேற்றுததால், அப்பேரூராட்சியை, ஓர் நகராட்சியாக மாற்றுவதற்கு, திருச்சி மாவட்ட ஆட்சியாளரும், கிராம வளர்ச்சி இயக்குநரும் அரசுக்கு சிபாரிசு செய்யவில்லை.

## கயத்தார் நகரப் பஞ்சாயத்துக்குத் தெரு விளக்குகள்

* 153 வினா—திரு. மு. முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலூகா, கயத்தார் நகரப் பஞ்சாயத்திலிருந்து, தெரு விளக்குகள் வேண்டும் என்று கோரி 24—1—1969-ல் உயர் திரு. கங்கைகொண்டான் மின்சார அதிகாரி அவர்களுக்குத் தீர்மானம் அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 29–11–1967-ம் தேதிய தீர்மான எண் 214ஐயும், 13—11—1968-ம் தேதிய தீர்மான எண் 112ஐயும் ஒட்டி 24—11—1969-ம் தேதியில், கயத்தார் ஊராட்சியிலிருந்து கங்கைகொண்டான் மின்சார அதிகாரி அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

(இ) கயத்தார் நகரப் பஞ்சாயத்தில் தெரு விளக்குகள் போடுவதற்கு, மின்சார வாரியம் அனுமதி அளித்து, வேலை துவக்கப்பட்டுள்ளது. இவ்வேலை விரைவில் முடிக்கப்படும்.

திரு. மு. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய இந்த 1972-க்குள் எல்லா ஊராட்சிகளுக்கும் தெருவிளக்குகள் போடப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்குள் இந்த கயத்தாறுக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கேள்வியினுடைய பதிலைக் கனம் உறுப்பினர் அவர்கள் தெளிவாகக் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பதிலிலே மின்சார வாரியம் அனுமதி அளித்து, வேலை துவக்கப்பட்டுள்ளது. இவ்வேலை முடிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த வேலையோடு மற்ற வேலைகளும் முடிக்கப்படும்.

## நில அடமான வங்கிகள்

* 154 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜமீன் நிலங்களின் உரிமையாளர்கள் நில அடமான வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு அதிகக் காலதாமதமேற்படுகிறதா ?

(இ) ஆம் எனில், காரணம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) கூட்டுறவு சங்கப் பதிவாளரின் 4–9–1968 நாளிட்ட சுற்றறிக்கையின் நகல் ஒன்று * பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, பொதுவாக ஜமீன் நிலங்களுக்குப் பட்டா உரிமை யாரிடம் இருக்கிறது என்பதே பல இடங்களிலே பிரச்சினையாக இருக்கிறது. அதனால் பல இடங்களிலே, குறிப்பாக நிலக்கோட்டைத் தாலுகாவிலே, கடந்த இரண்டு ஆண்டுகளாக பல பேர்களுக்குக் கடன் கிடைக்காமல் இருக்கிறது. பட்டா உரிமையைப் பொருத்த வரையில் அந்தப் பகுதிகளில் அனுபவ உரிமையை வைத்துக் கடன் கொடுக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பதிவாளர் சுற்றறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பட்டா இல்லாமல் இருக்குமேயானால் அங்கே விசாரணை செய்து கடன் வழங்கலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பதைத் துரிதப்படுத்தவும், சுலபப்படுத்தவும், நடவடிக்கை அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்த ஜமீன் நிலங்களில் வில்லங்கங்கள் எடுத்த பிறகு கடன் கொடுக்கப்படுகிறது. இருக்கின்ற சர்வே நம்பருக்குப் பதில் ஏற்கனவே இருந்த பைமாஷ் நெம்பர் இருந்தால்தான் வில்லங்கம் வாங்க முடியும். அதன் பிறகு கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அதைத் தளர்த்தி சர்வே நெம்பர் இருந்தாலே வில்லங்கம் எடுத்துக் கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அந்தச் சுற்றறிக்கையில் ஏற்கனவே அதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதைப் படிக்கிறேன். வேறு யாரும் அந்த அனுபவத்தில் தலையிடுவதில்லை எனத் தெளிவானால், பழைய பட்டா, பைமாஷ் எண், போன்ற வேறு ஆதாரங்களைத் தேடிக்கொண்டிராமல் அவர் கொடுக்கும் பட்டாவையே ஆதாரமாகக் கொண்டு கடன் வழங்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

* 100–104-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



* 155 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் கணக்குப் பிரிவை 1—7—1969-ம் தேதி முதல் மாவட்ட அளவில் நடைமுறைக்குக் கொண்டு வந்ததின் மூலம் கடன் பெறுவோருக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் : கடன் தொகையை, கடன் பெறுவோர் விரைவில் பெறுகின்றனர்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் கடனுக்கு விண்ணப்பித்துக் கொள்ளக் கூடியவர்கள் மாவட்ட அளவிலே அலுவலகங்கள் இருந்தாலும்கூட சென்னைக்கு அந்த ரிக்கார்டுகளை அனுப்பிப் பெற்றுதான் தர முடியும் என்கிறார்கள். இன்னும் விரைவாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் கூறியது, முன்னாலே நில அடமான வங்கிகள் என்று இருந்தபோது. ஆனால் நிலவளவங்கிகள் என்று ஆனபிறகு, மாவட்ட அளவிலேயே முடிவு எடுக்குமாறு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் அடிக்கிணறு வெட்டுவதற்கும், பம்ப் செட்டுகள் வைப்பதற்கும் பணம் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். மதுரை மாவட்டத்திலிருந்து தகவல் வந்திருக்கிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. மூலக் கேள்வி எல்லா மாவட்டங்களிலும் கணக்குப் பிரிவை நடைமுறைக்குக் கொண்டு வந்ததைப்பற்றி.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த நில வள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. முன்னாலேயே சர்க்காரிடம் கடன் இருந்தால் அது தீர்ந்த பிறகுதான் நில வள வங்கி மூலம் கடன் கொடுக்க இயலும் என்று சொல்லுகிறார்களே, இது அமைச்சருக்குத் தெரியுமா ? இதனால் நில அபிவிருத்திக்கோ, கிணறு வெட்டுவதற்கோ, பம்ப் செட்டுகளை வைப்பதற்கோ தடங்கல் ஏற்படுகிறது. பழைய கடன் இருந்தால் அந்தக் கடனையே உள்ளடக்கி வேறு கடன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது பற்றி அமைச்சருக்குத் தெரியும். இதுபற்றித் தீவிரமாக அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

## *Supermarkets.*

*156 Q. THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any supermarket is to be set up at Kancheepuram shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இச் சிறப்பங்காடியைத் திறப்பதற்காக செங்கல்பட்டு மாவட்ட விநியோக விற்பனைச் சங்கத்திற்குப் பங்குத் தொகையாகவும் மானியத் தொகையாகவும் கடன் தொகையாகவும் இரண்டு லட்சத்து இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவியைத் தமிழக அரசு அளித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வேறு எந்த எந்த ஊர்களிலே இதுபோன்ற சிறப்பு அங்காடிகளைத் திறக்க இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் திறந்துகொண்டு வருகிறோம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்த சிறப்பு அங்காடிகள் ஜனத்தொகை அதிகமாக உள்ள நகரங்களில் திறக்கப் படுகின்றனவா அல்லது எங்கே அதிகமாக வியாபாரம் நடக்கிறதோ அந்த இடத்திலே திறக்கப்படுகின்றனவா, எந்த அடிப்படையிலே ஆங்காங்கு திறக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்பொழுது சிறப்பு அங்காடிகள் ஜனத்தொகையை அடிப்படையாக வைத்துத் திறக்கப்படுகின்றன. இந்த சிறப்பு அங்காடிகளிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று, பெரிய சூப்பர் மார்க்கெட், இன்னொன்று, "மினி" அதாவது, சிறிய சிறப்பு அங்காடி என்பது. ஜனத்தொகையின் அடிப்படையில் இருவகை சிறப்பு அங்காடிகளும் திறக்கப்படுகின்றன.

திரு. கே. வினாயகம் : காஞ்சி மாநகரிலே திறக்கப்பட இருக்கிறதற்கு எவருடைய பெயர் வைக்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எந்தப் பெயர் வைக்க வேண்டுமென்று திரு. வினாயகம் விரும்புகிறார்கள் என்பதை சட்ட மன்றத்திற்கு, அவர்கள் தெரிவிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தச் சிறப்பு அங்காடியைத் திறப்பதன் நோக்கமே ஓப்பன் மார்க்கட்டில் விற்பனையாகிற விலைக்குக் குறைந்த விலைக்குப் பொருள்களைக் கிடைக்கச் செய்வது தான். ஆனால் சிறப்பு அங்காடிகளிலே ஓப்பன் மார்க்கட் விலையை விட அதிகமாக விற்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? சென்னையில் காவிரி சூப்பர் மார்க்கட்டில் ஒரு கிலோ மிளகாய் வத்தலுக்கு அதைவிட அதிகமாக 20 பைசாவுக்கு சாத்தூரிலே வழங்கப்படுகிறதே அதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது விஷயமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மதிப்பிற்குரிய உறுப்பினர் சொல்வதைப்போல, குறைந்த விலைக்குக் கொடுப்பதற்காகத் தான் சிறப்பு அங்காடிகள் திறக்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல, சரக்கின் தரம் அதைவிட முக்கியம். சரக்குகளின் தரங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிறப்பு அங்காடிகளில் தரமுள்ள சரக்குகள் குறைவான விலைக்குக் கிடைக்கும்.



*157 Q.—Thiru N. KASIRAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the employees of the Super-market (Karpagam) at Vellore have been given a notice of recovery for the shortages in various sections of the Co-operative Society; and

(b) whether opening stocks were allowed to be verified by the employees from whom the recoveries have been ordered?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) சரக்குகளைப் பெற்றுக்கொண்டதற்கு எழுத்துமூலம் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, what is the total number of Supermarkets that are working in our State—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி வேலூர் சூப்பர் மார்க்கெட் பற்றியது.

திரு. கே. வினாயகம் : வேலூர் கற்பகம் சூப்பர் மார்க்கட்டில் என்ன தவறு நடந்து இருக்கிறது? எவ்வளவு கையாடல் செய்து இருக்கிறார்கள்? அப்படிச் செய்தவர்கள் நிர்வாகத்தில் இருப்பவர்களா ? என்ன தண்டனை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது ? அவர்களிடமிருந்து வசூல் செய்வதோடு அவர்கள் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பணம் கையாடல் என்பதல்ல. சரக்குகள் இருப்பு குறைவாகக் காணப்பட்டது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கையெழுத்திட்ட அளவுக்குச் சரக்குகள் இல்லையென்றதால் குறைவாக இருப்பதற்காக, பணத்தை வசூல் செய்வதற்கு, நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக, குற்றப் பிரிவிலே, கிரிமினல் வழக்குப் போடுவது என்றால், எந்த அளவுக்குக் குறைவு செய்திருக்கிறார்கள் என்று தெரியவேண்டியிருக்கிறது. ஆகவே முதலில் நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள்

* 158 வினா:—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு அதிகப்படியாக E. S. I. மருத்துவ மனைகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

[1970 ஆகஸ்ட் 31

திரு. கே. என். குமாரசாமி : சோமனூரிலே 500 தொழிலாளர்கள் இரண்டு பகுதிகளிலே வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இ. எஸ். ஐ. பிடித்தம் தொழிற்சாலைகளிலே செய்துவிடுகிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்களுக்கு மருத்துவ வசதிகள் இல்லை. எனவே, அந்தப் பகுதியில் ஒரு இ. எஸ். ஐ. மருத்துவ மனை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நான் முன்பே இந்த மன்றத்திலே பல முறை சொல்லியிருக்கிறேன். இப்பொழுது தீவிரமாகப் பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று முயற்சி செய்கிறது. மத்திய அரசாங்கம் எடுத்திருக்கிற இரண்டு முடிவுகள் அதற்குத் தடையாக இருக்கின்றன. அதைப்பற்றி மத்திய அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறோம். உண்மையாகச் சொல்லப்போனால் ஒரு சிறு போராட்டமே நடந்துகொண்டிருக்கிறது. முடிவுகள் விரைவாகக் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

திரு. எம். பூபதி . தலைவர் அவர்களே, இப்பொழுது சிங்காநல்லூரில் உள்ள இ. எஸ். ஐ. மருத்துவ மனையை முழுமையாக நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி இந்த மாதம் 31-ம் தேதி முதல் அது செயற்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் மருத்துவர்கள், அவர்கள் வேலை முடித்ததற்குப் பிறகு, தனியாகத் தொழில் பார்க்கக்கூடாது என்ற நியதி இருக்கிறது. அதனால் பலர் வேலை செய்யப் போவதற்கு மனமில்லாத நிலை இருக்கிறது. எனவே, அவர்கள் அந்த வேலையை முடித்ததற்குப் பின்னால் வெளியே தங்களுடைய தொழிலைப் பார்க்கலாம் என்பதற்கு விதியைக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மாநில அரசு இது குறித்து கார்ப்பரேஷனுக்குத் தெரிவித்திருக்கிறது: முழு விவரங்களைக்குறித்து மருத்துவத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்கவேண்டும்.

திரு. சி. வி. அண்ணாமலை : இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் மருத்துவர்கள் கல்லூரியிலிருந்து படித்து முடித்தவுடன் வந்தவர்களாக இருப்பதால் அவர்களுக்குச் சரியான அனுபவம் இல்லை என்று கூறப்படுகிறது. எனவே 10 ஆண்டுகளுக்கு மருத்துவத் துறையிலே அனுபவம் உள்ளவர்களை அந்த மருத்துவ மனைகளுக்கு டாக்டர்களாகப் போடுவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அதற்கென்று இருக்கிற விதிமுறைகளின்படிதான் டாக்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வெளியிலே உள்ள நோயாளிகளைப் பார்த்தால் தொழிலாளர்களுக்கு முழு



1970 ஆகஸ்ட் 31]

நேரமும் செலவழிக்கமுடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். எங்கே அப்படி இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

* 159 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வைத்திய வசதி அளிக்கும் தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்திற்கு அனுமதி தர மத்திய அரசு மறுத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிதிப் பற்றுக்குறையின் காரணமாக, தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மதுரைப் பகுதியில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு நீட்டிக்கும் திட்டத்தை ஒத்திப்போடுமாறு 1969 மே திங்களில் மாநில அரசு முதலில் கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும், பிறகு கூடிய தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிலைக்குழு ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கும் வரையறுக்கப்பட்ட மருத்துவ உதவி பெறும் வகையில் மேற்படி திட்டத்தை நீடிப்பதற்கு இசைந்தது. இதற்கிடையில் மதுரைப் பகுதியிலுள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு 3–6–1969 முதல் மேற்படி திட்டம் நீடிக்கப்பட்டது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு எங்கு எல்லாம் இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளின் மூலம் தொழிலாளர் குடும்பங்களுக்கு நன்மை தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நாடு முழுவதும் அந்தத் திட்டம் நிறைவேறுகிறது. அயனாவரத்திலே 650 படுக்கைகள் இருக்கின்றன. கோயம்புத்தூரில் உள்ள மருத்துவ மனையில் 300 படுக்கைகள் இருக்கின்றன. மதுரையிலே உள்ள மருத்துவ மனையில் 202 படுக்கைகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் பல்வேறு மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. தனியாகக் கேள்வி கேட்டால் விவர அறிக்கையை அளிக்கிறேன்.

*Commercial Broadcast in All-India Radio.*

* 135. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have given advertisements in the Commercial Broadcasting Service of the All-India Radio; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) காந்தி நூற்றாண்டு விழா என்பதாலும், கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருள்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும் 3—11—1969-லிருந்து 21—11—1970 வரை, வானொலி

வர்த்தக ஒலிபரப்பில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்காக கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தால் மொத்தம் ரூ. 3,980 செலவழிக்கப்பட்டது.

மேலும், அரசு வெளியிடும் பரிசுச் சீட்டுக்காக விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு வானொலி வர்த்தக ஒலிபரப்பில் விளம்பரம் கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த செப்டம்பர் 1969 முதல் ஜூலை 1970 வரை மொத்தம் ரூ. 57,047–50 காசு மேற்படி விளம்பரத்துக்காகச் செலவழிக்கப்பட்டது.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவரவர்களே, "சட்டசபையில் இன்று" என்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியை வானொலி நிலையத்தினர் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அது மாநிலச் செய்தி அறிக்கையை அடுத்து ஒலிபரப்பப்படுவதால், பொது மக்களுக்கு வசதியாக இல்லை. எனவே, அதனை மாற்றி, பொது மக்கள் எல்லோரும் கேட்கும் அளவில் அந்த நிகழ்ச்சியை ஒன்பதே கால் மணிக்கு ஒலிபரப்புவதற்கு அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில், முதன்மைக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் எள்ளளவுகூட சம்பந்தமில்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன இந்த விஷயமும் வானொலியிலே ஒலிபரப்பப்பட்டு, பிறகு அதை அவர்களே கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. வினாயகம் : நம்முடைய அரசாங்கம் நடத்தும் பரிசுச் சீட்டிற்கான விளம்பரத்தைக் கேட்கும்பொழுது, அதிலே வரும் குடுகுடுப்பைக்காரர் எல்லோருக்கும் ஒரு இலட்சம் வரும், எல்லோருக்கும் ஒரு லட்சம் வரும் என்று சொல்கிறாரே. நீங்கள் கொடுப்பது யாருக்கோ ஒருவருக்குத்தானே. விளம்பரம் செய்வதற்கும், நீங்கள் நடைமுறையிலே நடத்துவதற்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறதே, அதற்கு யார் காரணம்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குடுகுடுப்பைக்காரர் சொல்கிறார் என்று சொல்கிறார்கள். குடுகுடுப்பைக்காரர்கள் ஊரிலே வந்து, நல்ல காலம் பிறக்குது, நல்ல காலம் பிறக்குது என்று
10-00 சொல்லுவார்கள். ஆனால் எல்லோருக்கும் நல்ல காலம் பிறந்து
மு. ப. விடாது. சிலருக்குத்தான் பிறக்கும்.

*Clash between D.M.K. and Right Communists.*

* 136. Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there were clashes between the D.M.K. and the the Right Communists in Bhavani taluk about the 25th September 1969?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பவானி வட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் இடையே 1969 செப்டம்பர் 23-ம் நாளன்று கைகலப்பு நிகழ்ந்தது. இது குறித்து இரு தரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால், போதுமான சாட்சியங்கள் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.





*Gambling near Tambaram Railway Station.*

* 137 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to check gambling in front of the ticket booking office on the westernside of Tambaram Railway Station between 8 a.m. and 9 p.m. every day?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தாம்பரம் காவல் நிலையக் காவலரும் ரயில்வேக் காவலரும் தாம்பரம் ரயில்வே நிலையத்தை அடிக்கடி சூதாட்ட வேட்டை நடத்தி சூதாடும் நபர்கள்மீது வழக்குப் பதிவு செய்து வருகிறார்கள்.

திரு. கே. வினாயகம் : இது தொடர்ந்து எத்தனை நாள் நடந்தது ? இதிலே எவ்வளவு பணம் பிடிப்பட்டது ? அந்தப் பணத்தை கஜானாவிற்குச் செலுத்தினார்களா ? இதிலே குற்றவாளிகள் எத்தனை பேர் ? எவ்வளவு பேருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது ? இது இப்பொழுதும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் எவ்வளவு பணம் கைப்பற்றப்பட்டது என்ற விவரம் இல்லை. ஆனால் 1969-ம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 47. தண்டனை பெற்றவர்கள் எண்ணிக்கை 47. 1970-ம் ஆண்டு மே மாதம் முடிய வழக்குத் தொடரப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 10. தண்டனை பெற்றவர்களின் எண்ணிக்கை 10. மேலும் போலீசார் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, சூதாட்டம் ஊருக்கு ஊர் வித்தியாசப்படுகிறது. சில இடங்களில் ஏழை விவசாயிகளிடம் அண்டா கொடுக்கிறோம், குண்டா கொடுக்கிறோம் என்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூதாட்டத்தில் உஷார் கவனம் செலுத்த வேண்டுமென்று போலீஸ் இலாக்காவிற்கு முதலமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே இதிலே போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று போலீஸ் துறையினருக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. வினாயகம் : கேள்வி, தாம்பரத்தைப்பற்றியதாகயிருந்தாலும்கூட, சென்னை நகரத்திலே எங்கு பார்த்தாலும் வீதி முனைகளிலே, நினைத்தவர்கள் துண்டை விரித்துப்போட்டு ஏமாந்தவர்களை இந்தச் சூதாட்டத்தில் ஈடுபடச் செய்து பணம் பறிக்கிறார்களே, அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, இதை அறவே ஒழிப்பதற்கு போலீஸ் அதிகாரிகளுக்கு ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போலீசார் வருகிற நேரத்தில் அவர்களிடத்தில் இருக்கும் சூதாட்டத்திற்கான ஆயுதங்களை மிகச் சுலபமாகக் கையிலே எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பதால், அதை எடுத்துக்கொண்டு ஓடி ஒளிந்துவிடுகிறார்கள். மாண்புமிகு

உறுப்பினர் அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும் நேரத்தில் இரகசியமாகப் போலீசுக்குப் போன் செய்து பிடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## சென்னை நகரிலுள்ள அன்னியர் சிலைகள்

* 138 வினா—என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள அன்னியர் சிலைகளை அகற்றிவிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்நியர் சிலைகள் உள்ள இடங்களில் வேறு சிலைகளை வைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யும் வரையில், அவை இருந்த இடத்திலேயே இருக்கலாம் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள அந்நியர் சிலைகளை அகற்றிட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்நியர் சிலைகளை அகற்ற வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து குறிப்பாக எந்தக் கோரிக்கைகளும் வராவிட்டாலும் அப்படிப்பட்ட ஒரு கருத்து நீண்ட நாட்களாக நிலவி வருகிறது. ஆனால், 1957-ம் ஆண்டு மே திங்களில் நாடாளுமன்றத்தில், அந்நியர் சிலைகள், சின்னங்கள், ஓவியங்கள் இவைகளை அகற்ற வேண்டும் என்ற ஒத்திவைப்புப் பிரேரணை வந்தபோது, பொதுவாக படிப்படியாக இச் சிலைகள் அகற்றப்பட வேண்டுமென்றும், தேசிய உணர்ச்சியைப் புண்படுத்தக்கூடிய சிலைகள், சின்னங்கள் இருந்தால் அவை உடனே அகற்றப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்போதைய பிரதம அமைச்சர் தனது கருத்தைத் தெரிவித்தார். அதற்குப்பிறகு நமது மாநிலத்திலே நேப்பியர் பார்க் அருகே இருந்த "காரன்வாலிஸ்" சிலையும், மௌண்ட்சாலை வெல்லிங்டன் பாலத்தின் அருகே இருந்த "வெல்லிங்டன்" சிலையும் அகற்றப்பட்டன.

திரு. கே. வினாயகம் : அந்நியர்கள் நம் நாட்டை ஆண்டார்கள் என்கிற ஞாபகம் எப்பொழுதுமே நமக்கு உறுத்த வேண்டுமென்று சொல்லித்தான், இப்படிப்பட்டவர்களிடமிருந்தெல்லாம் விடுதலை பெற்ற நாடு என்று தெரிய வேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காகத்தான், மீண்டும் நாம் அடிமை ஆகக்கூடாது என்று ஞாபகமூட்டத்தான் இந்தச் சிலைகள் இருக்க வேண்டுமென்று, முன்னே ஒரு அமைச்சர் பதில் சொன்னார்கள். அந்தக் கருத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ? அல்லது இவைகளை நடைமுறையிலே நாளுக்குநாள் எடுத்துவிடலாம் என்ற அந்தக் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு முன்பு அந்நியர்கள் நம்மை ஆண்டார்கள் என்பதற்கு அடையாளமாக அவைகள் இருக்க வேண்டுமென்று யார் கூறியிருந்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்



வதாக இல்லை. நாடாளுமன்றத்திலே நம்முடைய முன்னாள் பிரதம அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், படிப்படியாக இச் சிலைகள் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தச் சிலைகள் இருக்குமிடங்களில் வேறு சிலைகளை வைக்கும்பொழுது அவைகளை அகற்றிவிடலாம் என்று நம் மாநில அரசு தீர்மானித்து அந்த வழியைக் கையாளுகிறது. எங்களுக்கிருக்கும் அச்சமெல்லாம், அந்தச் சிலைகளை அகற்றிவிட்டு இன்னொரு சிலையை வைக்கும்பொழுது, இந்தச் சிலை வைப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலையில்லை என்ற அந்தப் பழிச்சொல் வந்துகொண்டிருக்குமே என்று அதற்காகத்தான் சற்றுத் தயங்குகிறோம்.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவரவர்களே, இராஜாஜி மண்டபத்திலுள்ள அன்னிய கவர்னர்களின் சிலைகளை அகற்றும் உத்தேசம் உண்டா? குறிப்பாக, வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட எட்வர்ட் கிளைவின் படம் இருக்கிறது. மத்திய சர்க்கார் உத்தரவுப்படி அந்தப் படத்தை அகற்றலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அங்கே இருக்கின்ற அந்தப் படங்கள் ஓவியம் அழகுக்காக இருப்பதாகத்தான் இன்று யாரும் பார்த்து ரசித்துக்கொண்டு இருக்கிறார்களேயல்லாமல், அவர்கள் இன்னின்னாரைச் சிறையிலிட்டார்கள் என்று பெருமையோடு பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, ஓவிய அழகுடைய, வண்ணம் பொருந்திய சரித்திர நாயகர்களுடைய படங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணமிருக்கிறது. ஆனால், அதற்காகும் செலவு பெருந்தொகையாக இருக்கும் என்று கருதப்படுகிறது. அப்படிப்பட்ட உருவங்கள், ஓவியங்கள் எழுதப்பட்டு, பிறகு அந்தப் படங்கள் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்திலே நான் நம்பிக்கையுடையவனாகயிருக்கிறேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த அந்நியர் சிலைகளை அலங்கோலப்படுத்துதல், உருச் சிதைத்தல், தார் கொட்டுதல் போன்ற இவைகளில் ஈடுபட்டார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததே அது உண்மையா? அதன்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது நடைபெற்ற ஒரு விவசாயிகளினுடைய ஆர்ப்பாட்டத்தின்பொழுது ஜார்ஜ் மன்னருடைய சிலையின்மீது தார் ஊற்றப்பட்டது என்றும், அதிலே கம்யூனிஸ்ட் கட்சியின் கொடி ஒன்று அதன் கையிலே கொடுக்கப்பட்டதாகவும் செய்தி வந்தது. ஆனால், உடனடியாக அந்தச் சிலை சுத்தப்படுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன், திரு. வை. சுவாமிநாதன், திரு. கருப்பையா ஆகியவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடப்பட்டதைப்பற்றி ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. கோவிந்தராஜன் அவர்கள், இது எப்படி ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் குறித்த விதிகளின்கீழ் வரும் என்பதுபற்றி சுருக்கமாக விளக்கலாம்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் விடுதியில் இசைத் தட்டுக்கள் முழங்கிவருவது வழக்கம். அவைகள் பல்வேறுவிதமான பாஷைகளில் இருப்பது வழக்கம். இந்தியிலே அந்தச் சங்கீதம் இருக்கும் அல்லது தமிழிலே இருக்கும் அல்லது ஆங்கிலத்திலேகூட இசைத்தட்டுகள் முழங்குவது வழக்கம். திடீரென்று ஒருசாரார், தமிழிலே மட்டும்தான் அதை வைக்க வேண்டுமென்றும், இன்னொரு சாரார், எப்பொழுதும்போல் எல்லா மொழிகளிலும் இருக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அதன் விளைவாக, மாணவர்களிடையே சிக்கல்கள் ஏற்பட்டு, தகராறுகள் ஏற்பட்டு, குறிப்பிட்ட ஒரு சாரார், தமிழில் மட்டும்தான் இருக்கவேண்டுமென்று சொல்லக் கூடிய சாரார், மற்ற மாணவர்களை அடித்ததன் விளைவாக, அந்த அடித்த மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் அதிகாரிகளால் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அதன் விளைவாக அங்கு ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு அதைச் சரியான முறையிலே சமாளிக்க முடியாதபடி, அந்தப் பல்கலைக் கழகமே மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல, எல்லாக் கல்லூரிகளிலுமே இப்படிப்பட்ட நிலைமையிருப்பதால், நமது மாணவர்களை சரியான முறையில் கட்டுப்படுத்தவும், அவர்களுடைய கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்கும், பெற்றோர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமலிருப்பதற்கும், பணம் நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்கும், மாணவர்களின் கல்வி தொடர்ந்து நடைபெறுவதற்குமான பொதுவான வழிமுறைகளை இந்த மன்றத்தில் விவாதித்து, சரியான முறையில் பல்கலைக் கழகத்திற்கும், கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் தாக்கீது அனுப்பும் முறையில் இந்த விவாதத்தை இங்கு நடத்துவதற்கு, சபையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

## 3. நடைமுறைக் கேள்வி.

ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கும் போது அதை எடுத்துக்கொள்வதற்கு முன் அதே பொருள் குறித்து ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டது குறித்து.

Dr. H. V. HANDE : Sir, on a point of Order. We have already given Call Attention Notices on the Annamalai University and also on the Land Grab Movement. We have given these Call Attention Notices because the Hon. Speaker himself has advised us that as far as possible we must give Call Attention



Notices and not adjournment motions and that he would try to get replies from the Departments concerned. So, I have also given a Call Attention Notice on the subject. Now if suddenly this sort of practice of adjournment motion is allowed, we will also be tempted to give notice of adjournment motion instead of Call Attention Notice so that we can get publicity in regard to this particular matter. So, now I would like the Hon. Speaker to tell us on what items we should give Call Attention Notices and on what items we should give notice of Adjournment Motions. If the Hon. Speaker could give us an idea of what we should do in regard to these matters, it would be helpful to us to function more effectively in this House. Now, the point is that I have given a Call Attention Notice on the subject. Now if suddenly the same subject has been taken up for discussion. On this account, the Hon. Speaker should not reject my Call Attention Notice by saying that the matter has already been discussed by way of an adjournment motion. Those who want to abide by the advice of the Chair should not be placed in a disadvantageous position and those who do not want to abide by his advice should not get advantage out of it. I request the Hon. Speaker to explain the position.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "கால் அட்டென்ஷன் நோட்டீஸ்" எதற்குக் கொடுப்பது, "அட்ஜர்ன்மென்ட் மோஷன்" எதற்குக் கொடுப்பது என்று ஸ்பீக்கர் ஒன்றும் சொல்வதில்லை. விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளையொட்டிக் கொடுப்பது எடுத்துக் கொள்ளப்படும். இன்னதைக் கொடுக்க வேண்டுமென்று கூறுவதற்குப் பேரவைத் தலைவருக்கு உரிமை இல்லை.

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி

### அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடப்பட்டது குறித்து

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட சூழ்நிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அங்கு பல்வேறு சங்கங்களுக்கான பொறுப்பாளர்கள் தேர்தல், பொதுக்குழுத் தேர்தல், உணவு விடுதிச் செயலாளர்கள் தேர்தல் ஆகியவை நடைபெற்றிருக்கின்றன. உணவு விடுதிச் செயலாளர் தேர்தல் நடந்தபோது இரு கட்சியினருக்கும் இடையே அதற்கான வாக்குச்சீட்டு எண்ணிக்கையிலே தகராறு ஏற்பட்டு இரண்டு வாக்குச் சீட்டுகளை ஒரு பிரிவு மாணவர்கள் கிழித்தெறிந்து விட்டார்கள். அதுபற்றி விசாரணை நடத்துவதற்கான முறையில் துணை வேந்தர் அவர்கள் ஒரு குழு அமைத்து விசாரிக்கச் சொல்லியிருந்தார்கள்.

தேர்தல்கள் மூலம் ஏற்பட்ட மாச்சரியங்களோடு கூட, விடுதியில் இசைத்தட்டு வைப்பதிலும் தகராறு ஏற்பட்டது. தமிழ் இசைத் தட்டுகளை மட்டுந்தான் வைக்க வேண்டும். இந்தி இசைத் தட்டுகளை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 ஆகஸ்ட் 31

வைக்கக் கூடாது என்பதிலும் தகராறு ஏற்பட்டு, அதைப் பற்றி ஆராய விடுதிப் பொதுக்குழு 26—8—1970-ல் கூடியது. அதைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கும்போது இரவு 9 மணி அளவில் பி. தாணுப் பிள்ளை என்ற மாணவரைச் சிலர் சேர்ந்து அடித்து விட்டார்கள். அவருக்கு அதனால் இரு பெரும் காயங்கள் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. அவர் உடனே சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். உடனே 200 மாணவர்கள் சேர்ந்து, இரவு 11 மணி அளவில் துணைவேந்தர் இல்லத்திற்குச் சென்று, அந்த மாணவரைத் தாக்கியது பற்றி உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். துணைவேந்தரும் விடுதிக் காப்பாளரை அழைத்து விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அதன்பேரில் மாணவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

மறு நாள் துறைத் தலைவர், டீன்கள், விடுதிக் காப்பாளர் ஆகியோர் சேர்ந்த ஏழு பேர் கொண்ட குழு ஒன்றைத் துணைவேந்தர் அமைத்து, இதைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று காலனியில் கேட்டுக் கொண்டார். அந்தக் குழு 27—8—1970 அன்று 10 மணிக்குக் கூடி 30 பேரை விசாரித்தது. குழுவின் முடிவை எதிர்பார்த்து இரு கட்சி மாணவர்களும் அலுவலகத்தில் இரண்டு பக்கங்களிலும் கூடியிருந்தார்கள். பெரிய கலவரம் ஏதும் ஏற்படாமல் இருக்க, துணைவேந்தர் அவர்கள் காவல் துறைக்கு அறிவித்து, பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தார். அந்த ஏழு பேர் கொண்ட குழுவின் முடிவின்படி ஐந்து மாணவர்கள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று கூறி, அவர்கள் ஐந்து பேரையும் 30—9—1970 வரையில் சஸ்பெண்ட் செய்து வைத்திருப்பதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து 300 மாணவர்கள் துணை வேந்தர் இல்லத்திற்குச் சென்று அந்தத் தீர்ப்பைப் பின்வாங்க வேண்டுமென்றும், அந்த ஐந்து மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் வற்புறுத்தினார்கள். தாணுப் பிள்ளை என்ற மாணவரை அந்த ஐந்து மாணவர்கள் சேர்ந்து அடித்திருக்கிறார்கள் என்று குழு 30 பேரை விசாரித்துத் தீர்ப்புக் கூறியிருப்பதைத் தான் மாற்றுவதற்கில்லை என்றும் அந்த ஐந்து மாணவர்களும் 30—9—1970 வரை மட்டுமே சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறிவிட்டார்.

அதற்குப் பிறகு மாணவர்கள் நூல்நிலையம், கிழக்கு விடுதி ஆகிய பகுதிகளில் பல்வேறு பொருள்களை இரவில் சேதப்படுத்தினார்கள். சில மாணவர்களையும், அலுவலர்களையும் தாக்கினார்கள். மறுநாள் காலையில் கட்டுக்கு அடங்காத நிலை ஏற்பட்டவுடன் துணை வேந்தர், துறைத் தலைவர், விடுதிக் காப்பாளர் ஆகியோரைக் கலந்து, மேலும் கலவரங்களுக்கு வேகம் ஏற்படும் நிலை இருப்பதைக் கருதி, விடுதியை உடனடியாக மூடிவிட்டு, மாணவர்கள் உடனே வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டார்.

அங்கு டி.ஆர்.ஓ., எஸ்.பி. நிலைமையைக் கண்காணித்து வருகிறார்கள். போலீசார் அங்கே பாதுகாப்புக்காகத்தான் வைக்கப்பட்டார்களே தவிர, போலீசார் அங்கே தலையிடுகின்ற நிலைமை ஏற்படவில்லை. போலீசார் எந்த வழக்கும் தொடரவில்லை: துணை வேந்தரும் போலீசாரிடம் எந்த வழக்கையும் கொடுக்கவில்லை.



1970 ஆகஸ்ட் 31] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாணவர்கள் வெளியேறிய பிறகு அமைதியான சூழ்நிலை இருந்து வருகிறது.

இந்த மாதிரிச் சூழ்நிலையில் சில நாட்கள் மூடிவைத்தால்தான் இருசாராருக்கும் இடையே ஒரு அமைதி ஏற்பட முடியும். சில நாட்கள் கழித்து நிலைமை கட்டுக்கு அடங்கிய பிறகு பல்கலைக்கழகத்தைத் திறக்க முயற்சிகளைத் துணைவேந்தர் அவர்கள் எடுத்துக் கொள்ளுவார்கள். இந்த அளவில் நிலைமை இருப்பதால், இப்போது அமைதி ஏற்பட்டிருக்கும் காரணத்தால், நாம் தலையீடு செய்ய வேண்டிய நிலை ஒன்றும் இல்லாத காரணத்தால், இதிலே பல்கலைக்கழக அளவில் முடிவு எடுக்க வேண்டிய காரணத்தால், அரசாங்கம் துணைவேந்தரைக் கலந்து இது பற்றி முடிவு செய்யும் என்று கூறி, இதை விவாதிப்பதற்காக இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## <u>4. அமைச்சரின் விளக்க உரை.</u> (அ) விற்பனை வரி இலாகா குறித்த, உணவு-வணிக வரித் துறை அமைச்சரின் விளக்க உரை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது, உணவு-வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, விற்பனை வரி இலாகா குறித்து ஓர் அறிக்கையைப் படிக்கிறேன்.

இப்போதுள்ள புதிய திருத்தப்படி ரூ. 100-க்கும் அதற்கு மேலும் விற்பனை செய்பவர்கள், வாங்குபவரின் முழு முகவரியுடன், வாங்குபவர் வியாபாரியாக இருந்தால் அவர் உரிம எண்ணும் குறிக்கப்பட வேண்டும். இப்புதிய திருத்தத்தினால் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சங்கடங்களைப் பற்றி வியாபாரிகளும், வியாபாரச் சங்கப் பிரதிநிதிகளும் சட்டப் பேரவை உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து எடுத்து உரைத்தனர். அவர்கள் விளக்கிய பிறகு நடைமுறைச் சங்கடங்கள் உள்ளதை இந்த அரசு உணர்ந்து ஏற்கனவே இருந்த விதிமுறைப்படி ரூ. 500-க்கும் அதற்கு மேலும் விற்பனை செய்தால் வாங்குபவர்கள் முகவரியையும், அவர் வியாபாரியாக இருந்தால் வியாபார உரிம எண்ணையும் குறிக்க வேண்டுமென்று விதிமுறை திருத்தியமைக்கப்படும்.

## 5. அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டம் குறித்து

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவைக்கு ஓர் அறிவிப்பு. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் ஏற்கனவே அறிவித்தபடி பிற்பகல் 12-30 மணிக்குப் பதிலாக இந்த அவை முடிந்த பிறகு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு, அரசியலமைப்பின் 304 ( ) பிரிவின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவர் முன்-ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் இந்த மசோ, தாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

7. அரசினர் தீர்மானங்கள்.

(அ) திரு. மார்டின் மீதான உரிமை மீறல் வழக்குப் பற்றிய அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "30—3—1970-ம் நாளன்று சட்டப் பேரவை முன் அளிக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் மீதான உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவை யின் 191 (b) விதியின் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே நான் இந்த திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

Add at the end,—

'And on such consideration, the matter of privilege against the Hon. Member Thiru T. Martin be recommitted to the Committee in regard to the finding that it must be construed that the Member thereby intended to cast a reflection of partiality on the Speaker in case he failed to hold so and hence, has committed breach of privilege'.

திரு. பி. ஜி. கருத்திருமன் : I second it.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை மறுமுறையும் உரிமைக் குழுவிற்கு புனர்பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும், அது ஆய்ந்து மறுமுறையும் ஒரு முடிவு செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் இந்தத் திருத்தத்தை இந்த அவை முன் வைத்திருக்கிறேன். குறிப்பாக, மெம்பர்களுடைய உரிமைகள் என்று சொன்னால் அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்த அவையைச் சார்ந்தது. அதிலும், குறிப்பாக, மேற் கோள்கள் சொல்கிறபோது அதில் ஒருவேளை சற்று கருத்து வேற்றுமை தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டாலும் அதைப் பற்றி ஆழ்ந்து ஆய்வு செய்து பரிசிலனை செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்த மன்றத்தைச் சார்ந்தது என்பதை நான் மறுமுறையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இரண்டு பத்திரிகைகளில் வந்த செய்தியின் அடிப்படையில் இந்த உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டது.

இந்த உரிமைப் பிரச்னையைப் பற்றி தெளிவுகள் சேகரித்து அதற்குப் பிற்பாடு இந்த அறிக்கையைத் தலைவர் அவர்கள் இந்த அவை யின் முன் வைத்திருக்கிறார்கள். நான் இந்த அவையில் வைக்கப்பட் டிருக்கிற அறிக்கையில் உள்ள இரண்டொரு கருத்துக்களை மட்டும் இந்த அவை மறுமுறை பரிசிலிக்கவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, முதலில் இந்த அறிக்கையில் கூறியிருக்கிற இந்தப் பகுதியை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"The Committee after careful consideration decided that in the context of the form and the manner in which the Member raised the matter of privilege and persisted that the passage published in 'Navasakthi' was the same as published in 'Murasoli' though in the former the significant word 'போன்றவர்கள்' was omitted and inasmuch as the Member repeatedly maintained that as it was already held by the Speaker that a *prima facie* breach of privilege existed in 'Navasakthi' case, it must necessarily be held that a *prima facie* case of breach of privilege existed in the 'Murasoli' case also, it must be construed that the member thereby intended to cast reflection of partiality on the Speaker in case he failed to hold so and hence has committed breach of privilege'.

என்று சொல்லியிருக்கிறது. உள்நோக்கம் கற்பிக்கக்கூடிய அளவிலோ அல்லது பட்சபாதமாக தலைவர் அவர்கள் நடந்து கொண்டார்கள் என்று அர்த்தம் தொனிக்கக் கூடிய அளவிலோ அந்த வார்த்தைகள் அமைந்திருக்கின்றன என்ற காரணத்தினால் உரிமைக் குழுவின் கவனத்திற்காக இதைக் கொண்டு வந்து இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த மாதிரியான மேற் கோள்களைச் சொல்கிறபோது "ப்ரீசிடன்ட்" என்ற முறையில் சொல் வதுதான் வழக்கம். சாதாரணமாக கோர்ட்டில் கேஸ் நடக்கிற போது நாங்கள் "கேஸ் லா" வை "ஸைட்" செய்யும்போது

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1970 ஆகஸ்ட் 31

மதருஸ் ஹைக்கோர்ட்டில் இம்மாதிரி தீர்ப்பு வழங்கப் பெற்றிருக்கிறது, கல்கத்தா ஹைக்கோர்ட்டில் இந்த மாதிரி தீர்ப்பு வழங்கப் பெற்றிருக்கிறது, ஏனைய ஹைக்கோர்ட்களில் இந்த மாதிரி தீர்ப்புகள் வழங்கப் பெற்றிருக்கின்றன என்று மேற்கோள்களை எடுத்துச் சொல்லி கேஸ்கள் வாதாடுவது வழக்கமாக இருக்கிறது.

அதே முறையில்தான் நமது உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் இதுமாதிரி இரண்டு பத்திரிகைகளில் வந்திருக்கின்றன, கருத்து வேற்றுமை அதிகமாக இல்லை, 'போன்றவர்கள்' என்ற ஒரு வார்த்தை இருந்ததால் இரண்டுக்கும் அர்த்தம் வேறு வேறாக இருக்கமுடியாது என்று அவர்கள் கூறி சாட்சியம் கொடுத்திருக் கிறார்கள். இந்த ரிப்போர்டின் 19-வது பக்கத்தில் தந்திருக்கிறார்கள். அவர்கள் கூறியுள்ள அம்சங்களை எல்லாம் நான் இங்கு எடுத்துக் கூறி இந்த அவையின் நீண்ட காலத்தை எடுக்கவேண்டுமென்று நினைக்கவில்லை.

ஆனால், குறிப்பாக ஒன்றிரண்டு பகுதிகளை மட்டும் நான் இந்த அவையின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பக்கம் 22-ல் திரு. மார்டின் அவர்கள் கொடுத்துள்ள விளக்கத்தை நான் இந்த அவையின் முன் மறுமுறையும் உங்கள் ஆழ்ந்த பரிசீலனைக்காக வைக்கிறேன்.

"I do not accept the difference in the two passages because in my submission, both connote the same or similar meaning.

அவர்களுடைய கருத்தின்படி "ஆர் ஸிமிலர்" என்ற அர்த்தம் தான் இருக்கிறது என்ற கருத்தை மறுமுறையும் அங்கு எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதற்கடுத்தாற்போல் திரு. மார்டின் அவர்கள் தொடர்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

"I quoted the Speaker's ruling as a precedent in support of my motion. I quoted the ruling given by the Speaker in the 'Navasakthi' case as a precedent in support of my case. As I do as a lawyer in helping the Court to arrive at a conclusion, I cited a ruling given by the Speaker regarding the 'Navasakthi' case to help the Hon. Speaker as a Judg eto come to a conclusion."

இந்தமாதிரியான அவர்களது சாட்சியங்கள் எல்லாவற்றையும் முழுமையாகப் படித்துப் பார்க்கிறபோது, அவர்கள் சபாநாயகர் அவர்கள் மீது எந்தவிதமான களங்கமோ அல்லது மாசோ கற்பிக்கக் கூடிய அளவில் எதுவும் சொல்லவில்லை என்பது புலனாகும், ருசுவாகும் என்று நான் வாதாடுவதற்கு முற்படுகிறேன்.

குறிப்பாக இந்த மாதிரியான காரியங்கள் வருகிறபோது பெருந் தன்மையோடு இருக்கவேண்டியது இந்த அவையின் கடமை. ஒரு வேளை ஆத்திரத்தில் ஒரு நபர் சற்று சூடான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டிய ஒரு சூழ்நிலை அல்லது சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டாலும் அதை நாம் மன்னித்துவிடவேண்டிய கடமையும் பொறுப்பும் இந்த அவையைச் சார்ந்திருக்கிறது. ஆனால் இந்த ரிப்போர்ட்டில் 'டிஸப்ரூவல்' கண்டிப்பாக தெரிவிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இன்று ஒரு வேளை திரு. மார்டின் அவர்கள் இந்த அவை முன் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டா



1970 ஆகஸ்ட் 31] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

லும் நாளையதினம் ஏனைய உறுப்பினர்களையும் இந்த மாதிரியான ஒரு இக்கட்டான சந்தர்ப்பத்தில் இழுத்து விடுவதற்கு உள்ள எல்லா வாய்ப்புகளும் ஏற்பட்டு விடும்.

ஆகவே, இந்த மாதிரியான காரியங்களில் நாம் விவேகத்துடன் இருக்கவேண்டும். அதுவும் இந்த மாதிரியான ஒரு பெரிய அவை, தமிழ்நாட்டுப் பேரவை என்று சொன்னால், தமிழ் நாட்டு சட்டப் பேரவை என்று சொன்னால், அது மரபுகளுக்கெல்லாம், சம்பிரதாயங் களுக்கு எல்லாம் பெயர் பெற்றது என்று வெளியில் பிரசாரம் செய் கிறோம். எனவே, இக்காரியத்தை நாம் மிகைப்படுத்தாமல் இதை மறுமுறையும் உரிமைக் குழுவிற்கு புனர்பரிசீலனை செய்வதற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வழக்கறிஞர் என்ற முறையில், அதிலும் திறமைபடைத்த ஒருவராக இருக்கிற திரு. மார்டின் அவர்கள் உள்நோக்கம் கற்பிப்பதற்கு எந்த வித காரணமும் இருக்கமுடியாது, அது எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருந்தாலும் அப்படி இப்போது சொல்லலாம் என்று வாதாடக் கூடியவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் இம்மாதிரியான சந்தர்ப் பத்தில் அவசியம் மறுமுறை இதைப் பரிசீலிக்கவேண்டும். இந்த மாதிரியான திடீர் முடிவிற்கு, அதிலும் குறிப்பாக இந்த மாதிரி ஒரு ப்ரீஸிடன்ட் சொல்கிறபோது அதில் சற்று வேறுபாடு இருந்தாலும் அதற்கு உள்நோக்கம் கற்பிக்காமல் இதை இந்த அளவில் மறு முறையும் உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, before I just start explaining my stand regarding this problem, I would request the Hon. Chief Minister and all members of this House to view this not as a party issue. This is absolutely an issue wherein a Member of the House is involved. It does not matter whether that Member belongs to my party or the Congress Party or the D.M.K. party. Members' rights are involved. Therefore I humbly request with all the pursuasiveness at my command to view the wholething objectively. There are two or three points which I want to commend to the House.

I have perused the entire report. The hon. Member Thiru Martin had been maintaining the same point of view right from the very beginning to the end. Not even the words like 'I regret', 'I am sorry' are there. Nothing like that has been said anywhere by him. He has not said anything like 'I have no ill feeling against the Speaker. I am sorry for what had happened'. Such a note of regret is nowhere to be found. He has been maintaining as stand throughout as correct. The Committee however has said in its last paragraph thus:

"However, in view of the fact that the Member had repeatedly said that his intention was only to cite a previous ruling of the Speaker in support of his case, the Committee takes a lenient view of the matter and recommends to the House that the House may record its disapproval of the conduct of the Member, Thiru T. Martin and close the case."

In other words, the Committee takes a lenient attitude not in the light of any fresh facts or fresh acceptance of the hon. Member but on the same facts placed before the Committee. On the same facts, the Committee had arrived at a different conclusion from that of the Hon. Speaker. That means that different conclusions have been arrived at by the Hon. Speaker and the Committee on the same set of facts. The Committee has come to a lenient conclusion but the Hon. Speaker has not taken up the attitude which is as lenient as that of the Committee. That is the point which I would like to stress before the House.

The second point is that the Hon. Speaker began his observations as follows :—

"As the hon. the Member has moved it in English, I would give my ruling on it in English—Now I would read what is stated on page 135 of May's Parliamentary Practice. It runs as follows :—

'When complaint is made of something published in a newspaper or book, a copy of the newspaper or book, and when complaint is made of a letter sent to a Member the original of the letter said to have been written, must be delivered in at the table by the Member. . .'

No such copy has been delivered and that will be enough to refuse my consent for moving this motion."

In other words, the Hon. Speaker himself accepted that a copy of 'Murasoli' has not been placed in his hands. As the copy had not been placed in his hands, the Hon. Speaker had come to the conclusion namely—

'That will be enough to refuse my consent for moving this motion'.

Then the hon. Member, Thiru Martin rose and said—

'Sir, on a point of personal explanation' unfortunately he was not allowed to speech. Sir, a chance could have been given to him. Such a thing might happen tomorrow and it might happen to the Ruling Party when they have to sit in the Opposition. It is a question of fundamental right of a member and the hon. Member Thiru Martin could have been allowed to say what he wanted to say by way of personal explanation. If the Hon. Speaker had taken a lenient view and had allowed the hon. Member to speak, there would have been no problem and I would have sided the Hon. Speaker even if he had taken up a worse position later. Subsequently—the most important point—the Hon. Speaker said—

'No point of personal explanation now. I am giving my ruling and that comes afterwards'.



How can 'that' come afterwards? After giving a chance to him to give his explanation, the Hon. Speaker could have given the ruling. But he had already formed an opinion and had practically come to a decision. Further, he says—

'In either case it is wrong and I hold that a *prima facie* case of breach of privilege of this House had been made by the hon. Member, Thiru Martin in making this allegation.

The most important point is that the Hon. Speaker should have been so sensitive in respect of this matter. He should not have prevented the hon. Member from explaining his stand. If he had given a chance to him, the hon. Speaker himself would have come to the conclusion that what had appeared in 'Murasoli' and 'Navasakthi' were more or less the same and therefore there was no breach of privilege and the matter could have been closed. There is a sense of feeling percolating here that the hon. Speaker was hyper-sensitive in this case. Of course the hon. Speaker and the Hon. Ministers could be sensitive but not hyper-sensitive.

Now the point is whether the hon. Member Thiru Martin has accused the Chair that he had taken up a partial attitude. If he had stated so, definitely I would not have sided him and would have asked the Chair to refer the matter to the Committee of Privileges. Sir, our Assembly is one of the best Assemblies and a model Assembly in the whole of India and we should not set up a bad precedent. Even if the hon. Member had raised a matter of privilege against the Chair, it would have been a different theory. He only requested the Chair to take up an impartial attitude in regard to this matter. My only plea is that the rights of the Members should be safeguarded and that is my humble view. Having spent a good part of my life in both the Houses of the Legislature, I felt that I should say what I wanted to say and I have said it. Thank you, Sir.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் பொன்னப்ப நாடார் கொண்டு வந்த திருத்தத்தை ஆதரிக்கும்படியான வகையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அதாவது, "நவசக்தி" யில் வந்து இருக்கிறதுதான், "முரசொலி" யில் வந்து இருக்கிறது என்று திரு. மார்டின் அவர்கள் உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார்கள். சரியாக ஞாபகம் இல்லை. அந்த இரண்டு பத்திரிகைகளில் வெளியான செய்திகளில் இருந்த வித்தியாசம் 'போன்றவர்கள்' என்ற ஒரு வார்த்தைதான் என்று வாதிக்கப்பட்ட உடனே அன்று இருந்த சபாநாயகர் "சுலோ மோடா" தன்னுடைய தனிப்பட்ட உரிமையை வைத்து உரிமைக்குழுவிற்கு அனுப்பிவிட்டார்கள். சபாநாயகருக்கு அந்த உரிமை இருக்கிறது. அன்று இருந்த சபாநாயகர்.

" He has held that there is a *prima facie case* "

சபாநாயகர் கொடுத்து இருக்கிற உரிமை மீறல் தீர்ப்பை எதிர்க்கக்கூடாது. அவர்களுக்கு அவமானம் இழைக்கக் கூடாது. நம்பிக்கை இல்லாத தீர்மானத்தின் மூலம்தான் செய்ய வேண்டுமென்று விதியில் இருக்கிறது. சபாநாயகர் அவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்று திரு. மார்டின் என்றும் நினைக்க மாட்டார். அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்ல மாட்டார். சபாநாயகராக இருக்கும் யாரானாலும் சரி, ‘தவறு இல்லை, ஏதோ சொல்லி விட்டார்’ என்று முதலிலேயே ‘பிரிவிலேஜ் மோஷன்’ இல்லை என்று தள்ளி இருக்கலாம். அதற்குப் பதிலாக ஏதோ பெரிய தவறு செய்துவிட்டார்கள் என்று “சுலோ மோடோ” வாக பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பிவிட்டார்கள். தமிழ்நாடு சட்டசபையை கண்ணியமாக நடத்துகிறோம். நியாயமாக நடத்துகிறோம் என்று சொல்கிறோம். அதற்கு உறுதுணையாக இருக்கிறோம். எவ்வளவு நாள் ஆகிவிட்டது அதை இப்படியே விட்டுவிட வேண்டாமா?

திரு. மார்டின் அவர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு அங்கத்தினருக்கான உரிமையும் பாதிக்கப்படுகிறது. அது ஆளும் கட்சியாக இருந்தாலும சரி, அது எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஒரு விஷயத்தை இன்ன இடத்திலிருந்து இதைச் சொன்னார்கள், இது மாதிரி சொல்லி இருக்கிறார்கள் சிலர் என்று சொல்லி இருக்கிறார்கள். ‘Exact’ எழுத்துக்கு எழுத்து பார்ப்பதா? ‘போன்றவர்கள்’ என்ற ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு அதற்கு எதிர் வாதமோ, பிரதிவாதமோபோடுவது இல்லை. முன்னாலே இருக்கும் நடைமுறைகளையும், அங்கத்தினர்கள் உரிமையையும் பாதிக்கும் வகையில் ஒரு அங்கத்தினருக்கு ஏற்படும் சிறு அவமானம், எல்லா அங்கத்தினருக்கும், ஏன் அமைச்சர்களுக்கும் இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, இதில் இருக்கும்படியான பிரச்னையை அவரும் சொல்லி இருக்கிறார், அதுவும் quote’ செய்யப்பட்டு இருக்கிறது. he never alleged சபாநாயகர் மீது எந்த விதமான தவறும் சொல்லும் நிலையில் இல்லை என்று கூறி, திரு. பொன்னப்ப நாடார் கொண்டு வந்த, மீண்டும் உரிமைக்குழுவிற்கு அனுப்பி பரிசீலனை செய்ய வேண்டும் என்ற திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, இப்போது இங்கே சட்டப்பேரவைக்கு முன்னால் இருக்கிற உரிமைக்குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொள்வதற்காக இருக்கக்கூடிய இந்தப் பிரச்னையில் என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் மீது கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய உரிமைப் பிரச்னையும், அதைத் தொடர்ந்து ஏற்பட்டு இருக்கும் பரிந்துரையும், அது சம்பந்தப்பட்ட தஸ்தா, வேஜுகளையும் மிகவும் கவனமாக படித்தபிறகும் இந்த உரிமைப் பிரச்னை குறித்து, அந்தக் குழு கொண்டு வந்து இருக்கக்கூடிய அந்த பரிந்துரையானது சரியானது அல்ல என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.





காரணம் என்ன என்றால், அந்த அவை உரிமைப் பிரச்னை ஏற்படுவதற்கான அடிப்படை அன்று இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதாக சொல்லப்பட்டக் கருத்து இரண்டு பத்திரிகைகளில் வெளிவந்தன. திரு. மார்டின் அவர்கள் இங்கே எழுப்பிய உரிமைப் பிரச்னையானது ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் வந்த கருத்தைப் போலவே மற்றொரு பத்திரிகையிலும் கருத்து வெளியிடப்பட்டு இருக்கிறது: முதலிலே வந்த பத்திரிகை பற்றி ஒரு அவை உரிமைப் பிரச்னை மாண்புமிகு சபாநாயகர் ஏற்றுக்கொண்டு இருக்கும்போது, அதே போன்று ஒரு செய்தி மற்றொரு பத்திரிகையில் வந்து இருக்கிறது. அதன் மீதும் உரிமைப் பிரச்னை இருக்கிறது என்று அறிவித்து எழுத்து மூலமாக, அறிக்கை மூலமாக சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இப்பொழுது சர்ச்சையில் இருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால், “நவசக்தி” பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய வாக்கியங்கள் பின்வருமாறு :

“காங்கிரஸ் என்றால் காமராஜோ, பக்தவத்சலமோ, கருத்திருமனோ அவர்கள் பேச்சைத்தான் நான் பொருட்படுத்துவேன். மற்ற பேச்சுக்களை காங்கிரஸை வைத்துப் பிழைக்கும் பேச்சாகவே கருதுகிறேன்.”

இது தான் நவசக்தியில் வந்த வார்த்தைகள். இந்த வார்த்தைகள் முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தை வேண்டுமென்றே திருத்தி கூறுவதாகக் கருதப்பட்டு அவை உரிமைப் பிரச்னையாக மாண்புமிகு சபாநாயகர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரு. மார்டின் அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்னை என்னவென்றால், முரசொலிப் பத்திரிகையில் வந்துள்ள கீழ்க்கண்ட வாசகங்களை எடுத்துக்காட்டி உரிமை பிரச்னை எழுப்பினார்.

“காங்கிரஸ் என்றால் நான் காமராஜர், கருத்திருமன், பக்தவத்சலம் போன்றவர்களையே பார்க்கிறேன், மற்ற பேச்சுக்களையெல்லாம் காங்கிரஸை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்களது பேச்சாகவே கருதுகிறேன்.”

ஆகவே தான் மத்திய கருத்தில் இந்த இரண்டு கருத்துகளும் ஒன்றுதான் என்று அவர்கள் உரிமைக் குழுவில் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது என்ன சொல்லப்படுகிறதென்றால், ‘போன்றவர்களையே’ என்று சொல்லப்பட்டிருக்கக்கூடிய வார்த்தையானது பெரிய அடிப்படை வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே கருத்தில் பெரு வித்தியாசம் ஏற்படுகிறதென்று சொல்லப்படுகிறது. நாம் எதார்த்தமாக அடிப்படையில் பார்க்கும்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கக்கூடிய வாதத்தில் ‘போன்றவர்கள்’ என்று சொல்லும்பொழுது, இது யாருக்குப் பொருந்தும் என்றால், மூன்று பேர்களைக் குறிப்பிட்டு, அவர்களைப் போன்றவர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே பார்த்தால் ஒரு சிலரை வைத்து அந்த வரிசையில் எண்ணத்தக்கவர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மாநிலத்தில் காங்கிரஸ்காரர்களால் பேசப்படுவதெல்லாம், அந்த மூன்று, நான்கு பேர்களைப் போன்றவர்கள் பேசுவதைத் தவிர மற்றவர்கள் பேசுவதைத் தகுதி வாய்ந்ததாக அவர்

கருதவில்லை என்று யாரும் அதை விமர்சிக்கக்கூடிய நேரத்தில் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, இதில் அடிப்படையில் வித்தியாசம் இருப்பதாகக் கருதக் கூடாது. "போன்றவர்கள்" என்று சொல்லக்கூடிய வார்த்தையினுல், மேலும் சிலரை ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

இன்னென்றையும் நான் கூறிக்கொள்கிறேன். நவசக்தியில் வந்ததைக் காட்டிலும் முரசொலியில் வந்தது காங்கிரஸைப்பற்றிய முதல் அமைச்சர் கருத்தை இன்னும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறது என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. நவசக்தியில் வந்திருப்பது "மற்ற பேச்சுக்களை காங்கிரஸை வைத்துப் பிழைக்கும் பேச்சாகவே கருதுகிறேன்" என்பது. ஆனுல், முரசொலியில் வந்திருப்பது மற்ற பேச்சுக்களையெல்லாம் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் காங்கிரஸை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்களது பேச்சாக முதல் அமைச்சர் கருதுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முரசொலிப் பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய செய்தி, அந்தத் தரத்தில் எண்ணக்கூடியவர்கள் யார், மற்றவர்கள் யார் என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் எடுத்துக் கூறுகிறது. 'போன்றவர்களையே பார்க்கிறேன், மற்ற பேச்சுக்களையெல்லாம் காங்கிரஸை வைத்து பிழைப்பு நடத்துகிற பேச்சாகக் கருதுகிறேன்' என்று முரசொலியில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு விதத்தில் முரசொலியில் வந்திருக்கக்கூடிய வாக்கியங்கள் மேலும் வன்மையாகத் தாக்குகின்றன என்பதை மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட ஒரு நேரத்தில் இந்த உரிமைப் பிரச்னை எதற்காகக் கொண்டுவரப்பட்டது என்ருல், முன்னதாக சபாநாயகர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு செய்தியைப் பற்றி ஒரு உரிமைப் பிரச்னையை ஏற்றுக் கொண்டிருக்கிருர், அதைப்போன்ற ஒரு பிரச்னையைத்தான் கொண்டுவருகிறேன் என்று திரு. மார்டின் அவர்கள் கொண்டு வந்தார். நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய பிரச்னை என்னுடைய கருத்துக்கு ஒத்ததாக இல்லை, அடிப்படையில் இரண்டிற்கும் கருத்து வேற்றுமை இருக்கிறது, ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன்' என்று சபாநாயகர் அவர்கள் சொல்லியிருக்கலாம், பிரச்னை அத்தோடு முடிந்து போயிருக்கும். அல்லது, நான் இரண்டு பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளையும் பரிசீலனை செய்ததற்குப் பிறகு, இரண்டிற்கும் அடிப்படையில் கருத்து வேற்றுமை இருக்கிறது, ஆகவே, இதில் எந்தவிதமான "உரிமைப் பிரச்னையும் எழவில்லை" என்று சொல்லியிருக்கலாம்.

சபையில் விவாதத்திலே கூட மாண்புமிகு முதல் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்பொழுது, ஒருவர் நீங்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு இப்படிச் சொன்னீர்கள், என்று சொன்னவுடனேயே, சில சமயங்களில் 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று மறுக்கப்படுகிறது. பிறகு, இது ஏதோ அரசியல் வாதம் என்று சொல்லி, அந்தச் சர்ச்சை அத்தோடு விடப்படுகிறது. அதே மாதிரிதான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சபாநாயகர் அவர்களுக்கும் இடையே ஏற்படுகிற விவாதத்தில், சபாநாயகர்



அவர்களிடத்தில் நீங்கள் இம்மாதிரித் தீர்ப்புக்கொடுத்திருக்கிறீர்கள்? என்று சொல்கிருேம், தவருகவோ, சரியாகவோ, ஞாபகத்தை வைத்துக்கொண்டு சொல்கிருேம். உடனே, சபாநாயகர் "நான் அவ்வாறு தீர்ப்புக் கொடுக்கவில்லை; நான் கொடுத்த தீர்ப்பு வேறு விதத்தில் இருக்கிறது, இம்மாதிரி இல்லை' என்று தெரிவிக்கிருர். அத்தோடு பிரச்னை முடிந்துவிடுகிறது.

யார் படித்துப் பார்த்தாலும் சரி, இந்த இரண்டு பத்திரிகைகளிலே வந்திருக்கக்கூடிய செய்தியில் அடிப்படை கருத்து வேறுபாடு கிடையாது என்பது தெளிவாகத் தெரியும். இந்தக் குழுவின் அறிக்கையில் ஒரு விநோதமான பதில் சொல்லியிருக்கிருர்கள். கோர்ட்டுகளில் வழக்குகளை வாதாடும்பொழுது, வக்கீல்கள் கேஸ் லாக்களை 'கோட்' செய்வது வழக்கம். அந்த ஜட்ஜோ, வேறு ஜட்ஜோ, அல்லது வேறு ஒரு ஹைக்கோர்ட்டோ இவ்வாறு தீர்ப்புக் கொடுத்திருக்கிருர்கள் என்று தங்கள் தங்கள் வாதங்களை பலப்படுத்துவதற்காக ஒரே மாதிரியாக உள்ள ரூலிங்களை ஜட்ஜுகளுக்கு முன்னுல் வக்கீல்கள் மேற்கோள் காட்டுவார்கள். ஜட்ஜுகளும் இந்த மேற்கோள்களைப் படித்திருக்கக்கூடிய காரணத்தினுல், மேலெழுந்த வாரியாகப் பார்ப்பதற்கு இரண்டு ரூலிங்களும் ஒன்ருக இருந்தாலும் வேறு வேறு சில முக்கியமான அம்சங்களில் நீங்கள் மேற்கோள் காட்டி இருக்கக்கூடிய தீர்ப்பு மாறுபட்டிருக்கிறது. அது இந்த வழக்கிற்குப் பொருந்தாது. ஆகவே அந்த மேற்கோளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன் என்று சொல்லிவிடுவார். ஆனுல், இந்த ரூலிங்கையே ஏன் கோட் செய்தீர்கள். அதை ஃபோனுபைடியாகச் செய்யவில்லை, மாலாபைடியாகச் செய்திருக்கிறீர்கள். அதில் நோக்கம் இருக்கிறது என்று சொல்லி, கோர்ட்டை அவமதித்ததாக அவர் பெயரில் வழக்குத் தொடருவதில்லை. கோர்ட்டில் வழக்குகளுக்குச் சாதகமாக மேற்கொள்களைக் காட்டுகிருர்கள் வக்கீல்கள். வக்கீல் சொல்லக்கூடிய வாதத்தை ஆராய்ச்சி செய்து, அந்த மேற்கோள் பொருந்தவில்லை என்ருல், அந்த ரூலிங் இதற்குப் பொருந்தாது, அது வேறு, இது வேறு என்று ஏற்காததற்குக் காரணத்தைக் காட்டித் தீர்ப்புக் கூறிவிடுவார்களே தவிர, மேற்கோள் காட்டியதே தவறு, அது கோர்ட்டை அவமதிப்பதற்குச் சமமாகும் என்று சொல்வதில்லை.

அதைப்போல சபாநாயகர் அவர்களிடம் ஒரு மெம்பர் முன்னுல் சொல்லப்பட்ட ரூலிங்கை கோட் செய்தால், அது வேறு, இது வேறு இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது, ஆகவே நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை என்று சாபாநாயகர் அவர்கள் சொல்லிவிட்டால், அதோடு பிரச்னை தீர்ந்துவிடுகிறது.

நான் இன்னென்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முறையில் நாம் இந்தப் பிரச்னையை அணுகினுல், சட்டமன்றத்தில், இம்மாதிரி ஆயிரக்கணக்கான உரிமைப் பிரச்னைகள் ஏற்படுமோ என்று நான் அஞ்சுகிறேன். இப்படிப் பேச்சு வார்த்தைகள், விவாதங்கள் எழும்பொழுது, இடையே ஏதோ ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதில் நோக்கம் இருக்கிறது என்று உரிமைப் பிரச்னை எழுப்பினுல், எவ்வாறு விஷயங்களை இங்கே விவாதிக்க முடியும்?

[திரு. என். சங்கரய்யா] [1970 ஆகஸ்ட் 31

ஆகவே, இந்த அம்சங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு, திரு. மார்டின் அவர்கள் பேரில் உள்ள உரிமைப் பிரச்னையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது ஒரு வேளை சாத்தியப்படாவிட்டால், சட்டமன்றத்தில் இப்பொழுது பேசப் பட்ட கருத்தின் அடிப்படையில் உரிமைக் குழுவே இந்த விஷயத்தை மீண்டும் புதிய கண்ணோட்டத்தோடு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: சபையின் முன்னால் விவாதத்தில் இருக்கிற இந்த உரிமைப் பிரச்னையைப் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்த உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும், இதைத் திரும்பவும் மறு பரிசீலனைக்கு உரிமைக் குழுவிற்கு அனுப்புவது அவசியம் என்பது என்னுடைய கருத்து. அவசியம் மட்டுமல்ல, நியாயமானது என்றும் கருதுகிறேன். மதிப்பிற்குரிய நண்பர் திரு. மார்டின் அவர்கள் முன்னால் கொடுக்கப்பட்ட ஒரு தீர்ப்பை, நவசக்தி பத்திரிகையின் மீது அளிக்கப்பட்ட தீர்ப்பை, அந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்ற தீர்ப்பை மேற்கோளாகக் காட்டி, முரசொலிப் பத்திரிகையில் வந்த வாசகங்களை வைத்து, அதையும் உரிமைப் பிரச்னையாக அனுமதிக்க வேண்டும் என்று கேட்டார்கள். நவசக்தி பத்திரிகை விஷயத்தில் கொடுத்த தீர்ப்பை மேற்கோளாகக் காட்டுவது சரியா, தப்பா என்ற பிரச்னையைப் பற்றி இங்கே விவாதிக்கவில்லை. முன்னால் இருந்த ஒரு தீர்ப்பை பின்னால் இருக்கக்கூடிய ஒரு கேசுக்காக மேற் கோளாக எடுத்துக் காட்டுவது வழக்கம் என்பதில் எந்த மாறுபட்ட கருத்தும் இருக்கும் என்று நான் கருதவில்லை. ஆனால், இந்த இரண்டு பத்திரிகைகளிலும் வந்த செய்திகளை வைத்துக்கொண்டு, அவை இரண்டும் ஒன்றா, இல்லையா என்ற நிலையில் திரு. மார்டின் அவர்கள் உரிமைப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். 'போன்றவர்கள்' என்ற ஒரு வார்த்தை இல்லாத காரணத்தினால் கொண்டு வந்த உரிமைப் பிரச்னை தவறானது என்று சொல்லாம். ஆனால், அப்படிக் கொண்டு வந்ததே தவறு என்று அதன் மேல் உரிமைப் பிரச்னை எழுப்புவது என்பதைப் பார்க்கிற பொழுது, அது சரியானது என்று கருத முடியாது. ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பும்பொழுது, போன்றவர்கள் என்று இருப்பதினால் அது தான் சரி, இது சரியில்லை என்று சொல்வதற்கு சபாநாயகர் அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இரண்டும் ஒரே அர்த்தத்தைத் தான் கொடுக்கிறது என்று கூறுவதற்கு திரு. மார்டின் அவர்களுக்கு உரிமை உண்டு. திரு. மார்டின் அவர்கள் நவசக்தியில் கூறப்பட் டிருக்கிற கருத்துதான் முரசொலி பத்திரிகையிலும் வந்திருக்கிற கருத்து, அதே கருத்தைத்தான் முரசொலிப் பத்திரிகையும் பிரதிபலிக் கிறது என்று கூறுகிறார். அதைச் சபாநாயகர் ஏற்றுக் கொள்ளலாம், அல்லது தள்ளிவிடலாம். ஆனால், உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வந்தது மறுபடியும் பரிசீலனை செய்யக் கூடிய ஒன்று. ஆகையினால் ஒரு கருத்துக்கு இரண்டு பொருள்களைக் கொள்ளலாம். சபையில்



[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இருக்கிறவர்கள் பலரும் பல கருத்துக்களைக் கொண்டுள்ளவர்கள். திரு. மார்டின் அவர்கள் அப்படி தனக்கென்று ஒரு கருத்தைக் கொள்ள உரிமை உள்ளவர். ஆகவே, அதற்கு மாறாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நான் கருதுவதால், இந்தப் பிரச்னையை புனர் பரிசீலனை செய்ய, திரும்ப அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழு ஆராய்ந்து வெளியிட்டுள்ள ஒரு முடிவினை, மீண்டும் சட்டமன்றத்திலே விவாதிக்கலாம், அதற்குத் திருத்தங்கள் கொடுக் கலாம் என்று விதி இடம் கொடுத்தாலும், இதே மன்றத்திலே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், நண்பர் கருத்திருமன் அவர்கள் அப்படி விவாதிப்பதும், திருத்தம் கொடுப்பதும் மரபில்லை என்றும் குறிப்பிட்டு இருப்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த விவகாரம் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச் சராக இருந்த நேரத்தில், அவருடைய உரையின் இடையில் காங்கிரஸ் கட்சியைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில், "காமராஜர் பக்தவத்சலம், கருத்திருமன் போன்றவர்களையே நான் காங்கிரஸ் என்று கருதுகிறேன்' என்று குறிப்பிட்டதை வெளியிட்டுள்ள வாசகங்களின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும். 'போன்றவர்கள்" என்ற வார்த்தையை விட்டுவிட்டு, அவர்களைத்தான் நான் பொருட் படுத்துகிறேன், மற்றவர்கள் தேவையில்லாதவர்கள், மற்றவர்கள் பேச்செல்லாம் வெறும் பிழைப்புக்கான பேச்சு என்று அண்ணா குறிப்பிட்டது போல, நவசக்தியில் செய்தி வெளியிடப் பட்டிருந்தது. அந்தச் செய்தியினை ஒட்டி உரிமைப் பிரச்னை எழுந்தது, 'போன்றவர்கள்' என்கிற வார்த்தை, பெரிய வித்தியாசத்திற்கு உரியது அல்ல என்று இப்பொழுது திறமை வாய்ந்த வழக்கறிஞர், நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், நம்முடைய இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. சங்கரய்யா அவர்களும், பி.எஸ்.பி. கட்சித் தலைவர் அவர்களும் வாதாடுவது விந்தையாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: என்னுடைய கருத்து, 'போன்றவர்கள்' என்பது சரியா, தவறா என்பதல்ல. இரண்டும் ஒன்று என்ற பொருள் கொள்வதற்கு திரு. மார்டினுக்கு உரிமை உண்டு என்பதுதான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லோருக்கும் எல்லா உரிமையும் உண்டு. ஏற்றுக்கொள்பவர்களுக்கும், ஏற்றுக்கொள்வதா இல்லையா என்கிற உரிமையும் இருக்கிறது. அந்த வாசகம் தவறாகப் பிரசுரிக்கப்பட்டது என்பதற்கு, நவசக்தி பத்திரிகையே உடனடியாக மன்னிப்புக் கடிதம் எழுதியிருக்கிறது.

"மேற்படி பகுதிகளில் சட்டசபையையோ, முதலமைச் சரையோ அவமதிக்கும் நோக்கத்துடனோ, வேண்டுமென்றோ எதும்

பிரசுரிக்கப்படவில்லை. கவனக் குறைவு காரணமாகச் சில கருத்துக்கள் தவறாகப் பிரசுரிக்கப் பட்டதற்கு வருந்துகிறோம். அதற்காக மன்னிப்புக் கோருகிறோம்.

தங்கள் அன்புள்ள,

மு. தனுஷ்கோடி, பிரசுரகர்த்தா."

என்று பிரசுரகர்த்தாவே மன்னிப்புக் கடிதம் எழுதியிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பயப்பட வேண்டாம், பிரசுரகர்த்தா எழுதியிருக்கிறார். "போன்றவர்களுக்கு" என்பதன் வித்தியாசத்தை உணர்ந்ததால்தான் அந்த பிரசுரகர்த்தாவே மன்னிப்புக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்களே ஒத்துக் கொண்ட பிறகு, நவசக்தியில் வந்ததும், முரசொலியில் வந்ததும் ஒன்றுதான் என்கிற வாதம் உடைபட்டுப் போகிறது.

பொதுவாக, இதிலே என்ன தீர்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது? எந்த வகையில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது? எந்த நிலையில் உரிமைப் பிரச்னை என்று குழுவிற்கு விடப்பட்டது?

நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், திரு. மார்டின் அவர்களுக்கு எந்தவிதமான விளக்கங்கள் தருவதற்கும் இடம் தரப்படவில்லை என்று. உரிமைக் குழுவில், பல முறைகள் அவரிடத்தில் விளக்கம் கோரப் பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு முறையிலும், நான் இரண்டையும் ஒன்றாகத்தான் கருதுகிறேன், நவசக்தியில் வந்ததும், முரசொலியில் வந்ததையும் வேறுபடுத்திப் பார்க்க விரும்பவில்லை. இரண்டையும் ஒன்றாகவே கருதுகிறேன் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதல் அமைச்சர் மன்னிக்க வேண்டும். சபையிலே உடனேயே, அவருக்கு இடம் கொடுக்காமல், சபாநாயகர் 'ஸுவோ மோடோ' அனுப்புகிறேன் என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு ஒரு வருஷம், இரண்டு வருஷம் கழித்து, அவருக்கு இடம் கொடுக்கப்படுகிறது. உரிமைப் பிரச்னை என்று எழுந்தபோதே, விளக்கம் கொடுக்கச் சந்தர்ப்பம் கொடுக்கப் படாமல், "ஸுவோ மோடோ" அனுப்புகிறார்கள். அதைத்தான் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நவசக்தி, முரசொலி இரண்டில் ஒன்றில் சபாநாயகர் உரிமைப் பிரச்னையை ஏற்றுக்கொண்டார்கள். மற்றதை ஏற்றுக்கொள்ளவில்லை, இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில், உரிமைக் குழுவில் விவாதம் நடந்தபோது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்த ஏட்டில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

'The Hon. Thiru V. R. Nedunchezhiyan suggested that the member might either be asked to appear before the Committee and explain his inention or to write to the Committee what he had to say in the matter. The member might say that he had not intended to make any allegation against the Speaker. Such a procedure would facilitate the Committee to come to a conclusion in the matter after considering the reply of the member or hearing him in person.'





என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது, அந்தக் குழுவிலே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்

'Thiru P. G. Karuthiruman wanted some time to give his reaction to the above suggestion and said that the Commitee might adjourn at that stage and again meet after some time to take a final decision'

என்றும் வந்திருக்கிறது. அதற்குப் பிறகு முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. அந்த முடிவு எடுத்த குழுவின் தலைவராக திரு. எட்மண்ட் அவர்களும், உறுப்பினர்களாகிய மற்றவர்களும் இருந்திருக்கிறார்கள். அன்றைய தினம், திரு. ஆண்டி அலேயஸ் குருசாமி, திரு. ஆறுமுகம், திரு. கோபால், திரு. சி. கோவிந்தராஜன் (நெல்லிக் குப்பம்), திரு. ஜேம்ஸ், திரு. கருப்பையா, திரு. வடிவேலு, திரு. விநாயகம், திரு. சுரேந்தரன் ஆகியவர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் இருந்து ஏகமனதாக அந்த முடிவை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

The Committee took up for consideration the draft Report on the matter of privilege in regard to the wrong and untrue statement attributed to the Hon. Speaker by the hon. Member, Thiru T. Martin and unanimously approved the same. என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. நம்முடைய திரு. விநாயகம்

'On behalf of the Members of the Committee, Thiru K. Vinayakam thanked the Chairman for the kind words he spoke about the Members and complimented him for the excellent way in which he conducted the meetings of the Committee. He also thanked the Secretary and the Assistant Secretary, Legislative Assembly Department for their assistance in drafting the Report of the Committee.'

THIRU K. VINAYAKAM: Just a minute. Just before the close of the entire period of the Committee, this is a formal affair. That does not mean that I fully agree with what all the Committee had said. Can I say at the end of the term of the Committee Mr. Deputy Speaker, you have been very rude and you have not been very generous to us'? That is not the way. This, thanksgiving, is a formal matter. I thanked for having conducted the meetings. That does not mean I agree with every word of the Committee.

I thanked the Secretary. That was because of the laborious work put by him in drafting the report and feeding the Committee. There is nothing wrong in that. That does not mean I agree with the views of the Committee in its entirety.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர் அதில் மறுப்புத் தெரிவித்து குறிப்பு எதுவும் எழுதவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த விஷயத்திலே, மறுப்புக் குறிப்பு எழுதுவதில்

முந்திக் கொள்ளும் கம்யூனிஸ்ட் கட்சியும் எதுவும் எழுதவில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற, புதிய நிலை காரணமாக மறுப்பு எழுவதாக இருக்கலாம், மேலும், (திரு. சங்கரய்யா தன் இடத்தில் எழுந்தார்) Not yielding, No, Not yielding. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் சொல்லுங்கள்.

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலையால் என்று அவர்கள் அரசியல் காரணம் காட்டி குத்தலாகக் கூறுகிறார்கள். எந்த உறுப்பினருக்கும் பேச உரிமை இருக்கிறது. முதலிலே சொன்னார்கள், எதிர்க் கட்சித் தலைவர் இம்மாதிரியான அவை உரிமைக் குழுவின் அறிக்கைகளை மறுப்பது மரபு அல்ல என்றார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய சட்டப் பேரவையின் விதி 191 (ஸி)யில், Any member may give notice of amendment to the motion for consideration of the report. . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கூறிவிட்டு, நான் சொன்ன வார்த்தையில் என்ன ஒழுங்குத் தவறு என்று குறிப்பிடவில்லை. குழுவிலேயும் குறிப்பிடவில்லை......

திரு. என். சங்கரய்யா : குழுவிலே ஒரு விஷயத்தைக் குறிப்பிடா விட்டாலும், அப்பொழுது திரு. கோவிந்தராஜன் குறிப்பிடவில்லை என்றாலும், சபையிலே விவாதம் வரும்போது, எந்த உறுப்பினரும் அது பற்றிப் பேச உரிமை உண்டு. ஆகவே, இன்றைக்கு நான் ஏதோ தகாத காரியத்தைச் செய்துவிட்டது போல் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மரபு அப்படி இருக்கிறதென்பதை, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

திரு. என். சங்கரய்யா : "நான் பேசுவது முரண்பட்டதாக இருக்கிறது' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர் அப்படிக் கூறுவது சரியாக இல்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்லிவிட்டார் என்று எடுத்துச் சொல்லப் பட்டது. உங்களுக்கு வேண்டும்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்லிவிட்டார் என்று சொல்வது, தேவையில்லாமல் இருக்கும்போது அதைத் தள்ளிவிடுவது என்ற முறையை அனுஷ்டிக்கிறீர்கள். முன்னாள் முதலமைச்சர் ஆக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி மந்திரியாகவும் இருந்தார். அதைப் பற்றி நாங்கள் கேட்டபோது அதற்கு "கன்வீனியன்ஸ்" என்று சொல்லிவிட்டார்கள் காலம் போகிற போக்கைப் பார்த்தால், எல்லாவற்றுக்கும் ஆட்சேபணை சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. காரியம் ஆக வேண்டுமென்றால் எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன மரபு சரி. மரபு என்பது எல்லோராலும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. காரியமாவதற்காக 'மரபை' ஏற்றுக்கொள்வதும், வேண்டாததற்குத்



தள்ளிவிடுவதும சரியல்ல. என்னுடைய கட்சி அங்கத்தினர் அவர்களே குற்றம் உள்ளவர் என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி விவாதிக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதற்குத்தான் மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும் என்பது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மரபுகள் எல்லாம் தேவையில்லை, விதிகள்படி தான் நடக்கவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மரபு தேவையில்லை யென்று நான் சொல்லவில்லை. சமயத்திற்குத் தகுந்தபடி பேச்சை மாற்றுவதற்கு முதலமைச்சர் அவர்களைவிட வேறு சிறந்தவர்கள் இல்லை. மரபையெல்லாம் நீங்கள் காப்பாற்றி விட்டீர்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சமயத்திற்குத் தகுந்தபடி மாற்றிவிட நீங்கள் விட மாட்டீர்களே?

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதலமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். பத்திரிகைகளில் வந்தது எல்லாம் சரியல்ல.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மரபுக்கும் விதிக்கும் முரண்பாடு ஏற்படும்போது, நாம் விதியை அனுஷ்டிப்பதா, மரபை அனுஷ்டிப்பதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியைத்தான் நாம் அனுஷ்டிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. கே. விநாயகம் அவர்கள் அந்தக் கமிட்டிக்கு நன்றி கூறியிருக்கிறார்கள். அதில் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால்,

"He also thanked the Secretary and the Assistant Secretary, Legislative Assembly Department for their assistance in drafting the Report of the Committee"

THIRU K. VINAYAKAM : Sir, drafting involves labour and knowledge and for that I have thanked them and not for the material which they have imparted into the draft. The Hon. Chief Minister must know the implications of the English words. I thanked them for their labour and that does not mean that I agree with what is stated in the report and the intention behind it.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒரு டாக்டர் ரண சிகிச்சை செய்கிறார். ரண சிகிச்சை செய்து முடிந்ததும், பேஷன்ட் இறந்துபோய் விடுகிறான் என்றால் அதற்கும் டாக்டருக்கு நன்றியா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எவ்வளவோ உதாரணங்கள் இருக்கும்போது பொருத்தமில்லாத இப்படிப்பட்ட உதாரணங்களைச் சொல்வதில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஈடு அவரேதான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்சுனுவேஷன் செய்கிறார். பொருத்தமில்லாமல் பேசுகிறேன் என்று சொல்கிறார். பொருத்தமாகப் பேசுவதில் அவர் திறமை வாய்ந்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் திறமை வாய்ந்தவர்கள் என்று சொல்கிறீர்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : திறமையிலும் இரண்டு வகை உண்டு. தவறு செய்வதிலும் திறமை உண்டு. நல்லது செய்வதிலும் திறமை உண்டு. நல்லது செய்வதிலுள்ள திறமைதான் வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டாக்டர்—நோயாளி உதாரணம். டாக்டரைப் பாராட்டுகிறார் என்றால் பேஷன்ட் பிழைத்ததற்காக இருக்க வேண்டும். ஆனால் இவர் டிராப்ட் செய்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முடிவு என்ன ஆனது என்றால், ஆப்பரேஷன் ஆனவன் 'ஐயோ' என்று போய்விட்டார். ஆபரேஷன் அப்படியே முடிந்துவிட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர் டாக்டரைத் தூற்றவில்லை, மாறாகப் போற்றியிருக்கிறார். எந்த டாக்டராவது ஆபரேஷன் செய்து தோல்வி அடைந்துவிட்டால் "வெகு அருமையாக ஆபரேஷன் செய்தீர்கள்" என்று பாராட்டி நன்றி தெரிவிக்க மாட்டார்கள். நண்பர் திரு. கே. விநாயகம் அவர்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அதிலே கொடுக்கப்பட்டுள்ள முடிவை டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

'However, in view of the fact that the Member had repeatedly said that his intention was only to cite a previous ruling of the Speaker in support of his case, the Committee takes a lenient view of the matter and recommends to the House that the House may record its disapproval of the conduct of the Member Thiru T. Martin and close the case.'

இந்தக் குற்றத்தைப்பற்றி ஆராய்ந்து இத்துடன் முடித்துவிடலாம் என்று முடிவாக்கப்பட்டிருக்கிறது. முடிவாக்கப்பட்ட ஒன்றை மறுபரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று கோருவது முறையாகாது, தேவையில்லாதது என்பதை நான் குறிப்பிடுகிறேன். இதிலே விதி இருக்கிறது. சட்டம் இடம் தருகிறது, விதி இடம் தருகிறது. திருத்தம் கொடுப்பதற்கு இடம் தரப்படுகிறது, என்று சொல்லப்



படுகிறது. நான் ஏற்கனவே தொடக்கவுரையில் குறிப்பிட்டுள்ளது போல, இந்த மரபைக் கையாண்டோம். திரு. மார்டின் அவர்களிடம் இதுபற்றி விளக்கம் கேட்டு வைத்தோம். அவர் "தான் சொன்னது தான் சரி" என்று குறிப்பிட்டார்கள். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறதே, என்று சொல்லி கேட்டபொழுது 'நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன்' என்று கூறியிருக்கிறார். இது முடிந்து போன விஷயம். இதில் நாம் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும். இந்த மூன்றரையாண்டுக் காலத்தில் எவ்வளவு பெருந்தன்மையோடு இந்த மன்றத்தை நடத்திக் கொண்டு வருகிறோம் என்பதை திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களே அறிந்திருப்பார்கள். சில இடங்களில் இதற்காகச் சட்டமன்றத்திற்கான உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே சபாநாயகர் அவர்கள் பெருந்தன்மையோடு நடந்துகொண்டிருப்பது உறுப்பினர் அனைவருக்கும் நன்கு தெரியும். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், பைல்கள் எரிக்கப்பட்ட குற்றத்திற்காக சிலர் விசாரிக்கப்பட இருந்த நேரத்தில் . முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர்களுடைய மனச்சாட்சிக்கு இவ்வளவு நடவடிக்கையே போதும். அந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்களுக்கு தான் குற்றவாளி என்ற உணர்வு வந்தாலே போதும் என்று சொல்லி பெருந்தன்மையோடு அந்த நிகழ்ச்சியை விட்டு விட்டார். நாம் சூடான விஷயங்களைப்பற்றி விவாதிக்கிறோம். இந்த மன்றத்தின் மரபைக் காப்பாற்றும் பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது. ஆகையால்தான் நண்பர் திரு. மார்டின் அவர்கள், 'நவசக்தி, முரசொலி' பத்திரிகைகளில் வந்தது ஒன்றுதான். ஒன்றுக்கு மட்டும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, மற்றொன்றை விட்டுவிட்டார் என்று சொன்னபோது அது சபாநாயகரையே குற்றம் சொல்கிற அளவிலே அமைந்திருந்தது. உரிமைக் குழுவிற்குப் போனபோது விளக்கம் தர அவர் மறுத்தார். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் திருத்தம் கொண்டுவந்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்குப் பரிசீலனை தேவையில்லை என்பதைக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அப்படியானால் "டிஸ் அப்ரூவல்" என்பதைத் திரும்ப பெற்றுக்கொள்வதற்கு இந்த அவை அனுமதி தந்தால் இந்தத் தீர்மானத்திற்கு அவசியமே இருக்காது. 'டிஸ் அப்ரூவல்' என்று இருக்கிற காரணத்தால் இந்தத் திருத்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டியிருந்தது.

DR. H. V. HANDE : Sir, one clarification. I did not want to interrupt the Hon. Chief Minister while he was speaking as I did not want to disturb the trend of his speech. He had referred to my observation that even if the Hon. Member had not been given an opportunity in this House and that he was given that opportunity later on in the Committee. My submission is that if he had been given an opportunity in this House, as the Hon. Chief Minister himself had stated, he would have told the same

thing which he had stated in the Committee. Now, the Committee after listening to what he had stated, had taken a lenient view of the whole matter. If the Hon. Speaker had given the hon. Member Thiru Martin an opportunity to speak, if probably he had taken a lenient view, Mr. Martin could have said what he had now told the Committee, viz., that he had no idea to challenge what the Hon. Speaker had said. If he had been given an opportunity in this House at that time by the Hon. Speaker, he could have said this and the matter could not have gone to the Committee of Privileges at all. I say once again that it 'could' not have gone to the Privileges Committee at all.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1967 ஜூலை, 12-ஆம் தேதியன்று இது அவைக்கு வந்திருக்கிறது. அன்றைக்கே 'ஸூவோ மோட்டோ' வாக உரிமைக் குழுவிற்கு இப்பிரச்சினையை விடவில்லை. அன்றைக்கு சபாநாயகர் சொல்லியிருப்பதைப் பாருங்கள்.

'I hold that this allegation against the Speaker tha the same passage has been held to constitute a breach of privilege is a wrong allegation and I hold that making a wrong allegation against the Speaker in this House is itself a breach of privilege. When I hold that there is a breach of privilege *prima facie* committed by the hon. Member, I can deal with it in two ways. Under Rule 169 of the Rules, I can allow the matter to be referred to the Committee of Privileges for enquiry or I can place it before this Hon'ble House. If he says that it is merely an error through carelessness or negligence, this hon'ble House will no doubt be gracious and magnanimous enough to exercise its generosity in his favour and excuse the error. I leave the matter at that till tomorrow. But if he still contends that this is the passage I held to constitute a breach of privilege, that allegation itself will constitute a breach of privilege and I will send the matter to the Committee of Privileges for enquiry. That is the end of the matter. Let us see what happens and wait until tomorrow.'

என்று ஒரு நாள் அவகாசம் கொடுத்திருக்கிறார். ஆகவே சபாநாயகர் அவகாசமே கொடுக்கவில்லை, எடுத்தவுடனேயே தீர்ப்பு அளித்து விட்டார் என்று சொல்வது சரியல்ல.

DR. H. V. HANDE: I want to mention only one point. I agree that the Hon. Speaker made this statement on one day and referred the matter to the Privileges Committee the next day. What I say is, even the statement by the Hon. Speaker at the very first day, that there was a *prima facie* case of breach of privilege against Thiru Martin, should have been made *after* giving an opportunity for the hon. Member, Thiru Martin to have his say on the matter, in the House, on that particular day itself. Once the Hon. Speaker says that there is a *prima facie* case against any Member, it would be very difficult for the Speaker to hear the Member the next day and change his decision. What I say is, if only an opportunity had been given to Thiru Martin on that day itself



before the Speaker decided that there was a breach of privilege, there was a possibility that the Speaker might have changed his stand. The member could have said 'I am sorry' and the matter could have been dropped there. There could have been that possibility.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அப்போது பேசிய போது

'I hold that a *prima facie* case of breach of privilege of this House has been made by the hon. Member, Thiru Martin in making this allegation.'

என்று சொல்லி அப்போதே முடிவுக்கு வந்துவிட்டார்கள். திரு. மார்டின் சொன்னது தவறோ சரியோ, அவரே அதைப்பற்றிச் சொல்லி தள்ளியிருந்தால் பிரச்னை இருக்காது.

திரு. இராம அரங்கண்ணல்: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கி, அதன்மீது ஒரு கமிட்டி விசாரித்து அளித்த தீர்ப்பின்மீது இப்போது விவாதித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது அன்றைக்கு சபாநாயகர் இப்படிச் செய்திருக்கலாம், அப்படிச் செய்திருக்கலாம் என்று பேசுவது முறையா? வேண்டுமானால் சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரலாம். அதைவிட்டு அன்றைக்கு இப்படிச் செய்திருக்கலாம், அப்படிச் செய்திருக்கலாம் என்பதாக திரு. ஹாண்டே, எதிர்க் கட்சித் தலைவர் பேசுவது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுமாத்திரம் அல்ல. அன்றைக்கே திரு. மார்டினுக்காக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நிரம்ப வாதிட்டிருக்கிறார்கள். நிரம்ப வாதிட்டு, பலமுறை குறுக்கிட்டுப் பேசி, அவற்றுக்குப் பதிலும் அளிக்கப்பட்டு, முடிவிலும் அவர்கள் "உங்களுடைய தீர்ப்பை எப்படி வேண்டுமானாலும் வழங்கிக்கொள்ளலாம்" என்று சபாநாயகரிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதற்காக தூக்குப் போடலாம் என்றால் தூக்குப் போட்டுவிடுவதா? தவறு என்று கருதவில்லை. தவறு இருந்தால் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'உங்கள் தீர்ப்பை எப்படி வேண்டுமானாலும் வழங்கிக்கொள்ளலாம் என்பதாகச் சொன்னார்கள்'. சபாநாயகர் அவர்கள் எடுத்தவுடன் ப்ரைமாபஸி கேஸ் இருப்பதாகச் சொல்லிவிட்டார்கள்......

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ப்ரைமாபஸி கேஸ் இருக்கிறது என்று சொல்வதில் தவறு இல்லை. அவர் அதனுடைய முக்கியத்துவத்தைப் பார்த்துச் சொன்னார் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய திருத்தத்தை வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

Add at the end.—

' And on such consideration, the matter of privilege against the Hon. Member Thiru T. Martin be re-committed to the Committee in regard to the finding that it must be construed that the Member thereby intended to cast a reflection of partiality on the Speaker in case he failed to hold so and hence, has committed breach of privilege '.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்தத் திருத்தத்தைக்கூட ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் சபையில் இருக்கவேண்டுமென்ற அவசியம் கிடையாது.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"30—3—1970-ம் நாளன்று சட்டப்பேரவைமுன் அளிக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் மீதான உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப்பேரவையின் 191 (b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப்பேரவையின் 191 (d) விதியின்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன.

(ஆ) திரு. எ. பாலசுப்பிரமணியமும், மற்றும் சில உறுப்பினர் களும் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப் பினர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்களும், மற்றும் சில பேரவை உறுப்பினர்களும் 1969-ம் ஆண்டு சனவரி திங்கள் 25-ம் நாள் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு சம்பந்தமான அவையுரிமைக் குழுவின் அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிவார்கள்.





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "30—3—1970-ம் நாளன்று சட்டப்பேரவை முன் அளிக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்றும் சில பேரவை உறுப்பினர்களும் 1969-ம் ஆண்டு சனவரி திங்கள் 25-ம் நாள் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191 (b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே,

"அறிக்கையின் இறுதியில் சேர்க்கவும்—

அத்தகைய பரிசீலனையின் பேரில், மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. பாலசுப்பிரமணியம் மற்றும் சில பேரவை உறுப்பினர்களுக் கெதிரான அவையுரிமைப் பிரச்னை மீண்டும் அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்" என்கிற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இத்திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் இங்கே என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தி சில கருத்துக்களை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த உரிமைப் பிரச்னையானது 1969-ம் ஆண்டு சனவரி திங்கள் 25-ம் நாள் ஆளுநர் உரையன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கைப் பற்றியதாகும். அவையுரிமைக் குழுவின் அறிக்கை சபைக்கு முன் வருகிறபோது மட்டும் அதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதாக திருத்தம் கொடுப்பது இந்தப் பேரவையின் விதிகளுக்கு உட்பட்ட ஒன்றுதான் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவையுரிமைக் குழு அறிக்கை கொடுத்தால் அதை இந்த அவை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் மரபு என்பதாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்பாகக் குறிப்பிட்டார்கள். திருத்தம் கொண்டுவருவதற்கு விதி முறையில் இடம் இல்லை என்று சொன்னார்கள். எனவே திருத்தம் கொண்டு வருவது முறையில்லை என்று சொன்னார்கள். திருத்தம் கொண்டு வருவது முறையில்லை என்று சொல்வது முறையில்லை என்று நான் பலமாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் திருத்தம் கொண்டு வருவதுபற்றி ஒன்றும் இல்லை. நீங்கள் இது பற்றிக் கூறுவதைக் கூறுங்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திருத்தம் கொண்டு வருவதற்கு விதி இருக்கிறது. திருத்தம் கொடுப்பதற்கு விதி இல்லை என்று நான் சொன்னேன் என்று சொன்னார்கள். நான் சொல்ல வில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிக் கூறியது பற்றி சொன்னேனே தவிர திருத்தங்கள் கொடுப்பதற்கு விதி இல்லை என்று நான் சொல்லவில்லை.

திரு. என். சங்கரய்யா : ஆகவே, மிகவும் தெளிவாக சட்ட பூர்வமான விதியின்படி கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் அடிப் படையில் நான் இப்போது பேச விரும்புகிறேன்.

இந்தப் பிரச்னையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பால சுப்பிரமணியம் அவர்களும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், குடியரசு கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அன்றைய தினம் வெளிநடப்பு செய்தார்கள். ஏன் வெளி நடப்பு செய்தார்கள் என்பதைப் பற்றி நாம் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்திக் கொள்வது மிக மிக அவசியமாக இருக்கிறது.

அன்று 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதிய சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பில் "கடந்த டிசம்பர் திங்கள் 25-ம் தேதி இரவு கீழ்வெண்மணி கிராமத்தில் விவசாயத் தொழிலாளர்களாகிய ஹரிஜன குடும்பங்களைச் சேர்ந்த 44 பேர் உயிருடன் பொசுக்கப் பட்ட வரலாறு காணாத நிகழ்ச்சி குறித்து இச்சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் ஒரு தனி விவாதம் நடைபெற வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் தேதி நாங்கள் சட்டப் பேரவை முன்னவர் மாண்புமிகு கல்வி அமைச்சரைச் சந்தித்து இதற்கு அவர்களது சம்ம தத்தைக் கோரினோம். அவர் இதற்குச் சம்மதிக்க இயலாது என்று தெரிவித்து விட்டார். இதனை ஆட்சேபித்து நாங்கள்-மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப் பினர்கள், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் இந்திய குடி யரசுக் கட்சி உறுப்பினர்-கவர்னர் உரை என்ற நிகழ்ச்சியிலிருந்து வெளியேறுகிறோம்" என்று இருக்கிறது.

ஆகவே, பிரச்னை என்னவென்றால் முதலிலேயே எவ்வளவு பயங் கரமான ஒரு சம்பவம்—சாதாரண ஒரு நிகழ்ச்சி என்று யாரும் அளவிட முடியாது. 44 அரிசனங்களை உயிரோடு கொளுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி ஒரு சாதாரண நிகழ்ச்சி என்று யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி பற்றி விவா திக்கவேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமாக எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கும், அரசாங்கத்திற்கும் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பும் இருந்தால் அது மக்களுக்கு ஆறுதலாக இருக்கும் என்ற அடிப்படையில் நாங்கள் அனுமதிக்கவேண்டுமென்று சபை முன்னவர் அவர்களை கேட்டோம். அவர் தருவதற்கு இல்லை என்று கூறிவிட்டார். கவர்னர் உரை நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பிறகு அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் வரும்போது பேசிக்கொள்ளலாம் இப்போது அப்படிச் செய்யமுடியாது என்று கூறிவிட்ட பிறகு, நாங்கள் அப்படிச் செய்யவில்லை என்றால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தொழிலாளர் தோழர்களுக்கு, விவசாயிகளுக்காக இருக்கக் கூடிய



கட்சிகள் தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் ஏதாவது இருக்கிறதா என்று நினைப்பார்கள். இந்தப் பிரச்னையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் மக்களுடைய கவனத்திற்கும் கொண்டு வராமல் போனால் மக்கள் தவறாக நினைப்பார்கள். நாம் கடமையிலிருந்து தவறிவிட்டோம் என்று நினைத்துக்கொள்வார்கள் என்ற காரணத் தால் அவை முன்னவரை ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி கொடுத்திருக்கவேண்டும், மக்களுடைய பயத்தை போக்குவதற்கு, கொந்தளிப்பை போக்குவதற்கு அது பயன்படும் என்று சொன்னோம். ஆனால் அவை முன்னவரின் அனுமதி கிடைக்கவில்லை.

அன்றைக்குக் கவர்னர் அவர்கள் உரை ஆற்றினார்கள். அந்த நேரத்திலே நாங்கள் என்ன செய்தோம் ? அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி கவர்னர் அவர்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக் களைச் சொல்ல வரவில்லை. திரு. அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் கூறியதைப்போல கவர்னர் அவர்கள் மந்திரிசபையின் கருத்துக்களை சட்டமன்றக் கூட்டுத் தொடரிலே படிக்க வருகிறார்கள். ஆனால் எங்களுடைய பிரச்னை மந்திரிசபையின் கொள்கையைப் பற்றியது. அவசியமான கொள்கைகளைப் பற்றியது. இந்தக் கொள்கை தமிழ் நாட்டின் 4 கோடி மக்களைப் பற்றியது. அந்தப் பிரச்னை அன்றைக்கு அவர்களுடைய கொள்கைகளைப் பற்றி கவர்னர் தருகிற நேரத்தில் நாங்கள் என்ன கருதுகிறோம் என்பதைச் சொல்வதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் சொல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அந்தக் காரணத்தாலேயே கவர்னர் முன்னாலே நாங்கள் பிரச்னையை எழுப்பி னோம். எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதி தராததா லேயே எதிர்ப்பைத் தெரிவிக்கிற வகையிலே சிறிய அறிக்கை எழுதி கவர்னர் அவர்கள் உரை ஆற்றுவதற்கு முன்னாலே படித்து அமைதி யாக மன்றத்தை விட்டு வெளியேறினோம்.

கவர்னர் அவர்கள் மந்திரி சபையின் கொள்கைகளைப் பற்றிப் படிக்க வருகிறார்கள். அந்த நேரத்தில் கவர்னர் அவர்களை அவ மதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனோ அல்லது இடையூறு உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்துடனோ நாங்கள் நடந்து கொண்டோம் என்று கூறுவது பொருத்தம் இல்லை. இதனால் என்ன விளைவு ஏற்பட்டது என்று பார்க்கவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லாத நேரத்திலே தமிழ் மக்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு மக்களுடைய பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனத்திருப்தி ஏற்படக்கூடிய அந்த நிகழ்ச்சியை உரிமைப் பிரச்னை என்ற நிகழ்ச்சியை விடப் பெரிதாக நாங்கள் நினைக்கிறோம்.

கவர்னர் உரையின்போது ஏதாவது குறுகிட்டுப் பேசினாலோ, அவர்களுடைய உரைக்கு முன்னாலே பேசினாலோ, வாக் அவுட் செய்தாலோதான் சபையின் ஒழுங்கை மீறிய செயலாகும் என்று விதி 12 கூறுகிறது. அவ்வாறு செய்தால் சபாநாயகர் அவர்கள் அடுத்தக் கூட்டத் தொடரில் 'பிரீச் ஆப் ஆர்டர்' என்று பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அவ்விதி கூறுகிறது. இதைப்பற்றி உரிமைக் குழுவிலே கூட விவாதித்து இருக்கிறோம்.

தவறான முறையிலே இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது, அது சரி அல்ல என்று நான் சாட்சியம் அளித்திருக்கிறேன். "ப்ரீச் ஆப் ஆர்டர்" என்று தான் கருதவேண்டும். "ப்ரீச் ஆப் ஆர்டரை 'ப்ரீச் ஆப் பிரிவிலேஜ்' என்று கூறுவது தவறு என்பதை வன்மையாக எடுத்து உரைத்திருக்கிறோம். பிரீச் ஆப் ஆர்டர் என்பதை 'பிரீச் ஆப் பிரிவிலேஜ்' என்று அந்தந்த இடங்களிலே வியாக்கியானம் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். 'ப்ரீச் ஆப் ஆர்டர்' என்பதை 'டிஸ் ஆர்டர்லி காண்டக்ட்' என்று மாற்றி அதாவது ஒழுங்கு முறை அற்ற நடவடிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'டிஸ் ஆர்டர்லி காண்டக்ட்' என்பதை வைத்துக் கொண்டு 3-வது கட்டத்திற்கு 'கண்டம்ட் ஆப் தி ஹவுஸ்' என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு 'கன்ட்டமட் ஆப் தி ஹவுஸ்' என்பதிலே வாய்ப்பே இல்லை. ப்ரீச் ஆப் ஆர்டர்' என்பதை "டிஸ் ஆர்டர்லி என்ற பிரச்னையை 'பிரீச் ஆப் பிரிவிலேஜ்' என்று கொண்டு வருவதற்கு வாய்ப்பே இல்லை. பிரீச் ஆப் ஆர்டர் என்பதை "டிஸ் ஆர்டர்லி காண்டக்ட்" என்று சொல்லி அதற்குப் பிறகு "கண்ட்ம்ட் ஆப் தி ஹவுஸ்" என்று சொல்லி பிறகு ப்ரீச் ஆப் பிரிலேஜ் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் தன்னுடைய இருக்கையில் இராமல் இன்னொருவர் இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்தால் அது 'பிரீச் ஆப் ஆர்டர்'. காரணங்கள் இன்றி பேச்சில் குறுக்கிடுவது 'பிரீச் ஆப் ஆர்டர்' இவைகளைத்தான் "பிரீச் ஆப் ஆர்டர்" என்று சட்டமன்ற விதிமுறை கூறுகிறது. 'பிரீச் ஆப் ஆர்டர்' பற்றி சபாநாயகர் அவர்கள் அடுத்தக் கூட்டத்திலே முடிவு செய்ய வேண்டும். அவரே முடிவுசெய்யாமல் அதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி "ப்ரீச் ஆப் பிரிவிலேஜ்" ஆக ஆக்கி இருக்கிறார்கள். இதற்கு பிரிட்டிஷ் பாராளுமன்ற விதிமுறைகளை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். நாம் இந்திய நாட்டிலுள்ள ஒரு அங்கம். இந்தியாவிலுள்ள லோக் சபையிலுள்ள முறைகளைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பாரம்பரியத்தின் விதிமுறைகளைத்தான் நாம் பின்பற்றி வருகிறோமா ? பல மாநிலங்களின் சபாநாயகர்கள் இந்திய லோக் சபையின் சபாநாயகர்கள் எல்லாம் கலந்து கொண்ட மாநாடுகள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட நிலையிலே பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைகள்தான் நமக்குப் பொருந்தும் என்றும் லோக் சபையின் முறைகள் நமக்குப் பொருத்தம் இல்லை என்றும் சொல்வது சரி இல்லை. அவர்கள் அதிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய விஷயங்களைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைகளின்படி சபையிலே உள்ள உறுப்பினர் என்ன பேசுகிறார். எப்படி முறைகேடாக நடந்து கொள்கிறார் என்பது மட்டுமல்ல, சபைக்கு வெளியே அவர் ஏதாவது ஃப்ராட் செய்தார் என்றால், பணமோசடி செய்தார் என்றால் வேறு ஏதாவது கிரிமினல் வழக்குகளிலே சம்பந்தப்பட்டு இருந்தாலும் அதைப்பற்றியும் நடவடிக்கை எடுக்கலாம் சபையிலே என்று பிரிட்டிஷ் பாராளுமன்ற விதிகளிலே இருக்கிறது. அதை நாம் இங்கே பயன்படுத்துகிறோமா ? வெளியேயும், சபைக்கு வெளியேயும் செய்யப்படுகிற குற்றங்களை இங்கே பிரீச் ஆப் ஆர்டர் என்று





கொண்டுவருகிறோமா ? கொண்டுவரமுடியாது. இன்றைக்குள்ள நீதி அதற்கு இடம் கொடுக்காது. நடக்கமுடியாத ஒன்றை சட்ட சபை உறுப்பினர் சட்ட சபைக்கு வெளியே செய்தாலும், வெளியே எந்த டிஸ்ஆர்டர்லி காண்டக்ட் என்ற முறையிலும் அவர் நடந்திருந்தாலும் அது சபைக்குள்ளே செய்யப்பட்டதாகக் கருதலாம் என்று பிரிட்டிஷ் பாராளுமன்ற விதிகள் சொல்கின்றன. நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்திலே அப்படிச் சொல்லியிருக்கிறதா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நம்முடைய சட்ட மன்ற விதிகளில் தெளிவில்லாதபோதுதான் நாம் அதைப் பார்க்கிறோம். நமக்காக நாம் விதிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய விதிகளிலே தெளிவில்லாத நேரத்திலேதான் நாம் அதைப் பார்க்கிறோம். தெளிவிருக்கக்கூடிய நிலைமையிலே நாம் அதற்குப் போவதில்லை.

<u>திரு. என். சங்கரய்யா :</u> எங்களுடைய பிரச்னைபற்றி வழக்காடக் கூடிய நேரத்திலே அவர்கள் எழுத்து மூலமாக அதைக் கொடுத்திருக்கிறார்கள். அது இந்த மன்றத்திலேயும் வைக்கப்பட்டு இருக்கிறது. அது தவறான கருத்து. சட்டசபை உறுப்பினர் சட்டசபைக்கு வெளியே தவறாக நடந்தால் அது பிரீச் ஆப் ஆர்டர் என்று அங்கே வைத்திருக்கிறார்கள், எனவே வெளியே ஒருவர் தவறாக நடக்கிறார் என்றால் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க ஹவுஸ் ஆப் காமன்ஸ் விதிகளைக் காட்டுவது பொருத்தமற்றது என்பதைக் காட்டுவதற்காகத் தான் இதைச் சொன்னேன். கவர்னரை அவமதிப்பது பெரும் டிஸ்-ஆர்டர் என்று சொல்கிறார்கள். இதை அவர்கள் எப்படிக் கொண்டுவருகிறார்கள் என்றால் முதலிலே ப்ரீச் ஆப் ஆர்டர் என்று சொல்கிறார்கள், பிறகு டிஸ் ஆர்டர்லி காண்டக்ட் என்று சொல்கிறார்கள். அதன் பிறகு காண்டம்ட் ஆப் தி ஹவுஸ் என்பதைச் சொல்கிறார்கள். கண்டம்ட் ஆப் தி ஹவுஸ் என்பதை நாங்கள் மறுக்கிறோம். அதிலிருந்து ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் வருகிறது என்று சொல்வதையும் மறுக்கிறோம்.

நாங்கள் அன்றைக்கு வெளிநடப்பு செய்தது உண்மை, அறிக்கையைப் படித்தது உண்மை, அதை பிரீச் ஆப் ஆர்டர் என்று எடுத்துக் கொண்டு அதிலே சபாநாயகர் அவர்கள் என்ன செய்யவேண்டியிருக்கிறதோ அதைச் செய்திருந்தால் அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நான் உரிமைக் குழுவிலே சாட்சியம் அளிக்கின்ற பொழுதுகூடச் சொன்னேன். பிரீச் ஆப் ஆர்டர் என்று இருப்பதைச் சுற்றி வளைத்து ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் ஆகச் செய்திருக்கிறார்கள். ப்ரீச் ஆப் ஆர்டர் என்பது பிரீச் ஆப் பிரிவிலேஜ் ஆகிறது என்றால் பிரீச் ஆப் ப்ரிவிலேஜ் பிரீச் ஆப் ஆர்டர் ஆக வருகிறதா ? இந்த மன்றத்திலே பிரீச் ஆப் ஆர்டர் எத்தனையோ வந்திருக்கின்றனவே, ஒவ்வொன்றும் பிரீச் ஆப் பிரிவிலேஜ் ஆக அனுமதிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுமதிக்கப்பட்டு அவையெல்லாம் உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ? எத்தனையோ பிரீச் ஆப் ஆர்டர் ஆகியிருக்கின்றன, அவையெல்லாம் பிரீச் ஆப் பிரிவிலேஜ் ஆகு

*[திரு. என். சங்கரய்யா] [1970 ஆகஸ்ட் 31*

*மென்றால் ஏன் உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படவில்லை ? இது மட்டும் ஏன் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது என்ற கேள்விக்கு இதுவரையிலும் திருப்திகரமாக பதில் கொடுக்கவில்லை. பிரீச் ஆப் ஆர்டர் என்பதும் பிரீச் ஆப் பிரிவிலேஜ் என்பதும் ஒன்றுதானா? வித்தியாசம் கிடையாதா ? இரண்டும் ஒன்றுக்கொன்று இண்டர் சேஞ்ச்பிளா ? இது அது ஆகவும், அது இது ஆகவும் மாறக்கூடிய தன்மையுடையனவா ? இவற்றிற்கெல்லாம் இதுவரைக்கும் பதில் வரவில்லை.*

*கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே குறுக்கிட்டு இருப்பதாகக் கூறக்கூடிய நேரத்திலே அந்தக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற அறிக்கையிலும் சரி, சட்டமன்றத்திற்கு முன்னால் உள்ள அறிக்கையிலும் சரி, பார்த்தால் அதிலே கண்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி—ஒரு முக்கியமான சிக்கல் என்னுடைய அபிப்பிராயத்தில் அபாயகரமானது என்றுகூடச் சொல்வேன்—நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.*

*அந்த அறிக்கையிலே, இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற அந்த அறிக்கையிலே, என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கலாம். 5-வது பாராவை நான் அப்படியே வாசிக்கிறேன்.*

" It is also a matter for consideration whether the Governor himself should not exercise all the powers of the Speaker at the time of his Address to the Members at their joint sittings and maintain order during that meeting as the Legislature comprises of the Governor and the two branches of the Legislature. Then and there, he may ask the disturbing Member to withdraw from the House and he should be able to get him removed from the House in the case of default on the part of the Member to leave the House so that further proceedings may go on smoothly and his Address which he is enjoined by the Constitution to deliver is delivered without obstruction. If any further action than mere expulsion is called for in the opinion of the Governor, he may ask that branch of the Legislature to which the Member belongs to take such further action as they may be advised '.

*என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

' It is also a matter for consideration whether the Governor himself should not exercise all the powers of the Speaker... ' *என்று இருக்கிறது. கவர்னர் உரை நிகழ்த்தக்கூடிய நேரத்திலே ஸ்பீக்கருக்குப் பதிலாக கவர்னர் எல்லா அதிகாரங்களையும் வைத்து இருந்தால் என்ன என்பதைப்போல பரிந்துரை இருக்கிறது. கவர்னர் உரை நிகழ்த்துகின்றபொழுது யாராவது குறுக்கிட்டால் அவரை வெளியே போகச் சொல்லலாம். கவர்னர், ஸ்பீக்கர் அல்ல, வெளியேறுவதற்கு மறுத்தால் கவர்னரே வெளியேற்ற வேண்டும்—ஸ்பீக்கருக்குத் தகவல் கொடுக்கவேண்டியதில்லை—அந்த உறுப்பினர் எந்தச் சபையைச் சேர்ந்தவரோ அந்தச் சபைக்குத் தகவல் கொடுத்து டைரக்ட் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற முறையில் பரிந்துரை*



*1970 ஆகஸ்ட் 31]*

*அந்த அறிக்கையிலே காணப்படுகிறது. இது மிகவும் அபாயகரமானது. எல்லாவற்றையும்விட ஸ்பீக்கர்தான் உயர்ந்தவர் என்று சொல்லக்கூடியவர்கள் நாம். கவர்னர் உரையாற்றும்பொழுது ஸ்பீக்கர் தற்காலிகமாக நீக்கப்பட்டு கவர்னர் கையிலேயே அதிகாரங்களை ஒப்புவிக்கவேண்டும் என்றும் உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் கவர்னர் அவர்களே நேரடியாக அந்த சபைக்குத் தகவல் கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என்றும் இருக்கிறது. எவ்வளவு சாதாரண விஷயம் எவ்வளவு பெரிய மூலாதாரமாய் இருக்கக்கூடிய விஷயத்திற்குப் போகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் இதை நாங்கள் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.*

*முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.* There is no privilege attached to the Governor *என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னருக்கு எந்தவிதமான ப்ரிவ்லேஜும் இல்லை. கவர்னர் சபையினுடைய உறுப்பினரல்ல, அவருக்கு ப்ரிவ்லெஜ் அட்டாச் பண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் கவர்னர் உரை நிகழ்த்துகிறபோது ஸ்பீக்கர் அதிகாரத்தை கவர்னர் அவர்களின் கையிலே கொடுக்கவேண்டுமென்றால் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவர்னர் உரையின்போது சிறு அறிக்கை வெளியிடவேண்டுமென்று சொல்கிறபோது அதன்மேல் சபாநாயகர்கூட ஒருவேளை சரியாக அந்தப் பிரச்னையைச் சமாளிக்கமாட்டார், எனவே கவர்னர் தண்டிப்பதற்கு உரிமை கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. லெஜிஸ்லேச்சருக்கும், எக்ஸிக்யூடிவ்க்கும், ஜுடிஷியரிக்கும் இப்படியுள்ள இந்த மூன்று அமைப்புகளுக்கிடையே கவர்னருடைய உத்தரவை மேம்படுத்துவதற்கு அவருடைய அதிகாரத்தை அதிகப்படுத்துவதற்கான முயற்சிதான் இது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நடவடிக்கை எடுப்பது கவர்னர் அவர்கள் அல்ல. அந்த உறுப்பினர் எந்த அவையைச் சேர்ந்தவரோ அந்த அவைதான் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இருக்கிறது.

<u>திரு. என். சங்கரய்யா :</u> *அவை என்று சொல்லவில்லை.* ' If any further action than mere expulsion is called for in the opinion of the Governor, he may ask that branch of the Legislature ' *என்று தான் இருக்கிறது. இப்படி அந்த பிராஞ்ச் ஆப் தி லெஜிஸ்லேச்சர் என்று தான் போட்டிருக்கிறதே தவிர வேறு இல்லை.*

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நம் விதிகளிலே இரண்டும் இருக்கிற காரணத்தினாலே அந்த உறுப்பினர் எந்த அவையைச் சேர்ந்தவரோ அந்த அவைக்கு உரிமை இருக்கிறது என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைதான் சுப்ரீமே தவிர, கவர்னர் இல்லை.

திரு. என். சங்கரய்யா : குறிப்பாக, எக்ஸ்பெல் பண்ணுவதற்கு அதிகாரம் வேண்டும், அவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று முற்படுகிறோம். நடவடிக்கை எடுப்பதற்கோ, எக்ஸ்பெல் பண்ணுவதற்கோ வெளியேற்றுவதற்கோ கவர்னரிடத்தில் கொடுக்க வேண்டும், இது போதாது, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், நான் வாசித்ததில் இரண்டாவதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னை என்பது சாதாரணமான பிரச்னை என்று இருக்கிறார்கள். 48-வது பக்கத்தில் நான் வாசித்த பாராவிற்கு முதல் பாராகிராபிலே என்ன சொல்லப்படுகிறது என்றால்,

'Hence, it is open to the Legislature to take action regarding the conduct of a Member at the time of the Governor's Address on the ground that the Member has not shown proper respect to the Constitution and that his action has been below the dignity of a Member and contrary to the oath taken by him.'

என்று இருக்கிறது. இதில் நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் கான்ஸ்டிட்யூஷன் எங்கே வருகிறது ? இந்த சட்டமன்றத்திலே நாம் இன்றைக்குப் பெரிய சர்ச்சைகளிலே ஈடுபடுகிறோம். கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வருகிறோம். அந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அந்த அரசாங்கமே தோல்வியடைந்ததாக அர்த்தம். எனவே, கான்ஸ்டிட்யூஷன் என்ற பெயரைச் சொல்லி, நான் கேட்கிறேன் கான்ஸ்டிட்யூஷன் திருத்தப்படுவதற்கு உட்படவில்லையா ? எத்தனையோ முறை திருத்தப்படுகிறது. ஆகவே, இன்று கான்ஸ்டிட்யூஷன் என்ற பெயரைச் சொல்லி ஒரு வாக்கவுட் நடத்துவதும், ஆட்சேபணை தெரிவித்து அறிக்கை விடுவதும் கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதம் என்று சொல்லி பயமுறுத்துவது இன்று சட்டப் பேரவையின் உறுப்பினர்களுக்கு.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக முடியுங்கள்.

திரு. என். சங்கரய்யா : இது பெரிய பிரச்னை. இது இன்று 15 பேர் சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருக்கலாம். இன்று இது எங்கள் கட்சி சம்பந்தப்பட்டதாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுங்கள். பேசுவதைக் கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. என். சங்கரய்யா : இது முக்கியமானது என்பதால், சட்டப் பேரவையில் ஏற்படும் முடிவு நெடுங்காலத்திற்கு முன்னுதாரணமாகத் திகழும் என்பதால் நான் இந்தப் பிரச்னையின் மீது விரிவாகப் பேச விரும்புகிறேன்.

இன்றைய தினம் நீங்கள் பார்க்கலாம். அவையுரிமைக்குழுவில் இது விவாதிக்கப்பட்டபொழுது அவர்கள், இந்த நாட்டிலே எத்தனையோ மாநிலங்கள் இருக்க, இப்படிப்பட்ட பிரச்னையிலே நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு மூன்றே மூன்று மாநிலங்களைத்தான்,



அதாவது மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா, மைசூர் ஆகிய மூன்று மாநிலங்களைத்தான் காட்ட முடிந்தது. அதிலும்கூட பாக்கி சட்டமன்றங்களைப்பற்றிப் பேசவில்லை. தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை 12-வது விதியைப்போல் இந்தியாவிலுள்ள வேறு எந்தச் சட்டப் பேரவையிலும் விதியில்லை. மைசூர், மகாராஷ்டிரத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டு, சட்டப்பேரவை ஒரு குழுவைத் தனியாக ஏற்படுத்தி விசாரணை செய்ய முடிவு செய்திருக்கிறதே தவிர சட்டத்திலே என்று போடவில்லை.

லோகசபையைப் பற்றியும் பார்க்கலாம். அங்கு எந்த முறையில் ஆட்சேபணைகள் எல்லாம் நடக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அங்கு எதிர்க்கட்சிகளுக்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதையும் பார்க்கிறோம். ஏராளமானவர்கள் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுக்கவோ, காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுக்கவோ, சக்தியான முறைகளிலே அங்கே நிகழ்ச்சி நடைபெறுகிறது என்பதை பார்க்கிறோம். ஆகவே, இன்று, மூன்றே மூன்று மாநிலங்களில் இது பற்றி பிரிவிலிஜ் இஷ்யூ அல்லது பிரீச் ஆப் பிரிவிலிஜ் வந்திருக்கிறது என்று சொல்ல முடிந்தது. பாக்கி மாநிலங்களைப்பற்றி இல்லை.

இன்றைக்கு முதலமைச்சரவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றிப் பார்க்க வேண்டும். மேற்கு வங்காளத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைந்து, அதன் முதலமைச்சர்—இன்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது கவர்னர் உரை அமைச்சரவை உருவாக்கியது என்று—அப்படி அமைச்சரவையால் உருவாக்கப்பட்ட அந்த உரையை கவர்னர் அந்தச் சட்டசபையிலே வாசிக்கும்பொழுது ஒரு பாராவை நீக்கி விட்டு அடுத்த பாராவிற்குச் செல்லுகின்ற நேரத்தில், அந்த அமைச்சரவையின் தலைவராகயிருந்த திரு. அஜாய் குமார் முகர்ஜி அவர்கள், கவர்னரை இடைமறித்து, நீங்கள் செய்வது சரியல்ல, மந்திரிசபை கொடுத்த முழு வாசகத்தையும் நீங்கள் வாசிக்க வேண்டும் என்று கேட்டார். இப்படி முதலமைச்சரே இடைமறித்து பேசவேண்டிய நிலை ஏற்பட்டது.

மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் உறவு என்று கூறுகிறோம். கவர்னர் மத்திய சர்க்காரால் நியமிக்கப்படுபவர். மத்திய சர்க்காரிலே ஒரு கட்சியின் ஆட்சி, மாநில சர்க்காரிலே ஒரு கட்சியின் ஆட்சி என்று வருகின்ற நேரத்தில், ஒரு மந்திரிசபை உருவாக்கிய உரையை மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட கவர்னருக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை விட்டுவிட்டு வாசிப்பது என்பது கற்பனை இல்லை, அப்படி நடந்திருக்கிறது. அப்படிப்பட்ட முதலமைச்சர் ஆட்சேபித்திருக்கிறார். அவர்மீது அந்தச் சட்டசபை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? அதை, சட்டப்பேரவை தவறு என்று கருதவில்லை.

ஆகவே, அதற்காக நான் என்ன கூறுகிறேன் என்றால், அவையுரிமைக்குழுவில் சிலர் பேசியிருக்கிறார்கள். 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் இது நடந்த பிறகு, உத்திரபிரதேசத்திலே, பீகார் மாநிலத்திலே பெரும்பாலான கட்சியின் பலம் இல்லாமல், சிறுபான்மையின

ராக, மைனரிட்டியாக இருந்ததாக—அது உண்மையாக இருக்கலாம் அல்லது அது அவர்கள் கருத்தாக இருக்கலாம். கவர்னர் சிறு பான்மை கட்சியை ஆட்சியில் அமர்த்தினர் என்பதற்காக, அந்த ஐக்கிய முன்னணியினர் கவர்னரைப் பேசவிடாமல் செய்திருக்கிறார் கள். அப்படி ஐக்கிய முன்னணியினர் செய்ததை அந்தச் சட்டசபை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அது அரசியல் பிரச்னை என்று விட்டு விட்டார்கள்.

இன்னொன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தரோக பிரசாத் ராய், மந்திரிசபை அமைந்த நேரத்தில் பீஹாரிலே, பீகார் சட்டசபையிலே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்களின் கட்சியும் வேறு பல கட்சிகளும் சேர்ந்து கவர்னரைப் பேசவிடாமல் செய்து, கவர்னரை எதிர்த்து வாக்குவாதம் நடத்தியிருக்கிறார்கள். என்ன நடத்தியிருக்கிறார்கள் ? நீங்கள் சொல்வது சரியல்ல, என் கணக்கு இப்படி என்று அவர் அந்த மெம்பர்களுடன் உரை நிகழ்த்தியிருக் கிறார். எனவே, மெம்பர்களோடு உரையாடியது தவறு என்று கருதவில்லை, விளக்கம் கூற முற்படுகிறார்கள்.

சமீபத்திலே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பூவராகன் அவர்களுடைய கட்சி ஆட்சி நடத்துகின்ற ஆந்திராவிலே, தெலிங்கானாபற்றி கவர்னர் உரையிலே எந்தவிதமான அறிவிப்பும் இல்லை என்று தெலிங்கானா பிரஜா சமிதி கட்சியினர் பெரிய ஆர்ப்பாட்டம் நடத்துவதுபோல், சபையை நடக்க முடியாமல் செய்தார்கள். அந்த நடவடிக்கையைப்பற்றி ஆந்திர சட்டசபை, இது உணர்ச்சி மயமான பிரச்னையின்பாற்பட்டது என்று கருதி விட்டுவிட்டது. எனவே, அங்கேயும் இம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆக, அப்படியெல்லாம் இருக்கும்பொழுது, அவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தமிழக சட்டப்பேரவையில் நாங்கள் மிகவும் டிக்னிஃபைடாகவும், மிகவும் கட்டுப்பாடாகவும், முன் கூட்டியே எழுதப்பட்ட அறிக்கை அளிக்கப்பட்டு, அதிலே கையெழுத்திடப்பட்டு, ஒருவர் எழுந்து வாசித்து, அதுவும் கவர்னர் அவர்கள் பேசுவதற்கு முன்னாலே, இன்ன காரணத்திற்காக வெளியேறுகிறோம் என்று சொல்லிவிட்டுச் செய்ததை இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாகும் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆந்திர சட்டப்பேரவையிலோ, அல்லது மேற்கு வங்க முதலமைச்சரவர்களோ செய்ததைப்பற்றி இன்றைக்கு நமக்குச் சம்பந்தமில்லை, தமிழ்நாட்டுச் சட்டப்பேரவை தனியானது என்றும் இந்தப் பிரச்னையை முற்றிலும் வேறு ஒரு கோணத்திலிருந்து பார்க்கிறது என்று சொன்னால் அது வேறு விஷயம். நாம் இந்திய நாட்டின் ஒரு பகுதி.

இன்று விதிகள் என்பவை, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், சட்டப்பேரவை முறையாக நடத்துவதற்கும் இருக்கின்றனவே தவிர, விதிகளுக்காக சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏற்படுத்தப்பட வில்லை. எனவே, காலத்தின் போக்கில், பழையன கழிதலும், புதியன



புகுதலும் என்பதுபோல் ஏற்படும் புதிய புதிய நிகழ்ச்சிகளுக்கேற்ப, புதிது புதிதாக, பல்வேறு கட்சிகளும அரசாங்கத்தை ஏற்று நடத் தும் காலத்திலே, 'flexible interpretation' நெளிவு சுளிவாக சட்டத்திலே ஏற்படுத்துவது இன்று நாட்டிலே எதிர்பார்க்க வேண்டியதாயிருக்கிறது.

நான் இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தமிழ் நாட்டிலே, 1952-ம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி சிறுபான்மைக் கட்சி யாகத் தேர்தலில் வந்தபிறகு, திரு. பிரகாசம் அவர்கள், ஐக்கிய முன்னணிக் கட்சி...... ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நிகழ்ச்சியையொட்டிப் பேசுங்கள். இந்த அவையின் முழு நேரத்தையும் ஒரு உறுப்பினர் எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. என். சங்கரய்யா : நான் எடுக்கவில்லை. 49-வது பக்கத் திலே, இந்த அவையில் வைக்கப்பட்ட அந்த அறிக்கையில் அந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டிருப்பதால் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் குறிப்பிட்டி ருக்கலாம். எல்லாவற்றையும் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்க முடியுமா ?

திரு. இராம. அரங்கண்ணல் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இன்று இன்னின்ன அலுவல்கள் நடைபெற வேண்டுமென்று தாங்கள் குறிப்பு அனுப்பி இருக்கிறீர்கள். உரிமைப்பிரச்னையின்மீது ஒரு நாள் பூராவும் விவாதம் நடத்துவது என்றால் நேரம் போய்க்கொண் டிருக்கிறது, மற்றக் காரியங்கள் எப்படி நடக்கும் ?

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். சபையின் உரிமை மீறப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக் கும்பொழுது, உரிமை மீறப்படவில்லை என்று சபைக்கு உணர்த்து வதற்காக, சபைக்குச் சமர்ப்பித்துக் கொள்வதற்காகப் பேசிக்கொண் டிருக்கும் சமயத்தில், பேச வேண்டாமென்று சொல்லுகின்ற முறை சரியாக இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு நிகழ்ச்சியையும் வரையறுத்துத்தான் நடத்த வேண்டும். பல நிகழ்ச்சிகள் நடந்தாக வேண்டும். எனவே, ஒரு காலவரையறை வைத்துத்தான் நடத்த வேண்டும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : நான் ஒரு விஷயத்தைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். உரிமை மீறப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, குற்றவாளிகளாக நிற்கிறோம். எனவே, உரிமை மீறப்படவில்லை, ஜனநாயக உணர்வுக்குத் தகுந்த மாதிரிதான் நடந்திருக்கிறது என்பதைச் சபைக்கு உணர்த்த வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதற்கு நேரம் இருக்கிறது, முறை இருக்கிறது. அதற்காக அவையின் முழு நேரத்தையும் எடுத்துக்கொள்ள முடியாது அல்லவா ?

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> கமிட்டியிலே.........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் என்ன பேசுகிறீர்கள் ?

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> இது சம்பந்தமாகத்தான். விளக்க வேண்டியிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் பத்து நிமிடத்தை எடுத்துக்கொள்ளாதீர்கள். திரு. சங்கரய்யா, நீங்கள் தொடர்ந்து பேசி சீக்கிரமாக முடியுங்கள்.

<u>திரு. என். சங்கரய்யா :</u> சபாநாயகர் அவர்களே, தாங்கள் குறிப்பிடுவதால் சற்று வருத்தமாக இருந்தாலும் கூட இந்தப் பிரச்னையைப்பற்றி சீக்கிரமாகப் பேசுவதற்கு முயற்சிக்கிறேன். அந்த பாரகிராபை மட்டும் வாசிக்கிறேன். அது போதும்.

" In 1952 when the Governor of Madras rose to address under Article 176 of the Constitution. Thiru T. Prakasam, a Member of the Legislative Council rose on a point of order and made a speech and left the place accompanied by some Members. Subsequently on 13th May 1952, the Leader of the House (Council) moved a motion for admonition to the Member who interrupted the Governor's Address on the 6th May 1952. The motion was subsequently withdrawn by leave of the House.

ஆகவே, அப்போது திரு. பிரகாசம் அவர்கள் மீது அவர் எந்தக் குற்றத்தைச் செய்து விட்டார் என்று கொண்டு வரப்பட்டதோ அத் தீர்மானம் பின்பு வாபஸ் வாங்கப்பட்டது. எந்த நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படவில்லை. பிறகு அப்போதிருந்த ஆட்சியாளர்கள் தங்கள் பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்த விதி 12-ஐக் கொண்டு வந்தார்கள்.

இறுதியாக நான் சமர்ப்பிக்க விரும்புவது இதிலே எந்தவிதமான உரிமை மீறலும் இல்லை. கவர்னர் அவர்களைச் சொந்த முறையில் இழிவாக நடத்த வேண்டுமென்றோ, தரக் குறைவாக நடத்த வேண்டுமென்றோ எந்தவித நோக்கமும் இல்லை. எதிர்க் கட்சி என்ற முறையில் மிக அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்திற்கு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு வாய்ப்புக் கிடைக்காத சூழ்நிலையில் நாங்கள் செய்தது முற்றிலும் சரியானது, நியாயமானது. வருங்காலத்தில் மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படும்பொழுது இத்தகைய முறைகளைப் பின்பற்றுவது சரியானது என்று உடன்பாடு ஏற்படக்கூடிய நிலையில் உள்ளது. இதிலே எந்தவிதமான உரிமை மீறலும் இல்லை. நான் எடுத்துக் கூறிய விஷயங்களை எல்லாம் இந்தக் கூட்டத்திலேயே பரிசீலனை செய்ய முடியாமல் போனாலும்,





இதிலே குறிப்பிட்டுள்ள மூன்று சட்டமன்றங்கள் தவிர, இதர சட்ட மன்றங்களிலே என்ன இருக்கிறது. இந்தியப் பாராளுமன்ற விதி முறைகளில் என்ன இருக்கிறது என்பதை எல்லாம் பரிசீலித்து முடிவு செய்ய மீண்டும் இதைப் பற்றிப் புனர் பரிசீலனை செய்து மறுபடியும் இந்தச் சபைக்குக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்று கூறி இந்தப் பிரச்னையை மீண்டும் அவையுரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். புதிய கோணத்தில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

<u>திரு. க. ர. நல்லசிவன் :</u> கனம் சபாநாயகர் அவர்களே, இதன் மீது நான் நீண்ட நேரம் பேசப்போவது கிடையாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதன்மீது பேசுகின்ற உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. க. ர. நல்லசிவன் :</u> இன்றைய சட்டசபை விதிகளின் பிரகாரம் எங்களுடைய நடவடிக்கைகள் சரியானது என்று விவாதிக்க நான் வரவில்லை. சட்டசபை விதிகளின் பிரகாரம் நிச்சயமாக அதற்கு விரோதமான நடவடிக்கைதான். அதே நேரத்தில் 42 பேர், அதுவும் அரிசனங்கள், சமூகத்தில் பிறபடுத்தப்பட்டு இருப்பவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நடந்த எழுச்சிகள், நடவடிக்கைகளுக்குள் நான் புக விரும்பவில்லை. அப்படி ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தம் பேரவை முன்னவராக இருந்த கல்வி அமைச்சர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கூறியதன் பேரில்தான் ஏற்பட்டது. 42 அரிசனங்கள் கொல்லப்பட்டார்கள். அதனால் ஏற்பட்ட பெரிய நடவடிக்கை என்ற முறையில் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது, மதிப்பிற்குரிய அமைச்சர்கள் முன்பு எதிர்கட்சியில் இருந்தபோது 1962-ம் ஆண்டு கவர்னர் பிரசங்கத்தின்போது, கவர்னர் ஒன்று தம்முடைய தாய் மொழியில் பேசவேண்டும் அல்லது தமிழில் பேசவேண்டும். ஆங்கிலத்தில் பேசக்கூடாது என்று அறிக்கையைக் கொடுத்துவிட்டு இதே சபையில் இருந்து, இதே இடத்தில் இருந்து நான் வெளிநடப்புச்செய்தேன். அதன்மீது அன்று ஆளும் கட்சியில் இருந்தோ, எதிர்க் கட்சியில் இருந்தோ எந்த விதமான உரிமைப் பிரச்னையும் கொண்டு வரவில்லை. அதை விடப் பெரிய விவகாரம் 42 அரிசனங்கள் கொல்லப்பட்ட விவகாரம். இந்தப் பிரச்னையை இதோடு கைவிட்டு விடுவது நல்லது என்று கருதுகிறேன். கைவிடமுடியாது என்று நீங்கள் நம்பினால் தயவு செய்து மீண்டும் உரிமைக் குழுவுக்கு அனுப்பி இன்னும் கொஞ்சம் விசாலமான முறையில் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : I rise to support in to the decision and conclusion of the Privilege Committee in regard to the walk-out staged by Thiru A. Balasubramaniam and others.

[Dr. H. V. Hande] [1970 ஆகஸ்ட் 31

At the outset, I request the Hon. Speaker to give me some more time since I have an entirely different point of view to express, other than what has been expressed by Thiru Sankariah. The hon. Member Thiru Sankariah was talking about democracy, Constitution and other things. I was wondering whether the meaning of these words are known to him.

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். குறிப்பிட்ட வார்த்தைகளை நான் அறிவேனா இல்லையா என்பதல்ல விவாதம். உரிமைக் குழுவின் பரிந்துரையைப் பற்றிய அவர் கருத்தைக் கூற வேண்டும். குறிப்பிட்ட வார்த்தைகளைப் பற்றி, ஜன நாயகம் என்றால் என்ன என்பதைப் பற்றி எனக்குத் தெரியுமா என்று பேசுவது முறையல்ல. அப்படிக் கேட்டால் அவரைக் காட்டிலும் அதிகப் பரிச்சயம் இருக்கிறது என்று நான் குறிப்பிட முடியும்.

Dr. H. V. HANDE : My only submission was that the Member was using certain words and I wanted to know whether he knew the meaning of those words. He was talking about Constitution, using such a grandious word.

Thiru M. BHUPATHY : Point of order, Sir, the hon. Member has no business to say that we do not know the meaning of the words which we are using.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கூறி எழுந்து, உங்கள் பெயரிலேயே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பு கின்ற மாதிரி பேசுகின்றீர்களே.

Dr. H. V. HANDE : I will just read about the constitutional provision under Article 175. It says :

"The Governor may address he Legislative Assembly or in the case of a State having a Legislative Council either House of the Legislature of the State, or both Houses assembled together, and may for tha purpose, etc. . ."

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பற்றி என்ன சொன்னார்? உங்களைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே.

டாக்டர் எச். வி. ஹாண்டே : I was just reading Article 175.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோளுக்கு இப் பொழுது இடம் இல்லை.



1970 ஆகஸ்ட் 31]

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். உலகத்தில் யார் இருக்கிறார்கள் என்று விவாதிக்கவில்லை. குறிப் பிட்ட பிரச்னையைப் பற்றி விவாதிக்கிறோம். அவர் பேசுவது ரெலவன்ட் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது நடைமுறை மாறி யிருந்தால் நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமே தவிர, இப்படித்தான் பேச வேண்டும், அப்படித்தான் பேசவேண்டுமென்று கூறுவதற்கு நீங்கள் இல்லை. அந்தப் பொறுப்பு எனக்கு இருக்கிறது. எந்த முறையையும் மீறவில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ரெலவன்ட் பாயின்ட்தான் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரெலவன்ட் பாயின்ட்டைப் பேசாமல் வேறு எதைப் பேசினார்?

Dr. H. V. HANDE : Finally there is a proviso under Article 176 (2) which says as follows :—

> "Provision shall be made by the rules regulating the procedure of the House or either House for the allotment of time for discussion of he matters referred to in such address".

In other words, rules laid down by our Assembly, are within the purview of the Constitution and therefore our rules are *intra vires* of the Constitution and not *ultra vires*.

There are a number of persons in this country who do not believe in the Constitution at all. They will even burn the Constitution.

திரு. என். சங்கரய்யா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். கீழ்வெண்மணி சம்பவத்தை பற்றிக் குறிப்பிடும்போது அந்தப் பிரச்னைக்குள்ளே போகவில்லை. அந்தச் சம்பவங்கள் நடந்தன என்பது உண்மைதான். அதுபற்றி இந்த சட்டமன்றத்திலே ஆட்சே பணைக் குறிப்புக் கிளப்பப்பட்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட் டேன். இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு அங்குள்ள பிற்போக்கு சக்திகள் அவர்களோடு சுதந்திராக் கட்சியும் சேர்ந்து செய்த சதியை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மீது பழியை சுமத்தி...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேர்களும் அதற்குள் போக வேண்டாம். இந்த ப்ரிவிலேஜ் மோஷனைப்பற்றிப் பேசுங்கள்.

'Every speech must be strictly relevant to the matter before Rule 66 says—

'Every speech must be strictly relevant to the matter before the Assembly'.

The hon. Member, Dr. Hande . . .

(Interruption from Dr. H. V. HANDE.)

I did not finish my point of order. Why is he intervening ?

நீ அல்ல ஐயா ஸ்பீக்கர்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. ஞானசம்பந்தன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பார்த்து நான், நீ என்றெல்லாம் பேசுவது நல்லதல்ல. தயவுசெய்து அதைத் திரும்பப் பெறுவது நல்லது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : எனக்கு அந்த இன்டன்ஷன் இல்லை. நீங்கள் என்று தான் சொல்ல வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் என்னைப் பார்த்துச் சொல்லவேண்டும். அவர்களைப் பார்த்து அப்படிப் பேசுவது என்பது சரியல்ல...........

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : அவர் குறுக்கிட்டதால் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என்னிடம் சொல்ல வேண்டும். என்னைப் பார்த்துத்தான் பேசவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விவாதம் நடப்பது வேறு விஷயம். ஆனால் நண்பர் திரு. ஞானசம்பந்தன் அவர்கள் "நீ அல்ல ஐயா ஸ்பீக்கர்" என்று கூறியது உள்ளபடியே இந்த சபையின் மரபிற்கு ஏற்றதல்ல. அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வார்களானால் உள்ளபடியே நம் மரபை காப்பாற்றியவர்களாவார்கள்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : நூரையும் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை. ஒரு கால் நான் பேசும்போது அந்த வார்த்தை வந்திருக்கலாம். எனக்கு யாரையும் சிறுமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : வேறு ஒரு முக்கியமான பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது. யார் கொளுத்தினார்கள் என்பது கோர்ட்டில் விசாரணையில் இருக்கும்போது அதுபற்றி, மார்க்ஸிஸ்ட்தான் கொளுத்தினார்கள் என்று பேசுவது சட்டப்படி விரோதமானது...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் பேசினீர்கள், அவர்களும் பேசினார்கள். நீங்கள் உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.



DR. H. V. HANDE : Now, the hon. Member, Thiru Sankariah says that he has faith in the Constitution. I would have been very happy if my distinguished Friend, Thiru A. Balasubramanyan has made an apology but I am sorry to say that not in one place he has apologised. If the hon. Member has faith in the Constitution, he must follow the rules framed under the Constitution.

Now, what does Rule 12 say ? It says—

'When the Houses of the Legislature are assembled together under Article 175 or 176 or when the members of the Assembly alone have assembled, under Article 175 of the Constitution, no member shall obs ruct or interrupt the Address either before or after the Address or during its duration with any speech or poin of order or in any other manner......... (even walk-out).

The next question is what is our attitude towards walk-out ? On behalf of our Party I can say with firmness that we are for walk-out provided it is done within the framework of the Constitution and not outside it. For instance, a few minutes ago there was a walk-out and it is the privilege of the Members to stage a walk-out on such issues. They can walk-out and walk-in, to their heart's content. But during the Governor's Address, does the Constitution allow it ? No, it does not allow it and therefore it is a serious thing to stage a walk-out during the Governor's Address and I want the House to consider it.

Then, I come to the other point with regard to Legislatures. First of all, I want to ask, whether we believe in Legislatures and their functions. My distingushed friend has brought in May's Parliamentary Practice and stated that there was no point in following the British Parliamentary practices. He has accused the British Parliamentary Practices as 'Egathipathiyam'. In this connection, I want to point out that there are some sort of Parliaments in Russia and China but I want to know the position of the opposition in those countries? Whether rules there allow any Opposition Member to stage a walk-out. In those countries there is no opposition party, because no opposition party is allowed to exist. But here we have got more rights as are provided in the British Parliamentary Practices than those enjoyed by the people in Russia and China. The Hon. Speaker can write to these countries and try to get their rules.

Now, another question is, did any Member who opposes this rule give notice of an amendment that rule 12 should be deleted? I was also a Member of the Rules Committee and in that Committee no Member proposed such an amendment. Now, whatever the Hon. Speaker says with regard to a matter I have to agree and sometimes I will try to convince him but if he gives a ruling against me, I am bound to obey it. That is how the rules have been framed.

[Dr. H. V. Hande] [1970 ஆகஸ்ட் 31

Now, my other point is that there is an opportunity to stage a walk-out the next day after the Governor's Address, and not during the Governor's Address. If the Chair allows a walk-out during the Governor's Address, what would happen ? Hereafter, there would be no Governor's Address. The idea of staging a walk-out during the Governor's address was only to get more publicity and show exhibitionism.

Then a question has been raised, whether the Governor's right or privilege has been affected. Whether the Governor has the right to claim privilege ? Definitely the Governor does not have any privilege as such. But the Governor has to discharge some functions to this House. The functioning of this House during the Governor's address has been affected.

It is therefore not the privilege of the Governor, but the privilege of the House that is involved.

Then I come to the most important point relating to Kilvenmani incident and I do not want to go into details. With regard to the ghastly incident at Kilvenmani where 42 Harijans were burnt alive a Commission of Enquiry was probing into the matter and what would have happened if an exhibitionism of that kind was allowed to be made in this House. The report of that Commission would have been vitiated and that is an important point.

Another important point is that yesterday I went to Thiruvarur where I was told that a number of persons belonging to the Marxist Party of India had set fire to the huts where those 42 Harijans were living and that those Harijans were huddled together in one house and burnt. So it is not the mischief of somebody-else but it is the mischief done by Marxist Communist Party of India. Mr. Balasubramanian has not even felt sorry for his behaviour during the Governor's Address. He must have expressed regret. I had writen a long letter to Hon. Speaker expressing regret over some incidents. I had expressed regrets even on some occassions. The next day when I came to the House I apologised. These are things which we do, the object being not to hurt anybody's feelings and to be respectful to all. There is nothing wrong in tendering an apology later, for what one had done at the spur of the moment. If only that apology had been tendered, things would have taken a different turn and the matter would have been dropped there itself. He could have said :—

"உணர்ச்சி வசப்பட்டு நாங்கள் செய்தோம். மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம்" என்று சொல்லி இருக்கலாம்.

It is said in Article 176 (2) that provision shall be made by rules regulating the procedure of the Houses or either House for the allotment of time for discussion of matters referred to in such address. The address refers to 'Governor's Address'. We in Madras Assembly, have laid down a rule in our rules prohibiting



1970 ஆகஸ்ட் 31] [Dr. H. V. Hande]

any kind of speech, obstruction or interruption during Governor's Address. Such an interruption might be considered as a gross disorderly conduct and should be dealt with in such a manner as the House might deem fit. My submission is this House has earned great respect all over the country. Let us not try to quote Lok Sabha or Parliament of United Kingdom. Ours is accepted as the best House in the whole of India. There can be no two opinions on that. Everybody agrees with that all over the country, our House is the best. Therefore I request the House, irrespective of party affiliation, to consider this question. Let us not have any exhibitionism and have walk-outs during Governor's Address. Walk-outs may be done if necessary at other times in the House, as is being done now. We can criticise the Minister, Chief Minister or Government. But let us try to preserve our dignity and keep our decorum when Governor addresses both Houses of this State. Let us not try to have a ghastly scene when he addresses us. Thank you.

திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் பேசப்போகிறீர்களா ?

திரு. வி. கே. கோதண்டராமன் : பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்தவர்தான் பேச வேண்டும். கிட்டத்தட்ட 1 மணி நேரம் திரு. சங்கரய்யா பேசி இருக்கிறார். இதற்கு மேலும் அதைப் பற்றிப் பேச வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர் பேசாத விஷயங்களைப் பற்றி பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் பேச வேண்டுமென்றால் எப்படி?

ஓர் உறுப்பினர் : எழுதிக் கொடுத்து விடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எழுதிக் கொடுப்பது என்றால் இந்தச் சபையில் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி—பேசுகிறீர்களா ?

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த உரிமைப் பிரச்னை மீது நமது மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. சங்கரய்யா அவர்கள் எதற்கு அன்று வெளிநடப்பு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அதாவது, 44 ஹரிஜன விவசாயிகள் ...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எதற்காக நடந்தது என்பது அல்ல பிரச்னை. வாக்-அவுட் செய்தது சரியா, இல்லையா என்பதுதான் பிரச்னை. எதற்காக என்ற பொருள் பற்றி அல்ல.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அந்த உணர்ச்சியை வெளிப்படுத்த, அன்று நாங்கள் வெளி நடப்பு செய்தோம். அந்த வெளிநடப்பு செய்த வகையில் கவர்னர் உரைக்குத் தடங்கல் விளைவிக்கிற வகையில் கூச்சலோ குழப்பமோ எதுவும் செய்யாது வெளிநடப்பு செய்தோம். செய்தது சரி என்று கருதுகிறோம். இதைத் திரும்பவும் உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் சொல்கிறேன். உங்கள் கட்சித் தலைவர் பேசியாகிவிட்டது. அப்புறம் நீங்கள் பேசுகிறேன் என்றால், எப்படி? எல்லோரும் பேசுவதற்கு முடியுமா?

திரு. வி. கே. கோதண்டராமன் : 5 நிமிடம் பேசுகிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : உரிமைப் பிரச்னையில் பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் பேச சந்தர்ப்பம் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையில்லாமல் பேசுவது என்றால் சபையை நடத்துவது...........

திரு. வி. கே. கோதண்டராமன் : நீங்கள் அனுமதி செய்தால் பேசுகிறேன். அவர் பேசாத சில விஷயங்களைப் பற்றி நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசாததை அவர் பேசுகிறேன் என்பார். இப்படி எல்லோரையும் அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் ஏற்கனவே உரிமைக்குழுவுக்கு அனுப்பப்பட்டு, இந்த மன்றத்திலே அவைமுன்னவரால் வைக்கப் பட்டுள்ள இந்தப் பரிந்துரைக்கு திருத்தத்தைத் தந்து, அது மீண்டும் உரிமைக்குழுவிற்கான மறுபரிசீலனைக்குச் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டு ஒரு நீண்ட உரையினை ஆற்றி இருக்கிறார்கள்.

கவர்னர் உரையின்போது எப்படி நடந்துகொள்ள வேண்டு மென்பதற்காக நம்முடைய சட்டப்பேரவைக்கான விதிமுறைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதைக் குறிப்பிடுகின்ற விதிதான் 12-வது விதி என்றும் நண்பர் திரு. சங்கரய்யா சுட்டிக்காட்டி, இந்த விதி 3 மாநிலங்களைத் தவிர, வேறு இடங்களில் இல்லை, நாடாளு மன்றத்தில், லோக் சபையில் இல்லை என்று எல்லாம் சுட்டிக்காட்டி னார்கள். கவர்னர் அவர்களுடைய உரையின்போது அவர்கள் வெளி நடப்பு செய்ததற்கு என்ன காரணம் என்பதனையும் அவர்கள் குறிப்பிட் டார்கள். கீழ்வெண்மணியில் நடைபெற்ற கொடுமையைப்பற்றி விவாதிப்பதற்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குத் தங்களுக்கு



அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, தங்களுடைய உணர்ச்சிகளைக் காட்டிக்கொள்வதற்காக வெளிநடப்பிலே ஈடு பட்டோம் என்றும் அவர்கள் இங்கே வாதிட்டார்கள்.

அவர்கள் கவர்னர் அவர்கள் உரையாற்றிய நேரத்தில் இந்த இடத்திலே அமர்ந்து இருந்திருப்பாரானால், வெளிநடப்பிலே ஈடுபடாமல் இருந்திருப்பாரானால், கவர்னர் பெருமானுடைய உரையிலேயே இதுபற்றிக் குறிப்பிட்டிருந்ததைக் கேட்டிருப்பார்கள். It is a matter for regret that in spite of all these efforts a serious tragedy should have taken place at Kizhvenmani in Eas Thanjavur. I am sure that the House will share with me the sense of shock and profound grief over this inhuman exhibition of violence and callousness. என்று கவர்னர் அவர்கள் இந்த மன்றத்திலே உரை யாற்றிய நேரத்தில், தெரிவித்த கீழ்வெண்மணிச் சம்பவத்திற்கான ஆழ்ந்த அனுதாபத்தோடு மதிப்பிற்குரிய உறுப்பினர்களும், இருந்து தங்களுடைய அனுதாபங்களைப் பங்கிட்டுக்கொண்டு இருக்க முடியும். ஆனால், அவர்கள் அன்றைய தினம் வெளியேறி விட்டார்கள். அப்படி வெளியேறியது சரிதானா, அல்லவா என்று ஆராய்ந்து பரிந்துரை செய்ய, அந்த விவகாரம் உரிமைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது.

இப்போது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ன கருத்தைச் சொல்கிறார் என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் எனக்குக் கொடுக்க முடியாமல், அவர்கள் வெளியே சென்று விட்டார்கள். உள்ளே இருந்து இருந்தால் என்ன கருத்தைச் சொல்லி இருப்பாரோ, தெரியாது. ஆனால், உரிமைக் குழுவில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கலந்து கொண்ட உறுப்பினர்கள், கவர்னர் உரையின்போது வெளி நடப்பு செய்தது தவறு என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் அந்த உரிமைக்குழுவின் பரிந்துரைக்கும், இப்போது நடக்கும் நிகழ்ச்சிக்கும் இடையில் கால இடைவெளி அதிகமாக இருக்கிற காரணத்தால், இன்று இருந்திருந்தால் என்ன பேசி இருப்பார்களோ, தெரியாது.

நான் கூட கருதினேன், இருவரும் சேர்ந்து உரிமைப் பிரச்னைமீது பேசி, உரிமைக் குழுவிற்கு மறுபரிசீலனை செய்ய அனுப்ப வேண்டு மென்று சேர்ந்து பேசி விட்டு, இரண்டு கட்சிக்காரர்களும் வெளி நடப்பு செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். முதலில் அவர்கள் போய்விட்டார்கள்.

ஆனால், கவர்னர் உரையின் மீது, கவர்னருக்கு மதிப்பு கொடுத்து விட்டு, கவர்னர் பற்றியோ, கவர்னர் பதவி பற்றியோ, எந்தவிதமான மாறுபாடான கருத்து இருந்தாலும், அவருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை, மதிப்பு மரியாதைகளை, அதை ஏற்றுக்கொண்டான பிறகு நாம் அளித்துத்தான் தீர வேண்டும். சில மாநிலங்களில் கவர்னர் வருகிறபோது எழாமல் இருந்தார்கள். கவர்னர் உரை யாற்றுகிற நேரத்தில் கூச்சல் போட்டார்கள் என்று செய்தி வருகிறது. ஆனால், நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரை,

யில் அப்படிப்பட்ட செய்திகள் வரவில்லை. கவர்னர் வருகிறபோது எழாமல் இருப்பதோ, அல்லது கவர்னர் உரையின்போது வெளி நடப்பில் ஈடுபடுவதோ நம்முடைய மரபுக்கு ஏற்றது அல்ல என்பது மாத்திரமல்ல, கவர்னர் உரைக்கு நாம் உருவாக்கி இருக்கிற விதி முறைகளுக்கு ஒத்தது அல்ல.

லோக்சபையில் அப்படி விதி இருக்கிறதா என்று திரு. சங்கரய்யா கேட்டார்கள். லோக்சபையில் விதி இல்லை. ஆனால், அங்கே என்ன நடைபெற்று இருக்கிறது. லோக்சபையின் நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது

'On 18th February 1963 in the Lok Sabha when the President of India started reading his Address under Article 87 of the Constitution of India (identical to Articlt 176 of the Constitution) to both the Houses of Parliament assembled together in English some Members interrupted the proceedings and staged a walk-out. A Committee was appointed to consider their conduct and the Committee reported tha any interruption and walk out during the President's speech would be considered grossly disorderly conduct and for such disorderly conduct a Member could be suspended for a period which may extend to one year. . . .'

இப்படி அங்கே விதி இல்லாவிட்டாலும், அதற்குப் பிறகு அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு குடியரசுத் தலைவர் அவர்களின் உரையின் மீது வெளிநடப்புச் செய்தவர்கள் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாக வேண்டும் என்று தன்னுடைய அபிப்பிராயத்தை வழங்கியிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. இங்கே அப்படியே இருக்கின்ற விதி, அந்த விதியை மீறுவது உரிமையை மீறுவது என்பதன்பாற்பட்டதுதான். அங்கே விதி இல்லாமலேயே, அது உரிமையை மீறுவது என்பதன்பாற்பட்டது என்ற அளவில், அங்கே அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதே கருத்தை அந்தக் குழு அறிவித்திருக்கிறது. இங்கே விதியை வைத்துக் கொண்டு, விதியின்படி நடவாமல் உரிமை மீறப்படுகிற நேரத்தில், கவர்னர் உரைக்காக வகுத்துள்ள விதிமுறைகள் மீறப்படுகிற நேரத்தில், அதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதிலும், அந்தக் குழு பரிந்துரை செய்வதிலும் எந்தவிதமான தவறும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

திரு. சங்கரய்யா அவர்கள் கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதை விவாதிப்பதற்கு இந்தச் சபையில் இடம் கிடையாதா, எவ்வளவு பெரிய சம்பவம் என்றெல்லாம் கேட்டார்கள். அந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்கள் எவ்வளவு உருக்கமாகவும் உள்ள நெகிழ்ச்சியோடும் இருக்கிறார்களோ, அதைவிட அதிகமாக தி.மு.க-வைச் சார்ந்த எங்களுக்குச் சங்கடமும் மனவருத்தமும் உண்டு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்வெண்மணியில்கூட பஞ்சாயத்துத் தேர்தலில் தி.மு.க. வைச் சேர்ந்தவர்தான் வெற்றி பெற்றிருக்கிறார்.



அங்கத்தினர் அவர்கள் இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேசுவதற்குத் தங்களுடைய உணர்வுகளைக் காட்டிக்கொள்ள இடமே தரப்படவில்லையா என்றால், தரப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தரப்பில் இந்த அரசின்மீது கீழ்வெண்மணி சம்பவத்திற்காக ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதன் பேரில் இங்கே நீண்ட நேரம் விவாதம் நடந்திருக்கிறது. அந்த விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்டு திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டது நடவடிக்கை குறிப்பில் இருக்கிறது. அது இப்பொழுது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

"இங்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானம் அரசியல் முதல் பெறுவதற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களைச் சார்ந்த ஒரு காங்கிரஸ் உறுப்பினர் மூலமாகக் கொண்டுவரப்பட்ட போதிலும், உண்மையிலே இது நிலப்பிரபுக்களின் சார்பிலே கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்ற காரணத்தினால், இன்று நிலப்பிரபுக்களுக்கு எதிராக உள்ள இலட்சக்கணக்கான ஏழை எளிய உழைப்பாளி மக்களின் பெயரால் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம்"

என்று திரு. சங்கரய்யா அவர்கள் இங்கே பேசியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. உலகத்தில் பல விஷயங்கள் ஞாபகத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நேரத்தில், காங்கிரஸ் கட்சி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு உரிமை இல்லை, ஏனென்றால், போலீஸார் மேற்கொண்டிருந்த பூந்தாழங்குடி வழக்கை தி.மு.க. அரசு திரும்பிப் பெறுவதற்கு சம்மதித்த நேரத்தில் திரும்பிப் பெறக்கூடாது என்று முட்டுக்கட்டை போட்டவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான், அவர்களுக்கு இந்தக் கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று திரு. சங்கரய்யா அவர்கள் முழக்கிய முழக்கங்கள் இந்த மாமன்றத்தின் சுவர்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. அது வேறு விஷயம்.

இந்த விஷயத்தைப்பற்றி அவர் எடுத்துச்சொல்லவேண்டுமென்று விரும்பினால், அந்த விஷயம் கவர்னர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்திலும், கண்டனத் தீர்மானத்தின்பேரில் நடந்த விவாதத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டு, விவாதிக்கப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்களின் உரையின்பொழுது அவர்கள் அவசரப்படாமல், வெளி நடப்புச் செய்யாமல் அமர்ந்திருந்தால், கவர்னர் அவர்களுடைய உரையில் தொடக்கத்தில் நான் படித்துக் காட்டியபடி, அனுதாபத்தை இந்த மன்றம் முழுவதும் செலுத்தும்பொழுது தங்களுடைய பங்கையும் செலுத்தியிருக்கமுடியும்.

கவர்னர் உரையின்போது வெளிநடப்புச் செய்வது உரிமை மீறிய செய்கை. கவர்னர் உரைக்கு வராமலே இருந்தாலும், இருந்து விடலாம். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த சமயத்தில் ஒரு முறை

[திரு. மு. கருணாநிதி] [1970 ஆகஸ்ட் 31

கவர்னர் உரைக்கு வராமல் இருந்தபொழுது, காங்கிரஸ் கட்சி சார்பிலே எங்கள்மீது உரிமை மீறிய பிரச்னை கொண்டுவரப்பட்டு, அது ஆராயப்படுகிற நேரத்தில், மன்றத்தில் வந்து அமர்ந்திருந்து உரிமை மீறுகின்ற காரியத்தில் ஈடுபட்டால்தான் உரிமை மீறுகின்ற வகையிலே வரும், வராமலே இருந்துவிட்டால், உரிமை மீறுகிற வகையிலே வராது என்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். மன்றத்திற்கு வராமலேயே இருந்துவிடுவது என்பது வேறு. மன்றத்திற்கு உள்ளே வந்திருந்து, கவர்னர் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில் வெளிநடப்புச் செய்வது என்பது கவர்னர் அவர்களுக்கு நாம் தரவேண்டிய மரியாதை, நாம் அளிக்கவேண்டிய மதிப்பு இவைகளை அளிக்கத் தவறியதாகும் என்பதுமட்டுமல்ல, கவர்னர் உரைக்காக நாம் வகுத்திருக்கிற விதிகளை மீறுவதாகும் என்ற அளவில், அவர்கள் குறிப்பிட்ட மாதிரி அவர்கள் தந்திருக்கிற திருத்தத்தை நான் நிச்சயம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறி, அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : நான் என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன் என்று சொல்வதற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டாவது முறை கனம் உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கு இடமில்லை. அமெண்டுமெண்டு கொடுத்தவர் இரண்டாவது முறை பேசுவதற்கு சட்டசபை விதிகளில் இடமில்லை. திரு. சங்கரய்யா அவர்களின் திருத்தத்தை இப்பொழுது வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" அறிக்கையின் இறுதியில் சேர்க்கவும் :—

" அத்தகைய பரிசீலனையின் பேரில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் மற்றும் சில பேரவை உறுப்பினர்களுக்கெதிரான அவையுரிமைப் பிரச்சினை மீண்டும் அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் "

திருத்தம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு. என். சங்கரய்யா : நான் டிவிஷன் கேட்கிறேன்.

[எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கான மணி ஒலிக்கப்பட்டது.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது திரு. சங்கரய்யா அவர்களுடைய திருத்தம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. திருத்தத்தை ஏற்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன்...... திருத்தத்தை மறுப்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன். (திருத்தத்தை ஏற்போரும், மறுப்போரும் எழுந்து நின்ற பிறகு)

திருத்தத்தை ஏற்போரின் எண்ணிக்கையைக் காட்டிலும், மறுப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணத்தினால், திருத்தம் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.





திரு. என். சங்கரய்யா : நாங்கள் இந்தப் பிரச்சினையை மீண்டும் அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கொண்டுவந்த ஒரு நியாயமான திருத்தத்தைக்கூட ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், மேற்கொண்டு இந்தப் பிரச்னையின்மீது நாங்கள் விவாதத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை. ஆகவே, சபையை விட்டு வெளியேறுகிறோம்.

பிறகு இந்திய கம்யூனிஸ்டு கட்சி, கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சி, சம்யுக்த சோஷலிஸ்டு கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"30—3—1970-ம் நாளன்று சட்டப்பேரவைமுன் அளிக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்றும் சில பேரவை உறுப்பினர்களும் 1969-ம் ஆண்டு சனவரித் திங்கள் 25-ம் நாள் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்குபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191 (b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (d) விதியின்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது. "

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் ஏற்கப்பட்டன.

## 4. அமைச்சரின் விளக்க உரைகள்—தொடர்ச்சி

[மதுரை மாவட்டம் சிலைமானில் ஒரு நபருக்கு மின் இணைப்பு கொடுப்பதில் மின்சார அமைச்சர் தலையிட்டதாக திரு. கே. விநாயகம் கூறியது பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே 28—8—1970 தேதியில் காங்கிரஸ் கட்சிக் கொறடா திரு. கே. விநாயகம் அவர்கள் மதுரை மாவட்டம் சிலைமான் என்ற ஊரில் ஒரு நபருக்கு மின் இணைப்பு கொடுப்பதில் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் சட்ட விரோதமாகத் தலையிட்டு மேற்படி நபருக்கு தீமை விளைவித்துவிட்டார் என்று குற்றம் சாட்டினார். அதுபற்றி விசாரணை செய்தேன். மதுரை மாவட்டம், மதுரை தாலுகா, சிலைமான் என்ற ஊரில் உள்ள

திரு. என். முகமது செரீப் அவர்கள் மனைவி திருமதி ரகுமத் பீபி அவர்கள் மேற்படி கிராமத்தில் சர்வே எண் 122/3-ல் 2½ செண்ட் நிலத்தில் புதிதாக வெட்டப்பட்டு வரும் கிணற்றுக்கு மின் இணைப்புக் கேட்டு 7—4—1969-ம் தேதி மனுப் போட்டார்கள். மின் இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மின்சார வாரியத்தினர் எடுத்து வந்தனர்.

இதற்கிடையில் மேற்படி சிலைமான் ஊரில் உள்ள திரு. காதர் ராவுத்தர் மகன் திரு. சையது முகமது சவுத்லீ என்பவர் மேற்படி கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுத்தால் ஏற்கனவே வெட்டியுள்ள தன்னுடைய கிணற்றுக்கும் அதற்குப் பக்கத்தில் உள்ள நிலங்களுக்கும் ஆபத்து ஏற்படும் என்று 21—7—69-ல் மின்சார வாரியத்திற்கு ஆட்சேபனை மனு செய்துள்ளார். மேலும் மேற்படி கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுக்கக் கூடாது என்று மதுரை வட்ட முன்சீப் நீதி மன்றத்தில் 1969-ம் ஆண்டு ஓ.எஸ். நெ. 173 என்ற நெம்பரில் சிவில் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் பிரதிவாதியாகிய திருமதி ரகுமத் பீபி அவர்கள் கிணறு வெட்டியிருக்கக்கூடிய 2½ செண்ட் நிலத்தை 12—4—1969-ல் கிரயம் பெற்றுள்ளார். இந்த கிரயம் பெறுவதற்கு 5 நாட்களுக்கு முன் அதாவது 7—4—1969-ல் மின் இணைப்புக்கு மனு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி வழக்கில் மதுரை வட்ட முன்சீப் அவர்கள் பிரதிவாதியாகிய திருமதி ரகமத் பீபி தாவாவில் உள்ள மேற்படி கிணற்றில் மின்சார பம்ப் செட் வைக்கக் கூடாது என்று 1969 ஐ.எ. நெ. 397-ல் ஒரு இடைக்கால தடை உத்தரவும் பிறப்பித்துள்ளார். பின்னர் அந்த உத்தரவு அவரால் ரத்து செய்யப் பட்டுள்ளது. இதை எதிர்த்து வாதி மதுரை சப் கோர்ட்டில் 1969 சி.எம்.எ. 534 மனுவில் அப்பீல் செய்துள்ளார். அந்த அப்பீல் Default க்காக 25—4—1970-ல் தள்ளுபடி செய்யப்பட்டது. மறுபடியும் மேற்படி சி.எம்.எ. 534 ஆம் மனுவை விசாரித்து இடைக்கால தடை உத்தரவு மீண்டும் கொடுக்க வேண்டும் என்று 1970 ஐ.எ. 166 ஆம் மனுவில் மேற்படி சப் கோர்ட்டுக்கு மனு செய்து அந்த மனுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி சி.எம்.எ. விசாரணையில் உள்ளது.

இவைகளிலிருந்து திருமதி ரகமத் பீபி தாவா கிணற்றில் பம்ப் செட் வைக்கக் கூடாது என்று கோரும் சி.எம்.எ. 534-ஆம் மனுவும், மதுரை வட்ட முன்சீப் நீதி மன்றத்தில் தொடக்கத்தில் தொடரப் பட்ட ஓ.எஸ். 173 ஆம் எண் வழக்கும் மேற்படி 2 நீதி மன்றங்களிலும் இன்று வரை விசாரணையில் இருந்து வருவது தெளிவாகும்.

மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களிடம் மேற்படி வழக்கில் வாதியாகிய சவுத்தலி வகையறு இப்படி வழக்குகள் இருக்கின்ற விவரங்களை எடுத்துக்கூறி இராமநாதபுரம் மாவட்ட 'கண்காணிப்புப் பொறியாளர்' (S. E.) அவர்கள் இந்த விஷயங்களை நியாயமான முறையில் விசாரிக்காமல் ஒரு தலைப் பட்சமாக மின் இணைப்பு கொடுத்துவிட்டால் தனக்கு பேர் இழப்பு ஏற்படும் என்றும்





ஆகவே வழக்கு முடியும்வரை மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்றும் முறையிட்டுள்ளார்கள். மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் இந்த விவரங்களையெல்லாம் மேற்படி எஸ்.இ. அவர்கள் தீர விசாரணை செய்ததற்கு பின்னுல் சட்டப்படி முடிவெடுக்குமாறு தகவல் அனுப்பி உள்ளார்கள். மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்று எஸ்.இ. அவர்களிடத்தில் கூறியதாக குற்றம் கூறுவது பொருத்தமற்றதாகும்.

மேற்படி எஸ்.இ. அவர்களும் அமைச்சர் அவர்கள் கூறியபடி இரு தரப்பார்களையும் விசாரணை செய்து மின்சார வாரியத்திற்கு அறிக்கை தந்தார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையின் சட்ட ஆலோசனை பெறப்பட்டது. மேற்படி சட்ட ஆலோசகர் தாவா கிணறு பற்றி வழக்கு மன்றங்களில் வழக்குகள் இருப்பதால் வாரியத்திற்கு பிற் காலத்தில் இழப்பு ஏதும் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக முன் எச்சரிக்கையாக முன்பணம் ரூ. 2,190-ம் இன்டெமினிட்டி பாண்டும் (பொறுப்புப் பத்திரமும்) வாங்கிக் கொண்டு மின் இணைப்பு கொடுக் கலாம் என்று கருத்து தெரிவித்தார். அந்த அடிப்படையில் மின் இணைப்பும் உடனடியாக கொடுக்கப்பட்டது.

மேலே விளக்கியபடி இன்றுவரை இரண்டு நீதி மன்றங்களில் இதுபற்றிய தாவா இருந்தும் மின்சார வாரியம் நல்லெண்ணத்துடன் பொறுப்புப் பணம் மட்டும் பெற்றுக்கொண்டு மின் இணைப்பு உடனடியாக கொடுத்து இருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

இரண்டு தனி நபர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற சொத்து தகராறின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை இருந்திருக்கிறது. இது பற்றி சட்ட ஆலோசனை பெற்று தீர விசாரணை செய்து முடிவு எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் எஸ்.இ. அவர்களுக்கு தகவல் கூறியது எந்த விதத்தில் குற்றம் என்று எனக்கு புரியவில்லை. வழக்குகள் இரண்டு நீதி மன்றங்களில் இருப்பதால் நான் வழக்குகளைப்பற்றி அதிகம்கூற விரும்பவில்லை. இது தனி நபர்களுடைய பிரச்சினை. ஏதோ, அரசியல் கட்சிப் பிரச்சினையாக விளம்பரம் தந்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு மாசு கற்பிக்க முனைந்தது வருந்தத் தக்க செயலாகும்.

திரு. கே. விநாயகம்: சார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ, நோ. இதன்மேல் டிபேட் கிடையாது.

THIRU K. VINAYAKAM : Sir, please listen to me. The Hon. Chief Minister has no business to make a statement now. I want a clarification on that...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல் 82-ன் கீழ் அளிக்கப்பட்ட ஸ்டேட்மெண்டின் பேரில் எந்தவிதமான கிளாரிபிகேஷனே விவாதமோ கிடையாது.

THIRU K. VINAYAKAM · That is how they take cover. They want to incapacitate me...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கே இடமில்லை என்று சொல்லுகிறேன், தாங்கள் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி?

THIRU K. VINAYAKAM : Sir,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்திற்கோ, விவாதத்திற்கோ இடம் இல்லை என்று நான் சொல்லவில்லை, விதிகள் அப்படி இருக்கின்றன. விதிகள் தெளிவாகச் சொல்லிய பிறகு எப்படிப் பேச முடியும்? அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். திரு. கோ. பூவராகன் அவர்கள் பேசுவார்கள்......

திரு. வி. எஸ். கோவிந்தராசன் :தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும்போது சுட்டு விரலைக் காட்டி, "லிசன் டு மி" என்று சொல்லலாமா?

## 8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின்1970–71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம் இன்றைய தினம் முடிய இருக்கிறது என்று கருதுகிறேன். இரண்டு மூன்று தினங்களாக பல உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆண்டு தோறும் ஒரு முறை சட்ட மன்ற உறுப்பினர் விவாதத்திலே கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்கிறது. செலவழிக்கும் பணத்தை பற்றி ஓட்டு எடுக்க முடியாத நிலை. பொதுத்துறையில் அதிகப் பணியாளர்களைக் கொண்டு, பணியாற்றி வருகிறது. நல்ல முறையில் பணியாற்ற கருத்துக்களைச் சொல்வதற்கு இந்த சந்தர்ப்பம் பயன்படுகிறது. இப்படி ஆண்டுக்கு ஒரு முறை இருப்பதைக் காட்டிலும்,

(திரு. கே. ஆர். கோவிந்தன் தலைமை)

ஆண்டுக்கு இரு முறை, ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்று வாரியத்தைப் பற்றி அங்கத்தினர்கள் கருத்துக்களைக் கூற சந்தர்ப்பம் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்ட கருத்துக்களைப் பொறுத்து, அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஒரு அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. என்றுமே இல்லாத நிகழ்ச்சிகள் மூன்று மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. மின்சார இலாகா ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து, மனக்கசப்பு ஏற்படும் வகையில் நடந்திருக்கிறது. மின்சாரம் உற்பத்தி செய்யும் நெய்வேலியில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு, அங்கத்தினர்கள் வருந்தும் அளவில் நடந்திருக்கிறது. மின்சாரத்தை உபயோகிக்கும் விவசாயிகளிடம் மனக் கசப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாமா என்று பார்த்தால், தவிர்த்திருக்க முடியும் என்றே தோன்றுகிறது.



இந்தச் சூழ்நிலை உருவாகியதற்குக் காரணம் சில உறுப்பினர்கள் அன்றைய தினம் பேசினார்கள். நண்பர் திரு. வி. டி. அண்ணாமலை என்று கருதுகிறேன். அன்று எல்லோரும் ஒருமித்த கருத்தாகத்தான் குறைக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். 75 அடி ஆழத்திற்கு மேல் உள்ள எல்லா கிணறுகளுக்கும் சலுகை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அன்றைய தினம் திரு. கருத்திருமன் அவர்கள் 'திரு. மன்றாடியார் அவர்களே பத்து பைசாவுக்கு ஒத்துக் கொண்டார்கள்' என்று பேசினார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, திரு. மன்றாடியார் அவர்கள் 9 பைசாவுக்கு ஒத்துக்கொண்டு போய்விட்டார் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. பத்து பைசாவுக்கு ஒத்துக் கொண்டு போய்விட்டார் என்று நான் சொல்லவில்லை.

திரு. கோ. பூவராகன் : அவர்களாவது வந்து குறைப்பதற்கு போராடினார்கள். நல்ல காரியங்கள் செய்கிறவர்கள் நமக்கு பிடிக்காதவர்களாக இருந்தால் குற்றம் சொல்கிறோம். 9 பைசா போராட்டத்தைப்பற்றி ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் "இது நிலச்சுவான்தார்கள் நடத்தும் போராட்டம்' என்று சொன்னார்கள். தவறான கருத்து சொன்னதினால் இவ்வாறு அசம்பாவிதம் நடந்து விட்டது. உறுப்பினர்களுடைய கடமை என்னவென்றால் உண்மையான நிலையை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மின்சார அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தால், 'அகில இந்திய ரீதியில் இதை மறுபடியும் பரிசீலிக்க எடுத்துக் கொள்ளப்படும்" என்ற எச்சரிக்கை காணப்படுகிறது. பிளானிங் கமிஷன் சொல்கிறது, மத்திய அரசாங்கத்தினர் சொல்கிறார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போட்டு, மீண்டும் உயர்த்துவதற்கு வழிவகை செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகளுக்கு மின் கட்டணம் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு இங்கே உயர்த்தியிருக்கிறார்கள். தொழில் துறையில் மின் கட்டணத்தைக் கூட்டலாம். ஆனால் இவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். தொழில்துறையில் மின்கட்டணத்தைக் கூட்டினால் அவர்களுடைய எதிர்ப்பு வரும். மேலும், மின்சாரத் துறையில் ஊழியர்களுக்கு எல்லாம் ஊதியத்தை உயர்த்தியதன் காரணமாக அதிகச் செலவு ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். நாம் 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறோம். மின்சார இலாகாவானது இன்றைக்கு நாட்டின் முன்னேற்றத்தோடு, சமுதாய முன்னேற்றத்தோடு இணைந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அடுத்தபடியாக, நமக்கு வேண்டிய மின்சாரத் தேவையைப் பொறுத்து, மின்சார உற்பத்தியில் நாம் கவனம் செலுத்தியிருக்கிறோமா என்று பார்த்தால் அதிலே கவனம் செலுத்தப்படவில்லையென்பது மிகமிகத் தெளிவாக விளங்குகிறது. மின்சார இலாகா இன்றைக்கு ஒரு பெரிய ஸ்தாபனமாக இருக்கிறது. இதில் பல துறைகளும் அடங்கியிருக்கின்றன. முன்பு ஹைவேஸ்—பி.டபிள்யூ.டி.

யிலே சீரமைப்பு செய்தார்கள். அம்மாதிரி மின்சாரத் துறையிலே உள்ள பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்து, மின்சார ஸ்தாபனத்தை இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். அப்போதுதான் மின்சார விநியோக வேலைகள் சீராகவும், செம்மையாகவும், விரைவாகவும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார ஸ்தாபனத்திற்கு இன்றைக்கு நிதிவசதி அதிகமாகத் தேவைப்படுகிறது. நாம் போதிய நிதிவசதியைத் திரட்டியாக வேண்டும். கிராமங்களிலிருந்துதான் இதற்கு நிதி வசதி கிடைக்கிறது. ஆனால் கிராமங்களில் இருப்பவர்களுக்கு உதவியாக இந்தத் துறையினர் நடந்துகொள்கிறார்களா என்றால் இல்லையென்ற பதில்தான் கிடைக்கிறது. நகரங்களில் இருப்பவர்களுக்குத்தான் மின்சாரத் துறையினர் ஒத்துழைக்கின்றனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பேசும்போது, 'மின்சார இலாகாவில் ஒரு காரியம் நடக்க வேண்டுமென்றால், 100 ரூபாயாவது கொடுத்தால்தான் நடைபெறும்' என்று சொன்னார்கள். அவர் சொன்னது மிகவும் குறைவு. சில நேரங்களில் 300 ரூபாய், 400 ரூபாய் என்ற அளவு கொடுத்தால்தான் காரியம் முடிவு பெறுகிறது. இந்த நிலையில் சமதர்ம சோஷலிசத்தைப்பற்றி நாம் வாய்நிறைய பேசுகிறோம். 100 ரூபாய் இல்லாமல் இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றனவா என்றால் இல்லை. மின்சார வாரியத்தில் மேல் மட்டத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. கீழ் மட்டத்தில் இருப்பவர்களை மாற்றுவது சிரமமாக இருக்கிறது. தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் கீழ் மட்டத்தில் எந்த மாதிரி செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். மின்சார வாரியத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களில் மின்சாரம் வினியோகம் நடைபெறும்போது, மின்சார மோட்டார்கள் எல்லாம் தீய்ந்து, பழுதடைந்து போய்விடுகின்றன. காரணம், டிரான்ஸ்பார்மர் போன்றவைகளை நல்லபடியாக துறையினர் அமைப்பதில்லை. மின்சாரத் துறையின் ஊழியர்களுடைய கவனக் குறைவினால் மின்சார மோட்டார் பழுதடைந்துவிடுகிறது. தனி ஒரு மனிதனுடைய மோட்டார் பழுதடைந்துவிடுகிறது என்ற எண்ணத்தில் கொள்ளாமல், ஒரு மின்சார மோட்டார் செய்வதற்கு எவ்வளவு காலம், எவ்வளவு செலவு ஏற்படுகிறது, நம்முடைய தேசத்தின் சொத்து பாழாகிறது என்பதையும் கருத்திற்கொண்டு பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் மின்சார வினியோகத்தினால் ஒரு மின்சார மோட்டாரும் வீணாகவில்லை என்ற எண்ணம் கிராம மக்களிடையே ஏற்பட்டால்தான், இந்த வாரியம் கிராம மக்களுடைய நன்மதிப்பைப் பெற முடியும். அதைச் செய்ய வேண்டும். ஒரு பெரிய நிறுவனமாக இருந்தால் பரவாயில்லை. சாதாரண விவசாயிகள் மின்சார வாரியத்தின் தவறினால் எவ்வளவு கஷ்டங்களுக்கும், சிரமங்களுக்கும் உள்ளாகிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். ஆகவே இதைத் தவிர்க்க வேண்டும்.



கிராமப்புறங்களில் மின்சாரம் கொடுக்கும்போது பத்துப் பதினைந்து கிராமங்கள் இணைந்ததாக இருக்கும். ஒரு கிராமத்திற்கு மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு எல்லாவற்றையும் சேர்த்து அறிக்கையில் மின்சாரம் கொடுத்துவிட்டதாகச் சொல்வது சரியல்ல. ஒரு கிராமத்தில் ஒரு பம்பு செட்டுக்கு கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கும், நூறு பம்பு செட்டுகள் கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கும், அப்படி இருக்க அந்தக் கிராமத்திற்கு பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்வது எல்லாம் சரியாகாது. அதைப் படித்துப் பார்க்கிற அந்த அந்த கிராமமக்கள் என்ன நினைப்பார்கள் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

என்னுடைய பகுதியை எடுத்துக்கொள்ளுங்கள். இருபது, முப்பது கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். நடுவில் ஒரு கிராமம் இன்னும் அதற்குக் கொடுக்கவில்லை. காரணம் என்ன? கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கும், ஊர்க்காரர்களுக்கும் விவகாரம். அதனால் வரவில்லை. அதுபோல ஒரு பஞ்சாயத்து குடிநீர் கிணறு மோட்டாருக்கு கனெக்ஷன் வாங்க யார் 300, 400 கொண்டுபோய் கொடுக்கப்போகிறார்கள்? கொடுத்தாலும் பஞ்சாயத்துக் கணக்கில் எழுத முடியாது, ஆகவே, அதற்கு கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட புகாருக்கு இடமின்றி இது போன்ற பொதுக் கிணறுகள் சம்பந்தப்பட்ட கனெக்ஷனை மின்சார போர்டே தன்னுடைய முழுப்பொறுப்பில் எடுத்து இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மின்சார இலாக்காவின் ஆடிட் ரிப்போர்ட் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக பலதுறைகளில் கணக்கு சரியாக வைக்கப்படவில்லை, ஸ்டோர்ஸ் சரியாக இல்லை என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு லாரிகள் வாங்கியிருக்கிறார்கள். அது ஓடிக் கொண்டிருக்கிறது. ஆயினும், அதன் செலவை எந்தக் கணக்கில் எழுதுவது என்பது இன்னும் முடிவு ஆகாமல் இருக்கிறது. இக்குறைகளையெல்லாம் நிவர்த்திசெய்யவேண்டும்.

அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் ஒரு குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு செயற்குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி அடுத்த ஆண்டுதான் என்ன முயற்சி செய்யப்போகிறார்கள் என்பது தெரியும்.

சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் கூறிய யோசனை, அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது இங்கே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் சொன்னவுடன் அவற்றுக்கு எல்லாம் உடனே பதில் தயாரித்து அச்சடித்து வைத்துக்கொண்டு அடுத்த ஆண்டு விவாதம் வருகிறபோது சமர்ப்பித்துவிடுவது என்பதாகக் கொண்டுள்ளதுபோலவே இந்த பதில்கள் இருக்கின்றன. அப்படியின்றி உறுப்பினர்களுடைய கருத்துக்கு உடனே பதில் தெரிவிப்பது என்று யோசிக்காது நிதானமாக

[திரு. கோ. பூவராகன்] [1970 ஆகஸ்ட் 31

செயல் படுத்த முயற்சி செய்து முடிவில் என்ன நிலை உள்ளது என்பதை அறிக்கையில் தந்தால் போதும். ஆக, இதில் முழுமையாக, மனித உணர்வுடன் ஈடுபடவேண்டும்.

இன்னும் செலவினங்களைக் குறைக்கவேண்டும். ஒரு ரூபாய் கட்டவில்லை என்றால் சாதாரண மக்களுடைய கனெக்ஷன் வெட்டப் படுகிறது. ஆனால் 50 லட்சம், 60 லட்சம் என்று கட்டணம் செலுத்தாத கணக்கு எல்லாம் இருக்கிறது. அவற்றை எல்லாம் உடனடியாக வசூல் செய்ய முயற்சி செய்ய வேண்டும.

இன்னும் மின்சார வாரியத்தில் மேல்மட்டத்தில் பணியாற்றுகிற அதிகாரிகள் அடிக்கடி மக்களோடு தொடர்புகொள்கிற ஒரு நிலையும் வேண்டும். பேப்பர்களில் உத்தரவு போடுவதோடு நிற்கக்கூடாது. மாவட்ட வாரியாக எப்படி மக்களுடைய குறைகளை எல்லாம் நேரிடையாகத் தெரிந்து நீக்க ஆவன செய்யலாம் என்பதைப் பற்றி அந்த இலாக்காவில் உள்ள மேல் அதிகாரிகளே ஏதாவது யோசனை சொல்லாம்.

அடுத்து, ஆண்டுக்கு ஒரு முறை இப்படி 5 நாட்கள் மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையை விவாதிப்பதற்குப் பதிலாக 2 நாள் விவாதம் இருந்தால் போதும், ஆண்டுக்கு இரு முறை விவாதம் இருக்கும்படி செய்யவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. ஆர். கோவிந்தன்) : திரு. கரு. சீமைச்சாமி இடத்தில் இல்லாததால் திரு. மு. ச. சிவசாமி அவர்கள் இப்பொழுது பேசுவார்கள்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீது ஒரு சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். நான் அங்கம் வகிக்கிற தூத்துக்குடி தொகுதியில் மின்சார வாரியத் தின் நேரடி இணைப்பு இல்லை. திருநெல்வேலி-தூத்துக்குடி மின்சார கம்பெனிதான் அங்கே செயல்படுகிறது. மின்சார வாரிய ஊழியர் களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்தையும் அந்த கம்பெனி ஊழியர் களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்தையும் பார்த்தால் அதிகமான வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி-தூத்துக்குடி மின்சார கம்பெனி ஊழியர்கள் தங்களுக்கும் மின்சார வாரிய ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பள விகிதம் கொடுக்கப்பட வேண்டுமென்று அடிக்கடி வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அப்படி வேலைநிறுத்தம் ஏற்படுகிற காலத்தில் அவர்கள் எத்தனையோ வித மான காரியங்களில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுக்க முடியுமோ அவ்வளவு தொல்லை கொடுக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல.

திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார கம்பெனியின் தலைமை யகம் கல்கத்தாவில் இருக்கிறது. அதன் காரணமாக ஏதாவது ஒரு இடத்திற்கு மின்விஸ்தரிப்பு வேண்டுமென்று எழுதினால் அவர்கள் இன்ஸ்பெக்டர் ஆப் எலெக்ட்ரிகல்சுக்கு எழுதியிருப்பதாகச் சொல் கிறார்கள். அங்கிருந்தும் பதில் வந்துவிட்டால் கல்கத்தாவுக்கு



1970 ஆகஸ்ட் 31] [திரு. மு. ச. சிவசாமி]

தலைமை காரியாலயத்திற்கு எழுதியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு போஸ்டுக்குக் கூட அங்கேயிருந்து வரவேண்டும் என்கிற நிலைமை யினால் ஒண்ணரையாண்டு, இரண்டாண்டு ஆனாலும் ஒரு காரியம் நடைபெறுவதில்லை. இப்படி 3 தடவை வேலைநிறுத்தம் நடைபெற் றிருக்கிறது, தலைமைக்காரியாலயம் கல்கத்தாவில் இருப்பதால் இங்கே வேலை தாமதமாகிறது. இதனால் தூத்துக்குடி—திருநெல்வேலி மின்சார கம்பெனியினால் அந்தப் பகுதி வியாபாரிகளுக்கு, விவசாய மக்களுக்கு நன்மை கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் தலையிட்டு அந்தக் கம்பெனி ஊழியர்களுக்கும் மின்சார ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதுபோன்ற சம்பள விகிதத்தை வாங்கித்தரவேண்டும். அல்லது உடனடியாக அடுத்த ஆண்டிலாவது அந்த திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சாரக் கம்பெனியை அரசுடைமை ஆக்கவேண்டு மென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மின்சார இணைப்பை எடுத்துக் கொண்டாலும்கூட காலதாமதம் ஆகின்றது. மின் இணைப்பைக் கொடுப்பதில் 1 ஆண்டு 2 ஆண்டு காலதாமதம் ஆகின்றது. எஸ். இ. ஆபிஸுக்குப் போனால் ஏ.இ. ஆபீஸுக்குப் போ என்று சொல்லுகிறார்கள். ஏ.இ. ஆபீஸுக்குப் போனால் டி.இ. ஆபீஸுக்குப் போ என்று சொல்லு 1-00
கிறார்கள். பின்னர் டி.இ. ஆபீஸுக்குப் போனால் மீண்டும் எஸ்.இ. பி,ப.
ஆபீஸுக்குப் போ என்கிறார்கள். இப்படிப் பம்பரம் சுற்றுவது போல சுற்றவைக்கிறார்கள்.

கோவில்பட்டி வட்டாரத்தில் வரட்சிப் பிரதேசத்தில் Tuticorin Marine Transport என்ற ஒரு கம்பெனி மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு Sorute என்ற ரசாயனம் தயாரிக்க மின் இணைப்புக் கொடுத்தால் 250 ஊழியர்களுக்கு வேலை கிடைக்கும். மின் இணைப்புக் கிடைக்காமல் கட்டடங்கள் கட்டப்பட்டு, இயந்திரங்கள் வாங்கி வைக்கப்பட்டும் இன்னும் ஓடவில்லை. காரணம் மின் இணைப்பு கொடுக்காததுதான்.

டெப்பாசிட் கட்டுவதற்குக் கூட ஐந்து ரவுண்டு அடிக்கச் சொல்லுகிறார்கள். ஏ.இ. ஆபீஸுக்குப் போனால் டி.இ. ஆபீஸுக்குப் போ என்று சொல்லுகிறார்கள். டி.இ. ஆபீஸுக்குப் போனால் நாங்கள் வாங்க மாட்டோம். தூத்துக்குடி ஏ. இ. ஆபீஸுக்குப் போங்கள் என்று சொல்லுகிறார்கள். டெப்பாசிட் பணம் வாங்குவதற்குக்கூட இழுத்து அடிக்கிறார்கள்.

எங்கள் தொகுதியிலே அரசாங்கத்திடம் இருந்து கடன் வாங்கி மோட்டார், பம்ப் செட்டுகள் வாங்கி வைத்திருக்கிறார்கள். 1, 1½ ஆண்டுகளாக மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால் மோட்டார், பம்ப் செட்டுகள் வாங்க கடன் கொடுத்து விவசாய டிபார்ட்மெண்டில் இருந்து கடனைத் திருப்பிச் செலுத்துமாறு நெருக்கடி செய்கிறார்கள். இணைப்பும் கொடுக்கப்படாமல், விவசாயமும் செய்ய முடியாமல் வாங்கிய கடனை எப்படித் திருப்பிக் கொடுப்பது? அப்படிப்பட்ட ஒரு சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக மின்வாரிய

அதிகாரிகள் முயற்சி செய்யவேண்டும். குறைந்த பட்சம் இத்தனை நாட்களுக்குள், அல்லது மாதங்களுக்குள் மின் இணைப்பைக் கொடுத்துவிட வேண்டுமென்று, ஒரு பொது விதி முறையை ஏற்படுத்தினால், அங்கே இருக்கிற அலுவலர்களும் சரி, பொறியாளர்களும் சரி, இந்த விதிக்கு பயந்து கொண்டு இணைப்புக் கொடுக்க முன் வருவார்கள். அந்த விதிமுறைகளை நடைமுறையில் கொண்டு வருமாறு மின் வாரிய அதிகாரிகளையும், அரசாங்கத்தையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின்சாரத்துக்காக "டோக்கன் அமௌன்ட்" ஆக சிறிது தொகை ஒதுக்கப்பட்டது. இப்போது இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நீக்கப்பட்டிருப்பதை பார்க்கிறோம். நாம் 1908 மில்லியன் யூனிட் கரன்டை வெளி மாநிலங்களிலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் வாங்குகிறோம். அதற்கு ஆண்டுக்கு ஏறக் குறைய 11 கோடி ரூபாய், மின் சக்தி வாங்குவதற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பரிசீலனையில் இருக்கின்ற இந்த அனல் மின்சார தொழிற்சாலையை தூத்துக்குடியில் ஏற்படுத்தி 600 மெகா வாட் மின்சாரம் எடுப்பதற்கு, இந்த வரவு–செலவுத் திட்டத்திலேயே வழிவகை செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தையும், மின்சார வாரிய அதிகாரிகளையும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அங்கே 54 கோடி ரூபாய் மதிப்பில் "சதர்ன் பெட்ரோ கெமிக்கல் கம்பெனி" ஒன்று வர இருக்கின்றது. இதைத் தவிர கல்பாக்கம் அணு மின்சாரம் நிறுவுவதற்கும், அடாமிக் பவர் ஸ்டேஷனுக்கும், ஹெவி வாட்டர் தயாரிக்கக் கூடிய நிலையம் தூத்துக்குடியிலே அமைக்கப்படுவதற்கு முடிவு செய்திருக்கிறது. ஆயில் ரிபைனரி ஒன்றை ஆரம்பிப்பதற்கும் தமிழக அரசு முயற்சி செய்துவருகிறது. இப்போது முடிவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட இருக்கிற "சதர்ன் பெட்ரோ கெமிக்கல்" கம்பெனி ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு ஏராளமான மின் சக்தி தேவை இருக்கிறது. தமிழக அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிற ஆயில் ரிபைனரியும் வந்தால் தூத்துக்குடிக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்றும் தென் பகுதிக்கு அதிக மின்சக்தி தேவை இருப்பதால் 600 மொகாவாட் அனல் மின்சார நிலையம் ஆரம்பித்தால் நிறைய மின்சாரம் கிடைக்குமென்று கூறி என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1970–71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சார வாரியம் கடந்த ஆண்டில் மட்டும் 60,700 விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறது. நம்முடைய தமிழகத்தில் உள்ள சுமார் 11 லட்சம் கிணறுகளில் இதுவரையில் சுமார் 5 லட்சம் கிணறுகளுக்குத்தான் மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே வேகத்தில் போனால் இன்னும் 10 ஆண்டு





காலம் ஆகுமென்று தெரிகிறது. அதைப்பற்றி மின்சார வாரியம் சிந்தித்து குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தால்தான் குறைந்தது 5 ஆண்டுகளுக்குள் தமிழகத்திலுள்ள கிணறுகள் அத்தனைக்கும் மின் இணைப்புக் கொடுத்து விடலாம் என்று எண்ணுகிறேன்.

என்னுடைய பகுதியில் ஈரோடு சிஸ்டம் என்று ஒரு புது சிஸ்டத்தை ஏற்படுத்தியதற்காக என் பகுதி மக்களின் சார்பாக மின்சார வாரியத்துக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஈரோடு சிஸ்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் அதற்கு நிறையப் பணத்தை கொடுத்து வேண்டிய மின்சார கம்பிகள், கம்பங்கள், மோட்டார்கள் போன்றவைகளை அதிகமான அளவுக்கு ஒதுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈரோடு, பவானி, கோபி ஆகிய வட்டங்களில் 80 ஆயிரம் கிணறுகளுக்கு அதிகமாக இருக்கின்றன. இதுவரையில் 20 ஆயிரம் கிணறுகளுக்குத்தான், மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 900 கிணறுகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் போனால் 10 ஆண்டுகள் ஆகும். ஆகவே, எங்கள் பகுதியை ஸ்பெஷல் புரோக்ராமாக எடுத்து ஆண்டுக்கு 5,000 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தொகுதியில் முன்பணம் கொடுத்து மின் இணைப்புப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி பெற்றவர்கள் இருக்கிறார்கள். மின் இணைப்புக்கு சுமார் 2,400 ரூபாய் ஆகும் என்று சொல்லுகிறார்கள். அந்த ரூ. 2,400-யும் முன்பாகவே கட்டிவிட வேண்டும். முன்பு அப்படி ஒரு திட்டம் இருந்தது, அதை எதிர்க் கட்சிக்காரர்கள் முறி அடித்து விட்டார்கள். நான் இப்போது முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்னுடைய பகுதியில் மாதிரியாக இந்தத் திட்டத்தை செயல் படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் பகுதியிலே விவசாயிகள் 2,400 ரூபாய் கட்டக் கூடியவர்கள் பலர் தயாராக இருக்கிறார்கள், நீங்கள் உடனடியாக மின்சாரம் கொடுப்பதற்கு தயாராக இருந்தால்.

மின்சார வாரியம் ஒரு வியாபார ஸ்தாபனம். பொதுத் துறையால் நடத்தப்படுவது. எந்த விற்பனை நிலையத்திலும் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செலவை விட குறைந்த விலைக்கு விற்றதாக வரலாறு கிடையாது. மின்சார வாரியம் தொழில் துறையினருக்கு விவசாயத் துறையினருக்கு, மின்சாரத்தை கொடுப்பதில் உற்பத்தி செலவுக்குப் பாதியாகக் கொடுக்கிறது. இது நியாயம்தானா ? ரூ. 358 கோடி முதல் போட்டு இயங்குகிற மின்சார வாரியம் லாபத்தைத் தருகின்றதா ? ஏன் ? இந்தப் பொதுத் துறை என்றால நட்டத்தில்தான் நடத்தப்பட வேண்டுமா?

திரு. பூவராகன் அவர்கள் கூறினார்கள் விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை 1¾ பைசா ஏற்றியதாலே ஏதோ பெரிய பாதகம் ஏற்பட்டதாகக் கூறினர். மின்சார வாரியத்திலே பணிபுரிகின்ற 71 ஆயிரம் பணியாளர்களுக்கு ஆண்டுக்காண்டு ஊதிய உயர்வு தர வேண்டாமா ? இந்த ஆண்டு மட்டும் 4 கோடி ரூபாய் அதிக செலவு ஏற்பட்டிருக்கிறது. அதை எல்லாம் சரிக்கட்ட வேண்டாமா?

தமிழ்நாட்டில் நீர் மின்சாரம் மிகமிகக் குறைவு. மொத்த மின்சார உற்பத்தியில் மட்டும் அனல் மின்சாரம் 42 சதவிகிதம். வருங்காலத்தில் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அனல் மின்சாரத்தையும், அணு மின்சாரத்தையும் நம்பி ஆகவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால், அதனுடைய மூலப் பொருள்களின் விலை நாளுக்குநாள் ஏறிக் கொண்டே இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் மின்சார உற்பத்தி செலவும் அதிகமாகத்தான் போகின்றது. அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

மின்சார வாரியம் கடன் பட்டுக்கொண்டிருக்கிறது. 270 கோடி ரூபாய் இதுவரை கடன் பட்டு இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 12 கோடி ரூபாய் வட்டியாக மட்டும் கட்டவேண்டி இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார வாரியம் சுமார் 500 கோடி ரூபாய் கடன் பட இருக்கிறது. அதற்குக் கட்டவேண்டிய வட்டி மட்டும் ஆண்டுக்கு 25 கோடி என்று தெரிகிறது. இதே மாதிரி போனால் பொன் முட்டை இட்ட வாத்தின் கதையின் நிலை மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டுவிடும் என்று எச்சரிக்கை விட விரும்புகிறேன்.

ஏதோ ஒன்றே முக்கால் பைசா உயர்த்தியதற்காக என்னுடைய பகுதியிலே போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்களா ? அரசியல் கட்சிக்காரர்கள் பாதிக்கப்பட்டார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோயம்புத்தூர் பகுதியில் முக்கியமான பயிர்கள் நெல், கரும்பு, மஞ்சள், பருத்தி, கம்பு, சேனைக் கிழங்கு இவைதான். இவற்றை உற்பத்தி செய்வதற்கு என்ன செலவாகிறது என்பதைக் கணக்குப்போட்டுப் பார்க்கவேண்டும்.

மின்சாரக் கட்டணம் 20 சதவிகிதம் உயர்த்தியதால் ஒரு ஏக்கர் நெல்லுக்கு மொத்தச் செலவில் கூடுதல் செலவு 1 சதவிகிதம் உயர்கிறது. அந்தக் கூடுதல் காரணமாக ஒரு மூட்டைக்கு 15 பைசா உயர்கிறது. இன்றைய ஒரு மூட்டை நெல்லின் விலை 35 ரூபாய். 35 ரூபாய்க்கு 15 பைசா உயர்கிறது என்றால் இதைத் தாங்கமுடியாதா ? அதேபோல கரும்புக்கு மொத்தச் செலவிலே 1.3 சதவிகிதம் உயர்கிறது. இதன் காரணமாக விலையில் 1 டன்னுக்கு 50 பைசா உயர்கிறது. ஒரு டன் விலை ரூ. 73.70 என்றால் இந்த 50 பைசா உயர்வைத் தாங்கமுடியாதா ? மஞ்சளைப் பொறுத்தவரையில் மொத்தச் செலவில் 1 சதவிகிதம் உயர்கிறது. ஒரு சட்டைக்கு ஒரு ரூபாய் கூடுகிறது. மஞ்சள் சட்டை விலை 275 ரூபாய் இதைத்தாங்க முடியாதா ? பருத்தியை எடுத்துக்கொண்டால் 1.2 சதவிகிதம் மொத்தச் செலவில் கூடுகிறது. ஒரு பொதியின் விலை ரூ: 350.





கூடுதல் காரணமாக ஒரு பொதிக்கு 90 பைசா கூடுகிறது, இதைத் தாங்கமுடியாதா? சேனைக் கிழங்குக்கு மொத்தச் செலவில் 1 சத விகிதம் கூடுதல் செலவாகிறது. ஒரு வண்டிக்கு 31 பைசாதான் அதிகமாகிறது. ஒரு வண்டியின் விலை 400 ரூபாய் என்றால் இந்த 31 பைசாவைத் தாங்கிக்கொள்ள முடியாதா ? அதைப்போலவே கம்புக்கு மொத்தச் செலவில் 1 சத விகிதம் தான் உயர்கிறது. ஒரு மூட்டை விலை 52 ரூபாய் என்றால் இதன் மூலம் 20 பைசாதான் ஒரு மூட்டைக்குக் கூடுதலாகிறது, இதை விவசாயிகள் தாங்கமுடியாதா ? விவசாய சங்கம் என்ற பெயரால் அரசியல் கட்சிக்காரர்களால் ஏழை விவசாயிகள் பலியாக்கப்பட்டார்கள்.

இந்திய உப கண்டத்திலேயே தமிழ்நாட்டில்தான் விவசாயத்திற்கு அதிகமாக மின்சாரம் அளிக்கப்படுகிறது. மொத்த மின்சார உற்பத்தியில் 25 சத விகிதம் விவசாயத்திற்கு தமிழகத்தில்தான் கொடுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் பஞ்சாபிலே, 22 சத விகிதமும், மராட்டியத்திலே 5 சத விகிதமும், குஜராத்திலே 18 சத விகிதமும், மைசூரில் 6 சத விகிதமும், கேரளாவில் 32 சத விகிதமும் பயன்படுத்தப்படுகிறது. . மேலும் தமிழ்நாட்டில்தான் மின்சாரக் கட்டணமும் மிகக் குறைவாக இருக்கிறது. மராட்டியத்தில் 18 பைசாவும், குஜராத்தில் 17.45 பைசாவும், 14 பைசாவும் இருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் ஏ.சி.க்கு 15 பைசாவும், டி.சி.க்கு 17 பைசாவும், ஹரியானாவில் 14.27 பைசாவும், பீகாரில் 15 பைசாவும், அஸ்ஸாமிலே 14 பைசாவும், மத்தியப் பிரதேசத்திலே 13 பைசாவும், ராஜஸ்தானில் 13 பைசாவும், ஒரிஸ்ஸாவிலே 12 பைசாவும், மேற்கு வங்கத்திலே 12 பைசாவும், ஆந்திரப் பிரதேசத்திலே 10.45 பைசாவும், பஞ்சாபிலே 10.61 பைசாவும், மைசூரிலே 10 பைசாவும், தமிழ்நாட்டிலே 9 பைசாவும், கேரளத்திலே 9 பைசாவும் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. தமிழகத்திலே தான் விவசாயத்திற்காக குறைந்த கட்டணம் வாங்கப்படுகிறது. விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதாலே பாசனச் செலவு குறைகிறது. விவசாயிகளுக்குத் தொல்லைகள் குறைகின்றன என்று பேராசிரியர் சோனசலம் என்பவர் தம்முடைய கட்டுரையில் கூறியிருக்கிறார்கள். திட்டக் கமிஷனுக்காகத் தயாரித்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதையும் படித்துவிடுகிறேன்.

Each farmer utilising electricity for lift irrigation derives a direct benefit in terms of reduced expenditure, thanks to the opportunity of getting electricity. The procedure for qualifying this benefit in money terms involves working out the alternative cost to the farmer, in the event of his using (1) bullock or (2) Diesel oil pumpset.

THIRU K. VINAYAKAM : On a pointof order, Sir. Even yesterday this has happened in Lok Sabha and the Hon. Speaker has deprecated the tendency of members going to officers' gallery and getting information. Members should not speak with officers inside the House. That is what he had ruled. But I see Members walking to officers and getting information and passing on to the Member who is speaking, Is that in order ?

[1970 ஆகஸ்ட் 31

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. ஆர். கோவிந்தன்) : அவர்கள் குறிப்புகளை வைத்துத்தான் பேசுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Even now you can see the Member Thiru Erode Chinnaswami giving some hints to the Member. That is not his seat.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கே. ஆர். கோவிந்தன் : பேசும்பொழுதுதான் இடம் மாறி உட்காரக் கூடாது. இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றுமில்லை.

THIRU K. VINAYAKAM : Yesterday also in the Lok Sabha there has been a ruling on this subject. That is why I referred to it.

THIRU A. M. RAJA : According to the estimates of the Madras State Electricity Board and some recent Farm Management Studies pertaining to the State, the cost of irrigation amounts to Rs. 56 per acre in the case of electric pump sets, Rs. 83 in the case of diesel pump sets and Rs. 200 net (allowing for the value of farm yard mannure—the by-product) in the case of using bullocks. இப்படி நான் குறிப்பிட்டால் மாண்புமிகு உறுப்பினர் வினயகம் போன்றவர்கள் ஒருவேளை எதிர்க்கலாம். திரு. வினயகம் அவர்களுக்கு விவசாயம் தெரியுமோ, தெரியாதோ எனக்குத் தெரியாது. எனக்கு விவசாயம் தெரியும். கவலை இறைத்துப் பாசனம் செய்து விவசாயம் செய்தால் ஏக்கருக்கு 200 ரூபாய் செலவாகிறது என்றால், மின்சாரத்தைப் பயன்படுத்தி விவசாயத்தைச் செய்தால் குறைவாக ஆகும். நான்கில் மூன்று பாகம் செலவு மிச்சப்படுகிறது. அப்படி மிச்சப்படுகிற விவசாயி ஒரு மூட்டை நெல்லுக்கு 15 பைசா அதிகமாகப் போவதை ஏற்றுக்கொள்ள தயங்குவாரா? விவசாயிகள் அதைத் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அரசியல் கட்சிக்காரர்கள் தங்களின் லாப வேட்டைக்காக அதைத் தாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்து முடித்துகொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் கலந்து கொண்டு இரண்டொரு கருத்துக்கள் சுருக்கமாகக் கூறுவதற்கு முற்படுகிறேன்.

நமது மின்சார வாரியம் தந்திருக்கிற அறிக்கையிலே பல அம்சங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பல மாநிலங்களிலிருந்து பவர் வாங்குவதற்காக மைசூர், கேரளா போன்ற இடங்களிலிருந்து அதிக அளவுக்கு பவர் வாங்குவதற்காகவும், நெய்வேலியிலிருந்து பவர் வாங்கிக் கொள்ளவும் செலவிடக்கூடிய நிலைமையிலே இருக்கிறோம். இரண்டு நீர் மின்சாரத் திட்டங்களும் இரண்டு தர்மல் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தும் திட்டங்களும் இருப்பதாக அறிக்கையிலே பார்க்கிறோம். தன்னிறைவு பெறுவதற்காக முடங்கிக் கிடக்கிற அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு துரிதமான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.



1970 ஆகஸ்ட் 31] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால், கோதையாறு திட்டம் ஆமை வேகத்திலே சென்று கொண்டிருக்கிறது என்று கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். 1969-லே அது கமிஷனாகும் என்று எதிர்பார்த்தோம். அப்படித்தான் அந்தத் திட்டமும் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் 1970 ஆரம்பித்து முடியக்கூடிய தறுவாயில் இருக்கிறது. அதை விரைவுபடுத்தி நிறைவேற்றுவதற்குத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அரசு தாமதப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டை சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஹொகனேக்கல் திட்டத்தையும் வரும் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். மைசூர் மாநிலத்தோடு தொடர்பு கொண்டு 1924 ஆம் ஆண்டு இருக்கிற ஒப்பந்தப்படி என்ன முறையிலே பேச்சுவார்த்தைகள் நடத்தலாம், ஒப்பந்தம் இனி மேல் செய்துகொள்ளலாம் என்பது நிறைவேறாததன் காரணமாகத் தான் அதைப்பற்றி அறிக்கையிலே தரவில்லையென்று நினைக்கிறேன். இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினையாக இருப்பதாலே அதன் அம்சங்களைப்பற்றி இப்பொழுது விவாதிப்பது பொருத்தமில்லை என்றாலும், தமிழகத்திலே 800 மெகவாட் உற்பத்தி செய்யக் கூடிய திட்டத்தை விரைவிலே உருவாக்குவதற்கு அரசாங்கமும், மின்சார வாரியமும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியிலே மின்சார நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று பலமுறை கூறினார்கள். மதிப்பிற்குரிய சிவசாமி அவர்கள் அதைப் பற்றி வலியுறுத்திக் கூறினார்கள். தென் பகுதியிலே இருந்து வருகிற பிரதிநிதி என்ற முறையிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொண்டார்கள். நானும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விரைவிலே மேற்கொள்ள வேண்டும். அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட அமைச்சரவர்கள் கொடுத்த இந்த அறிக்கையிலே இல்லை. இம்மாதிரியான நல்ல நல்ல திட்டங்களையெல்லாம் உருவாக்குவதற்கு இந்த வாரியமும், இந்த இலாகாவும், வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த டிரான்ஸ்மிஷன் செய்வதிலே அதிக நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த வாரியமானது மேற்கொள்ள வேண்டும். எங்கெங்கே சப் ஸ்டேஷன்கள் தேவையோ அந்தந்தப் பகுதிகளிலேயெல்லாம் அதிகப்படியான சப் ஸ்டேஷன்களை நிறுவி டிரான்ஸ்மிஷனில் லாஸாவதைத் தவிர்க்க வேண்டுமென்ற ஆலோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம்பற்றிக் கூற விரும்புகிறேன். எல்லாப் பகுதிகளிலும் பார்த்தால், விவசாயிகளுக்கு இன்றைய தினம் அதிகமாகக கட்டணம் வசூலிக்கிறார்கள். 9 பைசாவாக ஆக்க வேண்டுமென்று அவர்கள் வாதாடினார்கள், போராடினார்கள், பிறகு வெற்றியும் பெற்றார்கள்.

ஆனால் 32 பைசாவிற்கு, பவர் வாங்கும் நபர்களைப்பற்றி இந்தச் சட்டசபையிலே எடுத்துக் கூற விரும்புகிறேன். தொழில்துறைகளிலே குறைந்த விலையிலே இந்த பவரானது விநியோகம் செய்யப் படுகிறது. ஆனால் சாதாரணமாக பல்லாயிரக்கணக்காக, ஏன்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1970 ஆகஸ்ட் 31

இலட்சக்கணக்காக இருக்கும் மக்கள் இம்மாதிரி 32 பைசாவிற்கு ஒரு யூனிட் எலக்ட்ரிசிட்டியை வாங்குகிறார்கள் என்று சொன்னால், அவர்களது அவலநிலையைப் போக்குவதற்கு இந்த வாரியமும் அரசாங்கமும் என்ன ஆலோசனைகள் செய்யப்போகிறது, என்ன முடிவு செய்யப்போகிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். எனவே, 32 பைசா என்று சொல்வதைக் குறைக்க வேண்டும். இன்று உற்பத்திக்காக அதிகமாக இந்த பவரைப் பெருக்கும் காலத்தில் உற்பத்திச் செலவும் குறைகிறது. ஆனால் அபரிமிதமாக 32 பைசா என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக மற்ற இடங்களுக்குச் சலுகை கொடுப்பதுபோல், சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு விஷயத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். சமீப காலத்திலே ஸ்டிரைக் ஏற்பட்டது, மின்சார வாரியத்திலே. அப்பொழுது நாகர்கோவில் நகரசபையிலே உள்ள நாங்கள் பட்ட அவல நிலையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். ஐந்து நாட்கள் எங்களுக்கு எந்தவிதமான பவர் சப்ளையும் இல்லாமல், குடிநீருக்குக் கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டோம். இங்கு ஆளுங்கட்சியிலே சட்டசபை உறுப்பினராக இருப்பவர் அங்கு சேர்மனாக இருக்கிறார்கள். இவர்கள் அந்தத் தொகுதியிலிருந்து வந்திருப்பவர்கள். நாங்கள் அதில் குடியிருப்பவர்கள் என்ற காரணத்தினால் எங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டன, எவ்வளவு தாய்மார்களும், சகோதரிமார்களும் என்னென்ன இன்னல்களை அனுபவித்தார்கள் என்பதை எடுத்துக்கூற முடியாது. 5 நாட்கள் குடி தண்ணீர்கூட இல்லாமல் இருந்தார்கள் என்றால், மக்கள் எப்படி அவதிப்பட்டார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, நாங்கள் காரை வாடகைக்குப் பிடித்து, வேறு பகுதிக்குச் சென்று தண்ணீர் எடுக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் அதிகாரிகளோ, அரசாங்கமோ அந்த அளவிற்கு இருக்கும் கஷ்டத்தைப் போக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல அதிகாரிகளை அணுகினோம். ஒருவேளை கூறுவார்கள், எக்சிகியூட்டிவ் என்ஜினீயரை, டிவிஷனல் என்ஜினீயரைக் கைது செய்துவிட்டோம், ஆகவே, பவர் சப்ளை ஆகவில்லை என்று. ஆனால், இம்மாதிரியான குடிதண்ணீருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் போக்க என்ன நடவடிக்கை எடுத்தது, எடுக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இம்மாதிரி ஒருவேளை வேலைநிறுத்தம் ஏற்படும் காலத்தில், ஆஸ்பத்திரிக்கும், குடிதண்ணீருக்கும் போன்ற அத்தியாவசியமான காரியங்களுக்கு என்னென்ன வழிமுறைகளை இவர்கள் மேற்கொள்ளுவார்கள் என்பதை அறிய நான் ஆவலாகயிருக்கிறேன்.

அடுத்தபடியாக, Tamil Nadu Consultative Council என்று உருவாகியிருக்கிறது. அதில் ஆளுங் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ-க்கள் தான் அங்கங்களாக இருக்கிறார்கள். எதிர்க் கட்சிதான் அங்கம் வகிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த அடிப்படையில் அவர்கள் மாத்திரம்தான் தகுதி வாய்ந்தவர்கள், மற்ற கட்சி எம்.எல்.ஏ-க்கள் தகுதியுடையவர்கள் இல்லையா என்பதைப்பற்றி,



[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1970 ஆகஸ்ட் 31

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

வாரியம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே ஏகபோக உரிமை உடையதாக இருக்கக் கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த வாரியத்தினுடைய நிலைமைகளை நாம் ஆராயும் பொழுது அரசாங்கம் அதிகமான முதலீடு செய்திருக்கிறது. அதிகமான அளவிற்கு அரசாங்கத்திற்கு வட்டி செலுத்தும் நிலை இந்த வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இதிலே வரும் வருவாய் அரசாங்கத்திற்கு வட்டி கொடுக்கப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, அதிக அளவிலே கேபிடல் எக்ஸ்பெண்டிச்சர் செய்தும் இந்த கதியிலே செல்கின்ற நிலைமை மாற வேண்டும். இந்த வாரியத்தில் பலமுறைகளில் கடன் எழுப்புகிறார்கள். அந்த முறையைப்பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல வியாபாரிகளிடமும், விவசாயிகளிடமும் கட்டாயப்படுத்துகின்ற தன்மையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஒரு கனெக்ஷன் வேண்டுமென்று சொன்னால், லோன் சப்ஸ்கிரைப் செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் துன்புறுத்துகிறார்கள். எங்கள் பகுதியில் பல தடவை நடந்திருக்கிறது. நாங்கள் பல தடவை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இம்மாதிரி கட்டாயப்படுத்தும் தன்மை உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும். மக்கள் மனமுவந்து கொடுக்கும் நிலையிருக்க வேண்டும். இம்மாதிரி கனெக்ஷன் கிடைக்க இது ஒரு மாமூலாக அமைந்துவிடக் கூடாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த மின்சார வாரியத்தின் அறிக்கையின் மீது ஓட் செய்வதற்கு உரிமை இல்லை. அதைப்பற்றி ஆலோசனை சொல்லத்தான் உரிமையிருக்கிறது. ஒரு ஆலோசனையைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். எங்கள் தக்கலை பகுதியிலே அக்கவுண்ட்ஸ் ஆபீஸ் இருக்கிறது. அதை மாற்றுவதற்கு ஒரு சில அதிகாரிகளும், ஒரு சில அரசியல் கட்சிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பல்லாண்டுக் காலமாக அந்தப் பகுதியிலேயுள்ள பிரதிநிதிகளின் முயற்சிகளின் காரணமாக அந்த ஆபீஸ் அங்கு துவங்கப்பட்டது. அதை மற்ற பகுதிக்கு மாற்றுவதற்கு வாரியமோ, அரசாங்கமோ அனுமதி அளிக்கக்கூடாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இம்மாதிரியிருக்கும் காரியங்களைப் பார்க்கும் பொழுது இன்றும் ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்கு ஒரு நியதி, எதிர்க்கட்சியாக இருப்பவர்களுக்கு ஒரு நியதி என்ற முறையிருக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் பகுதியிலிருந்து உத்தியோகத்திற்கு வருபவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு திருநெல்வேலி ஜில்லாவில் இண்டர்வியூ நடக்கும் நிலையிருக்கிறது. ஏன், நாகர்கோவிலிலேயே இண்டர்வியூ நடத்தக்கூடாது என்பதை வாரியத்திலே நிர்வாகத்திலிருப்பவர்கள் ஆலோசிக்க வேண்டும். பெரும்பாலான அபேட்சகர்கள் கன்னியாகுமரி ஜில்லாவிலே இருப்பவர்கள். அவர்களுக்கு அங்கேயே இண்டர்வியூ நடத்துவதற்கு என்ன கஷ்டம், என்ன சங்கடம் இருக்கிறது என்பதை ஆலோசிக்க வேண்டும். அதிகாரிகள்

1970 ஆகஸ்ட் 31] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வேண்டுமானால் பத்து பேர் இருக்கலாம். ஆனால் இண்டர்வியூவிற்கு ஆஜராகின்றவர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்கவோ மற்ற எந்த விதமான வசதியோ இல்லாமல், பஸ்களும் சரியான காலாகாலத்தில் கிடைக்காமல் பலரும் கஷ்டப்படும் நிலையிருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த உத்தியோகத்தைப் பற்றி ஏதோ இண்டர்வியூ நடந்து, இதுகாறும் இதன் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. இதுவும் துரிதமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இவ்வளவும் பேசிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 4. அமைச்சரின் விளக்க உரைகள்—தொடர்ச்சி.

### (இ) நிலப்பறி இயக்கம் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்களின் மீதுள்ள வழக்குகளை திரும்பப்பெற்று விடுதலை செய்ய அரசு செய்துள்ள முடிவு குறித்து முதலமைச்சர் அவர்கள் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திருச்சி மத்திய சிறைச்சாலையிலிருக்கும், சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள், நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு சட்டதுறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ. கே. சுப்பையா, எம். எல். ஏ. எழுதிக்கொண்டது.

எனது கட்சியும், மாநில விவசாயத் தொழிலாளர் சங்கமும், ஆகஸ்ட் 15, 16, 17 தேதிகளில் நடத்தவிருந்த நில மீட்சி இயக்கம் முடிந்து விட்டதால், கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் எங்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்பட மாட்டாது.

இங்ஙனம்,

ஏ. கே. சுப்பையா,

எம். எல் ஏ.

இந்தக் கடிதத்தில் திரு. சுப்பையா எம். எல். ஏ., அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளையும், மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்பட மாட்டாது என்ற அவரது உறுதிமொழியையும் ஏற்றுக்கொண்டு நிலப்பறி இயக்த்தின் காரணமாக கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப் பெற்று விடுதலை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பி.ப. 1·37

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.



1970 ஆகஸ்ட் 31]

## 9. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

@ 248. Notification issued with G.O. No. 1306 Rural Development and Local Administration, dated the 7th July 1970 in regard to amendment to the Tamil Nadu Panchayats (Conduct of Election of President of Town Panchayat) Rules, 1970. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 249. Notification issued with Rc. No. 192659/69-P1, dated the 19th December 1969 in regard to exclusion of areas from the existing Ezhudesam, Painkulam, Kunnathur, Muthukummal, Arudesam, and Kollencode Town Panchayats of Kanyakumari district for the constitution of separate Panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 250. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1968-69. [Laid on the Table of the House under section 69 (5) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

@ 251. 12th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1968-69. [Laid on the Table of the House under section 75 (1) of the Electricity Supply Act, 1948 (Central Act, 54 of 1948).]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 47. Notification issued with G.O. Ms. No. 1910, Revenue, dated the 19th June 1970 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed executed by the Karaikudi Property Development Company Private Ltd., Karaikudi in Ramanathapuram district in favour of the Kumban Trust.

@ 48. Notification issued with G.O. Ms. No. 1273, Revenue, dated the 28th April 1970 in regard to remission of stamp duty and registration fees in respect of agreements to be executed by the beneficiaries under Soil Conservation Schemes.

@ 49. Notification issued with G.O. Ms. No. 1811. Revenue, dated the 12th June 1970 in regard to remission of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of gift deeds in favour of "Madathupatti Gopala Naicker Educational Society", Sankarankoil, Tirunelveli district.

@ 50. Notification issued with G.O. Ms. No. 1300, Revenue, dated the 29th April 1970 in regard to extension of period of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) relating to the transfer of lands acquired on behalf of companies licenced under the Industries (Development and Regulations) Act, 1951 (Central Act LXV of 1951).

£ 51. The Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill, 1970 (L.A. Bill No. 20 of 1970).

---

**@ Laid on the Table of the House on 29-8-1970.**
**£ Despatched to Members on 28-8-1970.**

## இணைப்பு 1.

10-ம் பக்கத்திலுள்ள 145-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

### விவர அறிக்கை.

நீலகிரி மாவட்டத்திலுள்ள நில வளவங்கிகள் மூலம் ரூ. 50 லட்சத்தை உழவர்களுக்கு நீண்டகால கடன்களாக வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. உதகமண்டலம், கூனூர் வட்டங்களில் குந்தா, கூனூர் கோத்தகிரி, கீழ் கோத்தகிரி பிர்க்காக்களில் 2,000 ஏக்கர் கட்டுக்கோப்பான பகுதியில் தேயிலையை மும்முரமாகப் பயிரிடுவதற்கு வசதியாக உழவர்களுக்குக் கடன் வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பம்பாய் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் நிதி உதவியுடன் இக்கடன்கள் வழங்கப்படும். தேயிலை வாரியத்திடமிருந்து உரிமம் பெறுவதில் ஏற்பட்ட இடர் பாடுகளினால் இத்திட்டம் நிறைவேற்ற எடுத்துக் கொண்ட முதல் ஆண்டில் இத்திட்டத்தின் முன்னேற்றம் பாதிக்கப் பட்டது. இதனால் 1,000 ஏக்கர் செயல் எல்லையுடன் ரூ. 25 லட்சம் மொத்தச் செலவில் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் இசைவுடன் இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. நீலகிரி, கூனூர் நிலவள வங்கிகள் மூலம் இப்பணித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது: இப் பணித்திட்டத்தின் திருத்த அமைப்புக்கேற்ப இத்திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து 1970-ம் ஆண்டு ஜூன் திங்கள் முடிய 500 ஏக்கர் குறிக்கோள் அளவும் ரூ. 6.50 லட்சம் அளவிற்கு கடன் வழங்கு வதற்கும் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டம் தொடங்கியதி லிருந்து 1970-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ந் தேதி வரை 643.23 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரூ. 6.05 லட்சம் அளவுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

2. தேயிலையை மும்முரமாக பயிர் செய்வதற்குத் தோராயமாக ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ரூ. 2,500 செலவாகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது. கடன் 5 ஆண்டுகால அளவில் கொடுக்கப்படும். இப் பணித்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சிறப்புப் பணியாளரையும் அவர்களுக்காகும் செலவை ஈடுசெய்ய உதவித்தொகையும்கூட அரசு ஏற்பளித்துள்ளது. பணித்திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட ஆய்வுக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

3. இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்புபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கையாக, பத்து ஆண்டுகால அளவில் ரூ. 9,20,71,000 மொத்தச் செலவில் நீலகிரி மாவட்டத்தில் 750 ஏக்கர் நிலத்தில் தேயிலைப் பயிரிடுவதற்கான பணித்திட்டம் ஒன்றை இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. இப்பணித் திட்டத்தின்கீழ் இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும் 800 பேர்களுக்கு (அதாவது, தாய்நாடு திரும்பும் 400 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளித்தல்) வேலைவாய்ப்பு அளிக்க இயலும், இத்திட்டத்திற்காகும் செலவைச் சரி கட்ட நேரடிக் கடன் மூலம் நிதி உதவியளிக்க இந்திய அரசு



இசைந்துள்ளது. மேலும் 1968-70 ஆண்டுகால அளவில் ஏற்படும் செலவை ஈடுசெய்வதற்கு ரூ. 27,55,600 மொத்தத் தொகையைக் கடனாகக் கொடுத்துள்ளது. இப்பணித்திட்டத்தைச் செயல்படுத்து வதற்காக நீலகிரி மாவட்டத்தில் சேரம்பாடி, கூனூர் சேரங்கோடு ஆகிய இடங்களில் மேற்படி திட்டத்தின்கீழ் இதுவரை மூன்று பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பணியாளர் குறித்துத் தேவையான செலவிற்கும் பணிகள் குறித்த செலவிற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கையின்படி, இது-வரை 25 ஏக்கர்கள் பயிர் செய்யப் பட்டிருப்பதாகவும் 1970-71-ஆம் ஆண்டில் 75 ஏக்கர்கள் பயிர் செய்யப்படுமென்றும் தெரியவருகிறது. மேலும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நீலகிரி மாவட்டத்தில் 3,000 ஏக்கர் பரப்பளவுள்ள கூடுதல் நிலத்தில் தேயிலை பயிரிடுவதற்கான பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட் டுள்ளது. இது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலையில் தேயிலை பயிரிடுவதற்கான பெருந்திட்டம் ஒன்றையும் வனத்துறைத் தலைவர் வகுத்துள் ளார். எனினும், நீலகிரியில் செயல்படுத்தக் கருதியுள்ள பகுதியில் பயிர்செய்து முடிவடைந்த பிறகு அல்லது அதிகப் பகுதிகளை இத்திட் டத்தின்கீழ்ச் சேர்த்துக்கொள்ளும் தேவை ஏற்படுகிற அளவிற்கு தாயகம் திரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்தால், இத்திட்டத்தை செயல்படுத்தலாம் என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார். இது பற்றி அரசு பரிசீலனைசெய்து வருகிறது.

Government have approved a scheme for issue of long term loans to the tune of Rs. 50 lakhs through Land Development Banks in the Nilgiris District to the agriculturists to enable them to undertake intensive plantation of tea in 2,000 acres in a compact area in Kundah, Coonoor, Kotagiri and Kilkotagiri firkas in the Taluks of Ootacamund and Coonoor, with financial assistance from the Agricultural Refinance Corporation, Bombay. The difficulties encountered in obtaining the licence from the Tea Board affected the progress of the scheme in the first year of implementation. Hence, the scheme was rephased with approval of the Agricultural Refinance Corporation to a total outlay of Rs. 25 lakhs with a coverage of 1,000 acres. The scheme is implemented through the Nilgiris and Coonoor Land Development Banks. According to the rephased programme of the scheme, a target of 500 acres and issue of loans to the extent of Rs. 6.50 lakhs was fixed for the period from the commencement of the scheme to the end of June 1970. From the inception of the scheme up to 28th February 1970 an area of 643.23 acres have been covered and loans to the extent of Rs. 6.05 lakhs have been issued.

2. The probable cost of intensive plantation is estimated to be about Rs. 2,500 per acre. The loan will be disbursed over a period of 5 years. For implementing the scheme, Government have sanctioned special staff as also a subsidy to meet the cost of

[1970 ஆகஸ்ட் 31

the special staff. Government have constituted a Review Committee with the Collector of the Nilgiris as Chairman for reviewing the progress in the implementation of the Scheme.

3. Government of India have approved a scheme of Tea Plantation in the Nilgiris District on 750 acres of land at a total cost of Rs. 92,71,000 over a period of ten years as a measure of rehabilitation of the repatriates from Ceylon. Under the Scheme, it will be possible to provide employment to 800 repatriates from Ceylon (i.e., the re-settlement of 400 families of repatriates). Government of India have agreed to provide financial assistance to meet the expenditure on the scheme by way of straight loan and have also released a total sum of Rs. 27,55,600 as Loan to meet expenditure during the period 1968–70. Three Divisions have so far been opened under the scheme at Cherambady, Coonoor and Cherangode in the Nilgiris for implementation of the scheme. Government have also sanctioned necessary expenditure on staff and works under the scheme. According to the progress report 25 acres have so far been planted and 75 acres will be taken up during 1970–71. Further, a Master Plan has been drawn up to bring an additionall area of 3,000 acres in the Nilgiris under Tea for the rehabilitation of the repatriates from Ceylon and it is under examination.

4. The Chief Conservator of Forests has also drawn up a Master Plan for raising Tea Plantation in the Anamalais, Coimbatore District. He has, however, suggested that the Tea Plantation in the Anamalais, may be commenced after the area in the Nilgiris is covered or if the influx of the repatriates, warrants taking up of more areas. This matter is under consideration of Government.

### இணைப்பு 2.

[20-ம் பக்கத்திலுள்ள 154 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கை, சேப்பாக்கம், சென்னை-5.

திரு. வி. கே. சி. நடராஜன், ஐ.ஏ.எஸ்.

பதிவாளர்.

ந. எ. 21685/68 கே. 2.

தேதி 4—9—1968.

பொருள் : கூட்டுறவு நில அடமான வங்கிகள் கடன் மனுக்களைப் பரிசீலித்தல்—அறிவுரைகள்.

தகவல் : என்னுடைய சுற்றறிக்கை 21685/68-கே, 2., தேதி 6—4—1968.

நில அடமான வங்கிகள் கடன் வழங்க ஏற்கனவே வகுத்துக் கொண்டிருந்த வழி முறைகளை ஓரளவு மாற்றி, கடன் வழங்கும் ஈட்டு நிலத்தின் மீது சட்ட பூர்வமாக நில அடமான வங்கிகளுக்கு



1970 ஆகஸ்ட் 31]

முன்னுரிமை வழங்கி, சுலபமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. அவ்வப்போது எழுந்த பிரச்சினைகளையும் ஆய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்புது முறையில் வங்கிகள் எவ்வாறு செயல்படுகின்றன என நேரில் கண்டு அறியும் எண்ணத்தோடு ஒரு சில மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்களில் உள்ள பிரதம நில அடமான வங்கிகளை எல்லாம் பார்வையிட்டு நிர்வாகக் குழுவினர்களுடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பேசிப் பிரச்சினைகளை எழுப்பக் கோரியபோது பல பிரச்சினைகளைக் கிளப்பினர்கள்.

(1) ஜமீன், இனும், ஒழிப்புச் சட்டங்களின் அடிப்படையில் ஜமீன்களையும் இனும்களையும் அரசு ஒப்புக்கொண்டு ஏற்று நில அளவை செய்து மண்வயனம் பார்த்து, தரம் பிரித்து, பைசலேற்பாடு செய்துள்ள கிராமங்களில் வில்லங்கச் சான்று குறிப்பிட்ட பதிமூன்ருண்டுக்குப் பெறுவதில் சிக்கல்கள் இருப்பதாகவும், ஜமீன் பட்டாவும், பைமாஷ் எண்ணும் இல்லாமல் பத்திரப் பதிவு அலுவலகங்களில் வில்லங்கச் சான்று பெற இயலவில்லையெனவும் மத்திய நில அடமான வங்கி, சட்ட வல்லுநர்கள் என்றும் போலவே பல ஆண்டுகட்கு வில்லங்கம் கோருவதாகவும் அதனுல் பெரும்பாலான பழைய ஜமீன் இனும் பகுதிகளில் கடன் மனு பைசல் பணி மந்த கதியில் நடைபெறுவதாகவும் கூறப்பட்டது.

(2) மைனர் சொத்துக்களின் பேரில் கடன் வழஙகுவதற்கு மத்திய சட்ட வல்லுநர்கள் வேண்டாத தடைகளையெல்லாம் விதிப்பதாகவும் சொல்லப்பட்டது.

(3) தந்தை வழி மகனுக்கு வந்துள்ள சொத்துக்கள் பல ஆண்டுகளாக குடும்பத்திலேயே உள்ள நிலையில் அந்தச் சொத்தைப் பற்றி வேண்டாத தகவல்களையெல்லாம் கேட்டு கடன் வழங்குவதைத் தாமதப்படுத்துவதாகவும் தெரியவந்தது.

(4) நீண்டகாலக் கடன் கோருபவருக்கு உள்ள அடமான்ச் சொத்தின் மதிப்புப் போதுமான அளவு இல்லாதபோது விண்ணப்பத்தார் தன்னுடைய வீட்டையும் சேர்த்து ஈடுகாட்டினுல் அதை ஒப்புக்கொள்வதில்லையெனக் கூறப்பட்டது.

சொன்ன பிரச்சினைகள் பல என்ற போதிலும் முக்கியமானவை மேலே கூறப்பட்ட நான்குமே. இப்பிரச்சினைகளைக் கீழ்க்கண்ட முறையில் அணுகித் தீர்வு காணும்படி அறிவுரை வழங்கப்படுகிறது :—

(1) பழைய ஜமீன் இனும் கிராமங்கள் பலவற்றில் பைமாஷ் கணக்குகள் சரிவரப் பேணப்படுவதில்லை, பேணிய சில இடங்களில் கணக்கை ஒப்படைக்கவில்லை. எனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கிராமங்களில் நில அளவை அங்குள்ள கர்ணங்கள் கொடுத்த அடங்கல் எண்ணையும் அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு தான் செய்யப்பட்டது. அந்த அடிப்படையிலேயே பட்டாக்களும் வழங்கப்பட்டன. பைமாஷ் எண்கள் பூர்த்தியாகவும், சரியாகவும் கொடுக்கப்படாததால் நில அளவையில் கொடுக்கப்பட்ட புல எண்களுடன் பழைய பைமாஷ் எண்களை இணைக்க முடியவில்லை.

இணைக்கச் செய்த முயற்சிகள் தெளிவுக்குப் பதில் குழப்பத்தையே விளைவித்தன. எனவே பைமாஷ் எண் இணைப்பு அவசியமில்லையென அரசாணை பெற்றுப் புதுப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. கணக்கு களும் அந்த அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட்டன. சர்வே புலப் பதிவேட்டிலும் இடது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள பைமாஷ் இணைப்புகளும் தெளிவாக இரா. எனவே பைமாஷ் எண்ணின் அவசியத்தை வலியுறுத்திக்கொண்டிருந்தால் போகாத ஊருக்கு வழி கேட்டது போலாகும். பொதுவாக உழவர்கள் எல்லாம் எல்லாப் பட்டாக்களையும் கந்தாய ரசீதுகளையும், சரிவரப் பேணிப்பாதுகாக் கிறுர்கள் என்று கூற முடியாது. சிலரிடம்தான் பூராத் தகவலும் கிடைக்கும். எனவே, பழைய பட்டாக்களை காட்டினுல்தான் கடன் என்றுல் கறக்காத மாட்டைக் காட்டும் கதையாகத்தான் முடியும்.

எனவே இதுபற்றி தெளிவான அறிவுரை தேவைப்படுகிறது. ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டங்களில் அடிப்படையில் ரயத்துவாரி யாக மாற்றப்பட்டு பைசலேற்பாடு செய்யப்பட்டுள்ள கிராமங்களி லிருந்து வரும் கடன் விண்ணப்பங்களில் ஈடுகாட்டப்பட்டுள்ள நிலங் களுக்கு வில்லங்கச் சான்று பெறுவதில் பல சிக்கல்கள் உள்ளன. முதலில் நில அளவை செய்து பைசலேற்பாடு முடிந்து சர்வே அடிப் படையில் கணக்குகள் வைக்க ஆரம்பித்ததெல்லாம் 1957-க்குப் பின்னர்தான், சர்வே கணக்குகள் வைத்துப் பதின்மூன்றுண்டுகள் ஆகிவிடவில்லை. எனவே இவற்றில் பதின்மூன்றுண்டுகளுக்கு வில் லங்கம் பார்க்க இயலாது. பைசலேற்பாட்டுக்கு முந்திய காலத்திற்கு பைமாஷ் எண் இன்றி வில்லங்கம் பார்க்க இயலாது. இந்நிலையில் வில்லங்கம் இருக்கிறதா இல்லையா எனப் பார்க்கப் பகிரங்க விசாரணை முறையைக் கையாளலாம். பத்திரப்பதிவு அலுவலகங் களில் பைசலேற்பாட்டுக்குப் பின்னிட்ட காலத்திற்கு வில்லங்கச் சான்று பெற்றுக் கொள்ளலாம். அதற்கு முன்னிட்ட காலத்திற்கு ஊரில் ஒரு பகிரங்க விசாரணை நடத்தி உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

பகிரங்க விசாரணை பற்றி ஒரு முன்னறிவிப்பு செய்ய வேண்டும் (இணைப்பில் ஒருமாதிரி நமூனு சேர்க்கப்பட்டுள்ளது) அதில் குறிப் பிட்ட இன்ன தேதியில், இன்ன ஊரில், இன்ன இடத்தில் விசாரணை செய்யப்படும் என்றும், அந்த நிலத்தின் மீது தங்களுக்குப் பாத்தி யதை உள்ளது எனக் கோருகிறவர்கள் (கடன் விண்ணப்பதாரரல்லா, மற்றவர்கள்) தங்கள் உரிமையை நிலை நாட்டக்கூடிய தஸ்தாவேஜு களுடன் வந்து உரிமையைக் கூறலாம் என அறிவிக்கவேண்டும். விசாரணையைத் தொடங்கு முன்னர் சம்பந்தப்பட்ட புலங்களைப் பார்வையிட்டு யாருடைய அனுபவத்தில் உள்ளது, என்ன உரிமை அடிப்படையில் என விசாரித்து அறிந்து கொள்வது மிகவும் நல்லது. கடன் விண்ணப்பங்களில் ஈடு காட்டப்பட்டுள்ள நிலங்கள் எந்த ஊரில் உள்ளனவோ, அந்த ஊரிலேயே இந்த விசாரணையைச் செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மை வெளிவரும். விசாரணையில் கிராமக் கர்ணத்திடம் பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் வாங்க வேண்டும். வாக்குமூலம் கொடுக்கும் நபரிடம் கோர்ட்டுகளில் சத்தியம் செய்வதுபோல் சத்தியம் செய்யச் சொல்லி இணைப்பு



இரண்டில் உள்ளபடி வாக்குமூலத்தைப் பதிவு செய்து பின்னர் கீழே கொடுத்துள்ளதைப்போல சான்று வழங்க வேண்டும். எல்லா வாக்கு மூலங்களையுமே பிரமாணத்தின் பேரில் பெற்றுக்கொள்வது நல்லது. ஸ்தலத்தில் செய்யப்படும் தணிக்கையும் விசாரணையும் நிச்சயமாக உள்ள வில்லங்களை வெளிக்கொணர உதவும். இரகசிய மாக ஊரில் விசாரித்த உண்மை உள்ளங்கை நெல்லிக்கனியாகிவிடும், இதைக்காட்டிலும் உறுதியான முறை வேறு இல்லை, இந்த விசாரணை யில் அந்த நிலத்தை அனுபவிக்கிருர். வேறு யாரும் அந்த அனு பவத்தில் தலையிடுவதில்லை எனத் தெளிவானுல் பழைய பட்டா, பைமாஷ் எண் போன்ற வேறு ஆதாரங்களைத் தேடிக்கொண்டிராமல் அவர் கொடுக்கும் பட்டாவையே ஆதாரமாகக் கொண்டு கடன் வழங்கலாம். சமீபத்தில் நடந்த இந்த பைசலேற்பாடு (Statement) சட்டபூர்வமாக நடந்தது. எனவே இதில் கொடுக்கப்பட்ட ஊர்ஜிதம் செய்யப்பட்ட பட்டாவும் சட்டபூர்வமானது. பிற பட்டாக்களுக்கு இல்லாத மவுசு இந்தப்பட்டாவிற்கு உண்டு. இது வெறும் காகிதமல்ல, உரிமையை விளக்கும் ஒரு சாசனம். எனவே அதை ஏற்றுக்கொள்ளத் தடையேதும் இல்லை.

சில இடங்களில் ரஃப் பட்டாவைக் காட்டவேண்டும் என்று கேட்டு விண்ணபத்தை திருப்பி விடுகிறுர்கள் எனச் சொல்லப் பட்டது. ரஃப் பட்டா (Rough Patta) என்பது விசாரணையில் ஊர்ஜிதம் செய்யப்படுமுன்னர் உத்தேசமாகக் கொடுக்கப்பட்டது. அது ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர் தான் உரிமை சாசன மாகிறது. எனவே ரஃப் பட்டாவைக் காட்டத்தான் வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது. கிராமங்களில் விசாரணை செய்யும்போது வேறு சில உண்மைகளும் தெரிய வரலாம். இராமன் என்ற பெயருடைய இருவர் இருக்கலாம். இவர்களுடைய நிலங்கள் பட்டாக்களில் மாறிப் பதிவு செய்யப்பட்டிருக்கலாம். இரண்டு இராமன்களுமே இதைப்பற்றி அதிகம் பாராட்டாமல் இருந்திருக்கலாம். எனவே பட்டாவில் மாறிப்புகுந்த நிலங்கள் அப்படியே இருக்கலாம். இந்த மாதிரி உள்ள நிலங்களைப் பற்றிய உண்மையும் ஸ்தலத் தணிக்கையாலும் விசாரணையாலும் தெரிய வரலாம். அப்படித் தெரியவரும் உண்மையை ஏற்றுக்கொண்டு பட்டாக்களில் மாறிப்பதியப்பட்டுள்ளதைப் பாராட்டாமல் கிராமக் கர்ணத்திடம் பிரமாண வாக்குமூலம் வாங்குவதுடன் சம்பந்தப் பட்ட பட்டாதார்களிடமும் உண்மையை உணர்த்திப் பிராமண வாக்குமூலம் பெற்றுக்கொண்டு கடன் வழங்கலாம்.

(2) மைனர் சொத்து விவகாரம் உண்மையில் ஒரு பொது விவகாரமோ அல்லது எல்லோரையும் பாதிக்கும் விவகாரமோ, அல்ல, தாய் தந்தையரற்ற மைனர்கள் சொத்தின்பேரில் கோர்ட்டார் அனுமதி பெற்ற பின்னர்தான் கடன் வாங்க முடியும். அப்படி வாங்கும் கடனுக்குப் பாதுகாப்பு உண்டு. பெற்றவர்கள் தங்கள் மைனர் சொத்தை ஈடுகாட்டி கடன் வாங்கினுர்கள் எனில் அந்தக் கடன் அந்த நிலத்தின் அபிவிருத்திக்கு பயன்படாமல் இருந்தால்தான் மைனர்கள் வயது வந்தபின் வழக்காடி ஜெயிக்க முடியும். அந்த நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு அந்தக் கடன் பயன்படுத்தப் பட்டிருக்குமானுல் எந்த மைனரும் வயதுவந்தபின் வழக்காடி ஜெயிக்க

முடியாது. மைனருக்கும் பாத்தியமுள்ள சொத்துக்கள் மைனர் உரிமையையும் உள்ளடக்கி விற்கப்பட்டிருந்தது. அந்த மைனரும் வயது வந்து வழக்காட உரிமையளிக்கும் காலவரையைத் தாண்டாம லிருந்தால், அவர்களுக்குரிய பங்கின் மதிப்பை ஒதுக்கிவிட்டு எஞ்சிய மதிப்பின் அடிப்படையில் கடன் வழங்கலாம். சாதாரணமாக இந்தப் பாதுகாப்புணர்வு கூட அவசியமில்லை. ஏனெனில் நமது நாட்டில் இம்மாதிரி வழக்குகள் மிக அபூர்வமாகத்தான் வருகின்றன. என்றாலும் வங்கிகள் முன்னெச்சரிகையாக இம்மாதிரி விற்கப்பட்ட நில விவகாரங்களில் நடந்துகொள்ளத் தடையில்லை. பொதுவாக மைனர் சொத்து விவகாரங்களில் விற்கவோ கடன்பெறவோ, கோர்ட்டின் அனுமதியிருந்தால் எவ்வித ஆட்சேபணையுமின்றி கடன் விண்ணப்பங்களை ஏற்றுக் கடன் வழங்கலாம் கூடியவரையில் உதவும் மனப்பான்மையுடன் ஒரு பிரச்னையை அணுக வேண்டுமே தவிர, உபத்திரவம் செய்யும் மனப்பான்மை கூடாது.

(3) பூர்விகச் சொத்துக்கள் உள்ள பல குடும்பங்களில் வாய் மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டு தந்தை வழி மகன் என்ற முறையில் நிலத்தை அனுபவித்துக்கொண்டு வரலாம். இங்கே வில்லங்கமிராது இருக்கலாம். பத்திரமும் இருக்காது. அனுபவம், பட்டா, கந்தாய ரசீது போன்றவற்றைத் தவிர வேறு ஏதுமில்லாமலிருக்கலாம். இந்த மாதிரி உள்ளவற்றில் பதின்மூன் றாண்டுகளுக்கு யாருடைய தலையீடுமின்றி உரிமையோடு அனுபவித்து கொண்டிருக்கிற நிலங்களைப் பற்றி கர்ணத்தினிடம் பிராமண வாக்கு மூலம் பெற்றுக் கடன் வழங்கலாம். அங்கே இல்லாத விவரங்களை கேட்டு வேண்டாத பிரச்சினைகளைக் கிளப்பித் தொல்லை கொடுக்கக் கூடாது.

(4) ஈடுகாட்டிய நிலத்தின் மதிப்புப் போதுமானதாக இல்லாத போது விண்ணப்பத்தார் தன் வீட்டையும் சேர்த்து ஈடுகாட்டலாம். அதன் மதிப்பையும் ஏற்றுக்கொண்டு கடன் வழங்கலாம். உண்மை யில் அப்படிச் செய்ய வேண்டுமென்று தான் துணை விதிகள் கூறு கின்றன.

இப்போதுள்ள புதிய முறையில் விரைவாகக் கடன் வழங்கி நமது விவசாயத்தில் ஒரு புரட்சியேற்படுத்தி உழவர் பெருமக்களின் பொருளாதாரத்தைப் பெருக்கி நாட்டின் உணவுத் தேவைகளையும் மற்ற மூலப்பொருள் உற்பத்தியையும் பூர்த்தி செய்யும் பணியில் மத்திய/பிரதம நில அடமான வங்கிகள் தங்கள் பணியைச் செவ்வனே செய்து நற்பெயர் தேடிக்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். இதுபோன்ற பிரச்சினைகள் எழுந்தால் அவற்றை உடனுக்குடன் எனக்குத் தெரியப்படுத்தினால் பரிகாரம் தேட வாய்ப்பாக இருக்கும். மத்திய/பிரதம நில அடமான வங்கியினர் பிரச்சினைகள் உடனுக் குடன் எனக்குத் தெரியப்படுத்தவேண்டும். நானே பல இடங் களுக்கும் சென்று பிரச்சினைத் தெரிந்து பரிகாரம் சொல்ல வேண்டு மென காத்திருக்[illegible]



V211,31 'N70
31N71-32.32

## இணைப்பு 1.

பொது விசாரணை பற்றிய விளம்பரம்.

கிராமத்தில் வசிக்கும்

மகன்

நில அடமான வங்கியில் கீழே குறிப்பிட்ட தனது சொத்தின் பேரில் நீண்டகாலக் கடன் கோரி யுள்ளார்.

அடமானம் வைக்கப் போகும்

நிலங்களின் விபரம்

கிராமம்—சர்வே எண்—தீர்வை

மேற்படி மனுதாரரின் சொத்துரிமை பற்றி யாருக்காவது ஆட்சேபமிருப்பின் அதை கீழே கையெழுத்திட்டுள்ள விசாரணை அதிகாரி முன்பாக அன்று காலை/மாலை மணியளவில் ல் தெரிவித்துக் கொள்ளலாம்.

ஆட்சேபணை செய்யும் நபர் விசாரணை அதிகாரி முன்பாக குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேரில் ஆஜராகி தனது ஆட்சேபணையை ரிகார்டுகளுடன் நிரூபிக்க வேண்டும்.

சொத்தின் பேரில் உரிமையுள்ள வேறுயாரேனும் மேற்படி விசாரணையில் ஆஜராகத் தவறினால், அவரில்லாமலே கடன் கொடுக்கும் விஷயம் விசாரித்து முடிவு செய்யப்படும்.

நில அடமான வங்கிச் சட்டத்தின் 28-வது பிரிவின்படி, 4—7—1968-க்குப் பிறகு பிரதம நில அடமான வங்கிகள் வழங்கும் கடன்களுக்கு அடமான சொத்தின் மீது முதலுரிமை உண்டு என்று சம்பந்தப்பட்ட யாவருக்கும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப் படுகிறது.

(ஒப்பம்)

தேதி :

ஊர் :

61493

## இணைப்பு 2.

கிராமத்தில் வசிக்கும்

மகன்

சத்தியப் பிரமாணமாய் கொடுத்த வாக்குமூலம்.

(ஒப்பம்)

என்னால் எழுதப்பட்டு வாக்கு மூலதாரரால் படித்து/படிக்கக் கேட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

விசாரணை அதிகாரி.